1756

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

27th, 28th February and 1st, 2nd, 4th and 5th March 1963.

Volume VIII (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.

Wednesday, 27th February 1963.

	PAGES
I Obituary References	1
II Questions and Answers	1-13
III Calling attention to the reversion of Craft Instructors in Schools.	13-14
IV Government Motion—	
Transaction of Government Business on a Non-Official Day ..	14
V Government Bill—	
The Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L. A. Bill No. 4 of 1963)	14-86
VI Announcement—	
The Madras Home Guard Bill, 1963	86
VII Papers laid on the table of the House	86-88

Thursday, 28th February 1963.

I Questions and Answers	89-95
II Calling attention to the eviction of ryots from lands in certain villages in Ramanathapuram district	95-96
III Government Bill—	
The Madras Home Guard Bill, 1963	96-173
IV Papers laid on the table of the House	173-174

Friday, 1st March 1963.

I Questions and Answers	175-187, 220-222
II Condolence Resolution on the Death of Dr. Rajendra Prasad, First President of India	187-191
III Budget for 1963-64—Presentation	191-219, 223-290

PAGES

Saturday, 2nd March 1963.

I Questions and Answers 291-313
II Announcement—
Business of the House 313
III Calling attention to the outbreak of the Cholera epidemic in the City of Madras 313-315
IV General discussion on the Budget for 1963-64 315-391
V Papers laid on the table of the House 391

Monday, 4th March 1963.

I Questions and Answers 397-404
II General discussion on the Budget for 1963-64 404-492
III Papers laid on the table of the House 492

Tuesday, 5th March 1963.

I Questions and Answers 493-511
II Announcement—
(1) Bills 511
(2) Business of the House 511-513
III Calling attention to the failure of crops and pest attack in Chengam, Polur and Tiruvannamalai taluks 513-514
IV Delay in furnishing answers to questions 514-516
V General discussion on the Budget for 1963-64 516-600
VI Papers laid on the table of the House 601

N63·8
132999
600 009

HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C. A.) for Calling Attention, (R) for Resolution. (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other 'broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

A.M./Ad. Motion	Adjournment Motion.
Ann.	Announcement.
B.O.H.	Business of the House.
C.A.	Calling Attention to a Matter of Urgent Public Importance.
C.A.St.	Calling Attention Statement.
Consid.	Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl.	Consideration of clauses of a Bill.
D.E.E.	Demands for Excess Expenditure.
Dis. S.D.	Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G.	Demands for Supplementary Grants.
G.A.	Governor's Address.

H.A.S. Dis./H.H.D. ..	Half-hour Discussion.
Int.	Introduction stage of a Bill.
L.A.	Legislative Assembly.
L.C.	Legislative Council.
M.	Motion.
P.M.	Privilege Motion.
R/Res.	Resolution.
St.	Statement.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, 27th February 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—OBITUARY REFERENCES.

MR. SPEAKER : It is my painful duty to inform the House about the death on 22nd February 1963 at Madras of Sri A. S. Subbaraj, representing Bodinayakanoor constituency. He was representing the same constituency from 1952 onwards. He was a planter and an agriculturist and President of the Cardamom Planters' Association of South India. He was also connected with several co-operative and educational institutions. He had also extensively toured United Kingdom and other European countries.

It is also my painful duty to inform the House of the sad demise of Sri P. Palani Pillai representing Tiruvannamalai constituency. He was Chairman, Municipal Council, and member of the Senate and was a sitting councillor of the Tiruvannamalai Municipal Council.

On behalf of the House I will convey the condolence to the bereaved families. I request hon. Members to stand in silence for a minute as a mark of expressing our sorrow at the death of two sitting members of our Assembly and showing our respect to the departed souls.

The Members then stood in silence for a minute.

MR. SPEAKER : As a mark of respect to the deceased Members, I adjourn the House till 11-30 a.m.

The House then adjourned and reassembled at 11-30 a.m.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Indicators of Development (Madras State)

* 73 Q.—SRI SAW. GANESAN (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Planning Commission has called for indicators of development for the State and specially for backward regions, as at the end of 1960-61, 1961-62 and 1962-63 ;

(b) whether a report has been sent; and

(c) if so, whether a copy of the same will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Particulars relating to some of the indicators for the State as a whole for the years 1960-61 and 1961-62 have been furnished to the Planning Commission. The question of identifying the backward pockets in this State and collection of data for the above pockets is under consideration.

(c) Does not arise as no final report has been sent to the Planning Commission.

Backward areas

* 74 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the State Government have received from the Union Government any representation regarding the backward areas in the Madras State and the remarks offered by the State Government on the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. A copy of the representation referred to by the hon. Member regarding the backward areas in the Madras State has, however, been obtained from the Government of India. The Planning Commission has proposed to consider the suggestions made in the above representation in connection with the general question of development of specially backward areas in the country.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, பிற்பட்ட பகுதிகளுக்கு மத்திய சர்க்காரிடமிருந்தோ அல்லது திட்டக் கமிஷனிடமிருந்தோ எந்தெந்த வகையில் உதவி செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

High School Students (Fee-concessions)

* 75 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of students studying in the high schools as on March 1962 ; and

(b) the number of students among them enjoying fee-concessions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 730,107.

(b) 554,289.

திரு எஸ். மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இவ்வாறு சலுகைகள் கொடுத்திருப்பது அவ்வளவு அதிகமாக இல்லை. இன்னும் அதிகப்படியான சலுகைகளை அளிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தற்கால நிலையில் சர்க்கார் இதை நிறைவேற்றுவதற்கு இல்லை. ஆனால் அதிகச் சலுகைகள் கொடுக்கவேண்டுமென்ற யோசனை அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர் : இப்படி மாணவர்களை எடுப்பது மொத்தத் தொகையில் எவ்வளவு சதவிகிதம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், மாணவர்களுக்கு இப்படிப் பட்ட சம்பளச் சலுகைகள் கொடுப்பது, ஜாதி அடிப் படையிலா அல்லது வேறு எந்த அடிப்படையில் கொடுக்கப் படுகிறது ? ஜாதி அடிப்படையில் இல்லாமல் வருமான அடிப் படையில் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு ஏதாவது நோக்கம் இருக்கிறதா ? அப்படியானால், அது எந்த வருடத்திலிருந்து அமுலுக்கு வரும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த முறையிலும் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

தனியார் பள்ளிகள்

* 76 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் ஆரம்ப, உயர் துவக்க, உயர்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியர்களிடமிருந்து சம்பளம் வாங்குவது சம்பந்தமாக அரசாங்கத்தின் திட்டம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Managements of elementary schools should not levy fees in Standards I to V of elementary schools if they expect a grant from State funds. Private managements maintaining higher elementary and secondary schools can levy fees from pupils in accordance with the general orders on the subject. The fee-concessions extended by Government from time to time will be available to students in all schools aided by Government.

திரு. முனு ஆதி : கனம் தலைவர் அவர்களே, தனியார் துறையில் நடத்தப்படும் உயர்நிலை ஆரம்பப் பள்ளிகளில் கட்டிடம் கட்டுவதற்கு என்று பல விதத்தில் நிதி வசூலிக்கப்படுகின்றனவே, அதனால் மாணவர்களிடத்திலும் பெற்றோர்களிடத்திலும் ஆர்வம் குறைந்து போய் விடுகிறதே, அந்த முறையைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சம்பளச் சலுகைகள் காட்டுவதற்கு அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுக்கப்படுகிறது. அப்படி சம்பளம் வாங்குகிறவர்கள் சர்க்காரிடமிருந்து மானியத்தை எதிர் பார்க்க முடியாது. அதற்கு வேண்டிய விதிகள் இருக்கின்றன. கட்டிடம் கட்டுவதற்கு

D
V2,11,31 N63
N63.8
137999

[27th February 1963

அரசாங்கத்திலிருந்து ஓரளவு நிதி கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தினிடமிருந்து நிதி கிடைக்காதவர்கள் பொது மக்களிடமிருந்து கட்டிட நிதிக்காக நிதி வசூலிக்க வேண்டியதாக இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தனியார் துறையில் பள்ளிகளை நடத்தக் கூடியவர்கள் பொது மக்களிடமிருந்து நிதி வசூல் செய்தால் அதைப்பற்றிய கணக்கு சர்க்காருக்குக் கொடுக்க ஏதாவது நியதி இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் அனுசரிக்கப்பட்டுத்தான் வருகின்றன.

பாதுகாப்பு விடுதிகள் (செங்கற்பட்டு மாவட்டம்)

* 77 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விடுதிகளிலுள்ள (Vigilance Homes and Orphanages) திருந்திய அனாதைப் பெண்களை மணம் புரிந்து கொள்வதற்கு, 1960, 1961 ஆண்டுகளில் எத்தனை பேர்கள் விண்ணப்பித்தனர் ?

(இ) எத்தனை பெண்களுக்குத் திருமணமாயிற்று ?

(உ) இத் திருமணங்களுக்கு அரசாங்கம் அளிக்கும் உதவித் தொகை யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are no Vigilance Homes in Chingleput district. The information is therefore 'Nil'.

(b) Does not arise.

(c) Does not arise.

அரசினர் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (சென்னை)

* 78 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ல் சென்னையிலுள்ள சர்க்கார் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் (Government Industrial Training Institute) பயிற்சி பெற்ற மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு " அப்பொரண்டிஸ் கோர்ஸ்' பயிற்சி பெற சர்க்கார் என்ன உதவி செய்துள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1961-62-ம் வருஷத்தில் 2,886 பேர் இஞ்சினியரிங் பிரிவில் பயிற்சி பெற்றார்கள்.

(இ) சம்பந்தப்பட்ட தொழிற் பள்ளித் தலைவர்களால் தனியார் துறை தொழிற்சாலைகளிலும் சர்க்கார் துறை தொழிற் சாலைகளிலும் ஆறுமாத 'இன்பிளான்ட்' பயிற்சிக்கு (Inplant Training) ஏற்பாடு செய்யப்பட்டது.

27th February 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் சபாநாயகர் அவர்களே, இப்படி பயிற்சி பெற்ற மாணவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்கப்பட்டு வருகிறதா ? அவர்களுக்கு வேலை கிடைக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி ஒரு உத்தரவாதம் கொடுப்பதற்கு இல்லை. ஆனல் இப்படி பயிற்சி பெற்ற மாணவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது.

திரு. கே. பொன்னையா : இப்படி பயிற்சிக்கு வரக்கூடிய பிள்ளைகள் பலருக்கு தனியார் துறையில் வருகிறவர்களுக்கு பல இடங்களில் அவர்கள் பயிற்சி பெறும் காலங்களில் அவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமலும், மற்றும் சாப்பாடு வசதிகள் முதலியவைகள் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகையினல் கோயம்பத்தூர் போன்ற நகரங்களில் இப்படிப்பட்ட மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுப்பதற்கு ஏதாவது எண்ணம் சர்க்காருக்கு இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்யூட் நடக்கிற இடங்களில் ஹாஸ்டல் வசதி இருக்கிறது, அதை பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். பயிற்சி காலம் 18 மாதம் ஆன பிறகு ஆறு மாதங்கள் தொழிற்சாலைகளில் பயிற்சி பெற வேண்டியதாக இருக்கிறது. கல்வி பயிலும் காலங்களில் தங்குவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தொழிற் பயிற்சி பெறுகின்ற காலங்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்யப்படவில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்ட்டிட்யூட் மூலம் பயிற்சி பெறுகிறவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ் மூலமாக வேலை தேடிக்கொள்ள பதிவு செய்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதனல் இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்யூட்கள் மூலமாகவே அவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது மத்திய சர்க்காருடைய கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இத்தகைய தொழிற் பயிற்சிப் பள்ளிக்கூடங்களில் இப்பொழுதுள்ள அவசர நெருக்கடி நிலை காரணமாக வேலை வாய்ப்பிழந்துள்ள பொற்கொல்லர்களுக்கு வயது வரம்பு சலுகை, கல்வி வரம்பு சலுகை அளித்து பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அளவில் அரசாங்கம் ஏதாவது சலுகைகள் கொடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலை கிடைக்கும்படியான பிரச்னையைப்பற்றி இப்பொழுது எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. அவர்களுக்கு வேலை கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனல் அவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்

சேஞ்ஜில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்படி பதிவு செய்து கொண்ட பிறகு எவ்வளவு சீக்கிரமாக வேலை கிடைக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரமாக வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கு வேண்டிய உதவியையும் சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது.

திரு .கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி பதினெட்டு மாதம் பயிற்சி பெற்ற பிறகு தொழிற்சாலையில் ஆறு மாதம் பயிற்சி பெற வேண்டி இருக்கிறது. அப்பொழுது அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. சில இடங்களில் அவர்களுக்கு தங்குவதற்கு ஹாஸ்டல் வசதி இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சலுகைகளைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அதைப்பற்றி பரிசீலனை செய்து தான் பதில் சொல்ல முடியும்.

திரு. கோ. சி. மணி : "மாணவர்கள் பயிற்சி பெற்று, தேர்ச்சி அடைந்தவுடனேயே, அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை அரசாங்கம் அளிக்கவில்லை என்றாலும், அவர்களுக்கு வேலை கிடைக்கிறது", என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'என்றாலும், வேலை கிடைக்கிறது' என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு எந்த அடிப்படையில் தெரியவந்தது என்பதைத் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அந்தப் பயிற்சி பெற்ற மாணவர்கள் கிடைக்காததிலிருந்தே எல்லோருக்கும் வேலை கிடைக்கிறது என்று தெரிகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : 'இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்டையும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜையும் ஒருங்கே இணைத்தால் நல்லது' என்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு யோசனை தெரிவித்திருப்பதாகக் கேள்விப்படுகிறேனே, அது உண்மையா ? அப்படியானால், அது பற்றிய விவரங்கள் தர முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் எங்களிடத்தில் இல்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : அமைச்சர் அவர்களுடைய பதிலில் 'இம்மாதிரி நிறைய வேலை கிடைப்பதனால், வேலை இல்லாதவர் ஒருவரும் இல்லை', என்று குறிப்பிட்டார்கள். ஆனால், எனக்கு நேரடியாகத் தெரியும்—பலர் வேலை இல்லாமலிருக்கிறார்கள். மேலும், இந்த 6 மாதப் படிப்பை முடிப்பதற்கு வசதி இல்லாத காரணத்தால், பலர் இடையிலே விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். ஆகையால், இனிமேலாவது, அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் சபாநாயகர் : ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து, இன்வெஸ்டிகேட் செய்ய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறாரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களிடத்தில் வந்து சொல்லுகிறவர்கள் உண்மையைச் சொல்லவில்லை என்று நான் நினைக்கிறேன். காரணம் என்னவென்றால், ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு எந்த எந்த இடத்தில் 'ப்ராக்டிகல் ட்ரெயினிங்' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று பிரின்ஸிபால் கடிதம் எழுதுகிறார். சிலர், எந்த இடத்தில் 'ப்ராக்டிகல் ட்ரெயினிங்' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திற்குப் போவதில்லை. போகாமல், அவர்கள் மறுபடியும் வந்து, வேறு இடத்திலே பயிற்சி வேண்டுமென்று கேட்டால், ப்ரின்ஸிபால் எந்த விதமான உதவியும் செய்ய முடிவது இல்லை. உடனே அவர்கள் கனம் அங்கத்தினர்களிடமோ மற்றவர்களிடமோ வந்து சொல்லுகிறார்கள், 'எங்களுக்குப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யவில்லை' என்று. இதுதான் உண்மை.

Physical Directors (Scale of pay)

* 79 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any request from the Salem Educational District Physical Association has been received for the enhancement of the scale of pay of Physical Directors and Regional Inspectors of Physical Education and Higher Grade Physical Education Teachers; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The matter is under examination.

Political prisoner (release due to illness)

* 80 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) when the jail authorities came to know of the illness of Sri G. Subramaniam, who was undergoing sentence at the Madras Central Jail convicted in connection with D.M.K. agitation;

(b) the arrangements made for giving him necessary treatment;

(c) when the Government came to know of his serious condition; and

(d) when orders were passed releasing him?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The jail authorities came to know of the illness of the prisoner G. Subramaniam in the morning of 11th October 1962.

(கைதி ஜி. சுப்பிரமணியம் நோய்வாய்ப்பட்டிருப்பதாக சிறை அதிகாரிகளுக்கு 11—10—1962 காலைதான் தெரியவந்தது.)

(*b*) All possible arrangements were made in the jail hospital and subsequently in the General Hospital, Madras, for the proper treatment of the prisoner.

(கைதிக்கு தகுந்த சிகிச்சையளிக்க முதற்கண் சிறை ஆஸ்பத்திரியிலும் பின்னர் ஜெனரல் ஆஸ்பத்திரியிலும் முடிந்தவரை எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.)

(*c*) On the forenoon of 12th October 1962.

(12—10—1962 முற்பகல்)

(*d*) Immediately on receipt of informtaion about the condition of the prisoner.

(கைதியின் நிலைமை தெரிந்தவுடனேயே அவரை விடுதலை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.)

திரு. கோ. சி. மணி : *"கோ. சு. மணி அவர்களுக்குச் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்ட அவசர சிகிச்சையில் ஏற்பட்ட தவறினாலோ, அல்லது அங்கிருந்த டாக்டர் இராமனாதன் என்பவர் சரியாக சிகிச்சை செய்யாததாலோ அவருக்கு மரணம் ஏற்பட்டதா?" என்று நான் கேட்ட நேரத்தில், "அதனால்தான் மாற்றினார்கள், அதுபற்றி தகவல் சேகரிக்கப்பட்டது", என்று சொன்னார்கள். அது பற்றிய விவரம் சர்க்காரிடம் இருக்கிறதா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.*

திரு. இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, திரு. மணி அவர்கள் எந்த நோயின் காரணமாக இறந்துவிட்டார் என்ற தகவல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *11—10—1962 காலை 8 மணிக்கு ஜெயில் ஆஸ்பத்திரியில் அவர் சேர்ந்தார்.*

He was coughing blood with sputum blood-stained. General check-up was normal and drugs were given by intravenous route. At 9-10 a.m., he vomited blood about one ounce. His pulse rate was 110|mt. and B.P. 120|80. He was immediately sent to the General Hospital by ambulance for further treatment.

11-ந் தேதி அவர் நோய்வாய்ப்பட்டவுடன், ஜெயில் ஆஸ்பத்திரியில் அவரைப் பரிசோதித்தார்கள். அதற்குப் பிறகு அவரை உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : *11-ம் தேதி அன்றையதினம் வந்திருந்தும் 12-ம் தேதி அவர் இறப்பதற்குப் பத்து மணி நேரத்திற்கு முன்னால்தான், அவர் குற்றுயிரும் குலையுயிருமாக, மரணமடையும் தருவாயில் இருந்தபோது, அவரை விடுதலை செய்தார்கள். ஒன்று, அவர்கள் சிகிச்சை செய்து விடுதலைசெய்யாமலே இருந்திருக்கலாம். அல்லது, முன்னாலேயே அவர்களுடைய உறவினர்களைப் பார்க்கிற வசதிகளையாவது இந்தச் சாக்கார் செய்திருக்கலாம். இதில் தவறியதற்கு என்ன காரணம்?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *"சிகிச்சை செய்திருந்து விடுதலை செய்யாமல் இருந்திருக்கலாம்" என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள். ஆபத்துக்கிடமான நிலை ஏற்பட்டால் விடுதலை செய்வது என்பது அரசாங்கம் அனுசரித்து வரும் கொள்கை ஆகும். அந்தக் கொள்கையின்படி அவர் விடுதலை செய்யப்பட்டார். எப்பொழுது ஆபத்தான நிலை என்று அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் வந்ததோ அப்பொழுதே கொஞ்சமும் தாமதம் இல்லாமல், உடனே விடுதலை செய்யும்படி உத்தரவு போட்டார்கள். 11-ம் தேதி திடீரென்று இந்த வியாதி அந்தக் கனம் அங்கத்தினருக்கு வந்ததாகத் தெரிகிறது. 10-ந் தேதி அவர் ஜெயிலில் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தாராம். அதன்பிறகுதான் மார்பில் வலி இருப்பதை உணர்ந்து, உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.*

திரு. மு. கருணாநிதி : *பொதுவாகவே, சிறைச்சாலைகளில் கைதிகளுக்கான மருத்துவ வசதி மிக மிகக் குறைவாக இருக்கிறது எனபது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *பொதுவாகவே சிறை ஆஸ்பத்திரிகளில் வசதிக் குறைவு இருக்கிறது என்று நான் கருதவில்லை. போதிய வசதிகள் இருக்க வேண்டும் என்பதிலே அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. குறிப்பாக, ஏதாவது ஒரு சிறை ஆஸ்பத்திரியில் குறைபாடு இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டால், மேலும் கவனித்து அதை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம்.*

திரு. கே. ஏ. மதியழகன் : *சர்க்கார் அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்திருக்கலாம். வெறும் அற்ப சந்தோஷத்திற்காகத் தான் விடுதலை செய்தார்கள் என்று கருதினால அது சரிதானா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *கனம் அங்கத்தினர் என்ன சொல்லுகிறார், என்ன கருதுகிறார், என்ன வேண்டுகிறார் என்பது கொஞ்சங்கூடப் புரியவில்லை. விடுதலை செய்தது தப்பு என்று சொல்வதாயிருந்தால் அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஜெயிலில் ஆபத்தான நிலையில் யார் இருநதாலும் அவர் விடுதலை செய்யப்படுவதுண்டு. எப்பொழுது வியாதி ஏற்பட்டாலும், உடனே வேண்டிய சிகிச்சையெல்லாம் அளிக்கப்படுகிறது. இவரைப் பொறுத்த மட்டில், சிறையில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்குப் பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அங்கும் கவனம் செலுத்தப்பட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிறந்த ஃபிஸிஷியன், டாக்டர் மோஸஸ்,*

அவரைக் கவனித்தார். டாக்டர் மோகன் ராவ் அவர்களும் கவனித்தார். வேண்டிய சிகிச்சை செய்யப்பட்டது. சிகிச்சை செய்தும் ஆபத்தான நிலைமை இருப்பதாக அரசாங்கத்திற்கு கமிஷனர் ஆஃப் போலீஸ் தெரிவித்ததும், உடனடியாக அவரை விடுதலை செய்யும்படி உத்தரவு போடப்பட்டது. சிறையில் ஆஸ்பத்திரி இருந்தாலும், மேலும் வேண்டிய சிகிச்சை செய்வதற்காக ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் பட்டு, அங்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்படியிருக்க, அரசாங்கம் எதைச் செய்யத் தவறிவிட்டது என்பது எனக்குப் புரியவில்லை.

திரு. ராம் அரங்கண்ணல் : இந்தப் பரிதாபகரமான சாவு சம்பந்தமாக டிபார்ட்மென்டல் என்க்வயரிக்கு அரசாங்கம் உத்தரவிட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இவ்வளவு தகவல்கள் நான் கொடுத்திருக்கிறேன். இதற்குமேல் டிபார்ட்மென்டல் என்க்வயரிக்கு அவசியமில்லை என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருச்சி மத்திய சிறைக்கு நாங்கள் ஜூலை மாதம் 19-ம் தேதி கைது செய்யப்பட்டு சென்றோம். அங்கே 20-ந் தேதி வந்திறங்கிய மருந்துகளை விடுதலையடைந்த தேதி வரையில் எந்த நோயாளிக்கும் கொடுக்கவில்லை என்பதைக் குறித்து நான் கனம் அமைச்சருக்கு, சிறை அதிகாரி மூலமாக, ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்கு அது நினைவு இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விடையளிக்கலாம். அங்கிருக்கும் மருந்துகளையெல்லாம் நோயாளிகளுக்குக் கட்டாயம் கொடுத்துத் தான் ஆகவேண்டும் என்பது இல்லை. நோயாளிகளுக்கு என்ன மருந்து வேண்டுமோ அதைக் கொடுப்பார்கள். நோயாளிக்கு வேண்டிய மருந்து இருக்கும்போது, அதைக் கொடுக்கவில்லை என்ற புகார் வந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சில மருந்துகள் பெட்டியோடு வந்திருந்தும், அதற்கு வேண்டிய இன்வாய்ஸ் அரசாங்கத்திட மிருந்து வராத காரணத்தால் அந்த மருந்துகள் எடுக்கப் படாமல் அங்கேயே இருக்கின்றன என்பது அங்கு தெரிவிக் கப்பட்ட பதிலாகும். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. குறிப்பாக ஒரு மருந்து தேவைப்பட்டு, அந்த மருந்து இருந்தும் கொடுக்கப்படவில்லை என்ற புகார் வந்தால் அதை மேலும் பரிசீலனை செய்யலாம். அம்மாதிரி நடைபெறு மலிருக்க ஏற்பாடும் செய்யலாம்.

திரு. முனு ஆதி : 11-ந் தேதியன்றுதான் திரு. கோ. சு. மணி அவர்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை சிறைச்சாலையில் 10-ந் தேதி இரவே அவர் இரத்த வாந்தி எடுத்தபோது, உடனிருந்த கைதிகள் சப்தம் போட்டபோதே அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகாமல், உதாசீனப்படுத்திவிட்டு மறுநாள் காலை கொண்டு போனதால்தான், அவர் இறக்க நேர்ந்தது என்று நாங்கள் கருதுவதுபோல் பொது மக்களும் கருதுகிறார்கள். அதேபோல் அரசாங்கமும் கருதுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கருதுவதைப்பற்றிப் பேசலாம். பிறகு பொது மக்களைப்பற்றி வைத்துக்கொள்ளலாம். 10-ந் தேதியன்று அவர் சடு குடு விளையாடினார் என்பதைக் கனம் அங்கத்தினர் மறுக்கவில்லை. கனம் அங்கத்தினரும் அங்கே இருந்தவர். 10-ந் தேதியன்று விளையாடக் கூடிய நிலையில் அவர் நன்றாகத்தான் இருந்திருக்கிறார். (ஒரு கனம் அங்கத்தினர் திரு. முனு ஆதியிடம், "அவர் விளையாடியது உண்டா ?" என்று கேட்டதற்கு, திரு. முனு ஆதி, "இல்லை, இல்லை" என்று சொன்னார்). நான் சொன்னபிற்பாடு 'இல்லை' என்று மறுக்கலாம். இரவில் ஒரு கைதிக்கு வியாதி என்றால், டாக்டர் வந்து பார்க்கிறார். அதற்குமேல் அவசியமென்றால், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கலாம். இவர் மறு நாள் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டதாகத் தெரிகிறது.

Small pox (Ramanathapuram district)

* 81 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of deaths due to small-pox in Ramanathapuram district during the period January to September 1962—month-war?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

Month.	*Number of deaths.*
January 1962	2
February 1962	7
March 1962	9
April 1962	6
May 1962	9
June 1962	8
July 1962	40
August 1962	45
September 1962	58

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் தேவகோட்டை நகரில் அம்மை நோயினால் ஏராளமான சாவு ஏற்பட்டிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அதன் பேரில் உடனடியாக எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அத்தகவல் கிடைத்தவுடன் இவ்வரசாங்கம் தக்க சுகாதார அதிகாரிகளை நியமித்து ராமநாதபுரம் முனிஸிபாலிட்டி ஏரியா முழுவதும் சுற்றிப் பார்த்து, ஏற்கெனவே வாக்ஸினேஷன் செய்யப்பட்டவர்களுக்கும் கூட ரீ வாக்ஸினேஷன் செய்வதற்குத்தக்க ஏற்பாடுகளை மேற்கொண்டது.

திரு. ஆ. துரையரசன் : தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டைப் பகுதியில் கடந்த வாரம் வரையில் ஏழு பேர்களுக்குமேல் அம்மை நோய்க்குப் பலியானது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்வி ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தது. இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : மிகக் குறைவாக இருந்த அம்மை நோய் இப்போது எல்லா ஜில்லாக்களிலும் வெகுவாகப் பரவ ஆரம்பித்திருப்பதனால் அதை மாநிலம் முழுமையிலும் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஊசி போடப் பட்டவர்களுக்கும்கூட மீண்டும் ஊசி போடப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்து அம்மை நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வந்திருக்கிறது. இப்போது பூராவாக மாநிலம் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். பொதுசுகாதாரத்தில் தக்க கவனம் செலுத்தப் படாத காரணத்தினால்தான் இம்மாதிரி அம்மை நோய் பரவுகிறது என்று சொல்லப்படுகிறது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாநிலம் பூராவும் கட்டுப்படுத்த எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் அந்த அந்தத் தொகுதி உறுப்பினர்களும் அந்த அந்தத் தொகுதியில் உள்ளவர்கள் அனைவரும் ஊசி போட்டுக் கொள்வதற்கு உதவியாக பிரசாரத்தின் மூலம் ஒத்துழைத்தால் உடனடியாகக் கண்ட்ரோல் பண்ணிவிடலாம்.

திரு. கோ. சி. மணி : கனம் தலைவர் அவர்களே, அம்மை நோயைத் தடுப்பதற்கு அம்மை குத்தியும், அம்மை குத்தியவர்களுக்கே அம்மை நோய் கண்டு இருப்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அதன்பேரில் எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ராமநாதபுரத்தில் அம்மாதிரி வருவது பற்றிச் செய்தி வந்தவுடன்தான் வாக்ஸினேஷன் செய்யப்பட்டவர்களுக்கே ரீ வாக்ஸினேஷன் செய்ய உத்தரவிட்டிருக்கிறோம்.

Avenue trees (leasing of)

* 82 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to lease the usufructs of avenue trees to the panchayats instead of panchayat union councils?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Orders have since been issued in Memorandum No. 243179 P-2/61-10, R.D. & L.A., dated 17th November 1962 that the usufructs of trees standing on road porambokes of the Highways and Rural Works Department should be leased out to the panchayats instead of to panchayat unions.

திரு. ம. கமலநாதன் : முன்னே இருந்த திட்டமே நன்றாக இருந்தது. நிழற்சாலை மரங்கள் ஒருசில பஞ்சாயத்துகளில் தான் இருக்கின்றன. மற்றவைகளில் இல்லை. ஏறக்குறைய பரவலாக இதன் பலன் எல்லாவற்றுக்கும் கிடைத்தால் நலமாக இருக்கும். ஆகவே பஞ்சாயத்துகளுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியனே பொதுக் குத்தகைக்குவிட ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த அந்த பஞ்சாயத்து ஏரியாக்களில் இருக்கிற மரங்களின் பலன் அந்த அந்த பஞ்சாயத்துக்களைச் சாருவது தான் நலம். எல்லாவற்றுக்கும் அதைப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்று சொல்வது நல்லது அல்ல என்று நான் கருதுகிறேன். அதை கனம் அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர் : கேள்வி பதில்கள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

III.—CALLING ATTENTION TO THE REVERSION OF CRAFT INSTRUCTORS IN SCHOOLS.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் தலைவரவர்களே, நமது ராஜ்ய கல்வி இலாகாவின் சமீபகால சுற்றறிக்கை காரணமாக நமது ராஜ்யம் முழுமையிலுமுள்ள உயர்தர ஆரம்பப் பாடசாலை, ஆதாரப் பாடசாலைகளில் வேலை பார்த்து வந்த கைத்தொழில் ஆசிரியர்கள், எந்தவிதமான முன்னறிவிப்புமின்றியே பகுதி நேர கைத்தொழில் ஆசிரியர் கிரேடு குறைக்கப்பட்டு அதன் காரணமாக வேலை ஸ்திரமற்ற நிலையும், மிகவும் குறைந்த ஊதியமும் பெற வேண்டிய நிர்பந்த நிலைமைக்கு ஆளாகி அதன் காரணமாக அந்த கைய ஆசிரியர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் திரு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Pre-vocational instructors are employed in higher elementary schools for giving instruction in pre-vocational subjects in higher elementary standards.

[Sri M. Bhaktavatsalam] [27th February 1963

Under the old syllabuses there were three higher elementary standards, viz., Standards VI, VII and VIII and the pre-vocational instructor would have 18 periods of work in all the three standards put together. Each school could have a pre-vocational instructor on a full-time basis.

Under the revised syllabuses higher elementary standards have been reduced to two standards, viz., VI and VII and the number of periods of work for a pre-vocational instructor has got reduced from 18 to 12 periods with the result that the department advised the managements to appoint pre-vocational instructors only on a part-time basis if fresh appointments are made but to continue the full-time pre-vocational instructors as such during 1962–63.

IV.—GOVERNMENT MOTION.

TRANSACTION OF GOVERNMENT BUSINESS ON A NON-OFFICIAL DAY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That Rule 23 (1) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, 28th February 1963."

MR. SPEAKER : The question is :

" That Rule 23 (1) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, 28th February 1963."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS BILL, 1963 (L.A. BILL NO. 4 OF 1963).

12-00 noon THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg leave to present the report of the Select Committee on the Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L.A. Bill No. 4 of 1963) and move—

' That the Bill as amended by the Select Committee be taken into consideration '.

The Report and Proceedings of the Select Committee have been printed and supplied to all the Members.

The Select Committee considered the assessments in the different districts of the State and decided to make certain changes reducing the percentage increases and the ceilings in respect of additional wet assessment and also additional water-cess. The following are the principal changes made by the Select Committee :

27th February 1963] [Sri V. Ramaiah]

(1) The Committee decided that for the wet lands under first and second-class sources the percentage increase may be 45 per cent of the land revenue payable instead of 60 per cent originally fixed. The overall ceiling for the levy of additional assessment under this clause was reduced as follows :—

(1) Single crop wet land from Rs. 20 to Rs. 18.

(2) Compounded double crop wet lands from Rs. 25 to Rs. 23.

(3) Registered double crop wet lands from Rs. 30 to Rs. 27.

Similarly, for irrigation under Class III, IV and V, the percentage increase of the wet assessment was decreased from 40 per cent to 30 per cent and the ceilings reduced as follows :—

(1) Single crop wet lands from Rs. 15 to Rs. 12.

(2) Compounded double crop wet lands from Rs. 17.50 to Rs. 15.

(3) Registered double crop wet land from Rs. 20 to Rs. 17.

In respect of additional water-rate the percentage increase originally fixed was for first and second-class sources—100 per cent and III to V class sources—50 per cent. The Committee reduced these rates as follows :—

(1) First and second-class sources ... 75 per cent.

(2) III to V class sources ... ... 37½ ,,

The Committee decided to give a further concession that in the case of dry or manavari lands, the additional water-cess along with the water-cess originally payable and the land revenue assessment for the land shall not exceed the ceiling of Rs. 15 per acre.

The Committee also decided to give another concession, viz., in the case of wet land which is liable to an increase in the wet assessment and which also liable to pay additional water-rate as in the case in certain old wet lands under tanks which might subsequently receive project water, only the increased additional assessment or the additional water-rate shall be payable according as whichever is higher.

The Committee also decided to increase the period of time for appeal under clause 8 from 30 days to 60 days and also decided that the Appellate authority may allow a further time not exceeding 90 days.

The Committee also decided that the additional assessment or additional water-rate should not be taken account for the purpose of calculating court-fees under the Madras Court Fees and Suits Valuation Act, 1955 (Madras Act XIV of 1955) and also for calculating stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

[Sri V. Ramaiah] [27th February 1963

One more lease village of Chingleput district was added to Schedule II under exemptions.

The Committee also decided for the sake of clarity to separately define, I, II, III, IV and V class sources.

The Bill as altered by the Select Committee is before this House. Subsequent to the meeting of the Select Committee, examination by the Departments has shown the need for certain amendments which I have already proposed. When I move these amendments I will give necessary details. But even at the beginning I shall briefly refer the reasons for proposing these amendments.

Amendment to definition of 'landholder' in clause 2 *sub-clause* (7).—The amendment is only by way of abundant caution to make it clear that the person paying land revenue under section 23 of the Estates Abolition Act in taken over estates is also covered by the term 'landholder.'

Amendment to clause 3.—The amendment has the effect of bringing both compounded double crop wet lands and double crop wet lands under first and second-class sources under a common ceiling of Rs. 27. It was found that the procedure regarding the composition has varied from district to district. Large variations have been noticed. For instance, ordinarily, no composition will be permitted under a first-class source. But this was not only permitted under first-class sources but was also compulsorily done in Tirunelveli district. So much so, in Tirunelveli district all the double crop lands, barring very rare cases, are only compounded double crop lands. It was found that the ceiling of Rs. 23 for compounded lands would practically mean no increase for certain high taram lands in areas like Tirunelveli paying at present Rs. 22.50 per acre because of this peculiar feature of compulsory composition, even though on ground of yield and assured nature of supply of water, these lands are not inferior to registered double crop lands elsewhere in districts like Tiruchirappalli and Thanjavur.

Amendment to clause 4.—This is similar to the amendment to clause 3. The vagaries of composition though not seen to such a large extent as under I and II class sources are still quite considerable even under sources of classes III to V. Compulsory composition has been done in respect of classes III to V also in Tirunelveli district.

A careful examination of the rates also has related that a separate ceiling of Rs. 15 for compounded double crop lands is too low. For instance, the best compounded double crop land under third-class sources in Tirunelveli district is even now paying Rs. 14.95. An imposition of ceiling rate of Rs. 15 in respect of

27th February 1963] [Sri V. Ramaiah]

such a land which is compulsorily compounded will only mean a rise of 5 nP. This is not considered equitable treatment. The common ceiling of Rs. 17 already fixed by the Select Committee for registered double crop lands is therefore proposed for both the compounded double crop lands and double crop lands.

Amendment to clause 5.—When the Select Committee suggested a ceiling of Rs. 15 per acre for (land revenue *plus* water-cess *plus* additional water-cess thereon) under this clause in respect of land registered as dry or manavari, the point was overlooked that, even now, where a dry or manavari land raises more than one crop the assessment *plus* water-rate payable for the crops is more than Rs. 15 the ceiling fixed. For instance, a land raising two wet crops with Cauvery-Mettur Project water bearing an assessment of Rs. 2.75 will have to pay a water-rate of Rs. 10 for the first crop and a water-rate of Rs. 5 for the second crop. Including the assessment it will have to pay even now Rs. 17.75. It could not therefore be the intention of the Select Committee that they should pay less under the Bill now under consideration. So the ceiling of Rs. 15, it is made clear by this amendment, will apply only to land revenue *plus* water-rate *plus* additional water-cess for the first crop in the case of dry or manavari assessment, the water-rate for second and subsequent crops being liable to be charged separately under this Bill.

Amendment to clause 17.—This amendment is to make it clear that the increased assessment is not to be taken into account for calculating the standard acre under the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961, just as it is not our intention that it should be taken into account for the purposes of calculation of standard acre under the Agricultural Income-tax Act or under the Land Ceiling Act.

I commend these amendments, Sir, for acceptance by this House.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L.A. Bill No. 4 of 1963) as amended by the Select Committee be taken into consideration."

SRI SAW. GANESAN: Sir, I move:

"That the Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L.A. Bill No. 4 of 1963) as amended by the Select Committee be circulated for eliciting public opinion."

The amendment was duly seconded.

*திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின் முன் வந்திருக்கிற 1963-ஆம் ஆண்டு சென்னை கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை மசோதாவானது, பலருடைய கருத்துக்களை எல்லாம் நாம் நன்றாகத் தெரிந்துகொண்டு,

[திரு. சா. கணேசன்] [27th February 1963

அதனாலே ஏற்படக்கூடிய சாதக பாதகங்களைக் கவனத்தில் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகர நில வரி மசோதா செலெக்ட் கமிட்டிக்கு வந்த போது, மார்ச் 31-ஆம் தேதி வரை மெமோரண்டங்கள் பெறுவதற்கு நாள் குறிப்பிடுவது என்றும், ஏப்ரல் 16, 17, 18-இல் நேரடியாகச் சாட்சியங்கள் பெறுவது என்றும், அதன் பிறகு செலெக்ட் கமிட்டி அது சம்பந்தமாக ஆலோசனைகளைச் சபைக்குச் சமர்ப்பிப்பது என்றும் முடிவு செய்யப்பெற்றது. நகர நிலவுடைமையாளர்களைவிடக் கிராம நிலவுடைமையாளர்கள் எண்ணிக்கையிலும் . . .

MR. SPEAKER : Does the hon. Member, Sri Saw Ganesan, want the Bill to be circulated for eliciting public opinion? I find from the Assembly Rules, that there is no rule permitting the House to circulate the Bill at this stage for eliciting public opinion after the Select Committee has considered it and submitted its report.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I want to make a submission. Under Rule 95 of the Madras Assembly Rules, when a Bill is first introduced in the House anyone of the three motions mentioned below may be made, viz.,

(a) that it be taken into consideration,

(b) that it be referred to a Select Committee of the House, or

(c) that it be circulated for the purpose of eliciting public opinion thereon.

Now in the present case, the Select Committee has submitted a report and it has been presented to the House. After the Select Committee has made its report and the same has been presented to the House, Rule 108 of the Assembly Rules will apply and according to that rule, the Bill should either be taken into consideration or recommitted to the Select Committee. Therefore, in the circumstances, there is no provision under the rules for circulating the Bill again for eliciting public opinion. Therefore the motion is out of order.

SRI SAW. GANESAN rose

MR. SPEAKER : There is no provision in the rules for circulating the Bill for eliciting public opinion at this stage after the Select Committee has submitted its report to the House. So there is no use now in arguing on that ground.

திரு. சா. கணேசன் : விதிப்படி அது சாத்தியமில்லையென்று கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கூறுவார்களானால் மற்றொரு செலெக்ட் கமிட்டி அமைத்து அதன் மூலமாக புனர்பரிசீலனை செய்ய வேண்டுமென்று இருக்கிற விதியின் கீழே இதைக் கொணர்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று நான் கோரிக்கொள்கிறேன்.

27th February 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மற்றொரு செலெக்ட் கமிட்டிக்கு அனுப்புவது என்பதும் விதிக்கு புறம்பானது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன் : மற்றொரு கமிட்டிக்கு என்று இல்லாவிட்டால் 'மற்றொரு முறை' என்றாவது ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டியில் பரிசீலனை செய்த போது அபிப்பிராய பேதங்கள் இருந்தன. எல்லாம் விவாதிக்கப் பட்டுதான் முடிவு செய்யப்பட்டது. செலக்ட் கமிட்டியில் டிஸென்ட்டிங் மினிட் கூட இல்லை. அப்படியிருக்கும்போது அதே கமிட்டிக்கு இதை மறுபடியும் யோசனைக்கு அனுப்புவது என்பதற்கு கொஞ்சம்கூட இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரேரணையை நான் எதிர்க்கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : 5-ம் தேதி சட்டசபை முடிந்தது. 11, 12-ம் தேதிகளில் அவசரமாக செலெக்ட் கமிட்டி கூடி இதில் விரைவாக முடிவு எடுத்து விட்டார்கள், என்று நான் கருதுகிறேன்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அதில் மெம்பரா ?

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : இதை மீண்டும் பரிசீலிப்பதால் குடி முழுகிப் போய்விடப் போவதில்லை. மீண்டும் இதை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலிப்பதை ஆட்சியாளர்கள் வன்மையாக எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. செலெக்ட் கமிட்டியில் எங்களைப் போன்றோர் அபிப்பிராயங்கள் சொல்ல முடியாமல் போய்விட்டது. என்ன நடந்தது என்று எனக்கே தெரியாது. ஆகவே இதைத் தள்ளி வைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. மீண்டும் இதை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. மூக்கையா தேவர் : டிஸென்டிங் மினிட்கூட கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஏற்கெனவே அவசரத் தேவையை முன்னிட்டு அவசரமாக வரி எல்லாம் போட்டு வருகிறோம். ஒரு கோடிக்கு தேவை இருக்கிறது என்று முதலில் குறிப்பிட்டார்கள் . . .

MR. SPEAKER : So the hon. Member agrees.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Not only did he agreed but he also appreciated what I stated.

திரு. சா. கணேசன் : என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள கனம் சபாநாயகர் அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

திரு. கே. மூக்கையா தேவர் : நான் முழுவதும் பேசிய பிறகு தெரிந்து கொள்ளலாம்.

[27th February 1963

கனம் சபாநாயகர் : முழுவதையும் சொல்லுங்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : இருக்கிற நிலைமையை உத்தேசித்து விவசாயிகளுக்கு நஷ்டத்திற்கு நஷ்டம் வராமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும், பெருந்தன்மையோடு. நாலாம், ஐந்தாம் கிளாஸ்களை எடுத்துக்கொள்வோம். மழையை நம்பி வாழும் மக்களுக்கு வரி போடக்கூடாது என்றும் ஏழை மக்களுக்காக பாடுபடும்போது இதை விட்டுக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்றும் கேட்டோம். அதுதான் . . .

MR. SPEAKER : The point is whether it should be recommitted to the Select Committee. But the Hon. Minister has now stated that if there is a lot of difference there and reconsideration of the Bill is necessary, it can be sent back to the Select Committee and that as there is no minute of dissent on record, there is no use of sending it back to the Select Committee.

திரு. கே. மூக்கையா தேவர் : டிஸென்டிங் மினிட் இல்லாததால் அக்கமிட்டிக்கு திருப்பி அனுப்பக் கூடாது என்று சொல்வது சரி அல்ல. ஆகவே பொதுமக்கள் . . . .

MR. SPEAKER : The rule says—

'After the Select Committee has made its report the member-in-charge may move—

'that the Bill as reported by the Select Committee be recommitted either—

(a) as a whole, or

(b) with respect to particular clauses or amendments only . . . .'

So, there is provision only for recommittal and not for eliciting public opinion at this stage. I therefore rule the amendment of the hon. Member, Sri Saw Ganesan, out of order.

SRI C. CHIRANJEEVULU NAIDU rose.

MR. SPEAKER : Is the hon. Member going to raise a point of order or a point of information?

SRI C. CHIRANJEEVULU NAIDU : On a point of information, Sir. After the report of the Select Committee has been published, I think sufficient time should be given to the hon. Members of this House to study the Bill as amended by the Select Committee. The Bill as amended by the Select Committee was circulated to the hon. Members only four or five days back. Therefore, there is not enough time for the hon. Members to go through the Bill in detail.

MR. SPEAKER : The rule provides for only five days.

27th February 1963]

SRI C. CHIRANJEEVULU NAIDU : At least some of the hon. Members have not received it. So, I suggest that there may be a general discussion on the Bill and the clause-by-clause consideration of the Bill may be taken up after some time.

MR. SPEAKER : That has nothing to do with the motion before the House. If the House agrees, we can take up clause-by-clause consideration of the Bill on some other day but that is not the question now before the House.

Now, does any hon. Member want to speak on the motion moved by the Hon. Minister?

SRI J. MATHA GOWDER rose.

MR. SPEAKER : The hon. Member, Sri Matha Gowder, will now speak.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாநிலத்திலுள்ள நிலங்களுக்கு உபரி வரி விதிக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா ஏற்கெனவே இந்த சபையில் விவாதிக்கப்பட்டு அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி செலக்ட் கமிட்டி அதை பரிசீலித்து ஒரு முடிவுக்கு வந்து இந்த ரிப்போர்ட்டை சமர்பித்திருக்கிறார்கள். நம் மாநிலத்திலுள்ள நிலங்கள் மூலம் நாம் மேலும் ஒரு கோடி ரூபாய் உபரி வரியாக எதிர்பார்க்கிறோம். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாக நிலங்களுக்கு விதித்த நில வரியையே இன்றும் நாம் விதித்துக் கொண்டிருப்பது முறையாகாது. வேறு துறையில் இருப்பவர்களுக்கு அதிக வரிவிதித்து இதை மட்டும் மாற்றி அமைக்காமல் இருப்பது சரி அல்ல என்ற நோக்கம் வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் தண்ணீர் வரியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு மாதிரியாக வித்தியாசமாக வரி விதிப்பது முறையாகாது. ஒரே மாதிரியாக எல்லோருக்கும் வரி விதிப்பது என்பது நியாயம் என்ற அடிப்படையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி பல கருத்துக்கள் செலெக்ட் கமிட்டியில் பேசப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டு இதை தள்ளி வைக்கலாம் என்றால் ஒரு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் குறைந்தால் நமது திட்ட வேலைகள் பாதிக்கப்படும் என்பதால் ஒரு ஆண்டு காலம் வரை இதைத் தள்ளி வைப்பது என்பது அவ்வளவு உசிதமாகாது என்று நான் கருதுகிறேன். இந்த மசோதாவை சமர்ப்பித்ததிலிருந்து இந்த வருவாயை நாம் எதிர்நோக்கியிருக்கிறோம். ஒரு கோடி ரூபாய் நமக்கு வருவாய் வரும் என்பதால் என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று திட்டக் கமிஷனிடம் எடுத்துச் சொல்லி திட்டக் கமிஷன் மூலம் என்னென்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்று முடிவு செய்த பிறகு இதை ஒரு ஆண்டு தள்ளி வைத்தால் அத்திட்டங்களை கை விட்டுவிட வேண்டும் அல்லது அவற்றை நிறுத்தி வைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே இந்த பசலியிலிருந்து இந்த வரியை விதிப்பது உசிதமானது. செலக்ட் கமிட்டிக்கு

நேரம் கொடுக்கவில்லை என்ற கருத்து அவ்வளவு ஒவ்வாது. எத்தனை நாட்கள் பரிசீலிக்க வேண்டுமென்பது செலெக்ட் கமிட்டி அங்கத்தினர்களைப் பொறுத்ததே தவிர சபையைப் பொறுத்த தல்ல. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்கள் போதுமா இல்லையா என்பது அவர்களை பொறுத்த விஷயம். அவர்களை நம்பி செலெக்ட் கமிட்டிக்கு இந்த மசோதாவை விட்டிருந்தோம். மறுபடியும் பொது மக்களின் அபிப்பிராயத்திற்கு ஏன் இதை விடக்கூடாது என்ற வாதம் இந்த மன்றத்தில் எழுப்பப் பட்டது. பொதுமக்கள் பிரதிநிதிகளாகிய நாம் இங்கு வந்திருந்து பொது மக்களின் பிரதி நிதிகளைக் கொண்ட ஒரு கமிட்டி அமைத்து அக்கமிட்டி யார் பரி சீலனை செய்தார்கள். பொதுமக்களின் அபிப்பிராயத்தைத் தெரியா மல், எப்படி அந்தக் கமிட்டி முடிவு செய்யும்? பொது மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துதான் அந்தக் கமிட்டி அங்கத் தினர்கள் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் யோசிக்க வேண்டும். ஆக, மறுபடியும் பொது மக்களை இழுத்து இதில் வைத்து பொது மக்களுக்காக யாரோ பாடுபடுவதாகவும், ஏழை மக்களுக்காக பாடுபடுவதாகவும் இங்கு கூறி விவாதிப்பது, அப்படி விவாதிக்க பணக்காரர்களுக்கு சலுகை காட்டக்கூடிய கட்சிக்காரர்கள்கூட வந்திருப்பது கண்டு நான் மிக மிக ஆச்சரியப் படுகிறேன். இந்த நாட்டில் தனி மனிதனுக்கு சுதந்திரம் வேண்டும், தனிப்பட்ட முறையில் சம்பாதிக்கக்கூடியவர்கள் இந்த நாட்டில் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கக் கூடியவர்கள் இன்றைக்கு 'ஏழை மக்கள் வாழவேண்டும், ஏழை மக்கள் வாழவேண்டும்' என்று பேசக்கூடியவர்களைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். இந்த நிலையில் நாம் இன்றைக்கு நல்ல தொரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு இப்போது பல திருத்தங்களோடு வந்திருக்கிறது. முன்னால். ஒரிஜினல் மசோதாவில் இருந்ததைவிட, அதில் கோரப் பட்டிருந்த வரியிலிருந்து ஒன்றிரண்டு சதமானம் குறைக்கப்பட்டு இப்போது மசோதா இந்த சபையில் வந்திருக்கிறது. இதை நன்றாக ஆலோசித்துப்பார்க்கும் யாரும் இதை மறுத்துப் பேச முடியாது. ஆனால் இதில் ஒரே ஒரு குறிப்பை மட்டும் நான் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்துவிட்டாலும் போதும் என்று நினைக் கிறேன். டிரை லான்ட் என்று சொல்லப்பட்டிருக்கின்ற நிலங்கள், அதாவது சர்க்காரே தண்ணீர் கொடுக்காத நிலத்திற்கு, மழையையே நம்பியிருக்கும் நிலத்திற்கும் வரி விதிக்கப்படுமா இல்லையா என்று தெளிவாக செலெக்ட் கமிட்டியில் சொல்லப்பட வில்லை. செலெக்ட் கமிட்டியில் இதைப்பற்றி விவாதிக்கும்போது சர்க்கார் ரெவின்யூ அடிஷனல் செக்ரட்டரி அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

If any person did not take water from any Government source and was not paying water cess at present; he would not at all be affected by the Bill under consideration.

இப்போது அமைச்சர் அவர்கள் இந்த தீர்மானத்தை கொண்டு வந்து சொல்லும்போது மானம் பார்த்த பூமிக்கும், டிரைலான்ட் க்கும் 15 ரூபாய் வரை வரி விதிப்பு கொண்டுவரலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நான் வருந்து கிறேன். இதில் சர்க்கார் அணைகட்டி கோடி கணக்கான ரூபாய் செலவு செய்து தண்ணீர் கொடுக்கும் நிலங்களுக்கு மாறுபட்ட முறையில் ஒவ்வொரு இடத்திற்கும் நேரத்திற்கும் தகுந்தவாறு வரிவிதிப்பது நியாயமாக இருக்கும். ஆனால் டிரை லான்ட் என்று சொல்வதைப் பொறுத்தவரையில் இது எப்படிப் பொருந்தும் என்றே தெரியவில்லை. டிரை லான்ட் என்பது என்னவென்று தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். ஒரே பகுதியில் ஒரே தரத்தி லுள்ள நிலங்களையே டிரை லான்ட், மானாவாரி நிலங்கள் என்றெல் லாம் சொல்லப்படுகிறது. பொதுவாக சர்க்காரால் தண்ணீர் கொடுக்கக் கூடிய நிலங்கள் இருக்கின்றன. சர்க்கார் தண்ணீர் பாய்ச்சாத நிலங்களும் இருக்கின்றன. இதில் குறிப்பாக எவை எவை டிரை லான்ட் என்பது தெரியாமல் ஒரே குழப்பமாக இருக் கிறது . . . .

கனம் திரு. வி. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற குழப்பத்தை நீக்க விரும்புகிறேன். செலெக்ட் கமிட்டியில் கொடுக்கப்பட்டிருக்கும் உறுதி மொழியிலிருந்து இப் போது எந்தவிதமான மாறுதலும் கிடையாது. மானாவாரி, புஞ்சை நிலங்கள் இவைகளில் சர்க்கார் ஸோர்ஸிலிருந்து தண்ணீர் கிடைத்தால் மட்டும்தான் வரி விதிக்கப்படும். இல்லையென்றால் வரி கிடையாது. சர்க்கார் ஸோர்ஸிலிருந்து தண்ணீர் கிடைக் காத எந்த மானாவாரி நிலத்திற்கும், புஞ்சை நிலத்திற்கும் இந்த வரிவிதிப்பு கட்டுப்படுத்தாது என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் இதை விளக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ட்ரை லான்ட் என்பது இவை இவை என்று தெளி வாக போட்டிருந்தால் மிக நலமாக இருந்திருக்கும். இது போடா ததினால் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக பலவாறு பேச வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. நாம் வரி விதிப்பதின் மூலம் திட்டங்களுக்கு வேண்டிய நிதியை தேடு கின்றோம். சமீபத்தில் நகர் புறங்களிலுள்ள நிலங்களுக்கு வரி போடப்போகிறோம். இதற்காகக் கொண்டுவரப்பட்ட மசோ தாவை அங்கத்தினர்கள் அனைவரும் ஒரு மனதாக ஆமோதித்து இருக்கிறார்கள். அதுவும் செலெக்ட் கமிட்டிக்குப் போய் இருக் கிறது. செலெக்ட் கமிட்டிக்குப்போய் வந்த பின்னால் அங்கத்தினர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் ஏதோ ஏழை மக்கள் மீது வரி வந்து விட்டது என்று, ஏழை மக்கள் மீது பரிந்து பேசுவது போல் பரிந்து பேசி, "ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி

நடத்தும் ஆட்சியில் வரி போட்டுவிட்டார்கள்" என்று வெளியில் போய் ஒரு சிலர் சொல்லுகிறார்கள். உண்மையாக இதில் யாருக்கு என்னென்ன நன்மை கிடைக்கப்போகிறது, யார் யாரை பாதிக்கிறது, உண்மையில் மக்களுக்கு இதனால் என்ன நன்மை கிடைக்கிறது என்பதை எல்லாம் சொல்வதற்குப் பதிலாக உண்மைக்குப் புறம்பாக, இந்த மசோதாவைப்பற்றி பொதுமக்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதற்குப் பொது மக்கள் அபிப்பிராயத்திற்காக இன்னொரு தடவை செலெக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று கேட்டோம், ஆனால் ஆளும் கட்சியினர் தங்களுக்கு 140 பேர்கள் பலம் இருக்கிறது என்று எண்ணி, இதை தள்ளிவிட்டார்கள் என்று மக்களிடத்தில் போய் சொல்லிவிடக் கூடாது என்பதுதான் எனது வேண்டுகோள். இந்த நாட்டில் இருக்கக்கூடிய இந்த நெருக்கடியான நேரத்தில் மக்களிடத்தில், குறிப்பாக விவசாய மக்களிடத்தில் போய் உண்மைக்குப் புறம்பான காரியங்களைப்போய் சொல்லாமல், இம்மாதிரியான வரி வருவதால் எந்தவிதமான தீங்கும் வரப்போவதில்லை, தீமை எதுவுமில்லை, நீங்கள் உற்சாகமாக இருங்கள், உற்பத்தியை பெருக்குங்கள் என்று சொல்வதற்கு பதிலாக, உங்கள் தலையில் வரிச்சுமையை ஏற்றிவிட்டார்கள் என்று சொல்லுவதாக இருந்தால் உணவு உற்பத்தி பாதிக்கும், மக்களிடத்தில் அதிருப்தியும் அதிகரிக்கும், ஆகவே உண்மைக்குப் புறம்பான காரியங்களைச் சொல்லாமல் விவசாய மக்களை ஊக்குவிக்கக்கூடிய முறையில் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று எல்லா மதிப்பிற்குரிய கனம் எதிர்கட்சி அங்கத்தினர்களையும் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியான நேரத்தில் மக்கள் எல்லோரும் வரி கொடுக்க வேண்டும், சக்தியுடையவர்கள் எல்லாம் வரி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பொதுவாக இந்த மசோதாவை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. சி. மணி: மாமன்றத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நிலத் தீர்வை பற்றியும், அதிகமாக தண்ணீருக்குப் போடப்பட்டிருக்கும் தீர்வையை உயர்த்துவதற்கும் வேண்டிய மசோதாவை மதிப்பிற்குரிய நம்முடைய வருவாய் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்து, அதன் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மசோதாவானது அவசர அவசரமாக வந்து கொண்டிருக்கிறது, மக்களுடைய குறைகளை எல்லாம் கேட்டு அறியாமல் அவசரமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லி, இதை ஒத்தி வைத்து, இந்த மசோதாவை இன்னும் நன்கு விசாரித்து அதற்குப் பின்னால் இந்தச் சட்டம் நிறைவேறினால் நலமாய் இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, இதில் வரியை குறைக்க வேண்டியவர்களுக்கு குறைக்கவேண்டும் என்றும் நீக்கப்படவேண்டியவர்களுக்கு நீக்கவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லுகிறவகையில் இரண்டொரு வார்த்தைகளைச்

சொல்லுகிற நேரத்தில், சட்டம் அவசரமாக கொண்டு வரப்பட்டாலும், இன்னும் ஒத்தி வைத்து விவாதிப்பது சரியல்ல என்று தலைவராக வீற்றிருக்கிற தாங்கள் நிராகரித்து, பின்னால் இப்போது இந்த மசோதா சட்டமாக கொண்டு வரப்படுவதற்கான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக வரி போடுகிறோம் என்று சொல்லி வரியையும் போட்டு, வரி இல்லாமல் அரசாங்கம் நடத்த முடியுமா என்கிற கேள்வியையும் கேட்டு, வரி போட்டால் அதை எப்படி எப்படி விதிக்கவேண்டும், எப்படி எப்படி வசூலிக்க வேண்டும், இன்னின்னாருக்குப் போட வேண்டும் என்பவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகிற எங்களைப்பற்றி, கனம் அங்கத்தினர்களில் சிலர், அதிலும் குறிப்பாக கனம் மாதா கவுடர் அவர்கள் இந்த மாமன்றத்தில் பேசி முடிவு செய்த பின்னால் ஆளும் கட்சியைப்பற்றி நாங்கள் என்னென்ன வெளியில் போய் சொல்லப் போகிறோம் என்பதை நாங்கள் மறந்திருந்தாலும், என்னவிதத்தில் சொல்லவேண்டும், அதிதீவிர சாகுபடி என்று சொல்லிக் கொண்டு இந்த அரசாங்கம் இவ்விதமெல்லாம் வரி போடுகிறது என்று சொல்லவேண்டும் என்பதை எல்லாம் எங்களுக்கு கனம் மாதா கவுடர் அவர்கள் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசுகிற நேரத்தில் 'இந்த நெருக்கடி நேரத்தில் நாட்டை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இந்த நாட்டிலுள்ள மக்களுடைய கடமை. அப்பேர்ப்பட்ட நேரத்தில் எதிர்கட்சியிலுள்ளவர்கள் வெளியில் போய் பேசி மக்களிடத்தில் அதிருப்தியைத்தான் உண்டு பண்ணுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் நினைப்பது, அவர்கள் ஆசைப்படுவது, இந்த நாட்டை காப்பாற்றுவதற்கு, இந்த நெருக்கடியான நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் வாயையே திறக்கக்கூடாது என்பதுதானோ என்னவோ. அவ்விதம்தான் 12-30 p.m.
கனம் அங்கத்தினர் அவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், எதிர்க் கட்சியைப் பற்றி அமைச்சர்கள் பல நேரங்களில் குறிப்பிடும் நேரத்தில், எதிர்க் கட்சிகள் நாட்டு அரசாங்கத்திற்குத் தேவை தேவை என்று ஏற்றுப் பேசியிருக்கிறார்கள். இங்கு இருக்கக் கூடிய அத்தனை அமைச்சர்களும் ஏற்றுப் பேசியிருக்கிறார்கள். ஒரு சட்டம் வருகிற நேரத்தில், அந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளையெல்லாம் எடுத்துக் கூறியும், சந்தர்ப்பம் வருகிற இடங்களிலெல்லாம் யோசனை கூறியும் உதவுவதற்காக எதிர்க் கட்சிகள் இங்கே வீற்றிருக்கின்றன. அதை விட்டு எதிர்க் கட்சிகளைக் குறை கூறுவது சாலச் சிறந்ததல்ல என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்திற்கு வரி போடுவதைப் பற்றி, நிலத்தின் விலை உயர்ந்திருக்கிறது, நிலத்தில் விளையக்கூடிய விளைச்சல் அதிகரித்திருக்கிறது, நெல் விலை உயர்ந்திருக்கிறது, ஆகையால் வரி போடுகிறோம் என்று முதலிலேயே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் முன்பேயே குறிப்பிட்டிருக்கிறேன், நிலம் என்பது மாற்றுப் பண்டம் அல்ல. நிலம் என்பது கடையிலே இருக்கிற மளிகைச்

சரக்கல்ல. நிலம் என்பது மற்ற பொருள்களைப் போல விற்கப்படுவதல்ல. ஒருவனுக்குப் பணம் தேவை என்றால் அவனிடம் இருக்கக் கூடிய பொருளை விற்கலாம். அந்த மாதிரி விற்கும் போது, தேவைக்காக விற்கும்போது, அவனிடம் வேறு ஒரு பொருளும் இல்லை என்ற நிலை ஏற்பட்டால்தான் நிலத்தை விற்க முற்படுவான். இன்றைய தினம் நிலத்தின் விலை அதிகரித்திருக்கிறது என்று சொன்னாலும், ஏதாவது தொல்லை ஏற்பட்ட நிலையில் தான் நிலத்தை யாரும் விற்க முற்படுவார்கள். நிலத்தை விற்காத நிலையில் நிலத்தின் விலை அதிகரித்ததால் யாருக்கும் நன்மை ஏற்படவில்லை. ஆகையால் நிலத்தின் விலை அதிகரித்திருக்கிறது, அதற்கேற்ப வரி போடவேண்டும் என்று சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல.

அதே நேரத்தில், வானம் பார்த்த பூமியைத் தவிர ஆற்றுப் பாசனத்தைப் பெறக் கூடிய நிலங்களுக்கெல்லாம் வரி விதிக்கலாம் என்று யோசனை கூறுகிறார்கள், நான் வாழுகிற தஞ்சை மாவட்டம் ஆறு ஓடுகிற பகுதி எப்படி ஓடிக்கொண்டிருக்கிறது, எந்த அளவுக்கு சரியான நிலைமையில் இருக்கிறது என்று பரிசீலனை செய்யவேண்டும். ஆங்காங்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முறையில் வெற்றி பெற்று விட்டது என்று கூறுவதற்கில்லை. ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்ற ரூ. 10,000 செலவு செய்ய வேண்டுமென்றால், அந்த வேலையை எடுத்துக் கொள்வதற்கு முன்னாலேயே, இந்த ஆண்டு இந்த வேலையைச் செய்தால், செய்யக் கூடிய செலவுத் தொகைக்கு 4½ சதவிகித வட்டி இந்தப் பசலியிலேயே கிடைக்குமா என்று அதிகாரிகள் கேள்வி கேட்டுத் திணற அடித்து, முடியும் என்று சொன்னால்தான் வேலையைத் துவக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படி முடியாது என்றால், ஆகக் கூடிய செலவுத் தொகையில் பாதியையோ அல்லது மூன்றில் ஒரு பாகத்தையோ, நிலச்சுவாந்தார்களோ அல்லது விவசாயிகளோ தந்தால்தான் அத்தகைய பாசனத் திட்டத்தை அமுல் செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். பாசனத்தை விரிவுபடுத்த அல்லது திருத்த வரி தேவைப்படுகிறது. இன்னும் பார்க்கப் போனால், சர்க்கார் கொள்கைப்படி, நில உச்ச வரம்புச் சட்டப்படி, 30 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் யாருக்கும் நிலம் இல்லை என்று இன்றைய தினம் அரசாங்கம் கட்டுப்படுத்தியிருக்கிறது. அன்றைய தினம் நாங்கள் சொன்னோம் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று. அப்போது நாங்கள் சொன்னதை நீக்கி 'எப்படி முடியும்' 15 ஏக்கர் போதுமா, 30 ஏக்கர் இருந்துதான் தீரவேண்டும்' என்று அனுதாபத்தைக் காட்டி 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கினார்கள். இப்போது ஒருவன் ஒரு குழி நிலம் வைத்திருந்தாலும், சர்க்காரிடமிருந்து தண்ணீரை எடுத்தால் போதும், வரி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைய தினம் 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள், 15 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள், 30 ஏக்கர் நிலம் வைத்திருக்-

கிறவர்கள் ஆகியவர்களுடைய நிலை எல்லாம் அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். ஒரு நிலச்சுவாந்தார் அல்லது விவசாயி சாகுபடி செய்கிற நிலம் 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், உச்ச வரம்புக்குக் கீழ் இருக்கும் நிலங்களுக்கு தயவு செய்து வரி விதிக்கவேண்டாம். ஐந்து ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு ஒரு விவசாயி உழலாம். இப்போது 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது என்று சட்டம் செய்திருக்கிறோம். ஆகையால் 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு, முதல் பாசனமாக இருந்தாலும், இரண்டாம் பாசனமாக இருந்தாலும், கடைசிப் பாசனமாக இருந்தாலும், ஒரு போக நிலமாக இருந்தாலும், இரு போக நிலமாக இருந்தாலும், எந்த நிலமாக இருந்தாலும், 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கீழ் இருந்து உழக் கூடிய நிலத்திற்கு நிச்சயமாக இதிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும், அதற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஆற்றுப் பாசனத்தை நம்பி இருக்கும் மக்கள் பெருவாரியான லாபத்தைப் பெற்று விடுவார்கள் என்று நம்பி விடவேண்டாம். இன்றைய தினம் விவசாயிகள் எவ்வளவோ வரி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தெரிந்தும் வரி தருகிறார்கள், தெரியாமலும் வரி தருகிறார்கள். அவர்கள் தானாகவும் கொடுக்கிறார்கள், கட்டாயத்திலும் தருகிறார்கள். கிராமத்திலே ஒரு பள்ளி அமைக்கவோ அல்லது ரோடு போடவோ, கிராம பஞ்சாயத்திலே ஒரு கமிட்டி அமைத்து, அபிவிருத்தி வரி என்று வரி போட்டு வசூலிக்கிறோம். கிராமங்களில் இருக்கக் கூடிய கிராம தேவதைகளுக்கு உற்சவம் நடத்துவதற்கு நிலத்தின் அடிப்படையில் நிலச்சுவாந்தார்களிடத்தில் வரி போட்டு வசூலிக்கிறோம். அதையும் தாண்டி நிலம் உள்ளவர்கள் வெளி ஊரில் இருந்தால் உள்ளூரில் இருக்கிற விவசாயியிடத்தில், 60 பாகம் போக பாக்கி 40 பாகத்தில் செலவு அதிகமாகியிருக்கிறது. பாகத்தைக் குறைத்து, வரியையும் உயர்த்தி செலவும் அதிகரித்திருக்கிறது. அதனால் நிலத்தின் தரம் தானாகக் குறைகிறது. அதே நேரத்தில் உரம் வாங்கிக்கொள்ளுங்கள், கடன் தருகிறோம் என்று சொல்லுகிறோம். ஏக்கருக்கு ரூ. 150 அதி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் தருகிறோம் என்று சொல்லி, இந்தத் திட்டத்தின் கீழ் ரூ. 75-க்கு உரமும், மருந்தும், விவசாயக் கருவிகளும் பெற்றுக்கொண்டால் ஒரு பங்கு ரொக்கமாகத் தருகிறோம் என்று சொல்லுகிறோம். இந்த இரண்டையும் வாங்கியவன் 12 மாத காலத்திற்குள் ஒரு பசலிக்குள்—கொடுத்திருக்கிறானா, கொடுக்க முடிகிறதா, எந்தெந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் நன்கு உணரும். அப்படிப்பட்ட இந்த நேரத்தில், வாங்கிய கடனைத் தீர்க்க முடியாமல் இருக்கிற நேரத்தில், 50 சதவீலம் தீர்வையை உயர்த்தி, ஏக்கருக்கு 15 ரூபாய்க்கு

மேற்படாமல் இருந்தால் போதும் என்று சொல்லும்போது 100 குழிக்கு 5 ரூபாய் ஆகிறது. அதில் கிடைக்கிற நெல், 100 குழிக்கு—ஒரு மாவுக்கு நஞ்சை நிலத்தில் 15 கண்டு முதல் ஆனாலும், கிடைக்கிற நெல்லில் 5 அல்லது 5½ கலம் போய்ச் சேரும். அதிலிருந்து அவன் அபிவிருத்தி வரி கொடுக்க வேண்டும், பழைய தீர்வை கொடுக்கவேண்டும், புதிய தண்ணீர் தீர்வை கொடுக்கவேண்டும், 50 சதவீத தண்ணீர் தீர்வையைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட செலவினங்கள் படிப்படியாக உயரும்போது, உழுகிறவனாக இருந்தாலும், வெளியில் இருக்கிற சிறு நிலச் சொந்தக்காரனாக இருந்தாலும் அவனுக்கு கடைசியாகக் குறைந்த அளவில் போய்ச் சேருகிறது. உள்ளபடியே தங்களுக்குக் கட்டுப்படியாக வில்லையென்றால் நிலத்தை அரசாங்கத்திடத்தில் கொடுத்து விடுவார்கள் என்று வேடிக்கையாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் இப்படிப்பட்ட சட்டங்களைப் போட்டுக் கொண்டே போகும்போது அப்படி விட்டாலும் விட்டு விடுவார்கள். அந்த மாதிரி விட்டு விட்ட பிறகு இப்படிப்பட்ட வரிச்சுமையை வைத்துக்கொண்டு யார் தான் உழுது பயிரிட முடியும் என்று பார்க்கவேண்டும். குறைந்த அளவு வைத்துக்கொண்டிருக்கக்கூடிய நிலச்சுவாந்தார்களுக்கு, மிக மிகக் குறைந்த அளவு 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றை வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. நில வருவாயை ஏகபோகமாக அனுபவிக்கக் கூடியவர்கள் சிலர் இருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டப்படி அவர்களுக்குத் தனியாக ஒரு சட்டத்தைப் போட்டு அவர்களை இத்தகைய வரியைக் கொடுக்கச் செய்யலாம். இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் சட்டப்படி செய்ய முடியாது என்று சொன்னாலும், இதற்காக வேண்டி அரசியல் சட்டத்தையே திருத்தலாம். வேறு தேவையில்லாத வேறு ஏதேதுக்கோ திருத்துகிற உத்தமர்கள் நல்ல மனதை உருவாக்குவதற்காக சட்டத்தை திருத்தி நல்ல பெயர் எடுக்கலாம். இன்றைய தினம் நம் மாநிலத்தில் உச்ச வரம்பு நெருங்காத அளவுக்குப் பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சர்க்கார் கணக்குப்படி முப்பத்து இரண்டாயிரத்துச் சொச்சம் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. தமிழகத்திலே மடங்கள், தேவஸ்தானங்கள், சிறு மதஸ்தாபனங்கள், பெரு மதஸ்தாபனங்கள், தாம ஸ்தாபனங்கள் ஆகிய இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் முப்பத்து இரண்டாயிரத்துச் சொச்சம் இருக்கின்றன. இவைகளுக்குத் தனியாக இந்த வரியைப் போட்டு மட நிலங்கள், தேவஸ்தான நிலங்கள், சிறு தர்ம ஸ்தாபன நிலங்கள், பெரு தர்ம ஸ்தாபன நிலங்கள் ஆகியவைகளுக்கு மட்டும் இந்த வரி பொருந்தும் என்று ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும். என்னுடைய ஜில்லாவை எடுத்துக் கொண்டால் மூன்று மடங்கள், 2 லட்சம் ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய மடங்கள், இருக்கின்றன. இந்த மடத்துக்கு இந்த வரியைப் போட்டால், 6,666 சிறு நிலச்

சுவாந்தாரிடத்தில் வாங்கக் கூடிய வரியைக் குறைக்கலாம். 6,666 பேர்கள் விதி விலக்கு அளிக்கப்படலாம். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம். இப்படிச் செய்தால் மடத்தை ஒழித்து விடலாம் என்றோ, ஒழிக்கவேண்டும் என்றோ சொல்ல வில்லை. பரிபாலித்துக் கொண்டுதான் வருகிறோம். ஆனால் பணம் தேவைப்படுகிற நேரத்தில், இருக்கிற இடத்தைப் பார்த்து தட்ட வேண்டிய இடத்தைத் தட்டி, பெறவேண்டியதைப் பெற வேண்டும். அப்படிச் செய்ய முடியாமல் இருக்கலாம். சட்டம் இடம் கொடுக்காமல் இருக்கலாம். அப்படி முரண்பாடு உள்ள சட்டத்தை, அல்லது விதிகளைத் திருத்த நம் அரசாங்கம் யோசனை சொல்லி திருத்திக் கொள்ளலாம். வரி போட வேண்டாமென்று சொல்லவில்லை. பணத்தைப் பெற வேண்டாமென்று சொல்ல வில்லை. ஆனால் பெற வேண்டிய முறைப்படி பெறுங்கள். போடக் கூடாத நிலங்களுக்குப் போட்டு விட்டு, தர முடியாதவர்களுக்குப் போட்டு விட்டு, அவர்கள் கொடுக்கவில்லை, நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுவது அவ்வளவு சிறந்ததாக இருக்காது என்று கூறி, 5 ஏக்கர் நிலச் சொந்தக்காரர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று, மன்றாடி வேண்டி, கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பு மிக்க சட்ட மன்றத் தலைவர் அவர்களே, செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு இப்பொழுது இந்த மன்றத்தில் விவாதத்தில் இருக்கின்ற இந்த தண்ணீர் வரி மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. மாதா கௌடர் அவர்கள், ஏதோ வரி போடாமலேயே ஆட்சி நடத்தவேண்டுமென்று நாங்கள் சொல்லுவது போலவும், அதற்காக வெளியே சென்று மக்களை திரட்டுவதற்காகவும், அவர்களுக்காக பாடுபடுவதாக ஏதோ நாங்கள் சொல்லிக்கொண்டு இருப்பது போலவும் குறிப்பிட்டார்கள். வரியே போட வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. தாங்கக் கூடியவர்கள் மீது வரி போடுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். விவசாயிகள் மீது போடுகிற வரி எந்த ரூபத்தில் வந்தாலும் அது ஒரு தாங்க முடியாத வரியாகத்தான் இருக்கும். உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, அதற்கான ஒத்தாசைகளை செய்துகொண்டு வருகிறோம் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, விவசாயிகள் மீது இந்த மாதிரி வரிப் பளுவை சுமத்தினால்—நாங்கள் பிரசாரம் பண்ணி உற்பத்தியை குறைப்போம் என்று நாங்கள் சொல்ல மாட்டோம்—ஆனால், நாங்கள் சொல்லாமலேயே கூட விவசாயிகள் மனதிலே இவ்வளவு பெரிய வரி அவர்கள் மீது சுமத்தப்படுகிறது என்று தோன்றி விட்டால், நிச்சயமாக உற்பத்தி குறையத்தான் செய்யும். இந்த மசோதா கொண்டு வரப்பட்ட நேரத்தில், சென்ற 30 ஆண்டு காலமாக ஏதோ நிலவரி உயராதது போலவும், எல்லா வரிகளும் போட்ட பிறகு இப்பொழுதுதான் இது கவனிக்கப்பட்டதாகவும்

சொல்லப்பட்டது. ஆனால் சென்ற 30 ஆண்டு காலமாக நிலத்தின் அடிப்படை வரியை உயர்த்தாமல் இருந்திருக்கலாமே தவிர, ஆனால் வரியே உயராமல் இருக்கிறது என்று சொல்ல முடியாது. பல ரூபங்களிலே உயர்ந்துகொண்டே வந்திருக்கிறது. சமீப காலத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரி வசூலிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்ட பிறகு, நிலவரியின் பேரில் 50 பங்கிலிருந்து 100 பங்கு வரை வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். அதைப்போலவே தான், தண்ணீர் தீர்வையும் ஸர்சார்ஜும் விதிக்கப்பட்டு வருகிறது. அப்படி பார்க்கும்போது நிலவரி உயர்ந்துகொண்டேதான் வந்திருக்கிறது. ஏதோ 7 சதவிகிதம்தான் இந்த வரி ஏறியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். அது ஒன்றும் பிரமாதம் இல்லை என்ற கருத்தையும் தெரிவித்தார். பள்ளிக் கணக்கு எல்லாம் புள்ளிக்கு ஆகாது என்று சொல்லுவார்கள். அந்த நிலைமையில் பார்க்கும்போது இந்த வரியினால் விவசாயிகள் மேலும் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். ஒரு புறத்தில் விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, அதற்கு விரோதமாக நாங்கள் இருப்போம் என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிடுவது மிகவும் வருந்தத்தக்கது. விவசாயிகளின் நிலைமை நாளுக்கு நாள் எந்த அளவுக்கு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் உணருவார்கள். மதிப்பிற்குரிய மாதா கௌடர் அவர்கள் வசிக்கும் பகுதியிலே எங்களைப் போன்ற விவசாயிகள் இல்லையோ என்று நான் கருதுகிறேன். அது மலைப் பிரதேசமாக இருப்பதாலும், அதிகமான மழை பெய்யும் காரணத்தால் தண்ணீர் தட்டு ஏற்படாமல் இருப்பதாலும், வேறு பயிர்கள் அவர்கள் பயிரிடுவதாலும், நெல் பயரிடும் விவசாயிகளின் நிலைமை கனம் அங்கத்தினருக்குத் தெரியாது என்று நான் நினைக்கிறேன்.

அண்மையில் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, இப்பொழுது மேட்டூர் கால்வாய் பழுது பார்க்க அடைக்கப்படவிருக்கிற காரணத்தால், தயவு செய்து மூன்று போகம் பயிரிடாதீர்கள் என்று சொன்னார்கள். ஒரு புறத்தில் உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று சொல்லுகிறார்கள்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் சமீபத்தில் நடந்த மகா நாட்டிற்கு வந்தார்களோ, என்னமோ எனக்கு ஞாபகம் இல்லை. மூன்று போகம் சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளிடம் ஒரு குழப்பம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது மேட்டூர் டனல் ஸ்கீம் நடக்கக்கூடிய காரணத்தினாலே, தண்ணீர் வருமோ வராதோ என்ற அச்சம் இருந்தது. மூன்று ஜில்லாக்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் அந்த மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அத்தனை விவசாயிகளுக்கும், அவர்களின் பிரதிநிதிகளுக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையில், அவர்கள் தொடர்ந்து வழக்கம்போல் கார் மகசூலைச் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது திடீரென்று, மூன்று போகம் சாகுபடி செய்யவேண்டாம் என்று நான் சொன்னதாக கனம் அங்கத்தினர் அவர்கள்

சொல்லுகிறார்கள். அந்த மகா நாட்டிற்கு அவர்கள் வந்திருந்தால் இந்த மாதிரி குழப்பம் ஏற்பட்டிருக்காது. இப்பொழுது இருக்கக் கூடிய நிலையில் மூன்று போகம் தாராளமாக பயிர் செய்யலாம். அவ்வாறு சாகுபடி செய்ய முடியும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அமைச்சர் அவர்கள் கூட்டியிருந்த அந்த அரங்கத்திற்கு நான் சென்றிருந்தேன். அவர்கள் அதை மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதையே அவர்கள் மறந்திருக்கும்போது, உண்மையிலேயே இவ்வாறு சொல்லப்பட்டிருக்குமா என்பதை நான் எப்படி ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியும். அங்கே 'மார்ச்சு மாதம் இறுதிக்குள்' என்று பேசப்பட்டது. எங்களுடைய பகுதிக்கு ஏப்ரல் மாதம் வரையில் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். நாங்கள் மூன்றாவது போகத்தில் கார் நடுவதில்லை. அதற்கு பதிலாக உளுந்து, பயர் பயிரிடுகிறோம். உளுந்து, பயருக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சினால்தான் விளைச்சல் இருக்கும். ஆகவே எங்கள் பகுதிக்கு தண்ணீர் கொடுங்கள் என்று நான் கேட்டேன். தண்ணீர் அடைக்கப்படும் தேதியை ஒத்திப்போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். முசிரிப் பகுதியைப் பொறுத்த வரையில், நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நான், "எங்கள் பகுதி பிற்பட்ட பகுதி" என்று சொன்னேன். "அங்கே, இங்கே" என்று குறிப்பிட வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு முடியவில்லை. உற்பத்தியைப் பெருக்குவதற்கு சர்க்கார் எல்லா விதமான சலுகைகளையும் அளிக்கிறோம் என்று சொன்னார்கள். அதைப்பற்றி இப்பொழுது பேச வேண்டியதில்லை யென்று நினைக்கிறேன். விதிகளின்படி ரூபாய் 39-க்கு அமோனியம் சல்பேட் விற்கப்படுகிறது என்று சொன்னாலும், நெஞ்சில் கையை வைத்துக்கொண்டு பார்த்தால் தெரியும், அந்த 39 ரூபாய் ரேட்டுக்கு உரம் வாங்க முடிகிறதா? கொஞ்சம் விஷயம் தெரிந்த ஆள் போனால், உரம் ஸ்டாக் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். தெரியாத ஆள் போனால் ரூபாய் 64-க்குக் கிடைக்கிறது. குருடன் எப்படி கண்ணுக்கு அழுகிறானோ, அதேபோல் விவசாயிகளுக்கு உரம் தேவைப்படுகிறது. எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதைச் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு கடன்கள் கொடுக்கப்படுகின்றன என்பது உண்மை. ஆனால் உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை. உழவு மாடுகள் வாங்குவதற்கு கடன் கொடுக்கப்படுகின்றன. ஆனால் உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை. அதில் எவ்வளவோ கொடுமைகள் இருக்கின்றன. உழவு மாடு வாங்க கடன் கேட்டவன் முதலில் ஆடு வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்படி விவசாயிகளுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்படி கண்ணீர் விடுகிற ஏழை விவசாயிகள் மீது மேலும் மேலும் வரி விதித்தால், அவர்கள் மிகவும் துன்பத்துக்கு உள்ளாவார்கள். இந்த வரி போடுவதனால்

எவ்வளவு கூடுதலாக வந்துவிடப் போகிறது என்று நினைக்கலாம். சாதாரண ஏழை விவசாயிகளை இந்த வரி அதிகமாக பாதிக்கும். பணக்காரர்களாக இருந்தால் பரவாயில்லை. பஸ்களின் மீது வரி விதித்த பொழுது, அது பஸ் பிரயாணிகளைப் பாதிக்காது என்று சொல்லப்பட்டது. ஆனால் 6 ந.பை. டிக்கட்டானது 7 ந.பை. ஆக உயர்ந்து விட்டது. பிரயாணிகளின் தலை மீதுதான் அந்த வரி விழுந்தது அதைப்போலத்தான் இந்த வரியும் உழுது பயிரிடுகிற உண்மையான விவசாயிகளைப் பாதிக்கும். 4 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் குறைந்த பட்சம் வைத்திருக்கிற விவசாயிகளுக்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் கோ. சி. மணி அவர்கள் தெரிவித்தார்கள். உச்ச வரம்பு மசோதா இங்கே கொண்டுவரப்பட்டபொழுது, 30 ஏக்கரை 15 ஆகக் குறைக்க வேண்டும் என்று சொன்னபொழுது, அது போதாது என்று சொன்னார்கள். இப்பொழுது நெல் விலை குறைந்திருக்கிறது. 5 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகள் எவ்வாறு குடும்பத்தை நடத்த முடியும்? ஆகவே 5 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளுக்காவது இந்த வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. பி. வி. சீராமுலு: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த மன்றத்தில் நில வரி, தண்ணீர் வரி இவைகளைப் பற்றி விவாதம் நடைபெறுகிறது. அதில் நானும் கலந்து கொண்டு இரண்டொரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது தேசிய பாதுகாப்பு என்பது முக்கியமாக இருக்கும்போது இந்த நில வரியை உயர்த்துகிறார்கள். நம்முடைய இந்திய துணைக் கண்டத்தில் 100-க்கு எண்பது பேர்கள் விவசாய பெருங்குடி மக்களாக இருக்கிறார்கள். இது நாட்டு மக்களுக்கும் தெரியும். அரசாங்கத்திற்கும் தெரியும். இப்பொழுது இருக்கக்கூடிய நில வரியை உயர்த்துகிறார்கள் என்றால் மானாவாரி அல்லாது மற்றுமுள்ள என்னுடைய பகுதியில் கிருஷ்ணகிரி ரிசர்வாயர் ப்ராஜெக்ட் கட்டப்பட்டிருக்கிறது. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் அந்தப் பகுதி மக்கள் எப்படி கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள் என்பது தெரியும். அவர்கள் எந்த முறையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால் ஒரு ஏக்கருக்கு கே. ஆர். பி. மூலமாக நில வரிக்கும் நீர் வரிக்கும் கணக்குப்பார்க்கும்போது ஒரு ஏக்கருக்கு ஐந்து ரூபாய் என்று வைத்துக் கொண்டால் அதற்கு செஸ் கட்ட வேண்டிய நிலைக்கு ஒரு ரூபாய்க்கு செஸ் 45 பர் செண்ட் வீதம் கணக்கிட்டும் பார்த்தால் 2.37 நயா பைசா ஆகிறது. அதற்கு மேல் லோகல் செஸ் சர்சார்ஜ், பஞ்சாயத்து யூனியன் வரி, இவையெல்லாம் நடைமுறையில் பார்த்தால் ஏக்கருக்கு 1.85 ஆகிறது. ஆகவே மொத்தம் கணக்கிட்டுப் பார்த்தால் ஏக்கருக்கு 9.22 ஆகிறது. இந்த முறையில் மொத்தம் ரூ. 9.22 ஆகிறது. அதேபோல நீர் கூலியை கணக்கிட்டுப் பார்த்தால் சராசரி ஏக்கருக்கு ஆறு ரூபாய்க்கு மேல் 45 சத விகிதம் செஸ் முதலியவைகளை கணக்கிட்டுப்பார்த்தால் 6.75 ஆகிறது.

லோகல் செஸ், பஞ்சாயத்து யூனியன் டாக்ஸ் இவைகள் எல்லாம் சேர்த்து பார்த்தால் 5.52 ஆகிறது. அதற்கு மேல் நீர் கூலி 27 ரூபாய் 30 நயா பைசா விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் 36 ரூபாய 52 நயா பைசா ஆகிறது. இப்படி ஐந்து ஆண்டு காலமாக ஒவ்வொரு வருஷத்திற்கும் நில வரி, நீர் கூலி என்று வசூலித்து வருகிறார்கள். இனி மேலும் அப்படியே வசூலிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக அங்குள்ள விவசாயிகளுடைய விவசாயக் கணக்கை எடுத்துக்கொண்டு பார்த்தால் அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை. எங்கள் பகுதியில் நீர்ப்பாசன பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறது. மற்ற பிரச்னைகள் அங்கு இல்லை. அங்கு வடபுரம் தென்புரம் என்று இரண்டு பாகங்கள் இருக்கின்றன. வடபுரத்தில் கால்வாய் அமைத்து சாகுபடியாகிறது. சுமார் நாலாயிரம் ஏக்கர் நிலம் சாகுபடியாகிறது. அது சம்பந்தமாக புள்ளி விவரம் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரிக்குப் பக்கத்தில் ஒரு ஏரி இருக்கிறது. அதாவது அவதானப்பட்டி ஏரி என்ற ஒரு ஏரி இருக்கிறது. கிருஷ்ணகிரி ரிசர்வாயிலிருந்து அவதாணப்பட்டி ஏரிக்கு தண்ணீர் வருகிறது. மேலும் கிருஷ்ணகிரி பகுதியில் சவுளு நிலம் இருப்பதால் அங்கிருந்து தண்ணீர் மேற்படி அவதாணப்பட்டி ஏரியில் வந்து விழுந்து மறுபடியும் வடபுறத்து கால்வாய் மூலமாக நிலங்களுக்கு போகிறது. அத்தண்ணீர் நிலங்களுக்கு செல்வதால் அங்குள்ள நிலங்களின் தரம் குறைந்துவிட்டது. இப்பொழுது இருக்கிற நிலைமையைப் பார்த்தால் விவசாயிகளுக்கு அதிகப்படியான கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னதாக 22 மூட்டை சாகுபடி வந்தது. இப்பொழுது ஐந்து அல்லது ஆறு மூட்டை வருகிறது. விவசாயம் குறைந்து போய் விட்டது. நிலைமையைப் பார்க்கும்போது விவசாயிகளுக்கு இன்னும் அதிகப்படியாக நீர் கூலி வேறு போடுவதாக இருக்கிறது. அப்படிப் போட்டால் விவசாயிகளால் எப்படி சமாளிக்க முடியும். இதற்கு மேல் போட்டால் விவசாயிகளால் சமாளிக்கவே முடியாது ஏற்கெனவே நில வரி, நீர் கூலி அதிகப்படியாகப் போட்டு விட்டார்கள். மேற்கொண்டும் போடுவது என்பது சரியல்ல. அத்துடன் நிலத்தின் தரம் வேறு குறைந்து போய் விட்டது. இந்த நிலைமையில் அதிகப்படியாக வரி போடுவது என்றால் வாஸ்தவமாகவே விவசாயிகளால் தாங்கவே முடியாது. அங்கு அதிகப்படியான நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டபோது கால்வாய் வெட்டிக்கொடுத்தோ அல்லது வேறு நீர்பாசன வசதி செய்து கொடுக்கவோ வேண்டுமென்று அங்குள்ள கலெக்டரைக் கேட்டபோது இப்பொழுது முடியாது எமர்ஜென்சி முடியும் வரையில் முடியாது என்று சொல்லுகிறார்கள். வரி போட வேண்டும் என்றும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று இங்கு சொல்லும்போது அங்கு எமர்ஜென்சி என்று சொல்லுகிறார்கள். இப்படி எதெற்கெடுத்தாலும் எமர்ஜென்சி என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்வது எதற்கு என்பதுதான் எங்களுக்குப் புரியவில்லை. சேலம் ஜில்லாவில் 1950-ம்

ஆண்டில் ஒரு போக செட்டில்மெண்டாகி நஞ்சையாக்கப்பட்டிருக்கிறது. இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் இரு போக நஞ்சை அதிகமாக இருக்காது. நில வரி, நீர் கூலி என்று சொல்லி ஏக்கருக்கு 27 ரூபாய் சேர்த்திருக்கிறார்கள். மேற்கொண்டு 36 ரூபாய் 52 நயா பைசா அதற்கு மேற்கொண்டு கூலி ரூ. 27.30 சீர் திருத்த வரி வகைகள் எல்லாம் சேர்த்து ரூ. 63.82 நயா பைசா ஆகிறது. ஆனால் விவசாயச் செலவைப் பார்த்தால் விவசாய டெமான்ஸ்ட்ரேட்டர் மூலமாகக் கணக்குப் பார்த்தால் ஏக்கருக்கு 200 ரூபாயாகிறது. அதற்கு மேலும் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. கிருஷ்ணகிரி ரிசர்வாயர் நிலங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஏக்கருக்கு 63.82 ஆகிறது. ஆகவே கிருஷ்ணகிரி ரிசர்வாயர் சம்பந்தப்பட்ட நிலங்கள் மட்டிலும் அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். கால்வாய் வசதிகள் முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் அந்த நிலங்கள் சம்பந்தமாக வரிகளை ஓரளவு உயர்த்தாமல் இருக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய நிலையிலேயே இருக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது விவாதத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நில வரி மசோதாவைப் பற்றி சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். மற்ற கனம் அங்கத்தினர்கள் பேசும்போது இந்த நில வரியைக் கொண்டு வருவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இந்த சபையின் முன் காண்பித்தார்கள். முதல் காரணம் இந்த மாநில வருவாயைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது மொத்த வருவாயில் இந்த வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது என்று சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த மாநிலத்தில் ஏற்கெனவே இருந்த வரிகள் எவ்வளவு இப்பொழுது எத்தனை வரிகள் இருக்கின்றன. அப்பொழுது இருந்த வருமானம் என்ன இப்பொழுதுள்ள வருமானம் என்ன என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். வருமானம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றும் பார்த்தால் இது தெரியவரும். வரி எந்த அளவு உயர்ந்திருக்கிறது என்பதை கணக்கிட்டுப் பார்த்தால் இந்த வரி உயர்வு பொருந்தாது என்பது நன்றாகத் தெரிய வரும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு காரணமும் சொன்னார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னதாக நில வரி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும், சமீப காலத்தில் அது நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அதனால் அதை உயர்த்துவதற்குக் காரணம் இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். இந்தக் காரணத்தையும் என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. பொதுவாக இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற பல வகைப்பட்ட நீர்பாசனங்களையொட்டி நிலங்களை பிரித்திருக்கிறார்கள். அதனைப் பார்க்கும்போது செட்டில்மெண்ட் காலத்தில்

இந்த நில வரியை நிர்ணயிக்கும்போது அந்த நிலத்தினுடைய மண் வளத்தையும் அந்த நிலத்தினுடைய ஆயக்கட்டு தண்ணீர் வரக்கூடிய கண்மாயின் வாட்டர் கண்டென்ட் முதலியவைகளை வைத்துத்தான் பல பிரிவுகளாக பிரித்திருக்கிறார்கள். அந்தப் பிரிவின் அடிப்படையில்தான் அப்பொழுது நில வரியை நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த முறையில் நிர்ணயித்திருப்பதால் அந்த முறையை மாற்றுவதற்கு இப்பொழுது என்ன காரணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்க வேண்டும். நிலத்தின் மண் வளம் 1-00 p.m. அதிகரித்து விட்டது என்று சொல்ல முடியாது. இவைகளையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். கண்மாய்களின் கொள் அளவு அதிகரித்து விட்டது என்று சொல்ல முடியாது. இருக்கின்ற மண் வளம் அதிகரித்துவிட்டது என்றும் சொல்ல முடியாது. நீர்ப்பாசன வசதி அதிகரிக்கப்பட்ட இடங்கள் சில இருக்கலாம். அதற்காக ஏற்கனவே 1955-ம் ஆண்டில் பெட்டர்மெண்ட் டாக்ஸ் என்ற ஒரு வரியைப் போட்டு விட்டோம். ஆகவே, இப்பொழுது கொண்டுவரப்பட்ட வரி ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமல்ல, இந்த மாநிலம் முழுமையும் உள்ள விவசாயப் பெரு மக்களைப் பாதிக்கக் கூடிய வரியாகும். இதைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஏற்கனவே போடப்பட்ட வரி இவ்வளவு காலம் உயர்த்தப்படவில்லை என்று சொல்வது எவ்வளவு தூரம் பொருந்தக்கூடிய வாதம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். நில வரியின் அடிப்படைத் தன்மை மாற்றப்படவில்லை என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டாலும், நிலத்தின் மீது சுமத்தப்பட்ட வரிப்பளு கூட்டப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று சிந்திக்க வேண்டும். 1958-ம் ஆண்டில் இயற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட விதிகளைப் படித்துப் பார்த்தால், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இந்த நில வரியின் மீது வரி போடுவதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். அந்த வரியை இந்தச் சட்ட மன்றம் நேரடியாகப் போடவில்லையென்றாலும், இந்த சட்ட மன்றம் கொடுத்த அனுமதியின் பேரில், பஞ்சாயத்து யூனியன்கள் அந்த வரியைப் போட்டிருக்கின்றன. அந்த வரியானது உயர் நீதி மன்றத்தில் எவ்வளவு தூரம் செல்லுபடியாகும் என்பதிலே எனக்குக் கொஞ்சம் சந்தேகம் கூட இருக்கிறது. எந்த அளவிற்கு அந்த வரியைப் பஞ்சாயத்து யூனியன் போடலாம் என்பதற்கு அளவு குறிப்பிடாமலே அந்த விதி இருக்கிறது. இது 'டெலிகேட்டட் பவர்ஸ்' என்ற வகையில் சட்ட மன்றம் பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுத்த அதிகாரத்தின்படி, பஞ்சாயத்து யூனியன்கள் அந்த வரியைப் போடுகிறார்கள்.

அந்த Panchayat Act Rules- 'The rate of tax shall be on the basis of extent of the land, but the panchayats may adopt diffierent rates for wet lands, well irrigated land and dry land so as to be commensurate with the value of the land'.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, எந்த விகிதாசாரத்தை வைத்து, பஞ்சாயத்து யூனியன்கள் வரியைப் போடலாம் என்று அந்த விதியில் குறிப்பிடவில்லை. பஞ்சாயத்து யூனியன்களில் சில அடிப்படை நில வரியை நூற்றுக்கு நூறு ஏற்றியிருக்கிறார்கள். ஏக்கருக்கு எட்டு ரூபாய் வரி இருந்தால், அத்துடன் மேலும் எட்டு ரூபாய் பஞ்சாயத்து யூனியன் வரி போடக்கூடிய அளவுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் அப்படி வரி போட்டும் இருக்கிறார்கள். ஆகவே, அடிப்படை நில வரி உயரவில்லை என்ற தத்துவத்தை வைத்துக்கொண்டு, இப்பொழுது உயர்த்தலாம் என்று சொல்லுவது எவ்வளவு பொருந்தாக் கூற்று என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது, பிற்பட்ட பகுதியாகிய இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொள்ளுவோம். அங்கே, ஏற்கெனவே ஜமீன் காலத்தில் இருந்த நிலங்களை இப்பொழுது புதிய செட்டில்மெண்ட்டின்படி, 1948-ம் வருஷத்திய சட்டத்திற்குப் பின்னால், ரயத்துவாரி சிஸ்டத்தின்படி, வரியை நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, யூனியனில் 100 சத விகிதம் வரியை ஏற்றியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இந்த வரி எப்படிப் பொருத்தமாகும் என்பதை நாம் யோசிக்க வேண்டும். இந்தச் சட்டப்படி அடிப்படை வரியையும் 1865-ம் வருஷத்திலே கொண்டுவரப்பட்ட சட்டப்படி உள்ள செஸ் வரியையும் உயர்த்துகிறோம். அதே சமயத்தில், சர்சார்ஜ் வரி ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சிந்தித்துப் பார்த்தால், இந்த வரி மிகவும் ஏழை, எளிய விவசாயிகளைப் பாதிக்கும் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். இந்தக் கருத்து எங்களுடைய கட்சியின் கருத்து என்று கனம் அங்கத்தினர் திரு. மாதா கவுடர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய மாவட்டம் உல்லாசபுரியாக இருப்பதால், அவர்கள் அப்படிக் கருதலாம் என்று நினைக்கிறேன். மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், அங்குள்ள விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்று நான் உறுதியாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை நம்முடைய அரசாங்கம் 1950-ம் ஆண்டிலேயே உணர்ந்திருக்கிறது. நிலச் சீர்திருத்தக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி, நில வரி முழுதுமே எப்படி ஏழை, எளிய விவசாயிகளைப் பாதிக்கிறது, இதை எப்படி மாற்றியமைக்கவேண்டும் என்று சிந்தித்திருக்கிறது. அந்தக் கமிட்டியின் ரிபோர்ட்டை அரசாங்கம் பரிசீலனை செய்ததற்குப் பின்னால், என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அந்தக் கமிட்டி நில வரியை உயர்த்த ஒத்துக்கொண்டதா? இப்போதே அந்தக் கமிட்டிக்கு இந்த அரசாங்கம் விதித்துள்ள டர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸில், 'நில வரி சாதாரண விவசாயிகளைப் பாதிக்கிறதா என்பதைப்பற்றி ஆராயவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணம் 1950-ம் ஆண்டில் இந்த அரசாங்கத்திற்கு இருந்திருக்கிறது. ஏழை எளிய மக்களை இந்த வரி பாதிக்கும் என்ற எண்ணம் அன்றைக்கே நம்முடைய அரசாங்கத்திற்கு இருந்திருக்கிறது. அப்படி இருந்திருக்கும்போது, மீண்டும் இந்த வரியை உயர்த்துவது எந்த அளவுக்குப் பொருத்தமுடையது

என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்த்து, இதைக் கைவிட்டுவிடலாம். அல்லது ஏற்கனவே செலக்ட் கமிட்டியில் குறைக்கப்பட்ட சத விகிதத்தை, இன்றைக்கு நாங்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தையும் வைத்து, இன்னும் வரியின் விகிதத்தைக் குறைக்க அமைச்சரவை முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, தற்போது விவாதத்திலிருக்கும் இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, அரசாங்கம் வரி விதிக்காமல் இருக்கமுடியாது என்பது உண்மைதான் என்றாலும், வரி மேல் வரி போட்டுக் கொண்டேயிருப்பது சரியாக இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்தாகும். விவசாயிகள் அதிகமாக வரி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்துக்களும் அதிகமாக வரி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் மகாசபையானது, 1937-ம் வருஷம் கராச்சியில் கூடியபோது, விவசாயிகளுக்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப் போகிறோம் என்று தீர்மானம் செய்தார்கள். அப்படியே விவசாயிகளும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். நமது அரசாங்கம் ஏற்பட்டால் விவசாயிகளுக்கு வரி விலக்களிப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அதற்கு நேர்மாறாகத்தான் இன்றையதினம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. நாம் இம்மாதிரி வரி விதிப்பதன் மூலமாக, நம்முடைய நோக்கம் நிறைவேறுகிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். விவசாய வருமான வரி விதிக்கப்பட்டது. இதை ஏமாற்றக்கூடிய அளவுக்கு சமீபகாலத்தில் கொண்டுவரக்கூடிய உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக பெரிய நிலப் பிரபுக்கள் எல்லாம் சிறு சிறு பகுதிகளாக நிலத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு, இன்றையதினம் அந்த வரியைக் கொடுக்க முடியாத அளவுக்குச் செய்துவிட்டார்கள். ஆகவேதான், சிறிய விவசாயிகள், 3, 4, ஏக்கர் நிலம் உள்ளவர்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான வருமானம் கிடையாது. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், இந்த வரி அங்கு இருப்பவர்களைத்தான் அதிகமாகப் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் வாய்க்கால் வசதி இருக்கிறது. வடிகால் வசதி இல்லை. இந்த வருஷம் பெரிய அளவில் அவர்கள் கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். வடிகால் வசதி இல்லாமல் நெற்பயிர் மூழ்கிப் போய், விளைவு கம்மியாக இந்த வருஷம் குறைவாக விளைந்திருக்கிறது. இம்மாதிரி வரி போடுவதன் காரணமாக, சிறு நிலம் வைத்திருப்பவர்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள். இதையெல்லாம் கணக்கில் கொண்டு, அரசாங்கம் யோசனை செய்து, இந்த வரியை சிறு நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரி விலக்களிக்கக் கூடிய அளவில், 3, 4 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரியி

[திரு. ஆ. கு. சுப்பையா] [27th February 1963

லிருந்து விலக்கு அளித்தால் நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னால் அதிக நிலம் வைத்துக்கொண்டிருந்தவர்கள் விவசாய வருமான வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டு, 10, 15 ஏக்கர் வீதம் பிரித்து எழுதிக்கொண்டு விட்டார்கள். அவர்களுக்காவது சற்று அதிகமாக வரியை விதித்து அவர்களிடமிருந்து வரி வசூல் செய்துகொள்ளலாம் என்பது என்னுடைய யோசனையாகும். அப்படிப்பட்டவர்கள் வரி கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். இதையெல்லாம் நன்றாக யோசித்து சட்டம் செய்ய வேண்டும். கனம் அங்கத்தினர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங்கள் வரும் போது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். சிறு நில விவசாயிகளுக்கு இந்த வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கக்கூடிய முறையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நம்பி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திரு எம். எஸ். செல்வராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நிலத் தீர்வை அபிவிருத்தி வரி, தண்ணீர் வரி இவைகளை நான் மொத்தமாக வரவேற்கிறேன். எதிர்த்தரப்பிலிருந்து கூறப்பட்ட வாதங்களை நான் அறிந்து கொண்ட மட்டில், ஒன்றிரண்டு காரியங்களை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். நிலத் தீர்வை வெகு காலமாக உயரவில்லை; அல்லது ராஜ்யத்தினுடைய மொத்த வருமானம் பலதரப்பட்ட வகைகளில் உயர்ந்திருந்தாலுங்கூட, நில வரி சம்பந்தப்பட்டமட்டில், ஒரு மிகச் சிறு பகுதிதான் நிலத் தீர்வையாக ராஜ்ய கஜானாவுக்கு வந்து சேருகிறது என்ற விவரம் அரசாங்கத் தரப்பில் கொடுக்கப்பட்ட வாதம் ஆகும். அதை மறுத்து எதிர் தரப்பிலிருந்து வாதித்தவர்களில் சிலர், அன்றைய தினம் மிக முக்கிய வரியாக இருந்த ஒன்றிரண்டு வரிகளில் நில வரி ஒன்று என்ற நிலை இருந்தது, இன்றையதினம் பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டிருக்கும் நிலைமையில், நில வரி சிறிய அம்சத்தைத்தான் கொண்டுள்ளது என்பதற்கு நியாயம் உண்டு. ஆகவே, சிறிய அளவில் நில வரி இருப்பது பாதகம் இல்லை என்று சுட்டிக்காட்டினார்கள்.

அவர்கள் ஒன்றை ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். முன்பு பலதரப்பட்ட வரிகள் இல்லாததால் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் நிலவரி ஒரு பெரும் பகுதியாக இருந்தது. இன்றையதினம் பலதரப்பட்ட வரிகள் இருக்கின்ற ஒரு காரணத்தினாலேயே நிலவரி முன்பு இருந்தது போல இருக்கலாம் என்கிறார்கள். முன்பு இருந்த நிலைமை வேறு. விவசாயத்திற்காகப் பெரிய திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. ஆனால் இன்றையதினம் விவசாய, உற்பத்திப் பெருக்கு சம்பந்தமான காரியங்களில், வளர்ச்சி திட்டங்களில் எத்தனை விதமான இலாக்காக்களின் மூலம் இந்த அரசாங்கம் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்று பார்த்தால், அவர்களுடைய அந்த வாதம் பொருந்தாது போகும்.

27th February 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

அதுபோல் மற்றொரு அங்கத்தினர் பேசும்போது இந்த வரியை மடாதிபதிகளின் நிலங்களுக்கு மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று சுட்டிக் காட்டினார். மற்ற நிலங்களுக்கு வேண்டாம் என்றார். நான் அறிந்த மட்டில் ராஜ்யம் முழுவதிலும் உள்ள நிலங்களை தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் உள்ள மடாதிபதிகளின் நிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மடாதிபதிகளிடம் உள்ள நிலங்கள் மொத்தத்தில் 1% க்குக் குறைவானது தான். ஐம்பது லட்சம் ஏக்கர் நஞ்சை நிலங்கள் இருக்கின்றன என்றால் 35 ஆயிரம் அல்லது 50 ஆயிரத்துக்கு மேல் மடாதிபதிகளிடம் இருக்காது. ஆகவே குறிப்பிட்ட ஒரு பகுதியினர் நிலத்திற்கு மட்டும் இந்த வரியை வைத்துக்கொள்ளலாம் என்ற வாதம் சரியானது அல்ல.

ஆனால் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டிய வேறு சில விஷயங்கள் உண்டு. குறிப்பாக சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். குறிப்பாக விவசாயத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் அவற்றின் வளர்ச்சி பற்றி என்ன என்ன செய்யலாம் என்பதை விவசாயிகளோடு கலந்து பரிசீலனை செய்த போது அங்குள்ள விவசாயிகளின் நிலைமை, அவர்களுடைய வரிப் பளு ஆகியவற்றை நன்கு உணர்ந்திருப்பார்கள்.

இப்போது வரி விதிப்பதற்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் சிலவற்றுக்கு விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷெட்யூல் 1-ல் அமராவதி ரிசர்வாயர் திட்டம் முதற்கொண்டு வைகை ரிசர்வாயர் திட்டம் வரை உள்ள ஒன்பது திட்டங்களுடைய பிரதேசத்திற்கு இந்த வரி பொருந்தாது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த ஷெட்யூலில் மணிமுத்தாறு திட்டம் ஏன் சேர்க்கப்படவில்லை, அது அவர்களுடைய பார்வையில் இருந்து ஏன் விடப்பெற்றது என்று அறிய விரும்புகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் நான்கு பிரிவுகளாக இருந்த நிலங்கள் 1958-ஆம் வருஷ மணிமுத்தாறு பாசன விதிகளின் பிரகாரம் ஒரே பிரிவு நிலமாக 'ஏ' கிளாசாகக் கொண்டு வரப்பட்டது. அதனால் 'டி' பிரிவின் கீழ் 11¼ ரூபாய் வரி கட்டிக் கொண்டிருந்தவர்கள் 22½ ரூபாய் வரையில் செலுத்த வேண்டியதாயிற்று. அப்படி புதிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி அவர்கள் கூடுதலாக நிலவரி ஏற்கனவேயே கட்டிக்கொண்டு வரும்போது மணிமுத்தாறு திட்டப் பிரதேசத்திற்கு இந்த வரியிலிருந்து விலக்குக் கிடையாது என்று செய்திருப்பதற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் செலெக்ட் கமிட்டியில் அங்கத்தினர்கள் பலமுறை வற்புறுத்தியும் அங்கே ஒன்றும் சொல்லாமல் இப்போது புதிதாக கம்பௌண்டு செய்கிறபோது கூட மற்ற பல பகுதிகளில் ஒரு போக நிலத்திற்கு 4 ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரையிலும்

சாதாரணமாக மற்ற ஜில்லாக்களில் தீர்வை விதிக்கலாம் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட கம்பௌண்டு லிமிட்டின் பலன் திருநெல்வேலி ஜில்லாவுக்குக் கிடையாது என்று தெரிவித்திருக்கிறார்கள். முன்பு 14 ரூபாய், 95 நயா பைசா கட்டிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு 5 பைசா உயர்த்தி 15 ரூபாய் தான் விதிக்கலாம் என்பது போக இப்போது 25 வரை விதிக்கலாம் என்று செய்ய உத்தேசித்திருப்பது சரியல்ல. இதுவரையிலும் மற்ற ஜில்லாக்களைவிட திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் அதிக வரி விதிப்புக்கு உள்ளாகி வந்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். அப்படி இருக்கும்போது அவர்களுக்கு ரெமிஷன் கொடுப்பதற்குப் பதிலாக மேற்கொண்டும் வரியைக் கூட்டுவது நியாயமில்லை. ஆகவே இவ்விஷயத்தை மீண்டும் பரிசீலனை செய்து மற்ற புதிய திட்டப் பகுதிகளுக்கு என்ன என்ன சலுகை அளிக்கப்படுகிறதோ, அந்தச் சலுகை இந்த மணிமுத்தாறு திட்டப் பிரதேசத்திற்கும் அளிக்கப்படவேண்டும், வரி விதிப்பினின்றும் நீக்கவேண்டும் என்பதோடு மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால் இது நியாயம் என்பதைச் சுட்டிக்காட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நஞ்சைக்கு அதிகத் தீர்வை விதிக்கும் மசோதாவை நான் வரவேற்கிறேன். பொதுவாக தமிழ்நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "தாய் மிதித்து ஆகா முடம்" என்பது அந்தப் பழமொழி. ஒரு கோழி தன் குஞ்சுகளோடு மேய்ந்து கொண்டிருக்கும் . . . .

கனம் சபாநாயகர் : உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரம் ஐந்து நிமிஷம் தான். கோழி, குஞ்சு எல்லாம் அதற்குள் சொல்லி முடிக்கவேண்டும். (சிரிப்பு.)

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : முடித்துவிடுகிறேன். வானத்திலே பருந்து பறக்கும்போது அதன் நிழல் பூமியில் படும். அதைக் கண்டவுடன் குஞ்சுகளை பருந்து கொத்திக்கொண்டு போய் விடப்போகிறதே என்று தாய்க் கோழி அஞ்சி தன் சிறகுகளை விரித்துக்கொள்ளும். அந்தச் சிறகுக்குள் கோழிக் குஞ்சுகள் பதுங்கிக்கொள்ளும். தன் சிறகு கால்களிடையே குஞ்சுகளை அமுக்கிக்கொண்டு கோழி உட்கார்ந்தாலும் அதனால் கோழிக் குஞ்சுகள் முடமாவதில்லை என்பதுதான் அதன் பொருள்.

அதுபோலத்தான் இந்த அரசாங்கம் மக்களை இரட்சிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. சீனாக்காரனாகிய பருந்து பறப்பதை கண்டவுடன் ஏற்பட்ட பீதியில் தற்காப்புக்கான பல காரியங்களை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அதோடு ஐந்தாண்டுத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டியிருப்பதனால் பண நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் இந்த வரியை விதிப்பதனால் மக்களுக்கு எவ்வித துன்பமும் விளையும்படி இந்த அரசாங்கம் காரியங்களை மேற்கொள்ளாது என்று நம்பலாம்.

இந்த வரியை வாஸ்தவத்தில் விவசாயிகள் எதிர்க்கிறார்கள் என்பது உண்மை. காரணம் திடீரென்று இந்த வருஷம் அகவிலை இறங்கிவிட்டது. எழுபது, எண்பது ரூபாய் விற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு இந்த வரியைக் கொண்டு வந்திருந்தால் கூட இவ்வளவு எதிர்ப்பு இராது. இந்த ஆண்டில் வருவது சங்கடமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்கள் கூட உற்பத்தியாளர்களின் நிலைமையை உத்தேசித்து அகவிலை குறையாமல் இருப்பதற்கு மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்யும் என்று குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அந்தமாதிரி அகவிலை குறையாது பார்த்துக் கொண்டால் இந்த வரி விதிப்பினால் நிச்சயம் பாதகம் வராது என்பதை நான் திட்டமாகச் சொல்ல முடியும்.

அதற்குமேலே காளிங்கராயன் அணைப்பகுதி நிலம் என்று எடுத்துக்கொண்டால் அது மூன்று கிளாசாக இருக்கிறது. கடைத்தரம், இடைத்தரம், முதல்தரம் என்று. கடைத்தர நிலங்களுக்கு 7 ரூபாயிலிருந்து 12 ரூபாய் வரையிலும் என்றும், நடுத்தர நிலங்களுக்கு 12 ரூபாயிலிருந்து 17 ரூபாய் வரையிலும், முதல்தர நிலங்களுக்கு 17 ரூபாயிலிருந்து 24 ரூபாய் வரையிலும் என்று பலதரப்பட்ட வகையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று திட்டமாக எல்லாவற்றுக்கும் பொதுவாக நிர்ணயித்துவிட்டால் அரசாங்கத்திற்கும் வருமானம் வரும். விவசாயிகளிடத்திலும் பாகுபாடு இராது. இதுதான் இந்த மசோதாவிலே நான் குறிப்பிட ஆசைப்பட்டது. அதற்கு மேல் தானிய விலை கீழே இறங்காமல் பார்த்துக் கொள்வதும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவுக்கு தானிய விலையை நிர்ணயிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொண்டு, இந்த வரி விதிப்பு மசோதாவை மனமார வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I oppose this Bill, which is amended by the Select Committee, that is now before the House. There is no justification whatsoever for levying any additional assessment on these wet lands. The land revenue has already been touched upon sufficiently by empowering the Panchayat Unions to levy surcharge and other taxes and also by enhancing the local cess. The land revenue is being collected from the agriculturists. Land revenue collected by the Government and other taxes collected by the Panchayat or Panchayat Union are sufficiently more than what they could pay to-day. Though the land value has gone up, the yield has not gone up and it has gone very low. To-day what they are investing is not repaid and there is no remuneration whatsoever. The cost of cultivation is abnormal and the agriculturists are not able to pursue their occupation as they are not able to meet the situation. The

[Sri C. Chiranjeevulu Naidu] [27th February 1963

difficulties of agricultural operations, the cost of labour, the cost of manure and also the attack of pests are so great that the agriculturists are in a precarious condition. For the produce produced from the land and brought to the threshing floor, the agriculturist is not able to get an immediate purchaser or a fair price for his produce. The position is so awkward so far as the owners of wet lands are concerned. The owners of dry lands who have installed pump-sets are now in a better condition than the owners of tank-fed lands. Some agriculturists might have been benefited from some of the irrigation projects by way of water being given to their lands and that is a different matter. But to-day even the lands classified as lands having second, third and fourth source of irrigation are definitely not in a happy position as compared to the dry lands having pump-sets. The yield from dry lands is also better than the yield from the wet lands. So the yield from wet land is not beneficial to the owners of wet lands.

So far as classification of lands is concerned, settlement has not been properly done and the ryots have not been given an opportunity to represent their grievances. So also the classification of tanks and other sources of irrigation is not good and the ryots have not been informed about it. To-day boys in the age-group 20-30 come to the villages and classify the soil as first-class or second-class. How can they classify the soil? Actually one settlement officer came and told me that he had classified a land in an ex-zamindari area as having black-cotton soil and as of first tharam. But in fact the land is not of first tharam. So, this work of classification has been entrusted to the most inexperienced people. So my only and sincere request to the Government is that till such time the settlement authorities again go through the classification of tanks and other sources of irrigation on right lines, this Bill may be shelved. Also there are no proper settlement records. Many of the tanks which are not getting water from first or second class source of irrigation have been classified as first or second class course of irrigation. That has been the experience in the villages. This aspect of the matter may also be kindly considered. In this connection, I suggest that the classification of sources of irrigation may be done after the settlement authorities have again gone into the matter and rectified things. Then they can levy additional assessment at the rate of 20 or 30 or 40 per centum on the basis of new classifications.

Regarding remissions that are given to the ryots, to-day the ryot is at the mercy of the village officers. He is not properly given the benefit of remission. Remission is being given for two-anna crop, four-anna crop and six-anna crop. Now the conditions have changed.

(The time bell was rung.)

27th February 1963] [Sri C. Chiranjeevulu Naidu]

To-day it is a case of continuous attack of pests and the ryot is not assured of his produce. There is no proper protection to the ryots. So I request that this aspect of the matter may be considered and relief may given to the ryots before pushing through this Bill now.

* திரு. மு. கருணாநிதி : கனம் தலைவர் அவர்களே, இந்த நிலவரி, நீர்வரியை உயத்துகின்ற மசோதாவானது சட்ட மன்றத்திலே உறுப்பினர்களால் பலமாக எதிர்க்கப்பட்ட பிறகு, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அந்தக் குழுவிலே எங்களுடைய கட்சியின் சார்பாகப் பங்கு பெற்ற உறுப்பினர்கள் தங்களுடைய மறுப்புரையையும், அது ஏற்கப்படாத காரணத்தால் குறைந்த பட்சம் இவைகளையாவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற அளவிலே திருத்தங்களையும் முன் வைத்து, அவைகளும் பொறுக்குக் குழுவிலே பெரும்பான்மை பலத்தினால் தோற்கடிக்கப்பட்டு, இப்போது பொதுவான விவாதத்திற்காக இந்தச் சபையின் முன் கொண்டு வரப்பட்டிருக்கும் அந்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வரி விதித்துத்தான் ஒரு நாட்டிலே ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டுமென்கிற கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கழகத்தவர்களாகிய நாங்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் அந்த வரி விதிப்பது ஏழைகளைப் பொறுத்தவரையில் மிக மிக மென்மையான முறையிலே கையாளப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் நான் இந்த மன்றத்திலே அடிக்கடி வலியுறுத்திக் கூறி வந்திருக்கின்றேன். இங்கு பேசிய ஈரோடு உறுப்பினர் அவர்கள் கூட, 'கோழி மிதித்துக் குஞ்சு சாகாது, அந்த முறையில் இந்த வரி போடப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். தாய் என்ற உதாரணத்திற்கு அவர் கோழியைக் காட்டினார். அதே நேரத்தில் தாய் என்ற உதாரணத்திற்குப் பூனையைப் பொருத்தி வைத்துப் பார்த்தால், அது போட்ட குட்டிகளிலேயே இரண்டொன்றைச் சாப்பிட்டு விட்டுத்தான் மற்றக் குட்டிகளைக் காக்கும். இந்த வரியானது 'கோழி மிதித்துக் குஞ்சு சாகாது' என்ற நிலைமையில் போடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் கூறுவீர்களேயானால், இந்த வரியானது குட்டியைச் சாப்பிடுகின்ற தாய்ப்பூனை நிலைமையில் போடப்பட்டிருக்கும் வரியாக இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. 'ஆபத்து வருகிறது, ஆகவே குஞ்சை மிதிக்கிறோம்' என்று சொல்வது கூட அவ்வளவு சாலப் பொருத்தமுடைய கருத்தாக இல்லை.

"கோழியும் தன் குஞ்சதனைக் கொல்லவரும்
வன் பருந்தை சூழ்ந்து எதிர்க்கும் தமிழ்நாடு"

என்றுதான் நாட்டிலே உள்ள கவிஞர்கள் கோழியின் வீரத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்த வரியைப் பொறுத்தவரை நாட்டு மக்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த வரியினால் பாதிக்கப்படுகிற உழவர்களின் நிலைமை எப்படி இருக்கிறதென்பதைச் சிந்தித்துப்

பார்க்க வேண்டும். உழவர்கள் தங்களுடைய வருவாய்க்கு மேலான செலவினங்களுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். விலைவாசி விஷமென உயர்ந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே வரி போடுவது என்பது ஒரு பெரியவர் குறிப்பிட்டது போன்று, மலரிலே இருக்கும் தேனை வண்டு குடிக்கும் மென்மையான நிலையிலே இருக்கவேண்டுமே தவிர, மலரைக் கசக்கிப் பிழியும் விதத்திலே இருக்கக் கூடாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த வரியினால் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போதே உழவர்கள் உற்சாகம் இழந்த நிலையில் இருக்கிறார்கள். பருவக் கோளாறின் காரணமாக விவசாய விளைபொருள் உற்பத்தி கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கிறது.

1-30 p.m. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தடவை எந்த அளவிற்கு விளைவு குறைந்திருக்கிறது என்ற ஆதாரபூர்வமான செய்திகளை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற உழவர் பெருங்குடி மக்கள் கண்ணீரோடு எடுத்துக் கூறி வருகிறார்கள். நமது அமைச்சர் ஒருவர் வேண்டுமானால் இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் விளைவு அதிகம் என்று கூறியிருக்கலாம். அவர்கள் அப்படி கூறிய பிறகுதான், இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சையில் நடைபெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்திற்கு சென்றிருந்தபோது அங்கு வந்திருந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து, அமைச்சர் அவர்கள் இப்படிக் கூறுகிறார்களே உண்மையா என்று கேட்டேன். அந்த காங்கிரஸ் உறுப்பினர்களில் யாரும் அமைச்சர் அவர்களின் புள்ளிவிவரத்தை ஒத்துக் கொள்ளவில்லை. கலெக்டர் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் 'ஆமாம் இந்தத் தடவை விளைவு உயர்ந்துதான் இருக்கிறது' என்று கூறினார்கள். ஆனால் கலெக்டருக்கு மறுப்புரை வழங்கும் வகையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள், அதிலும் குறிப்பாக நன்னிலம் தொகுதியைச் சார்ந்த மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கூட "இல்லை! இல்லை! பலயிடங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறது, அந்தப் புள்ளிவிவரம் சரியாக இல்லை" என்ற கருத்தைத்தான் கலெக்டர் முன்னிலையில் எடுத்துக் கூறினார்கள். உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் உழவர்கள் உற்சாகம் இழக்கும் வகையில் அவர்கள் உற்சாகத்தை மேலும் மேலும் குறைக்கும் வகையில் இந்த வரி வழி செய்யும். ஆகவே இதை கைவிட வேண்டுமென்ற கருத்தை இங்கு நாங்கள் அடிக்கடி எடுத்துக் கூறினோம். அதன் தொடர்பாக இங்கு பலப்பல திருத்தங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பற்றி தனியாக விவாதிக்க இருப்பதால் அவைகளைப் பற்றிய அதிக விளக்கங்களை நான் இங்கு எடுத்துக் கூற விரும்பவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்கள் மனப்பூர்வமாக இந்த வரியை ஆதரிக்கிறார்களா என்றால் அவர்கள் நெஞ்சார இந்த வரியை ஆதரிக்கிறார்கள் என்று நான் கொள்ள முடியாது. ஒருவேளை ஓட்டுக்கு விடப்போகிற நேரத்தில் வேண்டுமானால் பெரும்பான்மை பலத்தை ஆட்சியாளர்கள் காட்டலாமே தவிர அவர்கள் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்தால் பெரும்

பாலோருக்கு இந்த வரி பிடிக்கவில்லை. ஆனால் ஜனநாயக முறையில் தலையை எண்ணுவது ஒரு பழக்கமாக இருக்கிறது. தலைக்கு உள்ளே இருக்கும் அபிப்பிராயத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் பெரும்பாலோருக்கு, இந்த வரி எவ்வளவு பாதகமானது என்பது தெரியும். ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டை மீறக் கூடாது என்ற நிலைமையில்தான் இந்த வரியை அவர்கள் இன்றையதினம் ஆதரிக்கிற அவதிக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கிற ஏழை உழவர்களுக்காவது, சிறு நிலச்சுவான்தார்களுக்காவது இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தையாவது இந்த மாமன்றம் ஏற்றுக் கொள்ளுமேயானால் அது பாராட்ட வேண்டிய நிகழ்ச்சியாக இருக்கும். பொறுக்குக் கமிட்டியில் ஓரளவு சதவிகிதம் குறைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அது குறைக்கப்பட வேண்டும் என்று தரப்பட்டிருக்கிற திருத்தங்களை அமைச்சர் அவர்கள் ஆலோசித்துப் பார்த்து இந்த நேரத்தில் உழவர்கள் உள்ளம் புண்படாமல் நடந்து கொள்ளவேண்டும். நூல்களை எழுதுகிற பழங்காலத்து ஆசிரியர்கள் நூலைத் தொடங்கும்போது நீர் வளம், நில வளம் நிறைந்த தமிழ் நாடு என்று ஆரம்பிப்பார்கள். இந்த வரி வந்த பிறகு புத்தகங்கள் எழுதப்படுமானால் நீர் வரி, நில வரி நிறைந்த தமிழ் நாடு என்று எழுதும் மோசமான சூழ்நிலை உருவாகும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை உருவாக்காமல் உழவர்களுக்கு தொல்லைகள் அளிக்காமல், உற்பத்திக் குறைவைத் தடுக்கிற வகையில் உழவர் குடும்பங்கள் சிறக்கிற வகையில் இந்த வரி விதிப்பை கை விட வேண்டும். குறைந்தபட்சம், கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களையாவது ஏற்றுக்கொண்டு குறிப்பாக ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களுக்காவது விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்திக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நிலத் தீர்வையையும், நீர்க் கூலியையும் உயர்த்துகிற இந்த மசோதா வருவாய் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. நிலத் தீர்வையையும், நீர்க் கூலியையும் உயர்த்துவதால், அது எந்த அளவு உழவர் பெருங்குடி மக்களைப் பாதிக்கக்கூடியதாக அமையும் என்பதைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்ற பொது விவாதத்தின்போது, கட்சி வேறுபாடு இன்றி கட்சியின் கட்டுப்பாட்டுக் கருத்துக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ளாமல் அத்தனை மன்ற உறுப்பினர்களும் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். அரசாங்கம் வரிப் பணத்தால்தான் வாழ வேண்டும் என்ற நியதியை அத்தனை பேர்களும் ஒப்புக் கொள்கிறோம். போடப்பட்டிருக்கும் வரி உழவர் பெருங்குடிமக்களின்—அதுவும், வரவினத்தை விட செலவினம் நாளுக்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [27th February 1963

நாள் அதிகரிக்க, அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் உழவர் பெருங்குடிமக்களின் சமுதாயத்தைப் பாதிக்கக் கூடியதாக இருப்பதால்தான், அவர்களால் தாங்கமுடியாத அளவிற்கு இந்த வரி உயர்த்தப்படக்கூடாது என்ற கருத்து, எல்லாத் தரப்பினராலும் எடுத்துக் கூறப்பட்டது.

பல அல்லல்களுக்கு உட்பட்டு, வாழ்க்கையை ஈடேற்றுவதில் கொடுமைகளையும், தொல்லைகளையும், துயரங்களையும், பல இடுக்கண்களையும், இழப்புகளையும் தாங்கி, வாழ்க்கையை ஈடேற்ற முடியாத அளவிற்கு இருக்கக்கூடிய உழவர் பெருங்குடிமக்கள் சமுதாயத்தைத்தான் நாம் இன்று காண்கிறோம். முப்பது ஆண்டுகளாக இந்த நிலத் தீர்வை, நீர் வரி உயர்த்தப்படாமல் இருப்பதால், இப்போது உயர்த்தப்படவேண்டிய அவசியம் இருக்கிறது என்னும் கருத்துப்பட அமைச்சர் அவர்கள் விளக்கங்கள் தந்தார்கள். இந்த வரி உயர்த்தப்படக்கூடாது என்ற முறையில்தான் முப்பது ஆண்டு காலமாக விடப்பட்டு வந்திருக்கிறது என்று கருதுகிறேன். எதற்கு எதற்கு வரி போடலாம் என்று ஆட்சியாளர்கள் எண்ணும்போது, நில வரியைப் பற்றி அவர்கள் எண்ணாமல் இருந்திருக்க முடியாது. நில வரியை, நீர் வரியை உயர்த்தினால் என்ன என்று சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்து, அதனால் நலம் பயக்காது என்று கண்டு, வேறு பல வகைகளில் வரிகளை காணலாம் என்று நினைத்துத்தான், முப்பது ஆண்டுகளாக இருந்திருப்பார்களே தவிர, அரசாங்கத்தின் கவனத்தில் படாமல்தான் இது நின்று போயிருக்கிறது என்று கருதுவதற்கு இல்லை.

நிலவரி முன்பு மொத்த வருமானத்தில் 50 சதவிகிதமாக இருந்தது, இப்பொழுது 9.3 சதவிகிதமாக இருக்கிறது என்று புள்ளி விவரங்கள் போட்டுப் பார்ப்பது, மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது வேண்டுமென்றால் திருப்தி அளிக்கும் முறையில் இருக்கலாமே தவிர, உண்மையில் நிலவரி குறைந்திருக்கவில்லை. விற்பனை வரி, எக்சைஸ் வரி போன்றவைகள் 200 சதவிகிதம், 400 சதவிகிதம் என்று ஏறியிருப்பதால், அவற்றோடு சேர்த்து வைத்துப் பார்க்கும்போது இது 9.3 சதவிகிதமாக காணப்படுகிறது. தாங்க முடியாத அளவிற்கு வரிச்சுமை உயர்ந்திருப்பதை அறிகிறோம்.

இந்த வரி போடுவதால் மக்களுக்கு நன்மை பயக்காது என்பதுடன், உழவர்பெருங்குடிமக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட இருக்கிறார்கள். இன்று கடனுக்கு ஆளாகி வாழ்க்கையில் அல்லல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் இந்த உழவர் பெருங்குடிமக்கள் சரியான புள்ளிவிவரங்கள் எனக்கு கிடைக்கவில்லை. உழவர் பெருங்குடி மக்களில் 60 சத விகிதத்தினர் கடன்பட்டு வாழும் நிலையைத்தான் இன்று காண்கிறோம். இந்த முப்பது ஆண்டுகளில் அவர்களது வரவினம் மூன்று அல்லது நான்கு பங்கு ஏறியிருந்தால் அவர்களது செலவினம் 10, 20 மடங்கு அதிகரித்திருக்கிறது. அவர்களது செலவினம் ஏறாமல் அவர்களது வரவினம் ஏறியிருந்தால், அவர்களது வாழ்வு நாளுக்கு நாள் உயர்ந்து

27th February 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வருகிறது என்று பொருள். அவர்களுக்குள்ள வரவினம் நான்கு மடங்கு பெருகி, அவர்களது செலவினம் 10, 15 மடங்கு பெருகியிருப்பதைப் பார்த்து, அவர்களது வாழ்வில் வசதி ஏற்பட்டிருக்கிறது என்று ஒருவரும் செகல்லமுடியாது. உழவர் பெருங்குடிமக்கள் அல்லல் உற்றிருப்பதால் தாங்கமுடியாத அளவு வரியை அவர்கள் மீது போடக் கூடாது என்று பல்வேறு தரப்பினர்களும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் கிடைக்கிற வருமானத்தைப் பற்றி கூறும்போது கனம் அமைச்சர் அவர்கள், அதிலிருந்து கிடைக்கிற வருமானம் 1.1 சதவிகிதம் என்றும், வட்டி அளவை வைத்துப் பார்த்தால் கூட 3.6 சத விகிதம் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் புள்ளிவிவரம் கொடுத்தார்கள். ஆனால் மற்ற வகைகளில் வருகிற வருவாயைக் கணக்கிட்டுப்பார்த்தால், இதே கணக்கைப போட்டுப் பார்த்தால் 300 சதவிகிதத்துக்கு மேல் வருவாய் ஈட்டித் தரும் வகையில் பல வரி வகைகள் இருப்பதைப் பார்க்கலாம். நிலவரியை உயர்த்துவதற்கான காரணம் கனம் அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. "அரசினருக்கு ஏற்பட்டிருக்கின்ற செலவினத்தை ஈடுகட்ட பணம் வேண்டும்; அதற்கு வரி போட வேண்டும். சென்ற முப்பது ஆண்டு காலமாகத் தண்ணீர் தீர்வை முன்னால் இருந்தபடியே இருக்கிறது; ஆகவே, இதை உயர்த்தலாம்', என்றுதான் காரணம் சொல்லமுடியுமே தவிர, 'இன்றைய நிலையில் உழவர்பெருங்குடிமக்கள் வரி போட்டால் தாங்கக்கூடிய அளவில் இருக்கிறார்கள்; ஆகவே, அவர்கள்மீது வரி போடப்படுகிறது', என்கிற காரணத்தை அரசினரால் சொல்ல முடியாது. வருமானம் வேண்டும்; ரூபாய் ஒரு கோடி அளவுக்குப் பணம் வேண்டும்; ஆகவே வரி போட வேண்டும்; முப்பது ஆண்டு காலமாக வரி போடவில்லை; ஆகவே இப்போது வரி போடுகிறோம்' என்கிற காரணங்களைச் சொல்லலாமே தவிர, 'அவர்கள் இப்போது தாங்குகிற அளவுக்கு இருக்கிறார்கள்; ஆகவே ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வரி போடுகிறோம்', என்று சொல்வதற்கு இயலாது.

மேலும், வரி எதற்காக போடப்படுகிறது என்கிற காரணங்களை சொல்லுகின்ற நேரத்தில், 'நிலத்தின் விலை உயர்ந்திருக்கிறது; ஆகவே, இவ்வரி போடுவதால் உழவர்பெருங்குடிமக்களை பாதிக்காது', என்றும் சொல்லப்பட்டது. பொதுவாக இவர்கள் நிலங்களை வாங்கி விற்று, மேலும் வாங்கி விற்று, மேலும் மேலும் வாங்கி விற்றுப் பணம் சம்பாதிக்கின்ற ஒரு விற்பனைத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தால், இவர்களது வருவாயைக் கணக்கிட்டு இவர்கள் மீது வரி போடுவதில் பொருள் இருக்க முடியும். ஆனால் நிலத்தை சொந்தமாக வைத்திருக்கின்ற உழவர்பெருங்குடிமக்கள், ஆண்டு ஆண்டுதோறும் தலைமுறை தலைமுறையாக அதை உரிமையாக வைத்துக்கொண்டு, அதில் சாகுபடி செய்து, அதன் மூலம் தங்கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவே,

அவர்கள் விவசாயம் செய்து வருகின்ற வருமானத்தைத்தான், நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர, நிலத்தின் விலையை எடுத்துக்கொள்வதில் எந்தவிதமான பொருளும் இருக்க முடியாது. இவ்விதம் வருகின்ற வருமானத்தைக்கொண்டு அவர்களுடைய செலவினத்தை ஈடுகட்ட போதுமா, போதாதா? அதற்குத் தகுந்த வகையில் இன்றைய நிலைமை அமைந்திருக்கிறதா, இல்லையா? இப்போதுள்ள நிலைமையில் செலவினம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு போகிறதா, இல்லையா? என்கின்ற விவரங்களைக் கொண்டுதான் உழவர்பெருங்குடி மக்களின் வருவாயைக் கணக்கிட வேண்டும். சாதாரணமாக ஒரு காரை 2,000 ரூபாய்க்கு வாங்கி, 2,000 ரூபாய் செலவு செய்து, 6,000 ரூபாய்க்கு விற்று 2,000 ரூபாய் சம்பாதிப்பதைப்போல் இதை எடுத்துக்கொள்ள முடியாது. அதே போன்றுதான் வீட்டை குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள்; அதிகமான விலை வந்தவுடன் விற்குகிறார்கள். இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் வேறு— உழவர் மக்களுக்குக் கிடைக்கின்ற வருமானம் வேறு. வறுமையுற்ற நிலையில் ஏழை உழவர்பெருங்குடிமக்கள் தங்கள் நிலத்தை விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது, வாங்கின கடனை ஈடுகட்ட முடியாத நிலையிலும், வாழ்க்கையை நடத்துவதற்குப் போதிய வழியில்லாத நிலை ஏற்படும்போதும், தங்களுக்கு ஏற்படுகின்ற செலவினங்களைத் தாக்கு பிடிக்க முடியாத நிலை ஏற்படுகிற பொழுதும்தான் விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலத்தை விற்கிறார்களே தவிர, லாபத்தைக் கருதி விற்க உழவர் பெருமக்கள் முன்வருவதில்லை.

கனம் ஈரோடு உறுப்பினர் அவர்கள் கோழிக்குஞ்சு உவமையைக் கூறினார்கள். "கோழியும் தன் குஞ்சுதனைக் கொல்லவரும் வான் பருந்தைச் சூழ்ந்து எதிர்க்கும்" என்பது புரட்சிக் கவிஞர் வாக்கு. அதன்படி கோழிக் குஞ்சுகளாக இருக்கின்ற உழவர் பெருமக்களை, வான் பருந்தான நிலவரி கொன்றுவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கோழியாக விளங்கும் இந்தச் சட்டமன்றத்தை சார்ந்தது. கொல்லவருவது வான் பருந்தாக இருக்கின்ற அமைச்சரவை என்று நான் சொல்ல முன்வரவில்லை, இந்த தீர்வையை கொண்டுவரும் வரிவிதிப்பை வான்பருந்து என்று குறிப்பிடுகிறேன். வரி என்னும் வான்பருந்தால், உழவர் என்னும் கோழிக் குஞ்சுகளுக்கு ஆபத்து வாராதவண்ணம், அவைகளை அணைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த சபைக்கு இருக்கிறது. நாம் நினைத்தால் இந்தச் சட்டத்தை மாற்ற முடியும், நாம் விரும்பினால் வேண்டிய திருத்தங்களைச் செய்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தரலாம். பொதுவாக இந்த வரி விதிப்பு வேண்டாம் என்கின்ற கருத்து எல்லா அங்கத்தினர்களிடையேயும் நிலவி வருகிறது. ஆனால் இதற்காக வாக்கெடுத்துப் பார்த்தால் அதிகமான வாக்குகள் கிடைக்குமா? கிடைக்காதா? என்பது, இப்போது நடைமுறையில் இருக்கின்ற ஜனநாயக அமைப்பைப் பொறுத்ததொன்று. பொதுவாக

இந்தத் தீர்வை வேண்டாம் என்கிற கருத்து இருக்கிறது. அதற்கு வலிவு கொடுக்கவேண்டியது இம் மாமன்றத்தினரின் கடமை என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

மேலும், கனம் அவைத்தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்வையானது, உழவர் பெருமக்களால் தாங்க முடியுமா? முடியாதா? என்பதைப்பற்றி ஆலோசித்து, இந்த மசோதாவையே கொண்டுவராமல் இருக்கலாம். அது அறவே நீங்காது என்றும் தெரிகிறது. ஆகவே இது அறவே வேண்டாம் என்று சொல்வது இந்த நிலையில் நடைபெற முடியாத ஒன்று என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் இந்த சபையை வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது போடப்பட்டிருக்கும் தீர்வையைக் குறைத்தாவது கொண்டுவர முயல வேண்டும் என்பதுதான். நாம் முயற்சி செய்தால், இந்த மன்றம் நினைத்தால் இன்னும் சில பல மணி நேரங்களில் இதன் பேரில் முடிவு செய்ய முடியும், இன்னும் அந்தக் கட்டத்தை நாம் தாண்டிவிடவில்லை.

சாதாரணமாகத் தீர்வையை ஏற்றும்போது, இதைத் தாங்கக் கூடியவர்கள், தாங்கக்கூடிய அளவுக்கு இருக்கிறார்களா என்பதை பார்த்துக்கொள்ளவேண்டும்.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"

என்று வள்ளுவர் கூறியிருப்பது போன்று, மயில் தோகையாக இருந்தாலும், அதை அளவுக்கு மீறி ஏற்றிவிட்டால், அதை சுமந்து கொண்டிருக்கிற வண்டியின் இரும்பு அச்சும் முறிந்துவிடும். அந்த முறையில் தாங்க முடியாத அளவுக்கு இன்றைய சூழ்நிலையில் உழவர் பெருமக்களின் வாழ்க்கை அமைந்திருக்கிற காரணத்தால், ஓரளவுக்கு இந்தத் தீர்வையை மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கிறது, இந்த சபைக்கு இருக்கிறது என்பதை கூறிக்கொள்ள முடியும். நிலத்தீர்வையைப் பொறுத்த வரையில், முன்னால் கொண்டு வரப்பட்டபோது 60 சத விகிதம் என்றிருந்தது பொறுக்குக் குழுவிற்கு போனபின்னால் 45 சத விகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது, இன்னும் இதைக் குறைக்கின்ற அளவில் 20 சதவிகிதத்திற்கு கொண்டு வரவேண்டும். தண்ணீர் தீர்வையைப் பொறுத்த வரையில் சட்டம் இயற்றியபோது 100 சத விகிதம் என்று போடப்பட்டிருந்ததை பொறுக்குக் குழுவினர் 75 சத விகிதமாக்கியிருக்கிறார்கள். இதை மேலும் நாம் முயற்சி செய்து பார்ப்போமேயானால், 50 சத விகிதமாக்கலாம். இன்னும் 50 சத விகிதமாக இருந்ததை பொறுக்குக் குழுவினர் 37½ சத விகிதமாகக்கியிருக்கிறார்கள். இதை இன்னும் முயற்சி செய்து பார்த்தால்—'முயற்சி திருவினையாக்கும்' என்று சொல்லியிருப்பதின்படி நாம் முயற்சி செய்து பார்த்தால், 20 சத விகிதமாகக் கொண்டுவரலாம். மேலும் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [27th February 1963

பவர்களுக்கு, இன்றைய சூழ்நிலையில் செலவினங்கள் அதிகமாக அமைந்திருப்பதால், அதையும் நாம் பரிசீலனை செய்து பார்த்து அவர்களுக்கு இந்த வரிவிதிப்பிலிருந்து விதிவிலக்கு கொடுக்க வேண்டும். இதற்கான திருத்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திருத்தங்களை எல்லாம் ஏற்று, அதன்படி, நாம் இந்த மசோதாவை நிறைவேற்றுவோமானால், உழவர் பெருமக்களின்மீது போடவிருக்கும் பெரும் சுமையைக் குறைக்கின்ற வகையில், இந்த மசோதா அமையும். அப்படிச் செய்தால் உழவர் பெருமக்கள் பாராட்டுகிற அளவில் இந்த மசோதா இருக்கும். அந்த அளவுக்கு இதனை உரு திருத்தி, வேண்டிய பல திருத்தங்கள் செய்து பிறகே இதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The House will now rise for lunch and meet
1-47 p.m. again at 3 p.m.

The House then rose.

[After lunch—3 p.m.]

(Mr. Deputy Speaker in the Chair.)

கனம் திரு. வெ. ராமையயா: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா பொறுக்குக் கமிட்டியிலிருந்து வந்து இன்றைக்குச் சபையிலே பரிசீலனை செய்யும்போது, பொறுக்குக் கமிட்டிக்குப் போகக் கூடிய நேரத்தில் இருந்த காரசாரமான விவாதத்தைவிட இப்போது கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. ஆனால் இந்த மசோதாவில் இருக்கக்கூடிய கருத்தைக் குறித்து இந்த ஒரு முறை அல்லது இரண்டு முறை மட்டுமல்ல, சென்ற நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த தேதியிலிருந்து, அதற்கு அடுத்தபடி சென்ற கவர்னர் பேருரைமீது ஏற்பட்ட விவாதத்தின் போதும், இந்த மசோதா குறித்துப் பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையில் இந்த விவாதத்தைத் தொடங்கும்போது ஒரு சிறு குழப்பம் பலர் மனதில் இருந்தது. இந்த மசோதாவை ஏதோ அவசர அவசரமாகச் சட்டமாக்கி இதன் மூலம் வரும் வருமானத்தைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தில். இந்த முயற்சியை அரசாங்கம் செய்வதாகக் குற்றச் சாட்டு. அப்படி குற்றம் சொல்ல முன் வந்தவர்கள் பொறுக்குக் கமிட்டியினுடைய நடவடிக்கையைக் கொஞ்சம் மறந்தே பேச முயன்றார்கள். இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போன போது, பொறுக்குக் கமிட்டி ஒரு தடவை அல்ல, இதற்குப் போதுமான அவகாசம் எடுத்து, இந்த மசோதாவை நன்றாக ஆராய்ந்து, நல்ல திருத்தங்களைச் செய்திருப்பதை பொறுக்குக் கமிட்டியிலிருந்து வந்த மசோதாவைப் பார்க்கும்போது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் இந்த மசோதாவில் இருக்கக் கூடிய கருத்தைப் பொறுத்த வரையில், அல்லது இருக்கக் கூடிய வரிப் பளுவைப் பொறுத்த வரையில், புதிதாகத் தெரிந்துகொள்ள முயற்சி எடுத்தாலும், புதிய கருத்து எதுவும் வந்துவிடப் போவ

27th February 1963] *[திரு. வெ. ராமையயா]*

தில்லை. ஒரு வருஷமாக, மாகாணத்தில் இதோடு சம்பந்தப்பட்டிருக்கக் கூடியவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதில் வைத்து, விவசாயிகள் தாங்கக் கூடிய அளவுக்கு பொறுக்குக் குழு ஆலோசனை பேரில் திருத்தமெல்லாம் செய்திருக்கிறது. இன்றைய காலை விவாதத்தை முடித்து வைத்துப் பேசும்போது கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், இப்போது வந்திருக்கக் கூடிய கட்டத்தில் அடியோடு திருத்தக் கூடிய சூழ்நிலை இல்லை, ஆனால் பிரிவு பிரிவாக எடுத்துப் பார்க்கும்போது இந்த வரிப்பளுவை, சத விதத்தைக் குறைக்க முடியும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது பல கட்டங்களைத் தாண்டி வந்திருப்பதை அவர்கள் தெரிந்து சொன்னார்கள். இந்த மசோதாவின் உண்மையான நிலையைப் பார்ப்போமானால், இந்த மசோதா தயாராகி சட்ட சபைக்கு வந்த நேரத்தில் மட்டும், அதனால் ஏற்பட்ட பல நிலைமைகள் மட்டும் கட்டுப்படுத்தப் படவில்லை. இந்த மசோதாவின் பெயரைப் படித்தால் மட்டுமே, இது அடிஷனல் லெவி, அதாவது இதற்கு முன் இருக்கக் கூடிய வரியைக் கொஞ்சம் உயர்த்தக் கூடிய சூழ்நிலை என்பது தெரியும். ஆகையால் இந்த மசோதாவில் எந்தவித மாறுதல் செய்தாலும் அடிப்படைச் சட்டத்தைத் திருத்தக்கூடிய முறையில் இருக்கும் பட்சத்தில் முன்னுக்குப் பின் முரணாக இருக்கும்--சரியாக இருக்க முடியாது. குறிப்பாக ஒரு சில அங்கத்தினர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மசோதா, இதில் இருக்கக் கூடிய வரிப் பளு, 5 ஏக்கருக்குக் குறைவாக இருக்கும். நிலச்சுவான்தார்களைப் பாதிக்காமல் விட்டு விடலாம் என்று சொன்னார்கள். இதையெல்லாம் கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனை செய்துதானோ என்னவோ, அவர் சொல்லுவதற்கு பதில் மசோதாவில் இருக்கக் கூடிய நிலையைச் சொன்னார்கள். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், அடிஷனல் லெவி போடும்போது, 5 ஏக்கர் அல்லது 3 ஏக்கர் அல்லது 2 ஏக்கர் உள்ள நிலங்களுக்கு வரியை விட்டு விடலாம் என்று சொன்னால், எதை அடிப்படையாக வைத்து இந்த அடிஷனல் லெவி போடுகிறோமோ அந்தச் சட்டத்திற்குக் கண்டிப்பாக எதிர்ப்பாக இருக்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை, அந்தக் கருத்தை சட்ட சபை ஏற்றுக் கொள்ளும் என்பதில் என்னைப் பொறுத்த வரையில் சந்தேகம் இல்லை. இன்னொரு கருத்து பலமாகப் பேசப்பட்டது. பலர் பல இடங்களில் பேசிய கருத்து. ஃபர்ஸ்ட் க்ளாஸ், செகண்ட் க்ளாஸ், தேர்ட் கிளாஸ் ஸோர்ஸுக்கு வேண்டுமானால் வரி போட்டுக் கொள்ளலாம். ஆனால் ஃபோர்த் க்ளாஸ், ஃபிஃப்த் க்ளாஸ் ஸோர்ஸுக்கு வேண்டுமானால் விட்டு விடலாம் என்று சொன்னார்கள். இந்த மசோதாவின் அமைப்பைத் தெரிந்துகொண்டால் அந்தக் கருத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் சாங்கோபாங்கமாக, நல்லவிதமாகப் பரிசீலனை செய்து, அரசாங்கம் பரிசீலனை செய்து, பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து இப்போது ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த முடிவை சட்ட சபைக்குத் திரும்ப அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இதற்

[திரு. வெ. ராமைய்யா] [27th February 1963

இடையில் பலவிதக் கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள். குறிப்பாக இதில் பேசப்பட்ட கருத்துக்களைப் பார்க்கும் போது, சில வார்த்தைகளைப் பார்க்கும்போது நமக்கு பயம் ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாக, இன்று விவாதத்தைத் துவக்கி வைக்கும்போது கனம் அங்கத்தினர் மாதா கவுடர் அவர்களுக்கு மானவாரி பூமி, புஞ்சை பூமி என்ற உடனே அவருக்குக் குழப்பம். அவர் "ஒரு இடத்தில் உத்திரவாதம் கொடுத்து, அரசாங்க ஸோர்ஸில் இல்லாத ஒரு பூமிக்கு இந்த வரி விதிப்பு இருக்காது என்று சொன்னது, இன்றைக்கு இப்போது நான் கொண்டு வரும் திருத்தம் மூலமாக வரி விதிப்பு ஏற்பட்டு விட்டதே" என்று சொன்னார்கள். அதைப் போலவே எதிர் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் சீராமுலு அவர்கள் பேசும்போது அவர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களைச் சொல்லி வந்தார்கள். குறிப்பாக கிருஷ்ணகிரி ப்ராஜெக்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய ரெவின்யூ தீர்வை, தண்ணீர் கஷ்டம் இதையெல்லாம் சொன்னார்கள். இந்த மசோதாவைப் பார்த்தால், இது கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட் பக்கமே வரவில்லை. அதற்கு விசேஷ சட்டம் இருக்கிறது. அதற்கு அதிகக் கட்டணம்—அபிவிருத்திக் கட்டணம்—செலுத்த வேண்டும், தண்ணீர் தீர்வை செலுத்தவேண்டும். இந்த மசோதா அந்தப் பகுதியைக் கட்டுப்படுத்தாது. அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், இப்போது கொண்டு வரும் வரி திடீரென்று ஆலோசனை செய்து கொண்டு வந்திருக்க முடியாது, 30 வருஷங்களாக ஆலோசனை செய்து ஒத்தி வைத்துக்கொண்டே வந்திருக்கவேண்டும், ஆகையால் தான் இந்த வரியை மீண்டும் ஒத்திப் போட நாம் முயற்சி எடுக்கலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக இந்த மசோதாவில் அடிப்படையாக இருக்கக் கூடிய நிலையைப் புரிந்து கொண்டால் இதில் ஏற்பட்டிருக்கக் கூடிய அதிகப்படி வரி திடீரென்று ஏற்பட்டதல்ல. ரெவின்யூ அமைப்பைப் புரிந்து கொண்டால் முன்பு இருந்த பழக்கம் 30 வருஷங்களுக்கு ஒரு முறை செட்டில்மென்ட் நடந்திருக்கிறது. அப்படி நடக்கும் போது, பல அமைப்புகளை, அல்லது பூமியில் இருக்கக் கூடிய பல நிலைமைகளைக் கணக்கில் எடுத்து, அன்றைக்கு இருக்கக் கூடிய பொருளாதார நிலைமையையும் கணக்கில் எடுத்து செட்டில்மென்ட் செய்வார்கள். இது ஒரு நீண்ட ப்ராஸஸ். ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வருஷம் என்று இப்படி பல வருஷங்கள் பிடிக்கும். ஆனால் கடந்த 10-15 வருஷ காலமாக செட்டில்மென்ட்டுக்குக் காட்டும் அக்கரையைவிட அபிவிருத்தி வேலைகளில் அக்கரை காட்டியதால், எண்ணமெல்லாம் அதில் போய்விட்டதால், செட்டில்மென்டைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்தோம். இப்பொழுது செட்டில்மென்ட் மட்டும் நடந்திருக்கும் பட்சத்தில் இதுபோன்ற ஒரு மசோதா இங்கு வந்திருக்கவே வேண்டாம். திரு. சிரஞ்சீவுலு நாயுடு அவர்கள் சொன்னதுபோல், செட்டில்மென்ட் மட்டும் நடந்திருந்தால், இதைவிட அதிகமான அளவுக்கு

27th February 1963] [திரு. வெ. ராமைய்யா]

அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்க முடியும். 30 வருஷங்களுக்கு முன்பு இருந்த பொருளாதார நிலை, அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்தி, இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, உண்மையிலேயே செட்டில்மென்டைப் பற்றி அனுபவம் உள்ளவர்கள், செட்டில்மென்ட் நடந்திருந்தால் இப்பொழுது இருக்கக்கூடிய வருமானத்தைவிட அதிகமான அளவுக்கு வருமானம் கிடைத்திருக்குமென்பதை உணர்வார்கள். இதிலே கவனம் செலுத்தாததற்குக் காரணம் என்னவென்றால், இது ஒரு நீண்ட பிராஸஸாக இருக்கும் என்று நினைத்து மற்ற ஆக்க வேலைகள், நிலச் சீர்திருத்தம் இவற்றின்மீது கவனம் செலுத்திய காரணத்தால் இதைத் தள்ளிப்போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுக்கும்பொழுது, 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அரசாங்கத்தினுடைய மொத்த வருமானத்தில் இது ஏறத்தாழ 50 சத விகிதமாக இருந்தது என்றும், இப்பொழுது இருக்கக்கூடிய வருமானத்தில் இது ஏதோ கொஞ்ச சதவிகிதம்தான் என்பதையும் குறிப்பிட்டார்கள். இந்த நில வரியை உயர்த்தாததற்கு இது மட்டும் காரணமல்ல. ஏதோ பணம் திரட்டவேண்டும் என்ற காரணத்திற்காகவும் இல்லை. இந்த வரியைப் பொறுத்தவரையில், நீண்ட காலமாக செட்டில்மென்ட் ஏற்படாத காரணத்தால், இந்த வரி அப்படியே தேங்கி நின்றுவிட்டது. இன்றைக்கு மற்ற பிராஜெக்ட்களோடு—கிருஷ்ணகிரி பிராஜெக்டை எடுத்துக் கொண்டாலும் சரி, கீழ் பவானி பிராஜெக்டை எடுத்துக் கொண்டாலும் சரி, இந்த மசோதாவின் ஷெட்யூலில் குறிப்பிட்டிருக்கும் எந்தப் பிராஜெக்டை எடுத்துக்கொண்டாலும் சரி—புது பிராஜெக்ட்களிலிருந்து தண்ணீர் கொடுக்கும்பொழுது அங்கே உள்ளவர்கள் கட்டக்கூடிய தீர்வைக்கும், இந்த பிராஜெக்ட்டுகள் ஏற்படுவதற்கு முன்பு செட்டில்மென்ட் ஏற்பட்ட காலத்தில் அப்பொழுது கட்டிக்கொண்டிருந்த வரியையும் பார்க்கும்பொழுது பெரும் வித்தியாசம் இருக்கிறது. இன்று காலையில் ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது, மின்சாரத்தை உபயோகித்து தண்ணீர் இறைக்கும்பொழுது, மூன்றாவது அல்லது நான்காவது ஸோர்ஸைவிட, விவசாயிக்கு அதிக வருமானம் தருகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த விவசாயி அந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டி இருக்கிறது என்பதைக் கணக்கிட்டிருந்தால் அவர்களுடைய விவாதத்திற்கு இதைச் சான்றாக எடுத்துச் சொல்லியிருக்கமாட்டார்கள். மூன்றாவது அல்லது நான்காவது ஸோர்ஸுக்கும், கிணற்றிலிருந்து பம்பு செட்டு வைத்து இறைப்பதற்கும், கணக்குப்போட்டு சொல்ல முடியாத வகையில் வித்தியாசம் இருக்கிறது. சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் பிராஜெக்டுகளில் விவசாயிகள் கட்டக்கூடிய தண்ணீர் வரி, நிலத்தீர்வை இவற்றையும், மின்சார பம்புசெட்டு மூலமாக தண்ணீர் இறைத்து அவர்கள் கட்டக்கூடிய தீர்வையையும் பார்க்கும்பொழுது, இப்பொழுது உயர்த்துவதானது மிகவும் நியாயமானது என்ற ஒரே ஒரு முடிவுக்குத்தான் நாம் வர முடியும். இந்தப் புது வரியைச் சுமத்தி விவசாயிகளுக்கு

தொந்தரவு கொடுக்கிறார்கள் என்று வேண்டுமானால் பேசலாம். இதையெல்லாம் நன்கு உணர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால்தான் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மசோதாவுக்கு நேரடியான ஆதரவு தருகிறோம் என்று சொல்லாவிட்டாலும், இதைப் பரிசீலனை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்தின்பொழுது சில அங்கத்தினர்கள் " from China to Peru " என்ற முறையில், நேரடியாக சம்பந்தம் இருக்கிறதோ, இல்லையோ, கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் தர்மலிங்கம் அவர்கள் இந்த மசோதாவின்மீது பேசும்பொழுது அவருடைய ஜில்லாவிலுள்ள தண்ணீர் பிரச்னையைப்பற்றி பேச ஆரம்பித்து விட்டார்கள். எல்லாப் பிரச்னைகளையும் பற்றி பேசுவதற்கு இதிலே இடம் இருந்தது. ஆனால் நேரடியான முறையிலே பார்க்கும்பொழுது, இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய வரி உயர்வை மட்டும் கணக்குப்போட்டு பார்த்தால், பொதுவாக, இதிலே அதிகமான எதிர்ப்பு தெரிவிப்பதற்குக் காரணமே கிடையாது. இது ஒன்றும் புதிய வரி இல்லை. இருக்கக்கூடிய வரியை கொஞ்சம் உயர்த்தியிருக்கிறோம். அப்படிச் செய்யும்பொழுது எந்த அளவுக்கு விதிவிலக்கு கொடுக்க முடியும் என்பதைப் பற்றியும் பொறுக்குக் கமிட்டியிலே பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறோம். அந்த முடிவை இப்பொழுது சட்டசபை முன்பு வைத்திருக்கிறோம். ஒவ்வொரு அங்கத்தினரும் இந்த விவாதத்திலே பேசியதற்கு தனிப்பட்ட முறையிலே நான் பதில் சொல்ல இப்பொழுது முயற்சிக்கவில்லை. ஏனென்றால் இந்த மசோதாவின் வரம்பே ஒரு குறிப்பிட்ட அளவில்தான் இருக்கிறது. மூன்றாவது அல்லது நான்காவது ஸோர்ஸுகளை நீக்கிவிட வேண்டுமென்றும், ஐந்து ஏகரா வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்றும் சொல்வது இந்த மசோதாவின் அடிப்படைக்கு புறம்பானதாக இருப்பதால், நான் அதைப்பற்றி இங்கே அதிகமாகப் பேச விரும்பவில்லை.

கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் பேசும்பொழுது—சமீபத்தில் நான் அவருடைய ஜில்லாவிற்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளின் நிலையைத் தெரிந்துகொண்டேன்—ஆச்சரியமான முடிவுகள் இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். மணிமுத்தாறு பிராஜெக்டை விட்டுவிட்டதாகச் சொன்னார்கள். மணிமுத்தாறு பிராஜெக்டை மற்ற சமீப கால பிராஜெக்டுகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், அங்கு நிர்ணயம் செய்து இருக்கக்கூடிய தண்ணீர்த் தீர்வையும், மற்றும் கீழ்பவானி, அமராவதி, வைகை இதுபோன்ற பிராஜெக்டுகளில் நிர்ணயம் செய்திருக்கும் தீர்வையையும் பார்க்கும்பொழுது, இதற்கு முன்பு இருபோக நிலத்தில் எவ்வளவு தீர்வை வந்துகொண்டிருந்ததோ அந்த அளவுக்குத்தான் நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

* **திரு. ஏ. பி. ஸி. வீரபாகு:** இதிலே ஒரே ஒரு விளக்கத்தை கனம் மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மணிமுத்தாறு பிராஜெக்டை விதிவிலக்கில் சேர்க்கவில்லை. இதனால், இந்த புதிய சட்டப் பிரகாரம் விதிவிலக்கில் சேர்க்கப்பட்ட திட்டங்கள் ஒரு வகை, புதிய திட்டங்களில் விதிவிலக்கு அளிக்கப்படாமல் இருப்பவை ஒருவகை, பழைய திட்டங்களில் இருக்கக்கூடிய நிலங்கள் ஒரு வகை என்று மூன்று விதமான பாகுபாடுகள் ஏற்படும். மணிமுத்தாறைப் பொறுத்தவரையில், ஒரு ஏக்கருக்கு ரூபாய் 7 முதல் 10 வரையில் ஏற்கனவே உள்ள தீர்வை பேரில் விதித்திருக்கிறார்கள். இது 1958-ம் வருஷத்துக்குப் பிறகு விதித்த தீர்வை. ஏற்கனவே உள்ள தீர்வையோடு இந்த ரூபாய் 10-ம் சேர்த்து, அந்தத் தீர்வையோடு கூடுதலாக சேர்க்க வேண்டிய வரியையும் சேர்ப்பது என்ற முறையிலே இந்த மசோதா அமைந்திருக்கிறது. அப்படி பார்த்தால் மணிமுத்தாறு திட்டத்திற்கு மாத்திரம் இந்த வரி விதிப்பை அமுல் செய்வதாக இருக்கிறது. வைகைத் திட்டம், ஆழியாறுத் திட்டம், இவற்றிற்கு எந்த அடிப்படையிலே புதிய வரியைப் போட்டிருக்கிறார்களோ, அதே அடிப்படையில் மணிமுத்தாறு திட்டத்திற்கும் இந்த கூடுதல் வரியைப் போட்டு ரேஷனலைஸ் செய்வதாக இருந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது.

'The Government must agree to rationalise in respect of Manimuthar the levy that has been already levied consistent with the policy which they adopted in other projects. But if it comes to levying an additional tax irrespective of the Manimuthar levy, it is highly objectionable from the point of view of the ryots. I wish to bring this to the notice of the Government.'

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினர் அவர்கள் கொஞ்சம் விவரமாகவே கூறியிருக்கிறார்கள். மணிமுத்தாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கே அனுஷ்டித்த கொள்கையானது மற்ற பிராஜெக்டுகளிலே அனுஷ்டித்த கொள்கைக்கு ஒத்ததாக இல்லை. மற்ற பிராஜெக்டுகளிலே அதிகமாகக் கட்ட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பிராஜெக்டுக்கும் விரிவாக சட்டம் செய்து எவ்வளவு வசூல் செய்யவேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறோம். மணிமுத்தாறைப் பொறுத்தவரையில் அந்த மாதிரி இல்லை. நான் பதில் சொல்லும்பொழுது, இங்கே ஏற்றுக்கொண்டிருக்கிற முடிவுப்படி, மணிமுத்தாறு விவசாயிகள், பழைய பாசனத் திட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் எவ்வளவு வரி கொடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் வரி கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள், இந்தக் கூடுதல் வரியை விதிக்கும்பொழுது, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, இவற்றோடு மணிமுத்தாறையும் சேர்த்து ரேஷனலைஸ் செய்ய வேண்டுமென்று சொல்லும்பொழுது இந்த வித்தியாசத்தை புரிந்துகொள்ள முடியும். இரண்டிற்கும் அதிகமாக வித்தியாசம் இருக்கிறது. ஆகையால்தான் இந்த கூடுதல் லெவியைப் பொறுத்தவரையில், மணிமுத்தாறுத் திட்டத்திற்கு

விதிவிலக்கு கொடுக்க முடியவில்லை. ரேஷனலைஸ் செய்யவேண்டுமென்று சொன்னால், அதற்குத் தக்க சமயம் வரவேண்டும். மற்றும் சில அங்கத்தினர்கள் நிலத் தீர்வையே இருக்காது என்று சர்க்கார் சொன்னார்களே, இப்பொழுது எதற்காக இந்த கூடுதல் வரி விதிக்கப்படுகிறது என்று கேட்டார்கள்.

நிலத் தீர்வை இருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது பிரச்னை அல்ல. இப்பொழுதுள்ள பிரச்னையெல்லாம் எடுக்கக்கூடிய காரியங்கள் நன்றாக பரிசிலனை செய்து பார்க்க வேண்டும் என்பதுதான். அப்படி பரிசிலனை செய்து பார்க்க வேண்டும் என்பதற்குத்தான் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தப்படி காரியங்களைச் செய்வதற்குத்தான் தகுந்த முறையில் பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல கனம் அங்கத்தினர்களும் பல திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்தச் சட்டசபை பரிசீலனை செய்யவேண்டும். இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போய் விட்டு வந்தபிறகுகூட நானும் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். திருநெல்வேலி ஜில்லாவிற்கு நான் சென்றுவிட்டு வந்ததால் திருநெல்வேலி ஜில்லா அங்கத்தினர்கள் அங்கு என்னை வந்து பார்த்த காரணத்தால் உச்ச வரம்பு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று நினைப்பதற்கு இடம் இல்லை. பொறுக்குக் கமிட்டியில் உச்ச வரம்பு 27 ரூபாய் அல்லது 17½ ரூபாய்க்குமேல் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஏதோ சில இடங்களுக்கு 23 முதற்கொண்டு 25 வரையில் இருக்கிறது, அது அதிகமாக இருக்கிறது என்றும் சொல்லப்பட்டது. உச்ச வரம்பு 27-க்கு மேல் போகக்கூடாது என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதை திருநெல்வேலி அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதிகப்படியாக வரி போட்டு வசூல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அதிகப்படியான வித்தியாசம் இல்லாமல் செய்வதற்குத்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டியே ஒரு திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். அதை இந்தச் சட்டசபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக பல அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டார்கள். இந்த மசோதாவில் உள்ள பல கஷ்டங்களை இந்த அரசாங்கமும் நானும் நன்கு அறிந்திருக்கிறோம். இந்த மசோதாவின் கொள்கையை எதிர் கட்சி தலைவர் அவர்கள்கூட ஏற்றுக்கொண்டிருக்கிறார். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (குறுக்கீடு.) இந்த மசோதாவை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. இனிமேல்தான் ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள். இனிமேல்தான் க்ளாஸ் பை க்ளாஸ் விவாதம் வரப் போகிறது. அதன் பிறகுதான் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள். அப்போது என்னுடைய திருத்தங்களை பிரேரேபிக்கப்போகிறேன். அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும்

கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது ஒவ்வொரு க்ளாஸையும் நன்றாக பரிசிலனை செய்து என்னுடைய திருத்தங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி என்னுடைய திருத்தங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நான் குறிப்பிட்ட ஒரு வாதத்தை எடுத்து அதற்கு பதில் சொல்லும் அளவில் பதில் சொன்னார். அதன்படி திருநெல்வேலியில் ஏற்கனவே உச்ச பக்ஷம் ரூபாய் 22·50 என்று தீர்வை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 27 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது கூட்டப்பட்டிருப்பதை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் குறைவாகத்தான் இருக்கும். ஏற்கனவே மணிமுத்தாறு ப்ராஜக்ட் பகுதிக்கு அதிகப்படியான வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். இப்பொழுதுள்ளதைச் சேர்த்தால் இன்னும் அதிகப்படியாக ஆகிவிடும். திரு. ஏ. பி. சி. அவர்கள் பேசியபோது அதை ராஷணலைஸ் பண்ணவேண்டும் என்று சொன்னார். அப்படி முடிவு செய்தாலும் இன்னும் அதிகமாகத்தான் போய் விடும். இப்பொழுதே அதிகப்படியாக வித்தியாசம் இருக்கிறது. ஆகவே மற்ற பகுதிகளோடு மணிமுத்தாறு பகுதியையும் எடுத்துக்கொள்ளக்கூடாது. தற்போதே அதிகமாக, சுமார் பத்து ரூபாய் வரையில் அதிகமாக இருக்கிறது. 'ஏ' க்ளாஸ் பகுதிகளை எடுத்துக் கொண்டாலும் அதிகப்படியான வித்தியாசம் இருக்கிறது. அதன் காரணமாக மற்ற பகுதிகளோடு மணிமுத்தாறு பகுதிகளையும் சேர்க்கக்கூடாது. அதிகமான வித்தியாசம் இருக்கும் அளவில் இருக்கக்கூடாது. ஏற்கனவே திருநெல்வேலி ஜில்லாவில் அதிகமாக வாங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Additional Assessment and Additional Water-Cess Bill 1963 (L.A. Bill No. 4 of 1963) as amended by the Select Committee be taken into consideration."

The motion was put and carried and the Bill as amended by the Select Committee was taken into consideration.

Clause 2.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill.'

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

In clause 2, for sub-clause (7), *substitute* the following sub-clause, namely :—

"(7) 'landholder' means any holder of land under ryotwari settlement and includes,—

(i) any inamdar liable to pay full assessment under the Madras Inams (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956); and

(ii) any person liable to pay land revenue under section 23 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948;".

MR. DEPUTY SPEAKER : The question is—

In clause 2, for sub-clause (7) *substitute* the following sub-clause, namely :—

"(7) 'landholder' means any holder of land under ryotwari settlement and includes,—

(i) any inamdar liable to pay full assessment under the Madras Inams (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956); and

(ii) any person liable to pay land revenue under section 23 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948);".

The amendment was put and carried.

Clause 2 as amended was put and carried.

Clause 3.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill.'

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

"In clause 3, for the words 'forty-five per centum', substitute the words 'twenty per centum' and make necessary consequential amendments in the proviso to the clause."

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER : In view of the amendment given notice of by the Government, I think the hon. Member Sri C. Chiranjeevulu Naidu need not move his amendment to item (ii) of the proviso to clause 3.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move—

"In item (i) of the proviso to clause 3, for the words 'in no case exceed eighteen rupees per acre per fasli year', substitute the words 'in no case exceed fifteen rupees per acre per fasli year'."

The amendment was duly seconded.

SRI S. MADHAVAN : Sir, I move—

"In clause 3, for the words 'forty-five per centum' substitute the words 'twenty-five per centum' and make necessary consequential amendments in the proviso to the clause."

The amendment was duly seconded.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

In clause 3, in the proviso, *add* the word "and" at the end of item (i) and of for item (ii) and (iii), *substitute* the following item, namely :—

"(ii) in respect of any compounded double crop wet land or double crop wet land, in no case exceed twenty-seven rupees per acre per fasli year."

MR. DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

THE HON. SRI V. RAMAIAH : Sir, this morning even in my opening remarks, I have just pointed out this and the necessity for this particular amendment for removing the difference that is expected under the clause as it stands now. I shall just explain the amendment to clause (3).

The amendment has the effect of bringing both compounded double crop wet lands and double crop wet lands under first and second class sources under a common ceiling of Rs. 27. It was found that the procedure regarding the composition varied from district to district. Large variations have been noticed. For instance, ordinarily, no composition will be permitted under a first class source. But this was not only permitted under first class sources but was also compulsorily done in Tirunelveli district. So much so, in Tirunelveli district all the double crop lands, barring very rare cases, are only compounded double crop lands. It was found that the ceiling of Rs. 23 for compounded lands would practically mean no increase for certain high taram lands in areas like Tirunelveli paying at present Rs. 22.50 per acre, because of this peculiar feature of compulsory composition, even though on ground of yield and assured nature of supply of water, these lands are not inferior to registered double crop lands elsewhere in districts like Tiruchirappalli and Thanjavur.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய திருத்தமானது செலக்ட் கமிட்டியின் முடிவுக்கு முரணான திருத்தம் என்று நான் கருதுகிறேன். உச்ச பட்சத்தில் 22½ ரூபாயிலிருந்து 23 ரூபாய்தானே செலுத்தப்போகிறார்கள் என்று அவர்கள் சொல்லலாம். எட்டணாதானே என்று பார்த்த அளவில் தோன்றலாம். 'ஏ' க்ளாஸ் நிலமாக இருந்தாலும், பல தரங்களில் மண் வளம் இருப்பதன் காரணமாக ஏறக் 3-30 p.m.

குறைய 7 பிரிவுகளாகப் பிரித்துத் தீர்வை செலுத்திக் கொண்டிருக்கும் அந்த ஜில்லாவில் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற இந்தத் திருத்தம் காரணமாக, மற்ற இடங்களுக்கு இருக்கும் உச்ச வரம்பு போலவே, 23 ரூபாய் என்று இருப்பதுதான் நல்லது. திருநெல்வேலி ஜில்லாவுக்கு மாத்திரம் விசேஷ அளவிற்கு, குறைந்த பட்சம் இரண்டரை ரூபாயாவது அதிகமான தீர்வை வேண்டுமே என்று கருதினால், பலதரப்பட்ட மண் காரணமாக, 'ஏ' க்ளாஸ் ஸோர்ஸிலே இரண்டு போக நஞ்சைக்கு 5½ ரூபாயிலிருந்து 22 ரூபாய் வரையிலும் பல தரப்பட்ட தீர்வை செலுத்தும் அந்த நிலைமையில், வித்தியாசம் எட்டணாவோடு நிற்பதல்ல, பல வகைகளில் வித்தியாசப்படலாம். ஆகவே, செலக்ட் கமிட்டியின் முடிவுக்கிணங்கவே கூட, அந்த ஜில்லாவுக்கும் வித்தியாசப்படாத அளவுக்கு வைக்கலாம். 'கம்பௌண்டெட் டபிள் க்ராப் வெட் லாண்ட்' என்று குறிப்பிடக்கூடியது திருநெல்வேலி ஜில்லா முழுமையும் அல்ல, குறிப்பிட்ட சில தாலூகாக்களை பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கும். திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலூகாக்களில் இதுபோன்ற தாவாரி நிர்ணயம் இருந்திருக்கிறது. ஒரு சில தாலூகாக்களை மாத்திரம் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், செலக்ட் கமிட்டியின் முடிவைப்போலவே, 23 ரூபாய் உச்ச வரம்பாக வைத்துக்கொள்வது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

* **திரு எஸ். மாதவன் :** சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மூன்றாவது ஷரத்தில்—ஏற்கனவே இந்த மசோதா சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது—60 சத விகிதம் என்று இருந்தது. அதை செலக்ட் கமிட்டி பரிசீலித்து 45 சத விகிதமாக்கியிருக்கிறது. இதை வைத்தே நாம் ஒரு முடிவு கட்டிவிடலாம். இந்த சத விகிதம் கூடுதலாக இருந்து, அதைக் குறைக்கவேண்டும் என்ற கருத்தை இந்த மன்றத்தில் பெரும்பாலோர் கொண்டுள்ளனர் என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

பொது விவாதத்தில் நான் சொன்னதுபோல, ஏற்கனவே பஞ்சாயத்துச் சட்டப்படி, இவ்வளவு சதவிகிதம்தான் விதிக்க வேண்டும் என்ற கட்டு திட்டம் இல்லாமல், டெலிகேடெட் பவர்ஸ் என்ற வகையில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குக் கொடுத்துவிட்டோம். அப்படியிருக்கும்போது, இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாக விதிக்கும் வரியிலாவது நாம் கொஞ்சம் சலுகை தரவேண்டும் என்பதை வற்புறுத்தித்தான் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள், மிக விளக்கமாக, நாம் இந்த சத விகிதத்தைக் குறைக்கவேண்டும் என்று பல முறை வற்புறுத்திச் சொன்னார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள், கொள்கை அளவிலே நாங்கள் ஒத்துக்கொண்டதாகச் சுட்டிக்காட்டினார்கள். அப்படி நாங்கள் ஒத்துக்கொண்டுவிட்டதாகக் கருதிவிட வேண்டாம். நிச்சயம் இந்த வரி விதிப்புக் கொள்கையை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

மாறாக, கமிட்டிக்கு சென்றதற்குப் பின்னால், இன்றைய சூழ்நிலையில் இந்தச் சத விகிதத்தைக் குறைக்கவேண்டும் என்று வற்புறுத்துவதுதான் சிறந்த முறை என்ற வகையில் எங்கள் தலைவர் சுட்டிக் காண்பித்தார்கள். அந்த முறையிலே நான் கொடுத்திருக்கும் 3-வது ஷரத்துக்குள்ள திருத்தத்தின்படி, 45 சத விகிதத்தை 25 சத விகிதமாகக் குறைத்தால் யாரையும் பாதித்துவிடாது என்று நான் நம்புகிறேன். அதை இந்தச் சபை ஏற்கவேண்டும் என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் இந்த அதிகபட்ச உச்ச வரம்பை, இப்பொழுது கொண்டுவந்திருக்கும் திருத்தம் இல்லாத நிலையில், அப்படியே வைத்திருக்க வேண்டும், செலெக்ட் கமிட்டி ஏற்றுக்கொண்ட முடிவை நாம் இப்பொழுது மாற்றிவிடக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால், அவர்கள் தம்முடைய கருத்தை வலியுறுத்திச் சொன்ன 'கம்பௌண்டெட் டபிள் க்ராப் வெட்லாண்ட்' என்பது அவர்களுடைய ஜில்லா பூராவிலும் கூடக்கிடையாது. குறிப்பிட்ட ஒரு பகுதியிலே தான் இருக்கிறது. அடிஷனல் லெவி காரணமாக மாநிலத்தில் ஃபர்ஸ்ட் க்ளாஸ் ஸோர்ஸிலே இருக்கும் எல்லா விவசாயிகளும் அதிக வரி கட்ட வேண்டுமென்ற நிலை ஏற்படும்போது, இவர்களுக்குமட்டும் ஒரு விதி விலக்கு கொடுப்பதைப் போலக் கொடுத்தால், அது முறையாக இருக்காது என்ற காரணத்தால் தான் இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் உச்ச வரம்பு அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே ஒன்றும் பாரபட்சம் கிடையாது. இருக்கும் வித்தியாசத்தைக் குறைப்பதற்காகத்தான் இவர்களுக்கும் அதிக பட்சம் நிர்ணயித்திருக்கிறோம். பொதுவாக, திருநெல்வெலி ஜில்லாவிலிருந்து வரக்கூடிய கனம் அங்கத்தினர்கள் இந்தச் சிறு வித்தியாசத்திற்கு அதிக எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் 60 சத விகிதத்திலிருந்து 45 சத விகிதத்திற்குக் கொண்டுவந்திருக்கிற முடிவை மாற்றி மேலும் 25 சத விகிதமாகக் குறைக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். இதை இப்பொழுது மட்டுமல்ல; முன்பே நான் கூறியதுபோல, பல மாதங்களாகப் பரிசீலனை செய்ததுடன், பொறுக்குக் கமிட்டியிலும் சாங்கோபாங்கமாகப் பரிசீலனை செய்திருக்கிறோம். கனம் நிதி அமைச்சர் அவர்களும் இதிலே நேரடியாக அக்கறை கொண்டு, தீவிர முயற்சி எடுத்தன் பேரில் இந்த முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. (குறுக்கீடு) இன்னும் சற்றுக் குறைக்கலாமே என்று பேரம் பேசுவதாக இருந்தால், 55 என்று முதலில் வைத்து, பிறகு 45 என்று வைத்திருக்கலாம். அப்படியல்ல. செலக்ட் கமிட்டியில் நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுத்திருப்பதால், இந்தத் திருத்தத்தையும் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

[27th February 1963

MR. DEPUTY SPEAKER : The question is—

" In clause 3, for the words " forty-five per centum " *substitute* the words " twenty per centum " and make necessary consequential amendments in the proviso to the clause.'

The amendment was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

' In clause 3, *for* the words " forty-five per centum " *substitute* the words " twenty-five per centum " and make necessary consequential amendments in the proviso to the clause.'

The amendment was put and lost.

The amendment of Sri C. Chiranjeevulu Naidu was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

' In clause 3, in the proviso, *add* the word " and " at the end of item (i) and *for* items (ii) and (iii), *substitute* the following item, namely :—

" (ii) in respect of any compounded double-crop wet land or double-crop wet land, in no case exceed twenty-seven rupees per acre per fasli year ".'

The amendment was put and carried.

Clause 3 as amended was put and carried.

Clause 4.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That Clause 4 do stand part of the Bill ".

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

' In Clause 4 *for* the words " thirty per centum " *substitute* the words " ten per centum " and make necessary consequential amendments in the proviso to the clause.'

The amendment was duly seconded.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment :—

' In item (i) of the proviso to Clause 4, *for* the words, " twelve rupees per acre per fasli year " *substitute* the words " ten rupees per acre per fasli year ".'

The amendment was duly seconded.

27th February 1963]

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move the following amendment :—

' In Clause 4 in the proviso, *add* the word " and " at the end of item (i) and *for* items (ii) and (iii), *substitute* the following item, namely :—

" (ii) in respect of any compound double-crop wet land or double-crop wet land, in no case exceed seventeen rupees per acre per fasli year ".'

MR. DEPUTY SPEAKER : In view of the above Government amendment, I think the amendments to items (ii) and (iii) given notice of by the hon. Member Sri C. Chiranjeevulu Naidu need not be moved.

The clause and the amendments are before the House for discussion.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த நான்காவது பிரிவில் 30 சத விகிதம் என்று விதிக்க இருப்பதை 10 சத விகிதம் என்று குறைக்க வேண்டும் என்பது தான் என்னுடைய திருத்தம். அதிகமான வரிகள் போடப்பட்டிருக்கிற காரணத்தினால் பொறுக்குக் குழுவில் கூட குறைத்திருக்கிறார்கள். ஆகவே மேலும் குறைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சென்ற ஷரத்துக்குப் பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த திருத்தத்தை எங்கள் பக்கத்தில் இருந்து நாங்கள் கொண்டு வருகிறோம் என்பதற்காக எதிர்ப்பதாக இருந்தால் இதே திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்களே கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்ற என்னுடைய கருத்தை வலியுறுத்தி என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : *கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நானாவது ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். இதற்கு முன் நான் குறிப்பிட்டபடி இதுபற்றி நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்துதான் பொறுக்குக் குழுவில் கனம் நிதி அமைச்சர் அவர்களே சில திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். பொறுக்குக் கமிட்டி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு முடிவுக்கு எல்லாவற்றையும் செய்திருக்கிறோம். அந்த முடிவை மாற்றவேண்டாம், அதில் மாறுதல் தேவையில்லை என்று எதிர்க்கட்சி கொரடாவுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே திருத்தத்தை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

MR. DEPUTY SPEAKER : The question is—

" That in clause 4 *for* the words " thirty per centum " *substitute* the words " ten per centum " and make necessary consequential amendments in the proviso to the clause.'

The amendment was put and lost.

The amendment of Sri C. Chiranjeevulu Naidu was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

'In clause 4, in the proviso, *add* the word " and " at the end of item (i) and *for* items (ii) and (iii), *substitute* the following item, namely :—

" (ii) in respect of any compounded double-crop wet land or double-crop wet land, in no case exceed seventeen rupees per acre per fasli year ".'

The amendment was put and carried.

Clause 4 as amended was put and carried.

Clause 5.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That Clause 5 do stand part of the Bill."

SRI A. P. DHARMALINGAM : Sir, I move the following amendment :—

(i) In item (i) of sub-clause (1) of Clause 5, *for* the word " Seventy-five " *substitute* the word " fifty ".

(ii) In item (ii) of sub-clause (1) of Clause 5 *for* the words " Thitry-seven and a half " *substitute* the word " Twenty-five."

SRI M. P. VADIVELU : I second the amendment.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move the following amendment :—

In sub-clause (1) of Clause 5,

(i) *for* the first proviso, *substitute* the following proviso, namely :—

" Provided that in respect of any land registered as dry or manavari in the revenue accounts of the Government and

(i) cultivated with one crop only, the aggregate of—

(*a*) the land revenue;

(*b*) the water-cess for such crop; and

(*c*) the additional water-cess thereon under this sub-section,

shall in no case exceed fifteen rupees per acre per fasli year.

(ii) cultivated with more than one crop, the person concerned shall be liable to pay—

(*a*) for the first crop, the aggregate of—

(1) the land revenue;

(2) the water-cess for such crop; and

(3) the additional water-cess thereon under this sub-section,

subject to a maximum of fifteen rupees per acre per fasli year; and

(*b*) for the second and subsequent crop, the water-cess for such second and subsequent crop together with the additional water-cess thereon under this subsection,

(ii) in the second proviso, *for* the words " in the case of " *substitute* the words " in respect of ".

MR. DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU : This Clause deals with levy and collection of additional water-cess. There are certain dry lands which could be commanded by tank water. In such cases where water is taken without the consent of the revenue authorities there should be penal charges. Such a provision was there in zamin areas. Previous permission of the zamindar was taken before taking water. What I say is, when water is taken or baled out depriving the wet ayacutdar, penal charges should be levied and it should be 200 per cent of the water cess. It might be compounded to ten times, when the wet ayacutdar is deprived of water. Government might look into this aspect of the matter.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திரு. சிரஞ்சீவுலு அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம் சர்க்காருடைய முன் அனுமதி இல்லாமல் புஞ்சையை நஞ்சையாகப் பயிரிட்டாலும், ஒருபோக நிலத்தை இருபோகமாக்கினாலும் ஏராளமாகத் தண்டத் தீர்வை விதிக்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. காரணம் சில பகுதிகளில் நான்கு புறமும் இருபோக நிலம் இருக்கும். நடுவில் ஒருபோக நிலம் இருக்கும். தண்ணீர் இதற்குப் பாய்ச்சவேண்டும் என்பது இல்லாமலே கசிவு இருந்து பயிர் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். இது தவிர்க்க முடியாதது. குறிப்பாக எங்கள் ஜில்லாவில் இந்த நிலைமை சர்வசாதாரணமாக ஏற்படும். முன் அனுமதி அரசாங்கத்திடமிருந்து பெறவில்லை அல்லது அவர்கள் கொடுக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அளவுக்குமீறி தண்டத்தீர்வை விதிக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்து. அந்த அளவுக்கு அவ்வளவு அதிகமாகப் போடுவது என்பது முறையானதாக இருக்காது. சமீபத்தில்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [27th February 1963

கூட சர்க்கார் இதைப் பற்றியெல்லாம் பரிசிலனை செய்து 'அன் ஆதரைஸ்டு கல்டிவேஷன்' இருக்கும் இடங்களில் கூட, தாட்சண்யத்துடனும் கருணையோடும் கவனிக்கவேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, திரு. சிரஞ்சீவுலு அவர்கள் கூறிய கருத்தை ஏற்று அரசாங்கம் அதிகத் தீர்வை விதிக்கும் நிலைக்குப் போய்விடக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. வெ. ராமையயா : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவிலே இரண்டு அங்கத்தினர்கள் பேசினார்கள். அவர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்கும் இந்தப் பிரிவுக்கும் சம்பந்தமே இல்லை. கனம் சிரஞ்சீவுலு அவர்கள் பேசத் தொடங்கும்போதே, 'இந்தப் பிரிவுக்கும் நான் கொடுத்திருக்கும் திருத்தத்துக்கும் சம்பந்தம் இல்லை' என்று சொன்னார்கள். இருந்தாலும் தன்னுடைய மனதிலே ஓடக் கூடிய கருத்தைச் சொல்லி விடவேண்டுமென்பதற்காக 'அன் ஆதரைஸ்டு யூசேஜ் ஆப் வாட்டர்' இருந்தால் அதிகமாகப் பீனல் தீர்வை 20, 30, 100 மடங்குகூட இருக்கலாம் என்று கூறினார்கள். கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஜில்லாவில் இருக்கக் கூடிய கஷ்டத்தைச் சொன்னார்கள். அவர்களுடைய ஜில்லாவைப் பொறுத்தவரை இந்தப் பீனல் லெவி 20 மடங்கு வரை போடப்பட்டது. ஆனால் அங்கிருக்கக் கூடிய கஷ்டங்களை உணர்ந்து, அரசாங்கம் அதை ஒரே சராசரியாக இரண்டு மடங்காக ஆக்கிவிட்டது. எங்கே இப்போது கனம் சிரஞ்சீவிலு அவர்கள் கருத்தை ஏற்று மறுபடியும் 20 மடங்காக ஆக்கி விடுவார்களோ என்ற நினைப்பு கனம் செல்வராஜ் அவர்களுக்கு இப்போது ஏற்பட்டு விட்டது. அதற்கும் இந்தப் பிரிவுக்கும் சம்பந்தம் இல்லை. அது தனியாகப் பரிசிலனை செய்யவேண்டிய விஷயம். இதில், மானாவாரி அல்லது புஞ்சை நிலத்திற்குத் தண்ணீர் வரி தனியாகப் போட்டு அதற்கு 15 ரூபாய் என்று உச்ச வரம்பு நிர்ணயித்திருக்கிறோம். ஒரு சாகுபடிக்கு 15 ரூபாய். அது இரண்டாவது, மூன்றாவது சாகுபடிக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக என்று அதை இணைத்துவிடக் கூடாது என்பதற்கு விளக்கம் சொல்லக் கூடிய முறையிலேதான் இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

Mr DEPUTY SPEAKER : The question is—

(i) In item (i) of sub-clause (1) of Clause 5, *for* the word " Seventy-five " *substitute* the word" fifty."

(ii) 'In item (ii) sub-clause (1) of Clause 5, *for* the words " Thirty-seven and a half " *substitute* the word " Twenty-five."

The amendment was put and lost.

Mr. DEPUTY SPEAKER : The question is—

' In sub-clause (1) of clause 5,

27th February 1963] [Mr. Deputy Speaker.]

(i) *for* the first proviso, *substitute* the following proviso, namely :—

" Provided that in respect of any land registered as dry or manavari in the revenue accounts of the Government and—

(i) cultivated with one crop only, the aggregate of—

(*a*) the land revenue;

(*b*) the water-cess for such crop; and

(*c*) the additional water-cess thereon under this sub-section,

shall in no case exceed fifteen rupees per acre per fasli year;

(ii) culvated with come than one crop, the person concerned shall be liable to pay—

(*a*) for the first crop, the aggregate of—

(1) the land revenue;

(2) the water-cess for such crop; and

(3) the additional water-cess thereon under this sub-section,

subject to a maximum of fifteen rupees per acre for fasli year; and

(*b*) for the second and subsequent crop, the water-cess for such second and subsequent crop together with the additional water-cess theron under this sub-section;";

(ii) in the second proviso, for the words " in the case of ", *substitute* the words " in respect of ".

The amendment was put and carried.

Clause 5 as amended was put and carried.

Clause 6.

Mr. DEPUTY SPEAKER : The question is—

" That clause 6 do stand part of the Bill."

Sri S. MADHAVAN : Sir, I move—

In clause 6, line, 4, *for* the word ' is ' *substitute* the word are ' and in line 6, *for* the word ' only ' *substitute* the word ' either '.

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER :—The clause and the amendment are before the House for discussion.

* SRI S. MADHAVAN : Sir, at the outset. I have to say that the amendments are formal. In clause 6 it has been stated notwithstanding anything contained in sections 3 to 5, where in respect of the same land, both the additional assessment and additional water-cess ' is' leviable. I think the word ' is ' should be changed and substituted with the word ' are '. Because we are levying first, additional assessment on basic land revenue, and secondly, additional water-cess according to 1865 Irrigation Cess Act. So both the levies are going to be levied under this Act. Therefore, it is better to substitute the word ' are ' in the place of the word ' is '.

With regard to the second part of my amendment, I desire to state that to a particular land on which both assessments are leviable, then the landowner should be made to pay only one kind of assessment, that is, either basic land revenue assessment or the additional water-cess under the Madras Irrigation Cess Act, 1865. The purpose of this Section is that the landholder must be made to pay under Section 3 or 4 or 5. Therefore the word ' only ' should be changed and the proper word ' either ' may be substituted. The landholder concerned shall be liable to pay in respect of that land either the additional assessment or the additional water-cess. So I think the words ' either ' ' or ' would be more appropriate. With these words, I request the House to accept my amendment

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திரு. மாதவன் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள் வெகு கூர்மையாகக் கவனித்து வார்த்தைகளில் ஏற்பட்ட பிழையினை எடுத்துச் சொன்னதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதல் பகுதியைப் பொறுத்தவரை அந்த வார்த்தை 'are' என்று நான் இருக்கவேண்டும். இரண்டாவது பகுதியிலே. only the amount of additional assessment or the amount of additional water-cess, whichever amount is higher 'either or' என்பது என்பது சரியாகத்தான் இருக்கிறது. சாதாரணமாக ஆங்கில பாஷையில் உபயோகிக்கும் பதங்கள். சட்டப்படி உபயோகிக்கும்போது, 'எந்தத் தொகை கட்ட வேண்டுமோ, அந்தத் தொகைதான்' என்று சொல்வதற்காக only the amount of additional assessment or the amount of additional water-cess whichever is higher'

—அதைத்தான் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. திரு. மாதவனுடைய இரண்டாவது திருத்தம் அவசியம் இல்லை. அவருடைய முதல் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறிக் கொள்கிறேன்.

SRI A. P. DHARMALINGAM : Sir, I move—

The existing clause be numbered as sub-clause (1) and *add* the following as sub-clause (2) :

"Notwithstanding anything contained in Sections 3 to 5 a landholder owning 5 acres and less of land including wet or dry or manavari shall not be liable to pay any additional assessment or additional water-cess."

The amendment was duly seconded.

* திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் துணைத் தலைவர் அவர்களே, ஆறுவது விதியில் ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக நிலம் உள்ள 4-00 p.m.
வர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற என் திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன். காலையில் பொது விவாதத்தில் குறிப்பிட்டதுபோல் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத அளவிற்கு மிக மிக மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதை நிச்சயமாக அனைவரும் உணர்ந்திருப்பர். காலையில் நான் குறிப்பிட்டதுபோல் சர்க்கார் உச்ச வரம்பு கட்ட வருகிற போதுகூட முப்பது ஏக்கர் இருந்தால்தான் ஒரு குடும்பம் வாழ முடியும் என்று உச்ச வரம்பு கட்டிவிட்டு ஐந்து ஏக்கர் வைத்திருக்கும் விவசாயிக்கு மேலும் இந்த வரி விதிக்கப்படுவதால் மிகவும் மோசமான நிலைதான் ஏற்படும் என்ற காரணத்தினால்தான் நான் இதை வலியுறுத்துகிறேன். பொதுவாக ஓதுவார் எல்லாம் உழவன் தலைக் கடைக்கே என்று இருந்ததுபோக இன்று உழவன் எல்லாம் ஓதுவார் தலைக் கடைக்கே என்று இருப்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று கிராமத்திற்கு சென்று ஒரு விவசாயியைப் பார்த்து நேற்று நீ எங்கு சென்றிருந்தாய் என்றுகேட்டால் கடன் கொடுக்கிற தாசில்தாரைப் பார்த்துக் கடன் வாங்கப் போயிருந்தேன் என்பான். அவரைப் பார்க்க முடியாமல் திரும்பினேன் என்ற நிலை இருக்கும். சரி இன்று எங்கே போகிறாய் என்றால் உழவு மாட்டுக்குக் கடன் கொடுக்கும் தாசில்தாரைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லும் நிலைதான் இன்று கிராமத்தில் இருக்கிறது. இருக்கும் ஐந்து ஏக்கர் நிலத்தை ஈடு வைத்து பணம் வாங்க முடியாத நிலையில் இருக்கிறான் விவசாயி. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம் மூவாசைகளை விட்டு விட வேண்டும் என்று பிரசாரம் செய்தபோதிலும் உழவன் தன் குடும்ப ஆசையை விட முடியாமல் தவிக்கிறான். ஆக விவசாயிகள் நல்ல முறையில் தங்கள் குடும்பத்தை நடத்த, இருக்கிற மாடு கன்றுகளை விற்காமல் இருக்க வேண்டுமென்றால் ஐந்து ஏக்கர் உள்ளவர்களுக்கு இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஐந்து ஏக்கர் உள்ள விவசாயியை மிராசுதார் என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். கல்யாணப் பத்திரிகையில் வேண்டுமானால் மிராசுதார் என்று போட்டுக் கொள்ளலாமே தவிர அவர்களுக்குள்ள கடன் எவ்வளவு என்று யாராலும் சொல்ல முடியாது. மற்ற அத்தனையையும்

ஒத்துக் கொள்ளாவிட்டாலும் தயவு செய்து ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களை மிராசுதாரர்கள் என்று கருதாமல் சாதாரணக் குடியானவர்கள் என்று கருதி இந்த விதிவிலக்கு அளிக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று கருதி ஆளும் கட்சியினர் இதற்கு ஆதரவு அளிப்பார்கள் என உறுதியாக நம்பி இதை வற்புறுத்துகிறேன்.

*** திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உலகத்தையே தாங்குகிறவர்கள் உழவர்கள் என்று அறிஞர் உலகம் நன்றாக வாழ்த்துகிறது. அந்த நேரத்தில் இப்போது நிலப் பேருடைமையை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு எதைச் செய்தாலும் நமக்கு அக்கறையில்லை. கிட்டதட்ட அது இல்லாத நிலைக்கு கொண்டு வந்து விட்டோம். இப்பொழுது ஏதோ உழலாம், விளைக்கலாம் என்ற உணர்ச்சி தளர்த்தப்பெற்று வருகிற நிலையை நாம் காண்கிறோம். காரணம், அடிப்படை வரி முறை என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை அல்லது மறுத்து விடுவதற்கில்லை. இப்பொழுது எல்லாப் பண்டங்களின் விலைகளும் தலை தெறிக்க ஏறிக் கொண்டிருக்கின்றன. ஆனால் நெல் விலை மட்டும் இறங்கிக் கொண்டிருக்கிறது. நாம் விருப்பு வெறுப்பு இன்றி சிந்திக்கவேண்டும். இன்று நெல் விலை கலம் ஒன்று 17 ரூபாய்க்கு வாங்கலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மூட்டைக்கு என்று சொல்லுங்கள்.

திரு. சா. கணேசன் : இல்லை, 54 படி கொண்ட கலத்துக்குத் தான். இந்த நிலை நல்லதா என்று சிந்திக்க வேண்டும். நான் முன்பே இந்த சபை முன்பு வேண்டிக்கொண்டிருக்கிறேன். நெல் விலையின் அடிப்படையில்தான் மற்ற எல்லாவற்றின் விலைகளும் அமையும்படியாகக் கணிக்கவேண்டுமென்று, கவனிக்க வேண்டுமென்றெல்லாம் கூறியிருக்கிறேன். இப்போது இருக்கிற நிலைகளை, போக்குகளைப் பார்த்தால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ரூபாய் கட்டிக் கொண்டிருந்தவர்கள் இனி 2½ ரூபாய் (அதாவது இரண்டரை மடங்கு) கட்டும் நிலை வரும். ஆளும் கட்சியில் இருப்பவர்கள், "ஆட்சியாளர்கள் அதை விதிக்கவில்லை, பஞ்சாயத்துகள் போன்றவைகள் விதிக்கின்றன" என்று சொல்லலாம். அதைப் பற்றி விவசாயி அக்கறைப் பட மாட்டான். தன் சுமை எவ்வளவு இருக்கிறது என்று அவனுக்குத் தெரியுமே தவிர, யாரால் இது போடப்படுகின்றது என்பதைப் பற்றி அவன் எண்ணிப் பார்க்க மாட்டான். யாரால் இது போடப்படுகின்றது என்று ஆராய்ந்து பார்த்துப் பின்னர் தன் துன்பங்களை எண்ணிப் பார்க்கும் திராணியை உழவன் பெற்றிருக்கவில்லை. அதற்கு மேலே 70 லட்சம் ரூபாய்தான் உபரி வருமானம் எதிர்பார்க்கப் படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த 70 லட்சம் ரூபாய் வந்துதானா அரசாங்கப் பட்ஜெட்டைத் தாங்கப் போகிறது? இதை விட்டுக் கொடுப்பதன் மூலம் உழவர்களின்

திருப்தியையும் வாழ்த்துகளையும் இந்த அரசாங்கம் பெற மாட்டாதா? இதை வேண்டாமென்று மறுத்து விடுவதால் ஆட்சிக்கு சிரமம் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பல ஆண்டுகளுக்கு முன்னர் நில வருமானம் மொத்த வருமானத்தின் 50 சத விகிதம் இருந்தது, இப்போது எவ்வளவு இறங்கி விட்டது என்று கணக்குச் சொன்னார்கள். ஒரு வகையில் பார்க்கிற கணக்குக்கு இது பொருந்துமே தவிர, பொருளாதார அடிப்படையில் சிந்திக்கிறபோது இந்தக் கணக்கு ஒவ்வாது என்பதை பொருளாதாரத் துறையில் அடி நிலையில் உள்ள என்னைப் போன்றவர்கள்கூட உணர முடியும். அந்தக் காலத்தில் ஆட்சி நடத்த மொத்தத்தில் என்ன செலவாயிற்று? இப்போது எவ்வளவு செலவாகிறது? அந்தக் காலத்தில் எத்தனை அதிகாரிகள் இருந்தார்கள்? அந்தக் காலத்தில் இந்த ஆட்சியை நடத்தியவர்கள் செலவு, தொகை எவ்வளவு? இந்தக் காலத்தில் எவ்வளவு? ஆக நில வருமானத்தின் சதமானத்தை மட்டும் கணிக்கக்கூடாது. அந்தக் காலத்தில் நிலத்திற்கு எவ்வளவு செலவாயிற்று? இப்போது எவ்வளவு செலவாகிறது? அப்பொழுது இருந்த மொத்தச் செலவு என்ன? இப்பொழுதுள்ள மொத்தச் செலவு என்ன? அன்று மொத்த வருமானத்தின் 50 சத விகிதம் நில வரி இருந்தது என்று இப்போதும் அப்படியே விதிக்க வேண்டுமென்றால் எல்லா நிலத்தையும் விற்றால்கூடக் கட்ட முடியாது. இதை நாம் மறந்து விடக்கூடாது. நில வரியை நீக்கி விடுவது என்பது தனிப் பிரச்னை; அதைப் பற்றி இப்போது நாம் யோசிக்கவில்லை, உறுப்பினர் ஒருவர் "காங்கிரஸ் மகாசபையின் திட்டத்தில் நில வரியை எடுத்து விடுவது என்றெல்லாம் இருந்ததே?" என்று கூறியதற்கு, "அது வேறு; அது தேவையில்லை என்று சொல்லவில்லை; அது பெரிய விஷயம் நன்கு சிந்தித்துச் செயல் பட வேண்டும்;" என்று கனம் அமைச்சர் ராமையா அவர்கள் சொன்னார்கள். அதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அதற்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன். நிலத் தீர்வையை எடுக்க வேண்டுமென்று சிந்திக்க வேண்டுவது அவசியம். அது பெரிய விஷயம். அதுகுறித்து நன்கு சிந்திக்க வேண்டுமென்று உணர்ந்து இருக்கிற நேரத்தில் கூடுதல் வரி விதிப்பது நியாயமா? அதைத்தான் நான் கேட்கிறேன். நிலத்தீர்வையே இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படை தத்துவத்தை, கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையில், இதை அடியோடு எடுத்துவிடுவது இப்போது முடியாவிட்டாலும், கூடுதல் வரி போடுவது சரியா என்பதை நாம் பார்க்கவேண்டும். இப்போது அடியோடு எடுத்து விடுவது முடியாது, இதை யோசித்துத்தான் செய்யவேண்டும் என்று சொல்லும்போது, மேற்கொண்டு கூட்டிக்கொண்டு போவது நியாயம்தானா என்பதையெல்லாம் நாம் சிந்திக்கவேண்டும். இந்த நிலையில் பார்க்கிற பொழுது, ஐந்து ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று சொல்லுவதில்—நான் எந்தவிதமான கட்சி மனோபாவமும் இல்லாமல் பேசுகிறேன்—குறைந்தபட்சம் ஸ்டாண்டர்ட் ஏக்கர் உள்ளவர்களுக்கு வரியே இருக்கக் கூடாது என்பது தான் எங்கள் கொள்கை. ஆகவே

அதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இப்போதிருக்கிற நிலையில் ஐந்து ஸ்டாண்டர்ட் க்கர் நிலத்திற்கு குறைவாக இருக்கக்கூடியவர்களுக்கு வரியே இருக்கக்கூடாது. பொட்டல்காடாக இருக்கக்கூடிய நிலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மானாவாரியாகவும், வறண்ட பூமியாகவும் எவ்வளவோ நிலங்கள் இருக்கின்றன. ராமனாதபுரத்தில் தெற்கு பாகத்தை எடுத்துக்கொண்டால், பெரும்பாலும் இருக்கின்ற நிலங்களில் எருக்கலைதான் முளைத்திருப்பதைப் பார்க்க முடியும். அப்பேர்ப்பட்ட நிலங்களுக்கு எல்லாம் வரி எதுவுமில்லை என்பதைத் தெளிவாக விளக்கிவிட வேண்டும். ஆகவே ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு குறைவாக வைத்திருக்கின்றவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்பதை—எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்று எடுத்துக் கொள்ளாமல்—இது நியாயம், தர்மம் என எண்ணி இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். மாதவன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கிளாஸ் 6-க்கு கொடுத்திருக்கின்ற திருத்தங்களும், அடுத்தாற்போல் 6-எ என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தமும் ஒரே கருத்தைக் கொண்டுள்ள திருத்தம். ஐந்து ஏக்கர் உடையவர்களுக்கு இந்த வரிவிதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்கிற கருத்தைத்தான் இந்தத் திருத்தங்கள் வலியுறுத்துகின்றன. அமைச்சர் அவர்கள் பேசும்போது எங்கள் தலைவர் அவர்களின் பேச்சைச் சுட்டிக்காண்பித்து ஐந்து ஏக்கர்களுக்கு குறைவாக நிலமுள்ளவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பதற்கும், இந்தச் சட்ட அமைப்புக்கும் பொருந்தாது என்று சொன்னார்கள். அது ஏன் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தச் சட்டம் ஏற்கனவே இருந்து வருகின்ற அஸெஸ்மென்ட்டை அதிகப்படுத்தவேண்டும் என்றும், வாட்டர் செஸ் அதிகப்படுத்தவேண்டும் என்றும்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தங்கள் ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் உள்ளவர்களுக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும் என்பதுதான் சாதாரண விவசாயப் பெருமக்கள் மீது ஏற்கனவே அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்போது கொண்டு வரப்பட இருக்கும் மசோதாவின் மூலமாக, ஏற்கனவே விவசாய உற்பத்திக்காக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் செலவினம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் இப்போதுள்ள நிலைமையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் சுட்டிக்காண்பிக்க ஆசைப்படுகிறேன். ஐந்து ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்கிற திருத்தம் எதிர் கட்சிக்காரர்கள் மட்டும் புதிதாக கொண்டு வரும் திருத்தமல்ல. இதே கருத்தை முன்பே அரசாங்கம் சொல்லியிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்பு

கிறேன். 1950-ல் இந்த அரசாங்கத்தால் நிறுவப்பட்ட "லான்ட் ரெவின்யு ரிபார்ம்ஸ் கமிட்டி" யில் அரசாங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட terms of reference-ல் குறைந்த ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கலாமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் குறைந்த அளவு ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கலாமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. எந்த வழியில் எல்லாம் மாறுதல் செய்யலாம் என்று அந்தக் கமிட்டிக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட "டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்"-ஸில் சொல்லப்பட்டிருப்பது.

"One of the defects urged against the present system is its regressive nature and also its lack of progression. The defect could be remedied by exempting the small holdings."

என அந்த கமிட்டியின் அறிக்கையில் காணப்படுகின்றது.

ஆகவே குறைந்த அளவுள்ள ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம் என்கிற கருத்து அன்றையதினம் அரசாங்கத்திற்கு இருந்திருக்கிறது. ஆகவே இதே கருத்தின் பேரில் இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை, கட்சிக் கண்ணோட்டத் தோடுப் பார்க்காமல், கொஞ்சம் கருணையோடு பார்த்து ஏற்றுக் கொண்டு, ஏழை விவசாய மக்களின் கஷ்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. மு. கருணாநிதி: கனம் உதவித் தலைவர் அவர்களே, இன்று காலையில் துவங்கிய பொதுவிவாதத்தில்கூட இந்தப் பிரச்னைப்பற்றி கருத்துரை வழங்கிய எதிர்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பலரும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும், இந்தத் திருத்தங்களில் காணப்படும் கருத்துக்களை வலியுறுத்தி இந்த மன்றத்தில் எடுத்துவைத்திருக்கின்ற கருத்தினையொட்டி இந்த மசோதாவின் ஆறாவது பிரிவில் கனம் தர்மலிங்கம் அவர்களும், கனம் மாதவன் அவர்களும் கொடுத்திருக்கின்ற திருத்தங்களை ஆதரிக்கின்ற வகையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிப்பதின் காரணமாக இந்த வரியின் மூலம் கிடைக்கும் பெருத்த வருவாய் குறைந்து போய்விடும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அந்தக் கருத்து சரியானது என்றால், அதை எடை போட்டுப் பார்க்கின்ற நேரத்தில் பெரும்பகுதி, அதாவது முக்கால் பகுதி விவசாயிகளும் விதிவிலக்கு பெற வேண்டிய குறைந்த அளவு ஏக்கர் உள்ளவர்கள், இவர்கள்தான் இன்றைக்குத் தாங்க முடியாத அளவுக்கு வரிச்சுமையைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எளிதில் உணரலாம். சிறு நிலச்சுவான்தார்கள் இன்றைய சூழ் நிலையில் எந்த அளவுக்கு வறுமையோடு போராடிக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் கிராமங்களில் எந்தவிதமான ஏழ்மை

நிலைமையில் வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். இவர்களுடைய வாழ்க்கையை வளமாக்குவதற்கு செய்யப்படுகின்ற ஏற்பாடுகள், பார்ப்பதற்குப் பசுமையாக இருந்தாலும், அவைகளை உழவர் பெருங்குடி மக்கள் பெறுவதற்கு என்னென்ன இன்னல்களை அனுபவிக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இந்த மாமன்றத்தில் இல்லாவிட்டாலும், மனமார மந்திரிகள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் தருகின்ற அபிப்பிராயங்களிலிருந்தும், கோரிக்கைகளிலிருந்தும் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள். கடன் தொகை வழங்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்திருந்தாலும் அவர்கள் அதை ஒழுங்காக அனுபவிக்க முடியாத அளவுக்கு இடுக்கண்கள் வந்து சேருகின்றன, அந்த அளவுக்குப் பல இன்னல்களைத் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இத்தனையும் சமாளித்துக்கொண்டு தங்களுடைய கழனிகளில் சென்று விளைவை நடத்தி அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் போராடிக்கொண்டு இருக்கும் விவசாயிகளுக்கு ஓரளவு கருணை காட்டுகின்ற நிலையில், இவர்களுக்கு வரி வேண்டாம் என்று சொல்லுகின்ற திருத்தங்களை—கண்டனமாக அல்ல— ஆத்திரத்தோடு அல்ல—மிக மிக இரக்க சுபாவத்தோடு கவனித்து எதிர்கட்சியினர் கொடுக்கும் திருத்தம் என்று எடுத்துக்கொள்ளாமல், ஆளும் கட்சியிலிருந்தே வேண்டுமென்றால் கொண்டு வந்து நிறைவேற்றலாம். இதே மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போய்வந்த பிறகும் அமைச்சர் அவர்களின் சார்பில் எவ்வளவோ திருத்தங்கள் புற்றீசல்கள் போல் வந்து கொண்டேயிருக்கின்றன. இந்த முறையில் இந்தத் திருத்தத்தையும் உருவாக்கிக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "கேட்டால் கொடுக்கப்படும், தட்டினால் திறக்கப்படும்" என்பது முன்னோர் மொழி. ஆனால் இங்கே நடப்பதைப் பார்த்தால், "கேட்டால் கெடுக்கப்படும், தட்டினால் தடுக்கப்படும்" என்கிற அளவுக்கு இருந்துகொண்டிருக்கிறது. "எறும்பூரக் கல்லும் தேயும்" என்று சொல்வதுண்டு. எதிர்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் எவ்வளவோ உருக உருகப் பேசியும் கனம் அமைச்சர் அவர்களின் மனம் கரையவில்லை. அவ்விதம் கரையாததினால் அமைச்சர் அவர்களின் மனம் கல் மனம் என்று நான் சொல்ல முன்வரவில்லை. கருணை மனத்தோடு தான் இந்தச் செயல்படுத்துவதின்மூலம் கண்ணை மனம் கொண்டவர் என்று புகழ்ப்படவேண்டுமென்று விரும்புகிறேன். பாரத கதையை எல்லோரும் அறிவார்கள். கிருஷ்ண பரமாத்மா துரியோதனாதிகளிடம் சென்று பாண்டவர்களுக்கு ஐந்து நாடு கொடுங்கள் என்று கேட்டாராம், அது மறுக்கப்பட்டது, பின்னால் ஐந்து ஊர் கேட்கப்பட்டது, அது மறுக்கப்பட்ட பின்னால் ஐந்து வீடாவது கொடுங்கள் என்று கேட்கப்பட்டது என்று புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் தங்களைத் துரியோதனர் என்று கூறமாட்டேன்! தூயவர்களே! ஐந்து ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமாவது இந்த வரியி

லிருந்து விதிவிலக்கு கொடுங்கள், அதற்கான திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நில வரியை அதிகப்படுத்துவதுதான் இப்போதுள்ள பிரச்னை. இதற்கு 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்ற இந்தத் திருத்தம் வந்தபோது பொதுவாகவே குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு விலக்கு அளிப்பது, இந்த வரியை எடுத்து விடுவது என்ற பெரிய பிரச்னைகள் இந்த விவாதத்திலே வந்திருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். நில வரியை எடுத்து விடுவதா இல்லையா என்பது ஒரு பிரச்னை தான். ஆனால் ஒன்று உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். விவசாயம்தான் நம்முடைய அடிப்படை, அதுவே நம் அடிப்படையான தொழில். பெரும்பாலான மக்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுதான் நம்முடைய பொருளாதாரத்தின் அடிப்படை என்றும் நான் சொல்லுவேன். ஆகவே, நிலத்தில் உழுது பயிரிடுகிறவர்களுக்கு வரியே இல்லாமல் இருக்க வேண்டும் என்று ஏற்றுக்கொண்டால், முக்கியமான ஒரு அடிப்படைக் கருத்தை ஏற்றுக்கொண்டால் அது நம்முடைய பொருளாதாரத்தைப் பாதிக்கும் விஷயமாகத்தான் இருக்கும். அவ்வாறு ஏற்றுக்கொண்டால், வரியே இல்லாமல் ஆட்சி நடத்த முடியுமா என்ற பிரச்னைதான் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், மதிப்பிட்டுப் பார்த்தால் ரூ. 70 லட்சம் தான் வரும், ஆகவே இதை விதிக்கவேண்டுமா என்று விவசாயிகளுக்கு வரி போடும்போது கோடிக்கணக்கில் இருந்தால்தான் விதிக்கவேண்டும், குறைவாக இருந்தால் வேண்டாம் என்ற முறையில் சொன்னார்கள். கூடிய வரையில் விவசாயிகளுக்கு பாரத்தை ஏற்படுத்தாமல், அவர்களிடமிருந்தும் எவ்வளவு வசூலிக்கலாமோ அவ்வளவு வசூலித்து மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பொறுக்குக் கமிட்டியில்கூட தாராளமாகச் சலுகைகளை அளித்திருக்கிறோம். வரக் கூடிய வருவாய் ஒரு கோடி ரூபாயாக இருந்தாலும், 80 லட்சமாக இருந்தாலும், 70 லட்சமே இருந்தாலும், இதைக்கூட எடுத்து விடவேண்டுமென்று சொல்லுவது நியாயமா என்று கனம் அங்கத்தினர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏதோ எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள், அதற்காக மறுக்கவேண்டும் என்ற போக்கு இல்லை என்பதை உணர்வார்கள். கடைசியாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக எதிர்க் கட்சி உப தலைவர் அவர்களும் உணர்வார்கள். எதிர் கட்சியில் இருந்து வந்தால் மறுப்பது, எங்கள் கட்சியிலிருந்து வந்தால் ஏற்றுக்கொள்வது என்ற போக்கும் இந்த ஆட்சியாளர்களைப் பொறுத்த மட்டில் இல்லை என்பதை உணர்வார்கள்.

[திரு. எம். பக்தவத்சலம்] [27th February 1963

கனம் உறுப்பினர் மாதவன் அவர்கள் ஏதோ நிலச் சீர்திருத்தக் கமிட்டி சிபாரிசு என்று குறிப்பிட்டார்கள். அது என்ன சிபாரிசு என்று எனக்குச் சரியாக நினைவில்லை. இருந்தபோதிலும் அது இந்த அரசாங்கத்தின் கமிட்டி இல்லை. இந்த மன்றத்தின் கமிட்டி கூட இல்லை. எனக்கு நினைவு இருக்கிற வரையில் அது காங்கிரஸ் கமிட்டியார் அமைத்த ஒரு கமிட்டி. அதைத்தான் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது காங்கிரஸ் கமிட்டி அமைத்த ஒரு கமிட்டி—மத்திய காங்கிரஸ் அமைத்த கமிட்டி. அந்தக் கமிட்டியிலே நில வரியைப் பற்றி ரேஷனலைஸ் பண்ணவேண்டும் என்பது முக்கிய சிபாரிசுதானேயொழிய, நில வரியை எடுத்து விடவேண்டும், நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு நில வரி கூடாது என்று அம்மாதிரி சிபாரிசு இருந்ததாக நினைவில்லை.

ஒன்று கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். 5 ஏக்கர் இருக்கக்கூடியவர்களுக்கு—பெரும்பாலும் 5 ஏக்கர் அளவுக்குள் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அதைத்தான் தி.மு.க. உபதலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள்—இப்படி அவர்களுக்கு விதி விலக்குக் கொடுத்தால் வரி வேண்டாம் என்று தான் அர்த்தம். சொந்தமாக நிலம் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு 30 ஏக்கர் என்றும், குத்தகைக்குப் பயிரிடக் கூடியவர்களுக்கு 5 ஏக்கர் என்றும் வைத்திருக்கிறோம். ஆனால் இந்த 5 ஏக்கரோ, ஒரு ஏக்கரோ அல்லது அரை ஏக்கரோ வைத்திருக்கக் கூடியவர்கள் எத்தனை பேர்களானாலும், நிலம் இல்லாதவர்கள் எத்தனை பேர்கள்? அவர்கள் நிலை என்ன ஆவது? அவர்களுக்கும் சேர்த்துத்தானே அத்தனை வசதிகளையும் பெருக்க வேண்டியிருக்கிறது? இன்றைக்குக் கல்வித் துறையை மட்டும் எடுத்துக்கொண்டால் 27 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். 27 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று சொன்னால் நிலம் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு மட்டுமல்ல, நிலம் இல்லாதவர்களுடைய குழந்தைகளும் படிக்க வேண்டும், எல்லோருக்கும் வசதிகளைப் பெருக்கவேண்டும் என்றுதான் செலவு செய்து வருகிறோம். எவ்வளவு குறைந்த நிலம் வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்களாக இருந்தாலும், அவர்கள் குறைந்த அளவுப் பேர்கள் தான். நிலம் இல்லாதவர்கள் தான் பெரும்பாலான பேர்கள் இருக்கிறார்கள். தங்களைவிட ஈன ஸ்திதியில் இருக்கின்றவர்கள் நிலையையொட்டி அவர்கள் உதவி அளிக்க முன் வரவேண்டாமா? அவர்கள் உதவி அளிக்க வேண்டாமா என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். நிலம் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்கள் வரி கொடுக்கிறார்கள். மற்றவர்களும் வேறு வரி கொடுக்கிறார்கள். நாட்டுப் பிரஜைகள் எல்லோரும் ஜனநாயக ஆட்சிக்கு ஒவ்வொருவரும் ஒரு பங்கைச் செலுத்துகிறோம் என்ற உணர்ச்சிதான் உரிமையை உணர்வதாகும். அந்த வகையில் வரி போடுகிறோம் என்றால் எவ்வளவு தாங்கும், எவ்வளவு அவசியம் என்று பார்த்துப் போடுகிறோம்.

27th February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

(கனம் சபாநாயகர் தலைமை)

இந்த விவசாயம் ஓங்க எத்தனையோ சலுகைகள் செய்து வருகிறோம்—அதைப் பற்றிக் கூட தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எத்தனையோ சலுகைகள், எத்தனையோ மானியங்கள், எத்தனையோ வசதியான கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு பக்கத்தில் விவசாயம் சீராக நடைபெறுவதற்கு உரிய வகையில் தாராளமாக அரசாங்கம் உதவிகளை அளித்துக் கொண்டுதான் வருகிறது விவசாயம் நல்ல முறையில் ஓங்க வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் எண்ணம். இவ்வாறு விவசாயம் சீராக நடைபெறும்போது, ஒரு சிறு வரி கொடுக்கும் நிலை விவசாயத்தைப் பாதிக்கும் என்று நினைப்பதுதான் தவறு என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போதுதான் விலைவாசி குறைந்திருக்கிறது. இதற்கு முன்பு ஏறியிருந்தது. விலைவாசி குறைந்திருப்பதால் வரி உயர்வு கூடாது என்று சொல்லும் வாதம் சரியாகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்போதும் இந்தப் பக்கத்தைப் பொறுத்தமட்டில், இந்த ஆட்சியைப் பொறுத்தமட்டில், இந்த ஆட்சியைச் சேர்ந்த கட்சியைப் பொறுத்தமட்டில், விவசாயம் தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்று உணர்ந்திருக்கிறோம். மேலும்மேலும் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும், அவர்கள் குறைவற்ற வாழ்வு வாழவேண்டும் என்று அரசாங்கமும் அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிற கட்சியும் கவனம் கொண்டிருக்கிறது. வரி என்று சொன்னால் எல்லோருக்கும் நியாயமாகப் பல வித வரிகள் போடுகிறோம். அப்படி வரிகளைப் போட்டு நம் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு வருகிறோம், திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். நியாயத்தை அனுசரிக்கவேண்டும். அவரவர்களுக்கு ஏற்றவாறுதான் பங்கிட்டு, தாங்கக் கூடிய அளவுக்கு வரி போடவேண்டும். அப்படிப் பகிர்ந்து கொடுத்து, எந்த அளவுக்கு ஈக்விடபிளாக இருக்கும் என்று பார்த்து, சரி சமமாக, நியாய உணர்ச்சியுடன் வரி போடுவது என்ற முறையை இந்த அரசாங்கம் அனுசரித்து வருகிறது. அந்த வகையிலே தான் முன்பு அயன் வரி இருந்தது அப்போதைக்கப்போது உயர்ந்து வந்திருக்கிறது. இப்போது நாம் செட்டில்மெண்ட்டை நிறுத்தி விட்டோம். இப்போது இந்த ரீ-செட்டில்மெண்டே கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். மக்கள் எல்லோரும் அவரவர்களுக்கு ஏற்றவாறு பாரத்தை ஏந்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை சீர்தூக்கிப் பார்த்து, அதே போன்ற பிராந்தியங்களில், வேறு பிராந்தியங்களில் நில வரி எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று நியாய உணர்ச்சியோடு ஒரு சிலர் ஓரளவுக்குக் கொடுக்கக் கூடும், அது ஒன்றும் அவர்களுக்குச் சுமையாக இருக்காது, ஆகவே மேலும் மேலும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வருவாய் தேடவேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நில வரி உயர்வு மசோதா வந்திருக்கிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [27th February 1963

போறுக்குக் கமிட்டியிலே எவ்வளவு தூரம் சலுகை காட்ட முடியுமோ அவ்வளவு தூரம் காட்டப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்போது 5 ஏக்கர் என்று சொன்னால், வெளியில் அதை மாத்திரம் பார்த்தால் பகட்டாக இருக்கிறது. நாங்கள் கேட்டோம், ஒப்புக் கொள்ளவில்லை, 5 ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர் களுக்குப் பெரிய சலுகை அளிக்கப் பார்த்தோம் என்று சொல்லலாம். ஆனால் விவசாயிகள், 5 ஏக்கர் உள்ளவர்கள், 4 ஏக்கர் உள்ளவர்கள், 3 ஏக்கர் உள்ளவர்கள், 2 ஏக்கர் உள்ளவர்கள், 1 ஏக்கர் உள்ளவர்கள் எல்லோரும் நிலைமையை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றால் அதனால் அந்தச் சிறிய ஏழை விவசாயிகள் நலனில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை என்று கொள்வதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லி முடித்துக் கொள் கிறேன்.

SRI S. MADHAVAN : MR. Speaker, Sir, on a point of personal explanation. I referred in my speech to the Committee formed by this Government—The Land Revenue Reforms Committee of Madras. It was set up by the Government of Madras in Government Order Ms. No. 1376, Revenue, dated 9th May 1950. I did not say that the Committee recommended the exemption of petty landholders. I only said in my speech that one of the terms of reference of this Government to the Committee was that small land-holders could be exempted from land revenue.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கமிட்டி வேறுதான். அது இந்த அரசாங்கம் அமைத்த கமிட்டிதான். 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்' என்று சொன்னால், அவை அரசாங்கத்தின் கருத்து என்று சொல்வது தவறு. பலவிதப் பிரச்னைகளை ஆராய்ந்து பார்த்து அபிப்பிராயம் கூறுங்கள் என்று அரசாங்கம் டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் குறிப்பிட்டு அனுப்பியது. ஆகவே, இந்த அரசாங்கம் அந்த அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறது என்று சொல்வது முறையல்ல.

MR. SPEAKER : I will now put to vote only the first part of the amendment of Sri S. Madhavan.

4-30 p.m.

The question is—

"In Clause 6, line 4, *for* the word 'is' *substitute* the word "are".

The amendment was put and carried.

MR. SPEAKER : I will now put the other part of the amendment of Sri S. Madhavan.

27th February 1963] [Mr. Speaker]

The question is—

In Clause 6, line 6, *for* the word 'only' *substitute* the word 'either'.

The amendment was put and lost.

MR. SPEAKER : The question is—

The existing clause be numbered as sub-clause (1) and *add* the following as sub-clause (2) :

"Nothwithstanding anything contained in Sections 3 to 5, a landholder owning 5 acres and less of land including wet or dry or manavari shall not be liable to pay any additional assessment or additional water-cess."

The amendment was put and declared lost.

A poll was demanded and the House divided thus :—

AYES.

Sri V. R. Nedunchezhiyan
,, M. Karunanidhi
,, K. A. Mathialagan
,, Saw. Ganesan
,, A. P. Dharmalingam
,, K. Mookiah Thevar
,, A. K. Subbiah
,, V. S. S. Mani
,, Kanchi Manimozhiar
,, KR. RM. Kariamanicka Ambalam
,, N. Rajangam
,, K. S. Mani
,, S. Madhavan
,, T. P. Alagamuthu
,, S. Mani
,, A. Thiagarajan
,, P. Murugaiyan
,, V. R. Periannan
,, P. V. Sriramulu
,, M. Kamalanathan
Sri S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. Manickam
,, T. Chinnasamy
,, M. R. Krishnamurthy
,, A. Thangavelu
,, S. Murugaiyan
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
,, K. Thirupathy
,, M. P. Vadivelu
,, R. Nallamuthu
,, N. P. Sengottuvelu
,, S. Arumugham
,, M. V. Karivengadam
,, A. G. Balakrishnan
,, R. Narayanan
,, S. Ramaswamy
,, R. Sampangi

NOES

Sri K. Parthasarathy
,, R. Krishnaswamy Naidu
,, K. S. Abdul Azeez
,, C. M. Ambikapathy
,, L. Anandan
,, S. Angamuthu Naicker
,, A. Appavoo Thevar
,, A. Arumugam
,, V. S. Arunachalam
,, A. M. P. S. Balagangadharan
,, S. Chinna Karuppa Thever
Srimathi A. Krishnaveni
,, B Lakshminarasamma
Kumari D. Sulochana
Sri K. Narayanaswamy Pillai
,, K. P. Palanisamy
,, G. D. Perumal Raju
,, K. Ponniah
,, S. Ponnusamy
,, B. Rajagopal Naidu
,, P. Rajagopal
,, G. Rajaram.

NOES—*cont.*

Hon. Sri M. Bhaktavatsalam
„ Sri P. Kakkan
„ Sri V. Ramaiah
Sri P. Ramachandran
„ S. Chinnayyan
„ A. S. Dhakshinamoorthy Gounder
„ M. Dhandayuthapani
„ V. Ellamma Naidu
„ G. Gomathisankara Dikshidar
„ T. Kadambavana Sundaram
„ T. Karcha Gowder
„ K. M. Krishnaswami
„ R. Krishnaswami Gopalar
„ M. Kulandaiswami Gounder
„ M. P. Muthukaruppannaswamy Gounder.
„ S. Nanjunda Row
Hon. Sri N. Nalla Senapathi Sarkari Manradiar.
„ Sri G. Bhuvarahan
„ Sri S. M. A. Majeed

Sri A. Ramachandra Rayar
„ A. L. Ramakrishna Naidu
„ S. Ramalingam
„ S. Sangili
„ M. S. Selvarajan
„ R. Sengaliappan
„ N. Shanmugasundaram
„ SV. SM. Sivaraman ambalam
„ S. Sivasubramaniam
„ N. Sountharapandian
„ R. Subramaniam
„ K. S. Subramania Gounder
„ N. Subramaniam Chettiar
„ K. B. Palani
„ R. Thangavelu
„ P. Urkavalan
„ A. P. C. Veerabahu.

NEUTRAL

Sri C. Chiranjeevulu Naidu.

AYES: 39 NOES: 58 NEUTRAL: 1

The amendment was lost.

Clause 6 as amended was put and carried.

New Clause 6-A.

SRI S. MADHAVAN : Sir. I move—

That after Clause 6, insert the following clause as new Clause 6-A :—

" 6-A. *Exemption for small landholders.*—Notwithstanding anything contained in this Act, no person shall be liable to pay any additional assessment or additional water-cess under this Act if he holds five or less than five standard acres as defined in the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961)."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The question is—

That after Clause 6, insert the following clause as new Clause 6-A :—

" 6-A. *Exemption for small landholders.*—Notwithstanding anything contained in this Act, no person shall be liable to pay any additional assessment or additional water-cess under this Act

if he holds five or less than five standard acres as defined in the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961)."

The amendment was put and lost.

Clause 7.

MR. SPEAKER : The question is—

" That Clause 7 do stand part of the Bill ".

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment :—

In sub-clause (1) after the words " assess the additional assessment under this Act " *insert* the words " and intimate the ryot concerned within a fortnight the order of the assessment."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The question is—

In sub-clause (1) after the words " assess the additional assessment under this Act " *insert* the words " and intimate the ryot concerned within a fortnight the order of the assessment."

The amendment was put and lost.

Clause 7 was put and carried.

Clause 8

MR. SPEAKER : The question is—

" That Clause 8 do stand part of the Bill ".

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move the following amendment :

In item (ii) of sub-clause (1) *for* the words " to the Collector of the district concerned ", *substitute* the words " to the District Revenue Officer concerned."

The amendment was duly seconded.

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :

In sub-clause (9) of Clause 8, after the words " may in his or its discretion " *add* the words " and the provisions of Section 5 of the Indian Limitation Act, 1908, shall apply to the petitions under sub-clause (1) ".

SRI A. P. DHARMALINGAM : Sir, I second the amendment.

MR. SPEAKER : The Clause and the amendments are before the House for discussion.

[27th February 1963

* SRI C. CHIRANJEEVULU NAIDU : What I say is, now the District Revenue Officer has been appointed in the districts and that for appeal against the order of the Revenue Divisional Officer, the authcrity might be the District Revenue Officer.

* SRI S. MADHAVAN : Sir, Clause 8 refers to appeal against order of assessment under Clause 7. In Clause 8 the appellate authority has been specified. The time within which appeals should be preferred has been given, in the Clause. Of course the Select Committee has decided to extend the period of presenting the appeal from thirty days to sixty days and it has also decided that the appellate officer or authority might in his or its discretion, allow further time not exceeding ninety days. Further to this I have given an amendment suggesting that provisions of Section 5 of the Indian Limitation Act, 1908, shall apply to petitions under sub-clause (1). I am saying this because we are giving this discretion without any principle. Of course we are giving this power to the executive authority and not to any judicial authority. Even in case of Judicial authorities, under the Civil Procedure Code, Order 9, Rule 13, when a decree has been sought to be set aside by the Court, Section 5 of the Indian Limitation Act has been made applicable if there is sufficient cause. The Court has got power under Section 5 of the Limitation Act to excuse the deley. That provision is there in the Civil Procedure Code. So in this case, where judicial authority has not been appointed but only executive authority, the power given under the Civil Procedure Code, viz., applying provisions of Section 5 of the Indian Limitation Act, might be applied to petitions under sub-clause (1). That is the purpose of my amendment. On what grounds the appellate authority can excuse the delay? That principle has not been stated clearly in this Clause. That is why I think my amendment should be accepted. Even in rare cases wherein the poor agriculturist might have sufficient cause for not preferring an appeal in time, provisions of Section 5 of the Indian Limitation Act might apply. That is the purpose of my amendment. With these words I request the House to accept the amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member Sri Madhavan is making a confusion, between judicial proceedings and executive proceedings. Under a judicial proceedings, rights *inter se* between parties is affected and if a Court allows a petition to be presented after the expiry of limitation, it will adversely affect the private rights of another party. Therefore restriction has been introduced in the Civil Procedure Code, that only if there is sufficient cause, the period of limitation can be extended. But here it is an executive act and what we say is the Revenue Divisional Officer or Officer authorised in this behalf could extend the time. This is more liberal than what the hon. Member has pleaded. After what I have said, I am sure the hon. Member will withdraw his amendment.

27th February 1963] [Sri R. Venkataraman]

The amendments were by leave withdrawn.

Clause 8 was put and carried.

Clauses 9 and 10 were put and carried.

Clause 11.

MR. SPEAKER—The question is—

" That clause 11 do stand part of the Bill. "

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, I move—

In sub-clause 1, after the words " Where on account of total or partial failure of crop ", insert the words " either due to failure of rains or due to attack of pets."

SRI SAW. GANESAN : I second the amendment, Sir.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, remissions are given when there is total failure of rains. But when two-anna or four-anna crops are recorded due to attack of pets, no remissions are granted for want of azmoish and other accounts. I therefore request that remission should be granted for failure of crops due to attack of pets also.

The amendment was by leave withdrawn.

Clause 11 was put and carried.

Clauses 12 to 16 were put and carried.

Clause 17.

MR. SPEAKER : The question is—

" That clause 17 do stand part of the Bill."

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

In clause 17, renumber items (iv) and (v) as items (v) and (vi) respectively, and before item (v) as so renumbered, insert the following item, namely :—

"(iv) calculating standard acre under the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961); or ".

MR. SPEAKER: The question is—

In clause 17, renumber items (iv) and (v) as items (v) and (vi) respectively, and before item (v) as so renumbered, insert the following item, namely :—

" (iv) calculating standard acre under the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961); or ".

The amendment was put and carried.

Clause 17 as amended was put and carried.

Clause 18.

MR. SPEAKER: The question is—

" That clause 18 do stand part of the Bill."

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, since the Government have given notice of a similar amendment, I am not moving my amendment.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

In clause 18.—(i) (*a*) *add* the following expression at the commencement, namely :—

" Notwithstanding anything contained in sub-section (2) of section 1 "; and

(*b*) after the word " repealed ", *add* the expression " with effect from the 1st day of July 1961 ";

(ii) after the proviso, *add* the following proviso, namely :—

" Provided further that any amount collected from any person under the Andhra Land Revenue (Additional Wet Assessment) Act, 1956 (Andhra Act XXII of 1956) for the fasli year commencing on the 1st day of July 1961, or on the 1st day of July 1962, shall be adjusted towards the additional assessment or the additional water-cess due from such person under this Act."

MR. SPEAKER: The question is—

In clause 18.—(*a*) *add* the following expression at the commencement, namely :—

" Notwithstanding anything contained in sub-section (2) of section 1 "; and

(*b*) after the word " repealed ", *add* the expression " with effect from the 1st day of July 1961 ";

(ii) after the proviso, *add* the following proviso, namely :—

" Provided further that any amount collected from any person under the Andhra Land Revenue (Additional Wet Assessment) Act, 1956 (Andhra Act XXII of 1956) for the fasli year

commencing on the 1st day of July, 1961, or on the 1st day of July 1962, shall be adjusted towards the additional assessment or the additional water-cess due from such person under this Act."

The amendment was put and carried.

Clause 18 as amended was put and carried.

Clauses 19 to 21 were put and carried.

Schedules I and II were put and carried.

Clause 1.

MR. SPEAKER: The question is—

" That clause 1 do stand part of the Bill."

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, I move—

In sub-clause (2) of clause 1, for the words and figures " 1st day of July 1962 ", substitute the words and figures " 1st day of July 1963 ".

The amendment was duly seconded.

MR. SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, now by this time the bakki japtha would have been prepared by the Karnam and handed over to the Village Headman for collection and collection would also have been made to a certain extent. By the time the Bill becomes Act, by the time it is published and by the time it is communicated to the respective Departments it will take another two or three months. At taluk level, the Tahsildar has to instruct the subordinates to prepare accounts for the additional levy, and the preparation of accounts, clarification of doubts in preparing the same and other things will take some more time and by that time the succeeding fasli will commence. Thus, the Government have to collect additional levy for both the faslis. This would be a great hardship to the agriculturists. In view of this, I request the Government kindly to show some concession and help the ryots by giving effect to this levy from 1st July 1963. With these words, I commend my amendment for the acceptance of the House.

MR. SPEAKER: The question is—

In sub-clause (2) of clause 1, for the words and figures 1st day of July 1962 ", *substitute* the words and figures, "1st day of July 1963 ".

The amendment was put and lost.

Clause 1 was put and carried.

The preamble was put and carried.

[27th February 1963

THE HON. SRI V. RAMAIAH: Sir, I move—

"That the Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L.A. Bill No. 4 of 1963) as amended be passed".

MR. SPEAKER: The question is—

"That the Madras Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 (L.A. Bill No. 4 of 1963) as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed."

VI.—ANNOUNCEMENT.

THE MADRAS HOME GUARD BILL, 1963.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Madras Home Guard Bill, 1963.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I request that this Bill may be taken up to-morrow.

MR. SPEAKER: Yes. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

5 00 p.m. The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

92. *Notification issued with G.O. Ms. No.* 2398, *Public (General-M), dated* 17*th December* 1962 *regarding the use of Tamil as official language in respect of all official communications from certain categories of Government offices in Public Health, Animal Husbandry, Education, Jail and Women's Welfare Departments with effect on and from* 1st *January* 1963. [*Laid on the table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act* XXXIX *of* 1956)].

93 *Notification issued with G.O. Ms. No.* 4162, *Home, dated* 4*th December* 1962 *regarding the collection of quarterly tax at reduced rate in respect of the lorry MDJ* 1623 *belonging to the Salesian Sisters' Society, Auxilium College, Katpadi.* [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931)].

94. *Notification issued with G.O. Ms. No.* 43, *Home, dated* 4*th January* 1963 *regarding the grace time for payment of tax for fourth quarter of* 1962–63 *in respect of stage carriages and public carriers ordinarily kept in this State for the quarter commencing on the first January* 1963. [*Land on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931)].

95. *Notification issued with G.O. Ms. No.* 2814, *Rural Development and Local Administration, dated* 28*th December* 1962 *confirming the draft amendments to the rules regarding Prohibition or Regulation of grant of licences and permissions by panchayats.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

96. *Notification issued with G.O. Ms. No.* 2815, *Rural Development and Local Administration, dated* 28*th December* 1962 *confirming the draft amendments to the rules regarding prohibition or Regulation of grant of licences and permissions by Panchayat Union Councils* [*Land on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958)].

97. *The Regulations framed under the Madras Bhoodan Yagna Act,* 1958. [*Laid on the table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act,* 1958 (*Madras Act XV of* 1958)].

98. *Notification issued with G.O. Ms. No.* 34, *Public (General-M), dated* 7*th January* 1963 *regarding the use of Tamil as official language in respect of all official communications from all the Government offices of the Highways and Rural Works and Local Fund Audit Departments with effect on and from the* 14*th January* 1963. [*Laid on the table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956 (*Madras Act XXXIX of* 1956)].

99. *Notification issued with G.O. P. No.* 4629, *Revenue, dated* 17*th December* 1962 *amending Rule* 49 *of the Madras General Sales Tax Rules* 1959. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959)].

100. *Notification issued with G.O. Ps. No.* 4593, *Revenue, dated* 14*th December* 1962 *exempting with effect on and from the* 1*st October* 1960, *from the tax payable on the purchase of the groundnut or the kernal used for producing oil in country oil chekkus and hand oil presses.* [*Laid on the table of the House under section* 53 (5) *of Madras General Sales Tax Aid* 1959 (*Madras Act,* 1959)].

101. *Notification issued with G.O. Ms. No.* 4618, *Revenue, dated* 17*th December* 1962 *amending the rules published with the Revenue Department notification, dated the* 5*th August* 1949, *at pages* 249–250 *of the Rules Supplement to Part I of the* Fort St. George

Gazette, *dated the* 16*th August* 1949, *in so far as they relate to the appointment of Managers of Estates.* [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948)].

B. Reports, Notifications and other papers.

25. *Notification issued with G.O. Ms. No.* 3457, *Food and Agriculture, dated* 15*th November* 1962 *re-issuing "The Madras Cotton Control Order* 1962" *under the Essential Commodities Act*, 1955 (*Central Act X of* 1955).

26. *Reports on the activities of the Medical and Public Health Departments for the half year ended* 30*th June* 1961 *and of the Sanitary Engineering Branch for the half year ended* 30*th September* 1960.

27. *Notification issued with G.O. Ms. No.* 6039, *Industries, Labour and Co-operation (Labour), dated* 7*th December* 1962 *amending the Madras Employment of Children Rules*, 1939, *as subsequently amended, issued under the Children Act*, 1938 (*Central Act XXVI of* 1938).

28. *Notification issued with G.O. Ms. No.* 6028, *Industries, Labour and Co-operation (Labour), dated* 7*th December* 1962 *amending Schedule II of the Workmen's Compensation Act*, 1923 (*Central Act VIII of* 1923).

29. *Report and Proceedings of the Select Committee on the Madras Additional Assessment and Additional Water-Cess Bill*, 1963 (*L.A. Bill No.* 4 *of* 1963).

* 30. *The Madras Home Guard Bill*, 1963.

---

* Circulated to Members on 25th February 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, 28th February 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

மதுவிலக்கு வழக்குகள் (தஞ்சை மாவட்டம்)

* 83 *கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1962 ஜனவரி முதல் அக்டோபர் முடிய தஞ்சை மாவட்டத்தில் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகள் எத்தனை?

கனம் திரு. பூ. கக்கன்: *5,283.*

திரு. ஆ. கு. சுப்பையா: *5,283 வழக்குகளில் எத்தனை வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டது? எத்தனை வழக்குகளில் குற்றமில்லையென்று சொல்லி விடுதலை அளிக்கப்பட்டது?*

கனம் திரு. பூ. கக்கன்: *அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.*

Manapparai Panchayat

* 84 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any enquire has been held into the affairs of the Manapparai Panchayat; and

(*b*) if so, the findings thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Yes; Sir. The matter is under investigation.

திரு. து. ப. அழகமுத்து: *இதைப்போன்ற வழக்குகள் வேறே ஏதேனும் உண்டா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும்.*

திரு. ஆர். நாராயணன்: *கனம் தலைவர் அவர்களே பஞ்சாயத்தின் அலுவல்கள் குறித்து விசாரணை செய்யவும், விசாரணையின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கவும் வீண் காலதாமதம் ஏற்படுகிற தென்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததுண்டா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *பொதுவாகக் கேட்டால் விடை அளிக்க முடியாது. ஆனால் இந்தக் கேஸைப் பொறுத்தமட்டில் போலீஸ் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஒரு அதிகாரி*

சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். குற்றம் ருசுவாக இடமிருந்தால் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க போலீசார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

கிர்—சிங்கங்கள்

* 85 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகக் காட்டில், கிர் (Gir) பிரதேசத்திலிருந்து கொண்டு வந்த சிங்கங்களை வளர்ப்பதாக முடிவு செய்யப்பட்டதா?

(இ) எவ்வளவு சிங்கங்களை வளர்க்க உத்தேசம்?

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) & (இ) நாட்டில் நிலவிவரும் நெருக்கடியின் காரணமாக, இந்த திட்டத்தை நிறுத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

Rajaji Reservoir

* 86 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there was any proposal to construct a reservoir by name Rajaji Reservoir near Pottappatti, Melur taluk, Madurai district across the Palar river; and

(*b*) the estimated cost therefor?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The proposal to construct a reservoir near Pottappatti was examined and found to be not feasible, in view of the meagre supply available.

திரு. எஸ். மாதவன்: கனம் தலைவர் அவர்களே, 1952-ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது. பாலாற்றுப் பிரதேசம் முழுவதுக்கும் அது பயன்படுமாதலால் அதை மீண்டும் பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்போதுள்ள நிலைமையில் அதைப் பரிசீலனை செய்து அதனால் கிடைக்கக்கூடிய பலனைவிடச் செலவு அதிகமாகவே இருக்கும் என்பதால் அது கைவிடப்பட்டது. கைவிடப்பட்டது என்ற காரணத்தினால் மீண்டும் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளப்படாது என்று சொல்வதற்கில்லை. அதனால் அதிகப் பயன்பெற வசதி ஏற்படும் என்றால் மீண்டும் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர்: தண்ணீர் இல்லாத ஆற்றுக்குப் போடப்படும் திட்டத்திற்கு ராஜாஜி நீர்த்தேக்கம் எனப் பெயர் வைக்கக் காரணம் என்ன?

(பதில் இல்லை.)

திரு. டி. கார்ச்சா கவுடர்: இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதாக இருந்தால் ராஜாஜி நீர்த்தேக்கம் என்ற பெயரை மாற்றி "காமராஜ் நீர்த்தேக்கம்" என்று பெயர் வைப்பார்களா?

(பதில் இல்லை.)

விளம்பரங்களில் ஜாதி, மதப் பெயர்கள்

* 87 கேள்வி.—திரு முனு ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொதுவாக உள்ள கடை விளம்பரங்களிலிருந்து ஜாதி, மதப் பெயர்களை நீக்குமாறு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இதனால் இன்னும் வகுப்புவாதம், சாதி பேதம் உருவாகிவரும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அதைத் தடுக்க உருவான முறையில் சட்டம் கொண்டுவர முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவரவர்கள் வைக்கிற கடைகளுக்கு அவரவர்கள் இஷ்டப்படி பெயர் வைத்துக்கொள்கிறார்கள். இப்படித்தான் பெயர் வைக்கவேண்டுமென்று கட்டுப்படுத்துவது முறை அல்ல.

திரு. இரா. நல்லமுத்து: சில ஊர்களுக்கு சாதியின் பெயர்களை வைக்கிறார்களே, அதை மாற்ற அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுஸ்தாபனங்களுக்கு சாதியின் பெயரை வைப்பதாக இருந்தால் அதை இப்போது அரசாங்கம் அனுமதிப்பது இல்லை.

Ex-District Board, Salem

* 88 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have taken possession of the immovable properties such as buildings of the Ex-District Board, Salem;

(*b*) if so, the number of buildings that have been taken over by the Government in the North Salem district and the value of the buildings;

(*c*) whether the Government have to clear any liabilities of the Ex-District Board in North Salem district; and

(*d*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKATAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) (i) Thirteen.

(ii) Rs. 1,09,357.

(*c*) Yes.

(d) Details for North Salem district alone cannot be furnished as accounts are maintained for the district as a whole and not separately for North Salem and South Salem.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஜில்லா போர்டு சொத்துகளில் ஏதாவது மீதி ஏற்பட்டால் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பகிர்ந்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மீதி ஏற்பட்டால் அவ்வாறு பகிர்ந்து கொடுக்கப்படும். ஆனால் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பாக்கி அதிகமாக இருக்கிறது. முதலில் வெளியாருக்குக் கொடுக்க வேண்டிய கடன்கள் கொடுக்கப்படுகிறது. அரசாங்கமும் அதற்கு நிதி உதவுகிறது. அதை வைத்து வெளியாருக்குக் கொடுக்கும் கடன் தீர்க்கப்பட்டு வருகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU: When do the Government propose to appoint District Educational Officers to control Secondary Education which was hitherto under the control of the District Boards?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Orders will be issued shortly.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: சேலம் ஜில்லா போர்டு எவ்வளவு கடன் தொகை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென்பதை அறிய முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

மாவட்டக் கழகம் (செங்கற்பட்டு)

** 89 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

செங்கற்பட்டு மாவட்டக் கழகம் கலைக்கப்படும்பொழுது அதன் நிதிநிலை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

	RS.	NP.
(a) Total assets inclusive of the book value of the buildings of the defunct district board	29,23,004	24
(b) Total liabilities inclusive of the liabilities due to Government ..	35,20,879	00

ஆதாரப்பள்ளிகள்

** 90 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1962 ஜூன் மாதத் துவக்கத்தில், தமிழ் நாட்டில் எத்தனை ஆதார ஆரம்பப் பாடசாலைகளும், ஆதார ஆசிரியர்ப் பயிற்சிப் பள்ளிகளும் இருந்தன?

(இ) 1962 ஜூன் மாதத்திற்குப் பிறகு புதியதாகத் திறக்கப்பட்ட ஆதாரப்பள்ளிகள் எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM:

(a) Basic schools 4,360

Basic training schools 123

(b) 5.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே அதை மாவட்ட வாரியாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? அப்படி இல்லையென்றால் இப்போது யூனியனில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பள்ளிகளுக்கு ஆசிரியர் இல்லாமல் இருப்பதனால் இன்னும் துரிதமாக அதிகமான பள்ளிகளை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மாவட்ட வாரியான விவரம் என்னிடம் இல்லை. இப்போது ஆதாரப் பள்ளி எவ்வாறு நடைபெற்று வருகிறது என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. அதுபற்றிய ஒரு அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவாகும் வரையில் புதிதாக ஆதாரப் பள்ளிகளை ஆரம்பிப்பது இல்லை என்று முடிவாகியிருக்கிறது.

Area Committees

* 91 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to form Area Committees for the Hindu Religious and Charitable Endowment Boards in each district; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The period of office of the existing members of the Area Committees who were appointed with effect from 1st April 1960 expires only on 31st March 1963. The Government will be taking action to appoint new members at an early date.

SRI C. CHIRANJEEVULU NAIDU: What is the procedure adopted in appointing trustees to the temples? Are the Area Committees consulted in the appointment of trustees of the temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I shall refer the hon. Member to the provisions of the Hindu Religious Endowments Act.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: தற்போது இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு கமிட்டி இருப்பதைமாற்றி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கமிட்டி என்று ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அநேகமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கமிட்டி இருக்கிறது. சிற்சில மாவட்டங்கள்தான் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கின்றன.

[28th February 1963

Primary Health Centres

* 92 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint lady doctors in all the Primary Health Centres in the Panchayat Union Council areas; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (*a*) இல்லை. (*b*) எழாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ப்ரைமரி சுகாதார நிலையங்களில் உள்ள டாக்டர்கள் பிற்பகல் நேரங்களில் வெளியில் சென்று விடுவதனால் சென்டர்களில் டாக்டர் உதவி கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே மேல் (male) டாக்டர்களையாவது அதிகமாக நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வாரத்தில் 3 நாட்களுக்கு அந்த டாக்டர்கள் சப் சென்டர்களுக்குப் போவதனால் மாலை நேரத்தில் அவர்கள் சர்விஸ் ஹெல்த் செண்டரில் கிடைப்பது இல்லை.

திரு. எஸ். மாதவன்: அதிகாரிகளை லேடி டாக்டர்கள் போடும்படி கேட்டால் நீங்கள் பார்த்துத் தாருங்கள் என்று சொல்லுகிறார்கள். காரணம் லேடி டாக்டர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே பெண்களுக்கு என்று மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: லேடி டாக்டர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. அதற்காக பெண்களுக்கு என்று தனியாகக் கல்லூரி ஏற்படுத்துவது இயலாத காரியம்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சார், லேடி டாக்டர்களுக்குக் கிராக்கி வர வர அதிகமாக ஏற்பட்டு வருவதால், இந்த ஆண்டு மெடிகல் காலேஜில் பெண்களை அதிகமாகச் சேர்க்க கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மெடிகல் காலேஜில் பெண்களுக்காக ஏற்கனவே 20% ஒதுக்கியிருக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் இருக்கக்கூடிய பிரைமரி ஹெல்த் செண்டர்களில் பிரசவக் கேஸ்கள் அதிகமாக வரும் காரணத்தால் இனிமேலாவது அங்கெல்லாம் லேடி டாக்டர்களைப் போட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் சபாநாயகர்: லேடி டாக்டர்கள் இல்லையே என்று சங்கடப்படுகிறார்கள். அதற்கு என்ன யோசனை என்று ஒருவரும் சொல்லவில்லையே.

28th February 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: லேடி டாக்டர்கள் கிடைக்கும்போது போடப்படும்.

கனம் சபாநாயகர்: கேள்விகள், பதில்கள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the Commencement of a speech indicates revision be the Member.]

II.—CALLING ATTENTION TO THE EVICTION OF RYOTS FROM LAND IN CERTAIN VILLAGES IN RAMANATHAPURAM DISTRICT.

MR. SPEAKER: The hon. Member, Sri S. Madhavan, will now call the attention of the Hon. Minister for Co-operation to a matter of urgent public importance, viz., the eviction of ryots from Varappur, Vaipuripatti Singampunari, Vannarappu and A. Thekkalur villages, Tiruppattur taluk, Ramanathapuram district, who have been in possession of the lands by virtue of either the grant of pattas or their long possession by the Forest Department under the Indian Forest Act and the distress caused by the evictions and prosecutions launched by the Forest Department.

* **திரு. எஸ். மாதவன்:** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் 'மெட்றாஸ் பாரஸ்ட் ஆக்ட்' என்று இருக்கிறது. அதிலே, செக்ஷன் (4)-ன் கீழ் எந்தக் காடுகளைச் சர்க்கார் காடுகளாக ஏற்படுததிக் கொள்ளவேண்டும் என்பதைக் கலெக்டர் மூலம் நோடிபிகேஷன் செய்யலாம் என்று இருக்கிறது. அதே சமயத்தில் செக்ஷன் (6)-இன் படி ஃபாரஸ்ட் செட்டில்மெண்ட் ஆபிசர் நியமித்து, அவர் இந்தக் காடுகளை ஆக்கிரமித்தவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நோட்டீஸ் கொடுத்து, செக்ஷன் (8)-இன் கீழ் விசாரணை செய்து உத்தரவு அனுப்பவேண்டுமென்று 'ப்ரொசீஜர்' போடப்பட்டிருக்கிறது. இந்த ப்ரொசீஜரை அதிகாரிகள் கடைப்பிடிக்காத காரணத்தால், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களில் ஏற்கனவே ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் பட்டா வாங்கியவர்கள் இந்த ஃபாரஸ்ட் ஆக்டின் கீழ் குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டு நோட்டீஸ் கொடுக்காமலேயே அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு பேர் சிறைக்குக் கூடச் சென்றிருக்கிறார்கள். இது பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்து அதிகாரிகளுக்குத் தெரிவித்து, சட்டப்படி ப்ரொசீஜரைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: Sir, consequent upon the abolition of estates under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, the Forest Department has taken over estate forest areas in the ex-Zamins for survey and reservation under the Madras Forest Act, 1882. Under this Scheme, it is proposed to extinguish the various rights and privileges, as these forests are now burdened with, beyond their carrying capacity. During the Third Five-Year Plan period, 522 square miles of these areas will be surveyed.

[Sri N. Nallasenapathi Sarkarai Manradiar] [28th February 1963

There has been several encroachments in the Forest areas in Sivaganga ex-Zamin forests of Tiruppattur taluk of the Ramanathapuram district. These areas were taken over by the Forest Department in pursuance of the Estates Abolition Act. These areas have been notified under Section 4 of the Madras Forest Act with the ultimate object of declaring them as Reserve Forests.

Encroachments have taken place in the following villages in Tiruppattur taluk :—

	Cases.
(1) Singampunari	1
(2) A. Thekkalur	3
(3) Varappur	6
(4) Vaiyapuripatti	5

The encroachers have been charge-sheeted under the Madras Forest Act. The cases will be decided by the Court of Law on merits.

III.—GOVRNMENT BILL.

THE MADRAS HOME GUARD BILL, 1963.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Home Guard Bill, 1963, and move—

'That the Madras Home Guard Bill[a], 1963 be taken into consideration.'

Sir, consequent on the emergency proclaimed by the President on the 26th October 1962, it was considered necessary to provide for the constitution of a Home Guard in this State, accordingly an Ordinance was promulgated on 24th January 1963.

The Bill which is before the House seeks to replace the Ordinance by an Act of the Legislature.

The idea is to build up a voluntary organisation whose services can be utilised for various duties in times of emergency. In the context of the present emergency, the State Government regard the Home Guard organisation as a powerful instrument for strengthening the will of the people to stand up to hardship and danger in the country's hour of need. Necessary training will be given to make this voluntary organisation a truly national and disciplined force which will serve as auxilliary to the police and generally help in maintaining internal security, help the community in an emergency like an air raid, a fire, a flood, an epidemic and so on and also help to keep the essential services to be maintained without interruption.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 21st February 1963.

28th February 1963] [Sri M. Bhaktavatsalam]

The Home Guard would mostly consist of persons with a continuous occupation such as service, industrial employment, business or profession. When they are called out for duty on training, the State Government will pay their out-of-pocket expenses.

It is proposed to set up a Women's Wing of the Home Guard in Madras, Tiruchirappalli, Madurai and Coimbatore to start with. The members of these wings will be trained mainly in home nursing, first-aid, motor driving, control room operations, etc.

With these words, I introduce the Madras Home Guard Bill and move that it be taken into consideration.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Home Guard Bill, 1963, be taken into consideration.'

* *திரு. எஸ். மாதவன் :* கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த ஊர்க்காவல் படைச் சட்டத்தை, சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில், நாங்கள் மனப் பூர்வமாக ஆதரித்து வரவேற்கிறோம். இந்தச் சட்டத்தினுடைய பிரிவுகளைப் படித்துப் பார்த்தால் சில குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்று கருதுகிறேன். பொதுவாக இந்தச் சட்டத்திலே 5-வது பிரிவு கொஞ்சம் பார்ப்பதற்குப் பயமாக இருக்கிறது. அந்தப் பிரிவு ஓரேயடியாக எக்சிக்யூட்டிவ் அதாரிட்டிக்கு அதிகாரம் கொடுப்பதாக அமைந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன். ஏற்கனவே, 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்' என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழும் இது போன்ற பிரிவுகளும், 9-வது பிரிவு போன்ற பிரிவுகளும் இருக்கின்றன. இந்த மசோதாவிலே இருக்கக்கூடிய 9-வது பிரிவுக்கும், இண்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் சட்டத்திற்கும் ஒரு ஒப்புமை இருப்பதாக நான் கருதுகிறேன். ஒன்பதாவது பிரிவிலே 'ரி-இன்-ஸ்டேட்மெண்ட்' செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் சட்டத்திலும் இது இருக்கிறது. ஒரு டிரிப்யூனலோ அல்லது உயர்நீதி மன்றமோ 'ரி-இன்-ஸ்டேட்மெண்ட்' செய்யவேண்டுமென்று உத்தரவு போட்டதற்குப் பின்னாலேகூட, அந்த உத்தரவைக் கண்டிப்பாக நிறைவேற்றக் கூடிய ஒரு அதிகாரம் அந்தச் சட்டத்திலே கொடுக்கப்படவில்லை என்று சமீபத்தில் உயர்நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு தரப்பட்டது. அந்தத் தீர்ப்பைப் பற்றிக் குறிப்பாக எனக்கு நினைவில்லை. 'ரி-இன்-ஸ்டேட்மெண்ட்' செய்யவேண்டுமென்ற ஹைகோர்ட் உத்தரவை மீறி, சம்பளச் சலுகையைக் கொடுத்து தொழிலாளியை வேலையிலிருந்து நீக்கி விடக் கூடிய சூழ்நிலை இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்டின் கீழ் இருக்கிறது. அதே முறையில்தான் இந்த மசோதாவின் ஐந்தாவது பிரிவு அமைந்திருக்கிறது. இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒன்பதாவது பிரிவிலும் 'ரி-இன்-ஸ்டேட்மெண்ட்' செய்யலாம் என்று இருக்கிறதேயொழிய, ரி-இன்-ஸ்டேட்மெண்ட்

[திரு. எஸ். மாதவன்] [28th February 1963

செய்யாவிட்டால் அதனுடைய விளைவு என்ன என்று குறிப்பிடப் படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். சப் கிளாஸ் (1) (ஏ), 1 (பி), 1 (சி)-இல்—

" Exempting the employer from the provisions of this section, or

requiring him to re-employ such person on such terms as that authority thinks suitable, or

requiring him to pay to such person by way of compensation. . . . . . "

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆக, இந்த மூன்று வாய்ப்புகள் அந்த எம்ப்ளாயருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது பிரிவு காம்பன்சேஷன் கொடுக்கக்கூடிய பிரிவாக இருப்பதால் எளிதாக காம்பன்சேஷன் கொடுத்துவிட்டு மறுபடியும் வேலைக்கு சேர்த்துக்கொள்ளக் கூடாத ஒரு சூழ்நிலைதான் உருவாகும் என்பதை ஏற்கனவே இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டின் கீழ் நடைபெற்றிருக்கிற வழக்குகளிலிருந்து நாம் ஊகிக்க முடியும் என்று கருதுகிறேன். ஆகவே இப்பிரிவை கொஞ்சம் ஆலோசித்துத் திருத்த வேண்டுமென்று கருதுகிறேன். அதே பிரிவில் சப்-கிளாஸ் 2-ல் ஒரு இடத்தில் அத்தாரிட்டி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொரு இடத்தில் கோர்ட் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆக்டின் கீழ் ரூல்ஸ் ஏற்படுத்தும் போது கோர்ட் என்று தனியாக ஏற்படுத்தக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறதா ? அதனால்தான் இந்த கோர்ட் என்ற வார்த்தை சப்-கிளாஸ் 2-ல் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படி இல்லை என்றால் கோர்ட் என்ற இடத்தில் அத்தாரிட்டி என்று போட்டு விடுவது நல்லது. 5-வது கிளாஸைப் பொறுத்த வரையில் அரசாங்கத்திற்கு அதிக அதிகாரங்கள் கொடுத்திருப்பதாக கருதுகிறேன். இது நமது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி செல்லுபடியாகுமா என்று நாம் சட்ட ஆலோசகர்களை கலக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலுள்ள ப்ரொவைஸோவில்,

' Provided that it shall not be necessary for such authority to disclose the ground of discharge if such authority considers such disclosure to be against the public interest. '

என்றிருக்கிறது. இரண்டாவது சப்-கிளாஸில் கூட,

' **The order of discharge under subsection (1) Shall be final** '

There is no appeal at all.

13-வது செக்ஷன்படி இருக்கக் கூடிய ஆர்டர்களைப் பற்றி 14-வது பிரிவில் அப்பீல் செய்யும் ப்ரொவிஷன் இருக்கிறது. 5-வது பிரிவிற்கு மட்டும் அப்பீல் ப்ரொவிஷன் கொடுக்கவில்லை. சாதாரணமாக போலீஸ் போர்ஸில் உள்ளவர்களுக்குக்கூட வேலையிலிருந்து அவர்களை நீக்கி விட்டால் சிவில் கோர்ட்டில், காரணம் காட்டாமல் சார்ஜ் ப்ரேம் செய்யாது வேலையிலிருந்து நீக்கியது தவறு என்று வழக்குத் தொடரலாம். அந்த உரிமை இருக்கிறது. அந்த உரிமையைக்கூட இந்த பிரிவு பறிப்பதுபோல் இருக்கிறது.

28th February 1963] [திரு. எஸ். மாதவன்]

இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் என்ன விளக்கம் தரப்போகிறார் என்று தெரியவில்லை. அரசியல் கட்சியில் இருப்பவர்கள், அரசியல் கட்சி அனுதாபியாக இருப்பவர்கள் இவர்கள் அரசாங்க உத்தியோகங்களில் இருக்கக்கூடாது என்பதை ஜனநாயக ஆட்சியைப் பொறுத்த மட்டில் எல்லாக் கட்சிகளும் ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கைதான். இருந்தபோதிலும் ஒரு கட்சியை மட்டும் பாதிக்கக் கூடிய அளவிற்கு இந்த 5-வது பிரிவு பயன் படுத்தப் படுமோ என்ற அச்சம் இருக்கிறது. உதாரணமாக, திரு. பூவராகன் அவர்கள் துறையில் ஒருவர் பணியாற்றினார். அவரை உயர்தர அதிகாரி பார்த்துத்தான் வேலையில் சேர்த்துக் கொண்டார். வேலையில் சேர்ந்த ஒரு மாதத்திற்குள்ளாக அவரை திடீரென்று வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அதுபற்றி அந்த அதிகாரியை சந்தித்துக் கேட்டபோது அவர் மாணவப் பருவத்தில்—அவர் எம்.ஏ. படித்தவர்—அவர் கல்லூரியில் படிக்கும்போது திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக நடைபெற்ற கூட்டங்களில் பேசினார் என்ற தகவல் கனம் அமைச்சருக்கு கொடுக்கப்பட்ட காரணத்தினால் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்று எனக்குச் சொல்லப்பட்டது.

கனம் திரு. ஜீ. பூவராகன் : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது சரி அல்ல.

திரு. எஸ். மாதவன் : சரியா தவறா என்பதைத்தான் கனம் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன். அதிகாரி கொடுத்த தகவலிலிருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டவர் கொடுத்த தகவலிலிருந்துதான் இதைச் சொல்கிறேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டவர் என் தொகுதியைச் சார்ந்தவர். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தது எனக்குத் தெரியும். ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியில் இருந்தால் அல்லது வேறு கட்சியில் இருந்திருந்த போதிலும் வேலையில் சேர்ந்த பிறகு ஒரு கட்சியில் உள்ளவராகவோ அல்லது அனுதாபியாகவோ அல்லது ஒரு கட்சி உறுப்பினராகவோ இருக்கக் கூடாது என்ற கொள்கை ஒப்புக் கொள்ளக் கூடியது. என்றாவது ஒரு நாள் ஒரு கட்சியில் இருந்து பின்னர் விலகினாலும் இந்த 5-வது பிரிவால் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் என்று அஞ்சுகிறேன். அதையும் யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

*** திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஹோம் கார்ட் படை பற்றிய மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் ஏறத்தாழ 373 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன ; 12,600 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஜனவரி 26-ம் தேதி துவக்கப்பட்ட வில்லேஜ் வாலண்டியர் கோர் பிரகாரம் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஊர் காவல் படை அமைத்து போலீஸ், பிற நிர்வாகங்களோடு ஒத்துழைக்கக் கூடிய நிலையில் ஆங்காங்கு பாதுகாப்புப் படைகள் அமைக்கப்பட இருக்கிறது. இந்த மசோதாவின் பிரகாரம் தமிழ் நாட்டில் 20,000 தொண்டர்கள் கொண்ட ஒரு ஊர்காவல்

படை அமைக்க இருப்பதாகத் தெரிகிறது. அவர்களை அழைத்து அந்தந்த ஜில்லா போலீஸ் சூப்பரின்டென்டண்ட் மூலம் இன்டர்வ்யூ கொடுத்து 15 நாட்கள் பயிற்சி கொடுப்பதாகத் தெரிகிறது. அப்படி பயிற்சி கொடுக்கும் போது பஞ்சாயத்துகளில் உள்ளவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்திலிருந்தும் 2 அல்லது 3 பேர்களை எடுத்து தலைவர் அல்லது கமிஷனர் மூலம் தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட ஜில்லா சூப்பரின்டென்ட் அவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் 15 நாட்களுக்குப் பிறகு கிராமங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கிடைத்த பயிற்சியை மற்றவர்களுக்கும் அளித்தால் அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்குள்ள சந்தர்ப்பம் அளிப்பதாக அமையும். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் மார்ச் 9-ம் தேதி துவக்க இருக்கும் ஊர்காவல் படையில் பஞ்சாயத்து யூனியன்களிலிருந்தும் வாலண்டியர்களை தேர்ந்தெடுத்து இந்தப் படையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதற்கு வேண்டிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வெங்கட்ராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் ஊர்காவல் படை பற்றிய நல்லதொரு சட்டம் வந்திருப்பது மிக மிக வரவேற்கத்தக்கது. நம் நாடு நெருக்கடி நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும்போது அன்னியர் நம் மண்ணில் ஆக்கிரமித்திருக்கும்போது நாட்டின் சக்திகளை எல்லாம் எந்தளவு திரட்ட வேண்டுமென்று ஒரு உறுதியான நிலையை அமைப்பதில் ஒரு அடிப்படைக் கல்லாக இந்த ஊர்காவல் படைச் சட்டம் அமையும் என்று நான் கருதுகிறேன். இன்று நாடு பூராவும் சீறி எழுந்து நிற்கிறது. நாட்டைக் காக்க வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. ஆக சீறி எழுந்து நிற்கிற ஆர்வத்தின் மத்தியில் பல விரோத சக்திகள், துரோக சக்திகள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் சக்திகள் எல்லாம் இன்று நாட்டுப் பற்றுக் கொண்டவர்கள் போல் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஊர்காவல் படையில் ஆட்களைச் சேர்க்கும்போது நல்ல உறுதி உள்ளம் கொண்ட இளைஞர்களை அதில் சேர்க்கும்போது அதிகாரிகளுக்குப் போதுமான அதிகாரம் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இன்று நாட்டில் நடைபெறுகிற விநோதங்களைப் பார்க்கும்போது வேறு நாட்டுப் பகைவர்களைவிட நாட்டுப் பற்றுக் கொண்டவர்களைப்போல் நடிப்பவர்கள், எமர்ஜென்ஸி தேச பக்தர்கள், டெம்பாரி தேச பக்தர்கள் இவர்கள் மிக மிக ஆபத்தானவர்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் பல மேடைகளில் பேசும்போது ராணுவத்தில் ஏராளமாக சேருங்கள், ராணுவத்தில் சேருவது சீனர்களை முறியடிப்பதற்கு மட்டுமல்ல,' நாம் தனி நாடு அமைக்கக்கூட பயன்படும் அந்த யுத்தப் பயிற்சி என்று மேடையில் பேசப்பட்டது. இதை நான் முன்பே இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட பேச்சுக்களால் பிளவு சக்திகளை விரோத சக்திகளை உருவாக்கி இருக்கிறோம். ஆகவே ஊர்காவல் படையை அமைக்கும்

போது நாட்டுப் பற்று கொண்ட, நாட்டுக்காக உழைக்கும் ஆர்வம் உள்ள, நாட்டைக் காக்கும் ஆர்வம் உள்ள இளைஞர்களை பெருவாரியாக சேர்த்து சிறந்த வீரர்களாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் நாடு பயங்கரமான யுத்தங்களை அனுபவிக்காத நாடு. ஐரோப்பிய கண்டத்தில் பல்வேறு நாடுகளில் கல்லூரி மாணவர்கள் முதல் பெண்கள் வரை எல்லோரும் பயங்கர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு யுத்தத்தின் கொடுமைகள் தெரியும், நாட்டுப் பற்று எந்தளவு 9-00 a.m.
இருக்க வேண்டுமென்றும் அவர்களுக்குத் தெரியும். அரசியல் எதிர்கட்சிக்காரர்களாக இருப்பவர்கள் நாட்டை துண்டாட வேண்டும் என்று நினைப்பவர்கள், நாட்டை பிரிவினை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் இதில் இருக்கவே முடியாது, இருக்கவும் கூடாது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், மிக அதிகமான அளவில் எல்லா அதிகாரங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த, உன்னதமான பல உரிமைகள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் ஊர்காவல் படைகளை அமைக்கும் போது, நன்றாக சிந்தித்து, ஆலோசித்து, இதில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நல்ல மணிகளாக இருக்கக்கூடிய வகையில் பொறுக்கி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஊர்காவல் படையில் சேருபவர்களுக்கு இந்த நாட்டை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி இருக்கவேண்டும், அவர்களுக்கு அந்த உணர்ச்சி ஊட்ட வேண்டும். நாட்டில் பல் வேறு சூழ்நிலைகள் ஏற்பட்டாலும், அவைகளை எல்லாம் சமாளித்துக் கொள்வதற்குத் தகுந்த முறையில், அதற்கு இணக்கமாக இருக்கக்கூடிய வகையில் இந்த படையில் சேருபவர்கள் அமைய வேண்டும். நாட்டை பாதுகாப்பதில் இருக்கின்ற உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் இந்த ஊர் காவல் படை அமைய வேண்டும். நாட்டிலுள்ள பல்வேறு பிரச்னைகளை பற்றி பேசுவதற்கு நமக்கு சட்டமன்றத்தில் பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இது போன்ற எமர்ஜென்ஸி காலத்தில் அடிப்படை உரிமைகள் பல குறைக்கப்படுகின்றன. ராஜ்ய அரசாங்கங்களுக்கு இருக்கின்ற பல அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றன. இது எமர்ஜென்ஸி ப்ரொக்ளமேஷனின் நோக்கமே. இம்மாதிரிப்பட்ட அவசர காலத்தில் நாட்டை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை நல்ல முறையில், சிறந்த முறையில் அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இதை வரவேற்று என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. முனு ஆதி: கனம் தலைவர் அவர்களே, ஊர்காவல் படை பிரச்னைப்பற்றிப் பேசுகையில் எனக்கு முன்னால் பேசிய நண்பர் அவர்கள், 'பிரிவினை சக்திகளுக்கும், நாட்டை துண்டாட வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் இதில் இடம் கொடுக்கக்கூடாது' என்று குறிப்பிட்டார். தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் 'தேசீய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது', என்று அவர்களே சொல்லுகின்ற இந்த நேரத்தில், நாட்டில்

'பிரிவினை கோஷ்டிகள், காட்டிக்கொடுப்பவர்கள்' என்று பேசுவதைப் பார்க்கும் போது, வருந்தாமல் இருப்பதற்கில்லை. 'ஊர்காவல் படை என்ன செய்யவேண்டும் எவ்வாறு ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் நடந்துகொள்ளவேண்டும்', என்று எல்லாக கட்சியினரும் ஒன்று சேர்ந்து எடுத்துச் சொல்லி வருகின்ற இந்த நேரத்தில், 'பிரிவினை சக்திகளுக்கும், காட்டிக்கொடுக்கின்ற கூட்டத்தினருக்கும் இதில் இடம் கொடுக்கக்கூடாது; இதில் அப்பேர்பட்டவர்களைச் சேர்க்கக்கூடாது', என்று மிக அழகாகச் சொல்வதுபோல் சொன்னார்கள். இன்னும் அவர்கள் வேண்டுமென்றால் சொல்லியிருக்கலாம்—'எங்கள் கையில்தான் ஆட்சி இருக்கிறது', நாங்கள்தான் ஆட்சியில் பெருவாரியாக இருக்கிறோம்; ஆகவே இந்த ஊர்காவல் படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இடம் இல்லை, நாட்டைத் துண்டாடவேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இடமில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லி இந்தச் சட்டத்தை உருவாக்கியிருந்தால், நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். நாட்டில் ஒருமித்த கருத்தோடு, 'வடக்கே ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை முதலாவதாக விரட்ட வேண்டும்; அவர்களை இந்த நாட்டில் நுழைய விடக்கூடாது', என்று ஒருமித்த கருத்தோடு, ஒருமித்த சக்தியோடு—நின்று எதிர்த்து நாம் அனைவரும் தீவிரமாக இருந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இம்மாதிரி புண்படக்கூடிய அளவில் பேசுவதுதான் மிக வருத்தமாக இருக்கிறது. நமக்கிருக்கின்ற அரசியல் கொள்கைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஐக்கியத்தோடு அந்நியனை ஒழிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பாடுபடுகிற இந்த நேரத்தில், இந்தச் சட்டமன்றத்திலுள்ள உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள், 'பிரிவினை சக்திகளுக்கும், காட்டிக்கொடுப்பவர்களுக்கும் இதில் இடமில்லை; இதில் அவர்களுக்கு இடம் கொடுப்பதில் ஜாக்கிரதையாக இருந்து கண்காணித்துக்கொள்ளுங்கள்', என்று இன்னொரு சாராரைக் குறிப்பிட்டுச் சொல்வது என்பது அழகல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல விரும்புவதெல்லாம், இம்மாதிரி புண்பட்ட வார்த்தைகளைச் சொல்லி, அதன் மூலமாக ஆத்திரத்தை கிளறிவிட்டு, அதிலிருந்து ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாம் என்ற நினைப்பதை இந்த ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிற நேரத்தில் நினைப்பதை, நாங்கள் மிகவும் அக்கறையோடுதான் கவனித்துக்கொண்டிருக்கிறோம். சீனர்கள் இந்த நாட்டை ஆக்கிரமித்த பின்னர்தான் இந்த ஆட்சி ஊர்க்காவல் படை அமைக்கவேண்டும் என்று முன்வந்திருக்கிறது. ஆரம்ப காலத்திலேயே நாட்டினுடைய நன்மையைக் கருதி இதைக்கொண்டு வந்திருந்தால், அப்போதிருந்தே நாட்டு மக்களுக்கு பொறுப்பு ('சிவிக் ரெஸ்பான்ஸ்') ஏற்பட்டிருக்கும். இந்த முறையில் நாட்டுப்பற்று ஏற்படுவது மட்டுமல்ல நம்முடைய திட்டங்களை எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கும் பக்கபலமாக இருந்திருக்கும். ஆகவே, இதை நீண்ட நாட்களுக்கு முன்பாகவே கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். முக்கியமாக ஊர்க்காவல் படை அமைக்கப்பட வேண்டும் என்று சட்டம் கொண்டு வருகின்ற இந்த நேரத்

தில், இதை எப்படி எப்படி அமைக்க வேண்டும். எப்படி எப்படிச் செயல்பட வேண்டும் என்று பேச வேண்டிய இடம் இந்த சட்டமன்றம். ஊர்க்காவல் படைகளின் கடமை என்ன இதன் மூலம் மக்களுக்கு எவ்வாறு நன்மை செய்யவேண்டும் என்று பேச வேண்டிய இந்தச் சட்டமன்றத்தில், வேண்டாத தேவையில்லாத கருத்துக்களை கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதன் காரணமாக நான் இதில் இத்தனையும் கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. பிரிவினை செய்கின்ற பிரச்சினை, நாட்டை காட்டிக்கொடுக்கின்ற பிரச்சினை எல்லாம் இப்போது இங்கே தேவையில்லை, அதை இந்தச் சபைக்கு வெளியே வைத்துக் கொள்ளலாம், நாட்டில் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கிறது. அது முடிந்தபின்னால் வைத்துக்கொள்ளலாம். நாட்டிற்குக் களங்கம் ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் இது தேவையில்லை. நாட்டினுடைய முன்னேற்றத்திற்காகவும், நாட்டை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவும் நாட்டிலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு முன்வந்திருக்கிறார்கள், இத்தகைய நேரத்தில், மனதிற்கு புண்படும்படியான சொற்களைச் சொல்வது அதிலும் இந்த சபையில் சொல்வது அரசியல் பெருந்தன்மையாக இருக்க முடியாது. சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், நாட்டினுடைய வளர்ச்சிக்கும், நாட்டினுடைய முன்னேற்றத்திற்கும் தகுந்த வகையில், நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒருமித்த கருத்தோடு பணியாற்ற வேண்டும்—அதற்குத் துணையாக இந்த ஊர்க்காவல் படை இருக்கவேண்டும்—அந்த முறையில் இந்த ஊர்க்காவல்படை பணிபுரிய வேண்டும்—அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய விதத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை சட்டம் இப்போது நம்முன்னால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய சட்டமன்ற அங்கத்தினர் அவர்கள், ஊர்க்காவல் படை மசோதாவின் நோக்கத்தைப்பற்றி வலியுறுத்திப் பேசினார். இதில் ஏதோ நாட்டு பிரிவினை வேண்டும் என்று சொல்பவர்களும், நாட்டைத் துண்டாட வேண்டும் என்று நினைப்பவர்களும் இதில் சேரக்கூடாது என்று சொன்னார். இதில் அரசியல் எண்ணங்களுக்கே இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் என் நோக்கம். இந்தச் சட்டத்தின் செக்ஷன் 17-வது பிரிவில் "ரிமூவல் ஆஃப் டிஸ்குவாலிஃபிகேஷன்" என்று இருக்கிறது. இதில் சட்டசபை, மேல்சபை மெம்பர்கள் ஊர்க்காவல் படையில் இருக்கலாம் என்று அமைந்திருக்கிறது. இப்போது நம்முடைய சட்டசபை அங்கத்தினர்களைப் பொறுத்தவரையில், ஏழெட்டு சுயேச்சை அங்கத்தினர்களைத் தவிர காங்கிரஸ் அங்கத்தினர்கள், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள், சுதந்திராக் கட்சி அங்கத்தினர்கள் இப்படி ஒவ்வொரு அரசியல் கட்சியின் கொள்கையை அடிப்படையாக கொண்டவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இந்த ஊர்க்காவல் படையில் இருந்தால் நிச்சயமாக அரசியல் அதில் விளையாடும். நாட்டை துண்டாட வேண்டும்

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [28th February 1963

என்று சொல்வார்கள் எல்லாம் தங்கள் விரோதிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்ற அகில இந்திய தேச பக்தர்கள் இதில் தங்கள் விரோதத்தை காண்பிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே பொதுவாக இதில் அரசியலுக்கே இடமில்லை என்ற முறையில் இந்த ஊர்காவல் படையை அமைக்கவேண்டும். ஆகவே 17-வது பிரிவை திருத்தி, அரசியல் கட்சியினருக்கே இதில் இடமில்லை என்று நிச்சயமாக சொல்லிவிட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், செக்ஷன் 16-ல் "Member of Home Guard to be public servants" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்க்கும்போது பப்ளிக் சர்வென்ட் என்ற முறையில் பல சலுகைகளும் மற்றவைகளும் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். இம்மாதிரிப்பட்ட பல சலுகைகள் கொடுத்து வருகின்ற நேரத்தில், ஒரு சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினர் கோருகின்ற நேரத்தில் மட்டும் டி. எஸ். பி. கமிஷனர் ஆஃப் போலீஸ் இவர்களுடைய பணிகளை சலுகைக்காக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய பணிகளை பயன்படுத்திக்கொள்ளும்போது மட்டும் "பப்ளிக் சர்வென்ட்" என்கின்ற முறையில் அவர்களைக் கருதி வேண்டிய சலுகைகள் பெறுவதற்கு அனுமதிக்கவேண்டும். அதற்குத் தகுந்தாற்போல்

'In the discharge of their duties and functions Home Guards should be considered as public servants'.

என்ற முறையில் 16-வது பிரிவை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஊர்க்காவல் படையிலிருந்து யாதொரு காரணமும் இல்லாமல் டி. எஸ். பி. அல்லது கமிஷனர் ஆஃப் போலீஸ் இவர்கள் படையிலுள்ளவர்களை நீக்கிவிட முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பார்க்கும்போது யாரும் கேட்பதற்கு ஆள் இல்லை என்கின்ற முறையில் இந்த செக்ஷன் அமைந்திருக்கிறது. ஆகவே இந்த அதிகாரிகள் எந்தக் காரணத்தைக் கொண்டு நீக்கினாலும் கேட்க முடியாத அளவுக்கு இந்த ஷரத்து அமைந்திருக்கிற காரணத்தினால் நமது ஜீவாதாரமான உரிமைகள் பறிபோகின்ற முறையில் இந்த ஷரத்து அமைந்திருக்கிற காரணத்தால் வழக்குமன்றத்தில் போகுமானால் இது செல்லுபடியாகுமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயம்தான் என்று எண்ணுகிறேன். இதன் மூலம் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்தாலும் அதைக் கேட்க முடியாத அளவுக்கு இந்த ஷரத்து அமைந்திருக்கிறது, இதையும் திருத்தி அமைக்கவேண்டும் என்றுள்ள என் கருத்தை வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஊர்க்காவல் படைச் சட்டம் ஒன்று 1948-ம் ஆண்டிலே 'தி மெட்ராஸ் ஹோம்கார்ட்ஸ் ஆக்ட், 1948' என்ற முறையிலே அமைந்திருந்தது. அது போன்று ஒரு சட்டம் இருந்திருக்கிறதே யொழிய, அது அமலுக்குக் கொண்டுவரப்பட்டதா, அது செயல்

28th February 1963] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

படுத்தப்பட்டதா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. அது போன்ற ஒரு சட்டம் செயல்படுத்தப் படவில்லை. இப்போதுகூட இந்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டு, இதைச் செயல்படுத்தாமல் இருந்து விடக் கூடாது. ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அரசியல் கட்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சேராத முறையில் இந்தச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்றும், அரசியல் பிரச்னைகளுக்கு அங்கு இடமில்லை என்றும் சொல்லிக்கொண்டு, அதே சந்தர்ப்பத்தில் நாட்டுப் பிரிவினை வாதிகள் யார், திடீர் தேச பக்தர்கள் யார் என்று இந்த மாமன்றத்தில் ஊர்க்காவல் படைச் சட்டத்தைப் பார்க்கிற போது விவாதிக்காமல், இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களில் எந்த இடத்தில் ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன, எந்த ஷரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்று இந்த மாமன்றம் ஈடுபட்டால் நல்ல முறையாக இருக்கும். அதை விட்டு ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு, நாட்டுப் பிரிவினை வாதிகள் இருக்கக்கூடாது என்று சொல்லுவதும், இந்திய தேச ஐக்கியத்திற்குப் பாடுபடுகிறவர்கள் இருக்கவேண்டும் என்று சொல்லுவதும், இத்தகைய வாதங்களில் இந்த மாமன்றம் இறங்காமல், நல்ல முறையில் சட்டத்தைப் எந்தெந்த முறையில் மாற்றி அமைத்தால் நல்ல முறையில் பணி புரிய முடியும் என்ற காரண காரியங்களில் இந்த மாமன்ற அங்கத்தினர்கள் அத்தனை பேரும் இறங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, ஊர்க்காவல் படை அமைப்பது சம்பந்தமாக, பாரத நாட்டினுடைய ஜனாதிபதி அவர்கள் அவசர நிலையைப் பிரகடனம் செய்த பிறகு, நாம் இந்த மன்றத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஊர்க்காவல் படை அமைக்கும் விஷயத்திலே எல்லாக் கட்சிகளும் ஒரு மனதாக இதை ஆதரிக்கக் கூடிய நிலையில் இன்றைக்கு இருக்கிறோம். இந்தச் சட்டத்தை முன்பு 1948-ம் ஆண்டே ஏற்படுத்தினோமே, இந்த நெருக்கடியான நேரத்தில் இன்றைக்கு ஏற்படுத்துவதற்கு பதிலாக இதற்கு முன்பே ஏற்படுத்தியிருந்தால் நலமாக இருந்திருக்குமே என்று குறைபடுகிறோம். அவசர நேரத்திலேதான் இது நமக்கு அவசியமாக இருக்கிறது. அதுவும், நாம் அறிந்திருக்கிறோம், சீனாக்காரர்கள் நம் நாட்டின் மீது படை எடுப்பான் என்று எந்த ஒரு பாரத மகனும் இதற்கு முன் எண்ணவில்லை. திடீரென்று ஏற்பட்டு விட்ட நெருக்கடி காரணமாக நாம் நம் நாட்டை எப்படிப் பாதுகாக்க வேண்டும், எந்தெந்த முறையிலே பாதுகாப்புக்களை அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி இப்போதுதான் நாம் ஆராய்ச்சி செய்துகொண்டு ஒவ்வொன்றாக அமைத்துக் கொண்டு வருகிறோம். அதே நிலையில் ஊர்க்காவல் படையும் அவசியம் என்ற தோரணையில் 1948-ம் வருஷத்திய சட்டத்தை மறுமுறை திருத்தி அமைத்து இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே இருக்கக்கூடிய பிரிவிலே, குறிப்பாக "டிஸ்க்வாலிஃபிகேஷன்" என்ற செக்ஷனில், மெம்ப

பேசிய கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டைக் கொண்டு வந்து சேர்த்துப் பேசியிருக்கிறார். இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த மசோதாவில் 16-வது பிரிவில் "பப்ளிக் சர்வெண்ட்" என்று போட்டிருக்கிறது. பப்ளிக் சர்வெண்ட்டாக ஒருவர் வந்து விட்டாரானால், இண்டஸ்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டில் அது வராது. யாராவது ஒருவரை நீக்கி விட்டால், பிறகு அவரைத் திருப்பி ரீஇன்ஸ்டேட் பண்ண வேண்டுமா, பண்ண வேண்டாமா என்பதில் இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டின் கீழ் ஒரு ட்ரிப்யூனலுக்கு விட்டு, அந்த ட்ரிப்யூனல் ஜட்ஜ்மெண்ட் கொடுத்து, அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னால் தனிப்பட்டவர்கள் மறுத்து விட்டாலும் என்ன செய்ய வேண்டுமென்று விளக்கம் இல்லை. ப்ராஸிக்யூஷன் செய்வதா என்ன என்பதைப்பற்றி இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டில் ஒன்றும் இல்லை. அதனால் சிக்கல் இருக்கிறதே என்றால் பப்ளிக் சர்வெண்ட்ஸ் ஆக்டில் எப்படி இருக்கிறது என்று யோசிக்கவேண்டும். சர்க்காரிலே ஊர்க்காவல் படையை அமைக்கும்போது, சர்க்காரிலே பதவியிலே இருக்கும் காரணத்தினால் டிஸ்மிஸ் பண்ணுவதோ அல்லது ரீஇன்ஸ்டேட் பண்ணுவதோ இண்டஸ்ட்ரியல் ஆக்ட்டின் கீழ் வராது. இன்றைக்கு இந்த ஆக்ட்டில் அப்பீல் கொடுக்கக்கூடிய வகையில் ஐ.ஜி. வரை கொடுத்திருக்கிறோம் . . . .

Sri S. MADHAVAN : I referred to Clause 9 which provides for reinstatement just like in the case of Industrial Disputes.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர்கள் இருவரும் தங்களுக்குள்ளேயே பேசிக்கொள்வதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கடைசியில் நான் சொல்லுகிறேன்.

கனம் சபாநாயகர் : கடைசியில் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள். கொஞ்சம் 'வெய்ட்' பண்ணுங்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : செக்ஷன் 9-லே கொடுத்திருப்பதெல்லாம் "ரீஇண்ஸ்ட்டேட்மெண்ட் இன் ஸிவில் எம்ப்ளாய் ஆஃப் பர்ஸன்ஸ்" என்பதுதான். இதிலே கொடுக்கப்பட்டிருப்பதற்கு கடைசியாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 16-வது செக்ஷனிலே ஹோம் கார்ட்ஸ் என்பவர்கள் யார் என்று விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பப்ளிக் சர்வெண்ட் என்று இங்கு கொடுத்துவிட்டு, பிறகு அவர்களுக்கு எப்படி ஸிவில் சட்டம் பொருந்தும் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகையால் ஹோம்கார்ட்ஸை அமைக்கும் நேரத்தில் எனக்கு முன்பு பேசிய எனது கட்சி நண்பர் நாட்டுப் பற்று இல்லாதவர்கள் யாரையும் நியமிக்கக் கூடாது என்று சொல்லிவிட்ட காரணத்தினால்; அகில இந்திய ஆதரவாளர்கள் இருந்தால்

போதும் என்ற தோரணையில் பேசப்படுகிறது. அவர் குறிப்பிட்ட ஒரு கட்சிக்காரர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் அல்லது வேறு கட்சிக்காரர்கள் இருக்கக் கூடாது என்று பேசவில்லை. பாரத நாட்டின் மீது அவர்கள் என்ன பற்றுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு நாட்டுப் பற்று உண்டா இல்லையா என்று ஊர்க்காவல் படையை அமைக்கும்போது அமைக்கக் கூடியவர்கள் பார்த்து, அதில் இருக்கக் கூடியவர்கள் என்ன தன்மையில் இருக்கவேண்டும் என்று ஆராய்ந்து அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக நாம் ஒன்று சொல்லிக்கொள்ள முடியும். இன்றைக்கு நாம் நெருக்கடியான நேரத்தில் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அதே நேரத்தில் ஊர்க்காவல் படை அமைக்கும்போது நாட்டுக்கே விரோதியாக இருக்கக் கூடியவர்களை ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று பேசினால் எப்படிப் பொருத்தமாக இருக்கும். ஊர்க்காவல் படையிலே சேர்ந்து விட்டு, அரசாங்கம் என்னென்ன காரியங்கள் செய்கிறது என்று வெளியில் சொல்லக்கூடியவர்களைச் சேர்த்துக்கொண்டு, நம் ரகசியங்களைக் கூட வெளிநாடுகளுக்கு அம்பலப் படுத்தக் கூடியவர்களை நாங்களும் தேசப்பற்று உள்ளவர்கள் என்று சொல்லிக்கொண்டால், சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். பாரத நாட்டுக்காக அமைக்கப்படுவது ஊர்க்காவல் படை. பாரத நாட்டுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்ற தோரணையில் ஊர்க்காவல் படை அமைக்கும்போது—அவர்கள் சொன்னார்கள் அகில இந்திய பக்தர்கள் என்று—அகில இந்திய பக்தர்களுக்குத் தான் இடம் இருப்பது அவசியம். அரைகுறை, அரைக்கால் இந்திய பக்தர்களை எப்படி சேர்த்துக்கொள்ள முடியும்? அவர்களைச் சேர்த்துக்கொண்டால் ஊர் காவல் படை எப்படி செயல்பட முடியும்? பாரத நாடு என்று சொல்லுவார்களா? அவர்கள் என்ன சொல்லிக்கொள்வார்கள்? பாரத நாட்டின் பாதுகாப்புக்காக நாம் இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லிக் கொள்வார்களா? அல்லது அரைக்கால் இந்தியாவின் பாதுகாப்புக்கு நாம் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமா? பாரத நாட்டின் பாதுகாப்புக்கு இருக்கிறோம் என்று சொன்னால் அகில இந்தியாவினுடைய கொள்கையை ஆதரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதிலே அரசியல் கட்சி என்று சொல்லவில்லை. இந்த ஊர்க்காவல் படையில் சேரக் கூடியவர்கள், இதில் இருக்கக் கூடியவர்கள், இவர்களுக்கு பாரதப் பற்று வேண்டுமா அல்லது பாதிப் பற்று வேண்டுமா என்று சிந்திக்கவேண்டும். பாரதப் பற்று இருக்கக் கூடியவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியுமே அல்லாது, வேறு ஒரு காரணத்திற்காக இன்றைக்கு நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், சகல ஆதரவும் கொடுக்கிறோமே, நீங்கள் எங்களைக் கிளறி விடுகிறீர்களே என்று வருத்தப்பட்டால் என்ன செய்வது? உங்களைக் கிளறிவிட்டு நாங்கள் என்ன செய்வது? நெருக்கடி நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பாரத நாட்டுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். காங்கிரஸ்

காரர்களாகிய நாங்கள் கூட இன்றைக்கு மிக மிகப் பொருமையாக இருக்கிறோம். நெருக்கடியான இந்த நேரத்திலும்கூட, சர்க்காரை மாற்றி அமைக்கவேண்டுமென்று தென்னகத்திலே உள்ள ஒருவர் பிதற்றிக்கொண்டு வருகிறார். அதையும்கூட நாங்கள் பொருத்துக் கொண்டுதான் இருக்கிறோம். மேற்கொண்டும், நாட்டின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தக்கூடிய படையிலும் இப்பேர்ப்பட்ட கட்சிக்காரர்களை எல்லாம் சேர்க்கவேண்டுமென்று சொன்னால், என்ன அர்த்தம்? அவர்களை எல்லாம் சேர்த்தால் அந்தப் படை உருப்படுமா? இதையெல்லாம் சற்று சிந்திக்க வேண்டும். அதற்காகத்தான் இப்பொழுது நாம் அதிகாரத்தைக் கொடுக்கிறோம். இந்த ஊர்க்காவல் படையில் சேர்ந்த ஒருவரை ஜில்லா சூப்பிரண்டெண்டு நீக்கிவிட்டால், அதன் மேல் இன்ஸ்பெக்டர் ஜெனராலுக்கு அப்பீல் செய்து கொள்ளுவதற்கு இடமிருக்கிறது. இப்பொழுது ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளை ஒரு ஜில்லா சூப்பிரண்டெண்டு 'டிஸ்மிஸ்' செய்தால்கூட, ஐ.ஜி.-க்குத்தான் அப்பீல் வருகிறது. ஆகவே, ஊர்க்காவல் படையைப் பொறுத்தவரையில், ஐ.ஜி.க்கு அதிகமான அளவுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒரு சப் இன்ஸ்பெக்டரை 'டிஸ்மிஸ்' செய்தால் கூட, ஐ.ஜி.-க்குத்தான் அப்பீல் போகிறது என்று நான் நினைக்கிறேன். ரிகார்டுகள் வேண்டுமானால் சர்க்காருக்கு வரலாம். ஆகவே ஐ.ஜி.-க்கு அதிகமாக அதிகாரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுவது பொருத்தம் அல்ல. இப்பொழுது இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் சரியாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நாம் எல்லோரும் இந்த சமயத்தில் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, அதிகாரிகள் ஊர்க்காவல் படைக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கும்பொழுது, நாட்டுப் பற்று உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தால்தான் இது உருப்படியாக இயங்கும். ஏதோ வேலை கிடைக்கிறது என்பதற்காக நாட்டுப் பற்று இல்லாதவர்களை எல்லாம் இந்தப் படையில் சேர்க்கக் கூடாது. வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக இது ஏற்பட்டதல்ல. நாட்டின் பாதுகாப்பிற்காகத்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒருவர் நாட்டுப் பற்று உள்ளவர் என்று நன்றாகத் தெரிந்த பிறகுதான், அவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். யார் என்ன கருத்தைச் சொன்னாலும், நாங்கள் இந்த நாட்டிற்காக ஆளும் கட்சியோடு ஒத்துழைக்கிறோம் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஒத்துழைக்கிறார்கள் என்று சொன்னால், எவ்வளவு தூரம் ஒத்துழைக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். அவசர நெருக்கடி நிலை இருக்கிறவரையிலும்தான் ஒத்துழைக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நாட்டிற்காக, பாரதத்திற்காக எப்பொழுதும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லுவார்களேயானால், அதைத்தான் தேச பக்தி என்று சொல்ல முடியும். இந்த மாதிரி டெம்பரரியாகச் சொல்லுவதில் என்ன இருக்கிறது? அதே நேரத்தில், இந்த இடைக்காலத்தில்,

தேசத்தின் பாதுகாப்பை எதிர்க் கட்சிக்காரர்கள் கையில் ஒப்படைத்துவிட முடியாது என்பதையும் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, the Bill before the House provides for the constitution of the Home Guard for the State. I welcome this measure. In the Chinese aggression we have seen in our country that all the political parties and eminent people irrespective of their idealogies have expressed resentment and also declared that the aggression is naked. Whatever measures were taken by the Government were supported by all the political parties. The constitution of Home Guard in our country is one such act of Government. We welcome this measure in all its entirety. We welcome its extension to rural parts also. In enlisting the members to the Home Guard it is but essential that the Government should show that they are really sincere in bringing this measure. Political parties should not have any misapprehension in their minds that Government are not sincere in bringing this measure. Before enlisting an individual as a Home Guard, it should be scrutinised whether that individual has any leanings towards any other country. Otherwise, it will be a danger to our security. The party or individual who has a leaning towards any other country may not be safe and inasmuch as the centre of gravity of that individual does not lie within our territories it is dangerous for this country to rely on such persons. An individual who has a leaning towards other countries may not be helpful and conducive to the proper working of the Home Guard.

In the constitution of certain committees wherein discretion has been given to Government we find that sincere persons had been ignored. Such things shoud not happen while enrolling persons as Home Guards. Genuine and *bonafide* persons sincere to serve the country should be taken in impartially. With these words, I conclude, Sir.

* SRIMATHI A. SUARES : Mr. Speaker, Sir, when China launched a pre-meditated massive attack along the India-China border on the 20th October 1962, the Indian Nation realised that all along China had paid only lip-sympathy to the principles of peace and peaceful-co-existence. China really had no respect for the territorial integrity of States. The conscience of the world began to assert itself against this wanton aggression on a peace loving neighbour. After initial successes, China resorted to unilateral cease-fire and withdrawal but no negotiations have taken place in spite of the efforts made by the Colombo Powers in this direction. We read in the newspapers that China is massing troops on the Tibetan border and on the passes in the mountainous eastern sector. This is a sign to show that China wishes to gain her ends by warfare and not by negotiations.

It is therefore necessary for this country to continue to arm herself and to prepare against further aggression by the enemy. The Hon. Minister for Finance has just introduced the Madras Home Guard Bill, 1963. Home Guards will from purely as a

voluntary organisation to serve as an auxilary to the Police and generally to help in maintaining internal security. We have a Territorial Army. It helps to maintain internal security. During the last world war, an organisation called the 'Madras Guards' was formed. These guards were recruited entirely from the Anglo-Indian community. They were mobilised for the duration of the war. The Madras Government now proposes to enlist 20,000 Home Guards in this State. The Home Guards will be given training for a period of 1½ months at the rate of one hour for the first 15 days and thereafter for 1½ hours on alternate days for 15 days. This would give a total of 38 hours which may not be sufficient to give the necessary training. It is for consideration whether this period will be sufficient especially for the older age group between 30 and 45 years. The younger folk between 18 and 30 may have had N.C.C. training and physical training in schools and colleges and might have handled rifles before this. In the Bill we find many items of training. It may not be possible to give all that training within the period of 38 hours.

All literate persons in all walks of life between the age-group of 18 and 45 are eligible for enlistment. It is hoped that there will be a very good response to this call. The country is still in the state of emergency and every citizen is expected to contribute to the defence of the country in some way or other. Sacrifices of various kinds must be made. Sacrifice of leisure to undergo Home Guard training and to serve as Home Guards will be a valuable service to the country. The active co-operation of employers will be necessary to make this scheme a signal success. Unless employers
9-30 a.m. spare the men for the required training and service and abide by the provisions made in the Bill for payment of salaries and reinstatement of employees, the Home Guard Scheme cannot be a success.

To make the scheme attractive the daily allowance should cover all expenses. A small daily allowance may not be sufficient inducement for men and boys to enlist for training. The expenses in Madras City may be more than in the mufassal by way of transport, food, etc. The basic salary for recruits under training in the regular army is Rs. 50 which excludes food, washing, hair cutting, etc. The personnel of the Home Guard may be paid not less than a recruit of the regular army. The Home Guards will require free personal clothing.

I feel training in the use of the rifle is necessary for the Home Guards. They can be usefully employed in the protection of vulnerable points during an emergency. At present this task is entrusted to units of the regular army and Territorial units. Home Guards can also be utilised for internal security duties. This is a very important task. Selection of personnel would have to be made with great caution. The hon. Member who spoke before me, has laid emphasis on this point.

The procurement of rifles for the use of the Home Guards may present a major problem. At present the regular army which is expanding due to the emergency requires most of the rifles that

are available. The authorities in charge of the Home Guards will probably make an adjustment within the State to provide the necessary rifles for 20,000 Guards. An adequate supply of ammunition and range facilities will also have to be provided.

A large number of instructors will be required to train 20,000 Home Guards in musketry. If the Army or civilians cannot provide this number the services of ex-service men who could be instructors may be requisitioned. Training camps may also require the assistance of ex-service men.

According to the newspapers two companies of Women Home Guards will be formed. This is due recognition of the valuable service that women are capable of rendering. Women will certainly show their aptitude in courses like map-reading, First-Aid, Rescue work, Civil Defence, Wireless operations and handling of automatic weapons. They have already shown their aptitude in Women N.C.C. Units and I am sure they will do even better as Home Guards.

Some form of military training whether during war or peace time will always be useful in case of a national emergency. So the training that will now be given to Home Guards should be kept up even during peace time at certain intervals. Thank you, Sir.

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: தகுதி மிக்க சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை அமைப்பைப்பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். 'காவலர் இல்லம்' என்று இருப்பதும் 'காவல் நிலையம்' என்று இருப்பதும்கூட ஒரு இழுக்கு என்று இருந்த ஒரு நிலைமை மாறி, இப்பொழுது அமைக்கப்படுகிற இந்தத் தொண்டர்ப் படையை, 'ஊர்க்காவல் படை' என்று வருவதைப் பார்க்கும்போது உண்மையிலேயே அது பாராட்டத்தக்க—வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. பொதுவாக இந்த ஊர்க்காவல் படை எந்த விதத்தில் அமையவேண்டும் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறிப்பில் விளக்கி இருக்கிறார். ஆயினும் ஊரில் நடைபெறுகின்ற குற்றங்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்கக்கூடிய அதிகாரம் போலீசாரிடம் இருப்பதுபோல், ஊர்க்காவல் படைகள் ஊரில் குற்றங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்வது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்—வலியுறுத்த விரும்புகிறேன்.

பொதுவாக இந்த ஊர்க்காவல் படையில் எப்படிப்பட்டவர்கள் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி கனம் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். பொதுவாக, திடீரென்று தேச பக்தர்களாகிறார்கள் என்றால், அப்படிப்பட்டவர்கள் யார் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது—யார் அப்படிப்பட்டவர்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது எனக்குத் தெரியவில்லை. திடீர் திடீர் என்று எத்தனையோ தேச பக்தர்கள்

வருகிறார்கள். இப்படிப்பட்ட தேசபக்தர்கள் சில சமயங்களில்
அதுவும் தேர்தல் காலங்களில் ஏற்படுகிறார்கள். இப்படிப்பட்ட
வர்களை உண்மைத் தேச பக்தர்கள் என்று எப்படிக் கண்டு
பிடிப்பது ? இப்படிப் பலர் மாறி விடுகிறார்கள். ஊர்க்காவல்
படையில் யாரைச் சேர்ப்பது—யாரை சேர்க்காமல் இருப்பது
என்பது தெரியவில்லை. ஏனென்றால், சிலர் இதில் சேர்ந்த பிறகு
மாறிவிடுகிறார்கள். அப்படிச் சேர்ந்த பிறகு அவர்கள் மாறி விடக்
கூடாது. இப்படிப்பட்ட நிலைமை தமிழக அரசியலில் புதியது
அல்ல. இது நமது அமைச்சரவைக்குத் தெரியாததும் அல்ல.
அவர்கள் இது சம்பந்தமாகப் பழக்கப்பட்டவர்கள்தான்.
அதனால்தான் இதைப்பற்றி அமைச்சரவைக்கு வலியுறுத்த
வேண்டியதாக இருக்கிறது. உண்மையிலேயே இந்த ஊர்க்காவல்
படை அமைப்பு வரவேற்கத்தக்கதுதான். கனம் மாதா கவுடர்
அவர்கள் பேசும்போது, 'இராமாயணம்' பக்தியைப் பற்றியும்,
'பாரதம்' பக்தியைப் பற்றியும் குறிப்பிட்டார். அவர் எதை
நினைத்துக்கொண்டு அப்படிச் சொன்னார் என்பது தெரியவில்லை.
அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல் சொன்னதாகத்
தான் தோன்றுகிறது. அதை அவர் விளக்கமாகச் சொல்லி
இருக்கலாம். 'இராமாயண பக்திக்கும்' 'பாரத பக்திக்குமே'
வேறுபாடு இருக்கிறது ; அதில் ஒன்று 'சமதர்ம பக்தி'; மற்
றொன்று 'சர்வாதிகார பக்தி'; அதனால்தான் அதிலும் வேறுபாடு
இருக்கிறது என்றேன். நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்புக்
குழுக்களில் மற்ற மாநிலங்களில் இல்லாத ஒரு நிலைமையை நமது
முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார். அந்தக் குழுக்
களில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்திருக்கிறார். அவருக்குள்ள ஒரு
விதத் துணிச்சலுடனேயே இந்தக் குழுவில் கம்யூனிஸ்டுக் கட்சி
உறுப்பினர்களை அவர் சேர்த்துக்கொண்டிருக்கிறார். மற்ற
மாநிலங்களில் இல்லாத ஒரு காரியத்தை இந்த மாநிலத்தில்
அவருக்கேயுள்ள ஒரு துணிச்சலுடன் செய்து காட்டியிருப்பதைப்
பாராட்டுகிறேன்.

* **கனம் திரு. கு. காமராஜ் :** உங்களையெல்லாம், உங்கள் கட்சி
அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொண்டதுபோல் கம்யூனிஸ்டு கட்சி
அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதா ? உங்கள்
கட்சிக்கு எவ்வளவு தேச பக்தி இருக்கிறதோ, அதேபோன்று
அந்தக் கட்சிக்கும் அவ்வளவு தேச பக்தி இருக்கிறது என்ற
காரணத்தால் தான் அவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்
கிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அவர்களை எந்தக் காரணத்தினால்
சேர்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. எங்களைச்
சேர்த்துக்கொண்டதற்குக்காரணம் இருக்கலாம். ஆனால் இந்தியத்
தலைமையமைச்சர் நேரு அவர்கள் தங்களுடைய முதல் அறிக்கை
யில், நாட்டு மக்களுக்கு விடுத்த முதல் வேண்டுகோளில், தன்னு
டைய கரத்தை நாட்டு மக்கள் பலப்படுத்த வேண்டும்—கட்சி
வித்தியாசங்களை, கொள்கை வேறுபாடுகளை மறந்து நாட்டு மக்கள்
ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டதால்தான் நாங்கள் ஒத்து

ழைக்க முன் வந்தோம். அதன்பிறகு தான் எங்களுடைய கொள்
கைகளை மறந்து இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுடைய
கையைப் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் பேரில்
நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னதன்
பேரில், எங்களையும் அந்தக் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்
டிருக்கிறது. அந்தப் பெருந்தன்மை வாய்ந்தவருடைய வார்த்தை
க்கு மதிப்பு வைத்துத்தான் நாங்களும் அதை ஏற்றுக்
கொண்டோம். நீங்கள் எங்களைச் சேர்த்துக்கொண்டாலும்,
சேர்த்துக் கொள்ளா விட்டாலும் அதைப்பற்றி நாங்கள் கவலைப்
படவில்லை."

* **கனம் திரு. கு. காமராஜ் :** இதே மாதிரிதான் கம்யூனிஸ்டு
களும், பாரதப் பிரதமரின் அறிக்கையை உத்தேசித்து,
அவருடைய கையைப் பலப்படுத்தவேண்டும் என்று தான் அவர்
களும் சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் (தி.மு.க.) சேர்ந்த மாதிரி
தான் அவர்களும் (கம்யூனிஸ்டுகள்) சேர்ந்திருக்கிறார்கள்."

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பிற மாநிலங்களில் அவர்களைச்
சேர்த்துக்கொள்ளாமலிருக்கும்போது . . . . .

கனம் திரு. கு. காமராஜ் : பிற மாநிலத்தைப்பற்றி நாம்
ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களுக்கு (தி.மு.க.)
எவ்வளவு தேச பக்தி இருக்கிறதோ அவ்வளவு தேசபக்தி அவர்
களுக்கும் இருக்கும். அவர்கள், 'ஒத்துழைக்கிறோம்' என்று
சொல்லுகிறார்கள்—நாங்கள் நம்புகிறோம். நீங்கள் (தி.மு.க.)
'ஒத்துழைக்கிறோம்' என்று சொல்லுகிறீர்கள்—அதையும நம்பு
கிறோம். ஆனால், கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொண்டதற்குக்
காரணம் கற்பிக்க கனம் அங்கத்தினர் முயற்சிக்கிறார்களே அது
தேவை இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் சொன்னது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது
என்றாலும், அவ்வளவு நம்பிக்கையான ஒருவரை சிறையில்
வைத்திருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒரு விஷய
மாகும். அவரை இந்தக் கமிட்டியிலேயே போட்டதற்குப் பிறகும்
இன்னும் அவர் சிறையில் இருக்கிறார். கனம் அங்கத்தினர் திரு.
கல்யாணசுந்தரம் அவர்கள் இப்பொழுது ஜெயிலில் இருக்கிறார் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : "கட்சியை விட்டுவிட்டு
இப்பொழுது தனிப்பட்ட நபரைப் பற்றிப் பாய்வது வாதத்திற்கே
உரியதல்ல. ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் போவதில் பயனில்லை.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பாயவில்லை, கட்சியைத்தான்
சொன்னேன். கட்சிவேறு—அவர் வேறு அல்ல. கட்சியினால்தான்
அவர் அங்கம் வகிக்கிறார்.

கனம் அங்கத்தினர் திரு. மாதா கவுடர் அவர்கள் பேசியபோது,
'இரகசியங்களெல்லாம் திடீர் என்று போகின்றன ; இங்கே
பேசுவது பீகிங் ரேடியோவில் ஒலிபரப்பப்படும் அளவுக்கு
இரகசியங்கள் வெளியே போகின்றன ; அப்படிப்பட்டவர்களை—
எங்களை நினைத்துக்கொண்டல்ல—சேர்த்துக்கொள்ளலாமா? என்று

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [28th February 1963

கேட்டார். அதெல்லாம் மிகவும் கவனித்துச் செய்யவேண்டிய விஷயம்தான். நாட்டுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த நெருக்கடியான நேரத்தில் இவற்றையெல்லாம் உண்மையிலேயே கவனித்துத் தான் செய்யவேண்டும். எங்களைப் பற்றியும் சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. எங்களைத் 'துரோகிகள்' என்று அவர்கள் பேச்சுக்குச் சொல்லலாமே தவிர, எங்களுக்கிருக்கும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் மற்றவர்களுக்கு இல்லை என்று நான் தைரியமாக சொல்வேன். அந்த அளவுக்கு நாட்டிலே பற்றுக் கொண்டவர்கள் நாங்கள்.

'நாடு' என்றால் 'பாரதத்தை' ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? என்று சிலர் கேட்கிறார்கள். நாங்கள் ஏதோ திடீரென்று தேச பக்தர்களாகிவிட்டதுபோல் கருதிக்கொண்டு சிலர் சொல்லுகிறார்.

எங்களுடைய ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், பாராளுமன்ற மேலவையில் பேசுகிறபோது, 'வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும்; நாடு இருந்தால்தான் நாங்கள் பிரிவினை கேட்க முடியும்; எனவே, அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது' என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் நாங்கள் இருக்கிறோம். அரசாங்கம் எந்த எந்தக் கண்ணோட்டத்தோடு எங்களை எப்படி எப்படிப் பார்த்தாலுங்கூட, அவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், நம்முடைய முழு மூச்சு, முழுப் பொறுப்பு, இப்பொழுதிருக்கின்ற முழுப் பிரச்சினை எல்லாம் சீனாக்காரனை விரட்டவேண்டும் என்பதிலே, மற்றக் கட்சிகளைவிட உண்மையிலேயே எங்களுக்கு அக்கறை அதிகம் காரணம், இப்பொழுது எந்த இடத்திற்குச் சென்று எந்தப் பிரச்சினையைப்பற்றிக் கேட்டாலும், 'நாஷனல் எமர்ஜன்சி', என்றுதான் பேசப்படுகிறது. நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமாக, எந்த ஒரு அரசாங்க அலுவலகத்திற்குச் சென்றாலும், 'நாஷனல் எமர்ஜன்சி', என்றே பேசப்படுகிறது.

சீனாக்காரன் விரட்டியடிக்கப்பட்டு விட்டால், நம் நாட்டின் உற்பத்திப் பெருக்கம் போன்ற பலவித அபிவிருத்தி வேலைகள் நல்ல முறையில் நடைபெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எனவேதான், சீனர்களை விரட்டியடிக்கவேண்டும் என்பதிலே, நாங்கள் மற்றவர்களைவிட அதிகக் கவனம் செலுத்துகிறோம். இதை அவரவர்கள் கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். எங்களுக்கு தேச பக்தி ஏற்பட்டுத் தான் இதைச் செய்கிறோம் என்று நினைத்தாலும் சரி, பயந்துதான் காரியங்கள் செய்கிறோம் என்று நினைத்தாலும் சரி அதைப்பற்றியெல்லாம் நாங்கள் கவலைப்படாமல், உண்மையிலேயே இந்த நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்தைப் போக்க நாங்கள் பாடுபடுவோம்.

பிடித்திருக்கும் தீ யார் வீட்டில் என்று பார்க்காமல், அந்தத் தீ யார் யார் வீட்டை அழிக்கும் என்று பார்த்து, யார் வீடு தீப்பிடித்தாலும் அணைக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் எல்லோருக்கும் இருக்கிறது.

28th February 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

ஆக, நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை முதலில் போக்குவதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். மற்றெல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இதற்கு முழு ஆதரவு கொடுத்துவருகிறோம்.

ஊர்க்காவல் படையில் இப்பொழுது ஆள் சேர்க்கும் முறை எந்த அளவுக்கு வெற்றியடையும் என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. இப்பொழுது கணக்குத்தான் காண்பிக்கப்படுகிறது.

ஊர்க்காவல் படை அமைப்பதில் சில அமைப்பு முறை தேவை முதலில் கட்டுப்பாடு தேவை; ஒழுக்கம் தேவை. எந்த நல்ல எண்ணத்தில் அதை அமைக்கிறோமோ அதற்கு மாறாகக் கெடுதலாக அமைந்தாலும் அமையும். 'சிவிக் கார்டு' களைக் கண்காணிப்பதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலைமை முன்பு போலீசு இலாகாவுக்கு இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது இருக்கக்கூடாது என்ற அடிப்படையில் அதற்கு நல்ல பல சட்டங்களை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பெண்களை இதிலே எந்த அளவுக்குச் சேர்க்கலாம் என்பதைப் பற்றி நோக்கும்போது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழ்ப் பெண்கள் வீரத்திலோ, தியாகத்திலோ குறைந்தவர்கள் என்று சொல்ல முடியாது. நல்ல வீரமும், ஊக்கமும் உள்ளவர்கள்தான். ஆனாலும், ஊர்க்காவல் படை அளவில் எந்த அளவிற்கு அது வெற்றிகரமாக முடியும் என்பதைப்பற்றி நான் கொஞ்சம் சந்தேகப்படுகிறேன்.

பெண் போலீசை ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லி, கடைசியில் தகுந்த உயரம், கனம், அளவு உள்ளவர்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், அந்த முயற்சியையும் நிறுத்தி விட்டார்கள். பெண்களை பஸ் கண்டக்டர்களாகப் போட வேண்டுமென்று யோசனை இருந்தது. அதுவும் இப்பொழுது கைவிடப்பட்டு விட்டது.

அப்படியிருக்க, கிராமங்களில் ஊர்க்காவல் படையில் பெண்கள் இருக்கவேண்டுமென்றால் அதிலும் கஷ்டம் இருக்கிறது.

மாதர் சங்கங்கள் ஏதோ பெயருக்குக் கணக்குக் கொடுத்திருக்கின்றனவே தவிர, மாதர் சங்கங்களின் நடைமுறை வேலை திட்டங்கள் என்னவென்று பார்த்தால், அது அவ்வளவு திருப்திகரமாக இருப்பதாகத் தெரியவில்லை. பெண்களைச் சேர்த்துத்தான் ஆகவேண்டும் என்றால், கல்லூரியில் ஏ.சி.சி, என்.சி.சி., போன்ற அமைப்பு இருக்கலாம். ஆனால், கிராமப் பெண்களைப் பொறுத்தவரையில், அது எந்த அளவுக்கு சாத்தியம் ஆகும் என்பதை உண்மையிலே நன்றாகக் கவனித்து, சிந்தித்துப் பார்த்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை மசோதாவை ஆதரித்து நான் பேசுகிறேன். இந்த மசோதாவைப்பற்றி பேசும்போது, பலவித

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [28th February 1963

மான அரசியல் சமாச்சாரங்கள் கூட இதிலே அனாவசியமான முறையில் பேசப்பட்டது. ஆகையால், நான் கூட தைரியத்தோடு பேசலாம் என்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர் : நீங்களும் அப்படிப் பேசப் போகிறீர்களா? (சிரிப்பு)

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : ஆனால், நான் ரொம்ப அனாவசியமாக ஜாஸ்தி நேரம் அதைப்பற்றியே சொல்லாமல் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

அமெரிக்காவில் சுதந்திரப் போர் American War of Indipendence நடந்த காலத்தில், சிடிஸன் டாம்ப்பேய்ன் என்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவருடைய பெரிய பெரிய உரைகள், பெரிய பெரிய 'ரைடிங்ஸ்' இவைகளைப் படித்துப் பார்த்தால், அவர் எப்படிப்பட்ட எழுத்தாளராக அவர் அந்தக் காலத்தில் இருந்தார் என்பதை நாம் தெரிந்துக்கொள்ளலாம். சிடிஸன் டாம்ப்பேய்ன் அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்? "அமெரிக்கன் சுதந்திரத்திற்காகப் போராடுகிற சமயத்தில் கூட 'சம்மர் சோல்ஜர்ஸ்' இருக்கிறார்கள். வெயில் காலத்தில் தேச பக்தியைக் காட்டி, மற்ற காலத்தில் துரோகம் செய்யும் மனப்பான்மை இருக்கிறது. துரோகம் செய்யும் மனப்பான்மை இருக்கக்கூடாது" என்றும், உண்மையான தேச பக்தி எப்படி இருக்க வேண்டும் என்றும் அவர் தம்முடைய கட்டுரைகளில் நல்ல முறையில் எழுதியிருக்கிறார். ஸிடிஸன் டாம்ப்பேய்ன் அவர்களுடைய கட்டுரைகளைப்பற்றி ப்ரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், ப்ரஸிடெண்ட் கென்னடி ஆகியவர்கள் அடிக்கடி நல்ல முறையில் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். சைனாக்காரன் நம் நாட்டில் பெரிய சோதனையை உண்டாக்கியிருக்கும் இந்த நெருக்கடியான நிலைமையில், ஸிடிஸன் டாம்பேய்ன் அவர்களுடைய கட்டுரைகளையும், மற்றும் அவர்களைப் போன்ற பெரியார்களுடைய கட்டுரைகளையும் நல்ல முறையில் நம் நாட்டிலிருக்கும் ஹோம் கார்ட்களுக்குத் தெரியும் அளவுக்கு நல்லதொரு பிரசாரத்தை அரசாங்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஹோம் கார்ட்ஸ் படித்தால் மட்டும் போதாது. சட்டசபையில் இருக்கும் கனம் அங்கத்தினர்கள் எல்லோரும்—எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் மட்டுமல்ல, எல்லோரும்—நல்ல முறையில் படித்தால்தான் உண்மையான தேச பக்தி எப்படி ஏற்பட்டது என்பது தெரியும். சைனாக்காரன் வந்தபோது ஒற்றுமையைக் காட்டுகிறோம் என்று அந்த அளவோடு நின்றுவிடக் கூடாது. உண்மையான தேச பக்தி எப்படியிருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஸிடிஸன் டாம்பேய்ன் போல் இருக்கிறவர்களுடைய கட்டுரைகளையும் அமெரிக்கன் ப்ரஸிடெண்ட் லிங்கன் அவர்களுடைய கட்டுரைகளையும் நல்ல முறையில் படிக்கவேண்டும். நீக்ரோ பிரச்னை சம்பந்தமாக, ஸதர்ன் ஸ்டேட்ஸ் பிரிவினை வேண்டுமென்று எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். லிங்கன் அதற்குக் கொஞ்சங்கூட அசைந்து கொடுக்கவில்லை. யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா

28th February 1963] [திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்]

என்ற அமைப்பை லிங்கன் அவர்கள் கொண்டுவந்தார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதே மாதிரி, நம் நாட்டில் சைனாக்காரன் ஆக்கிமித்திருக்கும்போதுகூட, 'பிரிவினை வேண்டும்' என்று கனவு கண்டுகொண்டேயிருந்தால், அது தவறு என்பதைத் தெரிந்து கொள்ள லிங்கன் செய்த சாதனைகளைப்பற்றி எல்லோரும் நல்ல முறையில் படிக்க வேண்டும். இவைகளைப்பற்றியெல்லாம் ஹோம் கார்ட்ஸ் நல்ல முறையில் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார். அவர்களுக்குப் புராணங்களில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அது எனக்குத் தெரியாது. புராணங்கள் அவர்களுக்கு நல்ல முறையில் தெரியும். நேற்று இன்னொரு விஷயத்தில் பேசும்போது, கிருஷ்ண சந்தான விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, "ஐந்து கிராமங்களையாவது கொடுங்களேன்" என்று கேட்டாராம். அதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாட்டுப் பிரிவினை பேசுகிறவர்கள் கிருஷ்ண சந்தானத்தைப் பற்றிப் பேசினார்களே என்பதற்காகச் சொல்கிறேன். மகா பாரதத்திலிருந்து நான் ஒரு சிறு கட்டத்தைச் சொல்ல விரும்புகிறேன். திரௌபதி மான பங்கம் ஏற்படுகிற சமயத்தில் கேட்டாளாம், "என்னைக் காப்பாற்று, கண்ணா" என்று. கிருஷ்ண பரமாத்மா நினைத்தாராம், திரௌபதி இன்னும் முழுப் பக்தியைக் காட்டவில்லை என்று. முழுப் பக்தியைக் காட்டினால்தான், மான பங்கம் ஏற்படாமல் கண்டிப்பாகக் காப்பாற்றப்படுவாள் என்று நினைத்த பிறகுதான், திரௌபதி இரண்டு கைகளையும் கூப்பினாளாம். (சிரிப்பு) அப்பொழுது கிருஷ்ண பரமாத்மா திரௌபதியைக் காப்பாற்றினார் என்பது மகா பாரதக் கதை அதே மாதிரி எதிர் கட்சியில் உள்ளவர்கள் முழு மனதோடு தேசப் பாதுகாப்புக்கு ஆதரவு காட்டவில்லையென்றால், உண்மையான தேச பக்தியைக் காட்டவில்லையென்றால், மோட்சத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்களுக்கு மோட்சம் கண்டிப்பாக கிடைக்காது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அனாவசியமான அரசியல் கருத்துக்களை இத்துடன் நிறுத்த விரும்புகிறேன். மேற்கொண்டு இந்த ஹோம் கார்டு மசோதாவில் Every employer is bound to give wages என்று இருப்பது ஒரு நல்ல ஏற்பாடு அரசாங்கமும் ஒரு எம்ப்ளாயர் என்ற முறையில் சர்க்காரில் வேலை செய்கிற ஊழியர்களும் இதில் சேர விரும்பினால் எவ்விதமான ஆட்சேபணையையும் அரசாங்கம் சொல்லாது என்று நினைக்கிறேன். ஏற்கெனவே தேச நெருக்கடியை முன்னிட்டு அங்கங்கேயுள்ள அதிகமான சிப்பந்திகளைக் குறைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதனால் இவர்களையும் அம்மாதிரி அனுப்பினால் அரசாங்க வேலை தடைபடலாம் என்று நினைக்கக்கூடும். அதற்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். இப்பொழுதே மதுரைக் கலெக்டர் எல்லா கெஜடெட் சிப்பந்திகளுக்கும் பிஸிகல் ட்ரெயினிங் போல ட்ரில் போன்று எல்லாம் பயிற்சி கொடுக்க ஏற்பாடு

செய்திருக்கிறார். இந்தமாதிரி பயிற்சியை வாரத்திற்கு மூன்று நாள் அல்லது இரண்டு நாள் காலையிலோ அல்லது மாலையிலோ எல்லா சர்க்கார் சிப்பந்திகளுக்கும் அளிக்க ஏற்பாடு செய்தால் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

ஹோம் கார்டு படைக்கு காக்கி யூனிபாரம் தான் இருக்குமென்று நினைக்கிறேன். காக்கி யூனிபாரம் பற்றி இப்போது யாரும் வருத்தமோ ஆட்சேபணையோ தெரிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது. எல்லாம் தேச பக்தியுள்ள படைகள்தான். ஆனாலும் இவர்களுக்கு நேவல் யூனிபாரம் போல் ப்யூர் ஒயிட் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இப்போது ஹோம் கார்டுகளை எப்படி ஒரு ஸ்டாசுடரி பாடியாக அமைக்கிறோமோ அப்படியே கிராமத் தொண்டர் படையையும் அமைக்கவேண்டும். ஒரு ஜி. ஓ. மூலமோ சட்ட மூலமோ கிராமத்தொண்டர் படை, ஹோம் கார்டு படை அமைக்கப்படலாம் என்றாலும் ஹோம் கார்டு போலவே கிராமத்தொண்டர் படையை ஸ்டாசுடரி பாடியாக அமைக்க வேண்டும். நகரங்களில் உள்ள வாலிபர்களுக்குப் பயிற்சி அளிப்பது போலவே கிராமங்களில் உள்ள வாலிபர்களுக்கும் பயிற்சி அளிக்க ஒரு யூத் மூவ்மெண்ட் அமைக்க அரசாங்கத்தில் சட்டம் இருந்தால் நல்லது. ஹோம் கார்டு படைகளுக்கு ஆர்ம்ஸ் ட்ரெயினிங் ஸ்கீம் இருப்பது போல கிராமத் தொண்டர் படைகளுக்கும் அளிக்க வழி இருக்க வேண்டும். இப்போது மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சென்னை, சேலம் முதலிய இடங்களில் ஹோம் கார்டு படை அமைக்க இருக்கிறார்கள். இதைக் கூடிய சீக்கிரம் காலம் தாழ்த்தாமல் ஒவ்வொரு முனிஸிபாலிட்டியிலும் கூட திண்டுக்கல் போன்ற இடங்களிலும் கூட ஆரம்பிக்கக்கூடிய திட்டத்தை அடுத்த பட்ஜெட்டிலாவது வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று. சீனாக்காரன் படையெடுப்பது நமக்கு ஒரு சோதனை. இன்னும் அவன் எந்த வகையில் நமக்குத் துரோகம் இழைப்பான் என்பது நமக்குத் தெரியாது. அவனுடைய ஆக்கிரமிப்புச் செயலைத் தடுக்க ஒரு வேளை ஒரு கோடி வாலிபர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்றால் அதுவே நமக்கு ஒரு பெரிய பிரச்னை. ஒரு கோடி வேண்டாம், 50 லட்சம் பேர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்றால் கூட இது ஒரு ஜைசாண்டிக் ஸ்கீம். இப்படிப் பயிற்சி உடனடியாக அளிக்கவேண்டுமென்றால் நாட்டில் அதற்குத் தக்க ஒரு சூழ்நிலை இருக்கவேண்டும்.

முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் ஆர்ம்ஸ் ஆக்ட் என்று ஏற்படுத்தி தனக்குச் சாதகமாக யாரும் ஆயுதம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அவன் செய்திருந்தான். அச்சட்டத்தையே நாமும் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஒருவர் துப்பாக்கி வைத்துக்கொள்ளவேண்டுமென்றால் கலெக்டருக்கு மனுப்

போட்டு, போலீஸ் விசாரணை எல்லாம் நடந்து, அவருக்கு லைசென்சு வழங்குவது என்று இருக்கிறது. இது மிகவும் சங்கடமான ஒரு நிலை. துப்பாக்கியே பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாத மக்களை ஒன்று திரட்டி உடனடியாக ஒரு கோடிக்கு மேல் பயிற்சி அளிப்பது எப்போதும் கஷ்டம் ஆதலால், இந்த ஆர்ம்ஸ் ஆக்டைத் தளர்த்தி பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள், பொறுப்புள்ள கிராம மனிதர்கள் ஆகியவர்களுக்கு துப்பாக்கி வைத்துக்கொள்ள விரும்பினால் சிக்கலில்லாமல் ஆங்காங்கே லைசென்சு வழங்க ஏற்பாடு செய்யலாம். ஆகவே ஆர்ம்ஸ் ஆக்டையும் கொஞ்சம் தளர்த்த வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் ஒன்று, இன்னும் போதுமான அளவுக்கு பேஸிக் ஸிடிசன் ஷிப் சென்ஸ் நம் நாட்டில் ஏற்படவில்லை. பிரிவினை என்று சொல்கிறபோது அதையும் பத்துபேர் ஆதரிக்கிறார்கள். பணக்காரன் பின்னே பத்துப் பேர், பைத்தியக்காரன் பின்னே பத்துப்பேர் என்கிறபடி பிரிவினை மனப்பான்மையை ஆதரிக்கிறவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய நாட்டில் ஆர்ம்ஸ் ஆக்டைத் தளர்த்துவதும் சங்கடமாக இருக்கும். இதையெல்லாம் கவனித்து என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய கனம் நிதியமைச்சர் அவர்கள் 10-10 a.m. கொண்டு வந்திருக்கின்ற ஊர்க்காவல் படை மசோதா விவாதத்தில் சுவை மட்டுந்தான் இருக்குமென்று நான் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால் இன்றையதினம் வேறு அதிகமான மசோதாக்கள் இல்லையென்ற காரணத்தாலோ, அல்லது இன்னும் தெளிவு பெறும் காரணத்தாலோ எல்லா கட்சி நண்பர்களும் சுவையுடன் கொஞ்சம் சூட்டையும் ஏற்றியிருக்கிறார்கள். இந்த மசோதா சுவையுள்ளதாக மட்டுமல்லாமல், பயனுள்ளதாகவும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நான் வீட்டிலிருந்து கிளம்பினேன். நான் வழக்கத்திற்கு மாறாக சபைக்குப் 10 நிமிஷம் தாமதமாக வந்தேன். தாமதமாக வந்ததற்குக் காரணம், நான் புறப்படும் சமயத்தில், ஆறு தோழர்கள் ஊர்க்காவல் படையில் சேரவேண்டுமென்பதற்காக என்னிடம் சான்றிதழ் வேண்டுமெனக் கோரி வந்தார்கள். அவர்கள் என்னுடைய தொகுதியிலே இருப்பவர்கள். அவர்களைப் பற்றி விசாரித்து சான்றிதழ் வழங்கிவிட்டு வரக் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. நான் இங்கே வந்த நேரத்திலே, கனம் அமைச்சர் அவர்கள் மசோதாவை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த மசோதாவுக்கு எங்கள் கட்சியின் சார்பில் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். சேலம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இந்தப் படையிலே 'ஒரு கட்சிக்காரர்களைச் சேர்க்கவேண்டாம், அல்லது எல்லாக் கட்சிக் காரர்களையும் சேர்க்கவேண்டாம்' என்ற பிரச்னை இல்லை. இந்த மசோதாவினுடைய முக்கியமான நோக்கம் இந்த நாட்டின் தனி

மனிதர்களின் உயிர், உடைமை, பொது உடைமைகள், மக்களுடைய பொதுப்பாதுகாப்பு காக்கப்பட வேண்டுமென்பதுதான். உதவி போலீஸ் படையில் சேருவதற்காகக் கையெழுத்து வேண்டும் என்று இன்று காலையிலே வந்தவர்கள் என்னிடம் கேட்டார்கள். ‘பெயரிலே என்ன இருக்கிறது?’ என்று அடிக்கடி கனம் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஊர்க்காவல் படைக்கு ‘உதவிப் போலீஸ் படை’ என்று நடைமுறையில் அர்த்தம் ஏற்படாத வகையில் கவனம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்த நெருக்கடி நிலையில் மக்களுடைய உரிமைகளையும், உடைமைகளையும், மற்றவைகளையும் பாதுகாக்க வேண்டுமென்பது பற்றிப் பலரும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் அவற்றைத் திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நெருக்கடி என்றால், கொள்ளை நோய் போன்ற வியாதிகள் பரவினாலும் நெருக்கடிதான்; வெள்ளம் வந்தாலும் நெருக்கடிதான், தீ பிடித்துவிட்டாலும் நெருக்கடிதான், யுத்த நெருக்கடி என்று மட்டுமல்ல, இந்த மாதிரியான நெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம் நல்ல முறையில் பணி புரியும் வகையில் இந்த ஊர்க்காவல் படை செயலாற்றவேண்டும். இந்தப் படையிலே சேரவேண்டுமென்ற உற்சாகம் நாட்டிலே இன்றைய தினம் மிகுந்த அளவிலே ஏற்பட்டிருக்கிறது. படித்தவர்களும், எம்.எல்.ஏ.-க்களும், பெண்களும் கூட இதிலே சேர முன் வருகிறார்கள். மக்களுடைய உற்சாகம், இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டது போல், ‘தேசபக்தியிலே யார் யாருக்கு மாற்றுக் குறைவு, எத்தனை காரட் அளவு தேசபக்தி இருக்கிறது’ என்ற ஆராய்ச்சியிலே இல்லை. இந்த நாட்டிலே பிறந்து, இந்த நாட்டிலே வளர்ந்து, இந்த நாட்டிலே வாழ்கின்ற எல்லோருக்கும் இதிலே அக்கறை இருக்கிறது.

நேற்றையதினம் பாராளுமன்றத்தில் நம்முடைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் பேசுகின்றபோது, ‘இப்போது நாட்டிலே உள்ள நெருக்கடி நிலைமை தீரவில்லை, இன்னும் 15 நாட்களில் என்ன நிலைமை ஏற்படும் என்று சொல்ல முடியாது, பல ஆண்டுகளுக்குக்கூட இந்த நெருக்கடி நிலைமை நீடிக்கலாம்’ என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு உள்ள உலக அரசியல் நிலையில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைத்தான் சந்தித்துத் தீரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையில் ஊர்க்காவல் படையை நிரந்தரமான படையாக அமைக்கவேண்டுமென்பதற்கு எங்களுடைய கட்சியின் முழு ஆதரவும் உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னதான் தேசபக்தி, கட்சிப் பற்று என்று சொன்னாலும் பொதுச் சொத்துக்களின் மீது, பொது அமைப்புகளின் மீது நமக்கு இருக்கிற அக்கறை குறைவாகத்தான் இருக்கிறது.

என்னைப் பற்றி எடுத்துக் கொண்டால், எனது அக்கறை என்னுடைய குடும்பத்தில் பிதுர்ரார்ஜித சொத்தாக கிடைக்கும் நான்கு, ஐந்து ஏக்கரா நிலமோ, வீடோ என்ற எல்லையிலே

முடிந்து விடுகிறது. கனம் அமைச்சர் அவர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குச் சொந்தமான நில, புலன் அந்தஸ்துதான் அவர்களுடைய மனதிலே இருக்கும். நெய்வேலி நிலக்கரியைப் பார்க்கிறபோதோ, காவிரி ஆற்றைப் பார்க்கிறபோதோ, நிலகிரி மலையைப் பார்க்கிறபோதோ, அது நம்முடைய சொத்து அதற்கு நாம் உரிமையாளர்கள் என்ற எண்ணம் வருவதில்லை (**கனம் திரு எம் பக்தவத்சலம்**: இமயமலையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.) இமயமலையும் நம்முடைய சொத்துதான். அதிலே என்னுடைய பாத்தியதையை என்றையதினமும் நான் விட்டு விட மாட்டேன். அந்த பாத்தியதை இருக்கின்ற காரணத்தினால்தான், எல்லைப் புறத்திலே இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையைச் சமாளிப்பதற்கு இவ்வளவு ஆர்வத்துடனும், உணர்ச்சியுடனும் மனப்பூர்வமான ஒத்துழைப்பை வலிய வலிய வந்து, ‘உங்களைக் கூடச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம்’ என்று ‘எங்கள், உங்கள்’ என்று கனம் முதலமைச்சர் வேறுபடுத்திப் பேசுகின்ற அந்த நிலையிலும் கூட . . . .

* **கனம் திரு. கு. காமராஜ்**: கனம் அங்கத்தினர் அவர்கள் மீண்டும் நான் சொன்னதைத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார். நண்பர் அவர்கள் பேசும்போது, ‘கம்யூனிஸ்ட் கட்சியைப் பாதுகாப்புக் குழுவில் சேர்த்துக் கொண்டதைப் பற்றிக் குறிப்பிட்டார். மற்ற மாகாணங்களில் எல்லாம் அந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளாதபோது இந்த மாகாணத்தில் மட்டும் அந்தக் கட்சியினரைச் சேர்த்துக் கொண்டதில் ஏதோ உள்நோக்கம் இருக்க வேண்டுமென்ற முறையிலே பேசினார். எப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குப் பாரதத்திடம், இந்தியாவிடம் பற்று இல்லாவிட்டாலும் கூட, இந்த நெருக்கடியான நிலைமையில் யுத்த முயற்சிக்கு ஒத்துழைக்கிறோம் என்று சொல்வதால் அந்தக் கட்சியை நம்புகிறோமோ அதே போன்று கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும் இந்தத் தேசத்தின் பாதுகாப்புக்கு ஒத்துழைக்கிறோம் என்று சொன்னால் அந்தக் கட்சியையும் நம்புகிறோம். தனிப்பட்ட ஆளை நாங்கள் நம்பவில்லை. தனிப்பட்டவர்கள் தவறு செய்யலாம். தனிப்பட்டவர்களுக்கும் கட்சிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் மனப்பூர்வமாக ஒத்துழைக்கிறோம் என்று சொன்னால், நம்பத்தான் வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். பெருந்தன்மையுடன், வித்தியாசமில்லாமல் எல்லோரையும் சேர்த்துக்கொண்டதற்காக ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன்.

இன்றைக்குப் பொதுச் சொத்துக்களின் மீது பொது உடைமைகளின் மீது மக்களுக்குப் பற்றுதல் குறைவாக இருக்கிறது. அந்தப் பற்றுதலை அதிகப்படுத்தும் பெரும் காரியம் இந்த ஊர்க்காவல் படைக்கு இருக்கிறது. அக்டோபர் மாதம் வந்தால் சென்னை நகரம் தீவு போல வெள்ளத்தில் மூழ்கி விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்த மாதிரியான நெருக்கடி

[திரு. கே. ஏ. மதியழகன்] [28th February 1963

சமயத்திலும், அதனைச் சமாளிப்பதற்கான பணிகளில் இந்த ஊர்க் காவல் படை செயலாற்றவேண்டும். நம்முடைய பகை நாடு என்று சொல்லப்படும் சீன நாட்டில், சிறு குழந்தைகளுக்கு நமது நாட்டில் பாடப் புத்தகத்தில் கடவுள் வணக்கம் ' தேசபக்தி ஆகியவற்றை சொல்லிக் கொடுப்பது போல, பொதுச் சொத்துக்களின் மீது பற்றுதலை . சொல்லிக்கொடுக்கிறார்கள். அங்கே குழந்தைகளுக்கு அந்த உணர்ச்சியினை ஏற்படுத்தி வருகிறார்கள்.

உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கதை சொல்வதில் எனக்குப் பழக்கம் கிடையாது, கடந்த உலக யுத்தத்தின் போது இங்கிலாந்து நாட்டு மக்களுடைய வீராவேசமும், உறுதிப்பாடும், மனத் 'தெளிவும் எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். லண்டன் நகரம் சாம்பல் மேடு ஆகிவிடுமோ என்ற நிலைமை ஏற்பட்ட சமயத்திலும், லண்டன் நகரத்து வாலிபர்கள் மிகப் பயங்கரமான விபத்துக்களையெல்லாம் உற்சாகமாகவும், அற்புதமாகவும் சமாளித்தார்கள். போர் வெறியனான ஹிட்லர் பெர்லின் நகரிலிருந்து 200 போர் விமானங்களை அன்றாடம் அனுப்பி லண்டன் மாநகரத்தில் இடைவிடாது 57 நாட்கள் குண்டுகளை வீசச் செய்தான்.

உலகத்திலேயே அதிக ஜனத் தொகை கொண்ட, ஏறத்தாழ 70, 80 லட்சம் ஜனத்தொகை கொண்ட பெரிய நகரம் லண்டன் மாநகரம். மிக ரமணீயமான நகரம் எல்லா வசதிகளும் பொருந்திய நகரம். அங்கு சாக்கடைக் குழாய்களும் குடிதண்ணீர் குழாய்களும் ஒன்று சேர்ந்து விட்டால் என்ன செய்வது என்ற நிலையெல்லாம் ஏற்பட்டது அந்த நிலைமையிலும் அந்த நாட்டிலே இருக்கிற வாலிபர்கள் உள்ளம் தளராமல், வீட்டை மறந்து தங்களுடைய முழு ஆற்றலையும் கொண்டு சமாளித்து நின்றிருக்கிறார்கள். ஒரு நாள் லண்டன் மாநகரத்தில் ஒரே நேரத்தில் 1,500 இடங்களில் குண்டுகளை ஹிட்லர் ஏவினான். 1,500 இடங்கள் தீப்பற்றி எரிந்தன.

லண்டனில் உள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற கட்டிடங்கள், மாதா கோவில்கள், ரெயில்வே நிலையங்கள், துறை முகப்பகுதிகள் இவைகள் எல்லாம் பாழ்படுத்தப் பட்டபோது அங்குள்ள வீர இளைஞர்கள் காட்டிய வீராவேசத்தை இன்று உணர வேண்டும். நல்ல உறுதிப்பாடு, தூய ஆர்வம் இவை கொழுந்து விட்டெறிய வேண்டும் நம் காவல் படையினர் இடத்தில். இன்னொன்றை நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நாம் எல்லைப் புறத்திலிருந்து தூர நிற்கிறோம் என்று யாரும் கருதி விடக் கூடாது. நம் மாநிலம் மூன்று பக்கத்திலும் கடலால் சூழப் பட்டிருக்கிறது. உலக அமைப்பிலும் நம் மாநிலம் எல்லைப் புற மாநிலமாக இருக்கிறது. கௌகாத்தியைத் தலைநகராகக் கொண்ட அஸ்ஸாம் போல் நம் மாநிலமும் எல்லைப் பிரதேசம்தான். உலகச் சூழ்நிலையை எடுத்துக் கொண்டாலும் நம் மாநிலம் ஒரு எல்லைப் பிரதேசமாகத்தான் இருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. ஆகவே சாதாரண காலங்களில் இருப்பதைவிட இந்த நெருக்கடி காலத்தில் மிகவும் கண்காணிப்போடு இருக்க வேண்டும். நாம் தவறாக கணக்கு போட்டு விடக் கூடாது. நாம்

28th February 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

மூன்று பக்கத்திலும் கடலால் சூழப்பட்டிருக்கிறோம். இலங்கைத் தீவு நம் மாநிலத்திற்கு அருகில் இருக்கிறது. திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா சீனாவிற்கும் நம் நாட்டிற்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்த தலைமை தாங்கி நிற்கிறார்கள். அதை நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை. நாம் இந்த நெருக்கடி நேரத்தில் கண்காணிப்பாக இருக்கவேண்டும் என்று கூறக் காரணம் சிறிது நாட்களுக்கு முன்பாக அங்கு நடந்தவைகளை நாம் நினைவில் கொண்டுவந்தால் தெரிய வரும். இன்று சர்வதேச உறவில் இலங்கைக்கும் நமக்கும் நல்ல நட்புறவு இருக்கிறது என்றிருந்தாலும் தற்காப்பிற்கு நாம் எப்போதும் தயாராக இருத்தல் வேண்டும். நான்கு நாட்களுக்கு முன்னதாக இலங்கை நாட்டில் சீனா கப்பல் தளத்தை அமைக்குமோ என்ற செய்தி பத்திரிகையில் போடப்பட்டு சீனா நாட்டு தூதராலயத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கை கிழக்குப் பகுதியில் கப்பல்கள் தள பகுதிகளை படம் பிடித்ததாக இன்றைய தினம் பத்திரிகை கூறுகிறது. இலங்கை நாடு நமக்கு நட்புரிமை உள்ள நாடுதான். இருந்தபோதிலும் நாம் நம் நாட்டைப் காப்பதில் கண்காணிப்பாக இருக்கவேண்டும். நாம் யாருடனும் போருக்கு போகவில்லை. ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் நம் மாநிலத்திற்கும் நம் முதல் அமைச்சர் அவர்களுக்கும் பிரத்தியேகமான கடமை இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு நடந்தவைகள் நியூ யார்க் கிரானிக்கில், மாஞ்சஸ்டர் கார்டியன், டெய்லி டெலிகிராப் போன்ற பத்திரிகைகளில் வந்திருந்தன, அவை என்னிடம் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் ஊரடங்குச் சட்டம் வந்தபோது அங்குள்ள தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டன, பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். திருகோணமலை, அனுராதா புரம், மட்டக் களப்பு, யாழ்பாணம் போன்ற இடங்களில் உள்ள தமிழர்கள் மிகவும் அல்லல்களுக்கு ஆளாக்கப் பட்டனர். தொண்ணூறு லட்சம் இலங்கை மக்களில் 30 லட்சம் பேர் தமிழ் பேசும் மக்கள். இது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

MR. SPEAKER : The hon. Member is going too far from the subject.

திரு. கே. ஏ. மதியழகன் : நாம் ஊர்காவல் படை அமைக்கும் போது மிகவும் கண்காணிப்போடு இருத்தல் வேண்டும். இந்த நாட்டு சுதந்திரத்திற்கும் மக்களின் எதிர்காலத்திற்கும் ஊர்க் காவல் படைக்கும் நிறைய சம்பந்தம் இருக்கிறது. இந்த ஊர்க் காவல் படை அமைப்பை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். நாம் இதை அவநம்பிக்கையுடன் ஆரம்பிக்க வேண்டாம். என் கட்சியைப் பொறுத்த வரையில் அவநம்பிக்கை இல்லை, தூய நோக்கம் இருக்கிறது. நல்ல வகையில் இதன் நோக்கங்கள் நிறைவேற எல்லாப் பகுதியினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு கொண்டு இந்த மசோதாவை வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

* திரு. டி. எல். சசிவர்ண தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன் வந்திருக்கும் இந்த மசோதாவை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். இதன் மீதுள்ள விவாதம் இங்கு

[திரு. டி. எல். சசிவர்ண தேவர்] [28th February 1963

நடக்கும் விவாத முறையில் நடக்காமல் எல்லோரும் சுமுகமாக ஒப்புக் கொண்டிருக்க வேண்டிய ஒரு மசோதா இது. ஆனால் சும்மாக் கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்று சொல்வதுபோல் திரு. மாதா கவுடர் அவர்கள் ஊறி விட்டார்கள். கனம் மாதா கவுடர் அவர்கள் எப்போதும் சங்கு ஊதுவதில் கெட்டிக்காரர் அவர் அப்படி ஊதியதால்தான் சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது. இங்கு பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டன. கனம் முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்புக் கமிட்டியில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்தது பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குறைப்பட்டார்கள். இன்று திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினரை மாற்று கண்ணோடு பார்த்தாலும் சென்ற காலத்தை அவர்கள் மறந்து விட்டார்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ்காரர்களோடு சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டதை யாரும் மறந்துவிட முடியாது. அவர்களின் தேசபக்தியை யாரும் குறை கூற முடியாது. ஆனால், இன்று ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கிறது. கம்யூனிஸ்ட் கொள்கையைக் கடைப்பிடிக்கும் சீனா இன்று நம் நாட்டை ஆக்கிரமிப்பதால் கம்யூனிஸ்டுகளை சந்தேகக் கண்களோடு பார்க்கிறோம். அவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக பாடு பட்டதை யாரும் மறுக்க முடியாது, அதைக் குறைவு படுத்தவும் முடியாது. இன்று சிறையில் இருக்கும் கம்யூனிஸ்ட்களானாலும் சரி மற்றவர்களானாலும் சரி அவர்கள் சுதந்திரத்திற்காக பாடுபட்டதை மறக்க முடியாது. அதே சமயத்தில் அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எப்படி இருந்தார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்தக் காலத்தில் அந்த இயக்கத்திற்காக அவர்கள் ஒரு நாள்கூட ஒரு விரலைக்கூட ஆட்டவில்லை. இதை நான் சொல்லும்போது அவர்கள் மனதைப் புண்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. அன்றைய தினம் அவர்கள் கொள்கை அப்படி இருந்திருக்கலாம். இன்று அது மாறியிருக்கலாம். அடுத்தபடியாக இந்தப் படையில் யார் யாரை சேர்க்க வேண்டுமென்ற பிரச்னை இல்லை. யார் யாரை சேர்க்க வேண்டுமென்று பார்த்து அதிகாரிகள் சேர்த்துக் கொள்வார்கள். இன்று நம் நாடு ஆபத்தில் சிக்கி இருக்கிறது. ஒரு நாடு எப்படியிருக்க வேண்டுமென்று நாயனார் அவர்கள் சொல்லும்போது,

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு"

என்று கூறியிருக்கிறார்கள்.

படைக்கு முதல் மதிப்பு கொடு என்று சொல்கிறார் நாயனார். சென்ற 17 ஆண்டுகளாக படைக்கு முதல் மதிப்பு கொடுத்திருந்தால் இன்று இந்த ஆபத்து நமக்கு வந்திருக்காது. அப்படி படைக்கு நாம் போதுமான அளவு மதிப்பு கொடுக்கிறோமா என்றால் இல்லை என்று வருத்தத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. அப்படி கொடுத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது. சென்றதை நாம் மறந்து விடலாம். அதற்கு அடுத்தபடி உள்ளது குடி. அது சம்பந்தப்பட்ட காரியங்களை. கவனிக்க ஆரம்பித்

28th February 1963] [திரு. டி. எல். சசிவர்ண தேவர்]

தோம். படைதான் முக்கியம் என்பதை நாம் அறிய சீனாக்காரன் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறான். இந்த மாதிரி அவர்கள் படையெடுப்பு செய்திருக்காவிட்டால் அந்த எண்ணம் நமக்கு வந்திருக்காது. நாம் மேலும் மேலும் திட்டங்கள் போட்டுக் கொண்டு இருப்போம். இரண்டாவது நமது போர்வீரர்களை குறைவாக நினைத்துவிட முடியாது. உலகத்திலேயே மிகவும் சிறந்த பெயர் வாங்கியவர்களாகவும், உலகமே கிடு கிடுக்கக் கூடிய வகையில் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இதை நாம் நிச்சயமாக நம்பலாம். இந்த ஊர்காவல் படை சம்பந்தப்பட்டவரையில் இது எதற்காக ஏற்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, ஏதோ, ஒரு சிறிய பயிற்சி மட்டும் கொடுப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகத்தெரிகிறது. என்னுடைய கருத்து என்னவென்றால் இதில் எத்தனை பேர்களை சேர்த்தாலும் அவர்களுக்கெல்லாம் நல்ல முறையில் ராணுவப் பயிற்சி கொடுக்கவேண்டும். இதற்காக செலவு ஏற்பட்டாலும் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். ராணுவச் செலவு எத்தனை ஆனாலும் அது ஒரு நாளும் வீண் போகாது. சிறந்த வீரர்களாக பயிற்சி கொடுத்து ரிசர்வில் வைத்திருந்தாலும் கூட, அவர்களை தேவைப்படுகிற நேரத்தில் பட்டாளத்திற்கும், போர் முனைக்கும் அனுப்பலாம். ஆகவே இதில் சுருக்கமாக செலவு செய்து அவசரகாலத்தில் மட்டும் பயிற்சி கொடுப்பதால் அவர்களை அங்கேயும் அனுப்ப முடியாமல் இங்கேயும் அனுப்ப முடியாமல் இருக்கவேண்டிய நிலை ஏற்படும். இப்போது 20 ஆயிரம் பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்குப்பதிலாக 10 ஆயிரம் பேர்களுக்கு கொடுப்பதாக இருந்தாலும் போதும். நல்ல முறையில் பயிற்சி கொடுத்தால் அவர்களை உள்நாட்டுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். வெளிநாட்டுக்கும் அனுப்ப முடியும். இதில் கொஞ்சம் அதிகமாக செலவு செய்தாலும் அதைப்பற்றி கவலைப்பட்டுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இரண்டாவது, முன்னால் எல்லாம் ஏ.ஆர்.பி. முதலிய படைகளை வைத்துக்கொண்டிருந்தார்கள். முக்கியமாக நகரங்களில் தான் வைத்துக்கொண்டிருந்தார்கள். கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. காரணம் கொள்ளை போன்றவைகள் கிராமங்களில் நடைபெறுவது இல்லை, நகரங்களில்தான் இம்மாதிரிப்பட்ட தவறான சக்திகள் செயல்படுகின்றன. நகரங்களில் எல்லா மக்களும் கூடி வாழ்கிறார்கள். பல தீய வேலைகள் எல்லாம் நகரங்களில் தான் பெரும்பாலும் நிகழுகின்றன. கிராமங்களில் ஜாஸ்தியாக பார்க்க முடியாது. இப்போது நாம் அமைக்கப்படப் போகும் படையைப் பொறுத்த வரையில் கிராமங்களில் உணவு உற்பத்தி போன்றவைகளுக்கெல்லாம் உபயோகிக்கப்போவதாக தெரிகிறது. என்னுடைய கருத்து, இதற்கெல்லாம் இந்த ஹோம் கார்டை உபயோகப்படுத்தவேண்டிய தேவையில்லை என்பது தான். அதற்கு தனியாக பிளாக் டெவலப்மென்ட் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தனியாக இருக்கிறார்கள். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். ராணுவப் பயிற்சி பெறும் இவர்களை சாதாரணமாக இருக்கக்கூடிய உணவு உற்பத்தி, உர உற்பத்தி இவைகளில் ஈடுபடுத்த வேண்டாம். (குறுக்கீடு). இவர்கள் உபயோகப்படுத்தப்படவில்லை என்றால் வில்லேஜ் வாலன்டியர் என்று சொல்லப்

[திரு. டி. எல். சசிவர்ண தேவர்] [28th February 1963

படுபவர்கள் உபயோகப்படுத்தப்படுவார்கள் என்று சொல்லப்பட்டது, அதை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. பொதுவாக ராணுவ வீரர்களாக இருப்பவர்களுக்கு ஸிவிக் ரீதியான பயிற்சி வேண்டாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் வருங்காலம் எப்படியிருக்கப்போகிறது என்று தெரியவில்லை. ஆனால் எந்தவிதமான ஆபத்து வந்தாலும் அதை எதிர்த்து நிற்க நாம் தயாராகயிருக்கிறோம். நாம் தேசபக்தியில் ஊறிப்போன மக்கள் அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டு மக்கள் எந்தநிலையிலும் தலை நிமிர்ந்து நிற்பார்கள் என்பதை நாம் எத்தனையோ முறை கண்டிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற உணர்ச்சியை நல்ல முறையில் வாய்க்காலிட்டு பெருக்கவேண்டும், அவ்விதம் செய்வோமானால் நமக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். அதற்கு இந்த மசோதா வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமீபத்தில் நடந்த எல்லைப் போராட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து அனேக போர்வீரர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள். பலர் இறந்து போயிருக்கிறார்கள். பலர் கைதிகளாகவும் இருக்கிறார்கள். இதில் முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, மற்ற மாநில அமைச்சர்கள் போர் முனைக்குச் சென்று போர்முனையில் இருக்கும் வீரர்களுக்கு ஆறுதல் கூறி வருகிறார்கள். ஆனால் நம்முடைய மாநில கனம் முதலமைச்சர் அவர்கள் இதுவரை அங்கு போனதாகத் தெரியவில்லை, அவர்களுக்கு நேரம் கிடைக்காததுதான் காரணமாய் இருக்கலாம். போகவேண்டாம் என்ற எண்ணம் நிச்சயமாக இருக்காது. ஆகவே அவர்கள் போர் முனைக்குச் சென்று நமது நாட்டுப் போர் வீரர்களை சந்தித்து, அவர்களுக்கு உற்சாகம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அமைக்கப்படவிருக்கும் ஊர்காவல் படை சம்பந்தப்பட்ட மட்டில் இதில் அரசியல் சர்ச்சைகளுக்கு இடமில்லாத வகையில், எல்லா மக்களும் இதில் பரிபூரணமாக ஒத்துழைக்கக் கூடியவகையில் இந்த மசோதாவை செயல் படுத்தவேண்டும், அதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி (பண்டாரம்)" என்று என்னைப்பற்றி குறிப்பிட்டார். நான் மலைப்பகுதியிலிருந்து வந்திருக்கிறேன். வெள்ளைத்துணிகள் தான் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். என்னைப் பார்த்தால் பண்டாரம் என்று சொல்ல முடியாது. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் போட்டிருக்கின்ற துணியைப் பார்த்தால் காவி உடைபோலவே இருக்கிறது, அவர்களை வேண்டுமானால் பண்டாரம் என்று சொல்ல முடியும். ஆகவே என்னைப் பண்டாரம் என்று சொல்ல முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் . . . (சிரிப்பு)

28th February 1963]

கனம் சபாநாயகர்: ஆண்டி அல்லது பண்டாரம் என்பது உயர்ந்த ஸ்தானம். கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்களுக்கெல்லாம் சீக்கிரத்தில் அது கிடைக்காது . . . . (சிரிப்பு)

* திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் இந்த சபை முன் வைக்கப்பட்டிருக்கிற ஊர்காவல் படை மசோதாவை முழு மனதுடன். ஆதரிக்க இந்தச் சபை கடமைப்பட்டிருக்கிறது. இந்த மசோதா எவ்வளவு முக்கியமானது, அவசர அவசியமானது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். நாம் பல காலம் போராடி, பல தியாகங்களைச் செய்து பெற்ற சுதந்திரத்திற்கு, இன்று ஆணவம் பிடித்த சீனர்களால் ஏற்பட்டிருக்கும் அபாயத்தை என்ன பாடு பட்டாகிலும் எப்படியும் சமாளிப்போம் என்பதற்கு ஓர் அறிகுறியாக இந்த மசோதா இன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தியா-சீனா பாய்-பாய் என்று வாய் வேதாந்தம் பேசி, பஞ்ச சீலத்தை எல்லாம் பஞ்சென்று காற்றில் பறக்கவிட்டுவிட்டு, வஞ்சகம் புரியும் சீனர்களை எப்படியும் நம் மண்ணிலிருந்து விரட்டி அடிப்போம் என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டுக்கு அரும்பாடு பட்டு, பல தியாகங்களை செய்து சுதந்திரம் வாங்கிக்கொடுத்த தலைவர்கள் இருக்கின்ற இந்த வாழ்நாட்களிலேயே, இந்த பொல்லாத சீனர்கள் ஆக்கிரமித்தது நல்ல காலம் என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. பெருந் தியாகங்களை செய்து, தியாகத் தீயில் குளித்தெழுந்திருக்கின்ற சுதந்திரத் தலைவர்கள் வாழ்நாளிலேயே இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருப்பதால், இதை எந்தவிதத்திலும் சமாளித்து, நம் நாட்டிலுள்ள 45 கோடி மக்களையும் காப்பாற்றியே தீருவார்கள் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை. தலைவர்கள் எப்போதுமே நமக்கு வழி காட்டுவார்கள். நாம் ராணுவ வீரர்களைப் போன்று, சுடு என்றால் சுடுவோம், செய் என்றால் செய்வோம், செத்துமடி என்றால் செத்து மடிவோம் அந்த முறையில் நாட்டு மக்கள் அனைவரும், இந்தச் சபையிலுள்ள உறுப்பினர்கள் உட்பட அனைவரும் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாக இந்தச் சபைக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம் நாட்டில் சீன ஆக்கிரமிப்புக்குப் பிறகு எழுந்திருக்கின்ற விழிப்பும் உணர்ச்சியும் உலகில் வேறு எந்த பகுதியிலும் இருக்க முடியாது. உதாரணமாக கிராமங்களில் நடக்கின்ற சில நிகழ்ச்சிகளை என்றால் எடுத்துச்சொல்லாமல் இருக்க முடியாது. பள்ளிப்பிள்ளைகளைப் பார்க்கும்போது, அவர்களில், சிலர் சீனாக்காரர்களாகவும், சிலர் இந்தியர்களாகவும் நினைத்துக்கொண்டு சண்டைபோடுகிறார்கள். இவ்விதம் சண்டைப்போட்டு சீனாக்காரர்கள் கீழே விழுவதையும், இந்தியர்கள் ஜெயிப்பதையும் அதன் பின்னால் அனைவரும் சேர்ந்து பாரதம் வாழ்க என்று சொல்லுவதையும் நாம் தினந்தோறும் கண்டுகொண்டிருக்கிறோம். இவ்விதம் சின்னஞ்சிறு சிறார்கள்

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [28th February 1963

உள்ளத்திலிருக்கின்ற உணர்ச்சி நம் நாட்டிலிலுள்ள 45 கோடி மக்களின் உள்ளத்திலும் இன்று ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் நமது நாட்டில் சிலருடைய மனோபாவம் . . . . . .

MR. SPEAKER : The Hon. Members may come to the Home Guard Bill under discussion. The Hon. Member is making a wide 'Prasangam'. There is no time (Laughter).

திரு. டி. கார்ச்சா கவுடர் : I shall come to the point, Sir, நாட்டிலுள்ள மக்களை குழப்புகின்ற வகையில் பேசிவருகிறார்கள். நல்லமுறையில் ஹோம் கார்டுகளை ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் எண்ணுகின்ற நேரத்தில் சிலர் இதைப்பற்றி தவறாக பேசி வருகிறார்கள். ஆனால் இவ்விதம் பேசுபவர்களின் பேச்சு மக்களுடைய மத்தியில் செல்லாக்காசாக ஆகி வருவதை அவர்களும் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த ஊர்க்காவல் படை விஷயமாக நான் கூறிக் கொள்ள விரும்புவது, இப்போது இந்தப் படை முக்கியமான நகரங்களில் மட்டுந்தான் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் நகரங்களில்தான் ஏற்படுத்த உத்தேசித்திருந்தாலும் கிராமங்களில் இந்த உணர்ச்சி சுடர் விட்டு எழுகின்றது. ஆகவே இந்த ஊர்க்காவல் படையை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஏற்படுத்தவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் ஏற்படுத்துவதன் மூலமாக கிராமங்களிலுள்ள மக்களின் உணர்ச்சியை தட்டி எழுப்புவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ஊர்காவல் படை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வயது வரம்பு இந்த மசோதாவிலே குறிப்பிடப்படவில்லை. எந்த வயதிலிருந்து எந்த வயது வரையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று குறிப்பிடப்படவில்லை. 21 வயதிலிருந்து 45 வயது வரையில் உள்ள அனைவருக்கும்—ஆண்கள் பெண்கள் அனைவருக்கும்—பயிற்சி கொடுத்தால் நலம் என்று நினைக்கிறேன்.

கடைசியாக அரும் பெரும் தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சமீபத்தில் கூறிய இரண்டு கருத்துக்களைக் கூறிக்
10.30 a.m. கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். இன்று நம்மிடம் ஆயிரக்கணக்கான விமானங்கள் இல்லாமல் போனாலும், பாரத் நாட்டில் உள்ள 45 கோடி மக்கள் உள்ளமும் உறுதி படைத்த உள்ளமாக உறுக்கு உள்ளமாக மாறினால் அதுவேபோதும் என்று கூறியிருக்கிறார். நம்மிடம் ஆயுதங்கள் பரவலாக இல்லாமல் போனாலும், நம்முடைய பற்களாலும் நகங்களாலும் போராடி சீனர்களை வெளியேற்றுவோம் என்று கூறியிருக்கிறார். இந்த இரண்டு ஆலோசனைகளை இந்த மாமன்ற அங்கத்தினர்களும், நாட்டு மக்களும் மனதில் நல்ல முறையில் பதித்துக் கொண்டு, வெறி பிடித்த சீனனை வெளியேற்றக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

28th February 1963]

* *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :* கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த உள்நாட்டு ஊர்க்காவல் படை மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

இங்கே கனம் அங்கத்தினர்கள் பேசும்போது இந்த ஊர்க்காவல் படை எதற்காக அமைக்கப்படுகிறது. அதனுடைய நோக்கம் என்ன, அதனுடைய காலம் தவறி அமைந்து விட்டோமே என்றெல்லாம் சற்று குறை கூடப்பட்டுக்கொண்டார்கள். இந்தப் படை அமைப்பதன் நோக்கமே. நாட்டில் முதலில் தேசிய ஒருமைப்பாடு உருவாக்கவேண்டும், பிரிவினை சக்திகளுக்கு இடம் கொடுத்துக்கொண்டு பேசுகிறவர்களைக் கண்காணிக்கவேண்டும், இரண்டாவது நாட்டின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், மூன்றாவதாக நாட்டில் நடக்கக்கூடிய விஷயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்ற நோக்கங்களோடு இந்த ஊர்க்காவல் படையை அமைக்கிறோம். அது மாத்திரமல்லாமல், எதிர் பாராதவிதமாக இந்த நாடு, உலக நாடுகள் யாவும் அதிசயிக்கத்தக்க அளவில் முன்னேறியிருக்கிறது. இருந்தாலும் சீனாக்காரன் நம்மை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறான் என்றால் அவனுக்கு நாம்தான் இடம் கொடுத்திருக்கிறோம் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம் பாரத நாட்டில், குறிப்பாக தமிழகத்தில் ஒற்றுமை இல்லாமல் ஆங்காங்கு பிரிவினை சக்திகள் கிளம்பி விட்ட காரணத்தினால், நாம் சென்று ஆக்கிரமிப்பு செய்தால் நமக்கு அவர்களெல்லாம் பக்கபலமாக இருப்பார்கள் என்று எண்ணி அவர்கள் ஆக்கிரமித்திருக்கலாம். பிரிவினை பேசக்கூடிய கனம் அங்கத்தினர்களுக்கு நல்ல பக்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த பக்தி—இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய பக்தி—குறுகிய கால பக்தியாக இல்லாமல் இந்தியா இருக்கும் வரையில் . . . . . .

கனம் சபாநாயகர் : எல்லோரும் இதைத் தானே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய பக்தி; எப்போதும், யாரும் படையெடுத்துவிட முடியாத, ஆக்கிரமிப்பு செய்துவிட முடியாத பக்தியாக நீண்ட காலம் இருக்கவேண்டுமென்று அவர்களுக்காக நான் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்துகொள்ளுகிறேன்.

இந்த ஊர்க்காவல் படை நல்ல முறையில் இயங்கவேண்டும். இது நல்ல முறையில் இயங்க மாதம் ஒரு முறையாகிலும் அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களில் அந்தந்தப் பகுதியிலுள்ள எஸ்.ஐ. இவர்களையெல்லாம் கூட்டி, இன்னும் பல பயிற்சிகளைக் கொடுத்தால் அப்படியே இயங்கிக்கொண்டே இருக்கும். எப்போது நமக்கு அவசரமாகத் தேவைப்படுகிறதோ அப்போது அவர்களை ராணுவத்திற்கு அனுப்ப அவர்களும் தயாராகிக்கொள்வார்கள். சில கனம் அங்கத்தினர்கள் கூறும்போது, பெண்கள் போலீஸ் படை

கொண்டு வந்தோம் சரியாகவில்லை, கண்டக்டர் வேலை கொடுத்தோம் அதுவும் சரியாகவில்லை என்று சொன்னார்கள். போலீஸ் படைக்குப் போய் பெண்கள் சாதிக்காவிட்டாலும்கூட கண்டக்டர் வேலைக்குப் போய் பெண்கள் சாதிக்காவிட்டாலும் கூட, கிராமப் பெண்மணிகள் ஊர்க்காவல் படையில் நாங்களும் சேருகிறோம், ராணுவத்தில் இருக்கிற வீரர்களுக்கு எங்களால் என்னென்ன செய்ய முடியுமோ, ஸ்வெட்டர் பின்னிக்கொடுக்கவும், அல்லது வேறு ஏதாவது தயார் செய்து கொடுக்கவும், உணவுப் பண்டங்களை தயார் செய்து கொடுக்கவும் தயாராக இருக்கிறோம் என்று முன்வந்துகொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் ஆங்காங்கு மாதர் சங்கங்கள் வெளியில் எப்படியெப்படி நடக்கின்றன என்று இங்கு வந்து பார்த்துக்கொண்டு போகிறார்கள். பெண்களுக்கும் இதில் நல்ல பங்கு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு மாத்திரமல்லாமல் உடைகள் தைப்பதில்கூட ஒரே மாதிரியான உடை இருக்கவேண்டும். (குறுக்கீடு.) பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரே மாதிரி உடை இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. (சிரிப்பு.) அது ஒரு அளவோடு இருந்தால் இன்னும் சற்று நன்றாக இருக்கும். படையிலே இருக்கக்கூடியவர்கள் யாராவது துஷ் பிரசாரம் செய்தால் அல்லது பிரிவினை பேசினால் அப்பேற்பட்டவர்களை உடனடியாக நீக்கிவிடும் முறையில் அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் சபாநாயகர் அவர்களே, பரிசீலனையில் இருக்கக்கூடிய ஹோம் காட் மசோதா மிகவும் வரவேற்கத்தகுந்தது. ஏறக்குறைய போலீஸ்காரர்கள் பார்த்து வருகிற வேலையை, கிராமப் புறங்களிலும், நகரப் புறங்களிலும், அவர்களுக்கு ஒத்தாசையாக வேலைகளைச் செய்வதற்குரிய அமைப்பாக நான் இதைக் கருதுகிறேன். நகரப் புறத்தில், சென்னை நகரில் கமிஷனரிடத்திலும், ஜில்லாதோறும் போலீஸ் அதிகாரி தலைமையிலும் ஹோம்கார்ட் அமைப்பு இயங்க இருக்கிறது. இன்றைய தினம் சாதாரண போலீசார், அவர்களுக்கு மேற்பட்ட சப்-இன்ஸ்பெக்டரையோ, இன்ஸ்பெக்டரையோ அல்லது மேற்பட்ட உத்தியோகஸ்தர்களையோ, 'யஜமான்' அல்லது 'துரை' என்று அழைக்கிற பழக்கம் நெடு நாளாக இருந்து வருகிறது. அதை இன்னும் மாற்ற முடியவில்லை—பழக்க வழக்கம் இவ்விதம் ஆகியிருக்கிறது. இன்று அமைகிற இந்த அமைப்பு முறை அதையே பின்பற்றும் முறையில் வராமல் இப்போதே அந்தத் தொண்டர்கள் எந்த விதமாக மேலதிகாரிகளை அழைக்க வேண்டும் என்று 'ஐயா'-வா அல்லது 'ஸார்'-ஆ அல்லது வேறு எப்படி அழைப்பது என்று முடிவு செய்வது நல்லது என்று நான் கருதுகிறேன். போலீஸ்காரர்களுக்கு உதவியாக அமைகிற அமைப்பிலே அவர்களை இந்தத் துறையிலும் பின்பற்றாமல் இருப்பது அவசியம் என்று கருதுகிறேன். ஹோம்கார்ட் படையினர் குறிப்பாக கவனிக்கவேண்டிய காரியங்களில், கிராமப் புறங்களிலோ அல்லது நகரப் புறங்களிலோ ஏற்படக்கூடிய

நெருப்பு விபத்துக்களில் நெருப்பை அணைக்கக்கூடிய வேலையில், அதற்கு உரிய பயிற்சி அடைவது, பழகிக்கொள்வது முக்கிய அம்சங்களில் ஒன்று. கிராமங்களில் சாதாரணமாக ஒரு பகுதியில் எங்காவது தீ பற்றிக் கொண்டாலும் உடனே கோவில் மணியை அடிப்பார்கள், பள்ளிக்கூடம் ஏதாவது இருந்தால் அங்கே உள்ள மணியை அடிப்பார்கள், உடனே ஊரில் உள்ள எல்லோரும் கூடி நெருப்பை அணைக்கும் பழக்கம் இருக்கிறது. நகரங்களில் அம்மாதிரி இல்லாமல் அதிகாரிகளை, ஃபயர் சர்விஸ்ஸைப் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்னும்கூட சில குக்கிராமங்களில் அதற்கு உரிய முயற்சிகளை கிராமக் கட்டிலிருந்து, அல்லது மத்திய நிலையங்களிலிருந்து செய்திருப்பார்கள். அங்கே வேண்டிய கருவிகள் கூட வைத்திருப்பார்கள். அதே போல் பஞ்சாயத்துக்களிலும் கிராமச் சாவடிகளில் அல்லது பள்ளிகளில்கூட தீயணைப்புக் கருவிகள், கலை கம்புகள், வாளிகள் இவைகளெல்லாம் இருக்கக்கூடிய முறையில் குக்கிராமங்கள் தோறும் இருக்கக்கூடிய முறையில் வழிவகை செய்ய வேண்டும். அதே போல முதலாளிகளிடத்தில் வேலை செய்துகொண்டிருக்கக்கூடியவர்கள், அல்லது ஏதேனும் ஒரு தொழில் கூடத்திலே வேலை செய்யக் கூடிய தொண்டர்கள் அழைக்கப்படுகிற நேரத்திலே அவர்களை உடனடியாக விட்டு விடவேண்டும், அவர்களுக்கு உரிய ஊதியத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும், வேலையில் இருப்பது போல அவர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டும் என்று கண்டிருக்கிறது. அந்த அளவுக்கு நடை முறையில் வரும்போது என்னென்ன சிரமம் இருக்கிறது என்று தீர்க்கமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். குறிப்பிட்ட ஒரு வர்த்தகத் துறையில் அல்லது தொழில் ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய பலர் இந்த அமைப்பில் சேருவதற்கு விருப்பம் தெரிவிக்கலாம். அப்படிச் சேரும்போது முதலாளிகளைக் கேட்டு அவர்களுடைய அனுமதி பெற்றுத்தான் சேரவேண்டும் என்று இல்லை. அவர்களுடைய இஷ்டத்திற்கு, விருப்பத்திற்கு இணங்க சேருவார்கள். ஒரு சிறிய ஸ்தாபனமாக இருக்கக்கூடிய நேரத்தில் அதில் இருக்கக்கூடிய பலர் திடீரென்று அழைப்பை ஏற்று பயிற்சிக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அந்த இடங்களைப் பூர்த்தி செய்வது கடினமாக இருக்கலாம். அதே நேரத்தில், அவரவர்களுக்குரிய சம்பளத்தை அவர்கள் வேலையில் இருப்பதைப் போலவே பாவித்து கொடுக்கவேண்டுமென்று கண்டிருக்குமேயானால், எந்த அளவுக்கு அதை சுலபப் படுத்தலாம், அரசாங்கத்தின் பொறுப்பை எந்த அளவுக்கு வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட பங்கை அரசாங்கம் அவர்களுக்குரிய ஊதியத்திற்காக ஏற்றுக்கொள்ளுவது, ஒரு ஸ்தாபனத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணிக்கைக்கு மேல் இருந்தால் எந்தவிதமாக நடந்துகொள்ளுவது என்பது போன்ற விதி முறைகளை அமைப்பது நலமாக இருக்கும். வேலையிலிருந்து இந்த மாதிரிப் பயிற்சிக்குப் போய் திரும்பி வந்தபிறகு அவர்களை வேலையில் திரும்ப சேர்த்துக்கொள்ள வேண்டும். முதலாளிகள் விரும்பாவிட்டால் 6 மாதச் சம்பளம் கொடுத்து அவர்களை நீக்கி விடலாம் என்று கண்டிருக்கிறது. பெரும்பாலானவர்கள் 6 மாதச்

சம்பளத்தைக் கொடுத்து, இந்த உபத்திரவமே நமக்கு வேண்டாம் என்று நினைத்து அவர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். ஆகவே, தொழிலதிபர்கள், மற்றும் வர்த்தக ஸ்தாபனத்தினர், இந்த ஹோம் கார்டு படைக்கு தொண்டர்கள் அனுப்பும் பொழுது, அவர்களை வேலைக்கு திரும்பி எடுத்துக்கொள்ளுவதில் சிரமம் இல்லாதவாறு, இந்தமாதிரி ஒரு நல்ல காரியத்திற்கு எவ்வளவு தூரம் துணை செய்ய முடியும் என்பதை பரிசீலனை செய்வது அவசியம். ஹோம் கார்டு அமைப்பு முறையை இன்றைக்கு நாம் சட்ட பூர்வமாக ஆக்குவதற்கு முன்வந்திருக்கிறோம். ஆனால், இன்னும் சில வருஷங்களில் இந்த யுத்த நெருக்கடி இல்லாமல் இருந்தாலும், நாட்டினுடைய வளர்ச்சிக்கேற்றவாறு இதே போல் நாம் ஒரு நியதியாகக்கூடக் கொண்டு வந்திருப்போம். ஆனால் இப்பொழுது சந்தர்ப்பம் நம்மை முடுக்கி விட்டு, அவசரமாகவும் அவசியமாகவும் நாம் இந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

இருபது வயது முதல் 40 வயது வரையில் உள்ளவர்கள் சேருகிற அமைப்பாக இது இருந்தாலும், வருங்காலத்தில் மாணவர்கள் அதிகமாக இதில் சேரக்கூடிய அமைப்பில்தான் இது இயங்க முடியும். ஆகவே பாடசாலைகளில்கூட இதற்குரிய வித்து இடுதல் மிகவும் அவசியம். பள்ளிக்கூடங்களில் படிக்கிற குழந்தைகளுக்கு காலக்கிரமத்தில் மிலிட்டரி டிஸிப்ளினை வளர்க்கக்கூடிய முறையிலே, அதற்கான வழிவகைகளைச் செய்வது நல்லது. சிறு பிள்ளைகளுக்குக்கூட இந்த அமைப்பிலே ஆர்வம் ஏற்படும்படிச் செய்ய வேண்டும். கேரளப் பகுதியிலிருந்து நம்முடைய பகுதியிலே சேர்ந்திருக்கக்கூடிய செங்கோட்டை, கன்னியாகுமரி முதலிய பகுதிகளிலே பள்ளிக் குழந்தைகளுக்கு ரோடுகளிலே எவ்வாறு ஒழுங்காகக் போவது, வருவது என்பதற்கான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சியை எல்லாக் குழந்தைகளுக்கும் அளிப்பதற்கு வழிவகை செய்வது நல்லது. இதுபோன்ற காரியங்களை நல்ல முறையில் கவனித்துச் செய்தால் இந்த அமைப்பு மேலும் விரிவாகி, கிராம மக்களை தேசத்தோடு ஒன்றி வைத்து, நாட்டிற்கு ஒரு அரண் போல் அமையும் என்பதை சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று நமது கனம் நிதி அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த பாதுகாப்புப் படை மசோதாவின் மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு தேச நெருக்கடியை முன்னிட்டு இந்த மசோதா கொண்டுவரப்படுகிற நேரத்திலே, நல்ல முறையில் இந்தப் படை செயல்பட வேண்டுமென்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். சமீபத்தில் குடியரசு தினத்தன்று ஊர்க்காவல் படை ஏற்படுத்தப் பட்டது. இன்று அதிகாரிகள் தங்களுடைய அறிக்கையிலே அந்தப் படை நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டாலும், என்னைப் பொறுத்தவரையில் அந்தப் படை ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி நான் ஐயப்படு

கிறேன். மாவட்ட மன்றங்களின் கூட்டங்களிலே, இந்தப் படை ஏதாவது நல்ல வேலை செய்திருக்கிறதா என்று கேட்டபொழுது, கலெக்டர் அவர்கள் தந்த விளக்கத்தின்படி எந்த ஊரிலும் இந்தப் படை எந்த வேலையையும் தொடங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே இந்த பாதுகாப்புப் படையும் இருந்துவிடக்கூடாது என்று நாம் எல்லோரும் விரும்புவது இயல்பு. இந்தப் படைக்காக நாம் லட்சக்கணக்கான ரூபாய் செலவிடும்பொழுது, இந்தப் படை நல்ல முறையிலே இயங்க வேண்டியது அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஏழை மக்களிடமிருந்து வாங்குகிற வரிப் பணத்தை வைத்துக்கொண்டுதான் நாம் இந்தப் படைக்காக செலவழிக்கிறோம். ஏற்கனவே இந்த மன்றத்திலே உள்ள பல கனம் அங்கத்தினர்கள் கூறியதுபோல, கட்சி வேறுபாடு இல்லாமலும், நல்ல நோக்கம் உள்ளவர்களையும் இதிலே சேர்த்துக்கொண்டு நல்ல முறையில் இந்தப் படையை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இந்தப் படையிலுள்ள தொண்டர்கள் போலீஸ்காரர்கள் மேற்கொண்டிருக்கும் ஒரு சில வேலைகளைச் செய்ய வேண்டியிருக்குமாதலால், போலீஸ்காரர்களுக்குள்ள பயிற்சியைப் போலவே இவர்களுக்கும் பயிற்சி அளித்தால், தேச நெருக்கடி ஏற்படும்பொழுது போலீஸ்காரர்கள் மேற்கொள்ளக் கூடிய வேலையை இவர்களும் செய்வதற்கு மிகவும் பயன்படுவார்கள். அவ்வாறு அவர்கள் இந்த பாதுகாப்புப் படையில் வேலை செய்யும்பொழுது, அவர்கள் உயிருக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால் போலீஸ்காரர்களுக்கு அளிப்பது போலவே அவர்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையிலே நாம் ஒரு விதியைச் சேர்த்தால் நலமாக இருக்கும். ஆகவே நான் இந்த மசோதாவை வரவேற்று, அதற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்று என்னுடைய ஒரு சில யோசனைகளையும் கூற விரும்புகிறேன்.

சென்ற பல வருஷங்களுக்கு முன்பு, நமக்கு முன்பு இருந்த சர்க்கார்கூட இந்த மாதிரி ஒரு ஊர்க்காப்பு படையை ஏற்படுத்தியிருந்தார்கள். யுத்தம் கடுமையாக இருக்கும் நேரத்தில், போலீசார் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது, அதாவது போலீசார் யுத்த களத்திற்கு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் செய்துவந்த வேலைகளைச் செய்யவும். அமைதியைக் காப்பாற்றவும் இந்த ஊர்க்காவல் படை செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி ஒரு படை அமைக்கும்பொழுது, யார் யாரைப் பொறுக்குவது, எந்த வயதினரைப் பொறுக்குவது, அவர்களுக்கு என்ன உடை கொடுப்பது என்பது குறித்து இங்கே சர்ச்சைகள் பல மணி நேரமாக நடந்துவருவதை நாம் பார்த்து வருகிறோம். யார் யார் தேச பக்தியோடு இருக்கிறார்கள் என்பதை மீட்டர் வைத்து கண்டுபிடிக்கும் அளவிலே நம்மிடம் ஒரு கருவியும் இல்லை. நிரம்பக் கெட்டவர்கள்கூட சில சமயங்களில் நல்லவர்கள் மாதிரி

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [28th February 1963

மிகவும் திறமையாக வேஷம் போடுகிறார்கள். அதே போன்று நல்லவர்கள்கூட கெட்டவர்களாக மாறிவிடுகிறார்கள். எப்படி சினிமாவிலே சில ஆக்டர்கள் எப்படி நம்மை சிரிக்க வைத்தும், அழ வைத்தும் விடுகிறார்களோ, அதே போல் இவர்களும் செய்கிறார்கள். சென்ற 10 அல்லது 20 ஆண்டு காலமாக அவ்வளவு திறமை நம்மிடையே கடுமையாக வளர்ந்திருக்கிறது. நன்றாக யோசனை செய்து ஒரு தொகுதியிலுள்ள ஒரு சில பேரையாவது பொறுக்கி நல்ல முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். அப்படிப் பொறுக்கும்பொழுது அவர்கள் சென்றகாலக் குற்றவாளிகளா, தான்தோன்றித்தனமான காரியங்களைச் செய்தவர்களா என்று பார்த்துத்தான் பொறுக்க வேண்டும். அவசரப்பட்டு ஏதாவது செய்தால், எப்படி வேலிக்கு முள் வைக்கப் போய் அது நமது கால்களையே துன்புறுத்துவது போல், துர்ப்பாக்கியமாகப் போய் விடும். பண்பட்ட இங்கிலாந்து தேசத்திலேயே சென்ற முதல் மகா யுத்தத்திலே போடப்பட்ட சில குண்டுகளில் " Made in England " என்று எழுதியிருப்பதாகப் பின்னர் தெரிய வந்தது. அவைகள் இங்கிலாந்து நாட்டிலுள்ள குண்டுகள் உற்பத்தி செய்கிற ஒரு கம்பெனியாரால் சப்மெரின்கள் வழியாக ஜெர்மனிக்கு குண்டுகளை அனுப்பியதன் காரணமாக, இந்த துரோகச் செயல் நிகழ்ந்தது. அந்த பண்பட்ட தேசத்திலேயே இவ்வாறு நடந்தது என்றால், இங்கே என்ன நடக்கும் என்று நாம் ஆச்சரியப் பட வேண்டியதில்லை. இந்த ஊர்க்காவல் படையில் அன்னியர்களுக்கு ஆதரவாக யார் யார் இருக்கிறார்கள் என்பதையும் கண்டு பிடிக்கவேண்டும். இப்பொழுது சீனாவுக்கும் நமக்கும் யுத்தம் ஏற்பட்டபொழுது ஜெனரல் கரியப்பா அவர்கள் கல்கத்தாவிலிருந்து டில்லி சென்ற விஷயம் நமக்குத் தெரிவதற்கு முன்னால் பீகிங் ரேடியோ அறிவித்துவிட்டது. ஆகவே இம்மாதிரி அயல் நாட்டிற்கு செய்தி அனுப்புகிறவர்கள் நம் நாட்டில் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை சீனாக்காரர்கள் என்று நாம் நினைக்கிறோம்.

இன்னொன்று ஊர்பாதுகாப்பு படையின் உடையில் மாற்றம் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுதுள்ள உடைகளையே வைத்துக்கொள்ளலாம். இப்பொழுதுள்ள உடைகள் தான் இருக்க வேண்டும் என்று இதற்கு முன் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உடையால்தான் வெற்றி ஏற்படும் வழிகளில் ஒன்று என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற மகா யுத்தத்தில் பெல்ஜியத்திற்கு தோல்வி ஏற்பட்டதற்குக் காரணம் இந்த உடைப் பிரச்னைதான் என்று சொல்லப்பட்டது. அவர்கள் வெள்ளை உடையை அணிந்து கொண்டிருந்ததால் அவர்கள் இருக்கக்கூடிய இடங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு எதிரிகள் பீரங்கிகளால் தாக்குவதற்கு சௌகர்யமாக இருந்தது என்று தெரிந்து கொண்டு அதன்பிறகு அந்த வெள்ளை உடையை மாற்றி அமைத்தார்கள். அவர்கள் வெள்ளை உடை அணிந்திருந்ததால் அவர்களை இலக்கு வைத்துக் காண்பதற்கு வசதியாக இருந்தது என்றும் சொல்லப்பட்டது. அதன் பிறகுதான் அவர்களுடைய உடைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் சொல்லப்பட்டது. அவ்விதம் அந்த

28th February 1963] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

வெள்ளை உடையை மாற்றி அமைத்த பிறகு அவர்கள் தோற்றாலும் திறமையாக சண்டை செய்தார்கள் என்றும் சொல்லப்பட்டது. ஆகவே உடைகள் இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்பது இல்லை. இப்பொழுதுள்ளபடியே இருக்கலாம் என்று தோன்றுகிறது.

அதற்கு அடுத்தபடியாக வயதைப்பற்றியெல்லாம் சொல்லப் பட்டது. வயது முறை 17 ஆண்டு முதற்கொண்டு 46 ஆண்டு வரையில் இருக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. அப்பொழுது தான் திடகாத்திரமாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த வயதில்தான் தேசபக்தியாக இருப்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதெல்லாம் பழைய காலத்து பேச்சு, இப்பொழுதெல்லாம் எவ்வளவோ மாறுபட்டுப்போய்விட்டது. இந்தப் படையில் வயது வந்தவர்களை எடுப்பதுதான் ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. நமது கனம் நிதி அமைச்சரைப் போலவும் கனம் முதல் அமைச்சரைப் போலவும் இருக்கக்கூடியவர்கள் இருக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் இருந்தால்தான் மற்றவர்களுக்குத் தேச பக்தி ஊட்டுவதற்கும் உணர்ச்சி வசப்படும்படியாக செய்வதற்கும் உபயோகமாக இருக்கும். இவர்களைச் சேர்த்தால் அவர்கள் மற்றவர்களுக்கு பக்கபலமாக இருக்கும்படி இருப்பது மட்டுமன்றி வயது வந்தவர்களைச் சேர்த்தால் அவர்கள் இளைஞர்களுக்கு நல்ல உணர்ச்சியையும் ஊட்டக்கூடிய வகையில் இருப்பார்கள். வெற்றி மனப்பான்மை ஏற்படக்கூடிய அளவில் பேசக் கூடியவர்கள் வயது வந்தவர்கள்தான். ஆகவே வயது அதிகமானவர்கள் இதில் சேர வேண்டும் என்று முன்வந்தாலும் அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இப்படி வயது வந்தவர்களைச் சேர்க்கக்கூடாது என்று உலகம் பூராவிலும் சட்டம் வந்திருந்தாலும் அதை மாற்றி அமைக்க நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி மாற்றி அமைத்து நாம் உலகத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அந்த முறையில் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டும். இப்படிப்பட்டவர்களை சேர்த்தால் தேக பலத்துடன் புத்தி பலமும் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு வெற்றி காண்பதற்கு வழி தேடிக் கொள்ளலாம். தற்கால போர் முறையில் தேக பலத்துடன் புத்தி பலமும் சேர்ந்து இருக்க வேண்டும். சென்ற மகா யுத்தத்தில் நாம் ஒரு படிப்பினையை தெரிந்து கொண்டோம். சென்ற முதல் மகா யுத்தத்தில் 63 வயதான வான் ஹிண்டன்பர்க் என்ற ஓய்வு பெற்ற ஜர்மானியப் படைத் தலைவர் ரஷியர்களுடன் போர் நடத்தும்போது ரிடயரானவர்களையும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளையும் அழைத்து படையில் சேர்ந்து சண்டையில் ஜெயித்திருக்கிறார் என்பது நமக்குத் தெரியும். ரிடயரானவர்களையும் குழந்தைகளையும் வைத்துக்கொண்டு ஒரே நாளில் 12 மணி நேரத்தில் லட்சத்தி பத்தாயிரம் ரஷியர்களை தோற்கடித்துக் கைது செய்தார் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே புத்தி பலமும் ஏற்படக்கூடிய அளவில் நாம் படைகளை சேகரிக்க வேண்டும். வயது கடந்தவர்களும்—பள்ளிக் குழந்தைகளும்—மகத்தான நம்பிக்கையையுடைய ஒரு பெரிய தேசப்படையையே தோற்கடித்

[திரு. கோ. நாராயணசாமி நாயுடு] [28th February 1963

த ்கள் என்றால்—படையில் சேருவதற்கு வயது கிரமம் இருக்க வேண்டியதில்லை. ஆள் உயரமும்—அகலமும் திடமும் பார்த்து பட்டாளத்துக்கு ஆள் சேர்த்தது பழைய காலம். இப்பொழுது தேசபக்தியும், உணர்ச்சியும், புத்தி பலமும், விஞ்ஞான உணர்வும் உள்ளவர்கள் தேவை. சாதாரணமாக மக்கள் இடி இடித்தால் அது இருபது மைல் சுற்றளவில் தான் கேட்கும் என்ற அளவில் இருக்கிறார்கள். மேலும் இடி இடிக்கும்போது அர்ஜுன-பல்குன-பார்த்திபா என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறார்கள். ஆனால் ஒரு பெரிய பீரங்கியிலிருந்து குண்டு போட்டால் 100 மைல் சுற்றளவுக்கு பயங்கர ஓசை உண்டாகும்—20 மைல் சுற்றளவுக்குக் கேட்கும் ஓசைக்கே அர்ஜுனா—பல்குனா—பார்த்திபா, என்கிற மக்கள்—நூறு மைல் சுற்றளவுக்கு கேட்கும் பீரங்கி ஓசையைக் கேட்டால் பீதியை—பழக்கமின்மையின் காரணமாக—அடைவார்கள்—அந்த மக்களின் பீதியை போக்குவது ஊர் பாதுகாப்புப் படையின் வேலைகளில் ஒன்றாகும். ஒலி இருபது மைல்கள் கேட்கும் அளவில் அதிலும் பெரிய குண்டுகளைப் போட்டால் அந்த ஒலியைக் கேட்டு பயப்படக்கூடிய ஜனங்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் போய் பீதியை உண்டாக்கக்கூடிய அளவில் பேசக்கூடாது. பீரங்கி சத்தம் 100 மைலுக்குக் கேட்கிறது என்று சொல்லி அவர்களை பீதி அடையச் செய்யக்கூடாது. அவர்களுக்கு அப்படிப்பட்ட பயத்தை உண்டு பண்ணக்கூடிய அளவில் பிரசாரமும் செய்யக்கூடாது. தேசபக்தி இருக்கக்கூடிய அளவில் பிரசாரம் செய்யவேண்டும். தோல்வி மனப்பான்மையை அவர்களுக்கு ஊட்டக்கூடாது. அதிலும் கிராமங்களில் உள்ளவர்களுக்கு தோல்வி மனப்பான்மை உண்டாகும் அளவில் பேசக்கூடாது. ஆகவே தேச பக்தியை உண்டாக்கக்கூடிய அளவில் பேசக்கூடிய வயது வந்தவர்களையும் படையில் சேர்த்துக் கொள்ளக்கூடிய அளவில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

இந்த சமயத்தில் பஜனை பண்ணி பணம் சம்பாதிப்போர் தேச சேவைக்கு பணம் திரட்டும்போது கோயில் கட்டுவதற்கும் பஜனை செய்வதற்கும் என்றும் பணம் வசூல் செய்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும். எதிரிகள் பிடித்த நாடுகளின் பெயர் ஏதோ நேபா, டிலா போன்று இருப்பதால் அது எதிரிகளுடைய நாடாக இருக்கலாம் என்று பிரசாரம் செய்கிறார்கள். ஆகவே இப்படி இல்லாமல் சேத பக்தியுள்ள வயது வந்தவர்களையும் எடுத்துக் கொள்ளும் முறையில் சட்டத்தை தளர்த்த வேண்டும். பக்தியையும் உணர்ச்சியையும் உண்டாக்கக்கூடியவர்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தேசத்திற்கு தொண்டு செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆளும் கட்சியில் நல்லவர்களும் இருக்கிறார்கள் கெட்டவர்களும் இருக்கிறார்கள். (சிரிப்பு.) எதிர்க் கட்சியில்கூட நல்லவர்களும் இருக்கிறார்கள்; கெட்டவர்களும் இருக்கிறார்கள். அதனால் தான் எல்லா கட்சிகளிலும் உள்ளவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும். கெட்டவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களை நம்ப முடியாது. திருடனாக இருந்தால் அவனை கிராமத்தில் தலையாரியாகப் போட்டு விட்டால் அங்கு திருட்டு நடக்காது. அவரே

28th February 1963] [திரு. கோ. நாராயணசாமி நாயுடு]

திருடனை கண்டு பிடித்துவிடுவதற்கு சௌகரியமாக இருக்கும். அந்த முறையில் எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர்களை ஊர் பாதுகாப்பில் சேர்க்கலாம். கெட்டவர்களாக இருந்தால் இந்தப் படையில் சேர்ந்தவுடன் அவர் நல்லவராக மாறுவதற்கு இடம் ஏற்படலாம். எனவே கெட்டவர்களைப் போட்டாலும் அவர்கள் நல்லவர்களாக மாறுவதற்கு இடம் ஏற்படும் என்று கருதித்தான் மாகாணரீதியாக, ஒருசிலரை எந்தக் கட்சியில் இருந்தாலும் பொறுக்கினோம் அது பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் மாறி விட்டது. கெட்டவர்களைச் சேர்த்து விட்டால் அவர்கள் தப்பு தனமாவிற்குப் போக மாட்டார்கள். தேசத் துரோகிகளாக இருந்தால் அவர்கள் தேச பக்தர்களாக மாறுவதற்கு இடம் ஏற்படலாம். ஆகவே பாதுகாப்புப் படையில் வயது வந்தவர்களையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அதோடு ஊர்காவல் படையில் சேர்க்கப்படுகிறவர்கள் தேச பொது ஜன அக்கரைக்குப் பாதகம் விளைவிக்காத அளவில் இருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தேசத்திற்கு என்றும் தேச பாதுகாப்பிற்கு என்றும் பணம் வசூல் செய்யும்போது கதாகாலட்சேபம் வைத்து பணம் சம்பாதிக்க இடம் கொடுக்கக்கூடாது. கதாகாலட்சேபம் வைத்து அதில் அரசியலைப் பற்றிப் பேசச் சொல்லுகிறார்கள். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. தேச பாதுகாப்புக்கு பணம் திரட்டும்போது கோயில் கட்டுவதற்கு வசூல் செய்து தேசபாதுகாப்புக்கு வசூல் செய்வதற்கு குந்தகம் விளைவிக்கிறார்கள். இதற்கு இடம் கொடுக்கக் கூடாது. சிலர் தேச பாதுகாப்புக்கு எதிராக பிரசாரம் செய்ய முன் வருகிறார்கள். நாம் இன்னும் சண்டையேபோட ஆரம்பிக்கவில்லை. ஏதோ எல்லையில் சிறிய தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதற்குள்ளாக நமக்கு ஏதோ தோல்வி வந்து விட்டது என்றும் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் கொஞ்சம் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு இப்படிப் பேச இடம் கொடுக்கக்கூடாது. தோல்வி ஏற்பட்டாலும் வெற்றி மனப்பான்மையில் தான் பேச வேண்டும். மக்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல அனுகூலமாக பிரசாரம் செய்ய வேண்டும. பாதுகாப்புக்கு எதிராக பிரசாரம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் கொடுக்காமல் பாதுகாப்புக்கு அனுகூலமான அளவில் பிரசாரம் செய்ய வேண்டும். அதிலும் கிராமங்களில் சென்று தோல்வி மனப்பான்மையில் பிரசாரம் செய்வது நல்லது அல்ல. இம்மாதிரி இல்லாமல் உணர்ச்சிவசப்படும் நம்பிக்கையுள்ளவர்களை இந்தப் படையில் சேர்க்கவேண்டும். அப்படிச் சேர்த்தால் தான் இந்தப்படை நல்ல முறையில் இயங்கும். ஏதோ கொஞ்சம் தோல்வி ஏற்பட்டதை வைத்துக்கொண்டு நமக்குத்தான் தோல்வி என்று பிரசாரம் செய்யக் கூடாது. இப்படிப் பிரசாரம் செய்கிறவர்கள்தான் தேசத் துரோகிகள். நாம் தோல்வி அடைந்தாலும் வெற்றி கிடைத்ததாகத்தான் பிரசாரம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் ஜனங்களிடத்தில் உணர்ச்சி ஏற்படும். கிராம மக்களிடத்தில் உணர்ச்சி ஏற்படும். சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மானியர் இப்படித்தான் முதலில் பிரசாரம் செய்தார்கள். அதன் பயனாக

அவர்களுககு வெற்றி கிடைத்தது. சென்ற பல ஆண்டுகளுக்கு முன்னால் நூறு சிறு ராஜ்யங்களாக பிரிந்திருந்த ஜெர்மனியை, பிரஷ்ய ஏகாதிபத்தியமாக்கி—பக்கத்திலுள்ள சிறு நாடுகளின் பேரில் படையெடுக்கச்செய்து வெற்றியடையச் செய்து—ஜெர்மானியர் தோற்கடிக்கப்பட முடியாதவர் என்ற உணர்ச்சியை அந்நாட்டு மக்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டினார் அரசியல் ஞானியான பிஸ்மார்க் என்பதையும் ஓர் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பிரச்சாரத்தினால்தான் டென் மார்க் முதலிய இடங்களில் அவர்களுக்கு வெற்றிகள் கிடைத்தன. ஆகவே அந்த முறையில்தான் நாம் பிரச்சாரம் செய்யவேண்டுமே யொழிய தோல்வி மனப்பான்மையில் பிரச்சாரம் செய்யவே கூடாது. ஜனங்களிடத்தில் பீதியை உண்டு பண்ணக் கூடாது. அந்த முறையில் பிரசாரம் செய்யக்கூடிய வயது வந்தவர்களைத் தான் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதனால் வயதை நிர்ணயம் செய்யாமல் வயது வந்தவர்களையும் இந்தப் படையில் சேர்த்துக்கொள்ளக்கூடிய அளவில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரசங்கங்களையெல்லாம் சமாளிக்ககக் கூடிய அளவில் ஊர்க்காவல் படையை அமைக்க வேண்டும். வெற்றி மனப்பான்மை இருக்க கூடிய அளவில் இந்தப் படையிலுள்ளவர்கள் இருக்க வேண்டும். அந்த முறையில் இந்த சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. கோ. சி. மணி: மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவ்ர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த ஊர்க் காவல் படை அமைப்புச் சட்டத்தைப்பற்றிய பிரச்னையில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களும் சரி, ஆளும் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களும் சரி இப்படிப் பட்ட ஒரு படை தேவை இல்லை, அவசியம் இல்லை என்று யாரும் சொல்லவில்லை. இப்படிப்பட்ட ஒரு படை அமைக்கப்படவேண்டியது அவசியம் என்பதை இந்த மன்றத்தில் உள்ள அவ்வளவு பேர்களும் ஏக மனதாக ஏற்றுக்கொண்டு பேசினார்கள். இந்தப் படை எப்படி அமைக்கப்படவேண்டும் எப்படி நிர்வகிக்கவேண்டும் என்பதைப் பற்றித்தான் இங்கே பேசப்பட்டது. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். எனக்கு முன்னால் பேசிய என்னுடைய தொகுதி யைச் சேர்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது அது எவ்வளவோ ஹாஸ்யமாக இருந்தது. அவர் பேசிய போது ஏதோ கட்சி மனப்பான்மையில் பேசியதாக இருந்தது. அவருக்கு
11-00 a.m. முன்னால் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இதைப் பற்றி பேசினார்கள். எதிர் கட்சி அங்கத்தினர்களும் இதைப் பற்றியே பேசினார்கள். அவர்கள் பேசிய பேச்சுக்கும், ஏற்கனவே ஒரு முறை இந்த மன்றத்திலே நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் தேச நெருக்கடியை உத்தேசித்து இந்த மன்றத்திலே இருக்கும் அத்தனை உறுப்பினர்களும் இந்தச் தேசத்தைக் காப் பாற்றுவதற்காக ஒத்துழைக்கவேண்டுமென்று தீர்மானத்தைக்

கொண்டு வந்து பேசிய பேச்சுக்கும் உள்ளபடியே மாறுபாடு மட்டுமல்லாமல் வேறுபாடும் அதிலே காணப்பட்டது. இந்த மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது கனம் நிதி அமைச் சர் அவர்கள் பேசிய பேச்சாக இருந்தாலும், பாராளு மன்றத்தில் பண்டித நேரு அவர்கள் பேசிய பேச்சாக இருந்தாலும், சீனக் காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், கட்சி வேறுபாடு அன்னியில், ஜாதி, மத வேறுபாடு அன்னியில், மொழி வேறுபாடு அன்னியில், அத்தனைபேரும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்ற பேச்சுத்தான் பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. சட்ட மன்றத்திலும் பேசப்பட்டது. அதற்குப் பிறகு இப்பொழுது ஊர்க்காவல் படை அமைக்கவேண்டும் என்று ஆரம்பித்த இந்த நேரத்தில், அதிலே யார் யாரைச் சேர்ப்பது எப்படி எப்படி பணி புரிவது என்ற விளக்கத்தைத் தரும்போது, இங்கே கட்சி வேறுபாடுகள், கட்சிப் பூசல்கள், கட்சி மாச்சரியங்கள் இவை களுக்கெல்லாம் இடம் அளிப்பது போல் ஆளுங் கட்சியிலிருந்து பேசிய சில நண்பர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். உள்ளபடியே என்போன்ற சிறு வயதுக்காரர்களுக்கு அது ஒரு சிறு மாற்றத்தைத்தான் தருகிறது, வேதனையைத்தான் தருகிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. நாயுடு அவர்கள் குறிப் பிட்டது போல், எல்லாக் கட்சிகளிலும் நல்லவர்களும் இருக்கக் கூடும். காங்கிரஸ் கட்சியிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள் என் பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். அப்படிப்பட்ட கட்சி யில் அங்கம் பெற்றிருக்கும் அங்கத்தினர்கள் சில பேர் தாங்கள் பத்திரிகையில் படித்ததை இங்கே நினைவுபடுத்திக் கூறினார்கள். "எல்லாக் கட்சியினரையும் சேர்த்துவிடக் கூடாது, நாட்டைத் துண்டு போடச் சொல்கிறவர்களைச் சேர்க்கக் கூடாது, சில பேர் நடிக்கிறார்கள், திடீர் தேச பக்தர்களாக மாறுகிறார்கள், அவர்களை யெல்லாம் இதிலே சேர்த்துவிட்டால் ஆபத்து வந்துவிடும், பக்கத் தில் வைத்துக்கொண்டு நாம் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது" என்று கனிவோடு யோசனை கூறினார்கள். ஆனால், அந்த கனம் உறுப்பினர் எந்தப் பத்திரிகையில் வந்தது என்று இங்கே எடுத்துச் சொல்லவில்லை. "இந்த மன்றத்தில் ஏற்கனவே நான் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன்," என்று இந்த மன்றத் திற்கு நினைவுபடுத்தினார். ஏற்கனவே ஒரு முறை நினைவு படுத்திய தாகச் சொல்கிற அந்த உறுப்பினர் எந்தப் பத்திரிகையில் அது வந்தது, எந்த ஊரில் அந்தக் கூட்டம் நடந்தது, நடத்தப்பட்ட அந்தக் கூட்டம் எந்தக் கட்சியினுடையது, அதில் பேசியவர்கள் யார் என்பதைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் தரவில்லை. அவர் கொடுத்தது தக்க ஆதாரமா என்று ஆராயும்போது அந்தப் பொதுக்கூட்டத்தைக் கண்காணித்த போலீஸ்காரர்களுடைய குறிப்பையும் இங்கே கவனத்திற்கு கொண்டுவந்திருக்கலாம். காரணம், இது ஏனோ தானோ விஷயம் அல்ல. நாட்டில் ஏற்பட் டிருக்கிற நெருக்கடி நேரத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய மிக முக்கியமான பிரச்னைகளில் இதுவும் ஒன்றாகும். தேசத்தைக் காப்பாற்ற வேண்டிய பிரச்னையில் எந்தவித வேற்றுமைக் கருத் துக்கும் இடமில்லை. எல்லாக்கட்சிக்காரர்களும் ஏகோபித்து, வேற்றுமைக் கருத்துக்களைக் களைய தக்க நடவடிக்கை எடுத்து,

வேண்டிய பரிகாரத்தைச் செய்ய வேண்டியது மிக முக்கிய மானது. அப்படி நேரடிப் பொறுப்பு வாய்ந்த கட்சியில் இருப்பவர் "ஒரு கூட்டத்தில் பேசினர், அதை நான் முன்பே சொன்னேன், அப்படிபட்ட கட்சிக்காரர்களை அங்கே சேர்க்கக் கூடாது" என்று ஆளுங் கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

கனம் சபாநாயகர் : விவரங்களுக்குள் நீங்கள் போக வேண்டாம். "எந்தப் பத்திரிகையில் வந்தது? எந்த ஊரில் கூட்டம் நடந்தது?" என்று நீங்கள் கேட்டுக்கொண்டே போனால், அந்த கனம் அங்கத்தினர் உங்களுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்துவிடக் கூடும். அந்தக் கனம் அங்கத்தினர் சொன்னது தவறு என்று வேண்டுமானல் சொல்லிவிட்டு நீங்கள் மேலே பேசிக் கொண்டு போகலாமே.

திரு. கோ. சி. மணி : பணியாற்றுவதற்கு உள்ளபடியே நாங்கள் தயாராக இருக்கின்றோம். எங்களையெல்லாம் 'திடீர் தேச பக்தர்கள்' என்று எடுத்துவிட்டால் என்ன ஆகும்? அப்படிப் பட்டவர்களைக் கணக்குப் போட்டுப் பார்க்கும் நேரத்தில், எங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளபடியே நாட்டில் ஏராளமாக இருப் பார்கள். அவர்கள் எங்களிடத்திலும் இருப்பார்கள். ஆளும் கட்சியிடமும் இருப்பார்கள். அந்தக் கணக்கைத் தயவு செய்து போடவேண்டாம். உள்ளபடியே இந்த நாட்டைப் பாதுகாக்கும் நல்ல எண்ணம் படைத்தவர்கள் யார் என்று நிர்ணயிக்கக் கூடிய கருவி ஏதாவது இருந்தால், அதை எந்த நேரத்தில் வேண்டு மானாலும் எப்படிப்பட்ட நேரத்தில் வேண்டுமானாலும், எங்களில் யாரிடத்தில் வேண்டுமானாலும் சோதனை செய்து பார்க்கட்டும். அப்போழுது நீங்களே தெரிந்துகொள்வீர்கள், எங்களுடைய தேச பக்தியைப்பற்றி. அதை நாங்கள் எப்படி எந்த ரூபத்தில் எடுத்துக் காட்டமுடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனல், ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். வயது முதிர்ந்தவர், இளைஞர் என்பதைத் தயவு செய்து இந்தப் பிரசினையில் கொண்டுவரத் தேவையில்லை என்றுதான் நானும் கருதுகிறேன். முதிர்ந்த வர்கள் அந்தப் படையில் சேர்ந்தால்தான் அவர்களுக்கும் இதில் ஈடுபாடு இருக்கும். எந்த விதமான கட்சி மனப்பான்மையும் இல்லாமல் சுயேச்சையாகப் பல பெரியவர்கள் கிராமங்களில் இருக் கிறார்கள். இந்தப் படை அமைப்பில் கிராமப் பெரியவர்கள், கட்சி மனப்பான்மை இல்லாத பெரியவர்கள் தேவையான உதவி யளிக்கக்கூடிய வகையில் அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டும்.

போலீஸ் அதிகாரிகள் அதற்கான பயிற்சிகள் அளிக்க வேண்டு மென்று சொல்லும்போது, அதற்கென்று தனி போலீஸ் படைகள் அமைத்துத் தருவது மிக மிக அவசியம். அதோடு, போலீஸ் இலாகாவுக்கு அதிகமான ஜீப் வசதிகளும், வான் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும், தலைமை இடத்தில் தான் வாகன வசதிகள் இருக்கின்றன. மாவட்ட அளவுக்குப் போதுமான வாகன வசதி இல்லை ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒரு ஜீப் அல்லது வான் கொடுத்து உதவினல்தான், சௌகரியமாக இருக்கும், அப்பொழுதுதான் உட்கிராமங்களுக்குச் சென்று நடக்கின்ற குற்றங்களைக் கண்டு

பிடிப்பதற்கு உதவியாக இருக்கும். ஊர்க் காவல் படையை அமைத்துவிட்டோம் என்று விளம்பரம் தந்துவிட்டு, இத்தனை பேர்களைச் சேர்த்துவிட்டோம் என்று கணக்குக் கொடுப்பதனல் மட்டும் பயனில்லை. போலீஸ்காரர்களுக்கு வாகன வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். பல சமயங்களில் நானே, இந்தச் சட்ட மன்றத்திற்கு வருவதற்கு முன், பல குற்றங்களைக் கண்டு பிடித்து போலீசுக்கு உதவி செய்திருக்கிறேன். ஆனல், பல உட் கிராமங்களுக்குச் சென்று குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடி யாத அளவுக்கு வாகன வசதிக் குறைவு இருந்தது. சில கிரிமினல் குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலேயே அந்த நிலை என்றால், நாட்டில் பல இடங்களில் நடக்கும் நிலைமைகளை வெளிநாடுகளுக்குக் காட்டிக் கொடுப்பது போல் இருப்பவர்களைக் கண்டுபிடிப்பதற்கு மிக அவசியமாக இருப்பது ஜீப் போன்றவைகள் ஆகும். அந்தப் படைகளுக்குத் தனியாக ஜிப்களும், வாகன்களும் அமைத்துக் கொடுப்பதோடு, போலீஸ்காரர்கள் செய்யக்கூடிய சில வேலைகளை இவர்களிடம் கொடுத்து, போலீஸ்காரர்களை வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாம் என்ற யோசனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் படையில் சேருகின்ற வாலிபர்களுக்கு உடையளிப்பது, பயிற்சி கொடுப்பது ஒவ்வொரு யூனியன் லெவலிலும் இருக்க வேண்டுமென்ற கருத்து அடிபட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பயிற்சியை அந்தந்தக் கிராமங்களிலேயே அளிக்க ஏற்பாடு செய் வது நல்லது. அந்தந்தக் கிராமத்திலேயே பயிற்சி அளிப்பவர் களை வரவழைத்துப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தால், பயிற்சி தரும் அதிகாரிக்காக படிச் செலவு ஆகுமே தவிர, பயிற்சி பெறு கிறவர்களுக்குப் படிச் செலவு ஆகாது. பயிற்சி பெறுகிறவர் களுக்குச் செலவு நிச்சயமாகக் குறைக்கப்படவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் கலெக்டர் நடத்திய கூட்டத்தில், அங்கிருக் கும் உயர்தர போலீஸ் அதிகாரி வந்து, இந்தப் படையை அமைக்க யோசனை கூறினர். அந்தப் பயிற்சியைப் பெற வருகிறவர்களுக்கு தருவது சம்பளம் அல்ல, பாட்டா தான் என்று குறிப்பட்டார்கள். இப்படி பல கிராமங்களிலிருந்து பல பேர் அங்கே வந்து அந்தப் பயிற்சியைப் பெறுவதற்குப் பதிலாக அதிகாரியை ஊர் ஊராக அனுப்பி பயிற்சியளிக்கச் செய்வது நல்லது. இதனல் செலவு குறையும். இதைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்ட மன்றத் தலைவர் அவர் களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக் கும் இந்த ஊர்க்காவல் படை மசோதாவின் மீது பேசுகையில் கனம் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தார்கள். இதில் கட்சி பேதம் இல்லை என்ற கருத்தை வைத்துத்தான் நானும் எனக்குத் தெரிந்த ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று நான் பேசுவதாகக் கூட இல்லை. ஆனல், வார்த்தைக்கு வார்த்தை போலீஸ் என்று வருகிற காரணத்தினல், இதில் நான் பங்கு கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

[28th February 1963

கனம் சபாநாயகர் : பழைய வாசனை. (சிரிப்பு.)

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஆம். பழைய வாசனை தான். (சிரிப்பு.) அவைத்தலைவர் அவர்கள் சொல்லுவது போல பழைய வாசனை என்னைவிட்டு மாறவில்லை. கருத்து மாறினாலும், நான் பட்ட வேதனைகள் மாறினாலும் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் சிலவற்றைச் சொல்வது என் கடமை. இந்தச் சபையில் உள்ள கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

ஊர்க் காவல் படை என்பது ஒரு கட்சிக்கு என்று சொல்வதற்கில்லை. பொதுமக்களுடைய பாதுகாப்புக்காக அமைக்கப்படுவது. ஏதோ ஒரு கட்சிக்காக அமைக்கப்படுவது போன்று கட்சிப் பிரச்சனையைக் கலந்து கலந்து பேசுவது உண்மையில் வருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள் எந்தக் கட்சியிலும் சம்பந்தப்படக் கூடாது என்ற கருத்து இருக்கிறது. அது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். அது போலவே ஊர் காவல் படையில் சேருகிறவர்கள் ஒரு போலீஸ் அதிகாரியின் கீழ் ஒழுங்குமுறைக்கு உட்பட்டு பயிற்சி பெறவேண்டுமென்ற ஒரு நிலைமை இருப்பதனால் கட்சி சார்பற்றவர்களையே இந்த ஊர்க்காவல் படையில் உறுப்பினர்களாகச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்க் காவல் படை என்பது இப்போது வந்தது அல்ல. முன்பே வந்தது என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். எனக்கு அதைப்பற்றித் தெரியாது. 1948-லே நான் போலீஸ் உத்தியோகத்திற்குப் போனவன். நான் போவதற்கு முன்பே வில்லேஜ் விஜிலன்ஸ் கமிட்டி என்று ஒன்று அமைக்கப்படும் வழக்கம் இருந்தது. அது செயல்படவில்லை. அது யார் காலத்தில் அமைக்கப்பட்டதோ? ஒரு சமயம் லார்டு மெக்காலே லா கமிஷனராக வந்தபோது நியமித்திருக்கலாம். இப்போதும் ஒரு கிராமத்திற்கு ஐந்து பேர், ஆறு பேர் என்று சர்டிபிகேட் கொடுத்து வைத்திருக்கிறார்களே தவிர ஒரு ஆண்டில் எத்தனை வழக்குகளில் அவர்கள் போலீசுக்கு உடன் இருந்து உதவி செய்திருக்கிறார்கள் என்று பரிசீலனை செய்துபார்த்தால் தெரியும். அம்மாதிரி பரிசீலனை செய்திருப்பதாகத் தெரியவில்லை. இதைச் சொல்லும் போது நான் யார்பேரிலும் குற்றம் சொல்லவில்லை. குறிப்பாக போலீஸ் அதிகாரிகளின் மீதும் குறை சொல்லவில்லை. வில்லேஜ் விஜிலன்ஸ் கமிட்டி சரியான முறையில் போலீஸ்காரர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பதற்கு போலீஸ் அதிகாரிகள் காரணம் இல்லை.

இன்றையதினம் போலீஸ்காரர்களுடைய பொதுவாழ்க்கை 24 மணி நேரமும் பொதுமக்களுக்குச் சேவை செய்வதிலேயே கழிகிறது. பொதுமக்களுக்குச் சேவை செய்வதிலே போலீஸ் துறையினரைவிட வேறு எந்தத் துறையினரும் அதிகச் சேவை செய்ய

28th February 1963] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

முடியாது என்று நான் ஊர்ஜிதமாகச் சொல்ல முடியும். இது என்னுடைய கருத்து, இதை ஏற்றுக் கொண்டாலும் சரி ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி.

ஊர் காவல் படையினருக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பது போலீஸ் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, மற்ற பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி மிகவும் ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்வு மிகமிக கவனிப்புடன் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தை மிகவும் வெற்றிகரமாக நடத்துவதற்கு ஊர் காவல் படையினர் மிகமிக உதவியாக இருக்க முடியும். ஊர் காவல் படையினர் மட்டும் ஒத்துழைத்தால் மதுவிலக்குக் குற்றமே நடக்காது. மதுவிலக்குச் சட்டம் வெற்றிகரமாக நடப்பதாகப் பல புள்ளிவிவரங்களைக் கொடுக்கலாம். ஆனால் அச்சட்டம் இன்னும் முழு வெற்றி அடையவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

தயவு செய்து கனம் சபாநாயகர் எனக்கு இன்னும் கொஞ்சம் அதிக நேரம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : நீங்கள் ஊர் காவல் மசோதாவின் மீது பேசுங்கள் நேரம் தருகிறேன். மது சம்பந்தமான விஷயத்திற்குள் போய்விட்டீர்களே என்றுதான் மணி அடித்தேன். மசோதாவுக்குப் புறம்பான விஷயத்தைச் சொல்லப் புகுந்தால் மணி அடித்துவிடுவேன்.

திரு எ. கோ. பாலகிருஷ்ணன் : மது விலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பது, திருட்டுக் குற்றங்களைக் கண்டு பிடிப்பது ஆகியவற்றிலும் ஊர்காவல் படையினர் உதவக் கூடும். தீ அணைப்புப் படையிலும் இவர்களைச் சேர்க்கலாம். பொதுவாக இந்த ஊர்க் காவல் படை நன்றாக அமையவேண்டுமென்றால் ஏற்கனவே தண்டனை பெற்றவர்களோ, குற்றம் செய்தவர்களோ இதில் இடம் பெறக் கூடாது. சிறப்பாகப் பொதுப் பணியில் ஈடுபடுகிறவர்களையே இதில் சேர்க்கவேண்டும்.

அடுத்தபடியாக உடையைப்பற்றிப் பேசினார்கள். சிலர் காக்கியைப்பற்றிச் சொன்னார்கள். சிலர் வெள்ளை யூனிபாரத்தைப்பற்றிச் சொன்னார்கள். பொதுவாக அரசாங்கம் அவர்களுக்குக் காக்கி உடைதான் கொடுக்குமோ என்று கருதுகிறேன். போலீஸ்காரர்களிடமிருந்து ஊர்க்காவல் படையினரை வித்தியாசம் கண்டறிவதற்கு முன்பு கொடுத்தது போல ஊர்க்காவல் படையினருக்கு சிமிண்டு கலரில் யூனிபாரம் கொடுக்கலாம்.

அடுத்து சம்பளத்தைப்பற்றி நான் வலியுறுத்த விரும்பவில்லை. ஆனால் பொதுவாக அன்றாடப் படி கொடுப்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மாதச் சம்பளம் என்று இல்லாத வரையில் இந்தப் படை சரிவர வேலை செய்ய முடியாது என்பது என்

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [28th February 1963

னுடைய அபிப்பிராயம். உதாரணமாக டி.டி.ஸி. மீட்டிங் நடக்கிறது. பஞ்சாயத்து கவுன்சில் மீட்டிங் நடக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதி நிலைமையை அங்கு எடுத்துச் சொல்வதற்கு போக வேண்டுமென்று இருக்கிறது. அநேக சமயங்களில் போக முடிவதில்லை. போனால் படியுண்டு, இல்லையானால் இல்லை; அவ்வளவுதானே என்கிற அலட்சியம் ஏற்படுகிறது. சம்பளம் என்று இருந்தால் அத்தகைய அலட்சியம் ஏற்பட முடியாது. சம்பளம் என்று வைத்து விட்டால் ஊர் காவல் படையினருக்கு ஒரு கடமை உண்டாகிவிடுகிறது. ஆகவே இதுபற்றியும் சர்க்கார் யோசித்து தக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிற்சி எப்படிக் கொடுப்பது, எவ்வளவு நாட்களுக்குக் கொடுப்பது, எந்த எந்தத் தலைப்பில் கொடுப்பது என்பதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல எனக்கு முன் பேசியவர்கள் மறந்து விட்டார்கள். கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்னுடைய சந்தேகங்கள் நிவர்த்தியாகும்படி பதில் சொன்னால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். ஒரு அங்கத்தினர் பேசும்போது, 'ஊர்க்காவல் படையினருக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சொன்னார். இந்த நெருக்கடியான நேரத்தில் ஊர்க்காவல் படையினருக்குத் துப்பாக்கிப் பயிற்சி கொடுப்பதற்குத் துப்பாக்கிக்கு எங்கே போவது? நான் இப்போது அதிகமாகப் போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போவதில்லை. இப்போது போலீஸ் ஸ்டேஷன்களில் இருக்கும் துப்பாக்கிகள் எல்லாம் யுத்தத்திற்குப் போய் இருக்கும் என்று நினைக்கிறேன். சென்ற யுத்தத்தின்போதுகூட ஸ்டேஷன் துப்பாக்கிகள் அத்தனையும் யுத்தத்திற்கு அனுப்பப்பட்டு விட்டன. இப்போது இந்தப் படையினருக்கு மூன்று மாத காலம் துப்பாக்கிப் பயிற்சி கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். போலீசாருக்கு ஆறு மாத காலம் பயிற்சி கொடுக்கும்போதே அவர்களால் துப்பாக்கியினுடைய பகுதிகளைப் பற்றியெல்லாம் சரியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆகவே, இவர்களுக்கு மூன்றுமாத காலத்தில் துப்பாக்கிப் பயிற்சி கொடுத்துவிடலாம் என்று சொல்வது முடியாத காரியம். இந்தப் படையினருக்குப் பொதுவாகப் பயிற்சி கொடுக்கும் நாளைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் நலமாக இருக்கும்.

நான் 1960-61-இல் சத்தியமங்கலத்தில் ஸ்டேஷன் ரைட்டராக இருக்கும்போது பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருந்தது. சப் இன்ஸ்பெக்டர் போய் அந்தப் பயிற்சியைக் கொடுக்கவேண்டும். சப் இன்ஸ்பெக்டர் இல்லாத நேரத்தில் ஹெட் கான்ஸ்டபிளோ, ஸ்டேஷன் ரைட்டரோ போய்ச் சொல்லிக் கொடுக்கலாம் என்ற உத்தரவு இருந்தது. அந்த அடிப்படையின் கீழ் நான் போனேன். (மணி அடிக்கப்பட்டது.)

* SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Speaker, Sir, I rise to speak in support of the Bill moved by the Hon. Minister to create Home Guards in our State. Sir, it is very essential that this

28th February 1963] [Sri K. S. G. Haja Sheriff]

force should be created particularly during the emergency which can act as supplementary and complementary to the Police force. When I went through the provisions of the Bill relating to the various duties and responsibilities of this force, I felt that I should make some suggestions in that regard. There is already a feeling that anybody and everybody can become a member of this force and that even an uneducated or illeterate or an unemployed person or a person who is engaged in a very, very minor trade can also become a member. I would like to say that persons who are educated, who are already employed and, above all, persons with a zeal for service only should be enrolled as members. It is better to have a force of 2,000 well-disciplined men with an idea of serving the country than to have a force of 12,000 or 20,000 men who have very little understanding or who have no education or who would like to make something out of this force.

Sir, I do not know whether there will be various ranks in this force. I believe there will be and if that is the case, filling up of these ranks also should be very carefully considered.

Also, I do not know whether public men can also be associated even if their age is above 40 years. Persons like municipal councillors or M.L.As. or M.L.Cs. or even Members of the Parliament should also take part in this Home Guard movement because nothing will be too sacred than to serve and safeguard the motherland and public property particularly during the emergency.

In addition to various types of training which will be imparted to these people, I suppose they will also be given training for air-raid precautions. I do not know whether there will be another force to be created entirely for dealing with air-raid attacks. We had a similar force during the last war and if that is the idea of the Government to create a force separately for dealing with air-raid attacks, it is all right. Otherwise, this force should also be given training for air-raid precautions and how people should be helped during the emergency of this nature.

Above all, I would like to stress that the quality of this force should be given very serious consideration because much depends upon how this force behave or give their help to the police. Police will be required to act during the emergency in various other important works and all these people who are already trained in a very perfect manner can be of very great assistance and can also keep up the morale of the public. I think we have done very well and we can certainly defeat any enemy of any magnitude if we have a perfect force like this. Thank you Sir.

* திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஊர்க்காவல் படை அமைப்பு பற்றிய மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரித்துப் பேச இருக்கிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் எல்லோரும் ஊர்க்காவல் படையை எந்த முறையிலே அமைக்கவேண்டுமென்பது பற்றியெல்லாம் தெளிவாக

[திரு. கரு. சீமைச்சாமி] [28th February 1963

எடுத்துச் சொன்னார்கள். எந்த முறையிலே பயிற்சி கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றிய பொறுப்பையெல்லாம் ஐ.ஜி. அவர்கள் பொறுப்பிலே விட்டு விடலாம். ஆனால் அந்தப் பயிற்சி இராணுவப் பயிற்சியாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு துப்பாக்கி சுடும் அளவுக்கு, சாதாரண துப்பாக்கி மட்டுமல்ல உயர்ந்த ரக நவீன துப்பாக்கிகளை இயக்கும் அளவுக்கு பயிற்சிகொடுக்கவேண்டும். நாம் எப்படியோ அது போலத்தான் நாடும். தலைவர்கள் எப்படியோ அதே போலத்தான் மக்களும். சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ராணுவ உடை தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'யூனிபாரம் டே' என்று வைத்து, நம் சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும், மதிப்பிற்குரிய கனம் காமராஜ் அவர்களும் ராணுவ உடை தரிக்கவேண்டும். மதிப்பிற்குரிய கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் ராணுவ உடை தரித்தால் சிறந்த முறையிலே பெரிய எடுத்துக்காட்டாக இருக்கும். காக்கி உடை அணிந்து கொண்டால் அதிலே மிடுக்கு இருக்கிறது, அதனாலே வீரம் வருகிறது. நம்முடைய கனம் முதலமைச்சர் காமராஜ் அவர்கள் திருப்புவனம் பஞ்சாயத்து யூனியனுக்கு வந்தபோது, தொண்டர்களுடன் யூனியன் தளபதியாக இருந்து, இராணுவ உடை தாங்கி முதலமைச்சர் அவர்களை வரவேற்றோம். கனம் காமராஜ் அவர்களுக்கு என்னை அடையாளம் தெரியாமல் 'எங்கே சேர்மன்?' என்று கேட்டார்.
11-30 a.m. ஆகவே எல்லோரும் ராணுவ உடை தரிக்க வேண்டும். திருப்புவனம் பஞ்சாயத்து யூனியனில் ஆயிரம் தொண்டர்கள் காக்கி உடை, பனியன் அணிந்து பணியாற்ற தயாராக இருக்கிறார்கள். இப்போது தொண்டர் படையில் சேருங்கள் என்று சொன்னால் மக்கள் தயங்குகிறார்கள். அப்படிச் சேர்ந்தால் அவர்களை வட எல்லைக்கு போருக்கு அனுப்பி விடுவார்களோ என்று சந்தேகப்படுகிறார்கள். ஆகவே ஊர்காவல் படை பற்றி நாம் என்ன செய்ய வேண்டும்? சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதல் அமைச்சர் முதலிய எல்லோரும் என்ன செய்யவேண்டுமென்றால், யூனிபாரம் டே என்று வைத்து அத்தனை பேர்களும் ராணுவ உடையில் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வந்தால் ஊர்காவல் படையில் எல்லோரும் தயங்காமல் எளிதாக சேர வாய்ப்பு இருக்கும். தமிழ் இலக்கியத்தைப் பார்த்தால் நமக்குள்ளே வீரத்தைப்போல் உலகில் எந்த நாட்டிலும் இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். சாதாரண உழவர்கள்கூட உழவிற்குச் செல்லும்போது வேல் கம்பை வயலின் தலைமாட்டில் ஊன்றிவிட்டு உழுகிறார்கள். எதிரி வந்து தாக்கினால் நாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டால் தற்காப்பிற்காக வேல் கம்பை எடுத்து தன்னையும்—நாட்டையும் காத்துக் கொள்ளும் முறையில் அந்தக் காலத்தில் விவசாயிகள் வீரர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போது அதற்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஐ.ஜி. நல்ல முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். மாவட்ட கலெக்டர்களும் ராணுவ உடை தரிக்க வேண்டும். எல்லா

28th February 1963] [திரு. கரு. சீமைச்சாமி]

நேரத்திலும் அணியா விட்டாலும் சட்டமன்றக் கூட்டங்கள், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டம் இவைகளுக்குச் செல்கிறபோதாவது ராணுவ உடையில் செல்ல வேண்டும். காக்கி உடை அணிந்தவுடனே வீரம் வருகிறது. ஆகவே காக்கி, அல்லது சிமென்ட் கலர் உடை அணிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரங்களில் ஊர்காவல் படை அமைக்கப்படுகிறது. அந்த ஊர்க்காவல் படையை உடனடியாக கூட்டவேண்டுமென்றால் எப்படிக் கூட்டுவது? அதற்கு வழி வகை காண வேண்டும். அதற்கு சங்கு ஒலிக்க வேண்டும். சங்கு ஒலிக்கிறபோது ஊர் காவல் படையினர் அத்தனை பேர்களும் ஒரு முக்கியமான இடத்தில்கூட வேண்டும். முக்கியமான காரியத்தைப்பற்றி அவசரமாககூடிப் பேச வேண்டுமென்றால் இப்படிச் செய்ய வேண்டும். ஜப்பானில் மாஸ் ட்ரெயினிங் என்று சொல்கிறார்கள். சங்கு ஒலித்தவுடன் ரயில், கார்கள் நிறுத்தப்படுகின்றன. எல்லோரும் கூடுகிறார்கள், பயிற்சி பெறுகிறார்கள், மரியாதை செலுத்துகிறார்கள். ஆக, நகரங்களில் ஊர்காவல் படையினர் உடனடியாககூட இப்படி ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சகோதர உறுப்பினர்கள் நான் எழுந்தவுடனே கொஞ்சம் குதூகலமாக இருக்கிறார்கள். எனக்கும் தெம்பு நிறைய ஏற்படுகிறது. அதற்காக அவர்களுக்கு முதலில் என் நன்றி. சிறிது நேரத்திற்கு முன்னே கனம் ராமய்யா அவர்கள் "நீங்கள் இந்தப் படையில் சேர்ந்தால் என்ன நிறத்தில், என்ன உடை அணியப் போகிறீர்கள்" என்று என்னைக் கேட்டார். எவர்களுடைய தேச பக்திக்கும் அல்ல நாட்டுக்கு வந்திருக்கிற ஆபத்தை கணிக்கிற நேரத்தில் ஏற்படுகிற ஆத்திரத்திற்கும் என்னுடையவை குறைந்ததல்ல. தேசப் பாது காப்புப் படையில் சேருவதற்கு எவருக்கும் முன்னதாக நான் தயார். உடை வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்றே நான் கருதுகிறேன். அப்படி உடை வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றால் உடை மட்டும் அல்ல, பன்றிக் கறி சாப்பிட வேண்டியதும் கட்டாயம் என்றால் அதற்கும் நான் தயாராயிருக்கிறேன். இதை நான் சொல்லவில்லை. எனது வழிகாட்டியாகிய தத்துவ மேதை விவேகானந்தா அவர்கள் கூறியதையே நான் கூறுகிறேன். இந்திய நாட்டின் மானம், இந்திய நாட்டின் கௌரவம் இந்திய நாட்டின் சுதந்திரம் காப்பாற்றப் பெறுவதற்கு எதையும் தியாகம் செய்வதற்கு தயாராயிருக்க வேண்டுமென்று எண்ணுபவர்களில் நான் எவருக்கும் குறைந்தவன் அல்லன் என்று முதலில் கூறி உரையின் பகுதிக்கு வருகிறேன். இந்த நாடு பழம் பெரும் நாடு. வீரத்திலே, தீரத்திலே, என்றெல்லாம் நம் நாட்டைப் பாராட்டியிருக்கும் நிலையை நாம் காண்கிறோம். இதெல்லாம் பின்னே வந்த விமர்சனங்கள். முன்பே உள்ள நிலையைக் கவனிக்கும்போது இலக்கியங்களிலும், சிலாசாசனங்களிலும், செப்புப் பட்ட

[திரு. சா. கணேசன்] [28th February 1963

யங்களிலும் நமது படைகளைப் பற்றி வரலாற்றுத் துணுக்குகளைக் காண்கிறோம். படை என்று பொதுப் பெயர் இருக்கும். படைப் பிரிவுகள் பல இருந்தாலும் கிளைகள் இரண்டு உண்டு. ஒன்று மறப்படை (அபன்ஸிவ் போர்ஸ் என்று சொல்லலாம்). மற்றொன்று அகப்படை (டிபன்ஸிவ் போர்ஸ்). அகப்படை என்பது உள்ளிருந்து காவல் செய்வது. மறப்படை என்பது மேற்சென்று எதிரியைத் தாக்கிப் பொருதும் படை. மறப்படை பற்றி நாம் இங்கு பேச வேண்டியதில்லை. அது டெல்லியில் பேச வேண்டிய விஷயம். அதை விட்டு விட்டு அகப்படைக்கு வருகிறேன். அகப்படை இரண்டு கூறுகப் பிரிக்கப்படுகிறது, நாடுகாவல் பாடி காவல் என்று. பாடிகாவலும் இரு வகையாகும். இவை பெரும் பாடி காவல், சிறுபாடி காவல் என்று சாஸனங்களில் குறிக்கப் பெற்றிருக்கின்றன. பெரும்பாடி காவல் என்றால் ஐ. ஜி. முதல் கான்ஸ்டபிள் வரை உள்ள நிரந்தர உத்தியோகஸ்தர்களை, சர்க்கார் ஊழியர்களைக் கொண்டது. இப்போது உள்ளது போல் ஐ.ஜி. என்றெல்லாம் பெயர் இல்லாதிருக்கலாம், அப்போது பெயர் துறை, முறை முதலிய வேருக இருந்து இருக்கலாம். ஊரிலுள்ள மக்களை, கௌரவ ஊழியர்களைக் கொண்ட ஒன்றைச் சிறுபாடி காவல், என்று சொல்லப் பெறும். ஊர் என்றாலே சிறுபாடிக் காவலைக் குறிக்கும்.

மன்நாடு பூங்கழலான்; வாணற்கு இளங்கோமான்;
அந்நாள் வடுகு எறிந்த ஆர்வத்தால்—இன்னம்
மறம் கால் வேல் அண்ணல் வரும் வரும் என்று அஞ்சி
உறங்கா வடவேந்தர் ஊர்.

என்பது சாஸனத்தில் உள்ள பாட்டு. சிறுபாடி காவல், பெரும் பாடி காவல் இவர்கள் இரவு பகல் என்று இல்லாது விழித்துக் கொண்டிருந்து பணியாற்றி வந்தார்களாம். அதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இலக்கியங்களில் போனால் இப்படி ஆயிரக் கணக்கானவற்றை எடுத்துக் காட்டலாம். அதுவா நம் வேலை நமக்கு இப்பொழுது? ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். பொன் முடியார் என்ற நன்மொழிப் புலவர் பெண் மணியின் பாடல் ஒன்று புற நானூற்றில் காணப் பெறுகிறது.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிருவாள் அரும் சமம் முருக்கிக், களிறு எறிந்து
பெயர்தல் காளைக்குக் கடனே!

என்பதுதான் அது.

"ஈன்று புறந்தருதலென்தலைக் கடனே" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஒரு குழந்தையை பெற்று வளர்த்து பாலகனுக்கும் வரை உள்ள வேலை தாயினுடையது. "சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே", நல்ல கல்வி கற்றுக் கொடுத்து அறிஞனக்கு

28th February 1963] [திரு. சா. கணேசன்]

வது தந்தையின் கடமை. "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" வேல் போன்ற ஆயுதங்களை தயாரித்துக் கொடுத்தல் கருமான்களின் கடமை. அப்போது துப்பாக்கி போன்று ஒன்றும் இல்லை. வேல், வாள் முதலியனவே அக்கால ஆயுதங்கள். பின்னர், "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்றும் வருகிறது. நன்னடை என்றால் "ஸ்டைலான வாக்கிங்" என்பதல்ல பொருள். அதற்கு "போர் பயிற்சி" என்றுதான் பொருள். அப்படி போர் பயிற்சி கொடுக்க வேண்டியது வேந்தர்களின் கடமை. இப்போது அது அரசாங்கத்தின் கடன். வேந்தற்குக் கடனே என்பதை ஆட்சியின் அல்லது அரசாங்கத்தின் கடனே என்று நாம் இப்போது அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படி வளர்ந்து வாழ்ந்து மானத்தோடு தீரத்தோடு, நெறியோடு நின்ற மக்களாகிய நாம் இனியும் அப்படியே விளங்க வேண்டும், விளங்குவோம் என்ற நம்பிக்கையில்தான் நான் மேலே செல்கிறேன்.

இங்கே பேசுகிற பல நண்பர்கள் ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு நான் யாருக்கும் பதில் சொல்ல வரவில்லை, அது என்னுடைய நோக்கமும் அல்ல, கட்சிக் கண்ணோட்டத்தோடு பேசினார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் இதில் யாரும் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது என்பது தான். இது தேசத்திற்கு வந்திருக்கின்ற பொது ஆபத்தை போக்குவதற்கு எடுத்திருக்கின்ற நடவடிக்கை. இதில் இவர் யார், அவர் யார் என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது மிகவும் தீமை பயக்கும். நாட்டைப்பாதுகாக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் கட்சி இல்லாமல், இனம் இல்லாமல், ஜாதி இல்லாமல், ஆள் இன்னார் என்றில்லாமல் பார்த்து, யார் நம்பக்கூடியவர்கள், யார் நம்ப முடியாதவர்கள் என்று மட்டும் பார்த்துச்சேர்க்கவேண்டும். எல்லோரையும் இதில் சேர்க்க முயற்சிக்கவேண்டும். . . சேர் வாரும் ஜகத்தீரே. என்றபடி எல்லோரும் இதில் சேர்ந்து கொள்வதற்கு வசதி இருக்கவேண்டும். இப்போது எலக்ஷன் எல்லாம் ஒத்தி போடப்பட்டிருக்கிறது. அவ்விதமின்றி எலக்ஷன் வந்தால் அதற்கு இது எவ்வாறு பயன்படும் என்று பார்த்து நாம் இதை அணுகக் கூடாது. நிச்சயமாக அந்த எண்ணப் பாட்டில் இந்த அரசாங்கம் இருக்காது என்றுதான் நம்புகிறேன், இருக்கவும் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தவிதமான எண்ணம் இருக்கிறது என்று நாம் பழி சுமத்துவதாகவும் யாரும் எண்ணக்கூடாது. ஊர்க்காவல் படையில் எப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேரலாம், ஊர்க்காவல் படையில் சேருவதற்கு தகுதியானவர்கள் யார், தகுதியில்லாதவர்கள் யார் என்பதை பார்த்தெடுக்கும்போது, வயது என்பது ஒரு பெரும் அளவுகோலாக இருக்கக்கூடாது. அதற்காக தொண்டு கிழங்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு திண்டாட வேண்டுமென்று நான் சொல்லவரவில்லை, முப்பது வயதுள்ளவர்கள் கிழங்களைப்போல் இருப்பதையும், 70 வயதுள்ளவர்கள் இளைஞர்களைப்போல் முறுக்காக நடைபோட்டுக்கொண்டு இருப்பதையும்

நாம் பார்க்கின்றோம். ஆகவே பிறந்ததேதி மட்டும் ஓர் அளவு
கோலாக இருக்க முடியாது. அவ்வப்போது இருக்கின்ற நிலைக்
குத் தகுந்தவாறு நாம் அணுக வேண்டும். யுத்த நெருக்கடிக்
காக இந்த ஊர்க்காவல் படை ஏற்படுத்தப்போவதாக இருந்
தாலும், இதன் மூலமாக நாம் எவ்வளவோ அற்புதமான
காரியங்களைச் செய்யலாம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது,
அலட்சியமாக இருந்துவிடவும் கூடாது. நாம் எவ்வளவோ
நாகரிகத்தில், பண்பாட்டில் சிறந்தவர்கள் என்று நம்மை நாமே
சொல்லிக்கொண்டிருக்கிறோம். பழம்பெருமை பேசுவதிலோர்
மகிமை இல்லை. அவ்விதம் எல்லாம் சிறந்தவர்கள் என்று
சொல்லிக் கொள்ளுகிற நாம் இப்போது நமது தெருவை,
அல்லது ஊருணியை எவ்வாறு வைத்துக்கொண்டிருக்கிறோம்
என்பதை எல்லோரும் அறிவோம். யாரையும் நான் குறை
சொல்லவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.
நம்முடைய பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருப்பதில் பெருமை
யில்லை. முக்கியமாக ஊர்ச்சுகாதாரத்தை நிச்சயமாக கண்
காணித்துக்கொள்வதற்கு இந்த ஊர்க்காவல்படை தயாராக
இருக்கவேண்டும். குடிநீர் இருக்கின்ற இடங்களை எடுத்துக்
கொண்டு பார்த்தால், அதில் எதையெல்லாம் செய்யக்கூடாதோ
அதையெல்லாம் செய்கிறோம், எனக்கு அதில் உரிமையில்லையா
என்று கேட்டு உரிமையோடு செய்கிறார்கள். அந்த அளவுக்கு
நம்முடைய சுதந்திரம் வளர்ந்திருக்கிறது. அன்று ஊர்ச்
சுகாதாரம், உடல் சுகாதாரம் இந்த இரண்டையும்முக்கியமாக
காந்திஜி நிர்மாணத்திட்டத்தில் சேர்த்திருந்தார்கள். உடல்
சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் ஓரளவுக்கு கவனம்
செலுத்த பலர் முன்வந்திருந்தாலும், ஊர்ச்சுகாதாரத்தைப்
பொறுத்த அளவில் அதை சுப்பாற்றுவதற்கு யாரும் தயாராக
இல்லை. என்னுடைய வீட்டுக் குப்பையை எடுத்து அடுத்த
வீட்டின் முன்னால் போடுவதில் எனக்கு திருப்தி. இப்படி
ஒரு எண்ணம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதை தடுப்ப
தற்கு ஊர்க்காவல் படை பயன்பட வேண்டும். இவ்விதம்
செய்வதின் மூலமாக நம்முடைய வருங்காலத்தை நாம்
செம்மையாக்கிக்கொள்ள முடியும். கிட்டதட்ட இந்த ஊர்க்
காவல் படை போலீஸ் படையை போன்றுதான் செயல்படும்
என்று தெரிகிறது. போலீஸ் படையில் பல கஷ்டநஷ்டங்கள்
இருக்கின்றன. அந்தவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படுத்
தாமல் ஓரளவுக்கு பணி செய்கின்றவர்கள் தான் இந்த ஊர்க்காவல்
படையினர். சாதாரணமாக யுத்தம் வரும்போது, மிலிட்டரியில்
இருக்கின்றவர்கள் எல்லாம் போனபின்னால், ஆர்ம்ட் போ
லீஸில் இருக்கிறவர்கள் எல்லாம் போக வேண்டியது தான்.
அப்படிப் போய்விட்டால், அந்த இடத்திற்கு வேறு ஆட்கள்
போக வேண்டும். சாதாரணமாக மேல் அதிகாரி உயர்ந்த
பதவிக்குப் போய்விட்டால் அதற்கு அடுத்த ஆள் மேலே
போவார், இப்படி வரிசை வரிசையாக போய்க் கொண்டிருப்
பார்கள். அதே போல் எல்லா கான்ஸ்டபிள்களும் போன
பின்னால் அந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்கு (பில்-அப்)
ஆள் வேண்டும். அதற்குத்தான் இந்த ஊர் காவல் படையை
நாம் தயார் செய்கிறோம் என்பதையும் நாம் மனதில் கொண்டு,

அதற்கு தகுந்த முறையில் அவர்களுக்கு பயிற்சிகள் எல்லாம்
கொடுக்கவேண்டும். போலீஸ் பொறுப்பை ஏற்றுக்கொண்டு
பேசுகிற அமைச்சர் அவர்களே கல்வி அமைச்சராகவும்
இருக்கின்ற காரணத்தால், நான் இப்போது சொல்லவிரும்பு
வது, தேக பயிற்சிப் பள்ளிகளில் எல்லாம் மேலும் சிறிதளவு
ராணுவப் பயிற்சியும் சேர்த்து சொல்லிக்கொடுக்க ஏற்பாடு
செய்யவேண்டும். இதற்கு வேண்டிய பயிற்சிகளைக் கொடுக்க
தயாராக இருக்கிறோம் என்று பல உடற் பயிற்சி பள்ளிகள்,
கல்லூரிகள் கூறி வருகின்றன. இன்சினியரிங் பயிற்சிக்கு
வேண்டிய லாபரட்டறி போன்றவைகள் இதற்குத் தேவை
யில்லை. 100 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கிற இடத்தில் 300 பேர்
களுக்கு பயிற்சி கொடுக்கலாம். அதற்கு எத்தனையோ வசதிகள்
இன்றைய நிலைமையில் இருக்கின்றன. லெப்ட்-ரைட் மட்டும்
போட்டு கை கால்களை நீட்டுவதோடு நின்று விடக்கூடாது,
ஓரளவுக்கு ராணுவப் பயிற்சியும் கொடுக்கவேண்டும் என்பது
தான் என் எண்ணம். இதைச் செய்ய முடியும் என்பதை,
இம்மாதிரிப்பட்ட கல்லூரியை நடத்துகின்ற குழுவில் நான்
இருக்கின்ற காரணத்தால் ஏற்பட்டிருக்கின்ற அனுபவத்தின்
மூலமாகவே இதைச் சொல்லுகிறேன். இவ்விதம் பயிற்சி
பெறுகின்ற ஆசிரியர்கள் ஊர்க்காவல் படை நிலையங்களில் போய்
இன்ஸ்ட்ரக்டர்களாக பணியாற்றினால் இந்த பயிற்சியை
அங்கும் கொடுக்க முடியும் என்று நான் கருதுகிறேன். இவ்
விதம் ஒவ்வொரு இடத்திலும் 50, 60 பேர்களுக்கு உடற்
பயிற்சியும், ராணுவப் பயிற்சியும் சேர்ந்து அமையும்படியான
நிலைமையில் இந்தப்பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். அதற்கு
அங்கங்குள்ள போலீஸ் பயிற்சிகொடுக்கும் அதிகாரிகளையும் இம்
மாதிரிப்பட்ட ஆசிரியர்களையும் இணைத்து பயிற்சி கொடுப்பது
மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதுபோக, ஆள் வாட்ட சாட்டமாக இருப்பதை மட்டும்
பார்த்து காலை தூக்கி லெப்ட்-ரைட், ஓடு, நில், முழுக்க திரும்பிப்
பார், அரை வாட்டமாக பார் என்று மட்டும் பயிற்சி கொடுப்பது
போதாது. பயிற்சியில் முக்கியமாக தச்சுத் தொழில் கற்றுக்
கொடுக்கவேண்டும், கொல்லத் தொழில் கற்றுக்கொடுக்கவேண்டும்,
கொத்துத் தொழில் கற்றுக்கொடுக்க வேண்டும், அதே போல்
மெக்கானிக்கல் தொழில் போன்றவைகளுக்கும் சேர்த்து பயிற்சி
கொடுக்கப்பட வேண்டும். இம்மாதிரிப்பட்ட தொழில்களில்
யாருக்கு எப்படி மனம் போகிறது, எப்படி மனவிருப்பம் இருக்
கிறது என்பதைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் பயிற்சி
கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட பயிற்சிகளை ஊர்காவல் படை
யினருக்குக் கொடுப்பதற்கும், அவ்வத் தொழில் செய்து கொண்டிரு
பவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும் வழிவகை செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலிலும் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னால் மிகவும் ரோசத்தோடும், வீரத்தோடும் இருந்தவர்கள்தான். அவர்களை ஊர்காவல் படையினருக்குப் பயிற்சி கொடுக்க பயன்படுத்திக் கொள்ளலாம். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

இதுவுமன்றி, ஐ.என்.எ.-யில் சேர்ந்திருந்த பல ஆயிரக்கணக்கானவர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நானே நேரடியாக தொடர்பு கொண்டிருக்கிறேன். எங்கள் பகுதியில் மட்டுமே சுமார் 2,000 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பர்மாவிலும் மலேயாவிலும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். இவர்கள் அந்த இடங்களிலுள்ள செட்டியார்களிடத்திலும், பெரிய முதலாளிகளிடத்திலும் கணக்கர்கள் போன்று சாதாரண வேலை பார்த்து வந்தவர்கள். இவர்களை சுதந்திர உணர்ச்சி ஊட்டி தட்டி எழுப்பி அவர்களுக்குப் போர் பயிற்சி கொடுத்து 'இந்தியன் நேஷனல் ஆர்மி' என்று திரட்டி இந்திய நாட்டின் பெருமையை நேதாஜி உயர்த்தினார்கள். அவர்களுக்கு பல அனுபவங்கள், பல பயிற்சி பெற்ற தகுதிகள் இருக்கின்றன. அவற்றை நாம் நன்றாக பயன்படுத்தவில்லை. இதன் காரணமாக அவர்கள் இன்று அதிருப்தியோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான வாய்ப்புத் தரப்படவில்லை என்று ஒரு வாரத்திற்கு முன்னால்கூட என்னிடம் வந்து அங்கலாய்த்து தங்கள் வருத்தத்தை தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு ஜப்பான் ராணுவ அதிகாரிகளிடத்தில் முறையாக ராணுவப் பயிற்சி பெற்று வந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இப்போது நம் நாட்டில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை நாம் அழைத்து, அவசர காலத்தில் எப்படி ஆட்களை பயிற்றுவிக்க வேண்டும் என்பதை அவர்கள் அனுபவத்தின் மூலமாக உணர்ந்திருக்கிறவர்களாதலால், அவர்களைக்கொண்டு இப்பேர்ப்பட்ட வேலையை சுலபமாகச் செய்ய முடியும். ஆகவே ரொம்பவும் முக்கியமாக ஐ.என்.ஏ.-க்களை இந்த ஊர்க்காவல் படையில் சேர்த்து அவர்களை தரமான உத்தியோகஸ்தர்களாக ஆக்கி, அவர்கள் மூலம் பயிற்சி கொடுக்கச் செய்து, அதன்மூலமாக நம் நாட்டின் காவலுக்கு ஒரு அகப் படை, உள் நாட்டுப் பாதுகாப்புப் படை—இதிலே ஹோம்கார்ட்ஸ், ஊர்க்காவல் படை என்று சொல்லப்பட்டிருக்கிறது; அகப்படை என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்—அது மிகப் பழம் சொல்லாக இருக்கிறது; அதைத்தான் சொல்லியாகவேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை, இந்த சொல்லைத்தான் போடவேண்டும், அந்த சொல்லைப் போடக் கூடாது என்ற கொள்கை உடையவன் அல்லன் நான். இப்படி, நம் நாட்டில் இன்று இருக்கிற நிலைமையில் இருக்கிற வசதிகளை, இருக்கிற வாய்ப்புகளைப் பெருக்கி நாட்டிலே சாசுவதமாக—இதை தாற்காலிகமாக மட்டும் கருதி விடக் கூடாது—நிரந்தரமாக, சுகாதாரத்திலே, ஒழுக்கத்திலே, அறநெறியிலே, கட்டுப்பாட்டிலே, நாமும் நம் பிற்கால சந்ததிகளும் வளர ஏற்ற அடிப்படை இந்த அமைப்பு என்பதை நாம் மனதில் கொண்டு

இந்த விஷயத்தை அணுகவேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும், எந்தக் காலத்திலும், யாரும் இதை கட்சி லாப நோக்கத்தோடு பார்க்கப்படாது என்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையிலே இந்த மாதிரியான நல்ல கருத்துக்களைத் தொகுத்து, நல்ல முறையை வகுத்து அதன்மூலமாக இந்த ஊர் காவல் படை செம்மையானதாக, பயனுள்ளதாக அமையச் செய்யவேண்டுமென்று ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! ஊர்க்காவல் படை ஒன்றினை உருவாக்கும் மசோதாவினைக் கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து, இந்த மன்றத்தின் முன்னர் வைத்துள்ளார்கள். இந்த மன்றத்தினுடைய ஒப்புதலையும் ஆதரவையும் பெறுகிற நிலைமையை இந்த மசோதா பெற்றிருக்கிறது. மன்றத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் முழு ஆதரவையும் இதற்கு முழு மனதோடு தந்திருக்கிறார்கள். இந்த ஊர்க்காவல் படை அமைக்கிற இன்றியமையா நோக்கத்தை ஆதரித்து, இதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முழு மனதோடு வரவேற்றுச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த ஊர்க்காவல் படை அமைப்பதன் முக்கிய நோக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய முன்னுரையில் எடுத்துக் கூறினார்கள். அது இந்த மசோதாவிலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஊர்க்காவல் படையை உருவாக்கும் நோக்கத்தின் அடிப்படையில் பார்த்தால், கட்சிக் கருத்துக்களின் அடிப்படையில் இது அமையவில்லை என்பது மிகவும் தெளிவாகும். அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரசியல் கட்சிக் கருத்துக்களின் அடிப்படையில், ஏதாவது விவாதம் நடத்தவேண்டி ஏற்படும்போது கட்சிகளைச் சார்ந்தவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை நிலைநாட்ட வேண்டிய அவசியமும், அந்த அவசியத்திற்கான ஆதாரங்களையும், சான்றுகளையும் கொண்டுவந்து வைக்க வேண்டிய நிலைமையும், அவற்றிற்காக வாதாடித் தீரவேண்டிய அவசியமும் ஜனநாயக முறையில் ஏற்பட வேண்டியவைதான். அடிப்படையில் கட்சிக்கருத்து மாறுபாடு உண்டு, வேறுபாடு உண்டு என்ற முறையில்தான் ஜனநாயகம் இயங்கி வருகிறது. எனவே கட்சிக் கருத்துக்கள் அடிப்படையில் கருத்துக்களை நிலைநாட்ட வேண்டிய நேரங்களும், நிலைநாட்டவேண்டிய இடங்களும், நிலைநாட்டவேண்டிய நிலைமைகளும் வேறுபடுகின்றன. ஆனால் ஊர்க்காவல் படையை அமைக்கிற இந்த அடிப்படை நோக்கத்தில், கட்சிக் கருத்துக்களும், கட்சிக் கருத்துக்களின் அடிப்படையில் வாதப் பிரதிவாதங்களுக்கும் எவ்வித இடமும் இல்லை.

இதன் அடிப்படை நோக்கம் என்ன என்று பார்க்கின்றபோது, நாட்டுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நேரத்தில், சிலபல பயங்கர நிகழ்ச்சிகளும், விளைவுகளும் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிப்பட்ட பயங்கர நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விடுமானால் நமது நாட்டையும், நமது

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [28th February 1963

ஆட்சியையும், நமது அரசையும், நமது மக்களையும் காப்பாற்ற வேண்டிய நடவடிக்கைகள் எவ்வெவற்றையும் நாம் மேற்கொள்ளுவது என்று தெரியாமல் இருக்கக் கூடாது. அதற்கான பயிற்சி பெற வேண்டியது அவசியமாகிறது. போர் விளைவுகளிலிருந்து நாட்டைக் காப்பாற்ற உறுதுணையாக அமைகிற வகையில் ஊர்க் காவல் படை அமைக்கப்படுகிறது என்று நான் கருதுகிறேன். எதிர்பாராத விளைவுகள் ஏற்படுமானால், தீப்பற்றிக் கொள்ளுமானால், அல்லது கட்டிடம் இடிந்து போகக் கூடுமானால், அல்லது வேறு பல தொத்து நோய்கள் ஏற்படுமானால், அவைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற பயிற்சி இருந்தாலொழிய, அதற்கான முறைகளை மேற்கொண்டாலொழிய நெருக்கடி நேரத்தில் அத்தகைய தீங்குகளை அகற்ற வழிவகை பிறக்கா. அதற்கு முன்கூட்டியே பயிற்சி பெற்றிருக்கவேண்டும் மக்கள், என்ற நோக்கத்தில் ஊர்க் காவல் படை அமைக்கப்படுகிறது என்பது இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிற கருத்துக்களிலிருந்து மிக நன்றாக நாம் அறிகிறோம். பொதுமக்களுக்குப் பாதுகாப்பாக அமையவும், அரசாங்க அதிகாரிகளுக்கு குறிப்பாகக் காவல் துறையினருக்கு—உதவியாக அமைய, இந்தப் படை உருவாக்கப்படுகிறது என்று தெரிகிறது. பெரும்பாலும் உதவி செய்யக் கூடிய பொறுப்பும், பெரும்பாலும் பாதுகாக்கக்கூடிய பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்று தெரிய வருகிறது. உதவி புரிய வேண்டும், உதவிக்கு உறுதுணை புரியவேண்டும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும், எதிர்பாராத தீங்கு ஏற்படும்போது அதிலிருந்து மீளுவதற்குப் பயிற்சி பெறவேண்டும் என்ற இந்த நோக்கங்களோடு இது அமைக்கப்படுகிறது. இந்த நோக்கங்களை நிறைவேற்றத் தக்க ஆற்றல், நிறைவேற்றுவதற்குரிய அறிவு, இதற்காக நேரத்தைச் செலவழிக்கிற தன்மை, இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம், அதற்கான உணர்ச்சி, மற்றும் வேறு பல வசதிகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றைப் பெற்றவர்கள் இந்தப் படையில் இடம் பெறவேண்டும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், இந்த நோக்கத்தை நிறைவேற்றுகிற அக்கரையும், அறிவும் கொண்டு, ஊர்க்காவல் படையில் சேர முன் வரவேண்டும். ஆர்வமும், ஊக்கமும் கொண்டு, பெயருக்காக, புகழுக்காகச் சேர்ந்து . பணியாற்றுவது என்று இல்லாமல், தங்களுடைய நேரத்தைச் செலவழிக்க வாய்ப்பும் வசதியும் கொண்டு அறிவும் ஆற்றலும் கொண்டு, முழு முயற்சியோடு, நிலைமையைச் சரிவரப் புரிந்துகொண்டு, பொது நோக்கத்தோடு, பொது நோக்கை அடிப்படையாகக்கொண்டு இந்தப் பணி ஆற்றப் படவேண்டும். கட்சிக் கருத்துக்களுக்கு இதில் இடமில்லை என்று சொன்னாலும், ஜனநாயகப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்களிடத்தில் கட்சிக் கருத்துக்கள் இருக்கத்தான் செய்யும். வேறு இடங்களில் கட்சிக் கருத்துக்களை நிலைநாட்ட வாய்ப்பும் வசதியும் இருக்கின்றன என்று சொன்னாலும், கட்சிக் கருத்துக்களை மறந்து, ஒன்றுபட்டு பணியாற்றக்கூடிய—பணியாற்றவேண்டிய சிலபல இடங்களில், இந்த ஊர்க்காவல் படையும் ஒன்று ஆகும். பல கட்சிக்காரர்கள் சேர்ந்தாலும், அவர்களிடையே பல கருத்துக்கள் இருந்தாலும், ஊர்க்காவல் படையின் பணி பற்றிக் கருத்து மாறுபாடு ஏற்படவேண்டிய நியாயம் இல்லை.

28th February 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஊர்க்காவல் படைக்கு அளிக்கப்படுகிறது. நாட்டினுடைய பணிகளில் எல்லா மக்களையும் ஈடுபடுத்த வேண்டியிருப்பதால், நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து, நெருக்கடி இவைகளைத் தீர்ப்பதில் நமது முழு முயற்சியும், நமது முழுச் செயலும் ஒரு முகப்படுத்தப்படுகிற நிலையில், சிலபல பணிகளைப் புரிகிற முறையில், பயிற்சி அளிப்பதற்காக இந்த ஊர்க்காவல் படை அமைக்கப்படுகிறது. எந்த இடத்தில் தகராறுகளும் மனமாச்சரியங்களும் வரும் என்றால், இந்தப் படைக்குச் சிலபல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால் வரும். தங்கள் இச்சைப்படி நிறைவேற்றக்கூடிய தன்மை இருந்தால், கட்சி மாச்சரியங்கள், வேறு வேறு கருத்துக்கள், தத்துவங்கள் இவைகளைப் பயன்படுத்தி, வேறுபாடு மாறுபாடு காட்டக்கூடிய முறையில் நிலைமைகள் அமைந்துவிடும் என்ற அச்சம் இருப்பதாகச் சில உறுப்பினர்கள் கூறினார்கள். இங்குக் கொடுக்கப்பட்டுள்ள மசோதாவில் A member of the Home Guard when called out by an order under Section 6 shall have the same powers, privileges and protection as an officer of the Police appointed under the Madras City Police Act 1888. என்று இருக்கிறது. அந்தப் போலீஸ் அதிகாரங்களில், கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புப்படி, நான் கருதுகிறேன், "Police duties like control of traffic and crowds" அதாவது போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், மக்கள் கூட்டம் எதிர்பாராத அளவுக்குச் சிலபல இடங்களில் சேரும்போது ஒழுங்கு படுத்துதல் ஆகிய பணிகளை ஊர்க்காவல் படை ஒப்புக் கொள்ளும் முறையில் இருந்தால் அது வரவேற்கத் தக்கது. அதிகாரங்களை நிறைவேற்றும் பணியும், போலீஸ் அதிகாரிகளைப் போல பல பணிகளைச் செய்யும் வாய்ப்பும் ஊர்க்காவல் படையினருக்கு இருக்கிறதா இல்லையா என்று மசோதா மூலம் அறிந்து கொள்ள முடியவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இதுபற்றி இறுதியில் விளக்கம் தருவார்கள் என்று கருதுகிறேன். காவல் துறை அதிகாரிகளின் முழு அதிகாரங்கள் வழங்கப்பட்டால், தீர்ப்புகள் வழங்குகிற அதிகாரங்கள் போன்றவை இப்படிப்பட்ட ஊர்க்காவல் படைக்கு அமைந்துவிட்டால், அதனால் குழப்பங்களும் வேறு பல நிலைமைகளும் வரக்கூடும். ஊர்க்காவல் படையின் நோக்கம் உதவி செய்வது, பணி புரிவது, பாதுகாப்பு தருவது, பாதுகாப்புக்கான காரியங்களை நிறைவேற்றுவது, குற்றங்களைக் கண்டுபிடித்துச் சொல்லுவது என்ற முறையில் இருக்கவேண்டுமே தவிர, தீர்ப்புக்களை வழங்குவது, மற்ற போலீஸ் அதிகாரங்களை மேற்கொள்ளுவது என்ற பணிகள் ஊர்க்காவல் படையினரிடம் ஒப்படைக்கக்கூடாது. பணியாற்ற வேண்டிய நோக்கம் இருக்க வேண்டுமே தவிர, அதிகாரத்தை நிலைநாட்ட, நிர்வாக காரியங்களைச் செய்ய, அவற்றிற்கான அதிகாரங்கள் ஊர்க்காவல் படையினரிடம் இருக்கக்கூடாது என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்பார்க்கப்படுகிற பல்வேறு விளைவுகளைச் சமாளிக்கக் கற்றுக்கொடுக்க மாத்திரம் அல்லாமல், மக்களுடைய மனப்பான்மையை மாற்றுதல், அவர்களுக்குச் செய்திகளை அறிவித்தல், 12-00 noon.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [28th February 1963

இந்தப் படையினர் பெறுகிற சிலபல பயிற்சிகளை பார்த்துக் கொண்டு மக்களும் தாங்களாகவே அந்தப் பயிற்சிகளை அறிந்து கொள்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துகிற அளவுக்கு, இந்த ஊர்க் காவல் படையின் பயிற்சியும், வேறு பல நிலைமைகளும், முறைகளும் இருக்க வேண்டும். என்ன செய்வது, ஏது செய்வது என்று யாருக்குமே தெரியாத அளவிலேதான் நாட்டு மக்களில் பெரும் பாலோரும் இருந்துகொண்டிருக்கின்றனர். விளைவு ஏற்பட்டதற்குப் பிறகு, செய்யத் தவறிவிட்டோம் என்ற எண்ணம் ஏற்படாமல், நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்கு, இத்தகைய ஊர்க்காவல் படை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆகவே, ஆற்றலோடும், ஆர்வத்தோடும், எழுச்சியோடும் பணியாற்றுகிற அளவுக்குப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதிலே சேரவேண்டுமென்று வருகிறவர்களுடைய நோக்கம் அதாவது சான்றிதழ் கேட்க வருகிறவர்களுடைய நோக்கம் எப்படியிருக்கிறது என்றால், வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை தருவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்று கருதி, சான்றிதழ் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். எவ்வளவு சம்பளம் தரப்படும், எவ்வளவு படி தரப்படும், வேலையினுடைய கால அளவு, நேர அளவு போன்ற விவரங்கள் இந்த மசோதாவில் இல்லை. இவை பின்னர் விதிமுறைகளிலே அமைக்கப்படுமென்று நான் கருதுகிறேன். சான்றிதழ் கேட்க வருகிறவர்களில் பலர் எந்த நோக்கத்தோடு வருகிறார்கள் என்றால், வேலை இல்லாமல் இருக்கிறவர்கள், வேலையை இழந்தவர்கள், குறிப்பிட்ட சம்பளம் கிடைக்கும், படி கிடைக்கும் என்று நினைத்துத்தான் வருகிறார்கள். எவ்வளவு தெளிவுபடுத்திச் சொன்னாலும் 'சான்றிதழ் தாருங்கள், நாங்கள் எப்படியாவது வேலை பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது மிக மிகத் தெளிவுபடுத்தப்பட வேண்டிய தொன்றாகும். வேலை இழந்தவர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய ஒரு சாதனமாக இது மாறிவிட்டால், அதனுடைய அடிப்படை நோக்கமும், நாம் எதிர்பார்க்கிற பலன்களும் ஏற்படாமல், இது பெரும் செலவுகளுக்கும், வேறு பல நிலைமைகளுக்கும் ஆளாகி, காவல் துறையைப் போல ஒரு துணைத் துறையாக ஆகிவிடும். ஆகவே, இந்தப் படையில் சேர வருகிறவர்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு, இது மிக மிகத் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென்று நான் கூறிகொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே வேறு பல தொழில்களில் ஈடுபட்டுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு வேறு பல வசதிகள் இருந்து, தங்களுடைய நேரத்தையும் நினைப்பையும், உழைப்பையும் செலவழிக்கக் கூடியவர்கள் மட்டும்தான், இதிலே வருவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெளிவு படுத்தவேண்டும். அப்படிப்பட்டவர்களால்தான் ஒன்று சேர்ந்து பணியாற்றவும், சில பல முறைகளைக் கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பும், வசதியும் ஏற்படக்கூடும். நல்ல கட்டுப்பாட்டோடும், முறையோடும், வேறு பல நிலைமைகளோடும், இந்த ஊர்க்காவல் படையை அமைத்துத், திறம்பட பணியாற்றவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். எனக்கு முன்பு பேசிய சில உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல, காவல் துறையினர் சில சமயங்

28th February 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

களிலே பணிகளை விட்டுவிடுகிற நிலையிலே, அந்தப் பணிகளை அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்றுச் செய்யுமளவுக்குப் பயிற்சி பெறும் அளவுக்கு, பயிற்சி அளித்தல் வேண்டும். நெருக்கடி நிலைமை ஏற்பட்டால், அதற்கான முறையில் பணியாற்ற, முன் கூட்டியே பயிற்சி கொடுப்பது நல்லது. அதிகாரம் செலுத்தும் உரிமை ஊர்க்காவல் படையினருக்கு இருக்கக்கூடாது. வேலையிலிருந்து விலக்குவதைப் பற்றிச் சொல்லும்பொழுது, என்ன காரணத்திற்காக விலக்குகிறோம் என்று முழுவதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்ற பிரிவு இருக்கிறது. அந்தக் காரணம், உள்ளபடியே, போர் முயற்சிக்கு, அரசாங்கம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்து, பலர் குற்றத்தை தாங்களும் செய்யலாமா என்ற எண்ணத்தைத் தூண்டுவதற்கு அமைவதாக இருந்தால், அப்படிப்பட்ட குற்றங்களைச் சொல்லாமல் இருப்பது, அவை தவிர்க்கப்படுவது, மறைக்கப்படுவது நல்லதுதான். ஆனால் சொல்லக்கூடிய காரணங்கள் தகுந்த காரணங்களாக இருந்தால், அந்தக் காரணங்களைக் காட்டி, விலக்கப்படுகிறவர்களும் நியாயம் என்று அறிந்துகொள்கிற வகையிலே காரணங்களைச் சொல்லி விலக்குகிற முறைகளை வகுத்தல் நல்லது அடியோடு காரணம் சொல்லுவதற்கு இல்லை என்று இல்லாமல், ஆபத்து தரக்கூடியதாகவும், குந்தகம் விளைவிக்கக்கூடியதாகவும் இருக்கிற காரணங்களாக இருந்தாலொழிய, காரணம் சொல்லி விலக்குகிற அளவுக்கு நியாயம் இருக்கவேண்டும். அதைக் கேட்பவர்களும் நியாயம்தான் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். தகுந்த காரணங்களைக் காட்டி விலக்குகிற முறைகளை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளையும், விதிமுறைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உடையைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசினார்கள். உள்ளபடியே உடை அமைப்பு என்று ஒன்று இருந்தால்தான், படையைப் பற்றி நாம் அறிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான் படையின் பணிகள் செம்மையாக நடப்பதற்கு வழிவகை ஏற்படக் கூடும். அப்படிப்பட்ட சில பல முறைபாடுகள் இருந்தால்தான், தங்களுடைய பணிகளை மேற்கொள்ளுவதற்கும், பணிகளை ஆற்ற வேண்டும் என்ற ஆர்வம் தோன்றுவதற்கும் வழி வகை ஏற்படக் கூடும். உறுப்பினர்களில் சிலர் எடுத்துக்கூறியது போல, காவல் துறையினரின் உடையிலிருந்து இவர்களது உடை சிறிது வேறுபட்டதாகத்தான் இருக்கவேண்டும். இருவரும் ஒரே விதமான காக்கி உடையை அணிந்தால், காவலர்களுடைய அதிகாரத்தைச் சில பல தீயவர்கள் ஏற்றுத் தங்களுடைய அதிகாரங்களைக் காட்டி பலரை ஏமாற்றக்கூடும். அந்த நிலையில் முழு அதிகாரத்தையும் சிலபொழுது ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படலாம். இப்பொழுது சிலர் அதிகாரம் இல்லாத நிலையிலேயே கூட வேடம் தரித்து, ஏமாற்று வேலைகளை நடத்துகிறார்கள் என்று செய்தித் தாள்களில் நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாத அளவுக்கு, அவர்கள் வேறு, இவர்கள் வேறு, அவர்களுக்குரிய அதிகாரங்கள் வேறு, இவர்களுக்குரிய அதிகாரங்கள் வேறு என்று வரையறுக்கப்பட்ட ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் அளவுக்கு உடையிலே வேறுபாடு இருப்பது நல்லது. அந்த வகை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [28th February 1963

யிலே ஊர்க்காவல் படையின் முழுப்பணிகளும், மற்ற நிலைமைகளும் நன்றாக அமைக்கப்பட்டு, பணியாற்றி வருகிற நிலையிலேதான் படையினர் இருக்க வேண்டும். முழு ஆர்வத்தோடும், முழு உணர்வோடும், அறிவோடும், ஆற்றலோடும், நினைப்போடும் வந்து சேருகிறவர்களாகப் பார்த்து இதிலே சேர்க்கவேண்டும், வள்ளுவர் கூறுவதைப் போல—

"இதனை இதனால் இவன் முடிக்கு மென்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

என்பதற்கிணங்க, இந்தப் பணியை ஏற்று நடத்துவதற்கான எழுச்சியும், ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் யார் என்று கருதி அவர்களிடத்திலே ஒப்படைக்கின்ற பணியை நாம் மேற்கொள்ள வேண்டும். இதிலே கட்சி மாச்சரியத்திற்கோ, கட்சிக் கருத்துக்களுக்கோ, வாதப் பிரதிவாதங்களுக்கோ இடமில்லை. அவற்றை நிலைநாட்டுவதற்கு வேண்டிய நேரம், இடம், காலம் வேறு பல நிலைமைகளில் ஏற்படக்கூடும். இதிலே அவைகளுக்கு அவசியமில்லை யென்று கூறி, இந்த மன்றத்திலிருக்கின்ற அத்தனை பேரும் இதற்கு முழு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள் என்ற முறையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த மசோதாவிற்கு எங்களது முழு ஆதரவையும் தந்து, இதிலே சில பல குறைபாடுகள் ஏற்படாத அளவுக்கு அவற்றை நீக்குகின்ற பணியினை அமைச்சரவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, மூன்று மணி நேரத்திற்கு மேலாக இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் இந்த விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் யாவரும் இந்த மசோதாவை ஆதரித்து, அதை வரவேற்றே பேசினார்கள். ஆனால், இந்த விவாதத்திற்கு சுவை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே, சுவையும், சூடும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இதற்கு அவசியமில்லை என்று தான் நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தப் பக்கத்திலேயும் இதற்கு அவசியமில்லை. நான் இதற்கு அவசியமில்லை என்று சொல்லுகிறபொழுது, சுவை, சூடு இல்லாமல் இருந்தால், மூன்று மணி நேரம் விவாதம் நடந்தபொழுது, சிலருக்கு சப்பிட்டுப் போய் இருக்கலாம். அப்படி சப்பிட்டுப் போவதும் சரியல்ல. இந்தப் படையை அமைப்பதிலே எல்லா உறுப்பினர்களுக்கும் அக்கறை இருக்க வேண்டும், பொது மக்களுக்கும் அக்கறை இருக்கவேண்டும். ஆகவே, இந்த விவாதத்திலே ஏதோ கொஞ்சம் சுவையையும், சூட்டையும் ஏற்படுத்தியதைப் பற்றி யாரும் வருந்த வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவைப் பற்றி சில தவறான கருத்துக்கள்கூட இருந்ததாக எனக்குப் புலப்பட்டது. கடைசியில் பேசிய கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதைப் பற்றிக் குறிப்பிட்டார். இப்பொழுது இதிலே சேரவேண்டுமென்று விரும்புகிறவர்கள் கூட, இதிலே சேர்ந்தால் ஏதோ உத்தியோகம் கிடைக்கும், சம்பளம் கிடைக்கும், வேலையில்லாதவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதாகக் குறிப்பிட்டார்கள். அது மிகவும் தவறான

28th February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

கருத்து என்பதை இப்பொழுதே நான் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு வாலண்டியர் படை 'வாலண்டியர்' என்றுதான் மசோதாவிலே போட்டிருக்கிறோம். இந்த சமயத்திலேயே தெளிவுபடுத்தி விடுவது நலம் என்றே நான் நினைக்கிறேன். மூன்றாவது பிரிவிலே, என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

"every member of which shall exercise such powers, discharge such duties and perform such functions, in relation to the maintenance of services essential to the life of the community, the protection of persons, the security of property and the preservation of public order, as may be assigned to him by the provisions of this Act and the rules made thereunder.

(2) Without prejudice to the generality of the provisions of sub-section (1), the Government may make rules requiring every member of the Home Guard to—

(*a*) serve in aid of the Police force and generally to help in the maintenance of the security of the State;

(*b*) help of the public during any emergency including flood, fire or epidemic;

(*c*) render nursing and first-aid; and

(*d*) facilitate the maintenance of transport services and the control of traffic and crowds."

இதிலே ஒன்றை வாசிக்க விட்டுவிட்டேன். என்னென்ன வேலைகளை இந்தப் படை செய்யும் என்பதற்காக இந்த மூன்றாவது பிரிவை வாசித்தேன். அந்தப் பிரிவிலேயே, ஆரம்பத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்:

"The Government may constitute a volunteer body called 'the Home Guards'."

ஆகவே இது ஒரு வாலண்டியர் படை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முழு நேர ஊழியர்களா, அவர்களுக்கு சம்பளம் உண்டா என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இதில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ற பிரச்னை வரவில்லை. எந்தந்த துறையில் தங்களுடைய வாழ்க்கையை நடத்துகிறார்களோ அவர்கள் எல்லோரும் அந்தந்த துறையிலுள்ள அதிகாரிகளின் அனுமதி பெற்று இதில் சேரலாம். அவர்களுடைய வேலைகளைப் பார்த்துக்கொண்டே இதில் பணியாற்றலாம். மற்ற துறைகளில் பணியாற்றுகிறவர்கள் இதில் சேர்ந்து பணியாற்றலாம். அவர்களுடைய சேவையை இந்த படையிலும் பயன்படுத்திக்கொள்ளலாம். வேறு துறையில் வேலை பார்க்கிறவர்கள் அந்தந்த ஸ்தாபனத்தில் தொழில் புரிகிறவர்களை இதற்குத் தேர்ந்தெடுத்தால் அவர்களையும் இதில் பணி புரிவதற்கு எடுத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு பயிற்சி கொடுக்கக் கூடிய காலங்களில் அந்தந்த துறையிலுள்ள அதிகாரிகளுடைய அனுமதி பெற்று இதில் வந்து பயிற்சி பெறலாம். அதனால் தான் இதற்கு சம்பளம் என்று வைக்கவில்லை. இதை ஒரு 'ஜாப்' ஆக் கருதக்கூடாது என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் இந்தப் படை சம்பந்தமாக இன்னொரு குழப்பமும் தெரிவிக்கப்பட்டது. கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கிற கிராமத் தொண்டர் படையைப் பற்றி குறிப்பிட்டு அத்துடன் இதை ஒப்பிட்டு பேசப்பட்டது. அந்தத் தொண்டர் படைக்கு இருக்கக்கூடிய வேலை வேறு, இந்தப் படைக்கு இருக்கக்கூடிய வேலை வேறு. நம்முடைய தமிழ் நாட்டில் வில்லேஜ் வாலண்டியர் கோர் என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அது என்னென்ன வேலை செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் இதற்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. சில அங்கத்தினர்கள் பேசும்போது இதை எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் வைக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு கிராமத்திலும் வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி எல்லா கிராமங்களிலும் அதை அமைக்க முடியாது. குறிப்பிட்ட நகரங்களில்தான் இது அமைக்கப்படும். பெரிய ஜனத்தொகை இருக்கக்கூடிய கிராமங்களில் இது அமைக்கப்படும். அர்பன் ஏரியா என்று சொல்லுவார்கள் அந்த இடங்களிலும் மேஜர் பஞ்சாயத்து ஏரியாக்களிலும் இது அமைக்கப்படும். இப்படி குறிப்பிட்ட நகரங்களில் தான் அமைக்கப்படும். எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் இது அமைக்கப்படபோவதில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மசோதாவின் மூன்றாவது பிரிவில் அவர்களுக்கு என்னென்ன வேலை கொடுக்கப்படும், என்னென்ன பயிற்சி கொடுக்கப்படும் என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைப்பற்றி பேசும்போது வில்லேஜ் விஜிலென்ஸ் கமிட்டி முதலியவைகள் சரியாக வேலை செய்யவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இதைப்பற்றி பேசும் போது அதைப்பற்றி சொல்வது சரியல்ல. அதனுடைய வேலைகள் வேறு; காவல் படையின் வேலை வேறு. அவர்களுடைய வேலை காவல் படைக்கு இல்லை, என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மது விலக்குக் குற்றங்கள் போன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க இவர்களை உபயோகப்படுத்துவார்களா என்றெல்லாம் கேட்கப்பட்டது. போலீஸ்காரர்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கின்றன. அவர்களுடைய வேலைகளில் குறிப்பிட்ட சில வேலைகளில் போலீஸ்காரர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இவர்களை நியமிக்கிறோம். இவர்களுடைய சேவை போலீஸ்காரர்களுக்கு தேவைப்படும் போது இவர்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இவர்களை அமைக்கிறோம். இப்பொழுது கூட நம்முடைய மாநில போலீஸ்காரர்கள் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எல்லை போராட்டத்திற்கு இவர்கள் அங்கு சென்று எவ்வளவோ திறமையாக வேலை செய்து வருகிறார்கள். வீரத்துடன் பணி புரிந்து வருகிறார்கள். அப்படிச் சென்றதனால் இங்குள்ளவர்களுக்கு உதவியாக இருப்பதற்குத்தான் இவர்களை நியமிக்கிறோம். அதைப் போலவே இன்னும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால் போலீஸ்காரர்களுக்கு அடிப்படையான வேலை ஏற்பட்டால் அவர்களுக்கு உதவியாக இருப்பதற்குத்தான் இவர்களை நியமிக்கிறோம். அதைப் போலவே இன்னும் நெருக்கடி-

யான நிலைமை ஏற்பட்டால் போலீஸ்காரர்களுக்கு அடிப்படையான வேலை ஏற்பட்டால் அவர்களுக்கு உதவியாக இருப்பதற்குதான் இவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த சமயத்தில் போலீஸ்காரர்களுடைய வேலைகளில் இவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்பதுதான் இவர்களுடைய வேலை. அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்குதான் இவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதற்கு வேண்டிய பயிற்சி இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதற்குத்தான் அவர்களுக்கு 1½ மாத பயிற்சி கொடுக்கப்படுகிறது. போலீஸ்காரர்களைப் போன்று இவர்கள் குற்றங்களைக் கண்டு பிடிக்க வேண்டியதில்லை. அதற்கு என்றால் அதற்கு தனியாக வேறு பயிற்சி கொடுக்க வேண்டியதாக இருக்கும். கொலைக் குற்றம் முதலிய குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அதற்கு அதிகப்படியான பயிற்சி கொடுக்க வேண்டும். ஆகவே இந்த வேலையை மட்டும் செய்ய அவர்களுக்கு அடிப்படையான பயிற்சி கொடுக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி முடிந்த பிறகு அதற்கு மேலும் அவர்களுக்கு அதிகப்படியான பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற தேவை ஏற்படுமானால் அப்பொழுது அதற்குத் தக்கபடி அதிகப்படியான பயிற்சி கொடுக்கப்படும். இதில் சேர்ந்த பிறகு மேலும் மேலும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யலாம் என்ற நோக்கத்துடன் தான் இந்த காவல் படை அமைக்கப்படுகிறது. இந்த விஷயத்தைப்பற்றி பேசும் போது பல கனம் அங்கத்தினர்கள் பல விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசினார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் இங்கு பேச வேண்டிய அவசியமே இல்லை என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் பேசும்போது வேறு நாடுகளைப்பற்றியெல்லாம் பேசினார். வேறு நாடுகளைப்பற்றியெல்லாம் இங்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவது சரியல்ல. அது பொருத்தமும் இல்லை என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். எனினும் நமது பக்கத்து நாடுகளில் சைனாவைத் தவிர மற்ற நாடுகள் எல்லாம் நம்முடன் நல்லுறவுடன் தான் இருக்கின்றன. மற்ற நாடுகளுடன் ஏதாவது தகராறுகள் பிரச்னைகள் இருந்தாலும் அவைகள் எல்லாம் அவ்வப்போது கலந்து பேசி தீர்த்து கொள்ளப்பட்டு வருகிறது. நல்ல முறையில் நல்லுறவு இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் அவர்களுக்கு தவறான கருத்து ஏற்படக்கூடிய அளவில் இங்கு பேசுவது அவ்வளவு சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். நட்புறவு கொள்கை மாறக்கூடிய அளவில் பேசுவது சரியல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த விதத்தில் இந்த விவாதத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தபடியாக இந்த விவாதத்தில் உடையைப்பற்றியெல்லாம் வந்தது. எத்தகைய உடைகள் அணிய வேண்டும் என்றெல்லாம் விதிகளில் அறிவிக்கப்படும். அதைப்பற்றி இந்த மசோதாவில் இல்லை. விதிகளில் தான் இருக்கும். அந்த விதிகள் எல்லாம் இப்பொழுது 'ட்ராப்ட்' செய்யப்பட்டு வருகின்றன.

[28th February 1963 [திரு. எம். பக்தவத்சலம்]

அடுத்தபடியாக வயதைப்பற்றியெல்லாம் பேசப்பட்டது. வயதை 20 முதல் 45 வரையில் வைத்துக்கொள்வலாம் என்றும் குறிப்பிடப்பட்டது. அது சம்பந்தமாகவும் விதி அமைக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றி கனம் உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் குறிப்பிட்டார். அவர் இதைப்பற்றி குறிப்பிட்டதால் அவருக்கு 45 வயதுக்கு மேல் இருக்காது என்று நினைக்கிறேன். இல்லையென்றால் மன்னிப்பு கேட்டுக்கொள்ளுகிறேன். குறைவாகவே இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. அவரைப் போலுள்ளவர்களும் அவரை விட பால்யமாக இருக்கிறவர்களும் இதில் வந்து சேருவதற்கு விதிகளில் இடம் வைத்திருக்கிறோம். கனம் உறுப்பினர்களில் சிலர் இதில் சேருவதற்கு ஆசையாக இருப்பது போன்றும் குறிப்பிட்டார்கள். அவர்களும் வந்து சேரலாம். அதற்கெல்லாம் இதில் இடம் இருக்கிறது. அப்படிச் சேர முன் வருகிறவர்கள் தங்களுக்கு அதிகப்படியான வயது இருந்தாலும் அவர்கள் இதில் சேருவதற்கு விலக்குக் கொடுக்கவும் முடியும். அதற்கும் விதிகளில் இடம் கொடுத்திருக்கிறோம். ஆனால், உடை அணிவதற்கு எந்த விதமான விலக்கும் கொடுக்கவில்லை. கனம் உறுப்பினர் சீமைச்சாமி போன்றவர்கள் இதில் சேரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அவர்களும் இந்த உடை அணிய வேண்டுமா என்று குறிப்பிட்டார். அவர்கள் எல்லோரும் இதற்கு என்று நிர்ணயிக்கப்பட்ட உடையை அணிய வேண்டியதுதான். அந்த உடையை அணிந்து கொண்டு சட்டசபை கூட்டத்திற்குங்கூட வரலாம். இந்தப் படையில் சேர்ந்து கொண்டு அதே உடையில் சட்டசபைக்கு வரலாமா என்று கேட்பதைப் பார்த்தால் அவர்கள் எல்லோரும் யுத்த மனப்பான்மையில் இருந்துகொண்டு பேசுவதாக இருக்கிறது. அப்படிப் பேசுவது சரியல்ல. இந்த நெருக்கடியில் எதைச் சமாளிக்க வேண்டுமானாலும் தயாராக இருப்பதாகத்தான் தெரிகிறது. ஆனால் அப்படிப்பட்ட யுத்த மனப்பான்மை சட்ட சபையில் இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். சட்டசபையில் உட்கார்ந்து பேசும்போது இப்படிப்பட்ட மனப்பான்மை இருக்க வேண்டியது அவசியம் இல்லை. கனம் உறுப்பினர்களும் இதில் சேரலாம். அப்படிச் சேர்ந்து அதற்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற உடையை அணிந்து கொள்ளலாம். அந்த உடையிலேயே சட்டசபை கூட்டத்திற்கும் வரலாம். எதையும் சமாளிக்கக்கூடிய மனப்பான்மையில் இதில் எல்லா உறுப்பினர்களும் சேருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எல்லா உறுப்பினர்களும் அதே உடையில் சேரலாம். கனம் சுதந்திரா கட்சி தலைவர் பேசும்போது அவர்கள் கூட இந்தப் படையில் சேர்ந்தால் அந்த உடையை அணிந்து கொள்ளத்தயார் என்றும் குறிப்பிட்டார். அப்படி அவர் அந்த உடையை அணிந்து கொண்டு சட்டசபைக் கூட்டத்திற்கு வந்தாலும் அவருடைய உடை பிரச்னைகூட ஓரளவில் தீர்ந்துபோகும் என்று நினைக்கிறேன். ஆகவே வயதிற்குத்தான் விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர உடைக்கு எந்த விதமான விலக்கும் கொடுக்கப்படவில்லை.

28th February 1963]

திரு. சா. கணேசன்: உடைக்கு விலக்கு அளிக்கக்கூடாது என்றுதான் சொன்னேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உடைக்கு விலக்கு அளிப்பதாக இல்லை. சுதந்திரா கட்சி தலைவர் இந்தப் படையில் சேர்ந்துவிட்டால் அவருடைய உடைப் பிரச்னையும் தீர்ந்து விடும். அதன் பிறகு அவர் சட்டசபைக்கு இந்த மாதிரியே வரமாட்டார் என்று நினைக்கிறேன். கனம் உறுப்பினர்கள் ஹோம் கார்டில் சேர்ந்தாலும் அவர்கள் எல்லோரும் ஹோம் கார்ட் உடையிலேயே இங்கு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த உடையில் வரவேண்டும் என்று கனம் சுதந்திரா கட்சி தலைவரை கனம் சபாநாயகர் அவர்களே கேட்டுக்கொள்வார் என்று நினைக்கிறேன். அதன் பிறகு சுதந்தரா கட்சி தலைவருடைய உடை பிரச்னையும் தீர்ந்து விடும். அப்பொழுது இங்குள்ள எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டுவிடும். இந்த உடையைப்பற்றி இப்பொழுது சில விதிகளைச் செய்கிறோம். அது இன்னும் முடிவாகவில்லை.

" The member of the Home Guard shall wear the following uniform—

Men—

(*i*) A grey mazri bush-coat and khaki trousers for ojcers of and above the rank of Assistant Platoon Commander and a grey mazri shirt and khaki trousers for other members of the Home Guard:

(*ii*) Blue beret;

(*iii*) Brown leather shoes;

(*iv*) Woolen socks;

திரு. சா. கணேசன்: நமக்கு 'உலன் சாக்ஸ்' வேண்டாம். 'காட்டன் சாக்ஸ்' போதும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ராணுவத்திற்கு 'உலன் சாக்ஸ்' தான் நல்லது. இல்லாவிட்டால் கிழிந்து போய் விடும்.

(*v*) cloth belt;

(*vi*) Whistle.

Women—

(*i*) white saree;

(*ii*) grey mazri blouse;

(*iii*) white canvas shoes; and

(*iv*) white socks.

Members of the Home Guard shall wear letters 'H.G.' on their shoulder straps and officers shall wear in addition the badge's rank as prescribed by the State Government. All Members of the Hom Guard shall be supplied with two seats of uniform at Government cost on enrolment and replacement thereafter shall be at such intervals as the State Government may by order specify."

அம்மாதிரிதான் யூனிஃபாரம் அமைய வேண்டும் என்பது திட்டம். "ஒரே மாதிரி காக்கி உடையாக இருந்தால் போலீஸ் மாதிரி இருக்கும், வித்தியாசம் தெரியாமல் போய்விடும்", என்று ஒரு கனம் அங்கத்தினர் கவலை தெரிவித்தார். அம்மாதிரி ஒன்றும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள், மாணவர்களைப் பற்றிச் சொன்னார். மாணவர்களுக்கு நாஷனல் டிஸிப்ளின் ஸ்கீம் இருக்கிறது. நெருக்கடி நிலையையொட்டி இதிலேயே அவர்களுக்குத் தீவிரமாக உடற் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : மாணவர்களைப் பற்றி நான் எதுவுமே சொல்லவில்லை. 'மாணவர்' என்றோ, 'மாணாக்கர்' என்றோ நான் சொல்லவில்லை. ஃபிஸிகல் ட்ரெயினிங் காலேஜில் பயிற்சி பெறக் கூடிய 20, 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்களுக்காக ஏ.ஸி.ஸி., என்.ஸி.ஸி., நாஷனல் டிசிப்ளின் ஸ்கீம் இவையெல்லாம் இருக்கின்றன. ஃபிஸிகல் ட்ரெயினிங் காலேஜில் பயிற்சி பெறுகிறவர்கள் ஆசிரியர்களாக வருகிறார்கள்.

கனம் அங்கத்தினர் திரு. சசிவர்ண தேவர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, சுகாதார வேலை முதலிய எத்தனையோ வேலைகள் இருக்கின்றன. விவசாய உற்பத்தி வேலையும் இருக்கிறது. இதற்கெல்லாம் கிராமத் தொண்டர் படை (வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ்) இருக்கிறது. இதையெல்லாம் அவர்கள் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் ஹோம் கார்ட்ஸினுடைய வேலையாகச் சேர்ப்பது நல்லதல்ல. "ஸிவில் வேலைகளை ஹோம் கார்ட்ஸினுடைய வேலையாகச் சேர்ப்பது நல்லது அல்ல" என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஹோம் கார்ட்களுக்கு இராணுவ வேலையாக இருக்க வேண்டும். இராணுவ வேலை என்று சொல்லும்போது, நேராகப் போர் முனைக்குப் போக வேண்டும் என்பது அல்ல. போலீசாருடைய சில வேலைகளை, அதுவும் நான் குறிப்பிட்ட சில வேலைகளை, ஹோம் கார்ட்களுக்கு விடவேண்டும்.

பெயரில் குழப்பம் வருகிறது. எல்லாக் கிராமங்களிலும் கிராமத் தொண்டர் படை (விலேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ்) இருக்கிறது. ஊர்க்காவல் படையானது போலீசாருக்கு உதவியாக இருக்கக்கூடிய வகையில் அமைக்கப்படுகிறது. 'Guard' என்னும் வார்த்தைக்கு 'காவல்' என்னும் தமிழ் வார்த்தை நன்றாக இருக்கிறது. ஆனால், 'போலீஸ்' என்பதற்கு 'காவல்' என்ற வார்த்தை அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஏனென்றால், போலீசாருடைய வேலை காவல் மட்டுமல்ல. அதற்கு மேற்பட்ட பல வேலைகள் அவர்களுக்கு இருக்கின்றன. 'போலீஸ்' என்பதற்குக் 'காவல்' என்ற வார்த்தை பொருந்தாது என்று நான் முன்பே சொன்னேன். ஊர்க்காவல் படை என்பதற்கு 'அகப் படை' என்று சொல்லலாம் என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார். அது நல்ல பெயராக இருக்கிறது என்றே நானும் கருதுகிறேன் 'அகப்படை' என்னும்போது அது ஹோம் கார்ட்ஸ் என்பவர்களைக் குறிக்கும் என்று நாம் மனதிலே வைத்துக்கொள்ளுவோம். தமிழ் வார்த்தை கூடாது என்று நான் சொல்லவில்லை. (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : 'தலைப் படை' என்று வைத்துக்கொள்ளலாம்) 'தலைப்படை' என்று வைத்துக்கொள்ளலாம் என்று மற்றொரு புலவர் சொல்கிறார். (திரு. இரா. நெடுஞ்செழியன் : 'அகப்படை' என்பதே நன்றாக இருக்கிறது.) "அகப்படை" என்ற பதம் ரொம்ப நன்றாக இருப்பதாகக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார். 'ஹோம் கார்ட்ஸ்' என்பதற்கு 'அகப்படை' என்று தமிழில் வைத்துக் கொள்ளலாம். 'அகப்படை' என்றாலே ரொம்ப பொருத்த இருக்கிறது. இப்போதே அதை ஏற்றுக்கொண்டு விடலாம் என்று நான் நினைக்கிறேன்.

இப்பொழுதிருக்கும் நெருக்கடியான நிலையையொட்டி இந்தப் படை அமைக்கப்படுகிறது. அதையும் நாம் மறந்துவிடக் கூடாது. நெருக்கடியான நிலையையொட்டி போலீசார் வேறு வேலைகளில் கவனம் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படும்போது, அவர்களுக்கு உதவியாக இந்த அகப்படை இருக்கும். இந்தப் படை வாலண்டரியாகச் செயல்படும். இது 'ஜாப்' அல்ல. எப்போதைக்கெப்போது அகப்படையின் வேலை கோரப்படுகிறதோ அப்பொழுது அவர்கள் வேலை செய்ய வேண்டியது. அவர்களுக்கு அலவன்ஸ் தான் கொடுக்கப்படுகிறது. இதிலே சம்பள பிரச்னை இல்லை. அவர்களுக்கு அலவன்ஸ் கொடுப்பதைப்பற்றிக்கூட சில கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஒரே மாதிரி அலவன்ஸ் தான் இருக்க வேண்டும். ஒருவருக்கு அதிகமாகவும், இன்னொருவருக்குக் குறைவாகவும் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்பது உத்தேசம் அல்ல. எல்லோருக்கும் ஒரே மாதிரி அலவன்ஸ் கொடுப்பது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் ஆகும். (திரு. சா. கணேசன் : ஃபிக்ஸெட் அலவன்சாகக் கொடுக்கப்படுகிறதா ?) ஆம்.. ஃபிக்ஸெட் டெய்லி அலவன்ஸ். 'ஏர் ரெய்ட் ப்ரிகாஷன்ஸ்' பற்றிய பயிற்சியும் இவர்களுக்குக் கொடுக்கலாம். அதற்கென்று வேறு படை வேண்டாம்.

அதிகாரங்களைப் பற்றிக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார். அதிகாரங்களைச் சட்டத்திலேயே வரையறுத்திருக்கிறோம். குறிப்பிட்ட வேலைக்குத்தான் அதிகாரம் இருக்குமே தவிர, மற்ற அதிகாரங்களை இவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்று நாம் நினைப்பதற்கு இடமில்லை.

"இதிலே அரசியல்வாதிகள் இருக்கலாமா ?" என்ற பிரச்னையைச் சில கனம் உறுப்பினர்கள் கிளப்பினார்கள். யார் அரசியல்வாதி இல்லை என்பதை என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. யாராவது அரசியல்வாதி இல்லையென்று சொல்லிக்கொண்டால், அவருக்

[திரு. எம். பக்தவத்சலம்] [28th February 1963

குப் பிரஜா உணர்ச்சியே இல்லை என்று சொல்லிவிடலாம். "கட்சிச் சார்பற்ற முறையில் இந்த அகப்படை இருக்கவேண்டும்" என்று மற்றொரு கனம் உறுப்பினர் குறிப்பிட்ட கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியது. கட்சிச் சார்பற்ற முறையில் அகப்படை இயங்கவேண்டும், ஒரு கட்சிக்காக இந்தப் படையைப் பயன் படுத்திக் கொள்ளக் கூடாது என்பதுதான் திட்டம்.

அகப்படைக்கு ஆட்களை எடுத்துக்கொள்ளும்போது, பார்த்துத் தான் எடுத்துக் கொள்ளவேண்டும். படையில் சேர்ந்துவிட்ட பிறகு சிலர் மாறலாம். பின்னால் தவறலாம். இதற்கெல்லாம் உத் தரவாதம் செய்ய முடியாது. இதை யொட்டித்தான் 'டிஸ்சார்ஜ்' செய்வது பற்றிய 'ப்ரொவிஷன்' இருக்கிறது. இதைப்பற்றிக் கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்களும் மற்றவர்களும் எடுத் துக் கூறினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்கூடக் கூறி னார்கள். "ஒருவரைச் சேர்த்துக்கொண்டுவிட்டு, பிறகு நீக்க வேண்டி ஏற்பட்டால், சொல்லத் தகுந்த காரணமாயிருந்தால் சொல்லலாம், சொல்லத் தகாத காரணமாயிருந்தால் சொல்ல வேண்டாம்" என்று சொன்னார்கள். எந்தக் காரணத்தையும் சொல்லக் கூடுமானால் சொல்லலாம். சில காரணங்கள் சொல்லக் கூடாதவையாக இருக்கக் கூடும் என்பதைக் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே ஒப்புக்கொண்டார். சொல்லத் தகுந்ததாக சிலர் கருதலாம். மற்றும் சிலர் இதையே சொல்லத் தகாத காரண மாகக் கருதலாம். இதிலெல்லாம் விவாதத்திற்கு இடமளிக்கக் கூடாது. இதிலே முக்கியமாகக் கட்டுப்பாடும், கண்டிப்பும் இருக்க வேண்டியது அவசியம். இந்த மசோதாவின் 5-வது ஷரத்து இதைப்பற்றிக் குறிப்பிடுகிறது. நீக்குவதற்குக் காரணம் சொல்ல முடியாது. நாம் விதிகள் அமைத்திருக்கிறோம். இதுபற்றிப் போடப்பட்டிருக்கும் ட்ராப்ட் விதியை நான் படிக்கிறேன்.

"A member of the Home Guard may be discharged under Section 5 if the Commissioner of Police, Madras or the Superintendent of Police in the district is satisfied that the said member is physically unfit to continue as such or continuance of any member in the Home Guard is detrimental to the good order, welfare or discipline of the Home Guard or is prejudicial to the security of India or any part thereof."

இதிலே சில காரணங்கள் சொல்லத் தகாதவையாக இருக்கக் கூடும் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே ஒத்துக்கொள்ளுவார் கள் என்று நான் நினைக்கிறேன். 'ஃபிஸிகலி அன்ஃபிட்' என்று சொல்லும்போது மாறுபட்ட அபிப்பிராயம் எழக்கூடும். இதைப் பற்றியெல்லாம் விவாதித்துக்கொண்டு கோர்ட்டுக்குப் போவது சரியல்ல. நாட்டின் நெருக்கடியான நிலைமையில் அகப்படையை அமைக்கும்போது, இதில் மேற்கொண்டு விவாதத்திற்கும் வழக் குக்கும் இடம் கொடுப்பது சரியல்ல என்பதைக் கனம் உறுப்பினர் கள் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. மாதா கவுடர் அவர்கள் பேசும்போது, இவர்களை இஷ்டம்போல் நீக்கிவிடலாமா?" என்று கேட்டார். கனம் உறுப்பினர் என்ன நினைத்துக்கொண்டிருந்தார் என்று

28th February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நான் நினைக்கிறேன் என்பதைச் சொல்லிவிடுகிறேன். ஒரு வேளை நான் நினைப்பது தவறாகவும் இருக்கலாம். "ஏதோ உத்தியோகத் திற்கு ரெக்ரூட் ஆகி, சர்வீசுக்கு வந்துவிட்ட பிறகு இஷ்டப்போல் ஒருவரைத் தள்ளிவிடலாமா? என்று அவர் கேட்கிறார் என்று நினைக்கிறேன். இது உத்தியோகம் அல்ல. கட்டுப்பாடுள்ள இராணுவத்தைப் போன்றது இது. போலீசாரைப் போன்றதும் இல்லை. இந்தப் படைக்கு ஒருவர் தகுதியாக இல்லையென்றால், அதற்குக் காரணம் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. காரணம் சொல்லாமலேயே நீக்குவது என்பது முக்கியம். காரணம் சொல்ல முடியாது.

கனம் உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் மற்றொன்றும் கூறி னார். "க்ளாஸ் 9 (2) இல் 'கோர்ட்' என்ற வார்த்தை இருக் கிறது, 'அதாரிடி' என்ற வார்த்தையும் இருக்கிறது" என்று சொன்னார். இதையெல்லாம் நுட்பமாக கவனித்துத்தான் 'அதாரிடி' என்றும், 'கோர்ட்' என்றும் போட்டிருக்கிறோம். இரண்டும் வேண்டியிருக்கிறது. ரிசர்வ் அண்டு ஆக்ஸிலியரி ஏர் ஃபோர்ஸ் ஆக்ட், 1952 என்று இன்னொரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் 27-வது செக்ஷனில் 'ப்ராஸிக்யூஷன்' கூடப் பண்ணலாம் என்று இருக்கிறது. கோர்ட் தான் ப்ராஸிக்யூஷன் பண்ணலாமே தவிர, 'அதாரிடி' ப்ராஸிக்யூட் பண்ணாது. வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது அதாரிடி ஆகும். 'அதாரிடி', 'கோர்ட்' என்ற பதங்களையெல்லாம் யோசித்துத்தான் போட் டிருக்கிறோமே தவிர, அனாவசியமாகப் போடவில்லை.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதில் சேரலாம். அவர்கள் இதில் சேருவது பற்றியும் சிலர் குறிப்பிட்டார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இதில் சேருவதில் தடையில்லை. அவர்களை யும் இதில் சேர்த்துக்கொள்ளலாம் என்றுதான் இருக்கிறோம். கெஜட் பதிவில்லாத அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளையும் இது பற்றிக் கேட்டோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் இந்த அகப் படையில் சேருவதற்கு ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்ற தனிப்பட்ட ஸ்தாபனங்கள் எப்படி அங்குள்ளவர்களை இப் படை யில் சேர அனுமதி கொடுக்கிறார்களோ, அம்மாதிரி சர்க்கார் உத்தி யோகஸ்தர்களுக்கும் அனுமதி கிடைக்கும். அவர்களும் பயிற்சிக் குப் போகலாம். எல்லாத் துறைகளில் பாடுபடுகிறவர்களுக்கும் மிகுந்த உற்சாகம் இருக்கிறது. நன்றாகப் படித்தவர்கள், நல்ல நிலையில் இருக்கிறவர்கள், பல துறைகளில் வாழ்க்கை நடத்துகிற வர்கள் எல்லோரையும் இந்த அகப்படையில் சேர்த்துக்கொள்வ தன் மூலம் இது சிறந்து விளங்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் ஆர்வம். அப்படியே தான் இங்கே விவாதத்தில் கலந்துகொண்ட பல கனம் உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித் தார்கள்.

அதற்கேற்றவாறு நல்லமுறையில் இதை அமைக்கவேண்டும். 12-30 p.m.
உயர்ந்த நிலையில் இருக்கும் அறிஞர்கள், வழக்குரைஞர்கள் ஆகிய யாவரும் இதில் சேருவதற்கு ஆவல் தெரிவித்திருக்கிறார்கள். டாக்டர்களை மட்டும் சேர்த்துக்கொள்வது இல்லை என்று முடிவு

[திரு. எம். பக்தவத்சலம்] [28th February 1963

செய்திருக்கிறோம். டாக்டர்களுக்கு இதைவிட வேறு முக்கிய மான வேலை இருக்கிறது. இதனால் அவர்கள் வேலை கெட்டுவிடும். ஆகவே அவர்களைச் சேர்த்துக்கொள்ளப் போவதில்லை. ஆசிரியர் களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று செய்திருக்கிறோம். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பெண்களைச் சேர்த்துக்கொள்வது பற்றிச் சொன்னார்கள். பெண்களைச் சேர்த்துக்கொள்வது சரியில்லை என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோது பெண் அங்கத்தினர்கள் யாரும் எதிர்க்கவில்லை. அடக்கமாக. இருந்தார்கள். அடக்கம் அவர்களுக்கே உரியது. பெண்கள் வீரத்தில் குறைந்தவர்கள் அல்ல. சுதந்திராக் கட்சி அங்கத்தினரிடம் கேட்டால் பெண் களுடைய வீரத்திற்கு புறநானூறு முதலியவற்றிலிருந்து சான்றுகள் அளிப்பார்கள். ஊர்க்காவல் படையில் சேர்ந்து பணி யாற்ற பெண்களுக்கும் பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே அவர்களைச் சேர்த்துக்கொள்வது என்பது பெரிய நகரங்களைப் பொறுத்த மட்டிலும்தான். மற்ற இடங்களில் இல்லை. இந்த ஹோம்கார்டுகள் போலீஸ்காரர்களிடம் பயிற்சி பெறவேண்டும், இவர்கள் மற்றவர்களை நடத்துவது போல நடத்தக்கூடாது என் பதாக திரு. செல்வராஜ் குறிப்பிட்டார்கள். மற்றவர்களை அவர் கள் நல்ல முறையில் தான் நடத்துகிறார்கள். அதில் தவறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மேலும் இந்த ஹோம் கார்டு கள் ஹானரரியாகத்தான் வேலை செய்கிறார்கள். ஆகவே இவர்களை அவர்கள் மிக்க மரியாதையுடன் தான் நடத்துவார்கள். அதைப் பற்றிக் கொஞ்சம்கூட ஐயமுற வேண்டியதில்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் செக்ஷன் 16-ஐ பற்றிக் குறிப்பிட்டார். ஹோம் கார்டுகளைப் பப்ளிக் சர்வென்ட் என்று குறிப்பிட்டிருப்பது பற்றிச் சொன்னார். **Acting under this Act** என்று அவர்கள் பணியாற்றுகிறபோதுதான் பப்ளிக் சர்வென்ட்களாக கருதப்படுவார்கள். ஆகவே நாம் இந்த மசோதாவில் போட்டிருப்பதில் ஒன்றும் தவறு இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

மற்றபடி நான் மேலும் கனம் அங்கத்தினர்களுடைய காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் மிகுந்த அக்கறையோடு பல கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் கொடுத்த பதிலுக்குப் பிறகு அந்தத் திருத்தங்களுக்கு அவசியம் இல்லை யென்பதை கனம் அங்கத்தினர்களே உணருவார்கள். ஆகவே அந்தத் திருத்தங்களுக்கு அவசியம் இல்லையென்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Home Guard Bill, 1963, be taken into consideration.'

28th February 1963] [Mr. Speaker]

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 5.

MR. SPEAKER : The question is—

'That clause 5 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment—

(i) In sub-clause (1) in line 3, after the words "as may be prescribed" insert the words "by an order under Section 6":

(ii) For the existing proviso to sub-clause (1), substitute the following :—

"Provided that such member must be given a reasonable opportunity to put forth his case before such authority."

(iii) For the existing sub-clause (2), substitute the following :—

"(2) An appeal against the order of discharge will lie under Section 14."

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

MR. SPEAKER : The Clause and the amendment are before the House for discussion.

திரு. எஸ். மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இந்த ஐந்தாவது பிரிவில் நான் கொடுத்திருக்கும் திருத்தம் தேவையில்லை யென்பதற்கு கனம் அமைச்சர் விளக்கம் தந்தார். நான் டிஸ்சார்ஜ் செய்வதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் **Provided that such member must be given a reasonable opportunity to put forth his case before such authority"** என்று ஏதாவது ஒரு வாய்ப்பு அந்த நபருக்குக் கொடுக்கவேண்டுமென்பது தான் என்னுடைய நோக்கம். அதற்காகத்தான் நான் திருத்தம் கொடுத் திருக்கிறேன்.

மேலும், 2-வது க்ளாஸில் அப்பீல் இல்லையென்று இருக்கிறது. 1, 3, 14-வது கிளாஸைப் படித்துப் பார்த்தால் வேறுபல பிரிவு களுக்கு அப்பீல் இருக்கிறது. ஆகவே இந்தப் பிரிவிலும் டிஸ் சார்ஜ் செய்யப்படுகிறவர்களுக்கு அப்பீல் செய்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்சனையைப்பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்தோம். அந்த நபருக்கு எடுத்துச் சொல்ல ஒரு வாய்ப்பும், அப்பீல் செய்து கொள்ள ஒரு வசதியும் செய்து கொடுப்பது சரியல்ல. ஆகையால் இந்தத் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

The amendment was by leave withdrawn.

Clause 5 was put and carried.

Clauses 6, 7 and 8 were put and carried.

[28th February 1963

Clause 9.

MR. SPEAKER : The question is—

'That clause 9 do stand part of the Bill.'

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment—

(*i*) In item (*b*) of proviso to sub-clause (1), in line ten *for* the word "or" *substitute* the word "and".

(*ii*) *For* the existing item (*c*) of proviso to sub-clause (1) *substitute* the following :

"(*c*) in the case of complete inability on the part of the employer to re-employ such person the prescribed authority shall pass an order requiring him to pay to such person by way of compensation for his inability to re-employ a sum not less than an amount equal to three month's remuneration and not exceeding an amount equal to six months' remuneration at the rate at which his last remuneration was payable to him by the employer."

(*iii*) In sub-clause (2), after the words "thousand rupees, and *add* the words "*in addition*".

SRI T. P. ALAGAMUTHU : Sir, I second the amendment.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* **திரு. எஸ். மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த 9-வது பிரிவில் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தைப் கொஞ்சம் உன்னிப்பாகப் படித்துப் பார்த்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான் என்பதை கனம் அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். தொழில் ஸ்தாபனங்களில் வேலை செய்யக்கூடியவர்களை ஹோம் கார்டுகளாக எடுத்துக்கொள்வது என்ற பிரிவு இருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்வதனால் தொழிலதிபர்கள் அவர்களை வேலையைவிட்டு நீக்கக்கூடாது என்றும் இருக்கிறது. ஆனால் ஒரு தொழிலதிபர் அவ்வாறு ஹோம் கார்டு பணியாற்றப் போகிற சமயத்தில் அவரை வேலையை விட்டு நீக்கினால் அதுபற்றி ஒரு அதிகாரியிடம் அப்பீல் செய்து கொள்ளவேண்டும் என்று இருக்கிறது. அந்த அதிகாரி இதுபற்றி விசாரணை நடத்தி இவரை வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த வேண்டும் என்பதோடு நின்றால் பரவாயில்லை. ப்ரவைசோ வி பிரிவில் தொழிலதிபர் காம்பென்சேஷன் கொடுத்துவிட்டு இவரை வேலையை விட்டு எடுத்துவிடலாம் என்று இருப்பது நிச்சயமாக தொழிலதிபர்களுக்கு மிகவும் எளிதாக அத்தகைய நபர்களை வேலையைவிட்டு எடுக்க வழியேற்பட்டு விடும். ஆகவே தான் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தில்

'exempting the employer from the provisions of this section, or

requiring him to re-employ such person on such terms as that authority thinks suitable, or

28th February 1963] [*திரு. எஸ். மாதவன்*]

requiring him to pay to such person by way of compensation for failure or inability to re-employ . . .'

என்று இருப்பது நாட்டுக்குப் பணியாற்றவேண்டும் என்று முன் வந்தவர்களுக்கு ஒரு பாதுகாப்பை அளிக்கும். அவரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ள சந்தர்ப்பமே இல்லையென்றால் தான் இந்தப் பிரிவைப் பயன்படுத்தலாம் என்று சேர்த்து இருக்கிறேன். அதோடு 6 மாதச் சம்பளம் கொடுக்கலாம் என்று உச்சவரம்போடு குறைந்த பட்சம் 3 மாதச் சம்பளம் இருந்தால் நல்லது என்ற கருத்தையும் இணைத்திருக்கிறேன். ஆகவே இது பொருத்தமாக அமையும்.

இரண்டாவது பிரிவிலே 'கோர்ட்' என்றும், 'அத்தாரிடி' என்றும் போட்டிருப்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். இந்தப் பிரிவைப் படித்துப் பார்த்தால் "and the Court by which an employer is convicted under this section என்று இருக்கிறது. இந்தச் சட்டத்தின் கீழே அந்த எம்ப்ளாயர் கண்டிக்கப்பட்டாலும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. employer தண்டிக்கப்படக்கூடிய உரிமை . . . என்று வருகிறது. அந்த "கோர்ட்" என்பதை விதிகளிலும் அமைக்கப் போகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இந்த ஒரு திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே குறிப்பிட்டபடி 'கோர்ட்' என்றால் அதெல்லாம் விதிகளிலே வரும். விதிகள் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்பதெல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, தொழில் துறையில் வேலை செய்பவர்கள் 'ஹோம் கார்ட்' படையில் சேருவது பற்றியது. தொழில் நடத்துபவர்கள் முன் நின்று அவர்களிடத்தில் வேலை செய்கிறவர்களை 'ஹோம் கார்ட்' படையில் சேருவதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் இதனை உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் 'ஹோம் கார்ட்' படையில் சேர அனுமதிப்பதோடு கூட அவர்களுக்குச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். சில சந்தர்ப்பங்களில் சில தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாமல் போகலாம். அதற்காகத் தான் அந்த நிலைமையில் இன்ன நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஒட்டி இது போடப்பட்டிருக்கிறது. இது சரியாக நடக்கிறதா இல்லையா என்பதைக் கவனித்துக் கொள்ள இந்த மசோதாவில் உள்ள பிரிவுகளே போதும். இதற்கு மேல் வேண்டியதில்லை. ஆகவே, திருத்தங்களை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

The amendment was by leave withdrawn.

Clause 9 was put and carried.

Clauses 10, 11, 12, and 13 were put and carried.

[28th February 1963

Clause 14.

MR. SPEAKER: The question is—

"That Clause 14 do stand part of the Bill"

I think the amendment of the hon. Member Sri S. Madhavan is out of order because his amendment to Clause 5 has been rejected already by the House.

Clause 14 was put and carried.

Clause 15.

MR. SPEAKER: The question is—

"That Clause 15 do stand part of the Bill".

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment—

(i) In sub-clause (2) for the words "foregoing power" *substitute* the words "foregoing provisions".

(ii) In item (b) of sub-clause (2) after the word "appointment" *insert* the word "allowances".

The amendment was duly seconded.

MR. SPEAKER: The clause and the amendments are before the house for discussion.

* SRI S. MADHAVAN: My amendment to Clause 15 is only a formal one. In sub-clause (2) of Clause 15, instead of the word "power" I want the word "provisions" be used. I do not know what is the purpose in putting the word "power" under this Clause. The word "provisions" had been used in sub-clause (2) of Clause 3, as follows:—

"(2) Without prejudice to the generality of the provisions of sub-section (1) . . . ." So here also under Clause 15, I want the word "provisions" be used instead of the word "power". That is my first amendment.

Secondly I want that in item (b) of sub-clause (2) of Clause 15 after the word "appointment", the word "allowances" be inserted. I say this because there is a provision for allowances under Clause 11. Of course under this Clause, it is said Government could make rules for so many things, viz., organisation, qualification, etc., of Home Guard. But "Allowances" for them had been omitted. I think it is necessary to include that also under sub-clause 2 (b) of clause 15. That is the purpose of my second amendment. I request the House to accept my amendments.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Foregoing power என் பதற்கு பதிலாக 'foregoing provisions' என்று போட வேண்டு மென்று சொன்னார். 'foregoing power' என்பது மிகப் பொருத்தமே. விதிகளை அமைப்பதற்கு இதிலே 'பவர்' கொடுக் கப்பட்டிருக்கிறது. ஆகவே, அது அப்படியே இருக்கலாம்.

28th February 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

'அலவன்ஸ்' பற்றிச் சொன்னார்கள். விதிகளிலேயே 'அல வன்ஸ்' பற்றி வருகிறது. ஆகவே இந்தத் திருத்தமும் வேண்டிய தில்லை.

The amendment was by leave withdrawn.

Clause 15 was put and carried.

Clauses 16, 17 and 18 were put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Home Guard Bill, 1963, be passed."

MR. SPEAKER: The question is—

"That the Madras Home Guard Bill, 1963 be passed".

The motion was put and carried and the Bill was passed.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 12-50 p.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

102. *Notification issued with G.O. Ps. No.* 4482, *Revenue, dated 4th December* 1962 *amending the Madras General Sales Tax Rules,* 1959, *published with Revenue Department Notification S.R.O. No. A*-1941 *of* 1959, *dated the 28th March* 1959 *at pages* 232—280 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 1st April* 1959, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act* 1 *of* 1959).]

103. *Notification issued with G.O.P. No* 4786, *Revenue, dated 31st December* 1962 *amending Rules* 3 *and* 4 *of the Rules, published with Revenue Department Notification S.R.O. No. A*-764 *of* 1961, *dated the 5th July* 1961, *at pages* 801 *and* 802 *of Part V of the* Fort St. George Gazette, *dated the 28th July* 1961 *framed under section* 67 *read with sections* 41, 50, 54-*A and* 54-*B of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition andConversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

104. *Notification issued with G.O.P. No.* 139, *Revenue, dated 9th January* 1963 *issuing Rules under section* 5 (2), 7 (*c*) *and* (*d*) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948. [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

[28th February 1963

105. *Notification issued with G.O. Ms. No.* 4778, *Revenue, dated* 29*th December* 1962 *appointing the* 31*st January* 1963 *as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 *(Madras Act XXVI of* 1948*), other than sections* 1, 2, 4, 5, 7, 8, 58-*A*, 62, 67 *and* 68 *which have already come into force, shall come into force in the under tenure estate of Virapandiyapulikkulam in Koilpatti taluk of Tirunelveli district.* [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 *(Madras Act XXVI of* 1948).]

B. Reports, Notifications and other papers.

31. *Notification issued with G.O. Ms. No.* 2606, *Health, dated* 28*th November* 1962, *issuing the Enteric Fever (Prevention and Control) Rules*, 1962, *as revised, in supersession of the rules published with the late Public Health Department Notification No.* 372, *dated* 6*th May* 1940, *at pages* 313 *and* 314 *of Part I-A of the Fort St. George Gazette, dated the* 14*th May* 1940, *under the Madras Public Health Act*, 1939 *(Madras Act III of* 1939).

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 1st March 1963

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

UNSTARRED QUESTIONS

Local Libraries (Chingleput district)

1 *Q*.—**திரு. முனு ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் தாலுகாவாரியாக அமைந்துள்ள உள்ளூர் நூல் நிலையங்கள் (Local Libraries) எத்தனை ?

(இ) இவைகளை பராமரிக்க அரசாங்க கல்வி இலாகாவிற்கு ஆகும் செலவென்ன ?

(உ) இந்நூல் நிலையங்களில் இடம் பெறும் புத்தகங்கள் இத்தகைய தாக இருக்க வேண்டும் என்னும் கட்டுதிட்டம் ஏதேனும் உண்டா ?

(எ) இந்நூல் நிலையங்களுக்கான புத்தகங்களை தேர்ந்தெடுப்பது யார் ? எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது ?

A.—(*a*)

Ponneri taluk	5
Saidapet taluk	13
Madurantakam taluk	5
Tiruvallur taluk	3
Sriperumbudur taluk	8
Kancheepuram taluk	6
Tiruthani taluk	3

(*b*) The following amounts were paid from the State funds during the year 1961-62 to the Local Library Authority, Chingleput.

(i) Rs. 69,712-56 nP. being the statutory contribution payable under the provisions of section 13 (3) of the Madras Public Libraries Act, 1948; and

(ii) Rs. 65,496-00 nP. being the grant payable towards the tire cost of maintenance of the Libraries opened by the Authority under the Five-Year Plan Scheme.

(*c*) Yes.

(*d*) The Books Selection Sub-Committee of the Local Library Authority selects books for libraries under its control keeping in view the criteria laid down in rule 18 (4) of the Madras Public Libraries Rules, 1950.

(அ)

பொன்னேரி தாலுகா ..	5
சைதாப்பேட்டை தாலுகா ..	13
மதுராந்தகம் தாலுகா ..	5
திருவள்ளூர் தாலுகா ..	3
ஸ்ரீபெரும்புதூர் தாலுகா ..	8
காஞ்சீபுரம் தாலுகா ..	6
திருத்தணி தாலுகா ..	3

[1st March 1963

(இ) அரசாங்க நிதியிலிருந்து செங்கல்பட்டு மாவட்ட நூல் கழகத்திற்கு கீழ்க்கண்ட தொகைகள் 1961–62-ஆம் வருடத்தில் பட்டுவாடா செய்யப்பட்டன :—

(1) ரூ. 69,712·56 ந. பை. (சென்னை பொது நூலகச் சட்டம் 1948-ன் 13 பிரிவு மூன்றுவது உட்பிரிவின்படி மாநில அரசினரின் சட்டப்படி பட்டுவாடா செய்யப்படவேண்டிய உதவித் தொகை)

(2) ரூ. 65,496·00 ந.பை. (ஐந்தாண்டு திட்டங்களின்கீழ் திறக்கப்பட்ட நூலகங்களின் பராமரிப்புக்காக பட்டுவாடா செய்யப்படவேண்டிய மொத்த உதவித்தொகை).

(உ) உண்டு.

(எ) சென்னை நூலக 18-வது விதியின் 4-வது உட்பிரிவில் வகுக்கப்பட்டிருக்கும் ஆதார நிபந்தனைகளை நோக்காகக் கொண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உட்குழுக்கள், புத்தகங்களை தேர்ந்தெடுக்கின்றன.

Old Age Pension

2 *Q.*—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 1-ம் தேதி முதல் செப்டெம்பர் 30-ம் தேதி முடிய நம் மாநிலத்தில் முதியோர் உதவித் தொகை கோரி எத்தனை பேர் மனு செய்தார்கள், மாவட்டவாரியாக ?

(இ) எத்தனை பேருக்கு முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டது ?

A.—1962-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 1-ம் தேதி முதல் செப்டெம்பர் மாதம் 30-ம் தேதி வரையில் ஒவ்வொரு ஜில்லாவிலும் பெற்றுக் கொண்ட முதியோர் பென்ஷன் மனுக்களும் அந்தக் கால அளவில் பென்ஷன் கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

ஜில்லாவின் பெயர்.	பெற்றுக்கொண்ட மனுக்கள்.	பென்ஷன் கொடுக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
செங்கற்பட்டு ..	2,304	866
வட ஆர்க்காடு ..	1,610	800
தென் ஆர்க்காடு ..	2,261	999
தஞ்சாவூர் ..	2,702	1,415
திருச்சிராப்பள்ளி ..	1,987	1,061
ராமநாதபுரம் ..	3,424	1,267
மதுரை ..	14,957	3,032
திருநெல்வேலி ..	2,505	1,247
சேலம் ..	2,093	3,219
கோயம்புத்தூர் ..	1,512	124
நீலகிரி ..	365	165
சென்னை ..	447	389
கன்னியாகுமரி ..	1,017	914
	37,184	15,498

1st March 1963]

The number of applications for old age pension received and the number of pension sanctioned during the period from 1st August to 30th September 1962 in each district are as follows :—

Name of district.	Number of applications received.	Number of pension sanctioned.
(1)	(2)	(3)
Chingleput	2,304	866
North Arcot	1,610	800
South Arcot	2,261	999
Thanjavur	2,702	1,415
Tiruchirappalli	1,987	1,061
Ramanathapuram	3,424	1,267
Madurai	14,957	3,032
Tirunelveli	2,505	1,247
Salem	2,093	3,219
Coimbatore	1,512	124
Nilgiris	365	165
Madras	447	389
Kanyakumari	1,017	914
Total ..	37,184	15,498

Leprosy (Salem district)

3 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that Leprosy is prevalent on a large scale in Silarahally, Buddireddipatty, Biranatham, Bommidi, and other places in Harur taluk in Salem district ; and

(*b*) if so, the action taken in the matter ?

A.—(*a*) & (*b*) The Government have no specific information on this point as no survey of the area has recently been undertaken. But it may be mentioned that Salem district as a whole is highly endemic for leprosy and that the survey done by defunct State Leprosy Survey Unit in Harur taluk, 11 years ago, showed that the gross incidence was 30·3 per thousand. Since then there has been no reports regarding the prevalence of leprosy on a large scale in Harur taluk.

2. In Salem district the following Leprosy institutions are functioning :—

1. Government Leprosy Subsidiary Centre, Attur.
2. Government Children's Leprosy Sanatorium, Ethapur.
3. Government Leprosy Control Unit, Namakkal (sanctioned in July 1962).
4. Leprosy Relief Rural Centre, Settipatti, Omalur taluk.
5. St. Mary's Hospital, Arisipalayam, Salem.

The Government have recently sanctioned one Leprosy Control Unit at Krishnagiri, Salem district and four Survey, Education and Treatment Units in Dharmapuri, Salem, Tiruchengode and Rasipuram.

3. The patients in the village at Silarahalli, Buddireddipatty, Biranatham and other places in Harur taluk are expected to take treatment at the nearest Medical Institution.

(அ), (இ) இந்தப் பகுதிகளில் பெருவியாதி பரவியிருப்பது குறித்து சமீபத்தில் சர்வே செய்யவில்லை. எனவே, இது சம்பந்தமாகக் குறிப்பான எந்தத் தகவலும் அரசாங்கத்தினிடம் இல்லை. ஆனால், மொத்தத்தில், சேலம் மாவட்டம் முழுவதிலும் பெருவியாதி ஏராளமாகப் பரவியிருப்பது உண்மைதான். 11 ஆண்டுகளுக்கு முன் மாநிலப் பெருவியாதி சர்வே யூனிட் ஹரூர் தாலூகாவில் நடத்திய சர்வேயிலிருந்து அங்கே பிரதி 1,000 பேரில் 30·3 பேருக்குப் பெருவியாதி கண்டிருப்பதாகத் தெரிந்தது. அதற்குப் பிறகு ஹரூர் தாலூகாவில் பெருவியாதி ஏராளமாகப் பரவியிருப்பது குறித்து எந்தவிதமான அறிக்கைகளும் இல்லை.

2. சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட பெருவியாதி சிகிச்சை நிலையங்கள் பணியாற்றுகின்றன :—

(1) அரசினர் பெருவியாதித் துணை நிலையம், ஆத்தூர்.
(2) அரசினர் சிறுவர் பெருவியாதி சானிடோரியம், எத்தாப்பூர்.
(3) அரசினர் பெருவியாதித் தடுப்பு யூனிட், நாமக்கல்.
(4) பெருவியாதி நிவாரண ஆஸ்பத்திரி, செட்டிப்பட்டி, ஓமலூர் தாலூகா.
(5) செய்ன்ட் மேரி ஆஸ்பத்திரி, அரிசிப்பாளையம், சேலம்.

அரசினர் சமீபத்தில் சேலம் மாவட்டம், கிருஷ்ணகிரியில் பெருவியாதித் தடுப்பு யூனிட் ஒன்றையும், தர்மபுரி, சேலம். திருச்செங்கோடு, ராசிபுரம் ஆகிய நான்கு இடங்களில் நான்கு S. E. T. யூனிட்டுகளையும் ஏற்படுத்த அனுமதி அளித்துள்ளனர்.

3. ஹரூர் தாலூகாவில் சிலரஹள்ளி, புட்டிரெட்டிப்பட்டி, பீராநத்தம் ஆகிய கிராமங்களிலும் பிற இடங்களிலுமுள்ள பெருவியாதியஸ்தர்கள் மிக அருகாமையிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும்.

Central Jail, Vellore

4 *Q.*—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) ஆடவர்களுக்கான வேலூர் மத்திய சிறையில் எத்தனை கைதிகள் இடம் பெறலாம் ?

(இ) சராசரி எத்தனை கைதிகள் இடம் பெறுகின்றனர் ?

(உ) அச்சிறைக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு ?

(எ) ஆண்டு வருவாய் எவ்வளவு ?

(ஐ) அச் சிறையில் இருக்கும் மருத்துவ மனை எத்தனை படுக்கைகளைக் கொண்டது ?

(ஒ) எத்தனை டாக்டர்கள் பணி புரிகின்றனர் ?

(ஔ) அம்மருத்துவ மனைக்கு மட்டும் ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவாகிறது ?

A.—(*a*) 1,920.

(*b*) 2,329 per day (from January to November 1962)·

(c) Rs. 10,12,280.28 (for the year 1961).

(*d*) Rs. 2,03,223·54 (for the year 1961 under manufactory section).

(*e*) 67.

(*f*) Two.

(*g*) Rs. 38,386·99 (for the year 1961 inculding pay of Doctors and Medical Establishment).

(அ) 1,920 கைதிகள்.

(இ) நாளொன்றுக்கு 2,329 கைதிகள் (1962 ஜனவரி முதல் நவம்பர் வரை).

(உ) ரூ. 10,12,280·28 (1961-ம் ஆண்டில்).

(எ) ரூ. 2,03,223·54 (1961-ம் ஆண்டில் தயாரிப்புப் பிரிவு மூலமாகக் கிடைத்த வருமானம்).

(ஐ) 67 படுக்கைகள்.

(ஒ) இரண்டு டாக்டர்கள்.

(ஔ) ரூ. 38,386·99 (1961-ம் ஆண்டில் டாக்டர் சம்பளமும் மருத்துவச் சிப்பந்திச் செலவும் உட்பட).

Orchards

5 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the places where Orchards are maintained by the Government district-war ; and

(*b*) the net profit or loss of each Orchard in 1961 ?

A.—(*a*) There are at present six Model-Orchard-*cum*-Nurseries in this State in the following places :—

(1) Thimmapuram in Salem district.
(2) Periyakulam in Madurai district.
(3) Kodaikanal in Madurai district.
(4) Courtallam in Tirunelveli district.
(5) Coonoor in the Nilgiris district.
(6) Athur in Chingleput district

(*b*) The net profit of the following three Orchards in 1961 is as shown below :—

	Rs.	nP.
(1) Timmapuram	12,996	89
(2) Periakulam	4,206	71
(3) Coonoor	4,335	36

The other Orchards have not been in existence long enough to reach an adequate stage of development and begin to earn profits.

(அ) இம் மாநிலத்தில் இப்போது கீழ்க்கண்ட இடங்களில் ஆறு மாதிரிப் பழத் தோட்டங்கள்—நாற்றுப் பண்ணைகள் உள்ளன: —

(1) சேலம் மாவட்டத்தில் திம்மாபுரம்.
(2) மதுரை மாவட்டத்தில் பெரியகுளம்.
(3) மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல்.
(4) திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம்.
(5) நீலகிரி மாவட்டத்தில் கூனூர்.
(6) செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆத்தூர்.

[1st March 1963

(இ) 1961-ல் கீழ்க்கண்ட மூன்று பழத்தோட்டங்களில் கிடைத்த நிகர லாபம் வருமாறு :—

			லாபம்.	
			ரூ.	ந.பை.
(1) திம்மாபுரம்	..	..	12,996	89
(2) பெரியகுளம்	..	..	4,206	71
(3) கூனூர்	..	..	4,335	36

மற்ற பழத்தோட்டங்களை வைத்து அதிக நாள் ஆகவில்லை. ஆகவே, அவை வளர்ச்சியடைந்து லாபம் தரும் நிலையை இன்னும் அடையவில்லை.

Madras Educational Rules

6 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware that copies of the Madras Educational Rules are not available in the Government Press and

(*b*) if so, the action taken in the matter ?

A.—(*a*) & (*b*) Yes. The pamphlet is under reprint.

(அ) அண்டு (இ) ஆம் . பிரதிகள் அச்சிலிருக்கின்றன.

Students in Tamil Medium Course (Coimbatore district)

7 *Q.*—Sri K. A. MATHIALAGAN and Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total number of students who joined Tamil medium course in all the four Colleges of Coimbatore district in the years (i) 1960–61, (ii) 1961–62 and (iii) 1962–63 respectively.

A.—A statement [a] is placed on the table of the House.

விவரப்பட்டியல் ஒன்று மேசை மீது வைக்கப்பட்டுள்ளது.

Small-pox

8 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken to control and prevent small-pox in the State and place on the Table of the House a statement regarding the number of attacks and number of deaths due to small-pox each month from January to August 1962 ?

A.—The following steps have been adopted for the prevention and control of small-pox.

(*a*) Intensification of Primary and Re-vaccination campaign in the infected and surrounding areas.

(*b*) Isolation and treatment of infected cases wherever feasible. Home segregation in other cases.

(*c*) Disinfection of the infected premises, materials and careful collection of scabs and their destruction.

(*d*) Health education of the public about the mode of spread of the disease and the measures to be adopted for the prevention and control of the disease.

---

a Printed as Appendix I on page 220.

1st March 1963]

The number of attacks and deaths due to small-pox from January 1962 to August 1962 is as follows :—

1962.				*Attacks.*	*Deaths.*
January	..	..	..	674	206
February	..	..	..	923	247
March	..	..	..	855	237
April	..	..	..	668	194
May	..	..	..	434	150
June	..	..	..	587	160
July	..	..	..	589	162
August	..	..	..	839	261

அம்மை நோயைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும், பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(அ) அம்மை நோய் கண்டுள்ள பகுதிகளிலும் சுற்றுப்புற பகுதிகளிலும் முதல் முறையாக அம்மைக் குத்தும் இயக்கத்தையும் மீண்டும் அம்மைக்குத்தும் இயக்கத்தையும் வலுப்படுத்துதல் ;

(இ) அம்மை நோய் கண்டுள்ளவர்களை இயன்ற இடங்களில் எல்லாடு தனியாக ஒதுக்கி வைத்துச் சிகிச்சை செய்தல், மற்ற இடங்களில் வீடுகளிலேயே அவர்களை ஒதுக்கி வைத்துச் சிகிச்சை செய்தல் ;

(உ) அம்மை நோய் கண்டுள்ள வீடுகளிலும், பொருள்களிலும் கிருமி கொல்லியைத் தெளித்தல் ; அம்மை பக்குகளை கவனமாகச் சேகரித்து அழித்தல்.

(எ) நோய் எப்படிப் பரவுகிறது என்பதை மக்களுக்கு அறிவுறுத்துதல் ; நோயை எப்படி தடுப்பது, எப்படிக் கட்டுப்படுத்துவது என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுதல்.

1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் அம்மை நோய் கண்டவர்களின் எண்ணிக்கையும் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் வருமாறு :—

1962.	அம்மை நோய்கண்டவர்கள்.	மரணமடைந்தவர்கள்.
ஜனவரி	674	206
பெப்ரவரி	923	247
மார்ச்	855	237
ஏப்ரல்	668	194
மே	434	150
ஜூன்	587	160
ஜூலை	589	162
ஆகஸ்ட்	839	261

High Court—Centenary

9 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the details of expenditure incurred by the Government in connection with the celebrations of the Centenary of the High Court of Madras ?.

A.—Rs. 83,667·50 nP. so far.

Details of expenditure are as follows :—

							RS.	nP.
1 Printing of Souvenir	..	..	..	..	..	..	24,496	24
2 Celebrations in the District Centres				..	..	..	3,606	26
3 Dinner and Tea	..	..	..	..	..	..	6,712	00
4 Entertainments like Drama, Sports, etc.				..	..	..	3,219	10

[1st March 1963

	RS.	NP
5 Exhibition	407	40
6 Incidental expenses of visiting Judges	328	83
7 Towards cost of printing invitation cards, envolopes, car passes, etc.	1,388	18
8 Cost of travel of Chief Justice of another State	165	50
9 Cost of travel of two Judges of the Supreme Court ..	1,094	00
10 Cost of Construction of Pavilion	24,500	00
11 Cost of illumination of High Court buildings	17,750	00
Total ..	83,667	50

Besides the above expenditure, a sum of Rs. 1,13,000 has also been spent on special repairs to the High Court buildings.

Cotton Yarn

10 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

whether any communication has been received from the Textile Commissioner, Bombay, regarding the supply of Cotton Yarn to the Weavers' Co-operative Societies at normal prices and if so the details thereof?

A.—The Textile Commissioner sent a communication on 31st October 1962 to all State Governments announcing the details of the All India Cotton Yarn Distribution Scheme to be implemented from 1st November 1962.

The scheme covers—

(1) handloom weavers' co-operative societies;

(2) exporters of handloom fabrics; and

(3) handloom manufacturers outside the co-operative sector.

The Textile Commissioner has ascertained the needs of the co-operative sector and has made an allocation of 6,225 bales per mensem to the Tamilnad Handloom Weavers' Co-operative Society, which will distribute the yarn to the primaries. The allotments will be at the prices fixed by the Indian Cottan Mills Federation for the various counts. The allottees will also bear excise duty, sales tax, insurance, transport and other inicdental charges.

As far as possible, allotments are being made from the nearest production centres. Allottees should enter into firm commitment with the mills and lift their quota within 15 days- Failure to lift and pay for the allotments may entail withholding of further allotments.

1962-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியில் Textile Commissioner அகில இந்திய பருத்தி நூல் விநியோகத் திட்டத்தைப் பற்றி எல்லா ராஜிய அரசாங்கங்களுக்கும் அறிவித்தார். இத் திட்டம் 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்தது. இதில் கீழ்க் கண்டவர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது :—

(1) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.
(2) கைத்தறித்துணி ஏற்றுமதியாளர்கள்.
(3) கூட்டுறவு இயக்கத்தில் சேராத கைத்தறி உற்பத்தியாளர்கள்.

கூட்டுறவு துறையின் தேவைக்காக Textile Commissioner மாதந் தோறும் 6,225 பேல் பருத்தி நூல் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கியுள்ளார். இச் சங்கம் தன் உறுப்பினர் சங்கங்களுக்கு இதை பகிர்ந்து கொடுக்கும். Indian Cotton Mills Fedaration-ஆல் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கு நூல் விநியோகிக்கப்படும், இவ் விலையைத் தவிர கலால் வரி, விற்பனை வரி, இன்ஷூரன்ஸ் செலவு, வண்டிச் செலவு ஆகியவற்றையும் வாங்குபவர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

1st March 1963]

கூடியமட்டில் சமீபத்தில் உள்ள ஆலைகளிலிருந்தே நூல் விநியோகிக் கப்படும். வாங்குபவர்கள் 15 நாட்களுக்குள் விநியோகிக்கப்பட்ட நூல்களை பணம் கட்டி எடுத்துக்கொள்ள ஒத்துக் கொண்டு நூல் ஆலைகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் மேற்கொண்டு நூல் விநியோகம் நிறுத்தப்படலாம்.

Art silk yarn

11 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the quotas of art silk yarn allotted for Madras State for each quarter of current year 1962-63; and

(b) the details of quantities allotted for each district up to 31st August 1962?

A.—(a) Particulars are given in the statement [a].

(b) As allotements are made on the basis of looms working and *not* district-wise, the figures are not readily available.

Yarn (prices)

12 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) how far the decision arrived at in the Conference held on 30th April 1962 regarding prices of yarn supplied to the handloom industry have been implemented; and

(b) the rates at which the State Society make purchases of yarn of counts 60 and above each month, subsequent to the Conference?

A.—(a) The decisions taken at the Conference held at Coimbatore on 30th April 1962 regarding the prices at which yarn would be supplied to the handloom industry under the Voluntary Distribution Scheme have been fully implemented.

(b) A statement is given below :—.

நமது மாநிலத்தில் தானாக மேற்கொண்டுள்ள நூல் விநியோக திட்டத் தின்படி கைத்தறிகளுக்கு இன்னின்ன விலைக்கு பருத்தி நூல் சப்ளை செய்யப்படவேண்டும் என்ற விஷயமாக கோவையில் 1962-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதி நடைபெற்ற மகாநாட்டின் முடிவுகள் முற்றிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இவ்விவரங்கள் கீழ்க்கண்ட ஸ்டேட்மெண்டில் உள்ளன :—

[a] Printed as Appendix II on page 221.

Statement showing the rates at which the Madras State Handloom Weavers' Co-operative Society made purchases of yarn of counts 60s and above from May 1962.

Variety.	*Actual prices paid by the State Society.*						*Rates fixed by Indian Cotton Mills Federation from 1st August 1962.*
	May 1962.		*June 1962.*		*July 1962.*		
	Maximum.	*Minimum.*	*Maximum.*	*Minimum.*	*Maximum.*	*Minimum.*	
(1)	(2)		(3)		(4)		(5)
60s :—							
Indian Carded	47·00	47·00	48·25	47.00	48·00	48·00	47·00
Indian Combed	Purchase was not made.		54·50	54·50	55·50	55·00	52·00
East African Carded	57·50	54·00	57·50	53·50	54·50	53·50	52·50
East African Combed	Purchase was not made.						
80s :—							
East African Carded	73·00	71·50	72·50	71·00	72·50	71·00	72·85
East African Combed	77·00	77·00	Purchase was not made		77·00	77·00	78·85
100s :—							
East African Carded	84·00	84·00	85·00	85·00	85·00	85·00	87·75
East African Combed	94·00	90·00	90·00	89·00	93·00	89·00	93·75

From August 1962 the State Society has paid only the rates fixed by the Indian Cotton Mills Federation as in column (5) above.

Co-operative Societies

13 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state:—

(*a*) the number of Consumers Co-operative Societies opened for the purpose of bringing down prices of essential commodities so far;

(*b*) the details of assistance given to such societies by the Government; and

(*c*) the results achieved due to the functioning of these societies?

A—(*a*) Sixty-one (61) Primary Co-operative Units have been opened upto 24th January 1963 for the purpose of stabilising the prices of essential commodities.

(*b*) The primary co-operative Stores are given the following financial assistance:—

(*i*) Share capital of Rs. 2,500— each to the existing stores and the new stores;

(*ii*) Subsidy towards managerial expenses at the following rates:—

Existing stores.—Rs. 900 during the first year.

New primary stores and branches.—Rs. 1,755 during the first year.

(*iii*) *Subsidy towards rent.*—Existing Stores—Nil.

New stores and new branches—50 per cent of the expenditure incurred on payment of rent for one year subject to a maximum of Rs. 1,000—for each store and/or branch.

(*c*) the prices charged by the primary units are generally lower than the market prices in respect of the essential commodities sold by them.

(அ) அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் தேதி வரை அறுபத்தி ஒன்று ஆரம்ப கூட்டுறவு பண்டகசாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

(இ) கூட்டுறவு ஸ்டோர்களுக்கு கீழ்க்கண்ட உதவிகள் கொடுக்கப்படுகின்றன:—

(i) பழைய ஸ்டோர்கள் புதிய, ஸ்டோர்கள் ஒவ்வொன்றுக்கும் பங்குத் தொகை ரூ. 2,500 வரை.

(ii) நிர்வாகச் செலவுக்கு மானியம் கீழ்க்கண்ட வீதத்தில் பழைய ஸ்டோர்கள் ஒவ்வொன்றுக்கும் முதல் வருஷம் ரூ. 900. புதிய ஸ்டோர்கள் கிளை பண்டகசாலைகள் ஒவ்வொன்றுக்கும் முதல் வருஷம் ரூ. 1,755.

(iii) வாடகைக்கு மானியம்—

பழைய ஸ்டோர்களுக்கு கிடையாது.

புதிய ஸ்டோர்கள், புதிய பண்டகசாலைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வருஷத்தில் வாடகை கொடுப்பதில் ஏற்படும் செலவில் பாதி. இந்தத் தொகையின் உச்ச வரம்பு ரூ. 1,000.

(உ) இந்த பண்டகசாலைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வெளி மார்க்கட் விலையைவிடக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

14 *Q.*—திரு. ஆ. துரையரசன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் (பணம் கடன் பெறுவோர்) தற்போது இயங்கிவருகின்றன ?

A.—The number of various kinds of credit co-operatives functioning at the primary level in the State as on 30—9—1962 are furnished below :—

(1)	Village Credit Societies	..	10,166
(2)	Agricultural Banks	..	330
(3)	Credit Unions	..	150
(4)	Rural Banks	..	22
(5)	Urban Banks	..	161
(6)	Employees' Credit Society	..	656
(7)	Primary Land Mortgage Banks	..	97

30—9—1962-ல் இம் மாநிலத்தில் இயங்கிவந்த பலவகைக் கூட்டுறவுப் பிரதமக் கடன் சங்கங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

(1)	கிராமக் கடன் சங்கங்கள்	..	10,166
(2)	விவசாய பாங்குகள்	..	330
(3)	கடன் தரும் யூனியன்கள் (Credit Unions)		150
(4)	கிராம பாங்குகள்	..	22
(5)	நகர பாங்குகள்	..	161
(6)	தொழிலாளர் கடன் சங்கங்கள்	..	656
(7)	பிரதம நில அடைமான பாங்குகள்		97

Municipalities (Audit)

15 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state —

(*a*) Whether it is a fact that in a large number of municipalities paid vouchers were not made available for audit for the year 1958–59 ;

(*b*) the list of such municipalities and the total amount involved in each of such municipalities ; and

(*c*) the action taken in the matter ?

A.—(*a*) Only twenty-three out of 58 municipalities failed to produce paid vouchers during 1958–59.

(அ) 58 நகராட்சி மன்றங்களில் 23 நகராட்சி மன்றங்கள் மட்டும்தான் 1958–59-வது ஆண்டில் செலுத்தப்பட்ட உறுதிச் சீட்டுக்களை தணிக்கையாளருக்குச் சமர்ப்பிக்கத் தவறின.

(*b*) A list of such municipalities is given in the Appendix [a].

(இ) அவ்விதம் தவறிய நகராட்சி மன்றங்களின் ஜாபிதா ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

(*c*) The objections raised in the Audit Report were pursued and all the required vouchers have been produced to the satisfaction of the Audit by 14 municipalities. There are now only 9 municipalities which have yet to produce some more vouchers. Action is being pursued by issuing warning letters to the respective executive authorities to have these vouchers accounted for and produced by the concerned municipalities before the audit.

[a] Printed as Appendix III on page 222.

(உ) தணிக்கை அறிக்கையில் ஆட்சேபிக்கப்பட்ட ஆட்சேபணைகள் தொடர்ந்து கவனிக்கப்பட்டன. 14 நகராட்சி மன்றங்கள் தணிக்கையாளரின் திருப்திகரமான முறையில் வேண்டிய எல்லா உறுதிச் சீட்டுக்களையும் பிறகு சமர்ப்பித்தன. இன்னும் 9 நகராட்சி மன்றங்கள் மட்டும் தேவைப்பட்ட இன்னும் சில உறுதிச் சீட்டுகளை சமர்ப்பிக்க வேண்டியிருக்கின்றன. அந்தந்த நிர்வாக அதிகாரிகளுக்கு, உறுதிச் சீட்டுக்களை சரியானபடி கணிக்கவும், தணிக்கைக்கு அவைகளை சமர்பிக்கும்படிக்கும் எச்சரிக்கை கடிதங்கள் அனுப்புவதின் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Facilities to Fishermen (Arantang taluk)

16 *Q*—திரு. ஆ. துரையரசன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி தாலுகாவில் மீனவர்களுக்கு மின்சாரப் படகு, கலங்கரை விளக்கு வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ?

A.—No.

இல்லை.

[*Note* :—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Members.]

II.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF DR. RAJENDRA-PRASAD, FIRST PRESIDENT OF INDIA.

MR. SPEAKER : It is my painful duty to announce to the House the death of Dr. RAJENDRA PRASAD, the First President of India, at 10-15 p.m. at his Sadaqat Ashram residence in Patna on the 28th February 1963.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move the following resolution :—

"This House places on record its deep sense of sorrow at the demise of Dr. RAJENDRA PRASAD, the First President of India from January 26, 1950, till May 12, 1962 and conveys its deep sense of sympathy to the members of the bereaved family."

கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று இரவு டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் மறைந்த செய்தி நம் எல்லோரையும் திடுக்கிடச் செய்தது. சமீபத்தில் டாக்டர் பிரசாத் அவர்கள் இம்மாதிரி மறையக் கூடிய ஒரு நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்ற செய்தி ஒன்றுமில்லை. பாட்னா யூனிவர்ஸிட்டி கான்வொகேஷனுக்குக்கூட அவர்கள் போவதாக இருந்தார்கள். ஆனால் திடீரென்று அவர்கள் மறைய வேண்டிய நிலை ஏற்பட்டது. டாக்டர் பிரசாத் அவர்களை நம் நாட்டினர் மட்டுமல்ல, உலகத்தினர் அனைவரும் நன்கு அறிவர். அவர்களை எல்லோரும் நன்கு மதித்து வந்தார்கள். அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞராக

பொதுத்துறையில் ஈடுபட்டார்கள். ஆனால் காந்தி அடிகளின் தலைமையில் காந்தியடிகளால் வசீகரிக்கப்பட்டு காந்தியடிகளின் பிரதம சீடராக அரசியல் துறையில் வாழ்க்கை நடத்த முற்பட்டார்கள். 1917-ல் சம்பரான் சத்தியாக்கிரஹ வீரரானார். பிரசித்தி பெற்ற அந்த சத்தியாகிரகம், முதல் சட்ட மறுப்பு இயக்க சத்தியாகிரஹமாகும். காந்தி அடிகள் பின்னால் சீரிய முறையில் இயக்கங்களை நடத்துவதற்கும் நமக்கு சுதந்திரம் பெறுவதற்கும் முதன்முதலாக பிரசாத் அவர்களின் மாநிலமாகிய பீஹாரில் சம்பாரனில் டாக்டர் பிரசாத் அவர்களைத் தலைவராக வைத்து இந்த இயக்கத்தை முதன்முதலாக துவக்குவோம், அது வெற்றிகரமாக நடைபெறும், அது மற்ற இயக்கங்களுக்கு வழிகோலும் என்று டாக்டர் பிரசாத் அவர்களிடம் நம்பிக்கை காரணமாக சம்பரான் சத்தியாகிரகத்தைத் தோற்றுவித்தார்கள். அம்மாதிரி எல்லாம் முதன்முதலாக ஈடுபட்டு சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் காந்தியடிகளின் பிரதம சீடராக விளங்கினார்கள். டாக்டர் பிரசாத் அவர்கள் பன்முறை சிறை சென்றார்கள். அவர்கள் நீண்ட காலமாக ஆஸ்த்மா வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார். எவ்வளவோ சிகிச்சைகள் செய்தபோதிலும் அந்த வியாதி அவர்களை விட்டபாடில்லை. இருந்தபோதிலும் அவர்கள் அரசியல் துறையில், சுதந்திரப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். எனக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும், முதல் அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும், டாக்டர் பிரசாத் அவர்கள் ஆஸ்த்மாவினால் இரவில் அவதிப்படுவார்கள், ஆனால் காலையில் சுற்றுப்பிரயாணம் செய்ய முற்படுவார்கள். அப்படி அவர்கள் தமது உடல்நிலையைக் கவனியாது பணியாற்றி வந்தார்கள். அவர்கள் சிறை செல்லவும் தயங்கவில்லை. சிறை வாழ்க்கையினால் அவர்களின் உடல்நிலை மேலும் கெட்டுப் போனது. அவர்கள் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காங்கிரஸ் தலைவராக அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு எல்லா மாநிலங்களிலும் தீவிரமாக சுற்றுப் பிரயாணம் செய்யும் ஒரு முறையை அவர்கள் தான் முதன்முதலாக கையாண்டார்கள். அவர்கள் 21 நாட்கள் சேர்ந்தாற்போல் இரவு பகலாக தமிழ் நாடு பூராவும் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்து மக்களுக்கு எல்லாம் நல்ல வழியைக் காட்டினார்கள். அதோடு மக்களுக்கு உற்சாகத்தையும், உணர்ச்சியையும் ஏற்படுத்தினார்கள் என்பதும் பலருக்கும் தெரியும், இந்த மன்றத்திலுள்ள பல உறுப்பினர்களுக்கும் அது தெரியும். அவ்வாறு தொடர்ந்து பணியாற்றி நாம் சுதந்திரம் அடைந்த பிறகு முதன்முதலாக சுயநிர்ணய சபைக்கும் தலைவராக இருந்தார்கள். அதற்குப் பின் உணவு விவசாய அமைச்சராகவும் அவர்கள் சீரிய வகையில் பணியாற்றினார்கள். அதற்குப் பின் முதல் ஜனாதிபதியாக டாக்டர் பிரசாத் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இரண்டு முறை அவர்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி வந்தார்கள். பின்னர் சென்ற முறை தானாகவே நான் விலகிக் கொள்கிறேன் என்று விலகிக் கொண்டார்கள். அப்படி விலகிக் கொண்டதோடு அல்லாது விலகிக் கொள்ள

வேண்டி வந்தது. இனி நமக்கு என்ன அரசியல் என்று அக்கறை இல்லாமல் இருக்கவில்லை. கடைசி வரையில் அவர்கள் அரசியலில் அக்கறை செலுத்தி வந்தார்கள். நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டதும் அவர்கள் நமக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கினார்கள். டாக்டர் பிரசாத் அவர்களை "அஜாத சத்ரு" என்று சொல்ல வேண்டும். அவர் ஒரு தீவிர அரசியல்வாதி. அரசியல் ஞானம் உள்ளவர். கலையிலும் பண்பாட்டிலும் தலை சிறந்தவர். அவர்கள்மீது யாரும் குறை சொல்ல மாட்டார்கள். ஆனால் அவர்கள் அரசியலில் விட்டுக் கொடுத்தாரா என்றால் விட்டுக் கொடுக்கவும் இல்லை. தமிழ்நாட்டின் மீது அவர்களுக்கு அதிக அக்கறையும், தொடர்பும், பற்றும் உண்டு. அவர்கள் ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் ஒரு முறை அவர்கள் கவலைக்கிடமான நோய்வாய்ப் பட்டிருந்தார்கள். டாக்டர்கள் அவர்களைப் பார்க்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அப்படி கவலைக்கிடமான நிலை அப்போது இருந்தது. அப்பொழுது நான் ஒரு முறை டெல்லிக்குச் சென்றிருந்தபோது அவர்களைப் பார்க்கலாமா என்று அவரது மிலிட்டரி செகரட்டரியிடம் கேட்டேன். நீங்கள் போகலாம் என்று அவர்கள் சொன்னார்கள். அப்போது அவர்கள் கவலைக்கிடமான நிலையில் படுக்கையில் இருந்தார்கள். நான் போய் அவர்களைப் பார்த்தபோது நீங்கள் நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள். ஆமாம் என்று நான் சொன்னேன். அடுத்த கேள்வி அவர்கள் கேட்டது, காமராஜ் அவர்கள் வந்திருக்கிறார்களா என்பதுதான். அப்படி நம் முதல் அமைச்சர் அவர்களிடமும் மற்றவர்களிடமும் மிகுந்த பற்றும் அக்கரையும் அன்பும் கொண்டவர், அவர்கள் அத்தகைய ஒரு மகான், நேற்று இரவு மறைந்துவிட்டார் என்றால், அதனால் நமக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதற்கு நாம் வாயாறச் சொல்லித்தான் ஆறுதல் பெற வேண்டியிருக்கிறது. அவர்கள் குடும்பத்தாருக்கு நாம் ஆறுதல் சொல்ல வேண்டும். அவர்களுக்கு சொல்லக்கூடிய ஆறுதல் நாடு பூராவும் இந்தத் துக்கத்தை பகிர்ந்து கொள்கிறது என்ற வகையில்தான் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும். ஆனால் அத்தகைய ஒரு பெரியாருக்கு—அவர்கள் நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்தார்கள்—அவர்களுக்கு நாம் வணக்கம் செலுத்துவது அவர்கள் காட்டிய வழியில் சென்று நாட்டை மேலும் உயர்த்தி சீர்படுத்தி உரிய வகையில் பாடுபடுவதுதான் அந்தப் பெரியாருக்கு நாம் செலுத்துகிற அஞ்சலி என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! இந்தியாவின் அரும்பெரும் அரசியல் தலைவர்களில் ஒருவரும், இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவருமான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள், திடீரென்று இயற்கை எய்திய செய்தி யாவர்க்கும் துக்கத்தையும் துயரத்தையும் தருவதாகவும் அவர்களது இழப்பு நாம் அவ்வளவு எளிதில் ஈடு செய்ய முடியாத

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1st March 1963

இழப்பு என்பதை அரசியல் தலைவர்கள், நாட்டின் பெருங்குடி மக்கள் அத்தனை பேர்களும் உணருவார்கள். அரசியல் துறைத் தலைவர்களுக்கு மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகவும், அண்ணல் காந்தியடிகளின் வலக்கரமாகவும் இருந்து அரும்பாடு பட்டவர் டாக்டர் அவர்கள் ஆவார்கள். அன்புள்ளம், அருள், அடக்கம், அமைதி, சிறந்த பண்பாடு, விடாமுயற்சி, எடுத்த காரியத்தை ஈடேற்றுவதில் ஏற்படுகிற தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளும் மனப்பான்மை, சுயநலத்தை மறந்து பொது நலத்திற்காகத் தன்னைக் கொடுத்தல் போன்ற அரும்பெரும் பண்பாட்டிற்கு உறைவிடமாக இருந்து, நாட்டில் எதிர்காலத்தில் வருகிற பல அரசியல் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிற அரும் பெரும் தன்மைகளைக் கொண்டவராக இருந்தார் டாக்டர் பிரசாத் அவர்கள். நாட்டிற்காக அவர்கள் ஆற்றிய தொண்டு, அவர்கள் செய்த தியாகம் அளப்பரியனவாகும். அவர்கள் உழவர் பெருங் குடி மகனாக இருந்து தமது உழைப்பாலும், ஆர்வத்தாலும், ஆற்றலாலும் மேலே மேலே வளர்ந்து, பலருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் அளவிற்கு உயர்ந்து, அருமையாகப் பணியாற்றி வந்தார்கள். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்க்கைத் துறையில் ஈடுபட்டு இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக் கடி நிலையில், நெருக்கடி நிலையை எப்படி எப்படித் தவிர்ப்பது என்பதில் அவசரப்படாமல், உணர்ச்சிவசப்படாமல், ஆழ்ந்து சிந்திக்கிற ஒருவரின் ஆலோசனைகளைப் பெற வேண்டிய இந் நேரத்தில், அவர்களது இழப்பு நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் ஒரு பெரும் இழப்பாகும். அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இந்த மன்றத்தின் முதல்வர் அவர்கள் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிகத் தெளிவுபட எடுத்துக் கூறினார். அரசியல் பற்றும், நாட்டுப் பற்றும் கொண்டு, நேர்மை, நாணயம்; ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிய டாக்டர் பிரசாத் அவர்கள் மறைந்தது மிகமிக வருந்தற்குரிய ஒன்றாகும். நாட்டிலுள்ள அத்தனை பேர்களும் அந்த மீளாத் துக்கத்திலும் துயரத்திலும் ஈடுபட்டு அந்தத் துக்கத்திலும் துயரத்திலும் பங்கு கொண்டு அதைப் பகிர்ந்து கொண்டு அந்த இழப்பினால் வாடும் அவர் குடும்பத்தினருக்கு ஆறுதல் அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த முறையில் அன்னாரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கும் உற்றாருக்கும் உறவினர்களுக்கும், அன்னாரின் நெருங்கிய நண்பர்களுக்கும் இந்த மன்றத்தின் சார்பாக தெரிவிக்கும் அனுதாபத்தோடு, பொதுவாக எதிர்க் கட்சிகளின் சார்பாகவும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்றக் கட்சியின் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Mr. SPEAKER: I associate myself with the feelings of sorrow expressed by the Leader of the House and the Leader of the Opposition.

1st March 1963] [Mr. Speaker]

As a mark of respect and by way of passing the resolution moved by the Hon. the Leader of the House, I should like the hon. Members to stand in silence for two minutes.

(The resolution was carried NEM. CON., all the members of the Assembly standing in silence for two minutes.)

Mr. SPEAKER: Because of the demise of Dr. Rajendra Prasad, the House will adjourn after the formal presentation of the Budget for the year 1963-64. The questions posted for to-day will be taken up to-morrow and I hope the House has no objection to suspend the question hour for to-day.

III.—BUDGET FOR 1963-64 PRESENTATION.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே,

முன்னுரை

1963-64-ம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன். * 1961-62-ம் ஆண்டுக் கணக்குகளும், 1962-63-ம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளும் சபைமுன் உள்ளன. பொதுத் தேர்தலுக்குப் பிறகு நான் முதல் பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கையில் 1961-62-ம் ஆண்டுக் கணக்கில் வருவாய் வகையில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் அளவுக்குத் துண்டு விழுமெனத் தெரிவித்திருந்தேன். அந்த ஆண்டின் இறுதியான புள்ளி விவரங்கள் இப்பொழுது கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து வருவாய் வகையில் இன்னும் கூடுதலாகவே, அதாவது 9 கோடியே 61 லட்சம் ரூபாய், துண்டு விழுவது தென்படும். சென்ற ஜூன் மாதம் சட்ட சபையில் சமர்ப்பித்த பட்ஜெட் மதிப்பீடுகளின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் வருவாய் வகையில் 2 கோடியே 86 லட்சம் ரூபாய் துண்டு விழலாமெனத் தெரிவித்திருந்தேன். நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் இப்பொழுது சபைமுன் வைக்கப் பட்டுள்ளன. ஏறக்குறைய முன்பு உத்தேசித்த அளவுக்கே, அதாவது 2 கோடியே 92 லட்சம் ரூபாய் துண்டு விழும் என்று அந்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. நடப்பு ஆண்டில் இச் சபை ஒப்புக்கொண்ட அதிக வரித் திட்டங்களின் மூலம் முழுப் பயனையும் நாம் அடுத்த ஆண்டில் அடைவோம். அப்படியிருந்தும் இப்போது சபையின் முன்புள்ள மதிப்பீடுகளிலிருந்து வருவாய் வகையில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுவதை நாம் காண்கிறோம்.

அவசர கால நிலையும் பட்ஜெட்டும்

2. இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அவசர நிலை காரணமாக மாநில அரசாங்கம் பல புதுப் பொறுப்புக்களை ஏற்கவேண்டி நேர்ந்திருக்கின்றது. தவிர, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் வேலைத் திட்டங்களும் துரிதமாக முன்னேற வேண்டிய கட்டத்தை அடைந்திருக்கின்றன. இந்த இரண்டு அம்சங்களும் நான் இப்பொழுது சமர்ப்பித்துள்ள

* Vide Pages 223-246 for Appendices (Tamil.)
Vide Pages 247-248 English versions Budget Speech and Appendices.

அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் பிரதிபலிக்கின்றன. நம்முடைய நாட்டின் எல்லைப்புறத்தில் நேர்ந்த நியாயமற்ற ஆக்கிரமிப்புக் காரணமாக நாம் நம்முடைய பாதுகாப்புத் திறனைப் பெருக்கி எத் திக்கிலிருந்தும் நிகழக்கூடிய ஆக்கிரமிப்பை எதிர்காலத்தில் சமாளிப்பதற்குரிய ஒரு நிலையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டியிருக்கின்றது. இந் நாட்டின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய பொறுப்பு நம்முடைய அரசியல் அமைப்பில் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது. தேசியப் பாதுகாப்புக்காகக் கூடுதல் செலவின் நிமித்தம் அதிக பளுவை ஏற்க நம்முடைய மக்கள் தயங்கமாட்டார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். அங்ஙனம் நாட்டின் பாதுகாப்புத் திறனை வளர்க்கும் முயற்சியில் மத்திய அரசாங்கத்திற்கு உதவி புரிகின்ற பெரும் பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. எனவே, நாட்டில் இப்பொழுது எழுந்துள்ள அவசர கால நிலை மாநில பட்ஜெட்டின் வரவினங்கள், செலவினங்கள் என்ற இரண்டு பகுதிகளையும் பாதித்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

3. சென்ற மாதம் நடப்பு ஆண்டுக்குரிய உப மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும்பொழுது, நாட்டின் அவசர கால நிலை காரணமாக நமக்கு ஏற்பட்டுள்ள சில கூடுதல் செலவினங்களைப்பற்றி நான் சுருக்கமாகக் குறிப்பிட்டேன். திட்டமிட்ட பொருளாதார அமைப்பை நாம் ஏற்ற நாளிலிருந்து அபிவிருத்திக்குச் சம்பந்தப்படாத செலவினங்களைக் கூடிய அளவில் குறைத்து நமது நிதி வசதிகள் அனைத்தையும் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவது என்ற கொள்கையைக் கடைப் பிடித்து வந்திருக்கிறோம். முக்கியமாக பொது நிர்வாகம், போலீஸ் போன்ற துறைகளில் நாம் செலவினங்களை நல்ல முறையில் கட்டுப்படுத்தியுள்ளோம். ஆனால், நாட்டில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக நமது போலீஸ் படைகளை, குறிப்பாக விசேஷ ஆயுத போலீஸ், ஆயுத ரிசர்வ் போலீஸ் படைகளைப் பலப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறோம். உள்நாட்டில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவதன் மூலமும், போர்முனைக்கு அடுத்த பகுதிகளில் சில பொறுப்புக்களைப் பாதுகாப்புப் படைகளிலிருந்து ஏற்று நிர்வகிப்பதன் மூலமும் போலீசார் இன்றைய சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்கமுடியும். எனவே, போலீஸ் படைகளைப் பலப்படுத்துவதற்கும், அவைகளுக்குத் தேவையான தளவாடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் முதலியவற்றை வாங்குவதற்கும் கூடுதலாகப் பணம் அனுமதித்திருக்கின்றோம். தவிர, குறிப்பிட்ட சில பகுதிகளில் "ஊர்க் காவல்" (ஹோம் கார்ட்ஸ்) படைகளை நிறுவ நாம் செய்துள்ள ஏற்பாடுகள் பற்றியும் இம்மாமன்றம் அறியும். உள்நாட்டுப் பாதுகாப்பிற்கான இது போன்ற பணிகளுக்கு ஆகும் செலவு அடுத்த ஆண்டில் 85 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. போலீஸ் துறையின் மொத்தச் செலவினம் நடப்பு ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகளில் 6 கோடியே 98 லட்சம் ரூபாயிலிருந்து 1963-64-ல் 8 கோடியே 11 லட்சம் ரூபா

யாக உயர்ந்திருப்பதிலிருந்து இது நன்றாய்த் தெரியும். கல்லூரிகளில் இளைஞர்களுக்குப் பரவலாக ராணுவப் பயிற்சி அளிப்பதற்காக நாம் கூடுதல் தேசிய மாணவர் படைகளை எழுப்ப மேற்கொண்டுள்ள முயற்சிகள் காரணமாகவும் அதிகச் செலவு ஏற்படுகிறது. வருகிற ஆண்டில் இதற்காகச் சுமார் 57 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் அவசர கால நிலை நீடிக்குமானால் நமக்கு இன்னும் என்னென்ன கூடுதல் பொறுப்புகள் ஏற்படும் என்பதைத் தற்போதைய சூழ்நிலையில் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. உதாரணமாக, ஊர்க் காவல் படைகளை மேலும் விஸ்தரிப்பதற்கான யோசனைகள் கூறப்பட்டு வருகின்றன. எனவே, இது போன்ற பல கூடுதல் செலவினங்கள் எழக்கூடிய ஒரு நிலையை சபை கருத்தில் கொள்ளவேண்டும்.

4. இன்று மத்திய அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பிற்காக கூடுதலாக நிதி வசதிகள் செய்யவேண்டியிருக்கின்றது. அதன் காரணமாகத் திட்ட வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு வழங்கிவரும் உதவித் தொகைகள் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்குத் தரும் உதவி 450 கோடி ரூபாய் அளவிலிருந்து 400 கோடி ரூபாய் அளவிற்குக் குறையும் என்று தெரிகிறது. இது நாம் எதிர்பார்த்ததுதான். 1963-64-ல் நமது திட்ட வேலைகளுக்காக 35 கோடியே 40 லட்சம் ரூபாய் மத்திய அரசாங்கத்திடமிருந்து கடனாகவும், மான்யமாகவும் பெற்றிருக்கவேண்டும். ஆனால், இப்போது நமக்கு 31 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவிற்குத்தான் உதவி கிடைக்குமெனத் தென்படுகிறது.

திட்டத்தில் புதுத் திருப்பம்

5. நாட்டின் அவசரகால நிலை காரணமாக இத்தகைய இன்னல்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டிருப்பினும், நம் மக்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான நமது முயற்சிகளில் தளரக்கூடாது. ஏனென்றால், பொருளாதார அபிவிருத்தியின் மூலமே நாட்டின் தற்காப்புத் திறனை வளர்க்க முடியும். உண்மையில் தேசியப் பாதுகாப்பை முன்னிட்டு விவசாய, தொழில் உற்பத்திக்கான திட்டங்களிலும், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சாரம், போக்குவரத்து போன்ற துறைகளிலும் நாம் இன்னும் அதிக அளவிற்கு முதலீடு செய்யவேண்டும். நாட்டின் அவசர கால நிலையை முன்னிட்டு குறிப்பிட்ட சில திட்ட வேலைகளைத் திருத்தவோ, குறைக்கவோ வேண்டி இருக்கலாம். ஆனால், நம் நாட்டில் எதிரிக்கு நிகரான படை அமைப்பை உருவாக்க வேண்டுமென்றால் திட்டத்தின் முக்கியமான பகுதிகள் எல்லாவற்றையும் நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்கின்ற கொள்கைதான் நான் இந்த சபைமுன் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மேல் நாடுகளிலிருந்து உணரவேண்டிய படிப்பினை இதுதான். அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் பாதுகாப்பு அமைப்பு பலமான ஒரு பொருளாதார

அமைப்பின் மேல்வழி எழுந்ததாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் இணைத்துள்ள அபிவிருத்தி வேலைகள் பெரும்பாலும் உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில்தான் அமைந்துள்ளன. இத் திட்டத்தின்கீழ் நாம் முதலீடு செய்வதாக உத்தேசித்துள்ள 291 கோடி ரூபாயில் விவசாயம், தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டங்கள், தொழில் நுட்பக் கல்வி போன்ற துறைகளுக்கென மாத்திரம் 195 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். நாட்டில் இன்றைய நிலையில் நமது திட்ட வேலைகளை மேலும் பரிசீலனை செய்து, அதன் அடிப்படையில் உற்பத்தித் திட்டங்களுக்கு மேலும் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளோம். பாதுகாப்புப் படைகளுக்கும் அவற்றைச் சார்ந்த பல தொழில்களுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாகத் தேவைப்படுவதால், அவர்களுடைய பயிற்சிக்கான திட்டங்களைத் துரிதப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. விவசாயம், சிறிய பாசனத் திட்டங்கள், மின்சாரம், தொழில் நுட்பக் கல்வி, இவற்றிற்கு இப்பொழுது அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். ஆனால், அதே சமயத்தில் சிமெண்ட், உருக்கு போன்ற பற்றாக்குறைப் பொருள்களைச் சேமிக்கவும், செலவினங்களைக் குறைக்கவும் வேண்டி, வீட்டு வசதித் திட்டங்கள் போன்ற சில திட்டங்களை ஓரளவு குறைப்பதற்கும் நாம் தயங்கவில்லை. பொதுவாக, கட்டிட வேலைத் திட்டங்களைப் பரிசீலனை செய்து அலுவலகக் கட்டிடங்கள், பணியாளர்களுக்கான வீடுகள் போன்ற வேலைகளை ஒத்திப் போட்டுள்ளோம் அல்லது குறைத்துக் கொண்டிருக்கின்றோம். இம்மாதிரி மிகுதிப்படும் பணத்தையெல்லாம் நாட்டின் தற்காப்பு முயற்சியுடன் இணைந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வகை செய்திருக்கிறோம். இந்த பட்ஜெட்டுடன் சமர்ப்பித்துள்ள 1963-64-ம் ஆண்டின் திட்டம் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு இன்று உரிய முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. திட்ட வேலைகளுக்கு நாம் இன்று கொடுத்துள்ள புதிய திருப்பத்தை சபை ஏற்கும் என நான் நம்புகின்றேன்.

விவசாய உற்பத்தி

6. தற்போதைய சூழ்நிலையில் விவசாயத் துறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி நான் விவரித்துக் கூற வேண்டியதில்லை. நமது தேசிய வருமானத்தில் விவசாய வருமானம் ஏறக்குறைய சரி பாதியாகும். எனவே, தேசிய வருமானம் உயர்ந்து அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரம் வளம் பெறவேண்டுமென்றால், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதன்மூலம்தான் நாம் உணவுப் பற்றாக்குறையைப் போக்கித் தன்னிறைவு பெற முடியும். அன்றியும், வளர்ந்துவரும் நம் தொழில்களுக்கு வேண்டிய பருத்தி போன்ற மூலப் பொருள்களையும் போதிய அளவிற்கு உறுதியாகப் பெறமுடியும். திட்டத்தின்கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேலைகள் ஓரளவு நமக்கு வெற்றி அளித்துள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டத்தின் முதல்

ஆண்டாகிய 1961-62-ல் உணவுத் தானிய உற்பத்தி சுமார் 2.3 லட்சம் டன் அளவிற்கு அதிகரித்தது. இந்தச் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், இத்துடன் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது. மூன்றாவது திட்டக் காலத்தில் நம்முடைய குறிக்கோளான 17 லட்சம் டன் அதிக உற்பத்தி அளவை எய்துவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும். இந்த அளவிற்கு உற்பத்தித் திறன் பெருகுவது பெரும்பாலும் ரசாயன உர வகைகளைப் பயன்படுத்துவதைச் சார்ந்திருக்கும். எனவே, நடப்பு ஆண்டில் ரசாயன உரங்கள் கிட்டும் நிலையில் ஒரு கணிசமான அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதை நான் மகிழ்ச்சியுடன் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1961-62-ல் சுமார் 1.6 லட்சம் டன் அமோனியம் சல்பேட்டிற்குச் சமமான உரம் விவசாயிகளுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில் ஜனவரி வரை 2.03 லட்சம் டன் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வருகிற ஆண்டிலும் உரம் கிட்டுகின்ற வாய்ப்புக்கள் இதேபோன்று தொடர்ந்து நீடிக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உரவகைகள் மேற்கொண்டும் இந்த ஆண்டில் வருமென்றும், நிதி ஆண்டின் முடிவில் நம்மிடம் 90 ஆயிரம் டன் உர வகைகள் இருப்பில் இருக்குமெனவும் இப்போது நாம் எதிர்பார்க்கிறோம். உர வகைகளின் இருப்பு நிலை திருப்திகரமாயிருப்பதால், அவற்றை வழங்குகின்ற முறையில் உள்ள சில வரையறைகளைத் தளர்த்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்தல உரங்கள்

7. கிராமங்களிலும், நகரப்புறங்களிலும் குழிவள உற்பத்தியைப் பெருக்குவதற்காக அமலில் இருக்கும் திட்டங்களைப்பற்றிச் சபைக்குத் தெரியும். நடப்பு ஆண்டில் 31 லட்சம் டன் அளவிற்கு கிராமக் குழிவளம் உற்பத்தியாகுமென எதிர்பார்க்கிறோம். சென்ற ஆண்டில் 28 லட்சம் டன்தான் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை நாம் நினைவு கூறவேண்டும். அடுத்த ஆண்டில், 36 லட்சம் டன் உற்பத்தி செய்யவேண்டுமெனத் திட்டமிட்டிருக்கிறோம். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இத் திட்டத்தில் அக்கறை காட்டுவதால் இந்த லட்சியத்தை அடைவது அசாத்தியமல்ல. பசுந்தாள் உர விதைகள் விநியோகத்தையும், 1963-64-ல் 2,750 டன்னிலிருந்து சுமார் மூவாயிரம் டன்னாக உயர்த்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம். பசுந்தாள் உர விதைகளைச் சேகரித்து விநியோகிக்கும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதற்கான வேண்டிய நிதி வசதியையும் அளித்துள்ளோம்.

பொறுக்கு விதைத் திட்டம்

8. உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கான மற்றொரு முக்கியமான திட்டம் பொறுக்கு விதைகளை வழங்கும் திட்டமாகும். இதற்காக அரசாங்க விதைப் பண்ணைகளை நாம் பரவலாக ஏற்படுத்தியுள்ளோம். நடப்பு ஆண்டில் 40 விதைப் பண்ணைகளையும், அடுத்த ஆண்டில்

[1st March 1963

34 பண்ணைகளையும் ஏற்படுத்த உத்தேசிக்கிறோம். இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ள விதைப் பண்ணைகளும் படிப்படியாக நல்ல முறையில் செயலாற்றத் தொடங்கியிருக்கின்றன. அரசாங்க விதைப் பண்ணைகளில் தயாரிக்கப்பட்ட பிரதம விதைகளைக் கிராமத்தில் இதற்கென நிர்ணயிக்கப்பட்ட கிராம சகாயக் எனப் படும் விவசாயிகள்மூலம் பெருக்கி கிராமத்திலுள்ள மற்ற விவசாயி களுக்கு வழங்குவதுதான் நமது திட்டம். இதைக் கண்காணிக்கும் பொறுப்பு பஞ்சாயத்துக்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமென்றால், வித்துக் களைச் சேகரித்துக் கொடுப்பது போன்ற பிரச்னைகளுக்குக் கூட்டு றவு அடிப்படையில் தீர்வுகாணவேண்டிய அவசியத்தைப்பற்றி சென்ற ஆண்டு நான் சமர்ப்பித்த பட்ஜெட் உரையில் குறிப்பிட் டிருந்தேன். இந்தப் பிரச்சினைகளை ஒருவாறு சமாளிப்பதற்காக சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அறுவடைக்குப்பின், காலந் தாழ்த்தாது பொறுக்கு விதைகளைக் கிராம சகாயக்குகளிட மிருந்து மற்ற விவசாயிகள் வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் உதவி அளிக்கும் ஒரு திட்டம் அமுலாக்கப்பட்டிருக் கிறது. குடியானவர்கள் பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து இத் திட்டத்தின் நன்மைகளைப் பெறுவதற்காக அரசாங்கம் பங்கு மூலதனம் நிமித்தமாக அவர் களுக்குக் கடன் உதவி அளிக்கும் ஒரு ஏற்பாட்டையும் செய்திருக் கின்றது.

பருத்தி

9. பருத்தி, எண்ணெய் வித்துக்கள் போன்ற வர்த்தகப் பயிர்களை அதிகமாய் உற்பத்தி செய்வதிலும் நாம் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். இந்தக் கருத்திற்கேற்ப பருத்தி உற்பத் தியை அதிகரிப்பதற்காக அரசாங்கம் "பாக்கேஜ் திட்டம்" ஒன்றை அண்மையில் அனுமதித்துள்ளது. கோயம்புத்தூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் 30 ஆயிரம் எக்கர் மழைக்கால கம் போடியா பருத்தியும், 30 ஆயிரம் ஏக்கர் கோடைக்கால கம்போ டியா பருத்தியும் பயிராகும் நிலப்பரப்பில் இத் திட்டம் அமுலாக் கப்படும். 12½ லட்சம் ரூபாய் செலவாகும். இத் திட்டத்தின் கீழ் உரவகைகளுக்கான குறுகியகாலக் கடன்கள் வழங்குவதற் கும், பூச்சி மருந்துகளுக்கு 50 சத விகிதம் மானியம் வழங்குவதற் கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எண்ணெய் வித்துக்கள்

10. நமது எண்ணெய் வித்துக்களில் மிகவும் முக்கியமான வேர்க்கடலைப் பயிரின் உற்பத்தி அளவை உயர்த்துவதற்கும் நட வடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். தென் ஆற்காடு மாவட் டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலைப் பயிருக் கான பாக்கேஜ் திட்டம் அமலில் இருப்பது கனம் அங்கத்தினர் களுக்குத் தெரியும். இந்தப் பாக்கேஜ் திட்டத்தை மேலும் விரிவு படுத்தி அதன்கீழ் கூடுதலாக 80,000 எக்கர் நிலங்களைக் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்றிற்கு நாம் இப்போது அனுமதி அளித்

1st March 1963]

திருக்கிறோம். மூன்றாண்டுக் காலம் நீடிக்கும் இத் திட்டத்திற்கு 27 லட்சம் ரூபாய் செலவாகும். வருகின்ற ஆண்டில் இத் திட்டம் மதுரை மாவட்டத்தில் கம்பம், உத்தமபாளையம், போடி வட்டா ரங்களில் 20,000 ஏக்கர் நிலப்பரப்பிலும், கோயம்புத்தூர் மாவட் டத்தில் பொள்ளாச்சி தாலூகா, கோயம்புத்தூர் தாலூகா பகுதி களில் 20,000 எக்கர் நிலப்பரப்பிலும் செயல்படும். 1964-65-ல் தென் ஆற்காடு மாவட்டத்தில் கண்டமங்கலம், விக்கிரவாண்டி, கோலியனூர் வட்டாரங்களில் 20,000 ஏக்கர்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் திட்டப் பகுதியில் 20,000 ஏக்கர்களி லும் அமலாக்கப்படும். இத் திட்டத்தின்கீழ், பொறுக்கு விதை கள், சீரான கலப்பு உரங்கள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் முதலியன வழங்கப்படும். பூச்சிகளைக் கொல்லுவதற்கான மருந் துகள் பாதி விலையில் வினியோகிக்கப்படும்.

11. இங்ஙனம் அரசாங்கம் தேவையான வசதிகளையெல்லாம் செய்துதர முடியும். ஆனால், உற்பத்தியைப் பெருக்குவது என் பது நமது கிராமப் புறங்களிலுள்ள பல இலட்சக்கணக்கான விவ சாயிகள் காட்டும் உற்சாகத்தையும் ஆற்றலையுமே பெரிதும் பொறுத்திருக்கும் என்பதை கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள் வார்கள். நாட்டின் தற்போதைய அவசரகால நிலையில் நம் மக்களின் ஒற்றுமையுணர்ச்சி, மன உறுதி இவற்றைக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். மக்களின் பொங்கியெழும் இந்த உற்சாகத் தையும், உறுதியையும் விவசாய உற்பத்தியைப் பெருக்குகின்ற நட வடிக்கைகளில் திருப்பி விடுவது நம்முடைய கடமையாகும்.

பஞ்சாயத்து ஆட்சி முறை

12. இவ்வாறு, நம் குடியானவர்களைத் தூண்டி அவர்களுடைய திறன், வசதிகள் முழுவதையும் பயன்படுத்தி, விவசாய உற்பத்தி யைப் பெருக்குவதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத் துக்களுக்கும் முக்கிய பங்கு இருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்த ஜனநாயக ஸ்தாபனங்கள் பொதுப் பணி களில் பெரும் அக்கறை காட்டி, அவைகளிடம் ஒப்புவிக்கப்பட் டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை உற்சாகத்துடன் நிறைவேற்றி வருகின்றன. குறிப்பாக, அரசாங்கம் பெருமளவில் தரும் மானி யங்களைக் கொண்டும், பொதுமக்களிடமிருந்து பெறும் நன் கொடைகளைக் கொண்டும் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்களில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந் நற்பணிகள் மேலும் செயல்படுவதற்காக அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் கிராமக் குடி தண்ணீர்த் திட்டங் களுக்கென 1 கோடியே 40 லட்சம் ரூபாயும், இணைப்புச் சாலைகள் அமைப்புக்கென 1 கோடியே 29 லட்சம் ரூபாயும், பள்ளிக் கட்டிடங்களுக்கென 30 லட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளோம்.

13. நாட்டை எதிர்நோக்கியுள்ள இன்றைய நிலையில், பஞ்சா யத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் இதே அளவு அக்கறை காட்ட வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 1963-64-ல் விவசாய வெலைத்

திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு 60 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கியுள்ளோம். எல்லாக் கிராமங்களிலும் இப்பொழுது கிராமத் தொண்டர் படை எழுப்பப்பட்டு வருகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்கும் பணியில் இத்தொண்டர் படை முழு மூச்சுடன் இறங்க வேண்டும். இது தான் கிராம மக்கள் நாட்டின் தற்காப்பு முயற்சிக்குச் செய்யக்கூடிய பெரும் சேவையாகும்.

சிறு பாசனத் திட்டங்கள்

14. விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கான பற்பல திட்டங்களில் குறுகிய காலத்தில் பலன்கள் தரும் திட்டங்களில்தான் இப்பொழுது சிறப்பாகக் கவனம் செலுத்துகிறோம். சிறிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசாங்கம் தொடர்ந்து காட்டிவரும் அக்கறை இச் சபைக்கு நன்கு தெரியும். சிறிய பாசனத் திட்டங்களுக்கென மூன்றாம் திட்டக் காலத்தில் நாம் ஒதுக்கியுள்ள 12 கோடியே 80 லட்ச ரூபாயில், 1961-62-ல் நாம் 2 கோடியே 98 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளோம். நடப்பு ஆண்டில் முதலில் 3 கோடியே 12 லட்சமும், அடுத்த ஆண்டில் 3 கோடியே 65 லட்சமும் ஒதுக்கியிருக்கிறோம். குறிப்பாக, இந்த பட்ஜெட்டில் புதிய கிணறுகள் தோண்டும் உதவித் திட்டங்களுக்கு 97 லட்சம் ரூபாய் கடன்களாகவும் 16 லட்சம் ரூபாய் மானியமாகவும் கொடுக்க வகை செய்துள்ளோம். பம்பு செட்டுகள் வாங்குவதற்காக வழங்கும் கடன்களுக்கென 1962-63-ல் 17.4 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருந்தோம். 1963-64-ல் இதை 22.16 லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இத் திட்டத்தின்கீழ் 245 எண்ணெய் என்ஜின்களும், 1,800 மின்சார மோட்டார்களும் வழங்கப்படும். சிறிய பாசன ஆதாரங்களை அபிவிருத்தி செய்ய இவ்வாறு பெரும் அளவில் செலவு செய்யும் நேரத்தில், ஏற்கனவே இருக்கும் சிறு பாசன ஆதாரங்களைச் சரியாகப் பராமரிப்பதிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும். இச் சிறிய பாசன ஆதாரங்களில் பெரும்பாலானவை இப்போது பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த ஆதாரங்களைச் சரிவரப் பராமரிப்பதில் தங்களுக்குள்ள பொறுப்புக்களை அவர்கள் உணர்ந்து நடவடிக்கைகள் எடுப்பார்கள் என நான் நம்புகிறேன். சிறிய பாசன ஆதாரங்களைப் பராமரிப்பதற்கென 27 லட்சம் ரூபாய் ஸ்தல பாசன மானியமாக ஒதுக்கியிருக்கிறோம்.

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

15. நமது பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களும் திருப்திகரமாக முன்னேறி வருகின்றன. நமது மாநிலத்தில் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களில் மிகவும் பெரியது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமாகும். இத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2.4 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படும். ஆளியாறு அணைக்கட்டு வேலை பூர்த்தியாகி, நடப்பு ஆண்டில் சுமார் 7,500 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் விடப்பட்

டது. 1963-64-ல் இத் திட்டத்திற்கென 4 கோடியே 62 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். தவிர, பாலாறு அணைக்கட்டு, கால்வாய்கள் இவற்றின் சீரமைப்பிற்காக 17.65 லட்சம் ரூபாயும், சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலைக்காக 8.45 லட்சம் ரூபாயும் இந்த பட்ஜெட் மதிப்பீடுகளில் ஒதுக்கியுள்ளோம். மற்ற நடுத்தரப் பாசனத் திட்டங்களில், மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு திட்டமும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கோமுகி நதித் திட்டமும் முறையே, 66 லட்சம் ரூபாய் செலவிலும், 87 லட்சம் ரூபாய் செலவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த நடுத்தரத் திட்டங்களுக்காக 5 லட்சம் ரூபாய் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விரைவினைப் பொறுத்து, மேலும் நிதி வசதிகளைச் செய்து கொடுப்போம்.

கால்நடை வளர்ச்சித் திட்டங்கள்

16. உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கான நமது பன்முனை முயற்சியில், பால் போன்ற உப உணவுப் பொருள்களின் உற்பத்தியையும் கவனிக்க வேண்டும். இக் கருத்தின் அடிப்படையில் நமது கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பற்பல வேலைகளுக்காக, 1963-64-க்கான திட்டத்தில் 55.56 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நமது கேந்திரக் கிராமத் திட்டங்கள் திருப்திகரமாய் முன்னேறி வருகின்றன. இத் திட்டங்களைத் தொடர்ந்து செயலாற்றவும் மேற்கொண்டு விரிவு படுத்தவும் போதிய அளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம். 1963-64-ல் நான்கு புதிய கேந்திரக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்த உத்தேசித்து, இத் திட்டத்திற்கென பட்ஜெட்டில் மொத்தம் 10½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கால்நடைகளின் வைத்திய உதவிக்கான வசதிகளைப் பரவலாகச் செய்யும் நமது நீண்டகால திட்டத்தின் ஓர் அம்சமாக, 1963-64-ல் 30 கால்நடை வைத்திய மருந்துச்சாலைகளைத் துவக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு மருந்து நிலையம் ஏற்படுத்துவது என்பதுதான் நமது குறிக்கோளாகும். பொது மக்களுக்கும், ராணுவப்படைகளுக்கும் பெருமளவிறகு முட்டைகள் தேவைப்படும். எனவே, இதன் உற்பத்தியைப் பெருக்குவது அவசியம். உயர்ந்த இனக் கோழிகளையும் மற்றும் கருவிகளையும் வழங்கும் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவதோடு அதிகப் பணமும் ஒதுக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டில் கோழி வளர்ப்பு நிலையங்கள் நான்கினை ஏற்படுத்த உத்தேசிக்கிறோம். மொத்தத்தில் கோழி அபிவிருத்தி சம்பந்தமான பற்பலத் திட்டங்களுக்காக சுமார் எட்டரை லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் திட்டங்கள்

17. சென்னை நகரத்தின் பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான விரிவான திட்டத்தில் நமக்கு ஓரளவு வெற்றி கிட்டியுள்ளது. சென்னை நகர எல்லையில் மாதவரத்தில் கால்நடைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்தப் பண்ணையில் இப்போது

மூவாயிரம் மாடுகளுக்குமேல் உள்ளன. இந்தப் பண்ணையில் உற்பத்தியாகும் பால் மட்டுமன்றி, அண்டைக் கிராமங்களிலிருந்தும் பால் சேகரிக்கப்படுகிறது. தவிர, ஈரோடு பகுதிகளிலிருந்தும் பால் தருவிக்கத் தொடங்கியுள்ளோம். இப் பகுதிகளிலிருந்து தருவிக்கும் பாலின் அளவு தினசரி 25 ஆயிரம் லிட்டர் அளவிற்கு உயரும். இப் பண்ணையிலுள்ள மத்திய நிலையம் இப்போது அன்றாடம் 25 ஆயிரம் லிட்டர் பாலை சென்னை நகரத்தில் வழங்குவதற்காகப் பதன்படுத்தி வருகிறது. இந்த நிலையம் நாளாவட்டத்தில் 75 ஆயிரம் லிட்டர் அளவிற்குப் பாலைப் பதனபடுத்தும். இங்ஙனம் தொலைவிலுள்ள நகரங்களில் பால், பால் பொருள்கள் முதலியவை நல்ல விலைக்கு உறுதியாக விற்கும் என்கிற நிலையை ஏற்படுத்துவதன் மூலம்தான் நாம் கிராமப் பகுதிகளில் பால் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்க முடியும். பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கறவை மாடுகளை வாங்குவதற்காக மொத்தம் சுமார் 37 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மதுரை மாநகரிலும் 78 லட்சம் ரூபாய்ச் செலவில் பால் வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த இருக்கிறோம். இந்தத் திட்டத்திற்கு UNICEF ஸ்தாபனத்தார் 31 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இயந்திர தளவாடங்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் குறைந்த வருமானமுள்ள சுமார் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மலிவான விலைக்குப் பால் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதையொட்டி பூர்வாங்க வேலைகளைத் துரிதப் படுத்துவதற்காக அரசாங்கம் சமீபத்தில் விசேஷப் பொறியியல் பணியாளர்களை நியமித்திருக்கிறது.

மீன் வளம்

18. மீன்வள அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் அதிகத் தொகை ஒதுக்கியிருக்கிறோம். 1963-64-ம் ஆண்டிற்குரிய திட்டத்தில் மீன்வள வளர்ச்சித் திட்டங்களுக்காக 58.58 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. மீன் பிடிப்புத் தொழிலை நவீன விஞ்ஞான முறையில் சீரமைக்கும் நீண்டகாலத் திட்டத்தை ஒட்டி மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளை வழங்கி வருகிறோம். வரும் ஆண்டில், 100 படகுகள் வழங்குவதற்காக சுமார் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ராயபுரத்தில் படகு கட்டும் தொழிற்சாலை விரைவில் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்ப்பதால், குறிப்பிட்ட அளவிற்குப் படகுகள் வழங்குவது சாத்தியமாகுமென நினைக்கிறோம். தவிர மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள நைலான் வலையும் மீனவர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ளோம். இக் கயிறு உற்பத்தி இப்பொழுது நம் நாட்டிலேயே துவங்கியிருப்பதால், இத்திட்டத்தை நிறை வேற்றுவதில் அந்நியச் செலாவணி இனித் தடையாக இராது. மீன் பிடிப்பதற்கான விசைப் படகுகளை உற்பத்தி செய்வதோடு இந்தப் படகுகளைத் தனியாக நங்கூரம் போட்டு நிறுத்தி வைப்பதற்கான வசதிகளையும் நாம் அமைத்துத் தர வேண்டும். இந் நோக்கத்தோடுதான் மீன்

பிடித் துறைமுகங்கள் கட்டும் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொண்டிருக்கிறோம். கடலூர் மீன் பிடித் துறைமுக வேலை இப்போது பெரும்பாலும் முடிவுபெற்று விட்டது. நாகப்பட்டினம் மீன் பிடித் துறைமுகம் சம்பந்தமான வேலை அடுத்த நிதி ஆண்டில் பூர்த்தியாகிவிடும். நமது நாட்டில் மீன்வள அபிவிருத்திக்காக நார்வே நாட்டினர் உதவி வருகின்ற திட்டம் நம் மாநிலத்திற்கும் விஸ்தரிக்கப்படும் என்பதை அறிய இச் சபை மகிழ்ச்சியடையும் என்று நம்புகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் படகு கட்டும் துறை ஒன்றை நிறுவுவதற்கான உதவியை நாம் பெறலாம் என நினைக்கிறோம். மேலும், மரைன் டீசல் எஞ்சின்களும், உபகரணங்களும், குளிர்ப் பதன இயந்திரங்களும் நமக்குக் கிட்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்.

கூட்டுறவு

19. கிராம அளவில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நமது பல்வேறு திட்டங்களுக்கும் அடிப்படைத் தேவை கடன் வசதியாகும். கிராம மக்களுக்கு உரிய காலத்தில் நியாய வட்டிக்குக் கடன் வசதி கிடைக்கும்படி நாம் ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு தக்காவிக் கடன்கள் கொடுப்பதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இது தவிர, உர வகைகள் வாங்குவதற்காக குறுகிய காலக் கடன்கள் கொடுப்பதற்காகவும் அறுபது லட்சம் ரூபாய் வகை செய்துள்ளோம் இருப்பினும், கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் வசதிகளைப் பெருக்கிக் கொடுப்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும். 1963-64-ம் ஆண்டு இறுதிக்குள் கிராம மக்களில் 80 சத வீதத்தினர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகி விடுவார்கள் என எதிர்பார்க்கிறோம். இந்தச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்குப் பற்பல வகைகளில் தரப்படும் கடன் அளவு நடப்பு ஆண்டில் 34 கோடி ரூபாயாக இருப்பது, அடுத்த ஆண்டில் 40 கோடி ரூபாயாக உயரும். இப்பொழுது 103 அபிவிருத்தி வட்டாரங்களில் மாத்திரம் அமுலில் இருக்கும் முழுப் பண உதவித் திட்டம் மேலும் 70 வட்டாரங்களுக்கு வருகிற ஆண்டில் விஸ்தரிக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நிலத்தை ஈடு காட்டக்கூடிய நிலமுள்ள விவசாயிகளுக்கு மாத்திரமல்லாமல், விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லோருக்குமே படிப்படியாகக் கடன் வசதி கிட்டும்படியாக நாம் செய்யவேண்டும். அங்ஙனம் பரவலாகக் கடன் வழங்குவதில் இருக்கின்ற நஷ்ட வாய்ப்புக்களை எதிர்நோக்கிக் கூட்டுறவுப் பிரதம சங்கங்களுக்கும் மத்திய பாங்குகளுக்கும் உத்தரவாதம் அளிக்கின்ற வகையில் அவைகளின் வசூலாகாக் கடன் விசேஷ க்ஷேம நிதிக்கு 22 லட்சம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுப்பதற்கு சபைமுன் உள்ள பட்ஜெட்டில் நிதி ஒதுக்கியிருக்கிறோம்.

பயன்படுத்துவோர் கூட்டுறவு சங்கங்கள்

20. தற்போதைய சூழ்நிலையில் இன்றியமையாத பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவக்கூடும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. எனவே, ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு மேற்பட்ட எல்லா நகரங்களிலும் பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களை விரிவாக ஏற்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் துவங்கியிருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்டச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்வதன்மூலம் பண்டங்களை நியாயமான விலைக்கு வாங்கி வினியோகம் செய்ய முடியும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் அரசாங்கப் பங்கு மூலதனம், தொழில் மூலதனம் இவற்றின் நிமித்தமாக உதவித் தொகை கொடுப்பதுடன், சங்கங்களின் நிர்வாகச் செலவுகளுக்காகவும் மானியம் வழங்கி இருக்கிறது. இத் திட்டத்திற்காகும் செலவின் பெரும் பகுதியை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும், மலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் 150 பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு திட்டத்துக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

தொழில் வளர்ச்சி—தனியார் துறை

21. தொழில் துறையில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதில் அரசாங்கம் தனியார் துறைக்கு உதவி புரியும் நடைமுறை சாத்தியமான கொள்கையைப் பின்பற்றி வருகிறது. தனியார் துறைக்கு இத்தகைய உதவியை, சென்னைத் தொழில் முதலீடு கார்ப்பொரேஷன் மூலம் கொடுத்து வருகிறோம். நீண்டகாலக் கடன்கள் மூலமும் பங்கு மூலதன வெளியீடுகளுக்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலமும் நம் மாநிலத்தில் புதிய தொழில்களை நிறுவுவதில் இந்தக் கார்ப்பொரேஷன் உதவி வருகிறது. 1962-ம் ஆண்டில் பலவித தொழில்களுக்குமாக 3 கோடியே 16 லட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளது. தனியார் துறையிலுள்ள பல தொழிலதிபர்களும் தங்களுக்கு அளிக்கப்பட்ட லைசென்சுகளின் அடிப்படையில் புதிய தொழில்களை உருவாக்குவதில் ஊக்கம் காட்டி வந்துள்ளனர். சேலம் மாவட்டத்தில் கலவை உருக்குத் தொழிற்சாலை (Alloy Steel Plant) ஒன்று தனியார் துறையில் விரைவில் உற்பத்தி தொடங்குமென எதிர்பார்க்கிறோம். சர்க்கரை ஆலைக்கு வேண்டிய இயந்திரங்களைத் தயாரிப்பதற்காக இரண்டு தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. ரசாயனத் தொழில் துறையில் சோடாக் காரம், மற்ற ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தாரங்கதாரா ஸ்தாபனத்தாரும், மேட்டூர் கெமிக்கல்ஸ் ஸ்தாபனத்தாரும் தங்கள் உற்பத்தி அளவைப் பெருக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றார்கள். உரத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், எண்ணூரிலுள்ள தொழிற்சாலை 1962 ஆகஸ்டில் சூப்பர்பாஸ்பேட் உற்பத்தி செய்யத்

தொடங்கிற்று. கடலூரில் அமைந்துள்ள மற்றொரு தொழிற்சாலை விரைவில் உற்பத்தி செய்யத் தொடங்கும், கோவையிலுள்ள மூன்றாவது தொழிற்சாலை ஜூலை மாதத்தில் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றைத் தவிர, பாரி ஸ்தாபனத்தாரின் தொழிற்சாலையிலும் அம்மோனியம் பாஸ்பேட் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

22. சமீப ஆண்டுகளில் மாநில அரசாங்கம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை அமைப்பதில் பெருமளவு உதவி அளித்து வந்துள்ளது. இவற்றுள் அரசாங்கத்தின் உதவி பெற்றுள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகஸ்ட் மாதத்திற்குள் பூர்த்தியாகி உற்பத்தியைத் தொடங்கும் என நம்புகிறோம். கள்ளக்குறிச்சியிலும், சமயநல்லூரிலும் அமையவிருக்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் பங்கு மூலதன வகையில் நாம் உதவி அளித்திருக்கிறோம். வருகிற ஆண்டு மற்ற சர்க்கரை ஆலைகளில் பங்கு கொள்வதற்கென 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம். தனியார் துறையில் உருவாகி வரும் மற்ற பெரிய தொழிற்சாலைகளில், சேஷசாயி ஸ்தாபனத்தாரின் காகிதத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கி விட்டது. சேலம் ஜில்லாவில் சங்கரிதுருகத்தில் நிறுவப்பட்டுவரும் சிமெண்டு தொழிற்சாலையும் வருகிற ஆண்டில் செயல்பட ஆரம்பிக்கும். கரூருக்கருகில் மற்றொரு சிமெண்டு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கும் அனுமதி வழங்கியிருக்கிறோம். கோவை மாவட்டத்திலுள்ள தென்னிந்திய விஸ்கோஸ் ஸ்தாபனத்தாரின் ரயான் தொழிற்சாலை முழு அளவில் உற்பத்தி செய்து வருகிறது. மேலும் அதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொண்டுள்ளது.

தொழில் வளர்ச்சி—பொதுத் துறை

23. பொதுத் துறையில் உள்ள பற்பல பெரிய தொழில் திட்டங்களும் நடப்பு ஆண்டில் கணிசமாக முன்னேறி இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டமாகும். தென் ஆற்காடு ஜில்லாவில் விரிவாகக் காணப்படும் பழுப்பு நிலக்கரிப் படிவங்களை வெட்டியெடுத்துப் பன்முறையிலும் பயன்படுத்துவது இத் திட்டத்தின் குறிக்கோளாகும். பழுப்பு நிலக்கரியை மற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துவதோடு, குறிப்பாக 250 மெகவாட் அளவிற்கு அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்துவார்கள். மின்சார உற்பத்தி இரண்டாவது கட்டத்தில் 400 மெகவாட் அளவிற்கு உயரும். ரஷியர்களின் உதவியுடன் உருவாகிவரும் இந்த அனல் மின்சார நிலையத்தின் முதல் யூனிட் கடந்த ஆகஸ்ட் மாதம் செயல்படத் தொடங்கி டிசம்பர் மாதம் முடிய 1 கோடியே 42 லட்சம் யூனிட் அளவிற்குக் கூடுதல் மின்சாரத்தை நம் மாநில மின் இணைப்பிற்கு வழங்கியுள்ளது. இதன் இரண்டாவது யூனிட் ஜனவரி மாதம் 23-ம் தேதி மின்சார உற்பத்தியைத் தொடங்கியது. மூன்றாவது, நான்காவது யூனிட்டுகளை அமைக்கும் வேலையும் விரைவாக முன்னேறி

வருகிறது. இத்தாலிய நாட்டினரின் உதவியுடன் நிறுவப்பட்டு வரும் உரத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், சிவில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத் தொழிற்சாலையின் முக்கியமான இயந்திரங்களை நிறுவும் வேலை ஏப்ரல் மாதத்தில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுட்ட அச்சுக்கரி உற்பத்தித் தொழிற்சாலையோடு இணைந்த சிவில் வேலைகளும் பற்பல நிலைகளில் நடந்தேறி வருகின்றன.

24. நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும், சேலம் இரும்புக் கனியையும் பயன்படுத்தி உருக்காலை ஒன்றை நம் மாநிலத்தில் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வந்திருக்கிறோம். இது சம்பந்தமாக ஜெர்மனியிலும் நார்வேயிலும் நடத்திய விரிவான சோதனைகள் இத் திட்டம் சாத்தியமானது என்கிற நம்பிக்கையை ஊட்டியிருக்கின்றன. இச் சோதனைகளின் அடிப்படையில் 5 லட்சம் டன் உருக்கு ஆலை ஒன்றை நிறுவுவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் முயற்சியை இந்திய அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பு தஸ்தூர் அண்டு கம்பெனி என்ற ஸ்தாபனத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை இவ்வாண்டின் பிற்பகுதியில் இந்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் என நம்புகிறோம். இந்தப் பணியை நிறைவேற்றுவதில் இந்த ஸ்தாபனத்திற்கு மாநில அரசாங்கம் எல்லா உதவியையும் கொடுத்து வருகிறது.

25. மத்திய அரசாங்கம் நமது மாநிலத்தில் துவங்கியுள்ள மற்ற கனரகத் தொழில்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். கிண்டியில் இத்தாலிய நாட்டினரின் உதவியுடன் உருவாக்கியுள்ள டெலி பிரிண்டர் தொழிற்சாலை, டெலி பிரிண்டர் இயந்திர பாகங்களை இணைப்பதில் இப்போது ஈடுபட்டுள்ளது. இந்த இயந்திர பாகங்களில் சுமார் பாதி அளவிற்கு இப்போது இங்கேயே தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அதிக அளவிற்கு இங்கேயே உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளும் தொடர்ந்து நடைபெறும்.

26. நீலகிரியில் பிரெஞ்சு உதவியுடன் உருவாகி வரும் கச்சா படச் சுருள் தொழிற்சாலை அமைப்பிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இத் திட்டத்திற்கான முதலீடு சுமார் 7½ கோடி ரூபாய். அதில் 3½ கோடிக்குமேல் இயந்திரங்களின் மதிப்பாகும். இத் திட்டத்திற்கான சிவில் வேலைகள் நடந்து வருகின்றன. இயந்திரங்களைப் பொறுத்த வரையில், 1 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாதனங்களை பிரான்சிலிருந்து கப்பலேற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

27. மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள மற்றொரு தொழில் திட்டம் திருச்சிக்கு அருகில் அமையவிருக்கும் கனரகக் கொதிகலன் தொழிற்சாலையாகும். இத் தொழிற்சாலையின் தேவைக்காக 1,750 ஏக்கர் பட்டா நிலங்களையும், 2,400 ஏக்கர் புறம்போக்கு

நிலங்களையும் ஆர்ஜிதம் செய்து கொடுத்திருக்கிறோம். தொழிற்சாலை கட்டுவதற்கான டெண்டர்கள் அநேகமாய் முடிவு செய்யப்பட்டுவிட்டன. இயந்திரங்களும் சில மாதங்களில் செக்கோஸ்லவேக்கியாவிலிருந்து வரும் என எதிர்பார்க்கிறோம்.

28. ஆவடிக்கருகில் பாதுகாப்புச் சாதனத் தொழிற்சாலைத் திட்டம் உருவாவதற்கு மாநில அரசாங்கம் எல்லா உதவியையும் அளித்து வருகிறது என்பதை அறிய இச் சபையினர் மகிழ்ச்சி அடைவர். நாளடைவில் இந்தத் திட்டத்திற்கு தினந்தோறும் சுமார் 30 லட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும். சென்னையின் சுற்றுப்புறங்களில் தோன்றியுள்ள மற்ற தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவைகளும் வளர்ந்து கொண்டே போகின்றன. ஆகவே, சென்னை நகர மக்களுக்குத் தேவைப்படும் தண்ணீர் அளவுக்குக் குந்தகமில்லாமல், இந்தத் தொழிற்சாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சோழவரம் ஏரி, புழலேரி இவற்றின்கீழ் 7,500 ஏக்கர் நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்வதன்மூலம் மிகுதிப்படும் தண்ணீரை ஆவடி பாதுகாப்புச் சாதனத் தொழில் திட்டத்திற்கும் மற்றும் பல தொழில் திட்டங்களுக்கும் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நில ஆர்ஜிதத் திட்டத்திற்காக சபைமுன் உள்ள பட்ஜெட்டில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. ஆவடி பாதுகாப்புச் சாதனத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொண்டு செல்வதற்கான திட்டத்திற்காக மேலும் 58 லட்சம் ரூபாயும் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை நகருக்கருகில் எண்ணூரில் மரைன் டீசல் எஞ்சின்களைத் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவவும் மத்திய அரசாங்கம் முன் வந்திருக்கிறது. இத் திட்டத்திற்காக மாநில அரசாங்கம் 70 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்துள்ளது. தவிர, மாநில அரசாங்கத்திற்கும் தென்பிராந்திய ரயில்வேக்கும் சொந்தமான 110 ஏக்கர் நிலங்களையும் இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

மின்சார அபிவிருத்தி

29. தற்காப்புத் தேவைகளையொட்டி இன்றைய நிலையில் நாம் தொழில் துறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால், அது பெரும்பாலும் மின்சார வசதியைப் பொறுத்திருக்கும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் 291 கோடி ரூபாய் முதலீட்டில் 100 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாகவே மின்சார அபிவிருத்திக்கென ஒதுக்கியுள்ளோம். கடந்த இரு திட்டங்களிலுமாக நமது மின்சார இணைப்பின் உற்பத்தித் திறன் பெருமளவிற்கு உயர்ந்திருந்த போதிலும், மின்சாரத் தேவையானது அதையும் மிஞ்சி விட்டது. ஆகவே மின்சாரத் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்துள்ளோம். 1962-63-ல் மின்சார அபிவிருத்திக்காக 18½ கோடி ரூபாய் முதலில் ஒதுக்கியிருந்தோம். அது இப்பொழுது 19 கோடியே 34 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. வருகின்ற ஆண்டில் இதை மேலும்

[1st March 1963

உயர்த்தி மின்சார உற்பத்தித் திட்டங்களுக்காக 20 கோடியே 75 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். 240 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள குந்தா இறுதி நிலைத் திட்டத்திற்கான சிவில் வேலைகள் நிர்ணயித்துள்ளபடி நடந்து வருகின்றன. 1964-65-ல் இத் திட்டம் செயல்படத் தொடங்கும். மேட்டூர் டன்னல் திட்டம் முதல் நிலை சம்பந்தமான கட்டிட வேலைகள் பெரும்பாலும் பூர்த்தியடைகின்றன. 100 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள இந்தத் திட்டம் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக விடப்படுகிற தண்ணீரை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துகிற வகையில் அமைந்திருக்கிறது. இத் திட்டத்திற்கு வேண்டிய இயந்திரங்களும் சாதனங்களும் ரஷ்யாவிலிருந்து வரத் தொடங்கிவிட்டன. 1964-ல் மின்சார உற்பத்தி துவங்குமென எதிர்பார்க்கிறோம். மேட்டூர் டன்னல் திட்டத்தின் இரண்டாம் நிலை வேலைகளுக்கும் திட்டக் கமிஷன் சமீபத்தில் அனுமதி அளித்துவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் 100 மெகவாட் மின்சாரத் திறன் நமது மின் இணைப்பிற்குக் கிட்டும். இப் புதிய திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்களையும் சாதனங்களையும் ரஷ்யாவிலிருந்து தருவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சார வேலைத் திட்டங்களும் வேகமாக நடைபெற்று வருகின்றன. சர்க்கார்பதி, சோலையாறு மின்சார நிலையங்களுக்கு வேண்டிய மின் உற்பத்தி இயந்திரங்களைத் தருவிக்க ஏற்கெனவே உத்தரவுகள் இடப்பட்டிருக்கின்றன. நம் மாநிலத்தில் மின்சார உபயோகம் முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் தலைக்கு 12 யூனிட் அளவாக மாத்திரம் இருந்தது. அது இப்பொழுது 70 யூனிட் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. கிராம மின்சார வசதித் துறையிலும் நாம் முன்போலவே முன்னணியில் நிற்கிறோம். 1963-64-ல் கிராம மின்சார வசதித் திட்டத்திற்கென்று 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரை 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நகரங்கள், கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம். ஒரு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறோம்.

30. நான் முன்பு கூறியது போலவே, அண்மையில் நெய்வேலியில் துவங்கிய இரண்டு அனல் மின்சார யூனிட்டுகள் உட்பட நமது மின்சார உற்பத்தித் திறன் அதிகரித்திருந்தபோதிலும், மின்சாரத் தேவை மேலும் அதிகமாக உயர்ந்திருக்கின்றது. குறிப்பாக, இனி வரும் மாதங்களில் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் மட்ட நிலை அவ்வளவு திருப்திகரமாக இல்லாததால், மின்சாரப் பற்றாக்குறை நிலையை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டி வரும். மேட்டூர் டன்னல் திட்டம் சம்பந்தமான வேலையை நாம் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதால், மேட்டூர் அணையில் நீர் மட்ட அளவினைக் குறைத்திருக்கிறோம். வருங் கோடைக் காலத்தில் மேட்டூர் மின்சார நிலையம் செயல்படுவது தடைப்படலாம். ஆகவே, கிடைக்கும் மின்சாரத்தை பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த தொழில்

1st March 1963]

களுக்காகச் சேமிக்கும் பொருட்டு, அவசியமில்லாத காரியங்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்துள்ளது.

31. நம் மாநிலத்தில் புதிய மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை அரசாங்கம் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடையாறு நீர் மின்சாரத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு திட்டக் கமிஷனின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் 75 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இத் திட்டத்திற்கு 7 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. மூன்றாவது திட்டக் காலத்திலேயே இந்த வேலைத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி செய்யும். இப்பொழுது பரிசீலனையில் உள்ள மற்றொரு பெரிய நீர் மின்சாரத் திட்டம் காவிரியாற்றில் அமையும் ஹொகனேக்கல் திட்டமாகும். ஐம்பத்தி எட்டு கோடி ரூபாய் செலவாகும் இத் திட்டம் 800 மெகவாட் உற்பத்தித் திறன் உடையது. மைசூர் அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றே இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து நிறைவேற்றவேண்டியிருக்கிறது. மைசூர் அரசாங்கத்தின் ஒப்புதல் விரைவில் கிட்டுமென நம்புகிறோம். நம் மாநிலத்தில் அவ்வப்போது மின்சாரத் தட்டு ஏற்படுவதாலும், இப்பொழுது நம் மின் இணைப்பு நீர் மின்சாரத் திட்டங்களையே சார்ந்திருக்கும் நிலையைச் சீர்படுத்தவும் நமது அரசாங்கம் தமிழ்நாட்டில் அணு மின்சார நிலையம் ஒன்றை நிறுவும்படி இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வந்திருக்கிறது. இதன் காரணமாக, நமது நாட்டின் மூன்றாவது அணு மின்சார நிலையம் தமிழ்நாட்டில் மகாபலிபுரத்திற்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் அமைக்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

தொழிற் கல்வி

32. பொதுமக்களின் தேவைகளையும் தற்காப்புத் தேவைகளையும் நமது பற்பல தொழில்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், அதற்குத் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாகத் தேவைப்படுவர். நாட்டின் தற்போதைய அவசர கால நிலையினால் நமது தொழிற் கல்வித் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தொழிற் கல்விக்கான வசதிகளைப் பெருக்குவதில் நம் மாநிலத்தில் ஏற்கனவே நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். முதல் திட்டக் காலத் துவக்கத்தில் நம் மாநிலப் பொறியியல் கல்லூரிகளில் ஆண்டுதோறும் சேர்த்துக்கொண்ட மாணவர்களின் தொகை 437-ஆக இருந்தது. இது இப்போது 1,157-ஆக உயர்ந்துள்ளது. பாதுகாப்புப் படைகள், பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் இவற்றின் தேவைகளை அனுசரித்து இதை 1,157-லிருந்து 1,482-ஆக உயர்த்துவதற்கான திட்டங்கள் ஆலோசனையில் உள்ளன. பி.எஸ்.ஸி. மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் மூன்றாண்டுப் பட்டப் படிப்பிற்கான வாய்ப்பை அளிப்பதன் மூலம் நாம் மேற்குறிப்பிட்ட அளவிற்கு பொறியியல் கல்லூரிகளில் அதிக

மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும். பொறியியல் டிப்ளோமா பெற்றவர்கள் பட்டம் பெற விரும்பினால், அவர்களுக்குப் பகுதி நேர வகுப்புகள் நடத்தவும் அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. சேலத்தில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரியை நிறுவுவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு நில ஆர்ஜித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1963-64-ல் திருச்சிராப்பள்ளியில் ஒரு பிராந்தியப் பொறியியல் கல்லூரியை அமைப்பதற்கான முயற்சிகளும் துரிதமாக முன்னேறி வருகின்றன. சுமார் 400 ஏக்கர் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கட்டிட வேலைகளுக்கென விசேஷ ஊழியர்களும், நியமிக்கப்பட்டுள்ளனர். இக் கல்லூரியில் முதற்கண் 120 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆனால், சாத்தியமானவுடன் மாணவர்களின் எண்ணிக்கை 250 வரை உயர்த்தப்படும்.

33. இதைப்போலவே, டிப்ளோமா தொழிற் கல்விக்கான வசதிகளும் அதிகரித்துள்ளன. முதல் திட்டத் தொடக்கத்தில் 9 பாலிடெக்னிக்குகள் மட்டுமே இருந்தன. ஆனால், இப்பொழுது 24 பாலிடெக்னிக்குகள் உள்ளன. இவற்றில் 2,910 மாணவர்கள் வரை ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளமுடியும். 1963-64-ல் மேலும் இரு புதிய பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். அவற்றுள் ஒன்று திருச்சிராப்பள்ளியில் அமையும். பாலிடெக்னிக்குகளில் மாணவர்களை இன்னும் கூடுதலாகச் சேர்த்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. வரும் ஆண்டில் மகளிர் பாலிடெக்னிக்குகள் இரண்டும் புதிதாக நிறுவப்படும். 1963-64 பட்ஜெட்டில் மகளிர் பாலிடெக்னிக்குகளுக்கென சுமார் 12½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிண்டியிலுள்ள மத்திய பாலிடெக்னிக்கில் ரசாயனத் தொழில் நுட்பப் படிப்பிற்கான டிப்ளோமா வகுப்பு ஒன்று 1963-64-ல் தொடங்கும். வளர்ந்துவரும் நமது ரசாயனத் தொழில்களுக்குத் தேவைப்படும் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கமாகும். தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கு நன்மை பயக்குவதற்கான வகுப்புகள் நடத்தும் திட்டங்களையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

34. தொழில் வளர்ச்சியையொட்டி நமக்கு அதிகம் திறனுள்ள தொழிலாளர்கள் தேவைப்படுவர். அத்தகைய கைத்திறனுள்ள தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான நிலையங்களையும் நிறுவியுள்ளோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் 3,368 தொழிலாளர்களுக்குத்தான் பயிற்சிகள் அளிக்க வசதிகள் இருந்தன. புதிய பயிற்சி நிலையங்களை நிறுவியதன்மூலம் மேற்கொண்டு இரண்டு ஆயிரம் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கிறோம். இப்பொழுது நம் மாநிலத்தில் 22 தொழிற் பயிற்சி நிலையங்கள் **Industrial Training Institutes** உள்ளன. 1963 ஆகஸ்ட் மாதத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டையில் ஒன்றும், திருவண்ணாமலையில் மற்றொன்று

மாக இரண்டு நிலையங்களை நிறுவுவதென உத்தேசித்துள்ளோம். தவிர, 1963-64-ம் ஆண்டு பட்ஜெட்டில் மேற்கொண்டு மூன்று தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்று புதுக்கோட்டையிலும், இன்னொன்று தூத்துக்குடியிலும் அமையும். தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பொறியியல் கல்லூரிகளிலும் பாதுகாப்புப் படைகளுக்குத் தேவைப்படும் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான குறுகிய கால வகுப்புக்களையும் துவக்கியிருக்கிறோம்.

சிறுரகத் தொழில்கள்

35. கனரகத் தொழில்கள்மூலமாக மாத்திரம் நாம் வேலை வாய்ப்புக்களை அதிகம் பெருக்க முடியாது. கனரகத் தொழில்களோடு இணைந்து பலதரப்பட்ட சிறுரகத் தொழில்களையும் அமைக்கவேண்டுமென்ற படிப்பினையைத்தான் ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து நாம் அறிகிறோம். பாதுகாப்புப் படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் சிறுரகத் தொழில்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இம் மாதிரி, சிறுரகத் தொழில்கள் பரவலாக நமது மாநிலத்தில் ஏற்பட உதவும் வகையில் அரசாங்கம் மாதிரி உற்பத்திப் பயிற்சி நிலையங்கள் பலவற்றையும் சிறுரகத் தொழில்களுக்குத் தேவையான இடவசதி, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகள் ஒருங்கமைந்த தொழிற் பேட்டைகளையும் ஏற்படுத்துவதன்மூலம் ஊக்கம் அளித்து வந்திருக்கிறது. மூன்றும் திட்டக் காலத்தில் ஏற்படுத்துவதாக உத்தேசித்துள்ள பல தொழிற்பேட்டைகளில் தேனீ, விருத்தாசலம், காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், அம்பத்தூர் ஆகிய இடங்களில் கட்டிட வேலை இப்போது நடைபெற்று வருகிறது. கோவில்பட்டியிலும், கிருஷ்ணகிரியிலும் நில ஆர்ஜித வேலைகள் முடிவடைந்து விட்டன. 1962-63-ல் இத் தொழிற்பேட்டைகளில் 41 தொழிற்கூடங்கள் கட்டும் வேலைகள் பற்பல நிலைகளில் உள்ளன. 1963-64-ல் கூடுதலாக 100 கூடங்கள் கட்டப்படும். வரும் நிதி ஆண்டில் 3 தொழிற்பேட்டைகளை நிறுவ உத்தேசித்துள்ளோம். இவை முறையே நாகர்கோயில், கும்பகோணம், சிவகங்கை ஆகிய இடங்களில் அமையும். தனியார் துறையில் தொழிலதிபர்களுக்கு அபிவிருத்தி செய்த மனைக்கட்டுகளை நியாயமான விலைக்கு வழங்குவதற்காக அம்பத்தூரில் சுமார் 600 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம். இதே நிலத்தில் 70 கூடங்கள் அடங்கிய ஒரு தொழிற்பேட்டையும் அமையும். சில கூடங்கள் சம்பந்தமான கட்டிட வேலைகள் ஏற்கனவே நடந்து வருகின்றன. வேலூரிலும் தஞ்சாவூரிலும் உள்ள சைகில் இணைப்புத் தொழிற் கூடங்கள் இரண்டிலும் வேலை வெற்றிகரமாக நடந்து வருகின்றது. சைகிள் பாகங்கள் சிலவற்றையும் இவை வருகிற ஆண்டில் உற்பத்தி செய்யத் தொடங்கும். 1963-64-ல் கிருஷ்ணகிரியிலும், தூத்துக்குடியிலும் இதுபோன்ற இன்னும் இரண்டு புதிய சைகிள் இணைப்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறோம். இதற்கென பட்ஜெட்டில் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டிருக்கிறது. ராஜபாளை

யத்திலும், கும்பகோணத்திலும் உள்ள பொதுநோக்குப் பொறியியல் தொழிற்கூடங்களை விரிவு செய்ய ஏற்பாடுகள் செய்து வருகிறோம். திருச்சியிலுள்ள விவசாயப் பண்ணைக் கருவிகள் தொழிற்சாலையையும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

36. கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும் இயங்கும் சிறுரகத் தொழில்களுக்கு வேண்டிய தொழில் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகக் கிண்டியிலுள்ள தொழிற்பேட்டையில் தொழிற் கூட்டுறவு பாங்கு ஒன்றை நிறுவியுள்ளோம். பாங்கின் பங்கு மூலதனத்திற்காக அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது. பாங்க் நடப்பு ஆண்டில் செயல்படத் தொடங்கி, சில சிறு ரகத் தொழில்களுக்கு ஏற்கனவே கடன் வசதிகள் வழங்கியிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து பெருமளவில் டிபாசிட்டுகளைப் பெற்றுத்தான் இந்த பாங்க் தனது நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும். எனவே, பொது மக்களிடமிருந்து பெறும் டிபாசிட்டுகளைத் திருப்பிக் கொடுப்பதற்கான உத்தரவாதத்தை அரசாங்கம் அளித்துள்ளது.

கைத்தறித் தொழில்

37. தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக அரசாங்கம் தன் கொள்கையை வகுக்கையில், கைத்தறி போன்ற ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்கும் குடிசைத் தொழில்களின் நலனைப் புறக்கணித்துவிடவில்லை. கைத்தறித் தொழில் அபிவிருத்திக்காக மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கைத்தறித் துறையில் ஆக்க வேலைகள் திட்டப்படி நிறைவேறி வருகின்றன. 1963-64-ம் ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகளில் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கென 1 கோடியே 38 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கைத்தறித் தொழிலுக்குத் தேவைப்படும் நல்ல ரக நூல் நியாய விலைக்குக் கிட்டும்படிச் செய்ய நம் மாநிலத்தில் கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் ஊக்கமளித்து வருகிறது. அந்த ஆலைகளின் பங்கு மூலதனத்தில் அரசாங்கம் முதலீடு செய்து வருகிறது. திருநெல்வேலி, நாசரத், ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள நான்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் அரசாங்கம் இது வரை சுமார் 49 லட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளது. நடப்பு ஆண்டில் காஞ்சீபுரத்தில் நிறுவப்பட்டு வரும் கூட்டுறவு நூற்பு ஆலையில் 10 லட்சம் ரூபாய் முதலீடு செய்ய அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் மதுரை கூட்டுறவு நூற்பு ஆலையிலும் 10 லட்சம் ரூபாய் முதலீடு செய்யப்படும். இப்பொழுது உத்தேசித்துள்ள மற்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் பங்குத் தொகை முதலீடு செய்வதற்கென, 1963-64 பட்ஜெட் மதிப்பீடுகளில் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சமீப மாதங்களில் கைத்தறித் தொழிலில் ஓரளவிற்குத் துணித் தேக்கம் ஏற்பட்டுள்ளது. நெசவாளர் சங்கங்களின் சங்கடங்களைப் போக்குகின்ற வகையில் கூடுதலாகக் கொள்முதல்

செய்வதற்கென மாநிலக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசாங்கம் தொழில் மூலதனக் கடனாக 50 லட்சம் ரூபாய் நடப்பு ஆண்டில் வழங்கியது. கைத்தறி ஜவுளி விற்பனையையும் வெகுவாக ஊக்குவதற்கென 15 நாட்களுக்கு விசேஷ ரிபேட் கொடுப்பதென முடிவு செய்து அரசாங்கம் நிதி உதவி அளித்திருக்கிறது. இந்த விசேஷ ரிபேட்டின் காரணமாக 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். இப்போது ஏற்பட்டுள்ள துணித் தேக்கம் தற்காலிகமானது என்றும், நாட்டின் பாதுகாப்பு முயற்சிகள் பெருகப் பெருக மில் துணி, கைத்தறித் துணி போன்ற எல்லா வகைத் துணிகளுக்கும் தேவை அதிகமாகும் என்றும் நாம் நிச்சயமாக நம்பலாம்.

கல்வி வளர்ச்சி

38. நாட்டில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையை மனதிற்கொண்டு நமது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தியமைக்கும் போது, கல்வித் திட்டங்களின் வளர்ச்சி குன்றாமல் வழிவகை செய்திருக்கிறோம். கடந்த சில ஆண்டுகளில் கல்விச் செலவு பெருமளவு அதிகரித்திருப்பது கனம் அங்கத்தினர்களுக்கு நன்றாய் தெரியும். நமது மாநில பட்ஜெட்டில் எல்லா அபிவிருத்தித் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்குத்தான் இன்று நாம் அதிகம் செலவிடுகிறோம். கல்வி வளர்ச்சி சம்பந்தமாகச் சில புள்ளி விவரங்களை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்தில், அதாவது 1955-56-ல் கல்விக்காக நாம் செய்த செலவு 10 கோடியே 82 லட்சம் ரூபாய். ஆனால், 1963-64 பட்ஜெட்டில் நாம் கல்விக்காக ஒதுக்கியிருப்பது 27 கோடியே 58 லட்சம் ரூபாய். கல்விச் செலவை சமுதாய வளர்ச்சிக்காக நாம் செய்யும் முதலீடு எனக் கொள்ள வேண்டும். தேசிய நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள தற்காலிக இன்னல்கள் காரணமாக இத் துறையின் அபிவிருத்தி வேகத்தை மட்டுப்படுத்துவது சரியல்ல. இவ்வாண்டின் இறுதிக்குள் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி விஸ்தரிக்கப்பட்டுவிடும். நடப்பு ஆண்டில் மட்டும் 6 வயது முதல் 11 வயது வரையிலுள்ள சிறுவர் சிறுமியர் 4 லட்சம் பேர் ஏற்கெனவேயே சேர்ந்துவிட்டார்கள் என மதிப்பிடப்படுகிறது. அடுத்த ஆண்டில் மேலும் 3 லட்சம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள். கட்டாயக் கல்வித் திட்டம் இத்துணை விரைவில் பரவியிருப்பதற்கான காரணங்களில் மிகவும் முக்கியமானது, கல்வியின் பயனை இப்போது மக்கள் பரவலாக அறிந்திருப்பது ஒருபுறமிருக்க, ஆரம்பப் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க ஏற்பாடு செய்திருப்பது தான். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றுவதற்காக 1963-64 பட்ஜெட்டில் 1 கோடியே 35 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துவதற்காக 'கேர்' (CARE) ஸ்தாபனம் முன்போலவே தாராளமாக உதவி அளித்து வருகிறது என்பதை அறிய கனம் அங்கத்தினர் மகிழ்ச்சி யடைவார்கள். நடப்பு ஆண்டில் இந்த

ஸ்தாபனத்தாரிடமிருந்து 1 கோடியே 5 லட்சம் பவுண்டு தானியமும், 80 லட்சம் பவுண்டு பால் பவுடரும் நமக்குக் கிட்டியிருக்கின்றன. நாமும் இந்தப் பொருள்களை வழங்கும் திட்டத்திற்கான செலவினங்களுக்கென சுமார் 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.
30 a.m. ஆரம்பக் கல்வி திட்டத்தைச் சரிவர நிறைவேற்றுவதில் இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் முக்கிய பொறுப்பு வகிக்கின்றன. அவைகளுக்கு அரசாங்கம் பெருமளவிற்கு உதவி செய்து வருகிறது. ஆரம்பக் கல்விக்கு ஆகும் செலவின் நிமித்தம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியமாக 11 கோடியே 13 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

உயர்நிலைக் கல்வி.

39. ஆரம்பக் கல்விக்கான வசதிகளின் வளர்ச்சியை யொட்டி, உயர்நிலைக் கல்விக்கான வசதிகளையும் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பத்தாம் வகுப்பு வரையில் ஏழை மாணவர்களுக்கெல்லாம் கல்வி இலவசம் என அரசாங்கம் கொள்கை வகுத்திருப்பதால், உயர்நிலைப் பள்ளிகளில் சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்த நிலையை அரசாங்கம் நல்ல முறையில் சமாளித்திருக்கின்றது என்பது, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 480 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்பதிலிருந்தே நன்கு புலனாகும். நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் உயர்நிலைக் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை 5 கோடியே 70 லட்சம் ரூபாய். ஆனால், அடுத்த ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகளில் 6 கோடியே 52 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து உயர்நிலைக் கல்வி வசதிகளை மேலும் பெருக்குவதற்கு அடுத்த ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகளில் போதிய வாய்ப்புத் தந்திருப்பது நன்கு தெரியும். கல்லூரிக் கல்வியைப் பொறுத்தவரையில் கும்பகோணத்தில் மகளிர்க் கல்லூரி ஒன்றைப் புதிதாக நிறுவுவதற்கு சபைமுன் உள்ள பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவ வசதிகள்

40. அவசர கால நிலைக்கொப்ப, நமது திட்டத்தைத் திருத்தியமைக்கும்போது சமூக நலப் பணிகளில் எவற்றைக் கொள்ள வேண்டும், எவற்றை விடவேண்டும் என்று பாகு பாடு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படியிருப்பினும் 1963-64-ல் மருத்துவம், பொதுச் சுகாதாரம் போன்ற திட்டங்களுக்காக 5 கோடியே 6 லட்சம் ரூபாய் வகை செய்திருக்கிறோம். இந்த திட்டங்களை மேலும் விஸ்தரிக்க இயலாமைக்கு முக்கிய காரணம் நமக்குப் போதிய அளவிற்குப் பயிற்சி பெற்றவர்கள் கிட்டாதது தான். பாதுகாப்புப் படைகளில் பணியாற்றுவதற்கு நமது மாநிலத்தில் பல டாக்டர்கள் முன் வந்துள்ளனர். இதைப்பற்றி நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டுமென்றாலும், நாம் குறிப்பிடவேண்டியது ஒன்று உள்ளது. பாதுகாப்புத் திட்டங்களுக்குப் பெருமளவில் டாக்டர்கள் தேவைப்படுவதால், கிராமப் பகுதிகளில் புதிய மருத்துவ மனைகளைத் திறப்பதை நாம் கொஞ்சம் மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால், இந்தக் கஷ்டம்

தற்காலிகமானதுதான். ஏனெனில், டாக்டர்கள், அவர்களுக்குத் துணையாய் இருக்கின்ற பலவித பணியாளர்கள் முதலியவர்களுக்கான பயிற்சி வசதிகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டு தோறும் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் தொகையை 600 லிருந்து 700-ஆக உயர்த்த ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். எல்லா வசதிகளுடன் கூடிய ஒரு புதிய மருத்துவக் கல்லூரியை ஏதேனும் ஒரு மாவட்டத்தில் திறப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இப் புதிய கல்லூரி செயல்படத் தொடங்கியதும், அத்துடன் கீழ்ப்பாக்கத்தில் இப்பொழுது குறைந்த எண்ணிக்கையுள்ள மாணவர்களுடன் இயங்குகின்ற மருத்துவக் கல்லூரியும் சேர்ந்துவிடும். டாக்டர்கள் பெறவேண்டிய 'இன்டர்னி' பயிற்சிக்குப் பதிலாக ஓராண்டு "ஹவுஸ் சர்ஜன்" பயிற்சி பெற்றால் போதுமென ஏற்பாடு செய்திருக்கின்றோம். தவிர, எம்.பி.பி.எஸ். இறுதித் தேர்வை ஓர் ஆண்டில் மூன்று தடவை நடத்தவும் உத்தேசித்திருக்கின்றோம். மேலும், ஆஸ்பத்திரிகளில் கூடுதலாக 400 நர்சுகளுக்கு பயிற்சி அளிக்கும் மற்றொரு திட்டத்திற்கும் அனுமதி அளித்திருக்கின்றோம். இவற்றைத் தவிர, கூடுதலாக 100 பார்மசிஸ்டுகளுக்கும், 135 துணை நர்சுகளுக்கும் பயிற்சி அளிக்கும் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளோம்.

வீட்டு வசதி

41. நாட்டின் பாதுகாப்பு வேலைகளுக்கு அவசியம் தேவைப்படுகின்ற சிமெண்ட், உருக்கு போன்ற பற்றாக்குறைப் பொருள்களின் உபயோகத்தை ஓரளவு குறைக்க வேண்டியதன் அவசியத்தை மனதிற்கொண்டு, அரசாங்கம் தன்னுடைய வீட்டு வசதித் திட்டங்களைப் பரிசீலனை செய்துள்ளது. ஏற்கெனவே எடுத்துக் கொண்ட எல்லா வீட்டு வசதி வேலைத் திட்டங்களும் துரிதமாக நிறைவேற்றப்படும். ஆனால் புதிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதில் நிதானம் அவசியமென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இருந்தபோதிலும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வீட்டுவசதித் திட்டங்களுக்காக சுமார் 77 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றோம். சிறப்பாக, சேரி அபிவிருத்தித் திட்ட வேலைகளைக் குறைத்துக் கொள்வதில்லையென அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் சேரி அபிவிருத்தித் திட்டங்களுக்காக மட்டில் 60 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் போன்ற முக்கிய நகரங்களை அடுத்து மனைக் கட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்காக மொத்த அளவில் நில ஆர்ஜிதம் செய்யும் வேலையையும் நாம் தொடர்ந்து நிறைவேற்றுவோம். இவ்வாறு நில ஆர்ஜிதம் தொடர்ந்து நடைபெறுவதால், பின்னர் நிதி வசதிகள் பெருகும் போது நம்முடைய வீட்டு வசதித் திட்டங்களை இன்னும் விரைவில் நிறைவேற்ற முடியும். வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பெரும் இடையூறாக இருப்பது சென்னை போன்ற நகரங்களில் செங்கல் விலை ஏராளமாக உயர்ந்திருப்பதாகும். எனவே, பொதுத் துறையில் இயந்திரங்களைக் கொண்டு செங்கல் தயாரிக்கும் இரு தொழிற்சாலைகளை நிறுவ அரசாங்கம் முடிவு

[1st March 1963

செய்துள்ளது. இவைகளில் ஒன்றை மாநில வீட்டு வசதிக் குழுவினரும், மற்றொன்றை மாநிலத் தொழில் துறையினரும் நிர்வகித்து வருவார்கள். இந்தத் திட்டங்களுக்காகப் பட்ஜெட்டில் அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

பின்னிலை வகுப்பினர் நலன்

42. பின்னிலை வகுப்பினரின் நலனில் அரசாங்கம் தொடர்ந்து விசேஷ அக்கறை காட்டி வருகின்றது. 1963-64 பட்ஜெட் மதிப்பீடுகளில் ஹரிஜனங்கள், பின்னிலை வகுப்பினர் நலன் சம்பந்தமான திட்டங்களுக்காக 3 கோடியே 90 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இதில் இந்த வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்கென மட்டில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகளை வழங்கும் திட்டத்திற்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இதற்கென, சபையின் முன் உள்ள பட்ஜெட் மதிப்பீடுகளில் 23½ லட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

முதியோர் பென்ஷன் திட்டம்

43. அரசினர் கணிசமாகச் செலவிடும் மற்றொரு முக்கியமான சமூக நலத் திட்டம் முதியோர் பென்ஷன் திட்டமாகும். சென்ற மாதம் முதல் உப மதிப்பீடுகளைச் சபையில் சமர்ப்பிக்கும்போது நான் குறிப்பிட்டதுபோல, இத் திட்டத்தைச் செயலாற்றுவதில் மற்ற சில மாநிலங்களில் ஏற்பட்ட அனுபவத்தையொட்டி இத் திட்டத்திற்கு ஓர் ஆண்டிற்கு 25 முதல் 30 லட்சம் ரூபாய் வரைதான் செலவாகுமென எதிர்பார்த்தோம். ஆயினும், இதுவரை 40 ஆயிரம் பேருக்கு இத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை அளிக்கப்பட்டுவிட்டதால், அடுத்த ஆண்டுக்குரிய பட்ஜெட் மதிப்பீடுகளில் இதற்கென 1 கோடியே 22 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். எந்த சமூக நலத் திட்டத்தின் வெற்றியும் அதை நிர்வகிக்கும் அதிகாரிகளின் மனப்பான்மையைப் பொறுத்திருக்கும். இந்தத் திட்டத்திற்கு இப்போது நாம் எதிர்ப்பார்க்கும் கூடுதல் செலவை சபை ஏற்கத் தயங்காது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்றம்

44. திட்டங்களின் பல்வேறு அம்சங்களைப்பற்றி இதுகாறும் விரித்துக் கூறினேன். இப்போது திட்டம் முழுவதுமாக எங்ஙனம் நிறைவேறியுள்ளது என்பதைத் பரிசீலனை செய்யும் நிலையில் உள்ளோம். சட்ட சபையில் சமர்ப்பித்துள்ள பட்ஜெட் திட்டங்களிலிருந்து உருவாகின்ற திட்டத்தின் அளவு 59 கோடியே 83 லட்சம் ரூபாயாகும். பல வேலைத் திட்டங்களின் விவரங்களைப் பற்றி நான் இதுகாறும் கூறியவற்றிலிருந்து, மத்திய அரசாங்கத்திலிருந்து அடுத்த ஆண்டு கிட்டுகின்ற உதவி 4 கோடி ரூபாய் அளவிற்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், முக்கியமான எல்லாத் திட்டங்களுக்கும் போதிய தொகை ஒதுக்கியிருப்பது நன்கு விளங்கும். 1961-62-ல் 50 கோடி ரூபாய் அளவிற்கு திட்டத்தை நிறைவேற்றினோம். இப்போது சபையின்முன் உள்ள திருத்த

1st March 1963]

மதிப்பீடுகளிலிருந்து நடப்பு ஆண்டில் திட்டச் செலவு 58 கோடியே 32 லட்சம் ரூபாய் அளவில் இருக்குமென்பது தெரியும். 1963-64 பட்ஜெட் மதிப்பீட்டில் திட்டச் செலவுகளுக்காக 59 கோடியே 83 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, திட்டத்தின் மூன்றாவது ஆண்டு இறுதிக்குள் திட்டத்தில் சுமார் 58 சதவிகிதம் நிறைவேறிவிடும் என்பதும் தெளிவாகிறது. தேசிய நெருக்கடி காரணமாக, நமக்குப் புதிய பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன என்றாலும், நமது திட்டத்தின் முக்கியமான எல்லாப் பணிகளுக்கும் போதிய தொகை ஒதுக்கியுள்ளதை மேலே சொன்ன புள்ளி விவரங்கள் உறுதிப்படுத்துகின்றன. சுருங்கக் கூறின், நாம் ஏதாகிலும் கணிசமான அளவிற்குக் குறைத்திருப்பது கட்டிட வேலைகளைத்தான். மத்திய உதவியில் 4 கோடி ரூபாய் வெட்டு இருந்தாலும், எவ்விதக் குறைவுமின்றி நமது திட்ட வேலைகளை நிறைவேற்ற முடிகிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் பல ஆண்டுகளாகவே அத்தியாவசியமில்லாத செலவினங்களை நாம் கட்டுப்படுத்தி வந்திருப்பதுதான். எழுதுபொருள்களிலும், பிரயாணப்படி வகையிலும், அலுவலகச் சில்லறைச் செலவுகள் வகையிலும் மேற்கொண்டு சிக்கனம் செய்ய நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். திட்ட வேலைகள் அல்லது பாதுகாப்பு வேலைகள் தவிர, வேறு எதற்கும் புதிதாகப் பணியாளர்களைக் கூடியவரை அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை நாம் இப்பொழுது பின்பற்றி வருகிறோம். இப்பொழுது நாட்டிலுள்ள நிலைமையில் இது போன்று பலவகைகளிலும் நமது நிதி வசதிகளைப் பேணுவதன் மூலம்தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாத நமது திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

1962-63 திருத்த மதிப்பீடுகள்

45. இனி, நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகள், அடுத்த ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகள் இவற்றைப்பற்றிய சில முக்கிய புள்ளிவிவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஜூன் மாதம் இவ்வாண்டு வரவினங்களை, புதிய வரி விதிப்புகளையும் உள்ளிட்டு, சுமார் 113 கோடியே 15 லட்சம் எனவும், செலவினங்களை சுமார் 116 கோடியே 1 லட்சம் எனவும் மதிப்பிட்டிருந்தேன். திருத்த மதிப்பீடுகளிலிருந்து, ரெவின்யூ கணக்கில் வரவு 117 கோடியே 10 லட்சம் ரூபாயாகவும், செலவு 120 கோடியே 2 லட்சம் ரூபாயாகவும் உயர்ந்துள்ளது தெரியும். ரெவின்யூ கணக்கில் துண்டு விழுவது 2 கோடியே 92 லட்சம் ரூபாய். சென்ற பட்ஜெட்டில் நான் அறிவித்த புதிய வரி விதிப்புத் திட்டங்களின் மூலம் நமக்குக் கிட்டியுள்ள அதிக வருவாயைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் அறிய விரும்புவார்கள். நான் அச்சமயம் புதிய வரிகளின்மூலம் 7 கோடியே 15 லட்சம் ரூபாய் கூடுதல் தொகை கிட்டுமென எதிர்பார்த்திருந்தேன். வரி விதிப்பு யோசனைகளில், தண்ணீர்த் தீர்வை உயர்வும், நகரப்புற நிலவரித் திட்டமும் இன்னும் அமுலுக்கு வரவில்லை. தவிர, மோட்டார் வண்டி வரி போன்ற சில வரிகள் விஷயத்தில் சட்டமாக்குவதற்கு முன் சில சலுகைகளைக் காண்பிக்க வேண்டியிருந்தது. மேலும்,

புதிய தொழில்களுக்கு வரி விலக்குத் தந்தாலும், சென்னை அனல் மின்சாரத் திட்டத்திற்குட்பட்ட தொழில்களுக்குக் குறைந்த விகிதத்தில் வரி விதித்தாலும், மின்சார உபயோக வரியிலிருந்து எதிர்பார்த்த அளவிற்கு வருவாய் கிட்டவில்லை. கடந்த பட்ஜெட்டில் அறிவித்த புதிய வரிகளிலிருந்து நடப்பு ஆண்டில் 4 கோடியே 80 லட்சம் ரூபாய்தான் கிட்டுமென இப்பொழுது எதிர்பார்க்கிறோம். புதிய வரிகளின்கீழ் ஏற்பட்ட குறைவை, ஏற்கனவேயுள்ள விற்பனை வரி போன்ற வரிகளிலிருந்தும், மின்சார போர்டுக்குக் கொடுத்துள்ள கடன், மற்ற கடன்கள் இவற்றின்மீது பெறும் வட்டியிலிருந்தும் கூடுதலாகக் கிட்டியுள்ள வரவுகள் ஓரளவுக்கு ஈடுகட்டியுள்ளன. திருத்த மதிப்பீடுகளில் கண்டுள்ள கூடுதல் செலவைப் பொறுத்தவரையில், அது பெரும்பாலும் அபிவிருத்தித் துறைகளில்தான் ஏற்பட்டிருக்கிறது ; அதுவும் சிறப்பாக கல்வி (1 கோடியே 53 லட்சம் ரூபாய்). மருத்துவம் (50 லட்சம் ரூபாய்), தொழில்கள் (1 கோடியே 8 லட்சம் ரூபாய்) துறைகளில்தான் என்பது தெரியும். திட்டத்தில் சேராத பகுதியில், போலீஸ், முதியோர் பென்ஷன் என்ற இரண்டு இனங்களிலும் அதிகச் செலவாகியிருக்கிறது. மூலதனச் செலவைப் பொறுத்த வரை, திருத்த மதிப்பீடுகளில் கண்டுள்ள தொகை (18 கோடியே 82 லட்சம் ரூபாய்) ஏற்கனவே பட்ஜெட் மதிப்பீட்டில் நிர்ணயித்த தொகைக்கு (ரூபாய் 18 கோடியே 85 லட்சத்துக்கு) ஏறக்குறைய சமமாகும். இவ்வாண்டு நிதி மார்க்கெட்டின் நிலை சாதகமாகவிருந்ததால், ஏற்கனவே நாம் எதிர்பார்த்த 10 கோடி ரூபாய்க்குப் பதிலாக, 13 கோடியே 13 லட்சம் ரூபாய் பொதுக் கடனை எழுப்ப முடிந்தது. ஆனால், சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் நாம் எதிர்பார்த்ததைவிடக் குறைவாகத்தான் கிடைத்துள்ளது. நடப்பு ஆண்டில் நம்முடைய வழிவகை நிதி நிலை (ways and means) சரளமாக இல்லை. எனினும், நடப்பு நிதி ஆண்டின் இறுதியில் 73 லட்சம் ரூபாய் இருப்பு இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

1963-64 மதிப்பீடுகள்

46. இப்பொழுது 1963-64-ம் ஆண்டின் பட்ஜெட் மதிப்பீடுகளைக் கவனிக்கலாம். இப்பொழுதிருக்கின்ற வரி விதிப்பு அளவில், அடுத்த ஆண்டில், ரெவின்யூ கணக்கில் வரவு 124 கோடியே 45 லட்சம் ரூபாய் என்றும், செலவு 127 கோடியே 19 லட்சம் ரூபாய் என்றும் மதிப்பிடுகிறேன். எனவே, ரெவின்யூ கணக்கில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. மதிப்பீடுகளை நிர்ணயிப்பதில் இப்பொழுதுள்ள விற்பனை வரி, ஸ்டாம்பு கட்டண வரி போன்ற வரிகளிலிருந்து சாதாரணமாகவே ஆண்டுதோறும் கூடுதலாக கிடைக்கின்ற வருவாயையும் மனதிற் கொண்டுள்ளோம். சென்ற பட்ஜெட்டில் மேற்கொண்ட புதிய வரி விதிப்புத் திட்டங்களின்மூலம் அடுத்த ஆண்டு 9 கோடி ரூபாய் வருமெனக் கணக்கிட்டிருக்கிறோம். இங்ஙனம் நம்முடைய வருவாய் உயர்ந்திருப்பினும் திட்ட வேலைகள் துரிதமாக நிறைவேறி வருவதாலும்,

அவசரகால நிலையையொட்டி எழுந்துள்ள பல புதுப் பொறுப்புகளை ஏற்றிருப்பதாலும், ரெவின்யூ கணக்கில் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது.

47. ரெவின்யூ கணக்கில் துண்டு விழும் தொகை கணிசமாக விருப்பினும், நான் புதிதாக ஒரு வரியையும் விதிப்பதாக உத்தேசிக்கவில்லை. (ஆரவாரம்). மத்திய விற்பனை வரி விகிதத்தை உயர்த்துவதென, மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்த வரியை மத்திய அரசாங்கம் விதித்தபோதிலும், அதை வசூலித்துப் பயனடைவது மாநில அரசாங்கமாகும். எனவே, ரெவின்யூக் கணக்கில் துண்டு விழும் தொகையில், ஒரு பகுதியை இந்த வரியிலிருந்து கூடுதலாக கிட்டும் தொகை ஈடு செய்யும் என எதிர்பார்க்கலாம். தவிர, சமீப ஆண்டுகளில் மோட்டார் கார்கள், காமிராக்கள் போன்ற சில ஆடம்பரப் பொருள்களின் (Luxury Articles) மீது ஒரே மாதிரி விகிதத்தில் விற்பனை வரி விதிக்கும் கொள்கையை மாநில அரசாங்கங்கள் பின்பற்றி வருகின்றன. இக்கொள்கையைப் பின்பற்றி, மற்ற மாநிலங்கள் ஆடம்பரப் பொருள்களின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை உயர்த்தினால், நாமும் அப்பொருள்களின் மீதுள்ள வரி விகிதங்களை மாற்றியமைக்க வேண்டிவரும். அம்மாதிரி ஆடம்பரப் பொருள்களின் மீதுள்ள விற்பனை வரி விகிதங்களை மாற்றியமைப்பதிலிருந்து கொஞ்சம் அதிக வருவாய் கிடைக்கலாம்.

வழிவகை நிதிநிலை

48. பட்ஜெட்டில் ரெவின்யூ கணக்கில் துண்டு விழுவதைப்பற்றி நாம் பெரும் கவலைகொள்ளவேண்டியதில்லை. ஆனால், வரும் ஆண்டிலும் நமது வழிவகை நிதிநிலை தொடர்ந்து இக்கட்டாக இருக்கும் என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். வரும் நிதி ஆண்டு ஆரம்பத்தில் நமது ரொக்க இருப்பு கணிசமானது அல்ல. ரூபாய் 20 கோடியே 75 லட்சத்திற்கு மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு, 18 கோடியே 87 லட்சம் ரூபாய் அளவிற்கு மற்ற மூலதனத் திட்டங்களை நாம் நிறைவேற்றவேண்டியிருக்கும். இத்திட்டங்களில் சில, சென்னை நகரத்துக்கும் அதன் சுற்றுப் புறங்களுக்கும் தண்ணீர் வழங்கல் போன்ற திட்டங்கள்—நம்முடைய தொழில் வளர்ச்சிக்கும், பாதுகாப்பு வேலைகளுக்கும் இன்றியமையாதன. நிதி வசதியின்மை காரணமாக, இத் திட்டங்களை நாம் தாமதப்படுத்துவதற்கு இல்லை. அடுத்த ஆண்டில் கெடுவடையும் கடன்களுக்காகவும் பெருமளவிற்குத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கிறது. வருகிற ஆண்டில் மத்திய அரசாங்கம் தன்னுடைய தேவைகளுக்காகவும் மாநில அரசாங்கங்களின் தேவைகளுக்காகவும் கடனை மொத்தமாக எழுப்பும் என்று எதிர்பார்க்கிறோம். எனவே, மாநில அரசாங்கம் பொதுக் கடன் ஒன்றும் எழுப்பவேண்டியிராது. இந்த ஏற்பாட்டின்படி, நடப்பு ஆண்டில் நாம் எழுப்பிய பொதுக் கடனுக்குச் சமமான தொகை, அதாவது சுமார் 13 கோடியே 13 லட்சம் ரூபாய் நமக்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டும். இதைத்

தவிர, நமது மாநில மின்சார போர்டு தன்னுடைய முதலீட்டுச் செலவுக்காக 3½ கோடி ரூபாயிலிருந்து 4 கோடி ரூபாய் வரையில் பொதுக் கடன் எழுப்ப முடியும் எனக் கொள்ளலாம். இருப்பினும், சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் நமது மக்களிடமிருந்து கணிசமான தொகையைப் பெறுவதன்மூலமே நமது வழிவகை நிதிநிலையைச் சீர்ப்படுத்த முடியும். இந்தத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் முன்னேற்றம் திருப்திகரமாயில்லை. நடப்பு ஆண்டில் சிறு சேமிப்பு மூலமாக 3 கோடி ரூபாய் கிடைக்குமென எதிர் பார்த்ததற்கு மாறாக, சுமார் 1½ கோடிதான் கிடைக்குமென இப்பொழுது மதிப்பிடப்படுகிறது. நம் மாநிலத்தில் சிறு சேமிப்புத் திட்டத்திற்கு, குறிப்பாக கிராமப்புறங்களில், புத்துயிர் அளிக்கச் சமீபத்தில் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். பஞ்சாயத்துக்களையும், பஞ்சாயத்து யூனியன்களையும் இத் திட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுமாறு செய்திருக்கிறோம். இதற்கான நிர்வாக அமைப்பையும் வலுப்படுத்தியிருக்கிறோம். நாட்டின் தற்போதைய நிலையில் அதிக அளவிற்குச் சேமிக்க வேண்டியதன் அவசியத்தை ஒவ்வொரு குடும்பமும் உணருகின்ற வகையில் நாம் சிறு சேமிப்புத் திட்டத்தை ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகச் செய்ய வேண்டும். இவ்வகையில், பொதுமக்களின் சிந்தனையைத் தூண்டி சேமிப்புத் திட்டம் வெற்றிபெறக்கூடிய ஒரு சூழ் நிலையை உருவாக்குவதில் இச் சபையிலுள்ள நாம் எல்லோரும் பங்கு கொள்ளவேண்டும்.

முடிவுரை

49. இந்த பட்ஜெட் எந்தப் பின்னணியில் தயாரிக்கப்பட்டுள்ளதோ, அதை மனதிற்கொண்டு பட்ஜெட்டின் பல அம்சங்களையும் நாம் ஆராயவேண்டும். கடந்த சில ஆண்டுகளில் நமது பட்ஜெட் நம்முடைய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு கருவியாகப் பயன்பட்டுள்ளது. இன்று தேசீயப் பாதுகாப்பு என்ற மற்றொரு லட்சியத்திற்கும் அது வழிவகை செய்ய வேண்டியுள்ளது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந் நாட்டு மக்களின் முன் சமர்ப்பிக்கையில் அதை உருவாக்கியவர்கள் உலக சமாதானத்தின் அடிப்படையில்தான் திட்டத்தை வெற்றிகரமாய் நிறைவேற்ற முடியும் என்பதை உணர்ந்திருந்தார்கள். உலகெங்கும் சமாதானம் நிலவுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் நாம் நம் மாபெரும் தலைவரின்கீழ் பாடுபட்டு வந்திருக்கிறோம். அப்படியிருக்க, நம் நாட்டு மண்ணிலேயே ஆக்கிரமிப்பு நடந்திருப்பது வருந்தத்தக்கது. இந்த ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதில் நட்பு நாடுகளிலிருந்து நமக்கு உதவி கிடைப்பதில் சந்தேகமில்லை. ஆனால், நமது தற்காப்பு அமைப்புகளைப் பலப்படுத்தி, இனியும் ஆக்கிரமிப்பு நடந்தால் அதைத் தடுத்து நிறுத்த நாட்டைத் திரட்டுகின்ற பெரும் பொறுப்பு—கடமை—மகத்தான இந்த நாட்டின் பிரஜைகளான நம்மைச் சேர்ந்ததாகும். ஏனென்றால், இது தன்மான உணர்ச்சியுள்ள, சுதந்திர நாடாகும். வெளிநாட்டு ஆக்கிரமிப்பைச் சமாளிக்கத்

தயார் செய்துகொள்ளும் அதே நேரத்தில், நம் மக்களின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்தவேண்டுமென்ற நமது நீண்டகால இலட்சியத்தை மறந்துவிட முடியாது. பாதுகாப்பு, அபிவிருத்தி, இந்த இரண்டு இலட்சியங்களுக்குள் முரண்பாடு ஒன்றுமில்லை. ஆனால் இவையிரண்டையும் ஒருங்கே அடையவேண்டுமென்றால் நம்முடைய ஆள் பலம், பொருள் பலம் எல்லாவற்றையும் திரட்ட வேண்டும். அப்படித் திரட்டுகையில், தியாகங்களைச் செய்ய வேண்டி நேர்ந்தால், சுதந்திர நாட்டினர் என்ற முறையில் நாம் பின்வாங்கக் கூடாது. நெருக்கடியின் முன்னிலையில் நம் மக்களுடைய ஒற்றுமை உணர்ச்சி, தியாக உணர்ச்சி இவற்றைக் கடந்த சில மாதங்களில் கண்கூடாகக் கண்டுள்ளோம். எல்லாத்தரத்தினரும், முக்கியமாக ஏழை, எளிய மக்கள், தேசீயப் பாதுகாப்பு நிதிக்கு மனமுவந்து வழங்கியிருப்பதிலிருந்தும், பாதுகாப்பையொட்டிய பற்பல பணிகளுக்குத் தங்கள் சேவைகளை அர்ப்பணிக்க முன்வந்திருப்பதிலிருந்தும், வாய்ப்பளித்தால், நம் மக்கள் எதற்கும் தயங்கமாட்டார்கள் என்றும், பாதுகாப்பு, அபிவிருத்தி இரண்டிற்குமே தேவையான நிதி வசதிகளைத் திரட்ட முடியும் என்றும் நம்பிக்கை பிறக்கிறது. இத் தருணத்தில், பொது மக்களின் பிரதிநிதிகளாக இம் மன்றத்தில் உள்ள நம் எல்லோருக்கும் புனிதமான கடமையொன்றுண்டு. அதுதான் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் உள்ள பலதரப்பட்ட நம் மக்களின் சக்தியையெல்லாம் ஆக்கப் பணிகளில் திருப்பி நம்முடைய பொருளாதாரம் இன்னும் வேகமாக முன்னேறுகின்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகும். அங்ஙனம் செய்தால் பாதுகாப்பு, அபிவிருத்தி என்கிற இரண்டு இலட்சியங்களையும் நிச்சயமாக நம்மால் அடைய முடியும். இந்த பட்ஜெட்டை ஆராய்கையில் இக் கருத்துக்களையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் மனதிற்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, இந்த பட்ஜெட்டை சபை ஏற்கவேண்டுமென்று கோரி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

APPENDIX I.

(*Vide* answer to unstarred question No. 7, on page 180)

Statement showing the number of students studying at present in each of the colleges in the Tamil medium B.A. classes.

Serial number.	Name of the college and course.	1960–1961. First-year class.	1961–1962. First-year class.	1961–1962. Second-year class.	1962–1963. First-year class.	1962–1963. Second-year class.	1962–1963. Third-year class.	Remarks.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1.	Government Arts College, Coimbatore—							
	(1) History	20	9	18	10	9	18	Tamil medium B.A. degree course was started in the college from 1960-61.
	(2) Politics	20	9	17	11	9	17	
	(3) Economics	25	20	23	14	16	23	
	(4) Geography	20	12	19	6	9	19	
	(5) Psychology	15	11	15	9	10	15	
2.	P.S.G. Arts College, Coimbatore—							
	(1) Economics	..	28	..	9 plus 5	21	..	Tamil medium B. A. degree course was started in these colleges from 1961-62.
	(2) Social Science..	..	25	..	3 plus 3	19	..	
3.	Nallamuthu Gounder, Mahalingam College, Pollachi—History	..	14	..	2	12	..	
4.	Avinasilingam Home Science College, Coimbatore—Economics	..	11	..	11	11	..	
		100	139	92	88	116	92	

APPENDIX II.

(*Vide* answer to unstarred question No. 11, on page 188)

Statement showing the allocation of artsilk yarn from all sources to the various sectors in Madras State during 1962–63.

(IN LAKHS OF KGS.)

Main heads of development. (1)	Total provision 1961-66. (2)	Accounts, 1961-62. (3)	Budget Estimate (Revised), 1962-63. (4)	Revised Estimate, 1962-63. (5)	Budget Estimate, 1963-64. (6)
	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.
I. Agriculture and Community Development—					
Agricultural Production ..	9,66	1,04	1,89	1,33	1,57
Land Development	1,01	21	22	44	23
Minor Irrigation Projects ..	12,80	2,98	3,12	3,40	3,65
Animal Husbandry	3,52	30	70	54	56

1st March 1963]

APPENDIX IV TO THE BUDGET SPEECH—*cont.*

[*For further details please see the Supplement on the Third Five-Year Plan.*]—*cont.*

STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF THE MADRAS STATE UNDER THE THIRD FIVE-YEAR PLAN—*cont.*

Main heads of development. (1)	Total Provision 1961-66. (2)	Accounts 1961-62. (3)	Budget Estimate (Revised), 1962-63. (4)	Revised Estimate, 1962-63. (5)	Budget Estimate, 1963-64. (6)
	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.
I. Agriculture and Community Development—*cont.*					
Dairying and Milk supply ..	2,75	79	97	87	1,02
Fisheries	2,22	24	55	57	59
Forests	2,12	29	42	50	54
Soil conservation	2,50	48	52	55	54
Marketing and Warehousing ..	40	2	8	6	4
Community Development Projects.	20,47	4,17	4,86	4,88	420
Co-operation	4,71	1,21	1,09	1,10	91
Total—I. ..	62,16	11,79	14,42	14,24	13,85
II. Irrigation and Power—					
Irrigation	27,42	4,64	5,15	4,80	4,97
Power Project	1,00,19	18,20	18,50	19,34	20,75
Total—II. ..	1,27,61	22,84	23,65	24,14	25,72
III. Industry—					
Large and Medium Industries ..	3,35	9	12	17	4
Handlooms	8,00	1,43	1,58	1,78	1,38
Small-Scale Industries	8,00	95 }	*2,17	*2,32	*2,35
Industrial Estates	3,20	27 }			
Handicrafts	60	4	11	6	9
Coir	15	1	3	1	4
Sericulture	13	1	4	3	3
Khadi and Village Industries ..	8	..	3	1	2
Total—III. ..	23,51	2,80	4,08	4,38	3,95

* Takes into account a lump-sum savings of Rs. 31 lakhs in the Revised Estimate, 1962-63 and Rs. 50 lakhs in the Budget Estimate, 1963-64.

APPENDIX IV TO THE BUDGET SPEECH—*cont.*

[For further details please *see* the Supplement on the Third Five-Year Plan.]—*cont.*

STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF THE MADRAS STATE UNDER THE THIRD FIVE-YEAR PLAN—*cont.*

Main heads of development. (1)	Total provision, 1961-66. (2)	Accounts, 1961-62. (3)	Budget Estimate (Revised), 1962-63. (4)	Revised Estimate, 1962-63. (5)	Budget Estimate, 1963-64. (6)
	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.	RS. LAKHS.
IV Transport and Communication—					
Roads	11,00	2,20	2,05	2,35	2,3[illegible]
Tourism	25	..	6	3	..
Total—IV.	11,25	2,20	2,11	2,38	2,34
V. Education—					
Education	25,43	2,59	3,96	4,50	5,39
Cultural activities	21	2	3	4	2
Technical Education	6,52	73	1,20	1,17	*1,29
Total—V.	32,16	3,34	5,19	5,71	6,70
VI. Health—					
Water-supply and Drainage—Corporation	2,00	46	1,00	81	1,45
Water-supply—Urban	7,50	1,13	1,41	1,34	1,05
Water-supply—Rural	1.50	38	14	15	4
Other Health Schemes	10,50	3.04	2,75	2,71	2,52
Total—VI.	21,50	5,01	5,30	5,01	5,06
VII. Welfare of Backward Classes	3,26	75	71	80	74
VIII. Social Welfare	52	..	3	6	5
IX. Labour Welfare	1,33	9	26	20	41
X. Housing and Urban Development	7,00	1,14	1,42	1,32	92
XI. Statistics	24	..	4	2	3
XII. Miscellaneous	35	4	6	6	6
Grand Total	2,90,89	50,00	57,27	58,32	59,83

*Takes into account a lump-sum savings of Rs. 25 lakhs.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 2nd March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

விவசாயிகள் (வருமானம்).

**93 கேள்வி.—திரு. ஆர். அப்துல் கலீல்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ் நாட்டில் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாய மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவர்களின் ஆண்டு நிகர வருமானம் எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) 1961 ஜனத்தொகைக் கணக்கின் படி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாய மக்களின் எண்ணிக்கை 92,86,207.

(இ) 1956-57-ல் நடத்திய இரண்டாவது உழவுத் தொழிலாளர் விசாரணை அறிக்கையின் பிரகாரம், ஒரு உழவுத் தொழிலாளியின் குடும்பத்தில் ஆண்டுச் சராசரி வருமானம் ரூ. 375.

(*a*) As per the 1961 Census the number of agriculturists actually doing agricultural work is 92,86,207.

(*b*) As per the report on the Second Agricultural Labour Enquiry for 1956-57 the average annual income of an agricultural labour household is Rs. 375.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை: இந்த விவரத்தை ஜில்லா வாரியாகக் கொடுக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: ஜில்லாவாரியாக என்னிடத்தில் தகவல் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்களிலே, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்தக் கேள்வி விவசாயத் தொழிலாளியின் சராசரி வருமானத்தைப் பற்றியது. கனம் அங்கத்தினர் கேட்கும் தகவலுக்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[2nd March 1963

திரு. இரா. நெடுஞ்செழியன் : உழவுத் தொழில் செய்பவர்களிலே நிலம் உடையவர் எத்தனை பேர், நிலம் அற்றவர் எத்தனை பேர் ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயிகள் மட்டும் 64,57,833 பேர். விவசாயத் தொழிலாளர்கள் 28,28,234 பேர்.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அமைச்சர் அவர்கள் ஒரு விவசாயினுடைய சராசரி வருமானம் ரூ. 375 என்று குறிப்பிட்டார்கள். இந்த வருமானம் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் ஆரம்பமாவதற்கு முன்பு எவ்வளவாக இருந்தது? இப்பொழுது எவ்வளவு உயர்ந்திருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : 1950-51-ல் கணக்கு எடுத்தபொழுது ரூ. 371-ஆக இருந்தது. 1956-57-ல் ரூ. 375-ஆக உயர்ந்திருக்கிறது. 1950-51-ஐக் காட்டிலும், 1956-57-ல் ரூ. 4 அதிகமாகியிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் தந்த பதிலிருந்து, விவசாயத் தொழிலாளர்களின் வருமானம் நாள் ஒன்றுக்கு ரூ. ஒன்றாக இருக்கிறது. இதை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயத் தொழிலாளிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காகத்தான் சர்க்கார் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களில் எத்தனை பேர் கடன் பட்டுள்ளனர் ?

கனம் திரு. பூ. கக்கன் : அதைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : விவசாயிகளுடைய சராசரி வருமானத்தைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தத் தொழிலுக்காகச் செய்யப்படுகிற செலவு அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : செலவை எல்லாம் கழித்துத்தான் வருமானம் கணக்கிடப்பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know, Sir, what the comparative position is between the industrial labourers and the agricultural labourers during 1956-57 ?

THE HON. SRI P. KAKKAN : Sir, the question is only about the agricultural labourers and not about the industrial labourers.

2nd March 1963]

திரு. முனு ஆதி : நம்முடைய விவசாயத் தொழிலாளர்களுடைய வருமானம் இதர மாநிலங்களைவிட அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதர மாநிலங்களை ஒப்பிட்டு என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஐந்து ஏக்கருக்குக் குறைவான நிலம் உடையவர்கள் எத்தனை பேர் என்பதை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை : இப்பொழுது ஏற்பட்டிருக்கும் விலை வீழ்ச்சியினாலும், வரி உயர்வினாலும் விவசாயிகளுடைய வருமானம் குறைந்திருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு இடத்தில் விலை உயர்ந்திருக்கிறது, ஒரு இடத்திலே குறைந்திருக்கிறது. இதை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கும் வர முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய விவசாயிகளுடைய மொத்தக் கடன்கள் எவ்வளவு இருக்கும்? அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஏதாவது நடவடிக்கையை சர்க்கார் மேற்கொண்டுள்ளார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்களின் மொத்தக் கடன்களைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்லப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : விவசாயிகளுடைய சராசரி வருமானம் எவ்வளவு என்று மாவட்ட வாரியாகச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : வேறு ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் தகவல் இல்லை என்று சொன்னேன்.

திரு. க. ர. நல்லசிவம் : கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த கணக்குப் பிரகாரம் மூன்றில் ஒரு பகுதியினர் நிலமில்லாத விவசாயிகளாக இருக்கின்றனர். சமீபத்தில் நிறைவேற்றிய நிலச் சீர்திருத்தச் சட்டங்களினால் இதிலே எவ்வளவு பேர் நிலமுள்ளவர்களாக மாற்றப்படுவார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

திரு. அ. கு. சுப்பையா : விவசாயத் தொழிலாளர்களுக்கு வருட வருமானம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயத் தொழிலாளிக்குத்தான் வருட வருமானம் ரூ. 375 என்று சொன்னேன்.

[2nd March 1963

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: விவசாயத் தொழிலிலிருந்து கிடைக்கின்ற வருமானம் குறைந்து விடுகிற காரணத்தால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியானால், அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: விவசாயத் தொழிலாளிகளின் மூலமாகத்தான் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்பதை எல்லோரும் அறிவார்கள். அவர்களின் வருமானத்தைப் படிப்படியாக உயர்த்துவதற்கான ஏற்பாடுகளைத்தான் அரசாங்கம் செய்து வருகிறது.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு: விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண் தொழிலாளிகளுடைய வருமானம் எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: பெண்கள், ஆண்கள், என்று கணக்கு இல்லை. விவசாயத் தொழிலாளிகள் யார் என்று பொதுவாகத் தான் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: விவசாயிகளுடைய வருமானம் மிகவும் குறைந்திருக்கிற காரணத்தால், அதை உயர்த்துவதற்கு அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உரம், பின்னுக்கு விவசாயக் கருவிகள், இவற்றின் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அதற்காகத்தான் விவசாயிகளுக்கு கடன்கள் கொடுத்து, எவ்வளவு தூரம் ஒத்தாசை அளிக்க முடியுமோ அவ்வளவு தூரம் அளித்து, உற்பத்தியைப் பெருக்கி அதன்மூலம் அவர்களுடைய வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்று கூறப்பட்டிருக்கிறது. ரூ. 375 வருட வருமானத்தை வைத்துக்கொண்டு, விவசாயிகள் தொழுது உண்ணுமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்களா என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: விவசாயத் தொழிலாளியினுடைய வருமானம் வருடத்திற்கு ரூ. 375 என்று சொன்னேன். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்பதை இன்று நேற்றல்ல, பல்லாண்டுகளாகவே அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. அதனாலேதான் விவசாயிகளுக்கு முதலிடம் கொடுத்திருக்கிறோம். இந்த பட்ஜெட்டைப் பார்த்தால்கூட அது தெரியவரும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: விவசாயிகளின் வருமானம் குறையாமல் இருப்பதற்கு, அவர்களுக்கு ஒரு ஸ்திரமான வாழ்க்கையை நடத்துவதற்கும் கால்நடை இன்ஷூரன்ஸ், கிராப்

2nd March 1963]

இன்ஷூரன்ஸ் போன்ற திட்டங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: இவை அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன. கவனித்துப் பார்த்து, படிப்படியாகச் செய்யப்படும்.

ஹோமியோபதி மருத்துவர்கள்

* 94 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹோமியோபதி மருத்துவர்களை அரசாங்கம் அங்கீகரித்து கிராமங்களில் மருத்துவர் இல்லாத குறையைத் தீர்க்கத் திட்டமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், அலோபதி முறையைவிட வியாதிகள் நல்ல முறையில் ஹோமியோபதி முறையில் தீர்க்கப்படுகிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் அதைப்பற்றி அரசாங்கத்திற்கும் தெரிந்திருப்பதன் காரணத்தால் ஹோமியோபதி முறையில் சைன்டிபிக் ரீதியாக பயிற்சி பெற்ற டாக்டர்களைப் பெறுவதற்கு ஹோமியோபதி கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார், தற்போது இந்த யோசனை இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஹோமியோபதி முறையில் பட்டம் பெற்ற டாக்டர்களை தனிப்பட்ட முறையில் ஆஸ்பத்திரிகளை நடத்த அனுமதித்துள்ளபோது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அவர்களை நியமிக்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஹோமியோபதி டாக்டர்களை இன்னும் ரிஜிஸ்தர் செய்யவில்லை. அவர்களை ரிஜிஸ்டர் செய்து, பட்டம் கொடுத்த பிறகுதான் அவர்களை டிஸ்பென்சரிகளில் நியமிக்க முடியும். அவர்கள் ரிஜிஸ்தர் ஆன பிறகுதான் அவர்களை டிஸ்பென்சரிகளில் நியமிக்கக்கூடிய உத்தேசம் நமக்கு ஏற்படும்.

திரு. வை. சங்கரன்: ஹோமியோபதி முறை எந்தவிதமான நன்மையையும் அதிகமாக ஏற்படுத்தாவிட்டாலும், அதிகப்படியான தீங்கு விளைவிக்காத காரணத்தாலும், மருந்து வாங்குவதாக இருந்தால் அதிகப்படியாக செலவு செய்ய வேண்டியதாக இல்லாமல் இருப்பதாலும், மலிவான விலையில் மருந்துகளை வாங்கக் கூடியதாக இருப்பதாலும் அதிகப்படியான ஹோமியோபதி டாக்டர்களை கிராமங்களில் நியமிக்க முன் வருவார்களா? கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் அதிகப்படியாக பணத்தைக் கொடுத்து மருந்துகளை வாங்க முடியாமல் இருக்கக்கூடிய

காரணத்தாலும் ஹோமியோபதி டாக்டர்களை கிராமங்களில் அதிகப்படியாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது சம்பந்தமாக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் இப்பொழுது வந்திருக்கிறது. அந்த ரிப்போர்ட் சட்டசபையின் முன் வைக்கப்படும். அதன் பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும். அது முடிவான பிறகு கனம் அங்கத்தினர் கூறுகிற தகவலுக்குப் பதில் கொடுக்க முடியும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் சிற்றூர்களில் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அவர்களைச் சிற்றூர்களுக்கு அனுப்பிவைத்து சிற்றூர்களில் அவர்கள் மருத்துவம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினருடைய சஜ்ஜஷனை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். சிற்றூர்களில் எம்.பி.பி.எஸ் டாக்டர்கள் வேண்டுமென்ற மனப்பான்மை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதையும் ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டாக்டர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் அதிகப்படியான சித்த, ஆயுர்வேத, யூனனி முறைக் கல்லூரிகளை வைத்து அதிகப்படியான டாக்டர்களுக்கு பயிற்சி கொடுக்க இன்னும் அதிகப்படியான கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தினுடைய திட்டம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது சித்த, யூனனி, ஆயுர்வேத கல்லூரிகளைத் தனியாக ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது. அவைகளைக் கூடிய சீக்கிரம் ஏற்படுத்தலாம் என்று நம்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் சிற்றூர்களில் போய் மருத்துவம் பார்க்க மறுப்பதற்குக் காரணம் அங்கு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் குறைவாக இருக்கிற காரணம் என்று தெரிய வருகிறது. ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சிற்றூர்களில் டாக்டர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுத் தான் வருகிறது. தற்போது வீட்டு வசதிகள் கூட செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கேள்வியில் ஹோமியோபதி மருத்துவர்களை அரசாங்கம் அங்கீகரித்து கிராமங்களில் மருத்துவம் இல்லாத குறையைத் தீர்க்க திட்டமுண்டா என்று இருக்கிறது. அதற்கு "இல்லை" என்று பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்

பொழுது அப்படி அங்கீகரிக்கவில்லை என்றால் இப்பொழுதுள்ள டாக்டர்கள் அங்கே மருத்துவம் செய்ய முடியாமல் போய் விடும். ஆகவே இப்பொழுதுள்ள நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுதுள்ள சட்டத்தின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டாக்டர்களைத்தான் அங்கு போட முடியும். அவர்களை ரிஜிஸ்தர் செய்வதற்கான ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படி அவர்கள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட பிறகு தான் நடைமுறையில் உள்ள டிஸ்பென்சரிகளில் போடுவதற்கு முடியும். அப்படிப் போட வேண்டும் என்றுதான் உத்தேசம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, சித்த முறை மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள், யூனனி மருந்துகள் முதலியவைகள் மலிவாக ஏழைகள் வாங்கக்கூடிய முறையில் இருப்பதால் அவைகளையே ஏழை மக்கள் வாங்கக்கூடிய அளவிற்கு அரசாங்கம் உதவி அளிக்க, அரசாங்கம் அதற்கு வேண்டிய திட்டமிட ஏதாவது உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினருடைய ஆலோசனை கவனிக்கப்படும்.

திரு முனு ஆதி : அரசாங்கத்திற்கு இதில் ஊக்கம் அளிக்க திட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தனிப்பட்ட முறையில் கிராமங்களில் ஹோமியோபதி டாக்டர்கள் டிஸ்பென்சரிகளை வைத்து நடத்தினால் அவைகளுக்கு மானியம் கொடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கெனவே இருக்கக் கூடிய டிஸ்பென்சரிகளுக்கு மானியம் கொடுத்துக்கொண்டு தானிருக்கிறார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி: கிராமங்களில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளில் இருக்கும் டாக்டர்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அந்த உத்தேசம் இல்லை.

திரு. மு. பொ. வடிவேலு : கிராமப் பஞ்சாயத்துக்களில் அதிகப்படியான ஹோமியோபதி டாக்டர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தும் ஒரு வருட காலமாக அவர்களுக்கு இன்னும் சம்பளம் கொடுக்கப்படவில்லை. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படித் தெரியுமானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அப்படி ஒரு 'ரெப்ரெசென்டேஷன்' வந்திருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

[2nd March 1963

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஸார், இந்த ஹோமியோபதி டாக்டர் பயிற்சிக்குக் குறுகிய காலப் பயிற்சி என்றும், நீண்ட காலப்பயிற்சி என்றும் திட்டம் இருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இது சம்பந்தமாக ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை லா டிபார்ட்மெண்ட் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதன் பிறகு அதைப்பற்றித் தெரிய வரும்.

திரு. சி. பொன்னுசாமி: கனம் சபா நாயகர் அவர்களே, ஹோமியோபதி சம்பந்தமான மசோதா எப்போது வரும்? அந்தக் குழுவின் அறிக்கை வந்து விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: குழுவின் அறிக்கை வந்து விட்டது. அதை லா டிபார்ட்மெண்ட் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அது கூடிய சீக்கிரத்தில் வரும்.

திரு. ஆ. துரையரசன்: தனிப்பட்ட ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டில் படித்தவர்களுக்கு கலெக்டர் அவர்களால் எந்த அடிப்படையில் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படுகிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இன்ஸ்டிடியூட்களிலெல்லாம் ஹோமியோபதியில் தேர்ச்சி பெற சிலபஸ் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய கல்விக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Homœopathic Dispensaries

* 95 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to permit the Panchayat Union Councils to open Homœopathic dispensaries to provide more medical aid and, if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால் எல்.ஐ.எம். கோர்ஸை மறுபடியும் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியான உத்தேசம் இல்லை.

Elementary Schools

* 96 Q.—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of aided elementary schools under private management as on 1st August 1962.

2nd March 1963]

(b) the number of elementary schools under private management, for which recognition was accorded during the year 1961–62; and

(c) the rules for opening new elementary schools in private sector?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) 7,841.

(b) 61.

(c) A copy of the rules has been placed in the Legislature Library for the reference of Members.

Sri C. CHIRANJEEVULU NAIDU: Have the Government received any representation from the Panchayat Union Councils that the aided elementary schools which are run in the Panchayat Union Council areas should be handed over to them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, I have no information.

* 97 Q.—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to place on the table of the House a copy of the rules in force regarding the assessment of grants to elementary schools under private managements in the State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: A copy of the pamphlet "Rules relating to elementary schools" is placed in the library of the Legislature for reference.

Food-Poisoning (Papanasam)

* 98 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of cases of death among the students of papanasam Board High School due to food-poisoning on 9th September 1962?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இரண்டு பேர்கள் இறந்தார்கள்.

Steel Plant (Salem)

* 99 Q.—Sri A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the starting a State Plant at Salem?

The Hon. Sri R. VENKATARAMAN: The Government of India have named Messrs. M. N. Dastur and Company Private Limited, Calcutta as consultants for the steel project on Salem iron ore and Neyveli lignite. The consultants are now engaged on the preparation of the detailed project report for the project. It is expected that consultants would submit the project report towards the latter part of this year.

[2nd March 1963

*100 Q.—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a committee of experts has been deputed to prepare the project report for the localtion of the steel plant based on Salem iron ore and Neyveli lignite;

(b) whether the results of the tests made in German Democratic Republic have been received; and

(c) when the said committee is expected to submit the report to the Government?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) The Government of India in the Ministry of Steel and Heavy Industries have named Messrs. M. N. Dastur and Company, Metallurgical Consultants, as consultants for the Neyveli-Salem Steel Project and have commissioned them to prepare a detailed project report for the project.

(b) Yes, Sir.

(c) The consultants are expected to submit their report to the Government of India during the latter part of this year.

திரு. கே. ஏ. மதியழகன்: கடந்த ஆண்டு இது பற்றிய ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள், 'மனம் போல் மாங்கல்யம்' என்று சொன்னுர்கள். இந்த உருக்காலையின் அவசியத்தை முன்னிட்டு இந்தத் திட்டம் கிடைத்தாலுங்கூட, இதை உடனே நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி' என்று சொல்வதுபோல இல்லாமல், இந்த உருக்காலையை அமைக்க இந்தச் சர்க்கார் என்ன துரித நடவடிக்கை எடுக்கப்போகிறுர்கள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இத்தனை 'ப்ரிஃபேஸ்' வேண்டியதில்லை. சர்க்கார் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

கனம் சபாநாயகர்: இரண்டு பழமொழிகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றதே!

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையில் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியின் அளவு என்ன என்பதை அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஐந்து லட்சம் டன் இரும்பு உருக்கு உற்பத்தி செய்வது என்பது இப்பொழுது திட்டம். அதற்கான ரிபோர்ட்டைத்தான் தஸ்தூர் அண்ட் கம்பெனி என்கிற consultants தயார் செய்து கொண்டிருக்கிறுர்கள்.

திரு. வை. சங்கரன்: இந்தத் துறையில் அந்தக் கம்பெனிக்கு என்ன முன் அனுபவம் உண்டு என்பதைச் சர்க்கார் தெரிந்து

2nd March 1963]

கொண்டிருக்கிறதா? அப்படியென்றுல் அந்தக் கம்பெனிக்கு என்ன முன் அனுபவம் இருந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தியாவிலேயே நல்ல சிறந்த இரும்பு உருக்கு நிபுணர்கள் (எக்ஸ்பர்ட்ஸ்) என்று சொல்லக்கூடிய கம்பெனி தஸ்தூர் அண்டு கம்பெனியாகும். அவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல, இன்னும் உலகத்தில் பல பாகங்களில் உருக்காலைகளை வைப்பதற்கு அவர்கள் ப்ளு ப்ரிண்ட், ப்ராஜெக்ட் ரிபோர்ட் முதலியவைகளையெல்லாம் கொடுத்திருக்கிறுர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர்: சேலம் உருக்காலையை ஏற்படுத்திய பிறகு, அது நம்முடைய தமிழ்நாட்டின் சுய தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா? தமிழ்நாட்டின் இரும்பு உருக்குத் தேவை என்ன என்பதையும், சேலம் இரும்பு உருக்காலையிலிருந்து கிடைக்கக்கூடியது எவ்வளவு என்பதையும் சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்முடைய தேவையை என்றைக்கும் பூர்த்திசெய்ய முடியாத தேவை நமக்கு இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அவா. ஐந்து லட்சம் டன் இரும்பை வைத்துக் கொண்டு நாம் நம்முடைய தேவை முழுவதையும் பூர்த்தி செய்ய முடியாது. மேற்கொண்டு விஸ்தரிக்க வேண்டிய அவசியம் நான்காவது திட்டத்தில் ஏற்படலாம்.

திரு. இராம அரங்கண்ணல்: மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிற்குள் சேலத்தில் இரும்பு ஆலையின் ஒலி கேட்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜோஸியம் தெரியாது. ரிபோர்ட் எழுதுவதற்குச் சாதாரணமாக ஒரு வருஷ காலம் பிடிக்கும். ரிபோர்ட் என்றுல் அறிக்கையைப் போல் அல்ல. ப்ளு ப்ரிண்ட் போட வேண்டும். அதாவது, எந்த இடத்தில் என்ன மாதிரி இயந்திரங்கள் அமைக்க வேண்டும், என்ன அளவிலே இருக்கவேண்டும் என்றெல்லாம் அந்த ப்ளு ப்ரிண்டிலே குறிப்பிட வேண்டும். அந்த விதமான ப்ராஜெக்ட் ரிபோர்ட் எழுத சற்றேறக்குறைய ஒன்பது மாதங்களிலிருந்து ஒரு வருஷம் வரையில் ஆகும். அது வந்தவுடன் மேற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சாதாரணமாக ஒரு உருக்காலை கட்டுவதற்கு இரண்டு வருஷகாலம் பிடிக்கும்.

திரு. மு. கருணாநிதி: 1958-ஆம் ஆண்டிலிருந்தே, 'இந்தக் கனிப் பொருள் ஆராய்ச்சியிலே இருக்கிறது' என்ற நிலைமையில் இங்கு பதில் சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு என்ன காரணம்? மத்திய சர்க்காருடைய தாமதப் போக்கா? அல்லது, மாநில சர்க்கார் அதைப் பிடிவாதத்தோடு கேட்காத அலட்சியப் போக்கா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம்மிடத்தில் இருக்கும் கனிப் பொருள் இந்தியாவில் மற்றப் பாகத்திலிருக்கும் கனிப் பொருள்களைவிடத் தரம் குறைவானது. இந்தத் தரம் குறைவான கனிப் பொருளை எப்படி உபயோகப்படுத்துவது என்பதற்குப் பலவிதமான பரிசோதனைகள் செய்ய வேண்டியிருக்

இன்றன. ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, பொது மக்களுடைய பணத்தைக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டால், பின்னால் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டம் நம்முடைய பொது மக்களைத்தான் சாரும். இந்தக் குறைவான தரமுடைய கனிப் பொருளை எப்படிச் சிக்கனமாக, கட்டுப்படியாகும்படியான முறையிலே உபயோகப்படுத்த வேண்டும் என்பதற்கு நம் நாட்டில் மாத்திரமல்லாமல், பல நாடுகளிலும் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டியிருக்கின்றன. அதனால் தான் இதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, is there any other company which has applied for this whose terms and conditions are more favourable than those of Messrs. Dastur company?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not think so. I have at any rate no information on that.

திரு. ஜே. மாதா கவுடர்: நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை லட்சம் டன் அதிக உற்பத்தி செய்யவேண்டும் என்று ஏதாவது மதிப்பீடு இப்பொழுதே ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? நம்முடைய மாநிலத்தில் சேலம் இரும்பு உருக்காலையில் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எவ்வளவு இரும்பு உருக்கு வேண்டும் என்பது எத்தனை தொழில் லைசென்ஸ்கள் பெறுகிறோம் என்பதைப் பொறுத்தது. நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எத்தனை அதிகமான லைசென்ஸ் பெறுகிறோம் என்பதையெல்லாம் கணக்குப் போட்டு, நான்காவது திட்டத்தில் எவ்வளவு வேண்டும் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். இப்பொழுதிருக்கும் நிலைமையில் நமக்கு அதிகமாக வேண்டும். ஏனென்றால், அதிகமாக இப்பொழுது இரும்பு உருக்கு உபயோகிக்கும் தொழிற்சாலைகள் வைக்கப் பலர் முன்வந்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல முடியும்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: சேலத்தில் உருக்காலை நிறுவ இடம் முதலியவை தேர்தெடுக்கப்பட்டுவிட்டனவா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது எந்த இடத்தில் நிறுவப்படவேண்டும் என்பதைக் குறித்து தஸ்தூர் அண்டு கம்பெனியார் ஆராய்வார்கள். மூன்று, நான்கு இடங்களைப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். 'டெக்னிகல் ஒபினியன்' ஐப் பொறுத்து முடிவு செய்யப்படும்.

திரு அ. துரைசாமி: இரும்பு உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய இடத்தை நிபுணர்கள் தேர்ந்தெடுத்த பின்—சர்க்கார் அதே இடத்தில் வைப்பார்களா? அதுபற்றிச் சர்க்காருடைய அபிப்பிராயம் எப்படி இருக்கும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பொதுவாக, நிபுணர்களுடைய அபிப்பிராயத்தைத்தான் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் அதிலே தவறு ஏற்பட்டுவிட்டாலும், அது சர்க்காருடைய தவறாக இருக்காது.

Medical College (Admission)

*101 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of applications received for admission in the Medical College during the year 1962-63;

(b) the number of candidates selected;

(c) the number of candidates selected community-wise and district-wise; and

(d) the basis of selection?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ), (உ), (எ).—இக் கேள்விகள் சம்பந்தமாக ஓர் அறிக்கை* சட்டசபையில் வைக்கப்பட்டுள்ளது?

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு, க்ரூப் ஏ-3 இல் நிர்ணயிக்கப்பட்டிருந்த விருப்பப் பாடத்தின் பெயரும், கிரேடும் மேலும் மற்றத் துறைகளின் பெயர்களும் ஒவ்வொன்றுக்கும் நிர்ணயித்திருந்த மார்க்குகள் எத்தனை என்றும் அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: The marks awarded in Part III, Group (a) of the pre-University examination and the marks awarded by the selection committee for extra-curricular activities மொத்தமாக 75 மார்க்குகள் வைத்திருந்தார்கள். அது இல்லாத போது N.C.C. training, extra-curricular activities, social service; general physical condition, endurance, general ability and aptitude, இவைகளுக்கென்றும் தனிப்பட்ட மார்க்குகள் வைத்திருந்திருந்தார்கள்.

திரு. கே. எ. மதியழகன்: மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை நடைபெறும் ஆண்டில் உயர்த்துகிற உத்தேசம் உண்டா? அப்படி உத்தேசம் உண்டானால், எத்தனை இடங்களில் உயர்த்துவதாக உத்தேசித்திருக்கிறார்கள்? இல்லையேல், பயிற்சி ஆண்டுகளைக் குறைப்பதற்கும் ஏதாவது சர்க்காரிடத்தில் உத்தேசம் இருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 100 இடங்கள் உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டு. மற்றக் கேள்விகளுக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக் கொண்டதுபற்றி ஜில்லாவாரியாக விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஜனத்தொகை அடிப்படையில் பிரித்துக் கொடுத்திருக்கிறார்களா? அப்படி ஜனத்தொகை அடிப்படையில் கொடுத்திருந்தால் நீலகிரி மாவட்டத்திற்குச் சென்ற ஆண்டில்

* Printed as Appendix I on pages 392-393.

[2nd March 1963

ஏழாக இருந்ததை ஆருகக் குறைக்கக் காரணம் என்ன? கனம் அமைச்சர் அவர்கள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்களாவது எங்கள் பேரில் கருணை வைப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஜில்லா வாரியாகத்தான் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, டாக்டர்கள் இல்லாத குறையை நீக்குவதற்குப் புதிய மருத்துவக் கல்லூரிகள் எத்தனை திறக்கப்பட இருக்கின்றன? லேடி டாக்டர்கள் இல்லாத குறையைப் போக்க அவர்களுடைய சத விகிதத்தை உயர்த்துவதற்கான திட்டம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது 20 சத விகிதம் பெண்களுக்கு இடங்கள் ஒதுக்கியிருக்கிறோம். காலேஜ் திறப்பதெல்லாம் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Hydro-Electric Project (Cauvery)

*102 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the proposals of the Mysore Government to construct a Hydro-Electric Project across the Cauvery in their regions;

(b) whether the Madras Government were consulted in the matter; and

(c) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) & (c) Do not arise.

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள்

*103 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீப காலத்தில் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(இ) தலைமறைவாக இருந்தவர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) சென்னை சட்ட மன்ற உறுப்பினர் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

(இ) தலைமறைவாக ஒருவரும் இல்லை.

2nd March 1963]

Madras City (Extension)

*104 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether there is any proposal for the formation of greater Madras by expanding the areas of the Madras City Corporation; and

(b) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம். ஐயா.

(இ) இந்திய அரசினர் ஊக்குவிக்கும் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அடியிற்கண்ட ஆறு புறநகர்களை (Neighbourhoods) அபிவிருத்தி செய்ய மாநில வீட்டு வசதி போர்டு உத்தேசித்துள்ளது:—

(1) கோடம்பாக்கம்—புதூர் புறநகர் (பகுதிகளில் I, II, III)

(2) தென் சென்னைப் புறநகர்.

(3) மேற் சென்னைப் புறநகர்.

(4) வட சென்னைப் புறநகர்.

(5) கொரட்டூர் புறநகர்.

(6) மணலி புறநகர்.

இப் புறநகர்களில் சில பகுதிகள் சென்னை நகரின் எல்லைக்கு வெளியே இருக்கின்றன. இப் பகுதிகளில் இன்றியமையாத சில வசதிகள் இப்போது இல்லை. இவற்றில் இந்த வசதிகளை ஏற்படுத்துவதற்காக இப் பகுதிகளையும் சென்னை நகரின் எல்லைக்குள் சேர்க்க வேண்டுமென்று போர்டு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. 1919-ம் ஆண்டு சென்னை நகர முனிசிபல் கார்ப்பரேஷன் சட்டத்தின்படி, அரசினர் சென்னை மாநகராட்சிக் கமிஷனரையும், மதுரூஸ், செங்கற்பட்டு ஜில்லாக் கலெக்டர்களையும் கலந்தாலோசித்து சென்னை நகர எல்லைகளை விளம்பரம் மூலம் அறிவிக்க வேண்டும். இது விஷயம் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: சென்னை நகர அபிவிருத்திக்கு 9-10 a.m.
சென்னை நகரசபையினரால் பல வருஷங்களுக்கு முன்னால் மாஸ்டர் ப்ளான் தயாரித்து அனுப்பப்பட்டதே, அது எந்த கட்டத்தில் இருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. இராம அரங்கண்ணல்: சென்னை நகர சீர் அமைப்பு பற்றி யேல் பல்கலைக்கழக இரண்டு பேராசிரியர்கள் தெரிவித்த கருத்துக்களின்மீது அரசினர் எடுத்த நடவடிக்கை என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அதற்கு என்னிடம் இப்போது தகவல் இல்லை.

[2nd March 1963

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகர விஸ்தரிப்புத் திட்டத்தை அடுத்த நகராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னால் நிறைவேற்றிவிட முடியாதா என்று அறியவிரும்புகிறேன்.

MR. SPEAKER : What is the connection between the election and extension ?

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி பெரிய நகரங்களை நகர எல்லைக்குள்ளேயே விஸ்தரித்துக்கொண்டு போவதன் காரணமாக ஜனநெருக்கடியும், சுகாதாரக் குறைவும் ஏற்படுகிறது. ஏற்கனவே பெரிய நகரங்களுக்கு அருகாமையில் சிறு சிறு நகரங்களை அமைக்கும் திட்டம் இருக்கிறதே, அதன்படி சென்னை நகரத்திற்குப் பக்கத்தில் உள்ள விவசாயத்திற்குத் தகுதியில்லாத நிலங்களை வாங்கி சிறுசிறு நகரங்களை அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சென்னை நகரத்திற்கு அருகாமையில் இருக்கும் நகரங்களை சென்னை நகரத்தோடு இணைக்கும் திட்டமே இந்த அடிப்படை நோக்கத்தைக் கொண்டது தான்.

திரு. முனு ஆதி : அர்பன் ஏரியா என்று தாம்பரம் வரையில் இருப்பதனால் சென்னை நகரத்தோடு தாம்பரத்தை இணைக்கும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அந்த உத்தேசம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த விஸ்தரிப்புத் திட்டத்தினால் சென்னை நகரம் 20 லட்சம் ஜனத்தொகைக்குமேல் கொண்ட 'ஏ' கிளாஸ் நகரமாக மாற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : நகரங்களை விஸ்தரிப்பதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இப்போது இருக்கிற தேசீய நெருக்கடி நிலைமையை உத்தேசித்து விவசாய நிலங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, நகரத்திற்குள் இருக்கும் நிலங்களிலேயே ஐந்தடுக்கு, ஆறு அடுக்கு, ஏழு அடுக்கு மாட மாளிகைகளைக் கட்டி ஜாகைப் பிரச்னையைச் சமாளிக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அதிகமான அளவு நகரத்தில் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே ஜாகை நெருக்கடியைச் சமாளிக்க இருக்கக்கூடிய கட்டிடங்களை ஆறு, ஏழு அடுக்காகக் கட்டுவதோடுதான் இத் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நகர எல்லைக்குள் இருக்கும் நிலத்தைக் கொண்டு மட்டுமே இப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்ற காரணத்திற்காக இது செய்யப்பட்டது.

2nd March 1963]

திரு. எஸ். பொன்னுசாமி : இப்போது நகரம் பெரிய அளவு விஸ்தரித்துக் கொண்டே போவதனால் குடிதண்ணீர் வசதி போதுமான அளவு செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையானால் கோதாவரித் தண்ணீரைக் கொண்டுவர ஏற்பாடாகியிருக்கிறதா? மேலும் 1964-ஆம் ஆண்டுக்குள் விழுப்புரம் வரையில் மின்சார ரயில் வசதி ஏற்படப் போவதனால் அந்த மின்சார லைனை ஒட்டியே நகரம் விஸ்தரிக்கப்படுவது மக்களுக்கும் வசதியாக இருக்குமாதலால் ஏதாவது திட்டம் போட்டு பரிசீலனை செய்யப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டு மூன்று இலாகா சம்பந்தப்பட்ட கேள்விகளை ஒன்றாகச் சேர்த்து கனம் அங்கத்தினர் கேட்கிறார். தனித் தனிக் கேள்வியாக அந்த அந்த இலாகா அமைச்சரிடம் கேட்டால் பதில் கிடைக்கும்.

Housing facilities (Tiruchirappalli)

* 105 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of schemes proposed to be taken up by the State Housing Board for improving housing facilities in Tiruchirappalli town and the neighbourhood?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the Table of the House.

Defence Fund

* 106 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to compel the industrialists to pay a certain percentage in the gross profit towards the Defence Fund?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. There is no such proposal

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, கலெக்டர்கள் அந்த அந்த மாவட்டங்களில் கண்டிப்பாக யுத்த நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பதாக ஒரு பத்திரிகையில் வந்த செய்திக் குறிப்பு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படியானால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகைகளில் வருவதை எல்லாம் வைத்துக்கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்வதில்லை.

---

[a] Printed as Appendix II on pages 393–395.

[2nd March 1963

க்ஷயரோக மருத்துவ மனை (தாம்பரம்)

* 107 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பரத்திலுள்ள க்ஷயரோக மருத்துவ விடுதியில் நோயாளிகளுடன் நெருங்கிப் பணி புரியும் நர்ஸ்கள், வார்ட் பாய்கள் போன்றவர்களுக்கு, அந்நோயிலிருந்தும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் தடுத்துக் கொள்ளத்தக்க போதிய உபகரணங்கள் கொடுக்கப்படுகின்றனவா?

(இ) அம்மருத்துவ விடுதியிலுள்ள கீழ்த்தர சிப்பந்திகளுக்குப் போதிய வகையில் உடைகள் வழங்கப்படுகின்றனவா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) and (b): Yes. All the workers in the Sanatorium entitled for free clothing are supplied clothing periodically according to the scale prescribed by Government.

* 108 கேள்வி.—திரு. முனு ஆதி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாம்பரத்திலுள்ள க்ஷயரோக விடுதியில் பணிபுரியும் திருமணமான நர்ஸ்களுக்குக் குடியிருப்பு வசதி மருத்துவ மனைக்கு அருகாமையிலேயே செய்து கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், அவ்வாறு வசதி செய்து தரும் உத்தேசமுண்டா?

(உ) வேறு ஏதும் சலுகை வழங்கப்பட்டுள்ளதா? ஆம். எனில், என்ன சலுகை?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Family quarters for married nurses to enable them to live with their families are not provided. Furnished accommodation for single person is provided for the nurses in the nurses quarters. Both married and unmarried nurses can reside in the quarters provided they live single without their families.

(b) No;

(c) No special concession is granted to married nurses in respect of accommodation. They are granted compulsory leave for one month for every eleven months of duty by virtue of their working in a T.B. Sanatorium.

திரு. முனு ஆதி: 107-வது கேள்வியை ஒட்டி நான் இந்த உப கேள்வியைக் கேட்கிறேன். அவர்கள் காச நோய் மருத்துவ மனையில் தங்கள் உயிரையே பணயம் வைத்துப் பணியாற்றிக் கொண்டிருப்பதனால் மாதத்திற்கு ஒரு முறை அலவன்சு கொடுக்கப்படுமா? மேலும் என்ன என்ன சலுகைகள் எல்லாம் அவர்களுக்கு அளிக்கப்படலாம் என்பதற்கு ஒரு தனிக் கமிட்டியை நியமித்துப் பரிசீலனை செய்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்த சானடோரியத்தில் வேலை செய்கிறவர்களுடைய சிரமத்தை உத்தேசித்துத் தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

2nd March 1963]

Arrears of municipal taxes (lapse)

* 109 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Municipal Administration be pleased to place on the table of the House a statement showing:—

(a) the list of municipalities which have allowed taxes and fees to lapse due to time-bar during the years 1958-59, 1959-60 and 1960-61;

(b) the amount of revenue lost in each of these years; and

(c) the details of instructions issued for preventing such lapses in future?

THE HON. SRI S. M. A. MAJID: (a) to (c) A statement[a] is placed on the Table of the House.

SRI C. CHIRANJEEVULU NAIDU: What are the reasons generally stated or the explanation offered by the Municipal Commissioners for such lapses in collecting the arrears of house tax and other taxes?

THE HON. SRI S. M. A. MAJID: Arrears are not in respect of the same tax in all the municipalities. The taxes are different and therefore there may be various reasons for not collecting the arrears.

திரு. வை. சங்கரன்: இந்தப் பட்டியலில் 45 முனிசிபாலிட்டி பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்காக வரி வசூல் செய்து விட்ட முனிசிபாலிட்டிகள் பெயர்கள் இருக்கின்றனவா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவை போகப் பாக்கியுள்ள முனிசிபாலிட்டிகள் ஒழுங்காக வசூல் செய்திருக்கின்றன.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, வீட்டு வரி வசூலாகாத இடங்களைப் பார்த்தால் அநேகமாக வசதி படைத்தவர்களே வரி கொடுக்காமல் இருப்பது தெரியும். இதை அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து அறிந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பணம் வசதி படைத்தவர்கள் கண்டிப்பாகக் கொடுத்துவிடுவார்கள். வசூலாகாததில் இருந்து வசதி இல்லாதவர்களாகத்தான் இருக்கலாம் என்று நினைக்கிறேன்

திரு. கே. மூக்கைய தேவர்: மதுரை போன்ற இடங்களில் சர்க்கார் கட்டிடங்களுக்கே வரி பாக்கி நிற்கிறது ஆகவே சர்க்கார் உடனடியாகத் தங்கள் கட்டிடங்களுக்கு முனிசிபாலிட்டிகளுக்குக் கட்டவேண்டிய வரியைக் கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

[a] Printed as Appendix III on pages 395–396

திரு. கே. ஏ. மதியழகன்: ஏறக்குறைய முழுப் பகுதி முனிஸி பாலிட்டிகள் இந்த வரியைக் கொடுக்காமல் இருக்கிற நிலைமையை உத்தேசித்து என்ன தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்த முனிஸிபாலிட்டிகளில் பூரணமாகவே பணம் வசூலாகாமல் இருக்கிறது என்று அர்த்த மில்லை. கமிஷனர் அநேகமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறார். முடிவான புள்ளிவிவரம் கிடைக்கவில்லை. பில் கலெக்டர்கள் வசூல் நாளில் (Remittance day) ஸ்டேட்மெண்டு கொடுக்கும் போது எல்லாம் கமிஷனர் கவனத்திற்கும் இவை வந்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: கடந்த மூன்று வருஷ காலமாக வசூலாகாமல் இருக்கும் இந்தத் தொகைகளை தற்போதுள்ள அதிகாரிகளைக் கொண்டே வசூலித்து விட முடியுமா? இல்லை யென்றால் புதிதாக ஸ்பெஷல் ஆபீசர்களை நியமித்து இந்தத் தொகைகளை உடனடியாக வசூலிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எவ்வளவு கண்டிப்பாக இருந்தாலும் ஓரளவு வசூலிக்கப்பட முடியாமல்தான் இருக்கும். ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டாலும் பூரணமாக வசூலிக்க முடியும் என்று நம்புவதற்கில்லை.

திரு. சி. பொன்னுசாமி: இந்த மாதிரி வசூலில் பாக்கி ஏற்படாமல் இருக்க சட்டத்தில் ஏதாவது மாறுதல் செய்ய உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அப்படி உத்தேசம் ஒன்றும் இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: முனிசிபாலிடிகளில் வரிகள் மூன்று வருஷ காலம் வசூலிக்கப்படாத நிலைமை இருக்க, பஞ்சாயத்துக்களில் வரிகளை உடனுக்குடன் வசூல் செய்ய வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிட்டிருப்பதன் நோக்கம் என்ன?

MR. SPEAKER: Does the hon. member, Sri R. S. Veerappa Chettiar want to follow the municipalities in not paying the tax?

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, வீட்டு வரி பாக்கி அதிகமான அளவுக்கு வசூல் ஆகாமல் இருப்பதற்கு யார் பொறுப்பாளிகள் என்பதை அரசாங்கம் அறியுமா என அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: வரியை வசூல் செய்வதற்குப் பில் கலெக்டர்கள் இருக்கிறார்கள். அதையெல்லாம் 'செக்' பண்ண கமிஷனர் அவர்கள் இருக்கிறார்கள். இந்தக் காரியங் களைத் துரிதப்படுத்துவதற்கு 'சீப் எலக்டோரல் ஆபீசர்கள்' இருக்கிறார்கள். இந்த வரி பாக்கி நிலைமைகளுக்காக கமிஷனர்

பேரில்கூட கவர்ன்மெண்டிலிருந்து நோட்டீஸ் போயிருக்கிறது. அப்போதைக்கப்போது வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கி. இரா. சம்பந்தம்: ரெவின்யு இனங்களில் வசூலிக்கப் பட வேண்டிய வரிகள் எல்லாம் ஒவ்வொரு வருஷமும் தவறாமல் வசூலிக்கப்பட்டு விடுகிறது. அந்த முறையில் இந்த நகராட்சி வரிகளையும் வசூலிக்க முடியுமா? சாதாரணமாக மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்தாவிட்டால் 'பியூஸை' எடுத்து விடுகிறார்கள். அதே போன்ற ஏதாவது நடவடிக்கையை இந்த வரி வசூலிப் பிலும் எடுத்துக் கொள்ள உத்தேசம் உண்டா? (சிரிப்பு).

(பதில் இல்லை)

Solvency and Property Certificates

* 110 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government are aware that much delay is caused in the issue of Solvency and Property Qualification Certificates by the Tahsildars and Estate Managers to the ryots for applying for loans to the Agricultural Department; and

(b) if so, the action taken for the speedy issue of such certificates to the ryots?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b): It has been reported that some delay is caused in the issue of solvency certificate by Revenue Department in respect of the loans granted to the ryots by the Agriculture Department for the development of Fruit production and Cashewnut cultivation. To obviate such delay, orders have recently been issued empowering the Block Development Officers or the Panchayat Union Commissioners to issue solvency certificates to the loanees under the scheme for the development of cashew and fruit production. No such delay in respect of the other loans granted to the ryots by the Agricultural Department has been reported.

(அ—இ) பழ உற்பத்தியையும் முந்திரிச் சாகுபடியை யும் அபிவிருத்தி செய்வதற்காக விவசாயத் துறையினர் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்கள் சம்பந்தமாக, ஸால்வென்ஸி சர்டிபிகேட் வழங்குவதில் ரெவின்யூத் துறையில் கொஞ்சம் தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது. இத் தாமதத்தை தவிர்ப்பதற்காக இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுபவர்களுக்கு ஸால்வென்ஸி சர்டிபிகேட்டுகளை பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு அரசாங்கம் அதிகாரம் அளித்துள்ளது. விவசாயத் துறையினர் விவசாயிகளுக்கு வழங்கும் மற்ற கடன்கள் விஷயமாக இவ்வாறு தாமதம் ஏற்படுவ தாகத் தகவல் இல்லை.

திரு. ஆர். நாராயணன்: தற்போது பல துறைகளிலே, ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் வாங்க வேண்டிய நிமித்தம் ஏற்பட்டால் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் வில்லங்கம் வாங்க வேண்டிய நிலைமை

[2nd March 1963

வருகிறது. அந்த வில்லங்க சர்டிபிகேட் கொடுக்க ஒவ்வொரு சர்வே நம்பருக்கு 11 ரூபாய் வாங்குகிறார்கள் விவசாயிகள் கஷ்டப்படுகிற நிலைமையை முன்னிட்டு அரசாங்கத்திலிருந்து யாரையாவது அந்த ஆபீசுக்கு அனுப்பி வில்லங்க சர்டிபிகேட் வழங்க வழி வகை செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன்: நான் முன்பே சொன்னபடி 'சால்வன்ஸி சர்டிபிகேட்' வழங்குவதில் இதர துறைகளில் எந்த விதமான தாமதம் இல்லை. பழ உற்பத்தி, முந்திரிச் சாகுபடி ஆகிய இரண்டு துறையில் உள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில்தான் சற்றுத் தாமதம் இருந்து வந்தது. அதைத் துரிதப் படுத்துவதற்காகத்தான் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களுக்கும், பஞ்சாயத்து டெவலப்மெண்ட் கமிஷனர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

Over-bridge (Tiruvottiyur High Road)

* 111 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) the steps taken for expediting the construction of an over-bridge across the Railway level-crossing on the Tiruvottiyur High Road in North Madras; and

(b) whether the work is entrusted to the Corporation of Madras?

THE HON. SRI S. M. A. MAJID: (a) & (b): The Corporation of Madras is constructing the over-bridge at the Tiruvottiyur High Road. The Commissioner, Corporation of Madras has been requested to execute the work expeditiously.

(அ—ஆ): சென்னை மாநகராட்சியால் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வேலையை துரிதமாய் முடிக்குமாறு சென்னை மாநகராட்சிக் கமிஷனரைக் கேட்டுள்ளோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மேம்பாலங்கள் சென்னை நகரில் இன்னும் எத்தனை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன? அவற்றில் தொடங்கப்பட்டவை என்னென்ன? தொடங்கப்படாதவை என்னென்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: எனக்குத் தெரிந்தவரை, கண்ணம்மா பேட்டையில் சைதாப்பேட்டையை இணைக்கும் வகையில் ஒரு மேம்பாலம் கட்டவும், கிரிபிஸ் ரோட்டில் கோடம்பாக்கம் மாம்பலம் நடுவில் ஒரு மேம்பாலம் கட்டவும் சாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் விவரங்கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவும்.

2nd March 1963]

Government Hospital (Dharmapuri)

* 112 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state the present stage of the proposal for the extension of the Government Hospital building at Dharmapuri?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: In view of the present National Emergency, the proposal has been deferred.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அவசர நிலைமை காரணமாக இந்தத் திட்டம் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: தர்மபுரி அரசாங்க ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி அதிகமாக இருப்பதால், இப்போது நாட்டில் நெருக்கடி நிலைமை இருந்தாலும்கூட, அந்த ஆஸ்பத்திரிக்கான கட்டடத்தை ஆரம்பித்து முடிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம அங்கத்தினர் அவர்கள் கேள்விக்கு யோசனை செய்துதான் முடிவு சொல்ல வேண்டும்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

II.—ANNOUNCEMENT.

BUSINESS OF THE HOUSE

MR. SPEAKER: I have to announce to the House that the Business Advisory Committee met yesterday morning and has recommended that six days for general discussion on the Budget for the year 1963-64 from 2nd March to 8th March 1963, and 15 days for Voting on Demands for Grants for 1963-64 from 9th March to 28th March 1963, may be allotted.

Accordingly, under rule 153 (2) of the Madras Legislative Assembly Rules, I have allotted six days for general discussion and fifteen days for voting on Demands for Grants for 1963-64.

The Business Advisory Committee has also decided that Appropriation Bill, will be considered on 29th March 1963 and that official business including discussion on Education policy will be transacted on 1st and 2nd April 1963, and that non-official business be taken up on 30th March 1963.

III.—CALLING ATTENTION TO THE OUT-BREAK OF CHOLERA EPIDEMIC IN THE CITY OF MADRAS.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னை நகரில் 'காலரா' கொள்ளை நோய் பரவியுள்ளதையும் அதைத் தடுக்க அரசினர் மேற்கொண்ட நிரந்தர நிவாரண நடவடிக்கை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [2nd March 1963

களும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் பொது சுகாதார அமைச்சரின் கவனத் திற்கு கொண்டு வருகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

The City of Madras which was completely free from cholera infection during the past three years, reported sudden out-break of cholera in Kodambakkam division during the middle of October 1962. Subsequently a number of cases were reported in certain other parts in South Madras. But although this incidence was brought under control quickly, cases of cholera continued to be reported in North Madras particularly in Tondiarpet and other adjoining areas from 26—11—1962 and this trend persisted till the end of December 1962. Since the beginning of the current year, the situation has been brought well under control in North Madras.

2. On 2nd January 1963, cases of cholera were reported from Pudur area in Kodambakkam division. The population of this area is only about 8,000 and consists of those who migrated from Kanniappanagar and settled in about 20,000 huts constructed by the State Housing Board.

3. All preventive and control measures were promptly taken then and there to control the epidemic. The Health authorities of the City have instructed the Divisional Sanitary Inspectors to give necessary advice to the residents and to keep the surroundings perfectly clean. Inoculation in Pudur area was arranged late in the evenings as the people usually return to their residence only then. Dusk work is also being continued to protect those not yet inoculated.

4. Deflying squads have been posted to the areas to prevent breeding of flies,, to eliminate all sources of breeding in all areas especially in infected area. Flies in all their life stages were aimed to be got rid of.

5. One hundred and fifty-three Health Inspectors/Sanitary Inspectors were deputed to Madras City from the mofussil areas by the Director of Public Health, Madras. They are still being continued for anti-cholera inoculation drive in the City particularly in slums, hutting grounds and pavement dwellings. The anti-choler operations in Madras City have also been placed under the imme- diate and personal supervision of a Special Officer for cholera control work appointed by the Madras Corporation. Health Propaganda work also is being vigorously carried out. Out of the total population of 8,000 in Pudur, almost all the people have been inoculated. In addition to inoculation work and chlorination of water sources and disinfection of all infected areas, the sanitary inspectors of the Corporation have been instructed to seize unwhole some foods, especially fish, rotton foodstuffs, fruits, etc., that were exposed to dust and flies. All sources of drinking water-supplies

2nd March 1963] [Srimathi Jothi Vencatachellum]

such as wells in the affected areas were chlorinated and protected water supply was made available in mobile tanks in those areas. In addition to the augmentation of staff in the Infectious Diseases Hospitals, Thondiarpet, the Corporation have also augmented the divisional staff to cope up with the increased work.

6. House Surgeon internees were also lent for pushing the inoculation campaign in the divisions. Government have also lent the services of a vehicle to the Corporation of Madras to enable the Cholera Officer to inspect the infected areas promptly and enforce strict supervision over the large number of Public Health staff that have been drafted from various parts of the State with a view to eliminate cholera infection in the City. The number of attacks and deaths due to cholera in the City from 17th October 1962 upto 24th February 1963 are 1,002 and 68 respectively. The progressive total of inoculation done is 5,90,677.

7. Though the incidence of cholera has shown definite signs of decline from the first week of January 1963, yet sporadic cases still continue to be reported from here and there. Hence, the preventive measures have been continued and will be continued until the infection is completely wiped out.

SRI V. R. NEDUNCHEZHIYAN rose—

MR. SPEAKER: No question can be asked on the statement of the Hon. Minister.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த 41-வது விதியின் கீழ் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நான் 10—1—63-ல் விண் ணப்பம் செய்து கொண்டேன். சென்ற சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் இதற்கு விளக்கம் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் காலத் தாழ்வோடு 1½ மாதங்கள் கழித்து இது வருகிறது. இத்தகைய காலத் தாழ்வை கூடுமான வரையில் குறைத்து அவ்வப்போது இப்படி 41-வது விதியின் கீழ் வருகிற அறிக்கை களுக்கு விளக்கம் தர வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இம்மாதிரி பல ஸ்டேட்மென்ட் கள் கோரப்படுகின்றன. ஒரு நாளைக்கு ஒன்றுக்குத்தான் விடை அளிக்கக் கூடும். இது தயாராகவில்லை என்றால் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தாமதமாகும். அதற்குள் சட்டமன்றக் கூட்டம் முடிந்து விடுகிறது. ஆகவேதான் இப்படித் தாமதம் ஏற்படுகிறது. இதற்கு முன்பே சட்டமன்றக் கூட்டம் நடந்திருந்தால் இதற்கு முன்பே அதில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64.

MR. SPEAKER: Now we shall take up general discussion on the Budget. Whips of the various Parties may give the names of hon. Members who wish to speak as early as possible and not give the names at the last moment and create trouble.

* **திரு. எஸ். மாதவன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சபை முன் வைத்திருக்கிறார்கள். அதற்கு முன் தினம் நம்முடைய மத்திய சர்க்காரால் போடப்பட்டிருக்கிற வரிகளைப் படித்தவர்கள் உண்மையிலே சாதாரண மனிதர்கள் எல்லாம் அந்த வரிகளால் பாதிக்கப்படும் ஒரு சூழ்நிலையில் இந்த மன்றத்திலும் எப்படிப்பட்ட வரிகள் வருமோ என்ற அச்சத்துடன் இந்த மன்றத்திற்கு வந்தோம். கனம் நிதியமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் வரி போடப் போவதில்லை என்று சொன்னவுடனேயே ஆளும் கட்சிப் பகுதியிலிருந்து கனம் அங்கத்தினர்கள் ஆரவாரத்துடன் அதை வரவேற்றார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் சமதர்மச் சமுதாயத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சி கொடுக்கக் கூடிய ஒரு நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டும், எப்படியிருந்தால் அதை வரவேற்கலாம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன். வரி போடுவதும் போடுகிற வரியை வைத்து ஆட்சி நடத்துவதும் சாதாரண முனிசிப்பாலிட்டிகளுடையவும், பஞ்சாயத்து போர்டுகளுடையவும் வேலைகளாகும். அதுவும் குறிப்பாகச் சோஷியலிஸ சமுதாயத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் இந்த நாட்டு மக்களுக்குப் புதிய "நான் டாக்ஸ் இன்கம்" அதாவது வரி மூலம் அல்லாத வருமானம் எந்தளவுக்குத் தந்தோம், எப்படி அதன் மூலம் சமதர்மச் சமுதாயத்தை அமைக்கப் போகிறோம் என்ற திட்டம் நிதி நிலை அறிக்கையில் காணப்படும் என்றுதான் ஒவ்வொருவரும் விரும்பி இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு தரப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கையில் அது போன்ற ஒரு குறிப்பு இல்லை என்பதைத் தான் நாம் காண முடிகிறது. இதற்குக் காரணம் ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசாங்கம் எப்படி நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கப் போகிறது என்று சிந்திக்கும்போது சிலர் அச்சம் கொள்வதும் சிலர் ஆயாசம் கொள்வதும் இயற்கையாக இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நம் மாநில அரசாங்கத்திற்கு வரக் கூடிய வருவாய்கள் எல்லாம் விரிவடையாத வருவாய்த் துறைகளாக அமைந்து கிடக்கின்றன. அதாவது "இன்ஃப்ளக்ஸிபிள் ரிஸோர்ஸஸ்" அப்படிப்பட்டதொரு முறை இந்த மாநிலச் சர்க்காருக்கு நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிற காரணத்தினால்தான் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலையை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையை மாற்றுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் நம நிதி அமைச்சர் அவர்கள் என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள்? இந்த முயற்சியில் நம் அரசாங்கம் எந்தளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதைப் பற்றி விரிவாக இந்த அறிக்கையில் சொல்லப்பட வேண்டுமென்பது என் கருத்து. 1952-ம் ஆண்டு இந்த மன்றத்தின் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தில் அன்று அமைச்சராக இருந்த கனம் திரு. சுப்பிரமண்யம் அவர்கள் இதுபற்றி விளக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

'The Centre reserves to itself all the rich and flexible resources and only very new taxes have been left over to the State Government' நம் மாநில அரசாங்கத்திற்கு விரிவடையாத வருவாய்த் துறைகள் இருக்கிற ஒரே காரணத்தால்தான் நம் மாநில அரசாங்கம் நிதி நிலை அறிக்கைகள் தயாரிக்கும்போது கஷ்டமான ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் மேலும் வரி போடப்பட்டவர்கள் மீதே வரிபோடும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதியமைச்சராக வருபவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்று அன்றே அவர்கள் சுட்டிக் காண்பித்தார்கள். அதற்குள்ள பரிகாரமும் இந்தச் சபையில், அன்று முதல் அமைச்சராக இருந்தவர் கூறியிருக்கிறார்கள். நம் மாநிலச் சர்க்காரின் முயற்சி எந்தளவில் செல்ல வேண்டுமென்று அவர்கள் குறிப்பாகச் சுட்டிக் காண்பித்திருக்கிறார்கள். இதுபோன்ற ஒரு முறை இல்லாமல் மாநில சர்க்காருக்கு அதிகப்படி வருவாய்த் துறைகளைக் கொடுக்கக்கூடிய பகுதிகளை விரிவான வருவாயைக் கொடுக்கக் கூடிய வரி வகைகளை மாநிலச் சர்க்கார் முயற்சி செய்து பெற வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதற்காக இந்த மன்றத்திலுள்ள அத்தனை கட்சிகளும் பாடுபட வேண்டுமென்று அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த முறையில் நம் நிதி நிலை அறிக்கை அமையாமல் இருப்பதற்காக அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும் அதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து திருத்துவோம் என்ற கருத்தை கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காண்பிக்க ஆசைப்படுகிறேன். இதே கருத்தை 9-30 a.m.
டெல்லி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில் அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இப்போது இருப்பதைவிட அதிகமாக விரிவடையக்கூடிய வரிகளை வசூல் செய்வதற்கு நம்முடைய மாநில சர்க்கார் இன்னின்ன முறைகளை எல்லாம் கையாண்டு உரிமை பெற்று வெற்றி பெற்றுள்ளோம், அல்லது முயன்று வருகிறோம் என்ற வார்த்தைகள் வந்தால் அது நம்முடைய மாநில மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்னால் கூறிய அதே கருத்தோடு இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது, இன்னொரு கருத்தையும் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக மாநில அரசாங்கங்கள் தங்கள் தேவைக்குத் தகுந்தாற்போல் பொதுக் கடன்கள் எழுப்புவது வழக்கம். ஆனால் இப்போது அவ்விதமான ஒரு பொதுக் கடன் எழுப்பப் போவதில்லை என்றும், அதை மத்திய சர்க்கார் எழுப்பப் போகிறது என்றும் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இது எந்த அளவுக்குச் செயல்படும்? நல்ல முறையில் செயல்படுமா? இந்தப் பொதுக்கடன் எழுப்ப வேண்டிய பொறுப்பை மத்திய சக்காரிடம் ஏன் மாநில சர்க்கார்

[திரு. எஸ். மாதவன்] [2nd March 1963

விட்டுக் கொடுத்திருக்கிறது? பொதுக்கடன் எழுப்புவதின் மூலமாக இத்தனை கோடி வரும் என்றும், அதில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு எத்தனை கோடி நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு சந்தேகத்துடன் கூறியிருப்பதற்குக் காரணம் என்ன? இந்தத் தொகை நமக்குக் கிடைக்குமா? கிடைக்காதா? மாநில சர்க்காருக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறதா இல்லையா? அல்லது மாநில சர்க்கார் இந்தப் பொதுக் கடனை எழுப்பினால் அதிக வருமானம் வராது, மத்திய சர்க்கார் எழுப்பினால்தான் அதிக வருமானம் வரும் என்று கருதுகிறார்களா அல்லது மத்திய சர்க்கார் எழுப்பினால் அதிக வட்டி தருவார்கள் என நம்புகிறார்களா? இம்மாதிரிப்பட்ட காரணங்களுக்காகத் தான் இதை மத்திய சர்க்காரிடத்தில் விட்டு விட்டார்களா என்பதற்கான விளக்கம் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே சொல்லப்படவில்லை.

அடுத்தபடியாக, பொதுவாகத் திட்டங்களைப் பற்றி இந்த அறிக்கையில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை படிக்கின்ற நேரத்தில் நமக்கெல்லாம் மகிழ்ச்சிதரக்கூடிய விதத்தில் இன்னின்ன திட்டங்கள் போட்டிருக்கிறோம், இன்னின்ன திட்டங்கள் செயல்படப் போகின்றன, இன்னின்ன திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். இவை எல்லாம் மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். ஆனால் திட்டங்களைப் போடுவதோடு நின்றுவிடுகிறோம். இவை எல்லாம் சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்குப் போதுமான அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோமா, ஒழுங்கான முறையில் செயல்பட்டு வருவதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது. திட்டங்களில் செலவழிக்கின்ற பணம் ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுகிறது என்ற உறுதி நமக்கு இருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை எல்லாம் மேற்பார்வை செய்வதற்கு, கண்காணிப்பதற்கு ஏதாவது ஒரு அமைப்பு இருக்கிறதா என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். காரணம் பல திட்டங்களில் திட்டங்கள் செயல்படும்போது ஏற்படும் பல குறைகளை நல்ல முறையில் கண்காணிப்பதில்லை. சில நேரங்களில் குறைகளை சுட்டிக் காண்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். குறிப்பாகப் பஞ்சாயத்துகளின் கையில் ஏராளமான திட்டங்களை நாம் ஒப்படைத்திருக்கிறோம். அவர்களுடைய வருவாய்க்குத் தகுந்தாற்போல் பல திட்டங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதே நோக்கில் திட்டங்கள் போடுவதெல்லாம் டெல்லியில் தான். வரிகளை எல்லாம் வசூல் செய்து அதில் ஒரு பங்கை மாநிலங்களுக்குக் கொடுத்து அதன் மூலமாக இன்இன்ன திட்டங்

2nd March 1963] [திரு. எஸ். மாதவன்]

களைச் செய்யவும் என்று மத்திய சர்க்கார் மாநிலங்களுக்கு ஆணையிடுகிற முறைதான் இருக்கிறது, இந்த நிலை மீண்டும் இந்த நாட்டில் இருப்பது எவ்வளவு தூரம் நல்லது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். டெல்லியிலுள்ள சர்க்காரின் கீழ்தான் திட்டக் கமிஷன் இருந்து வருகிறது. இம்முறையை மாற்றி ஒவ்வொரு மாநிலங்களுக்கும் அவரவர் தேவைக்குத் தகுந்தவாறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்படியான அளவில் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் திட்டக் குழு இருப்பது நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். முக்கியமாக இம்மாதிரியான பிரச்னைகளில் மாநிலங்களுக்குத் தகுந்த இடம் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையில் சிறு பாசனத் திட்டங்களுக்காக விரிவான நடவடிக்கை எடுத்திருப்பதாகக் குறிப்பிட்டிருப்பது பெருமைப்பட வேண்டிய விஷயம்தான். இந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுவதற்கு 'ஃபுட் ப்ரொடக்ஷன்' என்று தனியாக ஒரு இலாகா இருக்கிறது. இந்த உணவு உற்பத்தி இலாகா மத்திய சர்க்காரின் உதவியில் நடைபெற்று வந்தாலும், இது மாநிலத் சர்க்காரின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது. அதே சமயத்தில் மைனர் இர்ரிகேஷன் இலாகாவை இந்த புட் ப்ரொடக்ஷன் இலாகாவில் ஒப்படைக்காமல் தனியாக ஆர். டி. ஓ. வின் கீழ் கொடுத்திருக்கிறார்கள் ஏற்கனவே ஆர். டி. ஓ.-க்களுக்கு ஏராளமான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் இவைகளினுடைய வேலைப்பளு அதிகமாக இருக்கின்றது. அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இந்தத் துறையை மீண்டும் இவர்களிடத்திலேயே ஒப்படைப்பது சரியா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்த மைனர் இரிகேஷன் துறையை புட் ப்ரொடக்ஷன் டிப்பார்ட்மென்டிலேயே சேர்த்துச் செயல்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களில் மைனர் இரிகேஷன் துறையின்கீழ் பொதுக் கிணறுகள் வெட்டும் திட்டம் செயல்பட வேண்டும். இதன் மூலமாக நதி பாயாத இடங்களுக்கும், ஆற்றுப் பாசனம் இல்லாத இடங்களுக்கும் நல்லமுறையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். கிணறுகள் வெட்டுவதற்கு ஏராளமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு கிணறுகள் வெட்டப்படுவது பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் கையில் கொடுக்கப்பட்டிருப்பதால் ஏழை மக்கள் ஏழை விவசாயிகள் இதன் மூலமாக நல்ல பலன் பெற முடியவில்லை. ஆகவே ஏழை விவசாய மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பொதுக் கிணறுகள் வெட்டிக்கொடுக்கக்கூடிய ஒரு முறையைப் பின்பற்ற முடியுமா என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்

கொள்கிறேன். பக்கத்திலுள்ள மைசூர் மாநிலத்தில் இவ்வாறு பொதுக்கிணறுகள் வெட்டிக்கொடுப்பதற்காக 200 லட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதே முறையை நாமும் பின்பற்றி பொதுக் கிணறுகளை அதிகப்படுத்தி விவசாயத்தை பெருக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக் காண்பித்திருப்பது, மத்திய சர்க்காரால் நடத்தப்படும் தொழில்களுக்கு, அதற்கு வேண்டிய நில ஆர்ஜிதம் நமது மாநில சர்க்கார் செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில் நடத்துவதற்கான அதிகாரம் எல்லாம் மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. ஆனால் அதற்குத் தேவையான நில ஆர்ஜிதம் செய்வது மட்டும் நம் மாநில சர்க்காருக்கு என்றிருப்பது என்ன காரணத்தினால் என்று தெரியவில்லை. அவர்களுக்கு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு நாம் இடம் கொடுத்தால்தான் நடத்த முடியும் என்ற இக்கட்டான நிலை ஏதாகிலும் ஏற்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். இதற்காக லட்சக்கணக்கான ரூபாய் நில ஆர்ஜிதம் செய்வதற்காக—கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் திட்டத்தில் இது ஈடு கட்டப்படுமா என்கிற விவரத்தை நிதிநிலை அறிக்கையில் காண முடியவில்லை. இதைப்பற்றி விளக்கத்தை அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து அறிய விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், ஆதி திராவிட மக்களுக்காக ஏராளமான சலுகைகள் கொடுக்கப்பட்டு வருவதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் குறிப்பாக, நம்முடைய ஆதி திராவிட இலாகா அமைச்சர் அவர்கள் . . .

கனம் திரு. பூ. கக்கன்: ஆதி திராவிட இலாகா என்று ஒரு இலாகா கிடையாது. அரிஜன நல இலாகா என்றுதான் இருக்கிறது. அந்த இலாகாவின் கீழ் ஆதிதிராவிட மக்கள் என்ற ஒரு பிரிவின் நலனும் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். மாதவன்: ஆதிதிராவிட இலாகா அல்ல, அரிஜன நல இலாகா அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு ஒன்று பத்திரிகையில் வந்திருந்தது. அதாவது ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் விஷயமாக இனிமேல் வீடு கட்டிக்கொடுப்பது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்றும், நிலம் மட்டும் தான் இப்போது வீடு கட்டிக்கொள்வதற்காக கொடுக்கப்படும் என்றும் பேசியதாக ஒரு குறிப்பைப் பார்த்தேன். ஆனால் அரிஜன நல இலாகாவின் கீழ் ஏராளமான காலனிகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்கீழ் இவர்களுக்கும் வீடு கட்டிக்கொடுப்பது சிறந்ததாக இருக்கும். அதல்லாமல் நிலத்தை மட்டும் ஆர்ஜிதம் செய்து கொடுத்து, வீட்டை நீங்களே கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்வது போல் தான் இப்போது தெரி

கிறது. ஆகவே வீடு கட்டிக் கொடுப்பது சந்தேகத்திற்குரிய விஷயமாகவே இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து தெரிகிறது. இதையும் அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்கார் விதிக்கின்ற வருமான வரியை, மாநில அரசாங்கம் தான் வசூல் செய்ய வேண்டும் என்று தெரிகிறது. அப்பேர்ப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால், இதன் காரணமாக மாநில சர்க்காருக்கு ஏற்படக் கூடிய செலவை யார் பொறுத்துக் கொள்வது, மாநில சர்க்காரா அல்லது மத்திய சர்க்காரா என்பதையும் அறிய விரும்புகிறேன். அதோடு இவ்வாறு வசூலிப்பதில் நம்முடைய மாநில சர்க்காருக்கு ஏதாவது பங்கு தரப்படுமா என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பொதுவாக இந்த நிதி நிலை அறிக்கையிலே புதிய வரிகள் எதுவும் குறிப்பாக சொல்லப்படாவிட்டாலும், ஏற்கெனவே மத்திய சர்க்காரினால் போடப்பட்ட வரிகளில் பல துறைகளில் பங்குத் தொகைகள் ஏராளமாக வர வேண்டிய சூழ்நிலை இருப்பதால், நமக்குத் துண்டு விழக் கூடிய பகுதி ஈடுகட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே பங்குத் தொகை எந்த அளவுகருக் கிடைக்கும், துண்டு விழும் அளவுக்கு ஈடுகட்ட முடியுமா, அல்லது துண்டு விழக்கூடிய தொகை அதே நிலையில் இருக்குமா என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த அளவில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக இந்தஇந்த வரிகள் போடவில்லை அல்லது போடப் போகிறோம் என்று விளக்கமாகக் கூறவிட்டாலும், நம் மாநிலத்தில் போடப்பட்டுள்ள திட்டங்களில் எந்த எந்த முறையிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள், எதற்கு எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்தத் துறையிலே அவர்கள் செலவைக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்று பார்க்கும் போது, வீடு கட்டும் திட்டம் தான் குறைக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். வீடு கட்டும் திட்டம் குறைக்கப்படும் என்று சொல்லும்போது, பொதுப் பணித் துறையில் உள்ள திட்டங்கள் மட்டுமா அல்லது மருத்துவத் துறையில் இருக்கும் வீடு கட்டும், கட்டடங்கள் கட்டும் திட்டங்களும் குறைக்கப்பட வாய்ப்பு இருக்கிறதா என்று கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நீர் வரியையும், நில வரியையும் இந்தத் தொடர் கூட்டத்தின் முதல் நாளே போட்டு

விட்டு, வரி இல்லை, புதிய வரி இல்லை என்று நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் அவர்கள் படித்த நேரத்திலே ஆளும் கட்சியினர் ஆரவாரம் செய்தார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற நீர் வரியும், நில வரியும் சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்டன. மறுபடியும் அதைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்.

திரு. ம. கமலநாதன்: அப்படி இருந்தாலும், மத்திய சர்க்காரினால் போடப்பட்ட ஏராளமான வரிகள் பொது மக்களைப் பாதித்திருக்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் புது வரி இல்லை என்று சொன்னாலும், அது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இல்லை என்று நான் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை.

திரு. ம. கமலநாதன்: நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்று கருதுகிறேன். பொதுவாக, சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும், இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கும் எந்த விதமான வித்தியாசமும் இல்லை என்றாலும் ஒரு சில புதிய வார்த்தைகளை—தேசியப் பாதுகாப்பு, நெருக்கடி நிலைமை என்ற புதிய வார்த்தைகளைப் புகுத்தி, அந்தப் போர்வையிலே இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

இந்த அறிக்கையிலே உணவு உற்பத்தி என்பதைப் பற்றி மிக அதிகமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு திட்டப் பட்ட திட்டங்களை இந்த ஆண்டும் அமல் செய்யப் போகிறோம். புதிய திட்டங்கள் ஒன்றும் உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இல்லை என்றாலும், சென்ற ஆண்டு போடப்பட்ட திட்டங்கள் அமலில் இருக்கும்போது அவைகள் நல்ல முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்று பார்க்கவேண்டும்.

பொறுக்கு விதைகளைப் பற்றி சென்ற ஆண்டும் இதே திட்டம் தான் இருந்தது. இந்த ஆண்டு கூட்டுறவு கடன் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உண்மையில் பொறுக்கு விதைகள் விவசாயிகளிடம் போய்ச் சேருகின்றனவா என்று பார்க்க வேண்டும். பொறுக்கு விதைக்கு, மூல விதைகளை அரசாங்க விதைப் பண்ணைகளில் தயாரித்துக் கொண்டு வந்து கிராம அளவில் விவசாயிகளிடம் கொடுத்துப் பெருக்கி எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்ற முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணி கிராம விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தையை நல்ல தமிழ்ப்படுத்தினாலும் இந்தத் திட்டத்தில் மாற்றம் இருக்குமா என்று பார்க்கலாம் என்று நான் கருதுகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் மான்யம் கொடுக்கப்படுகிறது. 100 கிராம் விதைகளுக்கு ரூ. 5 கொடுக்கப்படுகிறது என்று, பச்சையும் பதருமாகக் கொடுத்து விட்டு, அதை

விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் இருக்கும் திட்டத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டும். பஞ்சாயத்துக்கள் கிராம சகாயகருகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை நிறுத்தி வைத்து, இலாகாவினரே இப்படிப்பட்ட பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல விதைகளைக் கொடுத்து, நல்ல வசதிகளைக் கொடுத்து, விவசாயிகளுக்கு விதைகளைக் கொடுக்கச் செய்தால் ஓரளவுக்கு நல்ல பயன் அளிக்கும் என்று கருதுகிறேன்.

சிறு நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய மகிழ்ச்சிதான். உதாரணத்திற்கு எங்கள் பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால் 250 திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. இந்த 250 திட்டங்களின் கீழ் இருக்கும் ஆயக்கட்டு 3,150 ஏக்கர். பாராமரிப்புச் செலவு ஏக்கருக்கு ரூ. 1 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை வைத்துக் கொண்டு இத்தனை நீர்ப்பாசனத் திட்டங்களைப் பாராமரிக்க முடியுமா என்று அறிய ஆசைப்படுகிறேன். அப்படி கொடுக்கப்படும் ரூ. 1 என்ற விதத்தை குறைந்தது ரூ. 5 என்றாவது மாற்ற வேண்டும் என்று நான் கருதுகிறேன். மேலும் இவைகளைப் பராமரிக்கும் அந்த வேலையைச் செய்பவர் அந்தப் பஞ்சாயத்தில் இருக்கும் ஓவர்சியர். அவர் வில்லேஜ் வொர்க்ஸில் இருக்கும் வேலையைப் பார்ப்பாரா, ரோடு மெயின்டினென்ஸைப் பார்ப்பாரா, பள்ளிகள் இருந்தால் அவைகளின் மெயின்டினென்ஸைப் பார்ப்பாரா, நீர்ப்பாசனத் திட்டங்கள் மெயின்டினென்ஸைப் பார்ப்பாரா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஓவர்சியரைப் பொறுக்கும் நேரத்தில் வயதைக் கூடப் பார்க்காமல் மேலும் ஒரு ஓவர்சியரை நியமித்தாலொழிய பராமரிப்பு வேலை சரிவர நடைப்பெற முடியாது. பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாகம் சரிவர நடைபெறுவதற்கு ரெவின்யூ அதிகாரிகள் எக் காரணத்தைக் கொண்டும் தலையிடக் கூடாது. அவர்கள் தலையீட்டினால் இரண்டு எஜமானர்கள் என்ற நிலை ஏற்பட்டு அவர்கள் வேதனை அடைகிறார்கள். பஞ்சாயத்துத் திட்டங்களை நிறைவேற்றும் நேரத்தில் ரெவின்யூ அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைக் காட்ட ஆரம்பித்தால் சில நல்ல வேலைகள் பாதிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், எல்லா புறம்போக்குக்களும் பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. கலெக்டரால் சமீபத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிற உத்திரவில் ஆக்கிரமிப்பு இல்லாத புறம்போக்குகளைத்தான் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஆக்கிரமிப்பு இல்லாத புறம்போக்குகள் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அப்படிப்பட்ட புறம்போக்குகளே இல்லை என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. ஆகவே அவர்கள் பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

கால்நடை வளர்ப்புத் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே செயற்கை முறையில் இன விருத்தி செய்தால் மிக நல்லது என்ற

காரணத்தினால் கிராமப் புறங்களில் இருக்கும் அத்தனை காளைகளையும் ஆண்மை இழக்க செய்து செயற்கை முறையில் ஜெர்ஸி போன்ற மாடுகளைக் கொண்டு இன விருத்தி செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்வி வளர்ச்சியைப் பொறுத்த அளவில், நிதி அமைச்சர் அவர்கள் மிகவும் வருந்தக்கூடிய நிலைமையிலே இந்த அறிக்கையில் எங்களை கவனிக்காத முறையில் இருந்துவிட்டார்கள். எப்படி என்றால் சென்ற ஆண்டு நான்கு கல்லூரிகள் திறக்க வேண்டும் என்று சொன்னார்கள். கல்வியில் சென்னை மாநிலத்திலேயே மிகவும் பின் தங்கியிருப்பது சேலம் மாவட்டம். நிதி அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்து கொண்டு, இப்படிப்பட்ட ஒரு மாவட்டம் சென்னை மாநிலத்தில் இருக்கலாமா என்றுகூட நினைத்துப் பார்க்காமல் எங்கள் மாவட்டத்தை ஏன் ஒதுக்கினார் என்று தெரியவில்லை. ஒருவேளை எங்கள் மாவட்டத்திற்கென்று ஒரு அமைச்சர் இல்லாத குறையோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் வட சேலத்தில் ஒரு கல்லூரி திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோழி வளர்ப்புத் திட்டம் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் பவுல்ட்ரி யூனிட் ஆரம்பிக்க ரூ. 3,000 செலவழிக்கலாம், தனிப்பட்டவர்கள் ஆரம்பித்தால் பாதித் தொகை கொடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால், ரூ. 2,000 பெருமானம் உள்ள பவுல்ட்ரி யூனிட்டுக்கான எக்யுப்மெண்டுகள் இருக்கின்றன. ஆனால் பறவை கிடைக்க வாய்ப்பு இல்லை என்று அனிமல் ஹஸ்பண்ட்ரி எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் சொல்லுகிறார். முன்பு எல்லாம் கால்நடை எக்ஸ்டென்ஷன் ஆபீசருக்கு ஒரு மெஸஞ்சரும், ஒரு ஸ்டாக்மெனும் இருந்தார்கள். ஆனால் அந்த மெஸஞ்சரையும் எடுத்து விட்டார்கள், ஸ்டாக்மெனையும் எடுத்து விட்டார்கள். ஏதாவது ஒரு கிராமத்திலே வியாதி வந்துவிட்டது என்று சொன்னால், அந்த எக்ஸ்டென்ஷன் ஆபிசரே தன்னுடைய தோளில் அந்த மருந்தை சுமந்துகொண்டு சைக்கிளிலே செல்ல வேண்டியதாக இருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு மெஸஞ்சரையாவது அவருக்குக் கொடுத்தால்தான், அந்த இடத்திற்குப் போய் ஆவன செய்ய முடியும். மேலும், சென்னையிலுள்ள டெப்போவுக்கு விண்ணப்பித்துத்தான் மருந்துகளைப் பெறவேண்டியிருக்கிறது. அப்படி விண்ணப்பித்துக் கொண்ட போதிலும், 6 மாதங்களுக்குப் பிறகுதான் மருந்துகள் கிடைக்கின்றன. இவ்வாறு காலதாமதம் ஆவதால் உடனடியாக நிவாரண வேலை ஒன்றும் அவரால் செய்ய முடியவில்லை.

பொதுவாக, விவசாய அபிவிருத்திக்கு, கிராம சேவக்குகள் எல்லாம் தங்களுடைய முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், மாகாண சர்க்கார் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பும் ஆணைகளை நிறைவேற்றுவதிலேயே அவர்களுடைய முழு நேரத்தையும் செலவழிக்கிறார்

களே ஒழிய, விவசாய அபிவிருத்திக்காக அவர்களால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. ஒரு கிராமத்திலே 10 கிராம சேவக்குகள் இருந்தால், அவர்களில் ஐந்து பேராவது விவசாயத்தைக் கவனிக்க வேண்டுமென்று ஒரு திட்டம் வகுத்தாலொழிய விவசாயத்துறையில் அதிக முன்னேற்றம் காண முடியாது. இன்னும் விவசாயத்தைப்பற்றி எவ்வளவோ சொல்ல வேண்டுமென்று நான் நினைக்கிறேன். வாய்ப்புக் கிடைத்தால் மான்யக் கோரிக்கை வரும்பொழுது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் ஒன்றும் சொல்லப்படவில்லையென்றாலும், இருக்கும் திட்டங்களையாவது நன்றாகக் கவனித்து அவைகளை அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ஏ. பி. சி. வீரபாகு: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் முறையிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் நமது சோஷலிஸ லட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு, நல்ல பல அம்சங்களை ஊக்குவிக்கின்ற வகையிலே மிளிர்கின்றது. உற்பத்திப் பெருக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகின்றதோ, அந்த அளவுக்கு அதிலிருந்து தரமான சோஷலிஸம் உருவாகும் என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். விவசாயத் துறையிலும், தொழிற்துறையிலும், கல்வித் துறையிலும் நாம் எடுக்கின்ற முயற்சிகள் எவ்வளவு சீக்கிரத்தில் பூரண பலன்களைத் தருமோ, அந்தப் பலன்களை நாம் எவ்வளவு சீக்கிரமாக அடைகிறோமோ, அதைப் பொருத்துத்தான் நமக்கு என்று நாம் நிர்ணயம் செய்திருக்கின்ற சோஷலிஸ லட்சியத்தை அடைய முடியும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் அரசாங்கத் துறையில் பல்வேறு தொழில்களை இந்த மாநில அரசாங்கத்தின் மூலமாகவும், மத்திய அரசாங்கத்தின் மூலமாகவும் அரசாங்கம் செய்து வருகிறது என்பதைப் பற்றி பரந்த அளவிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கும்பொழுது, சோஷலிஸத்தை மறந்த பட்ஜெட் இது என்று குறிப்பிடுவது எவ்வளவு தூரம் பொருத்தமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. மாநில அரசாங்கம் எழுப்புகின்ற கடன் வசதிகளைக்கூட மத்திய அரசாங்கம் பிடுங்கிவிட்டது, இவர்களுக்கு கடன் எழுப்புவதற்குக்கூட உரிமையில்லை என்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னும் கொஞ்சம் யோசித்துக் கடன் எழுப்புகிற அதிகாரத்தை மின்சார போர்டுக்குக்கூட அரசாங்கம் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லுவார்களோ, என்னமோ தெரியாது. கடன் எழுப்புகிற முறையானது, நாட்டிலே இருக்கின்ற பொருளாதார சூழ்நிலையை மனதில் வைத்துக்கொண்டு, அதாவது economic climate-ஐ மனதில் வைத்துக் கொண்டு, மாகாண முதலமைச்சர்கள் மகா நாட்டிலே

[திரு. ஏ. பி. சி. வீரபாகு] [2nd March 1963

எந்த முறையிலே அதைச் செய்யவேண்டு மென்பதை தீர்மானித்துத்தான் செய்யப்படுகிறதே ஒழிய, ஏதோ யதேச்சையாக மத்திய அரசாங்கம் செய்கிறது என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும் என்று எனக்குத் தெரியவில்லை. சீன ஆக்கிரமிப்புக்குப் பின்னர், நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பெரிய எழுச்சியையும், மக்களுடைய தியாக உணர்ச்சியையும் எந்த முறையில் நாட்டினுடைய பலம் பொருந்திய பொருளாதார அமைப்புக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை மாநில முதலமைச்சர்கள் தேசிய டெவலப்மெண்ட் கௌன்சில் கூட்டத்தில் தீர்மானித்து, அவ்வப்பொழுது நாட்டிலே இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்றவாறு அகில இந்திய ரீதியிலே, பாரதம் முழுவதும் ஒன்று என்ற முறையிலே கொள்கைகள் வகுக்கப்படுகின்ற காரணத்தினால் இந்த மாற்றங்கள் வருகின்றனவே ஒழிய, மத்திய சர்க்கார் மேலதிகாரமுள்ளவர்கள், மாகாண சர்க்கார் அதிகாரம் இல்லாதவர்கள் என்ற காரணத்தால் இம்மாதிரி செய்யப்படுகிறது என்று கூறுவது எந்த வகையில் பொருந்தும் என்று நான் கேட்கிறேன். என்னைப் போன்றவர்கள், இது சோஷலிஸ லட்சியத்தை நிறைவேற்றக்கூடிய ஒரு பட்ஜெட்டை, நம்முடைய நாட்டு மக்களுடைய தியாக உணர்ச்சியையும், ஆக்க உணர்ச்சியையும் பயன் படுத்தி, நமது நாட்டில் இருக்கின்ற பொருளாதார அமைப்பையும் ஊக்குவித்து, சீர்படுத்தி, வளம்பெறச் செய்வதன் மூலமாகத்தான் இந்த நாட்டில் ஒரு புதிய அஸ்திவாரத்தை ஏற்படுத்த முடியும் என்ற நோக்கத்தோடுதான், பரிசீலனை செய்ய முடியும். வரி விதிப்பு இல்லை என்பதற்காக ஒரு பாராட்டோ அல்லது வரி விதித்திருக்கிறார்கள் என்பதற்காக ஒரு கண்டனமோ இல்லாமல், நமது லட்சியங்கள் சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா, வருமானம் இல்லை என்ற காரணத்திற்காக திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றனவா, முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்டுள்ள பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த பட்ஜெட் எந்த வகையிலே உதவியாக இருக்கிறது என்று கவனித்து எங்களைப் போன்றவர்கள் பாராட்டுத் தெரிவிக்கலாமேயொழிய, வரிகள் இல்லை என்பதற்காகப் பாராட்டவோ, அல்லது வரிகள் போட்டதற்காக வருத்தம் தெரிவிக்கவோ செய்தால், அந்த முறையில் பட்ஜெட் விவாதம் இருக்கக்கூடாது என்றுதான் நான் நினைக்கிறேன். முதல் இரண்டு திட்டங்களில் நடந்த பணிகளை எந்த அளவுக்கு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள் என்று பார்த்தால், அந்தத் திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றும் வகையிலும், புதிதாக எழுந்துள்ள சீன ஆக்கிரமிப்பை சமாளிக்கும் முறையிலும் இந்த பட்ஜெட்டைத் தயாரித்துள்ளார்கள் என்றே சொல்லவேண்டும். விவசாயத் துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி, நம்முடைய அரசாங்கம் பொறுப்புகளையும், கடமைகளையும் சரிவர நிறைவேற்றி வருகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். அம்மாதிரித் தெரிந்து கொண்டதனால், அதைக் குறித்து சந்தோஷம் தெரிவித்து திருப்தி அடையாமல், குறைபாடுகள் இருந்தால், இது நம்முடைய அரசாங்கம், ஆகவே குறைபாடுகளையும் எடுத்துச் சொல்லவேண்டும் என்கிற முறையில் என் போன்றவர்கள் இருக்கிறோம்.

2nd March 1963] [திரு. ஏ. பி. சி. வீரபாகு]

விவசாயத் துறையில் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது. இந்தப் பற்றுக்குறை பட்ஜெட்டை பற்றுக்குறையாக விட்டுவிட்டால், அந்த அளவுக்கு திட்டச் செலவு குறைந்து விடும் என்ற நோக்கம் அல்ல. ஏற்கெனவே போடப்பட்ட வரி இனங்களிலிருந்து அதிகமான வருவாய் கிடைக்கலாம் என்ற காரணத்தினால்தான் இந்தப் பற்றுக்குறை விடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் விதிக்கும் விற்பனை வரியிலிருந்து ரூ. 2 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது அதே மாதிரி சென்ற வருடம் கொண்டுவந்த தண்ணீர் வரி, நில வரி உயர்வு, இவற்றின் மூலமாக ரூ. 1½ கோடி வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே பற்றுக்குறையை சரிக்கட்டாமல் விட்டு விடவில்லை. திட்டங்களுக்கான செலவைக் குறைக்காமல் அதாவது tempo of expenditure -ஐக் குறைக்காமல் நாம் செலவிடவேண்டிய பகுதிப் பணத்தைக் குறைக்காமல், ரூ. 31 கோடி அளவிற்குச் செலவழிப்பதற்கு வகை செய்திருக்கிறோம். அந்த முறையில் பார்த்தாலும், இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு இணைப்பான பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கக் கூடிய வகையிலும், நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய ஆதாரவைக் கொடுக்கக் கூடிய வரவு செலவுத் திட்டமாகவும் அமைந்திருக்கிறது. ரசாயன உரத்தை அதிகமான அளவிலே கொடுத்திருப்பது வரவேற்கவேண்டிய அம்சம்.

ரசாயன உரம், தழை உரம் பெருக்கத்தைப்பற்றி குறிப்பிடப் 10-00 a.m.
பட்டிருக்கிறது. அதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையைக் கண்டு பாராட்டாமல் இருக்க முடியாது. இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டத்தைப் பார்த்தால் இன்னும் பத்து ஆண்டுகளில் விவசாயத்தை பலர் ஆரம்பித்து பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படி வேலை வாய்ப்பு அமையக்கூடிய அம்சமாக, அது அமைந்திருக்கிறது. இப்பொழுது ஏற்படப்போகிற தொழில் துறை மாறுதலால் நிச்சயமாக "ஷிப்ட் அப் பாபுலேஷன்" ஏற்படும். இப்பொழுது விவசாயத்தை நம்பி இருக்கக்கூடியவர்கள் சுமார் எழுபது சத விகிதத்தினர் இருக்கிறார்கள். இப்பொழுதுள்ள நிலையில் இந்த அளவு 45 அல்லது 50-க்குக் குறைந்தாலும் குறையலாம். எந்த தொழிலை எடுத்துக்கொண்டாலும் அதற்கு விவசாய உற்பத்தி வேண்டியதாயிருக்கிறது. நாம் இப்பொழுது தொழில் துறையில் மாறுதலைச் செய்து கொண்டு வருகிறோம். சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் இங்குள்ளவர்கள் தொழிலைத்தான் நம்பி இருக்கிறார்கள். தொழில் துறையில் முன்னேற்றம் கண்டால் அதற்கு உணவு பண்ட உற்பத்தியும் தேவையாக இருக்கிறது. அதற்கு மேல் தொழிலுக்கு வேண்டிய பண்டங்களையும் அதிகப்படியான உற்பத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி தொழில் துறையில் முன்னேற்றமடைவதைப் பார்த்தால் தொழில் துறையில் விவசாயத் துறையில் கிடைக்கக்கூடிய கூலியை விட அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே சிறு விவசாயிகளும் சிறு நிலச் சுவான்தார்களும் தொழிலைத் தேடிக்கொண்டு

போக வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தோன்றுகிறது. அப்பொழுது கிராமங்களில் விவசாயம் செய்வதற்கே கூலி ஆட்கள் கிடைக்காதோ என்ற நிலை ஏற்படுமோ என்று தோன்கிறது. விவசாயத்திற்கு வேண்டிய ஆள் வசதி இப்பொழுதே சரியாக கிராமங்களில் கிடைக்கவில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான் இப்பொழுதே கிராமங்களில் விவசாயக் கூலி 2½ அல்லது 3 ரூபாயாக வாங்குகிறார்கள். இனிமேல் இன்னும் அதிகமாக ஆவதற்கு இடம் ஏற்படுகிறது. இன்னும் உற்பத்தி பெருக்குக்கு விவசாயத்தை ஆரம்பித்தால் அதற்கு வேண்டிய கூலியாட்கள் கிடைக்காமல் போவதற்கும் இடம் ஏற்படும். அதை உத்தேசம் செய்து தான் பெரிய அளவில் கூட்டுறவு முறையில் விவசாயத்தைச் செய்ய வேண்டும் என்று நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் சொல்லி வருகிறார். அந்த முறையில் நம்முடைய மாகாணம் பூராவிலும் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்று சொல்லப் படுகிறது. இப்படி கூட்டுறவு முறையில் விவசாயத்தை ஆரம்பித்தால் இன்னும் பத்து வருடங்களில் ஏற்படக்கூடிய ஒரு நிலைமையை அதாவது விவசாயக் கூலிகள் கிடைக்காத நிலைமையை சமாளிக்க முடியும். அப்பொழுதுதான் சிறு நிலச் சுவான்தார்களுக்கு சௌகர்யமாக இருக்கும். இந்த நோக்கத்துடன் தான் கூட்டுறவு முறை சாகுபடியைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லுகிறார்களே ஒழிய வேறு ஒன்றுமில்லை. அதற்குத் தான் நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்கள் இந்த கூட்டுறவு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார். தொழில் துறையில் முன்னேற்றம் அடைவதால் விவசாயக் கூலிகளுக்கு அதிகப்படியான கூலி கிடைத்து விவசாயத்திற்கு வேண்டிய ஆட்கள் கிடைக்காது என்ற காரணத்தால் இந்த முறையைக் கொண்டு வரப்படுகிறது. அதையே சீக்கிரமாக ஊக்குவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இதை பொது மக்கள் ஏற்றுக்கொள்ளாமல் இதில் ஏதோ சில சந்தேகத்தையும் குழப்பத்தையும் உண்டாக்குகிறார்கள் இப்படிப்பட்ட குழப்பங்களும் சந்தேகமும் பல்வேறு துறைகளில் ஏற்படுகிறது. ஆகவே நல்ல முறையில் விவசாயம் நடப்பதற்கு கூட்டுறவு முறையில் விவசாயத்தை ஊக்குவிக்கவேண்டும். இன்னும் விவசாயத்தை 'கமர்ஷியல்' முறையிலும் கொண்டு வரவேண்டும் large-scale farming by joint stock companies என்ற முறையிலும் இதை ஏற்படுத்த வேண்டும். ஆள் பஞ்சம் பத்து வருடங்களில் இன்னும் அதிகமாக ஆகிவிடும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுதே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அத்துடன் கூட பழமரங்கள் நாம் அதிகப்படியாக வளர்க்க வேண்டும். அத்துடன் பாக்கு மரங்கள் வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும். மலைப் பிரதேசங்களில் தான் அதிகமாக பாக்கு மரங்கள் வளரும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் பாக்கு மரங்கள் நல்ல முறையில் பயிரிடலாம் என்றும் சொல்லப்பட்டு அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நீர்பாசனம் இருக்கக்கூடிய இடங்களில்

பாக்கு மரங்கள் நல்ல முறையில் பயிராகும் என்று ஆராய்ச்சியின் மூலம் நாம் கண்டு கொண்ட உண்மை. நிழல் பாசன வசதி இருந்தால் அங்கு பாக்கு மரங்கள் நன்றாக வரும் என்பது நம்முடைய புதிய அனுபவம். பாசன வசதி நிறைந்து இருக்கும் இடங்களில் தோட்ட மகசூல் செய்ய உதவவேண்டும்.

இப்பொழுது உணவு உற்பத்தி அதிகமாக ஆகி இருக்கிறது என்று சொலலப்படுகிறது. விலையைக் குறைக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உண்மையிலேயே சர்க்காருடைய கொள்முதல் விலைக்கு மார்க்கெட் விலை குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சர்க்கார் ரைஸ் மிலலில் கொள்முதல் செய்கிற விலைக்குக் குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ரைஸ் மில்லில கொள்முதல் விலை 17 ரூபாய் என்று சொன்னால் அந்த அளவிற்கு நெல் விலை குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அந்த முறையில் குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆனால் மூட்டைக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் விலை குறைந்தாலும் அந்தக் குறைவை விவசாயிகளால் தாககுப பிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் விவசாயினுடைய வருட வருமானம் ரூபாய் 375 எனறு கணக்கிடப்பட்டிருக்கிறது. ஈசனல் கண்டிஷன் வேறு காரணமாக இருக்கிறது. உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொன்னால் எந்த அளவில் பெருகி இருக்கிறது என்றால் நமக்கு வேண்டிய அளவிற்குக் கொஞ்சம் கூடுதலாகத்தான் பெருகி இருக்கிறது. அதிகப்படியான அளவில் பெருகிவிடவில்லை. நமக்கு வேண்டிய அளவில் பெருக வில்லை. வேண்டிய அளவிற்குக் கொஞ்சம் கூடுதலாகத்தான் பெருகி இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மூட்டைக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய் குறைந்து விட்டது என்றாலே விவசாயிக்கு அது பாதிக்கத்தக்கதாக இருக்கிறது. இந்த விலைக் குறைவினால் சிறிய விவசாயிகளாலும் சிறு நிலச் சுவான்தார்களாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இதைச் சமாளிக்கத்தான் கூட்டுறவு முறை சாகுபடி அவசியம் என்று சொல்லப்படுகிறது. அந்த முறையில கூட்டுறவு சாகுபடியை ஆரம்பிக்க வேண்டும். இதை ஒரு கமர்ஷியல் பேசிசாக ஆரம்பிக்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறு நீர்பாசனங்களை நாம் இப்பொழுது பஞ்சாயத்துக்களிடம் கொடுத்திருக்கிறோம். இதை பல எதிர் கட்சி அங்கத்தினர்கள் வரவேற்றாலும் என்றால் அதை வரவேற்க முடியாது. சிறு நீர் பாசனங்களை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியம்தான் என்று ஒப்புக் கொண்டாலும் அதை எடுக்க வேண்டிய நிதி வசதியையும் நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். சிறு நீர்பாசன வேலைகளிலிருந்து வரக்கூடிய பலன்கள் யாவும் பஞ்சாயத்துக்களுக்குப் போவதாக இருந்தாலும் அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய நிதி வசதி அவர்களிடம்

கிடையாது. அதனால் அந்த நிதி வசதியை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே இதைப்பற்றியும் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே விவசாய உற்பத்தியை பெருக்கும் நடவடிக்கையில் பெரிய பாசனத் திட்டங்களை அரசாங்கம் எடுத்து முடித்த பின்பு சிறு நீர்ப்பாசன திட்டங்களை பஞ்சாயத்துக்கு விடாமல் இருப்பது நல்லது. அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும் அவர்களுக்கு நிதி வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை நடத்துவதற்கு உள்ள அதிகாரத்தை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்தாலும் அது நல்லதாக இருந்தாலும் அவர்களுக்கு நிதி வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதோடு கூட இப்பொழுது பல ஐந்தாண்டு திட்டங்களை எடுத்து முடித்துக்கொண்டு வருகிறோம். எனக்கு அதிகப்படியான நேரம் இல்லாவிட்டாலும் சில வற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். திருநெல்வேலி சம்பந்தமாக குடகனார் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. பல திட்டங்களை எடுத்து முடித்துவிட்டோம் என்று சொன்ன போதிலும் இந்தத் திட்டம் இன்னும் எடுத்து நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி வரவு செலவு திட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ராமநதி திட்டத்தை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக கலெக்டருக்கு எழுதி அனுப்பியிருப்பதாகச் சொல்லப்பட்டது. அதனால் அது சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று இருந்தோம். ஆனால் இன்னும் அது ஆரம்பிக்கப்படவில்லை. சமீபத்தில் மராமத்து அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப் பிரயாணம் செய்த போது இது சம்பந்தமாக சிலவற்றை அவரிடம் சொல்லப்பட்டது. அதனால் அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும் என்றாகிலும் சொல்லி இருக்கலாம். அப்படியும் சொல்லப்படவில்லை. அது ஒரு பெரிய திட்டமாக குறிப்பிட்டார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது என்றாகிலும் சொல்லியிருக்கலாம். அப்படியும் சொல்லப்படவில்லை. இந்தத் திட்டத்தை அடுத்த வருடம் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கலாமோ என்னவோ. அப்படி இருந்தாலும் அது சம்பந்தமாக இந்த வருடமே அதற்கு செலவு செய்ய முற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் சிறு நீர்பாசனங்களை நிறைவேற்ற இந்த மாகாணம் பூராவிலும் எடுத்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கனம் மராமத்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் (கனம் திரு. ராமையா) மின்சார அமைச்சராக இருந்தபோது, கிராமங்களுக்கெல்லாம் ஏராளமான மின்சாரத்தைக் கொடுத்த பெருமை அவர்களுக்குக் கிடைத்தது. அதை எப்படிக் கொடுக்க முடிந்தது என்பதற்கான காரணத்தையும் அவரே சொன்னார்கள். அதாவது, "மின்சாரம் கொடுக்கப் படவேண்டிய பகுதிகளையெல்லாம் முன்கூட்டியே சர்வே செய்து,

எஸ்டிமேட் முதலியவைகளையெல்லாம் தயார் செய்து திட்டங்களை எங்கள் பக்கத்திலேயே வைத்துக்கொண்டிருந்தோம். பணம் வரும்போது அவ்வப்போது திட்டங்களை உடனடியாக எடுத்துக்கொண்டு மின்சாரம் சீக்கிரமாகக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அதனால் இந்த மாநிலத்திற்கு வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத ஒரு பெருமையைத் தேடித் தருவதற்கான வாய்ப்பு கிடைத்தது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே பெருமையை அவர்கள் நீர்ப்பாசனத் துறையிலும் தேடிக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். சிறிய பாசனத் திட்டங்களுக்கென்று ஒரு பெரிய ப்ளூ பிரிண்ட் தயார் செய்யவேண்டும். இத்தகைய திட்டங்கள் நம் மாநிலத்தில் நிறைவேற்றப்படவேண்டியவை ஏராளமாக இருக்கின்றன. எந்தப் பாசனத் திட்டமும் நூறு வருஷங்களுக்குள்ள திட்டமாகத்தான் இருக்கும். மக்கள் பல திட்டங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அவைகளையெல்லாம் பரிசீலிக்கும்போது, "இப்பொழுது எடுக்கத் தகுந்ததல்ல என்றும், 'ரெயின் ஃபால் ரீடிங்' எடுக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டே இருந்துவிடக் கூடாது. புதிதாகத்தான் திட்டங்கள் உருவாக வேண்டும் என்பதல்ல. ஏற்கனவே மறந்துபோன திட்டங்கள் இருக்கின்றன. அன்னிய அரசாங்கம் இருந்தபோது, அவர்கள் பார்த்த கண்ணோட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட திட்டங்கள் நம்முடைய அரசாங்கம் இப்பொழுது இருக்கும் புதிய நோக்கத்தோடு பரிசீலிக்கவேண்டிய திட்டங்களாக அமைகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, சிறிய பாசனத் திட்டங்கள் எங்கெங்கெல்லாம் இருக்க வேண்டும் என்பதைக் கணக்கெடுத்து, அவர்களுடைய காலத்திலேயே ஒரு பெரிய பட்டியலைத் தயார் செய்துவிட்டால் நலமாக இருக்கும். ஏதோ ஐந்து அல்லது பத்து வருஷங்களில் முடிந்துவிடுகிற வேலை அல்ல இது. இதற்குப் பல வருஷங்கள் ஆகும். ஆகவே, நீண்ட காலத் திட்டமாக வைத்துக்கொண்டு, வசதிகள் கிடைக்கும்போது, ஒவ்வொன்றாக நிறைவேற்றிக்கொண்டு வரலாம். இதற்கென்று "ஆர்டர் ஆஃப் ப்ரீஸீடென்ஸ்" கூடப் போட்டுவிடலாம். அம்மாதிரி அந்தத் திட்டங்களைத் தயார் செய்வதன் மூலமாகப் பல பெரிய வாய்ப்புகள் இந்த மாநிலத்திலுள்ள விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள், கன்ஸல்டேடிவ் கமிட்டி ஒன்றைப் போடப் போவதாக நேற்றைய பத்திரிகையில் நான் படித்தேன். நான் குறிப்பிடுகிற அத்தகைய திட்டத்தைத் தொழில் சம்பந்தமாக அவர்கள் போட இருக்கிறார். இந்த மாநிலத்தில் ஏராளமான தொழில்களை அமைக்கவேண்டும் என்பதிலே அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினாலும் அவர்களுக்கு இருக்கும் கஷ்டம், நம் மாநிலத்தில் பணக்காரர்கள் அதிகம் இல்லாமலிருப்பது. தொழில்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூலதனம், அவர்கள் விரும்பும் அளவுக்கு மூலதனம் பெற முடியவில்லை. அந்த மூலதனத்தைப் பெற்றாலும், என்ன

தொழில் ஆரம்பிக்கவேண்டும் என்று மூலதனம் போடும் அனேகருக்குத் தெரிவதில்லை. இப்பொழுதிருக்கும் தொழில்மைச்சர் அவர்கள் என்னவெல்லாம் பார்க்கவேண்டியிருக்கிறதென்றால், மூலதன வசதியைத் தேடிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கென்று இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்மென்ட் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறார். என்ன தொழில்கள் ஏற்படுத்தலாம் என்று அவர்கள் சொல்லிக்கொடுத்து, அந்தத் தொழில்களை ஏற்படுத்துவதற்கான மெஷினரி எங்கு கிடைக்கும் என்பதைக் கண்டுபிடித்து, வாங்கிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்த மெஷினரிகளையும் இன்ஸ்டால்மெண்ட் ஸிஸ்டத்தில் வாங்கிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி ஒரு பெரிய தொழில் முயற்சி இல்லையானால், நம் மாநிலத்தில் விரைவில் தொழில் வளர்ச்சி ஏற்படுவது கடினமாக இருக்கும். இவ்வளவெல்லாம் தொழில் அமைச்சர் அவர்கள் முயற்சிசெய்தாலும், "என்ன முன்னேற்றம் கண்டுவிட்டோம்?" என்று இலேசாக சிலர் கேட்டுவிடக்கூடும். தொழில் அமைச்சர் அவர்கள் எந்த நாட்டுக்குப் போனாலும், அமெரிக்காவுக்குப் போனாலும் ஐரோப்பாவுக்குப் போனாலும், அங்கிருந்து நம் மாநிலத்திற்கு என்ன புதிய தொழிலைக் கொண்டுவரலாம் என்ற கண்ணோட்டத்தோடு தான் போகிறார். அதே கண்ணோட்டத்தோடுதான் வருகிறார்.

சேலத்தில் இரும்பு உருக்கு தொழிற்சாலை வைப்பது சம்பந்தமாக இன்று கேள்வி நேரத்தின்போது பல கேள்விகள் இங்கு கேட்கப்பட்டன. "இரும்பு உற்பத்தி செய்ய ஏன் காலதாமதம் ஆகிறது? அதற்குக் காரணம் மாநில சர்க்காரின் அலட்சிய மனோபாவமா? அல்லது, மத்திய சர்க்கார் சரியாகக் கவனிக்கவில்லையா?" என்ற ரீதியில் கேட்கப்பட்டன. அமைச்சர் அவர்களும், கேள்வி நேரத்தில் அந்தக் கேள்விக்கு எவ்வளவு விவரங்கள் சொல்லலாமோ அந்த அளவுக்குப் பதில் சொன்னார்கள்.

எப்பொழுது பார்த்தாலும் "தரக் குறைவான கனிப்பொருளை நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம்" என்று சட்ட சபையில் சொல்லிக்கொண்டிருப்பதே நமக்கு நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், "சென்னை மாநிலத்தில் தரக் குறைவான கனிப் பொருளை வைத்துக்கொண்டே தொழில் வாய்ப்பு அதிகமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். கூடின தரமுள்ள கனிப் பொருளை வைத்துக்கொண்டிருந்தும் நமக்குத் தொழில் வாய்ப்புகள் இல்லையே" என்று அண்டை மாநிலக்காரர்கள் கேட்கக் கூடும். கேள்வி கேட்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. என்றாலும், இதுமாதிரி, தரக் குறைவான கனிப்பொருள் தான் நமக்கு இருக்கிறது என்ற ரீதியில் இங்கே அடிக்கடி பதில்சொல்ல வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் செய்யக்கூடிய வேலையின் காரணமாக சென்ற ஐந்தாறு வருஷங்களுக்குள் நல்லதொரு திருப்பம் நம்முடைய மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்தை வியாபாரமாக ஆக்கமுடியுமா என்று பரிசீலனை செய்யவேண்டிய சூழ்நிலையைத் தொழில் அபிவிருத்தியின் மூலமாகவும், தொழில் மாற்றத்தின் மூலமாகவும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார் என்பதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அந்தத் தொழில் மாற்றத்திற்கு முக்கிய காரணம் இந்த மாநிலத்தில் ஏராளமான மின்சக்தியை சீக்கிரமாக உற்பத்தி செய்திருப்பதுதான். அவர்கள் எடுக்கும் பல்வேறு முயற்சிகளிலேயே ஒரு பெரும் முயற்சி, இந்த மாநிலத்திற்கு மின்சாரத் திட்டங்களை அதிகமாகக் கொண்டுவரவேண்டும் என்பதாகும். ஹோகனக்கல் திட்டம், மேட்டூர் திட்டம் இவை முக்கியமானவை. திட்டத்திலே இல்லாததைக் கூட எப்படி அவர் எடுத்துக் கொண்டார் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது. மேட்டூர் டன்னல் ஸ்கீம் என்பது மேஜர் ப்ளான் ஸ்கீமிலே இல்லாவிட்டாலும் அதை எடுத்துக்கொண்டார். இம்மாதிரி எப்போதுமே மின்சாரத்தை அதிகமாகக் கொடுப்பதன் மூலமாக இந்த மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகளை அதிகமான அளவிற்கு ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. லேபர், தண்ணீர், நிலம் இவைபோன்ற வாய்ப்புக்கள் இந்த மாநிலத்தில் அதிகமாக இருப்பதன் காரணமாகத்தான் பெரிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு இந்த மாநிலம் முற்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது). இன்னும் இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டு முடித்துவிடுகிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் சிறப்பாகச் செய்துவந்தாலும் இன்னும் சில குறைகள் நீக்கப்பட வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. யார் பேரிலும் குற்றம் சொல்வதற்காக அல்ல நான் இதைச் சொல்வது. பிக் அயர்ன், நிலக்கரி இவ்விரண்டும் நம் மாநிலத்திற்கு வருவது இல்லை. இப்போதிருக்கும் சிறு தொழில்களின் வளர்ச்சியை நாம் காப்பாற்ற வேண்டுமானால், பிக் அயர்ன் ஸப்ளை, நிலக்கரி ஸப்ளை விஷயமாக சீக்கிரமாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் ஏற்கனவே ஏற்பட்ட சிறு தொழில்கள் காப்பாற்றப்பட முடியும் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்வித் திட்டத்தைப்பற்றி நான் சொல்ல வேண்டியதே இல்லை. ஏனென்றால், நம் மாநிலத்தில் கல்விக் கொடை வழங்கப்படுகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, எங்கோ பாலில் பல்லி செத்திருந்தது என்று சொல்லி, அதைப் பரிசீலனை செய்கிறோம் என்று ஒரு வருஷமாகப் பால் பவுடர் ஸப்ளை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. "பால் பவுடராகக் கொடுக்கலாம், தயிராகக் கொடுக்கக் கூடாது" என்று சொல்கிறார்கள். வெறும் பாலைச் சாப்பிட வாருங்கள் என்றால் அதிக உபயோகமில்லை. பால் பவுடர் வழங்கப்படாததால் தயிர் சாதம் வழங்க முடியவில்லை. ஏதோ ஒரு 'ஐஸலேடெட் இன்ஸ்டன்ஸ்' ஐ வைத்துக்கொண்டு, இவ்வளவு நாள் பாராமுகமாக இருப்பது சரியல்ல. என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்கிறேன். தூத்துக்குடியில் மதிய உணவுத் திட்டத்தின் கீழ்

நாங்கள் கிட்டத்தட்ட 2,500 பையன்களுக்கு மதிய உணவு போட்டு வருகிறோம். அங்கே தயிர் சாதம் போட அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். அந்தப் பக்கம் வரும் அமைச்சர்களையும், கனம் சபாநாயகர் அவர்களையும், கல்வி இலாகா டைரக்டர் அவர்களையும் கூட இதுபற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இவ்வளவு கால தாமதம் இருப்பது பொருத்தம் இல்லை. பால் பவுடரை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய உதவியைச் சீக்கிரமாகச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தூத்துக்குடி ஏரோட்ரோம் விஷயமாக ஒரு வார்த்தை. கயத்தார் ஏரோட்ரோமை இணைப்பதற்கு 25 மைல் ரோடு போடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் மத்திய சர்க்கார். இதிலே நம்முடைய மாநில சர்க்காருக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிடக் கூடாது. இவர்கள் நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் அதைப்பற்றிப் பேசவேண்டும். 25 மைல் ரோடு போடுவதற்கு ஆகும் செலவுக்குக் குறைவாகக்கூட தூத்துக்குடிக்கருகே ஏரோட்ரோம் கட்டிவிடலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். 25 மைல் ரோடு போடுவதற்கு ஆகும் செலவோடு சற்று அதிகமாகச் செலவானாலுங்கூட, அதை மாநில சர்க்கார் கொடுத்தாவது தூத்துக்குடியில் ஏரோட்ரோமைக் கட்ட முடியுமா என்பதை இந்த மாநில சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுச் சுகாதாரம் பற்றிக் குறிப்பிட வேண்டுமானால், சாக்கடைத் திட்டத்திற்கு நம்முடைய சர்க்காரிடமிருந்து இலேசில் அனுமதி கிடைப்பதில்லை. 'ஆஸ்பத்திரிகளுக்கே பணம் இல்லையே, மெடிகல் காலேஜ் வைக்கவே பணம் இல்லையே' என்று சொல்லிக்கொண்டிராமல் சாக்கடைத் திட்டங்களைப்பற்றியும் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். என்னுடைய தொகுதிக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நான் கேட்டது கிடையாது. என்றாலும், ஸ்ரீவைகுண்டம் சாக்கடைத் திட்டத்தைப்பற்றி நான் வற்புறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். சாக்கடைத்திட்டம் ஸ்ரீவைகுண்டத்திற்கு வேண்டுமென்று பொதுமக்களெல்லோரும் ரொம்பவும் 'அஜிடேட்' பண்ணுகிறார்கள். லட்ச ரூபாய் வருமானமுள்ள பஞ்சாயத்து இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதி கேட்டிருக்கிறது. மானியமாகக் கூடக் கேட்கவில்லை. இத் திட்டத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய தொகையைக் கடனாக பஞ்சாயத்துக்குக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, பொதுவாக இந்த பட்ஜெட்டை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் அறிக்கையிலே பார்த்தால். மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு வரவேண்டிய தொகையில் நான்கு கோடி ரூபாய் குறைந்துவிட்டிருந்தாலும், பாதுகாப்பு வேலைக்களுக்காக ஓரளவு செலவினங்கள் அதிகரித்தாலுங்கூட, நம்முடைய ஐந்தாண்டுத் திட்ட வேலைகள், பொதுவான அபிவிருத்தி வேலைகள் குறைவு

படாத நிலைமையில் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரியது.

குறிப்பாக விவசாய முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நல்ல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம்-ன் கீழ், ஜாமீன் இல்லாமலேயே கடன் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 103 ப்ளாக்குகளில் இந்தத் திட்டத்தை ஏற்கனவே விஸ்தரித்து இருப்பதோடு மேலும் 70 ப்ளாக்குகளுக்கு இத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று சொல்லியிருப்பது உண்மையிலேயே நல்ல நடவடிக்கையாகும். இராஜ்யம் பூராவும் இத் திட்டத்தை விஸ்தரித்து, ஜாமீன் இல்லாத கடன் விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதிலே விவசாயிகளுடைய நிலைமை சம்பந்தமாக ஏற்கனவே குறிப்பாக பல விஷயங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு பொருள்களின் விலை அதிகரித்து இருந்தாலும்கூட நெல்லின் விலை மட்டும் திடீரென்று குறைந்துவிட்டதனால் விவசாயிகள் ஓரளவு சலசலப்பு அடைந்திருக்கிறார்கள். அவர்கள் நெல் பயிரிடுவதை நிறுத்தி மற்ற லாபம் தரக்கூடிய கமர்ஷியல் க்ராப்ஸ் பயிரிடுவதற்கு மாறி விடாதிருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் இந்த விவசாயிகளுக்குத் தனியாக பலவித சலுகையும், ஊக்கமும் அளித்தாக வேண்டும். குறிப்பாக உரம், விதை போன்ற எல்லாப் பொருள்களும், விவசாயக் கருவிகளும் இவர்களுக்கு அளித்து ஊக்கம் அளித்தால்தான் இவர்கள் நெல் பயிரிடுவதிலேயே ஊன்றி நிற்பார்கள். அப்படி இல்லையானால் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி சமயத்தில் உணவுப்பொருள் பஞ்சம் ஏற்பட்டுவிடக்கூடும். ஆகவே இது விஷயத்தில் அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி விவசாயிகளுக்குத் தனியாக பலவித சலுகைகளும், ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் அபிவிருத்திக்குப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தொழில் வளர்ச்சிக்கு மின் சக்தியை அதிகப்படுத்தக்கூடிய அளவில் நம்முடைய ராஜ்யத்தில் 3-வது திட்டமாக அடாமிக் யூனிட் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன் வந்ததுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இது வரவேற்கத் தக்கது. அதே சமயத்தில் இன்னொன்று. மத்திய மந்திரி திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள் உத்திரப் பிரதேசத்தில் தனியார் துறையில் தர்மல் ஸ்டேஷன் ஒன்று ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் கோயம்பத்தூரில் தனியார் துறையில் தர்மல் ஸ்டேஷன் ஆரம்பிக்க அனுமதி கோரியதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உத்தர் பிரதேசத்தில் ஒரு தனிப்பட்ட முதலாளி தம்முடைய தொழில் ஸ்தாபனத்தின் சப்ளைக்கு மட்டும் என்று தர்மல் ஸ்டேஷன் வைத்துக்கொள்ள

அனுமதி கோரினர். வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் கோயம்பத்
தூரில் உள்ள தொழிலதிபர்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு
ஒரு தர்மல் ஸ்டேஷன் வைக்க அனுமதி கோரினர்கள். இது
இரண்டுக்கும் அதுதான் வித்தியாசம்.

திரு. வை. சங்கரன்: அதே ரீதியில் நம் மாநிலத்திலும்
தனியார் யாராகிலும் முன்வந்து தங்கள் ஸ்தாபனத்திற்கு என்று
தர்மல் ஸ்டேஷன் வைத்துக்கொள்ள அனுமதி கோரினல்
அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஹெவி இண்டஸ்ட்ரி என்று எடுத்துக்கொண்டால்
எங்கள் மதுரை மாவட்டம் பலவகையில் புறக்கணிக்கப்படு
கிறது. கோயம்பத்தூர், சேலம் போன்ற மாவட்டங்களைப் போல
எங்கள் மாவட்டத்தில் தொழில்கள் எதுவும் வளர்ச்சி அடைய
வில்லை. மதுரை மாவட்டத்தில் பெரிய இண்டஸ்ட்ரி ஏற்பட்டால்
தான் பல சிறு உபதொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு வழி
யேற்படும். நீலகிரி என்று எடுத்துக்கொண்டால் அங்கே ரா
பிலிம்ஸ் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. மதுரை
மாவட்டத்தில் கோடைக்கானல் இருக்கிறது. இங்கும் ஏதாவது
பெரிய தொழில் ஏற்பட்டால் தான் பலர் இங்கே வருவதற்கு
வாய்ப்பு ஏற்படும். வெறும் ஹெல்த் ரிசார்ட் என்று இருப்ப
தனல் மட்டும் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே
மதுரை மாவட்டத்திலும் பல ஹெவி இண்டஸ்ட்ரி அமை
வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் யுத்த நெருக்கடி காரணமாக அத்தியாவசியமான
திட்டங்கள் எதுவும் நிறுத்தப்படாது என்று முதல் அமைச்சர்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முனிஸிபாலிட்டிகள் என்று
எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு வாடர் சப்ளை ஸ்கீம்,
ட்ரெயினேஜ் ஸ்கீம் ஆகியவை மிகவும் அவசியமான திட்டங்கள்.
அவற்றையும் தொடர்ந்து நடத்த அனுமதி அளிக்கப்படவேண்டும்.
எங்கள் மதுரையை எடுத்துக்கொண்டால் மேலக்கால்
ஸ்கீம் மிகவும் முக்கியமானது. அதை தாமதம் ஏற்படாமல்
நிறைவேற்ற வேண்டும். பேரணி ஸ்கீம் இருக்கிறது. அதுவும்
நெருக்கடி நிலையில் நிறுத்தப்படாது என்று முதல் அமைச்சர்
உறுதியளித்திருக்கிறார். அதையும் நிறைவேற்ற முயற்சிக்க
வேண்டும்.

மதுரை டவுன்ஹால், முனிஸிபாலிட்டி பில்டிங் கட்டுவதற்
கான அனுமதி கோரி அரசாங்கத்திடம் வந்திருக்கிறது. சீக்கிரம்
அவைகளுக்கு அனுமதி வழங்கவேண்டும்.

லாண்டு அக்விஸிஷன் சம்பந்தமாக சீக்கிரத்தில் நடவடிக்கை
எடுப்பது கிடையாது. பப்ளிக் பர்பஸஸ் சம்பந்தமான நிலங்
களையாவது உடனடியாக அக்வயர் பண்ணுவதற்கு நடவடிக்கை
எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் வீடு கட்டும் திட்டம் சம்பந்தமாக நகரத்தை
யொட்டி இருக்கிற நிலங்களுக்கு ஏக்கருக்கு 150 ரூபாய் என்று
கொடுத்து எடுத்துக்கொள்கிறார்கள். அதுவும் அங்கே சென்ட்

ஆயிரம் ரூபாய் என்று விற்கப்படுகிறபோது இப்படி அவர்கள்
எடுத்துக்கொள்ளுவதனல் நிலக்காரர்கள் பெரிதும் நஷ்டமும்
கஷ்டமும் அடைகிறார்கள். புற நகர்த் திட்டம் என்ற அடிப்படை
யிலாவது நகரத்தையொட்டி இருக்கிற நிலங்களை எடுத்துக்கொள்
ளாது சற்று தூரத்தில் இருக்கும்படியான நிலத்தை எடுத்துக்
கொள்ளலாம். சாடிலைட் டவுன் என்ற முறையில் அமைப்பது
நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரையைப்பற்றி ஒரு வார்த்தை. சர்க்கரை விலை ஏறிக்
கொண்டே இருக்கிறது. 1960 இல் 110 ரூபாய் விற்றது இப்பொழுது
130 ஆகிவிட்டது. இந்த நேரத்தில் சமீபத்தில் அமராவதி மில்ஸ்
கூட மூடப்பட்டிருக்கிறது. அங்கே உற்பத்தியாகிற கரும்பு அதிக
விலை கிடைப்பதனல் வெல்லத்திற்குப் போகிறது, அதனல் சர்க்
கரை மில்லுக்குபோதுமான அளவு கிடைக்கவில்லை என்று சொல்
கிறார்கள். இப்படி சில சர்க்கரை கூட்டுறவு ஆலைகள் மூடப்
படுமானல் கூட்டுறவு இலாகாவுக்குத்தான் கெட்ட பெயர்
ஏற்படும். ஆகவே அந்த ஆலைகள் நல்ல முறையில் நடைபெற
வழிவகை செய்ய வேண்டும்.

ஓவர்ப்ரிட்ஜ் சம்பந்தமாக சென்னையில் மட்டும் அல்ல. இங்கே
தான் பெரிய அளவு ஓவர்ப்ரிட்ஜ் இல்லாததனல் கஷ்டம்
ஏற்படுவதாக நினைக்கவேண்டாம். மதுரை போன்ற பெரிய
நகரங்களிலும் இந்தக் கஷ்டம் இருந்து கொண்டிருக்கிறது.
அங்கும் கூட ஒன்றிரண்டு திட்டங்கள் சொல்லப்பட்டது.
ஆனல் எதையும் எடுத்துக்கொள்வதாகக் காணேம். முக்கியமாக
மதுரையைப் பொறுத்த வரையில் இரண்டு ஓவர்ப்ரிட்ஜ் திட்டம்
இருக்கிறது. ப்ரையாரிடி லிஸ்டில் 3-ஆவதாக இருக்கிறது.
அதையும் எடுத்து நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும்.
மாஸ்டர் ப்ளான் திட்டத்தை மதுரை போன்ற இடங்
களுக்கும் விஸ்தரிக்கவேண்டும்.

பொற்கொல்லர் சம்பந்தமாக அரசாங்கம் உடனடியாகத்
தக்க கவனம் செலுத்தியாகவேண்டும். வேலை இல்லாமல், சாப்
பாட்டுக்கு வழியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்
களைப் போய் உங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளுங்கள்
இரண்டுமாதத்தில் வேலை கிடைக்கும் என்று சொல்வது கொஞ்
சமும் சரியில்லை. எங்கள் தொகுதிகளில் அவர்கள் படுகிற கஷ்டம்
எங்களுக்கே பெரிய சங்கடமாக இருக்கிறது. அவர்களைப்
பார்க்க முடியவில்லை. அவர்களுடைய பரிதாபகரமான நிலையைப்
போக்க கேரளா போன்று வாரத்திற்கு இரண்டு படி அரிசி
என்றுவது கொடுங்கள். சர்க்கார் நினைத்தால் தனியார் ஸ்தா
பனங்களில் ஆளுக்கு 50 முதல் 100 பேர்களையாவது உடனடியாக
வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்வது முடியாத
காரியம் அல்ல. அவர்கள்படுகிற தொல்லைகளுக்கு உடனடி
யாக நிவாரணம் அளிக்கவில்லையென்றல் மிகவும் சங்கடமாகப்
போய் விடும். ஆகவே உடனடியாக அவர்கள் விஷயத்தில்
கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வி சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் ஏராளமானபேர்கள் பி.யு.ஸி.க்கு வருகிறார்கள். காலேஜுக்கு வருகிறார்கள். அதை முன்னிட்டு புதுக்கல்லூரிகளைத் திறக்க வழி செய்யவேண்டும். மேலும் அடுத்த ஆண்டு முதல் சிலபஸ் மாற இருப்பதனால் எந்தவகையில் புத்தகம் தயாரிக்கப்படவேண்டுமென்பது ஒரே குழப்பமாக இருக்கிறது. சர்க்காருக்கு இது பற்றி திட்டமான ஒரு கருத்து ஏற்கனவே இருக்குமாதாலால் அதைப்பற்றி ஒரு டிராப்ட் சிலபஸ் வெளியிட்டால் சட்ட சபையில் அதைப்பற்றி விவாதம் முடிந்தவுடனே புத்தகங்கள் வெளி வருவதற்கு புத்தக வெளியிடுவோருக்கு உதவியாக இருக்கும். அதற்குள் மற்றவர்களும் அதுபற்றி ஆராய்ந்து வைத்திருப்பார்கள். மேலும் சமஸ்கிருதம் சம்பந்தமாக ஒரு விஷயம் விரும்பிப் படிக்கும் பாடமாக அதை எடுத்துக்கொள்ள மாணவர்கள் விரும்பினால் அதை அனுமதிக்கவும் சமஸ்கிருத ஆசிரியர்களை நியமிக்கவும் சர்க்கார் தயங்கக்கூடாது. இதுபற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10–30 a.m. பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் 'நான் டீச்சிங் ஸ்டாப்'-க்கு பென்ஷன் போன்ற வசதிகள் இல்லை. அவர்கள் கடைசி வரை கிளார்க்குகளாகவே இருந்து இறக்கவேண்டி நேரிடுகிறது. அவர்கள் ஒரு சில சலுகைகளைக் கேட்டிருக்கிறார்கள். பென்ஷன் சலுகை 500 பிள்ளைகளுக்கு மேல் இருக்கும் பள்ளிக்கூடங்களில் ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க்கு விதம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்போது கிளார்க்குகளுடைய வேலை பல மடங்கு அதிகரித்திருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக மெடிகல் சம்பந்தமாகக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : இதைப்பற்றி மெடிகல் டிமாண்டில் பேசலாமே?

திரு. வை. சங்கரன் : ஓரிரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். மதுரை ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால் அங்கு சென்னையிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியைவிட 'பெட் ஸ்ட்ரெங்த்' அதிகமாக இருக்கிறது. சென்னையில் 'பெட் ஸ்ட்ரெங்த்' 1,200 தான். மதுரையிலோ 'பேட் ஸ்ட்ரெங்த்' 1,600. மதுரை ஆஸ்பத்திரியை 'சதர்ன் டிஸ்ட்ரிக்ட்ஸ் செண்டர்' ஆக ஆக்கி அங்கு 'நியூரோ சர்ஜரி' 'தொராஸிக் சர்ஜரி' போன்ற மற்றப் பிரிவுகளை எல்லாம் ஏற்படுத்தி வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆஸ்பத்திரியில் லாண்டிரி இல்லாதது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறைதான் அங்குள்ள துணிகள் எல்லாம் சுத்தம் செய்யப்படுகின்றன. அதன் காரணமாக 'கிராஸ் இன்பெக்ஷன்' ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஆகவே, லாண்டிரி ஒன்றை ஏற்படுத்தவேண்டும். ஒரு ஐஸ் பாக்டரியையும் ஏற்படுத்த

வேண்டும். ஆப்பரேஷன் தியேட்டர்களை 'ஏர் கண்டிஷன்' செய்ய வேண்டும். இன்பெக்ஷியஸ் டிசீஸஸ் ஹாஸ்பிடல் ஆற்றோரத்தில் இருக்கிறது. அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். ஸ்பெஷலிஸ்டு டாக்டர்கள் நம்முடைய ராஜ்யத்தில் மிகக் குறைவாக இருப்பதால், போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடியை ஆரம்பிக்க மதுரை ஆஸ்பத்திரிக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் இந்த ஆண்டு பட்ஜெட்டை ஆளும் கட்சியினைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பாராட்டி வரவேற்றார்கள். அவர்கள் பாராட்டி வரவேற்பதற்குக் காரணமாக இருக்கின்ற ஒரே ஒரு நிகழ்ச்சி, அதில் புதிய வரி இல்லை என்ற ஒன்றுதான்.

கனம் சபாநாயகர் : அதற்காக கனம் அங்கத்தினர் எதிர்க்க வேண்டாம். (சிரிப்பு.)

புலவர் கா. கோவிந்தன் : இந்த பட்ஜெட்டிலே புதிய வரி இல்லையென்ற போர்வை இருக்கிறதேயொழிய, ஆராய்ந்து பார்க்கும் போது அது ஒரு கானல் நீர் அல்லது பேய்த்தேர் என்பது விளங்கும். பாலை நிலத்தில் தொலைவிலிருந்து நோக்குகின்ற நேரத்தில் நீர்நிலை இருப்பது போன்று தோன்றும். விலங்குகள் எல்லாம் நீர் கிடைத்துவிட்டது என்று எண்ணத்தினால் அந்த இடத்தை நோக்கிச் செல்லும். கிட்டே நெருங்கிப் பார்க்கும் நேரத்தில் வெறும் மணல்தான் இருக்கும். அந்த அளவில் வரி இல்லையென்று சொல்லக்கூடிய நிலைமையில் மேலே போர்வை போட்டு இந்த பட்ஜெட்டை நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். பட்ஜெட்டை வரவேற்க முடியவில்லை, பாராட்ட முடியவில்லை என்று சொல்லும் அந்த நேரத்தில், இந்த பட்ஜெட்டை நிதியமைச்சர் அவர்கள் அமைத்திருக்கிற முறை, பேய்த்தேரைப் பார்த்து ஏமாறும் விலங்குகள் போன்று இந்த மன்றத்தில் இருக்கின்றவர்களும், மற்றவர்களும் ஏமாறுகின்ற வகையில், உள்ளே எவ்வளவு இருந்தாலும், வெளிப் பார்வைக்கு மிக அழகாக, பாராட்டக்கூடிய வகையில் அளித்திருக்கும் முறைக்காக அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. வரி இல்லை என்ற காரணத்தை வைத்து, இந்த பட்ஜெட்டைப் பாராட்டுகிறார்கள் என்றால் அது ஒன்றே காட்டுகிறது—வரி என்ற ஒன்று அரசாங்கத்திற்கு ஆக்கம் தருவதாக இருக்க முடியாது என்பதை. வரி இருக்கக் கூடாது என்று சொல்லுகின்ற நேரத்தில் வருவாய் பெருக வேண்டாமா என்ற கேள்வி எழும். வருவாய் பெருகத்தான் வேண்டும். வருவாய் பெருகவேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், நம்முடைய பழைய நூல்களைப் புரட்டிப் பார்க்கின்ற நேரத்தில், நல்ல பொருளாதாரத் திட்டங்கள் அங்கே நமக்குத் தெளிவாகத் தோன்றும். பொருள் வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், பொருளை எப்படிப் பெற வேண்டுமென்பதற்கு ஒரு விடையைக் கூறுகின்ற நேரத்தில்—

"செய்க பொருளைச் செறுநர் செக்கு அறுக்கும் எஃகு
அதனிற் கூரியது இல்"

என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர். பொருளைச் செய்யவேண்டுமென்று சொன்னால் அது நோட்டு அடிப்பது என்று கருதி விடக்கூடாது. அது மட்டுமல்ல. "இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்று சொல்லி, பொருளை இயற்ற வேண்டுமென்று சொல்கிறார். இப்படி அந்தப் பொருளாதாரத் தத்துவத்தைப் பார்க்கின்ற நேரத்தில், வருவாய்க்கு முதலிடமும், வரிக்கு அடுத்த இடமும் தான் கொடுத்திருக்கிறார். "உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்" என்பதில், அரசன் தேடும் பொருளை முதலில் வைத்து, பின்னர்தான் வரியின் மூலம் பெறும் பொருளைக் குறிப்பிடுகிறார்.

இப்படியெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் ஆட்சியாளர்கள் வருவாயைப் பெருக்க வழி செய்திருக்கவேண்டும். வருவாயைப் பெருக்க இந்த பட்ஜட்டில் ஏதாவது வழி வகைகள் செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், அப்படிச் செய்திருப்பதாகத் தெரியவில்லை. வருவாயைப் பெருக்க எதிர்த்தரப்பில் இருக்கும் நாங்கள் எத்தனையோ வழிகளை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். 'பஸ்களைத் தேசிய மயமாக்குங்கள், வருவாய் பெருகும்' என்று சொன்னோம். அதைப்பற்றி இந்த பட்ஜட்டில் ஒன்றும் இல்லை. ஆக, வருவாய் பெருகவில்லை.

இந்த பட்ஜட்டில் வரி இல்லையென்று சொல்கிறார்கள். வரி இல்லையா என்று பார்த்தால், இந்த பட்ஜட்டில் செலவினத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் அவ்வளவு பணமும், ஒருசில லட்சங்களைத் தவிர மற்றவை எல்லாம் வரியாக வரும் பணந்தான் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். புதிய வரி இல்லையென்று சொல்கிறார்கள். புதிய வரிகளைப் போட முடியாத அளவுக்கு நம்முடைய மத்திய அரசு மாநில நிதியமைச்சரைக் கொண்டுவந்து விட்டுவிட்டது. நில வரி, நீர் வரி என்பது சென்ற நிதி ஆண்டிலேயே கொண்டு வரப்பட்டிருந்தாலும் கூட, இந்த ஆண்டுதான் ஏழை விவசாய மக்களைப் பாதிக்கப் போகிறது. செலக்ட் கமிட்டியில் இருக்கும் நகர நிலவரி மசோதா இன்னும் சில மாதங்களில் நம்முடைய பொதுமக்களின் கழுத்தை நெறிக்கப்போகிறது. அதுமட்டுமல்ல. இப்போது மத்திய சர்க்கார் வரிகளைப் போட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நம்முடைய பட்ஜட்டை தயாரிக்கும் நிலைமை ஏற்பட்ட காரணத்தால் நம்முடைய நிதியமைச்சர் என்ன வரி போடுவது என்று நினைத்துப் பார்ப்பதற்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. உண்மையிலேயே, மத்திய சர்க்கார் பட்ஜட் வெளியாகி, ஒருவாரம் கழித்து இந்த பட்ஜட்டை தயாரிக்கும் வாய்ப்பு இருந்து இருக்குமானால் நிதியமைச்சர் அவர்கள் தேடிப்பார்த்து வரி போட்டிருப்பார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல. இதிலேயே குறிப்பாகக் காட்டியிருக்கிறார்கள். எனக்கு மாமியார் போல் இருக்கும் மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரிகளில் ஒரு பகுதி நம் மாநில அரசுக்குக் கிடைக்கும் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். விற்பனை வரி பற்றி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 'பிற மாகாண சர்க்கார் ஆடம்பரப் பொருள்களுக்கு அதிக வரி போடும் நேரத்தில் நமது மாகாண சர்க்காரும் கூடுதல் வரி போட வேண்டியிருக்கும்' என்று கூறியிருக்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினரிடத்திலே ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. அதை இப்போதே திருத்திவிடுவது நல்லதென்று நினைக்கிறேன். மற்ற மாகாணங்கள் 10 சதவிகிதம் வரி போடும்போது நம்முடைய மாகாணம் மட்டும் 7 சதவிகிதம் வரியையே வைத்திருந்தால், நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனையாகாது. காரணம் என்னவென்றால், வெளி ராஜ்யத்திலிருந்து வாங்கும்போது செண்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் ஒரு பர்சண்ட் கொடுப்பார்கள் என்றால், நம்முடைய ராஜ்ய வரி 7 சதவிகிதம் 8 சதவிகிதம் கொடுப்பதாக இருக்கும். அதனால் நம்முடைய ராஜ்யப் பண்டங்கள் விற்பனையாகாமல் போய்விடும். மற்ற ராஜ்யங்கள் 10 சதவிகிதம் என்று பண்ணினால் நாமும் அந்தமாதிரி 10 சதவிகிதம் என்று போட்டால்தான் நம்முடைய பண்டங்கள் விற்பனையாகும்.

* **புலவர் கா. கோவிந்தன் :** தொழில் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. அதில் அவர் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதை மறுக்க முடியாது. மற்ற மாநிலத்தைக் காட்டிலும் நம் மாநிலத்தில் குறைவாக இருந்தால் ஏற்படுகிற ஒரு நிலையை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்த நிலை காரணமாக நம் மாநிலத்தில் விற்பனை வரி உயரும் என்பதை அவர்கள் மறுக்கவில்லை. ஆகவே அந்த வகையில் இங்கு ஓரளவு வரி மேலும் வர இருக்கிறது என்பதுதான் என் வாதம். மருமகள் போடமுடியாத நிலையில் மாமியார் வரி போட்டுவிட்ட காரணத்தினால் நம் நிதியமைச்சர் அவர்களால் புதிதாக வரி போட முடியவில்லை. அது மட்டுமல்ல. எனது நண்பர்கள் குறிப்பிட்ட நேரத்தில் மாநில சர்க்கார் கடன் எழுப்பாத நிலையில் மத்திய சர்க்கார் கடன் எழுப்பப் போகிறது என்று சொன்னார்கள். எப்படியாவது இருக்கட்டும். அவர்கள் எழுப்பும் கடனில் 13 கோடிக்கும் மேல் நமக்குத் தரப்போகிறார்கள். நம் சர்க்காரிடம் மானியம் பெறுகிற மாநில மின்சார போர்ட் 3 கோடி கடன் எழுப்பப் போகிறது. ஆக இந்தளவில் 16 கோடிக்கு மேல் கடனாக இந்த மாநில சர்க்காருக்கு வர இருக்கிறது. அடுத்து கட்டாயமான சேமிப்பு என்றமுறையில் சம்பளம் வாங்குகிறவர்கள் தங்கள் சம்பளத்தில் இவ்வளவு கட்டாயமாக சேமிக்கவேண்டுமென்ற திட்டமும், இவ்வளவு வரி கொடுக்கிறவர்கள் இவ்வளவு பணம் கட்டயமாக சேமிக்க வேண்டுமென்ற ஒரு திட்டமும் அண்மையில் வர இருக்கிறது. அந்த முறையில் பல கோடி நம் சர்க்காருக்கு வர இருக்கிறது. இவ்வகையில் பார்க்கிறபோது இந்த பட்ஜட் வரி போடாத பட்ஜட் என்று யாரும் நினைக்க வேண்டாம். வரி போடாத பட்ஜட் என்ற போர்வையைக் காட்டிவிட்டு, உள்ளே இவ்வளவு வரிகளை அடக்கி வைத்திருக்கிறார்கள் நம் அருமை நிதியமைச்சர் அவர்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. வரி போடவில்லை என்று கூறிவிட்டார்கள்.

வரி போடவில்லை என்று சொல்லிவிட்டாரேயொழிய திட்டங்களை புதிதாகப் புகுத்தி அதைப் பெருக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால் அது இல்லை. ஆங்காங்கே சில சில பகுதிகளை

[புலவர் கா. கோவிந்தன்] [2nd March 1963

நீக்கிவிட்டு, சென்ற ஆண்டு நிகழ்த்திய பட்ஜட் உரையையும் இந்த ஆண்டு நிகழ்த்தியிருக்கும் உரையையும் படித்துப் பார்த்தால், இது சென்ற ஆண்டு உரையா இந்த ஆண்டு உரையா என்ற வேற்றுமை எவருக்கும் தெரியாதவகையில் சென்ற ஆண்டுத் திட்டங்கள்தான் இப்போதும் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர புதிதாக எந்தத் திட்டத்தையும் பெரிய அளவில் புகுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. ஆக இவ்வளவு செய்து விட்டார்களே ஏதாவது மிச்சப்பட்ட ஒரு பட்ஜட்டைக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் அதிலும் துண்டு பட்ஜட்தான். ஆக வரியை இவ்வளவு மறைமுகமாக நுழைத்துவிட்டு திட்டங்களை விரிவாகப் பெருக்காமல் குறைவான ஒரு பட்ஜட்டைக் கொடுத்திருக்கிறார் என்றால் இந்தப் பட்ஜட்டை எப்படிப் பாராட்ட முடியும் என்றுதான் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே முன்னே நான் கூறியதுபோல் நிதியமைச்சர் அவர்களின் சொல் ஜாலங்களைத்தான் இந்த அறிக்கையில் காணமுடிகிறதே தவிர நிதிநிலை அறிக்கையை பாராட்ட முடியவில்லை என்று எதிர்தரப்பிலுள்ளவர் சார்பில் எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, எனது மதிப்பிற்குரிய நண்பர் பெரு நகரங்களிலுள்ள கழிநீர் கால்வாய்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருவற்றிபுரம் ஒரு மேஜர் பஞ்சாயத்து. அங்கு நாங்கள் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு தெருவில் பொதுக் குழாய்கள் அமைத்திருக்கிறோம். எங்களுக்கு குடிநீர் அவசரமாக வேண்டியிருந்ததால் சர்க்காரிடம் முழுத் தொகையையும் கடனாகவே வாங்கி குடிநீர்குழாய்த் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இப்போது ஒரு சில இடங்களில் 25 சதவிகிதம் மான்யமாகவும், 75 சதவிகிதம் கடனாகவும், சில இடங்களில் 50 சதவிகிதம் கடனாகவும் 50 சதவிகிதம் மான்யமாகவும், இல இடங்களில் 75 சதவிகிதம் மான்யமாகவும் 25 சதவிகிதம் கடனாகவும் வழங்கி குடிதண்ணீர் திட்டங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. எங்களுக்கு அவசரத் தேவையாக இருந்ததால், முழுப் பணத்தையும் கடனாக வாங்கி திட்டத்தை அமைத்திருக்கிறோம், எங்கள் சிறிய பஞ்சாயத்திலிருந்து வருகிற பணத்தை—சிறிய பஞ்சாயத்து என்று சொல்கிறீர்களே மேஜர் பஞ்சாயத்து என்று சொல்லிவிட்டு என்று சொல்லலாம், நிதித் துறையில் எங்கள் பஞ்சாயத்து சிறிய பஞ்சாயத்துதான். ஏனெனில் அங்கிருக்கிற அத்தனை பேர்களும் நெசவாளர்கள் அல்லது விவசாயிகள். ஆகவே, அவர்களிடமிருந்து பெரிய வருவாயை எதிர்பார்க்க முடியாது--அதில் பெரும் பகுதியை கடனுக்காக கொடுக்கும் நிலை இருக்கிறது. குடிதண்ணீர் திட்டம் வந்திருப்பதால். ஆங்காங்கு ஒழுகுகிற நீர் தெருவில் தேங்கி எங்கள் ஊரில் மலேரியா போன்ற நோய்கள் வருகின்றன. ஆகவே எங்கள் ஊரில் கழிநீர் கால்வாய்த் திட்டம் தேவையென்று சென்ற ஆண்டல்ல அதற்கு முந்திய ஆண்டிலிருந்து முயற்சி செய்து வருகிறோம். சென்ற ஆண்டு அதற்கு நிதி ஒதுக்கப்பட்டது என்ற அளவிற்குக் கூட செய்தி கிடைத்தது. ஆனால், உங்கள் பஞ்சாயத்தின் நிதிநிலைமையில் உங்களுக்கு உள்ள கடனைத் திருப்பிக் கட்டவே முடியாது. ஆகவே மேலும் கடன் தரமுடியாது என்ற

2nd March 1963] [புலவர் கா. கோவிந்தன்]

பதில் அரசாங்கத்திலிருந்து அண்மையில் வந்திருக்கிறது. அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் அவசரத் தேவை காரணமாக நாங்கள் முழுக் கடனாகவே வாங்கி குடிநீர் திட்டத்தை அமைத்திருக்கிறோம். 25 சதவிகிதம், 50 சதவிகிதம், 75 சதவிகிதம் என்று மான்யமாக கொடுக்கும் திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தில் எங்கள் ஊரைச் சேர்த்து நாங்கள் கட்டியிருக்கும் பணத்தில் எவ்வளவு கழிப்பது என்று பார்த்து அதைக் கழித்துவிட்டு எஞ்சிய பகுதியை கடனாகக் கோரினால் எங்கள் கடன் தொகை குறையும். மேலும் எங்களுக்குத் தேவையாக இருக்கிற கழிநீர் கால்வாய்த் திட்டத்திற்கும் கடன் தர வாய்ப்பிருக்கும் என்று கூறிக்கொண்டு எங்கள் திருவெற்றிபுரம் பஞ்சாயத்தை அமைச்சர் அவர்கள் தமது கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் கருத்தரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை நான் சற்று ஏமாற்றத்தோடு வரவேற்கிற நிலையில் இருக்கிறேன். ஏமாற்றத்திற்குக் காரணம் நிதிநிலை அறிக்கை என்று சபையில் வந்தால் அந்த அறிக்கையில் ஏதோ ஒன்றிரண்டு புது வரிகளாவது இருக்கும் என்றால் என்னைப் போன்று ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்குக் கூட அரசாங்கத்தை சொல்லாமல் சொல்வதற்கு பேசாமல் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் முழுமைக்கும் புது வரிகள் இல்லாத ஒரு அமைப்பில் இந்த அறிக்கை வந்திருப்பதால் பேசுவதற்குக்கூட ஒரு வாய்ப்பு கிடைக்காமல் போய் விட்டது. கம்பனைப் பேசுவதைத் தவிர வேறு ஒரு வழி இல்லை என்று தோன்றுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாக குறிப்பிட்டிருப்பது மூன்று விஷயங்கள். ஒன்று, நம் பெரிய நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த விஷயம். இரண்டு, இந்த நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வழி ஏற்படுகிற உற்பத்திப் பெருக்கத்திற்கான ஏற்பாடு. மூன்று இந்த நாட்டின் முக்கிய தொழிலாகிய, இந்த நாட்டு மக்கள் எண்ணிக்கையில் 80 சத விகிதத்தினர் கைக்கொள்கிற தொழிலாகிற, விவசாயத்தை அதன் வளர்ச்சியை பெருக்கி அதன் வழி உணவு உற்பத்தியை அதிகப்படுத்துகிற ஒருநிலையில் எடுக்கப் போகிற நடவடிக்கைகளைக் குறித்ததொரு நிலைமை. ஆக இந்த மூன்று பெரிய நிலைகளையும் நாம் இந்த அறிக்கையில் காண்கிறோம். அதில் முதலாவதாக குறிப்பிட்டிருக்கிற தேசத்தின் தற்காப்பு என்ற விஷயத்தை நாம் நோக்குவோமானால் தேசத்தின் தற்காப்பு, பாதுகாப்பு என்று சொன்னால் அது தேசத்தின் வீரத்தையும், தேசத்தின் தன்மான உணர்ச்சியையும், தேசத்தின் தன்மானத்தையும் பாதுகாத்தல் என்பதுதான் பொருள், என்று எனக்குத் தோன்றுகிறது. அதில் கம்பர் சொல்கிறார்.

“மான நேர்ந்தற நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [2nd March 1963

ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தான் மென்னத் தழைத்தது நீத்தமே." என்கிறார்.

கோசல நாட்டில் பாயும் சரயூ நதியின் தண்ணீர் பெருக்கம் இரண்டு கரைகளையும் பிடித்துக்கொண்டு போகும் வெள்ளப் பெருக்கம், உள்ளடங்கிச் செல்கிற வெள்ளப் பெருக்கமானது எவ்வாறு இருக்கிறது என்பதை கம்பர் அரசியல் தத்துவத்தை காட்டி விளக்குகிறார். "மானம் நேர்ந்தற நோக்கி மனு நெறி போன தண் குடை வேந்தன் புகழென" என்று கூறியிருப்பதிலிருந்து ஒரு தேசத்தின் அரசன், அல்லது ஒரு தேசத்தின் அரசு எவ்வாறு இயங்க வேண்டும் என்பதை கம்பர் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். முதலில் தன்மானத்தை காப்பாற்றி தன்மான உணர்ச்சியை காப்பாற்றி. அதற்கு மேல், "அறம் நோக்கி மனு நெறி போன தண் குடைய வேந்தன் . . ." அற வழியில் நின்று அரசாட்சி செய்து புகழ்பெற்ற அரசனது புகழ் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக பெருக்கெடுத்து சரயு நதியின் வெள்ளம் ஓடிற்று என்று கம்பர் கூறுகிறார். இதை நாம் பார்ப்போமேயானால் ஒரு தேசத்திற்கு முதலாவது தேவைப்படுவது தன்மானம். அதைக் காப்பாற்றுவது தான் மிக முக்கியம் என்பதை எல்லோரும் அறியவேண்டும். அதைத்தான் மனிதருள் மாணிக்கம் என்று உலகத்தாரால் சொல்லப்படுகிற நேருஜி அவர்கள் அடிக்கடி நமது கௌரவம் என்றும் நம்முடைய தேசத்தின் கௌரவம் என்றும் சொல்லிவருகிறார்கள். அதைத்தான் சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முன்னால் நமது நாட்டிலிருந்த கம்பர் பெருமான் அவர்கள், அந்தக் காலத்திலேயே நம்முடைய பண்பாடு, நம்முடைய அரசியல் தத்துவம், தேசத்தின் தன்மானம், தன்மான உணர்ச்சியை காப்பது என்பதை முக்கியமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

என்னுடைய ஊரில் என்னைப்போன்ற வாலிபர் ஒருவர் இருக்கிறார். (சிரிப்பு.) சிரிப்பதற்கொன்றுமில்லை, நான் வாலிபர்தான், வயது 45 தான் ஆகியிருக்கிறது. அவரும் என்னைப்போல் முழுவதும் தெரிந்தவரும் அல்ல, தெரியாதவரும் அல்ல. இடைவெளியில் இருக்கக்கூடியவர்கள், இப்பேர்ப்பட்டவர்களுக்கு எப்போதுமே ஆபத்துத்தான். ஒன்று விஷயத்தை நன்றாகப் புரிந்திருக்கவேண்டும் அல்லது முழுவதுமே விஷயம் தெரியாமல் இருக்கவேண்டும். அவர் என்னைக் கேட்டார், நான் அவருடைய சொந்தப் பிரசாரத்திற்காகப் போயிருந்தபோது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் எல்லாம் நம்முடைய நாட்டின் பாதுகாப்பில் கவனம் செலுத்திவருகின்றனவே, அவர்களே நம்முடைய நாட்டின் பாதுகாப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறார்களே, அதே சமயத்தில் நாம் ஏன் ஒரே அடியாக அவர்களுடைய கையில் நம் நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு பேசாமல் இருந்துவிட்டால் என்ன, நமக்கு எந்தவிதமான தொல்லை இல்லையல்லவா என்று கேட்டார். அதற்கு நான் சொன்னேன். சீனா தேசத்திலும் உள்நாட்டுக் குழப்பம் வந்தபோதும் இப்படித்தான் சியாங்கேஷேக் நினைத்தார். அதன் காரணமாகத்தான் இன்று சியாங்கேஷேக் சர்க்கார் போய், இன்று

2nd March 1963] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

சியாங்கேஷேக் ஏதோ ஒரு தீவில் இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்தவிதமான ஒரு நிலை நமக்கும் ஏற்பட வேண்டுமா என்று நான் திருப்பி அவர்களைக் கேட்டேன். எங்கள் இரண்டு பேர்களுக்குமே இதைப்பற்றி கூடுதலாகத் தெரியாது. எவ்வளவு தூரத்திற்கு இது பொருந்தும் என்று தெரியவில்லை. இந்த சபைக்கு நான் சொல்வது பொருந்துமானால் எடுத்துக் கொள்ளலாம், இல்லையென்றால் விட்டுவிடலாம். முக்கியமாக நாட்டினுடைய பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும், தன்மான உணர்ச்சி காப்பாற்றப்பட வேண்டும், என்கின்ற எண்ணம் தமிழகத்தில் அந்தக்காலத்திலேயே இருந்தது என்பதை கம்பர் பெருமான் அவர்களின் செய்யுள் நமக்கு எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இதை படித்த அளவில் புரிந்து கொண்டிருக்கிறேன். அந்த வகையில் தமிழ்நாட்டு அரசாங்கமும் நம்முடைய நாட்டினுடைய பாதுகாப்புக்கு முக்கிய இடம் தந்திருக்கிறது. மக்களை உற்சாகப்படுத்துகின்ற முறையில், எந்தவிதமான வரியையும் போடாமல், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சமயத்தில் எது வேண்டுமானாலும் என்ன நேர்ந்தாலும் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் உள்ளவர்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகையால்தான் அரசாங்கம் இதில் தலையிட்டு, "பலவந்த நேர்தல்" என்ற முறையைக் கொண்டுவராமல் மக்களுக்கு எந்தவிதமான தொல்லையும் அளிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன் புதிய வரிகள் எதையும் போடாமல் நல்லமுறையில் இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்து சமர்ப்பித்ததற்கு தமிழ்நாட்டு அரசாங்கத்தையும் முக்கியமாக நிதி அமைச்சர் அவர்களையும் தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் என் தொகுதி மக்கள் சார்பாகவும் பாராட்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி முக்கியமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. வள்ளுவர் பெருமான் கூறினார்,

"செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்"

என்று சொல்லியிருக்கிறார். பகைவனுடைய செருக்கைத் தடுப்பதற்கு, உறுதுணையாக, ஒப்பற்ற கருவியாக, ஒரு நாட்டுக்கு இருப்பது அந்த நாட்டினுடைய உற்பத்திப் பெருக்கம்தான் என்று வள்ளுவர் பெருமான் அவர்கள் கூறுகிறார். அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையில் நமது நிதி அமைச்சர் அவர்கள், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் மிக்க பலம் வாய்ந்த நாடுகளாக வாழ்வதற்குக் காரணம், பிற அன்னிய நாடுகள் படையெடுப்பதற்கு அஞ்சும் தன்மையனவாக இருப்பதற்குக் காரணம், அந்த நாடுகளுடைய உற்பத்திப் பெருக்கம்தான் என்ற கருத்தை எடுத்துச் சொல்லியிருப்பது, மிகவும் அபூர்வமான அமைப்பாக விளங்குகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில்தான் பகைவனுடைய திறத்தை ஒடுக்குவதற்கு போர் ஆயுதமாக பயன்படுவது உற்பத்திப் பெருக்கம்தான். அந்த

[திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [2nd March 1963

முறையில் உற்பத்திப் பெருக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்ற முறையில் மக்களை உற்சாகப்படுத்துகின்ற வகையில் பல குறிப்புகளை இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பதற்கு உண்மையிலேயே இந்த மாமன்றம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதற்குமேல், இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படுகிற அதிகமான குறிப்புக்கள் விவசாயத் தொழிலைப்பற்றித்தான். அதிலும் நான் முன்பு குறிப்பிட்டது போல் ஒரு நாட்டினுடைய தொழிலும் முக்கியமாகும். அந்த அளவில் நம்முடைய நாட்டின் முக்கியமான தொழில் விவசாயம்தான். அந்த முறையில் விவசாய பெருங்குடி மக்களை அதிக எண்ணிக்கையில் கொண்டதுதான் நம்முடைய பாரத தேசம். அதை நமது நிதி அமைச்சர் அவர்களும், தமிழ் நாட்டு சர்க்காரும் நன்றாக உணர்ந்து, நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை பெருக்குகின்ற முயற்சியில் அதிக ஆக்கம் கொடுத்திருப்பதை நாம் நிச்சயமாக பாராட்டத்தான் வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் எல்லாம் அனேகமாக முடிந்துவிட்டது என்றே சொல்லலாம். இன்னும் பெரிய திட்டங்களுக்கான வாய்ப்பு இருப்பதாகவே தெரியவில்லை. இயற்கையாக இருக்கின்ற நீர்வளங்களை எல்லாம் பயன்படுத்தியாகிவிட்டது. மேலும் இருப்பதை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு வருகின்றோம். இனிமேல் கவனிக்கவேண்டியது சிறுபாசனத் திட்டங்களைத்தான். தமிழ்நாட்டு அரசாங்கம் அவற்றையெல்லாம் கவனித்து அதற்கு வேண்டிய முக்கியத்துவம் அளித்து, வருகின்ற ஆண்டில் சுமார் 8 கோடி 75 லட்சம் ரூபாய் செலவு செய்வதற்கு உத்தேசித்திருப்பதாக நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். இது ஆக்கபூர்வமான விஷயம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆகையினால் இந்த ஆண்டில் நமது நிதி அமைச்சர் அவர்கள் கவனமாக இந்த அறிக்கையை தயார் செய்திருக்கிறார்கள். ஆளும் கட்சியிலிருக்கின்ற என்னைப்போன்றவர்கள் சாடைமாடையாக ஏதாவது கோரிக்கைகளை சொல்லுவதற்குக்கூட சான்ஸ் கொடுக்காத விதத்தில் இதை தயாரித்திருக்கிறார்கள். எந்தவிதமான வரிகளையும் போடாமல், உபரியும் காட்டாமல் அழகான முறையில் இந்த நிதிநிலை அறிக்கையை கொண்டு வந்ததற்காக இந்த மாமன்றத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், இந்த நாட்டின் விவசாய பெருங்குடி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

11.00 a.m. * திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய அனுபவம் மிக்க நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்றுச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு அவசர கால நிலையாக இருந்தாலும் கூட, பட்ஜெட்டில் எந்தவித வரியையும் விதிக்காமல் இருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. அது மாத்திரமல்லாமல் ரூபாய் 2.74 கோடி டெஃபிஸிட்

2nd March 1963] [திரு. கே. எல். சுப்பிரமணிய கவுண்டர்]

டாக இருந்தும்—பற்றுக்குறையாக இருந்தும்—வழிவகை நிதிநிலை சரியாக இல்லாமலிருந்தும்—வரி விதிக்காமலிருந்தது உண்மையிலேயே எல்லோராலும் வரவேற்கத் தக்கது என்று சொல்ல முடியும். சாதாரணமாக நெருக்கடி நிலையாக இருந்தாலும்கூட, என்னென்ன காரியங்களெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்திருப்பது உண்மையிலேயே போற்றுதற்குரிய விஷயம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சில கனம் அங்கத்தினர்கள் சென்ற வருஷத்திலே கொடுத்த பட்ஜெட் மாதிரியே இருக்கிறது என்று சொன்னார்கள். இவ்வளவு நெருக்கடி நிலையிலும்கூட, சாதாரணமாக ஒவ்வொரு வருஷமும் முன்னேற்றத் துறையில் நாம் செய்திருக்கக்கூடிய காரியங்களை அப்படியே தொடர்ந்து செய்யக் கூடிய ஒரு பட்ஜெட்டைக் கொடுத்ததானது எல்லோரும் வரவேற்கக் கூடிய காரியம் என்பதை எதிர் கட்சியில் உள்ளவர்களும் மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

விவசாய உற்பத்தியைப் பொறுத்த வரையில், பல சலுகைகளைத் தொடர்ந்து கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்தபோதிலும் இப்போது அவசர நிலை காரணத்தினாலே விவசாயத்திற்கு இருக்கக் கூடிய நிலைமையை இன்னும் சற்று அதிகமாக ஆராயவேண்டும் என்பதைத்தான் நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி அவசர நிலையில் உணவுப் பொருள் விலையெல்லாம் ஏறும். இப்போது அதற்கு மாறாக விலை குறைவாக இருக்கிறது. விலை குறைவாக இருக்கிறது என்பதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. விவசாயி விவசாயம் செய்யக் கூடிய பொருளின் விலை அவனுக்குக் கட்டுப்படியாகக் கூடிய நிலையில் இன்று இருக்கிறதா என்று அரசாங்கம் ஆராயவேண்டும் என்று தான் நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். 1937-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட சத்தியநாதன் கமிட்டி ரிப்போர்ட் தான் விவசாயிகளின் கடன் நிலை எந்த அளவில் இருந்தது என்பதைக் குறிக்கக் கூடிய நிலையில் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு விவசாயிகளின் கடன் பளு எந்த அளவு இருக்கிறது என்று தரக் கூடிய முறையில் அரசாங்கத்திற்கு எந்தவித தகவலும் இல்லை என்று நான் நினைக்கிறேன். இப்போது இருக்கக் கூடிய விவசாயப் பொருள் விலையில், வருஷா வருஷம் விவசாயி விவசாயம் செய்து கொண்டிருக்கிற காரணத்தினால் விவசாயத்தில் லாபம் வருகிறதா, இல்லாவிட்டால் நஷ்டம் வருகிறதா என்பதையும் ஆராய்வது மிகவும் அவசரம் என்று சொன்னால் அது ஒன்றும் மிகையில்லை என்று நான் கருதுகிறேன். மேலும் வருஷாவருஷம் விவசாயம் செய்வதால் நஷ்டம் அடைகிற நிலை ஏற்பட்டால் தொடர்ந்து விவசாயம் செய்வார்களா என்று ஆராயவேண்டும். காரணம் நல்ல முறையிலே விவசாய உற்பத்தி செய்யவேண்டுமானால் அவன் நல்ல பொறுக்கு விதை போடவேண்டும், அதற்கு உரம் போட வேண்டும், நல்ல விதமாக உழவு செய்யவேண்டும். இதையெல்லாம் செய்யும்போது உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. அப்படி உற்பத்திச் செலவு அதிகமாக ஆகும்போது, தகுந்த வருமானம் இல்லாவிட்டால் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது என்று

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [2nd March 1963

வரும்போது, இந்த நிலைமையை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும் என்பதை அரசாங்கம் உண்மையிலேயே ஆராயவேண்டும். இதிலே எந்த அளவிலே அரசாங்கம் விவசாயிகளுக்கு நஷ்டத்தைப் போக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்பதையும் ஆராய்வது மிக மிக அவசியம். உணவுப் பொருள்கள் விலை குறைந்துவிட்டது என்பதால் மாத்திரம் விவசாயிக்குக் கட்டுபடியாகாமல் போய்விடவில்லை. மற்ற உற்பத்திச் செலவுகள் அதிகமாகப் போனதே இதற்கு முக்கிய காரணம் என்று சொல்ல முடியும். விவசாயம் செய்வதிலே வாய்க்கால் முதலிய வசதிகள் காரணமாக நிரந்தரமாக இருப்பது ஒரு புறம் இருக்க, அநேக இடங்களில் கிணறுகளை நம்பி விவசாயம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. கிணறுகளில் இருக்கிற வெப்-லெவலில் வாட்டர் கீழே போய்விட்டால் அதற்கு டீப் போரிங் போடவேண்டும். அதற்கான யூனிட்டுகளை அரசாங்கம் தருவித்து விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்தில் இப்போது இருக்கக் கூடிய புல்டோஸர்கள் மிகவும் குறைவாக இருப்பதால் இன்னும் அதிகமாக புல்டோஸர்களை இறக்குமதி செய்து, விவசாயிகளுக்குத் தேவையான சமயத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் வாய்க்கால், லோயர் பவானி வாய்க்கால் பிரதேசங்களிலும் மின்சார விஸ்தரிப்பு செய்து அங்கும் பம்ப்-செட்டுகள் மூலமாகத் தண்ணீர் இறைக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால் நிச்சயமாக இன்னும் ஒரு போகம் அதிகமாக உணவு உற்பத்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். இதை அரசாங்கம் உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கம் இந்த ஆண்டு அம்மோனியம் சல்பேட் எந்த அளவுக்குத் தேவையோ அதைவிடச் சற்று அதிகமாகக் கூட இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில், இப்போது சற்று உழவடை சமயமாக இல்லாத காரணத்தினால் உடனடியாகத் தேவைப்படாத நிலை இருக்கிறது. சற்று முன்னதாக வந்திருந்தால் அதிகமாகப் பிரயோஜனப் பட்டிருக்கும். அடுத்த ஆண்டுக்கும் தொடர்ந்து எந்த அளவுக்கு தேவைப்படுமோ அதற்குத் தொடர்ந்து முன்னதாவே இறக்குமதி செய்ய ஏற்பாடுகளை அரசாங்கம் காலாகாலத்தில் செய்தால் உண்மையிலேயே விவசாயப் பெருக்கத்திற்குச் சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

சிறு பாசன விஷயத்தைப் பொறுத்த வரையில் இதைப் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைப்பதற்கு பதில் அரசாங்கமே வைத்திருப்பது தான் நலம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் மேற்பார்வையில் இருக்கலாமே தவிர, அவர்களுடைய நிதி நிலை இருக்கக் கூடிய நிலையில் அவர்கள் செய்யவேண்டும் என்று சிறிய பாசன விஷயத்தை விட்டுவிடக்கூடாது என்பது எனது அபிப்பிராயம்.

2nd March 1963] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை சீக்கிரத்தில் அமைய விருக்கிறது என்று தெரிய உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். குறிப்பாக சேலம் ஜில்லா மக்களுக்கு மிக மிக அதிக மகிழ்ச்சி ஊட்டும். கேள்வி நேரத்தின்போது கொடுக்கப்பட்ட பதிலில் இந்தத் தொழிற்சாலை எங்கே அமைகிறது என்பது தஸ்தூர் கம்பெனி செய்யக்கூடிய முடிவில் இருக்கிறது என்று தொழில் அமைச்சர் சொன்னார்கள். சேலத்திலே அமையவேண்டும் என்பதுதான் சேலம் ஜில்லாவில் உள்ள எல்லா மக்களின் விருப்பம் என்று அமைச்சரவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே தொழில் துறையிலே மிக நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். மற்ற எந்த ராஜ்யத்திலும் ஏற்படாத அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருப்பது எல்லோரும் பாராட்டத் தக்க விஷயம். எதிர்கட்சியினரும் இதை நிச்சயம் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். ஏன் மத்திய அரசாங்கத்தினால் அமைக்கப்படவிருக்கும் தொழில்களுக்கெல்லாம் நல ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும் என்று பலர் பேசினார்கள். இவ்வாறு ஆர்ஜிதம் செய்து கொடுத்ததன் காரணமாகத்தான் மத்திய அரசாங்கத்தின் பல தொழில்கள் இங்கே வந்தன என்று சொன்னால் அது மிகையில்லை என்று நினைக்கிறேன். தொடர்ந்து இதே முறையில் இன்னும் மத்திய அரசாங்கம் அமைக்கவிருக்கும் பெரும் தொழில்களுக்கெல்லாம் செய்து கொடுக்கவேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய ராஜ்யத்திலே மிக மிக அதிகமான முன்னேற்றம் இருந்தாலும், விவசாயத் துறையில் இந்த அவசர நிலை காரணமாகச் சற்று அரசாங்கத்திலே மாறுதல் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அவசர நிலைகாரணமாக புதிதாக வைக்கப்படும் கனெக்ஷன்களுக்கு பகலில் கொடுப்பதற்கு பதிலாக இரவில் கொடுக்கப்படும் என்ற வகையில் அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. இரவில் மின்சாரம் கொடுக்கிற காரணத்தினால் விவசாய தொழிலாளிகள் இரவு நேரத்தில் வர மாட்டார்கள், அதனால் உண்மையிலேயே விவசாயத்திற்கு மின்சாரத்தை பயன்படுத்த முடியாது. அதன் காரணமாக, பகலிலேயே ஷிஃப்ட் முறையில் மற்றவர்களுக்குக் கொடுப்பது போல் விவசாயத்திற்கும் மின்சாரம் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கரும்பு வெல்லம் செய்வதற்கு மின்சாரம் தேவைப்பட்டால், ஷுகர்கேன் க்ரஷிங்குக்கு மின்சாரம் தேவைப்பட்டால் அதற்கு பகலில் மின்சாரம் கொடுப்பதற்கும் கோடை காலத்தில் கிணறு அடிவெட்டு வெட்ட மின்சாரம் தேவைப்படுவதை பகலில் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். தொழில் எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு விவசாயமும் யுத்த நெருக்கடி காலத்தில் மிக மிக அவசியம். ஆகையால் பகல் நேரத்தில் விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [2nd March 1968

வேண்டும். விவசாயத்திற்கு மின்சாரம் அதிகமாக முன்பு நம்முடைய ராஜ்ய சர்க்கார் கொடுத்தது போலவே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இன்னும் பல இடங்கள் லைசென்ஸீ ஏரியாவில் இருந்து வருகின்றன. அரசாங்கத்தில் எந்த அளவுக்கு முன்னேற்றப் பாதையில் செல்லுகிறோமோ அந்த அளவுக்கு லைசென்ஸீக்கள் வேலை செய்வதில்லை. குறிப்பாக, சேலம்-ஈரோடு லைசென்ஸீ ஏரியாவை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமென்று பல தடவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் அவசரகால நிலை காரணமாகவோ என்னவோ தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. லைசென்ஸீ ஏரியாக்களில் ஏற்கனவே மின்சாரம் கிடைக்காத கிராமங்களில் இதை அரசாங்கமே எடுத்து அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே ஒரு பொறியியல் கல்லூரி அமைக்கப்படுமென்று கனம் அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை 1963-64-லிலேயே அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலே ஒரு மெடிகல் கல்லூரி அமையவிருக்கிறது. எந்த மாவட்டத்திலே அதை அமைக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதை சேலம் மாவட்டத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே ஒரு மெடிகல் கல்லூரி இருக்கிறது. மதுரையிலும் இருக்கிறது. இதற்கு மத்தியிலே ஒரு கல்லூரியை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதை சேலம் ஜில்லாவில் தான் அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே எடப்பாடியிலே தண்ணீர் சப்ளை ஸ்கீம் சாங்ஷன் ஆகி எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தும் வேலை தாமதமாக நடந்து வருகிறது. அதைத் துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் ஒவ்வொரு கிராமத்திலும் தண்ணீர் வசதிக்காக வருடா வருடம் கிணறு வெட்டுவது, அடுத்த ஆண்டிலே தண்ணீர் வறண்டு போய் திரும்பவும் கிணறு வெட்டுவது என்ற நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலைமையைப் போக்கவேண்டுமானால், குறிப்பாக வறண்ட பிரதேசங்களிலே, காவிரி ஆற்றிலிருந்து வாட்டர் சப்ளை எடுத்து, பல கிராமங்களுக்குக் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்தால்தான் நிரந்தரமாகத் தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க முடியும். அப்படியில்லாவிட்டால் பல லட்சக்கணக்கான பணத்தைச் செலவழித்தாலும் கூட தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க முடியாது. எங்கெங்கே நிரந்தரமாக ஆற்றுப் பாசனம் இருக்கிறதோ, அந்த இடங்களிலே இதைச் செய்யலாம். குறிப்பாக எங்கள் ஜில்லாவைப் போன்ற வறண்ட பிரதேசங்களுக்கு இந்த

2nd March 1963] *[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]*

ஏற்பாட்டை முதலில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. மூக்கையா தேவர் : கனம் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டமானது வரி போடாத ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லும் அளவுக்கு இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் என்னவென்றால், சர்க்காருக்கு வரி போடும் நோக்கமில்லை என்ற காரணத்தினால் இது கொண்டுவரப்படவில்லை. வரிபோடுவதற்கு வழியே இல்லை என்ற காரணத்தினாலோ, அல்லது மக்கள் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்ற காரணத்தினாலோ இந்த வரவு-செலவுத் திட்டம் கொண்டு வரப்படவில்லை. இந்த அறிக்கையை சமர்ப்பித்தபொழுது நமது நிதி அமைச்சரவர்கள் பாதுகாப்புத் திறனை வளர்க்கும் முயற்சியில் மத்திய சர்க்காருக்கும், மாகாண அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறதென்றும் சொன்னார்கள், ஆகவே இந்த வரிபோடும் பொறுப்பை மத்திய சர்க்காருக்கு ஊர்ஜிதப்படுத்திவிட்டார்கள் என்ற காரணத்தைத் தான் சொல்ல முடியும். சென்ற பல ஆண்டுகளாக மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் வரிகள் போட்டு வந்தன. ஆனால் ஒரு சில ஆண்டுகளாக மாகாண அரசாங்கம் வரிகளை ஓரளவுக்கு குறைத்துக்கொண்டு மத்திய அரசாங்கத்திடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டது. மூச்சுத் திணருகிற அளவுக்கு இப்பொழுது மத்திய அரசாங்கம் வரிகள் போட்டிருக்கிறது. வழிப் பறிக் கொள்ளையைப் போல் இருக்கிறது என்று—இதை நான் சொல்லவில்லை—மெயில் பத்திரிகை எழுதியிருக்கிறது.

கனம் சபாநாயகர் : இந்த இடத்திலே இதைப்பற்றி பேசி பிரயோசனம் இல்லை, மக்கள் சபையிலே எம்.பி.க்களை கனம் அங்கத்தினர் பேசச் சொல்லவேண்டும்.

திரு. கே. மூக்கையா தேவர் : எம். பி. க்களும் மக்களுடைய வோட்டுகளை பெற்றுதான் வந்திருக்கிறார்கள். நாங்களும் மக்களுடைய வோட்டுகளை பெற்றுதான் வந்திருக்கிறோம்.

கனம் சபாநாயகர் : மத்திய சர்க்கார் விதித்திருக்கும் வரி விதிப்பைப் பற்றி பேசுவதற்கு இங்கே இடமில்லையென்றுதான் சொன்னேன். அதற்கு பரிகாரம் இந்த சபையிலே தேட முடியாது.

திரு. கே. மூக்கையா தேவர் : பொதுமக்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள், அவர்களுடைய மனோ நிலை எந்த அளவில் இருக்கிறது என்பதைப் பிரதிபலிக்கும் முறையில்தான் நான் இதைக் கூறினேன். பொது மக்கள் மூச்சுத்திணறும் வகையில் வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் எடுத்துக் கூறினேன். உண்மையிலேயே நமது அரசாங்கத்தினர் திறமை மிக்கவர்கள். கொடுக்கிறதை வைத்துக்கொண்டு திருப்தி அடைந்து தங்களுடைய வேலைகளைச் செய்கிறார்கள் என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. அதே நேரத்தில் நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடம்

[திரு. கே. மூக்கையா தேவர்] [2nd March 1963

இந்த அவசர காலத்தில் நமது நாட்டிலே பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். மத்திய சர்க்கார் விதிக்கும் விற்பனை வரியிலிருந்து நமக்குப் பங்கு கிடைக்கும். அதுபோன்று ரெயில்வே வருமானத்திலிருந்தும் நாம் பங்கு வாங்குவதற்கு வழி இருக்கிறது. இந்த பட்ஜெட்டில் வரிச் சலுகைகள் ஏதாவது இருக்குமேயானால் உண்மையிலேயே இந்த பட்ஜெட் வரவேற்கத்தகுந்ததாக இருக்கும்; அதற்காக நாம் அமைச்சர்களையும் போற்றியிருக்க முடியும். இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்புதான் தண்ணீர் வரியும், நில வரியும் உயர்த்தப்பட்டது. இந்த வரியின் வேதனையை மக்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வரவு செலவுத் திட்டத்தில் புது வரி ஒன்றும் விதிக்கவில்லையென்று சொன்னாலும்கூட இரண்டு நாட்களுக்கு முன்புதான் இந்த வரி விதிப்பு கொண்டுவரப்பட்டது என்பதை நாம் மறந்து விட முடியாது. கொடுக்கும் சக்தியை மக்கள் இழந்துவிட்டார்கள் என்று ஈவு இரக்கம் காட்டி வரிகள் விதிக்காமல் இருந்துவிடவில்லை.

விவசாய உற்பத்தியிலே நமது அமைச்சரவை அக்கறை காட்டி வருகிறது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலையிலே விவசாயிகள் ஏற்கெனவே தாங்கள் வாங்கிய கடன்களை கொடுக்கமுடியாமல் பலவிதமான வேதனைகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களையெல்லாம் தற்பொழுது குறைந்த விலையில் விற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடன்களைத் திருப்பிக்கொடுக்கமுடியாத அளவுக்கு விலைவாசிகள் சரிந்துவிட்டன. ஆடு மாடுகளை விற்று கடன்களை திருப்பிக் கொடுப்பதற்கும் வழியில்லை. ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாயை ஓரே தவணையில் எப்படி ஒரு விவசாயி திருப்பிக் கொடுக்க முடியும்? நகைகளை வைத்துக் கடன் வாங்கிக் கொடுக்கலாமென்று சொன்னால் தங்கக்கட்டுப்பாடு விதிகள் குறுக்கே நிற்கின்றன. நகைத் தொழிலாளிகள் எவ்வாறு தங்கக்கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அதே மாதிரி அவர்களுக்கு அடுத்தபடியாக விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக சிறு கிராமங்களிலே வியாபாரமே ஸ்தம்பித்துப் போய்விட்டது என்று சொல்லலாம். தங்கக்கட்டுப்பாடு காரணமாக, விவசாயிகளிடத்தில் பணப் புழக்கம் இல்லாத காரணத்தினால், வாங்கும் சக்தி குறைந்துவிட்ட காரணத்தினால், வியாபாரமே ஸ்தம்பித்துப் போய்விட்டது. ஆகவே விவசாயி கடன்களை உடனடியாகத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அவனது நிலத்தை ஜப்தி செய்து, அதை ஏலத்திற்கு கொண்டுவந்துதான் கடனை வசூல் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எப்படி உற்பத்தி பெருகும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இதுபற்றி நான் அமைச்சர் அவர்களிடம் ஒரு மகசரை சமர்ப்பித்தேன். இரக்கத்தோடு படித்தார்கள். கலெக்டருக்கு அதை அனுப்பித்தார்களோ என்னமோ தெரியவில்லை. ஒன்றை மட்டும் நான்

2nd March 1963] [திரு. கே. மூக்கையா தேவர்]

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் கடன்களைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். ஏனென்றால் அவைகள் அரசாங்கத்தினிடமிருந்து வாங்கிய கடன்கள். அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஓரே தவணையாக இல்லாமல், மூன்று அல்லது நான்கு தவணைகளில் அதைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு சிறுபாசனத் திட்டங்களில் கவனம் செலுத்துவதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில் சர்க்காரிடமிருந்து கடன்கள் வாங்கி நல்ல முறையில் கிணறுகள் வெட்டி 3 அல்லது 4 ஏக்கர் வரை நிலம் வைத்து விவசாயம் செய்கிறார்கள். சர்க்கார் சலுகைகள் கொடுத்தும் இனாமாகப் பணம் கொடுத்தும், அந்தப் பணத்தை வாங்கி கிணற்றை வெட்டி விவசாயம் செய்திருந்தும், அதிகாரிகள் செய்த ஒரு சிறிய தவறின் காரணமாக, அவர்கள் இனாமாகக் கொடுத்த பணம் எல்லாம் கடனாக மாறிவிட்டது. எங்கள் பகுதியிலுள்ள மக்கள் 4 அல்லது 5 லட்சம் ரூபாய் அளவுக்குக் கடனாளியாகி இருக்கிறார்கள். 1966-ம் வருடம் வரையில் கெடுக் கொடுத்திருக்கிறார்கள். கிணறுகள் வெட்டியிருக்கிறார்களா, விவசாயம் பண்ணியிருக்கிறார்களா என்று அதிகாரிகள் பார்க்காததினால் இந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அவர்களைப் பாதிக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய திட்டங்களுக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. 1947-ம் ஆண்டில் எந்த அளவுக்கு நமது நாட்டிலே ஒற்றுமை இருந்ததோ, அந்த அளவுக்கு இன்று நாட்டிலே ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. மாகாணப் பிரிவினை, பாஷாவாரிப் பிரிவினை இவைகள் எல்லாம் இப்பொழுது அவசியம் இல்லை. இப்பொழுது நாடு ஒன்றுபட்டிருக்கிறது. நாட்டில் எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் ஒன்று பட்டு இருக்கிறார்கள். நம்முடைய நாடு இப்பொழுது ஒன்றுபட்டிருக்கிறது. எல்லோரும் ஒரு முகமாக இருக்கிறார்கள். இந்த சமயத்தில் வீணாகப் போகக்கூடிய தண்ணீரை எடுத்து பயன்படுத்தக்கூடிய இடங்களில் பயன்படுத்திக்கொள்ளலாம். வெஸ்ட் ப்ளோயிங் ரிவர்ஸ், ஈஸ்ட் ப்ளோயிங் ரிவர்ஸ் இவைகளைப் பற்றி திரு. லோகநாதன் அவர்கள் ஒரு ரிப்போர்ட் அனுப்பி இருக்கிறார்கள். அதன்படி மேற்கு நோக்கி சென்று கடலில் விழக்கூடிய தண்ணீரைத் தடுத்து நம் ராஜ்யத்தில் பாசன வசதி இல்லாத இடங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அதன் மூலம் நமது நாட்டில் சுமார் மூன்று அல்லது நான்கு லட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படும். கேரளாவுடன் நல்ல முறையில் பேசி அவர்களுக்கு அரிசியைக் கொடுத்தோ அல்லது பணத்தைக் கொடுத்தோ அவர்களுக்குப் பயன்படாமல் போய் வீணாகப்

போகிற தண்ணீரை நமக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். நிச்சயமாக ஐந்து லட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி செய்து கொள்ளலாம். அப்படி அந்த ரிப்போர்ட்டில் இருக்கிறது. அங்குள்ள சங்கங்களும் இதைப் பற்றி மகஜர்கள் அனுப்பி இருக்கிறார்கள். அதனுடைய காப்பியை எனக்கும் கனம் அமைச்சருக்கும் அனுப்பி இருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. கேரளநாட்டு சங்கங்களும் நமது நாட்டு சங்கங்களும் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். பல ரிகார்டுகளைப் பார்த்தாலும் இது தெரிய வருகிறது. பரம்பரையாக இது இருப்பதாகவும் தெரிய வருகிறது. பரம்பரை பாத்யதை இருப்பதாகத் தெரிய வருகிறது. இதைக் கண்டிப்பாக எடுத்து நடத்த வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே கோதாவரி, கிருஷ்ணா தண்ணீரையும் நமது ராஜ்யத்திற்குக் கொண்டு வந்து பாசன வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் மூலமாகவும் இருபது, முப்பது லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி அடையும் என்று சொல்லப்படுகிறது. இதைப் பார்க்கும்போது அந்த ராஜ்யத்துடன் நல்ல முறையில் அணுகி ஒற்றுமை இருக்கக்கூடிய இத்தருணத்திலேயே அதை எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசியல் காரணங்களை இதில் கொண்டு வந்து சேர்க்காமல் இதை எடுத்து நடத்த வேண்டும். நாட்டின் பொருளாதார நன்மையை எடுத்துக்கொண்டு இதை எடுத்து நடத்த வேண்டும். மக்களுடைய முன்னேற்றத்தையும் மக்களுடைய பொருளாதார நன்மையையும் கருதி இதைச் செய்ய வேண்டும். கேரளாவுடனும் மைசூருடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தி இதை முடித்து வைக்க வேண்டும். அவர்களுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து இருந்து இதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் இது வரவேற்கக்கூடியதாக இருக்கும். மாகாண நலனை உத்தேசித்தும் மக்களுடைய பொருளாதார முன்னேற்றத்தை உத்தேசித்தும் இதை நிறைவேற்ற வேண்டும்.

கனம் சபாநாயகர்: இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சேர்ந்து இருக்கவேண்டும் என்று சொல்லுகிறீர்களா அல்லது எப்பொழுதுமே சேர்ந்து இருக்கவேண்டும் என்று சொல்கிறீர்களா?

திரு. கே. மூக்கையா தேவர்: எப்பொழுதுமே சேர்ந்து இருக்க வேண்டும் என்பதைதான் நான் வரவேற்கிறேன். அரசியல் காரணங்களை இதில் கொண்டு வரக்கூடாது. மற்ற எந்த விதமான காரணங்களையும் இதில் கொண்டுவந்து இது நிறைவேறாமல் விட்டு விடக்கூடாது. ஒற்றுமை மனப்பான்மையுடன் இதை எடுத்து நிறைவேற்ற வேண்டுமென்ற மனப்பான்மை எல்லோரிடத்திலும் இருக்கிறது. இது சம்பந்தமாகத்தான் நமது காங்கிரஸ்

காரியதரிசிகூட கேரளா, மைசூர் ராஜ்யத்தை எல்லாம் ஒன்று சேர்க்க வேண்டும் என்று ஒரு அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

அடுத்தபடியாக தங்கக் கட்டுப்பாடு. இது சம்பந்தமாக நமது கனம் அங்கத்தினர் சங்கரன் அவர்கள்கூட ஒரு விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டார். மதுரையில் சமீபத்தில் தங்களுடைய குழந்தைகள் குட்டிகளையெல்லாம் கூட்டிக்கொண்டு வெளியூருக்குப் போய் விட்டார் என்று சொன்னார். அங்கு போய் நாங்கள் பார்த்தோம். ரொம்பவும் பரிதாபகரமாக இருந்தது. ஒரு வீட்டில் வேலை செய்த தங்கவேலை தொழிலாளி இந்த தங்கக் கட்டுப்பாட்டின் கொடுமையால் வேலை இழந்து பிழைப்புக்கு வழி இல்லாமல் போய் விட்டார். அவர் வீட்டில் நாலைந்து குழந்தைகள் தூங்குவதுபோல் கிடந்தன. தாய் தகப்பனார் இல்லை. அங்கு போய் பார்த்ததில் அவர்கள் சாப்பிட்டு இரண்டு மூன்று நாட்கள் ஆனதாகத் தெரிய வந்தது. இரண்டு மூன்று நாட்கள் வேர் கடலையைத் தின்றுவிட்டு மயங்கிக் கிடந்தார்கள். இந்த அளவு பரிதாபகரமான நிலைமைக்கு தங்கக் தொழிலாளர்கள் வந்திருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாடு நல்ல நோக்கத்துடன் செய்தாலும் பரம்பரையாக வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள் இதனால் அதிகப்படியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம் தமிழ் நாட்டிலுள்ள தங்க தொழிலாளர்கள் இந்தத் தொழிலை ஒரு கலையாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்பொழுது வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மீது அக்கரை கொண்டு நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்துடன் வாதாடி இவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க வழிவகை கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு என்ன சலுகை காட்ட வேண்டுமோ அதைக் காட்டுவதற்கு வழி தேடிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டிலும் இந்த வரவு செலவு திட்டத்தில் ஒரு முக்கியமான விஷயம் விடப்பட்டிருக்கிறது என்று சிலர் வருந்துகிறார்கள். விலைவாசியைப்பற்றி ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு அரிசியின் விலை குறையவில்லை. ஆனால் நெல்லின் விலை குறைந்திருக்கிறது. நெல் விலை குறைந்ததற்குக் காரணம் பலர் பல விதமாகச் சொல்லுகிறார்கள். இதற்கு முன் கேரளாவிற்கு அதிகப்படியாக நெல் போய்க் கொண்டிருந்தது இப்பொழுது போகவில்லை, அதனால் குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இங்கு வட நாட்டில், அதிகப்படியான திட்டங்களை நிறைவேற்றி இருப்பதால், அதிகப்படியாக நெல் கிடைக்கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. உற்பத்தி அதிகமாக ஆகி இருக்கிறது என்றெல்லாம் காரணங்கள் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையான காரணம் என்னவென்றால் மழை காலங்களில் மழை பெய்யாமல் அறுவடை காலங்களில் மழைபெய்வதால் அறுவடை

செய்ய முடியாமல் நெல் விலை குறைந்துபோய் விடுகிறது. அதைத் தவிர ரைஸ் மில்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றுதான் நானும் கருதுகிறேன். வரி கொடுத்துப் பழக்கம் கிறார்கள். சர்க்காரில் ரைஸ் மில்காரர்களிடமிருந்து நெல்லை கொள்முதல் செய்யப் போவதால் அவர்கள் வாங்கி ஸ்டாக் பண்ணுவது இல்லை என்றும் அதனால் விலை குறைந்துபோய்விட்டது என்றும் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் சர்க்காரில் எந்த சமயத்தில் என்ன விலை விதிக்கப் போகிறார்களோ எந்த சமயத்தில் எப்படிப்பட்ட விலை நிர்ணயச் சட்டம் வரப்போகிறதோ என்று பயந்து கொண்டு அவர்கள் நெல்லை கொள்முதல் செய்யாமல் இருக்கிறார்களாம். அதனால்தான் நெல் விலை குறைந்து இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்பொழுது சர்க்கார் 17 ரூபாய் 16 ரூபாய் என்று விற்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வாங்கி வைத்த பிறகு என்ன விலைக்கு விற்க வேண்டும் என்று சொல்லுவார்களோ என்று பயந்து கொண்டு இப்படி ஸ்டாக் பண்ணாமல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதுதான் காரணமே யொழிய வேறு காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைக்கு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துகிறார்கள். மற்ற பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவில்லை. அதுவும் ஒரு காரணமாக இருக்கிறது. அதனால் மற்ற பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டே போகிறது. இந்த முறையில் உற்பத்தியை எப்படிப் பெருக்க முடியும். அதனால் உற்பத்தி பெருக்கில் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் வரி ஒன்றும் போடப்படவில்லை என்பதற்காக எதிர் கட்சி அங்கத்தினர்களில் ஒரு சிலர் வருத்தத்தைத் தெரிவித்தார்கள். அதாவது பாதுகாப்பு போர்வை என்கிற பெயரில் வரி போடவில்லை என்றுதான் சொல்லப்படுகிறதே யொழிய மத்திய சர்க்கார் ஏராளமான வரி போட்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதில் உண்மை இல்லை என்று சொல்ல முடியாது. இருக்கத்தான் வேண்டும். நமது சர்க்கார் சுதந்திரம் அடைந்த பிறகு ஒரு க்ஷேம நல சர்க்காராகத்தான் இருக்கிறது. மக்களுடைய நன்மையை முன்னிட்டு எந்தெந்த திட்டத்தைத் தீட்டினாலும் மக்களுடைய நலனை நாடி க்ஷேமத்தை நாடி காரியத்தைச் செய்து கொண்டு வருகிறார்கள். எதையெல்லாம் செய்ய முடியுமோ அவைகளையெல்லாம் உணர்ந்து ஐந்தாண்டு திட்டங்களைத் தீட்டி அதன் மூலமாக எல்லா துறையிலும் நாம் ஒரு நல்ல முன்னேற்றத்தை அடைந்து கொண்டு வருகிறோம். ஆகவே வரி போடப்படவில்லை என்று சொன்னால் சர்க்கார் சோஷலிஸம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள அளவில்.

அதை ஏற்றுக்கொண்ட பிறகு மக்கள் முன்னேற்றத்திற்கு வரி போடாமல் இருக்க முடியாது. எல்லா மக்களும் எல்லா வகையிலும் வசதி பெற வேண்டும் என்பதற்காகத்தான் சோஷலிஸ 11-30 a.m.
அமைப்பின் மூலம் முக்கியமான காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கு வரி போடாமல் இருக்க முடியாது. ஆனால் வரி கொடுப்பவர்களுக்குச் சங்கடம் இருக்கும். எப்படியென்றால், வியாபாரிகள், பணக்காரர்கள், முதலாளிகள் இப்படிப்பட்டவர்களுக்குத்தான் வரி போடப்படுகிறது. அவர்கள் சங்கடப்படுகிறார்கள் என்றால், ஏற்கனவே வியாபாரத்திலோ, தொழிலிலோ அதிகமாக லாபத்தைப் பெற்றுக் கொண்டு வந்தவர்கள் வரிகள் கொடுக்கவேண்டியிருக்கும்போது, லாபத்தில் குறைந்துவிடும், அதனால் நஷ்டம் என்று சொல்லும் அளவுக்கு அவர்களுடைய வாதம் இருக்கிறதே தவிர, அது உண்மையிலேயே நஷ்டம் என்று சொல்ல முடியாது. ஆகவே, வரி கொடுக்கக்கூடியவர்கள் எதிர்ப்பது சகஜம்தான். வரி போடாமல் சர்க்காரை நடத்த முடியாது. மேலும், சோஷலிச சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்ற லட்சியத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, ஓரளவு அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான முறையில் சர்க்காரும் ஈடுபடத்தான் வேண்டியிருக்கும். அதற்காகத்தான் வரிகளெல்லாம் போடப்படுகின்றன. மேலும் பாதுகாப்பு நிலையையொட்டி வரிகள் சற்று அதிகமாக இருந்தாலும், அதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று தான் நானும் கருதுகிறேன். வரி கொடுத்துப் பழக்கம் ஆய்விட்டால் அதற்குப் பிறகு அஞ்ச மாட்டார்கள். ஓரளவு அதிகமான லாபம் இருக்கவேண்டும், அந்த லாபத்தையும் தானே அனுபவிக்கவேண்டும் என்ற நிலை சிறுகச் சிறுக மாறிவிடும், வரி கொடுக்கும் பழக்கத்தினால். ஆகையால், நம்முடைய இந்த பட்ஜெட்டில் வரி இனங்கள் வந்திருந்தாலுங்கூட, நம் சார்பிலுள்ள கனம் அங்கத்தினர்கள் அவற்றை வரவேற்றிருப்பார்கள். யாரும் அதை மறுக்கமாட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால், ஒரு சில கனம் அங்கத்தினர்களுக்கு, இந்த ஆண்டு நாம் வரி போடாமல் இருப்பது சிறிது ஏமாற்றமாக இருக்கலாம். வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தால் நல்லது என்று சொல்லுவார்கள். ஆனால், அவல் கிடைக்காத நிலையில், வெறும் வாயை மெல்லுவதைப் போல, பட்ஜெட்டில் ஏதாவது குறைகளைக் காணும் நிலையில் இருக்கிறார்கள். குறைகள் என்னும் போர்வை மறைப்பை வைத்துக்கொண்டு பேசக்கூடிய ஒரு வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நான் நான் கருதுகிறேன்.

அரிசி விலை குறையவேண்டும் என்று இந்தச் சபையில் ஏற்கனவே எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பேசாதவர்கள் யாரும் இல்லை என்று சொல்லிவிடலாம். அவ்வாறு பேசினார்கள். ஆனால் தற்போது விலை சற்று இறங்கியவுடன் 'விலை இறங்கிவிட்டதே' என்று கூறுகிறார்கள். அப்படி விலை இறங்கியதன் காரணமாக

விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆகவே, அந்தக் கஷ்டத்தை நீக்க, விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களைக் குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்தால் அவர்களுடைய கஷ்டம் நீங்கிவிடும். அதற்கான வழி வகைகளைச் சர்க்கார் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய நாட்டில் இப்பொழுது கைத்தறித் துணித் தேக்கம் அதிகமாகியிருக்கிறது. அதை நீக்குவதற்காக இன்றிலிருந்து ஒரு பொருட்காட்சி ஏற்படுத்தி, தேக்கம் ஏற்பட்டிருக்கும் துணிகளையெல்லாம் அதிக ரிபேட் கொடுத்து விற்பனை செய்வதற்கு வழி வகை செய்திருப்பதைக் குறித்து நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களுக்கும் நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால், அதே நிலையில்தான் மாஸ்டர் வீவர்களிடமும் ஸ்டாக் இன்னும் அதிகமான அளவில் தேங்கியிருக்கிறது. அந்தத் துணிகளையும் கூட விற்பனை செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். மாஸ்டர் வீவர்களுக்கு உதவி செய்வதற்கென்று ஒரு மார்க்கெடிங் சொஸைட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சொஸைட்டியின் மூலமாகக் கொடுக்கப்படும் உற்பத்தியான துணிகளை ஸ்டேட் சொஸைட்டியில் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதுபற்றி எனக்கு முன் பேசிய மதுரை அங்கத்தினர் குறிப்பிட்டார். பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக மதுரை நகரசபை தொகை ஒதுக்கியிருந்துங்கூட, இன்னும் சர்க்காருடைய அங்கீகாரம் கிடைக்காமலும், சர்க்கார்க் கடன் தொகை கிடைக்காமலும் இருப்பதால், அந்த வேலை நடைபெறாமல் இருக்கிறது. அதற்கு மிக முக்கியமான இடம் கொடுத்து, அதைச் சீக்கிரமாக நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஏனென்றால், பெரிய நகரமாகிய மதுரை நகரத்தில் ஏற்கனவே பாதாள சாக்கடைத் திட்டம் முடிவடைந்த நிலையில் ஒரு பகுதி இருக்கிறது. வைகை வடகரைப் பகுதியில் அந்தத் திட்டம் நிறைவேறாமலிருக்கிறது. அதன் காரணமாக அங்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே அதற்குரிய உதவிகளையும் சர்க்கார் அதி சீக்கிரம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. பாதுகாப்பு அமைப்புக்குத் தேவைப்படும் என்பதற்காக ஒருசில கட்டுப்பாடுகள் மின்சாரத்திற்குப் போடப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட, நகரங்களில் சிறு சிறு யூனிட்களாகத் தொழில் செய்துகொண்டு வருகின்றவர்களுக்கும், செய்யவேண்டுமென்று நினைக்கின்றவர்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்படாமலேயே இருப்பது தொழில் நடத்துகிறவர்களுக்குப் பாதகமாக அமைந்திருக்கிறது. ஆகவே, அதையும்

கூடிய சீக்கிரம் கவனித்து, அப்படிப்பட்டவர்களுக்கு மின்சாரம் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென நான் அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விறகு மலிவு விலைக்கடைகள் சென்னையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி மதுரை நகரத்திலும் விறகு மலிவுக் கடைகள் திறக்கப்படவேண்டும்.

க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டவர்கள் மதுரை ஆஸ்பத்திரிக்கு ஏராளமான பேர்கள் வருகிறார்கள். அவர்களை ஆஸ்பத்திரியில் வைத்துப் பராமரிப்பு செய்து, அவர்களுக்கு மருந்து வகைகளைக் கொடுக்கவேண்டுமென்றால், ஒரு நோயாளி ஆறு மாதமோ, ஒரு வருஷமோ நோய்க்குத் தகுந்தவாறு அங்கு இருக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நோயாளிகள் வந்தாலுங்கூட, அங்கு அவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. ஆகையால், அந்த நோய் பெருகிவருகிறது. ஏராளமான சிறுவர்கள், நடுத்தர வயதினர், பெரியவர்கள் அத்தனை பேருக்கும் அந்த நோய் பரவலாக இருக்கிறதென்று சொல்லலாம். ஆகவே, அவர்களைப் பொறுத்தவரையில், மதுரையில் இன்னொரு ஏற்பாடு செய்யலாம் என்று நான் நினைக்கிறேன். வெளி ஊர்களிலிருந்து வருகிறவர்களுக்கு, நகரத்தில் இடவசதி இல்லாதவர்களுக்கு நகரத்திற்கு வெளியே தங்குவதற்கு மட்டும் வசதிசெய்து கொடுத்து, அவர்கள் அங்கே தங்கியிருக்கும் பட்சத்தில், ஆஸ்பத்திரியில் எந்த எந்த மருந்துக்கள், எந்த எந்த ஊசி மருந்துகள் கொடுக்கப்படுகின்றனவோ, அவைகளையெல்லாம் வெளியே இருக்கும் நோயாளிகளுக்கும் கொடுத்தால் ஓரளவு அவர்களுக்கு நல்ல நோறு சுக வாழ்வு கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். இல்லையென்றால், வரிசைக்கிரமத்தில் நோயாளிகளைப் பதிவு செய்துகொண்டு அவர்களுக்கு இடவசதி ஆஸ்பத்திரியில் செய்துகொடுப்பதற்குள் அந்த நோயாளிகள் இருப்பார்களா, போய்விடுவார்களா, என்று சொல்ல முடியாத நிலைமைதான் ஏற்படும். அவ்வளவு அதிகமாக க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இம்மாதிரியான சிகிச்சை கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நமது மாகாணத்தில் பல பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அவற்றை நாம் மேலும் பெருக்கியிருக்கிறோம். பெண்களுக்குரிய பாலிடெக்னிக்குகள் இரண்டு அமைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்குரிய பாலிடெக்னிக்குகள் வைக்க மதுரை ஒரு நல்ல இடம் என்று நான் உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுரையில் பெண்களுக்குரிய பாலிடெக்னிக்கை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

மதுரை நகரத்தை மாமதுரை நகரமாக ஆக்கவேண்டும். அதற்குரிய திட்டம் ஒன்றையும் நாம் தீட்டியிருக்கிறோம். மதுரை நகர் ஒரு விசித்திரமான நகர். கோயிலைச் சுற்றிலும் தான் இடம். அந்த நகரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்றால் அந்த நகரத்தைச் சுற்றி இடம் கிடைக்காது. ஆகவே கொஞ்சம் அதிகமான தூரத்திலுள்ள பகுதிகளையும் இந்த மதுரை நகரோடு சேர்த்து மதுரையைப் போன்ற அந்தப் பகுதிகளையும் வளம்பெறச் செய்து ஒரு யூனிட்டாக்கினால்தான் மதுரை மாமதுரை நகராகும். தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள் பெருக வழி ஏற்படும்.

மேலும் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் நம் மாநிலத்தில் பல பெரிய பெரிய தொழிற்சாலைகள் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. பல கூட்டுறவு தொழிற்சாலைகள் வேறு ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் பல பெரிய பெரிய தொழிற்சாலைகள் நம் மாநிலத்தில் ஏற்படத் தக்க சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலையை நல்லமுறையில் பயன் படுத்திக்கொண்டு காரியங்கள் செய்யவேண்டும்.

சிமிண்டு தொழிற்சாலைகள் சில இருந்தாலும் இன்னும் ஒரு 6 தொழிற்சாலைகளை இந்த ஆண்டிலே ஏற்படுத்த மத்திய அரசாங்கம் அனுமதித்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நம் மாநிலத்தில் இன்னும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பாடு வதற்கான வழிவகைகளை நாம் செய்தாகவேண்டும். சில அங்கத்தினர்கள் கூறினார்கள், "இந்த பட்ஜெட்டிலே புதிய திட்டம் ஒன்றும் இல்லையே" என்பதாக. ஒவ்வொரு ஆண்டும் புதுப் புது திட்டத்தை எப்படிப்போட முடியும். நாம் முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று போட்டு நிறைவேற்றினோம். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று போட்டுக்கொண்டு நிறைவேற்றி வருகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் போட்டிருக்கும் திட்டங்களை ஒவ்வொரு ஆண்டுக்கும் பகுதி பகுதியாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்ற ஆண்டு எந்த எந்தக் காரியங்களை நிறைவேற்றவேண்டுமென்று வகுத்துக் கொண்டோமோ அதை நிறைவேற்றினோமா என்று பார்க்கவேண்டும். இந்த ஆண்டு அந்தத் திட்ட அடிப்படையில் என்ன என்ன காரியங்களை நிறைவேற்றியாக வேண்டுமோ அவற்றை நிறைவேற்ற பணம் ஒதுக்கி காரியங்களை செய்தாக வேண்டும். புதிது புதிதாக ஒவ்வொரு ஆண்டும் திட்டம் அமையவில்லை என்றால் நாம் தான் ஒரு திட்ட அடிப்படையிலேயே ஒவ்வொரு ஆண்டும் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோமே? நிதிநிலை அறிக்கையிலே தொழில் முன்னேற்றம், விவசாய முன்னேற்றம், கல்வி முன்னேற்றம் ஆகியவை பற்றிய நம்முடைய சாதனைகளைக் குறிப்பிட்டிருக்கிறோம். உண்மையில் அவற்றையெல்லாம் படிக்கும்போது நாம் சந்தோஷப்படவேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு என்றைக்

கும் கண்டிராத முறையில் நம்முடைய நாட்டை வளப்படுத்த நம் தலைமுறையில் நம்மால் இத்தனை காரியங்களைச் செயலாற்ற முடிந்ததே என்று மகிழ்ச்சி அடையவேண்டும்.

இந்த பட்ஜெட்டிலே புது வரியில்லை என்றாலும் வேறு பல மத்திய வரியினங்கள் இருக்கின்றன, நிலவரி வேறு போடப்பட்டிருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பல பல காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறபோது மக்களும் தம்முடைய கடமையைச் செய்ய முன்வருவதற்கு ஏற்ற ஒரு மனப்பாங்கை நாம் இன்று நாட்டு மக்களிடையே உண்டாக்க வேண்டும். நாம் நம்முடைய கடமையைச் செய்தால்தான் ஏற்றத் தாழ்வற்ற ஒரு சோஷலிச சமுதாயம் அமைய முடியும் என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்புவதற்கு சட்டசபை அங்கத்தினர்களும் ஒத்துழைக்கவேண்டும். அனுபவம் இல்லாத குறையினால் நமக்குச் சில கஷ்டங்கள், நஷ்டங்கள் உண்டாகலாம். நாளுக்கு நாள் அனுபவம் முதிர முதிர இவை நீங்கிவிடும். ஆகவே சட்டசபை அங்கத்தினர்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்தத் திட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, 1963-64 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது புது வரியில்லையென்று சொன்னார்கள். இது பொதுமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது. ஏற்கனவே நஞ்சை நில வரி, தண்ணீர் வரி எல்லாம் போட்டிருக்கிறார்கள். இன்னும் மத்திய வரியினங்கள் எல்லாம் வெளியாகியிருக்கின்றன. ஆகவே இனி வரி போடுவதற்கு வழி இல்லை, போட்டால் மக்கள் எதிர்ப்பார்கள் என்று அஞ்சியே அமைச்சர் இவ்வாண்டு வரித்திட்டம் எதையும் கொண்டுவரவில்லையென்று கருதுகிறேன்.

பொதுவாக, எதிர்க்கட்சி அங்கத்தினர்களாகிய நாங்கள் எங்களுக்குக் கொடுக்கும் வாய்ப்பையெல்லாம் பயன்படுத்தி எங்களுடைய தொகுதிகளில் என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அவற்றை நீக்கவேண்டும் என்று பலமுறையும் சொல்லி வந்திருக்கிறோம். அவற்றை நீக்குவதற்கு இந்த பட்ஜெட் ஏதாவது வழி செய்திருக்கும் என்ற நம்பிக்கையோடு பார்ப்போமேயானால் ஏமாற்றம்தான் அடைவோம். விவசாய உற்பத்தி பெருகவேண்டும் என்று பலதிட்டங்களை வகுக்கலாம், பேசலாம். ஆனால் இன்றைக்கு நாட்டில் உள்ள விவசாயிகளுடைய நிலைமையைப்பற்றி எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நெல் விலை குறையக் கூடாது என்று நாங்கள் குறிப்பிடவில்லை. அந்தக் கொள்கை

[திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி] [2nd March 1963

உடையவர்கள் அல்ல நாங்கள். ஆனால் இன்றைக்கு விவசாய
உற்பத்திச் செலவு பல மடங்கு கூடியிருக்கிறது. உர மூட்டைகள்,
பிண்ணாக்கு மூட்டைகள், இதர கருவிகள், மாடுகள் எல்லாம் ஒரே
யடியாக விலை உயர்ந்து இருக்கிறது. அதுவும் உர மூட்டைகள்
கள்ளமார்க்கெட்டில் வாங்கவேண்டியதாக இருக்கிறது. அன்று
டக் கூலி மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது. இப்படி எல்லா
வகையிலும் செலவினம் உயர்ந்திருப்பதனாலே நெல்விலை மட்டும்
குறைந்தது என்றால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.
மற்ற பொருள்களின் விலையையும் இந்த அளவுக்கு எப்படி
குறைக்க முடியுமோ அப்படிக் குறைத்தால்தான் விவசாயிகள்
நலம் பெறுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு வேண்டிய மின்சாரத்தை இந்த ஆண்டில்
இரவு நேரங்களில் கொடுக்கிறார்கள். அதன் காரணமாகக்
கரும்பு பயிரிடும் விவசாயிகள், புஞ்சை மகசூல் செய்பவர்கள்
மின்சாரம் மூலம் இரவில் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலைமை
யில் இருப்பவர்கள் அதிகமாகத் தொல்லைப்படுகிறார்கள் என்
பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஆட்சி முறையில், சாலைகள்
அமைக்கும் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஞ்
சாயத்து யூனியன்களுக்கு சாலைகள் அமைக்கும் திட்டத்தில்
அதிகத் தொல்லைகள் இருக்கும் காரணத்தால், இன்னும் அதிக
மாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வேலைத் திட்ட உதவிக்காக பஞ்சா
யத்து யூனியனுக்கு 65 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக்
கூறப்படுகிறது. இது மிகவும் குறைவாக இருக்கும் காரணத்
தால் அதிக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு பஞ்சா
யத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு
அளிக்கப்படும் குறைந்த மானியத்தினால், அவர்களால் இந்தத்
திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற முடியாது. இந்தத்
திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பைச் சர்க்காரே ஏற்றுக்
கொண்டு பொதுப்பணி துறைமூலம் நல்லமுறையில் நிறை
வேற்றி விவசாய உற்பத்திக்கு வழிவகை செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியிலுள்ள சில குறைகளைப்
பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு முன்பும் அவைகளைப்
பற்றிக் கூறியிருக்கிறேன். திருச்சி மாவட்டத்திலுள்ள உடை
யார்பாளையம் வட்டத்தில் மேட்டுப்பாங்கான பகுதியில், மழையின்
காரணமாக காட்டு ஓடை என்று கூறப்படும் பெரிய ஓடை என்னு
டைய காட்டுமன்னார் கோயில் தொகுதியின் வழியாக வெள்ளம்
ஏற்பட்டு பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை வெள்ளத்தின்
காரணமாக அழித்து வருகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள்
மிகவும் தொல்லைப்படுகிறார்கள். இந்த ஓடையை எந்த வகையி

2nd March 1963] [திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி]

லாவது கட்டுப்படுத்தி, திருச்சி மாவட்டத்தில் ஒரு தனி ஏரியாக
அமைத்தாவது அந்த மக்களுக்குப் பாசன வசதி செய்து
கொடுத்து, வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தையும் தடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீரநாராயண ஏரி மிகவும் தூர்ந்து போய் இருக்கிறது.
இதைத் தூர் எடுத்து நல்ல முறையில் ஆக்கினால், சிதம்பரம் வட்
டத்தில் மூன்று போகம் சாகுபடி செய்ய முடியும். விவசாய
உற்பத்தி பெருக இதனைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பால் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்
கிறது. பால் சப்ளை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானி
யத் தொகையை அதிகமாகக் கொடுத்து ஊக்குவிக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு பயன்படுத்துவோர்
சங்கம் ஒரு லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்களில்
மட்டும் ஏற்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். இருப
தாயிரம் மக்களுக்குக் குறைவாக வாழ்கின்ற பகுதிகளிலும்
அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால், விலைவாசியினால் அவதிப்
படும் ஏழை மக்களுக்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை கிராமப்புறங்களில் இன்னும்
அது நல்ல முறையில் விஸ்தரிக்கப்படவில்லை. என்னுடைய
தொகுதியில் 120 கிராமங்களுக்கு மேலாக இருப்பினும் ஆறு, ஏழு
கிராமங்களில்தான் மின்சார விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்
கிறதே தவிர, மற்ற கிராமங்களில் இல்லை. அந்தக் கிராமங்
களில் எல்லாம் சீக்கிரமாக மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால், தென்
னாற்காடு மாவட்டத்தில் கடலூரில் ஒரு அரசினர் கல்லூரியை
ஏற்படுத்தவேண்டுமென்று தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள
உறுப்பினர்கள் கேட்டு வந்திருக்கிறோம். போன நிதி நிலை
அறிக்கையில் இந்த மாநிலத்தின் பல பகுதிகளில் நான்கு கல்லூரி
களை அமைக்கப் போவதாகக் கூறியிருந்தார்கள். கடலூரில் ஒரு
கல்லூரி ஏற்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இதுவரை
ஏற்படுத்தவில்லை. அடுத்த நிதி ஆண்டிலாவது கடலூரில் ஒரு
அரசினர் கல்லூரியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன் திட்டத்தைப் பற்றிக் கிராமப் பகுதி
யிலுள்ளவர்களுக்கு சரியாகப் புரியாத காரணத்தினால் அங்குள்ள
மக்கள் பயன்பெற முடியாது இருக்கிறார்கள். அதிகாரிகளும்
மக்களுக்கு உதவி புரியும் வகையில் நடந்து கொள்ளாத
காரணத்தால் பெரும்பான்மையான முதியோர்கள் கஷ்டத்தில்
இருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை நல்ல முறையில் தீர்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கை

எங்களுடைய குறைகளைப் போக்கும் அளவில் திருப்தி அளிக்கும் வகையில் இல்லையென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எஸ். சின்னையன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது பாரத நாட்டுக்கு சற்று இக்கட்டான நிலை ஏற்பட்டிருந்தாலும்கூட, அதைப்பற்றிப் பொருட்படுத்தாமல் நமது மாகாணத்தைப் பொறுத்தவரை எல்லாத் திட்டங்களையும்-ஒன்றையும் கைவிடாமல் நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே நாம் எல்லாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதிலே சில கோளாறுகள் இருக்கின்றன என்று சிலர் சொன்னாலும், அவர்களுடைய மனசாட்சி அதை இந்த இடத்திலே ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் மற்ற இடங்களிலே ஏற்றுக் கொள்ளும்.

விவசாயத்தைப் பொறுத்தவரை இந்த மாகாணத்திலே ஏராளமான பொறுப்புகள் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தியைப் பெருக்கும் முறையிலே பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பார்க்கின்ற போது, நிச்சயமாக வருகின்ற ஆண்டிலே அதிக அளவு உற்பத்தியை எதிர்பார்க்கமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்தத் துறையிலே இவ்வளவு அதிகமாக முன்னேற்றம் அடைந்திருப்பதற்குக் காரணம் விவசாயிகளுக்கு மிக அவசியமான உரம் போன்றவை வெகு தாராளமாக நமது சர்க்காரால் வழங்கப்பட்டு வருவதுதான். உரம் கிடைப்பதிலே சற்று கஷ்டம் இருந்தாலும் அதைச் சமாளித்து நல்ல முறையில் உரம் வழங்கி வருகிறார்கள். அதோடுகூட விவசாயத்திற்காக மின்சாரமும் வழங்கி வருகிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால், முன்பு 100 அடி ஆழத்தில் இருக்கும் தண்ணீரை இரண்டு மாடுகளை வைத்து பறியின் மூலம் இறைத்து வந்தார்கள். இப்போது அந்தக் கஷ்டமான நிலை மாறி எலக்டிரிசிடியினால், ஸ்விச்சை தட்டியவுடனே 100 அடி ஆழத்திலிருக்கும் தண்ணீர் உடனே வயலுக்குப் பாய்கிறது. இதன் காரணமாகத்தான் சேலம் ஜில்லா போன்ற வறண்ட பிரதேசங்களில்கூட விவசாய உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கிறது. அதே நேரத்தில் ஒன்றை மறந்துவிடக்கூடாது. 100 அடி ஆழத்தில் இருக்கும் தண்ணீரை முன்பெல்லாம்
12-00 noon. வயலுக்குப்பாய்ச்சுவதற்குப் பக்கபலமாக இருந்த தொழிலாளர்கள் யார் என்று பார்த்தால், அவர்கள் தோல் தைக்கின்ற தொழிலாளர்கள் என்பதை அரசாங்கமும், இங்கிருக்கும் அத்தனை அங்கத்தினர்களும் அறிவார்கள். மின்சாரம் விஸ்தரிப்பு இவ்வளவு வேகமாக முன்னேறியிருப்பதால் அந்தத் தொழிலாளர்கள் எவ்வளவு அவதிப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும், என்று நினைக்கிறேன். அவர்களுக்குள்ள பிரச்னைகளை எல்லாம் அவர்கள் பல மகாநாடுகள் மூலமாகவும், பல கூட்டங்கள் போட்டும் அதை எடுத்து விளக்கி நாலைந்து ஆண்டுகளாக சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நமது அரசாங்கம் அவர்களுக்கு மாற்றுத்தொழில் கொடுக்க ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று பார்த்தால் மிகவும் வேதனைப் படவேண்டியவர்களாக இருக்கிறார்கள் அந்தத் தொழிலாளர்கள். விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த அந்த ஜில்லாவில் விவசாயிகள் நல்ல முறையில் முன்னேற எலெக்ட்ரிசிட்டி கொடுத்து பாதுகாப்பு அளித்த இந்த அரசாங்கம், சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் மின்சாரம் அபிவிருத்தியினால் அத்தொழிலில் ஈடுபட்டிருந்த பறி தைக்கும் தொழிலாளர்கள் இன்று மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரக் கணக்குப்படி பார்த்தாலும் 1,58,000 பம்ப் செட்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மூன்று ஏத்தல் தண்ணீர் ஒரு பம்ப் செட்டிலிருந்து வரும் என்பது விவசாயிகளுக்குத் தெரியும். இந்த 1,58,000 எலெக்ட்ரிக் பம்ப் செட்டுகளோடு ஆயில் எஞ்சின்களும் இருக்கின்றன. இதையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பம்ப் செட்கள் விவசாயத்திற்காக வேலை செய்து கொண்டிருக்கின்றன. இந்த இரண்டு இலட்சம் இயந்திரங்கள், (ஒரு பம்பு செட்டுக்கு) மூன்று ஏத்தல் தண்ணீர் இறைக்கும் பறி என்ற கணக்கில் பார்த்தால் இன்று சுமார் 6 லட்சம் பறி தைக்கும் தொழிலாளர்கள் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கும் அந்தத் தொழிலாளர்களின் புரட்சி ஏதாவது உண்டா என்று இங்கிருக்கிறவர்கள் சந்தேகத்தோடு கேட்கலாம். அத்தொழிலாளர்கள் கல்வி அறிவற்றவர்கள். தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாத முறையில் தங்கள் குடிசைகளில் ஏங்கிக்கொண்டு இதற்கு என்ன மார்க்கம் என்று தெரியாமல் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். சொல்வதற்கு மார்க்கம் தெரியாமல் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சமுதாயத்தில் இருக்கிற ஒரு சிலர்தான் இப்பிரச்னைகளை மகாநாடுகள், பொதுக்கூட்டங்கள் மூலமாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இந்த அளவில் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் பறி தைக்கும் தொழிலாளர்களின் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நாமக்கல் தாலுகாவைப் பொறுத்த வரையில் அங்கு எந்த வாய்க்காலும் சிறிய நீர்பாசன வசதி ஏற்படாமல் இருக்கின்றன. சென்ற பட்ஜட் கூட்டத்தில் கூட வாய்க்கால்களைப் பொறுத்த வரையில் ஜேடர்பாளயத்திலிருந்து ஒரு வாய்க்கால் அந்தப் பக்கம் நாமக்கல் வழி வந்தால் அங்குள்ள ஏரிகளில் மட்டும் தண்ணீர் விட்டால் போதும். அந்த ஏரிகளில் தண்ணீரை நிரப்பிவிட்டால் போதும். கிணறுகளில் தண்ணீர் பெருகும். அப்படி வந்தால் விவசாய உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். இதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்படி ஒரு திட்டம் நாமக்கல் தாலுகாவில் ஏற்பட்டால் நிச்சய

[திரு. எஸ். சின்னையன்] [2nd March 1963

மாக அப்பகுதியில் இருக்கும் விவசாயிகள் சீக்கிரத்தில் முன்னேற வசதி ஏற்படும். நாமக்கல் நகரத்தைப் பொறுத்தவரை அங்கு குடிதண்ணீர் பிரச்னை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதுவும் அறண்ட காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அங்குள்ள மக்கள். இப்போது குழாய்கள் எல்லாம் புதைக்கப் பட்டு வருகின்றன. இருந்தாலும் வேண்டிய மெஷினரிகள் கிடைக்காத காரணத்தினால் அந்த வேலை தடைபடும் நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு வேண்டிய மெஷின்கள் போன்றவைகள் சீக்கிரம் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பின்னர், மோகனூரைப் பொறுத்த வரையில் அங்கு குடி-தண்ணீர் பிரச்னை கஷ்டமாக இருக்கிறது. குழாய் கொண்டு வர எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்து இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அதை உடனடியாகக் கொண்டு வந்தால்தான் அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்னை தீரும். நிற்க, பஞ்சாயத்து யூனியன்களில் விவசாய உற்பத்தியைப் பொறுத்தவரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற நடவடிக்கைகளில் அங்கிருக்கிற அதிகாரிகள் மிக கவனக்குறைவாக இருக்கிறார்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் நாட்டு மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டுமென்று அரசாங்கம் நினைத்து நல்ல திட்டங்களைத் தீட்டி அதற்காக அதிகாரிகளைப் போட்டு அருமையாக காரியங்களைச் செய்து வரும் இந்த நேரத்தில் அங்குள்ள அதிகாரிகள் சிலர் வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக தங்களுக்கு உத்தியோகம் கிடைத்தது மாதிரி, அதற்காகவே தங்களை நியமித்திருக்கிறார்களே தவிர நாட்டின் முன்னேற்றத்திற்காக நாட்டின் சுபிட்சத்திற்காக அல்ல என்று அவர்கள் நினைக்கிறார்கள். கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாய பெருங்குடி மக்களை எல்லாம் ஒன்று திரட்டி விவசாய உற்பத்திக்கு வேண்டியதை, அரசாங்கம் கொடுக்கும் அத்தனை சலுகைகளையும் அவர்களுக்கு எடுத்துரைத்து நல்ல முறையில் அதிகாரிகள் பணியாற்றினால் நாம் இப்போது எதிர்பார்ப்பதைவிட இன்னும் அதிகமான உற்பத்தியை நாம் காண முடியும். பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் பணியாற்றுகிற அதிகாரிகள் நல்லமுறையில் பணியாற்றுவதற்கு, மேல் அதிகாரிகளுக்கு வேண்டிய அதிகாரங்கள் அளித்து, இவர்களை கண்டித்து, ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். கிணறுகள் வெட்டும் விஷயத்தில் இந்த ஆண்டு பட்ஜெட்டில் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் பகுதியில் கிணறுகள் 100, 200 அடி வெட்ட-வேண்டிய கிணறுகளாக இருப்பதால் இப்போதிருக்கிற கிணறுகளை அதிகமாக ஆழப்படுத்துவதற்கு மான்யங்களும் கடன்களும் அதிகமாகக் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் நிலையைக் (ஊற்று) கண்டுபிடிக்க போரிங் போட வேண்டிய மெஷினரிகள் கொடுத்து, உதவவேண்டும். 100 அடி வெட்டினாலும் தண்ணீர் வரவில்லை. இன்னும் எவ்வளவு அடி வெட்டவேண்டும் என்று அறிய, இன்னும் எவ்வளவு வெட்டினால் தண்ணீர் வரும் என்று அறிய மெஷினரிகள்

2nd March 1963] [திரு. எஸ். சின்னையன்]

போன்றவற்றை அப்பகுதி விவசாயிகளுக்கு அளித்து அங்கு விவசாயத்தை நல்ல முறையில் பெருக்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இதில் தேசியப் பாதுகாப்பு என்ற பேரில் அநேக கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வளவு சொல்லியும் தேசியப் பாதுகாப்பு காரணமாக நாட்டு மக்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டு கருத்து வேறுபாடு இல்லாது எல்லோரும் ஒன்று சேர்ந்திருக்கக்கூடிய ஒரு மகிழ்ச்சிகரமான அம்சத்தைப் பற்றி இந்த அறிக்கையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒன்றுமே குறிப்பிடவில்லை. புது வரிகள் போடவில்லை. அதனால் நாங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறோம் என்று ஒரு சாரார் சொன்னார்கள். Annual Financial Statement என்றடாகுமெண்டை சுமந்துவந்த பைக்கு அதாவது அந்தB·gக்கு பட்ஜெட் Budget என்ற பெயரிருந்ததை நடைமுறையில் நிதிநிலை அறிக்கையை பட்ஜெட் என அழைக்கப்பட்டது. அதே போல் ஒவ்வொரு ஆண்டும் புதுப்புது வரிகளை போட்டுக்கொண்டு வந்தால், இந்த நிதிநிலை அறிக்கையைக்கூட "புது வரிகள் அறிக்கை" என்று பெயரிட நேரிடும். ஆனால் இந்த ஆண்டு புது வரிகள் போடாத காரணத்தினால் மக்களுடைய மத்தியில் ஏற்பட்டிருந்த பீதி ஓரளவுக்கு குறைந்திருக்கிறது. அந்த அளவில் இந்த நிதிநிலை அறிக்கையானது பாராட்டக்கூடிய அளவில் அமைந்திருந்தாலும், இதே போல் இந்த ஆண்டு மட்டுமல்லாது இதைப் போல் தொடர்ந்து, வருகின்ற ஆண்டுகளிலும் புது வரிகள் ஒன்றையும் போடாமல் வேறு வழிகளில் புது வருவாய்களைப் பெருக்கிக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் நிச்சயமாக இந்த நாட்டிலுள்ள மக்கள் ஆட்சியாளர்களுக்கு போதிய ஆதரவு கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. முக்கியமாக இந்த நிதிநிலை அறிக்கையில் உணவுப்பொருட்கள் உற்பத்திக்காக பல முயற்சிகள் செய்யவேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு உற்பத்தியில் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஒன்று மின்சாரம். அந்த மின்சாரத்தை எல்லோரும் நல்ல முறையில் பயன் பெற்றுக்கொள்ள முடியாத அளவில் மின்சார இலாகாவில் விதிகள் அமைந்திருக்கின்றன. இதன் காரணமாக பல இடங்களில் மின்சாரத்தை பலர் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. கிணற்றிலிருந்து பம்புசெட் வைத்து தண்ணீர் இறைக்கவேண்டுமென்றால் அந்தக் கிணற்றில் பங்கு பாத்தியமுள்ள யாராவது ஒருவர் சம்மதம் கொடுக்காவிட்டால் பம்பு செட் வைப்பதற்கு அனுமதி கொடுக்க முடியாது என்று மின்சார இலாகா அதிகாரிகள் சொல்லி விடுகிறார்கள். உதாரணமாக ஒரு கிணற்றில் 10 சதம் ஒருவருக்கு பங்கு பாத்தியதையும் இன்னொருவருக்கு 90 பதம் பங்கு பாத்தியதையும் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், 90 சதம் உரிமையுள்ளவர்கள் பம்ப்செட் வைக்கவேண்டும் என்று கேட்கும் போது, 10 சதம் உரிமையுள்ளவர்கள் சம்மதம் கொடுக்கா

விட்டால் பம்ப்செட் வைப்பதற்கு அனுமதி கொடுக்க மறுத்து விடுகிறார்கள். இந்த மாதிரியான நிலை இருந்து கொண்டிருந்தால் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு இடைஞ்சல்தான் ஏற்படும். இந்த நிலைமையை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது ஒரு கிணற்றில் ஐம்பது சதவிகிதத்திற்கு மேல் உரிமையுடையவர்கள் கிணற்றில் பம்பு செட் வைக்க வேண்டும் என்று மனு செய்து கொண்டால் அவர்களுக்கு உடனடியாக பம்புசெட் வைத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். அதற்குத் தகுந்த அளவில் உத்தரவோ அல்லது சட்டத்தையோ திருத்தி அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயங்களில் முக்கியமாக, ஒரு விவசாயம் இருக்கிறது. பூமியை அழகு படுத்தக்கூடியது, அதுதான் தென்னை விவசாயம். அந்த தென்னை விவசாயத்தைப்பற்றி யாரும் குறிப்பிடவில்லை. ஓர் அறிஞர் கூறியது எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது . . . "மண்ணிற்கு அணிகலன் தென்னை, பெண்ணிற்கு அணிகலன் நாணம், கண்ணிற்கு அணிகலன் இரக்கம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு பூமியை சிறப்பாக்குவது தென்னை மரங்கள்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமான தென்னை விவசாயத்திற்கு நமது அரசாங்கத்தாரால் இது வரை எந்தவிதமான சலுகைகளோ, எந்தவிதமான மான்யங்களோ கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை . . . .

கனம் திரு. பூ. கக்கன் : இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையை கனம் அங்கத்தினர் அவர்கள் நன்றாகப் பார்த்தால், எந்த எந்த ஜில்லாக்களில் தென்னைமர விவசாயத்திற்காக என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்துக்களின் மூலமாக தென்னை மரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, வளர்த்து வருவதை கனம் அங்கத்தினர்கள் அவர்களே கண்ணாரக் கண்டு கொள்ளலாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏனைய விவசாயத் தொழில்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளைப்போல் இந்த தென்னை மர விவசாயத் தொழிலுக்கும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்பதுதான் நான் கருதுகிறேன். பொதுவாக தென்னைமரத்தை கற்பகவிருட்சம் Tree of Heaven என்றும் சொல்லலாம். தென்னைமரத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் பயன்படுக்கப்படுகிறது. தென்னைமரத்தின் மூலமாக பல தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. இந்தவிதமான ஒரு விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு இன்னும் போதிய உதவிகள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரிகளில் அட்மிஷன் கிடைப்பது சம்பந்தமாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒரு ஏழை மாணவருக்கு அட்மிஷன் கிடைப்பது என்பது மிகவும்

சிரமமாக இருக்கிறது. பொதுவாக இந்த மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டுமென்றால், பி.யு.ஸி. பாஸ் செய்திருக்க வேண்டும், அல்லது அதற்கு மேற்பட்ட படிப்பு படித்திருக்கவேண்டும். அதோடு தேர்வுகளில் கிரேட்களில் நல்ல மார்க்கும் வாங்கியிருக்க வேண்டும். இந்த விதமான கிரேட் மார்க்குகள் எல்லாம் பெற்றவர்கள் மனு செய்து கொண்ட பின்னரும் செலக்ஷன் கமிட்டியினால் இன்டர்வியூ செய்யப்படுகிறார்கள். ஏழை மாணவர்களாக இருந்தால் இன்டர்வியூக்கு வருவதே மிகவும் கஷ்டம். அத்துடன் நல்ல மார்க்குகளும் இருந்தாலும் நிச்சயமாக இடம் கிடைக்கும் என்றும் சொல்வதற்கில்லை. இன்டர்வியூக்கு சென்னைக்கு வர வேண்டும். நல்ல வசதி படைத்த மாணவர்களாக இருந்தால் பத்து நாட்களுக்கு முன்பே பெற்றோர்கள் சென்னைக்கு வந்துவிடுகிறார்கள். சென்னையில் வந்திருந்து முகாம் போட்டு ஆவன செய்து, முயற்சி செய்துவிட்டால் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் இடம் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. குறிப்பாகச் சொல்லுகிறேன், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இரு மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான இன்டர்வியூக்கு வந்தார்கள். அதில் ஒருவர் ஏழை மாணவர், இன்னொருவர் வசதிபடைத்த மாணவர். இருவரும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தான். இதில் முன்னவர் ஏ-பிளஸ், பி-பிளஸ் Grade மார்க் வாங்கியவர், இரண்டாமவர் பி. பிளஸ், பி-மார்க்கு Grade in வாங்கியவர்கள். இருவரும் மனுசெய்துகொண்டார்கள். இதில் முதலாமவர் நல்ல அழகாக இருப்பார், கேள்விகளுக்கு நல்ல பதில் சொல்லக்கூடியவர், இரண்டாமவர் பார்ப்பதற்கு அகோரமாக இருப்பார், கேள்விகளுக்குக்கூட பதில் நன்றாக சொல்ல இயலாது. அந்த அளவுக்கு திறமையும் கிடையாது. இந்த நிலையிருந்தும் பின்னவருக்கு இடம் கிடைத்தது. முன்னவருக்கு இடம் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தபோது ஆட்சியாளர்கள் இதில் தலையிட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகவே இம்மாதிரியான செலக்ஷன் கமிட்டி வைப்பதை எடுத்துவிட்டு, அவரவர்களுக்கு இருக்கக்கூடிய மார்க் மதிப்பெண்கள், கிரேடுகள் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களானால் ஏழை தகுதியுள்ள மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்கும் என்று நம்புகிறேன். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த செலக்ஷன் கமிட்டி சம்பந்தமாகவுள்ள சங்கடத்தை நீக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹோமியோபதி முறையைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஹோமியோபதி முறை என்பது ஜெர்மானிய முறை மருத்துவம். இது ஒரு சிக்கலமான சிகிச்சை முறை. எல்லோரும் சீக்கிரமாக 10 நாட்கள், 20 நாட்கள் பயிற்சி பெற்றுவிட்டு உடனடியாக ஹோமியோபதி டாக்டராகிவிட முடியாது. முக்கியமாக ஹோமியோபதி டாக்டர் என்றால் எம்.பி.பி.எஸ். டாக்டருக்குள்ள அலோபதிக் அறிவும் சேர்ந்து அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். அந்த முறையில் பயிற்சி

பெறுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த ஹோமியோபதி சிகிச்சை முறை மூலம் நோயின் மூல காரணத்தையே கண்டு பிடித்து வேரோடு அறுத்து எறிய முடியும். அலோபதி முறையினால் தீர்க்கமுடியாத பல நோய்கள்கூட ஹோமியோபதி முறையினால் தீர்க்கப்பட்டிருக்கிறது. என்னுடைய அனுபவத்திலேயே நான் கண்டிருக்கிறேன். ஆகவே இதற்கு வேண்டிய ஊக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பொன்னையா : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1963-64-ம் ஆண்டு பட்ஜெட்டை வரவேற்றுச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமென்றால், ஏற்றத் தாழ்வு இல்லாத ஒரு சமுதாயம் உருவாகவேண்டுமென்றால், இப்படி ஒரு பட்ஜெட்டை அமைப்பதன் மூலம்தான் அதை உருவாக்க முடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இந்த பட்ஜெட்டில், விவசாயம், பாசனத் திட்டம், மின்சார அபிவிருத்தி, தொழில், கல்வி, இவைகளையெல்லாம் மிகச் சிறப்பாக கனம் அமைச்சர் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். அவசர காலம் என்ற நிலைமையில்கூட இல்லாமல், அவசர பட்ஜெட் என்று சொல்லாத முறையில் அவசர காலமாக இருந்தும்கூட இந்த பட்ஜெட்டை இவ்வளவு அழகாகச் சமர்ப்பித்திருப்பதற்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு நீர்ப்பாசனத் திட்டத்தில் எனது தொகுதியில் பள்ளி விளங்கல், அரியாபுரம் வாய்க்கால்கள் மிகவும் தூர்ந்து போயிருக்கின்றன. நமது புதிய திட்டங்களின்கீழ் ஏற்கெனவே அமைந்திருக்கக் கூடிய வாய்க்கால்களிலும் ரொம்பச் சீர்கேடு இருந்தால் அதை அவசியம் கவனிக்கவேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி தாலூகாவில் காளியப்பகவுண்டனூர் (சீலம்) என்ற இடத்தில் இருக்கக்கூடிய வாய்க்கால் 10-50 ஏக்கருக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கக்கூடிய முறையில் இருக்கிறது. அதுவும் சீர்கேடு ஆகியிருப்பதால் சாகுபடி செய்ய முடியவில்லை. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளியாறுக்கு அருகே காளியப்பகவுண்டன் புதூரில் காஸ்வே அமைப்பதற்கு ஏற்பாடாகி வெகு நாளாக வேலை நடவாமல் இருக்கிறது. அதை எல்.டி. ஸ்கீமாக எடுத்து, கிராமத்தில் ரூபாய் 10,000 கொடுத்திருக்கிறார்கள். தற்போது இதை ஹைவேஸ் டிபார்ட்மெண்டு மாறியிருக்கிறார்கள். இந்த வேலை முடியாமல் இருக்கிற காரணத்தினால் மக்கள் பொள்ளாச்சிக்கு வருவதற்கு 10 மைல் தூரம் சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். இதை இன்னும் பெண்டிங்காக வைக்காமல் சீக்கிரம் முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை பிர்க்காவில் பஞ்சாயத்தினால் நடத்தப்படும் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் ஹில் அலவன்ஸ் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதே பஞ்சாயத்தில் மிடில் ஸ்கூல்,

ஹைஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு ஹில் அலவன்ஸ் கொடுப்பதில்லை. அந்த பஞ்சாயத்தில் வேலை செய்யும் அஃபிஷல்ஸுக்கும் ஹில் அலவன்ஸ் கொடுப்பதில்லை. மலைப் பிராந்தியமான இந்தப் பகுதிக்கு 40 மைல்களுக்கு அப்பாலிருந்துதான் சாமான்கள் வரவேண்டும். பொள்ளாச்சியில் ஒரு ரூபாய்க்கு வாங்கக்கூடிய சாமான் அங்கே வரும்போது 1¼ ரூபாய் ஆகிவிடுகிறது. ஏற்கெனவே அமைச்சரிடம் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குக் கொடுப்பதுபோல மிடில் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும், ஹைஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும், பி.டபிள்யூ.டி. ஸ்டாஃபுக்கும், ரெவின்யூ ஸ்டாஃபுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த முறையில் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகையால் அதையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற பட்ஜெட்டில் ரூபாய் 150-க்குக் கீழ் வாங்கும் சம்பளக்காரர்களுக்கு ரூபாய் 5 கொடுக்கப்பட்டது. பரம்பிகுளம்-ஆளியாறு வேலை இப்போது நடந்துகொண்டிருக்கிறது. டிபார்ட்மெண்ட் தொழிலாளிகள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். கன்ஃபர்ம் ஆனவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்ற நியதி இருந்தாலும், 3-4 வருஷங்களாக வேலை செய்துவரக் கூடியவர்களுக்கு இதைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது திட்டங்களில் மிகப் பெரிய திட்டம் பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம். அதில் 8 அணைகள் இருக்கின்றன. ஒன்று ஆளியாறு அணை. கேரளாவுக்கும், வால்பாறைக்கும் போகும் இடத்தில் அது அமைந்திருக்கிறது. அந்த இடத்தில் கார்டன் அமைக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை ஆளியாறு அணையைச் திறந்தபோது சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இன்னும் இந்தத் திட்டம் ஸாங்ஷன் ஆகவில்லை. அதைச் செய்தால் சாத்தனூர், வைகை போன்ற இடங்களில் இருப்பது போன்று கார்டன் அமையும். இதைப்பற்றி என்ஜினியரிடம் கேட்டபோது அமைச்சரிடம் எடுத்துச்சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆகையால் இதை அவசியம் ஸாங்ஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த மட்டில் ரூபாய் 27 கோடி இந்த வருஷம் செலவழிக்கப்போகிறோம். மதிய உணவுத் திட்டத்தில் வால்பாறைப் பிரதேசத்தில் எஸ்டேட்டுகள் மதிய உணவு கொடுத்துக் கொண்டுவருகிறார்கள். அது சரியாக நடைபெறுவதில்லை. இதைப் பூராவாக நாமே எடுத்துக்கொண்டால் நலமாக இருக்கும். அதையும் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்காண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. துரையரசன் : மதிப்பிற்குரிய துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே நானும் பேசுகிற நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த

[திரு. ஆ. துரையரசன்] [2nd March 1963

மைச்சருக்கு உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே ஊர்க்காவல் படைக்கும், போலீஸ் இலாகாவிற்கும் சேர்த்து அதிகமான அளவு நாம் நிதியை ஒதுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். நாளடைவிலே இந்தச் செலவினங்களை ஆண்டுக்காண்டு மேற்கொண்டு வந்திருந்தால், நெருக்கடி நேரத்திலே பல்வேறு துறைகளில், விவசாயத்தையும், தொழில்களையும் ஊக்குவிக்க வேண்டிய இந்த நேரத்திலே, திடீரென்று கோடிக்கணக்கான ரூபாய்களை இதிலே முடக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம்.

அதையடுத்து, விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை இன்னும் சற்று அதிகமாக—தாராளமாக—ஒதுக்கப்பட்டு, விவசாயிக்கு காலாகாலத்தில் எப்ரல் மாதத்திற்குள்ளாகச் செய்யப்படவேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால் உற்பத்தியைப் பெருக்குவதிலே மேலும் நாம் ஊக்கம் காட்டியவர்களாக ஆவோம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூபாய் 69 லட்சம் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே 372 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன என்று நான் அறிகிறேன். ஆகையால் இந்தத் தொகை போதாது. மேலும் இதற்கு வேண்டிய தொகையை ஒதுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதையடுத்து, உர உற்பத்தியிலே ஓரளவு நல்ல முன்னேற்றத்தை நாம் கண்டிருக்கிறோம் என்றாலும், இந்த மாமன்றத்தில் பல்வேறு வட்டங்களில் உர வினியோகத்தில் குறைபாடுகள் தென்படுகின்றன என்று எடுத்துக்காட்டப்பட்டாலும், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டு உர வினியோகம் நல்ல முறையிலே, கள்ள மார்க்கெட்டுகள் தவிர்க்கப்பட்டு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அங்கே இருக்கின்ற திருவாரூர் டி. வி. எம். எஸ்-இலிருந்து எடுத்துக் கொண்டு வரப்படுகிற உரங்கள் அறந்தாங்கியில் ஒரு இடத்தில் ஸ்டாக் செய்யப்பட்டு பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களும் அனுப்பப்படுகின்றது. அப்படி அனுப்பப்படுகிற அந்த உர மூட்டைகள் அங்கே அந்த சங்கங்களுக்கு முறைப்படி நிறுத்துக் கொடுப்பதில்லை. அந்த சங்கங்களிலே வாங்கக் கூடிய விவசாயிகளைக் கேட்கிற நேரத்தில் உரம் இருக்கவேண்டிய கணக்குக்குக் குறைவாக இருப்பதாகக் கூறுகிறார்கள். "ஏன் ஐயா குறைவாக இருக்கிறது?" என்று அந்தக் காரணத்தை அந்த சங்கத்தைச் சேர்ந்தவரைக் கேட்டால் அறந்தாங்கி மார்கெட்டின் சொஸைட்டி செக்ரட்டரியைக் காண்பிக்கிறார். மார்க்கெட்டிங் சொஸைட்டியைக் கேட்டால் அங்கிருந்து வருவதே இப்படித்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார். எங்கே இந்த ஊழல் இடையிலே நடைபெறுகிறது என்பதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

2nd March 1963] [திரு. ஆ. துரையரசன்]

அடுத்தபடியாக, பல்வேறு இடங்களிலே சிறு சிறு தேக்கங்கள் கட்டி வருவதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். 12-30 p.m.
என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், உங்கள் மூலமாக கனம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். திட்டமிடப்பட்ட அணைக்கட்டு வேலைகளைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் பரிசீலனையில் இருக்கின்ற சிறுபாசனத் திட்ட வேலைகளையும் துரிதமாகப் பரிசீலனை செய்து அவைகளையும் சீக்கிரத்திலேயே செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமை காரணமாக கிராமங்களிலே மருத்துவர்கள் இல்லை என்ற குறை இருக்குமென்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கிராமங்களிலே வாழ்கிறவர்களுக்கு மருத்துவ வசதியே இல்லை என்று சொன்னால் அவர்கள் எப்படி மருத்துவ வசதி பெறமுடியும்? அறந்தாங்கி வட்டத்தை எடுத்துக்கொண்டால், தலைநகரிலே ஒரு மருத்துவ நிலையம் இருக்கிறது. ஆனால் திருப்பணவாசல் பகுதியிலே வாழ்பவர்கள் வேறு வாகன வசதி இல்லாத காரணத்தால், பாதைகள் வசதி இல்லாத காரணத்தால், அறந்தாங்கிக்கு வந்து சேர முடியவில்லை. பணக்காரர்களாய் இருந்தால் எங்கு வேண்டுமானாலும் சென்று வைத்திய வசதி பெற முடியும். அந்த வசதி இல்லாத காரணத்தால் பல தாய்மார்கள் உயிர் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அரசினர் அருள்கூர்ந்து பரிசீலனை செய்து மருத்துவர்கள் இல்லாத கிராமப் பகுதிகளிலே மருத்துவர்களை நியமிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி நகரிலே உள்ள உயர்நிலைப் பள்ளியிலே கிட்டத்தட்ட 250-க்கு மேற்பட்ட பெண்கள் படிக்கிறார்கள். பெண்களுக்கென்று தனியாக உயர்நிலைப்பள்ளி இல்லை. விரைவிலே, வருகிற ஆண்டிலேயே பெண்களுக்கென்று தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளியைத் துவக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தற்போது கட்டப்படுகின்ற உயர்நிலைப்பள்ளி கட்டிடம் போதுமான வசதி இல்லாத காரணத்தால், அதைமேலும் விஸ்தரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அங்கே இருக்கின்ற மாணவர்களை இங்கும் அங்குமாக வாத்தியார்கள் அழைத்துக்கொண்டு நடைபோடவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலைமைகளை யெல்லாம் நமது கல்வி அமைச்சரவர்கள் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறந்தாங்கி நகரிலே ஏழை மாணவர்களுக்கு ஒரு விடுதி இருக்கிறது. மணமேல்குடியிலும் ஒரு விடுதி அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை விரைவில் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்பேட்டைகளைப் பொறுத்தவரையில், இந்த அறிக்கையிலே கண்டிருப்பவைகளைப் பார்த்தால் எந்தக் கண்ணோட்டத்தோடு திட்டமிட்டிருக்கிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள

முடியவில்லை. செல்வாக்குப் படைத்தவர்கள் இருக்கும் பகுதிகளிலே இவைகள் நிறுவப்படுகிறதா என்ற ஐயப்பாடு ஏற்பட்டிருக்கிறது? சென்ற ஆண்டிலேயே நான் இதைச் சுட்டிக் காட்டினேன். அறந்தாங்கி போன்ற பின்தங்கிய பகுதிகளிலே ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வாய்ப்பு இல்லையா? பல்வேறு மாநிலங்களிலே ஏராளமான தொழில் பேட்டைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே அவற்றைவிட தொழில்பேட்டைகள் குறைவு என்று சொன்னாலும்கூட, இதற்காக ஒரு சர்வ கட்சிக் குழுவை அமைத்து எங்கெங்கே தொழில்பேட்டைகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது, எங்கே வேலை வாய்ப்பு அற்றவர்கள் இருக்கிறார்கள், எங்கே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று பார்த்து அரசியல் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டு இதைச்செய்ய வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்பதுதான் என்னுடைய கருத்து. என்னுடைய பகுதியிலே வாழ்கின்ற பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் வேறு பல காரணங்களுக்காக நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு வருகிறார்கள். நம்முடைய ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்களிடத்தில்கூட நான் சில விவரங்களை நேரில் சொன்னேன். திருப்பணவாசலில் 54 குடிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். வீடுகளைச் சுற்றி 36 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அந்த நிலங்களுக்கு பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று சொன்னால், அவை காடு என்று சொல்லுகிறார்கள். ஆனால் காட்டிலாகாவைக் கேட்டால், அது ‘ரிசர்வ் பாரஸ்ட்’ இல்லை, ரெவின்யூ பாரஸ்ட் என்று சொல்லுகிறார்கள். ரெவின்யூ இலாகாவைக் கேட்டால், காட்டிலாகாவின் அனுமதி வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சிலர் உயர்ஜாதி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள் எப்படியும் அந்த நிலங்களை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று திட்டமிட்டு அதற்கு பாத்தியம் கொண்டாடுகிறார்கள். இதைப்போன்று பல இடங்களில் இருக்கிறது. வீடுகள் கட்டுவதற்கு போதுமான மனை கட்டு வசதி அவர்களுக்கு இல்லை. சுடுகாட்டுக்குக்கூட வசதி இல்லாத நிலைமையிலே பலர் அங்கு வாழ்கிறார்கள். தீண்டாமை ஓரளவுக்கு ஒழிக்கப்பட்டு வருகிறது என்பதைக் குறித்து நாம் மகிழ்ச்சி அடைந்தாலும், இன்னும் இந்த மாதிரி நிலைமைகள் நம் நாட்டிலே உருவாகிக்கொண்டுவருவதை சரியான முறையில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயத் துறைக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீனவர்களுக்கு விஞ்ஞான முறைப்படியான திட்டங்களை பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மாகாண சர்க்கார் வரவு செலவுத் திட்டம் வரியே இல்லாத ஒரு வரவு-செலவுத் திட்டம், ஆகையினால் இதை வர

வேற்கலாம் என்று நினைக்கும்பொழுது மத்திய சர்க்காரின் வரிப்பளு நிறைந்த வரவு-செலவுத் திட்டத்தையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த நேரத்திலே ஒரு சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த வருடம் நம்முடைய மாகாண மக்கள்மீது மாகாண சர்க்காருடைய வரிப்பளு சுமத்தப்படாவிட்டாலும், விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் உற்பத்திச் செய்த பொருள்களின் விலை எதிர்ப்பாராத விதமாக இன்றைக்குக் குறைந்திருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் படக்கூடிய அவதியைச் சர்க்கார் கருத்திலே கொண்டு அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க முன் வந்திருப்பார்களோ என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்கும்பொழுது ஒன்றுமே இல்லாதது ஏமாற்றத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் பல திட்டங்கள் போட்டபோதிலும்கூட அவர்களுக்கு நியாயமான விலை கிடைத்தால்தான் நமது திட்டங்களையே சரியான முறையில் நிறைவேற்ற முடியும். நியாயமான விலை கிடைக்காவிட்டால் நாம் போடுகிற திட்டங்களெல்லாம் எதிர்பார்க்கிற அளவுக்குப் பலன் தராது. இன்றைக்கு சர்க்கார் விவசாயப் பொருள்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வேண்டுமென்ற கருத்தை சொல்லிவருகிறார்கள். சர்க்கார் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அளவுக்கு விலை குறைந்திருக்கிறது. ஆகவே ஏதாவது ஒரு நடவடிக்கையை நமது மாநில சர்க்கார் எடுத்துக் கொள்ளுவது அவசியம். இப்பொழுது உற்பத்தி செய்யும் விவசாயிகளைப் போய்ப்பார்த்தால்தான், அவர்களுடைய உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

சாதாரணமாக ஒரு பொதி நெல்விலை குறைந்த பட்சம் 75 ரூபாய் என்று விற்றால் அது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது. அந்த விலையில் சாகுபடி செய்ய முடியாது. இன்னும் பல்வேறு காரணங்களும் சொல்லப்படுகின்றன. சில சமயங்களில் 65 ரூபாய்க்குகீழ்கூட விற்கப்படுகிறது. மற்ற தானியங்களைப் பொறுத்தவரையிலும் பல இடங்களில் கட்டுபடியாகக்கூடிய நிலையில் விற்கப்படவில்லை. விலை ஒரேயடியாக குறைந்து விற்கின்றன. அந்த அளவுக்கு விற்றால் உற்பத்தி செய்வது முடியாது. அதனால் உற்பத்தி பாதகம் அடையும். ஆனால் கணிசமான அளவில் விலை குறைந்து விற்கக்கூடிய அளவில் உற்பத்தி கணிசமான அளவில் பெருகவில்லை. ஆகவே இதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் சர்க்கார் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த விலைவாசியின் குறைவால் விவசாயிகளுடைய உற்பத்தியில் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே இவற்றையெல்லாம் யோசனையில் எடுத்துக்கொண்டு எந்த விதத்தில் இதைக் கட்டுப்படுத்தலாம் என்பதற்கு அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைக்கூட திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய அவல நிலையை நேரில் பார்த்தால்தான் புரிந்து கொள்ள முடியும். இது ஏழை எளியவர்களுடைய

[திரு. க. ர. நல்லசிவம்] [2nd March 1963

விஷயம் என்று சர்க்கார் விட்டுவிடக்கூடாது. இந்த அவசர காலத்தில் மக்களிடத்தில் நல்ல நிலையை உண்டாக்க வேண்டும். அவர்களுக்கு தெம்பு ஊட்டக்கூடிய நிலையில் காரியங்களைச் செய்யவேண்டும். ஊக்கம் அளிக்கக்கூடிய நிலையில் அவர்களுக்கு சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். அந்த முறையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். மாகாண சர்க்கார் வரி போடாவிட்டாலும்கூட, மத்திய சர்க்கார் வரி போட்டிருக்கிறார்கள். மின்சார மோட்டார், ஆயில் எஞ்சின், டீசல் முதலியவைகளுக்கும் அவர்கள் வரி போட்டிருக்கிறார்கள். மறுபடியும் அவர்கள் வரியை உயர்த்தி இருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள்.. விவசாயத்தை விட்டுவிட்டு வேறு தொழில்களில் ஈடுபடுவதற்கு போய்விடுவார்கள். ஆனால் அப்படிப் போவதற்கும் அவர்களால் முடியாது. அவர்களால் வேறு எந்தவிதமான தொழிலையும் செய்ய முடியாது. வேறு தொழில்களைச் செய்யக்கூடிய நிலையில் விவசாயிகள் இல்லை. இதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பக்கத்தில் விலைவாசி குறைந்திருக்கிறது. மற்றொரு பக்கத்தில் பயிர்களுக்கு பூச்சிகள் விழுந்து விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். பயிர்கள் அழிந்துபோய் உற்பத்தி பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. பத்திரிகைகளில் பார்த்தால் சில இடங்களில் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சில இடங்களில் அதிகமாக உற்பத்தி ஆகி இருக்கிறது என்று சொன்னாலும் சில இடங்களில் அதிகமாக உற்பத்தியாகவில்லை. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கே உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி சர்க்கார் நல்ல முறையில் பரிசீலனை செய்து விவசாயிகளுடைய தொல்லைகளைத் தீர்ப்பதற்கு முழு மூச்சுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரைக்கும் நாம் எந்த உற்பத்தி பெருக்கும் திட்டத்தைப் போட்டாலும்கூட இதற்கு என்று கொடுக்கப்படும் கலப்பு உரத்தையும் மற்றும் எந்த உரத்தையும் சுமார் பத்து வருட காலமாக உபயோகித்து அனுபவப்பட்டு வந்திருக்கிறார்கள். அதன் பயனாக எவ்வளவோ இடங்களில் விவசாயிகள் எந்த அளவுக்கு கலப்பு உரத்தை உபயோகிக்கிறார்களோ அந்த அளவுக்கு உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். சாதாரணமாக இயற்கை உரத்தை உபயோகப்படுத்திக்கொண்டு வந்தபொழுது உற்பத்தியில் எந்தக் காலத்திலும் குறைவு ஏற்பட்டதில்லை என்று சொல்லலாம். கலப்பு உரம் உபயோகப்படுத்த ஆரம்பித்தவுடன் உற்பத்தி குறைந்து வருகிறது என்றே சொல்லலாம். இப்பொழுதுள்ள நிலைமையில் இயற்கை உரத்தை உபயோகப்படுத்த பிரசாரம் செய்ய வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் கலப்பு உரத்தை உபயோகிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆகவே உற்பத்தியைப் பெருக்குவதற்கு கலப்பு

2nd March 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

உரத்தை விட்டுவிட்டு இயற்கை உரத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்ற பிரசாரத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக கலப்பு உரத்தை பல்வேறு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அவைகள் நல்லதாக இல்லை. அதைப்போலவே தனியார் துறையில் உற்பத்தி செய்யக்கூடிய கலப்பு உரமும் நல்லதாக இல்லை. ஆகவே லைசென்சு கொடுக்கும் முறையில் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கலப்பு உரம் விநியோகம் செய்ய ஆரம்பித்த பிறகு அதிகப்படியாக தனியார் துறையில் கலப்பு உரம் தயாரித்து விநியோகம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் நல்லதாகவே இல்லை. இப்படி பல கம்பெனிகள் உரம் தயாரிக்க ஆரம்பித்திருக்கின்றன. அவைகள் சரியாக தயாரிக்க வில்லை. ஆகவே கலப்பு உரம் தயாரிக்க கொடுக்கக்கூடிய லைசென்சை கொஞ்சம் கட்டுப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படும் உரத்தை ஜனங்கள் கொஞ்சம் நம்பி வாங்குகிறார்கள். தனியார் துறையில் கம்பெனிகள் மூலமாகக் கொடுக்கப்படும் உரத்தை ஜனங்கள் நம்பி வாங்குவதாக இல்லை. ஆகவே கம்பெனிகள் உரம் தயாரிக்க லைசென்சு கேட்டால் அதைக் கொடுக்காமல் இருப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சமீபத்தில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தங்கத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தத் தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் செயற்கை வயிரக்கல் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த மாகாணத்தில் சுமார் ஐந்து லட்சம் பேர்கள் இருக்கலாம். இவர்களுக்கு ஏதாவது மாற்றுவேலை தேடிக் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களை எந்தத் தொழிற்சாலையிலாவது அமர்த்திக்கொள்ள சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. நிச்சயமாக இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் பாதிக்கப்பட்டதோடுகூட, விவசாயிகளும் விலைவாசி குறைவால் பாதிக்கப்பட்டால் அதனால் நாட்டிற்கு எவ்வளவோ தீங்குகள் வரக்கூடியதாக இருக்கும். இந்த நெருக்கடியான சமயத்தில் இப்படி மக்களுக்கு பாதகம் ஏற்படக்கூடிய காரியங்களைச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அதிகப்படியாக தேசத்தில் இப்பொழுது நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை உத்தேசித்து கிராமங்களிலும் நகரங்களிலும் என்.சி.சி. போன்ற முறையில் வாலிபர்களுக்கு

பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படிக் கொடுக்க வேண்டியது அவசியம்தான். சமீபத்தில் ஹோம் கார்ட் சட்டம் வேறு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டு நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு அன்னிய ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதற்கு சௌகரியமாக இருக்கும் சிலம்பம், குஸ்தி போன்றவைகளில் பயிற்சிகள் கிராமங்களில் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. வெள்ளைக்கார ஆட்சி வந்தபிறகு நம்மை அடிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக இவைகளில் எல்லாம் நம்மை தயாரிக்காமல் இருந்ததால் நமக்கு எந்தவிதமான துணிவும், தெம்பும் இல்லாமல் இருந்தது. நாம் சுதந்திரம் அடைந்தபிறகு அவைகள் நமக்கு இருக்கவேண்டியது அவசியமாக ஏற்பட்டிருக்கிறது. நம்மைப் போல் சுதந்திரம் அடைந்த நாடுகள் எவ்வளவோ தங்களுடைய மக்களுக்கு இப்படிப்பட்ட பயிற்சி எல்லாம் கொடுத்து தயாரித்துக்கொண்டிருக்கின்றன. அந்த முறையில் நாம் இதுவரையிலும் தயாரித்துக்கொள்ளாமல் இருந்தோம். இப்பொழுது அதற்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களிலுள்ள வாலிபர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்தால் அவர்களை அபாயகரமான காலத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஏற்கனவே அவர்களுக்கு சிலம்பம், குஸ்தி போன்றவைகளைச் சொல்லிக்கொடுத்து வந்தார்கள். இப்பொழுது அப்படி இல்லை. ஆயுதங்களை தூக்குவதற்குக் கூட பயப்படுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்கி அவர்களை ஆயுதங்களில் நல்ல பயிற்சி உடையவர்களாக ஆக்கினால் அவர்களால் தேசத்திற்கு எவ்வளவோ நன்மை ஏற்படும். சுதந்திரம் அடைந்த பிறகு அந்த வசதி இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது சாதாரண மனிதன் ஒரு ஒன்பது அங்குல கத்தியைக் கூட வைத்துக்கொள்ள முடியாத நிலைமையில இருக்கிறான். துப்பாக்கியைக் கண்டால் ஆயிரம் அடி ஓடக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அந்த நிலையில் ஜனங்களை வைக்கக்கூடாது. அவர்களுக்கு துணிச்சல் வரக்கூடிய அளவில் பயிற்சி கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் எந்த ஆக்கிரமிப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர்களுக்கு தைரியம் ஏற்படும். அந்த அளவில் கிராமங்களிலுள்ள வாலிபர்களுக்கும் நகரங்களிலுள்ள வாலிபர்களுக்கும் ஆயுதப் பயிற்சி கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. நம்மை ஆக்கிரமித்திருக்கும் நாட்டைப் பார்த்தால் இது நன்றாக தெரியும். அவர்கள் எவ்வளவோ ஆயிரக்கணக்கான வாலிபர்களை ரிசர்வாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே நாமும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே இனி மேலாவது ராணுவத்தில் பயிற்சி கொடுக்கக்கூடிய அளவில் வாலிபர்களைத் தயாரிக்க வேண்டும். ஆகவே 18 வயதுக்கு மேற்பட்ட வாலிபர்களுக்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும். அந்த அளவுக்கு இப்பொழுது இருக்கக்கூடிய சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே அந்தச் சட்டத்தை இனிமேலாவது தளர்த்தி அந்த முறையில் வாலிபர்களுக்கு பயிற்சி கொடுக்கக்கூடிய அளவில் சட்டத்தைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாகாண சர்க்காரால் முடியாவிட்டாலும் மத்திய சர்க்காருக்கு மாகாண சர்க்கார் சிபாரிசு செய்து

தற்போது உள்ள ஆயுத சட்டத்தைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது இல்லாவிட்டாலும் வாலிபர்களுக்கு சிலம்பம், குஸ்தி போன்றவைகளில் பயிற்சி கொடுக்கலாம். நாளைக்கு வாலிபர்களுக்கு துணிச்சல் இருக்கக்கூடிய அளவில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு தொண்டர் படையை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதே போன்று பஞ்சாப் மாகாணத்தில் ஏற்படுத்தி இருப்பதாக பத்திரிகையில் பார்த்தேன். அதே போன்று இங்கும் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாபில் 'ஏர் கன்' ட்ரெயினிங் கொடுப்பதாக தெரிய வருகிறது. அப்படிப்பட்ட யோசனை ஒன்று அங்குள்ள ராஜ்ய சர்க்காருக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதே போன்று இங்கும் வாலிபர்களுக்கு துணிவு ஏற்படும் முறையில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் பயிற்சிக் கூடங்கள், சிலம்பக்கூடங்கள், குஸ்திக் கூடங்கள் அமைத்து வாலிபர்களுக்கு பயிற்சி கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் மூலம் வாலிபர்களுக்கு இருக்கக்கூடிய பயங்குளித்தனத்தைப் போக்க வேண்டும். அதன் மூலம் வாலிபர்களுக்கு துணிவு ஏற்படும். அப்படிச் செய்தால் இப்பொழுதுள்ள ஆக்கிரமிப்பு போன்றவைகளைத் தடுத்து நிறுத்த உபயோகமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு ஜி. நாராயணசாமி நாயுடு** : கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்று, அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. நானும் கிட்டத்தட்ட 11, 12 வருஷங்களாக நிதி நிலை அறிக்கைகளைப் பார்த்துக் கொண்டே வருகிறேன். ஆனால், இந்த வருஷத்திய நிதி நிலை அறிக்கை மாதிரி எதிர்க் கட்சிக்காரர்கள் தாக்காத, தாக்க முடியாத ஒரு நிதி நிலை அறிக்கையை நான் பார்த்ததே இல்லை. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் வள்ளுவரைத் துணை கொண்டும், கம்பராமயணத்தை ஆதாரம் காட்டியும் பலம் தேடிக் கொண்டார்கள். இதைத்தவிர, கடுமையான கண்டனங்கள் ஒன்றும் கொள்கை ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ தெரிவிக்கப்படவில்லை என்பதன் காரணமாக, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி நம்முடைய நண்பர்கள் நல்ல அபிப்பிராயம்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அதில் குற்றங்கள் குறைகள் சொல்வதற்கு ஏதுமில்லை என்கிற நிலை ஏற்பட்டதைக் கொண்டு, இது நிரம்ப, நிரம்ப நல்ல அறிக்கை என்றுதான் நான் நம்புகிறேன்.

பாதுகாப்பைப் பற்றி ஏற்கனவே இந்தச் சபை வாதித்து முடித்துவிட்டது. இந்த பட்ஜெட்டில் எது இல்லை என்று திரும்பத் திரும்ப யோசனை செய்தாலும்கூட, இதில் இல்லாதது ஒன்றுமே இல்லை என்று முடிவுக்குத்தான் வர வேண்டும். எல்லாவற்றையும் பற்றிச் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத்தைப் பற்றி சிறிய நீர்பாசனத்தைப்பற்றி, தொழில்களைப்பற்றி, கல்வி

[திரு. ஜி. நாராயணசாமி நாயுடு] [2nd March 1963

யைப் பற்றி, ஊர் பாதுகாப்பை பற்றி, நாட்டுக்கு வந்திருக்கிற பேராபத்தைப் பற்றி எல்லாம் தெளிவாக நம்முடைய மந்திரி அவர்கள் அலசி ஆராய்ந்து இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரார்த்தனை உண்டு. கோயில்களில் சாமி வேறு வேறாக இருந்தாலும், பிரார்த்தனை ஒரே மாதிரிதான் இருக்கும். அதே போல், எனக்குச் சில பிரார்த்தனைகள் உண்டு. இதனால் விவசாயிகளுக்கு என்ன ஏற்பட்டது. அவர்கள் நிலைமை சீர்பட்டதா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டிய நிலையில் நான் நிரம்ப நாளாக இருக்கிறேன். அந்த முறையில் பார்க்கும்போது, இப்பொழுது சமீபத்தில் நம்முடைய அதிகாரிகள் தரம் உயர்ந்து, நல்ல அதிகாரிகளாக வந்திருப்பதன் காரணமாக பத்து, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அனுபவிக்கவேண்டியிருந்த சீர்கேடுகளெல்லாம் இப்பொழுது இல்லை. என்றாலும்கூட, அங்குமிங்கும் ஒன்றிரண்டு பேர்கள் கொஞ்சம் விஷமம் செய்து பழைய நிலைமை வந்துவிடுமோ என்ற பயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் ஒரு ஆளை அடித்தார்கள். துண்டைப் போட்டு முறுக்கினார்கள். 'ஆபத்து' என்று போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தந்தியும் கொடுக்கப்பட்டது. மந்திரிகளுக்கும் தந்தி கொடுக்கப்பட்டது. நானும் போய் எல்லோரிடத்திலும் சொல்லிப் பார்த்தேன். யார் நாணயமாக நடக்கவில்லை என்று தெரியாத நிலையில், சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பேரிலும், ஸர்க்கிள் ஏட்டு அவர்கள் பேரிலும் பொறுப்பை சுமத்தி கேஸ் போடாமல் இருக்கிறார்கள். சர்க்கிள் 'கேஸ் போடுகிறேன்' என்று, யார் அடித்தாரோ அவரை விட்டுவிட்டு வேறு நபரின்மேல் கேஸ் போடுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொரு சம்பவம். ஒரு விவசாயினுடைய வீட்டைப் பிரிக்க வேண்டும் என்று நீதி மன்றத்தில் வழக்கு நீதித்தலத்தில் இருக்கும் போதே கேஸ் நடக்கிறது. பகலில் வீட்டில் புகுந்து சாமானை எடுத்ததையொட்டி வீட்டுச் சாமான்களை பறிகொடுத்தவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினார். இந்தமாதிரி வீட்டை பிரிக்க வழக்கு நடக்கும்பொழுதே சாமானை எடுத்துவிட்டதாகத் தந்தி கொடுத்தார். கனம் மந்திரிக்கும் தந்தி வந்திருக்கும். என்னையும் அதில் சிக்க வைப்பதற்காக ஹரிஜன நல இலாகா மந்திரி அவர்கள் நீங்கள் எழுதிக் கொடுங்கள், நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்" என்று சொன்னார்கள். வழியில் போவதை விலை கொடுத்து வாங்குவானேன் என்ற நான் சும்மா இருந்துவிட்டேன். ஏற்கெனவே ஒரு முறை வேறொரு வீடு பிரி சம்பவத்தை நான் சுட்டிக்காட்டின போது, "அம்மாதிரி சம்பவம் நடக்கவில்லை" என்று மதிப்பிற்குரிய ஹரிஜன நல இலாகா மந்திரி அவர்கள் சொல்லிவிட்டார். சவாலும் விட்டார். அவர்களையே நான் நேரில் அழைத்துச் சென்றுபோய் சம்பவம் நடந்த இடத்தைக் காட்டினேன். வீடு பிரித்த கல்லையும் காட்டினேன். இப்படி ஒன்றிரண்டு சம்பவங்கள் இருக்கின்றன.

2nd March 1963] [திரு. ஜி. நாராயணசாமி நாயுடு]

விவசாயிகளைக் கௌரவித்தால் விவசாயம் நன்றாக நடக்கும். வெள்ளைக்காரன் காலத்தில் இம்மாதிரி சங்கடங்கள் இருக்கும்போது கறுப்புக் கொடி காட்டி, கடுமையான வேதனைகளை அனுபவித்திருக்கிறோம். இப்பொழுது அம்மாதிரியான சங்கடங்கள் குறைந்து, எந்தவிதமான கெடுதலும் இல்லாதபோது, எங்கோ ஒன்றிரண்டு சம்பவங்கள நடக்கும்போது மனம் வேதனைப்படுகிறது. எல்லாமே நன்றாக நடக்கும்போது, இம்மாதிரி ஒன்றிரண்டு இடங்களில் தவறு நடக்கும்போதுதான் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது.

விவசாயப் பண்டங்களின் உற்பத்தி குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. இந்த வருஷம் எதிர்பாராத மழை காரணமாக, குறுவை சேதமடைந்தது. நன்றாக விளைந்திருந்த சம்பாப் பயிரில், 25, 30 சத விகிதத்திற்குமேல் பதராகப் போய்விட்டது. சர்க்கார் அறிக்கையில் பிசகு இல்லை. புள்ளி விவரங்களில் தவறு இல்லை. அறுத்து கண்டுமுதல் ஆகும்போதுதான் தெரிந்தது. தானியங்களின் விலை இறங்குவது நிச்சயமாக விவசாயிகளுடைய உற்சாகத்தை குறைத்துவிடும். நெல் பயிர் செய்வதைவிட்டு, கரும்பு, கடலை, இன்னும் மற்ற தானியங்களைப் பயிரிடலாமா என்று விவசாயிகள் நினைக்கக்கூடும். நானும் நிலத்தை வைத்திருக்கிறேன். தியாகிகளுக்கு சர்க்கார் கொடுத்த நிலம். அந்த அனுபவத்தில் சொல்கிறேன். நெல் உற்பத்தி செய்தால் கட்டுபடி ஆகாது என்ற நிலைமையில் வேறு தானியங்கள் பயிரிடலாமா என்று விவசாயிகள் நினைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

விவசாயிகளுக்கு எத்தனையோ சலுகைகளை அரசாங்கம் கொடுக்கின்றது. ஃபில்டர் பாயிண்ட்ஸ், ட்யூப் வெல்ஸ், போர் வெல்ஸ், மாடுகள் இவற்றுக்கான உதவிகளும், கடனாக என்ஜின்களும், எரு, உழவுக் கருவிகள் முதலியவைகளும் சர்க்கார் உதவி அளிக்கின்றது. விவசாயிகளுக்கு இப்படியெல்லாம் சலுகைகள் கிடைக்கும் என்று கற்பனையிலோ, சினிமாவிலோகூட காண முடியாத அளவுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. வள்ளுவர் காலத்திலேகூட இம்மாதிரி நலன்கள் எல்லாம் விவசாயிகளுக்குக் கொடுத்ததாக தெரியவில்லை. இப்படி விவசாயிகளுக்குச் சலுகைகள் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும், நெல் விலை இறங்கியதன் காரணமாக விவசாயிகளின் உற்சாகம் குறைந்திருக்கிறது. இந்த நிலையைத் திருத்தியாக வேண்டும். 12 வருஷ காலமாக திட்டங்களைத் தயாரித்து வந்திருக்கிறோம். வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால், கீழேயிருக்கும் விவசாயிகள் தங்களுடைய பலத்தை அதிகமாகச் செலவு செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும். நெல் விலை ஏற ஏற விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துகொண்டே வரும். நெல் விலை இறங்க இறங்க அவர்களுடைய வாழ்க்கைத் தரம் குறைந்துகொண்டே போகும். ஒரு தரம் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, கீழே இறங்கும்போது அவர்கள் எதிர்ப்பு காட்டும் நிர்ப்பந்தம் ஏற்படும். இன்றைக்கிருக்கும் வாழ்க்கைத்தரம் இப்படியே நல்ல நிலைமையில் இருக்க வேண்டுமானால் நெல் சாகுபடி செய்தாலும், கரும்பு சாகுபடி செய்தாலும்,

கடலை சாகுபடி செய்தாலும், பருத்தி சாகுபடி செய்தாலும் வருமானம் ஒரேமாதிரி இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் விவசாயத்திற்காகச் செலவிடும் கோடிக்கணக்கான ரூபாய்கள் நல்ல முறையில் பயன்பட்டு, விவசாயிகள் உற்சாகத்தோடு விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடக்கூடும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு இயக்கம் ஒரு நல்ல பலமான அமைப்பு என்பதில் யாருக்கும் ஆட்சேபனை கிடையாது. ஐந்தாறு சங்கங்களுக்கு நான் டைரக்டராக இருக்கிறேன். முன்பு விவசாய அமைச்சராக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் போட்ட திட்டத்தின்கீழ், இந்த இயக்கம் நல்ல முறையில் வளர்ந்து சுகமாக இருக்கும் நிலைமை ஏற்பட்டது. அவர்கள் கையாலேயே குத்தாலத்தில் ஒரு கூட்டுறவு சங்கத்தைத் துவக்கி வைத்தார்கள். பண்டாரசன்னதியைப் பற்றிச் சொல்லிச் சொல்லி நான் சளைத்துப் போய் விட்டேன். அவர்களுடைய கருணைகடாட்சம் சரியாக இல்லை. நிலத்தை நாங்கள் வைத்திருக்கிறோம். அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கிறோம். பண்டாரசன்னதியினுடைய தம்பியே எங்கள் சங்கத்தின் கீழ் ஒரு குத்தகைதாரர், எங்களிடமே, "அந்த *** சங்கத்திலே நான் குத்தகை அளக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டார். குத்தகைப்பத்திரத்தில் எழுதியபடி நெல்லைப் பிடிவாதமாக வாங்கக்கூடிய சக்தி சட்ட ரீதியாகப் போதவில்லை. மறைமுகமான சக்தியைப் பயன்பத்தவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அறுவடையான சமயத்தில் மகசூலை எடுத்துக்கொண்டு போகமுடியாத நிர்பந்தத்தை உண்டாக்கினோம். ஏழாயிரம் ரூபாய் கடனோடு நிலத்தை விட்டுவிட்டார்கள். சர்க்கார் கொடுக்கும் சலுகைகளிலே ஒரு சலுகைகூட எங்கள் கூட்டுறவு சங்கத்திற்குக் கிடைப்பதேயில்லை. கிட்டத்தட்ட 40, 45 விவசாயிகள் இருக்கிறார்கள் *** எத்தனையோ ஊர்களில் ஊர் ஊராக ஒரு மூட்டை நெல் வாங்கி முதல் வருஷம் சாகுபடி செய்தோம். இப்பொழுது என்ன என்ன நிர்பந்தங்களை ஏற்படுத்த முடியுமோ அத்தனை நிர்பந்தங்களைச் சாமியார் செய்துகொண்டிருக்கிறார். எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். நாங்கள் சாகுபடி செய்கிற நஞ்சை நிலத்திற்கிடையே கொஞ்சம் கொஞ்சம் புஞ்சை பூமி இருக்கிறது. அந்தப் புஞ்சை
1-00 p.m. யிலிருந்து அவர்களுக்குக் கொஞ்சம்கூட வருமானம் வரவில்லை. நாங்கள் அவர்களிடம் சொன்னோம் கடந்த பத்து வருஷ காலத்தில் அவற்றிலிருந்து வந்த வருமானம் எந்த வருஷத்தில் மிக அதிகமோ அந்த வருமானத்தை நாங்கள் வருடாவருடம் கொடுத்து விடுகிறோம். அந்தப் புஞ்சை பூமிகளையும் எங்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்கிறோம். அதைக் கொடுத்தால் நாங்கள் அங்கங்கே களம் வைத்துக்கொள்ள முடியும். எருக்கொட்டி வைத்துச் சேர்த்துக்கொள்ள முடியும். இன்னும் போர் போடுவதற்கும் மற்றவற்றுக்கும் உபயோகமாக இருக்கும். ஆனால் அதைக் கொடுக்க அவர்கள் மறுக்கிறார்கள். அந்தப் புஞ்சை பூமியையும் பெற்று இந்தக் கூட்டுறவு சங்கத்திற்குக்

*** Expunged as ordered by the Chair.

கொடுத்தால் மிகவும் உபயோகமாக இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் அந்தக் கூட்டுறவு சங்கத்தில் கனம் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு பொங்கல், தீபாவளி என்று ஏதாவது கொடுத்தால் இது எதற்காக கொடுத்தது, அது எதற்காக கொடுத்தது, ஏன் கொடுக்க வேண்டுமென்று கூட்டுறவு சங்கத் தணிக்கையாளர்கள் சொல்கிறார்கள். இது சில்லரை விஷயம். யார் வீட்டு சொத்தையும் எடுத்துக்கொடுத்துவிடவில்லை. நாங்களே உழைத்து, நாங்களே சம்பாதித்ததைத்தான் கொடுக்கிற பழக்கம் உள்ள இனங்களுக்குக் கொடுத்துவருகிறோம். இதில் பலத்த ஆட்சேபனை இல்லாது இருந்தால் மிகவும் சௌகர்யமாக இருக்கும் என்று கனம் அமைச்சரிடம் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இன்னொன்று.

இன்றைக்குக் கூட்டுறவு சங்கத்திடையே விடப்பட்டிருக்கும் நிலங்களைக் குத்தகைக்குவிட்டாலும் சரி, வாரத்திற்கு 60, 40 என்று விட்டாலும் சரி இன்றைக்கு கூட்டுறவு சங்கங்கள் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிற அளவு அதிகமாகும். இந்த அதிகமான அளவுக்கு நெல் அளந்து கொண்டுதான் இருக்கிறோம். இனியாகிலும் சட்ட ரீதியாக எவ்வளவு குறைக்கலாம் என்பதைப் பரிசீலித்து இதைக் குறைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக நில உச்ச வரம்புச் சட்டத்தைப்பற்றி இந்த நிதி அளவு அதிகமாகும். இந்த அதிகமான அளவுக்கு நெல் அளந்து கொண்டுதான் இருக்கிறோம். இனியாகிலும் சட்ட ரீதியாக எவ்வளவு குறைக்கலாம் என்பதைப் பரிசீலித்து இதைக் குறைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடவில்லை. அது ஒரு பலமான சட்டம். ஆனாலும் அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு என்ன என்ன முறைகளை கையாண்டு இருக்கிறார்கள் நிலமுடையவர்கள் என்பதை கனம் மந்திரிகள் கற்பனைகூடச் செய்து பார்த்திருக்க முடியாது என்று நான் நிச்சயமாக சொல்வேன். ஏதோ சட்டம் வந்தது. ஊரில் நிலம் இல்லாத விவசாயிகள் பத்து பேர்களுக்கு நிலம் கிடைத்தது என்று இப்போது சொல்ல முடியாது. ஐந்து ஏக்கருக்கு மேல் குத்தகைகாரன் வைத்துக் கொள்ள முடியாது. அதனால் வேறு ஒரு விவசாயிக்கு நிலம் போகவில்லை. குழிக்கு ஒரு ரூபாய் என்று கொடுத்து நிலத்திற்குரியவரிடமே நிலம் வந்திருக்கிறது. மற்றவர்களிடம் அடைந்ததுபோல் சீட்டு இருக்கிறது. திருவாடுதுறை மடம் சம்பந்தப்பட்ட வரையில் அப்படி ஒன்றும் இருப்பதாக நான் கேள்விப்படவில்லை. ஆனால் எனக்குத் தெரியும் பண்டாரம் ஒருவர் ஐந்து லட்சம் வரை பெற்றிருக்கிறார். வேண்டுமானால் அரசாங்கத்திலிருந்து ஸி.ஐ.டி.க்களை நியமித்து இதுபற்றி நன்கு பரிசீலித்துப் பார்க்கலாம்.

[திரு. ஜி. நாராயணசாமி நாயுடு] [2nd March 1963

சட்டத்திலிருந்து விலக்கி விடுவதற்குக் கரும்பு போட்டவர்கள் ஒரு பகுதி. குழிக்கு ஒரு ரூபாய் என்று பணம் பெற்றவர்கள், இன்னும் நிலம் நம் கையைவிட்டுப் போய்விடுமோ என்று அங்கங்கே மரங்களை எல்லாம் வெட்டி விற்றவர்கள் ஒரு பகுதி. ஆகவே, நிலம் இல்லாதவர்க்கு கொடுப்பதற்கு ஒரு சென்ட் கூட வரவில்லை. பட்டவிளாகம், ஓலையாம்புத்தூர், நத்தம் இக்போன்ற நான்கைந்து கிராமங்களுக்குள்ளேயே ஏழெட்டு லட்சம் ரூபாய் சமீபத்தில் கைபுரண்டு இருக்கிறது. கோயில் நிலங்கள் யாவும் இப்படி என்று சொல்வதற்கில்லை. திறமையான நிர்வாக அதிகாரி யுள்ள இடத்தில், இதுவரை தாங்களே அனுபவித்துக்கொண் டிருந்த நிலங்களை வேண்டுமானால் மேலதிகாரிகளின் பார்வைக்குப் போகாதவாறு அங்கங்கே யார்யாரோ பயிர் செய்வது போல இன்னமும் தாங்களே அனுபவித்துக்கொண்டு வருகிற நிலைமை யைப் பார்க்கலாம்.

கடைசியாக ஒரே ஒரு விஷயம். பள்ளிக்கூடம் சம்பந்த மானது. எங்கு பார்த்தாலும் பள்ளிக்கூடம் வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். நாமும் எங்கே பார்த்தாலும் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். அதே சமயம் இப் போது தனியார் நடத்துகின்ற பள்ளிகளுக்குச் சங்கடம் வந்திருக் கிறது என்றே சொல்லலாம். திரு. சம்பந்தம் அவர்களுக்கும் இதில் அனுபவம் இருக்கும். நான் சொல்வதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். தனியார் துறையில் நடத்தப்படுகிற பள்ளிகள் அனைத்திற்கும் இருப்பதாகத் தெரிவித் திருக்கிறார்கள். எங்கள் பகுதியில் ஒரு ஹரிஜன் ரொம்ப நாளாக ஒரு பள்ளியை மிக நன்றாக நடத்திக் கொண்டு வருகிறார். யாரையோ இவ்வாண்டு தலைமை வகிக்கக் கூப்பிடவில்லை. பள்ளி நிர்வாகி என்னைக் கூப்பிட்டார். உடனே அவர்அதே இடத்தில் வேறு ஒரு பள்ளியை துவக்குகிறார். அந்த இடத்தில் இன்னொன்று ஏற்படுத்தினால் இதன் நிலைமை என்ன ஆகும், இரண்டும் நடக்குமா ? ஒரு ஆண்டில் இரண்டும் மூடிவிடும்படி ஆகிவிடுமா என்று பார்ப்பதில்லை. கேட்டால் என்ன சார் நீங்களே காங்கிரஸ் காரர், பள்ளிக்கூடம் வேண்டாம் என்று யாருமே சொல்லவில்லை. ஆனால் ஒரு பள்ளிக்கூடத்தை அழிப்பதற்கு இன்னொரு பள்ளிக் கூடமா ? இரண்டு உடன்பாடு சேர்ந்தால் ஒரு எதிர்மறை என்பார்களே . . .

திரு. சா. கணேசன் : இரண்டு உடன்பாடு என்றைக்கும் ஒரு எதிர்மறையாகவேயாகாது.

திரு. ஜி. நாராயணசாமி நாயுடு : மன்னிக்கவேண்டும். உவ மானத்தை வைத்துக்கொண்டு விஷயத்தை விடவேண்டாம். இரண்டு எதிர்மறை ஒரு உடன் பாடு ஆகும்போல் இருக்கிறது இலக்கணத்தில். இப்படி ஒரு பள்ளிக்கூடம் இன்னொரு பள்ளிக் கூடத்தை அழிப்பதற்கு என்றால் இந்தப் பள்ளிக்கூடம் வருவது சிறந்தது என்று நான் சொல்லமாட்டேன். அதுவும் உத்தரவு

2nd March 1963] [திரு. ஜி. நாராயணசாமி நாயுடு]

இல்லாமலேயே பள்ளிக்கூடம் என் தொகுதியில் நடைபெறுகிறது. இதைப்பற்றி கொஞ்சம் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமே என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கு எதிர்ப்பு கொடுக்க முடியாத அளவுக்கு நன்றாக அமைந்திருக்கிறது என்று மனப்பூர்வமாகப் பாராட்டி, ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1963-64வது ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடக்கின்ற விவாதத்தில் நானும் கலந்து கொள்ள நேர்ந்தமைக்கு என்னு டைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் எடுத்த எடுப்பிலேயே நாட்டின் நெருக்கடியை முன்னிட்டு பாதுகாப்பு என்ற தரப்பின் கீழ் போலீஸ்தான் வருகிறது. அதை நான் ஒதுக்கிவிடலாமென்று கருதினாலும் முடியவில்லை. பழைய வாசனை என்று கனம் சபாநாயகர் அன்று சொன்னார். அனுபவத்தை மறக்க முடியாதுதான் ஏற்கனவே செலவிட்டதைவிட ஒரு கோடி அதிகம் இப்போது செலவாகிறது என்று சொல்லலாம். ஆனால் போலீஸ்காரர் களுக்கு அதனால் முன்பு இருந்ததைவிட வசதி பெருகியிருக்கிறதா என்றால் இருக்க முடியாது. எப்போதுமே அகல உழுவதை விட ஆழ உழு என்று சொல்வார்கள். அப்படி இருக்கக்கூடியவர்கள் ஏற்கனவே செலவிட்டதைவிட ஒரு கோடி அதிகம் இப்போது செலவாகிறது என்று சொல்லலாம். ஆனால் போலீஸ்காரர்களுக்கு அதனால் முன்பு இருந்ததைவிட வசதி பெருகியிருக்கிறதா என்றால் இருக்க முடியாது. எப்போதுமே அகல உழுவதைவிட ஆழ உழு என்று சொல்லுவார்கள். அப்படி இருக்கக்கூடியவர்களின் நிலைமையை உயர்த்தாமல் விரிவுபடுத்தினால் மட்டும் பயனில்லை. இதைப்பற்றியெல்லாம் போலீஸ் மானியம் வரும் போது விவரமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நெருக்கடி நிலைமையை உத்தேசித்து இப்போது போலீஸ் படையினரின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் ஓய்வு பெற்றவர்களைக்கூட உத்தியோகத்திற்கு அழைத் திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. மேலும் சின்னச் சின்னத் தவறுகளுக்காக இலாகாவிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். இப்படி டிஸ்மிஸ் செய்யப்பட்ட போலீஸ் காரர்களை ஒரு அப்பீல் என்ற முறையிலாவது அழைத்து உள்ளே சேர்த்துக்கொள்ள வழிசெய்யவேண்டும். இது கனம் அமைச்சர் அவர்களுக்கே நல்ல பெயரைக் கொடுக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக, இந்த நெருக்கடியான நிலையிலும்கூட ஐந்தாண்டுத் திட்டங்களின் அளவைக் குறைக்காமல் எல்லாத் திட்டங்களையும் முடிக்கவிட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதை வரவேற்கிறேன். நல்ல திட்டங்களை நிறைவேற்றும்போது ஏற்படக்கூடிய

[திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்] [2nd March 1963

இடைஞ்சல்களையும் அவசியம் கவனிக்கவேண்டியிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் எங்களைப் போன்ற எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்ல வேண்டித்தான் இருக்கிறது. எதை எடுத்தாலும் குறை சொல்கிறார்களே என்று ஆளும் கட்சிக்காரர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவை பற்றி எடுத்துச் சொல்வது எங்கள் கடமை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது விவசாயமாகும். விவசாய அபிவிருத்தி, தொழில் வளர்ச்சி, பாசனத் திட்டம், தொழில் நுட்பக் கல்வி, இவற்றிற்காக குறிப்பாக 195 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கும் 195 கோடி ரூபாயும் ஒழுங்காகக் குறிப்பிட்ட நேரத்தில் பயன்படுகிறதா என்று பரிசீலனை செய்வது அவசியமாகும். நான் நீண்ட நாட்களாக இந்தச் சபையில் இல்லாவிட்டாலும்—ஒவ்வொரு ஆண்டிலும் இந்தச் செலவுகளைப் பற்றியெல்லாம் குறை சொல்லப்பட்டுத்தான் வந்திருக்கிறது என்பது ரெகார்டுகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இந்தக் குறைகளை அகற்ற என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சர்க்கார் யோசித்து அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் என்றால், அது எந்தக் கடையில் விற்கிறது என்று நான் கேட்கவேண்டிய நிலையில் உள்ளேன். அதற்குக் காரணம் எங்கள் பகுதியில் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் எதுவும் கிடையாது. அந்த மாதிரித் திட்டம் எதுவும் வராது என்றும் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். கனம் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், ஆந்திராவிலுள்ள கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளிலிருந்து கிளைக் கால்வாய்கள் கொண்டுவந்து செங்கல்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் திட்டம் ஒன்றைப் போட்டார்கள். ஆனால் இதுவரை அந்தத் திட்டத்தின் பேரில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. வீடூர் திட்டம் என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதனால் எங்கள் பகுதி பயன்பெறவில்லை.

கனம் திரு. பூ. கக்கன் : 'வீடூர்' திட்டம் நிறைவேற்றப்பட்டதன் காரணமாகத் திண்டிவனத்திற்கு நன்மை கிடைத்திருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்தத் திட்டத்தின் காரணமாகத் திண்டிவனம் அதிக நன்மையைப் பெற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார். அந்தத்திட்டத்தின் காரணமாகப் பக்கத்தில் இருக்கும் வீடூர் போன்ற பகுதிகள்தான் நன்மையடைந்திருக்கிறதே தவிர, திண்டிவனத்திற்கு ஊற்று நீர் கூடக் கிடைக்கவில்லை. திண்டிவனம் தாலுகாவில் ஒரு மூலையாகப் பாய்ந்து கடைசியாகப் பாண்டிச்சேரிக்குப் போகிறது. நான் இருக்கிற குறையைச் சொல்கிறேனே தவிர குற்றம் சொல்வதாகக் கருதக் கூடாது.

2nd March 1963] [திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்]

சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தமட்டில், ஏரிகளைத் தூர் வாருதல், புதிய கிணறுகளை வெட்டிக் கொடுத்தல், ஆழக் குழாய்க் கிணறுகள் வெட்டிக் கொடுத்தல், இவைகளுக்காக மானியம் கொடுத்து உதவுதல், பம்ப் செட்டுகள் அமைத்துக் கொடுத்தல் ஆகிய ஐந்து முறைகளையும் கடைப்பிடித்து எங்கள் திண்டிவனம் பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உரத்தைப் பற்றிப் பேசப்பட்டது. ஒரு போகப் பயிருள்ள இடங்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் உரம் கிடைப்பதில்லை. இந்த வருஷம் அதிகச் சிரத்தை எடுத்து உரத்தைக் கொடுக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது சொல்லளவில் இல்லாமல் நடைமுறையில் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பொறுக்கு விதை சப்ளை செய்வதைப் பொறுத்த வரையில், எங்கள் பகுதியிலே ஒரு விதைப் பண்ணை இருக்கிறது. இது வரை அது எந்த முறையில் விவசாயிகளுக்கு விதை சப்ளை செய்யும் வகையில் பயன்பட்டது என்று சொல்ல முடியவில்லை. "அந்திமத்தில் அஸ்வத்தாமனுக்கு பட்டம் கட்டப்பட்டது" என்று சொல்லும் வகையில் கடைசியாக வந்திருக்கிறது.

அடுத்து, பூச்சி மருந்து பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. விவசாயிக்கு எந்தப் பூச்சிக்கு எந்த மருந்து அடிப்பது என்று தெரியாத காரணத்தால் இந்த வருஷம் எனக்கு 150 கலம் நெல் பாழாகிவிட்டது. நான் இது பற்றி ரெவின்யு டிவிஷனல் ஆபீசரிடத்தில் சொன்னேன். விவசாய அதிகாரிகள்தான் இதுபற்றியெல்லாம் கவனிப்பார்கள் என்று அவர் சொல்லிவிட்டார். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கௌன்சில் மீட்டிங்கில் சொன்ன போது முன்னாலேயே சொல்வதற்கென்ன என்று சொல்லிவிட்டார்கள். எனக்கு நஷ்டம் வந்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. விவசாயிகளுக்கு இது போல் இனிமேல் நஷ்டம் வாராமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவுக்கு "மணிலாக் கொட்டை ஜில்லா" என்றே பெயர். இந்த வருஷத்தில், குறிப்பாக விழுப்புரம் தாலூகா திண்டிவனம் தாலூகா ஆகிய இடங்களில் பருவ மழை பெய்யாமல் 'மணிலாக் கொட்டை' பயிர் பாழாகி விட்ட காரணத்தால் சர்க்கார் தீர்வையை எப்படிக் கட்டுவது என்று புரியாமல் தவிக்கிறார்கள். டி.டி.சி. மீட்டிங்கில் கலெக்டர் அவர்களிடத்தில் இது பற்றி நான் சொன்னபோது 'கணக்கப்பிள்ளை மகசூல் கணக்கை அனுப்பிவிட்ட காரணத்தால், தீர்வை வசூலிக்காமல் இருக்க முடியாது' என்று சொல்லிவிட்டார். கனம் அமைச்சர் அவர்கள் இதைப் புனராலோசனை செய்து வரி வசூலிப்பதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

* திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே 1963-64-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். இதை ஒரு 'மாடல்' நிதிநிலை அறிக்கையாகக் கொள்ளவேண்டும். இந்த வருஷம் புது வரி எதுவும் இல்லையென்று அவர்கள் சொன்னநேரத்தில் நமக்கு மாத்திரமல்ல, மக்கள் எல்லோருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. நம்முடைய நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியான நிலைமையில், போலீஸ் துறையைப் பலப் படுத்தும் வகையில் 8 கோடியே 11 லட்சமும், ஊர்க் காவல் படை அமைப்புக்காக 85 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மாணவர் படைப் பயிற்சிக்கு 57 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் போற்றத்தக்கதாகும்.

நம்முடைய நாடு விவசாய நாடு. ஆகவே, விவசாயத்தைப் பெருக்கும் வகையில் பாசனத் திட்டங்களுக்காகவும், மின்சார அபிவிருத்திக்காகவும், தொழில் அபிவிருத்தி, தொழில் நுட்பக் கல்விக்காகவும் சுமார் 195 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவும் வரவேற்கத்தக்கது. நம்முடைய விவசாயிகளுக்கு வேண்டிய உரத்தை நம்முடைய சர்க்கார் வழங்கி வருகிறது. அதை இன்னும் சீரியமுறையிலே எல்லோருக்கும் கிடைக்கும்படியாக விநியோகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உரத்தை நெய்வேலியிலும் மற்ற அநேக இடங்களிலும் உற்பத்தி செய்து வருகிறார்கள். விவசாயத்திற்கு வேண்டிய பாசன வசதித் திட்டங்களை நம் சர்க்கார் செய்து வந்திருக்கிறார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், சாத்தனூர் திட்டம், மஞ்சளாறு திட்டம், கோமுகி நதித்திட்டம் போன்றவற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள் நம் அரசினர். அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், பாலைவனங்களாக இருக்கும் நிலங்கள், நீர் வளமுடையதாக அமையும். விவசாயிகளுக்கு சிறிய பாசனத் திட்ட வசதி ஏற்படுத்திக் கொடுத்திருப்பதோடு விவசாயிகளுக்கு பம்ப்செட்கள், ஆயில் என்ஜின்கள், மின்சார என்ஜின்கள் போன்றவற்றை வாங்குவதற்கு கடன் வசதி, சப்ஸிடி போன்றவற்றிற்கு தொகை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். என்ன உரம் கொடுத்தாலும் என்ன நீர் பாய்ச்சினாலும் பூச்சி, எலி வெட்டுகளால் விவசாயிகள் அதிகமாக நஷ்டமடைகிறார்கள். ஆகவே பயிர் பாதுகாப்பு 'இன்ஷூரன்ஸ்' திட்டம், கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டம் ஆகியவற்றை விவசாயிகளின் உதவிக்காக கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சவுக்கு, முந்திரி போன்ற விறகுக்கான மரங்களை நல்ல முறையில் பாதுகாத்து வளர்க்க வேண்டும். ஆகவே அம்மரங்களை அதிகப்படியாக வளர்க்க விவசாயிகளுக்கு "இன்ஸென்டிவ்" கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். தென் ஆற்காடு ஜில்லாவில் சவுக்கு, முந்திரி இவை அதிகமாக பயிராகிறது. அங்கு முந்திரி அதிகமாக பயிர் ஆவதால் அங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி அதன் பழத்திலிருந்து ஜாம் செய்யவும், முந்திரித் தோலில்

இருந்து ப்ளாஸ்டிக் சாமான்கள் செய்யும் ஒரு தொழிற்சாலையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் திட்டம் இரண்டாம் நிலை நல்லமுறையில் நடந்து ஹொகனக்கல் ஸ்கீமும் வெற்றி பெற்றால் காவேரியில் இருந்து சாத்தனூருக்கு தண்ணீர் கொண்டு வந்து சாத்தனூர் டேம்-ல் விட்டு அங்கிருந்து 30 மைல் அப்பாலுள்ள வெள்ளாறுக்கும் அத்தண்ணீரைக் கொண்டு வந்தால் அநேக ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி ஏற்பட முடியும். இப்போது கள்ளக்குறிச்சி விருத்தாசலம் போன்ற தாலுகாக்களில் சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த இருப்பதால் அங்கு கரும்பு உற்பத்தியும் உணவு உற்பத்தியும் நல்ல முறையில் செய்ய ஏதுவாக இருக்கும். விவசாயத்திற்கு மின்சாரம் தேவையாக இருக்கிறது. இப்போது தேசிய பாதுகாப்பிற்காக நாம் மின்சாரத்தை குறைவாக உபயோகிக்க வேண்டியிருக்கிறது. காரணம், தொழிற்சாலைகளில் தளவாடங்கள் உற்பத்தி செய்ய நிறைய மின்சாரம் வேண்டியிருக்கிறது. ஆகவே சிக்கனமான முறையில் விவசாயத்திற்கு மின்சாரத்தை உபயோகித்துக் கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு கடன் வழங்க கிராமங்கள் தோறும் கூட்டுறவு சங்கங்கள் நிறைய இயற்ற வேண்டுமென்று இருக்கிறது. அதிலும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளவர்களில் 85 சதவிகிதத்தை அவைகளில் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தென் ஆற்காடு ஜில்லாவில் மணிலா (வேர்க்கடலை) அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். வேர்கடலைப் பயிருக்கான பாக்கேஜ் திட்டத்தை விரிவுபடுத்தி கூடுதலாக 80,000 ஏக்கர் நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவருவதற்கான திட்டத்திற்கு அனுமதி அளித்திருப்பதும் வரவேற்கத்தக்கது. அடுத்தபடியாக கல்வியை எடுத்துக்கொண்டால், கிராமங்களில் கட்டாயக் கல்வி செயல்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் இவை அநேகம் திறக்கப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இப்போது நம் நாட்டில் நமக்கு அதிகப்படியான என்ஜினியர்கள் தேவை. ஆகவே என்ஜினியரிங் காலேஜ்களில் அதிகப்படி மாணவர்களைச் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு இந்த நெருக்கடி காலத்தில் நமக்கு அதிகப்படியான டாக்டர்களும் தேவையாக இருப்பதால் அதற்காக மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் மாணவர் தொகையை 600 லிருந்து 700 ஆக உயர்த்த ஏற்பாடுகள் செய்து வரப்படுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நம் நாட்டில் பஞ்சாயத்து முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. சாலைகளை இணைப்பதற்காகவும், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காகவும், குடி தண்ணீர் வசதிக்காகவும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிறைய மான்யங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. விருத்தாசலம் தாலுகாவில் குடிதண்ணீர் கிடைப்பது அரிது. அங்கு கிணறுகளில் பக்கட்டைக் கட்டி நீளமான கயிற்றைப் போட்டு விட்டு 1½ பர்லாங்க் ஓடினால்தான் தண்ணீர் வரும். அப்படிக் கிடைக்கும் தண்ணீரும் செம்பட்டை நிறத்திலிருக்கிறது. அந்தத் தண்ணீரை மக்கள் குடிப்பதால் நரம்பு சிலந்தி என்ற வியாதியால் மக்கள் பீடிக்கப்படுகிறார்கள்.

[திரு. கி. நாராயணசாமி பிள்ளை] [2nd March 1963

அந்த வியாதி பீடித்து மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கு குடிதண்ணீர் வசதியை சீக்கிரம் ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். பொதுத்துறையிலும் தனியார் துறையிலும் தொழிற்சாலைகள் அமைக்க மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரசாயனத் தொழில் துறையில் சோடாக காரம், மற்ற ரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தாரங்கதாரா ஸ்தாபனத்தாரும், மேட்டூர் கெமிகல்ஸ் ஸ்தாபனத்தாரும் உற்பத்தி அளவைப் பெருக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். கிண்டியில் டெலிபிரிண்டா தொழிற்சாலை ஏற்பட்டுள்ளது. திருச்சிக்கு அருகில் கனரகக் கொதிகலன் தொழிற்சாலை அமைய இருக்கிறது. பொதுத் துறையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் நமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி சேலம் இரும்புக் கனியைப் பயன்படுத்தி உருககாலை ஏற்படுத்த உபயோகமாக இருக்கிறது. அந்தப் பழுப்பு நிலக்கரியைக் கொண்டு அனல் மின்சாரம் உற்பத்தி செய்ய இரண்டு யூனிட்கள் செயல் படத் துவங்கி மூன்றாவது, நான்காவது யூனிட்களை அமைக்கும் வேலையும் விரைவாக முன்னேறி வருவதாக குறிப்பிட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது. அதுவும் நிறைவேறினால் நமக்கு மின்சாரப் பஞ்சமே இருக்காது. ஹொகனக்கல் ப்ராஜெக்ட் பற்றி ஒரு வார்த்தை. அதை மைசூர் அரசாங்கத்தோடு சேர்ந்து செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய சிபார்சுகளை இந்த சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் அணு மின்சார நிலையம் மகாபலிபுரத்திற்கு அருகில் நிறுவ இருக்கிறார்கள் என்று கண்டு மகிழ்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் கல்விக்காக கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பாலிடெக்னிக்கள், இன்டஸ்டரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்ஸ் இவைகள் நன்கு இயங்கி வருகின்றன. மேலும் இரண்டு பாலிடெக்னிக்களும் இரண்டு இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்களும் ஏற்படுத்த இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெண்களுக்கான ஒரு கல்லூரியை கும்பகோணத்தில் ஆரம்பிக்க இருக்கிறார்கள். பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காகவும் நல்ல தொகை ஒதுக்கியுள்ளார்கள். அதிலும் குறிப்பாக ஹரிஜனங்கள் நல்ல கல்வி அறிவு பெறவும், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவும் நல்ல தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். முதியோர் பென்ஷன் திட்டத்திற்காக ஒரு கோடி 22 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதை நல்ல முறையில் கொடுக்க வேண்டும். நெய்வேலித் திட்டத்தினால் கடலூர் முன்னேறி வருவதால் கடலூர் துறைமுகத்திற்கு இரண்டு கோடி செலவிட முனைந்துள்ளார்கள். அதையும் போற்றுகிறேன்.

அடுத்தபடியாக, விருத்தாசலம் வரையில் உள்ள ரெயில்வே ஸ்டேஷன்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும். அதுவரையில் மின்சார ரயிலும் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலியிலிருந்து விருத்தாசலம்வரை உள்ள ரோடை

2nd March 1963] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

அகலப்படுத்தி வருகிறார்கள். பாலத்தை அகலப்படுத்தி வருகிறார்கள். கடைசியாக விருத்தாசலம் தாலுகாவில் திட்டக்குடி என்ற இடத்தில் உள்ள வில்லிங்டன் ரிசர்வாயர் 28,000 ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கக்கூடியது. முப்பது ஆண்களில் இரண்டு தடவைதான் அதில் தண்ணீர் ஓவர் ப்ளோ ஆகியிருக்கிறது. அதை ஆழப்படுத்தினால் நல்லமுறையில் அது விவசாயத்திற்கு பயனளிக்கக்கூடியதாக இருக்குமென்று கூறிக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday the 4th March 1963. 1-29 p.m.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notification and Other Papers.

*32. *Budget Speech (English and Tamil).*

* 33. *Appendices to the Budget Speech (English and Tamil).*

* 34. *Budget Memorandum (English and Tamil).*

* 35. *Detailed Budget Estimates of Revenue for the year 1963–64.*

* 36. *Annual Financial Statement (Budget) of the Government of Madras—Summary of the Financial Position from 1961–62 (Accounts) to 1963–64 (Budget) (English and Tamil).*

* 37. *Third Five-Year Plan—Programme for the year 1963–64 (English and Tamil).*

† 38. *Introduction to budget (English and Tamil).*

† 39. *Demands for Grants and Detailed Budget Estimate.*

† 40. *Detailed Public Workks Budget.*

† 41. *Detailed Irrigation Budget.*

† 42. *Government Commercial Undertakings.*

† 43. *Notice of Demands for Grants for the years 1963–64 (English and Tamil).*

† 44. *Detailed Industries Budget.*

† 45. *Detailed Budget Estimate (Agriculture, Fisheries, etc.)*

† 46. *Statement of Posts and Scales of pay for the year 1963–64.*

* Circulated to the Members on 28th February 1963.

† Circulated to the Members on 1st March 1963.

[2nd March 1963

APPENDIX I.

[Vide answer to Starred Question No. 101 asked by Sri R. S. Veerappa Chettiar at the meeting, of the Legislative Assambly held on 2nd March 1963 on page 303.]

(a)	..	..	..	2,647
(b)	..	..	..	593

(c)

Name of the district.	General Pool.	Backward Classes.	Total.
(1)	(2)	(3)	(4)
1 Madras City	18	8	26
2 Chingleput	23	10	33
3 South Arcot	31	13	44
4 Thanjavur	34	14	48
5 Madurai	33	14	47
6 Ramanathapuram	25	11	36
7 Tirunelveli	28	12	40
8 North Arcot	32	14	46
9 Tiruchirappalli	33	14	47
10 Salem	40	17	57
11 Coimbatore	37	15	52
12 Nilgiris	4	2	6
13 Kanyakumari	10	4	14
	348	148	496
Scheduled Caste	..	..	94
	Total	..	590

Number of seats reserved for candidates from outside the State is 10 out of 600.

(*d*) Selection is made on the basis of the grades obtained by the candidates in the optional subjects under Part III, Group (A) of the Pre-University Examination and the marks awarded by the Selection Committee for extra curricular activities.

[303ம் பக்கத்திலுள்ள 101 எண்ணுள்ள நட்சத்திர குறியிட்ட கேள்வியின் பதிலை காண்க.]

(அ)	..	..	..	2,647
(இ)	..	..	..	593

(உ) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

2nd March 1963]

மாவட்டத்தின் பெயர்.	எல்லா வகுப்பினைச் சேர்ந்தவர்களும்.	பின்னிட்ட வகுப்புகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
1 சென்னை நகரம்	18	8	26
2 செங்கற்பட்டு	23	10	33
3 தென் ஆற்காடு	31	13	44
4 தஞ்சாவூர்	34	14	48
5 மதுரை	33	14	47
6 இராமநாதபுரம்	25	11	36
7 திருநெல்வேலி	28	12	40
8 வடஆற்காடு	32	14	46
9 திருச்சிராப்பள்ளி	33	14	47
10 சேலம்	40	17	57
11 கோயம்புத்தூர்	37	15	52
12 நீலகிரி	4	2	6
13 கன்னியாகுமரி	10	4	14
	348	148	496
ஷெட்யூல்ட் வகுப்பினர் ..	..	..	94
மாநிலத்திற்கு வெளியிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் எண்ணிக்கை ..			10
		மொத்தம் ..	600

(எ) பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பின் குரூப் (A) III-ம் பாகத்தில் விருப்பப் பாடங்களில் மாணவர்கள் வாங்கிய கிரேடுகளைப் பொறுத்தும், மற்றத்துறைகளில் மாணவர்களின் தேர்ச்சிக்காக தேர்வுக் குழுவினர் வழங்கும் மார்க்குகளின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

APPENDIX II

(Vide Answer to Starred Question No. 105 asked by Sri A. K. Subbiah at the meet ng of the Legisla.ive Assembly held on 2nd March 1963 on page 307.)

A.—Slum Improvement/Clearance Scheme.—Government have sanctioned the following Slum Improvement Projects of the Tiruchirappalli Municipal Council for the rehabilitation of 497 families, at an estimated cost of Rs. 5,98,976.

Description.	Number of families.	Amount.
(1)	(2)	(3)
		RS.
1 *Kalmandai Slum Improvement Project*—		
Provision of 69 open developed plots in the existing slum.	69	2,71,528
Provision of 163 open developed plots in the alternative site near the slum.	163	
2 *Peechankulam Slum Improvement Project*—		
Provision of 140 open developed plots in the existing slum.	140	3,27,448
Provision of 125 open developed plots in the alternative site near the slum.	125	
Total ..	497	5,98,976

The Tiruchirappalli Municipal Council resolved to hand over the above Slum Improvement Projects to the Tiruchirappalli Housing Unit of the State Housing Board. The Housing Board agreed to the above proposal, and has decided to authorise the Administrative Officer, Tiruchirappalli Housing Unit, to commence the execution of the Slum Improvement Projects. Orders of Government regarding acceptance of the transfer of the project to the Tiruchirappalli Housing Unit have been issued.

Land Acquisition and Development Schemes.—It is proposed to acquire and develop for housing purposes a total extent of about 500 acres in Tiruchirappalli under the Land Acquisition and Development Scheme of the Government of India. The approximate cost of the project is Rs. 166 lakhs.

Middle Income Group Housing Scheme.—A sum of Rs. 6·40 lakhs has been provided in the Budget Estimate for 1962–63 for the construction of 40 Middle Income Group Houses at Tiruchirappalli at Rs. 16,000 each. But the project has not yet been finalised.

Rental Housing for Low-Paid State Government Employees.—Government have ordered the transfer of 23 acres of Government lands in Tiruchirappalli town to the Housing Board for this scheme. Fifty houses will be built every year.

[307-ம் பக்கத்தில் உள்ள 105 எண்ணுள்ள நட்சத்திர குறியிட்ட கேள்வியின் பதிலை காண்க.]

சேரி அபிவிருத்தி—சேரி ஒழிப்புத் திட்டங்கள்.—ரூ. 5,98,976 செலவில் 497 குடும்பங்களின் சீரமைப்புக்காக திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றத்தின் கீழ்க்கண்ட சேரி அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசினர் அனுமதி அளித்துள்ளனர்:—

விவரம்.	குடும்பங்களின் எண்ணிக்கை.	தொகை.
(1)	(2)	(3)
		ரூபாய்.
1 கல்மண்டை சேரி அபிவிருத்தித் திட்டம்—		
தற்போதுள்ள சேரியில் அபிவிருத்தி செய்த 69 காலி மனைகளை ஏற்படுத்தல்.	69	2,71,528
சேரிக்கு அருகாமையில் இன்னொரு இடத்தில் அபிவிருத்தி செய்த 163 காலி மனைகளை ஏற்படுத்தல்.	163	
2 பீச்சாங்குளம் சேரி அபிவிருத்தித் திட்டம்—		
தற்போதுள்ள சேரியில் அபிவிருத்தி செய்த 140 காலி மனைகளை ஏற்படுத்தல்.	140	3,27,448
சேரிக்கு அருகாமையில் இன்னொரு இடத்தில் அபிவிருத்தி செய்த 125 காலி மனைகளை ஏற்படுத்தல்.	125	
மொத்தம் ..	497	5,98,976

மேற்சொன்ன சேரி அபிவிருத்தித் திட்டங்களை, மாநில வீடு வசதி போர்டைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளி வீடு வசதி யூனிட்டின் பொறுப்பில் விட்டுவிடத் திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது. இத் தீர்மானத்தை வீடு வசதி போர்டு ஏற்றுக்கொண்டு மேற்படி சேரி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற திருச்சிராப்பள்ளி வீட்டு வசதி யூனிட்டின் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

இத் திட்டத்தைத் திருச்சிராப்பள்ளி வீட்டு வசதி யூனிட்டுக்கு மாற்றியதை அரசினர் ஏற்றுக்கொண்டு, உத்தரவு வெளியிட்டுள்ளனர்.

நில ஆர்ஜிதமும், அபிவிருத்தித் திட்டங்களும்.—இந்திய அரசாங்கத்தின் நில ஆர்ஜித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளியில் வீடுகள் கட்டுவதற்காக மொத்தம் 500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கிறோம். இத் திட்டத்திற்காகும் செலவு சுமார் 166 லட்சம் ரூபாய் ஆகும்.

நடுத்தர வருமான வகுப்பினருக்கு வீட்டு வசதித் திட்டம்.—திருச்சிராப்பள்ளியில் நடுத்தர வருமானம் உள்ள வகுப்பினருக்காக, வீடு ஒன்று ரூ. 16,000 செலவில் 40 வீடுகள் கட்ட, 1962–63-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 6·40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இத் திட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

குறைந்த வருமானமுள்ள மாநில அரசாங்க ஊழியர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கட்டித் தருதல்.—இத் திட்டத்திற்காக, திருச்சிராப்பள்ளி நகரில் 23 ஏக்கர் அரசாங்க நிலத்தை வீட்டு வசதி போர்டுக்கு மாற்றும்படி அரசினர் ஆணை வெளியிட்டுள்ளனர். ஆண்டுதோறும் ஐம்பது வீடுகள் கட்டப்படும்.

APPENDIX III.

[Vide Answer to Starred Question No. 109 asked by Sri A. K. Subbiah at the meeting of the Legislative Assembly held on 2nd March 1963 on page 309.]

(*a*) The following is the list of Municipalities which have allowed taxes and fees to lapse due to time-bar during the years 1958–59, 1959–60 and 1960–61 :—

Name of the municipality.

1. Gobichettipalayam
2. Salem
3. Arkonam
4. Mettupalayam
5. Palni
6. Tiruvallur
7. Walajapet
8. Devakottai

[2nd March 1963

Name of the municipality—*cont.*

9. Dharapuram
10. Srirangam
11. Cuddalore
12. Ramanathapuram
13. Mannargudi
14. Karur
15. Tiruvarur
16. Coonoor
17. Tiruvannamalai
18. Tindivanam
19. Metapalayam
20. Nagercoil
21. Chingleput
22. Padmanabhapuram
23. Villupuram
24. Gudiyattam
25. Aruppukottai
26. Karaikudi
27. Nagapattinam
28. Thanjavur
29. Palayamcottai
30. Ootacamund
31. Coimbatore
32. Pudukottai
33. Courtallam
34. Vellore
35. Virudhunagar
30. Rajapalayam
37. Udumalpet
38. Tiruchirappalli
39. Ranipet
40. Madurai
41. Shencottah
42. Ambur
43. Tiruvottiyur
44. Pollachi
45. Colachel.

(*b*) *Amount of revenue lost in each of these years.*—Exact figures in respect of the revenue lost cannot be made available at this stage. In every case, the Municipal Commissioners are taking steps to collect whatever amount they can of the time-barred arrears and they have also instituted disciplinary proceedings for the recovery of the loss. Until final orders are passed by the Municipal Commissioners on the disciplinary proceedings, the exact amount of the loss cannot be determined.

(*c*) *Details of instructions issued for preventing such lapses in future.*—The Demand Collection Balance statement of each Municipality for every month is reviewed by the Chief Electoral Officer. While doing so, the Commissioners are instructed to see that the entire demand (both arrear and current) is collected before the end of the year. Besides this, the Municipal Commissioners are also reviewing the collection work of the bill collectors through a return which is submitted by them on every remittance day. The collection of revenue is one of the foremost responsibility of the Municipal Commissioner and it is up to him to see that the taxes are collected without allowing them to become time-barred. It is considered that these are enough to see that no item of tax is allowed to become time-barred.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 4th March 1963.

The House met in the Assembly chamber, Fort St. George, Madras at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

QUESTIONS AND ANSWERS

STARRED QUESTION.

MR. SPEAKER : Starred questions 113—115,, 119 and 120 relating to public health and medicine are postponed.

அரசாங்கப் போக்குவரத்து (சென்னை)

**116 கேள்வி*—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் ஓடக்கூடிய பஸ்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) Break down பஸ்கள் சராசரி எவ்வளவு ?

(உ) அரசாங்க பஸ் ஸ்தாபனத்தில் எத்தனை கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் உள்ளனர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Total number of buses in actual operation on 22nd January 1963 is 572. (527 schedules and 45 spares.)

(*b*) Average number of breakdown per day during January 1963 (up to 22—1—1963) is 48.

(*c*) 32.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய சென்னை நகரத்தில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், பூரண மாக இன்கம்-டாக்ஸ் கொடுக்காமல் இருந்தும், 5 லட்சம் சொச்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதிகமான சிப்பந்திகளை வைத்திருப்பதினால்தான் இந்த நஷ்டம் ஏற்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ற வருஷம் நஷ்டம் ஏற்படவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இந்தப் புள்ளி விவரம் எங்கிருந்து கிடைத்திருக்கிறது என்று தெரியவில்லை. இனிமேல் வருகின்ற நேஷனலைஸ்ட் டிரான்ஸ்போர்ட் மானியக் கோரிக்கை விவாதத்தில் இந்தக் கணக்குகளை எல்லாம் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[4th March 1963

திரு. ஆ. தங்கவேலு : ஸார், பிரேக்டவுனில் நிற்கும் தனியார் பஸ்களில் ஏற்படும் செலவு குறைவாகவும், அரசாங்க பஸ்களில் ஏற்படும் செலவு கூடுதலாகவும் இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றி அரசாங்கம் கவனித்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் செலவு செய்வதைப்பற்றி வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும். தனியார் செலவு செய்கின்ற விவரங்கள் சர்க்காருக்குச் சரியாகக் கிடைக்காது. சர்க்கார் செலவு செய்கின்ற புள்ளிவிவரங்களை மேஜைமீது வைக்கின்ற நேரத்தில் அதையும் தனியார் செலவு செய்கின்றதையும் பார்த்து எது கூடுதல் எது குறைவு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், சபை முன் வைக்கப்பட்டுள்ள 1962-63 ஆண்டு விவரங்களைப் பார்க்கும்போது வருமானம் 3 கோடி 40 லட்சம் ரூபாய் என்றும், வொர்க்கிங் எக்ஸ்பென்ஸஸ் என்ற இனத்தில் 3 கோடி 46 லட்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்க்கும்போது வருமானத்தில் 5 லட்சம் 86 ஆயிரம் குறைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் முன்பு சொன்னதைத்தான இப்போதும் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. சர்க்கார் பஸ்கள் நஷ்டத்தில் ஓடவில்லை. தனியார் நடத்தும் பஸ் போக்குவரத்தில் ஏற்படுகின்ற லாப நஷ்டக் கணக்குகள் நமக்குச் சரியாகக் கிடைப்பதில்லை. இப்போதுதுள்ள கேள்வி பிரேக்டவுன் பற்றியது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இந்த பிரேக்டவுன் ஆகும் பஸ்களில் சென்ற ஆண்டு நடந்த மறியல் போராட்டத்தின் காரணமாக சேதமடைந்த பஸ்களும் அடங்கியிருக்கின்றதா, அப்படியென்றால் எத்தனை பஸ்கள் அடங்கியிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவருக்கு பிரேக்டவுன் என்றால் என்ன அர்த்தம் என்பது புரியவில்லை என்று நினைக்கிறேன். அதாவது ஒரு பஸ் 30 நிமிட நேரம் மெக்கானிக் கோளாறினால் ஓடாமல் நின்று விட்டால் அதை பிரேக்டவுன் என்று நாங்கள் கணக்கெடுத்து வருகின்றோம். 30 நிமிட நேரம் நின்று 31-வது நிமிடத்தில் பழுது பார்த்து ஓட ஆரம்பித்துவிட்டாலும், பிரேக்டவுன் என்றுதான் கணக்கு வைத்துக் கொள்ள முடியும். இப்படி பிரேக்டவுன் ஆகி ஓடாமல் நின்ற பஸ்களின் விவரங்களைப்பற்றிதான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : சர்க்கார் பஸ் ஓட்டுகின்றவர்கள் சட்ட வரம்புகளையும் மீறி, மிக வேகமாக சென்னை நகரத்தில் ஓட்டிக் கொண்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

4th March 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருக்குத் தெரியாது. பஸ்கள் வேகமாக ஓடவில்லை என்கிற புகார் வந்து கொண்டிருப்பது தெரியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சில நேரங்களில் சில பஸ் ஸ்டாப்களில் க்யூ நிற்பது அடுத்த ஸ்டாப் வரை இருக்கிறது. இதைக் குறைப்பதற்குச் சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி க்யூ நிற்கவில்லை.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார் தனியார் துறையில் ஓடுகின்ற ஒவ்வொரு பஸ்ஸையும் எடுத்துப்பார்த்தால் இரண்டு, மூன்று வருடங்களுக்குமேல் வைத்திருக்காமல் வேறு புதிய பஸ்களை வாங்கி மாற்றி ஓட்டி வருகிறார்கள். அதே முறையில் அரசாங்கத் துறையில் அதிகம் செலவு செய்து பழுது பார்ப்பதற்குப் பதிலாகப் புதிய பஸ்களை வாங்கிப் போட்டு லாபகரமாக நடத்துவதற்கு அரசாங்கம் தனியார் பஸ்காரர்கள் கையாளும் கொள்கையைப் பின்பற்றுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் துறையில் இன்கம்டாக்ஸ்ஸைக் குறைவாகக் கட்டுவதற்காக அடிக்கடி பஸ்களை புதியதாக வாங்கி மாற்றி வருகிறார்கள். சர்க்கார் துறையில் அப்படிச் செய்தால் அது தேசத்திற்கே நஷ்டம். நம்முடைய பஸ்களை நல்ல முறையில் எவ்வளவு நாட்கள் ஓட்ட முடியுமோ அந்த அளவுக்கு ஓட்டினால்தான் நஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும். ஆகவே இவ் விஷயத்தில் தனியார் துறையில் கைப்பற்றுகின்ற கொள்கையைச் சர்க்கார் பரிபூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. மு. கருணாநிதி : வேலை முடிகிற நேரத்தில் பஸ் ஓட்டுகின்றவர்கள் வழியில் நிற்கும் பிரயாணிகளைக்கூட ஏற்றிக் கொள்ளாமல், கால் மணி, அரை மணி நேரம் இருந்தாலும்கூட முன்னதாகவே ஓட்டிச் சென்றுவிடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தெரியும், சாதாரணமாக இப்போது சர்க்கார் பஸ் போக்குவரத்தில், சென்னை நகரத்தில், லிமிடட் ஸ்டாப் சர்வீஸ் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்படி ஓடுகின்ற சில பஸ்கள் சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும்தான் நிற்கும். இதைப் புரிந்து கொள்ளாமல் பஸ் ஸ்டாப்பில் நிற்காமல் ஓட்டிவிடுகிறார்கள் என்று புகார் செய்கிறார்கள்.

Municipal bus-stands (Coimbatore district)

* 117 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state the names of the Municipal Town in Coimbatore district—

(i) with Municipal bus-stands; and

(ii) without Municipal bus-stands?

[4th March 1963

THE HON. SRI S. M. A. MAJID: (i) *Towns with Municipal Bus-stand—*

(1) Dharapuram.

(2) Erode

(3) Gobichettipuram.

(4) Mettupalayam.

(5) Tiruppur.

(6) Udamalpet.

(ii) *Towns without Municipal Bus-stand—*

(1) Coimbatore.

(2) Pollachi.

திரு. கே. ஏ. மதியழகன்: கோயம்புத்தூர் மாவட்டத்தில் முக்கியமாகப் பொள்ளாச்சி நகரத்தில் மட்டும் முனிசிபல் பஸ் ஸ்டாண்ட் அமையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

திரு. சே. ம. அ. மஜீத்: முனிசிபாலிட்டிக்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இதுவரை பதில் கிடைக்கவில்லை.

Pavement dwellers (night shelters)

* 118 *Q.*—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to construct night shelters for the pavement dwellers in Madras City and in the districts; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, in Madras City only.

(*b*) The Madras Housing Unit of the State Housing Board formulated a scheme for the construction of six blocks or night shelters at an estimated cost of Rs. 6,91,600 in Madras, in the lands owned by Military Department. As these lands had been proposed to be transferred to the State Government for expansion of a High School for Muslim Girls, the proposal was deferred. As soon as another suitalble site is selected, the construction of night shelters will be considered.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், நடைபாதையில் வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்து கொண்டு பிழைக்கிறவர்கள். உதாரணமாக ஹார்பர் பக்கத்தில் அதிகமான பேர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் ஹார்பரிலேயே வேலை செய்யவேண்டியிருப்பதால் அதன் பக்கத்திலேயேதான் வாழ்ந்தாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதைவிட்டு வீட்டு

4th March 1963]

வேறு ஒரு இடத்தில் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தாலும் அவர்கள் வேலை பார்ப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் வேலை செய்கின்ற இடத்திற்குப் பக்கத்திலேயே ஏதாவது இடங்கள் பார்த்து கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஹார்பருக்குப் பக்கத்தில் இடமே கிடையாது.

கனம் சபாநாயகர்: ஃப்ளோட்டிங் ஸிட்டி ஒன்று ஏற்படுத்தினால்கூட நன்றாக இருக்கும்.

திரு. கே. மூக்கையா தேவர்: ஸார், சென்னை நகரத்தில் எத்தனை பேர்கள் இம்மாதிரி நடைபாதையில் வசிக்கின்றனர்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சற்றேறக்குறைய 6,000 பேர்கள் இருந்தனர். இவர்களில் சுமார் 1,400 பேர்களுக்கு வீடுகள் கட்டி கொடுத்தாய்விட்டது. பாக்கியிருக்கின்றவர்களுக்கு வீடுகள் கட்டி கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. சி. பொன்னுசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது இருப்பதுபோக மேலும் இனிமேல் (நடைபாதையில் வசிப்பது) பேவ்மெண்டில் வசிப்பது கூடாது என்பதற்குச் சட்டம் ஏதாவது செய்யப்படுமா? இனிமேல் மேற்கொண்டு இருக்கும் 4,000 பேர்களுக்கும் அசோசியேட்டட் ப்ளாக் முறையில், அதாவது 100 பேர்கள் 200 பேர்கள் சேர்ந்து குடியிருக்கின்ற விதத்தில், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பாக்கியிருக்கின்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காகச் சென்னையில் பக்கத்தில் இரண்டு, மூன்று மைல் தூரத்திலாவது இடம் கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் ஸ்லம் க்ளியரன்ஸ் ஸிஸ்டம் பிரகாரம் வீடுகளைக் கட்டி, குறைந்த அளவில் அதாவது 3 ரூபாய் குடக்கூலியில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஹார்பர் பக்கத்தில் கட்ட வேண்டும் என்று சொன்னால் அங்கு இடம் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: சென்னையில் நடைபாதையில் குடியிருப்பவர்கள் சௌகரியத்திற்கு அரசாங்கம் இவ்வாறு வசதிகள் செய்கிறார்கள் என்று தெரிந்தால் மேலும் மேலும் மக்கள் கிராமப்புறங்களிலிருந்து குடியேறி இந்தச் சௌகரியங்களை அடைய வேண்டும் என்று முன்வருவதற்கு உற்சாகத்தை உண்டு பண்ணுவதாக ஆகாதா? இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைத் தடுப்பதாக சர்க்காருக்கு உத்தேசம் இல்லை. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் நகரங்களுக்கு வந்து நல்ல வாழ்க்கை நடத்த முடியுமானால்

அவர்கள் நல்ல வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது சர்க்காருடைய லட்சியம். வீடுகள் எல்லாம் கட்டிக் கொடுத்து, எவ்வளவு வசதி செய்ய முடியுமோ அதைச் செய்யப் போகிறோம்.

திரு. கே. மூக்கையா தேவர் : தற்போதைய நிலையில் வாழ்க்கைத் தரம் குறைவுபட்டு, விவசாயிகளாக இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் கிராமங்களை விட்டுப் பாதசாரிகளாக நகரப்புறங்களை நோக்கி வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லுகிற அளவுக்கு நான் ஒத்துக்கொள்கிறேன். அதே மாதிரி நகரப் புறங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகிற காரணத்தினால் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கும் என்று உத்தேசித்துங்கூட கிராமங்களிலுள்ள ஜனங்கள் வேலை கிடைக்கும் நகரங்களை நோக்கி வருகிறார்கள். இதற்காக முன் கூட்டியே திட்டங்களைப் போட்டு ஏற்பாடு செய்ய முன் வருவார்களா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் என்ன கேள்வி கேட்கிறார்கள் ? அவர்கள் இப்போது ஸ்பீச் அல்லவோ செய்கிறார்கள் ?

திரு. கே. மூக்கையா தேவர் : இதற்காக முன் கூட்டியே, கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி, நகரங்களில் . . . .

MR. SPEAKER : Let the hon. Member, Sri K. Mookiah Thevar state what the question is.

திரு. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி வரக் கூடியவர்கள் அதிகரிப்பார்கள் என்று தெரிகிற காரணத்தினால், முன் கூட்டியே . . . .

கனம் சபாநாயகர் : தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்கிறார்களா கனம் அங்கத்தினர் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நகரங்களுக்கு மக்கள் வருவது பிழைப்புக்காக. பிழைப்பு இருக்கும் இடத்திற்கு வருவதைத் தடுக்கக்கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம்.

திரு. கே. மூக்கையா தேவர் : தடுக்கச் சொல்லவில்லை. வரத்தான் செய்வார்கள். அப்படி வருவார்கள் என்ற காரணத்தினால் முன் கூட்டியே . . .

கனம் சபாநாயகர் : முன் கூட்டியே கட்டிடங்களைக் கட்ட சொல்லுகிறார்களா கனம் அங்கத்தினர் ?

திரு கே. மூக்கையா தேவர் : கட்டிடங்களைக் கட்டச் சொல்லவில்லை. அதற்காகத் திட்டம் போடச் சொல்லுகிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்கம் கட்டியிருக்கக்கூடிய வீடுகளில் குடியிராமல் எத்தனை வீடுகள் இருக்கின்றன ? அந்த வீடுகளில் இப்பேர்ப்பட்ட நடைபாதைவாசிகளைக் குடி வைக்க அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் சபாநாயகர் : ஷேப்ரீ ஆகவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் கட்டிய வீடுகளில் சென்னையில் ஒன்றுகூட காலி இல்லை. கிடைக்கவில்லை என்ற மனுக்கள்தான் ஏராளமாக இருக்கின்றன.

Iron ores (Dharamapuri taluk)

* 121 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any survey for iron ores was conducted in the year 1961 in Ekkalgattu near Raja Collahally in Dharmapuri taluk; and

(b) if so, the result thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) : No investigation for iron ore in the aerea was carried out by the Geological Survey of India in 1961. The area in question was mapped by the Geological Survey of India during 1957-58, no occurrence of iron ore was recorded.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : இந்த ஏரியாவில் இரும்பு இருக்கும் என்று நினைப்பதால், இந்த ஏரியாவைச் சர்வே செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜியலாஜிகல சர்வே பண்ணினார்கள் 1957-58-ம் ஆண்டில். இங்கு இரும்பு இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : செங்கற்பட்டு மாவட்டத்தில், திருக்கழுக்குன்றம் அருகில் இரும்பு கனி கிடைப்பதாகச் செய்தி வந்ததே, அதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்து பார்த்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட வேண்டும். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் ஜியலாஜிகல் சர்வேயில் கீழே பூமியைத் தோண்டிப் பார்ப்பது என்பது ஒன்று. அவுட்க்ராப் என்று மேலே இருக்கக்கூடிய கற்களை வைத்து ஒரு இடத்திலே என்னென்ன கனிப் பொருள்கள் இருக்கும் என்று ஆராய்சி செய்வது ஒன்று. இப்போது நடந்திருப்பது மேலெழுந்த ஆராய்ச்சிதான்.

Soil Conservation Scheme

* 122 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the percentage of contribution paid to the agriculturists by the Government under the soil conservation scheme?

THE HON. SRI P. KAKKAN : A subsidy of 25 per cent of the cost in the case of soil conservation works in the plains and a subsidy of 50 per cent of the cost in the case of soil conservation works in hills, is allowed to the agriculturists.

சமவெளிகளில், மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு ஆகும் செலவில் 25 சத விதமும், மலைப்புறங்களில், மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு ஆகும் செலவில் 50 சத விதமும் விவசாயிகளுக்கு இனமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

MR. SPEAKER: Question are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64—*cont.*

* திரு. ரா. சுப்பிரமணியன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த வருஷம் ரெவின்யூக் கணக்கில் 124 கோடியே 45 லட்சம் ரூபாய் வருவாய் ஆகவும், 127 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவு ஆகவும் அவர்கள் திட்டமிட்டு பற்றுக்குறையாக 2 கோடியே 74 லட்சம் ரூபாய் இருக்கிறது. இப்படி இருந்த போதிலும்கூட வரக்கூடிய ஆண்டில் மத்திய சர்க்கார் விதிக்கக் கூடிய விற்பனை வரி மூலமாகவும், நம்முடைய சர்க்கார் போட்டிருக்கக் கூடிய வரிகள் அடுத்த ஆண்டில் நமக்கு வந்து சேரக் கூடிய முறையிலும், நமது இந்தப் பற்றுக் குறையைச் சரிகட்ட முடியும் என்று நான் நினைக்கிறேன். சாதாரணமாகப் பார்த்தால் நம்முடைய வரி வருவாய்களைக்கூட சில இனங்களில் மிகவும் குறைவாகவே மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வருஷம் நிலவரி அதிகமாக உயர்ந்திருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பார்க்கும்போது, நில வரியில் சென்ற ஆண்டு என்ன போட்டிருந்தோமோ அதைத்தான் வரக்கூடிய ஆண்டிலும் வரும் என்று நாம் கணக்குக் கொடுத்திருக்கிறோம். அதன் மூலமாக கண்டிப்பாக 1 கோடி ரூபாய்க்குமேல் அதிகமாக வரும் என்று எதிர் பார்ப்பதால் வரக் கூடிய ஆண்டில் இந்தப் பற்றுக்குறையைச் சரிகட்டுவதில் எந்த வித கஷ்டமும் இருக்காது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும்கூட வழிவகை நிதி நிலை நமக்குத் திருப்திகரமாக இல்லை. அத்துடன்கூட திட்டச் செலவுக்கும் மத்திய சர்க்கார் கொடுக்கக் கூடிய பணத்தில் அடுத்த ஆண்டில் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் குறைவாகவே கிடைக்கவிருக்கிறது. அப்படி இருந்தாலும் கூட நமது திட்டச் செலவில் இந்த ஆண்டை விட வரக்கூடிய ஆண்டில் 1½ கோடி ரூபாய் அதிகமாகவே நாம் செலவழிக்க இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் கூட நாம் இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்ப்போமானால், இந்த அதிகப்படியான பணம் உண்மையாக நல்ல விதமாகச் செலவழிக்கப்படும் வகையில் ராஜ்ய பந்தோபஸ்தைப் பொறுத்த வரையில் விவசாயம், மின்சாரம், தொழில் நுட்பக் கல்வி, சிறு பாசன வசதி இவைகளுக்கு அதிகமாக ஒதுக்கி நல்ல வகையில் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதை எல்லோரும் ஒரு முகமாக வரவேற்கவேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நீண்ட நாள்

அனுபவத் திறன் அனைத்தையும் செலுத்தி இதைத் தயாரித்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். இது ஒரு வெல்-டாலென்ஸ்ட் பட்ஜெட் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். இந்தச் சபையில் உள்ள அத்தனை பேரும் இந்த பட்ஜெட்டை ஒரு முகமாக வரவேற்க வேண்டும். நிலைமை இவ்வாறு இருக்க சில எதிர்க் கட்சி அன்பர்கள் குற்றம் குறைகள் கண்டுபிடிப்பது போன்று எதையாவது சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் இதில் மக்கள் தாங்கமுடியாத அளவுக்கு ஏற்கெனவே வரி போட்டு விட்டார்கள். ஆகையால்தான் புது வரிகள் போடவில்லை என்று சொல்லுகிறார்கள். 'நீங்கள் போடாவிட்டால் என்ன, மத்திய சர்க்காரில் நிறையப் போட்டிருக்கிறார்கள்' என்று உண்மையில் நான் சொல்லுகிறேன். சாதாரணமாக வாயில் அவல் இருந்தால் வாயை மெல்லவேண்டும்; அப்படியில்லாமல் அவல் இல்லையென்றாலும் வெறும் வாயை மென்றாக வேண்டும் என்ற அந்த வகையில் எதையாவது சொல்லுகிறார்கள். குற்றம் ஏதாவது கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். ஓநாய் சிறிய ஆட்டுக்குட்டியைப் பார்த்து, 'நீ பிறப்பதற்கு முன்னால் உன் தாய் என்னைத் திட்டியது' என்று சொல்லி வம்புக்கு இழுப்பது மாதிரி எதையாவது சொல்லுகிறார்கள். வரியை மத்திய சர்க்கார் போடுகிறார்களே என்று சொல்லிக் கொண்டு ஏதோ இந்தச் சர்க்காரிடத்தில் குறைகளைச் சொல்லுகிறார்கள். உண்மைகள் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும் என்றால் அங்கு அவர்கள் மெம்பர்களிடத்தில் சொல்லி நீங்கள் எதிர்த்துப் பேசவேண்டும் என்று பார்லிமெண்டில் குரலை எழுப்பினால் மிகவும் நலமாக இருக்கும். அங்கு போட்டதற்கு நீங்கள் ஜவாப் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக மூன்றாவது திட்டத்தில் நாம் அதிகப்படியாக 17 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யவேண்டுமென்பது நம்முடைய குறிக்கோள். மூன்றாவது திட்டத்தின் முதல் ஆண்டில் 2.64 லட்சம் டன்தான் அதிகமாக உற்பத்தி செய்திருக்கிறோம். இரண்டாவது ஆண்டில் நாம் அதிகமாக 4.85 லட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய முடியுமா என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. ஏனென்றால், இந்த வருஷத்தைப் பொறுத்த வரையில், நாம் எவ்வளவு அதிகமாக விளைச்சல் அடைய முடியும் என்பதைப்பற்றி நிதி நிலை அறிக்கையிலும் சொல்லப்படவில்லை. ஏன் அதை நான் சொல்லுகிறேன் என்றால் இந்த வருஷத்திய மகசூல் சென்ற வருஷத்தைவிட 25 சத விகிதம் கண்டிப்பாகக் குறைவாக இருக்கிறது. உண்மை இவ்வாறு இருக்க, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யக்கூடிய காலத்தில் ஆபீசர்கள் அவர்களிடம் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்துவிடுகிறார்கள். கனம் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள்கூட தஞ்சாவூர் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்ட பிற்பாடு அங்கு பேசும்பொழுது இந்த வருஷம் தஞ்சாவூர் ஜில்லாவில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு வந்ததாகப் பேப்பரில்கூடப் பார்த்தேன். உண்மைக்குப் புறம்பாக ஏதாவது ஆபீசர்கள் அவர்களிடம் சொல்லிவிடுவ

[திரு. ரா. சுப்பிரமணியன்] [4th March 1963

தால் அதைப் பேப்பரில் பார்க்கும்பொழுது, 'விளைச்சல் குறைவாக இருக்கும்பொழுது அமைச்சர் அவர்களே இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறார்களே' என்று 7, 8, 10 பேர்கள் என்னைக் கேட்டார்கள். யாராவது அதிகாரிகள் சொன்னார்களோ என்னவோ, எப்படியோ அந்தமாதிரிச் செய்தி அமைச்சர் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது என்று நான் அவர்களுக்குச் சமாதானம் சொன்னேன். ஆபீசர்கள் இம்மாதிரி தவறான புள்ளிவிவரங்களைச் சொல்லிவிடுகிறபடியால், அது உண்மைக்குப் புறம்பான விஷயமாக இருக்கும்பொழுது உண்மையிலேயே அது வருத்தத்தைக் கொடுக்கிறது என்பதைத் தான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாம் இப்பொழுது விவசாயத்திற்காகச் செலவழிக்கக்கூடிய பணத்தையும், அதற்காக நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய சிரத்தையையும் அடிப்படையாக வைத்துப் பார்ப்போமானால், விவசாயம் இன்னும் நல்ல முறையில் வளர்ந்து வந்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது பார்த்தால் நிலைமை அந்தவிதமாக இல்லை. காரணம், விவசாயிகளுக்குப் போய்ச் சேரக்கூடிய உரமும், பணமும் காலாகாலத்தில் போய்ச் சேரவில்லை. அம்மாதிரி காலாகாலத்தில் போய்ச் சேருவதுதான் மிகவும் முக்கியம். இப்பொழுது விவசாயத் துறையில் நாம் ஏராளமாகப் பணத்தைச் செலவழிக்கிறோம். விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறோம். அந்த வசதிகளும், பணமும் அவர்களுக்குக் காலாகாலத்தில் போய்ச் சேர்ந்தால், இன்னும் நல்ல விதமாக விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு ஊக்கம் ஏற்படும். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை காலம் கடந்து செய்து கொடுத்தால், அதனால் எந்தவிதமான பலனும் ஏற்படாது. அத்துடன்கூட ஆபீசர்கள் புள்ளிவிவரங்களைக் கொடுக்கும்பொழுது உண்மையான புள்ளி விவரங்களையே கொடுக்கவேண்டும். மேலதிகாரிகளையும், சர்க்காரையும் திருப்திப்படுத்துவதற்காக வருஷத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புள்ளி விவரங்களை ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. அம்மாதிரி செய்தால் அதனால் நமக்கு எந்த விதமான பலனும் உண்டாகாது. நமது தேசிய வருமானத்தில் பாதிக்குமேல் இந்த விவசாய வருமானத்திலிருந்து வருகிறது. இவ்வளவு அதிகமாக வருமானம் வரக்கூடிய துறையில் நாம் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்துக்கொண்டு போவோமானால், அது நம்மை எதிர்பாராத ஒரு பள்ளத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினால் அம்மாதிரி விஷயங்களையெல்லாம் நன்றாக ஆராய்ந்து நமக்குத் தெரிவிப்பதற்காக ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டால் மிகவும் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். விவசாயத் துறையில் நாம் செலவழிக்கக்கூடிய பணம், செய்துகொடுக்கக் கூடிய மற்ற வசதிகள் இவைகளெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறதா, நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கும், அத்துடன்கூட புள்ளிவிவரங்கள் எந்த அளவுக்கு உண்மையானவை என்று கண்டுபிடிப்பதற்கும் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டுக் கண்டுபிடித்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

4th March 1963] [திரு. ரா. சுப்பிரமணியன்]

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு எதிர்பாராத நஷ்டம் ஏற்படும்பொழுது, அவர்கள் ஆதரவற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். உதாரணமாக, இந்த வருஷ நிலைமையைப் பார்த்தால், எலி, பூச்சி இவைகளின் தொந்தரவினாலும், பருவ மழை காலம் தவறி பெய்ததன் காரணத்தினாலும் 25 சதவிகிதத்திற்கு மேல் விளைச்சல் குறைவாக இருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட அவர்கள் எந்தவிதமான ஆதரவும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஏதோ பயிர்கள் கெட்டுப் போய்விட்டன என்றால், அதைப்பற்றி ஒன்றும் பேசாமல், மௌனமாகவே இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நாம் தக்க நிவாரணம் அளிக்க வேண்டும். அவ்வாறு நிவாரணம் அளிப்பதற்கு 'கிராப் இன்ஷூரன்ஸ் ஸ்கீம்'மை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அவ்வாறு கொண்டு வராமல் இருப்பதனால், அவர்கள் வேறு எந்தவிதமான ஆதரவும் இல்லாதவர்களாக மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நெல் விலையைப் பொறுத்தவரையில் விலைச் சரிவு என்று சொல்லுவதற்கு நான் பிரியப்படவில்லை. இருந்தாலுங்கூட, சென்ற வருஷம் நெல் விலை விற்றதைவிட, இந்த வருஷம் 1½ மணங்கு மூட்டை, ரூ. 4 குறைவாக விற்கிறது. எங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில், சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 5 மூட்டை நெல்லாக விலைக்கு விற்பார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் ஏக்கருக்கு 5 மூட்டை என்று வைத்துக் கொண்டால், 14 லட்சம் ஏகரா நிலங்களுக்கு 70 லட்சம் மூட்டை விற்பனை ஆகிறது. சாதாரணமாக மூட்டை ஒன்றுக்கு ரூ. 4 விலை குறைவாக இருக்கிறது என்றால், ரூ. 2 கோடி 80 லட்சத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அந்த ரூ. 2 கோடி 80 லட்சம் நஷ்டத்தோடு குறைந்த விளைச்சலினால் ஏற்படக்கூடிய இன்னொரு ரூ. 2 கோடி 80 லட்சம் நஷ்டத்தையும் சேர்த்துப் பார்த்தால், ரூ 5 கோடிக்குமேல் தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இவ்வளவு பெரிய நஷ்டத்தை சாதாரண விவசாயிகளால் தாங்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், 'பிரைஸ் ப்ளக்சுவேஷனை' அதன் இஷ்டத்திற்கு விட்டுவிட்டால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகையால் நெல்லுக்கு ஏதாவது குறைந்த பட்ச விலையைக் கண்டிப்பாக நிர்ணயித்துதான வேண்டும். இப்பொழுது ஆகக்கூடிய சாகுபடிச் செலவு, மற்ற செலவுகளையும் அனுசரித்து நாம் நெல்லுக்கு விலை நிர்ணயிக்க வேண்டும். ஒன்றரை மடங்கு மூட்டை விலை சாதாரணமாக ரூ. 20-க்குக் குறைவாக இருந்தால் கட்டுபடி ஆகவே ஆகாது. இதை சர்க்கார் நன்றாக மனதில் வைத்து, 1½ மணங்கு மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாய்க்குக் குறையாமல் குறைந்த பட்ச விலையை நிர்ணயித்தால், ஓரளவுக்கு விவசாயிகளுக்கு நலன் ஏற்படும். இப்பொழுது உள்ள நிலைமையை நீடித்துக் கொண்டு போனால், விவசாயிகள் கையில்தான் மேலும் மேலும் கஷ்டங்கள் கூட நேரிடும். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கப்

[திரு. ரா. சுப்பிரமணியன்] [4th March 1963

போனால், கிராமப் புறங்களில் 'ரூரல் இண்டெட்டெட்நெஸ்' அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாகவும், விலைக் குறைவின் காரணமாகவும் விவசாயிகளுக்குச் சர்க்கார் கொடுத்திருக்கக் ஏற்படுத்த வேண்டும். அத்துடன்கூட நான் சொல்லிக்கொள்ள என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஆகையினால் இவைகளையெல்லாம் நாம் சர்வே செய்ய வேண்டும். அம்மாதிரி சர்வே செய்து 'ரூரல் இண்டெட்டெட்நெஸ்' எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடித்து, அதற்குத் தக்க நிவாரணம் அளிக்க நாம் முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நில உச்ச வரம்புச் சட்டம் இப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பப்ளிக் டிரஸ்டு ஆக்ட் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வர இருக்கிறது. அதன் மூலம் கிடைக்கக்கூடிய நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து, கோவாபரேடிவ் பார்மிங்கை நாம் ஏற்படுத்த வேண்டும். அத்துடன்கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், ஆங்காங்கு கிராமங்களில் 5 ஏகர் வைத்திருந்தாலும் சரி, 10 ஏகர் வைத்திருந்தாலும் சரி, அல்லது 30 ஏகர் வைத்திருந்தாலும் சரி, அந்த நிலங்கள் சிதறிக் கிடக்கின்றன. ஆகையினால், 'கன்ஸாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ்' கண்டிப்பாக ஏற்படுத்த வேண்டும். உச்ச வரம்புச் சட்டத்திற்கு அடுத்தபடியாகக் 'கன்ஸாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ்' கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எதுவும் இல்லை. எனினும் இருக்கக்கூடிய பாசன வசதிக்குத் தடையில்லாது பார்த்துக் கொள்ளவேண்டும். காவேரி-மேட்டூர் ப்ராஜெக்ட் கெனாலைப் பொறுத்தவரையில் கடைக் கோடியில் இருப்பவர்களுக்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஸீபேஜ் வாடர் நிறையப் போய்விடுகிறது. அத்துடன்கூட காவேரியும், அதன் கிளை நதிகளும் மேடிட்டுப் போயிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கரைகளும் சரியாக இல்லை. ஆகவே ஸி.எம்.பி. கனாலைப் பொறுத்தவரையில் முழுவதும் சிமெண்டு லைனிங் கொடுக்க முடியுமா என்பதை யோசித்துச் செய்யவேண்டும். அத்துடன்கூட காவேரியிலும், அதன் கிளை நதிகளிலும் மேட்டுப் பகுதிகளில் மண் தூர் வாரவேண்டும், கரைகளையும் பலப்படுத்தவேண்டும். குறிப்பாக வெட்டாறு சுள்ளநாறு வெள்ளம் வந்த காலத்தில் எந்தெந்த வழியாக ஓடியதோ அந்த அந்த இடங்களிலெல்லாம் உடைப்பு ஏற்பட்டது.
9-00 a.m. அவைகளில் இன்னும் கரைகள் சரியாகப் பலப்படுத்தப்படவில்லை. ஆகையினால் கனம் அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால்கள் வெட்டும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்திருக்கிறோம். சென்ற ஆண்டில் பாபநாசம், கீவளூர் ஆகிய இரண்டு பஞ்சாயத்து

4th March 1963] [திரு. ரா. சுப்பிரமணியன்]

யூனியன்களில்தான் இந்த வேலையைச் செய்தார்கள். ஏதோ ஓரளவு பணக் கஷ்டத்தோடுதான் அதைச் செய்து முடித்திருக்கிறார்கள். மற்ற எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் இப்படிச் செய்ய வேண்டுமென்றால், பணக் கஷ்டம் அதிகமாக இருப்பதால் சரியான முறையில் செய்ய முடியவில்லை. ஆகவே அந்த யூனியன்களுக்குப் போதுமான பண வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. எ. சுவாமிதாஸ்: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நமது நிதி அமைச்சர் அவர்கள் நன்றாகச் சிந்தித்து, எந்த அளவு நல்ல முறையில் அமைக்க முடியுமோ, அந்த அளவிலே அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக கனம் அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நெருக்கடியான நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு அதிகப்படியான வரிப் பளுவை பொது மக்கள் மீது சுமத்தி யிருக்கிறது. ஆனால் மாநில அரசோ எந்த விதமான வரியையும் சுமத்தவில்லை. அதன் காரணமாக மாநில அரசின் நிதிநிலை அறிக்கை பொது மக்களுக்கு ஓரளவு நிம்மதியைக் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம். இது ஆங்கிலத்திலே "The last straw on the camel's back" என்று சொல்வதைப் போல் இருக்கிறது. அதாவது, ஒட்டகத்தின் மீது பளுவை ஏற்றிவிட்டு, அந்தப் பளுவின் சுமையை அது அதிக அளவுக்கு உணராமல் இருக்கவேண்டும் என்பதற்காக, இறுதியாக அந்தச் சுமையிலிருந்து ஒரு வைக்கோலை எடுத்து விடுவார்கள். அப்படி எடுத்துவிட்டால் அந்த ஒட்டகத்திற்கு அந்தப் பளுவானது அதிகப் பாரமாகத் தோன்றாது என்று நினைத்து அவ்வாறு செய்வார்கள். அதைப் போலத்தான் இந்த மாநில மக்களும் வரி விதிக்கப்படவில்லை என்று ஓரளவு நிம்மதி அடைந்துள்ளார்கள். மத்திய அரசின் வரிப் பளுவினால், பொது மக்கள் சில அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியாமல் இருக்கிறார்கள். வியாபாரிகள் பதுக்கி வைப்பதன் காரணமாகவோ, அல்லது உற்பத்தியாகாததன் காரணமாகவோ, மண்ணெண்ணெய் போன்ற சில பொருள்களை அவர்கள் வாங்க முடியவில்லை. இதை மாநில அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நெருக்கடியான நிலையில், மத்திய அரசு நமக்கு உதவித் தொகையாகக் கொடுக்க வேண்டிய மொத்த தொகையில் ரூ. 4 கோடியைக் குறைத்திருக்கிறது. அப்படி இருந்தும், நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டை நல்ல முறையில் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே கல்விக்காகக் கூடுதல் தொகை ஒதுக்கியிருப்பதை நாம் எல்லோரும் பாராட்ட வேண்டும். சென்ற ஆண்டு ரூ. 25 கோடி ஒதுக்கியிருந்தார்கள். ஆனால், இந்த ஆண்டில் நெருக்கடி நிலைமை இருந்தபோதிலும்,

மத்திய அரசு ரூ. 4 கோடியைக் குறைத்திருந்த போதிலும், கல்விக்காக ரூ. 27.58 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அதையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், தொழில் வளர்ச்சி, மின்சாரம், இவற்றிற்காகவும் அதிகத் தொகை ஒதுக்கி, நமது மாநிலத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலும், தொழில் வளத்தை அதிகப்படுத்துவதிலும், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதிலும் அதிக அக்கறை காட்டியிருக்கிறார்கள். இது தென்னகம் முன்னேறுவதற்கு ஒரு நல்ல அறிகுறியாகும். ஆனாலும், இந்த மாநிலத்திலேயும்கூட வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது என்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாங்கள் எண்ண வேண்டிய நிலையில் இருக்கிறோம். தொழில் அபிவிருத்தியைப் பொறுத்த வரையில், எங்கள் மாவட்டம் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. சென்னை மாநிலத்திலே வடக்கில் இருக்கும் மாவட்டங்களில் எல்லாம் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். தெற்கில் இருக்கும் மாவட்டங்களிலே அதிக அளவு தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. நேற்று முன்தினம் பேசிய மதுரையைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் ஒருவர் இதை நன்கு எடுத்துச் சொன்னார்கள். மதுரையில் கல்லூரி அமைக்க வேண்டும், தொழிற்சாலைகள் அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் அவ்வாறேதான் சொல்லுகிறார்கள். சென்னை மாநிலத்திலே, வடக்கு வாழ்ந்து கொண்டு வருகிறது, தெற்குத் தேய்ந்து கொண்டு வருகிறது என்பதைத் தெற்கு மாவட்டங்களில் உள்ளவர்கள் உணர்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, தெற்குப் பகுதியும் வாழ்வதற்கு அடிகோல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே பல சிறிய அணைக் கட்டுகளைக் கட்டப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், சிற்றாறு-பட்டணங்கால் திட்டத்தை இன்னும் ஆரம்பிக்கவில்லை. பட்ஜெட்டில் எவ்வளவுதான் திட்டங்களைப் போட்டிருந்தாலும், போட்ட திட்டங்கள் அந்த ஆண்டுக்குள்ளேயே நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை நாம் கவனிக்க வேண்டும். சென்ற ஆண்டு அறிக்கையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் மீன் பிடித் துறைமுகம் ஒன்று குளச்சலிலே அமைக்கப்படுமென்று அறிவித்தார்கள். ஆனால் இதுவரையிலும் அதை அமைப்பதற்கு எந்தவிதமான வேலையையும் செய்யவில்லை. குளச்சலிலே ஒரு ஆஸ்பத்திரி நிறுவுவதற்குத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கான நிலத்தைகூட இன்னும் ஆர்ஜிதம் செய்யவில்லை. பட்ஜெட்டிலே பல திட்டங்களைப் போட்டு அவைகளுக்குப் பணம் ஒதுக்கியிருந்தும், அந்தந்த ஆண்டிலேயே அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றனவா என்பதை சர்க்கார் நன்கு கவனிக்க வேண்டும். சென்ற ஆண்டிலே பட்டணங்கால் திட்டத்திற்காக கிட்டத்தட்ட ரூ. 2¾ கோடி ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் பூர்

வாங்க வேலைகளைக்கூட இன்னும் செய்து முடிக்கவில்லை. ஓர் ஆண்டு காலம் ஆகிவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளதான் இருக்கின்றன. இதையெல்லாம் அரசு நன்கு கவனித்து, பட்ஜெட்டில் தீட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் அனைத்தும் குறிப்பிட்ட கால அளவில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். அப்படி அவைகள் முடிவு பெறாமல் இருந்தால், அவற்றை விரைவாக முடிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றை எடுத்து, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொரு விஷயத்தையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். தென் மாவட்டங்களில் வாழ்கிற மககள் ஹைக்கோர்ட்டில் ஏதாவது வழக்குத் தொடர வேண்டுமென்றால், அதற்கு நீண்ட தூரம் சென்னைக்கு வந்து காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 500 மைல் தூரம் வர வேண்டியிருக்கிறது. ஆகவே ஹைக்கோர்ட்டின் ஒரு பெஞ்சை மதுரையில் அமைத்தால், கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். இதை மனதில் வைத்துக்கொண்டு, ஹைக்கோர்ட்டின் ஒரு பெஞ்சை மதுரையிலே அமைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரயில் வசதியைப் பொறுத்த வரையில், கன்னியாகுமரிக்கு ரயில் பாதை வேண்டுமென்று விரும்புகிறவர்கள்தான் இந்தச் சபையிலே நிறையப் பேர் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் கன்னியாகுமரிக்கு இன்னும் ரயில் பாதை போடப்படவில்லை. ஒரு சில மாதங்களுக்கு முன்பு எங்கள் மாவட்டத்திற்கு வந்திருந்த மத்திய அமைச்சர் கனம் டி. டி. கே. அவர்கள், 'ரயில் பாதை வேண்டுமென்றால் சென்னை அரசு, மத்திய அரசை வற்புறுத்த வேண்டும், வற்புறுத்திக் கேட்டிருந்தால் இதற்குள்ளாக ரயில் பாதை வந்திருக்கும், அப்படி வற்புறுத்தாத காரணத்தினால்தான் ரயில் பாதை இன்னும் வரவில்லை' என்று குறிப்பிட்டார்கள். ஆகவே சென்னை அரசு, மத்திய அரசை வற்புறுத்தி இந்த ரயில் பாதையை அமைக்க வேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் கடன் வசதி பெறுவதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வசதிகள் செய்து கொடுத்திருந்த போதிலும்கூட, தங்கக் கட்டுப்பாட்டினால் அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். பயிர் செய்யும் காலங்களில் ஏதாவது பணம் தேவைப்பட்டால், தங்களிடமுள்ள நகைகளை ஈடு வைத்து, பணம் திரட்டி, விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாக இப்பொழுது நகைகளை ஈடு வைத்துப் பணம் திரட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே எளிதான முறையில் எந்தெந்த வகையில் அவர்களுக்குக் கடன் கொடுக்கமுடியுமோ, அவற்றைச் சிந்தித்துப் பார்த்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ, அல்லது பஞ்சா

[திரு. எ. சுவாமிதாஸ்] [4th March 1963

யத்து யூனியன்கள் மூலமாகவோ அவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுத்து உதவினால்தான் விவசாயிகள் தாங்கள் மேற்கொண்டிருக்கிற தொழிலிலே அதிகக் கவனம் செலுத்த முடியும். இன்று நாம் சிந்தித்துப் பார்த்தால், அரசு விதிக்கும் எல்லா வரிகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, விவசாயிகள் மேல்தான் விழுந்து கொண்டிருக்கின்றன. நம் மாநிலத்திலுள்ள மீனவர்களையும், நெசவாளர்களையும், இன்னும் பல தரப்பினரையும் கைதூக்கி விடுவதைப் போலவே, விவசாயிகளையும் கவனிக்கவேண்டும். எந்தெந்த வழிகளில் அவர்களுக்கு வாட்டம் நேரிட்டாலும், அவற்றைக் கவனித்து, அவர்களைக் கைதூக்கிவிட அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, புது வரிகள் எதுவும் விதிக்காது தயாரிக்கப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையை நான் மட்டுமல்லாமல், இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

சமீபத்தில், நிலவரி, நீர்வரி இவைகளுக்கெல்லாம் விதிக்கப்பட்டு விட்டன என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இவையெல்லாம் கடந்த ஆண்டு அறிக்கையில் உள்ளது என்பதையும், அதைப்பற்றி நாம் விவரமாக விவாதித்துவிட்டோம் என்பதையும், அதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டிருப்பதாவது பேசுவதற்கு எதுவும் இல்லாத நிலையில் சொல்வதாகக் கருதப்படுமே தவிர, வேறு ஒன்றுமில்லை என்பதையும் நான் இங்கே ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

நாட்டின் அவசர நிலைமை காரணமாக நமது மாநிலச் சர்க்கார் நல்ல பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமத் தொண்டர் படைகளை அமைத்து, அதன் மூலம் நாட்டிலுள்ள வாலிபர்களுக்கு ஒரு உணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார்கள். ஊர்க் காவல் படை அமைத்ததன் மூலமாக நாட்டு மக்களுக்கு ஏதாவது அவசர நிலைமை ஏற்பட்டாலும்—ஒரு பாதுகாப்பு இருக்கும் என்ற ஒரு நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். தேசிய மாணவர் படையை அதிகமாக உண்டாக்கி அதிலும் ஒரு முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். இன்னும் நாட்டுக்குப் பாதுகாப்பான நல்ல பல காரியங்களை நமது மாநிலச் சர்க்கார் செய்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இந்த அறிக்கையில்கூட அதிகப்படியான தொகையை அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகத்தான் நாம் உணவுப் பற்றாக் குறையைப் போக்கித் தன்னிறைவு பெற முடியும் என்ற காரணத்தில் மூன்றாவது திட்டத்தில் 17 லட்சம் டன் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். இதற்கு முன் ஆண்டிலும் நல்ல அறிகுறி இருந்து வருகிறது. இந்த

4th March 1963] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

ஆண்டிலும் ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் நோயினால் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பொதுவாக உணவு உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை. கிணறு வெட்ட மானியம் கொடுத்து, பம்ப் செட் வைக்கக் கடன் கொடுத்து, ரசாயன உரங்கள் நல்ல முறையில் இந்த ஆண்டில் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து வந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டில் இருந்த கஷ்டம் ரசாயன உரத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டில் இல்லாமல் இரண்டு லட்சம் டன்னுக்கு மேற்பட்ட ரசாயன உரத்தை விநியோகம் செய்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு இன்னும் அதிகப்படியாக விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நல்ல பல காரியங்களினால் உணவு உற்பத்தி பெருக்குவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இன்னும் எவ்வளவோ தரிசு நிலங்கள் இருக்கின்றன. சர்க்காருக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்குப் பாத்தியப்பட்ட நிலங்களும் இருக்கின்றன. அந்த நிலங்களில் பெரும் பகுதி குறைந்த விலையுள்ள நிலங்கள் தான். எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் ஒரு ஏக்கர் பத்து முதல் நூறு ரூபாய் விலையுள்ள நிலங்கள் பல தரிசாகக் கிடக்கின்றன. எத்தனையோ ஏழை விவசாயிகள், ஹரிஜனங்கள், பிற்பட்டவர்கள் விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லாமலிருக்கிறார்கள். சர்க்கார் நிலத்தை ஏழைகளுக்கு எப்படியெல்லாம் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்து விட்டார்கள். கொடுத்துக் கொண்டும் வருகிறார்கள். ஆனால், தனிப்பட்டவர்களுக்குப் பாத்தியப்பட்ட நிலங்கள், ஒருவருக்கே நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் வீணாகத் தரிசாகக் கிடக்கின்றன. அதிலே அவர்களும் அனுபவிக்காமல், அதிலே உணவு உற்பத்தியை உண்டாக்காமல் இருக்கும் நிலங்களை ஏழைகளுக்கு, விவசாயம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கிறவர்களுக்கு, குறைந்த விலையில் வாங்கிக் கொடுத்து, அவைகளில் கிணறு போட்டுக் கொடுத்து விவசாய உற்பத்தியை இன்னும் அதிகமாகச் செய்ய முடியுமா என்பதை இந்தச் சர்க்கார் பரிசிலனை செய்யலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிறிய பாசனத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியன்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, இந்த ஆண்டு அதற்காக 27 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் தொகை போதாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு ஏக்கருக்குச் சுமார் இரண்டு ரூபாய் வீதம் திட்டம் போட்டுக் கொடுக்கிறார்கள். எங்கள் திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்தவரையில், பழைய கணக்குகளைப் பார்க்கும்போது சராசரி ஒரு ஏக்கருக்கு 5 ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் குறைவாக இருப்பதால் அவர்கள் அதிகப்படியாகச் செய்ய முடியவில்லை. ஆகையால், பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை இதற்கு முன்பு கொடுத்த தொகையைவிட அதிக

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [4th March 1963

யாக இருக்கும் நிலைமையில் ஒரு ஏக்கருக்கு 6 அல்லது 7 ரூபாய் வரையிலாவது கொடுக்கச் சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா இடங்களிலும் அணைகள் கட்டப்பட்டுவிட்டன. திருநெல்வேலி ஜில்லாவில் பம்பையாறு, கிரியாறு திட்டங்கள் பற்றிப் பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகின்றன. கிரியாற்றுத் திட்டத்திற்கு அதிகப் பணம் செலவாகும், வட்டி கட்டாது என்று சொல்லி, அந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வருகிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அது கட்டுபடியாகுமா, ஆகாதா என்பதைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை. சம்பந்தில் எங்கள் ஜில்லாவுக்கு வந்திருந்த மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் சாதகமாகவே சொன்னார்கள். இப்பொழுது அது கட்டுபடியாகுமா, ஆகாதா என்பதை அதிகமாக ஆலோசனை செய்து கொண்டிராமல், சங்கரன்கோயில் தாலுக்கா, திருநெல்வேலி தாலுக்காவின் ஒரு பகுதி வரையிலும் வளமாக்கக்கூடிய இந்த கிரியாறு அணைத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மாநிலத்தில் அதிகப்படியாக அணைகள் கட்டியிருக்கிறோம். அதிகமாகத் தண்ணீரைக் கடலுக்கு விடுவதில்லை என்ற பெருமை நமது மாநிலச் சர்க்காருக்கு உண்டு. கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து, அணைகளைக் கட்ட முடியாவிட்டாலும், இன்னும் வேறு வழிகளிலே நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு சாத்தியம் இருக்கிறது. திடீரென்று ஒரு நாள் ஒரு பெரு மழை பெய்தால் அத்தனை தண்ணீரும் கடலுக்கு ஓடிப் போகக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம். திருநெல்வேலி ஜில்லாவின் பெரும் பகுதி மட்டமாக இருப்பதால், அணைகள் இடையில் கட்ட முடியவில்லை. மழைத் தண்ணீரைத் தேக்குவதற்கு இருக்கும் குளங்களை யெல்லாம் ஆழப்படுத்தலாம். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் ஆழப்படுத்தப்பட்ட ஏரிகளெல்லாம் அப்படியே இருக்கின்றன. தூர்ந்து போய்விட்டன. மழை பெய்தால் ஒரு மாதத்திற்குள்ள தண்ணீர்தான் பெருகக் கூடிய தன்மையிலே இருக்கின்றன. ஒரு நாளிலே ஒரு மணி நேரத்தில் அந்தக் குளங்கள் பெருகிவிடுகின்றன. பாக்கி நீர் கடலில் போகின்றன. இதையெல்லாம் செப்பனிட வேண்டும். அணைக்கட்டுகளுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதைப் போல, இத்தகைய குளங்களையும் ஆழப்படுத்தி, மழை பெய்யும்போது அத்தனை தண்ணீரையும் அவைகளில் தேக்கி வைக்கக்கூடிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விலைவாசிகளைப் பொறுத்த வரையில், நெல் விலை குறைவது நல்லது அல்ல என்பதை நமது சர்க்கார் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து நான் மிகுந்த சந்தோஷப்படுகிறேன். ஐம்பத்தாறு பட்டணம் படி கொண்ட ஒரு மூட்டை நெல் இருபது ரூபாய் அளிக்கும் குறைவது விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது. அவர்களுக்கு ஒரு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படாது. இது உணவு உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய நிலையை உண்டாக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்காரும் உணர்ந்து கிராமங்களில் கோடௌன்களைக் கட்டி மேலும் நெல் விலை குறையாமல் இருக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

4th March 1963] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

மின்சார விஸ்தரிப்பைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், மற்ற மாநிலங்களைவிட நமது மாநிலம் பெருமைப்படத்தக்க நிலையில், 14,000 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திருநெல்வேலி ஜில்லாவில், திருநெல்வேலி தாலுக்காவில் பல்லிக் கோட்டை பஞ்சாயத்தில் நான்கு சிறிய கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஒரே பஞ்சாயத்தின் கீழுள்ள நான்கு கிராமங்களில் மூன்று கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கத் திட்டமிட்டுவிட்டு, பள்ளமடை கிராமத்திற்கு மட்டும் இல்லை என்று சொல்வது அங்குள்ள மக்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. பள்ளமடை கிராமத்தில் 400 வீடுகள் இருக்கின்றன. மற்ற மூன்று கிராமங்களையும் விட இந்தக் கிராமத்தில்தான் ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. அங்குள்ளவர்கள் ஹரிஜனங்கள். மற்றவர்களைப் போல அவர்களுக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படாவிட்டால் அவர்கள் அதிருப்தி அடைய இடமிருக்கிறது. எனவே அப்படியில்லாமல் பொதுவாக எங்கு மின்சாரம் வழங்கினாலும், பஞ்சாயத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கும் காரியத்தைச் செய்யுமாறு நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரோடுகள், தாம்போதிகள் மிகவும் பயனுடையவையாக இருக்கும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஜில்லா போர்டு இருந்த காலத்தில் 1955-ஆம் ஆண்டு உடையார்பட்டி-சீவலப்பேரி ரோட்டில், சீவலப்பேரி பக்கம் தாம்போதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்து 1956-ஆம் ஆண்டு அந்த வேலைக்கு (பதினொன்றாயிரம்) ரூபாய் செலவும் செய்துவிட்டார்கள். பிறகு அந்த ரோட்டை Highways ரோடாக சர்க்கார் எடுத்துக் கொண்டார்கள். அப்படியே கட்டின வேலைகள் அரைகுறையாகவே நின்றுவிட்டன. பஞ்ச நிவாரண வேலையாக கொண்டுவந்துபோட்ட கல் குவியல்களும் அப்படியே உருக் குலைய ஆரம்பித்துவிட்டன. சமீபத்தில் அமைச்சர் அவர்கள் வந்தபோது தாம்போதி விஷயத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இவ்வாண்டு அதைக் கவனித்து செய்வதாகச் சொன்னார்கள். டெண்டர் கூட விடப்பட்டிருக்கிறது. இதைக் கவனித்து இவ்வாண்டு செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தாம்போதி மட்டும் கட்டப்பட்டால் 500 டன் உணவு உற்பத்தி

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [4th March 1963

அதிகமாகும். இதுபோல் உணவு உற்பத்திகளைப் பெருக்கக்கூடிய எந்த வேலைகளையும் சர்க்கார் அவசரமாகச் செய்து முடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு இந்தச் சர்க்கார் பல வசதிகளையும், சலுகைகளையும் கொடுத்து வருகிறார்கள். நானும் ஒரு ஹரிஜனன் என்ற முறையில் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றைக்கும் இந்த அரசாங்கத்தாரிடம் நன்றியறிதலோடு நடந்துகொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஹரிஜன நிதியிலிருந்து ஹரிஜனங்களுக்குப் பாடசாலைக் கட்டிடம் கட்டுதல், இணைப்பு ரோடு போடுதல் போன்ற காரியங்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டு வந்தது. முன்பு இருந்த முறையை மாற்றி இப்போது பஞ்சாயத்து போர்டுகளே செய்ய வேண்டுமென்று செய்தவுடன் முன் போல அவ்வளவு நன்மைகள் அவர்கள் அடைய முடியவில்லை. முன்பு அவர்கள் பெற்ற சலுகைகளின் கணக்கையும், இப்போது அவர்கள் பெற்று வருகிற சலுகைகளின் கணக்கும் எடுத்துப் பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். நான் கன்சல்டேடிவ் கமிட்டிக் கூட்டத்தில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும் என எதிர் பார்த்தேன், குறிப்பிடப்படவில்லை. குடி தண்ணீர் திட்டத்திற்கு மாத்திரம் முழுத் தொகையும் பஞ்சாயத்து யூனியனிலிருந்து செலவு செய்யப்படுகிறது. இணைப்பு ரோடு போடுதல், பள்ளிகள் கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் முன்போல் உதவித் தொகை ஹரிஜன நிதியிலிருந்து கொடுக்க வேண்டும். இல்லையேல் நாம் எதிர்பார்த்த அளவு நன்மைகளை அந்தச் சமூகத்தவர்கள் அடைய முடியாது.

அடுத்தபடியாக, கிராமங்களில் உள்ள விவசாயிகள், ஹரிஜனங்கள் முதலியவர்கள் கடன் தொல்லையினால் மிகவும் அவதிப்படுகிறார்கள். ரூபாய்க்கு இரண்டணா, நாலணா வட்டி என்று அவர்களுடைய வருமானம் கடனுக்கே போகிறது. தொழிலாளர்கள் வேலை செய்த சம்பளத்தின் பெரும் பகுதியை வட்டியாகக் கொடுக்கிறார்கள். எத்தனையோ சட்டங்களை நாம் கொண்டுவந்தாலும் கிராம மக்களுடைய, சேரி மக்களுடைய, தொழிலாளர்களுடைய கடன் கஷ்டத்தை நீக்க முடியவில்லை. அனுபவம் மிகுந்த அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். ஏழைகள் படும் கடன் தொல்லைகளில் இருந்து விடுதலை பெறச் செய்வதற்குரிய காரியங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுசேமிப்பு விஷயமாகப் போதுமான பலன் காணவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றையதினம் பரிசுப் பத்திரங்களை கிராமத்தில் உள்ளவர்கள் வாங்க வேண்டுமென்றால் போஸ்டாபீசுக்குப் போகவேண்டியிருக்கிறது, அல்லது கஜானாவுக்குப் போக வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்துகளின்மூலம் விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்யலாம். கஜானாவை ரெவின்யூவி

4th March 1963] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

லிருந்து பிரித்துவிட்டார்கள். தாலுகாக்களிலுள்ள கஜானாக்களை 12 மணியோடு அடைத்துவிடுகிறார்கள். கிராமத்தில் இருந்து கிராமாதிகாரிகள், தலையாரிகள் முதலியவர்கள். . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கைக்கும் இந்த ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கைக்கும் புத்தகத்தின் அட்டையில் வேண்டுமானால் வேறுபாடு இருக்கலாமே தவிர மற்றபடி வேறுபாடு இல்லை. சென்ற ஆண்டு விதித்த வரிகள் எதுவும் இவ்வாண்டு விலக்கப்படவில்லை. சென்ற ஆண்டு விதிக்கப்பட்ட வரிகள் இன்னும் பூராவும் வசூலாகாமல் இருக்கின்றன. இருந்தாலும் இந்த ஆண்டிலே துண்டு விழுகின்ற தொகை என்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தைப் பார்க்கிறோம். துண்டு என்று கணக்கிடப்பட்டிருப்பது 2 கோடியே 74 லட்சம்தான். நமது அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகப் பார்லிமெண்டில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து மாநில சர்க்காருக்கு வருகிற தொகை கூடுதலாவதன்மூலம் இந்தத் துண்டின் அளவு குறையலாம். அவர்கள் கொடுக்கிற அளவு குறைந்துவிடுமோ என்று அஞ்சி இவர்களும் துண்டுக் கணக்குத் தயாரித்திருக்கலாம். அதை முன்கூட்டியே உணர்ந்திருந்தால் இவர்கள் கொஞ்சம் வரி விலக்கு அளிக்க முன்வந்திருக்கலாம். காரணம் மத்திய சர்க்கார் அதிகமாக வரி உயர்த்தியிருக்கிறார்கள். விற்பனை வரியை 1 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக்கியிருக்கிறார்கள். இன்னும் ட்யூட்டியை அதிகமாக்கியிருக்கிறார்கள். இன்கம் டாக்ஸ் ஸ்லாபுகளில் வரி உயர்வு காணப்படுகிறது, அதை மாற்றியும் அமைத்திருக்கிறார்கள். இதனால் ஏற்கனவே கிடைத்திருக்கிற நிதி இவ்வாண்டு 5 கோடிக்குமேல் அதிகமாக உயரும் என்று நான் கருதுகிறேன். இப்படி அதிகமாக வருகிற பணத்தைக் கொண்டு ராஜ்யங்களுக்கு அளித்து வந்த உதவியை அதிகப்படுத்தினால் துண்டு விழ அவசியமே இருக்காது. அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நம்முடைய மாநிலத்தில் பல நல்ல அபிவிருத்திகளைச் செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்குப் பொற்கொல்லர்கள் தங்களுடைய வீட்டு அடுப்பிலே புகை எழச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டு அடுப்பிலே பூனைதான் தூங்குகிறது என்று சொல்லலாம். அத்தனை பேர்களும் வேலை இழந்து பரிதபிக்கின்றனர். முதல் அமைச்சர் அவர்கள் மிக சாமர்த்தியமாக மந்திரி சபையை நடத்துகின்றார்கள். அவருக்கு இருக்கிற நோக்கம் எல்லாம் ஒன்றைவிட்டால் மன்றொன்றுதான். 52-ஆவது வருடத்தைவிட்டுப் புறப்பட்டவுடன் அவர் சிந்தனை 57-இல்தான் நின்றது. 57-ஆவது வரு

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [4th March 1963

டத்தை விட்டவுடன் 62-இல் நின்றது. 62-ஆம் ஆண்டுக்குப் பின் அவர் சிந்தனை இப்போது 67-ல் தான் நிற்கும். போட் மெயில் வேகத்தில் ஓடுகின்ற அவர் சிந்தனை இடைக்காலத்திலும் தமிழக மக்கள் படுகிற அவதியை நின்று கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதில்லை என்கிறார்கள். நாங்கள் ஒத்துழைக்கத் தயார்.

1952-ஆம் ஆண்டு தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு சீரழிவு ஏற்பட்ட காலத்தில் அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியார் கைத்தறிக்கு என்று சில ரகத் துணிகளை ஒதுக்கி வைத்தாகவேண்டும் என்பதான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இந்த அவையில் நிறைவேற்றினார்கள். அதுபோல இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள் தங்கக் கட்டுப்பாட்டினால் பெரிதளவு நம் மாநிலப் பொற்கொல்லர்கள் பாதிக்கப்பட்டிருப்பதனால் அந்தச் சட்டத்தைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும் என்பதாக மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் ஒருமனதாக ஆதரிக்கத் தயார். தங்கக் கட்டுப்பாடுச் சட்டம் நல்ல முறையில் நடக்காது. மக்கள் நல்ல தங்கத்தைத்தான் போட்டுக்கொள்ளவேண்டுமென்று விரும்பினால் 14 காரட்டை நைட்ரிக் ஆசிட்விட்டு 22 காரட் தங்கம் அல்ல 24 காரட் தங்கமாகக்கூட ஆக்கிவிடுவார்கள். ஜரிகையில் இருந்து நல்ல தங்கம் எடுக்கும் ஆற்றல்பெற்ற நம் மாநில பொற்கொல்லர்கள். அப்படி 22 காரட்தான் போடுவது என்றால் போலீஸ்காரர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று பார்க்க முடியுமா? கிராமம் கிராமமாகச் சென்று பார்க்க முடியுமா? ஆகவே சட்டம் வெற்றிகரமாக நடக்காது. ஆனால் இடையில் லட்சக்கணக்கான பொற்கொல்லர் குடும்பங்கள்தான் நசிக்கும். அதற்கு இடமில்லாதபடி செய்ய வேண்டும். அப்படி, தங்கக் கட்டுப்பாட்டைத்
9-30 a.m. தளர்த்துகின்ற வரையில் வாடுகின்ற பொற்கொல்லர்களுக்கு எப்படி முதியோர்களுக்குப் பென்ஷன் கொடுக்கின்றோமோ அதே மாதிரியாக 50 ரூபாய் என்று பணமாகக் கொடுப்பது மிகவும் சாலச் சிறந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதற்காக ஆகும் செலவை, மத்திய சர்க்காரின் வரியிலிருந்து உபரியாக நமக்குக் கிடைக்கும் பணத்திலிருந்து சரிக்கட்டலாம் என்பதையும் நம்முடைய அமைச்சரவைக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தி பெருகுவது விவசாயிகளின் உற்சாகத்தையும் ஆற்றலையும் பொறுத்தது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உற்சாகமும் ஆற்றலும் எப்படி வரும்? நீங்கள் வரியைப் போட்டுக் கொண்டே போகிறீர்கள். நெல் மூட்டை 30 ரூபாய் விற்ற காலத்திலும் அம்மோனியா 38 ரூபாயாகத்தான் இருந்தது. இப்போது நெல் மூட்டை 20 ரூபாயாக இருக்கும் காலத்திலும் அம்மோனியா அதே விலைக்குத்தான் விற்கப்படுகிறது. நிலவரி அப்போதிருந்ததைவிட அதிகமாகி

4th March 1963] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இருக்கிறது. மின்சாரக் கட்டணம் அப்போதிருந்ததைவிட இப்போது அதிகமாக ஆகியிருக்கிறது. இப்படி விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற லாபம் குறையக் குறைய அவர்களுக்கு எப்படி உற்சாகமும் ஆற்றலும் உண்டாகும்? இதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கரும்பு அதிகமான விலைக்கு விற்ற சமயத்தில் ஏராளமான விவசாயிகள் கரும்பை நட்டார்கள். இப்போது கரும்பு உற்பத்தி குறைந்து விட்டது. விவசாயிகள் போடக் கூடிய மூலதனத்திற்கு ஏதாவது லாபம் கிடைத்தால் அவர்களுக்கு உற்சாகமும் ஆற்றலும் ஏற்படும். அதற்கான வழிவகைகள் இந்த பட்ஜட்டில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு, 'நம்முடைய மாகாணத்திலேயே மின்சாரப் பற்றாக்குறை இருக்கும்போது மைசூருக்கு ஏன் மின்சாரம் கொடுக்கிறீர்கள்' என்று நாங்கள் கேட்டபோது, நம்முடைய கனம் வெங்கட்டராமன் அவர்கள் 'மைசூருக்கு மின்சாரம் கொடுக்கவில்லையென்றால், எப்படித் திராவிடநாடு கிடைக்கும்?' என்று கேட்டார்கள். திராவிட நாட்டைப் பெற்றுத் தருவதற்காக இதைச் சொன்னார்களா, அல்லது அதைத் தடை செய்வதற்காக இப்படிச் சொன்னார்களா என்பது எனக்குத் தெரியாது. சென்ற பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள் —'ஹொகனேகல் திட்டத்திற்கு மைசூர் அரசாங்கத்தின் ஒப்புதல் வேண்டும், அது கிடைக்கும் என்று நம்புகிறோம்' என்று. ஆனால், இப்போதும் அமைச்சர் அவர்கள் 'மைசூர் அரசாங்கத்தின் ஒப்புதல் விரைவில் கிடைக்கும்' என்று கூறியிருக்கிறார்கள். எத்தனை காலத்திற்கு ஒப்புதல் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருப்பது? இதிலே உள்ள இடையூறுகள் என்ன? ஹொகனேகல் திட்டம் கட்டப்பட வேண்டிய இடம் மைசூரிலே இருக்கிறதா, தமிழகத்திலே இருக்கிறதா? இது பற்றி முதலமைச்சர்கள் சேர்ந்து பேசப்போவதாகப் பத்திரிகைகளிலே செய்தி வருகின்றது. ஆனால் ஏன் இதுவரை இந்தத் திட்டம் பற்றிப் பேசி முடிவுக்கு வரவில்லை? ஹொகனேகல் திட்டம் கட்டப்பட வேண்டிய இடம் சென்னையில் இருப்பதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீர்ப் பிடிப்பு மட்டும் சில மைல் தூரம் மைசூர் மாநிலத்தில் உள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அப்படியானால் இதிலே என்ன ஆட்சேபனை இருக்கிறது? இதைத் தடங்கல் இல்லாமல் நிறைவேற்றி மின்சார உற்பத்திக்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெய்வேலியில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை நம்முடைய சென்னை ராஜ்ய எலக்ட்ரிசிடி போர்டு வாங்குகிறது. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை ஹைடெல்வுக்கு மேற்பட்டுக் கொடுக்கும் சமயத்தில் 3 பைசா விதம் கொடுக்கிறோம். ஆனால் நெய்வேலி மின்சாரத்தை நம்முடைய எலக்ட்ரிசிடி போர்டு வாங்கும் சமயத்தில் ஆறு பைசா விதம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த இடர்ப்பாடுகளை

யெல்லாம் தீர்த்தார்களா என்பதைப் பற்றி இந்த பட்ஜட்டிலே சொல்லவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றிப் போன பட்ஜட்டிலே சொல்லும்போது, "தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்திற்கு இந்திய சர்க்கார் முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்றும், துறைமுக வேலையில் பல அம்சங்களும் முடிவு பெறுவதற்கான கால அட்டவணையை நிர்ணயிப்பார்கள் எனவும் நம்புகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை என்னவாயிற்று? இந்த பட்ஜட்டில் அதற்கு விளக்கம் இருக்கிறதா? இந்த பட்ஜட்டில் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைப் பற்றிச் சொல்லாமல் இருப்பதன் காரணமாக, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து ஒதுக்கி, அடுத்த தேர்தலுக்குப் பிறகு எடுத்துக் கொள்வதற்காக ஒத்தி வைத்திருக்கிறார்களோ என்று சந்தேகப் படுகிறேன்.

கல்வியைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கல்வி என்று நான் ஆரம்பித்தவுடனேயே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வார்கள்—'கடலூருக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்பாய்' என்று. கடலூருக்குக் கல்லூரி வேண்டுமென்று கேட்பது நியாயமானதாக இல்லையா? காங்கிரசில் இருப்பவர்களுக்குக்கூட இதிலே இருக்கக் கூடிய நியாயம் தெரியும்.

கனம் சபாநாயகர்: அதைத்தான் கனம் அங்கத்தினர் சொல்லப் போகிறார்களா?

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அறுபதுக்கு மேற்பட்ட கல்லூரிகள் இந்த மாநிலத்தில் இருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. அங்கே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில், '80 மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் அளவில் கல்லூரி ஆரம்பிக்கப்படும்' என்று கூறினார்கள். இதுவரை அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவது பற்றிய அறிகுறிகள் ஏதும் காணோம். அங்கே கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புக்கு அதிக செஸ் வரி விதித்தபோது, அந்தப் பணம் கரும்பாலைகளை இணைக்கும் வகையில் ரோடு போடுவதற்காகச் செலவழிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை அந்த மாதிரி செய்ததாகக் காணோம். அந்தக் கரும்பாலைகளை இணைக்கும் ரோடுகளையெல்லாம் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு ஸ்தாபனத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு ஸ்தாபனத்திலே இன்றைக்குப் பணக்காரர்களும், வசதி படைத்தவர்களும்தான் இருக்கிறார்களே தவிர,

ஏழைகள் அதிலே மெம்பர்களாக இல்லை. நிலம் இருப்பவர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு, நிலம் இல்லாதவர்களை அதிலே சேர்த்துக் கொள்வதில் தடங்கல் ஏற்படுகின்றன. அதையெல்லாம் நல்ல முறையில் அணுகி 80 சதவிகிதம் விவசாயப் பெருங்குடி மக்களை அதிலே மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உர உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, தனியார் துறை உர உற்பத்தியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நெய்வேலியிலே ஏற்படுத்தப்பட வேண்டிய உர உற்பத்தித் தொழிற்சாலை என்ன ஆயிற்று? அங்கே உர உற்பத்தித் தொழிற்சாலையை அமைப்பதற்காக மூன்று லட்சம் ரூபாய் செலவு செய்து கட்டடம் கட்டினார்கள். அந்தக் கட்டடம் இடிந்து விழுந்து விட்ட காரணத்தால் அந்த உர உற்பத்தித் தொழிற்சாலையை அமைப்பது தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. அரசாங்கம் கட்டும் கட்டடங்கள் இப்படி இடிந்து விழுந்து விட்டால் அரசாங்கம் போடும் திட்டங்கள் எப்படி மக்களுக்குப் பயன்படும் வகையில் அமையும்? நெய்வேலி உர உற்பத்திச் சாலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஒன்றுமே சொல்லாமல் விட்டு விட்டார்கள்.

கடைசியாக, 'வரி போடவில்லை' என்று பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால். . . .

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. கரு. சீமைச்சாமி: பெருமதிப்புக்குரிய சபாநாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த ஆண்டு பட்ஜட்டைப் பற்றி நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பட்ஜட்டில் புது வரி இல்லையென்று சொன்னவுடன் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். அது அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று என்று நான் நினைக்கிறேன். நிலவரி, தண்ணீர் வரி மசோதாவை நாம் நிறைவேற்றியதன் காரணமாக வரக்கூடிய வருமானம் இந்த பட்ஜட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த பட்ஜட்டை நான் வரவேற்பதற்கில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜட்டை நிதியமைச்சர் அவர்கள் வெகு நிதானத்தோடு தயாரித்திருக்கிறார்கள். நிலவரி, தண்ணீர் வரியைப் போடாமல் இந்த பட்ஜட்டை நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பார்களேயானால் நான் சார்ந்திருக்கும் சுதந்திரக் கட்சியின் சார்பில் நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு பொன்னாடை கூடப் போர்த்தியிருக்கலாம். அதற்கு இடம் இல்லாமல் செய்து விட்டார்கள். (சிரிப்பு.) தண்ணீர் வரி, நில வரியைத் தவிர, வரப்போகிற பெரிய வரி நகர்புற நில வரி. அந்த மசோதா செலக்ட் கமிட்டியில் இருக்கிறது. இந்த வரிகள் எல்லாம் விவசாயிகளை நெஞ்சிலே அடிப்பது போல் இருக்கிறது.

[திரு. கரு. சீமைச்சாமி] [4th March 1963

அடுத்து, வருகிற நகர்ப்புற நிலவரி விவசாயிகளின் பிடரியில் அடிப்பது போன்ற அடி. விவசாயிகளின் பிடரியிலும் நெஞ்சிலும் தாக்கப்பட்டால் அவர்கள் மூச்சுத் திணறுவது நிச்சயம். மத்திய அரசாங்கம் போட்டிருக்கும் வரிகளினால் விவசாயிகளின் தலையில் பாறாங்கல்லை போட்டு அவர்கள் இறக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகள் சிறந்த எண்ணம் உடையவர்கள், சிறந்த குணம் உடையவர்கள். அவர்களுக்கு இழைக்கும் தீங்குக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தங்கக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டவுடன் ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன, பேச்சுக்கள் நடக்கின்றன. அவர்களால் கண்டனக் குரல் எழுப்பப்படுகிறது. ஒவ்வொரு தொழிலுக்கும் ஏதாவது தீங்கு நேரிடுகிறபோது அவர்கள் பேசுகிறார்கள், கண்டனக் குரல் எழுப்புகிறார்கள். ஆக, ஒன்றும் பேசாது இருக்கும் விவசாயிகள் மேல் வரி சுமத்துவது அவ்வளவு சரியல்ல. இந்த ஆண்டு நெல் விலை மிகவும் குறைந்துவிட்டது. நெல் விலை குறைந்திருப்பதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெல் வரி பாக்கியிருக்கும் காரணத்தினால் வரி வசூல் டிரைவ் இருப்பதால் அவர்கள் வரி கட்ட நெல்லை மார்க்கட்டுக்குக் கொண்டு போய் விற்கவேண்டுமென்றால் விற்பதற்கில்லை. அப்படி விற்பதாக இருந்தாலும் குறைந்த விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. வியாபாரிகள் நெல்லை 15, 16 ரூபாய்க்குத்தான் வாங்குகிறார்கள். அதையும் உடனடியாக வாங்க மறுக்கிறார்கள். அப்படி உடனடியாக வாங்க மறுப்பதால் வந்த விலைக்கு விற்று கடனைக் கட்டித் தொலைப்போம் என்று குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். விலைவாசி உயர்வால் அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்த மன்றத்தில் முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு ஏக்கரில் கிடைக்கும் வருமானம் என்ன, அதன் செலவு என்ன என்பதைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். நாற்றங்கால் உழவு ரூ. 12, ஒரு மூடை விதை ரூ. 27, இலை தழைகளுக்கு ரூ. 20, நாற்றங்காலுக்கு களை எடுக்க ரூ. 2, நாற்றுப் பிடுங்க கூலி ரூ. 12, நடவு கூலி ரூ. 12, ஒரு ஏக்கர் உழுவதற்கு ரூ. 60, ஆட்டுகிடை போடுவதற்கு ரூ. 30, இரண்டு மூட்டை பிண்ணாக்குப் போட ரூ. 64, களை எடுப்பிற்கு ரூ. 20, பூச்சி மருந்து அடிக்க ரூ. 5—இப்போது பூச்சி மருந்து அடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது, காரணம் என்னவென்று தெரியவில்லை—பின் வரப்பு வெட்ட ரூ. 5, நாற்றங்காலுக்குத் தண்ணீர் இறைக்க ரூ. 25, நாற்றங்கால் சுத்து வெட்ட ரூ. 2, தசைக் கூலி ரூ. 15, பின்னர் அறுவடைக் கூலி 36 மரக்கால் ரூ. 50, அம்மோனியம் சல்பேட் ரூ. 10, அறுவடை காலம் வரை பாதுகாக்க கூலி ஆளுக்கு ரூ. 20 ஆக ஒரு ஏக்கருக்கு உழவுச் செலவு மொத்தம் 391 ரூபாய் ஆகிறது. இப்படி விவசாயம் செய்தால் 20 மூட்டை வரையில் தான் விளையும். இப்படி விவசாயம் செய்ய எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. விவசாய அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும்.

4th March 1963]

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் கொடுத்த கணக்குபடி அவ்வளவு விவரம் எனக்குத் தெரியாது. இரண்டு ரூபாய்க்கு வரப்பு வெட்டக் கூட ஆட்கள் இருக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் கணக்கால் திணற அடிக்கிறார்கள்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் திரு. சீமைச்சாமி அவர்கள் கூறிய கணக்குகளை அமைச்சர் அவர்கள் ஆட்சேபிக்கும் முறையில் இரண்டு ரூபாய்க்கு வரப்பு வெட்ட ஆட்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இரண்டு ரூபாய்க்கு வரப்பு வெட்டுவதை நிருபிக்க முடியுமா ?

கனம் சபாநாயகர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டரா ?

திரு. கரு. சீமைச்சாமி : ஒருவேளை அமைச்சர் அவர்களின் நிலமாக இருந்தால் இனமாகக் கூட வெட்டி விடலாம். ஒரு விவசாயிக்கு ஏற்படுகிற உண்மையான செலவைத்தான் இந்த மன்றத்தில் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆக ஒரு ஏக்கர் விவசாயம் செய்ய ஏற்படுகிற செலவு ரூ. 391, ஆனால் அதில் கிடைக்கிற வருமானமோ ரூ. 400. ஆக 9 ரூபாய் லாபம் கிடைக்கிறது. அந்த 9 ரூபாயில் இருந்து வரியும் தர வேண்டியிருக்கிறது. ஆக, விவசாயிகளை வயிற்றில் அடிக்க வேண்டாமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பால் நீங்கள் கருணை காட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். முன்பெல்லாம் பிண்ணாக்கு வாங்க வேண்டுமென்றால் அல்லது ஒரு கல்யாணம் வந்தது அல்லது ஒரு இழவு வந்தால் தங்கள் கையில் இருக்கும் தங்க நகைகளை கொண்டு போய் அடகு வைத்து அல்லது விற்று தங்கள் காரியத்தை நடத்தி வந்தார்கள். ஆனால் இப்போது இந்தத் தங்கக் கட்டுப்பாடு வந்த பிறகு அதற்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது. ஆக விவசாயக் குடும்பங்கள் என்ன கதிக்குப் போகப் போகிறார்களோ தெரியவில்லை. அவர்கள்தான் நமக்கு உணவு அளிக்கிறார்கள். இந்த மன்றத்தில் ஏகபோகமாக இருக்கிற உங்களுக்கு அவர்களால் தான் உணவு அளிக்கப்படுகிறது. ஆகவே அவர்கள் மீது கருணை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து கைத்தறித் துணி தேங்கி விட்டால் அவர்கள் கூக்குரல் போடுகிறார்கள். அவர்களுக்கு ரிபேட்டும் கொடுக்கப்படுகிறது. அதேபோல் நெல்லை எடுத்துக் கொண்டால் நூற்றுக்கணக்கான மூடைகள் இன்று விற்காமல் தேங்கிக் கிடக்கின்றன. அவர்களுக்கு நீங்கள் என்ன நிவாரணம் அளிக்கப் போகிறீர்கள் ? ஆக அவர்கள் மேல் கருணை காட்ட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் எல்லா உதவிகளும் செய்கிறோம், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவர்கள் பொறுப்பு என்று அறிக்கையில் சொல்கிறார்கள். அவர்கள் வயிற்றில் இப்படி அடித்தால்

அவர்கள் எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும்? மூன்றாவது திட்டத்தில், மூன்றாவது திட்ட காலத்தில் உணவு உற்பத்தியின் இலக்கு 17 லட்சம் டன். மூன்றாவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டு ஆரம்பம் இது. நீங்கள் நினைத்த இலக்கு நிறைவேறி இருக்கிறதா? விவசாயிகள் உணவு உற்பத்தி செய்வதில் கஷ்டங்கள் பல இருக்கின்றன. நீங்கள் நினைத்த இலக்கு நிச்சயமாக நிறைவேறாது. உற்பத்தி பெருக வேண்டுமானால் விவசாயிகளைத் தட்டிக் கொடுக்க வேண்டும். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். அடுத்து சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி வேண்டிய ஏற்பாடு செய்திருப்பதைப் பற்றி நான் நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் அதிகக் கால்வாய்கள் இருக்கின்றன; அவைகள் செப்பனிடப் படவில்லை. கண்மாய் மராமத்து நல்லமுறையில் நடந்து வருகிறது. ஆனால் கால்வாய்கள் செப்பனிடப்படவில்லை. ஆகவே அதில் வேண்டிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, மீன்வளத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நார் வேஜியன் மீன்பிடித் திட்டம் அமுலாக இருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் அமுல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது கடல் வளம் உள்ளது. அங்கு சிறு சிறு துறைமுகங்கள் இருக்கின்றன. தொண்டி, தேவிப்பட்டணம், வாணி நோக்கம் என்றெல்லாம் இருக்கின்றன. வாணிநோக்கம் என்ற இடத்தில் கடல் ஆழமாக இருக்கிறது. அங்கு மூன்று கப்பல்கள் வரை தாங்க முடியும். இரண்டாவது யுத்த காலத்தில் வெள்ளைக்காரர்களால் அங்கு ராணுவம் எல்லாம் அமைக்கப்பட்டிருந்தது. ஆக, நார்வேஜியன் மீன்பிடித் திட்டத்தை அங்கு அமுல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாதுகாப்பு பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். நம் நாடு விவசாய நாடு. நம் நாட்டில் 100-க்கு 80 பேர்கள் விவசாயத் தொழிலை நம்பி வாழ்பவர்கள். இந்த நெருக்கடி சமயத்தில் அவர்கள் தேசிய பாதுகாப்பிற்காகப் பணத்தை வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். பாதுகாப்பு விஷயமாக நாம் என்ன செய்யவேண்டும், அரசு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்

(மணி அடிக்கப்பட்டது.)

திரு. கோ. வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் புதிய வரிகள் எதுவும் இல்லாது அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் மேற்

கொண்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்றுகிற வகையில்தான் நிதி ஒதுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. அம் முறையில் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது நம் நாட்டில் அந்நியர் ஆக்கிரமிப்பு காரணமாக ஏற்பட்டிருக்கிற ராணுவச் செலவு ஒரு பக்கத்தில் மத்திய ஆட்சியில் பெருகி வருகிறது. ஆக இந்த சூழ்நிலையில் நாடு பூராவும் உள்ள சக்திகளைத் திரட்டுகிற அவசியம் இருக்கிறபோது, நாம் உள்நாட்டு முன்னேற்ற முயற்சிகளை கை விடாது திட்ட அடிப்படையில் நாம் முன்னேற வேண்டுமென்று, அந்த அடிப்படையில் நம் திட்ட வேலைகளை விட்டுக் கொடுக்காது திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம்தான் நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி அந்த முறையில் ராணுவப் பாதுகாப்பிற்கு நல்லமுறையில் பயன்படும் அடிப்படையில் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் திட்ட வேலைகளைக் குறைக்காது வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள் நிதி அமைச்சர் அவர்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, இன்னும் ஒன்றிரண்டு உண்மைகள் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. முதியோர் பென்ஷன் திட்டத்தைப் பொறுத்தவரையில் முன்பு எதிர்பார்த்ததைவிட இன்னும் அதிகப்படியான அளவில் ரூபாய் ஒதுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஏராளமான செலவுகள் எல்லாம் பெருகியிருந்தும் கூட புதிய வரிகள் எதும் இல்லாமல் இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. வரிகளே இல்லாத பட்ஜெட்டா இது என்று சில நண்பர்கள் கேட்டார்கள். வரி இல்லாமல் பட்ஜெட் தயாரிக்க முடியாது என்று மட்டும் நினைப்பது தவறு. வரி போட்டுத்தான் அரசாங்கம் தன் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். மேலும் இப்போது கிடைத்திருக்கின்ற வருமானங்கள் எல்லாம் வரியின் மூலமாகத்தான் என்றும், வரியில்லாத அளவில் அதாவது நான்-டாக்ஸ்-இனத்தில் வருமானம் பெருகவே இல்லை என்றும் சிலர் குறிப்பிட்டார்கள். ஆனால் நம்மிடம் இருக்கின்ற அறிக்கைகளைப் பார்க்கும்போது, நான்-டாக்ஸ் இனத்திலேயே 30 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ராஜ்ய வரிகள் மூலம் 30 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மத்திய அரசாங்கத்தின் மூலம் கிடைக்கின்ற பங்குகளின் மூலம் 30 கோடி ரூபாய் கிடைக்கிறது. இந்த விவரங்களைப் பார்த்தால் சுமார் 30 கோடி ரூபாய் நான்-டாக்ஸ் இனத்திலேயே கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில் செலவினங்களைப் பார்த்தால் நாம் பல்வேறு திட்டங்களுக்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறோம். முக்கியமான பல வேலைகளையும் நிறைவேற்றுவதற்கு மேற்கொண்டிருக்கிறோம். இந்த அளவில் இந்த ஆண்டு பட்ஜெட், அதிலும் நெருக்கடி காலத்தில் எந்தவிதமான புதிய வரிகள் எதுவும் போடாமல் வந்திருக்கின்ற பட்ஜெட், சிறப்பான தொன்று, புதுமையானதொன்று என்று தான் குறிப்பிட வேண்டும். பழைய பட்ஜெட்கள் மாதிரி தான் இருக்கின்றன. புரட்சிகரமான அம்சம் எதுவுமில்லை, வேகம் எதுவுமில்லை, விறுவிறுப்பு எதுவுமில்லை என்றெல்லாம் பலர் குறிப்பிட்டார்கள். இவ்விதம்

[திரு. கோ. வெங்கட்டராமன்] [4th March 1963

வேகம் இருக்க முடியாது, விறுவிறுப்பு இருக்க முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைகளை எல்லாம் ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்தில் இந்த மாதிரியான ஒரு நல்ல பட்ஜெட்டைப் போல் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வரிகள் இப்போது இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தும், பழைய நீர் வரிகள், மற்றும் இது போன்ற பல வரிகளைப்பற்றி இதில் பேசுவது என்பது, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல் தான் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தில், இப்போது ஏற்பட்டிருக்கின்ற பாதுகாப்புச் செலவுகள், ராணுவ தளவாடங்களுக்காக ஏற்படும் செலவுகள், நமது ராணுவ ஜவான்களுக்காக ஏற்படுகின்ற செலவுகள், ராணுவ தளவாடங்களைத் தயாரிப்பதற்காக இன்னும் பெருமளவில் மின்சாரத்தை அபிவிருத்தி செய்வதில் ஏற்படுகின்ற செலவுகள் இவை போன்ற பல செலவுகளை மத்திய அரசாங்கம் செய்தாக வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பல நடவடிக்கைகள் எடுத்து நாட்டு மக்களை அரசாங்கம் பாதுகாத்து, சிறந்ததொரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்பது தான் நம்முடைய லட்சியம். ஆகவே தான் இந்த நிலையில் வரவு-செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இந்த நிலையில் விவசாயத்தைப்பற்றி பேசுகின்ற பொழுது, உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி பேசுகின்ற பொழுது, சில உண்மைகளை சிலர் மறந்து விடுகிறார்கள். தேர்தல் வருகின்ற நேரத்தில் ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுக்க முடியும் என்று ஒரு சிலர் கூறியதை இப்போது நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைக்கு வரி அதிகமாக ஆகிவிட்டது என்று பேசுகின்ற பல நண்பர்கள் 1957-ல் அல்ல, 1962-ல் ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுக்க முடியும் என்று சொன்னதை நிறைவேற்ற முடியவில்லை என்று சிந்தித்துப் பார்த்தார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இனிமேல் 1967-ல் தான் சிந்தித்துப் பார்ப்பார்களோ என்னவோ தெரியவில்லை. ரூபாய்க்கு மூன்று படி அரிசி கிடைக்கும் என்று சொன்னது என்னவாயிற்று என்று சிந்தித்துப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுத் துறையில் பல குறைகள் இருப்பதாக சிலர் கூறினார்கள். ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி போல் இருப்பது நல்லது என்கிற முறையில் சிலர் பேசினார்கள். கூட்டுறவுத் துறைக்கும், ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை உணராமல் தான் இவ்விதம் பேசியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதனுடைய அடிப்படையை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவு முறையை எடுத்துக்கொண்டால் எவ்வளவு பங்குகள் இருந்தாலும் ஒருவருக்கு ஒரு வோட் தான் உண்டு. அதே நேரத்தில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனியாக இருந்தால் எத்தனை பங்குகள் இருக்கின்றனவோ அதற்குத் தகுந்தாற்போல்

4th March 1963] [திரு. கோ. வெங்கட்டராமன்]

வோட்டுகளும் உண்டு. இவ்விதம் இருப்பதன் காரணமாக கம்பெனி முறையில் பணக்காரர்களும், பெரிய முதலாளிகளும் தங்களுடைய பங்குகளுக்கு ஏற்றவாறு வோட்டுகளைப் பெற்றிருப்பார்கள். இந்த முறை கூட்டுறவுத் துறையில் கிடையாது. ஆகவே தான் கூட்டுறவு முறை நடுவழியில் மக்களை முன்னேற்றமடையச் செய்ய முடியும் என்ற எண்ணத்தில்தான் பல இடங்களில் கூட்டுறவு முறையை பின்பற்றி வருகிறோம். அதுதான் இன்று மிக சிறந்ததொரு கொள்கையாக கருதப்பட்டு வருகிறது. இந்தக் கூட்டுறவுக் கொள்கையின் மூலம் தான் நம் நாட்டிலுள்ள விவசாயிகள், சிறிய தொழில்கள் நடத்துகின்றவர்கள் இவர்கள் எல்லாம் கடன் வசதிகளையும் இன்னும் இது போன்ற பல வசதிகளையும் பெற்று வருகிறார்கள். இதற்காகவே நாம் பல கூட்டுறவு பாங்குகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். இதன் மூலமாக சிறிய சிறிய தொழில்கள் எல்லாம் அதிகமான அளவில் வளருவதற்கு நல்ல வாய்ப்புகள் பெருகி வருகின்றன. குறிப்பாக கைத்தறிக்கு மிகச் சிறந்ததொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காகக் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதன் மூலமாக பல உதவிகளை செய்துவருகிறோம். இந்த அடிப்படையில் தான் குறிப்பாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் துறைக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் இதுவரை நாலரை கோடி ரூபாய் வரை செலவு செய்யப்பட்டிருக்கிறது, இன்னும் ஐந்து கோடி ரூபாய் கைத்தறித் துறையில் செலவிட வேண்டியிருக்கிறது. கைத்தறித் தொழில்களுக்கு பங்குத் தொகை, கூட்டுறவு மில்களுக்குப் பங்குகள் இவ்வாறு பல வழிகளில் இந்தத் தொகை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு எட்டு கோடி ரூபாய் முழுக்க முழுக்க கூட்டுறவுத் துறையின் மூலமாக கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள். இதே போன்று விவசாயிகளும் பல கடன் வசதிகளைப் பெற்று வருகிறார்கள். கூட்டுறவுத் துறையின் மூலமாகவே பெரிய பெரிய தொழில்களை உருவாக்க முடியும். இதன் மூலமாக நல்லதொரு லாபத்தையும் எதிர்பார்க்க முடியும். இதன் மூலமாக தொழிலாளர்கள் நல்ல முறையில் கூலியும் பெற முடியும். இப்பேர்ப்பட்ட தொழில்களை எல்லாம் அரசாங்கமே நடத்தி வருகிறது. அந்த முறையில் தான் இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பணியாற்றி வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும், மத்திய அரசாங்கத்திலிருக்கின்ற அதிகாரங்கள் எல்லாம் குறைக்கப்பட்டு, மாநில அரசாங்கங்களுக்கு அதிகமான அளவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மாநிலங்கள் எல்லாம் துண்டாடப்படும்பொழுது "ப்ரொவின்ஷியல் ஆட்டானமி" இருக்கவேண்டும் என்ற கோரிக்கை, முன்னிருந்தே இருந்து வந்திருக்கின்றது. இவ்விதமாக மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுத்தால் அதன் மூலமாக ஒருமைப்பாடு குன்றிவிடக் கூடாது என்பதையும் முக்கியமாக

[திரு. கோ. வெங்கட்டராமன்] [4th March 1963

கவனித்து வருகிருர்கள். குறிப்பாக மத்திய அரசாங்கத்தில் பெரிய நீர்ப்பாசனங்கள், பெரிய பெரிய திட்டங்கள், பெரிய மின்சாரத் திட்டங்கள், இவைகளை எல்லாம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிருர்கள். இதில் முக்கியமாக எந்தத் தொழில்களை எல்லாம் சர்க்கார் துறையில் எடுத்து நடத்த முடியும் என்பதைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் மாநிலங்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்து தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இன்னின்ன அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் வரையறுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினுல்தான் இன்றைக்கு ஒகேனக்கல் திட்டம் வேண்டும் என்று சொல்லும்போது, மைசூர் மாநிலத்தின் ஒப்புதலையும் நாம் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநிலங்களுக் கெல்லாம் அதிகமான அளவில் அதிகாரங்களை எல்லாம் கொடுத்திருந்தால், இம்மாதிரிப்பட்ட காரியங்களில், அதாவது நீர் பங்கீடு பிரச்னைகள் போன்றவைகளுக்குத் தீர்வு காண முடியாது. மின்சாரத்தை பெருக்க வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக தமிழ்நாடு மிகவும் மின்சாரத்தில் முன்னேறியிருக்கிறது. மேட்டூர் மின்சாரத்தைத் தவிர அணு மின்சாரத்தையும் நம் நாட்டில் ஏற்படுத்துவதற்குரிய பெருமையை நாம் பெற்றிருக்கிறோம். அப்படியிருந்தும் நமக்குக் கிடைக்கின்ற மின்சார சக்தி போதாது, இன்னும் பெரிய தொழில்களை எல்லாம் பெருக்குவதற்கு மின்சாரம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு தொழில் துறையிலும் பெருகியிருக்கிறோம். முக்கியமாக பொதுத்துறையில் எதை கட்டுப்பாடோடு நாம் நடத்த முடியுமோ அவைகளை எல்லாம் பொதுத்துறையில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனியார் துறையில் தனியார்கள் கவனம் செலுத்தி நடத்தக்கூடிய தொழில்களை எல்லாம் தனியார் துறையில் விட்டுக் கொடுத்து அதன் மூலமாக வரிகளை வசூல் செய்து அரசாங்கத்தின் வருமானத்தையும் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே பொதுத்துறை, தனியார் துறை என்ற குழப்பமான கொள்கை இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தொழில் துறையை எடுத்துக்கொண்டால், பெரிய தொழில்கள் மட்டுமல்ல, சிறிய தொழில்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பல தொழிற்பேட்டைகளை (இன்டஸ்டிரியல் எஸ்டேட்ஸ்) அமைத்து வருகிறோம். சேலத்தில் குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே ஒரு தொழிற்பேட்டை வைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது ஆனல் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலும் சேலத்தில் மட்டும் இன்னும் அந்த தொழிற் பேட்டை அமைக்கப்படவில்லை. காரணம் இது சம்பந்தமாக ஆர்ஜிதம் செய்த நிலம் சம்பந்தமாக முதலில் குறிப்பிட்டிருந்த இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்பட்டது. இதன் காரணமாக காலதாமதமாகிறது. இதைப்பற்றி மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள்

4th March 1963] [திரு. கோ. வெங்கட்டராமன்]

கவனம் செலுத்தவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஒப்புக்கொள்ளப்பட்ட 10 தொழிற் பேட்டைகளில் 9 நிறைவேற்றப்பட்டுவிட்டன. இநத ஒரு தொழிற் பேட்டை மட்டும் அமைக்கப்படவில்லை. ஆகவே இந்த ஆண்டில் உடனடியாக இதை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறிப் பிரச்னைக்கு வருகின்ற பொழுது, கைத்தறித் தொழிலுக்கு அதிகமான அளவில் ரூபாய் ரிபேட் இனத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அதே நேரத்தில் கூட்டுறவுத் துறையில் சேராமல் வெளியே பலர் இருந்து கொண்டிருக்கிருர்கள். இவர்கள் முதலாளிகளின்கீழ் வேலை செய்கிறவர்கள் என்று சொல்லமுடியாது. இவர்கள் எல்லாம் தனியாக 5, 10 தறிகளை வைத்துக்கொண்டு தொழில் நடத்திக்கொண்டிருக்கக் கூடியவர்கள். இவர்களுக்கு நல்லமுறையில் எளிதாக கடன் வசதியில்லாது அலைந்து கொண்டிருக்கிருர்கள். இவர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். ஆனல் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற இவர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதற்கு எளிதான எந்த மார்க்கமும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிருர்கள். சென்ற ஆண்டு மதிப்பிற்குரிய கைத்தறி அமைச்சர் அவர்கள், கைத்தறி நிதி கார்ப்பரேஷன் (ஹான்ட்லூம் ஃபைனன்ஸ் கார்ப்பரேஷன்) ஒன்று ஏற்படுத்தப்போவதாக சொல்லியிருந்தார்கள். அது கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இதன் மூலமாக ஐந்து தறிகள், பத்து தறிகள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வசதி கிடைத்தால் இந்த நெருக்கடி காலத்தில் அவர்கள் தங்கள் தொழிலை ஓரளவுக்கு நிம்மதியாக நடத்திக்கொண்டிருக்க முடியும். கூட்டுறவிலே இருக்கிற அளவுக்கு 10-00 a.m. இன்றைக்குத் தறிகள் கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்டு இருக்கின்றன. கைத்தறி நிதிக் கார்ப்பொரேஷன் அமைப்பதில் பல சட்ட சம்பந்தமான சிக்கல்கள் இருந்தாலும் கூட, இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தி நிச்சயமாக இந்த ஹான்ட்லூம் ஃபைனன்ஸ் கார்ப்பொரேஷனை இந்த ஆண்டிலேயே ஏற்படுத்தவேண்டும் என்று மன்ருடிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்குப் பல்வேறு சலுகைகள் நெசவாளர்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன. வீடு கட்டும் திட்டங்கள், குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பது, கருவிகள் வாங்கிக்கொள்வது, வீடுகளை ரிப்பேர் செய்துகொள்ளுவது என்ற முறையில் வகுக்கக் கூடிய திட்டங்களினுல் வசதிகள் கூட்டுறவுத் துறையில் இருக்கிறவர்களுக்கு—சொஸைட்டிகளில் இருக்கின்றவர்களுக்கு—கிடைக்கிறதே தவிர, தனிப்பட்டவர்களிடத்தில் இருக்கக் கூடியவர்களுக்குக் கிடைப்பதில்லை. இன்றைக்கு இந்த கார்ப்பொரேஷனை அமைத்தால் 5-10 தறிகளை வைத்துக்கொண்டிருக்கிற மொத்த வியாபாரிகளாக இருந்தாலும்

[திரு. கோ. வெங்கட்டராமன்] [4th March 1963

அவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பது மாத்திரமல்லாமல், நெசவாளர்களைப் பொறுத்தவரையில் பிராவிடெண்ட் ஃபண்ட், குறைந்த பட்ச ஊதியம் இவைகளை நிர்ணயிக்க முடியும். அவசியம் இந்தத் துறையில் கைத்தறி நிதிக் கார்ப்பொரேஷனை ஏற்படுத்தும் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. து. ப. அழகமுத்து: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளித்ததற்கு முதலாவதாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1963-64-ம் ஆண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடு வருவாயில் 124 கோடியே 45 லட்சம் ரூபாய் என்றும் செலவு 127 கோடியே 19 லட்சம் ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலே வரவினத்திலும் செலவினத்திலும் பஞ்சாயத்து யூனியன்கள் லோகல் செஸ் மூலமாகப் பெறுகிற பணத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் வரவினத்திலும் செலவினத்திலும் 10 கோடி ரூபாய் அதிகமாக ஆகும். ஆகவே மொத்த மதிப்பீட்டில் 10 கோடி ரூபாய் அதிகமாக ஆகும் என்று நான் நினைக்கிறேன்.. இந்த பட்ஜெட்டில் துண்டு விழுகிற தொகை 2 கோடியே 74 லட்சம் ரூபாய். இந்தத் துண்டை நிறைவு செய்வதற்குப் புதிய வரிகள் விதிக்கவில்லை என்று பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், புதிய வரிகள் விதிக்கவில்லை என்று கூறப்பட்டாலும், இந்த பட்ஜெட் தொடர்கூட்டத்திற்கு முன்பு நிறைவேற்றப்பட்ட நீர் வரி, நில வரி மூலமாகக் கிடைக்கக் கூடிய வருமானம் அடுத்த ஆண்டு வரவு-செலவைச் சேர்ந்தது என்று தான் கொள்ளவேண்டும் என்று நான் கருதுகிறேன். அதே சமயத்தில் மத்திய சர்க்கார் விதித்திருக்கிற வரிப் பளுவும் இப்போது மக்கள் தலையில் சுமந்திருக்கிறது. இப்போது துண்டு விழுந்திருக்கிற 2 கோடியே 74 லட்சம் ரூபாயை நிறைவு செய்ய மத்திய சர்க்கார் விதித்திருக்கிற மத்திய விற்பனை வரி மூலமாகக் கிடைக்கும் பங்குத் தொகையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல முதலீட்டுச் செலவுக்குச் செலவு செய்ய வேண்டிய பணத்திற்கு, மத்திய சர்க்கார் எழுப்பப் போகும் கடன் மூலமாக கிடைக்கும் பங்கிலிருந்து அதை நிறைவேற்ற எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு வகையிலே மத்திய சர்க்காரை எதிர்பார்க்கும் நிலையில் நம் மாநில சர்க்கார் இருக்கிறது. துண்டு விழும் தொகையை ஈடு செய்யவும், மூலதனச் செலவுக்கு நாமே எழுப்பி வந்த கடன்களை எழுப்பாமல் மத்திய சர்க்கார் எழுப்பும் கடனில் நாம் பங்கு அடையும் நிலையிலும், இரண்டு விதங்களில் மத்திய சர்க்காரை எதிர்பார்க்கும் நிலை இருக்கிறது.

நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு இந்த பட்ஜெட்டில் என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி கனம் நிதி மந்திரி அவர்கள் விளக்கமாகக் குறிப்

4th March 1963] [திரு. து. ப. அழகமுத்து]

பிட்டிருக்கிறார். பொதுவாக திட்டங்களைக் குறைத்துக் கொள்வது நல்லதல்ல என்பதையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திட்டங்களின் வெற்றியால் தான், திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டு திட்டங்களைக் குறைத்துக்கொள்ளாமல் ஓரளவுக்கு நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் திட்டத்திலே அவர்கள் குறைத்துக் கொள்ள இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதிலே, வீடு கட்டும் திட்டங்களைக் குறைத்துக் கொள்வதாகவும், கட்டிட வேலைகளைக் குறைத்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் நிர்வாகத் துறையில், அலுவலகச் சில்லரைச் செலவுகளையும், பிரயாணப்படி போன்றவைகளிலும் சிக்கனத்தை கையாளப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடி நேரத்தில் நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கையாள வேண்டும் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளக் கூடிய ஒன்று ஆகும். ஆனால் நிர்வாகத் துறையில் எந்த அளவுக்கு சிக்கனத்தைக் கையாளுகிறோம் என்று கனம் நிதி மந்திரி அவர்கள் புள்ளிவிவரத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் கனம் தொழில் மந்திரி அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத்திருக்கிறார். 1957-58-ம் ஆண்டில் நம்முடைய நிர்வாகச் செலவு 34 சதவிகிதம் ஆக இருந்தது. இப்போது 26 சதவிகிதம் ஆகக் குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படி 26 சதவிகிதம் ஆக இருக்கக்கூடிய நிர்வாகச் செலவு மொத்தத்தில் 33 கோடியே 11 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலிலே சொன்ன 1957-68-ம் ஆண்டின் வருமானத்தை எடுத்துக் கொண்டால், அது 59 கோடியோ சொச்சம் ரூபாய் அந்த 59 கோடி ரூபாயில் 34 சதவிகிதம் என்றால் கிட்டத்தட்ட 20 கோடி நிர்வாகச் செலவு வருகிறது. ஆகவே இந்த 20 கோடி ரூபாய்க்கும், இப்போது ஆகின்ற செலவுக்கும், கணக்குப் பார்த்தால் கூடுதலாக 13 கோடி ரூபாய் நிர்வாகச் செலவு ஆகிறது. அந்தத் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது செலவு 60 சத விகிதம் அதிகமாக ஆகியிருப்பதாகத் தெரிகிறது. அதேபோல நமது வருமானமும் அதிகமாக ஆகியிருக்கிறது உண்மைதான். நிர்வாகச் செலவு அதிகமில்லாத விற்பனை வரி போன்றவைகளில் அதிக அளவு வருமானம் நமக்குக் கிடைத்திருக்கிறது. விற்பனை வரி அப்போது 11 கோடி ரூபாயாக இருந்தது, இப்போது 17 கோடி ரூபாய்க்கு மேலும், மற்றும் சில்லரை இனங்களையும் சேர்த்து 20 கோடி ரூபாய் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல வட்டி வீதத்திலும் 2 கோடி ரூபாய்க்கு மேல் கிடைத்திருக்கிறது. முத்திரைத் தாள், ஸ்டாம்ப் கட்டணம் போன்றவைகளிலும் நிர்வாகச் செலவு அதிகம் இல்லாமல் வருமானம் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் கழித்துப் பார்த்தால் அதிகமாக சத விகித நிர்வாகச் செலவு வரும் என்று நான் நினைக்கிறேன். நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நிர்வாகச் செலவு இனம் கணிசமான அளவில் குறைக்கப் பட்டு, அந்தப் பணம் அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

பாதுகாப்பைப் பொறுத்த வரையில் இந்த பட்ஜெட்டில் போலீஸ் துறைக்கு அதிகமாக 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதன் மூலமாக ஊர்க்காவல் படை போன்றவைகளை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதேபோல தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கும் அதிகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த இரண்டு இனங்கள்தான் பாதுகாப்புக்காகச் செலவிடப்படும் இனங்கள். மற்றவைகள் பொருளாதாரத்தை பலப்படுத்த ஒதுக்கப்பட்ட இனங்கள். அவைகள் அபிவிருத்தித் திட்டங்களுக்காகச் செலவிடப்படுபவை. இந்தப் பணம் கூட சென்ற ஆண்டு செலவு செய்த பணத்தை விட 7 கோடி ரூபாய் அதிகமாகவே இருக்கிறது. ஆகவே, பொருளாதாரத்தை பலப்படுத்துவதில் அதிக அக்கரை காட்டப்படுகிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. அந்த விகிதத்தில் செலவாகிற பணத்தில் விவசாயத்திற்கு 5 கோடி ரூபாய் வருகிற ஆண்டில் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுதோறும் விவசாயத்திற்கு ஏறத்தாழ 5 கோடி ரூபாய்க்குக் குறையாமல் செலவழித்துக்கொண்டிருக்கிறோம். அது மாத்திரமல்லாமல் கூட்டுறவு சொஸைட்டி மூலமாகவும் விவசாயிகளுக்குக் கடன் உதவியும் அளித்து வருகிறோம். இப்படி இரண்டு வகைகளில் விவசாயத்திற்கு உதவிகள் கொடுக்கப்பட்டு வந்தாலும் கூட, விவசாயம் மூலமாகக் கிடைக்கிற பலன் குறைவாக இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. இந்தப் பணம் விவசாயிகளுக்குச் சரியான முறையில், பயன் தரத் தக்க அளவில் செலவாகவில்லை என்று கருத வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்குச் செலவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களின் கீழ் ரிபேர் வேலைகள் என்று பெயரளவில் செய்யப்படுகிறதேயொழிய திட்டமிட்டுச் செய்யப்படுவதில்லை. பல ஏரிகள் பழுது பார்க்கப்படாமலேயே இன்னும் இருக்கின்றன. அந்த ஏரிகளுக்கு தண்ணீர் வரக்கூடிய வரத்துக்கால்கள் சரியானபடி ரிபேர் செய்யப்படாததால், மழை காலத்தில் கிடைக்கவேண்டிய தண்ணீர் ஏரிகளுக்கு வரமுடியாமல் போய்விடுகிறது. இந்த சூழ்நிலையில் தான் சிறிய நீர்ப்பாசன வசதிகள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை சரியான முறையில் ரிபேர் செய்து, விவசாயிகளுக்கு பலன் தரத்தக்க அளவிலே நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமான அளவில் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் தேவைப்படுகின்றன. அந்தத் தேவையை நல்ல முறையில் அரசாங்கம் பூர்த்தி செய்வார்கள் என்று நான் கருதுகிறேன். பொதுவாக விவசாயத்தைப் பொறுத்தவரையில் தேசீய வருமானத்தில் விவசாய வருமானம் பாதிப் பங்கு என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். ஆனால், விவசாயிகளுடைய சராசரி வருமானம் ஆண்டுக்கு ரூ. 375-ஆகத்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுடைய வாழ்க்கை உயர்ந்துவிடவில்லை. விவசாயத்

தின் மூலம் கிடைக்கவேண்டிய பலன் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. விவசாயிகளுக்கு தற்பொழுது போடப்பட்ட நில வரிக்கு கணக்குக் கூறும் பொழுது, நிலவரி, மாநில மொத்த வருவாயில் 9 சத விகிதம் தான் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் அப்படிக் குறிப்பிட்டது புள்ளிவிவரங்களின்படி உண்மையாகவே இருக்கலாம். ஆனால், நில வரியோடு மற்ற வரிகளையும் விவசாயிகள் கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆகவே, விவசாயிகள் மாநில வருமானத்தில் 9 சத விகிதம் வரி தான் கொடுக்கிறார்கள் என்று கூறுவது அவ்வளவு பொறுத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

மேலும், மற்றவர்கள் கூறியதுபோல, இந்த வேலையில்லாமல் தவிக்கின்ற நகைத் தொழிலாளர்களுக்கும், செயற்கை வைரத் தொழிலாளர்களுக்கும், வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்கும், அவர்களுக்கு தற்கால நிவாரணம் அளிப்பதற்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான குறிப்பும் இல்லாதது கண்டு நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. தா. பெருமாள் ராஜு** : கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்று சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த அறிக்கையானது இந்த வருஷம் வரி போடாமலேயே தீட்டப்பட்டிருப்பது பற்றி மிகவும் சந்தோஷம். ஆனால், நாடு அபிவிருத்தி அடையவேண்டும் என்றால், தேசம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால். வரி போடாமல் நாம் அபிவிருத்தி செய்ய முடியாது. வரி மிகவும் முக்கியமானது என்பதை நான் இங்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். வரி இல்லையேல் அபிவிருத்தி இல்லை. தொகுதியில் உள்ள ஜனங்கள் பாலம் வேண்டும், அணை வேண்டும், வாய்க்கால் வேண்டும் என்று பல பிரச்னைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வரியில்லாமல் இம்மாதிரி அபிவிருத்தித் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாது என்பதை ஜனங்களுக்கு எடுத்துக் கூறவேண்டியது நமது கடமை என்பதை என்னுடைய சகா அங்கத்தினர்களுக்கும் உணர்த்திக்கொள்ள விரும்புகிறேன். விவசாயம் தான் மிகவும் முக்கியமானது. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு, நாட்டின் கௌரவத்திற்கு விவசாயம் தான் இன்றியமையாதது. அதன் மூலம் தான் நாட்டின் கௌரவம் நிலைநாட்டப்படுகிறது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாய அபிவிருத்திக்குத் தொகை இன்னும் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் நம்முடைய தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியும். ஆகவே, விவசாய மான்யத்திற்கு இன்னும் அதிகத் தொகை ஒதுக்கப்படவேண்டும்.

விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டும் என்றால், பிற்பட்ட நிலைமையில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவேண்டும். சில பஞ்சாயத்து யூனியன்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. எங்கெங்கே

இம்மாதிரி பிற்பட்ட நிலை இருக்கிறதோ, அந்த இடங்களுக்கெல்லாம் தொகையை அதிகமாக ஒதுக்கி, அந்தத் தொகுதிகளில் அபிவிருத்தி வேலைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, தாளவாடி பஞ்சாயத்து யூனியன், அந்தியூர் பஞ்சாயத்து யூனியன் போன்ற பகுதிகளில் இன்னும் பாசன வசதியே செய்யப்படாத நிலை இருக்கிறது. சுமார் பதினைந்து ஆண்டு காலம் ஆகியும், இந்த நிலையில் இருந்தால், பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் எப்படி நல்ல முறையில் செயல்பட முடியும்? ரோடுகள் செப்பனிடப்படவில்லை. பள்ளிக்கூடங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. சுகாதார வசதிகளை அதிகரிக்க முடியவில்லை. பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த சமயத்தில் நான் குறிப்பிட்ட பிற்பட்ட தொகுதிகளுக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கி, கூடுமான வரையில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக தாளவாடி பிர்க்கா, மைசூர் பெருநிலத்தின் ஓரமாக இருப்பதினால், இங்கிருந்து அதிகாரிகள் அங்கு போய்ச் சேர்ந்து நல்ல முறையில் அபிவிருத்தி செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ரோடுகள் நல்ல முறையில் இல்லை. எல்லாம் காட்டுப் பிராந்தியமாக இருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் அங்கு போய்ச் சேருவதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் கூட போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த ரோடுகள் பாரெஸ்டு ரோடுகள். கனம் காட்டு இலாகா அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அந்த ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு மாற்றிக் கொடுத்தால்தான், அங்கு இருக்கிற பஞ்சாயத்து யூனியன்கள் நல்லமுறையில் செயல்பட முடியும். இது மிகவும் முக்கியம். பஞ்சாயத்துக்கள் அபிவிருத்தி அடையவேண்டுமென்றால், போக்குவரத்து வசதியும் மிகவும் முக்கியம். போக்குவரத்து வசதி இல்லையேல் அந்த இடங்களில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றமுடியாது. ஆகவே, இந்தப் பிரதேசங்களில் உள்ள ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மென்டிற்கு மாற்றிக் கொடுக்கும்படி மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் முக்கியம்.

அங்கு இன்னும் மின்சார அபிவிருத்தி ஏற்படவில்லை. சென்ற அசெம்பளிக் கூட்டத்தில் கூட நான் இதுபற்றிப் பேசியிருக்கிறேன். பர்கூர் லைனில் இன்னும் மின்சார அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது மிகவும் முக்கியமான காரியம். தொகுதிகளில் இப்படிப்பட்ட அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக அந்தியூர், பர்கூர் மலைப் பிரதேசங்களில் சில பள்ளங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. காக்காயனூர் பள்ளம், கரும்பாறை பள்ளம், மைசூர் பெருநிலத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த சிறு பள்ளங்கள் சம்பந்தப்பட்ட வரை, 'மீடியம் சைஸ் பிராஜக்ட்' என்ற ஒரு திட்டத்தை அங்கே

ஏற்படுத்தினால், அந்த ஏரியாக்கள் உயர்ந்து மேட்டுப்பிரதேசம் மாறி, நல்ல முறையில் பாசன வசதி செய்து கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். அந்தத் தண்ணீரெல்லாம் மைசூர் பெருநிலத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. நாம் இதைச் செய்யாவிட்டால் மைசூர் அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அதன் மூலம் செய்துகொள்ளும் என்று இந்த சமயத்தில் கூறிக்கொண்டு, இந்தத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திற்குள்ளாவது முடித்து, அங்கு ஜனங்களுக்கு நல்ல நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் கிணறு வெட்டுவதற்கு மானியங்கள் அந்தியூர் பிர்காவில் வழங்கப்படுகின்றன. அங்கெல்லாம் மழை இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணத்தையெல்லாம் அவர்கள் அரசாங்கத்திற்கு திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வருஷமாவது விதிவிலக்கு அளித்து, வசூலை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரம் விநியோகத்திற்கு ஐ.எம்.எஸ். லோன் கொடுக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குக் கடன் வாங்கித்தான் உப்பு வாங்கவேண்டும் என்ற சூழ்நிலை இல்லை. உப்பு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், ஐ.எம்.எஸ். லோனுக்கு எழுதிப் போடுகிறார்கள். இதனால், நடுத்தர சிறிய பண்ணை விவசாயிகளுக்கு உப்பு கிடைக்காமல் போய்விடுகிறது. சிறிய விவசாயிகள் தான் தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். பெரிய விவசாயிகள் இம்மாதிரி நல்ல முறையில் விளைச்சலை அதிகரிக்க முடியாது. ஆகவே, சிறிய விவசாயிகளுக்கு ரசாயன உரம் கொடுக்கவேண்டும். ஐ.எம்.எஸ். லோனை எடுத்துவிட்டு, கடைகளில் உரம் விற்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தாளவாடி மலைப் பிரதேசத்தில் பட்டுப் புழுச் செடி விவசாயம் அதிகமாக இருக்கிறது. அதனால் நமது சர்க்காருக்கு வரும்படி வருகிறது. அங்கே மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் குறைவாக இருக்கின்றன. உடனடியாக அவைகளையெல்லாம் அங்கே ஏற்படுத்தினால் நல்ல வருமானம் கிடைக்கும். மலைப்பிரதேசங்களிலே கோடிக்கணக்கான சந்தன மரங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை தாளவாடி யூனியனுக்குக் கொடுத்து அதை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க்காலில் தண்ணீர் நின்றுவிட்டது. இன்னும் 1½ மாதத்திற்குப் பிறகுதான் அதில் தண்ணீர் விடப்படும். அப்படி தண்ணீர் விடப்பட்டால் நல்ல முறையில் அதை ரிப்பேர் செய்ய முடியாது. ஆகவே உடனடியாக மராமத்து வேலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பர்கூரிலிருந்து அந்தியூருக்கு ஜீப் பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே 10 பள்ளிகள் இருக்கின்றன. ஆசிரியர்கள் போக முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

(மணி அடிக்கப்பட்டு பேச்சு முடிவடைந்தது.)

***திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பு சமர்ப்பித்து இருக்கிறார்கள். இது அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இரண்டாவது நிதி நிலை அறிக்கையாகும். இந்த அறிக்கையின் மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது, இந்த மாநிலத்தில் வாழ்கின்ற கோடிக்கணக்கான மக்களுடைய இதய ஒலியை அவர்களது தூதுவனாகச் சமர்ப்பிப்பதுதான் என்னுடைய உரையின் முக்கிய நோக்கம் என்று கருதுகிறேன்.

நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்களின் திறமையைப் பற்றியோ, அறிவாற்றலைப் பற்றியோ, அவரது அனுபவத்தைப் பற்றியோ, அவரது சேவை, தியாகம், இவற்றைப்பற்றி நமக்கெல்லாம் இருக்கிற நன்மதிப்பை, என்னுடைய இதயத்திலே இருக்கிற பெருமதிப்பை, நான் இந்த மன்றத்திலே பல தடவைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். போன ஆண்டு அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையினாலும், இந்த ஆண்டு அவர்கள் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கையினாலும் இந்த மாநிலத்திலுள்ள மக்கள் எந்த அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. வெளித் தோற்றத்திற்கு வரியே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "நான் எந்தப் புதிய வரியையும் விதிக்கப் போவதில்லை" என்று சொல்லியிருக்கிறார். இது ஒரு கவர்ச்சிகரமான வாசகம். மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு வாசகம். கோடிக்கணக்கான மக்களுக்கு உண்மையிலேயே இதனுடைய விளைவுகளை ஒன்றுமில்லை என்று இருந்தால் மிகவும் பெருமைப்படக்கூடிய வாசகமாக இருக்கும். ஆனால் வெளி தோற்றத்திற்கும் உண்மைக்கும் சில நேரங்களிலே நிரம்ப வேறுபாடுகள் இருக்கின்றன. நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கனம் பக்தவத்சலம் அவர்கள் நிதி மந்திரியாக வந்ததிலிருந்து இந்த மாநில மக்கள் புதிதாக எவ்வளவு வரிப் பணம் கட்டுகிறார்கள் என்ற கணக்கை அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். போன ஆண்டு விதித்த பல வரிகள் மூலம் நடப்பு ஆண்டில் ரூ. 4,80,00,000 கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே வரிகளின் மூலம் வருகிற ஆண்டில் ரூ. 9 கோடி கிடைக்குமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இது கனம் பக்தவத்சலம் அவர்களின் பட்ஜெட்டின் புதிய வரி விதிப்புகள் மூலம் இந்த மாநில மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு சுமையாகும். நிதிநிலை அறிக்கையுடன் கொடுத்திருக்கும் பட்ஜெட் மெமோராண்டத்தில் வருகிற ஆண்டிலே கிடைக்கப்போகும் ரூ. 9 கோடி

க்கும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் தண்ணீர்த் தீர்வை மூலமாக வருகிற ஆண்டிலே ரூ. 1½ கோடி கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல் மோட்டார் வாகன வரியின் மூலம் ரூ. 3½ கோடி கிடைக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். மின்சார உபயோக வரியின் மூலம் ரூ. 2 கோடி கிடைக்குமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஸ்டாம்புக் கட்டணத்தின் மூலமாக ரூ. 1 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜூலை மாதத்திலே விதித்த வரிகளின் மூலமாக நடப்பு ஆண்டிலே ரூ. 5 கோடியும், வருகிற ஆண்டிலே ரூ. 9 கோடியும் இந்த மாநில மக்கள் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி வரிகள் போட்டிருந்தும் கூட இந்த பட்ஜெட்டிலே ரூ. 274 லட்சம் துண்டு விழும் என்று சொல்லப்படுகிறது. இதை மத்திய சர்க்கார் விதிக்கும் விற்பனை வரியை உயர்த்துவதன் மூலமும், ஆடம்பரப் பொருள்களின் மீது ஒரே சீராக விற்பனை வரி விதிப்பதன் மூலமும் இதை சரிக்கட்டி விடலாம் என்று சொல்லப்படுகிறது. நான் அழுத்தம் திருத்தமாக இந்த நேரத்தில் சொல்லுவது என்னவென்றால், இந்த இரண்டு பட்ஜெட்டுகள் மூலமாக நடப்பு ஆண்டில் ரூ. 5 கோடியும், வருகிற ஆண்டிலே ரூ. 9 கோடியும், துண்டு விழுகிற ரூ. 3 கோடியும், ஆக மொத்தம் ரூ. 17 கோடி இந்த புதிய வரி விதிப்புகளின் மூலம் கிடைக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்படியிருந்தாலும் வெளித் தோற்றத்திற்கு இந்த மாநில மக்களின் மீது வரியே சுமத்தப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நான் பல மாநிலங்களிலே சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுகளைப் பார்த்தேன். ஆந்திர மாநிலத்தின் நிதி அமைச்சரும் சரி, மைசூர் மாநிலத்தின் நிதி அமைச்சரும் சரி, மேற்கு வங்காள மாநிலத்தின் நிதி அமைச்சரும் சரி, சென்னையைப் போலத்தான் வரி விதிக்காத பட்ஜெட்டுகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதனைக் கூர்ந்து பார்க்கிற நேரத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் டில்லி மாநகரில் எல்லா நிதி அமைச்சர்களும் கூடி ஒரு முடிவு எடுத்து, திரு. மொரார்ஜி தேசாய் அவர்களையே எல்லா வரியையும் விதித்து விடுங்கள் என்று சொல்லிவிட்டு, வெளித் தோற்றத்திற்கு வரியே இல்லை என்று சொல்லி பல மாநிலங்களிலே பட்ஜெட்டுகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆனால், உண்மையில் நம்முடைய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களுடைய முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறார். இதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். "நீங்கள் எல்லோரும் சென்ற சில மாதங்களுக்கு முன்பு டில்லியில் செய்த சதித்திட்டத்தின் நகல்தான் இந்த நிதி நிலை அறிக்கை" என்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். கோபத்திலே நான் இதைச் சொல்லவில்லை, ஆத்திரத்திலே நான் இதைச் சொல்லவில்லை. இந்த மாநில மக்களுக்கு உண்மையிலேயே நல்ல காரியங்களைச் செய்ய முடியாத அளவுக்கு, இது ஒரு சதித் திட்டத்தின் நகலாக இருக்கிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் சென்ற 15 அல்லது 16 வருட காலமாக அமைச்சராக இருக்கிறார்கள். நாம் எல்லோரும்

அரசியல் சட்டத்தின் கீழ் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டத்திலே இருக்கிற நெறிமுறைக் கொள்கைகளின்படி . . . . . .

திரு. கே. டி. கோசல்ராம் : கனம் அங்கத்தினர் "சதித் திட்டம்" என்று சொல்லுகிறார்களே, அது பார்லிமெண்டரி வார்த்தையா என்பதை அறிய விரும்புகிறேன். மத்திய நிதி மந்திரி, மற்றும் பொறுப்புள்ளவர்களைப் பற்றி, இப்படி "சதி" என்று சொல்லுவது முறையா?

MR. SPEAKER : The hon. Member does not say 'criminal conspiracy'. He says only 'conspiracy'. So, let the hon. Member continue his speech.

திரு. கே. ஏ. மதியழகன் : நான் சென்ற ஆண்டிலே இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். நெறிமுறைக் கொள்கை 39-வது விதியின் படி :

'The State shall, in particular, direct its policy towards securing—

(a) that the citizens, men and women equally, have the lgrht to an adequate means of livelihood;

(b) that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;

(c) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment;

என்று உள்ளது. இதிலே எந்த ஒரு அம்சமாவது, ஒரு துளியாவது சென்ற 10 ஆண்டு காலமாக கொண்டுவரப்பட்ட பட்ஜெட்டுகளிலே இருக்கிறதா என்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் வேதனைப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை இந்த மாநில மக்களின் பிம்பமாக நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நமது நிதி அமைச்சர் அவர்கள் கூட இந்த அறிக்கையிலே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். நான்
10-30 a.m. கடந்த ஆண்டிலேயே சொன்னேன், திசைத் திருப்பம் நல்ல திருப்பமாக அமையவேண்டும் என்று. சமதர்மபுரிக்குப்போக வேண்டிய திசைத் திருப்பம் குபேரர்கள்புரிக்குப் போகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நிதிநிலை அறிக்கையுரையில்,

"அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் பாதுகாப்பு அமைப்பு பலமான ஒரு பொருளாதார அமைப்பின் மேல்வழி எழுந்ததாகும். . . நம் நாட்டில் எதிரிக்கு நிகரான படை அமைப்பை உருவாக்க வேண்டுமென்றால் திட்டத்தின் முக்கியமான பகுதிகள் எல்லாவற்றையும் நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும்"

என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். இதைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். சோவியத் நாட்டைப் பற்றியும், அமெரிக்க நாட்டைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு நிகராக ராணுவத்தை மட்டுமல்ல, அவர்களுடைய நாட்டுக்கு குடிமக்கள் நிகராக வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்த இந்த சர்க்கார் என்ன முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது? நாம் இப்படிச் சொல்கிற நேரத்தில் குற்றம் சொல்கிறேன் என்று கருதிவிடத் தேவையில்லை.

சோவியத் நாட்டின் நிதி அமைச்சர் திரு. வாசிலி கர்புசோவ் அவர்கள் சோவியத் அரசாங்க பட்ஜெட்டை சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்தின் முன் சமர்பிக்கும்போது குறிப்பிட்டதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

MR. SPEAKER : What is it that the hon. Member is reading?

SRI K. A. MATHIALAGAN : Sir, I am reading an extract from the Soviet Minister's speech.

MR. SPEAKER : How is it relevant here?

SRI K. A. MATHIALAGAN : I am quoting only the extract, Sir.

MR. SPEAKER : All right, let the hon. Member continue his speech.

திரு. சி. பொன்னுசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சோவியத் நாட்டு அமைச்சருடைய பட்ஜெட்டை இந்தச் சபையில் குறிப்பிடலாமா? அதை அவர் வாபஸ் வாங்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கனம் சபாநாயகர் : எதை வாபஸ் வாங்கவேண்டும்? கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : சோவியத் யூனியன் நிதி அமைச்சர் திரு. வாசிலி கர்புசோவ் குறிப்பிட்டதாவது—

"சோஷலிசப் பொருளாதாரத்திலிருந்து கிடைக்கும் வருவாய்கள்தான் சோவியத் பட்ஜெட்டின் பிரதான வருமான இனங்களாக அமைகின்றன. 7,980 கோடி ரூபிள் வரை, அதாவது மொத்த அரசாங்க வருமானத்தில் 91 சதவீதம் வரை, இவ்வகையில் கிடைத்து விடுகிறது. இவ்வருட பட்ஜெட்டின் அரசாங்க வருவாய்க்கு மக்கள் செலுத்தும் பங்கு 9 சதவீதமே ஆகும். 1955-இல் இப் பங்கு 15·6 சதவீதமாயிருந்தது"

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th March 1963

இதுபோல்தான், அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஜான் கென்னடி அவர்களுடைய நிதிக் கொள்கையையும் நான் சொல்வேன். இவைகள் ஏன் இங்கே செயல்படவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி. அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டதாவது—

'Federal expenditure and revenue programmes should contribute to economic growth and maximum employment within a setting of reasonable price stability. We will not waste our resources on inefficient or undesirable expenditure simply because the economy is slack : nor, in order to run a surplus, will we deny our people essential services or security simply because the economy is prosperous'.

அதாவது, 'ஊதாரித்தனமான செலவினங்களுக்காகவோ அல்லது உளுத்துப்போன கொள்கைகளுக்காகவோ நாங்கள் செலவிடமாட்டோம். மக்களுக்குத் தேவையில்லாததில் செலவிடமாட்டோம்' என்று திரு. கென்னடி அவர்கள் நிதிக் கொள்கையைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம். இந்த அடிப்படை நாம் ஏற்படுத்துகிற திட்டங்களில் அமைகின்றனவா என்பதைக் கேட்பதற்குத்தான்.

பைனான்ஸ் கமிஷனுக்கு நம்முடைய மாநில சர்க்கார் கொடுத்திருக்கிற மெமோராண்டத்தில், இந்த மாநிலத்தின் வரி அளவைப் பற்றி எப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்பது நம்முடைய அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும். அதில் அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது —

'Madras ranks only sixth in the country in *per capita* income. the incidence of State taxation is exceptionally heavy in the State. A fact which the present Finance Commission should take sympathetic note of in recommending devolution and *ad hoc* grants.'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1960-ம் ஆண்டில் நிதிக் கமிஷனுக்கு கொடுக்கப்பட்ட அறிக்கையில் taxation is exceptional heavy என்று சொல்லியிருக்கிறார்கள். வான் முட்ட வரி இருக்கிறது என்று வலியுறுத்தினர். அதுவும் மீண்டும் வருகிறது. அந்த அறிக்கை இந்தச் சபை முன்பும் வைக்கப்பட்டது.

'The State Government's representatives pointed out that even this target was unrealistic considering the high level of prevailing taxation and the low level of per capita income in the State '.

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க மீண்டும் 17 கோடி ரூபாய் அளவுக்கு புதிய வரியாக இரண்டு ஆண்டுகளில் நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற நிர்ப்பந்தத்தை நிதி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 'திட்டங்கள் தேவை இல்லையா?' என்று கேட்பார்கள். நான் கேட்கிறேன் ஏன் இந்த சர்க்கார் வரிக்குப் பதிலாக வருமானங்களைப் பெருக்கக் கூடாது? வரி விதிப்பைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தி

4th March 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

னுடைய கொள்கையைத் தெளிவாக, திட்டவட்டமாக சொல்லியிருக்கிறோம். இந்தச் சர்க்கார் முயற்சி எடுக்கவில்லை. மார்க்கம் இருந்தும் மனம் இல்லை என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

'ஐந்தாண்டுத் திட்டங்கள் போடவில்லையா?' என்று கேட்கலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் டில்லிப் பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது, திரு. தேபர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கொள்கையைச் சேர்ந்த ஆவடியில் சோஷலிசத் தீர்மானத்தை நிறைவேற்றிய மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. தேபர் அவர்கள்,

'If I may put it that way, that our efforts fall short of ensuring to the people within a reasonable space of time that much income which will ensure to them the barest minimum of life '.

என்று சொல்லிவிட்டு ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறார். அதாவது—

'A stage has come when the Planning Ministry, and the Government of India should take the country into their confidence and tell them what we have been doing so far, though we have considered it to be satcisfactory, is not enough, if it is the object of the country to ensure the barest minimum standard of living to the people within twenty-five years or thirty years of planning and independence.'

25, 30 ஆண்டுகளுக்குள் ஒரு சாதாரண குறைந்த பட்ச வாழ்க்கை நிலைமை வரவேண்டுமென்றால் கூட, இன்றைக்கு அரசாங்கம் செய்வது சரியல்ல திருப்தியானதல்ல என்று 12 வருடத் திட்டத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் சொன்னால் இந்த சர்க்காருக்குக் கோபம் வரலாம். ஆனால், திரு. தேபர் அவர்கள் சொல்லியிருக்கிறார். திரு. தேபரைவிட நல்ல எண்ணம் படைத்தவர்கள், நாட்டுக்கு நல்ல சேவை புரிந்திருக்கின்றவர்கள் யார் இருக்க முடியும்? இன்றைக்கு அரசாங்கம் செய்கிற திட்டங்களைக் குறித்து நான்கு கேள்விகளை நான் கனம் நிதி அமைச்சர் அவர்களிடம் கேட்டுவிட்டு என்னுடைய உரையை முடிக்கக் கருதுகிறேன்.

இந்தத் திட்டங்கள் திசை மாற்றப்பட வேண்டும். ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கக் கூடிய வகையில் வெற்றி பெறுவதில் இந்தச் சர்க்கார் நான்கு அம்சங்களில் தோல்வி அடைந்திருக்கிறது. இதனை டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் பெரிய பொருளாதார மேதை, அவர்கள் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமானால், நல்ல உறுதியான, திட்டவட்டமான, அத்தியாவசியப் பொருள்களுக்கெல்லாம் விலைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய விலைவாசிக் கொள்கை இருக்க வேண்டும். அந்தக் கொள்கை இருக்கிறதா என்று பார்த்தால், இன்றைக்கு விலை குறைந்திருக்கிறது என்று சொல்ல மாட்டார்கள். 1950-ம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [4th March 1963

ஆண்டிலிருந்த விலையையும், இன்றைக்கிருக்கும் விலையையும் ஒப்பு நோக்கினால் எவ்வளவு புள்ளி உயர்ந்திருக்கிறது என்பது எவருக்கும் தெரியும்.

என்னுடைய இரண்டாவது கேள்வியைச் சொல்கிறேன். இரண்டு திட்டங்கள் முடிந்து மூன்றாவது திட்டத்திலும் இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. செல்வர்கள் மேலே போய்க்கொண்டும், வறுமையில் இருப்பவர்கள் கீழே போய்க்கொண்டும் இருக்கிறார்கள். இதற்கென்று கமிட்டி போட்டிருக்கிறோம், மகலனோபிஸ் கமிட்டி. ஆனால், இந்த நாட்டின் பொருளாதார அமைப்பு எப்படியிருக்கிறது? எட்டு வட நாட்டுக் கோடீஸ்வரர்களின் கையில் இன்றையதினம் 800 கோடி ரூபாய் வரையில் நாட்டின் மூலதனம் இருக்கிறது. நம் நாட்டில் இருக்கிற ஏறக்குறைய முப்பதாயிரம் ப்ரைவேட், பப்ளிக் லிமிடெட் கம்பெனிகளின் மூலதனத்தில் ஏறக்குறைய 35 சத விகிதம் பங்கு, இந்த எட்டு கோடீஸ்வரர்களுடைய குடும்பத்திலே இருக்கிறது. இன்றைக்கு நாட்டின் 80 சத விகித தனியார்த்துறையில் இருக்கும் மூலதனம் 50 பெரிய முதலாளிகள் நிறுவனங்களில்தான் இருக்கிறது.

கனம் விவசாய அமைச்சர் அவர்கள் நேற்று பேசியபோது, 'விவசாயத் தொழிலாளியின் வருமானம் ஆண்டொன்றுக்கு 375 ரூபாய்' என்று சொல்லியதைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். முன்னூற்று எழுபத்தி ஐந்து ரூபாய் ஆண்டொன்றுக்கு விவசாயினுடைய வருமானம் என்றால் நான்கு ரூபாய் தான் பத்து வருஷங்களில் வருமானம் ஏறியிருக்கிறது என்றால், இத்தனை கோடிக்கணக்கான ரூபாய்கள் எங்கே போய் முடங்கியிருக்கிறது? பணக்காரர்கள் செல்வச் சிகரங்களாகியிருக்கிறார்கள் என்பதைத்தவிர வேறு என்ன சமாதானத்தை நாம் சொல்ல முடியும்? மூன்றாவதாக விவசாயத்தைப்பற்றி ஏதோ புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. பற்றாக்குறை இவ்வளவு, இறக்குமதி இவ்வளவு, ஏற்றுமதி இவ்வளவு என்று புள்ளிவிவரம் கொடுக்கிறார்களே தவிர, இந்த நாட்டிலுள்ள உழவர்கள், குடியானவர்கள் ஆகியவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு நாம் இங்கே என்ன செய்தோம் என்று தெரியவில்லை. எங்களுடைய கட்சியைச் சார்ந்த சிலரும், திரு. சீமைச்சாமி போன்றவர்களும் பேசியது போல, விவசாயி இரண்டாந்தரப் பிரஜையாகவே இருந்துகொண்டிருக்கிறான். அவன் கொடுமையான முறையில் வாட்டப்படுகிறான். கடைசியாக சாமான்யக் குடிமக்களுக்கு இந்த சர்க்கார் என்ன செய்யப்போகிறது என்பதைத் துல்லியமாகச் சொல்ல வேண்டும். வெறும் அறிக்கையிலே அல்ல, புள்ளி விவரங்களில் அல்ல. இப்பொழுதுள்ள விவசாயிகளுடைய நிலையை மாற்றுவதற்கு என்ன பிரயத்தனம், என்ன காரியம் நாம் செய்தோம் என்பதைக் கண்டிப்பாகச் சொல்லவேண்டும். இதிலே ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்துவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நேற்று நாலணாவுக்கு ஒரு பாட்டில் மண்ணெண்ணெய் வாங்கியது இன்று ஆறணா அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அழுக்கைப் போக்க

4th March 1963] [திரு. ஜே. மாதா கவுடர்]

சோப் வாங்க அரையணாவாக இருந்ததற்குப் பதிலாக ஓரணா செலவிடவேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், வயல் புறத்தில், வாய்க்கால் ஓரத்தில் நாடு பூராவிலிருக்கும் கோடிக்கணக்கான விவசாய மக்கள் என்ன நிம்மதியுடன் வாழமுடியும்? அவர்களுடைய நிலையை மாற்றுவதற்கு என்ன பரிகாரத்தை இந்தச் சர்க்கார் செய்தார்கள்? இன்றைக்கு பெரிய முதலாளிகளுக்கு கோட்டைக் கதவுகளை, மதகுகளைத் திறந்து விட்டிருக்கிறீர்கள். அதற்குக் காவலாளிகளாக இருக்கிறீர்கள். நாளையதினம் முதலாளித்வக் கோட்டை உங்களையே அழித்துவிட்டு மிகப் பெரிய பயங்கரமான ஆதிபத்தியத்தை நிறுவத்தான் போகிறது.

ஏழை மக்கள் செத்து மடிந்துக்கொண்டிருக்கிறார்கள். கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் மூலமாக நான் தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்வேன். இன்றைக்குச் சீன ஆக்கிரமிப்பைவிட மிகப் பயங்கரமான நெருக்கடி ஒன்று நாட்டில் உருவாகிக்கொண்டிருக்கிறது. உள்நாட்டு நெருக்கடி ஒன்றைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் தான் கடந்த ஆண்டே நான் குறிப்பிட்டேன். எரிமலையில் இருந்து மகுடிவாசிக்கிறீர்கள் என்று நான் சொன்ன நேரத்தில் கோபம் வந்தது. ஆனால் இன்றைக்கும் அந்த நிலையில் இருந்தே காரியங்களைச் செய்துகொண்டு போகிறீர்களே தவிர, திசைமாற முயற்சிக்கவில்லை. என்னினால் உங்களால் முடியாதா? பஸ்களைத் தேசியமாக்க முடியாதா? தொழில்களை நடதத முடியாதா? யார் யாரையோ கைது செய்து சிறைப்படுத்தி வைக்க உங்களால் முடிகிறது. இவை உங்களால் முடியவில்லையா? முடியும். திருந்துவதற்குக் காலம் இன்னமும் இருக்கிறது. அத்தகையதொரு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் பயன் இல்லை. இந்த நிதி நிலை அறிக்கை நாட்டு மக்களால் நிராகரிக்கப்படவேண்டிய ஒன்று. பதினேழு கோடி ரூபாய்க்கு வரிச் சுமைக்கு வழி செய்கிற கனம் பக்தவத்சலம் அவர்களுடைய பட்ஜெட்டை நாட்டு மக்கள் நிராகரிக்கிறார்கள். நானும் இந்த பட்ஜெட்டை நிராகரிக்கிறேன் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையை மனமார வரவேற்கிறேன். ஆளும் கட்சிக்காரர்களாகிய எங்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை அல்வா போல இருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு இது எட்டிக்காய் போல இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? வரி எதுவும் விதிக்காத பட்ஜெட் இது என்றவுடன் நாங்கள் ஆரவாரம் செய்கிறோம். காரணம் நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடி நிலைமை நமக்குத் தெரியாதது அல்ல. இந்த நெருக்கடியின் காரணமாக புது வரி இவ்வாண்டு பட்ஜெட்டிலே விதிக்கப்படுமோ என்று இந்தச் சட்டமன்றத்திற்கு வந்த நாங்கள் பட்ஜெட் உரை கிடைத்தவுடன் கடைசிப் பக்கத்தைத்தான் பார்த்தோம். புது வரி விதிப்பு

[திரு. ஜே. மாதா கவுடர்] [4th March 1963

இல்லை என்று எழுதியிருந்ததைப் பார்த்தவுடன் தான் எங்களுக்கு மகிழ்ச்சி வந்தது. அதை கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன போது ஆரவாரம் செய்தோம். அது அல்வா துண்டுபோல எங்களுக்கு இருந்தது. இது எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எட்டிக்காய் போல் இருந்திருக்கலாம். இந்த அரசாங்கத்தின் மீது ஏதாவது குறை சொல்லவேண்டுமே என்று காத்து இருந்தவர்கள். மத்திய மந்திரி முரார்ஜி தேசாய் உங்கள் தலையில் கல்லைப் போட்டார்கள். மந்திரி பக்தவத்சலம் இன்னொரு பெருங்கல்லை உங்கள் தலையில் போட்டிருக்கிறார்கள் என்று மக்களிடையே சொல்லி தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடிக்கொள்ளலாம் என்று இருந்தவர்களுக்கு புதிய வரி எதுவுமே இல்லாத ஒரு பட்ஜெட் எட்டிக்காயாக இல்லாமல் எப்படியிருக்கும்? இப்படி புது வரிகள் எதுவும் போடாமல் கனம் அமைச்சர் அவர்கள் இருந்துவிட்டது நியாயமா? பாழுங் கிணற்றில் விழுந்தாற்போல, சீனாக்காரன் படையெடுப்பால் நாட்டில் எதிர்க்கட்சிகளே இருக்கக்கூடாது என்ற எண்ணம் மக்களிடையே உண்டானதன் காரணமாக நிலை குலைந்து கிடக்கும் ஒரு எதிர்க்கட்சிக்கு வரி என்று ஏதாவது புதிதாக கனம் அமைச்சர் கொண்டு வந்திருந்தால் அதை வைத்துக்கொண்டாவது கட்சி என்ற பெயரில் கொஞ்ச நாள் வெளியே தலைகாட்டிக்கொண்டிருக்க முடியுமே. அதற்கு வழியில்லாமல் கனம் அமைச்சர் அவர்கள் இப்படிச் செய்யலாமா? கனம் பக்தவத்சலம் அவர்கள் முரார்ஜி தேசாய்க்குப் பின்னால் நிற்கிறார் என்றால் கனம் மதியழகன் அவர்கள் அவர் பின்னால் நின்றாலும் அவ்வளவு உயரம் இருக்கமாட்டார்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் பக்தவத்சலம் பின்னால் நின்றாலும் என் உயரம்தான் இருப்பார்.

திரு. ஜே. மாதா கவுடர்: நீங்கள் நின்றாலும் அந்த உயரம் வர முடியாது தான். இப்படிப் பேசுவதில் பயன் இல்லை. இன்றைக்கு நாடு இருக்கக்கூடிய நிலையில் நம்முடைய மாநில பட்ஜெட்டில் புது வரிகள் எதுவும் இல்லாமல் இருப்பதை நாம் எல்லோரும் வரவேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படியிருக்க இந்த பட்ஜெட் நிராகரிக்கப்படவேண்டும் என்று கனம் மதியழகன் பேசினதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அவருடைய கட்சித் தலைவரே, இந்த பட்ஜெட் வெளியானவுடன் பத்திரிகைக்குச் சுருக்கமாகக் கொடுத்த அறிக்கையில் இந்த பட்ஜெட் வரவேற்கத் தக்கது என்று குறிப்பிட்டிருக்க அதற்கு முரணாக கனம் மதியழகன் அவர்கள் இது வரவேற்கத் தக்கது அல்ல என்று பேசுவது அவர்கள் கட்சிக்குள்ளேயே ஒற்றுமை இல்லையோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, புதிய வரி போடாத ஒரு நிலைமை வரவேற்கத்தக்கது என்று நான் சொல்லியிருக்கிறேனே தவிர, நிதி நிலை அறிக்கை முழுவதையும் வரவேற்பதாகச் சொல்லவில்லை.

4th March 1963]

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் மாதாகவுடர் அவர்களும் அந்த அளவுக்குச் சொல்லிக்கொள்ளலாம். (சிரிப்பு).

திரு. ஜே. மாதா கவுடர்: அவர் ஏதோ ஒரு அளவுக்கு ஆதரிப்பதாகவாவது சொன்னார், ஆனால் மதியழகன் அவர்கள் முற்றிலும் நிராகரிக்கத்தக்கது என்று குறிப்பிட்டதானது அவர்கள் கட்சிக்குள்ளேயே முரண்பாடு இருக்கிறதோ என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. விலைவாசி உயர்வைப்பற்றியும் ஒன்றுக்கொன்று முரணாகவே சொன்னார்கள். சென்ற ஆண்டு விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால் இந்த ஆண்டு விலைவாசி குறைந்துவிட்டதே என்று சொல்லுகிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: 1950-ஆம் வருஷ கணக்கையும் இப்போதுள்ள கணக்கையும் எடுத்துப் பார்த்தால் விலைவாசி புள்ளி விவரம் இப்போது 150க்குமேல் இருக்கிறது என்பதைப் பற்றித் தான் குறிப்பிட்டேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மாதிரி குறுக்கிட்ட நேர்த்தை எல்லாம் சேர்த்து எனக்குப் பேச இன்னும் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

விலைவாசி ஏறினாலும், இறங்கினாலும் அரசாங்கத்தின் மீது பழி சொல்வது என்று வந்தால் என்ன செய்வது? மக்கள் உண்மையைப் புரிந்துகொண்டு விட்டார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரணாகப் பேசுவதனால் பிரயோசனம் இல்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. தேபர் ஆவடி காங்கிரஸில் பேசிய பேச்சைப் பற்றிக் குறிப்பிட்டார். அதுதான் காங்கிரஸ்காரர்களின் பண்பு. நாங்கள் செய்த காரியங்களாகவே இருக்கலாம். குறை இருந்தால் குறையைக் குறை என்று ஒப்புக்கொள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஒருபோதும் தயங்குவது இல்லை. குறைகளை மறைத்துக்கொண்டு பேசவும் முயலுவது இல்லை. இதுதான் தலைவர்களுடைய பெருந்தன்மை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் அதிகச் செலவு செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்களுக்காக 8 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஊர்க்காவல் படை வேறு அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படிச் செலவு செய்து கொண்டிருக்கிற நேரத்தில் வெளியிலிருந்து யார் யார் என்ன வேண்டுமானாலும் பேசட்டும் என்று விட்டுவைப்பது நம்முடைய திட்டங்களை உருக்குலைக்கும். நாட்டின் நெருக்கடியை உத்தேசித்து நாம் பல காரியங்களை மேற்கொள்கிறபோது அவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையில் வெளியிலிருந்து யாராவது ஏதாவது

[திரு. ஜே. மாதா கவுடர்] [4th March 1963

பேசிக்கொண்டிருந்தால் அவர்களையும் உள்ளே பிடித்துப் போட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அவர்கள், 'இந்த நாட்டை யார் ஆண்டால் நல்லது' என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். நேருவுடைய தலைமை இல்லாமல் யார் இந்த நாட்டை ஆளவேண்டுமென்பதைப் பற்றி வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். நேரு இருக்கும் வரையில் பாகிஸ்தான் காரர்கள் எந்த விதமான ஒரு லாபத்தையும் பெற்றுவிட முடியாது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் அவர்கள் வேறு ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு அவர் தலைமையில் இந்த நாடு இருந்தால் நன்றாக இருக்குமென்று கூறுகிறார்கள். அவ்வாறு குறிப்பிட்டிருக்கக் கூடிய பெயர் தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய ஒரு பெரியவருடைய பெயர்தான். இப்போது எனக்கு ஏகபாரதம் விடுதலையடைய வேண்டுமென்று பாடுபட்டுக் கொண்டிருந்த அந்தக் காலம் நினைவுக்கு வருகிறது. அன்று 'பாகிஸ்தான் பிரிந்து விடுவது நல்லது' என்று சொன்ன ராஜாஜி அவர்களுடைய பெயரைத்தான் அயூப்கான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலைமையை நாம் உதாசீனம் செய்து விடுவதற்கில்லை. இந்த நிலைமை தமிழ் நாட்டுக்கே ஒரு பெரிய அபகீர்த்தி என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப் பட்டவர்களையெல்லாம் வெறுமனே விட்டுக் கொண்டிருப்பதிலே பிரயோசனம் இல்லை. இவர்கள் எல்லாம் நம்முடைய நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடியவர்களாகக் கூட இருக்கலாம். ஆகவே, சட்டத்தை நாம் திருத்தியாவது, மத்திய அரசாங்கச் சட்டத்தை திருத்த நம்முடைய அரசாங்கம் சிபாரிசு செய்து இப்படிப்பட்டவர்களை நெருக்கடி நிலைமை தீரும் வரையில் பெரிய ஜெயிலில் வைத்து விட்டால் நல்லது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member is making a speech on the Defence Budget. It should be done in Parliament and not here.

திரு. ஜே. மாதா கவுடர் : இதையெல்லாம்பற்றி மானியக் கோரிக்கைகள் வரும்போது ஒவ்வொன்றாகப் பேசிக்கொள்கிறேன். பாதுகாப்புச் செலவுகளுக்காக நாம் பணம் ஒதுக்கியிருக்கிற காரணத்தினால் நான் இதை உதாரணத்திற்காக எடுத்துச் சொன்னேன். கனம் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட் மிக மிக வரவேற்கத்தக்க ஒரு பட்ஜட். தமிழ் நாட்டின் சரித்திரத்திலேயே இல்லாத பட்ஜட். புது வரிகளைப் போடாமலும், அதே நேரத்தில் திட்டங்களின் அளவைக் குறைக்காத வகையிலும் இதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக கனம் நிதியமைச்சர் அவர்களை மனமாரப் போற்றி, வாழ்த்தி, மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

4th March 1963]

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1963-64-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையானது சிலருக்கு வியப்பையும், பலருக்கு மகிழ்ச்சியையும் தருகின்ற வகையில் அமைந்திருக்கிறது. தேசிய நெருக்கடியின் காரணமாக, விவசாயம், மின்சாரம், சிறுபாசனத் திட்டங்கள் தொழில் கல்வி ஆகியவற்றுக்கு அதிகப் பணம் ஒதுக்கியிருப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. அதே சமயத்தில் அத்தியாவசியமான துறைகளாகிய மருத்துவம், சுகாதாரம், கல்வி இவைகளுக்கும் ஓரளவு அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த வருஷத்தில் 17 லட்சம் டன் உணவு தான்ய உற்பத்தி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. உற்பத்தி முறையில் இருக்கக் கூடிய சில இடையூறுகளை நான் இங்கே கூற விரும்புகிறேன். உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்றால் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும் குளங்கள், அணைகள் செப்பனிடப்படவேண்டும். தற்போது அதிகப்படியான அணைகள் பழுதுற்றுக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் பழுதுபார்க்க முதலில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அநேக இடங்களில் வாய்க்கால்கள் இல்லாத காரணத்தினால் மழை ஜலம் பூராவும் ஏரிகளுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. புதிய வாய்க்கால்களை வெட்டுவதோடு, இருக்கக் கூடிய வாய்க்கால்களையும் செப்பனிடவேண்டும். அநேக சிறு பாசனத் திட்டங்களை அமுலாக்க முடியாமலே போய்விடுகின்றன. அதற்குக் காரணமாக 'டன் மதிப்பீடு' என்ற ஒன்றைக் கூறுகிறார்கள். டன் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதால் பிற்போக்கான பிரதேசங்களில் சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடிவதில்லை. ஆகவே, அதனுடைய மதிப்பை ஐந்தாயிரம் என்று அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பெரிய பாசனத் திட்டம், நடுத்தரப் பாசனத் திட்டம் இவைகளுக்காக அதிகப்படியான பணம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, சேலம் ஜில்லாவில் வெகு காலமாகக் கூறப்பட்டு வரும் சின்னாறு, தொப்பையாறு, வாணியாறு ஆகிய மூன்று திட்டங்களில் இப்போது ஒன்று கூட இடம் பெறவில்லை. இந்த ஆண்டிலேயே ஒரு திட்டத்தையாவது அமலுக்குக் கொண்டு வர அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிர்கள் அடிக்கடி நோயால் பாதிக்கப்படுவதால் உற்பத்தியைப் பெருக்க வசதியில்லை. பயிர்கள் நோயால் பாதிக்கப்படும் காரணத்தை ஆராய்ந்து நோய்கள் வராமல் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்] [4th March 1963

அதிகப்படியான கிணறுகள் வெட்டும் திட்டம் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்பதோடு அதிகப்படியான ஏரி குளங்களையும் கட்ட ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாய உற்பத்திக்கு மின்சாரம் மிக அவசியம் என்பது நன்கு அறிந்த விஷயமாகும். விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கும் விஸ்தரிப்புத் திட்டத்தில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது. அதனைச் சீக்கிரமாகச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சாரத் திட்டத்திற்காக அரசாங்கம் செய்யும்படியான செலவில் 10 சதவிகிதத்தை ஒவ்வொரு ஆண்டும் பெறவேண்டுமென்ற விதி இருப்பதாகத் தெரியவருகிறது. பிற்போக்கான பிரதேசங்களில் இந்த விதியை ஓரளவிற்கு தளர்த்திக் கொடுத்து மின்சார விஸ்தரிப்பைத் துரிதமாகச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால் கிராமப் புறங்களில் சுகாதார முன்னேற்றமே இல்லையென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது டாக்டர்கள் கிடைப்பதில்லையென்ற காரணம் சொல்லப்பட்டு வருகிறது. அதற்காக ஹோமியோபதி முறையை சீக்கிரம் அங்கீகாரம் செய்து டாக்டர்களை நியமித்து கிராம மக்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம ஆஸ்பத்திரிகளில் மருந்துகளுக்காக சாங்ஷன் செய்யப்படுகிற தொகையில் மூன்றில் ஒரு பங்கு போஸ்டேஜ், பாக்கிங் ஆகிய செலவுகளிலேயே அடிபட்டு விடுகிறது. ஆகவே, அந்தத் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-00 a.m. தற்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களிடம் ஒப்படைத்திருக்கும் ரெகுலர் டிஸ்பென்ஸரிகள் நன்கு பராமரிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினால் அவைகளை அரசினரே எடுத்து பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக கீழ்பாக்கத்திலுள்ள மருத்துவக் கல்லூரியை சென்ற ஆண்டிலேயே சேலத்தில் நிறுவுவதாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். சேலம் மாநகரம் நான்கு ஜில்லாக்களுக்கு நடுநாயகமாக விளங்குகிற காரணத்தினால் சேலத்திலே அதை நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுகாதாரம், மருத்துவம் இந்த இரண்டு துறைகளையும் இணைக்கும் எண்ணம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. இப்படி அவைகளை ஒன்றாக இணைத்தால் நல்லமுறையில் நடக்காது என்பது என் அபிப்பிராயம். இந்த இரண்டு துறைகளும் தனித் தனியாக வேலை செய்ய வேண்டுமே தவிர இவைகளை ஒன்றாக இணைக்கக் கூடாது. ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக கல்வியைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன் அநேக இடங்களில் இட வசதி இல்லாது உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் 200 பேர்கள் அமர வேண்டிய இடத்தில் 400 பேர்களையும் அதற்கு மேற்பட்டும் அடைத்து வைத்

4th March 1963] [திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்]

திருக்கும் நிலையைக் காண்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட இடங்களுக்கு முதல் இடம் கொடுத்து கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து நல்லமுறையில் அவைகள் இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு "கேர்" ஸ்தாபனத்தால் அளிக்கப்படும் உதவிகளை, பால் பவுடர், கோதுமை போன்றவற்றை துர்விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்லமுறையில் வளர்ச்சி அடைந்திருந்தபோதிலும் நில அடமான பாங்குகள் "டிபென்சர்கள் ப்ளோட்" செய்தால் பொதுமக்கள் பணம் கொடுப்பதற்கு முன் வருவதில்லை. ஆகவே அரசாங்கமே டிபென்சர் ப்ளோட் செய்து அவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1906-ம் ஆண்டிலே சர்வே செய்ததை மறுபடியும் சர்வே செய்யாததால் கூட்டுப் பட்டாக்கள் அதிகமுள்ளதால் நில அடமானம் பாங்குகள் அவர்களுக்கு கடன் பட்டுவாடா செய்ய கஷ்டங்கள் பல இருக்கின்றன. ஆகவே ரி-சர்வே செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக முதியோர்களுக்கு அளிக்கும் உதவிப் பணம் பொறுத்த மட்டில் 60 அதற்கு மேற்பட்ட வயது ஆன அங்கஹீனர்களுக்குத்தான் உதவி கொடுக்க வேண்டுமென்று ஒரு விதியிருக்கிறது. இதைத் தளர்த்தி அங்கஹீனர்களுக்கு வயது நிர்ணயம் இல்லாமல் உதவி பணம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் பொற்கொல்லர் அவலநிலையைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் எனக்கு இந்த வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டும் முடித்துக்கொள்கிறேன்.

திரு. பா. ராஜகோபால் நாயுடு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நிதி நிலை அறிக்கையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எங்கள் தொகுதியில் உள்ளவர்களும் நாங்களும் என்ன நினைத்தோம் என்றால் 28-ம் தேதி மத்திய அரசாங்கம் நிறைய வரி போட்டார்கள், நம் அரசாங்கம் எவ்வளவு வரி கொண்டு வருவார்களோ என்று ரொம்பப் பேர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் முடிந்த வரையில் நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் நல்ல முறையில் நல்லவர்கள் வரவேற்கும் முறையில் இந்த அறிக்கையை சமர்ப்பித்திருப்பது கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். என் தொகுதியாகிய காட்பாடித் தொகுதியில் படாஸ்கர் அவார்டு வந்த பிறகு பரதராம் போன்ற சில கிராமங்கள் எங்கள் காட்பாடியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. பரதராமிலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஜாலி வலசை என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் 2,000 பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மூன்று பேர்கள்தான் இருக்கிறார்கள். 1958-க்குப் பிறகு படாஸ்கர் அவார்ட் வந்த பிறகு அங்கு ஒரு பள்ளிக்கூடம் கூட கிடையாது, குடிக்க தண்ணீருக்குக்கூட ஒரு கிணறு கிடையாது. அங்கு முன்பு ஒரு மானேஜ்மெண்ட் ஸ்கூல் இருந்தது.

[திரு. பா. ராஜகோபால் நாயுடு] [4th March 1963

ஆனால் அந்தப் பகுதி நம் மாநிலத்தோடு இணைந்த பிறகு ஒரு பள்ளிக்கூடம் கூட அங்கு இல்லை. அதுபற்றி நான் பஞ்சாயத்து போர்டிலும் சொல்லியிருக்கிறேன். இவ்வளவு ஆண்டுகளாகியும் அங்கு ஒரு பள்ளிக்கூடம் கிடையாது. ஒரு கிணறு கிடையாது. ரோடு வசதியும் கிடையாது. 1963-64-ல் கல்விக்காக ஒதுக்கியிருப்பது 27 கோடி 58 லட்சம் ரூபாய். ஆக இப்படி நமது வருவாயில் கால் பங்கு கல்விக்காகச் செலவிடும் சமயத்தில் நம் மாநிலத்தில் பள்ளிக்கூடம் என்பது என்னவென்று தெரியாத கிராமங்கள்கூட இருக்கின்றன. ஆந்திரா தேசத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கும் கிராமங்களிலுள்ளவர்களைப்பற்றி ஒன்றுமே சொல்ல முடியாது. அந்த மக்களைப் பார்க்கவே முடியவில்லை. நான் இரண்டு தடவை சென்று பார்த்தேன். ஜனவரியில் போய் வந்தேன். அந்த மக்கள் படும் கஷ்டத்தைச் சொல்லி முடியாது. அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். ஆக, புதிதாக நம் மாநிலத்திற்கு வந்து சேர்ந்திருக்கும் இந்த இடங்களில் பள்ளிக்கூட வசதி, ரோடு வசதி, தண்ணீர் வசதி ஆகியவை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடியாத்தத்தில்தான் சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. பரதராமிலிருந்து குடியாத்தம் வரவேண்டுமானால் 14 மைல் வரவேண்டியிருக்கிறது. இதற்கிடையில் ஒரு ஆஸ்பத்திரியும் கிடையாது. ஆந்திராவில் இருந்தபோது பரதராமில் ஒரு ஆஸ்பத்திரி இருந்தது. ஆனால் அப்பகுதி தமிழ் நாட்டிற்கு மாறியவுடன் அங்கிருந்த மருந்து போன்றவற்றை எல்லாம் எடுத்துச் சென்று விட்டார்கள். அப்பகுதி நம் மாநிலத்திற்கு வந்த பிறகு அங்கு ஒரு ஆஸ்பத்திரிகூட கிடையாது. அதிலிருந்த ஜன்னல்கள், கதவுகள் எல்லாம் போய் விட்டன. கட்டிடம் மட்டும்தான் இருக்கிறது. அங்கு கொத்தூர், விழு தோணிபாளையம் என்ற கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ள மக்கள் 3½ மைல் சென்றால்தான் ரோடிற்கு வர முடியும். அங்கு ரோடு வசதியே கிடையாது. எங்கு பார்த்தாலும் காவாய்தான். அப்படி ரோடுக்கு வந்தாலும் அங்குள்ளவர்கள் 10 மைல்கள் சென்றால்தான் ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியும். ஒரு பெண்ணிற்கு பிரசவ வேதனை ஏற்பட்டு ஒரு கட்டிலில் கொண்டு வந்தார்கள். ஆனால் வழியில் மருத்துவ வசதி இல்லாமல் அப்பெண் இறந்து விட்டாள். ஆகவே அந்த ஊர்களுக்கு அருகில் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். அதை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஊரிலிருந்து 14-வது மைலில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இதற்கு முன்னால் ஹைஸ்கூலே கிடையாது, ஆந்திர பிரதேசத்தில் இருந்த போது கிடையாது. அப்போது ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்தான் இருந்தது. சென்னையோடு சேர்ந்த பின்னால்தான் ஹைஸ்கூல் வந்திருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்னால்தான் வந்தது. இதில் படிக்கின்ற மாணவர்களும் பரதராம் வழியாகத்தான் வரவேண்டியிருக்கிறது. இல்லையென்றால் குடியாத்தத்திற்கு வந்துதான் போக வேண்டும்.

4th March 1963] [திரு. பா. ராஜகோபால் நாயுடு]

ஆகவே இந்த இரண்டு ஊருக்கும் மத்தியில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் நல்லதாக இருக்கும். இதற்கு அங்குள்ள ஆட்களே பணம் வசூல் செய்வது என்பது முடியாத காரியம். காரணம் அங்குள்ள மக்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஆகவே சர்க்காரே ஏதாவது பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், எங்கள் தொகுதியிலிருந்து எனக்கு முன்னால் வந்திருந்த அங்கத்தினர் அவர்களும் மோர்தானா அணை கட்ட வேண்டும் என்று சொன்னதை நான் பார்த்திருக்கிறேன். கனம் முதலமைச்சர் அங்கு வந்திருந்தபோதும் இதைப்பற்றி அவர்களிடத்தில் அங்குள்ள மக்கள் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் அதை செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ இன்னும் நடக்கவில்லை. எங்கள் காட்பாடி தொகுதியில் தெற்கில் ஒரு ஏரி இருக்கிறது. வடக்குப் பக்கத்தில் ஏரி கிடையாது. மழை பெய்யும்போது இந்த ஏரியில் தண்ணீர் வந்தாலும் நாங்கள் அதை பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. பாக்கம் ஏரி என்ற ஒரு ஏரியும் இருக்கிறது. இதன் மூலமாகவும் தண்ணீர் போதிய அளவு பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. இதில் தண்ணீர் அதிகமாக வந்தால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தண்ணீர் இறைப்பதற்கு பம்புசெட் வைப்பதற்கும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவ்விதம் பம்பு செட்டுக்கு அனுமதி கொடுத்திருந்தும் அதை நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. காரணம் இந்த இடத்தில் ஒரு இஞ்சு மழை பெய்தாலும் கொல்லப்பள்ளி என்ற நதியில் அதிகமான அளவில் தண்ணீர் வரும். ஆனால் நாடார் நதி என்ற ஒரு நதி குறுக்கே வந்து இந்த தண்ணீரை எல்லாம் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. இதன் காரணமாக ஏரியில் போதிய அளவு தண்ணீர் வருவதில்லை. இதற்காக ஐந்தாறு வருஷங்களாக யார் யாரையெல்லாமோ பார்க்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்களிடத்திலும் எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறோம். இன்னும் எந்தவிதமான பரிகாரமும் கிடைக்கவில்லை. இதற்காக குடியாத்தத்தில் இரண்டு கல்வெர்ட் கட்டி கொடுத்து விட்டால் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது தஞ்சைக்கு அடுத்தபடியாக அதிகமான அளவில் விவசாயம் செய்வது குடியாத்தத்தில் தான் என்று சொன்னார்கள். உண்மையில் எங்கள் பக்கத்திலுள்ள விவசாய பெருமக்கள் எல்லோரும் மிகவும் கஷ்டப்பட்டு விவசாயம் செய்கிறார்கள். எங்கள் பக்கத்திலுள்ள ஜோத்பூர் என்கிற இடத்திற்கு போயிருந்தபோது நான் பார்த்தேன், அங்கே உள்ள கிணறுகளில் 150 அடி 200 அடி கீழேதான் தண்ணீர் இருக்கிறது. பம்பு செட் வைத்து வெயில் காலத்தில் கஷ்டப்பட்டு தண்ணீர் இறைத்து விவசாயத்தை நடத்தி வருகிறார்கள். பொதுவாக விவசாயத்தில் வருகின்ற வருமானத்தில் பெரும் பாகத்தையும் விவசாயத்திற்காகவே செலவு செய்துவருகிறார்கள். ஆகவே

போதிய அளவு விவசாயத்தில் பயன் பெறுவதில்லை. எங்கள் பக்கத்தில் முக்கியமாக நாங்கள் வாழை, கத்தரிக்காய் போன்ற வெஜிடபிள் கிராப்ஸ் தான் அதிகமாக செய்கிறோம். நெல்லை மட்டும் நம்பிக்கொண்டிருப்பதில்லை. கரும்பு போன்ற கமர்ஷியல் கிராப்களைத்தான் அதிகமாக விவசாயம் செய்கிறோம். இப்படியெல்லாம் இருந்தும்கூட தண்ணீர் கஷ்டம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது.

எங்களுக்கு இருக்கின்ற இன்னொரு கஷ்டம் என்னவென்றால், ஒரு விவசாயிக்கு ஐந்து குதிரை ஓட்டமுள்ள மின்சாரம் கொடுப்பதாக இருந்தால் அவர் வருடத்திற்கு 50 ரூபாய் மினிமம் கட்ட வேண்டியிருக்கிறது. இவ்விதம் அதிகமான அளவில் ரூபாய் கட்டவேண்டியிருந்தும், ஒவ்வொரு வருடத்திலும் மூன்று மாதம், நான்கு மாதம்தான் சரியாக பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. ஐந்தாவது, ஆறாவது மாதத்தில் எல்லாம் எப்போதாவது ஒரு மணி நேரம், இரண்டு மணிநேரம்தான் மின்சாரத்தை உபயோகப்படுத்திக்கொள்ள முடிகிறது. இதையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது 100 ரூபாய் செலவாகியிருந்தால் மினிமம் 150 ரூபாய் கொடுத்தாகவேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற வரவுசெலவு திட்டத்தின் மீது உங்கள் அனுமதியின் பேரில் என்னுடைய சில கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1963-64-ம் ஆண்டு பட்ஜெட்டில் புது வரிகள் ஒன்றுமில்லை, ஆகவே இதை மக்கள் மனமார வரவேற்கிறார்கள் என்று கூறி அதை ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசினார்கள். ஆனால் எதிர்கட்சியிலிருக்கின்ற எங்களைப்போன்றவர்கள் அதிலிருக்கின்ற இடர்பாடுகளை, குறைபாடுகளை எடுத்துக் காட்ட கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். வரியில்லை என்று சொல்லப்படுகிறதே தவிர, வரிகள் எல்லாம் ஏற்கனவே மறைமுகமாக மக்கள்மீது எந்தெந்த வகையில் சுமத்த முடியுமோ அந்த அளவுக்கு சுமத்துகின்ற அளவில், நம்முடைய தமிழ்நாட்டு சர்க்காரும் மத்திய சர்க்காரும் ஏற்கனவே விதித்திருக்கிறார்கள். அவ்விதம் விதித்து வசூல் செய்தும் வருகிறார்கள். என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1962-63-ம் ஆண்டில் இதே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட்டில் வரவு 106 கோடி 50 லட்சம் என்றும், செலவு 116 கோடி 1 லட்சம் என்றும், அதில் துண்டு விழுகின்ற தொகை 9 கோடி 51 லட்சம் என்றும் காண்பித்திருந்தார். ஆனால் அவ்விதம் துண்டு விழுந்த 9 கோடிக்கு மேல் சரிகட்டி இந்த ஆண்டு பட்ஜெட்டை தயாரித்திருக்கிறார்கள் என்று

தான் சொல்ல முடியும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரவு 124 கோடி 55 லட்சம் என்றும், செலவு 127 கோடி 19 லட்சம் என்றும் காண்பித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை பார்க்கின்ற நேரத்தில் 18 கோடி ரூபாய நமக்கு வருமானம் கிடைத்திருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இந்த 18 கோடி ரூபாயும் எந்த வகையில் கிடைத்திருக்கிறது? வரி என்று தனியாக தெரிவிக்காமல் மக்களிடத்தில் மறைமுகமாக போட்டுத்தான் இந்த வருமானத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டு துண்டு விழுந்தது 9 கோடியும் சரிகட்டி மீதம் 8 கோடி காட்டப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு வருமானம் பெறக்கூடிய வகையில் மக்கள்மீது வரிச் சுமை போடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு சாமர்த்தியமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த வரவு செலவு திட்டத்தை தயார் செய்திருக்கிறார் என்பதை நம்மால் சொல்ல முடியும். ஆனால் இதை நாங்கள் எடுத்துக்கூறும்போது, நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள், "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எப்போதும் குறையைத்தான் சொல்லிக்கொண்டிருப்பார்கள், அதுதான் அவர்களுடைய கட்சியின் வேலை. ஆகவே அவர்களுடைய எண்ணமும் அதுவாகத்தான் இருக்க முடியும் இல்லாவிட்டால் மக்கள் மத்தியில் அவர்கள் எப்படிப் போவார்கள்" என்று சொல்வார்கள். ஆனால், நம்முடைய மாநில சர்க்கார் வரி விதிக்காவிட்டாலும், இன்றைய தினம் மத்திய சர்க்காரினால் 275 கோடி ரூபாய்க்கு மேல் விதிக்கப்பட்டிருக்கிற வரி யார் மீது விழுந்திருக்கிறது? நம்முடைய மாநிலத்தில் இருக்கிற பணக்காரர்கள் தலைமேல் விழுந்திருக்கிறதா? அல்லது ஆலை அரசர்கள் மீது விழுந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஆனால் ஏழை மக்களை, நடுத்தர மக்களை, மிகவும் கீழ் நிலையில் இருக்கிற குடிமக்களைப் பாதிக்கும் நிலையில் இருக்கிறது. அப்படி மத்திய சர்க்கார் போட்டிருந்தாலும், பாதிக்கப்பட்டவர்கள் நம்நாட்டில் இருக்கிற மக்கள்தான். அவர்கள் இந்த சர்க்காரைப் புகழ்வார்களா? ஆளுவது இங்கும் காங்கிரஸ் சர்க்கார், மத்திய சர்க்காரிலும் காங்கிரஸ் சர்க்கார் தான். அப்படிப் பார்க்கும்போது அவர்கள் விதித்தாலும் வரி, நம் சர்க்கார் விதித்தாலும் வரி என்ற முறையில், இந்தச் சர்க்காரை வெறுக்கத்தான் செய்வார்களே தவிர, ஆதரவு கொடுக்க மாட்டார்கள். குறிப்பாக, கிராம மக்கள் பெரும்பாலும் மண்ணெண்ணெயை நம்பி வாழ்கிறார்கள். அந்த மண்ணெண்ணெய்க்கும்கூட, இப்படிப்பட்ட தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில், கிராம மக்கள் தியாகத்தை செய்வதற்குக் கடமைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுக்கு மண்ணெண்ணெய்க்குக்கூட பஞ்சம் ஏற்படுகிறது என்று சொன்னால், அதற்குக்கூட நாம் உபகாரம் செய்து கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் நம்மைப் புகழ்வார்களா, பாராட்டுவார்களா என்று நான் கேட்கிறேன். கிராமங்களில் விளக்கை எரிய வைக்கவேண்டிய சர்க்கார், இது ஜனநாயக சர்க்கார், என்று சொல்லவேண்டிய நோத்தில், இன்றைய நிலையில்

[திரு. சோ. ஆறுமுகம்] [4th March 1963

இந்தச் சர்க்கார் கிராமங்களில் எரிகின்ற விளக்கை அணைக்க முற்படுகிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் நானும் என்னுடைய கருத்துக்களையும், எனது தொகுதியின் கருத்துக்களையும் எடுத்துக் கூறியிருக்கிறேன். சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி நாங்கள் சொன்னோம். அந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்கள் விரைவில் எதிர்பார்க்கலாம், காயாக இருப்பது கனியும், அருந்தலாம், என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார். நாங்களும் மகிழ்ச்சியோடு இருந்தோம். ஆனால் அது இன்னும் ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருக்குமானால் நம் தொழில்துறையில் எப்போது முன்னேற்றம் ஏற்படுவது?

இன்றைய நெருக்கடி நிலையில், கைத்தறிப் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தத் துறையில் 8 லட்சத்துக்கு மேல் நம் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நெருக்கடி நிலைமை காரணமாக பட்டுகள் கிடைக்காமல், பட்டுகள் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் பட்டுத் தொழில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் ஏதாவது செய்யவேண்டும் என்று எங்களைப்போல் இருப்பவர்களை, ஆளும் கட்சி அங்கத்தினர்களைக்கூடக் கேட்டிருக்கிறார்கள். அந்த முறையில் கனம் அமைச்சர்களைக்கூடக் கேட்டுப்பார்த்திருக்கக் கூடும். சிறுநெருக்கடியில்கூட அப்படிப்பட்ட தொழிலை நம்பியிருக்கக்கூடிய கைத்தறிக்காரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அடுத்தபடியாக பெரிய நெருக்கடி நிலைமை ஏற்படுமானால், கைத்தறித் தொழில் நின்று விட்டாலும்கூட மாற்றுத் தொழில்களுக்கு வசதி செய்து கொடுக்கவும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவும் நம் சர்க்கார் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த அடிப்படை காரணத்தை வைத்தாவது, சாதாரணமாகத் தொழிலை நம்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு, ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுப்போம், கவலைப்படாதீர்கள் என்று உறுதி மொழி அளிக்கும் வகையில், சேலம் இரும்புத் தொழிற்சாலையை விரைவில் அமைக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் மிகவும் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இனாம் நிலங்களைச் சர்வே செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. எனது தொகுதியில் இம்மாதிரி நான்கு கிராமங்கள் இருக்கின்றன. பூலவரி அக்ரகாரம் இனாம்பைகோழி அக்ரகாரம் மின்னக்கல், சின்ன சீரகாப்பாடி என்ற கிராமங்கள் இருக்கின்றன. விவசாயப் பெருக்கத்திற்காக நாம் பல கோடி ரூபாய்களை ஒதுக்கினாலும்கூட, இனாம் நிலத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் இதனால் பயன் அடையாமல் இருக்கிறார்கள். அவர்கள் லோன் கேட்டால் கொடுப்பதில்லை. அல்லது அவர்கள் கிணற்றுக்கு பம்ப்-செட் வைக்கவேண்டுமென்று சொன்னாலும், எலெக்ட்ரிசிட்டி ஆபீசில் கேட்டால், எஞ்சினீயர்கள் 'உங்கள் நிலம் சர்வே

4th March 1963] [திரு. சோ. ஆறுமுகம்]

செய்யப்படவில்லை, ஆகவே சர்வே செய்யட்டும்' என்று மழுப்பி விடுகிறார்கள். ஆகையால் எந்த வித பலனையும் அடைய முடியாத வகையில் இனாம் நிலங்களில் இருக்கக்கூடிய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சர்க்காரில் ஏதாவது ஒரு பாதை போட வேண்டும் என்று கேட்டாலும், சர்வே செய்யப்படவில்லை, சர்வே செய்யப்பட்ட பிறகுதான் பாதை போட சர்க்கார் மான்யத் தொகை வழங்க முடியுமே தவிர, சர்வே செய்யப்படாது இருக்கின்ற வரை நாங்கள் மான்யத் தொகை கொடுக்க முடியாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே இந்த அடிப்படை காரணத்தை வைத்தாவது சர்வே செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது, அதிகாரமானது விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும். எல்லா கிராமங்களையும், எல்லா மாவட்டங்களில் இருப்பவைகளையும், எஸ்டேட் நிலங்களை உடனடியாக ஒரு குறிப்பிட்ட காலம் வைத்து, 6 மாதங்களுக்குள் முடித்துக்கொடுப்போம், அல்லது 3 மாதங்களுக்குள் செய்து கொடுப்போம் என்ற உறுதி மொழியைச் சபையிலே கொடுத்து அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை நாட்டு மக்களை வாட்டுவதாக இருக்கிறது, நாட்டு மக்களுக்கு நல்லதொரு வாழ்க்கை வசதி இல்லை, தொழிலில் முன்னேற்றம் இல்லை என்று கூறி என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திருமதி அ. கிருஷ்ணவேணி:** மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1963-64-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய நம் முதல் அமைச்சர் அவர்கள், நம் நாட்டு மக்கள் புகழ்வது மட்டுமல்லாமல் அன்னிய நாட்டாரும் புகழக்கூடிய நிலைமையில் நமது அரசாங்கத்தில் மந்திரி சபையை அமைத்து, பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுக்கொண்டு, குறிப்பாகப் பார்க்கபோனால் விவசாயத் துறையிலும், கல்வித் துறையிலும், தொழில் துறையிலும் நமது நாடு அதிகப்படியான முன்னேற்றம் அடைந்து வந்திருக்கிறது. மேலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் மேன்மேலும் அதிகப்படியான முன்னேற்றத்தை அடையவேண்டும் என்ற திட்டத்தைச் சமர்ப்பித்துக்கொண்டு வருகின்ற இந்த நேரத்தில், மண்ணாசையும், பேராசையும், பொறாமையும் கொண்ட ஈனச் சீனர்கள் நமது நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் காரணத்தினால் நம் தேசத்தின் பாதுகாப்புக்கு நிதி திரட்ட வேண்டிய நிலையும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நிலையிலும், சில திட்டங்கள் தடங்கல் பட்டுக்கொண்டு வருகிற இந்த நேரத்திலும், மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள், நாட்டு மக்கள் புகழக்கூடிய நிலையில் இந்த 1963-64-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருப்பதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன்,

[திருமதி அ. கிருஷ்ணவேணி] [4th March 1963

அடுத்தபடியாக தமிழ்நாட்டு சர்வீஸ் கமிஷன் மெம்பர்களில் என்னைப் போன்ற தாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களில் ஒருவரை மெம்பராகத் தேர்தெடுக்கும்படி ஹரிஜனங்கள் சார்பாக நான் மிகவும் வணக்கத்துடன் நம் அசராங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைவதற்குக் குடிசைக் கைத்தொழில் போன்ற வைகளை ஏற்படுத்துவதுடன், அவர்கள் வர்த்தகம் செய்வதற்கு ஒரு திட்டத்தை வகுத்து நிறைவேற்றிக்கொடுத்தால் அந்தப் பின் தங்கிய மக்கள் பொருளாதாரத் துறையில் ஏதோ
11-40 a.m. கொஞ்சம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைவார்கள். ஆகையால் ஏழை ஹரிஜன மக்கள் மேல் கருணை வைத்து குடிசை கைத்தொழில் திட்டத்தை நிறைவேற்றிக்கொடுக்கும்படி நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் உசிலம்பட்டி, பேரையூர், எழுமலை ரஸ்தாக்களில் சில இடங்களில் பாலங்கள் கட்டப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. மழைக்காலங்களில் அந்த ரஸ்தாக்களில் அதிகப்படியான வெள்ளப் பெருக்கு எடுத்து வந்துகொண்டிருக்கிறது அதனால் கால் நடையாகச் செல்லும் பொதுஜனங்களுக்கும் சர்வீஸ் பஸ்களுக்கும் போக்குவரத்துக்கும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலங்களை உடனடி யாகக் கட்டி முடிக்கவேண்டும் என்று நான் அரசாங்கத்தை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டி-தெப்பம்பட்டி, கண்டமனூர் —வரசநாடு ரஸ்தாக்களை ஹைவேஸ் டிபார்ட்மெண்டோடு சேர்த்து, அங்கெல்லாம் சர்வீஸ் பஸ்களை விடுவதற்கு உடனடியாக திட்டங்களை நிறைவேற்றும்படியாக நான் அரசாங்கத்தை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் வாசநாட்டு ஏரியாவில் சுமார் 20 ஆண்டு காலமாக ஏழை விவசாயிகளும் ஹரிஜன மக்களும், பின்தங்கிய வகுப்பினர் களும், அவர்களுக்குள்ள காடுமேடான நிலங்களை பண்படுத்தி, விவ சாயம் செய்துகொண்டு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார் கள். அவர்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தண்டத் தீர்வை யையும் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். காட்டு இலாகா அதிகாரிகள் அந்த ஏழை விவசாயிகள் விவசாயம் செய்யக் கூடிய நிலங்களை விட்டுவிட்டும் கிராமங்களிலிருந்து வெளி யேறும்படியும், விவசாயம் செய்யக்கூடிய காடுகளை விடும்படியும் அவர்களை கஷ்டப்படுத்துவதற்காக அங்குள்ள விவசாய மக்கள் கூறுகிறார்கள். ஆகவே, அந்த ஏழை விவசாயிகள் மீது அரசாங்கம் கருணை வைத்து, மிருகங்கள் வாழக்கூடிய இடங் களில் விவசாயம் செய்யக்கூடிய ஏழை மக்களின் மீது இரக்கம் காட்டி, அவர்கள் விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை அவர் களுக்கே சாரி செய்து பட்டா போட்டுக் கொடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், நமது காட்டு

4th March 1963] [திருமதி அ. கிருஷ்ணவேணி]

இலாகா அமைச்சர் அவர்கள் அங்குள்ள ஏழை மக்களின் அழைப்பிற்கு இணங்கி, அந்த ஏழை விவசாய மக்கள் விவசாயம் செய்யக்கூடிய காடுகளை நேரடியாக பார்வையிட்டு வரும்படி நான் மிகவும் வணக்கத்துடன் அமைச்சர் அவர்களை அங்கு அழைக்கிறேன்.

அடுத்தபடியாக, முன்னால் இருந்த பெரியோர்கள் கூறி வந்ததாகவும் இப்பொழுது இருக்கிற பெரியோர்கள் கூறு கிறார்கள் ஆண்டிப்பட்டி தொகுதி ஆண்டவனால் கைவிடப்பட்டது என்று. அந்த ஆண்டிப்பட்டி தொகுதி மிகவும் பிற்போக்கான பகுதி. ஆகவே, ஆண்டிப்பட்டி தொகுதியை பிற்போக்கான பகுதி ஜாபிதாவில் சேர்த்து, பிரகடனம் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரியகுளம் தாலுகாவில் முதியோர் உதவிப் பணத்திற்காக சில சிபார்சுகள் செய்து, சில பேர்களுக்கு பண உதவி கிடைத்திருக்கிறது. இருந்தாலும், சம்பந்தப்பட்ட தாலுகா அதிகாரிகள், அதாவது தாசில்தார் நேரடியாகப் போய் அந்த முதியோர்கள் எப்பேர்ப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்து மீதியுள்ள விடப்பட்டவர்களுக்கு அம் மாதிரி பண உதவி அளித்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியை எடுத்துக்கொண்டால், எத்தனையோ பேர்கள் கண் பார்வையில்லா மலும், கை, கால் முடமாகவும் உள்ள நிலையில் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள் எந்த ஆதரவும் இல்லாத முதியோர்களாக இருக்கிறார்கள். அதையெல்லாம் நல்ல முறையில் தாலுகா அதிகாரிகள் பரிசீலனை செய்து, முதியோர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரை யை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வி. சீராமுலு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற முன்வருகிறேன். இந்த நிதிநிலை அறிக் கையைப் பார்க்குங்கால், இந்த அறிக்கையானது மத்திய அரசாங்கத்தின் கண்டிரோலிலிருந்து வருவதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால், மத்திய அரசாங்கம் இப்பொழுது 257½ கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் எல்லா மாநில நிதி அமைச்சர்களையும் ஒன்றுகூட்டி 'நீங்கள் எல்லோரும் ஒருமித்த மனதோடு எந்தவிதமான வரியையும் போடக்கூடாது' என்று கேட்டுக்கொண்டதின் பேரில்தான், இவர்கள் எந்தவிதமான வரியும் போடாமல் விட்டு விட்டார்களோ என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அங்கே பார்த்தால், 'நாங்கள் போடுகிறோம்' என்று சொல்லி, 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்ற காரணமாக 'அந்த இடத்தில் போடுகிறோம். நீங்கள் இங்கே வரி போடாதீர்கள்' என்று சொல்லியிருப்பதாகத்தான் தோன்றுகிறது. அதன்

காரணமாகத்தான் இந்த நிதி நிலை அறிக்கையை வரி இல்லாமல் சமர்ப்பித்துள்ளார்கள் என்று நான் நினைக்கிறேன். மற்றொன்று, எந்த அரசாங்கமும் ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் பொழுது பல வரிகள் போடத்தான் செய்யும். அப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலே நம் மாநில அரசாங்கம் ஏதாவது வரி விதித்தால் அதைத் தெரிந்துகொள்ள மாநில அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகளுக்கு 6 மாத காலம் ஆகிறது. ஆனால் ஒரு வரியைவிதிக்க வேண்டும், அல்லது எடுக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் கூறினால், அடுத்த நிமிடமே டெல்லியில் என்ன நடக்கிறது, சென்னையில் என்ன நடக்கிறது, கன்யாகுமரியில் என்ன செய்கிறார்கள் என்பதனை அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். 257½ கோடி ரூபாயில், சிறு தொகை அதாவது 10¼ கோடி ரூபாய் அளவுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அது கடலில் பெருங்காயம் கரைத்தது மாதிரி இருக்கிறது. வெஜிடபிள் ஆயில்ஸ் ப்ரொடக்ஷனுக்காக வரி போடுவதில்லை என்று மத்திய அரசாங்கம் கூறியிருக்கிறார்கள். ஆயில் கணக்கை எடுத்துப் பார்க்கும்போது, நல்லெண்ணை அல்லது கடலெண்ணையை ஏதாவது ஒரு மில்லில் தயார் செய்தால், பிண்டோக்களுக்கும், ரோடரிகளுக்கும், எக்ஸ்பெல்லர்களுக்கும் எந்தவிதமான வரியும் இல்லை. இது அரசாங்க உத்தரவு. அப்படியிருக்கும்பொழுது அதே ஆயிலை பில்டர் மூலமாக வனஸ்பதி பாக்டரிகளுக்குக் கொண்டு சென்றால், அதற்கும் வரி இல்லை. ஆனால் அந்த பில்டரில் தயாரிக்கும்படியான எண்ணையை மக்களுக்கு விற்றால், அதற்கு வரி உண்டு என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆகவே, அது பற்றி மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு நல்லமுறையில் எடுத்துக்கூறி, மக்களுக்கு உபயோகப்படும்படியான தாவர எண்ணைகளுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரவேண்டும்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவுக்காக சென்ற ஆண்டில் கிட்டத்தட்ட ரூ. 6 கோடி 98 லட்சம் செலவாகியிருக்கிறது. இந்த ஆண்டில் அதற்காக அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 8 கோடி 17 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 6 கோடி, 8 கோடி செலவு செய்யக்கூடிய போலீஸ் இலாகாவினுடைய கண்யம், கடமை, கட்டுப்பாடு இவைகளையெல்லாம் நோக்குங்கால், அவர்கள் சாராயக் கம்பெனிகளை பிடிக்கத்தான் உபயோகப்படுகிறார்களேதவிர, ஒரு ஆண்டில் ஒரு பகுதியில் எத்தனை கொலைக் குற்றங்கள் நடந்தன, எத்தனை திருட்டுக் கேஸ்கள் நடந்தன, திருட்டுக் கேஸ்களில் எவ்வளவு உண்மை கேஸ்கள் இருக்கின்றன என்ற விவரங்களைச் சுட்டிக்காட்டும் குறிப்புகள் நமக்குத் தரப்படவில்லை. சென்ற ஆண்டில் ஒவ்வொரு மாவட்ட ரீதியாக பார்க்கும்பொழுது, சேலம் மாவட்டத்தில் 1,200 திருட்டுக் கேஸ்கள் கண்டுபிடித்ததாகவும், மதுரையில் 982 என்றும் சொன்னார்கள். இவ்வளவு திருட்டுக் கேஸ்களில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதி வழங்கப்பட்டிருக்கிறதா என்பது தெரிய

வில்லை. இப்பொழுது மின்சாரம் வழங்குவது குறைக்கப்பட்டிருக்கிறது. வீட்டு உபயோகத்திற்கு வேண்டுமென்றால் குறைத்துக் கொள்ளலாம். ஒரு தொழிற்சாலைக்கு வேண்டுமென்றால் குறைத்துக் கொள்ளலாம். ஆனால் ஊர்களிலே பாதுகாப்புக்காகப் போடும்—தேசியப் பாதுகாப்பு ஒரு புறமிருக்கட்டும்—லைட்களுக்குக் கூட மின்சாரம் இல்லை என்றால, அது ஊர்க்காவலைப்பாதிக்காதா? மின்சார விளக்குகள் இல்லை என்றால், ஊர்க்காவல் இல்லை என்றே சொல்லலாம். "இன்று திருடாகள் வருவதாக இருக்கிறார்கள், ஜாக்கிரதை, சரியாகப் பூட்டி வையுங்கள்" என்று போலீசார் சொல்லுகிற நாட்களிலேயே திருடர்கள் வருகிறார்கள். போலீஸ் இலாகாவிற்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்குகிறோம். ஆனால், அவாகள் பூட்டுக்களை இழுத்துப் பூட்டுங்கள் என்றுதான் சொல்லுகிறார்களே ஒழிய, சரியான முறையில் ஊர்க்காவல் புரிவதில்லை.

திருமதி டி. என். அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார், கனம் அங்கத்தினர் வீட்டிலே திருட்டுப் போய்விட்டது என்று செய்தித் தாளில் படித்தேன். அதனாலேதான் இவ்வளவு பயந்து பேசுகிறாரோ என்னமோ தெரியவில்லை (சிரிப்பு).

திரு. பி. வி. சீராமுலு: கனம் அங்கத்தினர் செய்தித்தாளிலிருந்து படித்துத் தெரிந்து கொண்டிருக்கலாம். எனக்கே இந்த கதி என்றால், மற்ற பொது மக்களுக்கு இன்னும் அதிகமாகத்தான் இருக்குமென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கும், தொழில் அபிவிருத்திக்காகவும், அதிக நிதியை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கது. ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது என்றால், இங்கே நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே ஒழிய, டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கமிட்டிக் கூட்டத்திலே, இப்பொழுது நெருக்கடி நிலைமை இருப்பதனால் எதையும செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இதே அறிக்கையை, மாவட்ட ரீதியாக அத்தியாவசியமாக எந்தெந்த வேலைகளைச் செய்யவேண்டுமென்று குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்புமாறு, அந்தந்த இலாகா அமைச்சர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய வருமானம் தேசிய வருமானத்தில் சரி பாதி என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதே மன்றத்தில் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விவசாய வருமானம் மொத்த வருமானத்தில் 6 சதவிகிதம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே இது நமது மாநிலத்தைப் பொறுத்த வரையிலா, அல்லது மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலா என்பது எனக்கு ஐயப்பாடாக இருக்கிறது.

அடுத்தபடியாக, எண்ணெய் வித்துக்களை எடுத்துக் கொண்டால், முக்கியமான விவசாயப் பொருள்களில் வேர்க்கடலையும் ஒன்று. வேர்க்கடலையின் மூலம் வெளி நாடுகளிலிருந்து நாம் டாலர்களையும், ஸ்டெர்லிங்கையும் சம்பாதிக்கிறோம். வேர்க்கடலைப் பயிருக்கான பாக்கேஜ் திட்டம் வருகிற ஆண்டில் மதுரை மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலும், தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலும், சுமார் 80,000 ஏக்கரில் அமுல் செய்யபபடுமென்று தெரிவித்திருக்கிருர்கள். இத்திட்டத்திற்கு 27 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் தெரிவித்திருக்கிருர்கள். வட சேலம் பகுதியிலுள்ள ஒரு 10,000 ஏக்கராவுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 27 லட்சம் ரூபாயையும் கொஞ்சம் அதிகரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த அறிக்கையிலே முழுப் பண உதவித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட பகுதியிலே ஒருவர் கிணற்றுக்காக கடன் வாங்க வேண்டுமென்று விரும்பினுல், பஞ்சாயத்து யூனியன் மூலமாகப் பெறலாம். ஆனுல் பஞ்சாயத்து யூனியன்கள், கூட்டுறவு சங்கங்கள் கடன வசதி செய்து கொடுக்கும் இடங்களிலே இந்தத் திட்டம் அந்த இடங்களுக்கு வந்துவிட்டால் யாரும் கடன் வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய காவேரிப் பட்டிணம் பஞ்சாயத்து யூனியனிலே இதுப்போன்ற அல்லல்களுக்கு நாங்கள் ஆளாகியிருக்கிறோம்.

சென்னை தொழில் முதலீடு கார்ப்பரேஷன் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட சிலருக்குத்தான் பணம் கிடைக்கிறது. என்போன்றவர்களோ அல்லது வேறு யாராவது பணம் வேண்டுமென்று கேட்டால், எங்களுக்கு ஆஸ்திப் பொறுப்பு இருந்தாலும் கூட, அந்த பாக்டரியில் என்ன செய்கிருர்கள், யாரிடத்தில் காண்டிராக்ட் இருக்கிறது, அந்த காண்டிராக்ட் தகுதி பெற்றிருக்கிறதா, எந்த அளவுக்கு அந்த கம்பெனிக்கு பணம் கொடுத்திருக்கிருர்கள் என்றெல்லாம் பார்த்துத்தான் கொடுக்கிருர்கள். ஆனுல் சுதர்சனம் மில்லாக இருந்தாலோ அல்லது திண்டிவனத்திலுள்ள கனம் எதிர்க்கட்சி அங்கத்தினரின் ரிபைனரி மில்லாக இருந்தாலோ உடனே பணம் கிடைத்து விடுகிறது. எங்களைப் போன்றவர்கள் கடன் வாங்க முடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சிறு சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கும் முறையில் இந்தத் தொழில் முதலீடு கார்ப்பரேஷன் விதிகளைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட சேலம், தென் சேலம் என்று இருக்கும்பொழுது, தென் சேலத்திலே ஒரு சர்க்கரை மில் இருக்கிறது. கூட்டுறவு இலாகாவின் மூலமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு ஸ்பின்டில் மில் இருக்கிறது, தனியார் துறையிலே மூன்று ஸ்பிண்டில் மில்கள் இருக்கின்றன. சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அலுமினியம் தொழிற்சாலை இருக்கிறது. ஒரு காகிதத் தொழிற்சாலையும் வர

இருக்கிறது. ஆனுல் வட சேலத்தை எடுத்துக்கொண்டால் ஒன்றுமே இல்லை. வட சேலத்தை குருக்ஷேத்திர மேடு அல்லது கோரி மேடு என்று சொல்லுவார்கள். கோரி மேடு என்ருல், தாகஸ்தான் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தொழிற்பேட்டைக்கு அடுத்தாற்போல் ஒரு பாலிடெக்னிக் அல்லது ஒரு என்ஜினியரிங் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் சிரம் தாழ்த்தி கைகூப்பி பணிவன்புடன் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. அ. ராமச்சந்திர ராயர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். இந்த நெருக்கடியான நிலைமையிலும்கூட, திட்டமிட்ட ஒரு பொருளாதார அமைப்பை நாம் ஏற்றுக்கொண்டதன் காரணமாக திட்ட வேலைகளுக்கு சம்பந்தப்படாத செலவினங்களை ஒதுக்கி விட்டு, கூடுமானவரையில் அபிவிருத்தி வேலைகளுக்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பதைக் குறித்து நாம் எல்லோரும் பெருமைப் படுகிறோம். அது மாத்திரமல்ல. இன்று நமது நாட்டிலே சீன ஆக்கிரமிப்பு நடந்துகொண்டிருக்கும் இந்த சமயத்தில், இந்த வரவு செலவுத் திட்டத்திலே ரூ. 274 லட்சம் துண்டு விழுந்தும், அதை ஈடு செய்து விடலாம் என்று நினைத்து இந்த பட்ஜெட்டிலே வரி விதிக்காமல் இருப்பதை நாம் ஆதரிக்காமல் இருக்க முடியாது. மேலும் இன்று நமது நாட்டில் பாதுகாப்பிற்காக ஏற்பட்டுள்ள போலீஸ் படைக்காக போன ஆண்டு செலவு செய்தது 6 கோடியே 98 லட்சம். அதைவிட அதிகமான அளவுக்கு—1963-64—இந்த ஆண்டு ரூ. 8 கோடியே 11 லட்சம் ஒதுக்கியிருப்பதையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பாதுகாப்புச் செலவைப் பூராவும் மத்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னுலும், அதிலே ஓரளவு நாம் பங்கு கொண்டதைப் பற்றி மன மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய நாட்டின் அபிவிருத்திக்கு விவசாயம் முதற்படியாக இருக்கிறது. இவ் வருஷத்தில் 17 லட்சம் டன் அதிக உணவு உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். விவசாயத்தைப் பெருக்க பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, நம் மாநிலத்தில் சற்றேறக்குறைய எல்லா அணைக்கட்டுத் திட்டங்களையும் முடித்துவிட்ட நிலையில், சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகள்தான் இருக்கின்றன. அதுவும் நல்ல முறையில் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைக் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். கிராம வாய்க்கால்கள் பராமரிப்பை பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நிர்வகிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இவ் வேலைகள் சில இடங்களில் சரிவர நடைபெருமல் இருக்கின்றன. இந்தப் பொறுப்பைச் சர்க்காரே எடுத்துக்கொண்டு, வாய்க்கால் வேலைகளை மராமத்து செய்து முடித்துவிட்டால் விவசாய உற்பத்

திக்கு அனுகூலமாக இருக்கும், சௌகரியமாகவும் இருக்கும். ஏனென்றால், ஏராளமான தொகைகளைச் செலவிட்டு பெரிய நீர்த் தேக்கங்களைக் கட்டிவிட்டு, அதனுடைய தண்ணீர் கடைசியில் நிலத்திற்குப் பாய்வதற்கு வேண்டிய வாய்க்கால் வசதிகள் சரியாக அமையாவிட்டால், விவசாய உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும் நான் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு மகாநாடு திருச்சியில் கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கூட்டப்பட்டது. 'விவசாயம் அபிவிருத்தி அடைய வேண்டும், உணவுப் பொருள் அதிகமாக வேண்டும்' என்ற நோக்கத்துடன் அம் மகாநாடு கூட்டப்பட்டது. மூன்று ஜில்லாக்களின் பிரதிநிதிகள் அதில் கலந்துகொண்டார்கள். நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையில் உணவுப் பற்றுக்குறை ஏற்படக்கூடாது என்பதற்காக அவசரம் அவசரமாக அந்த மகாநாடு கூட்டப்பட்டது. அது நல்ல முயற்சி தான். என்றாலும், அதை ஒரு மாதத்திற்கு முன்பு கூட்டியிருந்தால் மக்கள் பெருவாரியாக நன்மை அடைந்திருப்பார்கள். இப்பொழுது ஆயிரக் கணக்கான ஏக்கர்களில் விவசாயம் சிறந்த முறையில் நடந்து கொண்டிருக்கிறதென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவ்வாறு முன்னேற்பாட்டுடன் செய்தால் விவசாயிகள் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவார்கள். ஆனால், நாட்டில் வரிப்பளு விவசாயிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. இருந்தாலும், அதை எப்படியோ சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தால், விவசாயிகள் முன்னேற்றம் அடைவார்கள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை. இன்றைக்கு விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறையில் அனேக பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. ஏக்கருக்கு ஐம்பது ரூபாய் வீதம் தான் கடன் அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு உற்பத்தி செலவு 200 ரூபாய்க்கு மேல் ஆகும் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஏக்கருக்கு 150 ரூபாய் விழுக்காடு; ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் கொடுத்தால், இந்தக் கடன் தொகையைக் கொண்டு, விவசாயத்தை முன்னேற்றமான முறையில் செய்ய முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள் உற்பத்தி என்னும்போது, முட்டைகளையும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது வரவேற்கத்தக்கது. நாட்டில் கிராமப் புறங்களில்தான் கோழி வளர்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. மாதத்திற்கு நான்கைந்து நாட்கள் முட்டைகள் இடும் சிறிய கோழிகள்தான் சாதாரணமாக கிராமப் புறங்களில் வளர்க்கப்படுகின்றன. அவைகளைப் பெருவாரியாக வளர்ப்பதற்குப் பதிலாக, மாதத்தில் 25 நாட்களுக்குமேல் முட்டையிடும் நல்ல வகைப் பொந்தா கோழிகளை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். சிறு கோழிகளுக்குப் பதிலாக நல்ல கோழிப் பண்ணைகளில் பரிவர்த்தனை செய்து கொள்ளும் ஏற்பாட்டைச் செய்தால் நாட்டில் ஏராளமாகக் கோழி முட்டைகள் உற்பத்தியாகும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமும் இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அதிக முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையிலும் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. மீனவர்கள் படும் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. பரங்கிப்பேட்டை தொகுதியில் கரையோரமாக மீனவர்கள் ஆண்களும் பெண்களும் அவசர அவசரமாக மீன் கூடைகளைச் சுமந்துகொண்டு இறைக்க இறைக்க ஓடுகிறார்கள். அவர்களுக்குப் போக்குவரத்துச் சாதனம், ரோடு வசதி முதலியவைகளைச் செய்து கொடுப்பது நல்லது. பரங்கிப்பேட்டைக்குச் சமீபத்தில் இருக்கும் மீனவர்கள் வசிக்கும் ஒரு கிராமத்தில் சவுக்கு மரங்களைக் கடலோரமாக வைத்திருப்பதால், அது அவர்களுக்குத் தடங்கலாக இருக்கிறது. மீன் பிடிப்பவர்கள் போய்வரக் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சவுக்கு மரங்களை அப்புறப்படுத்திவிட்டு, அந்த புறம்போக்கு நில இடத்தை மீனவர்களுக்குக் கொடுத்து ஜாரி செய்துவிட்டால் அவர்கள் நல்ல முறையில் வாழ்வார்கள்.

நம்முடைய நாடு முன்னேற்றம் அடைவதற்குக் கல்விதான் முக்கிய சாதனம் என்பதைக் கருதி அரசாங்கம் நல்ல முறையில் கல்வித் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். கல்வி மான்யத்திற்கு 27 கோடியே 58 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இன்று பின் தங்கிய வகுப்பினர்கள் இன்னும் பெருவாரியாக முன்னேற்றமடையாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னேற்றம் அடைந்தாலொழிய, நம் நாடு முழு அளவுக்கு முன்னேற்றம் அடைய முடியாது. பின் தங்கிய வகுப்பினர்களுக்கும், முக்கியமாக அரிஜனங்களுக்கும் கூடுமானவரை எவ்வளவு சகாயத்தொகை கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்கவேண்டியது நம்முடைய கடமையாகும் என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்று நாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஆதாரக் கல்விப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு, நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. பள்ளியில்லா ஊர் இல்லை என்ற நிலைமை வந்துவிட்டது. நமது மாநிலத்தில் சற்றேறக்குறைய 480 உயர்நிலைப்பள்ளிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இதுவும் பற்றுக்குறையாகத்தான் இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகள் ஏராளமாக நிறுவப்பட்டுவிட்டதால், அதற்கேற்ற எண்ணிக்கையில் உயர்நிலைப்பள்ளிகளையும் அதிகப்படுத்தத் தான் வேண்டும். சுமார் ஐந்து மைலுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தினால்தான் கல்வி முன்னேற்றம் சரியான முறையில் ஏற்பட முடியும் என்று நான் மிகவும் வலியுறுத்திக் கூற ஆசைப் படுகிறேன்.

[திரு. அ. ராமசந்திர ராயர்] [4th March 1963

என்னுடைய புவனகிரித் தொகுதியில் ஹரிஜனங்களுக்கு விடப்பட்ட மனைக்ளெல்லாம் இன்னும் சரிவர ஜாரி செய்யப்படாம லிருக்கின்றன. தேர்தல் நடந்து ஒரு வருஷம் ஆகியும் நாங்கள் ஒன்றும் பலன் அடையவில்லை என்று சொல்லுகிறார்கள். சரியான முறையில் பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட் கிறார்கள். இதற்கெல்லாம் மான்யம் ஒதுக்கப்பட்டிருப்பதை உயர்த்தி, அவர்களை விவசாயத்தில் அதிக அக்கறை கொள் வதற்குத் தூண்டுதலளிக்கவேண்டும் என்று கூறி, என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. டி. கடம்பவனசுந்தரம்:** மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத் தில் சமர்ப்பித்திருக்கும் 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் அவசர நிலைமையொட்டி பாது காப்புக்காக அதிகப்படியான செலவுகளை நாம் செய்யவேண்டி யிருக்கும் இந்த நேரத்தில், திட்ட வேலை எந்த வகையிலும் குறைக்கப்படாது, கைவிடப்படாது என்ற சர்க்காரின் வாக் குறுதி வரவேற்கத்தக்கது. பாதுகாப்பு வேலைகளுக்கும் திட்ட வேலைகளுக்கும் அதிகப்படியான செலவுகளை ஏற்கவேண்டிய நிலையில், எந்தப் புது வரியையும் நம்முடைய மாநில சர்க்கார் விதிக்காது என்று நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது எல்லோராலும் பாராட்டப் படவேண்டிய விஷயம் ஆகும். இரண்டு பெரும் பொறுப்புக்களை ஏற்கவேண்டியிருக்கும் இந்தச் சமயத்தில் எந்த எந்தப் புதிய வரிகள் விதிக்கப்படுமோ என்று ஜனங்கள் பயந்துகொண்டிருந்த நேரத்தில், 'புதிய வரிகள் இல்லை' என்று அறிவித்திருப்பது பொது மக்களால் மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்ட வரிகளை வசூலிக்கவேண்டிய ஒரு கசப்பான நிலைமையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆக, இந்த நிதி நிலை அறிக்கை எப்படியிருக்கிறதென்றால், வியாதியஸ்தருக்குக் கொடுக்கப்படும் சர்க்கரையிலே பொதிந்திருக்கும் கசப்பு மாத்திரை போன்று இருக்கிறது. ஆனாலுங்கூட, இன்று நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற அவசர நிலை என்ற விஷ ஜுரத்திற்கு இது சரியான கொயினா மாத்திரை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் பிரதான கவனம் செலுத்தப்பட் டிருப்பது விவசாயம். நமது மாநிலத்தில் ஓடக்கூடிய நதிகள் அனைத்தையும் நாம் நல்லமுறையில் பயன்படுத்திக்கொண்டு விட்டோம். இன்னும் ஒரு சில அணைகளைப் பூர்த்தி செய்தாக 12-00 noon. வேண்டிய நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறோம். அது போக மற்றபடி சிறுபாசன வசதிகளைத்தான் அபிவிருத்தி செய் தாகவேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையில் சிறு பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். குறிப்பாக ஜீவ நதிகள் ஏதுவுமே

4th March 1963] [திரு. டி. கடம்பவன சுந்தரம்]

இல்லாத வறண்ட தொகுதியில் இருந்து வந்திருக்கக்கூடிய என் போன்ற அங்கத்தினர்கள் வரவேற்கக்கூடிய விஷயம் இது. உதாரணமாக என் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் எந்த ஜீவநதியும் கிடையாது. அங்கே ஓடக்கூடிய ஒரே ஒரு நதி வைகை என்பதை எல்லா அங்கத்தினர்களும் உணர்வார்கள். அந்த நதியில் வருஷத்தில் பாதி நாள் தண்ணீர் ஓடாது. அதில் கூட ஒரு அணை கட்டினார்கள். அந்த அணையினால் பயன்பெறுவது அண்டை மாவட்டம்தான். என்றைக்குமே ராமநாதபுரம் மாவட்டம் வறண்ட பிரதேசமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் மழை காலத்தில் தண்ணீர் அதிகப்படியாக வரக்கூடிய பல நதிகள் இருக் கின்றன. அம்மாதிரி நதிகளை எல்லாம் பயன்படுத்தக் கூடிய சிறிய நீர்ப்பாசன வசதிகளை நல்லமுறையில் நாம் தயாரித்தாகவேண்டும். குறிப்பாக கண்மாய்களை ஆழப்படுத்து தல், கண்மாய்களுக்கு தண்ணீர்வரக்கூடிய கால்வாய்களை ஆழப் படுத்துதல், கிணறுகள் வெட்டுவதற்கு கடன் வழங்குதல், கிணறுகளில் இருந்து தண்ணீர் இறைப்பதற்குப் பம்பு செட்டுகள் வைக்க அனுமதி வழங்கல் ஆகிய காரியங்கள் எல்லாம் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வரும். இவை இந்த நிதி நிலை அறிக்கையில் அடங்கியிருக் கின்றன. இந்தத் திட்டங்களின் மூலம் எனது மாவட்டம் அதிக மான பலனை அடைய முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இம்மாதிரி மாவட்டங்கள் நம் மாநிலத்தில் வேறு இருக்கின்றன என்பதையும் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே சர்க்கார் இந்தச் சிறு பாசனத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை, வறண்ட மாவட்டங்கள் வாரியாக, ஒரு சர்வே எடுத்து எல்லா மாவட்டங்களும் சீரான முறையில் நல்ல அபிவிருத்தியைக் காண வசதி செய்யவேண்டும். சமமான முறையில், செம்மையான வகையில், வறண்ட பிரதேசங்கள் இந்த சிறுபாசனத்திட்டத்தின் கீழ் பயன் அடைய வழிவகுக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துகள் மூலமாகப் பல காரியங்களைச் செய்ய வழிவகுத்த காரணத்தினால் மிகக் குறைந்த காலத்திலேயே பல அபிவிருத்திகளை அடைந்திருக்கிறோம். சிறு பாசன திட்டங்களையும் அவர்களே மேற்கொள்ளும்படியாகச் செய் தால் ஏதுவாக இருக்கும் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நமது நிதி நிலை அறிக்கையில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது கல்வி. சென்ற ஆண்டும் நம்முடைய வருமானத்தில் நாலில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவிட்டோம். இவ்வாண்டும் அதேபோல் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க தாகும். கல்வித் துறையில் இந்தியாவுக்கே வழி காட்டக்கூடிய வகையில் நம் மாநிலம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. முன்பு வருடத்திற்கு 1,200 ரூபாய்க்குச் குறைவாகச் சம்பளம் வாங்கக் கூடியவர்கள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க வகை செய்தோம். போன ஆண்டு 1,500 ரூபாய் என்று அந்த வரம்பை

உயர்த்தினோம். அதே ரீதியில் இவ்வாண்டு எல்லா மாணவர் களுக்கும் இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். இந்த ஆண்டு அதுசெயல்படவில்லை. கட்டாயம் அடுத்த ஆண்டிலாவது இத்திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் விவசாயத்திற்கு அடுத்ததாக இருப்பது கைத்தறித் தொழில். கனம் மெம்பர் வெங்கட்டராமன் அவர்கள் சொல்லியதுபோல் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்த நெச வாளர்களின் நிலையே கஷ்டமாக இருந்துகொண்டிருக்கும்போது கூட்டுறவில் சேராத வெளியில் இருக்கக்கூடிய நெசவாளர்களின் நிலைமை சற்றும் சுகமாக இராது என்பதை நாம் உணர்வோம். இன்றைக்கு கூட்டுறவு சொஸைடிகளின் கீழ் வந்த நெசவாளர் களின் எண்ணிக்கை மிகக் குறைவு. வெளியில் 60 சதவிகிதத்துக்கு மேல் இருப்பார்கள். அவர்கள் இன்றையதினம் மிகவும் கஷ்டத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உபயோகத்திற் காக என்று கடந்த ஆண்டில் பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைக்க முயற்சி எடுத்துக்கொண்டோம். அம்முயற்சி வெற்றி கரமாக நிறைவேற்றப்படவில்லை. இவ்வாண்டாவது அம் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு பைனான்ஸ் கார்ப்ப ரேஷனை அமைத்து கூட்டுறவு சங்கத்திற்குள் வந்த நெசவாளர்களாக இருந்தாலும் சரி, வெளியில் உள்ள நெசவாளர்களாக இருந்தாலும் சரி, சமமாகப் பயன்படத்தக்க வழிவகைகளைச் செய்யவேண்டும். அப்போதுதான் அவர் களிடையே ஒரேமாதிரியாக வாழ்க்கைத் தரம் உயர வழி ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள ஒரே ஒரு நகரசபை அருப்புக்கோட்டை நகர சபை ஆகும். அதுவும் செகண்ட் கிரேட் நகர சபையாக இருக் கிறது. 52 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ளது அது. இன்னமும் அந்த நகரசபையினால் குடிதண்ணீர் பிரச்சனையைச் சமாளிக்க முடியவில்லை. அங்கே குடிதண்ணீர் திட்டம் எதுவும் இல்லை. நல்லதொரு குடிதண்ணீர் திட்டத்தை வகுக்க அந்த நகர சபை அரசாங்கத்திடம் கடன் கோரியிருக்கிறது. அவர்களுடைய மனுவானது பரிசீலிக்கப்பட்டு, சீப் என்ஜினியருக்கு அனுப்பப் பட்டது. அவரும் அதை நன்கு சர்வே செய்து பரிசீலித்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. மந்திரி சபையின் சாங்ஷன் ஒன்றுதான் பாக்கி. இந்தச் சமயத்தில் மந்திரி சபையை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கடன் வசதி அளித்து அந்த நகரசபை மக்களுக்கு தாகத் திற்குத் தண்ணீர் வழங்கிய புண்ணியத்தை அடையவேண்டும் என்பது தான். அதை அவசியம் சாங்ஷன் செய்து தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு விஷயம். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆளும் கட்சியினரை மாமியார் என்று உவமிப்பார்கள். வரவுக்குத் தகுந்த செலவு செய்யும் நல்லதொரு மாமியார்கள் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தை வரியில்லாதபடி ஒழுங்காக இந்த மாமியார் தயார் செய்துகொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிக் காரர்கள் வரவுக்குத் தகுந்த செலவு செய்து சீராக குடும்பத்தை நடத்தும் சமத்து மாமியார்கள் என்று பாராட்ட வேண்டியிருக்க இப்போதும் குறை சொல்கிறார்கள். எதற்கும் திருப்தி அடையாத நாட்டுப் பெண்ணைப் போல அவர்கள் பேசுவது சரியல்ல. இந்தத் திட்டம் வரவேற்கத் தக்கது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. தங்கவேலு: கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு ஆரம்பத் தில் இருந்தே பல திடுக்கிடும் அதிர்ச்சிகள் நாட்டுமக்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கின்றன. அவை எல்லாம் நாட்டு மக்களை மிக்க கவலைக்குள் ஆழ்த்தி வந்திருக்கின்றன. குறிப்பாக தங்கக் கட்டுப்பாட்டினால் பொற்கொல்லர்கள் வேலை இழந்து, சாப்பாட்டுக்கு வழியின்றி அல்லலுற்றிருக்கிறார்கள். பட்டினி கிடக்கவேண்டிய கொடுமையான நிலையில் இருந்துகொண்டிருக் கிறார்கள். இந்த மன்றத்தில் நம்மோடு இருந்த நண்பர்கள் மூவரை நாம் இழந்துவிட்டோம். அவர்களுடைய அகால மரணம் ஒரு அதிர்ச்சியாகும். அதற்கும் மேல் பேரதிர்ச்சியாக இந்திய நாட்டின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராஜேந்திரப் பிரசாதை, சிறந்த அரசியல் மேதையை, தேசபக்தரை இழந்து அதிர்ச்சியுற்றிருக்கிறோம். இந்த நிலையில் நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் இல்லாமல் மேலும் அதிர்ச்சியை உண்டாக்கக்கூடிய வகையில்தான் இந்த வரவு செலவுத் திட்டம் வந்திருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

தங்கக் கட்டுப்பாட்டினால் நாட்டில் இருக்கக்கூடிய லட்சக் கணக்கான பொற்கொல்லர்கள் திடீரென்று வேலை இழந்து பட்டினியால். மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அநேக இடங்களில் பட்டினியால் சாகக்கூடிய நிலைமைகூட இருந்து வருகிறது. கவர்னர் உரையின் மீது பேசும்போதே எல்லா அங்கத்தினர்களும் பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்களுக்கான நிவாரணம் எதுவுமே அளிக்கப்படவில்லை என்பது மேலும் கஷ்டத்தை அளித்திருக்கிறது. பொற்கொல்லர் கள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக உள்ளவர்கள்தான். சென்ற பொதுத்தேர்தலின்போதுகூட ஆளும் கட்சிக்குப் பெருத்த ஆதர வினை அளித்தார்கள். அப்படியிருந்தும் இந்த அரசாங்கம் அவர் களுக்கு இந்த நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதோடு, நிவாரணம்கூட அளிக்காமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை. நாங்கள் இதைப்பற்றியெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்

[திரு. ஆ. தங்கவேலு] [4th March 1963

திலும், கோட்டாட்சித் தலைவரிடத்திலும் கூறி, உடனடியாக நிவாரணமளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதற்கு அவர்கள் 'அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்தால்தான் நிவாரணம் அளிக்க முடியும். உடனே அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறோம்' என்று கூறினார்கள். இந்த அரசாங்கம் பொற்கொல்லர்கள் விஷயத்தில் மிகவும் அசிரத்தையாக இருந்து வருவதைத்தான் காட்டுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கேரள அரசாங்கம்கூட ஆறு வாரங்களுக்கு அரிசி கொடுப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அதுவும் காங்கிரஸ் அரசாங்கம்தான். ஆனால் நம்முடைய அரசாங்கம் அந்த அளவுக்குக்கூட நிவாரணம் அளிக்க முன்வராமல் இருப்பதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. புயலால், வெள்ளத்தால், தீ விபத்தால், திடீரென்று மக்கள் பாதிக்கப்படுவதுபோல் பொற்கொல்லர்களும் திடீரென்று வேலையிழந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சாகாமல் இருக்கும் அளவுக்காவது அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரி இல்லையென்று சொன்னாலும்கூட, நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் மேல் சபையில் பேசும்போது, நிலவரி, நீர் வரியை மனதில் வைத்து, அதன் காரணமாகப் புதிய வரிகள் சேர்க்கப்படவில்லை என்றும், இது போடப்படவில்லை என்று சொன்னால் ஏதாவது வரியைச் சேர்க்க வேண்டியிருக்கும் என்ற முறையிலே கூறியிருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்குப் பெருந் தொல்லையை உண்டாக்கக்கூடிய வகையிலே நிலவரி, நீர்வரி ஆகியவை அமைந்திருக்கின்றன.

வரி ஒன்றுதான் அரசாங்கத்திற்கு வருமானம் என்று இல்லாமல் வருவாய்க்கு வேண்டிய வேறு வழிவகைகளைக் கையாண்டு வருமானத்தைப் பெருக்கவேண்டும். மத்திய சர்க்கார் ஆயுத உற்பத்திக்காக, தனிப்பட்டவர்கள் தொழிற்சாலைகளையெல்லாம் எடுத்து நடத்தி வருகிறார்கள். அதே மாதிரி இங்கே பஸ் தொழிலை முழுவதும் தேசியமயமாக்காவிட்டாலும்கூட, அவசர நிமித்தம் அரசாங்கம் தனியார் பஸ்களை எடுத்து நடத்தினால் பெருத்த வருமானம் கிடைக்கும் என்றும், அதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மணிலா உற்பத்தி செய்வதற்காக 1964-65-இல் தென்னாற்காடு மாவட்டத்தில் கண்டமங்கலம், விக்கிரவாண்டி, கோலியனூர் வட்டாரங்களில் இருபதாயிரம் எக்கரை எடுத்துக் கொள்ளப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. நண்பர் கோவிந்தசாமி அவர்கள் அந்தத் தொகுதியிலே தோற்றுவிட்ட காரணத்தினாலோ என்னவோ குறைந்த நிலம் உள்ள அந்தப் பகுதி இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. திண்டிவனம் வட்டத்தின் பெரும் பகுதி மணிலா பயிரா

4th March 1963] [திரு. ஆ. தங்கவேலு]

க்கூடிய பகுதியாகும். ஆகவே, அந்தப் பகுதியை விட்டு விட்டு இதனைச் சேர்த்திருக்கவேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் கொடுப்பதில் காலதாமதமாகிறது. எல்லா அங்கத்தினர்களும் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் விவசாய மக்களுக்கு இருக்கக்கூடிய தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. என்னுடைய பகுதியில் கீழ்சேவூர் என்ற ஊரில் பலர் இரண்டாயிரம் ரூபாய் பஞ்சாயத்து யூனியனில் கடன் வாங்கி ஓராண்டுக்கு முன் பம்பு செட் வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சாரம் இதுவரை கிடைக்கவில்லையென்றாலும் பஞ்சாயத்து யூனியனில் வாங்கிய பணத்தைக் கட்டும்படி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. மிகவும் வரண்ட பகுதியாகவும், பிற்பட்ட பகுதியாகவும் இருக்கும் எங்கள் பகுதிக்கு மின்சாரத்தைத் துரிதமாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனை வழங்குவது பற்றி எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்திப் பேசினார்கள். அந்த நிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. அதற்குக் காரணம் ஹரிஜன நல இலாக்காவில் உள்ள அதிகாரிகளுக்கு இதிலே அக்கறை இல்லையென்பதுதான் என்று நான் கருதுகிறேன். ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக, அதிகப் பணத்தை ஒதுக்கியிருந்தும் அந்த வேலை அதிகாரிகளின் அக்கறையற்ற தன்மையினால் ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதிகாரிகள், அக்கறையும் அன்பும் கொண்டவர்களாகப் போடப்பட்டால் வேலை சீக்கிரம் நடக்கும் என்பது என் நம்பிக்கை.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக நிதி கொடுத்து அதன்மூலம் பல திட்டங்களை நிறைவேற்றச் சொல்லியிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரை அநேக இடங்களில் குறைபாடுகள் காணப்படுகிறது என்பது அங்கத்தினர்களுக்குத் தெரியும். நேற்று முன் தினம் ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் சின்னையன் அவர்கள்கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்குள்ள குறைபாடுகளை ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டக்கூடிய நிலையிலே விட்டு விட்டார்களே என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். புதிய குடிநீர் கிணறு வெட்டுவதற்காக மான்யம் கொடுத்தால், ஏற்கனவே உள்ள புறம்போக்கு கிணறுகளைப் புதுப்பித்து விட்டோ, அல்லது தங்களுக்குச் சொந்தமாக ஏற்கனவே இருக்கக்கூடிய கிணறுகளைப் புதுப்பித்து விட்டோ, புதிய கிணறுகள் வெட்டி விட்டதாகக் கணக்குக் காட்டுகிறார்கள். ஓலக்கூர் பஞ்சாயத்து யூனியனில் பட்டணம் என்ற கிராமத்திலும், ஈச்சேரி என்ற கிராமத்திலும் புறம்போக்கு நிலத்தில் இரண்டு புறம்போக்கு கிணறுகள் இருந்தன. அவற்றைப் புதுப்பித்து விட்டு புதிய கிணறுகள் வெட்டியிருப்பதாகக் கூறி 2,500 ரூபாய் வீதம் வாங்கி

யிருப்பதை நான் இங்கே எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். ஆவணிப்பூர் கிராமத்தில் ஹரிஜனங்கள் உள்ள பகுதியில் கிணறு எடுக்க 2,600 ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. ஏற்கனவே நாலைந்து பேருக்குச் சொந்தமான கல்கட்டுக் கிணறு இருந்தது. கிணற்றுச் சொந்தக்காரர்கள் அனுமதியின்றி கல்லைப் பிரித்து எடுத்து அதைப் புதுப்பித்து, புதுக்கிணறு வெட்டப்பட்டது என்று கூறி பணத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் சொந்தக்காரர்கள் இது பற்றிக் கேட்டபோது, 'இதை அரசாங்கம் எடுத்துக் கொண்டது, இதில் தலையிட்டால் ஜெயிலுக்குப் போவீர்கள்' என்று மிரட்டியிருக்கிறார்கள். இந்த ஊழல்களையெல்லாம் நிவர்த்திக்க கனம் காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இர. பொன்னப்ப நாடார்: ஸார், இந்த படஜட் விவாதத்தில் கலந்து கொண்டு ஒருசில கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். முதன்முதலில் இந்த தேசிய நெருக்கடியில் ஒரு அருமையான பட்ஜட்டை நமக்கு உருவாக்கித் தந்த நிதி அமைச்சர் அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதோடு மத்திய அரசாங்கத்திலிருந்து நம் பாதுகாப்பிற்காக 867 கோடி ரூபாய் செலவழிக்கப் போவதாக மத்திய பட்ஜட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கின்றன. அதோடு இன்டயரக்ட் டாக்ஸஸ், மறைமுகவரிகள், எக்ஸைஸ் வரிகள் போன்றவற்றை போட்டிருக்கிறார்கள் மத்திய அரசினர். சேல்ஸ் டாக்ஸையும் (விற்பனை வரி) உயர்த்தப் போவதாக பட்ஜட் அறிக்கையில் பார்த்தோம். இப்படி அதிகமாக அரசாங்கம் பணம் செலவு செய்யும்போது இருக்கிற விலைவாசி என்னவாகும் என்பதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதிகப் பணம் மக்களின் கையில் ஏற்பட்டு விட்டால் ரூபாயின் வாங்கும் சக்தி குறைந்துவிடும் என்பது என்போன்றோரின் அபிப்பிராயம். இன்றைய சூழ்நிலையில் பொருளாதார அடிப்படையில் ரூபாயின் மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது என்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். ஆதலால் அத்தியாவசியப் பண்டங்களுக்கு கட்டுப்பாடு ஏற்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலையும், நிர்ப்பந்தமும் விரைவில் உருவாகி விடும் என்றே கருதுகிறேன். அதிகப் பணத்தை அரசாங்கம் செலவழிப்பதன் காரணமாக பண வீக்கம் ஏற்படும் ஒரு சூழ்நிலைதான் வந்து கொண்டேயிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, கன்னியாகுமரி, மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பல குறைபாடுகளை நாங்கள் இங்கு எடுத்துக் கூறிக்கொண்டே வருகிறோம். குறிப்பாக திருகொச்சியிலிருந்து இங்கு மாற்றப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களின் இணைப்பு இதுகாறும் பூர்த்தியாகவில்லை என்பதை

வருத்தத்தோடு நான் நிதியமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஏழு ஆண்டுகளாகியும் இதுகாறும் சர்வீஸ் இணைப்பு பூர்த்தியாகவில்லை, உத்தியோகத் தரம் நிர்ணயிக்கப்படவில்லை என்று சொன்னால் நம் அரசாங்கம் அதில் பாராமுகமாகத்தான் இருக்கிறது என்றுதான் பொது மக்கள் கருதுகிறார்கள். அதை நான் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நினைக்கின்றேன். ஆசிரியர்களின் நிலை, ரெவின்யூ இலாகா, ரெஜிஸ்ட்ரேஷன் இலாகா இப்படி பல்வேறு இலாக்காக்களில் குறைபாடுகள் இருந்து வருகின்றன. இதற்கு நிவாரணம் அல்லது பரிகாரம் ஏற்படுத்த வேண்டுமானால் அரசாங்கத்திலிருந்து சீப் செகரட்டரி போன்ற பெரிய உத்தியோகஸ்தர்களை, ஒரு குழுவாக அமைத்து அங்குள்ள மாவட்ட கலெக்டரையும் அதில் சேர்த்து இந்த கஷ்டங்களை எல்லாம் நிவர்த்தி செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்தப் பிரச்னை ஆசிரியர்களிடையே பெரிய மனத்தாங்கலையும், மன வருத்தத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. அந்த ஜில்லாவின் பிரதிநிதி என்ற முறையில் நான் இதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்னொரு முக்கிய விஷயம். 1956-க்குப் பிறகு என்ன உத்தியோகங்கள் அந்த வட்டத்திலுள்ள மக்களுக்கு கிடைத்திருக்கிறது என்று பொது மக்கள் எங்களைப் பல தடவைகள் கேட்கிறார்கள். உதாரணமாக, முனிசீப் செலக்ஷன், டெப்டி ரெஜிஸ்ட்ரார், டெப்டி கலெக்டர் போன்ற செலக்ஷன்களில் அந்த மாவட்ட மக்களுக்கு 1957-க்குப் பிறகு இதுகாறும் ஒரு பிரதிநிதித்துவமும் அளிக்கப்படவில்லை என்று படித்த வாலிபர்கள், வழக்கறிஞர்கள் குறிப்பாக எங்களிடம் பராதி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். அங்கு தகுதி உடையவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றி எல்லாம், அப்பிரச்னையை நான் இங்கு அலசி அலசிக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை. இருந்தாலும் வரக்கூடிய சமயந்திலாவது அந்தப் பகுதியில் உள்ள படித்தவர்களுக்கு நீதி வழங்கும் முறையில் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நடுத்தர பாசனத் திட்டம் சம்பந்தப்பட்ட மட்டில் ஏழு திட்டங்கள் நம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருவாக்கப்பட்டன. எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில் சிற்றார்—பட்டணங்கால் திட்டம் மிக முக்கியமானது என்று எல்லோரும் எடுத்துக் கூறினார்கள். அத்திட்டத்தில் உபரி தண்ணீர் கிடைக்கும். அந்தத் தண்ணீரை அண்மையில் இருக்கும் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் ராதாபுரம் தொகுதிக்குக் கொண்டு போக வழிவகை இருக்கிறது என்று என்ஜினியர்கள், நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அத்திட்டத்திற்காக சுமார் 2 கோடி 72 லட்சம் ரூபாய் அனுமதிக்கப் பெற்றிருந்தும் பட்ஜட்டைப் புரட்டிப் பார்க்கும் போது ஐந்து திட்டங்களுக்காக ஒரு டோக்கன் கிரான்ட்டாக ஐந்து லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாகப் பார்த்தோம். அத்திட்டம் அதிவிரைவில் உருவாக்கப்படுமானால் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகும். அதனால் இரண்டு ஜில்லாக்களில் 15,000 ஏக்கர் நிலம், திருநெல்வேலியில் 10,000-க்கு மேலும்

பாசன வசதி பெற முடியும். இதைத் தாமதப்படுத்த ஒரு சில அதிகாரிகளும், ஒரு சில எஸ்டேட் உடைமையாளர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த அணைக்கட்டினால் அவர்கள் எஸ்டேட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டு விடும் என்று இதைக் காலதாமதப்படுத்த பல சூழ்ச்சிகள் செய்கிறார்கள் என்று பொது மக்கள் பேசிக் கொள்கிறார்கள். இத் திட்டத்தை அதிவிரைவில் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இத் திட்டத்தினால் ஒரு சொட்டு தண்ணீர் கூட பாழாகி அரபிக் கடலில் விழாது. அந்தப் பகுதியைப் பொறுத்த மட்டில் இன்னும் அணைக்கட்டிற்கு இலாயக்கான பல நதிகள் இருக்கின்றன. அவைகளிலும் விரைவில் அணை கட்டி, மக்களுக்கு நல்ல வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரப்பர் நடுவதற்கு இரண்டாயிரம் ஏக்கர் எடுப்பதாக இந்த பட்ஜட்டில் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. 1961-62-ல் 440 ஏக்கரும், 1962-63-ல் 364 எக்கரும், 1963-64-ல் 500 ஏக்கரும் ரப்பர் நட எடுக்கப் போவதாகவும் இதற்கு 26 கோடி ரூபாய் மொத்தமாக செலவிடுவதாகவும் கணக்கு தந்திருக்கிறார்கள். ரப்பர் நட்டிருக்கிறவர்களை அப்புறப்படுத்தாமல் வேண்டுமானால் அந்த எஸ்டேட்களை அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுப்பது நலமாக இருக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன். 1947-ல் பலரும் இந்த புறம்போக்கு நிலங்களில் அன்றிருந்த அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி குடியேறி பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கு வசிக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அதில் பெரும் பிரச்னைகளும், சிக்கல்களும் ஏற்பட்டுவிடும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கோதையாறு ஹைட்ரோ எலெக்ட்ரிக் ப்ராஜக்ட்டுக்கு 7.8 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக பட்ஜட்டில் பார்த்தேன். அதற்காக நாங்கள் அரசாங்கத்திற்கு பெரிதும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதை மூன்றாவது திட்டத்தில் செய்வதற்கு வழிவகைகள் செய்யப் போவதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதையும் அதி விரைவில் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மீனவர்கள் பெரும்பாலும் இருக்கிற ஒரு பகுதி கன்னியாகுமரி பகுதி. அவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. விசைப்படகுகள், நைலான் வலைகள் கொடுப்பது போன்ற பல காரியங்களை அவர்களுக்காக செய்திருக்கிறார்கள். அவர்கள் விசைப்படகுகள் பழுது பார்க்க குளச்சலில் ஒரு துறைமுகத்தை நிறுவ அதற்குள்ள சர்வே எல்லாம் பூர்த்தியாகி விட்டது என்று அறிக்கையில் கண்டோம். அத்திட்டத்தை விரைவில் உருவாக்கி விசைப்படகுகள் போன்றவற்றை பழுது பார்க்க வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கொச்சி நீண்டகரை, போன்ற இடங்

களுக்கு விசைப்படகுகளைக் கொண்டு சென்று மீன் பிடிக்க வழிவகைகள் செய்து கொடுக்கவேண்டுமென்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கிய விஷயம். எங்கள் ஜில்லாவில் படித்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள். கல்லூரியில் மாணவர்களுக்கு இடம் கிடைப்பது என்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. அரசாங்கந் தரப்பிலிருந்து பார்த்து பெண்களுக்கு அல்லது ஆண்களுக்கு ஒரு கல்லூரி நிறுவித் தர அரசாங்கத்தினிடம் நாங்கள் பன்முறை எடுத்துக் கூறியுள்ளோம். இதற்கு லாயக்கான பிரதேசங்கள் எங்கள் பகுதியில் இருக்கிறது. அரசாங்கத்தின் கையிலேயே இருக்கிறது. உதயகிரி கோட்டை என்ற கோட்டை இருக்கிறது. முன்பு அது திருவிதாங்கூர் மகாராஜாவின் கையில் இருந்தது. அங்கு 150 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அல்லது கலைக் கல்லூரி ஏதாவது கட்ட போதிய வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. ஆதலால் அந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அரசாங்கத்திலிருந்து அங்கு ஒரு கல்லூரியை நிறுவித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். எங்கள் பக்கத்தில் சித்த வைத்தியர்கள் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். இப்போது சித்தவைத்தியத்திற்காக ஒரு கல்லூரியை குற்றாலத்தில் வைக்கவேண்டுமா அல்லது வேறு எங்காவது வைக்கலாமா என்று அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இந்தக் கல்லூரியை இயற்கை வளம் பொருந்திய எங்கள் மாவட்டத்திலேயே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 12-30 p.m.

முனிசிபல் குடிதண்ணீர் சம்பந்தப்பட்டவரையில், குளச்சல் முனிசிபாலிட்டியிலிருந்தும், குழித்துறை முனிசிபாலிட்டியிலிருந்தும் இதற்கான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இதில் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் விஷயமாக சொல்ல விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் ரயில் பாதை கிடையாது என்பது மிகவும் வருந்தத் தக்க விஷயம். ஆனால் சென்னையிலிருந்து நேரடியாக கன்னியாகுமரிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்று கழிந்த சட்டசபையில் நிதிநிலை அறிக்கையின் மீது நடந்த விவாதத்தின் போது அரசாங்கத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. அது என்னவாயிற்று என்று இதுவரையிலும் தெரியவில்லை. தற்போது ஒரு சில நாட்களுக்கு முன்னால் ராமநாதபுரத்திலிருந்து நாகர்கோவிலுக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சென்னையிலிருந்து நேரடியாக நாகர்கோவிலுக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவது பற்றியும் அரசாங்கம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மாதிரியான நெருக்கடியான நேரத்தில் எங்கள் பகுதியில் பல காரியங்களைச் செய்து தருவதாக நமது முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கூட்டுறவு அடிப்படையில் நூற்பு ஆலை ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பொதுவாக எங்கள் பகுதி இயற்கை வளம் பொருந்திய பகுதியாக இருந்தாலும் ஜனநெருக்கம் உள்ள பகுதியாக இருக்கிறது. பொதுவாக பிற்பட்ட பகுதியாகவே இருக்கிறது. தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். தொழில் துறையில் இனி மேல் தான் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். நாகர்கோவிலில் ஒரு தொழிற் பேட்டை அமைப்பதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதை சீக்கிரத்திலேயே அமைத்துத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான எல்லாவிதமான மூலப் பொருட்களும் அங்கே கிடைக்கின்றன. இந்தியாவில் கிடைக்கின்ற ரப்பர்களிலேயே மிகவும் வளம் பொருந்திய ரப்பராக இருக்கின்றது எங்கள் மாவட்டத்தில் கிடைக்கின்ற ரப்பர் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நல்ல முறையில் ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக சட்டத்துறையில் இன்னும் பூர்த்தியாகவில்லை. அந்தப் பிரதேசத்தில் பல சட்டங்கள் இன்னும் திருவிதாங்கூர்–கொச்சி ராஜ்யத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள்தான் இப்போதும் அமுலில் இருந்து கொண்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்தோடு இணைத்து இவ்வளவு நாட்கள் ஆகியும் இதுவரை சட்டங்கள் எல்லாம் இணைக்கப்படவில்லை. இதை ஒருமைப்படுத்த வேண்டியது சர்க்கார் பொறுப்பாக இருக்கிறது என்பதை இச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற 60-40 சட்டம் இன்னும் கன்னியாகுமரியில் வரவில்லை. அதேபோன்று டெட்-ரிலீஃப் ஆக்ட் இன்னும் வரவில்லை. இவைகளை எல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமுல் நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். தண்டாயுதபாணிப் பிள்ளை: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1963-64-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நெருக்கடியான இந்த நேரத்தில் புது வரிகள் எதுவும் போடாமல்; நல்ல முறையில், திட்டங்களைக் கைவிட்டுவிடாமல் எல்லாவற்றிற்கும் வழிவகை செய்து இந்த அறிக்கையை தயாரித்திருப்பது மிகவும் வரவேற்க வேண்டிய விஷயமாகும். ஆனால்

அதற்கு மாறாக குறை கண்டு பிடிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, "உங்களைப் போன்று மற்ற மாநிலங்களும் தான் வரி போடவில்லையே" என்று பல அங்கத்தினர்கள் கூறியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னால் செய்தித் தாளில் பார்த்திருக்கலாம். குஜராத், ஒரிஸா போன்ற மாகாணங்களில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் விதித்திருக்கின்ற வரிகள் மட்டுமல்ல, மாநில அரசும் வரி விதித்திருப்பதையும் பார்த்திருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் இதை குறிப்பிடாது வரி விதிக்காத மற்ற மாநிலங்களை மட்டும் ஒப்பிட்டுப் பேசுவது உண்மையிலேயே மிகவும் வருந்தத் தக்க விஷயம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கிய இடம் பெற்றிருப்பது, இந்த நெருக்கடியான நேரத்திலும் விவசாயத்தைப் பெருக்க வேண்டும், உற்பத்தியை பெருக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து இருப்பது உண்மையிலேயே மிகவும் வரவேற்க வேண்டிய விஷயம். இந்த மாநிலத்தில் சற்றேறக்குறைய மூன்றேகால் கோடி மக்களில் சுமார் 1 கோடி மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாய பெருங்குடி மக்கள். இவர்களின் சராசரி வருமானம் 375 ரூபாய் என்று பார்க்கும்போது மிகவும் வருந்தக்கூடியதாகத்தான் இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த ஆண்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது எதிர்பாராத விதத்தில் நெல்விலை குறைந்திருப்பதின் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமான நிலைமைக்குப் போய் கொண்டிருப்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்கவேண்டும். ஒரு பழமொழி சொல்வதுண்டு. "உழுபவன் கணக்குப் பார்த்தால் உழக்குத்தான் மிஞ்சும்" என்று சொல்வதுண்டு. அந்த அடிப்படையில் இப்போதுள்ள நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கொடுத்த கடனைவிட இன்னும் அதிகமான அளவில் வாய்ப்பும் வசதியும் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மை என்னவென்றால், ஒரு விவசாயி ஒரு ஆண்டில் கடன் பெற்று விவசாயத்தை செய்து அந்த கடனைகூட செலுத்த முடியாமல் அடுத்த ஆண்டிலும் விவசாயம் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பது. சில நேரங்களில் விவசாயத்திலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக்கொண்டு கடனை தீர்த்தாலும், மீண்டும் விவசாயத்தை நடத்துவதற்கு கடனைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்த முறையில்தான் பெரும்பாலான விவசாயிகள் இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். மற்ற தொழில்களைப் பொறுத்தவரையில் சர்க்காரிலிருந்து பலவிதமான கடன் வசதிகள் செய்து கொடுத்து வருகிறார்கள். இதன் மூலமாக பல லாபகரமாக தொழில்கள் நடந்து வருகின்றன. விவசாயத்தைப் பொறுத்தவரையில் நேர் மாறான நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச்

[திரு. எம். தண்டாயுதபாணிப்பிள்ளை] [4th March 1963

சந்தர்ப்பத்தில் நெல்விலை வீழ்ச்சி அடைந்திருப்பதும் பிற பொருட்களுக்கு விலை ஏறியிருப்பதும் கவலை தரக்கூடியதாக இருக்கிறது. மற்ற பொருட்களுக்கு எந்தவிதத்தில் விலை உயர்ந்திருக்கிறதோ அதே அளவில் நெல்லின் விலை அமைய வேண்டும். அப்படியில்லாமல், 17 ரூபாய், 18 ரூபாய் என்றிருப்பதால் இன்று விவசாயிகள் இக்கட்டான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் பக்கத்தில் 43 பட்டணம் படி கொண்ட அரிசி மூட்டை ஒன்று 37 ரூபாய் எட்டு அணாவுக்கு கிடைக்கிறது. ஆனால் சென்னையில் 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இந்த விலை இவ்வளவு அதிகமாக இருந்தும், இதிலுள்ள பலன் விவசாயிக்கு கிடைப்பதாக இருந்தால் நலமாக இருக்கும், அல்லது இங்கு வாங்குபவர்களுக்கு குறைந்த விலையிலாவது கிடைக்கவேண்டும். அதற்கு மாறாக 37 ரூபாய் என்று அங்கேயும் இங்கே 50 ரூபாய் என்றும் விற்கப்படுவதால் 13 ரூபாய் இடையிலிருப்பவர்களுக்கு கிடைத்துவருகிறது. இதனால் ஏழை விவசாயிக்கு எந்தவிதமான வசதியும் கிடைப்பதில்லை. எங்கள் ஜில்லா உறுப்பினர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது எங்கள் ஜில்லாவில் நெல் விலையை 20 ரூபாய் என்று நிர்ணயித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். இப்போது நகரத்தில் அரிசி விற்கின்ற விலையைப் பார்த்தால் எங்கள் ஜில்லாவில் 20 ரூபாய் என்று நிர்ணயிப்பதற்கு எந்த விதமான சிரமமும் இருக்காது என்று நம்புகிறேன். இப்போது இருக்கின்ற இந்த குறைந்தவிலையிலேயே இருந்து கொண்டிருந்தால் நிச்சயமாக விவசாயத் தொழில் உற்சாகமடைவதற்குப் பதிலாக குன்றிவிடும் என்பதை மனதிற் கொண்டு இதைப்பற்றி நன்றாகப் பரிசிலனை செய்து எந்த அளவுக்கு நெல் விலையை நஷ்டமடையாத அளவுக்கு நிர்ணயிக்க வேண்டும் என்பதை பார்த்து அதற்குத் தகுந்தவாறு நிர்ணயிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்தி அடிப்படையிலே, குழி வள உர உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். ஓரளவுக்கு இன்று பஞ்சாயத்து கூட்டு மன்றங்களால் இது நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டாலும், கையாளப்படுகிற வகை முறை மாற்றப்படவேண்டும். குழி வள உற்பத்திக்கு 6 அடி நீளம், 3 அடி அகலம், 4 அடி ஆழம் அந்தக் குழி இருந்தால்தான் அவர்களுக்கு இந்த மான்யம் வழங்கப்படுகிறது. அதைவிட்டு இந்த அளவுகள் கூடுதலாக அமைந்து விட்டால், அல்லது குறைவாக அமைந்து விட்டால் அவர்களுக்கு இந்த மான்யத் தொகையைக் கொடுப்பதில்லை. சாதாரணமாக இருக்கக்கூடிய விவசாயிகள் இதில் சற்றுக் கூடுதலாக அல்லது குறைவாகக் குழி வெட்டி விட்டால் மான்யம் கொடுக்காமல் இருப்பதை மாற்றி, அவர்கள் சொல்லும் அடிப்படையிலே—அடியிற் தழை, அதற்கு மேல் உரம், அதற்கு மேல் மணல், அதற்கு மேல் தழை என்ற அடிப்படையில் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்—அந்த அடிப்படையிலே செய்கிற விவசாயிகளுக்கு, இந்த நீள அகலத்தில் சற்று கூடுதல் குறை

4th March 1963] [திரு. எம். தண்டாயுதபாணிப்பிள்ளை]

வாக இருந்தாலும் அவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற மான்யம் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பொறுக்கு விதைபற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், சர்க்கார் விதைப் பண்ணைகளைக் காட்டிலும், சாதாரண விவசாயிகளிடத்திலிருந்து பெறுகிற விதையைக் கிராம மக்களுக்கு வழங்குவது நன்மையாக அமையும் என்பதாகும். சர்க்காரிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிற விதைகள், விவசாயிகளிடத்தில் வாங்கப்படுகிற விதையை விடக் குறைவாக முளை விடுகிறது. சர்க்கார் விதைப் பண்ணைகளிலிருந்து வழங்கப்படுகிற விதைகள் போற்றப்படுவதில்லை. பெருத்த அளவில் செலவு செய்து இந்த விதைப் பண்ணைகளைத் துவக்குவதை விட்டு, விவசாயிகளிடத்தில் கொள்முதல் செய்து விவசாயிகளுக்குக் கொடுப்பது நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதைப் பரீட்சார்த்தமாக தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் செய்து வருகிறார்கள். ஓரளவுக்கு நடைமுறையிலும் வரவேற்கப்படுகிற காரணத்தினால் இந்த முறையில் விதைகள் கொடுப்பது அமையவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஆட்சியில் பார்க்கும்போது, குடிதண்ணீர்த் திட்டத்திற்கும், இணைப்புச் சாலைகளை அமைக்கவும், 2 கோடியே 69 லட்சம் ரூபாய் வழங்கவிருப்பதாக அமைச்சர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி கொடுக்கப்படும் 2 கோடியே 69 லட்சம் ரூபாய் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்றால் பஞ்சாயத்து யூனியன் எண்ணிக்கை அடிப்படையில் வழங்கப்படுகிறது. குறிப்பாக 50 பஞ்சாயத்துக்கள் இருக்கிற பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரே தொகை, 25 பஞ்சாயத்துக்கள் இருக்கிற பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரே தொகை என்று சமமாக வழங்கப்படுகிறது. இந்த முறை மாற்றப்பட்டு ஜனத்தொகை அடிப்படையில் வழங்கப்படவேண்டும். அல்லது பஞ்சாயத்துக்களின் அடிப்படையிலாவது கொடுக்க வேண்டுமே தவிர யூனியன் அடிப்படையில் கொடுக்கப்படுவதால் அதிகமான பஞ்சாயத்துக்கள் இருக்கிற யூனியனுக்குக் குறைவாகக் கிடைக்கிறது. குறைவான பஞ்சாயத்துக்கள் இருக்கிற யூனியனுக்கு அதிகமாகக் கிடைக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் இந்தத் தொகை மிக மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் இதைச் சற்று அதிகரித்துக் கொடுக்கவேண்டும். சராசரியாக கிராம அடிப்படையில் பிரித்துப் பார்த்தால் கிராமம் ஒன்றுக்கு 2,000 ரூபாய் அளவுக்குக் கூட வரவில்லை. குடிதண்ணீர் கேணி வெட்டவேண்டும், அல்லது இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று சொல்லும்போது இந்தத் தொகை எந்த அளவுக்குப் பயன்படும் என்று யோசித்து இன்னும் சற்று அதிகரித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். தண்டாயுதபாணிப் பிள்ளை] [4th March 1963

அடுத்தபடியாக, சிறு பாசனத் திட்டத்தை பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்கு வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்ல முறையில் பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் செயல்பட முடியவில்லை. காரணம் அவர்களுக்குப் போதுமான நிதி வசதி கிடையாது. சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 2 அல்லது 2-½ ரூபாய் நிதி வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால் சிறு பாசனத் திட்டங்களை நல்ல முறையில் பராமரிக்க முடியவில்லை. அவர்கள் பராமரிப்புக்கு விடுவதாக இருந்தால் இந்தத் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும். அல்லது சர்க்கார் மேற்பார்வையில் சிறு பாசனத் திட்டமானது அமைந்தால் தான் நல்ல முறையில் அமையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக, இப்போது நாம் விதித்துள்ள தீர்வை அடிப்படையில், குறிப்பாக, தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் 4 தாலுகாக்கள் பட்டுக்கோட்டை, அரந்தாங்கி, தஞ்சையில் ஒரு பகுதி இவைகளெல்லாம்—புதிய ஆற்றுப் பாசனத்தால் வந்த காரணத்தினால் புஞ்சையாக இருந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன தகுதி அளிக்கும்போது, செட்டில்மெண்ட் செய்யப்பட்ட இனம் கிராமங்களில், புஞ்சை, தண்ணீர் பாய்ந்து நஞ்சை நிலத்திற்கான தகுதி இருந்தாலும், தண்ணீர் தீர்வை நஞ்சை நிலத்தை விடப் புஞ்சைக்கு 7 ரூபாய் அதிகமாக இருக்கிற காரணத்தினால் செய்யப்பட்ட செட்டில்மெண்ட்டில் புஞ்சை நிலமாகக் கருதப்பட்டிருக்கிறது. தண்ணீர் தீர்வை அதிகமாக இருக்கிற காரணத்தினால் புஞ்சையாகக் கருதப்பட்டிருக்கிற சந்தர்ப்பத்தில் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு இதைப் புஞ்சை நிலமாகக் கணக்கிடவேண்டுமே தவிர, தண்ணீர் பாய்ந்து சாகுபடி செய்யப்படுகிற காரணத்தினால் நஞ்சை என்று எடுக்கப்படுகிறது. நஞ்சை என்றால் ஒரு ஏக்கருக்கு ஒரு ஏக்கர் என்று எடுக்கப்படுகிறது. புஞ்சையாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு 1-1/3 ஏக்கர் என்று எடுக்கப்படுகிறது. நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் புஞ்சையாக இருந்த நிலம் நில உச்ச வரம்பு அடிப்படையிலும் புஞ்சையாக எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் இதை நல்ல முறையில் பரிசீலனை செய்து அதற்கான உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போடப்பட்ட வரி ஒன்றும் இல்லை என்றாலும் பிப்ரவரி மாதம் 27-ம் தேதியன்று நடைபெற்ற இந்த மன்றக் கூட்டத்தில் நிலத் தீர்வையும், கூடுதலான தண்ணீர் தீர்வையும் ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு அடுத்து இப்போது வரியில்லை என்றால் நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் வரியில்லாத பட்ஜெட்

4th March 1963] [திரு. எஸ் ஜே. ராமசாமி]

என்று இதை எப்படிச் சொல்லுவார்களோ என்றுதான் எனக்குத் தெரியவில்லை. இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கிருஷ்ண பரமாத்மாவானவர் துரியோதனனிடம் தூது சென்று, பாண்டவர்களுக்காக ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்ற முறையில் போனார். ஆனால் துரியோதனன் ஆனவன் இந்த சமரசத்திற்கு வராமல், நான் முன்பு எவ்வளவோ கொடுமைகளைச் செய்து விட்டு இப்போது இதை ஒப்புக் கொண்டால் அதெல்லாம் மறையுமா என்று கிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்துக் கேட்டானாம். அதே போன்று, செய்ய வேண்டியவைகளை நேற்று செய்துவிட்டு, இன்று ஒன்றும் வரி போடவில்லை என்றால், அது நான் முன்பு சொன்ன மாதிரித்தான் இருக்கிறது என்று கருதுகிறேன். குறிப்பாக, விவசாயிகளுக்கு இந்த ஆண்டு பட்ஜெட்டில் சில நிவாரணங்களை அளித்திருந்தாலும், அதை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும். சுயநலமிகளின் வேட்டைக்காடாக இருக்கக் கூடாது என்று கருதுகிறேன். விவசாயத்திலே மிகுந்த அக்கறை காட்டிக்கொண்டிருக்கிற நமது அரசாங்கமானது விவசாய அபிவிருத்தி வேலைகளுக்காக பம்ப்-செட்டுகள், அதற்குண்டான வொயர்கள், அதற்கான ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்சுகள் போன்ற பொருள்களின் விலையைக் கொஞ்சம் குறைக்க ஒரு வழிவகை செய்திருந்தால் இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனமாரப் பாராட்டியிருப்பேன். கனம் அங்கத்தினர் சீமைச்சாமி அவர்கள் சொன்ன மாதிரி—அவர்கள் பொன்னாடை கூடப் போர்த்துவேன் என்று சொன்னார்கள்—இந்த விதமான பல சலுகைகளைக் கொடுத்தால் பொன்னாடை என்ன, புகழேணியில் கூட ஏற்றி விடலாம். அந்த வகையில் கருணை காட்டுங்கள் விவசாயிகளிடம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையில் சில கட்டடங்களைக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எதை எதைக் குறைக்க வேண்டும் என்று சர்க்கார் கொஞ்சம் தீவிரமாக ஆலோசித்து ஆஸ்பத்திரிக் கட்டடங்களை, ஏற்கெனவே எஸ்டிமேட் போடப்பட்டுள்ள ஆஸ்பத்திரி கட்டடங்களைக் கட்டாயம் கட்டி முடிக்கவேண்டும் என்ற நிலைமையைச் சர்க்காருக்கு கவனப்படுத்த விரும்புகிறேன். ஏனென்றால், எமர்ஜென்ஸியை முன்னிட்டு எந்த வேலைகளை நிறுத்தினாலும்கூட, எந்த விதத்திலும் ஆஸ்பத்திரிகளுக்கான, மருத்துவ மனைகளுக்கான கட்டடங்களை நிறுத்தி வைக்கக் கூடாது. மக்கள் நோயினால் கஷ்டப்படும்போது ஆஸ்பத்திரிகள் மிக மிக அவசியம் என்று கருதுகிற காரணத்தினால்தான் இதை நான் சர்க்காருக்கு கவனமூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ரசாயன உர விநியோகம் மிகவும் திருப்தியான நிலைமையில் நடக்கிறது என்று பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாவட்ட சொஸைடிகளுக்கு ரசாயன உரம் வருகிறது. மாவட்ட சொஸைடிகளிலிருந்து தாலூக்கா சொஸைடிகளுக்கு அந்த ரசாயன உரம் போகிறது. தாலூக்காக்களில் இருக்கக்கூடிய மார்க்கெட்டிங் சொஸைடிகளிலிருந்து ஆங்காங்

[திரு. எஸ் ஜே. ராமசாமி] [4th March 1963

குள்ள விவசாய பாங்குகளுக்கும், கூட்டுறவு சொஸைடிகளுக்கும், அவைகளின் மூலமாக விவசாயிகளுக்கும் உரம் விநியோகிக்கப்படுகிறது. ஆனால் நான் இங்கே சொல்ல வேண்டியதென்னவென்றால் மாவட்டங்களிலிருந்து வரக்கூடிய சல்பேட் தாலூக்காக்களுக்கு ஒழுங்காக வந்து சேருகிறதா, அதே மாதிரி தாலூக்காக்களிலிருந்து சல்பேட் கிராமங்களுக்கு ஒழுங்காக வந்து சேருகிறதா என்பதைப் பற்றி ஒரு குறிப்பு அந்தத் தொகுதிகளில் இருக்கக் கூடிய எம்.எல்.ஏ.-க்களுக்கு வழங்கப்படுமானால், எம்.எல்.ஏ.-க்களாகிய நாம் இந்த உர விநியோகத்தை கண்காணித்துக் கொண்டு வரவும், கருப்பு மார்க்கெட்டைத் தடுக்கவும் உதவும். ஆகவே. இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அடுத்தபடியாக, குழி உரத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நல்லதுதான் என்றாலும் அது நடை முறையில் சரியாக நடைபெறவில்லை. யாராவது ஒருவர் கிராமத்தில் குழியை வெட்டி அதில் செத்தைகளையும், வைக்கோலையும் போட்டு விட்டு. உடனே ரூ. 6 வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அதிலே இருக்கக்கூடிய எரு பயன்படுத்தப்பட்டதா என்று கூட கவனிப்பதில்லை. ஒரு குழியை வெட்டி அதிலே செத்தை-குப்பை களையோ அல்லது வைக்கோலைப் போட்டுவிட்டால் ரூ. 6 கிடைத்து விடுகிறது. அதிலிருந்து உண்மையாக உரம் கிடைக்கிறதா என்று பார்ப்பதே கிடையாது. சர்க்கார் போட்டிருக்கிற திட்டம் என்னவோ நல்ல திட்டம்தான். ஆனால் நடைமுறை இருக்கிறதே அது நல்லவிதமாக இல்லை. விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து, ஆங்காங்கு பசுந்தாள் உரத்தை உற்பத்திச் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அவர்களுக்கு அதற்காக மானியம் கொடுத்து உதவ வேண்டும். அம்மாதிரி செய்தால், அவர்கள் பசுந்தாழ் உரத்தைப் பயிர் செய்து நல்ல முறையில் அதைப் பயன்படுத்துவார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ஹைவேஸ் டிபார்ட்மென்ட் திட்டங்களுக்காகவும், மைனர் இரிகேஷன் திட்டங்களுக்காகவும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி திட்டங்களை நான் வரவேற்கிறேன். பொதுவாக இவ் வேலைகளை, ரோடு கண்டிராக்ட்காரர்கள் சரிவர நடத்துவதில்லை. அவர்கள் ரோடுகளை குறிப்பிட்ட காலத்தில் போடுவதே கிடையாது. இம்மாதிரி தமிழ் நாட்டில் அநேக இடங்களில் நடைபெறுகிறது. இதைச் சர்க்கார் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, பஞ்சாயத்து யூனியன்களின் கமிஷனர்களும், அங்கே இருக்கக்கூடிய தலைவர்களும் கிணறு வெட்டுவதற்கு மான்யம் கொடுப்பதில் பாரபட்சம் காட்டுகிறார்கள். யார் தங்களுக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கிறார்கள். எங்கள் பிளாக்குகளை பொறுத்தவரையிலும் 'கிணறு வெட்டுவதற்கு மான்யம் கொடுத்

4th March 1963] [திரு. எஸ். ஜே. ராமசாமி]

தாகிவிட்டது, இனி கொடுப்பதற்கு பணம் இல்லை' என்று கேட்டவர்களுக்கு ஒரு சரக்கைக் காட்டி அந்த மனுக்களை நிராகரித்து விடுகிறார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு முறையைப் பார்க்கும்பொழுது, ஒரு சில குடும்பங்களுக்குத்தான் சம்பந்தப்பட்டதாக அந்தக் கூட்டுறவு முறை அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சரி, ஒரு சில குடும்பங்களுக்குத்தான் கூட்டுறவு முறை அமைந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய வந்தார்கள். அப்பொழுது அங்கிருக்கக்கூடிய தலைவர்கள் வீட்டில் தங்கிக்கொண்டும், விருந்து உண்டுகொண்டும் இருந்தார்கள். தலைவர் வீட்டிலேயே ஒரு அமைச்சர் போய் இருந்தால், டிப்டி ரிஜிஸ்டிராரும், ரிஜிஸ்டிராரும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியும்? மந்திரிகளுக்கு இவர்கள் வேண்டியவர்கள்களாக ஆகிவிட்டார்களே, இவர்களை என்ன செய்ய முடியும் என்று அதிகாரிகளுக்கு பயம் ஏற்படுகிறது. இந்த நிலைமையைப் போக்க சர்க்கார் கூடுமானவரையில் பொதுமக்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்ற கருத்தை மிக மிக ஆணித்தரமாக வலியுறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, பார்க்கப் போனால் மீன் வளத் திட்டத்தின் கீழ் ரூ. 58 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் மைனர் இரிகேஷன் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு வட்டி கூட கட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். மீன் இலாகாவிற்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கு வட்டி கட்டுகிறதா என்று புலப்படவில்லை. மைனர் இரிகேஷன் வேலைகளுக்காக போடப்பட்ட முதலுக்கு வட்டிகூட கிடைக்கவில்லையென்றால், மீன் இலாகாவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 58 லட்சத்திற்கு வட்டி கட்டுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். முன்பு 8 அணா, 10 அணா, 12 அணாவிற்கு விற்ற மீன் இன்று 2½ ரூபாய், 3 ரூபாய்க்கு விற்கிறது. இருந்தாலும் மீன் இலாகாவிற்காக ரூ. 58 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆகையால் சில செலவினங்களைக் குறைத்து பட்ஜெட்டில் பற்றாக்குறை இல்லாமல் சரிக்கட்டியிருக்க வேண்டும். மேலும் ரிஸர்வ் நிதி என்ற ஒரு நிதியை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். நமது சபாநாயகர் அவர்கள், குறளைப் பற்றி ஒருவர் சொல்லுகிறார், கம்பரைப் பற்றி ஒருவர் சொல்லுகிறார் என்று சொன்னார்கள். நான் இந்த மன்றத்தில் ஔவையார் சொன்னதைக் கூற விரும்புகிறேன்

"கல்லானே யானாலும் கைப்பொருளொன்றுண்டாயின்
எல்லோரும் சென்றங்கெதிர் கொள்வர்
இல்லானை இல்லாளும் வேண்டாள், மற்றீன்றெடுத்த தாய்
வேண்டாள் செல்லாதவன் வாய்ச்சொல்."

அறப்பளீஸ்வர சதகத்தில்,

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [4th March 1963

"வாலாயமாய் பெற்ற தாயும் சலித்திடுவர்,
வந்த சுற்றமும் இகழுமே."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரிஸர்வ் நிதி ஒன்றை கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருந்தால், நமது அவசர கால தேவைகளை அதன் மூலம் பூர்த்திச் செய்து கொள்ளலாம். சிக்கனத்தைக் கடைபிடித்து, அடுத்தாண்டிலாவது ரிஸர்வ் நிதி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து எனக்குத் தெரிந்த சில யோசனைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக நீர்ப்பாசன வசதிக்கு முதலிடம் கொடுத்திருக்கிறோம். நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வழி இல்லை. மைனர் இரிகேஷன, ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ரோக்ராமை நிறைவேற்றுவதற்கு பணம் ஒதுக்கி பல திட்டங்களை நிறைவேற்றுவதில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களை செவ்வனே நிறைவேற்றுவதற்கு எனக்குத் தெரிந்து சில யோசனைகளை சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் ஹை லெவல் பம்பிங் ஸ்கீம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதை மாகாண ரீதியில் நடத்தினால் சில மேட்டுப்பாங்கான இடங்களுக்கு கழிவு நீரைப் பயன்படுத்தி அதன் மூலம் நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்துவதற்கு வழி இருக்கிறது. அது போக ஜமீன் பிரதேசங்களில் மராமத்து செய்யப்படாத குளங்கள், ஏரிகள் இவைகளை ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் ப்ரோக்ராம் மூலமாக புட் புரோடக்ஷன் டிபார்ட்மெண்ட் மூலமாக மராமத்து செய்கிறோம். ஆனால் ரீ மாடலிங் என்பது நடைபெறவில்லை. மராமத்து செய்கிறார்களே தவிர, 'ஈக்விடபள் டிஸ்டிரிபியூஷன் ஆப் வாட்டர்' சரிவர செய்யப்படவில்லை. பலன் அடைந்தவர்கள் அதிகப் பலன் அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டப்படுகிறவர்கள் கஷ்டப்பட்டு கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே ரீ மாடலிங் செய்தால்தான் இருக்கக்கூடிய தண்ணீரை சிக்கனமாக செலவு செய்வதற்கு வழி ஏற்படும். பல இடங்களில் கம்யூனிடி வெல்கள் வெட்டலாம். 2, 3 வருஷங்களுக்கு முன்பு விவசாய இலாகா பட்ஜெட்டில் கம்யூனிடி வெல் வெட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் அதைக் கொண்டு வர முடியவில்லை. நாம் இப்பொழுது தனிப்பட்டவர்களுக்கு கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் கொடுக்கிறோம். அதை விட நல்ல நீர் வளம் உள்ள பகுதிகளில் சர்க்காரே கிணறுகள் வெட்டி, தண்ணீர் தீர்வை விதித்து, அதன் மூலம் சிறு நிலச்சுவான்தார்கள் பயன் அடையக்கூடிய நிலைமையில் கம்யூனிடி வெல்கள் வெட்டுவது நலம் என்று நினைக்கிறேன்.

சில பகுதிகளிலே பஞ்சாயத்து டாங்குகள், ரெவின்யூ டாங்குகள், பி.டபிள்யூ. டாங்குகள் என்று சொல்லக்கூடிய டாங்குகள் இருக்கின்றன. ரெவின்யூ டாங்குகள் பஞ்சாயத்து பராமரிப்பில்

4th March 1963] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

இல்லாமல், ரெவின்யூ இலாகாவின் பராமரிப்பில் இருந்தன. ரெவின்யூ டாங்குகளின் பராமரிப்பையும் பஞ்சாயத்து யூனியன்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். மைனர் இரிகேஷன், பி.டபிள்யூ.டி. என்று இரண்டாகப் பிரித்து மைனர் இரிகேஷனோடு ரெவின்யூ டாங்கையும் சேர்த்து அந்தப் பராமரிப்புக்கு ஏற்படுகிற செலவை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்து உதவினால் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில குளங்கள் மராமத்து செய்யப்படவில்லை என்ற குறை நிவர்த்தி செய்யப்படுவதற்கு வழி இருக்கிறது. நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில், கிரவுண்டு, வாட்டர் டாப்பிங் சர்வே ஒரே ஒரு ஜில்லாவில் தான் நடந்து கொண்டிருக்கிறது. செங்கற்பட்டு ஜில்லாவில் மட்டும் தான் நடந்து கொண்டிருக்கிறது. எந்தெந்த இடங்களிலே கிரவுண்டு வாட்டரை டாப் பண்ண முடியுமோ அந்த இடங்களிலே வழி வகை செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் மின்சாரக் கட்டுப்பாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. விவசாயத்திற்கு பகல் நேரங்களில் மின்சாரம் வழங்குவதில்லை. இரவு நேரங்களில் மற்ற தொழில்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு பகல் நேரங்களில் விவசாயத்திற்குக் கொடுத்தால் நல்லது. இதிலே முக்கியமான குறைபாடு என்னவென்றால் உரிய காலங்களிலே தேவையான அளவுக்கு உரங்கள் கிடைப்பதில்லை. அமோனியம் சல்பேட் உரத்தைப் பற்றி எனக்கு முன்பு சில அங்கத்தினர்கள் பேசினார்கள். இந்த அறிக்கையில் கூட நிதி ஆண்டின் முடிவில் 90 ஆயிரம் டன் உர வகைகள் இருப்பில் இருக்குமென்று கண்டிருக்கிறது. இப்பொழுது எவ்வளவு வேண்டுமானாலும் உரத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். எப்பொழுது உரம் போட வேண்டுமோ அந்த நேரத்தில் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் விநியோக முறையில் இருக்கும் குறைபாடுகள்தான். அப்படி உரம் கிடைத்தாலும் எடைக் குறைவாக இருக்கிறது. அதிகமாக உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று நாம் சொல்லுகிற நேரத்தில், 90 ஆயிரம் டன் உரம் கையிருப்பில் இருந்தால், அது விநியோகத்தில் இருக்கும் குறைபாட்டைத்தான் எடுத்துக் காட்டுகிறது. ஜில்லா டெவலப்மென்ட் கூட்டத்தில் இப்பொழுது வேண்டும் உரத்தை வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்குத் தேக்கம் இருக்கிறது. கொடுக்க வேண்டிய காலத்தில் உரம் கொடுக்காததினால்தான் இந்தத் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. எடையைப் பார்த்தால் அதுவும் குறைவாக இருக்கிறது. ஆகவே விநியோக முறையில் இருக்கிற குறைபாடுகளை சீக்கிரத்தில் போக்க வேண்டும்.

1-00 p.m.

கம்போஸ்ட் பிட்டுகள் சம்பந்தமாக நான் சொல்லுவது என்னவென்றால் ஜில்லாக்களில் இருக்கக்கூடிய விவசாய இலாகா அதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிளாக்குகளில் இருக்கிற எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்கள் பூராவும் ரெவென்யூ இலாகாவின் கன்ட்ரோலில் இருக்கிறார்கள். அவர்களுடைய கான்பி

டென்ஷியல் ரிப்போர்ட்டுகளையும் ரெவின்யூ இலாகாவினர்தான் எழுதுகிறார்கள். இப்படி இரண்டு எஜமானர்களுக்கு இவர்கள் பதில் சொல்ல வேண்டிய நிலைமை இருப்பதினால்தான் விவசாய அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆகவே இந்த எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்களுக்கு ஒரு டார்ஜெட் நிர்ணயம் செய்து டிபார்ட்மென்டு பொறுப்பில் ஒப்படைத்து விட்டால் இந்தக் கஷ்டம் ஓரளவு போய்விடும். நான்-டெக்னிகல் ஆபீஸர்கள் மேற்பார்வையிடும்பொழுது இந்தவிதமான கஷ்டங்கள் ஏற்படு கின்றன.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் கூறியபடி தஞ்சை ஜில்லாவிலே பாக்கேஜ் திட்டம் இருந்தும் விளைச்சல் குறைவாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் நோய் நொடிகள் வந்து விட்டன என்று தெரிகிறது. இந்த பாக்கேஜ் திட்டம் அமுலில் இருக்கிற இடங்களிலாவது கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம், கால் நடை இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வந்தால் நலமாய் இருக்கு மென்று நினைக்கிறேன். இப்பொழுது நாம் அதிகமான அளவுக்கு பணம் செலவழித்த போதிலும் எதிர்பார்க்கக்கூடிய பலன் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே பரீட்சார்த்தமாக தஞ்சை ஜில்லாவில் கிராப் அல்லது கால் நடை இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நடப்பு ஆண்டிலே நான்கு புதிய கேந்திரக் கிராம வட்டாரங்களை அமைப்பதாகத் தெரிகிறது. விவசாய அபிவிருத்திக்கு கால்நடை வளர்ச்சித் திட்டங்கள் மிகவும் அவசியம். திருநெல்வேலி ஜில்லா விலே அபிஷேகப்பட்டியிலே ஒரு கேந்திரக் கிராம வட்டாரத்தை அமைக்கப் போவதாக 1962-63-ம் ஆண்டு அறிக்கையிலே தெரிவிக் கப்பட்டது. இப்பொழுது ஒரு வருஷம் ஆகிவிட்டது. இந்த அறிக்கையிலிருந்து இந்த வருடத்தில்தான் அதை அமைக்கப் போவதாகத் தெரிகிறது. இந்த வருடத்திலாவது அதை அமைப் பார்களா என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே ஒன்றை நிறுவுவதாகத் தீர்மானம் செய்து விட்டார்கள். ஆனால் அதை எந்த இடத்திலே நிறுவுவது என்று முடிவுக்கு வர கிட்டத்தட்ட 12 மாதங்கள் ஆகிவிட்டன. திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மேலும் காலதாமதம் ஆகுமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

கனம் திரு. பூ. கக்கன்: இடமே நம் கைக்கு வந்து சேரவில்லை. அதற்குள்ளாகவே திட்டத்தை எப்படி அமுல் நடத்த முடியும்?

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: இடத்தை தீர்மானம் பண்ணுவதற்கே ஒரு வருடம் ஆகிவிட்டது என்பதைத்தான் நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டேன். அபிவிருத்தி வேலைகளிலே காலதாமதம் ஆகக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

பஞ்சாயத்துக்களுக்காக குடி தண்ணிருக்கு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இணைடர்-ரோடுகள் போடுவதற்கு பணம் ஒதுக் கப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். நாம் இப்பொழுது ஒரு நெருக்கடியான நிலைமையில் இருக்கிறோம். இப்பொழுது செலவை சிக்கனப்படுத்துவது மிகவும் அவசியம். அதற்கு ஜில்லாக்களையும், தாலுக்காக்களையும் டீலிமிட் செய்யலாம். அப்படிச் செய்தால் நிர்வாகச் செலவு குறையும் என்பது என்னு டைய அபிப்பிராயம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். இப்பொழுது தென் காசி ஒரு தாலுக்காவில் இரண்டு தலைநகரம் இருக்கின்றன. செங்கோட்டையும் ஒரு தாலுக்காவின் தலைநகரம். தென் காசியிலே விரிவான அளவுக்கு இடம் இருக்கிறது. தென் காசி, செங்கோட்டை ஆகிய இரு தாலுக்காக்களையும் இணைத்து, அதிக இடங்களை செங்கோட்டைக்கு கொடுத்தால், அதன் மூல மாக தாசில்தாரையோ அல்லது சிப்பந்திகளையோ குறைக்க வழி ஏற்படும்.

இப்பொழுது விவசாய வருமான வரி ஆபீஸ்கள் இருக்கின்றன. அவற்றின் வரவு செலவு என்ன என்று பார்த்தால் வருந்தக்கூடிய நிலையிலே இருக்கிறது. அதை ஏதாவது இலாகாவுடன் இணைப்ப தன் மூலமாக செலவைக் குறைக்கலாம்.

எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்களை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் கூட்டுறவு எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் இருக்கிறார்கள். இரண்டு ப்ளாக்குகளுக்கு ஒரு எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் என்று வைத்தால் சிக்கனம் ஏற்படும். ஜில்லாவிலே வில்லேஜ் இன்டஸ் டிரீஸ் ஆபீஸர் இருக்கிறார். அவர் காதி போர்டைச் சேர்ந்தவர். அதே போல் இண்டஸ்டிரீஸ் இலாகாவைச் சேர்ந்த காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் ஆபீஸர் இருக்கிறார். அவருக்கும் இவருக்கும் இணைப்பு இல்லாமல் இருக்கிறது. இந்த இரண்டு வேலைகளையும் இணைத்தால் அதன் மூலமாக நிர்வாகச் செலவைக் குறைக்கலாம்.

முதியோர் பென்ஷன் திட்டம் மிகவும் வரவேற்கத் தக்கது. ஆனால் காலதாமதம் ஏற்படாமல் பென்ஷன் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கக்கட்டுப்பாட்டினால் பொற்கொல்லர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். 14 காரட் தங்க நகைகள் செய்வதற்கு வேண்டிய தங்கத்தை அவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் இந்த ஏழைகளின் கஷ்டத்தை ஓரளவுக்கு நிவர்த்திச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. மு. சண்முகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதிலே, இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக நமது மாநில அரசாங்கம் பல புதுப் பொறுப்புக்களை ஏற்க வேண்டியிருக்கிற தென்றும், அதே நேரத்

தில் சமுதாயத்திலே பொருளாதார வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு திட்ட வேலைகளை துரிதமாக நிறைவேற்ற வேண்டு மென்றும் கூறி, இந்த இரண்டு முக்கிய காரணங்களை மனதில் வைத்து இந்த அறிக்கையைத் தயாரித்திருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த வகையிலே நாட்டினுடைய பாதுகாப்பை நிறைவேற்றும் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருந்த போதிலும்கூட, இந்த அவசர நிலைமையிலே நாமும் அதிலே பங்கு கொண்டு ஏற்பட்டிருக்கும் செலவினங்களை ஓரளவு ஏற்றுக் கொள்ள கடமைப்பட்டவர்கள்தாம். துண்டு விழுந்திருக்கும் பற்றுக்குறையைச் சரிகட்ட மத்திய அரசாங்கம் பல வரிகளை விதிக்க முன்வந்திருக்கிறது. இந்த வரி விதிப்பினால் பாதிக்கப்பட்டதாக மக்கள் கருதாமல், வரிகளை மனம் கோணாமல் கொடுப்பார்கள் என்று அவர்கள் நம்புவதாக அதிலே கண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே எங்கள் கட்சி சம்பந்தப் பட்ட வரையில், நாங்களும் நாட்டில் உள்ள அவசர நிலைமையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கத்தினுடைய திட்டத்தில் சரியோ தவறோ எதுவாக இருந்தாலும், அவைகளை அலசிப்பார்த்துக் கொண்டிருப்பதை விட்டு, பொறுப்பை ஏற்கும் கடைமையை நாங்களும உணர்ந்தவர்கள் என்பதை நிதி அமைச்சர் அவர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திட்டத்திலே பற்றுக்குறையாக 2 கோடி 74 லட்சம் ரூபாய் இருப்பதாக நிதி நிலை அறிக்கையில் கண்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதிலே பற்றுக்குறை நிலைமையில் வரவு செலவுகளை விட்டு வைத்திருப்பதானது, நிதி அமைச்சர் அவர்கள் நீண்ட கால அனுபவத்தினால் செய்துள்ள ஒரு பெருமை என்பது மிக நுணுக்கமாக ஆராய்ந்து, தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை என்று நான் சொல்ல வேண்டும். நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து, அதைச் சபையில் கொண்டுவருவதற்கு முன்பு, அதை எப்படி இரகசியமாக, பாதுகாக்கப்பட்ட நிலைமையில் வைத்திருந் தார்களோ, அதே போல்தான், பற்றுக்குறை நிலைமையைச் சரிக் கட்டுவதற்கான நிலைமையும் உள்ளது என்று இந்தச் சந்தர்ப் பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பற்றுக்குறை நிலைமையினால் மக்களுக்கு பயம் ஏற்படாத அளவுக்கு அதைச் சரி செய்வதற்காக "நாங்கள் (சர்க்கார்) புதிதாக வரி ஒன்றும் விதிக்கப்போவது இல்லை" என்று அறிக்கையில் கண்டிருக்கிறார்கள். அப்படிச் சரிகட்ட வேண்டியது சாமர்த்தியத்தைப் பொறுத்தது என்றுதான் சொல்ல வேண்டும். அந்த சாமர்த்தியத்தைத்தான் எங்கள் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் போற்று வதாகக் குறிப்பிட்டது. பற்றுக் குறையைச் சமாளிப்பதற்கு மத்திய அரசாங்கத்துடன் மாநில அரசாங்கம் ஒத்துழைப்பதற்கு எவ்வளவு பொறுப்பும் கடமையும் கொண்டிருக்கிறார்களோ, அதே பொறுப்பும் கடமையுணர்ச்சியுடனும் மத்திய அரசாங்கத் திடமிருந்து மாநில அரசாங்கம் பெறவேண்டிய நிதி வசதிகளையும் பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்யவேண்டும். மாநில சர்க்காருடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கில்லை என்று நிலை

மையில் மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி நமது மாநிலத்திற்கு கூடுதலான தொகையைப் பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கிறேன். அவருடைய அறிக்கையிலே குறிப்பிடுகிறபோது, மத்திய அரசாங் கத்திடமிருந்து பெறக்கூடிய மானியத்திலே நான்கு கோடி ரூபாய் எதிர்பார்ப்பதற்கில்லாத நிலைமை ஏற்படுமோ என்று சந்தேகப் படுவதாகக் குறிப்பிடுகிறார்களே தவிர, திட்டவட்டமாக 'கிடைக் காது' என்ற நிலைமைக்கு அவர்கள் இன்னும் வராமல் இருப்பதால் மறுபடியும் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி, அந்த நான்கு கோடி ரூபாயையும் நம் மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய வகையில், இந்த மாநிலத்தின் நிதி நிலைமையை எடுத்துச்சொல்லி, கூடு தலான தொகையைப் பெறுவதற்கு முயற்சி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

1963-64-ம் ஆண்டு பட்ஜெட் மதிப்பீட்டில், 127 கோடி ரூபாய் செலவினங்களுக்காக ஒதுக்கியிருப்பதில் சுமார் 60 கோடி ரூபாய் வரையில் முக்கிய இனங்களுக்காகச் செலவிட உத்தேசிக் கப்படுகிறது. விவசாயம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மின் சாரம், தொழில் நுட்பக் கல்வி ஆகிய இப்படிப்பட்ட காரியங் களுக்கு மட்டில் முக்கியத்துவம் கொடுக்க முன்வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இனங்களுக்கு மட்டும் நாம் முக்கியத்துவத்தைக் கொடுத்து எடுத்துக்கொண்டால், 60 கோடி ரூபாயில் 40 கோடி ரூபாய்தான் அதற்காக ஒதுக்கப்பட்டிருப்ப தாக நாம் கணக்கிட முடிகிறது. 127 கோடி ரூபாய் மொத்தத்தில் 40 கோடி ரூபாய் மட்டும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று சொல்லக்கூடிய காரியங்களுக்குப் போதுமானதாக நாம் கருத முடியாது. இந்த 40 கோடி ரூபாயில் 25¾ கோடி ரூபாய் மின் சாரம், பாசன வசதிக்காகக் கொடுக்கப்படுகிறது. மின்சாரத்தை ஒரு வருவாய் இனமாகக் கருதினாலும், இந்த 25 கோடி ரூபாயைக் கழித்துவிடும்போது பொது மக்களுடைய வசதிகளுக்காகக் கொடுக்கப்படுவது சுமார் 14 கோடி ரூபாய் அளவுதான் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஓரளவு உடனடியாகச் செய்ய வேண்டிய வசதிகள் நலன்களுக்கான திட்டங்களை எடுத் துக் கொள்வதற்கு இந்த அறிக்கையிலே அதிகத் தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று நான் நிதி அமைச்சர் அவர் களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 3 கோடி 65 லட்ச ரூபாய் மிகவும் குறைவான தொகை என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு ஊரிலும் நிறைவேற்றப்படவேண்டிய இத்தகைய திட்டங்கள் நிறைய இருக்கின்றன என்று சபையில் பல கனம் அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, சிறிய பாசனத் திட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்குவது நியாயம் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது ஒதுக்கப்பட் டிருக்கும் 3 கோடி 65 லட்சம் ரூபாய்க்குப் பதிலாக இன்னும் இரண்டு கோடி ரூபாய் சேர்த்துக்கொள்வது நலம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[திரு. மு. சண்முகம்] [4th March 1963

விற்பனைக் கிடங்கு வசதி செய்து தருவதற்கு நான்கு லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தி செய்வதற்கு ஊக்கமும் ஆதரவும் விவசாயிகளுக்குச் செய்து கொடுப்பது மட்டும் போதாது. உற்பத்தியான விளைபொருள்கள் சரியான விலைக்கு விற்கப்படவும் வகை செய்யப்படவேண்டும். 'விற்பனையும் கிடங்கு வசதியும்' என்ற தலைப்பில் நான்கு லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திய நிலைமைகளை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அறுவடைக் காலத்தில் நெல் விலை மிகக் குறைவுபட்டிருப்பதை விவசாயிகள் உணர்ந்து, தானியங்களை கூட்டுறவு சங்கங்களில் அடகு வைத்துக், கடன் பெற்று, வழக்கமான செலவுகளை சரி செய்துகொண்டுவிட்டு, பிறகு நல்ல விலை கிடைக்கும்போது தானியங்களை விற்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கிராமங்களில் கிடங்கு வசதிகள் மிக முக்கியமாகத் தேவைப்படுகிறது. தாலுக்கா தலைநகரத்தில் கூட கிடங்கு இல்லாத நிலைமையில் பல தாலுக்காக்கள் இருக்கின்றன. எட்டு, பத்து கிராமங்களுக்கு ஒரு கிடங்கு வீதம் இருந்தால், விவசாயிகள் தானியங்களைப் பாதுகாத்து வைத்திருந்து, தேவையான கடன்களைப் பெற்று, நல்ல விலை கிடைக்கும்போது தானியங்களை விற்க முடியும். ஆகவே, 'கிடங்குகள் வசதி' என்ற தலைப்பில் பெருவாரியாகத் தொகை ஒதுக்க வேண்டியது அவசியம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தொழில்கள் சம்பந்தப்பட்ட வரையில் சிறு ரகத் தொழில்களில் முக்கிய கவனம் செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்த நெருக்கடி நிலைமையில் ஒவ்வொரு கிராமத்திலும் கைத்தொழில் ஆட்கள் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. தச்சர்கள், கருமார்கள் போன்றவர்கள் நாட்டிலே குறைந்து வருகிறார்கள். ஆகவே, தொழில் நுட்பக் கலைப் பயிற்சி அளிக்கும் திட்டங்களுக்காகப் பெருவாரியாக நிதி ஒதுக்கி, தொழில் நுட்பக் கலையில் ஏராளமானவர்களுக்குப் பயிற்சி கொடுத்தால் நாட்டில் இத்தகையவர்கள் பெருகமுடியும். இந்த இனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 1 கோடி 29 லட்ச ரூபாய் போதுமானதாக இல்லை. இதை இரட்டிப்பாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சிறு ரகத் தொழிலுக்கு ஆதரவு கொடுப்பதற்காக இதற்கென்று மூன்று கோடி 91 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பாதுகாப்பு வேலைகளுக்காக . . . .

(மணி அடிக்கப்பட்டது)

* **திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் நிதி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை இந்த நாட்டிலுள்ள அவசர நிலைமையைப் பின்னணியாகக் கொண்டு மிகவும் ஜாக்கிரதையாக தயாரிக்கப்பட்டு இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை நாம் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகக் கூர்ந்து படித்தால் கனம் அமைச்சர் அவர்களுடைய பொருளாதார நிபுணத்துவத்தையும், மக்களின் மனோபாவத்தை

4th March 1963] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

நன்கு உணர்ந்த மனோதத்துவத்தையும் நன்கு உணரலாம். அவருக்குப் மனோதத்துவ நிபுணர் என்ற பட்டத்தையே சூட்டிவிடலாம் என்று நான் கருதுகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட காலத்தில் இந்தச் சபை அங்கத்தினர்கள் இருவிதக் கவலையுடன் நுழைந்தனர். ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களாகிய எங்களுக்கு, இந்த பட்ஜெட்டில் எங்கே வரி போட்டு விடுகிறார்களோ, வரி போட்டால் இன்று நாட்டில் உள்ள நிலைமையில் தொகுதி மக்களிடையே சென்று என்ன சொல்வது என்ற கவலை இருந்தது. ஆனால் எதிர்க்கட்சிக் காரர்கள், இந்த பட்ஜெட்டில் வரி இல்லாமல் போய்விடுமா, வரி இல்லையென்றால் மக்களுடைய எதிர்ப்பை ஆளும் கட்சிக்கு விரோதமாகத் திருப்பி விட்டு தங்கள் கட்சிக்கு ஆதரவு தேடிக் கொள்வது எப்படி என்ற கவலையோடு தான் உள்ளே நுழைந்தார்கள். ஆனால் இந்த மன்றத்தின் வெளியிலே—இந்த மாநிலத்திலே உள்ள மக்களின் கவலை எல்லாம் வரி எவ்வளவு ஆனாலும் ஆகட்டும் அவசர நிலைமை காரணமாக திட்டங்கள் தள்ளிப்போடப்பட்டு விடுமோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வரி போடப் படவில்லை என்றவுடன் எங்கள் கவலை நீங்கிற்று. துரதிருஷ்ட வசமாக எதிர்க்கட்சிக்காரர்களுடைய குறைகள் மட்டும் தீர்க்கப் படாமல் விடப்பட்டுவிட்டது. வரிகள் எதுவும் போடப்படவில்லையே, மக்களிடம் போய் சர்க்காருக்கு எதிராக என்ன சொல்வது என்று அதிகமாகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்ன புதுக் காரணம் கண்டுபிடிக்கலாம் என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எதாவது புதுக்காரணத்தை கண்டுபிடித்துத்தான் ஆகவேண்டுமென்று நான் கருதுகிறேன். திட்டம் எதுவும் இந்த நெருக்கடி காரணமாக நிறுத்தப்படாது என்பதனால் மக்களுடைய அபிலாஷையும் இந்த நிதி நிலை அறிக்கையினால் நிறைவேற்றப் பட்டுவிட்டது. ஆக எங்கள் கவலை தீர்ந்தது, மக்கள் கவலை தீர்ந்தது. இவர்கள் கவலை மேலும் அதிகரிக்கும்படியாகச் செய்து விட்டது இந்த நிதி நிலை அறிக்கை.

அடுத்தபடியாக, நேற்று எதிர்க்கட்சியில் இருந்து பேசிய திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னார்கள். "வழிப்பறிக் கொள்ளை நடக்கிறது" என்பதாக. கனம் மதியழகன் அவர்கள் சதித் திட்டம் தீட்டுகிறீர்கள் என்று சொன்னார்கள். இப்படி எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் கனம் நிதி அமைச்சரைத் தாக்கினார்கள். எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது. சுட்டாலும் செம்பொன் தன் ஒளிமாறாது என்ற வாக்குக்கு ஒப்ப, எவ்வளவு தான் தாக்கினாலும், திட்டினாலும் இந்தப் பக்தவத்சலம் என்ற தங்கம் மிளிருமே தவிர இந்தத் தங்கத்தின் தரம் என்றும் குறையாது என்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வரி போடுகிறோம். க்ஷேமநல அரசாங்கம் வேண்டுமென்றால் வரி போட்டாகவேண்டுமென்பது உண்மை. இந்த உண்மைக்கு புறம்பாக எந்த வரி போட்டாலும் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் எதிர்க்கவேண்டுமென்றே ஒரு தலைவர் சென்னையில் இருக்கிறார். நான் யோசனை ஒன்று கூற

விரும்புகிறேன். மிகவும் தாழ்மையான யோசனை. உங்களுடைய செல்வாக்கை உபயோகித்து டெல்லியில் அவருக்கு ஒரு மந்திரி பதவியாவது வாங்கிக் கொடுத்துவிடுங்கள். அப்போது அவர் திருப்தி அடைந்து சும்மாயிருப்பார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டத்தில் கல்விக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். நமது வருமானம் 124 கோடி ரூபாய் என்றால் இதில் கல்விக்காக 29 கோடி சொச்சம் ரூபாய் நாம் செலவழிக்கப்போகிறோம். இது பெரிய சாதனை. மற்ற மாநிலங்கள் இந்த அளவுக்குச் சாதித்து இருக்கிறதா என்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மதியழகன் கூறும்போது அமெரிக்கா, கனடா ஆகியவற்றின் பட்ஜெட் உரையைப்பற்றியும், ருஷ்யாவின் பட்ஜெட் உரையைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அமெரிக்கா எப்போது சுதந்திரம் அடைந்தது, ருஷ்யா எப்போது சுதந்திரம் அடைந்தது. நம்முடைய நாடு எப்போது சுதந்திரம் அடைந்தது என்று கவனித்துப் பார்த்தால் நன்றாக இருந்திருக்கும். அமெரிக்கா சுதந்திரம் அடைந்து நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கடந்துவிட்டன. நாம் சுதந்திரம் அடைந்து பதினைந்தே ஆண்டுகள் ஆகின்றன. அமெரிக்கா சுதந்திரம் அடைந்த தன்னுடைய பதினைந்தாம் ஆண்டு பட்ஜெட்டோடு, சுதந்திரம் அடைந்து பதினைந்தே ஆண்டாகிற நம்முடைய நாட்டு பட்ஜெட்டை ஒப்பிட்டுப் பார்த்து அவர்கள் பேசியிருந்தால் ஒரு வகையில் பொருத்தமாக இருந்திருக்கும். இன்றைக்கு அயல்நாட்டில் இருந்து வருகிற பொருளாதார நிபுணர்களும் சரி, திட்ட நிபுணர்களும் சரி நம்முடைய திட்டங்களையும், சாதனைகளையும் அபாரமாகப் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுதல்கள் எல்லாம் திரு. மதியழகன் மதியிலிருந்து நழுவிவிட்டதோ என்னமோ சந்தேகமாக இருக்கிறது.

கல்வித் திட்டத்தைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கேள்வி நேரத்தில் கூறும்போது நம் மாநிலத்தில் 7 லட்சம் மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிறார்கள், 5 லட்சம் பேர்களுக்குக் கல்விச் சலுகை அளிக்கப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். மீதியுள்ளவர்கள் 2 லட்சம் தான். இவர்களும் அரைச் சம்பளம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கிற அத்தனை மாணவர்களுக்கும் இலவசக் கல்வி அளிப்பது என்று செய்துவிட்டால் இதனால் நான்கைந்து லட்சம் அதிகமாகச் செலவாகலாம். இது ஒரு மிகப்பெரிய கூடுதல் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே இவ்விஷயத்தில் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத் துறையில் 26 கோடி சொச்சம் ரூபாய் நாம் செலவிட திட்டமிட்டிருக்கிறோம். இது ஒரு குறைந்த தொகையில்லை. பல தொழில் அபிவிருத்திக்காகவும் நாம்

பணம் ஒதுக்கியிருக்கிறோம். அபிவிருத்தி ஒன்றுமே இல்லையென்று சொல்ல முடியாது. திட்டம் வெற்றிபெற உதவி செய்யா விட்டாலும் முட்டுக்கட்டையாவது போடாது இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிக்காரர்களை நான் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. வேண்டுமென்றால் பஸ் வசதி செய்து கொடுத்தாவது நம்முடைய அங்கத்தினர்களுக்கு நம்முடைய திட்டங்கள் எல்லாம் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நேரில் போய்க் கண்டுவர ஏற்பாடு செய்யலாம். உதாரணமாக எங்கள் மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் ஆதரவில் கச்சா பிலிம் தொழிற்சாலை நடக்கிறது. அங்கே இருக்கும் வேகமும், சுறுசுறுப்பும், தொழிலாளர்கள் காட்டுகின்ற ஊக்கமும் நாமே ஆச்சரியப்படவேண்டியதாக இருக்கிறது. சினிமாத் துறையில் ஈடுபட்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு வேண்டிய கச்சா பிலிம்களை இனிமேல் எங்களுடைய காங்கிரஸ் அரசாங்கமே வழங்கப் போகிறது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சுகாதாரத்தில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் மிகவும் முக்கியமானது. இரண்டு நாளைக்கு முன்னால் பத்திரிகையில் குறிப்பு ஒன்று பார்த்தேன். இதற்கு முக்கியத்துவம் கொடுத்தாகவேண்டும், எந்தக் காரணத்தினாலும் இதில் மாற்றம் செய்துவிடக்கூடாது என்பதாக மத்திய சுகாதார அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். இன்றையதினம் ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டருக்காக மத்திய சர்க்கார் 27 ஆயிரத்து 5 நூறு ரூபாய் கிராண்டு கொடுக்கிறது. இதை நாம் ஏன் இழக்க வேண்டும் என்று தெரியவில்லை. அங்கங்கே கூடுமான வரையில் இந்த சென்டர்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம குடிதண்ணீர் திட்டத்திற்குக் குறைவாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையும் சற்று அதிகரிக்க வேண்டும். நம் நாட்டிலே விவசாயிகளின் எண்ணிக்கை 80 சதவிகிதம். இந்தச் சதம் எப்படியேனும் குறைந்து 50 சதவிகிதமாக ஆனால் தான் விவசாயிகளின் நிலையை உயர்த்த முடியும். இல்லாவிட்டால் முடியாது என்று இந்தச் சபையில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதற்குப் பிறகு மத்திய சர்க்கார் ஆயில் ரிபைனரி ஒன்றை தென்னகத்தில் அமைக்க இருப்பது பற்றிப் பத்திரிகையில் பார்த்தேன். இப்பொழுது அதை சென்னையில் வைப்பதா மைசூரில் வைப்பதா, கொச்சியில் வைப்பதா என்பதாக ஆராய்ச்சி நடக்கிறது. நம்முடைய மாநில சர்க்கார் இதுபற்றி நன்கு ஆராய்ந்து நம்முடைய தமிழகத்தில் அது அமைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

'நான்-கெஜட்டெட்' ஆபீசர்களுக்கு 'ஹில் அலவன்ஸ்' 1-30 p.m.
கிடைக்கிறது. 'நான்-கெஜடெட்' ஆபீசர்கள் 'கெஜடட் ஆபீசர்'களாக மாறியவுடனேயே மலைப் பிரதேசங்களில் 'ஹில் அலவன்ஸ்'

[திரு. டி. கார்ச்சா கவுடர்] [4th March 1963

கொடுப்பதில்லை. அவர்களும் குளிர்ப் பிரதேசத்தில் வாழவேண்டுமென்றால் அவர்களுக்கும தயவு செய்து 'ஹில அலவன்ஸ' கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட கலெக்டருக்கும், மற்றும் ஒவ்வொரு இலாகாவிற்கும் ஜீப் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஜீப்களுககுப் பெட்ரோல் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே. மாவட்ட கலெக்டர்களுக்கு கார் கொடுக்கலாம், கார் ஒரு காலனுக்கு 30 மைல் போகும் என்றால், ஜீப் 15 மைல்தான போகும. அதன் காரணமாகப் பாதிச் செலவு மிச்சமாகும், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் பால் பவுடர் தொழிற்சாலை ஏற்படுத்தப் போவதாகப் பத்திரிகைகளில் பார்த்து நான் ரொம்ப ஆவலாக இருந்தேன். ஆனால் அது இன்னும் ஏற்படக் காணோம். அதை எப்போது ஏற்படுத்தப் போகிறார்கள் என்று கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்விட்சர்லாந்து நாட்டின் உதவியினால் கடிகாரத் தொழிற்சாலை அமைக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதையும் இந்த பட்ஜெட் உரையிலே பார்க்க முடியவில்லை. இந்த இரு திட்டங்களையும் எப்படியாவது முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

1-31 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

III. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. *Statutory Rules and Orders.*

Nil

B. *Reports, Notifications and other papers.*

* 47. *A short Review of the activities of the Madras State Electricity Board during the first half year of 1962-63.*

*48. *Short Reviews of the activities of the Madras Record Office, Tribunal for Disciplinary Proceedings and the Madras Public Service Commission for the first half of 1962-63.*

† 49. *Third Five-Year Plan in Madras State—Review of progress for 1961-62 and 1962-63 and Programme for 1963-64 (English and Tamil).*

* Kept in Library for perusal by Members.
† Laid on the Table of the House on 2nd March 1963.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 5th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

'பஸ் பர்மிட்டுகள்'

* 123 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962, மே முடியவுள்ள ஓராண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் புதிய பஸ் ரூட்டுகள் எத்தனை வழங்கப்பட்டன?

(இ) அவற்றுள் (1) பழைய பஸ் முதலாளிகளுக்கு வழங்கப்பட்டவை, (2) புதியவர்களுக்கு வழங்கப்பட்டவை எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 78 new routes were opened with 97 permits.

(அ) 97 பெர்மிட்டுகளுடன் 78 புதிய பஸ் ரூட்டுகள் வழங்கப்பட்டன.

(*b*) 60 routes were allowed to 76 existing operators and the remaining 18 routes were allowed to 21 new entrants.

அவற்றில் பழைய பஸ் முதலாளிகள் 76 பேருக்கு 60 ரூட்டுகளும், புதிய பஸ் முதலாளிகள் 21 பேருக்கு 18 ரூட்டுகளும் வழங்கப்பட்டன.

புலவர் கா. கோவிந்தன்: பழைய முதலாளிகள் ஏற்கனவே நிறைய பஸ் ரூட்டுகள் வைத்துக் கொண்டிருப்பதால் சிறிய முதலாளிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் புது ரூட்டுகளை தனிப்பட்ட புதிய விண்ணப்பதாரர்களுக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஸ் ரூட் வழங்குவது பற்றி அரசாங்கம் பொதுவாக சில கொள்கைகளை நிர்ணயித்திருக்கிறது. அதற்கு மேல் அரசாங்கம் தலையிடுவதில்லை. அந்தக் கொள்கையின்படி ஆங்காங்கிருக்கிற இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அல்லது அதாரிட்டிகள் பஸ் ரூட்ஸ் வழங்குகிறார்கள். இம்மன்றத்திலுள்ள அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் என்ன பொதுவான கொள்கை இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கு வாசிக்கிறேன்.

Bus routes for the grant of permits shall be classified as " short routes " covering a distance of 15 miles, " medium routes " covering a distance of 15 and 75 miles and " long routes " covering a distance between 75 and 250 miles. Preference may be given to new entrants for permit for short routes and to applicants with one to four buses for permits for medium routes.

Applications for stage carriage permits are screened and disqualified for financial instability, trafficking in permits, not having main office or branch office or for not residing on the route to control the service and making applications on behalf of others. Production of income-tax clearance certificate is insisted upon to assess the financial stability of applicants.

In case of an applicant who is a new entrant, the possession of workshop facilities or any arrangement with an established workshop need not be insisted upon for assessing the merits of applicant. In case of a small operator who owns less than five buses (excluding spare buses) the possession of a workshop shall be optional, but necessary arrangements with one or more established workshops shall be compulsory. The possession of a pucca workshop is compulsory in case of an operator who possesses five buses and more.

திரு. கி. இரா. சம்பந்தம்: பஸ் ரூட் கொடுப்பதில் இப்போதும்
அந்த மொனாப்பலி ஸிஸ்டம் அனுசரிக்கப்பட்டு வருகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் இப்போது கொடுத்
திருக்கிற விவரங்களில் அதற்கெல்லாம் விடை இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன்: சிறிய பஸ் ரூட்கள், மீடியம் பஸ்
ரூட்கள் இவைகளை பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்க
வேண்டுமென்ற யோசனையை இந்த அரசாங்கம் ஏற்றுக்
கொள்ளுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கத்தினிடம் அத்
தகைய யோசனை ஒன்றுமில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒரு பஸ் முதலாளியிடத்தில் இவ்
வளவுதான் பஸ் இருக்கலாம் என்று உச்சவரம்பு கட்ட அரசின
ருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு உத்தேசம் இப்
போது ஒன்றுமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: ஐந்து பஸ்களுக்கு மேல் வைத்திருக்
கும் பஸ் உரிமையாளர்கள் இந்த மாநிலத்தில் இப்போது மொத்தம்
எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி என்னிடம் இப்
போது விவரம் இல்லை, தனி கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: ஒரு ரூட்டில் பழைய பஸ் முதலாளி
கள் அவர்களது பஸ்களை ஓட்டிக் கொண்டிருந்தால் புதிதாக ஒரு
பஸ் ரூட் திறக்க வேண்டுமென்று மக்கள் கேட்டு அரசாங்கமும்

அதை ஏற்றுக்கொண்ட பிறகு, ரூட் ஓப்பன் செய்யலாம் என்று
பிறகு ஹைக்கோர்ட்டில் 'ரிட்' போட்டு பஸ்ஸை ஓட முடியாதபடி
செய்து விடுகிறார்கள். அது மக்களுக்கு இடைஞ்சலாக இருப்ப
தால் ஹைக்கோர்டில் ஸ்டே ஆர்டர் கொடுப்பதை நிறுத்த
சட்டத்தை திருத்த அரசாங்கம் முற்படுமா?

MR. SPEAKER: The hon. Member is suggesting interference with the judiciary.

கனம் திரு. எம் பக்தவத்சலம்: கோர்ட் விஷயத்தில் அரசாங்கம்
தலையிடக்கூடாது.

திரு. எஸ். மாதவன்: இப்போது இந்த ரூட் கொடுக்கும் அதி
காரம் கலெக்டரிடத்தில் இருக்கிறது. அதை ஒரு ட்ரிப்யூனலாக
மாற்றவேண்டுமென்பதில் இந்திய சர்க்காருக்கும் நம் மாநில சர்க்
காருக்கும் கருத்து வேறுபாடு உண்டா? அப்படியானால் அதை
மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ரூட் கொடுக்கும் விஷயம்
இந்த அரசாங்கத்தைப் பொறுத்தது. இந்த அரசாங்கம் எது சரி
என்று கருதுகிறதோ அப்படித்தான் நடக்கும். ரூட் கொடுக்க
ட்ரிப்யூனல் ஒன்றும் வைக்க வேண்டியதில்லை. வேறு விவகாரங்
கள், அப்பீல் என்றால் அதற்கெல்லாம் டிரான்ஸ்போர்ட் ட்ரிப்யூனல்
இருக்கிறது. ரூட் கொடுப்பது டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி
என்று கலெக்டருக்குத்தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: அமைச்சர் அவர்கள் படித்ததில்
இருந்து ரூட் கொடுப்பதில் "Preference may be given to new
entrants" என்ற வார்த்தைகள் இருக்கின்றன. இதனால்
அத்தாரிட்டி கொடுத்தாலும் கொடுக்கலாம், கொடுக்காமல்
போனாலும் போகலாம். ஆகவே "Preference should be given to
new entrants" என்று மாற்றுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போது போட்டிருப்பதே
போதும். அதிகாரிகள் நியாயமாகத்தான் முடிவு செய்வார்கள்
என்று நாம் எதிர்பார்க்கலாம்.

கொடுக்க வேண்டுமென்று என்னிடம் எதிர்பார்க்க முடியாது. தவறுதல்கள் நடந்தால் டிரான்ஸ்போர்ட் ட்ரிப்யூனல் இருக்கிறது. அதில் அப்பீல் செய்து நீதி பெறலாம்.

திரு. து. ப. அழகமுத்து : ஆர். டீ. ஏ.-யால் கொடுக்கப்பட்ட பெர்மிட்களில் எவ்வளவு எஸ்.டி.ஏ.டி.-யால் set aside- ஆகி யிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது டூரிஸ்ட் பஸ்களை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள் பஸ் முதலாளிகள். அவர்களை நிறுத்தி டூரிஸ்ட் ஏஜென்ஸிகளுக்கு அந்த அனுமதியை வழங்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ? அல்லது லாரி ஓனர்களுக்காவது டூரிஸ்ட் பஸ்கள் வழங்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

திரு. எஸ். மணி : திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் எவ்வளவு பேர்கள் புதிதாக பெர்மிட்டுக்கு மனு போட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை. அடுத்த கேள்வி திருச்சியைப் பற்றி வருகிறது. அப்போது ஏதாவது சொல்ல முடியுமானால் சொல்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : தேசீய நெருக்கடி காரணமாக புது பஸ் மார்க்கங்கள் கொடுப்பதில்லை என்று அரசாங்கம் கொள்கை வகுத்திருக்கிறதா ? அப்படியானால் அது எப்போது தளர்த்தப் படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசீய நெருக்கடி நிலைமைக்கும் இதற்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

புலவர் கா. கோவிந்தன் : புது பஸ் ரூட்கள் யார் யாருக்கு வழங்குவது என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். புது ரூட்கள் ஓப்பன் (open) ஆவது பற்றி என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என்பது பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புது ரூட்கள் போக்குவரத்து அதிகப்பட்டு தேவைப்படுகிறது என்றால் அப்போது வழங்கப் படும். அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிலைமையைப் பார்த்து முடிவு செய்வார்கள்.

திரு. க. தா. பெருமாள் ராஜு : திம்பம்-தாளவாடி ஜீப் சர்விஸ் நல்லமுறையில் போய் சேருவதில்லை என்பது அரசாங்கத்

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனி கேள்வி கேட்டால் சொல்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : காங்கிரஸ்காரர்கள் என்பதற்காக பஸ் ஓனர்களுக்கு விசேஷ சலுகை அளிக்கப்பட்டு பெர்மிட் அளிக்கப் படுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை. அங்கத்தினருக்கு அந்த அபிப்பிராயம் இருந்தால் அதை தன்னிடம் வைத்துக் கொள்ளலாம்.

கனம் திரு. ஆ. தங்கவேலு : ஆர்.டி.ஏ.-யால் கொடுக்கப்படும் பஸ் ரூட் பெர்மிட்கள் எஸ்.டி.ஏ.டி. யால் 'செட் அஸைட்' செய்யப் படக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதை எஸ்.டி.எ.டி.-யைத்தான் கேட்கவேண்டும். என்னைக் கேட்டால் பிரயோஜனமில்லை.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : பஸ் ரூட் கொடுத்திருக்கும் இடங்களில் ரோடு சரியாக இல்லாது பஸ் நின்று போயிருக்கிற இடங்களில் மீண்டும் போக்குவரத்தை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரோடை சீர்படுத்துவதற்கு முன்பு பஸ் வேண்டும், பஸ்ஸில் போக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் மக்கள். அதைத் தவிர்க்க முடியாமல் ரூட் அளிக்கப் படுகிறது. பஸ் போனால் ரோடு இன்னும் கெட்டுப் போகிறது. மீண்டும் ரோடை சீராக அமைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. அதற்கு வேண்டிய நிதி அளிப்பதில் ஒரு அளவு இருக்கிறது. இதுதான் இந்த சங்கடங்களுக்குக் காரணம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், பஸ் ரூட்டுகளுக்கு பெர்மிட் வழங்குவதற்கு கலெக்டர் ஒருவருக்கே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் பல கஷ்டங்கள் இருக்கின்ற காரணத்தால், கலெக்டர் அவர்களுக்கு உதவியாக அட்வைஸரி கமிட்டி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலமாக நியாயமான முறையில் பஸ் ரூட்டுகளை வழங்குவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

கனம் திரு. எம்.பக்தவத்சலம் : அவ்வாறுதான் முன்பு இருந்தது. அதில் ஏற்பட்ட அனுபவத்தின் பின்னால்தான் கலெக்டர் அவர்களிடமே இருப்பது நல்லது என்று அரசாங்கம் இப்போது முடிவு செய்திருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம் : ஹரிஜனங்களுடைய பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசாங்கம் பல சலுகைகளை அளித்துக்கொண்டிருக்கிறது. அதே அடிப்படையில் ஹரிஜனங்கள் முன்னேறுவதற்கு அவர்களுக்கு பஸ் ரூட்டுகள் கொடுப்பதிலும் சலுகை அளிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ் ரூட் கொடுப்பது மட்டும் போதாது. நல்லமுறையில் பணம் போட்டு நடத்த வேண்டும். நல்ல முறையில் நடத்துவதற்குரிய ஆற்றல் இருக்கவேண்டும்.

[5th March 1963

ஹரிஜனங்களில் யாராவது நடத்த முடியும் என்று எண்ணினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் மனு செய்து கொண்டால் வேண்டிய அனுமதி கொடுப்பார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், ஒரு பஸ் ரூட்டை அனுமதித்த பின்னால் அப்பீல் எதுவும் செய்யக்கூடாது என்று அரசாங்கம் சட்டத்தைத் திருத்துவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு செய்வது உசிதம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கா. நா. பழனிசாமி : பஸ் ரூட்டுகள் கொடுத்ததில் இது வரை எத்தனை ஹரிஜனங்கள் நடத்தாமல் விட்டுவிட்டார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

* 124 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of temporary permits for bus-routes issued in Tiruchirappalli district during the year 1961–62, prior to General Elections;

(*b*) how many of such temporary permits have since been regularised; and

(*c*) how many of them are still in force as temporary?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Seventy-eight temporary permits were issued for the four months of November 1961 to February 1962.

(*b*) Sixty-one.

(*c*) Seventeen.

திரு. மா. இராசாங்கம் : ஸார்; பெரியகுளம் தாலுக்காவில் சர்க்கார் துரித பஸ்கள் எதுவுமில்லையாதலால், அந்தப் பகுதியில் விடுவதற்கு தனியார்கள் யாராவது துரிதபஸ் விடுவதற்கு முன் வந்தால் அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு கொடுக்குமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்விதம் யாராவது முன் வந்தால் கனம் அங்கத்தினர் அவர்களே உற்சாகம் எடுத்து அவர்களை அதிகாரிகளிடத்தில் மனு செய்ய சொன்னால் அதைப்பற்றி அதிகாரிகள் கவனிப்பார்கள்.

பஸ் ரூட்டுகள்

* 125 கேள்வி.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தர்மபுரி தாலுகா பேளஅள்ளியிலிருந்து பாப்பாரப்பட்டி வழியாக தர்மபுரிக்கு ஒரு புதிய பஸ் ரூட் ஆரம்பிக்கும் படியும், பாப்பாரப்பட்டியிலிருந்து தர்மபுரி வழியாக இண்டூருக்கு

5th March 1963]

ஒரு புதிய பஸ் ரூட்டு ஆரம்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டு பாப்பாரப்பட்டி பஞ்சாயத்திலிருந்து அரசாங்கத்திற்குத் தீர்மானம் ஏதேனும் வந்ததா?

(இ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSATLAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

இந்திப் பரீட்சை (உயர்நிலைப் பள்ளிகள்)

* 126 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி (திரு. வெ. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் சார்பாக) :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அடுத்த கல்வியாண்டில் இருந்து உயர் நிலைப்பள்ளிகளில் இந்திப் பரிட்சையினை எடுத்துவிடும் உத்தேசமுண்டா?

(இ) இந்தி வகுப்புகள் நடத்துவதைத் தவிர்க்கும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Government have already issued orders to the effect that examinations need not be conducted in Hindi and in the other languages coming under Part II of the Language scheme in secondary schools.

(*b*) No, Sir.

நெசவாளர் கூட்டுறவு சங்கம் (சென்னிமலை)

* 127 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சென்னிமலையில் ஓர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) An Industrial Co-operative for loomless weavers at Chennimalai was registered on 29th September 1962. The society started on its work on 2nd November 1962 and has also commenced production.

Temples at Karimangalam (Administration)

* 128 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the enquiry into the irregularities in the administration of Sri Aruneeswara and Sri Lakshminarayanaswamy temples at Karimangalam has been completed; and

(*b*) if so, the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(b) The following defects were noticed in the administration of the temple :—

(1) The receipts of the temple have not been invested in bank account.

(2) The trees belonging to the temple have been sold without the sanction of the competent authority.

(3) As per the orders of the Commissioner, Hindu Religious and Charitable Endowments, Madras, the parts of the temple car have not been sold out in public auction.

(4) No repairs and improvements have been made to Sri Lakshminarayana Perumal temple.

(5) No reserve fund has been provided in the budget as per rules.

Suitable instructions have been issued to the managing trustee to set right the above defects.

Meenakshi Mills, Madurai (Regional Committee)

* 129 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any Regional Committee has been constituted for the Meenakshi Mills, Madurai?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Yes. A bi-partite Regional Committee has been set up to decide the question of rationalisation in respect of Meenakshi Group of Mills in Madurai region in pursuance of clause 7 of the settlement, dated 14th July 1960, arrived at between the parties.

Juvenile Offenders

* 130 Q.—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of Juvenile Offenders in 1960–61 and 1961–62;

(b) whether Juvenile delinquency is on the increase; and

(c) if so, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) 1960–61—5,718. 1961–62—6,538.

(b) Yes, slightly.

(c) It is rather difficult to locate the root-cause for this slight increase in juvenile delinquency. Perhaps, progress of industrialisation of the country and the consequent urbanisation are the main contributory factors.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்த இளங்குற்றவாளிகள் மது விலக்கு சம்பந்தமான குற்றங்களினால் வருகிறார்கள் அல்லது இந்தியன் பீனல் கோடின் கீழ் குற்றவாளிகளாக வருகிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி ஆராய்ந்து பார்த்ததில் கீழ்க்கண்ட காரணங்களினால்தான் அதிகமான இளங்குற்றவாளிகள் வருகிறார்கள் என்று தெரிந்தது.

Poverty, destitution, lack of parental control, broken homes, large families and poor parents who could ill-afford minimum accommodations in their homes or even two meals a day, manufacture and supply of illicit liquor, cinemas, exploitation of juvenile labour, lack of recreational facilities for the children in the slums and lower middle class children, betting and gambling, life in slums and background of criminality.

இதிலேயிருக்கின்ற காரணங்கள் மட்டும்தான் என்று சொல்லிவிட முடியாது. பொதுவாக முன்னேற்றமடைந்திருக்கின்ற வேறு நாடுகளைப் பார்த்தாலும் இளங்குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. ஆகவே வறுமை மட்டும்தான் இதற்கு காரணம் என்று சொல்லிவிடுவதற்கில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, இம்மாதிரிபட்ட இளங்குற்றவாளிகள் அறிவும் ஆற்றலும் பண்பாடும் பெறுகின்ற முறையில் அவர்களுக்கு பொதுக் கல்வி தொழிற் பயிற்சி முதலியவைகள் அளிக்கப்படுகின்றனவா ? அப்படியானால் என்னென்ன முறையில் பொதுக் கல்வி, தொழிற் கல்வி, பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்ரூவட் ஸ்கூல், ஸீனியர் சர்டிஃபைட் ஸ்கூல், ஜுனியர் சர்டிஃபைட் ஸ்கூல் முதலியவைகளில் எல்லாம் இதற்கான கல்வி அளிக்கப்பட்டுவருகின்றன. தொழிற் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இவைகளைப்போய் பார்க்கவேண்டும் என்று கோருகிறேன். இதன் மூலம் அங்கேயுள்ள பிள்ளைகளுக்கு கல்வி, ஒழுக்கம் எல்லாம் வருகிறது. ஆனால் இந்த பள்ளிகளிலிருந்து விடுதலையாகிப் போன பின்னும் திரும்பி வந்துவிடுகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. ஒரு பையன் விடுதலையாகிபோன இரண்டு நாட்களில் திரும்பி வந்து விட்டான். ஏன் திரும்பி வந்திருக்கிறாய் என்று கேட்டபோது, 'என்னை திருட்டுப்பயலே' என்று சொன்னார்கள். ஆதலால் திரும்பி வந்துவிட்டேன் என்று சொன்னான். ஆகவே "ஆஃப்டர் கேர்" மிகவும் முக்கியம். அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது. தெருவில் சுற்றிக்கொண்டிருக்கும் பிள்ளைகளை சீர்திருத்துவதற்காக "பாய்ஸ் கிளப்" என்று தனியாக போலீஸ் இலாகாவின் கீழ் நடத்தப்பட்டு வருகிறது. பெரிய நகரங்களில் எல்லாம் இது அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. மதியழகன் : வறுமைதான் காரணம் என்று சொல்ல முடியாது என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் வாசித்த லிஸ்டில் முதல் வரிசையில் வறுமையைத்தான் காரணமாக சொல்லப்பட்டிருக்கிறது.

600 008

ஆகவே இந்த வறுமையை ஒழிப்பதற்கு நல்ல வகையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: வறுமைதான் முக்கியம் என்பதற்காக அவ்வாறு வரிசைப்படுத்தி நான் வாசிக்கவில்லை. அப்படி வறுமைதான் என்று சொல்வதாக இருந்தால், அது வறுமையில் இருக்கின்றவர்கள் எல்லாம் தவறு செய்கின்றவர்கள் என்று அவதூறு செய்வதுபோல் இருக்கும். பொதுவாக வறுமையைப் போக்குவதற்காக வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஜெ. மாதா கவுடர்: ஸார், ரயில் நிலையம், சினிமாக் கொட்டகை இவைகளின் பக்கத்தில் திரிந்து கொண்டிருக்கும் பிள்ளைகளைப் பிடித்து அவர்களுடைய பெற்றோர்களிடமே ஒப்படைத்து அவர்கள் மூலமாக புத்திமதி சொல்வதாக இருந்தால் இந்த இளங்குற்றவாளிகள் குறைவார்கள் அல்லவா? இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவர்களை திருத்திவிட்டுத்தான் பெற்றோர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அதற்குத்தான் அரசாங்கம் பல முயற்சிகள் செய்து வருகின்றது.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, இந்த இளங்குற்றவாளிகளுக்கு கடவுள் பயிற்சி . . . (சிரிப்பு) . . . கடவுள் பயிற்சி அல்ல, கடவுள் வழிபாட்டுப் பயிற்சி கொடுப்பதற்கு சிறைகளில் ஏற்பாடு செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா? இவ்விதம் கடவுள் வழிபாட்டுப் பயிற்சி கொடுப்பதால் அறிவை வளர்த்துக்கொள்வதற்கு ஏற்றதாக இருக்கும் என்பதை சர்க்கார் உணருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லாவித பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. மா. இராசாங்கம்: ஸார், இந்த இளங்குற்றவாளிகளை, தனியாக வைத்துக்கொள்ளாமல், வயது வந்தவர்கள் இருக்கும் சிறைகளில் சேர்த்து வைப்பதாக இருந்தால் அவர்கள் திருந்துவதற்கு வழிவகை இருப்பது குறைவாக இருக்கும். ஆகவே, இவர்களை தனியாக அடைத்து வைக்கின்ற ஒரு முறையை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவர்களை வயது வந்தவர்கள் இருக்கின்ற சிறையில் வைப்பது இல்லை. இளங்குற்றவாளிகளுக்கு என்று தனியாக இடம் இருக்கின்றது. இதை சிறை என்று கூட சொல்லுவதில்லை. பள்ளிகள் என்றுதான் சொல்லுகிறோம். ஸீனியர் சர்டிஃபைட் ஸ்கூல், ஜூனியர் சர்டிபைட் ஸ்கூல் என்று சொல்லுகிறோம். இவர்களை விசாரிப்பதற்கு வைத்திருக்கின்ற கோர்ட்கூட தனியாக ஜுவனைல் கோர்ட் என்று வைக்கப்பட்டு தனியாகத்தான் விசாரணை நடத்தப்படுகிறது.

திரு. மூ. சண்முகம்: இப்படிப்பட்ட இளம் குற்றவாளிகள் விடுதலை ஆன பிறகு அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்று அரசாங்கம் ஏதேனும் கவனித்து வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது ஆஃப்டர் கேர் என்ற வகையிலே கவனிக்கப்பட்டும் வருகிறது. அதோடு இந்த இளம் குற்றவாளிகளை, அவர்களுடைய மனோபாவத்தை உணர்ந்து, ஸைக்கலாஜிக்கலாகப் பார்த்து எவ்வாறு அவர்களுடைய மனதை, மனப்போக்கை, திருத்துவது என்று அதற்காக நிபுணர்களைப் போட்டு அதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. இரா. சம்பந்தம்: இளம் குற்றவாளிகள் விடுதலை ஆன பிறகு சில வருஷங்கள் அவர்களை கண்காணிக்க ஏற்கனவே அதிகாரிகளை நியமித்து அவர்களுடைய மூவ்மெண்ட்ஸைப் பார்த்து வருவதாக இருந்தது. இப்போதும் அது பின்பற்றி வரப்படுகிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்கள் விடுதலை ஆனபிறகு கண்காணிக்கப்படுவதை நான் வற்புறுத்த மாட்டேன். அவர்கள் திருந்திவிட்டார்கள் என்ற எண்ணம் வரவேண்டும். இதிலே பெற்றோர்கள்தான் நல்ல முறையில் கவனிக்கவேண்டும். அதுதான் முக்கியம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இளம் குற்றவாளிகள் நல்ல பிரஜைகளாக உருவாகி வராமல் அதைத் தடுக்கும் முறையில் படக்காட்சிகளும், ஒலிபரப்பப்படும் தான்தோன்றித்தனமான பாட்டுகளும் காரணமாக் இருக்கின்றன என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஓரளவுக்கு இருக்கிறது. அது எங்கும்தான் இருக்கிறது. மற்ற நாடுகளில் டெலிவிஷனால் ஏற்படும் கோளாறுகள் உண்டு. நம் நாட்டில் அது வரவில்லை.

திரு. ராம. அரங்கண்ணல்: சென்னையில் இருக்கிற ஜுவனைல் கோர்ட் சொந்த இடத்தில் இல்லை என்பதும், அந்த வீட்டின் சொந்தக்காரர்கள் அடிக்கடி வீட்டை காலி செய்யவேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்துக் கொண்டிருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது தெரியும். அந்த வீட்டை வாங்கி விடலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: இந்த இளம் குற்றவாளிகள், போலீஸ் இன்வெஸ்டிகேஷன் நடக்கும் நேரத்தில் இருந்து கோர்ட்டில் விசாரணை முடியும் வரையில் ரிமாண்டில் வைக்கப்படுகிறார்கள். அவர்கள் அப்போது மற்ற குற்றவாளிகளுடன் இருக்கிறார்கள். ஆகவே அந்தக் குற்றவாளிகள் இந்த இளம் குற்றவாளிகளுடைய மனதைக் கெடுத்து விடுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கென்று தனியாக ரிமாண்ட் ஒன்றை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

[5th March 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூடிய வரையில் ரிமாண்ட் காலத்தில்கூட தனியாக வைக்கப்படுகிறார்கள். முன்பு இருந்த மன்றம் ஒரு சட்டத்தைப் புதிதாக நிறைவேற்றியிருக்கிறது, குழந்தைகள் சட்டம் என்று. அந்தச் சட்டத்தில் அதற்கு வேண்டிய ப்ரொவிஷன் எல்லாம் இருக்கிறது. அதை கனம் அங்கத்தினர்கள் பார்த்து வேறு ஏதாவது திருத்தவேண்டுமென்றால் யோசனை சொல்லலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த இளம் குற்றவாளிகள் கெட்டுப் போவதற்கு சினிமாவும் ஒரு காரணம் என்று கூறினார்கள். அப்படியானால் எந்தெந்தக் காட்சிகள் அவர்கள் குற்றம் செய்வதைத் தூண்டுவதாக இருக்கிறதோ அவற்றை சென்ஸார் போர்டுக்குச் சொல்லி, அத்தகைய காட்சிகளை வெட்டிவிடுவதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூடியவரையில் சென்ஸார் போர்டு கவனித்துக்கொண்டு வருகிறது. என்னுடைய அபிப்பிராயம் ஒரு படத்தை சிறுவர்கள் பார்க்கக்கூடாது என்று செய்வது சரியல்ல. பார்க்கக்கூடாது என்று சொன்னால் அவர்கள் கட்டாயம் பார்க்கவேண்டும் என்று ஆவல் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட படங்களை சிறுவர்கள் பார்க்கக்கூடாது என்றால் பெரியவர்களும் பார்க்கக்கூடாது என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த வகையில் ஆட்சேபகரமான பகுதிகளை எடுத்துவிட்டால் நலம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் ஒரு இளம் குற்றவாளி விடுதலை ஆகி வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது வீட்டிலே 'திருட்டுப் பயலே' என்று சொல்லுவதால் திரும்பி வருகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இளம் குற்றவாளிகள் விடுதலை ஆகி திரும்பி வரும்போது அவர்களுக்கு பியூன் வேலையோ அல்லது வேறு எந்த வேலையாவது கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தில் வேலை கொடுத்தாலும் வீட்டுக்குப்போய்த்தான் ஆகவேண்டும்.

கனம் சபாநாயகர் : இது ப்யூன் வேலைக்கு ட்ரெய்னிங் என்று நினைத்து விடக்கூடாதே. (சிரிப்பு).

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : இளம் குற்றவாளிகளை கோர்ட்டுக்கு அனுப்பி, தண்டனை கொடுத்து ஜெயிலில் போடாமல் வேறு வகையில் அவர்களை திருத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

5th March 1963]

அந்தத் தொழிலை அவர்கள் நடத்தலாம். இப்போது கவனம் செலுத்துவது அவர்களுக்கு என்ன பயிற்சி இருக்கிறதோ அதைப் பார்த்து அவர்களுக்கு தொழில் அமைத்துக் கொடுத்து, அந்தத் தொழிலில் அவர்கள் ஈடுபட்டு ஒழுங்காக வாழ்க்கை நடத்த என்னென்ன வகையில் கவனம் செலுத்தலாம் என்பதுதான் அரசாங்கத்தின் கவலை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் ஏதாவது குற்றம் செய்து இம்மாதிரி பள்ளிகளுக்கு அனுப்பப்படும்போது, அந்தப் படிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு பரிட்சை எழுத ஏதாவது வசதி செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. எம் பக்தவத்சலம் : இந்த இளம் குற்றவாளிகளுக்கு தண்டனை ஏற்பட்டால் தண்டிக்கப்பட்ட பிறகு சர்டிஃபைட் ஸ்கூலுக்குப் போகிறார்கள். அங்கே பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

திரு. சி. பொன்னுசாமி : இப்போது இளம் குற்றவாளிகளாக வந்து விட்டுப்போனவர்களில் எத்தனை சதவீதம் திருந்தியிருக்கிறார்கள் என்பதற்கு அரசாங்கத்தில் ஏதாவது கணக்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. புள்ளிவிவரம் சேகரிப்பதும் சிரமமானது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : இளம் குற்றவாளிகள் பள்ளிப் படிப்பை முடித்து வெளியில் வந்த பிறகு அவர்களுக்கு உத்தியோகம் வழங்குவதில் முதல் சலுகை அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிப் பார்த்தால் முதல் சலுகை எத்தனையோ பேர்களுக்கு வேண்டியிருக்கிறது. கூடிய வரையில் எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் உத்தியோகங்கள் வழங்கப்படுகின்றன.

திரு. கே. மூக்கையா தேவர் : தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் தங்கும் இடங்களில் குற்றங்களைச் செய்வதில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குற்றவாளிகளுக்குப் பல கதைகள் சொல்லி, தாங்கள் செய்த காரியங்களையெல்லாம் சொல்லி, அவர்கள் அதிகம் குற்றம் செய்வதற்குப் பயிற்சி பெற்றவர்கள்போல வெளியே வருகிறார்கள். இப்படி இருப்பதை ஒரு சில இடங்களில் நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள் தண்டிக்கப்பட்டு பயிற்சி கொடுப்பது என்று இல்லாமல், தாய் தகப்பனிடமே விட்டு நல்ல முறையில் அவர்களைத் திருத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

[5th March 1963

திரு. செ. கோ. விஸ்வநாதன் : இளம் குற்றவாளிகள் பலர் மாணவர்களாக எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் படிக்கிறார்கள். தண்டனை காலம் முடிந்த பிறகு அவர்களை வெளியேற்றும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதைப் போக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா? அவர்களுக்கு மேல் படிப்புக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மற்றவர்களுக்கு இருக்கும் வசதிகள் இவர்களுக்கும் இருக்கும். அரசாங்கம் இதை கவனிப்பதோடு அந்தந்த ஸ்தலங்களில் இருக்கும் பொது மக்கள் இதில் அக்கறை எடுத்துக்கொண்டால் நலம்.

திரு. இராம. அரங்கண்ணல் : வெண்ணை திருடுதல், சேலை திருடுதல் ஆகிய கிருஷ்ண லீலைகள் போன்ற கதைகளை இளம் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்காமல் தடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எத்தனையோ கதைகள் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையிலும் சொல்லிக்கொடுக்கலாம், கெடுதலான முறையிலும் சொல்லிக்கொடுக்கலாம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : இளம் குற்றவாளிகள் என்னும்போது சிறுமிகளும் இடம் பெறலாமல்லவா? அவர்களுக்குத் தனி ஏற்பாடு உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களும் இடம் பெறுகிறார்கள். அவர்களுக்குத் தனி ஏற்பாடு உண்டு.

நில ஆர்ஜிதம்

* 131 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை சுற்றுப்புற அபிவிருத்திக்காக நிலம் ஆர்ஜிதம் செய்வதில் ஏதேனும் சட்டபிரிவுகள் செயல் திறனற்றவையாக உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதனை திருத்தியமைக்கும் உத்தேசம் உண்டா?

(உ) இது சம்பந்தமாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அரசாங்கம் பரிசீலித்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) & (உ) இந்த கேள்விகளுக்கு இடமில்லை.

Milk-supply Co-operative Societies

* 132 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total number of Milk Supply Co-operative Societies in the State as on 1st June 1962;

5th March 1963]

(*b*) the total number of members in the societies; and

(*c*) the total amount of loan granted to those societies for the purchase of milch animals?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 1,222.

(*b*) 1,14,638.

(*c*) A sum of Rs. 13 lakhs has been disbursed as State loans for the purchase of milch animals by the members of Milk Supply Co-operative Societies during 1961–62.

(அ) 1,222.

(இ) 114,658.

(உ) பால் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் கறவை மாடுகளை வாங்குவதற்காக 1961-62-ல் 13 லட்சம் ரூபாய் அரசாங்கக் கடன்களாக வழங்கப்பட்டிருக்கிறது.

கழிநீர்க் கால்வாய்த் திட்டம்

* 113 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில், கழிநீர்க் கால்வாய் அமையப் பெற்ற நகராட்சி மன்ற நகரங்கள், ஊராட்சி மன்றப் பேரூர்கள், ஊராட்சி மன்றச் சிற்றூர்கள் எத்தனை?

(இ) அமையவேண்டிய நகரங்களும், பேரூர்களும், சிற்றூர்களும் எத்தனை?

(உ) அவை அமைய அரசு மேற்கொள்ளவிருக்கும் திட்டம் யாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 10 முனிசிபாலிட்டிகள், 1 டவுன்ஷிப், 1 பெரிய பஞ்சாயத்து.

(இ) 54 முனிசிபாலிட்டிகள், 3 டவுன்ஷிப்புகள், 140 பெரிய பஞ்சாயத்துக்கள்.

(உ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முனிசிபாலிட்டிகள் சம்பந்தமாய் 6 வடிகால் திட்டங்களையும், பெரிய பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாய் 4 திட்டங்களையும் மேற்கொள்ள உத்தேசித்துள்ளோம். இவை தவிர, 4 முனிசிபல் வடிகால் திட்டங்களுக்கு விரிவான முறையில் அபிவிருத்தி செய்யவும் உத்தேசித்துள்ளோம்.

புலவர் கா. கோவிந்தன் : குடிநீர் குழாய் திட்டங்கள் அமைந்திருக்கிற ஊர்களில் கழிநீர்க் கால்வாய் திட்டம் இல்லாத காரணத்தினால், தெருக்களில் ஆங்காங்கு குட்டை குட்டையாக தண்ணீர் தேங்கி கொசு வளர இடம் அளிக்கிறது. ஆகவே, கழிநீர்க் கால்வாய் திட்டத்தை, குடிநீர் திட்டத்தை வழங்கியிருக்கிற ஊர்களுக்கு அளிப்பதற்கு முதல் இடம் கொடுக்கப்படுமா? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிதி வசதியைப் பொறுத்திருக்கிறது. எதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும்

[5th March 1963

என்று பார்க்கிறபொழுது, குடி தண்ணீர் திட்டத்திற்கு முதல் இடம் கொடுத்து, வடிகால் திட்டத்திற்கு இரண்டாவது இடம் கொடுத்திருக்கிறோம்.

புலவர் கா. கோவிந்தன் : குடிநீர் திட்டத்திற்கு முதல் இடம் கொடுத்திருப்பதாகவும், கழிநீர்க் கால்வாய் திட்டத்திற்கு பின்னால் இடம் கொடுத்திருப்பதாகவும் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நான் கேட்கவில்லை. கழிநீர்க் கால் வாய் திட்டத்தைக் கொடுப்பதில் குடிநீர் வழங்குகிற திட்டம் அமுலில் இருக்கிற ஊர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படுமா **என்று** அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பெஸிபிக்காக ஏதாவது ஒரு ஊரைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்ல முடியும். நாம் அதிகமாக குடிநீர் திட்டத்திற்கு நிதி கொடுத்திருக்கிறோம். கழிவு நீர் வடிகால் திட்டத்திற்கு குறைவாகக் கொடுத்திருக் கிறோம். ஆனால் எந்தெந்த இடத்தில் அம்மாதிரி நிலைமை இருக் கிறது என்று சொன்னால் அதைப்பற்றி பரிசீலனை செய்ய முடியும்.

திரு. மூ. ஷண்முகம் : விழுப்புரம் நகராட்சிக்கு குடிதண்ணீர் வடிகால் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறதா? அப்படி அளித்திருந்தால், அதுபற்றி எப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த லிஸ்டில் விழுப்புரம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது கழிவு நீர்க் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சில பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லாமல் அவஸ்தைப்படுகிறார்கள். சர்க்கார் முன்வந்து கிராண்டு சாங்ஷன் செய்து, இதற்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொள்வார்களா?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : முழுச் செலவுத் தொகையையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்க்கார் கழிவு நீர் திட்டத்திற்காக ஓரளவு தொகை கிராண்டாகக் கொடுக்கிறார்கள். அதுதான் இப்பொழுது இருக்கிற நிதி நிலைமை யிலே செய்யமுடியும்.

திரு. ஆ. தங்கவேலு : குடி நீர் வசதி இல்லாத திண்டிவனம் போன்ற முனிசிபாலிடிகள் குடி நீர் அவசியம் தேவை என்பதற்காக, அரசாங்கத்தினிடமிருந்து முழுத் தொகையையும் கடனாக வாங்கி அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் இருப்பதால், அந்த ஊரில் வேறு திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. ஆகையால் பாதித் தொகைக் கடனாகவும், பாதித் தொகையை மான்யமாகவும் கொடுப்பதற்கோ அல்லது கடன் தொகையைக் குறைத்துக்கொடுப்பதற்காவது அரசாங்கம் ஏதாவது **வழி** செய்யுமா?

5th March 1963]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு நகர சபையைப்பற்றி குறிப்பிட்டுக் கேள்வி கேட்பதாயிருந்தால், அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால், அது எந்த நிலைமையில் இருக்கிறது என்று பரிசீலனை செய்து சொல்ல முடியும்.

Drainage and Water-Supply Schemes (Madurai)

*114 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the nature of assistance, the Government propose to offer to the Madurai Municipality towards drinking water-supply schemes and drainage schemes?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government will give loan assistance to the Madurai Municipal Council for its water-supply and drainage schemes in accordance with their usual policy.

Water-supply (Coimbatore)

* 115 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the details of the proposal made to Kerala Government in regard to taking additional water from the Siruvani for Coimbatore Municipality; and

(*b*) the reply received from Kerala Government?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The matter is treated as 'Confidential' and no final decision has been taken by the Government in the matter. It is not therefore possible to furnish the particulars asked for by the member.

Dispensaries (purchase of medicines)

* 119 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the amount allotted for the purchase of medicines for the Rural and Local Fund Dispensaries; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, so far as rural dispensaries are concerned. As regards regular dispensaries, the responsibility of making provision for medicines is that of the Panchayat Union Council concerned.

(*b*) The details are being worked out.

திரு. செ. கோ. விஸ்வநாதன் : மருத்துவ மனைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டிய நிதியை சில பஞ்சாயத்து யூனியன்கள் ஒதுக்காமல் இருக்கின்றன என்பதை அரசாங்கம் உணருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த நிலைமை சர்க்காருக்குத் தெரியும். அந்தப் பஞ்சாயத்து யூனியன் கவுன் சில்கள் போதிய நிதி இல்லை என்று சர்க்காரிடம் முறையிட்டிருக் கிறார்கள். அதுதான் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

[5th March 1963

Sub-standard Drugs

*120 Q.—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to bring in legislation to punish the manufacturers of sub-standard drugs?

THE HON. SRI R. VENKATARAMAN : No. There are already sufficient provisions in the Drugs Act for the purpose.

திரு. கே. மூக்கையா தேவர் : அந்த சட்டப்படி தரக் குறைவான மருந்துகள் தயாரித்ததாக கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்கள் எத்தனை? அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : புள்ளி விவரங்கள்பற்றி தனியாகக் கேள்வி போட்டால், தயாரித்துக் கொடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சென்னையில் சென்ற ஆண்டில் தரக் குறைவான மருந்து என்ற வகையிலே, அதாவது டிஸ்டில்டு வாடரில் போலிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக செய்திகள் வந்திருக் கின்றன. எந்தெந்தக் கம்பெனிகள் அந்தப் போலிகளை தயாரிக் கின்றன என்பதை சர்க்கார் அறிவித்திருந்தால், மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். அம்மாதிரி அறிவிக்க முன் வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி போலி மருந்து, கலப்பட மருந்து இவைகளையெல்லாம் தடுப்பதற்கு சட்டம் போதுமானதாக இருக்கிறதா என்பதுதான். சட்டம் சரியாக இருக்கிறது, இப்பொழுது இருக்கிற சட்டமே போதும் என்று பதில் சொன்னேன். தனித்தனியாக பலவிதமான கலப் படங்கள் பற்றி கோர்ட்டுகளில் விவகாரங்கள் வந்திருக்கின்றன. அவைபற்றி தனியாகக் கேள்வி போட்டால், ஏதாவது சொல்லலாமா சொல்லக்கூடாதா என்பதைக்கூடப் பார்த்துச் சொல்ல முடியும். ஏனென்றால், சில விஷயங்கள் 'சப் ஜுடிஸாக' இருக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : வைத்திய இலாகா டைரக்டர் அவர் கள் வெளி மாகாணங்களிலிருந்து பல போலி மருந்துகள் இங்கு வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியிருந் தால் எந்த மாகாணங்களிலிருந்து வந்த மருந்துகள் அவை என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த மாகாணங்களி லிருந்து வந்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. பல மாகா ணங்களில் மருந்துக்கள் தயாரிக்கும் கம்பெனிகள் இருக்கின்றன. உதாரணமாக, வங்காளம், பம்பாய் போன்ற மாகாணங்களில் இருக்கின்றன. இந்தமாதிரி மாகாணங்களிலிருந்து வந்த மருந்துகள் சில தறக்குறைவாக இருந்தன என்று டைரக்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

5th March 1963]

திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறவர்கள் மிக எளிதாக மூட்டைப்பூச்சி மருந்தை வாங்கிச் சாப்பிடுகிற முயற்சி பரவலாக இருக்கிற காரணத்தினால், அந்த மருந்து எளிதாக யாருக்கும் கிடைக்காத வகையில் கட்டுப்பாடு ஏற்பாடு செய்ய இயலுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மூட்டைப் பூச்சியை ஒழிக்க வேண்டியது மிக முக்கியமானது. மூட்டைப் பூச்சி சற்றேறக்குறைய எல்லாருடைய வீடுகளிலும் இருக்கிற காரணத்தினால், இந்த மருந்து எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்வது அவசிய மாக இருக்கிறது. அதைத் தவறுதலாக உபயோகப்படுத்தினால், அது உபயோகப்படுத்துகிறவர்களுடைய குற்றமேதவிர, சர்க்கார் விநியோகத்தில் தவறு ஒன்றுமில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சா. கணேசன் : மூட்டைப் பூச்சி மருந்து மூட்டைப் பூச்சியைக் கொல்லுவதைவிட மனிதர்களைக் கொல்லத்தான் அதிகமாகப் பயன்படுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருக்கு அம்மாதிரி எந்தவிதமான தகவலும் இல்லை. கனம் அங்கத்தினர் அவர் களுக்கு அந்தவிதமான தகவல் கிடைத்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மூட்டைப் பூச்சி மருந்துக்கு வேறு மாற்று மருந்து கண்டுபிடித்து தற்கொலை செய்துகொள்பவர் களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தற்கொலை செய்து கொள் வதற்கு சுலபமான மருந்துகள் எவ்வளவோ இருக்கின்றன. அவை களையெல்லாம் நான் சொல்லக்கூடாது. (சிரிப்பு)

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS

(1) BILLS.

MR. SPEAKER : I have to announce to the House that the Legislative Council has passed the Home Guard Bill, 1963, without any amendments, and the Madras Additional Assessment and Additional Water Cess Bill, 1963, without any recommendations.

Saturday, the 9th March 1963.

VI	State Legislature	4 hours.
VII	Elections	
VIII	Head of State, Ministers and Headquarters staff	
XXXII	Pensions	

Monday, the 11th March 1963.

XVI	Agriculture	4 "
XVIII	Animal Husbandry	
XXXIX	Capital Outlay on Agriculture	
XLVI	Capital Outlay on Schemes of Government Trading.	

Tuesday, the 12th March 1963.

XII	Police	4 "

Wednesday, the 13th March 1963.

XXIV	Labour including Factories	2 "
II	Motor Vehicles Acts—Administration ..	2 "

Thursday, the 14th March 1963.

XIII	Education	4 "

Friday, the 15th March 1963.

XXV	Welfare of Scheduled Tribes and Other Backward Classes.	4 "

Saturday the 16th March 1963.

XXII	Khadi	4 "
XXIII	Community Development Projects, etc. ..	

Monday, the 18th March 1963.

XIV	Medical	4 "
XV	Public Health	
XXXVIII	Capital Outlay on Public Health	

Tuesday, the 19th March 1963.

V	Registration	2 "
XXXIV	Stationery and Printing	
XXIX	Public Works—Grants-in-aid	1½ "

Wednesday, the 20th March 1963.

XXVII	Public Works—Works	2 "
XXVIII	Public Works—Establishment and Tools and Plant.	
XLII	Capital Outlay on Public Works	
X	Administration of Justice	2 "
XI	Jails	

Thursday, the 21st March 1963.

XX	Industries	4 hours.
XL	Capital Outlay on Industrial Development.	

Friday, the 22nd March 1963.

XXVI	Irrigation	4 "
XLI	Capital Outlay on Irrigation	

Saturday, the 23rd March 1963.

XIX	Co-operation	4 "
XVII	Fisheries Department	
XXXV	Forest Department	
XLIV	Capital Outlay on Forests	

Monday, the 25th March 1963.

I	Land Revenue Department	4 "
IX	District Administration and Miscellaneous ..	

Wednesday, the 27th March 1963,

XXX	Road Transport Schemes	2 "
XLIII	Capital Outlay on Road Transport Schemes ..	

Thursday, the 28th March 1963.

III	General Sales Tax and other Taxes and Duties—Administration.	3 "
IV	Stamps Administration	
XXI	Cinchona	
XXXI	Famine Relief	
XXXIII	Miscellaneous	
XXXVI	Other Miscellaneous contributions and assignment.	
XXXVII	Compensation to Zamindars	
XLV	Commuted value of pensions	
XLVII	Loans and Advances by State Government ..	

III.—CALLING ATTENTION TO THE FAILURE OF CROPS AND PEST ATTACK IN CHENGAM, POLUR AND TIRUVANNAMALAI TALUKS.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, செங்கம், போளூர், திருவண்ணாமலை வட்டங்களில் பருவமழை தவறியதாலும், பயிர்கள் நோயினாலும் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதும் நிலவரித் தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியமும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, during Fasli 1372, the manavari dry crops were raised during the months of July, August and September in the Tiruvannamalai Division of North Arcot district comprising Polur, Tiruvannamalai and

[Sri V. Ramaiah] [5th March 1963

Chengam taluks. There was no appreciable rainfall during July 1962, in this area. But it was quite adequate in the months of August and September 1962 to enable the ryots to plough the dry fields and sow groundnut and other manavari dry crops.

In Polur and Chengam taluks, the outturn of the dry crop was found to be between 25 to 37 nP. The outturn of the wet crops was almost normal in the above two taluks. There was also no pest attack of crops in these taluks. As regards Tiruvannamalai taluk, the outturn of the wet crops has been normal. However, as the rainfall during the months of September and October 1962 was not timely in this taluk, the yield and outturn of the groundnut crops were below normal.

There was pest attack in twenty-four villages in Kilpennathur Block area and in two villages of Tiruvannamalai Block and there was no substantial damage to the groundnut crops. Effective steps were taken to arrest the pest attack by the application of pesticides in many of the villages affected by pests. In this process, an extent of 1,249 acres was treated and the crops saved. The ryots also evinced keen interest and adopted the method suggested by the Block Development Officer and the Agriculture Department to arrest the pest menace. As there were heavy showers in the middle of September 1962, all the pests were washed off and there was no damage. There was no complete loss of groundnut crops even in the pest-affected villages. On the whole, the outturn of the groundnut crop is reported to be 4 annas and above in the pest-affected area. The outturn of other mixed crops, viz., redgram and cholam was normal. In the circumstances, there seems to be no case for grant of remission of land revenue in respect of dry lands or for the postponement of the recovery of loan instalments in Tiruvannamalai Division.

VI. — DELAY IN FURNISHING ANSWERS TO QUESTIONS.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், கீழ்க்கண்ட பிரச்னையை உங்களது மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த சபையினுடைய உரிமைகளையும், சலுகைகளையும் பாதுகாக்கும் வகையிலே நல்ல முறையில் தாங்கள் செயலாற்றி வருகிறீர்கள்.

ஏற்கெனவே இந்த சட்டசபை விதிகளின் 34-வது விதி கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது:

Amendment to Rule **34** *of the Madras Legislative Assembly Rules.*—For the existing Rule 34, substitute the following :—

" 34. A question shall ordinarily be forwarded to the department within four days from the date of receipt by the Secretary. The department shall send a reply to the question to the Secretary within ten days from the date of receipt by it;

5th March 1963] [திரு. கே. ஏ. மதியழகன்]

Provided that the Speaker may with the consent of the Minister concerned order a question to be entered in the list of questions with shorter notice than ten days;

Provided further that in case the answer to a question cannot be sent to the Secretary before the sitting of the Assembly immediately following the period of ten days' notice, the Speaker may extend the time for answering the question by another ten days."

கடந்த ஆண்டிலேகூட இதைப் பற்றி நான் குறிப்பிட்டேன். கேள்வி நேரம் என்பது விலை மதிக்க முடியாத நேரம். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துதான், சட்டசபை இலாகாவிலிருந்து ஏழு நாட்களுக்குள் அனுப்ப வேண்டிய கேள்வியை நான்கு நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட இலாகாக்கள் 14 நாட்களுக்குள் அனுப்ப வேண்டிய கேள்வியை 10 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்றும் கால அளவைக் குறைத்து, இந்த சட்ட மன்றத்தின் உரிமைகளை நல்ல வகையிலே தாங்கள் பாதுகாத்து வருகிறீர்கள். அப்படி இருந்தபோதிலும், இப்பொழுதெல்லாம் கேள்வி நேரம் அரை மணி நேரத்திற்குள்ளேயே முடிந்து விடுகிறது. இந்த வருடம் . சட்டசபை 14 நாட்கள் கூடியிருந்தும், 136 கேள்விகளுக்குத்தான் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் 14 நிமிடங்களில் கேள்வி நேரம் முடிந்து விட்டது. உறுப்பினர்கள் கேள்விகள் அனுப்பாமல் இல்லை. இன்றைக்கு உள்ள எண்ணிக்கைப்படி ஆயிரத்துக்குமேல் தாண்டிவிட்டது. இப்பொழுது போட்டிருக்கிற கணக்குப்படி போய்க் கொண்டிருந்தால், இந்த 1,000 கேள்விகளுக்கும் பதில் அளிக்க ஒரு வருடம் ஆகிவிடும். கேள்வி நேரத்தின் புனிதமான முக்கியத்துவத்தைத் தாங்கள் காப்பாற்றி வருகிறீர்கள். வேண்டுமென்றால் கேள்வி நேரத்தை இன்னும் அரை மணி நேரத்திற்கு நீடிக்கலாம் என்றுகூடச் சொல்லியிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் தங்கள் அனுமதி பெற்று 100 கேள்விகள்வரை கொடுத்திருக்கிறேன். அவற்றில் இது வரையிலும் மூன்று கேள்விகள்தான் வந்திருக்கின்றன. அதே போன்று பல உறுப்பினர்களும் கேள்விகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்தப் புனிதமான உரிமையை . . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதைச் சொல்லிவிடலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மன்றத்திற்கு மந்திரிசபை கட்டுப்பட்டது. உறுப்பினர்கள் கொடுக்கும் கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டியவர்கள். உறுப்பினர்கள் கொடுக்கும் கேள்விகளுக்கு விரைவாக பதில் அனுப்புவதிலே உள்ள சங்கடங்களை நீக்கி, அதிகமான கேள்விகளை கேள்வி நேரத்தில் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு ஒழுங்குப் பிரேரணையா என்பதை தாங்கள் முடிவு செய்ய வேண்டும். கேள்வி நேரத்தின் முக்கியத்துவத்தை

[திரு. எம். பக்தவத்சலம்] [5th March 1963

அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. உறுப்பினர்கள் அனுப்பும் கேள்விகளுக்குக் கூடிய வரையில் விடைகள் தயாரிக்கப்பட்டு இங்கே சமர்ப்பிக்கப் படுகின்றன. இதிலே ஒன்றும் காலதாமதம் இல்லை. அவசரப்பட்டு பதிலளிக்க வேண்டுமென்று சொன்னால் "தகவல் இல்லை" என்று பதில் அளிப்பது சுலபம். அப்படிச் சொன்னால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் திருப்தி அடைய மாட்டார்கள். இந்த பட்ஜெட் தொடரைப் பொறுத்தவரையில் ஏப்ரல் மாதம் 2-ம் தேதி வரையிலும் சட்டசபைக் கூட்டம் நடக்க வேண்டுமென்று பிஸினஸ் அட்வைசரி கமிட்டி தீர்மானித்திருக்கிறது. அதற்குள்ளே அங்கத்தினர்கள் கேட்டிருக்கும் கேள்விகளுக்கு இங்கே விடை அளிக்கப்படுமென்று நான் எதிர்பார்க்கிறேன். பின்னர் ஒரு மணி நேரத்திற்கு மேற்பட்டு வேண்டுமானால் கேள்வி நேரத்தை அதிகப்படுத்தலாம். அப்படியும் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் கேள்விகள் விடை அளிக்காமல் போய்விடுமோ என்று அச்சப்பட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : I hope the hon. Member K. A. Mathialagan is satisfied with the reply given by the Hon. the Finance Minister.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1963-64—*cont.*

* **திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். முதற்கண் நான் இந்த பட்ஜெட்டை ஆதரிக்க விரும்பவில்லை. இந்த பட்ஜெட்டைப் பற்றிச் சொல்லுகிற நேரத்திலே, "வரி போடாத பட்ஜெட்" என்று இதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் அப்படி பெயர் கொடுத்தார்கள் ?

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : பேப்பர்களிலே அப்படிப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். வரியே போடாமல் இருந்தால் எப்படி அரசாங்கத்திற்கு ரூ. 120 கோடிக்குமேல் வருமானம் கிடைக்குமென்று நான் கேட்கிறேன். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வரி போடவில்லையென்றால், புது வரிகள் போட இல்லை என்று அர்த்தம்.) ஆகவே வரி போடுகிற பட்ஜெட்தான் இது என்று நான் சொல்லுவேன்.

இப்பொழுது நாட்டிலே ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். பாதுகாப்பு சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக மத்திய சர்க்கார் போட வேண்டிய வரிகளையெல்லாம் தாராளமாகப் போட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சில மாகாணங்களில் வரிகள் போடவில்லை. சில மாகாணங்களிலே போட்டிருக்கிறார்கள். நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த

5th March 1963] [திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]

வரையில் எவ்வளவு வரிகள் போடவேண்டுமோ அதைப் பூராவும் ஒழுங்காகப் போட்டு விட்டார்கள். நமது நாட்டிலே சென்ற 15 ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. முன்னாள் இருந்த நிதி மந்திரியும் சரி, இப்பொழுதுள்ள நிதி மந்திரியும் சரி, ஒரே அடியாக எவ்வளவு வரிகளைப் போட முடியுமோ அந்த அளவுக்கு மிகவும் துணிச்சலாகவே வரி போட்டிருக்கிறார்கள். இப்பொழுது சில நாட்களுக்கு முன்னர்தான் தண்ணீர்த் தீர்வையையும், நில வரியையும் உயர்த்தியிருக்கிறார்கள். நகரங்களிலுள்ள நிலங்களுக்கு வரி போடுகிற மசோதா பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனையில் இருக்கிறது. சமீபத்தில் போடப்பட்டிருக்கும் நில வரியின் மூலமாக ரூ. 1 கோடி வரும் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வருமானத்தை எவ்வளவு குறைத்துச் சொல்ல முடியுமோ அப்படிச் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. ஒரு கோடி ரூபாய் கிடைக்குமென்றால் மூன்று கோடி ரூபாய் கிடைக்கும். நகரங்களிலுள்ள நிலங்களின் மீது வரி விதிப்பதின் மூலமாக ரூ. 50 லட்சம் கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். ரூ. 2 கோடிக்கு மேலாக வருமென்று நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். ஆகவே கடைசியில் பார்க்கும்பொழுது இந்த பட்ஜெட்டை ஒரு பற்றுக்குறை பட்ஜெட் என்று சொல்வது தப்பிதமாகத்தான் இருக்கும். இது கணக்கு ஜாலம் பண்ணுகிற வேலை உண்மையிலேயே இது ஒரு சர்ப்பிளஸ் பட்ஜெட்டாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, நாட்டின் பாதுகாப்பிற்காக மத்திய அரசாங்கம் போட்டிருக்கும் வரிகளெல்லாம் மிகவும் பயங்கரமானவை. அவற்றைப் பற்றி இங்கே பேசுவது முறையாக இருக்காது என்று கனம் சபாநாயகர் அவர்கள் சொல்லக்கூடும். ஆனால் அந்த வரிகளையும் கொடுக்க வேண்டியவர்கள் நாம் தான். மத்திய நிதி மந்திரி அவர்கள் "சரித்திரம் கேள்விப்படாத முறையிலே" வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது எங்கு பார்த்தாலும் குமுறல் ஏற்பட்டிருக்கிறது. பிரும்மாண்டமான சண்டை வந்தால் என்ன ஆகுமோ தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையில் செய்ய வேண்டியது என்ன என்பதைப்பற்றி ஆராயவேண்டும்.

சென்ற 15 ஆண்டுகளாக திட்டமிட்ட சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதற்காக எக்கச்சக்கமாக வரிகள் போட்டு வந்தோம். திட்டமிட்ட சமுதாயத்தை அமைக்கவேண்டியது அவசியந்தான். நாட்டின் பாதுகாப்பு வேலைகளையும், திட்ட வேலைகளையும் இரண்டையும் சேர்த்துச் செய்ய வேண்டியது அவசியமா என்பதை நாம் யோசிக்க வேண்டும். நாட்டை எதிர்நோக்கி பெரிய ஆபத்து வருகிறது என்று வைத்துக்கொண்டாலும், சீனாவுக்கும் நம் நாட்டுக்கும் யுத்தம் பகிரங்கமாக ஏற்பட்டாலுங்கூட, ஆக்க வேலைகளையும் நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு விதமான வரிகளைப் போடுவதோடு பாதுகாப்பு வேலைகளுக்காகவும் எக்கச்சக்கமாக வரிகளைப் போட்டால் அந்த வரிகளை மக்கள் தாங்க முடியுமா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்] [5th March 1963

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து, மூன்றாவது திட்டம் நடந்துகொண்டிருக்கிறது. விலைவாசி ஏற்றம் என்பது ஒரு 'க்ரானிக் டிஸீஸ்' போன்று இருக்கிறது. நம் நாட்டில் விலைவாசி பிரச்னை கஷ்டமான பிரச்னையாகவும் இருக்கிறது. சமீபத்தில் போடப்பட்ட வரிகளினால் விலைவாசி இன்னும் எவ்வளவு தூரம் அதிகப்படும் என்று சொல்ல முடியாத நிலை இருக்கிறது. இது எப்பொழுது தீருமோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். ஏழை எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் வரிகள் நிறையப் போடப்பட்டிருக்கின்றன. பதினைந்து ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட திட்டங்களின் மூலமாக நன்மையா, தீமையா என்று நான் கூடப் பல காலமாகப் பரிசீலித்து வருகிறேன். திட்டத்தினால் யார் நலமை அடைந்திருக்கிறார்கள் என்றால், ஒரு சில கூட்டம் நன்மை அடைந்திருக்கிறது. 1942-ம் வருஷம் பணக்காரர்களாக இருந்த கூட்டம், 1942-ம் வருஷம் காண்டிராக்டர்களாக இருந்த கூட்டம், 1942-ம் வருஷம் பணவசதி வைத்திருந்து பொருள் செய்யக்கூடிய கூட்டம் இன்றைய தினம் எக்கச்சக்கமான முறையில் பலூன் மாதிரி பருத்துப் போயிருக்கிறார்கள். ஆனால், இதே நேரத்தில், கீழ்த்தர மக்கள், நடுத்தர மக்கள் பின்னோக்கிப் போயிருக்கிறார்கள்.

நான் ஐந்தாறு உதாரணங்கள் கூற விரும்புகிறேன். 1942-ம் வருஷத்தில் மதுரையில் ஒரு வீடு கட்டினோம். அப்பொழுது 14 அணாவுக்கு ஒரு மூட்டை சிமெண்ட் கிடைத்தது. இப்பொழுது 1963-ம் வருஷத்தில் கள்ள மார்க்கெட்டில் 19 ரூபாய்க்கும், நல்ல மார்க்கெட்டில் 9 ரூபாய்க்கும் ஒரு மூட்டை சிமெண்ட் கிடைக்கிறது என்று நான் நினைக்கின்றேன்.

விலை ஏற்றம் என்னும்போது, பொதுவாக அரிசியின் விலையை மட்டும் தான் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அரிசியை மட்டும் வைத்துக்கொண்டு சாப்பிட முடியாது. அதையொட்டிய எல்லாப் பொருள்களும் வேண்டும். மற்ற பொருள்களின் விலை பயங்கரமான அளவுக்கு ஏறியிருக்கிறது. தமிழகத்தில் முக்கிய உணவாகக் கருதப்படுவது இட்லியும் தோசையும் ஆகும். இவ்விரண்டும் இல்லாமல் தமிழர் இருக்க முடியாது. இந்த இரண்டுக்கும் முக்கியமாகத் தேவைப்படுவது உளுந்து. உளுந்து ஒரு ரூபாய்க்கு ஒரு படி என்றில்லாமல், அதற்கும் குறைவாக நாளுக்கு நாள் போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட விலையில் எப்படி இட்டிலி, தோசை சாப்பிடுவது என்றே புரியவில்லை . . . .

கனம் சபாநாயகர்: இட்டிலி, தோசை சாப்பிட்டு எல்லோருக்கும் பலம் குறைந்து போய்விட்டதாகவும் சொல்லப்படுகிறதே! (சிரிப்பு.)

திரு. மு. கருணாநிதி: இட்டிலி தோசை சாப்பிடுவதால் பலம் குறைவதில்லை. இட்டிலிக்கு பலம் அதிகம்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: இப்படி, அரிசி விலை மட்டுமல்லாமல் அதையொட்டிய எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறியிருக்கும் நிலையில் ஏழை எளிய மக்கள் மேலும் ஏழ்மை நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதே போல், நடுத்தர மக்களும் இருக்கிறார்கள். விவசாயம் சம்பந்தப்பட்ட

5th March 1963] [திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]

வரையில், இந்தச் சபையில் எல்லாத் தரப்பிலிருந்தும் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப் பற்றி ஒரு அபாயச் சங்கை ஒலித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சேலம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும் திட்டை திரு. சுப்பிரமணியம் அவர்களும் கூட இது பற்றிப் பேசினார்கள். எங்கள் பக்கத்தில் திரு. சிமைச்சாமி அவர்கள் நல்ல முறையில் புள்ளி விவரங்கள் தந்து நிலைமையை விளக்கிச் சொன்னார்கள். அவர் கொடுத்த புள்ளி விவரங்கள் சரியானவைதானா என்பதில் சில பேர்களுக்குச் சந்தேகமாகவும் இருந்தது. 'ஒன்பது ரூபாய் மிச்சம்' என்று சொல்லப்பட்டது. மானாவாரி பூமியில் நஷ்டம் கூட ஏற்படத் தான் செய்யும். 'உழவன் கணக்குப் பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது' என்று ஒரு பழமொழி உண்டு. ஒரு விவசாயிக்கு அருமையான முதல்தர நஞ்சை நிலம், இரு போகம் விளையக் கூடிய நஞ்சை நிலம் 6½ ஏக்கர் இருந்தது. அதிலிருந்து இந்த வருஷத்தில் கிடைத்த வருமானம் ரூ. 2,300. செலவு ரூ. 1,400. மிச்சம் 900 ரூபாய். இந்தப் பணத்தில் 7 பேர் உள்ள குடும்பத்தை அவர் எப்படி வருஷம் பூராவும் நடத்திச் செல்ல முடியும் என்று யோசிக்க வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கு வரி நிவாரணம் அளிக்க வேண்டும். இந்த பட்ஜெட்டில் வரி வருமானம் 125 கோடி ரூபாய்க்கு இருப்பது வருகிற மூன்று ஆண்டுகளில் சற்றேறக் குறைய 150 கோடி ரூபாய் அளவுக்கு உயரும். அமைச்சர் அவர்கள் அர்பன் நிலங்களுக்கு வரி போடப்போகிறார். 'முதலில் 5 சத விகிதம் என்று சொல்லி போகப் போக சேல்ஸ் டாக்ஸ் மாதிரி கூடும்' என்று இப்போதே சொல்கிறார். (கனம் திரு. வெ. ராமையா: யார் சொன்னது? எந்த வரி போட்டாலும், அதன் அளவு பின்னால் குறையும் என்று சொல்ல முடியாது. ஒரு கம்பெனியின் ஆண்டு அறிக்கையைப் படிக்கும்போது கூட, 'சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் குறைவாகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது' என்று மானேஜிங் டைரக்டர் அறிக்கை படிப்பதுண்டு. ஆனால், சர்க்காரின் நிர்வாகச் செலவுகள் குறைந்திருக்கிறதா என்றால் இல்லை. நிர்வாகச் செலவு எவ்வளவு குறைந்திருக்கிறது என்று சொல்லாமல், வருமானத்தைப்பற்றி மட்டும் நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் படும் பாட்டைச் சொன்னேன். அவர்களுடைய நிலைமை நாளுக்கு நாள் பயங்கரமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அது எங்கு போய் முடியுமோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

இருக்கிறது. எப்படியும் விவசாயியிடமிருந்து கண்டிப்பாக வரியை வாங்கிவிடுவார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் திரு. சீமைச்சாமி அவர்கள் குறிப்பிட்ட புள்ளி விவரப்படி கணக்கு எழுதிக்கொடுத்தால் வரியே வராது.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: இப்பொழுது வரக்கூடிய வரி எப்படி வருகிறது என்று கேட்கிறார் என்று நான் நினைக்கிறேன். 1942-ம் வருஷத்தில் விவசாயிகளுக்கிருந்த கடன் அளவையும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கடன் அளவையும் ஒப்பிட்டுப் புள்ளி விவரங்களைத் தயாரிக்கும்படி நான் கேட்கிறேன். விவசாயிகளுக்குப் பயங்கரமான அளவுக்குக் கடன் சுமை அதிகரித்திருக்கிறது. அரசாங்கமே அவர்களுக்குக் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுத்த கடனைச் சர்க்கார் திருப்பிப் பெற முடியாத அளவுக்கு அவர்களுடைய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. திரு. மூக்கையா தேவர் அவர்களும் இதுபற்றிச் சொன்னார்கள். எங்கள் தொகுதி சம்பந்தப்பட்டமட்டில், அங்குள்ள விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத அளவுக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அநேக லட்ச ரூபாய்கள் வரை வசூலிக்கப்பட முடியாமலிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கலெக்டரும் அதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுதிருக்கும் நிலையில் வரி வஜா செய்தாலொழிய மக்களிடமிருந்து கடன் பாக்கியை வசூல் செய்ய முடியாத அளவுக்கு விவசாயிகளுக்குக் கடன் பளு ஜாஸ்தியாகப் போய்க்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அரசாங்கத்திற்கு எப்படிப் பெருமை அளிப்பதாக இருக்க முடியும்? ஐந்தாண்டுத் திட்டங்களினால், நாடு பூராவும் பத்து கோடி ரூபாய் கடன் கொடுத்து, மக்களைக் கடன்காரர்களாக ஆக்கியிருக்கிறோம் என்றால் அது எப்படி பெருமை அளிக்கக் கூடியதாக இருக்க முடியும்? பத்து கோடி ரூபாய் அளவுக்குக் கடன்காரர்களாக்கியிருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் அரசாங்கத்தின் தவறான கொள்கை தான் என்று சொல்லவேண்டும். வாங்கிய கடனை விவசாயிகள் கொடுக்க முடியவில்லை. விவசாயிகளுக்குச் சரியான முறையில் வரியைக் குறைக்காவிட்டால், வருங்காலத்தில் நிச்சயமாக பெரிய ஆபத்து நேரத்தான் போகிறது. விவசாயிகளுக்கு வர வர உணர்ச்சி குறைய ஆரம்பித்திருக்கிறது. விவசாயம் செய்வதில் ஆள் பஞ்சம் கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கிறது. பத்து மூட்டை நெல் அறுவடை செய்தால் அதில் மூன்று மூட்டை நெல் அறுவடை கூலியாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. 'இவ்வளவு கொடுத்தால்தான் வருவோம்' என்று ஆட்கள் சொல்லக் கூடிய அளவுக்கு ஆள் பஞ்சம் கிராமப் பகுதிகளில் இருக்கிறது. இதற்குக் காரணம், கிராமப்புறங்களிலிருந்து நகரங்களை நோக்கி விவசாயம் செய்பவர்கள் வந்துகொண்டிருப்பதுதான். இம்மாதிரி சூழ்நிலை ஏற்பட்டால் கதி மோட்சமே இல்லாமல் போய்விடும்.

'பெரிய நீர்ப்பாசன திட்டத்தை இந்த மாநிலத்தில் இனிமேல் நிறைவேற்ற வழி இல்லை' என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி சொல்வது எனக்கு மிகவும் அதிர்ச்சியைத் தருகிறது. கிழக்கு

இராமநாதபுரம் பகுதிக்குப் பலனுள்ள வகையில் மேல் பெரியாறுத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அதைப்பற்றி சென்ற ஐந்தாறு வருஷங்களாக நான் கேட்டுக்கொண்டு வருகிறேன். இப்பொழும் கேட்கின்றேன். அந்தத் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் இந்த பட்ஜெட் உரையில் காணப்படவில்லை. இடுக்கி திட்டம் சம்பந்தமாக கேரள அரசாங்கத்துடன் ஏதோ பேச்சு வார்த்தை நடப்பது பற்றி பத்திரிகையில் செய்திகள் வந்தன. அதைப்பற்றி நான் ஜாஸ்தியாக இங்கே சர்ச்சை செய்ய விரும்பவில்லை. இதைக் கேரள அரசாங்கத்துடன் நமது அரசாங்கம் சுமுகமான முறையில் பேசி, கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குப் பயனளிக்கக்கூடிய மேல் பெரியாறுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இல்லையானால், மிகவும் கடஷ்மான நிலைமை அங்கே ஏற்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தொழில் சம்பந்தமாகவும் கிழக்கு இராமநாதபுரம் பகுதி இன்னும் பிற்போக்கான தன்மையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. அதையும் கவனித்து அந்தப் பகுதியில் நல்ல தொழில் வளர்ச்சி ஏற்படவும் அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும்.

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீர்கேடு அடைந்து கொண்டிருக்கிறது. எழ்மை ஜாஸ்தியாகியிருக்கிறது என்று நான் சொன்னேன். ஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன். யாரேனும் ஒரு மத பக்தர் மோட்சத்திற்குப் போகவேண்டுமென்று விரும்பினால் குருநாதனை அண்டி உபதேசம் பெறுவர். அந்த குருநாதர் முதலாக அவருக்கு உபதேசம் செய்யும்போது, "அப்பா நீ பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றைவிட வேண்டும்" என்று சொல்வார். சாத்திரங்களில் இந்த மூன்றையும் விட்டவனே துறவி என்று சொல்லப்படுகிறது. இந்தச் சர்க்காரும் இந்த நாட்டு மக்களை ஆண்டியாக, துறவியாக விரட்டுவதற்குத் தான் இந்த மூன்று உபதேசங்களையும் வற்புறுத்துகிறதோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. காரணம், பெண்ணாசை என்றால் அதை நாட்டு மக்கள் ஒழிக்கவேண்டும் என்பதற்கு முதல் கட்டத்தில் சட்டம் கொண்டுவந்துவிட்டது. அது தான் இருதாரத் தடை மசோதா. அது முதல் கட்டம். போதாதற்கு குடும்பக்கட்டுபாடு வேறு வந்திருக்கிறது. இப்போது பெண்ணாசையை அறவே ஒழித்து வருகிறார்கள்.

9-30 a.m.

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினருக்கு அது சந்தோஷத்தைத்தானே தருகிறது? (சிரிப்பு.)

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: இல்லை, வருத்தத்தைத் தருகிறது என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) அடுத்து மண்ணாசை. மண்ணாசையை ஒழிப்பதற்குத்தான் நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்த காரணத்தினால் இன்றைக்குப் பலர் கிராமங்களைவிட்டு நகரங்களுக்கு ஓடி வருகிறார்கள். கிராமங்களில் ஆள் இல்லை. மூன்றாவது பொன்னாசை. திரு. மொரார்ஜி தேசாய் தங்கக் கட்டுப்பாட்டை கொண்டுவந்துவிட்டார்கள். சட்டபூர்வமாகவே மக்கள் இந்த மூன்று ஆசையையும்விட்டு

ஓட்டாண்டியாகி, இனி மோட்ச சாம்ராஜ்யத்தைப் பெற வழி செய்யுங்கள் என்று சொல்லாமல் செய்வது போல இருக்கிறது. இன்னொன்று ஒரு அன்பர் என்னிடம் குறிப்பிட்டார் . . .

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கனம் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய பக்தவத்சலம் அவர்கள் நிதி மந்திரி பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு இரண்டாவது பட்ஜெட் சமர்ப்பித் திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, இன்று நம் நாட்டில் ஏற்பட் டுள்ள நெருக்கடி நிலைமை, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு இப்படிப் பட்ட ஒரு கஷ்டமான சூழ்நிலையில் மிகுந்த அக்கறையுடனும், நிதானத்துடனும் இந்த பட்ஜெட் தயாரித்ததற்காக கனம் பக்த வத்சலம் அவர்களைப் பாராட்டுகிறேன். அதுவும் அவர்கள் சொன்ன மாதிரி புதிய வரிகள் போடாமல் இந்த பட்ஜெட் அமைந்திருப்பது நமக்கு மன ஆறுதல் அளிக்கிறது. இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட், சுமார் 274 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. இதைச் சரிக்கட்ட புதிய வரிகள் போட முன் வரவில்லை யென்றால் நிதி மந்திரி வேறு சில இனங்களில் வருமானத்தை எதிர்பார்க்கிறார்.

மத்திய அரசாங்கம் Central Sales Tax Act- ஐத் திருத்தப் போவது மூலம் மாகாணங்களுக்கு சுமார் 21 கோடி ரூபாய் பிரித்துக் கொடுக்கப்படலாம். இதில் நமக்குக் கணிசமான பங்கு கிடைக்கும். மேலும் Central Excise Duty-ல் செய்யப் போகும் மாறுதல்களால் மாகாணங்களுக்கு சுமார் 960 லட்சம் ரூபாய் கிடைக்கலாம். இதிலும் நமக்குக் குறிப்பிட்ட தொகை பங்கு கிடைக்கும். மத்திய நிதி மந்திரியின் புதிய கட்டாய சேமிப்புத் திட்டத்தின்படி மாகாணங் களுக்கு சுமார் 30 கோடி ரூபாய் ஒதுக்கலாம் எனத் தெரிவதால் இதிலும் நமக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கிடைக்கும். இவைகளை யெல்லாம் முன் கூட்டி எதிர் பார்த்துத்தான் நம் நிதி மந்திரி கனம் பக்தவத்சலம் அவர்கள் புதிய வரி போட வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

இதை மனதில் வைத்துக்கொண்டுதான் எதிர்க் கட்சி அங்கத் தினர் கனம் மதியழகன் அவர்கள் நேற்று தினம் இந்த பட் ஜெட்டை, 'நிராகரிக்கிறேன்' என்று பேசியபோது 'இது ஒரு சதித்திட்டம்' என்று குறிப்பிட்டார் போலும். அவர் சொல்வது போன்று இது சதித்திட்டம் அன்று. மத்திய நிதி மந்திரி, மாகாண நிதி மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தி மக்களுக்கு நன்மை செய்வதற்காக வரி போடுவது பற்றி முடிவு செய்த ஒரு ஆலோசனை திட்டம். எனவே இதைச் 'சதித் திட்டம்' என்று சொல்வதற்கில்லை.

கனம் மதியழகன் பேசும் போது ரஷ்யா தேசத்தில் 9 சத விகிதம்தான் வரி விதிக்கப்படுகின்றது. ஆனால், நம் தேசத்தில் வரி விகிதம் மிகவும் அதிகம் என்று குறிப்பிட்டார். அங்குள்ள நிலைமை வேறு; இங்குள்ள நிலைமை வேறு. ரஷ்யாவில் உற்பத்தி எல்லாம் அரசாங்கம் செய்வதால் அரசாங்க வருமானம் பெரும் பாலும் வரி வருமானக் கணக்கில் சேராமல், லாபம் என்ற கணக் கில் சேருகிறது.

வரி என்று விதிக்கக் கூடிய இனங்கள் மிகவும் சொற்பம். எனவே, வரி விகிதம் குறைவாகத் தெரிகிறது. அவ்விதமிருந்தும் நம் நாட்டில் விதிக்கப்படும் வரி விகிதம் 12-லிருந்து 15 சத விகிதத் திற்குத்தான் வருகிறது. அமெரிக்கா, யு. கே., ஆஸ்திரேலியா போன்ற மிகவும் முன்னேற்றமடைந்த தேசங்களில் வரி விகிதம் சுமார் 30-லிருந்து 40 சத விகிதம் வரை விதிக்கப்படுகிறதென்பதை யும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வரி விதிக்கும் கொள்கையை நான் எதிர்ப்பவன் என்று கருதி விடக்கூடாது. நாட்டிலுள்ள பெரும் பிரச்னைகளைச் சமாளிக்க, மக்களுக்கு நன்மை செய்ய, வரி போடவேண்டிய அவசியமேற் பட்டால் வரி போடத்தான் வேண்டும். வரி போடாமல் ஆட்சியே நடத்த முடியாது. இப்போது பதவியிலுள்ளவர்களில்லாமல், நாங்கள் பதவிக்கு வந்தாலும், அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் பதவிக்கு வந்தாலும் வரி விதிக்காமல் நிர்வாகத்தை நடத்த முடியாது. எந்த எந்த இனங்களில் வரி விதிக்கலாமென்பதில் வேண்டுமானால் கருத்து வேற்றுமை இருக்கலாம். (கனம் திரு. கு. காமராஜ் : நம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்வோம்; அவர்களைப் பற்றி நாம் எதற்குச் சொல்வது ?) யார் பதவியிலிருந்தாலும் வரி விதிக்காமல் நிர்வாகத்தை நடத்த முடியாது என்பதற்காகச் சொல்ல வந்தேன்.

முதலாவது பட்ஜெட் விவாதத்தின் போது நாங்கள் கூறிய யோசனைகளுக்கு மதிப்புக் கொடுத்து அநாவசியச் செலவுகளை அநேக இனங்களில் அங்கங்கே குறைக்க முயற்சிக்கப்பட்டிருக் கிறது. இதற்கு நாம் நன்றி பாராட்ட வேண்டும். ஆனால், சிக்கனம் செய்ய வேண்டிய இனங்கள் இன்னும் ஏராளமாக இருக் கின்றன. இதற்கு என்னுடைய யோசனை என்னவென்றால், ஒரு 'ஹை பவர் கமிட்டி' நியமித்து எந்தெந்தத் துறைகளில் சிக்கனத் தைக் கையாளலாம் என்று பார்த்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

நமது இந்திய மண்ணில் ஆக்கிரமிப்பு செய்த சீனர்களை விரட்டி அடிக்க நம் மாபெரும் தலைவர்கள் தேசத்தைத் தட்டியெழுப்பி, மக்களை அறை கூவி, உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று விவசாயிகளை அழைத்தார்கள். நம் விவசாயிகளும் இக்கட்டளையைக் கடமையாகக் கருதி, தீவிர உற்பத்தியில் ஈடு பட்டார்கள். அதனால் ஏற்பட்ட அதிகச் செலவையும் பொருட் படுத்தாமல் உணவு உற்பத்தியைப் பெருக்கினார்கள். அதன் பலன் இவ்வருஷம் நாடெங்கும் நல்ல மேனி கண்டிருக்கிறது. நகரங் களில் வாழும் மக்கள் நீண்ட காலமாகச் சொல்லி வரும் விலைவாசி யைக் குறை, விலைவாசியைக் குறை என்ற கிளர்ச்சியும் வலுத்தது. விவசாயிகளாகிய நாங்களும் இந்த கிளர்ச்சியில் கலந்து கொண்டு விலைவாசியைக் குறை என்று கூப்பாடு போட் டோம். காரணம், நாட்டிலுள்ள எல்லா அத்தியாவசியப் பொருள் களின் விலையும் குறையும் என்று நம்பினோம்.

விவசாய உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களான உரம், கலப்பை, கொழு, மண் வெட்டி முதலிய விவசாயக் கருவிகள் மாட்டுத் தீவனம், குடும்பத்திற்கு தேவையான துணிமணி முதலிய

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [5th March 1963

அத்தியாவசியப் பொருள்களின் விலையும் குறைந்து விடும். அதன் காரணமாக, உற்பத்திச் செலவு குறையும். எனவே உணவுப் பொருள்களின் விலையும் குறையட்டுமென்று உண்மையில் விவசாயிகள் விரும்பினார்கள். இந்தக் கிளர்ச்சி எவ்விதமிருந்தபோதிலும் இந்த வருஷம் இதுவரைக் கண்டிராத அளவில் உற்பத்திக்குத் தேவையான பொருள்களின் விலை உயர்ந்து விட்டது. ஆனால், இதற்கு நேர்மாறாக இந்த வருஷம் நெல் விலை குறைந்து விட்டது.

நெல் விலை குறைந்ததற்கு இந்த வருஷம் விளைச்சல் அதிகரித்திருப்பதுதான் காரணம் என்று சிலர் சொல்கிறார்கள். புள்ளி விவரங்களைக் கொண்டே இக்கருத்து முற்றிலும் தவறு என்று நிரூபிக்கலாம்.

ரூபாய்க்கு மூன்று படி அரிசி, ஐந்து படி அரிசி கொடுக்க வேண்டுமென்று நமது திராவிட முன்னேற்றக் கழக அன்பர்கள் மாத்திரம் போட்டதால் உடனே நெல் விலை குறைந்துவிட்டது என்று கூட சிலர் சொல்லலாம். ஆனால், நெல் விலை குறைந்ததற்கு உண்மைக் காரணங்கள் வேறு.

முக்கிய காரணங்களில் பர்மாவிலிருந்து அதிகமாக அரிசி இறக்குமதி செய்வது ஒன்று. முந்திய வருஷங்களில் வருஷம் ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இந்த வருஷம் ஒன்றரை லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய பர்மாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது காரணம், சேமிப்பிலிருந்து ஸ்டாக்குகளைத் திடீரென்று வெளியிட்டு மார்கெட்டில் அவிழ்த்து விட்டது. மூன்றாவது காரணம், அரிசி முதலிய உணவுப் பொருள்களின் சேமிப்பு மீது பாங்குகள் கொடுக்கும் கடனைக் கட்டுப்படுத்தியது. நான்காவது காரணம், அரசாங்கம் கடைபிடித்த விலைவாசிக் கொள்கை. இத்தகைய காரணங்களால்தான் நெல் விலை சரிந்து விட்டது. இதே சமயத்தில் விவசாய உற்பத்திக்குத் தேவையான, அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் தவறிவிட்டது. என்று நான் வருத்தத்துடன் கூறிக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் பேசிய கனம் சீமைச்சாமி அவர்கள் விவசாயத்தில் ஒரு ஏக்கருக்கு ஏற்படும் செலவு கணக்கை விபரமாகத் தெரிவித்தார். அவர் குறிப்பிட்ட புள்ளி விபரம் சில இனங்களில் வித்தியாசப்பட்டாலும், மொத்தமாகப் பார்த்தால் அது சரியான கணக்கு என்றுதான் ஒப்புக் கொள்ளவேண்டும். சயன்டிபிக் முறையில் விவசாயம் செய்ய வேண்மானால் ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ. 350-லிருந்து ரூ. 400 வரை செலவு ஆகும். எனவே, இப்பொழுதுள்ள நெல் விலைப்படி விவசாயத்தில் நஷ்டம்தான் ஏற்படும்.

லாண்ட் சீலிங் ஆக்ட்படி பண்ணைகளின் விஸ்தீரணத்தையும் கட்டுப்படுத்தி விட்டோம். புதிதாக, நிலவரி வேறு போட்டு விட்டோம். இத்தகைய நிலையில் விவசாயிகளுக்கு விவசாயத்தில் எப்படி இண்டரஸ்ட் ஏற்படும். இவ்வித நிலைமை நீடித்துக் கொண்டு போனால் விவசாயிகள் மனமுடைந்து விவசாயத்தில் அக்கறை இழந்து விடுவார்கள். விவசாயம் செய்யாமலே நின்று விடுவார்களென்று அர்த்தமல்ல. ஆனால் விவசாயிகள் உற்சாகமிழந்து ஏதோ சொற்ப விவசாயம் செய்வார்கள். அதனால் உற்பத்திக் குறைந்து விடும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப்படி உணவு உற்பத்தியில் நாம் எதிர்பார்க்கும் "டார்ஜெட்" தலைகீழாகக் கவிழ்ந்து விடுமென்று எச்சரிக்கின்றேன். விவசாய உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5th March 1963] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

மத்திய நிதி மந்திரி கனம் மொரார்ஜி தேசாய் அவருடைய புதிய திட்டப்படி விவசாயிகள் நிலவரியில் 50 சத விகிதம் கட்டாய சேமிப்பு நிதி செலுத்தவேண்டுமென்று உத்தரவு போட்டு விட்டார். நமது முதல் மந்திரி கனம் காமராஜ் இன்றைய நிலையில் பணம் சேமிக்க விவசாயிகளுக்கு வசதி எங்கேயிருக்கிறது என்று மொரார்ஜி தேசாயைக் கேட்க வேண்டும். இதை உடனே ரத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேவிங்ஸ் அவர்களுக்கு இருக்கிறதா இல்லையா என்ற பிரச்னை இல்லை. சேவ் பண்ணி கொடுக்க வேண்டுமென்பது தான் கருத்து.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : முதலமைச்சர் கனம் காமராஜ், நிதி அமைச்சர் கனம் பக்தவத்சலம், விவசாய மந்திரி கனம் கக்கன் முதலியவர்களுக்கு விவசாயிகளிடம் விசேஷ அக்கறை உண்டு என்பது அவர்களிடம் நெருங்கிப் பழகிய எனக்கு நன்கு தெரியும். விவசாயிகளின் இன்றைய அவல நிலையைக் கவனித்து தக்கப் பரிகாரம் காண முயற்சிப்பார்களென்று நம்புகிறேன். (திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : முதலமைச்சர் அவர்களுக்கு நிலமிருக்கிறதா ?) தேசத்திலிருக்கும் நிலமெல்லாம் முதலமைச்சருடைய நிலம்தான்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தேசீய நெருக்கடி காலத்தில் முதலாளிகளும், தொழிலாளர்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு உழைத்து உற்பத்தியைப் பெருக்கும்படி தலைவர்கள் வேண்டிக் கொண்டார்கள். தொழிலாளர்கள் இந்த வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். ஆனால், மதுரையில் சில மில் முதலாளிகள், குறிப்பாக மதுரையிலுள்ள கோதண்டராம் மில்ஸ், சீதாலக்ஷ்மி மில் நிர்வாகிகள் தேசீய நெருக்கடி நிலைமையைத் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டு, தொழிலாளர்களுக்கு இடைஞ்சல் செய்ய முயற்சிக்கின்றார்கள். நிலைமை மேலும் முற்றுவதற்கு முன் கனம் தொழில் மந்திரி அவர்கள் தலையிட்டு நியாயம் நிலைக்கச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சிறிய தொழில்கள் ஸ்டேட் சப்ஜெக்ட்லில் இருக்கிறது. மொரார்ஜி அவர்களின் புதிய அமிதலாப வரியினால் (Super Profit Tax) சிறிய தொழில்கள் மிகவும் பாதிக்கப்படும். இவைகளுக்கு நிதி உதவி கிடைப்பது இதனால் தடைப்படும். அவ்வாறின்றி, இந்தச் சிறிய தொழில்களுக்கு "Madras Investment Corporation" மூலம் தாராளமாக நிதி உதவி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். "Madras Investment Corporation"

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [5th March 1963

னுடைய இப்போதுள்ள விதிகளின்படி சிறிய தொழில்கள் உதவி பெறுவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. விதியைத் திருத்தி எல்லா தொழில் ஸ்தாபனங்களுக்கும் நிதி உதவி கிடைக்கச் செய்ய வேண்டும்.

இது வரை பொதுவான பிரச்னைகளைப் பற்றிப் பேசினேன். கடைசியாக, எனது நீண்ட நாள் ஆசையான, இராமநாதபுரம் ஜில்லாவிற்கு நீர்பாசன வசதி செய்து கொடுப்பது பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவிற்கு கதி மோக்ஷம் அளிக்கக் கூடிய திட்டம் 'அப்பர்' (மேல்) பெரியாறு திட்டம் ஒன்றுதான். அந்தத் திட்டம் நிறைவேறினால் நாலைந்து லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். நீண்டகாலமாக இதற்காகக் கிளர்ச்சி செய்து வருகிறோம். இதை நிறைவேற்றுவதற்கு கேரள அரசாங்கம் இடைஞ்சலாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சமீபத்தில் யூனியன் மந்திரி டி.டி.கே. அவர்கள் ஒரு பிரசங்கத்தில் 'இந்த மாதிரி இரிகேஷன், பவர் விஷயத்தில் மத்திய அரசாங்கம் ஒரு ஹை பவர் கமிஷன் நியமித்து, யார் இடைஞ்சலாக இருந்தாலும் அவர்களைக் கட்டுப்படுத்தித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். அதை நான் வரவேற்கிறேன். முதல் மந்திரி அவர்கள் இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி கேரள அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வந்து, மேல் பெரியாறு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய 1963-64-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். குறிப்பாக, நம்முடைய மாகாணத்திலே, இந்த ஆண்டு நெருக்கடி நிலைமை இருந்தும் கூட, புது வரி எதுவும் போடாமல், வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அதற்குக் காரணம் இப்போது நம்முடைய தொழில்கள் எல்லாம் அதிவிரைவில் முன்னேறிக்கொண்டிருப்பதும், விற்பனை வரியும், வருமான வரியும் அதிகமாக வரக்கூடிய நிலைமைதான். உண்மையிலேயே இனி சர்க்கார் வரி போடக் கூடிய நிலைமையைக் குறைத்துக் கொண்டே வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

நேற்றுப் பேசிய நண்பர் சீமைச்சாமி அவர்கள் விவசாயிகள் சார்பிலே மிகவும் பரிந்து பேசினார்கள் என்று சொல்லலாமே தவிர, மற்றபடி விவசாயிகளுடைய பெயரையே கெடுத்து விட்டார்கள் என்றுதான் சொல்வேன். நண்பர் சீமைச்சாமி அவர்கள் சிறந்த விவசாயி என்பது எனக்குத் தெரியும். இந்த ஆண்டைப் பொருத்தவரை அவர்கள் கரும்பு சாகுபடி செய்த காரணத்தால் ஒன்பது ரூபாய் தான் . . .

திரு. கரு. சீமைச்சாமி : நான் நெல்லுக்குத்தான் பேசினேனே தவிர, கரும்புக்கு அல்ல.

5th March 1963]

கனம் சபாநாயகர் : நிறையப் பணம் வரும் என்று எல்லோரையும் கரும்பு பயிரிட கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : உண்மையிலேயே இந்த ஆண்டிலே நெல் விலை குறைந்ததன் காரணம், சென்ற ஆண்டில் கரும்பு விலை மிகவும் குறைந்து விட்டதுதான். நண்பர் சாமிநாதன் அவர்கள் சொன்னது போல் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ததின் காரணமாக விலை குறைந்து விடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஓரளவு நஷ்டம் இருக்கிறது. ஆனால் நண்பர் சீமைச்சாமி அவர்களைப் போல் உண்மைக்குப் புறம்பாகப் பேசுவார்களேயானால், சர்க்கார் விவசாயிகளின்பேரில் வைத்திருக்கும் கருணையும் கெட்டுவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா விவசாயிகளும் உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார்கள் என்ற கருத்தை உண்டாக்கவேண்டாம் என்று அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையில் நெல் விலை மிகவும் குறைந்திருந்தாலும், ஏக்கருக்கு நிச்சயமாக 100 ரூபாய் கிடைக்கும் என்பதிலே கொஞ்சம் கூடச் சந்தேகம் இல்லை. வேறு தொழில்களைச் செய்யக் கூடியவர்களையும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மற்றவர்களுக்கு மில் தொழிலில், பஸ் தொழிலில், சினிமாத் தொழிலில் மூலதனம் போட்டவர்களுக்கு போட்ட மூலதனத்திற்கு 50 சதவிகிதம் லாபம் வருவதைப் போல் விவசாயத் தொழிலில் காண முடியாது. இதைப் பற்றிச் சர்க்கார் கவனித்துக் கொண்டுதான் வருகிறது. நண்பர் சீமைச்சாமி அவர்கள் இந்த ஆண்டு கரும்பு போட்டிருப்பதன் காரணமாக, அதற்கு ஆன விவசாயச் செலவை நெல்லுக்குச் சொல்லி விட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆயினும், மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வருமானத்துடன் ஒப்பிடும்போது, விவசாயிகளுக்குக் கிடைப்பது குறைவாக இருப்பதால் இதை அதிகப்படுத்த சர்க்கார் வழிவகைகள் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பொற்கொல்லர்கள் மிகுந்த வறுமையில் வாடுகிறார்கள். பதினான்கு காரட்டில் நகை செய்வதற்கு தொழில் வாய்ப்புக் கொடுத்தும், வேறு தொழில் செய்யக் கூடியவர்களுக்கு தொழில் வாய்ப்புக் கொடுத்தும் உதவ வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற கூட்டத்தில் சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் பொற்கொல்லர் வேலைகளைப் பற்றி வெகு அழகாக எடுத்துச் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்கிறேன், நெசவாளர்களுக்கு எப்படி அதே வேலையை மீண்டும் மீண்டும் அளித்து அவர்கள் எப்படி அடிக்கடி வறுமையால் வாடுகிறார்களோ அதே போல் இவர்களுக்கும் அதே வேலையைக் கொடுத்து மறுபடியும் அவர்கள் வறுமையில் வாடுவதை விடுத்து வேறு தொழில்களை அவர்களுக்குக் கொடுப்பது நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன். சுதந்திரக் கட்சியின் தலைவரான நம் மதிப்புக்குரிய

[திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்] [5th March 1963

ராஜாஜி அவர்கள் சர்க்காரை 14 காரட் சர்க்கார் என்று சொல்கிறார்கள். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவர்கள் 1953-ல் முதல் அமைச்சராக இருந்தபோது எங்கள் கிராமத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியைத் திறக்கும்போது அவர்கள் அங்கு பேசினார்கள். நம் நாட்டை வளம் பெறச் செய்ய, நம் நாட்டில் பெரிய தொழில்களைக் கொண்டு வருவதற்கு தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய பெண்கள் எல்லோரும் தங்கள் நகைகளை எல்லாம் கழட்டிக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் பேசியதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் சாதாரண அபிவிருத்தி வேலைகளைச் செய்யவே தங்கள் நகைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னவர் இப்போது நம் நாட்டின் தற்காப்பிற்காக, தேசியப் பாதுகாப்பிற்காக தங்கம் வேண்டுமென்று சொல்லும்போது ஏதோ அவர்கள் பதவியில் இல்லை என்ற காரணத்திற்காக வாய்க்கு வந்ததுபோல் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் தம் ஒரிஜினலிட்டிக்குப் போய் விட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன். அதாவது அவர் ஒரு வழக்கறிஞர். வாதம் எதிர்வாதம் இரண்டும் பேசுவதைப் போல அவர்கள் இப்போது வெளியிலிருந்து எதிர்கட்சிகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர் : வழக்கறிஞர்களை எல்லாம் கனம் அங்கத்தினர் தாக்குகிறார்களே !

திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் : தமிழ்நாட்டின் ஒரு பெரிய தலைவர் என்று அவர்களை வைத்துக்கொண்டிருக்கும்போது வரி போடாது அவர்கள் எப்படி அரசாங்கத்தை நடத்தினார்கள் என்று புரியவில்லை. அவர்கள் சேல்ஸ் டாக்ஸ், கமர்ஷியல் டாக்ஸைக் கொண்டு வந்து அதை காமதேனு என்று சொன்னதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். இப்போது வெளியில் இருந்துகொண்டு எல்லோரையும் ஒன்றும் தெரியாதவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது அவ்வளவு நல்லதல்ல. தங்கக் கட்டுப்பாடு பொறுத்தவரையில் மத்திய சர்க்காருக்கு நம் மாநில சர்க்கார் எடுத்துச் சொல்ல வேண்டும். தங்கத்தைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வளவு கிராம் தங்கம்தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்து விட்டு மீதித் தங்கத்தை குறிப்பிட்ட தேதிக்குள் அவர்கள் சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்டு அதற்கு தங்கப்பத்திரம் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை விட்டு அரைகுறையாக செய்த காரணத்தினால்தான் மக்களிடம் எதிர்ப்பு சக்தி அதிகமாகியிருக்கிறதே தவிர உண்மையில் நம் தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம்தான் நம் மக்களுக்கு இருக்கிறது. அடுத்தபடியாக சிறு சேமிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து மக்கள் கட்டாயமாக தொகை போட வேண்டுமென்ற திட்டம் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக உத்தியோகஸ்தர்கள், குமாஸ்தாக்கள் இவர்களுக்கு திடீரென்று ஒரு தொகை வேண்டுமென்றால், ஏதாவது ஒரு அவசரச் செலவு அவர்களுக்கு ஏற்பட்டால் அவர்கள் தங்கள் கையிலுள்ள நகைகளை அடகு வைத்து பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இப்போது இந்த தங்கக் கட்டுபாடு வந்த காரணத்தினால் அவர்களுக்கு அவசரமாகத் தொகை வேண்டுமென்றால் அவர்கள் கஷ்டப்படக் கூடிய நிலைதான் இருக்கிறது. ஆகவே இந்த அவல நிலையைப் போக்க சிறு சேமிப்புத் திட்டத்தை நல்லமுறையில் விரிவுபடுத்தி அந்தத் திட்டத்தை மக்களிடையே உடனடியாகக் கொண்டு வருவார்களேயானால் இந்த சிறு சேமிப்பிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் கொடுத்தால் வசதியாக இருக்கும். விவசாயிகளைப் பொறுத்த வரையில் இது வேண்டாமென்று சிலர் சொல்கிறார்கள். விவசாயிகள் கூட முன்பு விவசாயச் செலவிற்குத் தொகை வேண்டுமென்றால் உடனே அவர்கள் தங்கள் நகைகளை கொண்டு போய் வைத்து பணம் வாங்கும் நிலை இருந்தது. இப்போது தங்கக் கட்டுப்பாடு வந்திருக்கும் காரணத்தினால் அவர்களிடமும் இந்த சிறு சேமிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து அந்த பத்திரங்கள் மீது கடன் வாங்கும் வாய்ப்பிருந்தால் அவர்களுக்கும் நல்ல வசதியாக இருக்கும் என்பதையும் நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வயோதிகர்களின் பென்ஷனைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு அதிகமாக செலவாகியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்து அறிகிறோம். அத்திட்டம் வரவேற்கத்தக்கதே. ஆனால் நடைமுறையில் அத்திட்டத்தில் ஊழல்கள் மிக இருக்கின்றன என்பதை நான் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அத்திட்டத்தின் கொள்கைக்கு மாறாக அது நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு நல்லதொரு கமிட்டியைப் போட்டு அதைப் பரிசீலனை செய்து அத்திட்டம் நல்லமுறையில் நடக்கச் செய்ய வேண்டும். அனாவசியமாக பணம் செலவாகாமல் இருக்க, அதை மீண்டும் நன்கு பரிசீலனை செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்தால் செலவுத் தொகை குறையும் என்பதையும் நான் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர நினைக்கிறேன்.

5th March 1963] [திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்]

அடுத்தபடியாக, மேட்டூரைப் பொறுத்தவரையில் மேட்டூர் டவுண்ஷிப் கமிட்டியில் நான்-அஃபிஷியல் மெம்பர்ஸைப் போடாததால் சென்ற பெப்ரவரியிலிருந்து அங்கு நிர்வாகம் சரியான முறையில் நடைபெறாமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதை நான் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள்தான் அதைச் செய்ய வேண்டிய காரணத்தினால். அங்கு சுகாதாரமின்மையினால் மக்கள் அவதியுறுகிறார்கள். மேட்டூரைப் பொறுத்தவரையில் அங்கு இப்போது இன்டஸ்ட்ரீஸ் பெருகிக்கொண்டு வருவதால், அங்கிருக்கக்கூடிய நிலங்கள் அத்தனையும் சர்க்கார் நிலங்களாக இருப்பதால் அந்நிலத்தை உடனடியாக அங்குள்ள தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக கொடுப்பார்களேயானால் அந்நகரத்தை விரிவடையச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பூரா நிலங்களும் சர்க்கார் நிலங்களாக இருப்பதால் அதிலும் குறிப்பாக இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் அளவில் சர்க்காரின் பல திட்டங்கள் நிறைவேறிக் கொண்டிருப்பதால், அநேக தொழிலாளர்கள் அங்கு வர சந்தர்ப்பம்

இருப்பதால் அவர்கள் வீடுகள் இன்றி தவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக ஒரு நல்ல அதிகாரியை அங்கு நியமித்து அந்த நிலத்தை அவர்களுக்கு வீடுகள் கட்ட விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. மு. பொ. வடிவேல்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நம் நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்த பல நண்பர்கள் இந்த பட்ஜட்டை வரவேற்றும் எதிர்கட்சியில் உள்ள நாங்கள் இதை வரவேற்கவில்லை என்றும் குறைபட்டுக் கொண்டார்கள். ஆளும் கட்சி சில நல்ல காரியங்களைச் செய்தால் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனால் எதையுமே நாங்கள் ஆதரிக்கவேண்டுமென்றால் நாங்கள் எதிர்கட்சியில் அமர வேண்டிய அவசியமே இருக்காது. நல்ல அரசு என்றால் இருக்கிற வரிகளை, தாங்க முடியாத வரிகளை படிப்படியாக குறைக்க முன்வர வேண்டும். ஆனால், இந்த பட்ஜட்டில் எந்த வரியும் குறைக்கப் படவில்லை. வேறு வரிகள் போடவில்லை என்பதற்காக மட்டுமே ஒரு பட்ஜட்டை ஆதரிக்கமுடியாது. வேறு வரிகள் போடாதிருப்பதற்கு பல காரணங்களை நிதி அமைச்சர் அவர்கள் மனதில் வைத்திருக்கக் கூடும். டெல்லி சர்க்கார் ஏராளமான வரிகள் போட்டு விட்ட காரணத்தினால் மேலும் வரிச் சுமையை மக்கள் மீது போடக் கூடாது என்று கருதி இருக்கலாம். அல்லது சசிவர்ண தேவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் உலகத்திலுள்ள ஆசைகளுக்கும் கட்டுப்பாடும், உச்சவரம்பும் ஏற்படுத்திவிட்ட காரணத்தினால், "காயமே பொய்யடா காற்றடைத்த பையடா" என்று மக்கள் சந்நியாசி நிலைக்கு போய்க்கொண்டிருக்கிற காரணத்தினால் மேலும் தொலைப் படுத்தக் கூடாது என்று கருதியிருக்கலாம். அவைகளை விட ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. சமீபத்தில் மூன்று இடைத் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. மேலும் வரி விதித்தால் ஆளும் கட்சிக்கு அதன் முடிவு எங்கே பாதகமாக அமைந்து விடுமோ என்று அஞ்சி வரி விதிக்காமல் இருக்கலாம். வளரக் கூடிய வருமானங்கள் எல்லாம் மத்திய அரசுக்குச் சென்று கொண்டிருக்கிறது. வளர முடியாது குறையக் கூடிய வரிகள்தான் நம்மிடம் இருக்கின்றன. ஒரு நண்பர் குறிப்பிட்டதுபோல் மத்திய அரசிடம் வாதாடி சூப்பர் டாக்ஸ் போன்றவற்றையாவது நாம் இங்கு நிறுத்திக் கொள்ள முன்வர வேண்டும். மூன்றாவது திட்டம் விரைவில் செயல்பட்டு வரும்போது திட்டங்களை நிறைவேற்ற அதிகப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக பஸ் ரூட்கள் எல்லாம் தேசீயமயமாக்கப்படவேண்டும். சினிமா தியேட்டர்கள் எல்லாம் தேசீயமயமாக்கப் படவேண்டும். அது தற்சமயம் சாத்தியம் இல்லையென்றால் தற்சமயம் இருக்கும் பஸ் ரூட்களுக்கு உச்சவரம்பு வைத்து புது ரூட்களை பகிரங்க ஏலத்தில் விட்டு அதன் வருவாயை அரசாங்கம் பெற முயற்சிக்க வேண்டும்.

இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லக்கூடியவர்கள் விவசாயிகள். "நீர் உயர வரப்புயரும், வரப்புயர குடி உயரும் குடி உயர கோன் உயரும்" என்று சொல்வார்கள். ஆனால் இங்கு நீரும் உயரவில்லை, அதனால் வரப்பும் உயரவில்லை, அதனால் மக்கள் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இம்மாதிரி வாழ்க்கைத்தரம் உயராத காரணத்தினால் துண்டு விழக்கூடிய ஒரு பட்ஜெட்டை போட வேண்டிய நிலையில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய விவசாயிகள் பல அல்லல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக விவசாயிகளுக்கு வேண்டியது, இரட்டை மாட்டு வண்டி. அதற்கு வேண்டிய கட்டு, அச்சு முதலியவை தேவைக்குத் தகுந்தாற்போல் அகப்படுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. இந்த உபகரணங்கள் எல்லாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விநியோகிக்கப்பட வேண்டும். அச்சு, கட்டு வேண்டும், மற்றும் இது போன்ற வண்டிச் சாமான்கள் எல்லாம் எளிதாக கிடைக்கவேண்டும் என்று இந்த மன்றத்தில் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் கூட இப்போது கிடைக்க முடியாத ஒரு நிலைதான் இருந்துகொண்டு இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. விவசாயிகளுடைய நிலைமையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு அவர்களுக்கு உற்பத்தி செலவு ஏராளமாக பெருகிக்கொண்டேயிருக்கிறது. தேர்தல் காலத்தில் மட்டும் ரூபாய்க்கு மூன்று படி அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னவர்கள் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள் என்று சில அருமை நண்பர்கள் இங்கு பேசினார்கள். முக்கியமாக அரிசியின் விலை குறைய வேண்டும் என்றால் அதற்கான பல திட்டங்களை போட வேண்டும். இன்றைக்கு நெல் விலை இறங்கிவிட்டது என்பதை பலரும் எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு பொதுவாக வேண்டிய எல்லா பொருட்களும் எளிதாக கிடைக்கும் படியாகவும் உற்பத்திச் செலவைக் குறைக்கவும் செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இன்றைக்கு கரும்புக்கு நல்ல விலை கிடைக்கிறது. ஆகவே சிலர் இதை நன்றாகத் தெரிந்து கொண்டு கரும்பு விவசாயம் செய்கிறார்கள். பொதுவாக எந்த விளை பொருட்களை உற்பத்தி செய்தால் லாபகரமாக இருக்கும் என்பதை சாதாரண விவசாயிகளால் யூகிக்க முடியவில்லை. ஆகவே எல்லா தான்யங்களுக்கும் குறிப்பிட்ட விலையை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். அதல்லாமல் மழை காரணமாகவும், பருவ மழை காரணமாகவும், சில நேரங்களில் பயிர்கள் எல்லாம் சேதமடைகின்றன. இதை தவிர்க்கின்ற முறையில் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் செய்து கொள்வதற்கான வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எருக்குழிகளை போடுவதற்காக ஊக்கம் காட்டப்பட்டு வருகிறது என்றும், ஒவ்வொரு எருக் குழிக்கும் ஆறு ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது என்றும், பஞ்சாயத்து யூனியன் இதில் கவனம் செலுத்தி வருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் மக்கள் இதில் அதிகமான அளவில் ஊக்கம் காட்டுவதில்லை. இந்த நிலைமையில் அதிகாரிகள் கொடுக்கின்ற

புள்ளி விவரங்களை மட்டும் வைத்துக்கொண்டு அரசாங்கம் இதை உண்மை என்று நம்பி காலந்தள்ளி விடக்கூடாது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு எருக்குழிகள் அதிகமாக பெருகியிருப்பதின் காரணமாக நமது உற்பத்தி வளம் அதிகமாக பெருகும் என்று எதிர்பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எருக்குழிகள் என்று சொல்லப்படுகின்றவைகளில் பாதிக் குழிகளைத் தோண்டிப்பார்த்தால் மண் தான் மூடிவிட்டிருக்கும். இந்த நிலையில்தான் புள்ளிவிவரங்களை அனுப்புகிறார்கள். இதன் காரணமாக புள்ளிவிவரமும் தவறிவிடுகிறது. இந்தப் புள்ளி விவரங்களின்படி தான் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தியில் சுயதேவை பூர்த்தியாகிவிடும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெறும் காலத்தில் கூட, பர்மாவிலிருந்து 1½ லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இந்த நிலைமையில் தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கும் எருக்குழி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு இத்தனை டன் உணவு அதிகமாக உற்பத்தியாகும் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் தப்பானது என்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி யாரும் வருத்தப்பட மாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த எருக்குழி விஷயமாக, நான் பஞ்சாயத்து சேர்மனாக இருக்கின்ற காரணத்தால் எனக்கு இதைப்பற்றி நன்றாகத் தெரியும். ஆணையாளர்கள் தாங்கள் குறிப்பிட்ட இலக்குகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் கிராம சேவக்குகளை துரத்துகிறார்கள். கிராம சேவக்குகள் கிராமத்திலுள்ள மக்களை அணுகுகிறார்கள். அப்படி மக்கள் யாரும் முன் வரவில்லை என்றால், அந்தந்த ஊராட்சி மன்ற தலைவர்களிடமும் மற்ற அங்கத்தினர்களிடமும் போய் நீங்களாவது ஆளுக்கொரு குழி வெட்டிக்கொள்ளுங்கள், ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை எப்படியாவது செலவு செய்து இலக்கை காண்பிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். இந்த முறையில்தான் எருக்குழிகள் அமைக்கப்படுகின்றன. இதை வைத்துக்கொண்டு புள்ளி விவரம் எடுப்பது சரியாக இராது. இதே முறையில்தான் கிராமத் தொண்டர் படை அமைக்கப்பட்டிருப்பதும். கிராமத் தொண்டர் படை அமைக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் நிச்சயமாக இன்னின்னார்தான் கிராமத் தொண்டர் படையிலுள்ளவர்கள் என்பது தெரியாது. ஏதாவது ஒரு கிராமத்தில் போய் கிராமத் தொண்டர் படை லிஸ்டில் இருக்கும் ஒருவரைப் பார்த்து, நீங்கள் கிராமத் தொண்டர் படையில் ஒரு மெம்பரா என்று கேட்டால், ஐயையோ, நான் எதிலும் மெம்பர் இல்லையே என்று சொல்லி ஓடிப்போய் விடுவார்கள். அதிகாரிகளின் உத்தரவுகளுக்கிணங்கி, கிராம சேவக்குகள், அங்குள்ள ஆசிரியர்களை பிடித்துக்கொண்டு, வோட்டர் லிஸ்டையும் வைத்துக்கொண்டு, அதிலுள்ள கந்தசாமி, முத்துசாமி, காமராஜர் என்று யார் யாரையெல்லாமோ சேர்த்து கிராமத் தொண்டர் படை என்று லிஸ்ட் தயார் செய்துவிடுகிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் இங்கே நம்முடைய அமைச்சர்கள் பதிலும் சொல்லுகிறார்கள். இங்கே

ஒரு கேள்வியை கேட்கின்ற முறையில் "கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டில் எத்தனைபேர்கள் கிராமத் தொண்டர் படையில் இருக்கிறார்கள்" என்று ஒரு கேள்வியைக் கேட்டால், அதற்கு அமைச்சர் அவர்கள் உடனே எந்தவிதமான தடுமாறலும் இல்லாமல் 373 யூனியன்களின் புள்ளி விவரம் சர்க்காருக்கு கிடைத்திருக்கிறது என்று சொல்லிவிடுவார்கள். இம்மாதிரி சொல்லுகின்ற புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு இவர்களுக்கு மேலே இருக்கின்ற இந்திய முதலமைச்சர் நேரு அவர்களும் இதை நம்பி கிராமத் தொண்டர் படைக்கு நன்றாக உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது, இது மிகவும் போற்றிப் பாராட்டப்படக்கூடியதொன்றாகும் என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் எடுக்கின்ற புள்ளிவிவரங்கள் சரியானதல்ல. இதை நான் குறையாக குறிப்பிடவில்லை. இதிலுள்ள அடிப்படைத் தவறை போக்குவதற்கு வழிவகை செய்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புள்ளிவிவரம் என்று சொன்னவுடன் எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஓர் அமைச்சர் இருந்தார். அவரைப் பிடிக்காத சிலர் அவரைப்பற்றி அரசரிடம் சென்று இந்த அமைச்சர் சரியானபடி புள்ளிவிவரங்கள் சேகரிப்பதில்லை, ஆகவே இவரை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்றார்கள். அமைச்சரிடம் நமது ஊரில் எத்தனை காக்காய்கள் இருக்கின்றன என்று கேட்டுப்பாருங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்படி அமைச்சரை அழைத்து, அரசன் நமது ஊரில் எத்தனை காக்காய்கள் இருக்கின்றன என்று கேட்டார். அதற்கு அமைச்சர் உடனே எந்தவிதமான பதட்டமும் இல்லாமல் 3,800 காக்காய்கள் இருக்கின்றன என்று சொன்னார். உடனே அரசன், 'இதைவிட குறைவாகயிருந்தால் உம்மை என்ன செய்வது? என்று கேட்டதற்கு உடனே அமைச்சர், குறைந்திருந்தால் நம் ஊர் காக்காய்கள் அடுத்த ஊருக்கு விருந்துக்கு போயிருக்கும் என்றார். அதிகமாக இருந்தால் உம்மை என்னசெய்வது? என்று கேட்டதற்கு, அடுத்த ஊரிலிருக்கும் காக்காய்கள் நம் ஊருக்கு விருந்துக்கு வந்திருக்கும் என்று சொன்னாராம். அதே போன்று நமது நாட்டிலுள்ள கிராம கர்ணங்கள் உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே புள்ளிவிவரங்களைக் கொடுக்கிறார்கள். கரம்பிற்கு கம்பு என்றும், கம்புக்கு கரும்பு என்றும் எழுதி புள்ளி விவரங்களைக் கொடுக்கிறார்கள். இவ்விதம் கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரங்களை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வாங்கி தாசில்தாரிடம் கொடுக்கிறார், அவர் உதவி கலெக்டர் அவர்களிடம் கொடுக்கிறார், உதவி கலெக்டர் மாவட்ட கலெக்டர் அவர்களிடம் கொடுக்கிறார். மாவட்ட கலெக்டர் அவர்கள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டுதான் நமது அமைச்சர்கள் இங்கே புள்ளிவிவரம் கொடுக்கிறார்கள். நான் அமைச்சர்கள் தவறு செய்வதாக கூறவில்லை. ஆனால் புள்ளிவிவரங்கள் எடுக்கின்ற முறை தவறானதாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொல்லுகின்றேன். அதை தயவு செய்து திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கத்தை 22 காரட்டிற்கு வாங்கலாம் என்றும் அதை 14 காரட்டிற்கு விற்கலாம் என்று சட்டம் வந்திருப்பதாகவும், இதற்கான உத்தரவுகள் போடப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் 14 காரட் தங்கத்தை யார் இப்போது வாங்குவதற்கு முன் வருவார்கள்? அதோடு முக்கியமாக தங்கத்தினுடைய விலையை நிர்ணயிக்கவேண்டும். மேல் நாடுகளில் எல்லாம் அதிகமான அளவில் 14 காரட் தங்கத்தை உபயோகப்படுத்துகிறார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வைரம் முதலியவைகளை வைத்து நகைகள் செய்வது 14 காரட் தங்கத்தில் முடியாது என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, 14 காரட் தங்கத்தில் நகைகள் செய்து அணிந்தால் நிச்சயமாக புண் வந்துவிடும் என்றும், 14 காரட் தங்கத்தில் தாலி முதலியவைகள் செய்தால் புண்தான் ஏற்படும் என்றும் சொல்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் காது நகைகள் போடுகிறார்கள் என்றால், அவர்கள் ஸ்பிரிங் கம்மல்களைத்தான் போடுகிறார்கள். நம் நாட்டு தாய்மார்களைப் போல் காதைக்குத்தி, மூக்கைக்குத்தி நகைகளை போடுவதில்லை. ஆகவே இம்மாதிரி குறைந்த காரட் நகைகளைப் போட்டால் நிச்சயமாக புண் தான் ஏற்படும். இதன் காரணமாக தாய்மார்கள்தான் துன்பத்திற்கு ஆளாவார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். மேல் நாட்டைப் பொறுத்தவரையில் அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதி வேறு, நம்நாட்டிலுள்ள சீதோஷ்ண ஸ்திதி வேறு. ஆகவே ஆளும் கட்சியில் இருக்கின்ற தாய்மார்கள் நிச்சயமாக 14 காரட் என்றிருப்பதை 18 காரட் என்றாவது உயர்த்தி, அதன் மூலம் ஏழை தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருஷத்திய வரவு-செலவு திட்டத்தின் மீது சில தினங்களாக சட்டசபையில் பல நண்பர்கள் பேசிய விவரங்களை எல்லாம் கேட்டதற்குப் பின்னால் நான் பேசவேண்டுமென்று கருதினேன். கடந்த மூன்று தேர்தலிலும் நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சட்டமன்ற அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். அன்பர்கள் சிலர் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக ஒன்றுமே செய்யப்படவில்லையென்றும் நாடு சுதந்திரம் அடைந்தும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்றும் பேசக்கூடிய பேச்சுக்களை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன். இதையெல்லாம் திடலடியாக ஒவ்வொரு வருடத்திலும் வேறு முகாமிலிருந்து பேசக்கூடியவர்கள் பேசுவார்கள். அது இப்போது மாறி வேறொரு முகாமிலிருந்து பேச முற்பட்டிருப்பதைக் காண்கிறோம். யார் என்ன பேசினாலும் அவற்றை . . .

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்கிறபடி, இவர்கள் சொல்லக்கூடியதையெல்லாம் மனதிற் கொண்டு யோசித்தேன். அவை உண்மையாக இருந்தால், நாம் இத்தனை காலமும் காங்கிரஸ் மகாசபையின் அங்கத்தினராக இருந்து வேலை செய்திருக்கவேண்டிய தேவையில்லையே, பேசாமல் கிராமத்திலேயே இருந்திருக்கலாமே என்றுதான் யோசித்துக்கொண்டேயிருந்தேன். இந்த

விதமான பேச்சுக்கள் எல்லாம் என் சிந்தனையை எழுப்பி விட்டது. சில விஷயங்களை சில அன்பர்கள் மிரட்டலோடு பேசினார்கள். இம்மாதிரி மிரட்டல்களுக்கெல்லாம் பயம் அடைபவர்கள் யார் என்பதெல்லாம் என் சிந்தனையில் வேலை செய்ய தொடங்கி விட்டது. விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விவசாயம் இல்லை, பொதுமக்களுடைய கஷ்டங்கள் எல்லாம் அதிகரித்துக்கொண்டுதான் வந்திருக்கின்றன என்றெல்லாம் சிலர் சொன்னார்கள். இப்போது முன்பு இருந்ததை விட மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்கிற வித்தியாசத்தை, சாதாரணமாக கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளுக்குச் சென்று இந்தக்குறைகளை சொல்லுகின்ற அன்பர்கள் பார்க்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னால் கிராமப் பள்ளிகளுக்கு வந்த குழந்தைகள்—சிறுவர் சிறுமியர்—எப்படி இருந்தார்கள், இப்போது பள்ளிகளுக்கு வரக்கூடிய சிறுவர் சிறுமியர் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். நான் இன்று சவால் விடுகிறேன், அங்கே சொறி சிறங்கு பிடித்த மாணவனோ அல்லது மாணவியோ ஒருவரைக் கூடப் பார்க்க முடியாது என்று சொல்லுகிறேன். இதிலிருந்து எப்படி வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்று பார்க்கவேண்டும். இப்போது பேசுகிறவர்கள் கடந்த காலத்திலே இருந்த நிலைமையை அவர்கள் கண்களினால் பார்த்து அறியாதவர்கள். அதனால் ஏற்பட்ட குறையாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன். அல்லது அதை கற்பனை செய்து பார்த்துக்கொள்வதற்கான வகையில் மனதை சரியாக வைத்துக் கொள்ளவேண்டும். பாரதியார்—

கலகத்தரக்கர் பலர் எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் எங்கள் முத்துமாரி
பல கற்றும் பல கேட்டும் எங்கள் முத்துமாரி
பலனொன்றுமில்லையடி எங்கள் முத்துமாரி

என்று சொன்னார். அந்த மாதிரியாக மனதில் இவைகளைச் சரிவர அறிந்து கொள்ள மனநிலையை சரிவர வைத்துக்கொண்டு இதைப்பற்றி சிந்தித்து நியாயமான முடிவைச் சொல்லுவதானால் உண்மையான நிலையைச் சொல்ல முடியும். பள்ளிகளில் மட்டுமல்லாமல், கிராமங்களில் விவசாயிகள் எப்படி இருக்கிறார்கள்? விவசாயம் கட்டுப்படியாகாது என்று சொன்னார்கள். ஒரு விவசாயினுடைய நிலைமையைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். பெயரையும் கூடச் சொல்லுகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் மல்லி பிர்க்காவில் ஒரு கிராமத்தில் அய்யாவு என்ற கிராமத் தலையாரி ஒரு ஏக்கர் 41 செண்ட் நிலம் வைத்திருந்தார்—மானவாரி நிலம். மின்சாரம் வந்தது. கிணறு வெட்டினார், சர்க்கார் மான்யம் வாங்கி பம்ப்-செட் வைத்து, தொடர்ந்து நிலங்களை அரசாங்கத்தினிடத்திலிருந்து குறைந்த விலைக்கு வாங்கினார். இப்போது 8 ஏக்கரில் நெல் விளைகிறது. கம்போடியா பருத்தி, நீண்ட இழைப் பருத்தி, இரண்டு மகசூல் எடுக்கிறார். இப்படி பல உதாரணங்களைச் சொல்ல முடியும். இன்றைய தினம் அந்தப் பகுதியில் 1,700 கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இதில் அதிக நிலமுள்ளவர்கள் 200 அல்லது 300 பேர்கள் தான் கிணறு வெட்டிக்கொண்டார்கள். இப்போது 2 ஏக்கர் 3 ஏக்கர்

வைத்திருக்கக்கூடிய விவசாயிகள்தான் இதில் பெரும் பயனை அடைந்திருக்கிறார்கள். சில இடங்களில் மட்டும் முன்பு பள்ளிகள் இருந்தன. நான் இருக்கும் கிராமத்தில் 4 வகுப்புகள் உள்ள நிரந்தரமான பள்ளி கூட அக்காலத்தில் இல்லை. நான் 4 வகுப்புகளை 4 கிராமத்தில் படித்த நிலைபோக இன்றைக்கு அதே கிராமத்தின் நிலையை ஒப்பிட்டுக் காண்பிக்க முடியும். என்னுடன் வருபவர்களின் மனக்கண்களைத் திறக்கப் பல ஆதாரங்களைக் காட்ட முடியும். இன்றைக்கு கிராமங்கள் எப்படி புத்துயிர் பெற்று விளங்குகின்றன? நான் எவ்வாறு பயின்றவன்? அதே கிராமத்தில், என்னுடைய சொந்த கிராமத்தில், சுதந்திரம் வந்த ஆரம்பத்தில் மிடில் ஸ்கூல் வந்து, இப்போது ஹைஸ்கூல் ஏற்பட்டிருக்கிறது—அதில் 290 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளியில் படித்த ஒருவர் கெமிகல் என்ஜினீயராக அஸ்ஸாமில் இருக்கிறார். இரண்டு என்ஜினீயர்கள் வேறு இடங்களில் உத்தியோகங்களில் இருக்கிறார்கள். பி.காம்., பி.டி. படித்தவர்கள் இருக்கிறார்கள், பி.ஏ., பி.டி. படித்தவர்கள் இருக்கிறார்கள், பி.ஏ. படித்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள், மற்ற கல்லூரிப் படிப்பைப் படித்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு எத்தனையோ பேர்கள் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தனை பேரும் அரசாங்க உதவி பெற்ற கல்லூரிகளில் படித்தவர்கள். அத்தனை பேர்களும் சொந்த நிலம் இல்லாதவர்கள். ஒரு மாடு வைத்துக்கொண்டு ஊராரிடத்தில் குத்தகைக்கு நிலத்தை எடுத்து சாகுபடி செய்யக்கூடிய ஒருவரின் பையன் மூன்று 'டி' வாங்கி என்ஜினீயரிங் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறான். அவர்களுடைய பெயரையெல்லாம் சொல்ல முடியும். அத்தனை விவரமும் கொடுக்க முடியும். அந்த தாலுகாவைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் சொல்ல முடியும். வேறு இடங்களிலும் உள்ள நிலைமைகளைப் பற்றி எனது அனுபவத்தைச் சொல்ல முடியும். 1947-ம் ஆண்டுக்கு முன்னால் ராமநாதபுரம் ஜில்லாவில் 7 ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளிகள் இருந்தன. இன்று 102 ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. எவ்வாறு இவைகளெல்லாம் வந்தன? அவைகள் வந்துள்ள இடத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால் ஸ்ரீவில்லிபுத்தூரில் 21 பள்ளிகளில் 4 பள்ளிகள் நகரத்தில் இருக்கின்றன, பாக்கி 17 உயர்நிலைப்பள்ளிகள் கிராமங்களில் ஏற்பட்டுள்ளன. படிக்கும் வசதி யாருக்குக் கிடைத்திருக்கிறது? ஏழை மக்களுக்கு வசதியா இல்லையா? அன்று பிள்ளைகள் பள்ளிக்கு வந்த காட்சி என்ன? இன்று அந்த மக்களுடைய பிள்ளைகள் வரக்கூடிய நிலைமை என்ன? ட்ரௌசர், சட்டை இல்லாது எந்த ஏழை மாணவ மாணவியாவது பள்ளிக்கு வருகிறானா? இந்தக்காட்சியை அங்கு சரிவரப் பார்க்க வேண்டும். கிராமங்களிலுள்ள குடும்பங்களின் நிலைமை என்ன என்பதை அங்குள்ள குழந்தைகளைப் பார்த்தால் அதிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

அது மாத்திரமல்லாமல் கிராமங்களில் எத்தனையோ வசதிகள் புதிதாக வந்திருக்கின்றன. 200, 300 ஜனத்தொகையுள்ள ஊருக்கெல்லாம் பள்ளிகள். ஒவ்வொரு பள்ளிக்கும் 8,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள். நான் கூட கிராமத்தார்கள் பரம்பரை

பரம்பரையாக கொடுத்திருக்கிற வரியைக் கணக்கிட்டுச் சொல்வதுண்டு. 40 ரூபாய் தீர்வை செலுத்தினீர்கள், 8,000 ரூபாய்க்கு பள்ளிக்கூடம் வந்திருக்கிறது, இரண்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு 180 ரூபாய் மாதந்தோறும் சம்பளம் கொடுக்கப்படுகிறது, ஆண்டுதோறும் 2,400 ரூபாய் செலவிடப்படுகிறது, குழந்தைகள் சரிவர பள்ளிக்குச் செல்லவில்லையானால் இப்படிச் செலவிட்ட பணம் என்ன ஆவது என்று சொல்லி மக்கள் நலனுக்காக அந்த பள்ளி ஏற்பட்ட வரலாற்றையும், அரசாங்கத்திற்கு ஏற்படுகிற செலவையும் அவர்களுடைய மனதிற்கு ஞாபகப்படுத்தி, பிள்ளைகளை ஒழுங்காக அனுப்பவேண்டும் என்று சொல்லுவதுண்டு, இப்படி பல ஆதாரங்கள் எடுத்துக்காட்டாகச் சொல்ல முடியும்.

விவசாயத் துறையில் திட்டமிட்டு விவசாயம் செய்யவேண்டுமென்று முயன்று வருகிறோம். பணத்தை செலவிட்டால் மட்டும் போதாது. அடித் தளத்திலிருந்து உபயோககரமான வகையில் அதை உபயோகப்படுத்திக்கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலில் சேர்மனாக இருக்கிறவர்கள் குறைபட்டுக்கொண்டதைப் பார்த்தேன். (கனம் திரு. கு. காமராஜ்: அவர் ஊரில் அப்படியிருக்கிறது என்று சொன்னார், அவ்வளவு தான்) தவறாக இருக்கிறது என்று சொன்னால் இவர்கள் என்ன செய்கிறார்கள்? கிராம சேவக்குகள் கணக்குகளைச் சரிவர அனுப்பவில்லை என்று சொன்னால், பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு என்ன வேலை? ஜனநாயக நாட்டிலே அவர்களே எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். ரிப்போர்ட் தப்பு என்று தோன்றினால் அந்த ரிப்போர்ட் தப்பு என்று அந்த சேர்மன் ரிப்போர்ட் அனுப்பியிருக்கவேண்டும். அவர்களுடைய கடமை என்ன? கீழே உள்ளவர்கள், கீழே வேலை செய்கிறவர்கள், தவறான புள்ளிவிவரத்தை எடுத்து அனுப்புவார்களானால், அதைப் பற்றி எழுதுவதற்குத் தனக்கு தைரியம் வரவில்லையா என்று கேட்கிறேன். அதைப்பற்றி சட்ட மன்றத்தில் சொல்லி என்ன புண்ணியம்? ஜனநாயகத்தில் அதிகாரத்தைப் பரவலாக்கி மக்களிடத்தில் கொடுக்கவேண்டுமென்று பஞ்சாயத்துச் சட்டம் அமைந்திருக்கிறது. இவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் கவலைப்படவேண்டிய நிலை இருக்கிறது. இன்றைக்கு எவ்வாறு விவசாயம் நடைபெற்று வருகிறது? கிராம சகாயக்குகள் என்று பொறுக்கு விதை தயாரிக்க பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். அப்படி பொறுக்கி எடுக்கும்போது அந்த விவசாயிகளிடத்தில் பொறுக்கு விதையைக் கொடுத்தால் அவருக்கு இருக்கும் வசதியைக் கொண்டு தயாரிக்க முடியுமா என்று நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொண்டு, அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களும் உத்தியோகப் பற்றற்றவர்களும்தான் அக்கறை செலுத்தவேண்டும். அரசாங்கம் இதற்கு எப்படி பொறுப்பாக இருக்கமுடியும்? ஒவ்வொரு நிலையிலும் காரியம் சரிவர நடைபெற்று வருகிறதா என்று நாம் எவ்வளவு தூரம் கவனித்துக்கொண்டு வருகிறோமோ, அதற்குத் தகுந்தபடி விவசாயம் நடைபெற முடியும். மான்யம் வாங்குவதிலோ அல்லது உரத்தை வாங்குவதிலோ அல்லது கடன் தொகை வாங்குவதிலோ மட்டும்

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [5th March 1963

கவனத்தைச் செலுத்தாமல் அடித்தளத்திலிருந்து சரிவர காரியங்களைச் செய்யவேண்டும். திட்டமிட்டப்படி அங்கு வேலை செய்யக் கூடிய வேலையாட்கள் செய்யவேண்டும். அதோடு மேற்பார்வையும் சரிவர இருக்கவேண்டும். கிராம சகாயக்குகள் பொறுக்கு விதைகளைத் தயாரிக்கும் முறையைப் பற்றி நேற்று முன்தினம் கூடச் சொல்லப்பட்டது. அரசாங்கம் பணத்தைச் செலவு செய்து விதைப் பண்ணைகளை நிறுவுவதைவிட, இந்த வேலையை விவசாயியிடம் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, விதைகளைத் தயாரிக்க பலர் முன்வரவில்லை. பஞ்சாயத்து யூனியன் சேர்மனும், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களும் கிராம சகாயக்குகளைப் பொறுக்கி எடுக்க உதவி செய்யவில்லையென்றால் வேறு இடங்களிலிருந்து வந்து உத்தியோகத்தை வகிப்பவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்க முடியும்? எந்த விவசாயி சரிவர விவசாயம் செய்யத் தெரிந்தவர், முறையாக இந்த வேலையைச் செய்வாரா, பொறுக்கு விதையை எந்த நிலத்தில் போட்டுத் தயாரிப்பார், நிலம் இருக்கிறதா, பண்பட்ட நிலமா, கோரை வளர்ந்திருக்கிறதா, அருகு மூடியிருக்கிறதா என்று யார் கவனிப்பது? ஸ்தலத்தில் இருக்கும் பிரதிநிதிகள் நாமே சரிவரப் பார்த்து இந்த வேலை சரிவர நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். அடித்தளத்தில் நேராக கவனமாகச் செய்யவேண்டிய வேலைகளைப் புறக்கணித்து, வாசா கைங்கர்யம் செய்யும் முறையில், அங்கு இருக்கிறவர் ஒருவரிடம் சொல்லி, அந்த ஒருவர் இன்னொருவரிடம் சொல்லி, அவர் ஒரு சட்டமன்ற அங்கத்தினரிடம் சொல்லி, அந்த அங்கத்தினர் சட்ட மன்றத்தில் சொல்லிவிட்டால் கடமை முடிந்துவிடுமா? இப்படி யாரும் செய்யலாம். அரசாங்கத்தில் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர, நல்ல திட்டங்கள் வகுத்துக் கொடுக்க முடியும், நிதி மூலங்கள் கொடுக்க முடியும், சாதனங்கள் கொடுக்க முடியும், ஆனால் இதையெல்லாம் நிறைவேற்றுவது யார்? அங்கு உள்ளவர்கள் விவசாயிகளுடைய ஒத்துழைப்போடு, அவர்களோடு தொடர்புகொண்டு, அவர்கள் எடுத்துக்கொண்ட பணியை செயலாக்கி நன்றாகச் செய்யும்படியான உணர்ச்சிகளைத் திருப்பிவிடவேண்டும். வெறும் பணம்மட்டும் இந்தக் காரியங்களைச் செய்யாது.

கடன் பளு அதிகமாகியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சுதந்திரம் ஏற்பட்டதற்கு பின்னால் தலைமுறை தலைமுறையாக அடமானக் கடன் பத்திரங்கள், புதுப்பிக்கப்பட்டு வந்த பத்திரங்கள் எத்தனை இருக்கின்றன என்று கணக்கிட்டுச் சொல்ல முடியுமா என்று சவால் விடுகிறேன். அவைகளெல்லாம் புதியதாக ஏற்பட்ட கடனாக இருக்கலாம். எந்தத் துறைக்கு வாங்கப்பட்ட கடன்கள் அவை? நிலத்தை சீர்திருத்தம் செய்வதற்கும், தங்களுடைய சொத்து மதிப்பை அதிகரித்துக்கொள்வதற்கும், தங்களுக்கு அதிகமான வருமானம் சம்பாதித்துக் கொள்வதற்கும் வாங்கிய புதிய கடன்கள் அவை. ஒரு விவசாயி வைத்துக் கொண்டிருக்கிற தற்காலீகக் காலக் கடன்கள் அவை. அவ்வப்பொழுது விவசாயத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் கடன் வாங்குகிறார்கள், கொடுக்கிறார்கள். முன்பெல்லாம் நகை அடமானக் கடைகள் வைத்திருந்தார்கள். எங்கள் பகுதியிலே நகையை ஈடாக வைத்து கடன் கொடுக்கக்கூடிய கடைகளே இப்பொழுது கிடையாது. 15 ஆயிரம் ஜனத்தொகை உள்ள கிராமத்தில் இன்றையதினம் 4 லட்ச ரூபாய் லேவாதேவி செய்யப்படுகிறது. விவசாயிகள் குறுகிய காலக் கடன் வாங்கிக்கொள்கிறார்கள். 12 மாதங்களுக்குள்ளாகவே திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள். தவணை தவறுவதே கிடையாது. தவணை பாக்கி கிடையாது. இதெல்லாம் எந்த வகையில் செய்யப்படுகிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். பல வகையிலே சமுதாயத்தில் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நல்ல வகையிலே உருவாகிக் கொண்டு வருகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும்.

5th March 1963] [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு]

1921-22-ல் 9 ரூபாய்க்கு நான் ஒரு சைகிள் வாங்கினேன். 43,000 ஜனத்தொகை கொண்ட அந்த பிர்க்காவில் அப்பொழுது வேறு சைகிளே கிடையாது. அந்த சைகிள்கூட பிரேம் உடைந்துபோனது. கயிறை வைத்துக் கட்டியிருந்தேன். அந்த சைகிளை எடுத்துக்கொண்டு கிராமத்திற்குச் சென்றால், நூற்றுக் கணக்கான பேர்கள் என்னைச் சுற்றிக்கொண்டு அந்த சைகிளைப் பார்ப்பார்கள். நிலைமை அப்பொழுது அப்படி இருந்தது. இன்று என்னுடைய கிராமத்தில் மட்டும் 42 சைகிள்கள் கொண்ட 3 வாடகை சைகிள் கடைகள் இருக்கின்றன. அதைத் தவிர 28 சொந்த சைகிள்கள் இருக்கின்றன. ஆக மொத்தம் அங்கே இப்பொழுது 70 சைகிள்கள் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் என்ன வேலை? இரவு 10 மணி வரைக்கும் அத்தனை சைகிள்களுக்கும் வேலை இருக்கின்றன. இதனால் எவ்வளவு வேலை இருக்கிறது, மக்களுடைய முயற்சி எப்படியிருக்கிறது என்பது தெரிய வருகிறது. எந்த கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் வாடகை சைகிள் இல்லாத கிராமமே கிடையாது. எல்லாக் கிராமங்களிலும் வாடகை சைகிள்கள் இருக்கின்றன. சொந்த சைகிள்களின் எண்ணிக்கையும் பெருகி இருக்கிறது. அவ்வளவு சைகிள்களுக்கும் அவசியம் இருக்கிறது. கிராமங்களில் தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் பல துறைகளிலும் முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கிராமத்திலுள்ளவர்கள் இப்பொழுது எப்படி உடை அணிகிறார்கள் என்று பார்க்கவேண்டும். அவர்கள் தலையில் ஈர், பேன் இருக்கிறதா என்று கேட்கிறேன். பள்ளிக் குழந்தைகள் எப்படி வருகிறார்கள்? அவர்களுக்கு ஈர்வலி என்ற கருவி ஒன்று இருக்கிறது என்பது யாருக்காவது தெரியுமா? கிராமப் பள்ளிக் குழந்தைகளை கேட்டுப் பாருங்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது. அவர்கள் நல்ல சுத்தமான ஆடைகளை அணிகிறார்கள். தலையை சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதற்கான வசதிகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன.

கிராமத்திலுள்ளவர்களின் உடல் ஆரோக்கியம் இப்பொழுது எப்படியிருக்கிறது? இன்றைக்கு எலும்பும் தோலுமாக காட்சி அளிக்கும் உருவங்களை நாம் அதிகமாகப் பார்க்க முடியாது. எல்லோருடைய உடம்பும் மொழு, மொழு என்றுதான் இருக்கிறது.

நம்மிடையே ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டாலும்கூட 1947-க்குப் பின்னால் நாம் ஒரு சுற்று பெருத்துத்தான் இருக்கிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. நான் வேண்டுமென்று இப்படிச் சொல்லவில்லை.

கனம் சபாநாயகர்: 'வெய்ட்' குறைப்பதற்கு மருந்து கொடுக்கிறார்கள். (சிரிப்பு.)

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: எப்படி மக்களின் சராசரி வயது 27 ஆக இருந்தது 42 ஆக உயர்ந்திருக்கிறது? இது எப்படி உயர்ந்தது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். எப்படி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, அவர்களுடைய வாழ்வு உயர்ந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு அம்சத்திலும் பார்க்க வேண்டும். சிறிய அன்றாட பிரச்னைகளிலெல்லாம் அவர்களுடைய வாழ்க்கை உயர்ந்திருக்கிறது. ஒவ்வொரு அம்சத்திலும் மக்களுடைய நிலைமை எப்படி உயர்ந்திருக்கிறது? கடந்த காலத்தில் நிலைமை எப்படி இருந்தது? இப்பொழுது பிரத்தியட்ச நிலைமை எப்படி இருக்கிறது? என்பதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். நாட்டிலே ஒவ்வொரு துறையிலும் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கக்கூடிய நிலைமையை நாம் இதைக்கொண்டு பார்க்க முடியும்.

இன்னும் ஓரிரண்டு விஷயங்களைச் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு மைனர் இறிகேஷனை ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏக்கருக்கு ரூபாய் 2 அல்லது 2½ என்று மராமத்துச் செலவு கணக்கிடப்படுகிறது. அது மிகவும் பொருத்தமில்லாத தொகை, போதாத தொகை. இதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும். முன்பு சில சநதர்ப்பங்களிலும்கூட இது பற்றி எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு இடத்தில் கடந்த காலத்தில் சிறிய ஏரிகளை மராமத்து செய்வதற்கு எவ்வளவு செலவாயிற்று என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதை மாகாணம் முழுவதற்கும் அமுல் செய்வதற்கான வகையிலே அந்தத் தொகையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தொகை மிகவும் குறைவு, போதாது. இதை மறுபடியும் பரிசீலனை செய்து ஒவ்வொரு ஜில்லாவுக்கும், ஒவ்வொரு தாலுகாவுக்கும் இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாக சிறிய ஏரிகளுக்கு மராமத்து செய்வதற்கு எவ்வளவு தொகை செலவாகியிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, சராசரி ஏக்கருக்கு எவ்வளவு செலவாயிற்று என்பதை புனராலோசனை செய்து, ஜில்லா வாரியாக இந்தத் தொகை சரிவர அமைக்கவேண்டும், அம்மாதிரி அமைத்து நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதோடுகூட சிறிய நீர்ப்பாசனத்தைப் பற்றி சொல்லும் பொழுது, சில நடுத்தர திட்டங்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் நான் முன்பே சில சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில் பாசன வசதி இல்லை. 1947-ம் வருஷத்திற்குப் பிறகு, ஒவ்வொரு ஜில்லாவிலும் பாசன வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ராமநாதபுரம் ஜில்லாவில் பாசன வசதி இல்லை

என்று பொதுவாக சொல்லப்படுகிறது. ராமநாதபுரம் கீழ்ப் பகுதிகளுக்கு வைகை அணைக்கட்டுமூலம் சற்று சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முன்பு தண்ணீர் ஆற்று மணலில் விரயம் ஆகிக் கொண்டிருந்தது. அவ்வாறு விரயமாக போகக்கூடிய தண்ணீரை இப்பொழுது நேரடியாக கால்வாய்மூலம் ஏரிகளுக்குக் கொண்டு செல்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், அங்கு மேலும் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்படவேண்டும். கீழ் ராமநாதபுரத்தைப் பற்றி நான் பேசும்பொழுது வேறு விதமாக நினைக்கவேண்டாம். நான் மேல் ராமநாதபுரத்தைச் சேர்ந்தவன். மலைப் பக்கத்தில் எங்கள் ஊர் இருக்கிறது. 1950-ம் வருஷத்திலேயே எங்கள் பகுதிக்கு மின்சாரம் வந்துவிட்டது. 15 நிமிஷத்திற்குத்தான் தண்ணீர் இருக்கிறது கிணற்றில். அதற்கு மேல் தண்ணீர் இல்லை. மின்சார வசதி கிடைத்து என்ன செய்கிறது? கிணற்றில் தண்ணீர் இல்லை, மழை இல்லை. தாலுகா முழுவதிலும் மின்சாரம் பரவி இருக்கிறது, தாலுகாவிலே 3 பகுதிகளிலே தண்ணீர் இருக்கிறது. மூன்று பகுதிகளிலே கிணற்றில் தண்ணீர் இல்லை. விவசாயம் இந்த வருஷம் 3 பிர்க்காவில் சாவியாகப் போய்விட்டது. ஒன்றைச் சரி செய்தால் இன்னொரு பக்கத்தில் இந்தவிதமான சோதனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே சின்னையன் கோட்டை, கிழவன் கோட்டை என்ற இரண்டு சிறிய அணைகளைக் கட்டினால், மகசூல் சாவி இல்லாமல் பாதுகாக்க வசதி ஏற்படும். சில இடங்களில் ஏக்கருக்கு இரண்டு போகம் விளையக்கூடிய வசதியும் ஏற்படும். இந்தத் திட்டங்களை நேரடியாகப் பார்த்து செய்வதற்கு கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஒரு வேளை மேற்கு ராமநாதபுரத்தை கடைசியில் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டு வைத்திருக்கிறார்களோ என்னவோ? அதை சீக்கிரம் நேரில் வந்து பார்வையிட்டு பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்டவரையில் எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றும், கூட்டுறவு ஸ்தாபனத்தை தங்களுடைய சொந்த ஸ்தாபனமாக சிலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்றும்கூட சிலர் சொன்னார்கள். சொந்த ஸ்தாபனம் என்று பாராட்டக்கூடிய அவ்வளவு சிரத்தையோடு அவர்கள் அதில் ஈடுபட்டால், அம்மாதிரி எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், அதை நான் வரவேற்கிறேன். கூட்டுறவுத் துறையிலே அதிக அங்கத்தினர்களை சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு முயலும்பொழுதுகூட பொது மக்கள் அதில் அதிக சிரத்தையாக இல்லை. பொது மக்களை நாம் ஊக்குவித்து அவர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அதிகமாகச் சேரும்படியான ஏற்பாடுகளைச் சட்டமன்ற அங்கத்தினர்கள் செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திருமதி எ. எஸ். பொன்னம்மாள்:** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு

வரப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற நெருக்கடியான நேரத்தில் புதிய வரிகள் எதுவும் இல்லாமல் கொண்டு வரப்பட்ட இந்த வரவு-செலவு திட்டத்தை சில அங்கத்தினர்கள் முழுக்க முழுக்க எதிர்ப்பதாகக்கூட கூறினார்கள். தேசீய நெருக்கடி நேரத்தில் நாம் நம்முடைய சுதந்திரத்தை எப்படி பாதுகாத்துக் கொள்ளவேண்டும், தனி மனிதனுடைய சுதந்திரத்தையும், மானத்தையும் எப்படி பாது காத்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையிலேதான் இங்கு இருக்கிற சர்வ கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் ஒன்று சேர்ந்து இயங்கவேண்டுமே தவிர, அதைவிட்டு விட்டு ஏதோ உப தேர்தல் வருகிறது, ஒவ்வொருவருக்கும் தன்னுடைய கட்சிதான் பெரியது என்ற நோக்கத்தோடு பேசக்கூடாது. இது எப்படி இருக்கிறது என்றால் வீடு பற்றி எரிகிறபோது, சுருட்டுக்கு நெருப்பு கேட்பது போல் இருக்கிறது. நாம் மக்கள் மத்தியிலே சென்று வரி கொஞ்சம் கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். மத்திய சர்க்கார் மக்கள்மீது ஓரளவுக்கு வரியை சுமத்தியிருந்தாலும்கூட, மக்களை பக்குவப்படுத்தி நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நாட்டின் பாதுகாப்பிற்கு இந்த வரியை மக்கள் கொடுக்க வேண்டும் என்ற அளவில் பேசவேண்டுமே தவிர, அதை விட்டு விட்டு நினைத்தபடியெல்லாம் பேசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல.

10–30 a.m. அடுத்தபடியாக இந்த சபையிலே பேசும்பொழுது பல உறுப்பினர்கள் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால் எத்தனை பெண்கள் தங்க நகைகளை அணிந்திருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேதான் இருக்கிறார்கள். பிரபுக்கள், பணக்காரர்கள் வேண்டுமானால் தங்கத்தைப் பூட்டி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆண்டுதோறும் 30 அல்லது 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது என்று நினைத்துத்தான் இந்தத் தங்கக் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல, ஒரு பணக்காரப் பெண் இவ்வளவு நகைகளைத்தான் வைத்துக்கொள்ளலாமென்று கட்டுப்பாடு செய்திருந்தாலும்கூட நன்றாக இருக்கும். 14 காரட் தங்க நகைகள் உற்பத்தி செய்யலாம் என்று சொல்லும் பொழுது கிராமப் புறங்களிலே உள்ள பெண்கள் குறைந்த விலைக்கு கிடைக்குமே, பரவாயில்லையென்று நினைக்கிறார்கள். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி நகைகளை அடகு வைத்து ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 கடன் வாங்கக்கூடிய நிலைமை இருந்தது. நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது, அந்த மாதிரி 14 காரட் தங்க நகைகளையும் அடகு வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். என் போன்றவர்களுக்கு அது ஓரளவுக்கு திருப்தியாக இருந்தது. சமயத்திலே நகைகளை அடகு வைக்க வேண்டித்தான் இருக்கிறது. ஆனால் இந்தத் தங்கக் கட்டுப்பாடு ஏழை மக்களை ஒரு விதத்திலும் பாதிக்காது என்றே நினைக்கிறேன். வேலை இழந்த பொற்கொல்லர்

களுக்கு அரசாங்கம் வேலை வாய்ப்பு செய்து கொடுக்குமென்று அரசாங்கத்தினிடத்திலே மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது சில பத்திரிகைகளிலே ஒருவிதமாக எழுதி வருகிறார்கள். ஏன் நம்முடைய வரிப்பணத்தைப் போட்டு நாம் ராணுவத்திற்கு செலவு செய்யவேண்டும், வரியே இல்லாமல் ராணுவ தளவாடங்களை அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து நாம் ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாதென்று கல்கி போன்ற பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. ஒரு பணக்கார நாட்டிலிருந்து நாம் ராணுவ தளவாடங்களை இனாமாக வாங்கிக் கொண்டால் அந்த நாடுகள் சமயம் பார்த்து நம்மை அடிமையாக்கிக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அந்த முறையில்தான் என் போன்றவர்கள் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த நெருக்கடியான சமயத்தில் நாம் அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

விவசாய உற்பத்தியைப் பொறுத்தவரையில், இன்னும் 17 லட்சம் டன் அதிக உற்பத்தியை எய்துவதற்கான முயற்சிகளிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த பட்ஜெட் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. முதலிலே இந்த பட்ஜெட் விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஒரு அங்கத்தினர்கூட, மக்களிடமிருந்து எவ்வளவோ வரிப்பணத்தை வாங்குகிறோமே, அந்தப் பணமெல்லாம் எங்கே போயிற்று என்று கேட்டார். சென்ற 10 அல்லது 12 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட பாசனத் திட்டங்களின் மூலமாக **P.W.D.** மூலமாக மட்டும் கிட்டத்தட்ட 7 லட்சம் ஏக்கர் நிலம் பாசனத்திற்கு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் கூறி வருகின்ற "இன்பத் திராவிடம்" என்று சொல்லக் கூடிய நான்கு மாகாணங்களிலும் ஒன்றாகச் சேர்ந்து இருந்த காலத்தில் 1,500-க்கும் குறைவான பள்ளிகள் இருந்தன. ஆனால் இன்றைக்கு நம் மாகாணத்திலே மட்டும் 28,000-க்கும் மேற்பட்ட பள்ளிகளை நாம் நிறுவியிருக்கிறோம். எல்லாச் சிறுவர்களும் கல்வியறிவு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நமது அமைச்சரவை கல்விக்காக அதிகப் பணத்தை ஒதுக்கிக்கொண்டு வருகிறது. தொழில் துறையில் நாம் நல்ல முன்னேற்றத்தை அடைந்து, சென்ற 10 அல்லது 12 ஆண்டுகளுக்குள்ளாக 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்படி செய்திருக்கிறோம். பல ஆயிரக்கணக்கான மைல்கள் நீளத்திற்கு ரோடுகளைப் போட்டிருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, இந்த வரிப்பணமெல்லாம் எங்கே போய்விட்டது என்று சொல்லுவதானது, சிறு பிள்ளைகள் விளையாட்டுத்தனமாக பேசிக்கொள்வதுபோன்று இருக்கிறது. பொறுப்புள்ள அங்கத்தினர்கள் இப்படிப்பேசுவது நல்லதல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உணவு உற்பத்தியை நாம் பெருக்கியாக வேண்டும். அதற்காக மைனர் இரிகேஷன் வேலைகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்

[திருமதி எ. எஸ். பொன்னம்மாள்] [5th March 1963

களிடத்தில் நாம் ஒப்படைத்திருக்கிறோம். அது வரவேற்கத் தக்கது. சிறிய பாசன வசதிகளைப் பராமரிப்பதற்காக ரூ. 27 லட்சம் மான்யமாக ஒதுக்கப்பட்டிருப்பது போற்றத் தகுந்த ஒரு நல்ல காரியமாகும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் இந்த ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் வேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு ஓவர்சியரைப் போட்டால் இன்னும் நன்றாக இருக்கும். சென்ற சில தினங்களுக்கு முன் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது நமது விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு விவசாயினுடைய சராசரி வருமானம் ரூ. 375 என்று சொன்னார்கள். அந்த வருமானத்தை நாம் அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். இப்பொழுது பம்பு செட்டுகளுக்காக நாம் கடன் கொடுக்கிறோம். அந்தக் கடனை 10 ஆண்டுகளிலே திருப்பிக் கொடுப்பதற்கு வழிவகை செய்தால் நலமாக இருக்கும். பூச்சி மருந்திற்காக 50 சத விகிதம் இனாமாகக்கொடுப்பது வரவேற்கத்தக்கது. அதோடு மாத்திரமல்லாமல், பாக்கி 50 சத விகிதத்தையும் கடனாகக் கொடுத்து மகசூல் வந்த பிறகு வசூலிக்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்தினால் நல்லது. ரூ. 5 அல்லது ரூ. 10 என்றாலும் கூட ஒரு சாதாரண ஏழை விவசாயி அந்தத் தொகையை கடன் வாங்க முடியாத நிலைமையில் பூச்சி மருந்துகளை காலாகாலத்தில் வாங்கி அடிக்க முடியவில்லை. எனக்கு முன் பேசிய ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டது போல இப்பொழுது நெல் விலை கொஞ்சம் குறைந்திருக்கிறது. அப்படி நெல் விலை குறையும்பொழுது மற்ற சாமான்களின் விலையையும் குறைத்துக்கொடுத்தால்தான் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தலின் பொழுது ரூபாய்க்கு 3 படி, 5 படி அரிசி தருவோம் என்றெல்லாம் பறைசாற்றினர். இப்பொழுது அவர்களே, நெல் விலை குறைந்து விட்டது, ஆகவே அதை அதிகமாக்குங்கள் என்று பேசுகிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், குழந்தையை தொட்டிலிலே போட்டு ஒருபுறம் தூங்குவதற்காக அதை ஆட்டிவிட்டு, மறுபுறம் அதை எழுப்புவதற்காக கிள்ளி விடுவது போல இருக்கிறது. ஆகவே உணவுப் பொருள்களின் விலை குறையும்பொழுது மற்ற சாமான்களின் விலையையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், நெருப்பினால் சில சமயங்களில் பாதிக்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மாத்திரமாவது இந்த கிராப் இன்ஷூரன்ஸ், கால் நடை இன்ஷூரன்ஸ் திட்டங்களைக் கொண்டு வந்தால் நலமாய் இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய பாங்குகளின் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம். மனுப் போட்டு, அந்த மனு விவசாய பாங்குக்குப் போய் சாங்ஷன் ஆகி வருவதற்கு கிட்டத்தட்ட 6 மாதம் ஆகிறது. மேலும் அந்தக் கடன் தொகையை 6 மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இந்தக் கடன் தொகையை 3 ஆண்டுகளுக்குள் வசூலிக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்தால் மிகவும் நல்லது. கனம் விவசாய அமைச்சர் அவர்களும், கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

5th March 1963] [திருமதி எ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்தபடியாக, பழத்தோட்டங்களுக்காக கடன் கொடுக்கிற பொழுது, திராட்சைப் பழத்தோட்டங்களுக்கு மாத்திரம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : பழத்தோட்டங்களுக்கெல்லாம் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. ஹைதராபாத்தில் விளைகிற அனாஷா என்ற ஒரு வெரைட்டிக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 600 விதம் கடன் கொடுக்கப்படுகிறது.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள் : இந்த விளக்கத்திற்காக நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாங்கள் மனுப் போட்டபொழுது, திராட்சை பழத்தோட்டத்திற்குக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். திராட்சைத் தோட்டங்களுக்கு பாதி மான்யமாகக் கொடுத்து பூச்சி மருந்துகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுகாதாரத்திற்காக ரூ. 5 கோடியே 6 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். இவ்வளவு பணத்தை ஒதுக்கி, அதிகப்படியான டாக்டர்களை நியமித்து பல நோய்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை செய்திருந்தும், அரசாங்க ஆஸ்பத்திரிகளிலே பெரிய பெரிய ஆப்ரேஷன்களை செய்திருந்தும், பொது மக்களிடத்திலே கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு போனால் நன்றாக கவனிக்கமாட்டார்கள் என்ற எண்ணம் நிலவி வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், அரசாங்க ஆஸ்பத்திரியில் நல்ல முறையில் நோயாளிகளை கவனித்து சிகிச்சை செய்து அனுப்பியிருந்தும், அதனை நாம் சரியான முறையில் விளம்பரப்படுத்துவதில்லை. ஆகவே பெரிய ஆப்பரேஷன்கள் செய்வதை பத்திரிகைகளின் மூலமாக விளம்பரம் செய்தால், பொதுமக்கள் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சேர்வதற்கு வழிவகை ஏற்படும்.

கடைசியாக, ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன மக்களைப் பொறுத்தவரையில் வீட்டு மனைப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்காவிட்டால் கூட பரவாயில்லை. ஒரு ஆண்டு காலத்தில் எல்லா ஹரிஜன மக்களுக்கும் 3 சென்ட் நிலம் வாங்கிக் கொடுப்பதை இன்னும் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலக்கோட்டையில் ஒரு தொழில்பேட்டையை அமைக்க வேண்டும் என்று கனம் தொழில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மதுரையில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்காக நிலங்கள் வேண்டுமானால், பத்து பதினைந்து ஏக்கர்கள்கூட இனாமாக நாங்கள் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* *திரு. சா. ராமசாமி:* மாமன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்ததின் காரணமாக, அதன்மீது இப்பொழுது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலர் பலவாறாக தங்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விவசாய உற்பத்தியைப் பொறுத்த வரையில் நாட்டில் உபரித் தானியம் அதிக அளவு கிட்டியிருக்கிறது என்பதற்கான புள்ளி விவரம் மிகத் தெளிவாக இதிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் அதிகமான அளவில் இந்த ஆண்டில் எதிர்பார்ப்பதற்கான நிலைமை இருக்கிறதென்பதும் இந்த அறிக்கையில் தெரிகிறது.

சென்ற ஆண்டு கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியதுபோல, இந்த ஆண்டும் ஒரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது இந்த கூட்டத்திலும் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்கள் சரியான முறையில் அமையவில்லை என்று நான் இங்கே வலியுறுத்திக் கூறுகின்றேன். காரணம், ஒவ்வொரு கிராமத்திலும்,—அது பஞ்சாயத்தாக இருந்தாலும், ரெவினியூ கிராமமாக இருந்தாலும்—எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது, எந்த எந்த நிலம் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தை அந்தந்தக் கிராமத்திலிருக்கும் கர்ணம் மிகத் தெளிவுபட எடுத்துக் காட்டிவருகிறார். கிராம அதிகாரிகள் கொடுக்கும் கணக்கை வைத்துக்கொண்டு புள்ளி விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. மாதத்தில் 25-ந் தேதி கிராமக் கர்ணம் சாகுபடிக் கணக்கையும் மற்றக் கணக்குகளையும் தாலுக்கா ஆபீசுக்கு அனுப்பவேண்டியிருக்கிறது. 25-ந் தேதியிலிருந்து 30-ந் தேதி வரை வட்ட மாவட்ட அளவில் கணக்குகள் எடுக்கப்பட்டு, 30-ந் தேதியோடு முடிந்து அடுத்த மாதம் 1-ந் தேதிக்குள் மாநில ரீதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. மாநில வாரியாக, இத்தனை ஏக்கர்களில் கரும்பு, இத்தனை ஏக்கர்களில் நெல் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களை இந்த விதமாகத் தயாரித்து விடுகிறார்கள். இப்படிக் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் சரியான முறையில் உருவாக்கப்படவில்லை என்பதை நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

கிராம அதிகாரிகள் பகுதி நேர ஊழியர்கள் என்ற நிலையிலேயே வைக்கப்பட்டிருப்பதால் இம்மாதிரி நிலைமை ஏற்படுகிறது. அவர்களை முழு நேர ஊழியர்களாக்குவதா, அல்லது பகுதி நேர ஊழியர்களாகவே வைத்திருப்பதா என்பது இன்னும் தெளிவாக்கப்படவில்லை. கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் பகுதி நேர ஊதியத்திற்கும் குறைவாக இருந்தாலும், அவர்களிடம் வாங்கப்படும் வேலை முழு நேர ஊழியர்களிடம் வாங்கப்படும் அளவுக்கு அமைந்திருக்கிறது. இம்மாதிரி அதிகமாக அவர்களிடம் வேலை வாங்கப்படுவதால், அவர்கள் ஊரில் இருந்துகொண்டே, இல்லை என்று சொல்கிற நிலையை உண்டாக்குகிறார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதால், அவர்களுக்குச் சில புள்ளி விவரங்கள் வேண்டும்போது, கிராம அதிகாரிகளிடம் போகவேண்டியாயுள்ளது. ரெவின்யூ இலா

காவிலும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் போன்றவர்களுக்கும் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றும் விஸ்தரிப்பு அதிகாரிகளும் அவர்களிடம் செல்ல வேண்டியிருக்கிறது. நிலத்தைப் பார்க்கவேண்டும் கிணற்றைப் பார்க்கவேண்டும் என்று எதற்கெடுத்தாலும், கிராம அதிகாரிகள் உடன் வரவேண்டுமென்று பல இலாகா அதிகாரிகளும் எதிர்பார்த்து கிராம அதிகாரிகளிடமிருந்து முழு நேரத்தையும் வாங்கிவிடுகிறார்கள். கிராமத்தில் இருந்தும்கூட, 'கிராமத்தில் இல்லை' என்று வீட்டிலே சொல்லிவிட்டு, வீட்டின் பின்புறம் இருக்கவேண்டிய நிலையில் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த நிலையில் 20-ம் தேதிக்குப் பிறகு சாகுபடிக் கணக்கைப் பார்க்கிறார்கள். 25-ந் தேதி சாகுபடிக் கணக்கை அனுப்புகிறார்கள். அது மட்டுமல்ல. அவர்கள் 'கல் ப்ராக்ரஸ்' ரிபோர்ட் அனுப்பவேண்டியிருக்கிறது. அனுபோக ப்ராக்ரஸ் ரிபோர்ட்டையும் அவர்கள் அனுப்ப வேண்டும். இதற்கெல்லாம் சிறிது நாட்கள் தேவைப்படுகின்றன. மழைக் கணக்கையும் அவர்கள் எடுக்கிறார்கள். இப்படி நாட்டிலே கொடுக்கப்படும் புள்ளி விவரங்கள் அனைத்தும் ஆரம்பத்தில் கிராம அதிகாரிகளால் தயாரிக்கப்படுகின்றன. அவர்கள் இந்தக் கணக்குகளைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது, தாசில்தார் ஒரு வேலைக்கும், விஸ்தரிப்பு அதிகாரி இன்னொரு வேலைக்கும், தாலூகா சர்வேயர் இன்னொரு வேலைக்கும் கிராம அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கொண்டிருப்பதாலும், ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு அதிகாரி வரும் காரணத்தாலும், 24-ந் தேதி வரையில் அந்தக் கணக்குகளைப் பார்க்காமலிருந்துவிட்டு, 25-ந் தேதி அவசியம் கணக்கை அனுப்ப வேண்டும் என்ற காரணத்தால், ஏதோ உத்தேசமாக 'சோளம் இத்தனை ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது, வரகு இத்தனை ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது' என்று, சென்ற ஆண்டில் கொடுத்த கணக்கை வைத்துக்கொண்டு, மதிப்பீட்டின் பேரில் கணக்கை அனுப்பிவிடுகிறார்கள். நீர்க்கூலி போடவேண்டிய கேஸ்களை மட்டும் ஓரளவு சுத்தமாகப் பார்க்கிறார்கள். தாசில்தாரோ, கலெக்டரோ, மற்ற அதிகாரிகளோ சைக்கிளிலோ, பஸ்ஸிலோ காரிலோ வந்து பார்த்துவிடக்கூடும் என்ற காரணத்தால் பாதையோரங்களில் இருக்கும் நிலங்களை ஒழுங்காகப் பார்த்துவிடுகிறார்கள். இப்படிக் கிராம அதிகாரிகள் கொடுக்கும் சரியில்லாத புள்ளி விரவங்களை வைத்துக்கொண்டு, 'நாட்டில் சாகுபடியைப் பெருக்கியிருக்கிறோம்' என்று கூறிவிடுகிறார்கள்.

2-ம் நம்பர் அடங்கலில் அறுவடை 'காலம்' இருக்கிறது. இப்படிப் பல கணக்குப் புத்தகங்கள் இருக்கின்றன. இதிலிருந்தெல்லாம் கணக்குகள் எடுத்து எழுத வேண்டியிருக்கும். கணக்குகள் எழுத சிரமப்பட்டுக்கொண்டு, நிலத்தில் குறைவாக விளைந்திருந்தாலும், அறுவடை 'காலத்தில்' அதிக மதிப்பீட்டை போட்டுவிடுகிறார்கள். இது உழவர்களுக்குத் தெரியாது. மற்ற அதிகாரிகளுக்கும் தெரியாது. ஒரு பிர்க்காவில் 20, 25 ரெவினியூ வட்டங்கள் இருக்கும்போது, அவைகளை ரெவினியூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ நேரடியாகப் பார்த்துவிட முடியாது. ஆகவே,

கிராமச் சாவடியில் உட்கார்ந்துகொண்டோ, கிராம அதிகாரியின் வீட்டிலிருந்துகொண்டோ கிராம அதிகாரிகள் எழுதிய கணக்கில் கையெழுத்து போட்டுவிடுகிறார்கள். இந்த நிலைமையைச் சரி செய்ய வேண்டும். அவர்கள் கொடுக்கும் அறுவடை மதிப்பீட்டை வைத்துக்கொண்டு, 'இந்த தாலூக்காவில், இந்த மாவட்டத்தில் இத்தனை ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது, இவ்வளவு அறுவடை செய்யப்பட்டது' என்ற புள்ளி விவரத்தை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். ஆகவே, இந்தப் புள்ளி விவரங்களெல்லாம் சரியான முறையில் அமையவேண்டும், சரியான முறையில் அமைவதற்கான நிலைமையை உருவாக்கவேண்டுமென்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இவற்றையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம்—1947-ம் ஆண்டிலிருந்து 1956-ம் ஆண்டு வரையில் நான் கிராமக் கர்ணமாகப் பணியாற்றியிருக்கும் அனுபவத்தை வைத்துக்கொண்டு சொல்கிறேன்.

கிராம அதிகாரிகள் என்பவர்கள், அன்னியர் ஆட்சிக் காலத்தில் என்ன சட்ட விதிகளுக்கு உட்பட்டு எந்தெந்த கணக்குகளை தயாரித்து வந்தார்களோ, அதே முறையை இன்று வரையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குகள் காரணமாக, அவர்கள் இன்ன காரியங்களுக்கு இன்ன கணக்கைத் தயார் செய்ய வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு நாம் மிகவும் சலுகைகளைச் செய்துகொடுத்து, அதிக உணவு உற்பத்தியைச் செய்ய நினைத்துக்கொண்டிருக்கிறோம் என்றாலும், கிராமத்திலுள்ள சிறிய விவசாயிகளுக்குக் கடன் பெறும் சலுகைகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. 1924-இல் செய்யப்பட்ட செட்டில்மென்டிற்குப் பிறகு மறு செட்டில்மென்ட் இன்று வரை செய்யாததன் காரணமாக, சிறிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, சிறிய விவசாயிகளும் கூட்டுப்பட்டாவில் இருக்கும் அத்தனை விவசாயிகளும் நல்ல பலன் அடையவேண்டும் என்ற வகையில் மறுபடியும் சர்வே செய்து, அவர்களுக்குத் தனிப்பட்டா கிடைக்க வேண்டிய நிலைமையை உருவாக்கினால்தான் கிராமத்தில் சிறிய விவசாயிகள் பலன் அடையமுடியும் என்பதை உணர்ந்து அதை அரசாங்கம் உடனடியாக உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஏ. சிதம்பரநாத நாடார்: கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக எந்த சர்க்காரும் வரி போடாமல் நாட்டு நிர்வாகத்தை நடத்த முடியாது என்பது எல்லோரும் கண்ட உண்மை. (திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்—குறுக்கீடு.) பழைய கதை அல்ல. புதுக் கதையும் அல்ல. நாளைக்கு கனம் அங்கத்தினர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் தங்கள் ஊர்ப் புறத்தில் ஒரு ரோடு போடவேண்டும். ஒரு குளம் வெட்ட

வேண்டும். ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்றால், அவர் இதற்கெல்லாம் சர்க்காரைத்தான் நாட வேண்டும். சர்க்காரை நாடும்போது, சர்க்காரிடம் பணம் இருந்தால்தான் காரியங்களெல்லாம் கைகூடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பொறுப்பு உணர்ச்சியுள்ள நாமெல்லோரும் நல்லமுறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இந்த மன்றத்தில் ஒரு முக்கியமான பெரிய தத்துவம் ஆகும். இந்த நிலையில், இந்த ஆண்டு பட்ஜெட்டில் வரிப் பளு இல்லாத காரணத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி நண்பர்கள் அழகாகச் சொல்கிறார்கள். சாதாரணமாக சொல்வதுபோல் வேண்டாத மருமகள் என்றால் கால் பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம் என்று சொல்வார்கள். மருமகள் மிக அழகாக இருப்பாள். பார்ப்பதற்கும் நன்றாக இருப்பாள். அது மாமியாருக்குப் பிடிக்காது. பிடிக்காத காரணத்தால், 'மருமகள் கால் நீளம், கை நீளம், கண்ணில் குற்றம்' என்ற முறையில் சொல்லிக்கொண்டிருப்பாள். அதைப்போல, எதிர்க் கட்சி அன்பர்கள் பேசியதைக் கேட்க ஒரு பக்கத்தில் ஆச்சரியமும், இன்னொரு பக்கத்தில் சங்கடமும் கூட ஏற்படுகிறது. பாசனத் திட்டங்களைப் பற்றிப் பேசும்போது எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கழிந்த மன்னர் ஆட்சிக் காலத்தில் 3 அணைக் கட்டுகள் போடப்பட்டன. ஒன்று கோதையாறு, இரண்டு முக்கூடல், மூன்று பெருஞ்சாணி அணைக்கட்டு. இவை தவிர இன்னும் நான்கு அணைக்கட்டுகள் கட்டலாம். சிற்றாறு நம். 1, 2, மாம்பழத்துறையாறு, பொய்கையாறு ஆகிய இந்த நான்கு அணைக்கட்டுகளையும் கட்டிக் கொடுத்தால் கன்னியாகுமரி மாவட்டம் தண்ணீர் காடாகிவிடும். இப்போது எங்கள் ஊரில் பழையாறு என்ற ஒரு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மழை காலங்களில் ஒரே வெள்ளம் தான். இந்த மழைத்தண்ணீரை ஆங்காங்கே சிறுசிறு அணைகள் கட்டித் தேக்கி நாங்குநேரிக்கு அனுப்பிக் கொடுத்தால், அங்கேயுள்ள குளங்கள் எல்லாம் நிரம்புவதோடுகூட, பாசன வசதி பெருகுவதற்கு வழியேற்படும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இன்னொன்று. சம்பக்குளம், அனந்தன்குளம், சின்னக்குளம் ஆகியவற்றை மூலாதாரமாகக் கொண்டு எங்களிடத்தில் சம்பக்குளம் சானல் ஓடிக்கொண்டிருக்கிறது. மேல் சொன்ன சானலுக்கு மூலாதாரமே இந்த குளங்கள்தான். பக்கத்தில் உள்ள நில உடைமையாளர்கள் மெதுவாக இந்த குளங்களை ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறார்கள். இதைப்பற்றிச் சர்க்காருக்கு எத்தனையோ தடவை மனுக்கள் அனுப்பியும் கூட இன்னும் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்படியே இக்காரியம் சென்றுகொண்டு போகுமானால் இன்னும் ஐந்தாண்டுகளில் அந்த மேல் சொன்ன சம்பக்குளம் சானலே அழிந்துவிடும், இருந்த இடமே இருக்காது போய்விடும் என்று இந்தச் சபையில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே இந்த ஆக்கிரமிப்பாளர்களை அவசர நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்த சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு. ஏ. சிதம்பரநாத நாடார்] [5th March 1963

அடுத்தபடியாக, மின்சார திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை. நமது சென்னை ராஜ்யத்தில் மின்சார அபிவிருத்தித் திட்டங்கள் நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆயினும் என்னுடைய மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் ஒரு சில கிராமங்களுக்கு இன்னும் மின்சார வசதி கிடைக்கவில்லை. அந்தக் கிராமங்களுக்கு இந்தச் சர்க்கார் நிச்சயமாக மின்சார வசதி செய்துகொடுப்பார்கள் என்ற பரிபூரணமாக நம்பிக்கை எனக்கு உண்டு. அதைத் துரிதப்படுத்தவேண்டும் என்பதற்காக ஞாபகப் படுத்துகிறேன். அதோடுகூட இப்போது கோதையாறு என்ற மின்சார திட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் முடிவடையப் போவதாகக் கேள்விப் படுகிறேன். எங்கள் மாவட்டம் அல்ல, திருநெல்வேலி மாவட்டம் அல்ல, மதுரை, ராமநாதபுரம், மைசூர் போன்ற இடங்களுக்கு எல்லாம் மின்சார உதவி அளிக்க முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் உள்ள நெடுஞ்சாலைகளை எல்லாம் எடுத்துக் கொண்டால் இலை போடாமல் சாப்பிடக்கூடிய அளவில் மிக அழகாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். ஆனால் ஒரு வருத்தம். எங்கள் மாவட்டத்தில் இப்படி முதல்தர நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட வேண்டிய ரோடுகள் பல இருக்கின்றன. கழிந்த ஆண்டு பட்ஜெட்டிலும், இந்த ஆண்டு பட்ஜெட்டிலும்கூட இடம் பெற்ற ரோடுகள் வேலைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால் நில ஆர்ஜித காரியங்கள் தடைபடுவதன் காரணமாக அந்த ரோடுகளை இன்னும் எடுக்க முடியவில்லை. அந்த ரோடு வேலைகளை நிறுத்தி வைத்தால் என்ன என்று மேன்மைதங்கிய அமைச்சர் அவர்கள் யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. உண்மையில் இப்படிப்பட்ட நெடுஞ்சாலை வேலைகள் எந்தக் காரணத்தினால் தடைபடுமானாலும், இது நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாக இருக்கும் என்று மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நில ஆர்ஜித தகராறினால், எங்கள் மாவட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அத்தனை ரோட்டையும் நடைமுறையில் கொண்டுவர கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் கல்வி வளர்ச்சியைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. எங்கள் மாவட்டம் கல்வியில் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருகிறது. உயர்நிலைப் பள்ளிகளில் பீஸ் இல்லாமல் படிக்க வசதி செய்து கொடுத்திருப்பதோடு சிறு பிராயத்தில் இருந்தே குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க வசதி செய்யப்படும் என்று சொல்லியிருப்பதைக் கேட்டு உண்மையில் பெருமைப்படுகின்றேன். தந்தை என்ற காரணத்திற்காக, உண்மையில் இப்படிப்பட்ட ஒரு செய்கையினால்தான் கல்வி நல்லமுறையில் வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க ஆசிரியர்களுக்கு அக்காலத்தில் தமிழில் லோயர் கிரேடு, ஹையர் கிரேடு என்று முன்பு பயிற்சி கொடுத்தார்கள். இவர்கள் மூன்றும் பாரம் வரை,

5th March 1963] *[திரு. ஏ. சிதம்பரநாத நாடார்]*

இங்கிலீஷ் நீங்கலாக எல்லா பாடம் சொல்லிக்கொடுக்கலாம். எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் 40 மார்க் குறைவாக ஆங்கிலத்தில் வாங்கியவர்கள்கூட, தமிழ் நீங்கலாக எல்லா வகுப்புக்களுக்கும் சொல்லி கொடுக்கலாம். இது பழைய திருவிதாங்கூர்-கொச்சி ராஜ்ய ஏற்பாடு. ஆனால் அப்பகுதி இந்த ராஜ்யத்தோடு இணைந்த பிற்பாடு அப்போது இருந்த ஏற்பாடுகள் அத்தனையும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் State Re-organisation Act -க்கு எதிரானது அன்று. தந்த உறுதிமொழியை கனம் அமைச்சர் அவர்கள் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆயினும் அந்த உறுதிமொழியை கவனிக்காமல் இன்றைக்கு மேல் சொன்ன இந்த ஆசிரியர்களை லோயர் கிரேடு ஆசிரியர்களாக பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதை அறிந்து மனம் வருந்துகிறேன். இது சரியல்ல. மேலும் S.S.L.C. படித்து தேறி ஆங்கிலத்தில் 40 மார்க்குக்கு குறைவாக எடுத்திருந்தால், அவர்களை லோயர் கிரேடு ஆசிரியர்களாக பாடம் சொல்லி கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்களாம். கன்னியாகுமரி மாவட்டம் சென்னையோடு இணைவதற்கு முன்னர் இந்நிலையில் S.S.L.C. ஆசிரியர்கள் தேறியவர்கள் இருந்தால் அவர்களை தரம் தாழ்த்தக் கூடாது. அந்த உறுதிமொழிப்படியே காரியங்கள் நடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த தேசத்திலே ரயில்வே இல்லாத பகுதி கிடையாது. எங்கள் மாவட்டம் ஒன்றுமட்டும் நீங்கலாக. நானும் ஆண்டுதோறும் சபையில் சொல்லிக்கொண்டு வருகிறேன். "தட்டினால் திறக்கப்படும், கேட்டால் கொடுக்கப்படும்" என்று பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது. நானும் தட்டுகிறேன், கேட்கிறேன், எங்களுக்கு ரயில்வே கொடுக்கப்படவேண்டும். அது உங்களால் இயலாது என்று எனக்குத் தெரியும். ஆயினும் இந்த மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொற்கொல்லர்களைப் பற்றி ஒரு வார்த்தை. என் தொகுதியில் தங்கக் கட்டுப்பாடு வந்ததின் காரணமாக பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொற்கொல்லர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர். அவர்களது நிலையை கண்டாலே பயமாக இருக்கிறது. கண்டிப்பாக உடனடியாக வேலையிழந்த அவர்களுக்கு இந்தச் சர்க்கார் நிவாரணம் அளித்தாக வேண்டும். நிவாரணம் அளிப்பதற்கு சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆயினும் உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாள் என் பையன் தன் தாயினுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது அவளது தாலியை அறுத்துவிட்டான். அதை உடனடியாகச் செப்பனிடவேண்டியிருக்கிறது. ஆயினும் வெளியே எடுத்துப் போனால் இது 22 காரட், 14 காரட்டுக்கு மேல் பண்ணக்கூடாது என்று, பிடித்துக்கொண்டுபோய்விடுவார்களோ என்று பயம். அதுவும் மாவட்ட உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்கும், எனக்கும்

[திரு. ஏ. சிதம்பரநாத நாடார்] [5th March 1963

தற்போதைய நிலையில் அவ்வளவு பொருத்தமில்லை. நம்முடைய வாழ்வில் "தாலி" என்பது ஒரு "மங்கலச் சின்னம்". இந்தத் தாலிக்காவது நமது அரசாங்கம் ஒரு விலக்கு அளிக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரிடத்திலே வற்புறுத்தியாக வேண்டும்.

பஸ்களை தேசியமாக்குவதை நான் வரவேற்கின்றேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொருவிதமாக ஆணைப் பிறப்பித்திருப்பது அவ்வளவு உசிதமல்ல. அண்மையில் நமது மாநில சர்க்கார் 112 மைல்களுக்கு கூடுதலாக இருந்தால்தான் டிரான்ஸ்போர்ட் பஸ்களை விடும் என்றிருந்தது. அதுவும் கன்னியாகுமரி மாவட்டம் விலக்காக, இந்நிலை மாறவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். ஆணைப் பிறப்பித்தால் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே மாதிரியில் இருக்க வேண்டும் என்பது மக்களுடைய ஆசை.

போலீஸ் துறையைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நான் உண்மையாகச் சொல்கிறேன்—உடமைக்கும்,
11.00 a.m. உயிருக்கும், தன்மானத்துக்கும் எங்கள் மாவட்டத்தில் எந்த விதமான பாதுகாப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. கழிந்த காலங்களில் எங்கள் ஜில்லா போலீஸ் அதிகாரிகளைப் பற்றியும், Deputy Superintendent of Police பற்றியும் புகார் மனுக்கள் அனுப்பி இருந்தேன். நான் மேல் சொன்ன உயர்தர ஆபீசர்கள்மீது நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு, மேலதிகாரிகளுக்கும் இதுபற்றி புகார் மனு கொடுத்தேன், என்ற காரணத்திற்காக, அவர்கள் சொல்கிறார்களாம்—'பஞ்சாபில் எம்.எல்.ஏ.-ஐயைக் கைவிலங்கு போட்டு கொண்டுசென்றதுபோல், சிதம்பரநாதனையும் கைவிலங்கு போட்டு தெருவில் இழுத்துச் செல்வோம்' என்று. எங்கள் ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ பொன்னப்ப நாடார் அவர்கள் இதைக்கேட்டு சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரபல அட்வகேட் ஆவார்கள். அங்கே போலீஸ் ஜவான்மீது தனி நபர் வழக்குப் போட்டால் அந்த நாட்டிலே அந்த நபர் வாழ முடியாது, சூப்பரிண்டெண்டெண்ட் ஆஃப் போலீஸோ, உதவி போலீஸ் சூப்பரிண்டோ என்ன செய்தாலும் கேட்பதற்கு ஆள் இல்லை. கழிந்த ஆண்டில் இரண்டு மூன்று கொலைகள் நடந்துவிட்டன. அது பற்றி உண்மை என்னவென்று விசாரிப்பதற்கு அங்குள்ள போலீஸ் மேலதிகாரிகள் முன்வரவில்லை என்று நினைக்கும்போது மனம் புண்படுகின்றது. அதைவிட்டு கொண்டு இருந்தால் எனக்கு இந்த நிலை வந்திருப்பதை கேட்டு நிதியமைச்சர் அவர்கள் ஆச்சரியப்படுவதற்கில்லை. நான் மாணவனாக இருந்த காலத்திலிருந்தே ஜெயில் அனுபவம் பெற்றவன். ஆனால் அடி வாங்கியதில்லை. இப்போது அடி வாங்க வேண்டிய நிலைமைக்கு சர்க்கார் என்னை விடாது என்று நம்புகிறேன். சாதாரணமாக மனிதனாகப் பிறந்தவனுக்குக் கஷ்டங்கள் சந்தோஷங்கள் ஏற்படுவது சகஜம். அந்தக் கஷ்டத்தைப் பற்றிச் சொல்ல உண்மையான நண்பன் கிடைப்பது அரிது. வாழ்க்கையில் சங்கடமும் சந்தோஷமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. 'ஒருவனுக்கு ஏற்பட்ட சங்கடத்தை ஒரு நண்பனிடமோ அல்லது ஒரு புல்லிடமோ அல்லது ஒரு கல்லிடமோ சொல்லி விடவேண்டும்' என்று

5th March 1963] [திரு. ஏ. சிதம்பரநாத நாடார்]

நமசிவாய முதலியார் "பன்னிரு கட்டுரையில்" சொல்லியிருக்கிறார்கள். என் மனத்தில் இருந்த கவலையை எல்லாம் தலைவர் அவர்கள் முன்னிலையில் சொல்லச் சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி. இன்று இருக்கின்ற நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் பிரஜைகளுக்கு மேல் சொன்ன அதிகாரிகளின் கீழிருந்து வாழ முடியாததைக் கண்டு மிக்க வருந்துகின்றேன். எனவே மேல் சொன்ன போலீஸ் அதிகாரிகளின்மேல் நான் கொடுத்த புகார் மனுக்களை எக்ஸ் பிராஞ்சை வைத்தோ அல்லது மதுரை டி.ஐ.ஜி.-யைக் கொண்டோ விசாரித்து நல்லதொரு தீர்ப்புக் கூறக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. ஜயராஜ்: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தேசிய நெருக்கடி நிலைமையில் நிதிநிலை அறிக்கையை எந்த வித வரியும் இல்லாமல் சமர்த்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

பொதுவாக, விவசாயத்தைப் பொறுத்தவரை போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டு மக்கள் நல்லபடி வாழவேண்டுமென்று சொன்னால் விவசாய உற்பத்தி பெருக வேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு விவசாய உற்பத்தி பெருகி இருக்கிறதா என்று பார்த்தால், உற்பத்தி பெருகாததோடு, பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் கூற விரும்புகிறேன். அதோடுகூட இன்று நெல் விலைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத் தஞ்சையில் இருக்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கிருக்கும் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு ஊக்கத்தை அரசாங்கம் கொடுத்தால்தான் அடுத்த ஆண்டாவது விவசாய உற்பத்தி பெருகுமே தவிர, இல்லையென்றால் விவசாய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 17 லட்சம் டன் அளவுக்கு உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்ற குறிக்கோள் இருக்கிறது. தஞ்சை ஜில்லா அதிக உற்பத்தியைக் காட்டினாலொழிய நாம் அந்தக் குறிக்கோளை அடைய முடியாது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு 90 ஆயிரம் டன் உரம் கொடுக்கப் போவதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த உரத்தை விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கொடுக்க வேண்டும். இப்போது உரத்தைக் காலந்தாழ்த்திக் கொடுப்பதன் காரணமாக விவசாயிகளுக்குப் பயன் இல்லாமல் போய்விடுகிறது. ஜூலை மாதம் விவசாயம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங்கள் உழும்போதே போட்டு உழ வேண்டும். அந்தச் சமயத்திலே அந்த உரத்தைக் கொடுக்காமல் மூன்று மாதம் கழித்துக் கொடுத்தால் அதனால் விவசாயிகளுக்குப் பலன் இல்லை. யூரியா போன்ற உரங்களைப் பயிர் வளர்ந்து வரும் காலத்தில் கொடுக்க வேண்டும். கதிர்கள் முற்றி வரும் காலத்தில் அவற்றைக் கொடுத்தால் அதனால் பயன்

இல்லை. இன்று தேசிய வருமானத்தில் பாதி விவசாய வருமானமாகத்தான் இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குப் போதிய வசதிகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். தற்போது, பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விவசாயிகளுக்கு உழவு மாடு வாங்கக் கடன் கொடுக்கப்படுகிறது. வசதி உள்ளவர்களுக்கும் சொத்து உள்ளவர்களுக்கும்தான் அந்தக் கடன் கிடைக்கிறதே தவிர, நிலம் இல்லாதவர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் அந்தக் கடன் கொடுக்கப்படுவதில்லை. இப்போது 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வந்த பிறகு ஒரு ஆள் ஐந்து ஏக்கர் வைத்திருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சாதாரணமாக சாகுபடிதாரர்களாக இருக்கின்றவர்களுக்கு, மிராசுதார் மேல் ஒப்பம் போட்டாலொழிய கடன் கிடைப்பதில்லை. நிலம் இல்லாதவர்களுக்கும் மகசூலை வைத்து லோன் கொடுக்க வேண்டும். எப்படிக் கூட்டுறவு முறையில் விவசாய நிலம் இல்லாதவர்களுக்கும், விவசாயிகளாக இருந்தால் விவசாயக் கடன் வழங்கப்படுகிறதோ அதே முறையில் ஏழை விவசாயிகளும் பயன் பெறும் வகையில் உழவு மாடு வாங்க லோன் கொடுக்கும்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை வளர்ச்சிக்கு அதிகப்பணம் ஒதுக்கியிருக்கிறோம். என்னுடைய தொகுதியில் பேரளம் பிர்க்காவில் ஏராளமான கால்நடைகள் இறந்து விட்டன. நன்னிலம் யூனியனில் கால்நடை ஆஸ்பத்திரி கிடையாது. கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி, விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஆகியோரும் கிடையாது. அதன் காரணமாக விவசாயம் சற்றுப் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலாவது உடனடியாகக் கால்நடை ஆஸ்பத்திரியை அமைப்பதோடு, விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி ஆகியவர்களையும் போட்டு நல்ல முறையில் செயல்பட வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது 70 வட்டாரங்களுக்கு 'புல் பைனான்ஸ் (முழுப்பணத் திட்டம்) ஸ்கீம்' கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த வட்டாரங்கள் மிக மோசமாக இருக்கின்றனவோ, எங்கு அதிக உற்பத்தி இல்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த ஸ்கீமை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பார்க்கும்போது பின்னால் வந்த யூனியன்களில், ஒரு வருஷத்திற்கு முன்பு வந்த யூனியன்களில் உற்பத்திப் பெருக்கம் இல்லை. அந்த யூனியன்களுக்கு முதலில் இந்த ஸ்கீமைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்ச வரம்பைப் பொறுத்தவரை தர்ம ஸ்தாபனங்களுக்கும் கோயில் நிலங்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கும் 'கெடு' 1—4—1963 என்று வைக்கப்பட்டது. இப்போது அங்கிருக்கும் தர்மகர்த்தாக்களும் மடாதிபதிகளும், தங்களுக்கு வேண்டியவர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும், தங்கள் இஷ்டப்படி நடக்கிறவர்களுக்கும் சாகுபடியை மாற்றி வருகிறார்கள்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் இதை ருசுப்படுத்த முடியும். அரசாங்கம் இது பற்றிக் கவனித்து, இதை கட்டுப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நில உச்ச வரம்பைக் கொண்டு வந்திருக்கும்போது விவசாயிகளுக்கும், குடியானவர்களுக்கும் அது பயன்படும்படி அச்சட்டத்தைக் கண்காணிக்க வேண்டும். இல்லாவிடில் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளித்தோம் என்று சொல்ல முடியாது. ஐந்து வேலி, பத்து வேலி என்று இருக்கிற கோவில் நிலங்களை நிலமில்லாது வயலில் உழைத்து வந்த பண்ணையாட்களுக்கு கூட்டுறவு முறையில் அளித்தால் அது அவர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன். தஞ்சை ஜில்லாவில் ஒரு பெண்கள் கல்லூரி கொண்டுவந்திருப்பதற்காக தஞ்சை மக்கள் சார்பில் நான் அதை வரவேற்கிறேன், அதைப் பாராட்டுகிறேன். ஹரிஜன மக்களின் நலனுக்காக கிட்டத்தட்ட 3 கோடி 90 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைச் சீரான முறையில் செலவு செய்ய வேண்டும். பொதுவாக ஹரிஜன மக்களுக்கு காலனிகள் கட்டுவதை நிறுத்தியிருக்கிறோம். ஆனால் அவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப் போகிறோம். ஒரு தொகுதியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட பத்து கிராமங்களுக்கு அல்லது 200 பேர்களுக்கு மனைக் கட்டுகள் கொடுக்க சுமார் பல ஆண்டு காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே மனைக்கட்டுகள் சீக்கிரமாக வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் தொடர்ந்திருந்தால் அது அம்மக்களுக்கு நன்மை பயப்பதாகயிருக்கும். இருபது வீடுகள் கட்டிக் கொடுப்பதை நிறுத்தி விடுவதால் அரசாங்கத்திற்கு பெரிய லாபம் எதுவும் வந்து விட்டதாக கருத முடியாது. ஆகவே ஓட்டுக் கட்டிடத்தை, ஆயிரம் ரூபாய் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை தொடர்ந்து நடத்தியிருக்கலாம். அதனால் ஹரிஜன மக்களுக்கு நன்மை ஏற்படும். அவர்களுக்கு கட்டிடம் கட்ட பணத்தை கடனாகக் கொடுத்தால் அவர்கள் எல்லோரும் அதை நல்லமுறையில் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லமுடியாது. தப்புக்கள் நடக்கலாம். சொந்த செலவுக்கு, சாப்பாடு செலவிற்காக அப்பணத்தை பயன்படுத்தலாம், வசதி இல்லாத காரணத்தினால். ஆக சாமான்களாக வாங்கிக் கொடுத்தோ அல்லது எப்படியோ அவர்களுக்கு அப்பணம் நல்ல முறையில் பயன்படும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் அடுத்த ஆண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகள் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்ய அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற விதத்தில் பயன் கிடைக்க, ஊதியம் கிடைக்க அவர்களின் மகசூலுக்கு நல்ல விலை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். கடன் வாங்கி சாகுபடி செய்பவர்களுக்கு அதனால் நல்ல பயன் ஏற்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் அங்கு நல்லமுறையில் விவசாயம் செய்ய வழி ஏற்படும். இல்லாவிடில் இரண்டு போகமாக உள்ள நிலங்கள் ஒரு போகமாக மாறிவிடும். செலவைக்

[திரு. பி. ஜயராஜ்] [5th March 1963

கணக்கிட்டுப் பார்க்கிறபோது வருவாயில் குறைவு ஏற்படுகிறது, அதிக லாபம் பெற முடிவதில்லை. இப்போது இந்த விவசாய வரி வந்திருப்பதால் விவசாயிகள் வாங்கியிருக்கும் கடன்களை அரசாங்கம் ஒத்திபோட்டு வசூல் செய்ய வேண்டும். அவர்களால் கடன்களை திருப்பிக் கொடுக்கமுடியவில்லை. அப்படிச் செய்யாவிடில் அவர்கள் நிம்மதி பெறமுடியாது என்று கூறிக்கொண்டு விடை பெறுகிறேன்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கு நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களால் படிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மிக நெருக்கடியான நேரத்தில் மிகத் திறமையாக படிக்கப்பட்டிருக்கிறது. நெருக்கடியான நேரம் என்று நான் குறிப்பிடுவது சீனாக்காரன் ஆக்கிரமித்திருப்பதைப் பற்றி மட்டுமல்ல. நம் மதிப்பிற்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் ராஜன் பாபு அவர்கள் இயற்கை எய்திய காரணத்தினால் பஞ்சாப், ஒரிஸா போன்ற மாநிலங்களில் படிக்காமலேயே வரவு செலவுத் திட்டத்தை படைத்திருந்தாலும் நம் நிதி அமைச்சர் அவர்கள் நீண்ட நேரம், பாராட்டத் தக்க வகையில் அவர்கள் அந்த அறிக்கையை படித்தார்கள். பொதுவாக வரவு செலவுத் திட்டம் நாட்டிற்காக போடப்படுகிற திட்டமாக இருந்தாலும் கூட அது ஒவ்வொருவருடைய குடும்பத்திற்கும் பொருந்தும் திட்டமாக இருந்தால்தான் அதை நல்ல வரவு செலவுத் திட்டம் என்று வரவேற்க முடியும். நாட்டில் வருகிற வருமானத்தையும், செலவுகளையும் தயாரிக்கும் திட்டம் நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருந்தால்தான் அது நல்ல திட்டமாக இருக்கமுடியும். அந்த அளவில் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் குடியானவர்களின் குடும்பங்களுக்கு, விவசாயிகளின் குடும்பங்களுக்குப் பொருந்துமா என்று பார்த்தால் நிச்சயமாக அது பொருந்தாது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் வரி எதுவும் போடவில்லை என்று சொன்னாலும், வரி போட்டது மத்திய அரசுதான் என்று சொன்னாலும் கூட இந்த இரண்டு அரசாங்கங்களும் போடுகிற வரிகளினால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்தான் என்பதை நாம் உணர வேண்டும். போடுவது யார் வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார் என்று பார்க்கும்போது பாதிக்கப்படுகிறவர்கள் நாட்டு மக்கள்தான். எனவே யார் வரி போட்டாலும் போடாவிட்டாலும் பாதிக்கப்பட்டிருக்கிற பொதுமக்களைப் பார்க்கும்போது நாம் வேதனைப் படவேண்டியிருக்கிறது. பெட்ரோலுக்கும், டீஸல் ஆயிலுக்கும் வரி போட்டால் அது ஆடம்பரப் பொருள்கள் மீது போடப்படும் வரி, அதனால் அவை பணக்காரர்களைத்தான் பாதிக்கும் என்று சொன்னாலும் டீஸல் என்ஜினை வைத்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்கிறான் விவசாயி. அதனால் டீஸல் ஆயிலுக்கு வரி போடுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப்படலாம். பெட்ரோலில் விலை ஏற்றம் கார் வைத்துக்கொண்டிருப்பவர்களை மட்டும் பாதிக்கப்போவதில்லை. அதனால் வாடகைக் காரில் பிரயாணம் செய்கிற குடிமகனின் உரிமையும் நிச்சயமாக

5th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

பறிக்கப்படுகிறது. வரி போட்டு விட்டார்கள் என்றவுடனே மோட்டார் வாகனங்களின் ரேட்டை உயர்த்த மோட்டார் முதலாளிகள் எல்லாம் சேர்ந்து ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று பத்திரிகை வாயிலாக அறிகிறோம். ஆக போடப்பட்ட வரி ஆடம்பரப் பொருளுக்காக இருந்தாலும் அதனால் பாதிக்கப்படுபவர்கள் மக்கள்தான். அதே போல் மண்ணெண்ணை வரி. அதையும் மத்திய சர்க்கார் போட்டது என்று சொல்லலாம். இன்னும் பல கிராமங்களில் மின்சாரம் இல்லாத காரணத்தினால் மண்ணெண்ணை உபயோகிக்கும் சாதாரணக் குடியானவர்கள் குடும்பங்கள், விவசாயக் குடும்பங்கள் இவர்கள் இந்த மண்ணெண்ணை வரியால் பாதிக்கப்படுவார்கள். அதே போல் கார்ட், கவர் இவைகளின் விலையும் ஏறிவிட்டது. இதுவும் மத்திய சர்க்காரால் செய்யப்பட்டது என்று சொன்னாலும் இங்கே வாழ்கிற நமக்கும் அதனால் பாதகம் ஏற்படுகிறது. எனவே யார் வரி போட்டிருந்தாலும் அதனால் இன்று நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்து நம் மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும், இந்தமன்ற உறுப்பினருமான திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அந்தக் காலத்திலிருந்த முறைகளை, வேற்றுமைகளை பல தத்துவங்கள் மூலம் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் காலத்தில் "அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது" என்று சொல்லியிருக்கலாம். அது அந்தக் காலம். "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமல் போகமாட்டான்" என்று அந்தக் காலத்தில் சொல்லலாம். ஆண்டவனுக்கு ஏன் தொல்லை கொடுக்கவேண்டுமென்று நினைத்து அத்தனையையும் அரசாங்கம்—காங்கிரஸ் அரசாங்கம்—செய்கிறது என்று ஆணித்தரமாகச் சொன்னார்கள். அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். ஆண்டவனை நம்பும் மக்கள் எங்களை இன்று நம்புகிறார்கள் என்று சொல்லும் அளவிற்கு இருக்கிறதே தவிர அதனால் மக்களுக்கு பலன் ஏற்பட்டிருக்கிறதா என்பது சந்தேகமே. நேற்று ஒரு கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொன்னார்கள், கிராமங்களிலிருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு வருவதால்தான் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதிலிருந்து வாழ வழி இல்லாது கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் வருகிறார்கள் என்ற உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. கிராமங்களில் இருக்கிற கஷ்டங்களைப் பார்த்து, வரிச் சுமையைப் பார்த்து வாழ வழியில்லாது "கெட்டும் பட்டணம் சேர்" என்று பட்டணங்களுக்கு வருகிறார்கள். இங்கு வந்து பார்க்கும்போது என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலைதான் இருக்கிறது. நாங்கள் ஏதோ வரி போடக்கூடாது என்று சொன்னது மாதிரி சிலர் சொன்னார்கள். கட்டபொம்மன் காலத்தில் "வானம் பொழியுது, பூமி விளையுது யார் யாருக்கு கட்டுவது கப்பம்" என்று அந்தக் காலத்தில் சொல்லியிருக்கலாம். நான் அப்படிச் சொல்லவில்லை. வரி போட்டால்தான் மக்களுக்கு பயன் ஏற்படுமென்று தெரிந்துதான் சொல்கிறோம். ஆனால் தாங்கமுடியாதவர்கள்மீது, ஏழை எளியவர்கள் மீது போடவேண்டாமென்றுதான் சொல்கிறோம்.

அடுத்து, விவசாயிகளுக்கு இந்த வரவு செலவு திட்டத்தில்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [5th March 1963

அதிகமான அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி அதை பல அங்கத்தினர்கள் வரவேற்றுப் பேசினார்கள். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் கிராமத்தில் விவசாயிகளுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை மிகவும் மனம் விட்டு எடுத்துச் சொன்னார்கள். எவ்வளவு கஷ்டங்கள், எவ்வளவு கடன் தொல்லைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே இவ்விதம் ஒதுக்கப்படுகின்ற பணம் எந்த அளவுக்கு விவசாயிகளுக்குப் பயன்படுகிறது என்பதைத்தான் அரசாங்கம் ஆராய்ந்துப் பார்க்கவேண்டும். ஒதுக்கப்படுகின்ற பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது. உற்பத்தி பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அதிக அளவில் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் இவைகள் எல்லாம் நல்லமுறையில் விவசாயிகள் கையில் போய் சேருகின்றதா, இதன் மூலம் என்னென்ன நன்மைகள் விவசாயிகளுக்கு கிடைக்கின்றன, அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டிய பல நன்மைகள் எவ்விதமெல்லாம் தடைப்படுகிறது என்பதை எல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவ்விதம் ஆராய்ந்து பார்த்து, அதற்குத் தகுந்தமுறையில் வழிவகைகளை வகுக்கவேண்டும். விவசாயிகளுடைய கஷ்டங்களைப்பற்றி இங்கே விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் விவசாய மான்யங்கள் வருகின்றபோது சொல்லிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். விவசாயத்திற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் நல்ல முறையில் செலவு செய்யப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். பொதுவாக இந்தத் துறையில் அதிகாரிகள் எல்லாம் அதிகமாக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த தாலூகா ஆபீஸ்க்குப் போனாலும், யார் தாசில்தார் என்பதே தெரிந்துகொள்ள முடியவில்லை. முன்பு ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பார்த்துவந்த வேலையை இப்போது நாலைந்து தாசில்தார்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இருந்தும் சரியாகப் பார்க்கமுடியவில்லை. அதிகாரிகள் திறமையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று நான் குறை சொல்லவில்லை. ஒரு தாலூகா ஆபீஸை எடுத்துக் கொண்டால் எத்தனையோ தாசில்தார்கள், எத்தனையோ டெப்யுடி தாசில்தார்கள் எல்லாம் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அதிகமாகியிருப்பதினால் வேலை துரிதமாக நடக்கிறதா என்று பார்த்தால் அதுதான் இல்லை. இவ்விதமாக அதிகமான பேர்கள் அதிகரிக்கப்பட்டிருந்தாலும் உழவர்களுக்கு நிச்சயமாக இதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு பலவிதமான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் அதிகாரிகளை குறை சொல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் இதைச் சொல்லவில்லை. அவர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்தான் விவசாயிகளுடைய வேலையை கவனிப்பதற்கே ஆள் இல்லாமல் போய்விடுகிறது.

அடுத்து, கல்வித் திட்டத்தைப்பற்றி சொல்லும்போது, இதில் அரசாங்கம் மிக கவனம் செலுத்தி வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்விக்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்ட போதிலும், பொதுவாக எல்லோரும் தற்போதுள்ள

5th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கல்வியின் தரம் குறைந்து போய்விட்டது என்று சொல்கிறார்கள். தனியார்கள் நடத்துகின்ற பள்ளிகளைவிட சர்க்கார் நடத்தும் பள்ளிகளிலுள்ள தரம் குறைந்து போய்விட்டது என்று எல்லோரும் குறைபட்டுக்கொள்கிறார்கள். உண்மையிலேயே கல்வியின் தரம் குறைந்துவிட்டதா, அல்லது படிக்கின்ற பிள்ளைகளின் தரம் குறைந்து போய்விட்டதா, அல்லது பாடம் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களின் தரம் குறைந்து போய்விட்டதா அல்லது எல்லாவற்றிற்கும் தலைமையாய் இருக்கின்ற அரசாங்கத்தின் தரம் குறைந்து போய்விட்டதா என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டியது மிகவும் முக்கியம். இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் ஆசிரியர்கள் எல்லாம் பாடம் சொல்லிக்கொடுப்பதற்காக இருக்கிறார்கள் என்றே சொல்ல முடியவில்லை. ஆசிரியர்களுடைய வேலைகள் எல்லாம் எவ்வளவோ அதிகரித்துப் போய்க்கொண்டிருக்கின்றது. முன்னால் நான் ஆரம்பப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் டெப்யுடி இன்ஸ்பெக்டர் வருகிறார்கள் என்றால் ஒரு பயம் ஆசிரியருக்கு இருக்கும். ஆனால் இப்போது அப்படி இல்லை. மதிய உணவுத் திட்டம் வந்ததின் பின்னால் அந்த கணக்கு எழுதும் வேலையே ஒரு வேலையாக இருக்கிறது. அதிலும் அதற்காக வசூல் செய்யப்போகும் வேலை வேறு இருக்கிறது. இதன் காரணமாக அவர்களுக்கு அதிகமான வேலை, அதற்குமேல் மேல் அதிகாரிகள் வருகிறார்கள் என்றால் அதை கவனிக்க வேண்டிய வேலை, அதற்கு மேல் வார்-பண்ட் வசூல் செய்ய வேண்டிய வேலை, இப்படி பலவிதமான வேலைகள் இருப்பதாக பேசப்படுகிறது. இந்தப் பகல் உணவுத் திட்டத்திற்காக கணக்குக் காட்டப்படுகிறதுவரையிலும் நிச்சயமாக குடியானவன் வீட்டில் பசி இருக்கிறது என்பதை மட்டும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். வீட்டில் இருக்கின்ற வறுமையின் காரணமாக, பள்ளிக்கூடத்திலாவது ஒரு வேளை உணவு கிடைக்கும் என்ற நோக்கத்துடன்தான் ஏழை மக்கள் தங்கள் பிள்ளைகளை அதிகமாக பள்ளிக்கு அனுப்புகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எந்த தகப்பனும், தன் பிள்ளையை பக்கத்தில் இருத்தி ஒரு கவளம் சோற்றை பிள்ளைக்குக் கொடுத்து தானும் அதோடு இருந்து சாப்பிடுவதைத்தான் விரும்புவான். ஏதோ அமிழ்து, சிறுகை அளாவிய கூழ் என்றெல்லாம் திருக்குறளைப்பற்றி இப்போது சொல்லுகிறார்கள். ஆனால் நாட்டில் பஞ்சம் இருக்கின்ற காரணத்தினால் தகப்பன் தன் குழந்தையோடு சாப்பிட முடியவில்லை. ஏதோ இப்போது பள்ளிக்கு அனுப்பப்படும் பிள்ளைகளுக்கு தலையில் ஈரும் பேனும் இருக்காது என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட குழந்தைகள் யாராவது இருக்கிறார்களா என்று கேட்டதற்கு இதற்கு முன்னால் எல்லாம் இத்தனை பேர்கள் என்று கணக்குக்கூட கொடுத்திருக்கிறார்கள். இந்தமுறையில் ஏற்பட்ட ஊழல்களைப்பற்றிக்கூட கணக்குகள் எல்லாம் இங்கே சொல்லப்பட்டது. ஆகவே எல்லாம் சரியாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்பது இவையெல்லாம் எடுத்துக்காட்டுகிறது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வேறு என்னவெல்லாமோ வேலைகள் கொடுக்கப்படுகின்றன. இதை அரசாங்கம் நன்கு சிந்திக்கவேண்டும். ஆசிரியர்களைப் பார்க்கின்ற நேரத்தில் அவர்கள்

செய்யவேண்டிய ஆசிரியப் பணியை விட்டுவிட்டு வேறு பல பணிகளை செய்யவேண்டியிருக்கிறது. பிள்ளைகளை எடுத்துக் கொண்டால், பஸ் ஸ்டாண்டில் ஒவ்வொரு பிள்ளையும் கையில் ஒரு கார்டை வைத்துக்கொண்டு அதில் பஞ்சு பண்ணி 10 நயா பைசா போடுங்கள், எங்கள் வாத்தியார் வாங்கிக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லிக் கேட்கிறார்கள். பிள்ளைகள் ஆசிரியர்கள் சொன்னதைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆசிரியர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர் சொல்வதை கேட்கவேண்டியிருக்கிறது, டெபுடி இன்ஸ்பெக்டர் அவருக்குமேலே இருக்கின்ற டி.ஈ.ஓ. சொன்னதைக் கேட்கவேண்டும். டி.ஈ.ஓ. அவருக்கு மேலே இருக்கக்கூடிய டைரக்டர் அவர்கள் சொல்வதை கேட்கவேண்டும். இவ்விதம் அதிகாரிகளே ஆசிரியர்களுக்கு பல வேலைகளை கொடுத்துக்கொண்டிருந்தால் நிச்சயமாகக் கல்வியின் தரம் குறையத்தான் செய்யும். அவர்களைக் கேட்டால் இந்தக் காரணங்களைத்தான் சொல்கிறார்கள். நமது கல்வி இலாகா டைரக்டர் அவர்களே வானொலியில் பேசுகின்ற நேரத்தில், குறிப்பிட்டதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

"எத்தனைப் பள்ளிக்கூடங்களில் வீணான செலவு நடக்கிறது, பகட்டான செலவு நடக்கிறது. வறுமை மிகுந்த இந்நாடு இத்தனை படாடோபச் செலவுகளைத் தாங்க முடியுமா? பள்ளிக்கூடக் கல்விக் கட்டணம் கட்ட முடியாது சலுகை பெறும் ஏழை மாணவர்களும்கூட இந்நிகழ்ச்சிகளுக்காகத் தனிக்கட்டணம் வாங்கி, அதை வேட்டு விடுவது சரியா, தருமா? முறையா?" இவ்விதம் டைரக்டர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் வேட்டுவிடுகிறது யார் என்பதைப்பற்றி எல்லாம் நான் இப்போது சொல்லவரவில்லை. பொதுவாக நிதி அதிகமாக ஒதுக்கப்படும் போது, அது சரியான வழியில் உபயோகிக்கப்படுகின்றதா என்பதில் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஏதோ வெளிநாடுகளுக்குப் போய்வந்தால் அந்த முறையை உடனே இங்கு அமுலுக்குக் கொண்டு வந்து பார்ப்பது சரியல்ல. பொதுவாக, இருக்கின்ற முறை சரியானதுதானா என்று பார்த்து அமல் நடத்தப்படவேண்டும். யார், யாருக்காக என்று பார்த்து மட்டும் செயல்படுத்தக்கூடாது. ஆகவே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கல்விக்காக கொடுக்கப்படும் எந்த தொகையும் குறைக்கப்பட வில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில இடங்களில், குறிப்பாக எங்கள் பகுதியில் மாட்சிங் கிராண்ட் கொடுக்கப்படாத காரணத்தினால் பள்ளிக்கூடக் கட்டிடம் ஒழுகுகின்றது. ஆகவே இதற்கான தொகையை நிறுத்திவிடாமல் அந்தப் பழைய கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கு வேண்டிய நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு முறை என்பது மிகவும் நல்லது, மிகவும் அவசியமானதும்கூட, நம்முடைய நாட்டுக்கு மிகவும் தேவையானதும் கூட, ஆனால் இன்று இந்தக் கூட்டுறவுத்துறை ஒருசிலருடைய பரம்பரை சொத்தாக ஆக்கப்பட்டிருக்கிறது

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ 'பைலா' க்கள் எல்லாம் இருக்கின்றது என்றெல்லாம் சொல்லுகிறார்களே தவிர இதனுடைய அதிகாரம் எல்லாம் இன்று ஒருசிலருடைய கையில் தான் இருக்கிறதே தவிர பரவலாக இல்லை. ஒரு சிலருடைய வாரிசாகத்தான் இருந்து வருகிறது. இந்த நிலைமையை மாற்ற வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு ஸ்தாபனத்தில் அடிக்கடி சண்டை வந்துவிடுகிறது. இதன் காரணமாக ஊரே இரண்டுபட்டு விடுகிறது. அது மட்டுமல்ல, இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டுவிடுவதால் கூட்டுறவு என்பதன் நோக்கமே போய்விடுகிறது. "கூட்டுறவே நாட்டின் உயர்வு" என்றெல்லாம் சொல்லுகிறோம். ஆனால் அதற்குத் தகுந்தவாறு நாம் நடந்து கொள்ளவேண்டும். நேற்று எனக்கு ஒரு அழைப்பு வந்தது. கைத்தறி வார விழாக் கொண்டாடப்படுவதாகவும், அதில் பலர் பேசுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்களைத் தலைவராகக் கொண்ட அந்த ஸ்தாபனத்தின் ஆதரவில் இது நடத்தப்படுகிறது. கைத்தறி ஸ்தாபனம் என்று சொல்லும்போது, அதில் எல்லாக் கட்சியினரும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கவேண்டும். இந்தக் கைத்தறி விழாவில் வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தினரை அழைக்கவில்லை. (குறுக்கீடு.) அழைப்பு வந்திருக்கின்றது. ஆனால் பேசுவதற்கு அழைக்கவில்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன் . . . .

திரு. டி. கார்ச்சா கவுடர்: மேயர் குசேலர் அவர்களை இதில் சேர்த்திருக்கிறார்களே . . . .

திரு. மு. கருணாநிதி: குசேலர் அவர்கள் மேயர் ஆனதினால் போனால் போகிறது பாவம் என்று நினைத்துத்தான் அழைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

கனம் சபாநாயகர்: ஈ. வெ. ரா. அவர்களைச் சேர்த்திருக்கிறார்களே . . . .

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்களை சேர்த்திருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை அழைக்கவில்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் இங்கு அமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள், ஒரு சமயம் சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 'முன்னேற்றம் முன்னேற்றம்' என்று கூறிக்கொள்வதில் உண்மையாகவே ஒரு முன்னேற்றகரமான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தேங்கிக் கிடந்த கைத்தறி நெசவுத் துணிகளை எல்லாம் தெருத் தெருவாய் எடுத்துக்கொண்டுபோய் விற்றார்கள். அவ்விதம் விற்றதின் காரணமாகத் தேங்கிக்கிடந்த கைத்தறித் துணிகள் விற்கப்பட்டன. அந்தமாதிரி நடந்ததை எல்லாம் இப்போது யாராவது சொல்லிவிடக் கூடாதே என்று எண்ணித்தான், அந்த மாதிரியான பெருமையை யாராவது இவர்களுக்குச் சொல்லிவிடக் கூடாதே என்று எண்ணித்தான் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை அழைக்காமல் விட்டுவிட்டார்களோ என்பது தெரியவில்லை. தனிப்பட்ட

வர்களாக இருந்தாலும் பரவாயில்லை என்று விட்டுவிடலாம். ஆனால் அரசாங்க உதவி பெறுகிற சம்பந்தப்பட்ட இம் மாதிரிக் கூட்டுறவுச் சங்கங்கள் நடந்துகொள்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன். எல்லாக் கட்சி அங்கத்தினர்களையும் அழைக்கவேண்டும். முக்கியமான ஹரிஜன தின விழாக்களில் எல்லாம்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களை அழைப்பதில்லை. இவ்விதமெல்லாம் இருந்துவிட்டு 'ஒற்றுமையை வளர்க்கவேண்டும், ஒற்றுமையை வளர்க்கவேண்டும்' என்று சொன்னால் எங்கே ஒற்றுமை வளர முடியும். 'ஒற்றுமை, ஒற்றுமை' என்று பேசிக்கொண்டிருந்து விட்டு, வெளியிலே போனவர் வீட்டுக்குள் நுழைந்துவிட்டாரா என்று பார்த்து, பின் கதவை அடைத்துக்கொண்டால் எப்படி நம்பிக்கை வளரும் என்று தெரியவில்லை. ஒற்றுமை என்றால் உங்கள் மனம் திறந்த, உண்மையான ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை இந்த நோக்கில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

11-30 a.m. **கனம் சபாநாயகர் :** இது வரையில் 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. ஆர். ரங்கசாமி :** மதிப்புக்குரிய அவைத் தலைவர் அவர்களே, இங்கு நேற்று முன்தினம் பேசிய ஆளாத கட்சி நண்பர் மதியழகன் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி இது ஒரு பெரிய சதித் திட்டம் என்று சொன்னார்கள். சதித் திட்டம் என்றவுடனேயே, வாஸ்தவத்திலேயே என் போன்ற கிரிமினல் லா தெரிந்தவர்களுக்கு, இது பெரிய சதித் திட்டமாக ஆகி விட்டதே, இதில் பேசலாமா என்ற சந்தேகம் வந்துவிட்டது. ஏனென்றால் நாங்கள் இதை ஆதரித்துப் பேச வேண்டியிருக்கிறது. அவ்விதம் ஆதரித்துப் பேசினால் அவர்கள் அடிக்கடி கோர்ட்டுக்குச் செல்லக் கூடியவர்களாக இருப்பதால் நம்மையும் சதித் திட்டத்தில் சேர்த்துவிட்டால் என்ன ஆவது என்று பயந்திருந்தேன். இப்போது அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லுவதாக இல்லை என்று கேள்விப்படுகிறேன். ஆகையால் ஓரளவுக்கு எனது மனதைத் தேற்றிக்கொண்டு, இதை ஆதரித்துப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

பொதுவாக இப்போது நாட்டிலே நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை மறக்கக்கூடிய நிலைமைக்குப் போய்விட்டது. எதிர்க் கட்சி அன்பர்கள், இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் அவர்களுடைய உயிர் மூச்சாகிய திராவிடப் பிரிவினையைக்கூட மறந்து விட்டு, நாட்டுக்காக ஒத்துழைப்பதாக அறிக்கை கொடுக்கிறார்கள், பேசுகிறார்கள். அவர்கள் மூச்சை விட்டுவிட்டு இருக்கும் நிலையிலே இன்று நிதிநிலை அறிக்கையை ஒரு சதித் திட்டம் என்றும் இதுவரையில் பேசிய நண்பர்கள் எல்லோரும் எதிர்த்துப் பேசுகிறார்களேயொழிய, அதை ஆதரித்து, நாட்டுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஆபத்திலிருந்து எந்தவகையில் காப்பாற்றவேண்டுமென்று இது வரையில் யாரும் பேசியதாக இங்கு இருக்கக் கூடிய

நாங்கள் கேள்விப்படவில்லை. அது மட்டுமல்லாமல் மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் கூடக் கோயம்புத்தூரில் பேசும்போது ஒரு மாபெரும் கிளர்ச்சியை ஆரம்பிக்கவேண்டுமென்று பேசியிருக்கிறார். வாஸ்தவத்திலே முன்பெல்லாம் சொல்லுவார்கள், தெய்வம் நின்று கெடுக்கும், அரசன் அன்று கெடுப்பான் என்று. நமது அரசு இருக்கிறதா இல்லையா என்ற ஒரு சந்தேகம் கூட ஏற்படுகிறது. அதோடு ராஜாஜி அண்டிக் கெடுப்பார் என்று சொல்லையும் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்று நாடு இருக்கும் நிலைமையில் அவர்கள் . . .

MR. SPEAKER : The hon. Member is going too far. He may come to the subject proper without going on attacking a particular person.

திரு. ஆர். ரங்கசாமி : நேற்று கோயம்புத்தூரில் நடந்த கூட்டத்தைப் பற்றி எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், எதிர்க் கட்சி நண்பர் மதியழகன் அவர்கள் பேசும்போது ரஷ்யா தேச பட்ஜெட்டைப் பற்றி எடுத்து . . . .

திரு. எஸ். ஜே. ராமசாமி : சபையில் இல்லாது வெளியில் இருக்கிற ஒருவரைப் பற்றி . . . .

கனம் சபாநாயகர் : நான் சொன்னது கனம் அங்கத்தினருக்குக் கேட்கவில்லை போலிருக்கிறது.

திரு. ஆர். ரங்கசாமி : சபையில் இல்லாத நண்பரைப் பற்றிப் பேசுவதற்கு உரிமை இல்லாவிட்டாலும், ராஜாஜியைப் பற்றிப் பேச இங்கு நிறைய உரிமை இருக்கிறது.

MR. SPEAKER : The hon. Member is again coming to the same subject.

திரு. ஆர் ரங்கசாமி : இந்த மன்றத்திலே அவர் படத்தை வைத்திருப்பதால் அவரைப் பற்றிப் பேச உரிமை இருக்கிறது.

கனம் சபாநாயகர் : ஸப்ஜெட்டுக்கு வாருங்கள். இப்போதே ஐந்து நிமிஷங்கள் ஆகி விட்டது.

திரு. ஆர். ரங்கசாமி : இப்போது நாடு இருக்கும் நிலைமையில், எதிர்க்கட்சி நண்பர்கள் இந்த பட்ஜெட்டை நல்ல முறையில் வரவேற்று, வரிகளை போடவில்லை என்று சொல்லப்பட்டிருப்பதை வரவேற்று இந்த நாட்டைக் காப்பாற்ற செலவழிக்கவிருக்கும் பணத்தை எந்த வகையில் செலவழிக்கவேண்டும், எந்தச் செலவை விட்டுவிடவேண்டும் என்ற கருத்துக்களையெல்லாம் சொல்லாமல், இதை எதிர்த்தே பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கும்போது வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. அதே நிலையில் இந்த பட்ஜெட்டை ஆதரித்து, நாட்டுக்குச் சேவை செய்யக் கூடிய முறையில் இந்த பட்ஜெட்டிலே மிச்சம் பிடித்து, சிக்கனமாகச் செலவழித்து நாட்டை நல்ல முறையில் முன்னேற்ற ஆவன செய்ய நல்ல வழிகளைச் சொன்னால் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அந்த வகையில் எடுத்துக்கொண்டால், நிதி நிலை அறிக்கையில் சர்க்காருக்கு உதவி செய்யக் கூடிய காரியங்கள் நிறைய இருக்கும்.

[திரு. ஆர். ரங்கசாமி] [5th March 1963

இதற்கு முன் யூனியன் சேர்மன் போன்றவர்கள் பேசினார்கள். அனுவசியச் செலவுகள் யூனியன் மூலமாகச் செலவழிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். அந்தச் செலவுகளைக் குறைத்து, எந்த வகையில் சிக்கனமாகச் செலவுகளை நடத்தலாம் என்று எடுத்துச் சொல்லி அவர்களைத் திருத்த வேண்டுமேயொழிய, எதிர்ப் பிரசாரம் செய்தால் மேன்மேலும் வழிகள் விருத்தியாகிக் கொண்டிருக்கிற காரணத்தினால் எந்த விதமான நல்ல வழியும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று பொதுவாக எடுத்துக்கொண்டால் இந்தப் பிரகடனம் வெளியிட்ட பிறகு அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்கள் பொற்கொல்லர்கள். எந்த ஊரிலும், எந்தக் கட்சியின் சார்பிலும் இல்லாது ஊர்வலங்களும் கூட்டங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. கோவலன் சரித்திரத்தில் சொல்லப்பட்ட மாதிரி கோவலனை ஒரு ஆசாரியார் பழி வாங்கினார் என்று சொல்லப்பட்ட மாதிரி அந்த முறையில் கலியுகக் கோவலனாக மொரார்ஜி தேசாய் அவதரித்து விட்டாரோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இம்மாதிரி வேலை இல்லாத வகையில் திடீரென்று இந்த உத்தரவைப் போட்டுவிட்டதால் தற்காலிகமாகக் கஷ்டப்படக் கூடிய வகையில் நாமும் சேர்ந்து மேலும் கிளர்ச்சியை நடத்த ஊக்கம் அளித்தால் அரசாங்கத்திற்கு எதிராக உபயோகப்படுத்த வழியாகும் என்று விட்டு விட்டு, தாற்காலிகமாக ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தை எவ்வளவு சீக்கிரமாக நிவர்த்தி செய்ய என்னென்ன வழிகளைச் சொல்ல வேண்டுமோ அவைகளை எடுத்துச் சொல்லி நல்ல முறையில் அவைகளை விலக்க வழி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற இரண்டு பாலிடெக்னிக்குகளில் ஒன்றை சேலத்தில் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லியிருக்கிறார், இன்னொன்றை எங்கு ஏற்படுத்தப்போகிறார்கள் என்பதைப் பற்றி இதில் குறிப்பிடவில்லையென்றாலும்கூட, இந்த பாலிடெக்னிக்கை ஆரம்பிப்பதற்குத் தனிப்பட்டவர்கள் என்னவென்ன காரியங்கள் செய்து கொடுக்கவேண்டுமோ அவைகளைச் செய்து கொடுக்க திண்டுக்கல்லில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால் அதை திண்டுக்கல்லில் ஏற்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார உற்பத்திக்கு நாம் கொடுக்கப்போகிற தொகை மின்சார கார்ப்பொரேஷனுக்குக் கடனாகக் கொடுக்கப்படுகிறதே தவிர பட்ஜெட்டில் செலவினமாகக் காண்பிக்கப்படவில்லை. கொடுக்கக்கூடிய தொகைக்கு வட்டியாக 5¼ சதவிகிதம் வசூல் செய்துகொண்டிருக்கிறோம் என்று ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இந்த வட்டியைக் குறைத்து, மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமையில் மத்திய சர்க்காரினால் போடப்பட்டுள்ள வரிகளில் சீமை எண்ணை வரியானது முக்கியமாக எல்லோரையும் பாதிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது நாம் கொடுக்கக் கூடிய அரிசி போன்றவைகளுக்கு சப்ஸிடி கொடுத்து விலையைக் குறைத்துக் கொடுக்கிறோமே அதே மாதிரி சீமை எண்ணைக்கும் ஏற்பாடு செய்து கூட்டுறவுத் துறை மூலமாக அல்லது வேறு எந்த விதத்திலோ, சென்ட்ரல் கவர்ன்மெண்ட் சப்ஸிடி வாங்கி ஏழைகளுக்குக் குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

5th March 1963] [திரு. ஆர். ரங்கசாமி]

அதே சமயத்தில் கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், விவசாயிகளுக்கு நல்ல முறையிலே நஷ்டம் இல்லாத வகையில் செயல்படக்கூடியது நில அடமான பாங்க். இன்றைக்கு இருக்கும் நிலைமையில் நிலத்தின் மீது இலகுவான முறையில் கடன் கொடுப்பது கஷ்டமாக இருக்கும். அதோடு கூட நில அடமான பாங்குகளுக்கு சர்க்காரிலிருந்து ஜாஸ்தி தொகை கிடைக்காததினால், விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதை நிறுத்திவைத்து விடுகிறார்கள். நேரடியாக மக்களிடத்திலே கடன் எழுப்பி அதன் மூலம் விவசாய பாங்குகள் செயல்பட்டு வருகிற சில சர்ந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. நில அடமான பாங்குகளுக்கு அதிகப்படியான தொகையை ஒதுக்கி அதன் மூலம் விவசாயிகளுக்கு அவர்களுடைய சொத்துக்களை அடமானமாக வைத்து கடன் வாங்குவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டும். கூடுதலான எஸ்டிமேட் போட்டு கடன் தரக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு வசதி செய்து கொடுத்தால் நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வழி ஏற்படும் என்று சொல்லி, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 11-40 a.m.
இந்த பட்ஜெட் விவாதத்தில் ஒரு சில கருத்துக்களை நான் சமர்ப்பிக்கிறேன். இந்த பட்ஜெட்டை ஆதரித்துப் பேசும்பொழுது, குறிப்பாக இந்த பட்ஜெட்டில் எல்லோருமே விவசாயத்தைப்பற்றி சொல்லும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. நெல் விலை சரிந்திருப்பதைப் பற்றி விவாதத்தில் இதுவரையில் பல அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையிலும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எப்படியிருந்தபோதிலும், விவசாயிகளை ஊக்குவிக்காவிட்டால், எனக்கு முன்பு பேசிய சில அங்கத்தினர்கள் சொல்லியது போல, விவசாயிகள் நெல் விவசாயம் செய்வதை விட்டுவிட்டு மற்ற விவசாயம் செய்வதற்கு வந்துவிடும்படியான ஒரு நிலைமை ஏற்பட்டுவிடும். மற்ற ஜில்லாவுக்கும் தஞ்சை ஜில்லாவிற்கும் என்ன வித்தியாசம் என்றால், மற்ற ஜில்லாவில் ரொடேஷன் கிராப் செய்ய முடியும். அதாவது இந்த வருஷம் நெல் பயிரிட்டால் அடுத்த வருஷம் கரும்பு போடலாம். ஆனால், தஞ்சாவூர் ஜில்லாவில் வேறு ஒன்றும் உற்பத்தி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையால் உண்மையாகவே விவசாயிகளுக்கு பல வசதிகளை செய்துகொடுக்காவிட்டால், அடுத்த வருஷம் அவர்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். அவர்களுக்கு எருவை கொஞ்சம் குறைந்த விலையில் கொடுக்கலாம். இப்பொழுது மாட்டுக்கு அத்தியாவசியமான புண்ணாக்கு, பருத்திக்கொட்டை இவைகளெல்லாம் 34, 35

ரூபாய் விலை விற்கிறது. அதனால் அவர்கள் மாடுகளை சரியாகக் கவனிக்க முடியவில்லை. மாடுகள்தான் உழவர்களுடைய சொத்தாக இருக்கிறது. அதையெல்லாம் ஓரளவுக்கு குறைந்த விலையில் கொடுக்கலாம். அதற்கு ஸப்ஸிடி கொடுத்து விலையைக் குறைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தலாம். விவசாயிகளுக்கு போனஸ் கொடுக்கலாம். ஏதாவது ஒரு உபாயத்தை நாடி அவர்களுக்கு இம்மாதிரி வசதிகளைச் செய்துகொடுத்தால்தான், விவசாயத்தில் அவர்கள் அக்கரை காட்டக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த வருஷம்கூட விவசாயிகளுக்கு நரிபயிரும், செஸ்பேனியாவும் நிறையக் கிடைக்கவில்லை. காவாளைதான் நிறைய கிடைக்கிறது. கெமிகல் மென்யூர் நிலத்திற்கு போடும்பொழுது, அதைத் தாக்குப் பிடிக்க பசுந்தாள் உரமும் போட்டு மண் வளத்தைப் பெருக்காவிட்டால், அடுத்த வருஷத்தில் நிலத்தில் நல்ல பலன் அடைய முடியாது. ஆகவே, நரிபயிர், செஸ்பேனியா போன்ற அதிகமான சத்துள்ள கிரீன் மென்யூரை அதிகமாகக் கொடுத்து உதவி செய்யக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் மின்சார விநியோகம் பூராவும் கண்டிராக்டர்கள் கையில்தான் இருக்கிறது. ஆகையினால் இன்னும் பல கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு பயன்படாத நிலைமையில் இருக்கிறது. அவர்களைக் கேட்டால் சர்க்காரிடமிருந்து லோன் வந்தால்தான் விஸ்தரிப்பு செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். இங்கு வந்து அமைச்சர் அவர்களிடம் சொன்னால் 'நாங்கள் லோன் கொடுத்து அவர்கள் எப்படி அதைச் செய்ய முடியும்' என்று சொல்லுகிறார்கள். இதனால் பல கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சார வசதி கிடைக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்காரே இந்த மின்சார ஸ்தாபனங்களை ஏற்றுக்கொண்டு, எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. இராம அரங்கண்ணல் தலைமை)

அடுத்தபடியாக, கல்வியை எடுத்துக்கொண்டால் கல்விக்காக நாம் பெரிய அளவுத் தொகையை செலவழித்துக்கொண்டு வருகிறோம். அதுவும் ஏழை மாணவர்கள் எல்லோருக்கும் சம்பளம் இல்லாமல் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருப்பதால், எல்லா மாணவர்களும் 10-வது வரை படிக்க வசதி ஏற்பட்டிருக்கிறது. மானேஜ்மெண்டார் நடத்தக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் சம்பளம் மாணவர்களிடமிருந்து பெறாத காரணத்தினால், அங்கெல்லாம் வாத்தியார்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் நடைமுறையிலே ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்கு சர்க்காரே நேரடியாக மாதா மாதம் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கடைசியில் மானேஜ்மெண்ட் கிராண்டு என்று தனிப்பட்ட முறையில் அவர்களுக்குக் கொடுக்கிறோம். அதே முறையில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நேரடியாக சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இப்பொழுது 3, 4 மாதங்களுக்கு அவர்கள் சம்பளம் இல்லாமலேயே சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மானேஜ்மெண்டார் ஏதாவது கடன் வாங்கிக்கொடுத்தாலும் மார்ச் மாதத்திற்குள்ளாக திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மார்ச் மாதத்தில் பணம் இல்லாததால் பிறகு கிராண்டு வரும்பொழுது அதை திருப்பி எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இப்பொழுது உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதனால் மானேஜ்மெண்டார் அந்தப் பள்ளி வாத்தியார்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன், டைரக்டர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறேன். இதுபற்றி துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சட்ட சபையில் இன்றைக்கு கிட்டத்தட்ட 207 அங்கத்தினர்களும், கவுன்சிலில் 63 அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். ஆக 270 பேர்கள் இருக்கிறார்கள். இங்கே மெம்பர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. 90 ரூம்கள்தான் நியூ ஹாஸ்டலில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு இருக்கிறது. இன்னொரு பக்கத்தில் 40 பேர்கள் தங்க இடம் இருக்கிறது. ஆக 130 பேர்கள் தங்குவதற்குத்தான் இடம் இருக்கிறது. ஒரு ரூமை ரிசர்வ் செய்து சட்டசபை அங்கத்தினர் எழுதிவிட்டாலும்கூட, சட்டசபை ஆரம்பிக்கின்ற தேதி வராவிட்டால் அவருக்கு அந்த ரூம் கிடைப்பதில்லை. மாத வாடகை கொடுக்கிறேன் என்று சொன்னாலும்கூட, எப்பொழுது வந்தாலும் அந்த வாடகை கொடுக்கிறேன் என்று சொன்னாலும்கூட, சட்டசபை ஆரம்பிக்கின்ற தேதி 8 மணிக்குள் சாவி வாங்காவிட்டால் உடனடியாக கான்ஸல் செய்துவிடுகிறார்கள். அதனால் சில அங்கத்தினர்கள் வெளியில் ஹோட்டல்களில் இடம் கிடைக்காமல் தவிக்கும்படியான நிலை ஏற்படுகிறது. கோஷன் பிளாக்கில் உள்ள வீடுகளை சட்டசபை அங்கத்தினர்களில் சிலருக்கு வாடகைக்கு விடப்பட்டும் சர்வீஸ் கமிஷன் ஆபீஸும், அப்பெலெட் டிரிபியூனல் ஆபீஸும் இயங்குவதற்கு இடத்தைக் கொடுத்துவிட்டு, இன்றைக்கு அங்கத்தினர்கள் தங்க இடம் இல்லாமல் கஷ்டப்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கோஷன் பிளாக்கில் 4 வீடுகள் காலி இருந்ததற்கு 45 அங்கத்தினர்கள் அந்த வீடுகளைக் கேட்டிருந்தார்கள். ஆகையால் அவர்களுக்குள்ளே லாட் போட்டு கொடுக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. அந்த வீடுகளை வாடகைக்கு கொடுப்பதைவிட அந்த இடங்களை அறைகளாகத் தடுத்து சட்டசபை அங்கத்தினர்களுக்குக் கொடுத்தால் எல்லோரும் ஹாஸ்டல் இருக்கும் இடத்திலேயே இருப்பதற்கு வசதியாக இருக்கும், தபால் வருவதற்கும் வசதியாக இருக்கும். மற்ற எல்லாவற்றிற்கும் வசதியாக இருக்கும். பின்னாலே புதிய ஹாஸ்டல் கட்டி வசதி செய்யப் போவதைவிட இப்பொழுது அவர்களுக்கு உடனடியாக ஏதாவது வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"பஞ்சாயத்து ராஜ்" வந்தபிற்பாடு, சேர்மன்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு கிராமங்கள் புனருத்தாரணம் செய்யப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் வடிவேலு அவர்கள் பேசும்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து தப்பான புள்ளி கணக்குகளைக் கொடுக்கிறார்கள் என்று

சொன்னார்கள். எந்தத் தபாலும் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அன்னியில் சர்க்காருக்கு வருவது கிடையாது. முதலில் எந்தத் தபாலையும் அவர்தான் பெற்றுக்கொள்கிறார், படித்துப் பார்க்கிறார். புள்ளிவிவரங்கள் சரியாக இல்லையென்றால் ஏன் அதில் அவர்கள் கையெழுத்துப் போடவேண்டும்? அங்கே கையெழுத்துப் போட்டுவிட்டு, இங்கே வந்து தப்புக்கணக்கு என்று சொன்னால், அது சரியல்ல. இவ்வளவு பெரிய நிர்வாகத்தை அவர்களிடம் ஒப்படைத்து அதைச் சரியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லும்பொழுது, அவர்கள் அம்மாதிரி பேசினால் தங்கள் பொறுப்பை தட்டிக் கழித்துவிட்டு இங்கே அம்மாதிரி பேசுவதாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை.

நான்-அபிஷியல் மெம்பர்களாகிய சட்ட சபை அங்கத்தினர்களை அங்கே மெம்பர்களாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வோட்டு உரிமை கிடையாது. வந்தால் வரலாம், போனால் போகலாம், ஒரு டம்மி பேப்பர் வெயிட் மாதிரி அங்கு போய் உட்கார்ந்திருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான். ஆகவே அவர்களுக்கும் வோட்டு உரிமை இருக்கக்கூடிய நிலையில் இந்த சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லோகல் அட்மினிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்டில் வேலை செய்யக்கூடிய அத்தனை ஊழியர்களும் இன்னும் ரெகுலரைஸ் செய்யப் படாமலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. அதனால் அவர்களை ஒரு முனிசிபாலிடியிலிருந்து மற்ற முனிசிபாலிடிகளுக்கு மாற்ற முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்களே ஒரே இடத்தில் பல வருஷங்களாக இருந்துகொண்டிருப்பதால், அந்த இடத்தில் நிர்வாகத்தை நடத்தக்கூடிய சர்வாதிகாரிகளாக அவர்கள் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சேர்மனோ, முனிசிபல் கவுன்சிலர்களோ எதுவும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் வாழையடி வாழையாக யார் வந்தாலும், யார் வராவிட்டாலும் அவர்கள் அந்த இடத்திலேயே இருக்கிறார்கள். ஆகையினால் அவர்களை ரெகுலரைஸ் செய்து, அவர்களுக்கு சரியான சம்பளம் கிடைக்கக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கிராமந்திரங்களில் சமுத்திரக் கரை ஓரமாக மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று எத்தனையோ தடவைகள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். பலதடவை அமைச்சர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். 1947-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரோடு சின்னங்குடி ரோடு. அது சரித்திரப் பிரசித்திபெற்றுவிட்டது. நானும் இதுபற்றி சமீபத்தில் அமைச்சர் அவர்களிடம் சொன்ன போது, அமைச்சர் அவர்கள் ரோடு போடுவது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வேலையை சாங்ஷன் பண்ணியாய் விட்டது. நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு அதைப்

பார்வையிட்டாய்விட்டது. அப்படியிருந்தும், அதை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டால், மீனவர்கள் அவர்கள் தலையிலே சுமந்துகொண்டுதான் செல்ல வேண்டியிருக்கிறது. பாதுகாப்பு விஷயத்தில் நாம் எவ்வளவு அக்கரை செலுத்துகிறோமோ, அதே போன்று உணவு உற்பத்தி விஷயத்திலும் நாம் அக்கரை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே இம்மாதிரியான ரோடுகளை உடனடியாகப் போட்டு வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. நா. ராஜாங்கம்: தலைவர் அவர்களே, இன்று இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்று நமது சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையிலே வரிகள் போடவில்லை என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தாலும், உண்மையிலேயே மக்கள் வரி கொடுக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் போட்டு இருக்கும் வரிகளிலிருந்து நம்முடைய மக்கள் எவ்வளவு தூரம் வரி செலுத்த வேண்டி வரும் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. நமது நிதி அமைச்சர் அவர்கள் உள்ளபடியே ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிற காரணத்தால், இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவருடைய நீண்ட கால அனுபவம்தான். இந்த அறிக்கையிலே புது வரிகள் ஒன்றும் போடாமலேயே துண்டு விழுகிற ரூபாய் 2 கோடியே 74 லட்சத்தை சமாளிக்க முடியும் என்று கருதித்தான் வரி போடாமல் விட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்பொழுது, இப்பொழுது வரியே போடாவிட்டாலும், இடைக்காலத்தில் புதிய வரிகள் போடவேண்டிய நிலைமை ஏற்படும் என்ற கருத்தைத்தான் நான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், மத்திய அரசாங்கம் ஏராளமான வரிகளைப் போடும்பொழுது, மாநில அரசாங்கம் வரிகளைப் போட்டால் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்று கருதித்தான் வரி போடாமல் விட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அத்துடன்கூட துண்டு விழுகிற ரூபாய் 274 லட்சத்தை ஒரு உபரி பட்ஜெட்டாக ஆக்க முடியும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. புதிய வரிகள் விதிக்காமல் இருந்தும் பற்றாக்குறை பட்ஜெட்டை ஒரு உபரி பட்ஜெட்டாக ஆக்க முடியும் என்று சொன்னதிலிருந்து இப்பொழுது இல்லாவிட்டாலும் இனிமேல் புதிய வரிகள் வருவதற்கு இடம் இருக்கிறது என்ற கருத்தைத்தான் நான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

இந்த நிலையிலே திட்டச் செலவு ஏதாவது குறைந்துவிடுமோ என்று எதிர்பார்த்த மக்களுக்கு, திட்டங்கள் அத்தனையும் நிறைவேறும் என்ற நம்பிக்கை அளிக்கும்பொருட்டு திட்டத்தின் செலவினங்களைக் குறைக்காமல் விட்டிருக்கிறார்கள். இதைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றாலும், எந்த வேலைகளுக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வேலைகள் சரியான முறையில் நிறைவேறாமல், மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு

பலன் கிடைக்காமல் இருக்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. விவாதத்திற்கு வேண்டுமானால் எதையும் சொல்லலாம். அமைச்சர்களுடைய நல்லெண்ணத்தைப்பெற வேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் சொல்ல முடியும் ஆனால் உண்மையிலேயே அமைச்சர்களுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் ஆளுங் கட்சியிலே இருக்க முடியாது. அவ்வப்பொழுது நடக்கிற தவறுகளை அமைச்சர்களிடத்தில் எடுத்துச்சொல்லுவதற்கு ஒரு வாய்ப்பினைப் பெற வேண்டும் என்று நினைத்து அமைச்சர்களை நாங்கள் சந்திக்க முயலும்பொழுது, அவ்வாறு சந்திக்க முடியாதபடி தடுக்கிறார்கள் சிலர் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளாமல் இருக்கமுடியாது. அப்படி சந்திக்க விரும்புவது எதற்காக வென்றால், நடக்கிற தவறுகளை தனியாக அமைச்சர்களிடத்தில் சொல்லவேண்டும் என்பதற்காகத்தானேயொழிய, அப்படிச் சொல்லி தலைமை பீடத்தில் இடம் பெறவேண்டும் என்பதற்காக அல்ல. உதாரணமாக நான் ஹரிஜன நல இலாகா அமைச்சர் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று நினைத்தபொழுது, ஹரிஜன நல இலாகாவிலே ஒட்டிக்கொண்டிருக்கும் சிலர் என்னைப் பார்க்க முடியாதபடி செய்துவிட்டார்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் தலைவர் அவர்களே, நான் தென் ஆற்காடு ஜில்லாவிலே பல முறை சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். ஒரு நாள் சிதம்பரத்திலுள்ள மடத்திற்குச் சென்று கனம் அங்கத்தினரைப் பார்த்தேன். யாரும் அவரைத் தடுக்கவில்லை. அப்படித் தடுத்ததாகவும் அவர் என்னிடம் சொல்லவில்லை. யார் வேண்டுமானாலும் என்னைப் பார்ப்பதற்கு நான் இடையூறாக இருக்க மாட்டேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் சொல்லுகிற மாதிரி நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நா. ராஜாங்கம் : உண்மையிலேயே அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் அவரைச் சூழ்ந்திருக்கிற இடம் அப்படி இருப்பதால்தான், அவருக்குத் தெரியவில்லை.

சமீபத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையைக் குறித்து விசாரித்து அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட் அனுப்புவதற்காக ஒரு அதிகாரியை தென்னாற்காடு மாவட்டத்திற்கு அரசாங்கம் அனுப்பித்து இருந்தார்கள். எல்லாக் கருத்துக்கொண்டவர்களையும் அழைத்து,. அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு, அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான்: ஹரிஜன ஆபீசுக்குப் பக்கத்திலேயே நாங்கள் இருக்கிறோம். சர்க்காராலே அனுப்பப்பட்ட ஒரு கமிஷன் எனக்குக் கூட தெரியாமல், காங்கிரஸ் சார்பில் இருக்கிற ஹரிஜனங்களை மட்டும் கலந்து அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறது என்று சொன்னால், என்போன்றவர்களுடைய கருத்தைக் கேட்டால்

ஜாதியைக் காட்டிக்கொடுத்துவிடுவோம் என்று நினைக்கிறார்களா? நமது அமைச்சர் அவர்கள் ஹரிஜன நல இலாகா பொறுப்பை ஏற்பதற்கு முன்னர், இந்த இலாகாவிலே நான் 10 ஆண்டு காலமாக சேவை செய்து வந்திருக்கிறேன். இந்த ஹரிஜன நல இலாகாவின் முழு அந்தரங்கமும் எனக்குத் தெரியும். மதிய உணவுக்குத் திட்டம் போட்டுக்கொடுத்தவன் நான். என் கையாலேயே இப்பொழுது இருக்கும் டைரக்டருக்கே நான் எழுதியிருக்கிறேன். ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வாங்கிக்கொடுப்பது, ரயில்வே கட்டணச் சலுகை வாங்கிக்கொடுப்பது, போக்குவரத்துச் சலுகை வாங்கிக்கொடுப்பது, எதை எதைச் சேர்த்தால் சாப்பாடு நன்றாக இருக்கும் என்பன போன்ற காரியங்களில் நான் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறேன். இப்படி என்போன்று பழக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்தும், நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறோம் என்று நினைத்து எங்களை விட்டுவிட்டது அவ்வளவு சரியல்ல. ஹரிஜன நல இலாகாவைப் பொறுத்தவரையில், ஜில்லாவாரியாக இருந்தாலும் சரி, மாகாணரீதியாக இருந்தாலும் சரி, அமைக்கப்படுகிற கமிட்டிகளிலே எதிர்த்தரப்பிலே உள்ள யாரையும் கூப்பிடுவதில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி நான் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. காங்கிரஸ் கட்சியில் இருக்கிற ஹரிஜன மக்கள் எங்களிடம் வருகிறார்கள். அதைப்போன்று எங்கள் கட்சியில் இருக்கிறவர்களும் காங்கிரஸ்காரர்களிடத்தில் போகிறார்கள். நான் மாணவனாக இருக்கும்போதே நமது நிதி அமைச்சர் அவர்கள் மந்திரியாகிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் இலாகா எப்படி இருந்தது என்று எங்களுக்கெல்லாம் தெரியும். இப்பொழுது இருக்கும் நிலைமையில், காங்கிரஸ் கட்சியிலே உள்ள ஹரிஜனங்கள் தான் ஹரிஜனங்கள். காங்கிரஸ் கட்சியைப் பின்பற்றாத ஹரிஜனங்கள் வேறு ஒரு ஜாதியாக ஆகிவில்லை. பல இடங்களில் அதில் விலை கொடுத்து வாங்கிய விடுவார்களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. தயவு செய்து நான் குறை கூறுகிறேன் என்று யாரும் நினைக்கவேண்டாம். கனம் அமைச்சர் அவர்கள் செய்கிறார்களோ அல்லது அவருடன் கூட வருகிறவர்கள் செய்கிறார்களோ என்பது எனக்குத் தெரியாது.

கனம் திரு. பூ. கக்கன் : திரு. ராசாங்கம் அவர்களை இன்று நேற்றல்ல பல்லாண்டுகளாகவே எனக்குத் தெரியும். சென்ற தேர்தலிலே அவர் காங்கிரசின் சார்பாக டிக்கெட் கேட்டார். ஆனால் கொடுக்கப்படவில்லை. இந்த ஸ்தாபனத்திற்காக அவர் செய்த வேலையெல்லாம் எனக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. நா. ராஜாங்கம் : காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் நான் இதைத்தான் சொல்லுவேன். என்னுடைய நேர்மையான கருத்து எதுவோ அதைச் சொல்லுவதில் எனக்குப் பயம் கிடையாது. எனக்குப் பின்னர் அரசியலில் புகுந்தவர்கள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள், நான் எப்படி இருக்கிறேன் என்பதைப் பார்த்தாலே இது தெரியவரும். எனது தொகுதியைப் பொறுத்த வரைக்கும் சிலவற்றை சொல்லிவிட்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்படும் தொகை

12.00 noon.

எதுவாக இருந்தாலும் அது நல்ல முறையில் செலவிடப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் வலியுறுத்திச் சொன்னேன். விவரமாக ஹரிஜன நல இலாகா மானியத்தின் போது பேசலாமென்று விட்டுவிட்டு, என்னுடைய தொகுதியி லுள்ள சிலவற்றைமட்டும் சொல்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் நான் சில திட்டங்களைச் சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறேன். நெய்வேலியிலிருந்து பாய்கிற தண்ணீரைக் கிழக்கு முகமாகத் திருப்பிவிட ஒரு வாய்க் காலை வெட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதை இப்பொழுது எடுத்துக்கொண்டால் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் அந்தக் காரியங்களில் ஒத்துழைக்க முன்வரும். சர்க்கார் மான்யம் கொடுப்பதாகச் சொன்னால் போதும், அந்த நீர்ப்பாசனம் நிறைவேறிவிடும். பரவானாற்றிலும், செங்கால் ஓடையிலும் பாலம் கட்டவேண்டும் என்றும், சென்னப்ப நாயக்கன்பாளையத்தில் மேம்பாலம் கட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருந்தேன். அவைபற்றி நடவடிக்கை எடுத்திருப் பதாகத் தெரியவில்லை. மேம்பாலம் இல்லாததால், இரண்டு பக்கத்தில் இருக்கும் பஸ்கள் இரு புறமும் நின்றுவிடுகின்றன. ஆகவே, பாலங்கள் கட்டும் காரியங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிஞ்சிப்பாடியிலிருக்கும் ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளி . . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. ஆர். கோவிந்தராஜுலு நாயுடு:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார். அதை நான் ஆதரித்து, அதன் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

எனக்கு முன் பேசிய அனேக கனம் அங்கத்தினர்கள், விவசாயி களுக்கு அரசாங்கம் நல்ல பல உதவிகள் செய்து தரவேண்டுமென் றும், தானியங்களின் விலை குறைந்திருப்பது விவசாயிகளைப் பாதிக் கிறது என்றும் சொன்னார்கள். அரசாங்கம் செய்து வரும் உதவி கள் வரவேற்கத்தக்கது தான். விவசாயிகளுக்கு நல்ல ஆதரவு களைத் தரவேண்டும். விவசாயிகள் வாங்கும் பொருள்கள் நியாய விலைக்குக் கிடைப்பதில்லை. அதுவும் வேண்டியபோது கிடைப்ப ட்ராக்டர்கள், ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்காத காரணத் தால், வேலை செய்யாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஸ்பேர் பார்ட்ஸ்களை வெளி தேசத்திலிருந்து வரவழைத்தோ அல்லது நம் தேசத்திலேயே உற்பத்தி செய்தோ இந்தப் பற்றுக்குறையைப் போக்கி, ட்ராக்டர்கள் நல்ல முறையில் வேலைசெய்யும்படிச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விலைவாசி குறைந்திருப்பதற்கான காரணங்களைப் பல பேர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிக உற்பத்திதான் இதற்குக் கார ணம் என்று சிலர் சொன்னார்கள். அதிக உற்பத்திதான் காரணம் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. உற்பத்தி செய்த தானியங்களை அடகு வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது விற்பதற்குக் கிடங்கு வசதிகளும், கடன் வசதிகளும் இல்லாத நிலையில், உற்பத்தி செய்தவுடனே மார்க்கெட்டுக்கு பல பேர்கள் ஏக காலத்தில் அனுப்பிவைக்கும் காரணத்தால் விலை குறைந்து விட்டிருக்கிறது இதற்கு முன்பு தங்க நகைகளை அடகு வைத்துக் கடன் வாங்கி சில காலம் தள்ளிக் கொண்டிருந்துவிட்டு, நல்ல விலை கிடைக்கும்போது தானியங்களை விற்பதுண்டு. தங்கத்திற்கு முன்பிருந்த விலையில் பாதியாக இப்பொழுது குறைந்திருக்கும் காரணத்தால், அதை அடகு வைத்துக் கடன் வாங்கி விவசாயம் செய்வதற்கும் சந்தர்ப்பம் இல்லாததும் தானிய விலை குறைந்திருப் பதற்குக் காரணமாகும். தாலூகா மார்க்கெடிங் சொஸைட்டி கள் இதற்கு முன்பு நெல் மீது கடன் கொடுத்துக்கொண்டு வந்தார் கள். இப்பொழுது அந்த சொஸைட்டிகளின் கோடௌன்களில் தானியங்களை வைத்தால்தான் பணம் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால், சொஸைட்டியே நெல் முழுவதையும் வைத்துக்கொள்வ தற்குக் கட்டிடங்கள் கிடையாது. மற்ற கோடௌன்களில் வைக்கப்பட்டால் கடன் கொடுக்க முடியாது என்ற காரணத்தால், கடன் வசதி இல்லாமலிருக்கிறது. இதற்கு முன்பு சுமார் ஒவ் வொரு தாலூகாவுக்கும் பத்தாயிரம் ரூபாய் வரைக்கும் கடன் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இவ்வருஷம் கடன் கொடுக்க முடியாது என்று சொன்ன காரணத்தால், உற்பத்தியான தானி யத்தை உடனடியாக மார்க்கெட்டுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டு விட்டது. இன்னுமொரு காரணம், மில்காரர்கள் பத்து சத விகித நெல்லை அரசாங்கத்திடம் ஒப்புவிக்கவேண்டும் என்று சொன்னதால், அவர்களும் நெல்லை வாங்கி வைத்து விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதை நிறுத்தி யிருக்கிறார்கள். இப்படிப் பல காரணங்களால் நெல் விலை குறைந் திருக்கிறது. இவ்வாறு நெல் விலை குறைந்திருக்கும் நிலைமையில், விவசாயிகள் வேறு ஏதாவது தொழில்களைச் செய்யலாமா என்று யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை நீடிக்குமானால் உணவு உற்பத்தி குறைவதற்கான சந்தர்ப்பம் ஏற்படக்கூடும். ஆகவே, அரசாங்கம் கவனித்து, விவசாயி களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அந்த வகையில் இப்பொழுது ஏராளமான தொகை இந்த பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைத் சரியான முறையில் வினியோ கிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விவசாயத்திற்கு முக்கியமானவை கால்நடைகள். கால்நடை களை நல்ல முறையில் நம் மாநிலத்தில் வளர்க்க வேண்டும். நமது மாநிலத்திற்குப் பல மாநிலங்களிலிருந்து பசுக்கள் வருகின்றன. உதாரணமாக, சென்னைக்கு வடக்கே இருந்தும், பங்களூரிலிருந்தும் வருஷத்திற்கு 4,000, 5,000 மாடுகள் வருகின்றன. கறவை நின்ற

வுடனே, மாடுகளைக் கவனிக்காமல், பராமரிக்காமல் இருந்துவிடக் கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. மாதவரத்தில் ஒரு பால் பண்ணையை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும், ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய மாட்டை, கறவை நின்றவுடனே, ஐம்பது, நூறு ரூபாய்க்குக் கூட விற்று விடுகிற நிலைமையைப் பல இடங்களில் பார்க்கிறோம். கறவல் நின்றவுடனே, மேய்ச்சலுக்கு இடம் இல்லாத காரணத்தாலும், சென்னையிலேயே லைசென்சுதார்களாக இருக்கவேண்டுமென்று சொன்ன காரணத்தாலும், அந்த மாடுகளை அவர்கள் பராமரிக்காமல், குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். மாடுகளும் பராமரிப்பு இல்லாமல் கெட்டுவிடுகின்றன. இதில் சம்பந்தப்பட்டவர்கள் என்னிடம் ஒரு முறை சொல்லிக்கொண்டிருந்தார்கள். பல தடவை அரசாங்கத்திற்கும் சொல்லியிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். கறவை நின்றவுடனே மாடுகளுக்கு மேய்ச்சல் இடங்களுக்கு வசதி செய்துகொடுத்தால், மாடுகள் சிறந்த முறையில் வளருவதற்கு முடியும். நீர் வசதி இருக்கும் இடத்திற்கு அருகில் மேய்ச்சல் வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சென்னைக்குத் தண்ணீர் சப்ளை செய்வதற்கு இரண்டு ஏரிகள் இருக்கின்றன. சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டுவருவதற்கு அரசாங்கம் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அங்கிருக்கும் விவசாய நிலங்களுக்கு விட்டுக்கொண்டிருந்த நீரை மாற்றி, நகரத்தின் குடி தண்ணீருக்காகக் கொடுக்கப்போவதாக அறிக்கை விட்டு, அதை ஆர்ஜிதம் செய்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் இதில் வேகமாக வேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்குள்ள 30 கிராமங்களில் 7,500 ஏக்கர் நிலம், இரண்டு போகம் பயிர் செய்துகொண்டிருந்த நிலம், இருக்கின்றன. முப்பது ஆயிரம் டன் உணவுத்தானியங்களை எடுக்க முடியும். அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமலே, சென்னைக்குத் தண்ணீர் கொடுப்பதில் தடங்கல் இல்லாமலிருக்கும். அரசாங்கம் இம்மாதிரி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சுமார் நான்கு வருஷங்களுக்குள்ளே, வேண்டிய நடவடிக்கை எடுத்து, நில ஆர்ஜிதமில்லாமல், தண்ணீர் உரிமையை எடுத்துக்கொண்டால் தக்க தண்ணீர் நஷ்டஈட்டை மாத்திரம் பெற்றுக்கொண்டு நிரந்தர கிருஷ்ணா ஆற்று திட்டம் வந்தபின் விவசாயிகளுக்கு தண்ணீர் உரிமையும் விட்டுக் கொடுக்கச் சித்தமாக இருக்கிறார்கள். அரசாங்கம் கண்டிப்பாக விட்டுக் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் கூறும் நேரத்தில் இதற்கு ஏதாவது தைரியமாகப் பதில் சொல்வார் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன்.

பகுதியில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று அங்குள்ளவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அங்கு ஏராளமான மைதானங்கள் இருக்கின்றன. டச்சுக்காரர்கள் அங்கே செட்டில் ஆகியிருந்தார்கள், அது ஒரு துறைமுகப்பட்டினமாக இருந்தது என்பதற்கு டச்சுக்காரர்களுடைய சிலா சாசனம் இருக்கிறது. அங்கு நம் அரசாங்கம் ஒரு பெரிய ரோடு போட்டு போக்குவரத்து சாதனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்குள்ள முப்பதாயிரம், நாற்பதாயிரம் மக்கள் பிழைப்பதற்கேற்ற வகையில் தொழிற்சாலையை நிறுவவேண்டும். அங்கு கிளிஞ்சல் கிடைக்கிறது. சிமெண்ட் தொழிற்சாலையொன்றை அங்கு ஏற்படுத்தலாம். இன்டஸ்ட்ரீஸ் இலாகா கவனித்து, பாய் பின்னுவது போன்ற தொழில்களையும் ஏற்படுத்தலாம். அந்தப் பிற்போக்கான இடத்தைப் பரிசீலனை செய்து, பிற்பட்ட மக்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. என். ராமசாமி உடையார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றும் முறையில் ஒன்றையும் குறைக்காமல், புதிய வரிகள் எதுவும் போடாமல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டை வரவேற்பதுடன் சர்க்காரைப் பாராட்டுகிறேன். குறிப்பாக விவசாயத்துறையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக வழிவகைகள் பல செய்திருக்கிறார்கள். பெரிய பெரிய திட்டங்களை எல்லாம் ஏற்கனவே பூர்த்தி செய்தாகி விட்டது. இன்னும் சில திட்டங்களை பெரிய பெரிய அதிகாரிகள் நேரிடையாக இருந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அது போலவே சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்திருந்தாலும், அதற்கென்று பணம் ஒதுக்கியிருந்தாலும் அவற்றை நேரிடையாக இருந்து கவனித்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. சேலம் ஜில்லாவில் வேளான்குளம் என்ற ஏரியைக் கட்ட வேண்டுமென்று எட்டாண்டுகளாக முயற்சி எடுக்கப்பட்டது. ஆயினும் கடைசியாக அது கைவிடப்பட்டது என்று அறிகிறேன். காரணம் அதற்குத் தண்ணீர் வரவில்லை என்கிறார்கள். மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டம் தண்ணீர் வசதியின்றி கஷ்டப்படுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் கூட வாங்கவேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். எங்களிடத்தில் செலவுக்கேற்ற லாபம் இருக்காது என்பதாக எல்லாம் கணக்கைக் காட்டுவதில் என்ன செய்வது? செலவுக்குத் தகுந்த வருவாய் இல்லாவிட்டாலும் அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அதிகமாக இல்லாவிட்டாலும் அந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்ற சிறு பாசனத் திட்டங்களையும் இந்த மாவட்டத்தில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

[திரு. என். ராமசாமி உடையார்] [5th March 1963

இந்த நிலையில் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துகளிடம் கொடுக்க இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். கொள்கை அளவில் இது வரவேற்கக்கூடிய திட்டம் என்றாலும் அவர்களிடையே போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் அவ்வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே அரசாங்கமே ஏற்கனவே இருப்பதுபோல தனியாக அத்திட்டங்களுக்கு வழிவகை செய்யவேண்டும். ஆங்காங்கு பரவலாக எல்லாக் கிராமங்களும் நன்மை அடையும்படியாகச் செய்யவேண்டும். அது போலக் கிணறுகள் வெட்டுவதற்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். மேலும் நான் முன்பு குறிப்பிட்டதுபோல பகல் நேரத்தில் மின்சார சப்ளை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் தொழில்துறையில் நமது மாகாணம் பலவகையில் முன்னேறிக்கொண்டிருக்கிறது. சேலத்தில் மட்டும் தொழில் வளர்ச்சிக்குப் பெரிய திட்டம் ஒன்றும் வகுக்கப்படவில்லை. அங்கு நூற்றுக்கு 75 பேர்கள் விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். மாகாணத்திலேயே அதிக உற்பத்தியைச் செய்து காட்டியிருப்பது சேலம் என்றாலும் மிகவும் கஷ்டமான முறையில் அவர்கள் அவ்விவசாயத்துறையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு நண்பர் குறிப்பிட்டபடி நகரத்தில் வாழ்வு இருக்கிறதோ இல்லையோ விவசாயத் தொழிலைவிட்டு நகரத்திற்கு வந்து வேறு வேலையாவது தேடிக் கொள்ளலாம் என்று வருகிறார்கள். ஆகவே சேலத்தில் உப தொழிலாக விவசாயிகள் செய்வதற்குப் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். கொஞ்சம் இரும்புத் தொழிற்சாலையில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அந்த இரும்புத் தொழிற்சாலை சேலத்தில் அமையுமா? நெய்வேலியில் அமையுமா? இல்லையென்றால் வேறு எங்காவது அமையுமா? என்று தெரியவில்லை. இப்படி அந்த இரும்புத் தொழிற்சாலை மிதந்து கொண்டிருக்கிறது. அதை நிச்சயமாக சேலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில் சேலம் மாவட்டம் ரொம்பப் பின்தங்கியிருக்கிறது. நூற்றுக்கு 20 பேர்கள் கூடப் படித்தவர்கள் இல்லை. நாம் மொத்த வருமானத்தில் 6-ல் ஒரு பங்கு கல்விக்காகச் செலவிட்டுக்கொண்டிருக்கிற நேரத்தில் சேலம் இப்படிப் பிற்பட்ட நிலையில் இருப்பதை நீக்குவதற்குத் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ப்ளாக்குகளை ஏ.பி.ஸி.டி. என்று பிரிப்பது போலவே கல்வித்துறையில் இந்த மாவட்டங்களின் நிலையை உத்தேசித்துப் பிரித்து சேலத்திற்கு அதிகச் சலுகை அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். பொது சுகாதாரத்தைப் பொறுத்தவரையில் கிராமங்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன. பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, ரோடு போன்றவைகளுக்குச் செலவிட்டபிறகு மீதியிருந்தால் பொது சுகாதாரத்திற்குச் செலவிட நினைக்கிறார்கள். மீதி இருப்பதும் இல்லை. பொது சுகாதாரம் கவனிக்கப்படுவதும் இல்லை. ஆகவே

5th March 1963] [திரு. என். ராமசாமி உடையார்]

சர்க்காரே கிராமப் பொதுசுகாதாரத்தைக் கருதி சாக்கடைத் திட்டத்தை எல்லாம் நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன இலாகாவைப் பற்றி ஒரு வார்த்தை. அவர்களுக்கு நிறைய வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் அந்தத் திட்டத்தையும் துரிதப்படுத்தி, நிலத்தையும் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் தாலுக்காவில் முதன்முதலாக 1950-இல்தான் ஹைஸ்கூல் ஏற்படுத்தப்பட்டது. நகரம் நீங்கலாக தாலுகாவில் இப்போது 15 பள்ளிகள் இருக்கின்றன. அங்கே 2 கல்லூரிகள் இருக்கின்றன. பெண் கல்லூரி ஒன்று உள்ளது. இன்னும் அரசாங்கச் சார்பில் நிறைய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித்தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை 'வரவேற்கிறோம்' என்றும், 'நிதியமைச்சரைப் பாராட்டுகிறோம்' என்றும் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் புதிய வரி எதுவும் இல்லை என்பதில் ஆச்சரியமான நிலைமை எதுவும் இல்லை. ஏனென்றால் இதற்கு முன்பு இருந்த நிதியமைச்சர்களும், இப்போதுள்ள நிதியமைச்சர் அவர்களும் இதற்கு முன்பாகப் பல வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக ஏழை விவசாய மக்களும், நடுத்தர மக்களும் இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும் நிலைமையில் எதுவும் முன்னேற்றம் இல்லை. இதற்கு முன்பு விடப்பட்ட சில வரிகளைக் கூட கடந்த ஆண்டு துணை பட்ஜட்டில் போட்டிருக்கிறார்கள். சென்னை நகர வீடு கட்டும் மனைகளுக்கு வரி, விவசாயிகளுக்கு நிலவரி, நீர்வரி ஆகியவையும் போடப்படுகின்றன. இனி புதிதாக வரி போட வேண்டுமென்றால் பணக்காரர்களுக்குத்தான் வரி போட வேண்டும். அந்த இக்கட்டான நிலைமை இப்போது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தானோ என்னவோ இப்போது வேறு புது வரி ஏதும் போடாது விட்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஏற்கனவே விவசாயப் பெருங்குடி மக்கள், நடுத்தர மக்கள் ஆகியோரின் எதிர்ப்பையும், வெறுப்பையும் பெற்றிருக்கும் சர்க்கார், பணக்காரர்களுடைய வெறுப்பையும் ஏன் சம்பாதித்துக் கொள்ளவேண்டுமென்ற காரணத்திற்காகப் புது வரி போடாமல் இருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இப்படி வரிகளில் இருந்து வரக்கூடிய வருமானத்தைக் கொண்டு இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன் முக்கிய லட்சியமாகக் கருதப்படக்கூடிய கிராம

அபிவிருத்தியும், கிராமப் பொருளாதார வளர்ச்சியும் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கிராமப்புறங்களில் குறிப்பாக ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளில் சுகாதாரக் கேடான நிலைமை இருந்து வருகிறது. அவர்கள் மிக நெருக்கடியான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கு வாழும் மக்களுக்குப் பல தொத்து வியாதிகள் பரவக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. சேரி அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றாலும், அவை ஓரளவுக்குத்தான் நிறைவேறியிருக்கின்றன. கூட்டுறவு முறையில் நம்பிக்கையுள்ள நமது சர்க்கார், எப்படி நகரப் புறங்களில் வீட்டு மனை வாங்க, வீடு கட்ட கூட்டுறவு சொசைடிகள் மூலம் கடன் முதலியவைகள் கொடுத்து உதவி செய்து வருகிறார்களோ, அதே முறையில் கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கும் சர்க்கார் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட சீரான பாதை வசதியையும், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரையும் வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிராம வீடு கட்டும் திட்டமானது 'பைலட் ஸ்கீம்' ஆகப் போடப்பட்டது. செங்கல்பட்டு மாவட்ட டி.டி.ஸி. கூட்டத்தில்கூட அதைப் பற்றிய விளக்கங்களும், பிளான்களும் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால், அந்தத் திட்டம் இன்னும் நடைமுறையில் வரவில்லை. அந்தத் திட்டத்தை மத்திய சர்க்காரிலிருந்து வரும் தொகையைப் பெற்று நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு முறையின் மூலம்தான் நம்முடைய லட்சியத்தை அடைய முடியும் என்ற திட்டவட்டமான முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். கிராமப்புறங்களில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்த ஊரில் இருக்கும் பெரிய மனிதர்களின் கையில் சிக்கியிருக்கும் காரணத்தால், அந்தச் சங்கங்களின் மூலம் பெறக்கூடிய உதவித் தொகைகள், பல்வேறு கடன் வசதிகள் எல்லாம் ஏழை விவசாயிகளால் பெற முடியாத நிலைமை இருந்து வருகிறது. அந்தச் சங்கங்களில் ஷேர்ஹோல்டர்களாக இருப்பவர்களுக்கு மட்டுந்தான் அந்தக் கடன் வசதிகள் எல்லாம் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால் கிராமத்திலிருக்கும் விவசாய மக்கள், குறிப்பாக ஹரிஜன மக்கள் அந்தக் கடன் திட்டத்தினால் இதுவரை எந்தவிதப் பயனையும் பெறவில்லை. கிராம மக்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தினால் பயன்பெறக்கூடிய வகையில் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே நீண்ட கடற்கரை இருக்கிறது. அந்தக் கடல், நிறைந்த மீன் வளம் உடையதாக இருக்கின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மீன் வளத்தைப் பெருக்க மீனவர்களுக்கு விசைப்படகுகளை அளிப்பதோடு நைலான் வலைகளையும் வாங்கிக் கொடுக்கவேண்டும். மீன்

வளத்தைப் பெருக்குவதன்மூலம் ஓரளவு உணவுப் பற்றாக்குறையைப் போக்கமுடியும். இந்த மீன் பிடிப்புத் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் கடற்கரை ஓரத்தில் மிக நெருக்கடியான நிலைமையில் வசித்து வருகிறார்கள். அவர்கள் வசிக்கும் குப்பங்கள் சுகாதாரக் கேடான நிலைமையில் இருக்கின்றன. அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் ஊருக்கும் இடையே சரியான பாதை வசதி கிடையாது. மேலும் அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதியும், அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்கக்கூடிய வசதியும் கிடையாது. அவர்கள் பிடிக்கும் மீன்களைக் கொண்டு வந்து நகரப் புறங்களில் விற்பதற்கு வசதியாக பாதைகள் ஏற்படுத்தித் தருவதோடு, மற்ற வசதிகளையும் அவர்களுக்குச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் உள்ள மருத்துவ மனைகளைப்பற்றிப் பல கேள்விகள் இந்த மன்றத்திலே கேட்கப்பட்டன. கிராமப்புறங்களில் உள்ள மருத்துவ மனைகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களைத்தான் நியமிக்கவேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத்தான் கிராம மக்கள் கேட்கிறார்கள் என்று சுகாதார அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பஞ்சாயத்து யூனியன்மூலம் நிதிவசதி பெற்று மருத்துவ மனைகள் நடத்தப்பட்டு வருவதால் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து மக்கள் அங்கு வந்து மருத்துவ வசதி பெற்றுப் போக வேண்டியிருக்கிறது. அதிலே சிரமங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. மேலும், மருத்துவ மனைகளுக்குக் குறித்த காலத்தில் மருந்துகள் கிடைப்பதில்லை. அதே சமயத்தில் டாக்டர்கள் பற்றாக்குறையும் இருந்து வருகிறது. இந்த நிலைமையை இப்படியே அரசாங்கம் விட்டுக் கொண்டிருந்தால் கிராம சுகாதார நிலைமை பாதிக்கப்படும். ஆகவே, மருத்துவ வசதிகளைப் பெருக்குவதோடு, போதிய டாக்டர்களைப் பெறும் முயற்சியில் சுகாதார அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதற்கான யோசனை சர்க்காருக்கு இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு நகரத்தில், ஏறக்குறைய 35 லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்து மாவட்ட மருத்துவ மனை ஒன்று விரிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. கட்டடத்தைச் சுற்றியும் 50 ஏக்கருக்கு மேல் நிலப்பரப்பு இருக்கிறது. அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தினால் டாக்டர்கள் பிராக்டிகல் ஸ்டடீஸ் படிக்கும் அளவுக்கு மருத்துவ மனையும் இருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த மருத்துவக் கல்லூரியை அங்கே ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெண்கள் கல்விக்காக நம் நிதி அமைச்சர் அவர்கள் எப்போதுமே பரிந்து பேசுவது வழக்கம். பெண்கள் கல்விக்காக, பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்காக உத்தரமேரூரை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதேபோல் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் 12-3 p.m.

[திரு. செ. கோ. விஸ்வநாதன்] [5th March 1963

கூடத்தை திருக்கழுக்குன்றத்திலும் ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளி இடங்களிலிருந்து சுற்றுப் பிரயாணம் செய்ய வரும் பிரயாணிகளுக்கு சர்க்யூட் ஹவுஸ் போன்றவைகள் அமைத்து வசதி செய்திருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் இருப்பதுபோன்று திருக்கழுக்குன்றத்திலும் ஒரு சர்க்யூட் ஹவுஸ் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

—

* SRIMATHI B. LAKSHMINARASAMMA: Mr. Deputy Speaker, Sir, I am happy to associate myself in this year's Budget Debate and I thank you for giving me this opportunity. As far as our State's finance is concerned, it has always been very satisfactory, because it has always been in the hands of eminent Ministers. It is a matter for congratulation over which we should all be proud of. Last year when new taxation proposals were made, we thought that, with those additional taxes, our State would be able to complete its Plan targets and maintain its progress without any need for further taxes in the coming years. But every one feared that in the present national emergency, there would be heavier burdens of tax this year to meet the needs of the emergency and to carry out our Third Plan Schemes. But I am happy to find that these fears have not come true and as such, every one in our State will gratefully welcome this tax-free budget of our Hon. Minister for Finance and I wish to congratulate him on this happy budget of his.

Our Plans have been revised in certain particulars to meet the needs of the emergency and it is inevitable that there should be diversion of funds from certain less important social services to other schemes directly related to our defence efforts. Our people will certainly accept this diversion without any complaint. But what now agitates the mind of the agriculturists in the villages is the frequent failure of crops. Groundnut crop was a complete failure last season and paddy also was affected in certain areas. The prices of both these commodities have fallen adversely affecting the income of the ryots even below the cost of production. The cost of cultivation is going up with increased cost of labour and other agricultural requirements and of other articles needed by farmers. Any fall in prices is therefore doubly tragic. I request the Government to consider these adverse conditions of the poor agriculturists and take necessary steps to see that the ryots are assured of remunerative prices, if not attractive prices. All the incentives offered to producers for stepping up food production would prove futile without adequate price support.

I am glad that the Government are giving special attention to minor and medium irrigation works. A vast portion of our lands is dependent on rain-fed agriculture. The development of these minor irrigation works will give a great impetus to produce more

5th March 1963] [Srimathi B. Lakshminarasamma]

and will be welcomed by the rural population. The rise in the standard of living of our people and the growth of our national income is dependent on our agricultural production. Any shortfall in our agricultural production will greatly affect our economic development, as vital raw materials to our many industries will be affected. It is therefore necessary for the Government to take all possible steps to step up productivity by the use of improved seeds, irrigational facilities, pest control, soil conservation, plant protection and fertilisers. While the rate of economic growth in urban areas is satisfactory, the same cannot be said of the rural parts. Greater attention is to be paid to the rural parts if there is to be uniform rise in the standard of living of our people all round. By neglecting the villages, we are only weakening the foundations of our economic development.

I am very happy to note that the needs of the emergency have not affected the size of grant to Education. That more new educational institutions are to be established in the coming year, is welcome news. An Arts College is to be opened in the South Arcot district from the coming academic year. I request that this College be located in Tirukoilur, the most backward area in this district. Further, there is only one high school at Tirukoilur and the same is hopelessly overcrowded. There is an urgent need for starting another high school, if every youngster in that area is to receive proper schooling. A high school at Arakandanallur will be of great help and I request the Government to take immediate steps to establish a high school at Arakandanallur, entirely at the cost of the Government, as the public in that area are so poor and backward that it is very difficult for them to pay any public contribution.

Another important subject I wish to mention here is about the availability of co-operative credit facilities to villagers. Due to the Gold Control measures, the farmers have lost their credit resources to raise sufficient funds on the pledge of their jewels to meet their seasonal requirements for cultivation expenses. There is a feeling of despair in the minds of the agriculturists as to how they will be able to raise their next crop. It will not be proper to leave them to the mercies of the village moneylenders. It is therefore necessary for the Government to take all possible steps and see that cheaper, quicker and larger credit facilities are made available than ever before through the Co-operative Department in the rural parts—both short and medium-term loans. Thank you, Sir.

* திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெறும் விவாதத்தில் நான் எனது கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியாகிய ஜயங்கொண்டத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைப்பது கடினமாக இருக்கிறது. மழை பெய்தாலும்கூட அங்கு இரண்டு மாதங்களுக்குக்கூட தண்ணீர் போதவில்லை. காவேரித் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு

வர முயற்சி எடுக்கிற நேரத்தில் பக்கத்திலுள்ள உடையார்பாளையம் தாலூகாவின் பிற்பட்ட நிலையைக்கருதி மருதையாறு திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருதையாறு திட்டத்தை முன்னிட்டு தண்ணீர் சோதனை நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆற்றில் ஊற்று போட்டு தண்ணீரை எடுத்து சோதனை செய்வதைவிட்டு ஆற்றின் மழை வெள்ளத் தண்ணீரை சோதனை செய்யும்படிக் கேட்டுக்கொண்டு மருதையாறு திட்டத்தை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் பொன்னேரி, ஆவேரி என்ற ஏரிகள் இருக்கின்றன. அவைகளை நல்லமுறையில் ஆழப்படுத்தி அதன் கரைகளை உயர்த்திக் கொடுத்தால் விவசாயம் செய்ய வசதியாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டானிலுள்ள மருத்துவ மனையை விரிவு படுத்தி அப்பகுதி மக்கள் நலனைக்கருதி அங்கு ஓர் பெண் டாக்டரை நியமிக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். நரம்புசிலந்தி என்ற நோய் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் குடிதண்ணீர் இல்லாத கஷ்டம்தான். மாடுகள் குளிக்கிற இடத்தில் மனிதர்கள் குளிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக இந்த நோய் ஏற்பட்டு ஜெயங்கொண்டம் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்கள் நலனைக்கருதி ஜெயங்கொண்டம் பகுதியில் ஒரு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப்பொறுத்தவரையில், ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் தவிர மற்ற ஊர்களுக்கு இன்னும் மின்சாரம் வசதி கிட்டவில்லை. ஆகவே உடனடியாக இந்தப் பகுதிகளுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஜெயங்கொண்டம் பகுதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு சென்னையிலிருந்து ஒரு பஸ் ரூட் ஏற்படுத்தித்தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் எங்கள் ஊருக்கு வந்தபோதும் அங்குள்ள மக்களின் கஷ்டங்களை எல்லாம் பார்த்திருப்பார்கள். அவர்கள் வந்த போதாவது கொஞ்சம் தண்ணீர் இருந்தது. இன்னும் கொஞ்சம் போனால் குடிக்க தண்ணீரே கிடைக்காது. ஒரு குடத்திற்கு ஒரு அணா விலை கொடுத்து வாங்கித்தான் உபயோகிக்கவேண்டும். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் கருணை கூர்ந்து கவனம் செலுத்தி எங்கள் தாலூகாவுக்கும் சீக்கிரமாக மின்சாரமும் தண்ணீர் வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். வில்லியம்** : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை பரிசீலிக்கும் இந்த

நேரத்தில் இந்தத் திட்டத்தில் நாம் கொண்டிருக்கின்ற சோஷியலிஸ சமுதாய அமைப்பு ஏற்படுவதற்கு முரண்பாடான அம்சம் ஏதாவது இருக்கிறதா இல்லையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் சட்டத்தின் குறிக்கோளின்படி நம்முடைய அரசாங்கமானது, சோஷியலிஸ சமுதாயத்தை அமைப்பதற்காக பல திட்டங்களை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். அம் மாதிரியான ஒரு அமைப்பு ஏற்பட வேண்டுமானால் நாடு முழுவதும் ஒருங்கே முன்னேற்றம் அடைய வேண்டும். ஆகவே தான் கல்வித் துறையிலும், தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும், இன்னும் இதரத் துறைகளிலும் ஒருங்கே முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் நமது திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து அதற்கிணங்க வேண்டிய பணத்தையும் ஒதுக்கி திட்ட வேலைகள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேறி வருவதையும் அறிவோம். நெருக்கடியான இந்த நேரத்தில் கொஞ்சமாவது நம்முடைய வேலைத் திட்டங்களை எல்லாம் நிறுத்தாமல் அத்தனை வேலைகளையும் ஊக்கத்தோடு நடத்த வேண்டும் என்று நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இன்னும் பாடசாலைகள் ஏற்படுத்த வேண்டும், நடுத்தர பாடசாலைகள் அதிகமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி பாடசாலைகள் அதிகமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதே மாதிரி, தொழில் வளர்ச்சிக்காக சென்ற பட்ஜெட்டிலே அமைக்கப்பட்ட பல ஸ்தாபனங்கள் நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன என்பதை நாம் கண்டு வருகிறோம். மேலும் பல ஸ்தாபனங்களை அமைப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த நெருக்கடியான நேரத்தில் அவசர வேலைகளுக்காக, போலீஸ் பட்டாளம், ரிசர்வ் பட்டாளம், ஆயுதம் தாங்கிய பட்டாளம், மற்றும் ஊர் காவல் படை ஆகியவைகளுக்காக எட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த வேளையில் குறிப்பிட விரும்புகிறேன். நாம் போட்டிருக்கின்ற திட்ட வேலைகள் எல்லாம் நல்ல விதத்தில் நிறைவேற்றப்படுமானால், சீக்கிரமாக சோஷியலிஸ சமுதாயம் நடைமுறையில் வரும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. ஒரு வேளை இந்த பட்ஜெட்டில் புதிய வரிகள் இல்லை. ஆனால் மத்திய சர்க்கார் வேண்டிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். ஆகவேதான் இந்தச் சர்க்கார் வரி போடவில்லை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். வரிகள் போடாமல் எந்த ஆட்சியும் நடத்த முடியாது என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம். ஆனால் வரியினால் கிடைக்கின்ற பணம் [illegible] முறையில் செலவு செய்யப்படுகின்றதா என்பதைத் தான் நாம் பரிசீலிக்க வேண்டும். அழிமதிகள், ஊழல் போன்றவைகள் இருந்தால் அவைகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர வரிகள் அதிகமாகிவிட்டது குற்றச்சாட்டை சொல்வது ஒரு போதும் சரியாக இராது என்பதை கூற விரும்புகிறேன். வரியில்லாமல் எந்த ஆட்சியும் நடக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்வோம். ஆகவே இந்த நெருக்கடியான நிலைமையில் வரியில்லாமல்

நம்முடைய பட்ஜெட் வந்திருப்பது பெரிய காரியம் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு சில இனங்களில் அதாவது காப்பிக்கொட்டை போன்றவற்றின் மீது விற்பனை வரிகள் அதிகமாக விதித்திருப்பதால் ஏழை மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. இதனால் எல்லா சமூகத்தினரும் பாதிக்கப்படுகிறார்கள், ஏழை மக்கள் மட்டும் தான் என்று சொல்ல முடியாது என்பதை தெரிவித்துக்கொண்டு ஒரு சில முக்கியமான விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது கூட்டுறவு சங்கங்களின் மூலமாக விவசாயிகளுக்குப் போதுமான அளவு கடன் உதவி அளித்து வருகிறார்கள். இது போதாது, இன்னும் கூடுதலான அளவில் எங்கள் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கூறப்பட்ட தங்கக் கட்டுப்பாடு காரணமாக சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் கஷ்டத்தைப் போக்குகின்ற முறையில் சுமார் 2,000 பேர்கள் இருக்கின்ற ஒவ்வொரு இடத்திலும் ஒரு கூட்டுறவு சங்கம் நிறுவி, அதன் மூலமாக அவர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில அபிவிருத்தித் திட்டங்கள் எங்கள் பகுதியில் இன்னும் சரியாக நடைபெறவில்லை. முக்கியமாக லாண்ட் ரிக்கார்ட்ஸ் எங்கள் பகுதியில் செம்மையான முறையில் வைக்கப்படவில்லை. பூமி பட்டா செய்து கொடுக்கப்படாததன் காரணமாக உடமஸ்தர்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக அவர்கள் இந்த பூமிகளின் மீது நல்ல முறையில் கடன் வாங்கிக் கொள்ள வசதியில்லாமல் இருக்கிறது. அதே நேரத்தில் (ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம்) முழு அளவு உதவி நிதித் திட்டம் இன்னும் பிற்போக்கான நிலையில் இருக்கின்ற எங்கள் பகுதிக்கு வரவில்லை. இதை எங்கள் பகுதியில் பூரணமாக அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக விளவங்கோடு தாலுகாவில் ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமல்ல, அங்கு லான்ட் மார்ட்கேஜ் ஸ்தாபனம் எங்கள் பகுதியில் இருக்கிறது. ஆனால் அதனுடைய லீகல் அட்மினிஸ்டிரேஷன் எல்லாம் சென்னையில் தான் இருக்கிறது. இதனால் பலவிதமான கழிடங்கள் ஏற்படுகின்றன. இதை மாற்றி ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த லீகல் அட்மினிஸ்டிரேஷன் ஆபீஸை ஏற்படுத்திவிட்டால், லோன் அப்ளிக்கேஷன்கள் எல்லாம் உடனே கவனிக்கப்பட்டு கடன் அளிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது பற்றி அரசாங்கம் நன்கு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக ரப்பர் பிளான்டேஷன் விஷயமாக, இப்போது பெரும்பாலோர் ரப்பர் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். பத்து எக்கர் 100 ஏக்கர் என்று எடுத்து, அதில் தன்னுடைய சொத்தை எல்லாம் விற்று அந்தப் பணத்தைக் கொண்டு விவசாயம்

செய்கிறார்கள். இவர்களுக்கு இந்தக் காலத்தில் வேண்டிய அளவு கடன் வசதி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். சுமார் எட்டு வருடங்களுக்கு எந்தவிதமான வட்டியும் இல்லாமல் லான்ட் மார்ட்கேஜ் மூலம் அவர்களுக்குக் கடன் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், ஃபாரஸ்ட் விஷயத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏழை ஜனங்கள், வேறு வழியில்லாமல் வனங்களில் சென்று சுள்ளி விறகு முதலியவைகளைக் கொண்டு வந்து அதன் மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான பேர்கள் தினமும் இம்மாதிரி காடுகளுக்குப் போக வேண்டிய நிலைமை தான் ஏற்படுகிறது. இவர்கள் காடுகளுக்குள் சுள்ளி விறகை பொறுக்குவதற்காகப் போகக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருந்தது. இதனால் பலவிதமான வருத்தப்படக்கூடிய பல கஷ்டங்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் இருந்தது. இந்த விஷயத்தை நாங்கள் சர்க்காரிடம் தெரிவித்ததன் பேரில் ஒரு சில மாறுதல்கள் செய்தார்கள். பிற்பாடு பாஸ் வேண்டுமென்று சொன்னார்கள். பாஸ் என்றால் ஒரு சில நபருக்குத் தான் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். வனத்தில் சென்று விறகு கொண்டு வந்து தான் ஜீவனத்தை நடத்த வேண்டும். அவர்களுக்கு வேறு வசதி இல்லை. அந்த விறகும் பாழாகப் போகிற விறகு தான். பிரயோஜனமற்றுப் போகிற சுள்ளியையும், விறகையும் எடுக்கக் கூடாது என்று சொல்லுவது சரியல்ல. வேறு விதத்தில் வாழ்க்கை நடத்த வழியில்லாது இதைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். அநேக மைல்கள் தூரம்—20 மைல்களுக்கு மேல்—சென்று இவ்விதம் விறகைக் கொண்டு வந்து வாழ்க்கையை நடத்துகிறார்கள். ஏழைகள் ஜீவனத்திற்காக இதைச் செய்ய வேண்டியிருப்பதால் பாஸ் வேண்டும், விறகை எடுக்கக் கூடாது என்று சொல்லுவது சரியல்ல. விறகு, சுள்ளி இவைகளை எடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்லாமல் அவர்கள் எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாக அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

இப்போது ஏழை மக்கள் புறம்போக்கு ஸ்தலத்தில் க்ருஷி செய்து கொண்டிருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில் இப்படி க்ருஷி செய்யக் கூடியவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது. அது சரியல்ல. இம்முறையில் அவர்களை வெளியேற்றிவிட்டால் அவர்கள் எங்கு செல்வார்கள்? எவ்விதம் அவர்கள் ஜீவனத்தை நடத்தப் போகிறார்கள் என்று அதையும் பரிசீலனை செய்து இந்தப் பிரச்னைக்கு முடிவு செய்ய வேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றாறு, பட்டணங்கால் திட்டம் சம்பந்தமாகப் பல காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே நடத்தித் தா

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கட்டாயக் கல்வி ரொம்ப காலத்திற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு, நடுத்தரப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, உயர் நிலைப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டு கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது சர்க்கார் முன் வந்து அங்கே ஒரு கல்லூரியை ஆரம்பிக்கப் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு ஒரு சில நன்மைகள் கிடைக்கின்றன. இருந்தும் அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கும் ஒரு சில சலுகைகள் கொடுக்க திட்டங்கள் வகுத்து ஆவன செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். அதுபோலவே பனையேற்றத் தொழிலாளர்களுக்கும் ஒரு சில நன்மைகள் செய்யத் திட்டம் வகுத்து ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

* **திரு. எஸ். முருகையன்:** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே தாக்கல் செய்திருக்கும் 1963-64-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு வருமானம் 124 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு வருமானம் 117 கோடி ரூபாய் என்று தெரியவருகிறது. இடையிலுள்ள 7 கோடி ரூபாய் எப்படி வந்தது என்றால் வரி மூலமாகவே வந்திருக்க முடியும். இந்த நிலையில் வரியில்லை என்று சொல்லுவது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இந்த உரையிலேகூட, கடந்த பட்ஜெட்டில் அறிவித்த புதிய வரிகளிலிருந்து நடப்பு ஆண்டில் 4 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இதை வரியில்லாத பட்ஜெட் என்று ஒப்புக்கொள்ள முடியுமா என்று பார்த்தால் ஒப்புக்கொள்ள முடியாத நிலை தான் இருந்து வருகிறது. அதோடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உணவு உற்பத்தியை 17 லட்சம் டன் அதிகரிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அதிலே இது வரையில் ஒரு ஆண்டு காலத்தில் 2 லட்சம் டன் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு 2 லட்சம் டன் என்றால், 5 ஆண்டு காலத்தில் 10 லட்சம் டன் கூட முடியாத நிலைமை ஏற்படலாம். ஏனென்றால் பருவ மழை தவறி விட்டாலோ அல்லது வேறு காரணத்தினாலோ முடியாத நிலை ஏற்படலாம் என்று கருதுகிறேன்.

அதோடு உர வினியோகத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக எங்கள் வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் உரம் நல்ல முறையில் கிடைக்கிறது. கிடைக்கிறதே தவிர விநியோக முறையில் ஊழல்கள் ஏராளமாக இருந்து வருகின்றன. வட ஆற்காடு ஜில்லாக் கூட்டுறவு ஸ்டோரிலிருந்து உரத்தை ஒவ்வொரு தாலூகா சங்கங்களுக்கும் அனுப்பும்போது ஏராளமான உரத்தை எடுத்து விடுகிறார்கள் என்ற புகார் வந்த வண்ணமாகவே இருக்கிறது.

அவர்களே லாரிகளில் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு கிராம சொஸைட்டிகளுக்கும் கொண்டு போய்க் கொடுக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடியவர்கள் அதை எடை போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டால் எடைக் கருவிகள் கொண்டு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஸ்தாபனத்தில் இருக்கிறவர்கள் செய்கிறார்களா அல்லது வழியில் ஏற்படக் கூடிய குறைகளா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. கிராமந்திர சொஸைட்டி வாங்கி விவசாயிகளுக்கு விற்கும்போது ஒவ்வொருவருக்கும் எடை போட்டு விற்கும் நிலை ஏற்படுகிறது. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. மீண்டும் உரத்தை வைத்துக் கொள்ள அவர்கள் பயப்படுகிறார்கள். ஆகையால் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, எண்ணெய் வித்துக்கள் சம்பந்தமாக பாக்கேஜ் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை சாத்தனூர் திட்டப் பகுதியில் 1964-65-ம் ஆண்டில் ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது நல்ல முறையில் விவசாயத்துக்குப் பாசன வசதி கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு முதல் அமுலுக்குக் கொண்டு வந்தால் அந்த விவசாயிகள் நல்ல முறையில் பயன் அடைவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக அதிக விதைப் பண்ணைகளை ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை தாலூக்கா அத்தியந்தல் என்ற கிராமத்தில் ஒரு விதைப் பண்ணை இருந்து கொண்டிருக்கிறது. அந்த இடம் மிகவும் நல்ல இடம். அந்த 50 ஏக்கர் நிலத்துக்கு இரண்டு ஏரிகள் பாசனம் இருக்கின்றது. அதோடு அந்த 50 ஏக்கர் நிலத்துக்கு 16, 17 கிணறுகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது இந்த ஆண்டிலே 10 ஏக்கர் சாகுபடிக்கு வர முடியாமல் நின்று விட்டது. இந்த 50 ஏக்கரிலும் 2 போகம் நல்ல முறையில் பயிர் செய்யலாம். அவ்வளவு நல்ல தரமான நிலங்கள். தண்ணீர் வசதி இருந்தும் கூட, சர்க்கார் ஏற்றுக் கொண்ட பிறகும், பம்ப்-செட்டுகள் அமைத்து வசதி செய்தும் ஒரு போகம் சாகுபடி செய்து, இரண்டாம் போகம் சாகுபடி செய்யாத நிலை இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் நல்ல முறையில் அதைப் பயன்படுத்தவில்லையா என்று தெரியவில்லை. விவசாயம் செய்ய வருகிறவர்களுக்குக் கூலியாகத் தானியம் கொடுப்பது கிடையாது. பணம் கொடுப்பது என்றால் அன்றாடம் கொடுக்கப்படாமல் 10 நாட்களுக்குப் பிறகு கொடுக்கப்படுகிறது. அன்றாடம் கூலி வாங்கி ஜீவனம் செய்கிறவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? இதைப் பார்க்கிற காலத்தில் இடைக்காலத்தில் அவர்கள் வர முடியாது என்று நின்று விடுகிறார்கள். உற்பத்தியாகக் கூடிய தானியங்களை அறுவடை செய்து களத்திற்குக் கொண்டு வந்தால் 10-15 நாட்கள் அங்கேயே கிடக்கிறது. விதையாக அதை நல்ல முறையில் உபயோகப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதே விதைப் பண்ணையில் கூட விதைகளுக்கு லாயக்கில்லை என்று நெல்லை ஏலம் போடுகிறார்கள். நல்ல நிலம்,

[திரு. எஸ். முருகையன்] [5th March 1963

நல்ல தண்ணீர் வசதி, வேலை செய்ய மக்கள் எல்லாம் இருந்தும் நல்ல விதை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. காரியங்களை நல்ல முறையில் செய்தால் நல்ல விதைகள் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கடன் கொடுப்பதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமாந்திரங்களில் கிராம சொஸைட்டி என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது—எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையில் சொல்லுகிறேன். ஆரம்பிக்கும்போதே ஸ்தபானத்தை ஆரம்பிக்கிறவர்கள் நாளைக்கு தம் பேச்சை யார் ஒத்துக்கொள்வார்களோ, தங்களுக்கு யார் ஓட்டு அளிப்பார்களோ அவர்களைப் பார்த்துச் சேர்த்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். காரணம் என்ன என்றால், கிராமாந்திர சொஸைட்டி ஆரம்பித்து, 20 பேர்களை, தங்களுக்கு வேண்டியவர்களைச் சேர்த்துத் தேர்தல் நடத்தி, செக்ரட்டரி, தலைவர் என்று பலரைத் தங்களுக்குள்ளாகவே தேர்ந்துக் கொள்ளும் நிலை நீண்ட நாளாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இந்த ஆண்டு யாராவது தலைவராக இருந்தால் அடுத்த ஆண்டு இருக்கக் கூடாது என்ற நிலைமை இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் கூட்டுறவுத் துறையிலே ஒருவருடைய ஆதிக்கம் தொடர்ந்து நீடிக்க இயலாத நிலை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஓராண்டு தலைவராக இருந்தால் அடுத்த ஆண்டு நிச்சயமாக இருக்கக்கூடாது என்று ஏற்பட வேண்டும். யாரை வேண்டுமானாலும் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக்கிறதே தவிர பலர் சேர முடிவதில்லை. திருவண்ணாமலை நகரத்தில் இருக்கிற கூட்டுறவு பாங்கில் மேல் சபை உறுப்பினராக இருப்பவர் 10 ஆண்டுகளாக முயற்சி செய்தும் அதில் சேர முடிவதில்லை. வசதியுள்ளவர்கள் மனுக்கள் போட்டால், நீண்ட காலக் கடனை வெளியில் வாங்க அவர்கள் வசதியுள்ளவர்கள் என்று அந்த மனுக்களைத் தள்ளி
1-00 p.m. விடுகிறார்கள். வசதி இல்லாதவர்கள் கடனுக்காக மனுப் போட்டால், அவர்களால் கடனைத் திருப்பிக் கட்ட முடியாது என்று சொல்லி அந்த மனுக்களை நிராகரித்துவிடுகிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியது போல கூட்டுறவு சங்கத்தில் மெம்பராகச் சேரவேண்டும் என்று 10 ஆண்டுகள் ஒரு கவுன்சில் மெம்பர் முயற்சி செய்தும், அவர் மெம்பராகச் சேர முடியவில்லை. ஆகையினால்தான் சொல்லுகிறேன், ஒருவர் ஒரு கூட்டுறவு சங்கத்தின் தலைவராக ஒரு ஆண்டு இருந்துவிட்டால், அடுத்த ஆண்டு அவரே மறுபடியும் தலைவராக இருக்கக் கூடாது என்ற விதியை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முழுநிதி உதவித் திட்டம் Full Finance Scheme என்ற ஒரு திட்டத்தை கிராமப் பகுதிகளில் புகுத்தியிருக்கிறார்கள். அந்த முறை எப்படி இருக்கிறது என்றால், ஏற்கனவே அவர்கள் பஞ்சாயத்து யூனியன் மூலம் கடன் வாங்கிக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து அந்தக் கடனையும் அவர்கள் வாங்க முடியவில்லை.

5th March 1963] [திரு. எஸ். முருகையன்]

இந்தத் திட்டத்தின் மூலமாகவும் உடனடியாக அவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே, நல்ல முறையில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்தி விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாக் கடன்களையும் அவர்கள் நல்ல முறையில் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்பு செட்டு, ஆயில் என்ஜின்களுக்காகச் சென்ற ஆண்டில் 17 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 22 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஐந்து லட்சம்தான் வித்தியாசம். இப்பொழுது மத்திய சர்க்கார் விதித்திருக்கிற வரியைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் 20 சதவிகிதம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை சரியாகப் போய்விடும் என்று நினைக்கிறேன். ஆகவே, அதிகமாகப் பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னபோதிலும், உண்மையில் பார்க்கப் போனால், இந்தத் தொகையை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகள், ஆயில் என்ஜின்கள் நல்ல முறையில் வாங்கிக் கொடுக்க முடியாது. இந்தத் திட்டத்திற்கு மேலும் 10 லட்ச ரூபாய் ஒதுக்கி விவசாயிகளுக்கு வேண்டிய பம்பு செட்டுகள் கிடைப்பதற்கு வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, கிராமங்களில் பம்பு செட்டுகள் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய விவசாயிகள் ஒவ்வொரு மாதமும் எலெக்ட்ரிக் பில் பணம் கட்டுவதற்கு ரொம்பவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகவே கிராமாந்திரங்களில் பம்பு செட்டுகள் வைத்திருப்பவர்களை சேர்த்து, ஒரு கூட்டுறவு சங்கம் நிறுவி, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விவசாயியும் எவ்வளவு எலெக்ட்ரிக் பில் தொகை கட்ட வேண்டும் என்று பார்த்து அந்த பில்களை வாங்கி அந்த சொஸைடி மூலம் பணத்தைக் கட்டி விட்டு, பின்னால் பயிர் அறுவடையான பிறகு அந்தப் பணத்தை வசூல் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்கு நலமாக இருக்கும். ஏனென்றால் தண்ணீர் இறைப்பு இறைத்துக் கொண்டிருக்கும்பொழுது, அந்த மாதத்தின் பில் பணத்தைக் கட்டாவிட்டால், டிஸ் கனெக்ஷன் செய்துவிடுகிறார்கள். இது விவசாயத் தொழிலை பாதிக்கிறது. அவர்கள் மேற்கொண்டு தொடர்ந்து நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆகவே, இது மிகவும் முக்கியமான திட்டம் என்று கருதுகிறேன். சர்க்கார் இதுபற்றித் தீவிரமாக ஆலோசித்து, வேண்டிய நிதியை இதற்காக ஒதுக்கித் தந்து பம்பு செட்டு உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கம் என்று ஏற்படுத்த உதவி செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தூரிஞ்சாபுரம் தொகுதியில் சேர்ந்துப்பட்டு ஒரு மேஜர் பஞ்சாயத்து. அதில் இருக்கக் கூடிய ஆஸ்பத்திரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது. வருஷம் ஒன்றிற்கு 3,000 ரூபாய் மருந்துக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரிக்கு நல்ல கட்டிட வசதி இருக்கிறது. டாக்டர்

இருக்கிறார். சர்க்காரிலிருந்து டாக்டருக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் 3,000 ரூபாய்க்கு மருந்தை வாங்கி வைத்துக்கொண்டு எப்படி அந்த ஆஸ்பத்திரியை நடத்த முடியும்? சேத்துப்பட்டுக்குச் சுற்றுவட்டாரத்தில் 17, 18 மைலுக்கு வேறு ஆஸ்பத்திரி கிடையாது. திருவண்ணாமலை, போளூர், வந்தவாசி, ஆரணி இவைகளுக்கு இடைவெளியில் ஒரு ஆஸ்பத்திரியும் கிடையாது. ஆகையால் 3,000 ரூபாயை வைத்துக்கொண்டு மருந்து வாங்கி எப்படி 18,000 ஜனத்தொகை கொண்ட ஒரு மேஜர் பஞ்சாயத்தில் ஆஸ்பத்திரி நடத்த முடியும்? அந்த ஆஸ்பத்திரியை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பி நீண்ட காலம் ஆகியும், இன்னும் இதைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள முன்வரவில்லை. அதிகாரிகளைக் கேட்டால், மொத்தமாகப் பஞ்சாயத்து யூனியன்களின் பராமரிப்பில் இருக்கும் ஆஸ்பத்திரிகளை எடுத்துக் கொள்ளுவது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது, சர்க்கார் அதுபற்றி ஒரு முடிவு செய்தால் இந்த ஆஸ்பத்திரியும் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். அதுவரையில் காத்திராமல், இதைத் தனியாகக் கவனித்து மேஜர் பஞ்சாயத்து நகரத்திலுள்ள இந்த ஆஸ்பத்திரியை சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்தவுடன் ஒரு தனி மகிழ்ச்சி ஏற்படுகிறது. நெருக்கடியான நிலைமை இருந்தும் 2 கோடியே 74 லட்சம் ரூபாய் துண்டு விழுந்தும், வேறு எந்த வரியும் போடாமல் சமாளிக்க முடியும் என்று சொல்லக்கூடிய ஆற்றல் நமது நிதி அமைச்சர் ஒருவருக்குத்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். அவர்களுடைய அனுபவத்தையும், ஆற்றலையும் பயன்படுத்தி, இத்தகைய சிறந்த ஒரு வரவு செலவுத் திட்டத்தை அவர் அளித்திராவிட்டால், ஆளும் கட்சியில் இருக்கிற எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு மிக மிகச் சங்கடமான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கும். நெருக்கடி நிலைமை காரணமாக மத்திய சர்க்கார் புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள். எப்படியும் அதைச் சமாளிக்க வேண்டும் என்ற நிலைமை நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. சில வரிகளெல்லாம் நடுத்தர மக்களையும் சாதாரண ஏழை மக்களையும் அன்றாட வாழ்க்கையில் அதிகமாக பாதிக்கக்கூடிய அளவிலே இருக்கின்றன. அதோடு மாகாணத்திலும் புதிய வரிகள் போட்டிருந்தால், ஒட்டகத்தின் முதுகை ஒடிக்கக்கூடிய கடைசி வரியாகத்தான் அது இருந்திருக்கும். நல்ல வேளையாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் மக்களுடைய எண்ணத்தை அறிந்து கொண்டு தன்னுடைய ஆற்றலால் காரியங்களை செய்யக்கூடிய அனுபவம் படைத்திருந்ததால், இக்கட்டான நிலையில் எங்களை வைக்காமல் எதிக்கட்சியினரை வைத்துவிட்டார்கள். இப்பொழுது எதிக்கட்சியினர்களுடைய விவாதத்தைப் பார்த்தாலே,

காரம் இல்லாமல், சாரம் இல்லாமல், அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை முழு மனதோடு ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எல்லா கட்சியினர்களும் ஏகோபித்து ஆதரவு காட்டவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 117 கோடி ரூபாய் வருமானத்தை நாம் பெற்றிருக்கிறோம். நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாகப் பெற்றிருக்கிறோம் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது, நிர்வாகத்தில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம் அவர்கள் நமக்கு வருவாயை ஒழுங்காக வாங்கித் தந்திருக்கிறார்கள். நாம் குறைந்த வருவாயை எதிர்பார்த்து அதிக வருவாயைப் பெற்றாலும், செலவு அதிகமாக இருக்கிறதே என்று பார்க்கும்பொழுது, சற்று வருத்தப்பட வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டில் 120 கோடி ரூபாய் செலவு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு மேலே அதிகமாகச் செலவாகும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆகவே, செலவினங்களை எங்கே குறைக்க முடியும் என்பதை நாம் சீர்தூக்கிப் பார்த்து ஓரளவுக்கு சமாளிப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. பண வீக்கம் இருக்கும் சமயத்தில் நம்முடைய பட்ஜெட்டும் வீங்கிக் கொண்டு போகக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். 117 கோடி ரூபாய் வரவும், 120 கோடி ரூபாய்ச் செலவும் எதிர்பார்க்கிறோம். சில இனங்களில் அதிகமாக வருமானம் எதிர்பார்க்கிறோம் என்று தான் நினைக்கிறேன். குறிப்பாக முத்திரை தாள்கள் சம்பந்தப்பட்டவரை 100 லட்ச ரூபாய் வருமானம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது முத்திரை ஸ்டாம்புக் கட்டணத்தை நாம் ஏற்றியிருக்கிறோம். எட்டு சதவிகிதமாக இருந்ததை 9½ சதவிகிதமாக ஏற்றியிருக்கிறோம். இது காரணமாகச் சற்று விலையைக் குறைத்துப் போட்டுத்தான் பதிவு செய்யவேண்டிய நிலை ஏற்படலாம். நியாயமான விலையை போடுவதற்குத் தயங்குவார்கள். அப்படியிருந்தும் அந்த வருமானம் 100 லட்ச ரூபாய் உயரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஒரு வேளை அதிகப்படியான வருமானத்தை நாம் எதிர்பார்க்கக்கூடிய ஒரு இனமா அது என்று கூட சொல்லக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். இந்த நெருக்கடி நிலையை சரியான முறையில் சமாளிக்கக்கூடிய அளவிலே, ஐந்தாண்டுத் திட்டத்தின் வேகத்தைக் குறைக்காத முறையில், நம்முடைய நிர்வாகத் திறமையை பாதிக்காத வகையிலே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் வருமான வரியிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய பங்கை நாம் அதிகரித்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது நமக்கு 8 கோடி ரூபாய் கொடுக்கிறார்கள். இன்றைக்கு புதியதாக வருமான வரி அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. குறைவாக ரூ. 500, 600 சம்பளம் வாங்கக்கூடியவர்கள் கூட இனிமேல் குடும்பத்தை நடத்த முடியாது என்று சொல்லக்கூடிய அளவிலே வருமான வரி அதிகரிப்பு பிராவிடண்டு

பண்டு அதிகரிப்பு, இன்ஷூரன்ஸ் அதிகரிப்பு, கம்பல்சரி லேவிங் அதிகரிப்பு, இப்படிப் பல இனங்களில் தொகை அதிகரித்துக் கொண்டே போனால், அவர்கள் குடும்பத்தை நடத்தக்கூட முடியாத ஒரு சங்கடமான நிலை ஏற்படக்கூடும். இருந்தும்கூட, நம்முடைய வருமான வரி பங்கையாவது அதிகமாகப் பெற்றால், நம் மாகாண நிலையாவது முன்னேறும் என்று நாம் எதிர்பார்க்கலாம். அந்த அளவிலே கனம் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து நம்முடைய பங்கை அதிகமாகப் பெற்று, நம்முடைய நிதி நிலையை உயர்த்திக் கொள்ளுவது மிகவும் வரவேற்கத்தக்கது.

அதேபோல், ரயில்வே பாஸஞ்சர் டாக்ஸ் தொகையிலிருந்து மாகாண மக்கள் தொகையைப் பொருத்து நமக்குப் பங்கு கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கம் புதிய முறையின் அடிப்படையில் நமக்குப் பங்கு தொகை கொடுக்கிறார்கள். அதனால் நமக்கு வரவேண்டிய தொகை குறைந்து வருகிறது. அந்த முறையைத் திருத்தி அமைத்து ரயில்வே பாஸஞ்ர் டாக்ஸ் மூலம் வரக்கூடிய வருமானத்தின் பங்கை நாம் மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமாகப் பெற்றால் நம்முடைய நிதி நிலைமையை ஓரளவுக்கு வளப்படுத்திக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கிறேன்.

செலவினங்களுக்கு வரும்பொழுது விவசாயத்தைப் பற்றி பல பேர்கள் பேசிவிட்டார்கள். பதினேழு லட்சம் டன் உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு 2, 3 லட்சம் டன் ஒரு ஆண்டில் உற்பத்தி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் அமுலில் இருக்கிற பாகேஜ் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரித்து, அதன் மூலம் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியுமா என்பதை ஆராய்வது அவசியம் மாத்திரம் அல்ல, அவசரமானதும் கூட. அதே சமயத்தில் விவசாயம் செய்பவர்கள் நெல்விலை குறைந்துவிட்டது, விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அரிசியை வாங்கி உண்ணும் நகர மக்கள் அரிசி விலை ஏறிவிட்டது என்று அழுகிறார்கள். ஆகவே, எங்கேயோ, எதிலோ, ஏதோ கோளாறு இருக்கிறது டிஸ்டிரிபியூடரி ஸிஸ்டத்தில். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் விலை இறங்கிவிட்டது, நல்ல விலை கிடைக்கவில்லை என்று அழுகிறார்கள். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் விலை ஏறிவிட்டதே என்று அழுது கொண்டிருக்கிறார்கள். இரண்டிற்கும் இடையிலே எங்கேயோ கோளாறு இருக்கிறது. இந்தக் கோளாறை சரிப்படுத்துவதில் நாம் அக்கறை காட்டுவது மிகவும் அவசியம் என்று நினைக்கிறேன். அதே போன்று கிராமப் புறங்களிலே அவர்களுக்கு அதிகமான அளவுக்குச் சந்தைகளை ஏற்படுத்துவதற்கு முன் வரவேண்டும். தமிழகத்திலே சிலப் புகழ் வாய்ந்த சந்தைகள் எல்லாம் இருக்கின்றன. புதுக்கோட்டைச் சந்தை, மணப்பாறைச் சந்தை, இவைகள் பெரிய சந்தைகள். இந்தச் சந்தைகளை ஏலத்திற்கு விடுகிறார்கள். அப்படி ஏலத்திற்கு எடுப்பவர்கள் பணத்தைதான் கரந்து வாங்குகிறார்களே ஒழிய, சந்தைக்கு வருகிறவர்களுக்கு

எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதில்லை. இந்த நிலைமையைப் போக்கி, இனிமேல் சந்தைக் கடைகளை ஏலத்திலே எடுப்பவர்கள் அவற்றை நன்றாகக் கட்டி, நல்ல முறையிலே விளக்குகளைப் போட்டு, கவர்ச்சிகரமான முறையிலே அவைகளை வைத்துக்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு 15 ஆண்டுகளுக்கோ அல்லது அதற்கு மேற்பட்டோ ஒரு நீண்ட கால அளவுக்குக் கட்டு குத்தகைக்கு விட்டுவிடலாம். சந்தைக்கு வருகிறவர்களுக்கு இட வசதி செய்து கொடுத்து, சந்தையிலுள்ள பொருள்களை வாங்குவதற்கு கவர்ச்சி ஏற்படும் வகையில் வண்ண விளக்குகளைப் போட்டுக் கொடுத்தால், விவசாயிகள் கூட சந்தைக் கடைகளைத் தேடி வருவார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே உள்ள சந்தைக் கடைகளைக்கூட நல்ல விதத்தில் அமைத்துக் கொடுக்கவேண்டும். புதுக்கோட்டை அமைச்சர் அவர்கள், அவர்கள் ஊரிலேயாவது இந்த மாதிரி வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இப்பொழுது ஓரளவுக்குச் செயற்கை உரங்கள் கிடைக்கின்றன என்று சொல்லப்படுகிறது. பசுந்தாள் உரத்தை அதிகமாக உபயோகிப்பதில் மக்கள் அதிக ஆர்வம் செலுத்தவேண்டும்.

பஞ்சாயத்துகளுக்குப் புறம்போக்கு நிலம் தேவைப்படுகிறதோ, இல்லையோ, புறம்போக்கு நிலங்களிலே உள்ளவர்கள் வேண்டியவர்களா, அல்லது வேண்டாதவர்களா என்று பார்த்து, வேண்டாதவர்களாய் இருந்தால் அவர்களை வெளியேற்றுவதிலே அக்கறை காட்டுகிறார்கள், தலைவர்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்காகத் தேவைப்பட்டால்தான் இந்தப் புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க வேண்டுமே ஒழிய, மற்றபடி இந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. அரசாங்கமே இந்த அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் நல்லது. இதனால் கிராமப் புறங்களிலே அரசியல் வேகம் புகுந்து, கிராம மக்கள் பல இடஞ்சல்களுக்கு உள்ளாகும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதே சமயத்திலே, பசுந்தாள் உரத்தை உற்பத்தி செய்வதிலே மக்கள் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று சொன்னால், பழைய திருவாங்கூர்-கொச்சியிலே புறம்போக்கு நிலங்களை விவசாயிகளுக்குக் குத்தகை பாட்டத்தின் அடிப்படையிலே கொடுப்பது வழக்கம். அந்த முறையிலே, 30 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 2 ஏக்கர் என்ற அடிப்படையிலே கொடுத்தால், அதன் மூலமாகப் பசுந்தாள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான சூழ்நிலை ஏற்படும். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சில பொறுப்புக்களைக் கொடுத்திருக்கிறோம். இந்தச் சட்ட சபையிலே உள்ள சில அங்கத்தினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, எவ்வாறு இந்தப் பஞ்சாயத்துக்கள் நடக்கின்றன, அவைகளுடைய முன்னேற்றம் எப்படியிருக்கிறது என்று ஊடுருவிப் பார்த்து அதன் பேரில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படிச் செய்யலாம்.

கல்வித் துறைக்காக ரூ. 28 கோடி வரை செலவு செய்கிறோம். இன்னும் சில ஊர்களிலே பாழடைந்த பள்ளிகள் தான் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்கு வருவதற்கு மாணவர்களிடம்

உற்சாகமே இருக்காது. ஸ்கூல் பில்டிங் பண்டு ஒன்றை ஏற்படுத்தி எங்கெல்லாம் பாழடைந்த பள்ளிகள் இருக்கின்றனவோ, அவைகளை உடனடியாகச் சீரமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வட சென்னையில் பெண்களுக்கு ஒரு கல்லூரி கூடக் கிடையாது. சென்னையைப் பொறுத்த வரையில், தெற்குத்தான் வாழ்கிறது, வடக்குத் தேய்கிறது. ஏழைப் பெண்கள் 6 அணா 8 அணா என்று செலவழித்து, மைலாப்பூர், மாம்பலம் போவது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே வட சென்னையில் ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் கட்டாயமாக முன் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

கடைசியாக எனது தொகுதியிலுள்ள ஒரு குறையைச் சொல்லிவிட்டு, முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே, பேஸின் பிரிட்ஜ் மேம்பாலம் ஒன்று இருக்கிறது. அது பெரிய ரஸ்தாக்களை இணைக்கிறது. இந்த மேம்பாலம் மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறது. சட்டசபையில் சென்ற பல ஆண்டுகளாகச் சொல்லியும்கூட அதற்கு நல்ல காலம் பிறக்கவில்லை. உடனடியாக இதைக் கவனித்து, பழுது பார்க்க வேண்டுமென்று பொதுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. காஞ்சி மணிமொழியார் : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடப்பு ஆண்டின் நிதிநிலை அறிக்கை விவாதத்தில் இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் "வரியே இல்லை என்று சொல்லக் கூடிய சக்தி நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத்தான் இருக்கிறது" என்று சொன்னார்கள். சொல்லக் கூடிய சக்தி மட்டும் தான் இருக்கிறது என்று கருதிச் சொன்னார்களோ, அல்லது செய்யக் கூடிய சக்தியும் இருக்கிறது என்று எண்ணிச் சொன்னார்களோ, எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் சென்ற வாரத்திலே தான் நாம் இங்கே ஒரு வரியை விதித்திருக்கிறோம். அது சென்ற ஆண்டில் கொண்டு வரப்பட்ட வரி என்று சொன்னாலும், இந்த ஆண்டிலேதான் நிறைவேற்றப்பட்டு விவசாயிகளின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இதைப் போலவே இன்னும் ஓரிரண்டு மாதங்களுக்குள், இன்னொரு வரியும் மக்கள்மீது சுமத்தப்படவிருக்கிறது. ஆகவே முன்னே ஒரு வரியும், பின்னே ஒரு வரியும் விதிக்க ஏற்பாடு செய்துவிட்டு, இந்த இடைக் காலத்திலே வரியே இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறேன் என்று சொல்லுகின்ற சக்தி கனம் நிதி அமைச்சருக்குத் தான் இருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

வரி போட வேண்டியதுதான். போட வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் அந்த வரி தாங்கக் கூடியவர்கள் மீது சுமத்தப்பட வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். நேற்று முன் தினம் பேசிய ஒரு உறுப்பினர், இந்த வரிகளை எந்த அளவுக்குப் போடுகிறோமோ அந்த அளவுக்குத்தான் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டிலே மோட்டார் வாகனங்களின்மீது வரி விதித்திருக்கிறோம்.

நமது சர்க்காருக்கு இந்த வரியினால் கிடைக்கிற பணத்தையும், இந்த வரியின் காரணமாகக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு அதன் மூலமாக பஸ் முதலாளிகளுக்குக் கிடைக்கும் அதிக வருமானத்தையும் சற்றுக் கணக்குப் பார்த்தால், சோஷலிஸ சமுதாயம் இப்படிப்பட்ட வரிகளை விதிப்பதனால் மட்டும் ஏற்பட்டு விடாது என்பது தெளிவாகத் தெரியவரும். சென்னையிலிருந்து வேலூருக்கு இந்த வரி விதிப்பதற்கு முன்பு இருந்த கட்டணம் ரூபாய் 2½. வரிக்குப் பின்னர் ரூபாய் 3 ஆக உயர்ந்திருக்கிறது. ஒரு சீட்டுக்கு 8 அணா வீதம், ஒரு பஸ் போய்விட்டுத் திரும்பி வந்தால், ஒரு ரூபாய் கிடைக்கிறது. இப்படி 60 சீட்டுகளுக்கு ஒரு வருடத்தில் ரூபாய் 21,900 பஸ் முதலாளிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. ஆனால் மூன்று மாதத்திற்குச் சீட்டுக்கு 5 ரூபாய் வீதம் ஒரு ஆண்டுக்கு 60 சீட்டுக்கு செலுத்துகிற வரி ரூபாய் 1,200 தான். அதிக வருமானம் ரூபாய் 21,900 கிடைக்கிறது. இதனால் செலுத்துகிற வரி ரூபாய் 1,200 தான். இந்தவரிகளால் முதலாளிகள் கொழுக்கிறார்கள் ஏழைகள் நஷ்டப்படுகிறார்கள்; எப்படி நம் நாட்டிலே சோஷலிச சமுதாயம் வரி விதிப்பதாலேயே அமையும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 40 அல்லது 45 மைல் ஓடுகிற பஸ்களை எடுத்துக் கொண்டால்கூட ரூபாய் 15,000 அதிக வருமானம் இப்போது கிடைக்கிறது. பெருநகர் என்பது கிட்டத்தட்ட சென்னையிலிருந்து 58 மைல் தூரத்தில் இருக்கிறது. ஏற்கனவே ரூபாய் 1¾ ஆக இருந்த கட்டணம் இப்பொழுது ரூபாய் 2 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த ரூட்டின் மூலம் ரூபாய் 15,000 அதிக வருமானம் பஸ் முதலாளிகளுக்குக் கிடைக்கிறது. இப்படிப்பட்ட வரிகளைப் போடுவதனாலேயே சோஷலிஸத்தை அமைத்துவிட முடியுமென்று எப்படிச் சொல்ல முடியும்? பணக்காரர்களுடைய நேரடி வருமானத்திலிருந்து கறந்து வாங்கினால் தான் சோஷலிஸம் வருமே ஒழிய ஏழை மக்களை மேலும் மேலும் வரி விதிப்புக்கு உள்ளாக்கினால், சோஷலிஸம் வந்துவிடாது. இப்படி ஏழைகள் மீது வரி விதித்து முதலாளிகளைக் கொழுக்க வைப்பதன்மூலம் சோஷலிஸம் நிச்சயமாக அமைய முடியாது. இதைத்தான் திரு. நந்தா அவர்களும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 'இந்த வரி விதிப்புகளை அனுமதிப்பதை விட, எப்படி அதிக லாபத்தை மக்களிடமிருந்து பறித்துக் கொள்வது என்பதிலேயே வியாபாரிகள் அக்கறை காட்டி வருகிறார்கள்' என்று வியாபாரிகள் வரியிலிருந்து எவ்வாறாவது தப்பித்துக் கொள்வதற்கும் அதிக லாபம் அடைவதற்கும் வழி இருக்கிறது. இந்த வரியினால் பாதிக்கப்படுபவர்கள் ஏழை மக்களும், நடுத்தர மக்களும்தான் என்பதைத் தெரிந்துக் கொள்கிறேன். பொதுவாக இன்றைக்கு நாம் மிகவும் நெருக்கடியான நேரத்தில் இருக்கிறோம், என்று கனம் உறுப்பினர்கள் பலர் சொல்லியிருக்கிறார்கள். யுத்தம் போன்ற நெருக்கடி இன்று இருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது சற்று தணிந்திருந்தாலும், நிச்சயமாக இன்றையதினம் வரி நெருக்கடியில் மக்கள் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள் என்பதை யாரும்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [5th March 1963

எந்த வரியாக இருந்தாலும், அவை இரண்டு பக்கங்களிலும் மக்களை நெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதிலே யாருக்கும் சந்தேகமே இருக்கத் தேவை இல்லை.

சாதாரணமாக இதுவரை விறகு கிடைக்கவில்லை என்ற காரணத்தால், மண்ணெணெய் வைத்து அடுப்பு எரித்து, அதன் மூலமாகச் சமையல் செய்யும் நிலைமை தாய்மார்களுக்குத் தெரியும். சென்னையில் நூற்றுக்கு ஐம்பது வீடுகளில் மண்ணெண்ணெய் ஸ்டவ் அடுப்புதான் இருந்து கொண்டிருக்கிறது. 'வரி போடப் போகிறோம்' என்று சொன்னவுடனேயே மண்ணெண்ணெயின் விலை அதிகமாக ஏறிப்போய் பாட்டிலுக்குப் பத்து காசு அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இப்பொழுதே ஏற்பட்டு இருக்கிறது. இப்படி வரியின் நெருக்கடி காரணமாக ஏழை, நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நேற்று பேசிய கனம் உறுப்பினர் ஒருவர், 'மக்கள் இப்பொழுது எதிர்க் கட்சி தேவையில்லை என்பதை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார். உண்மையிலேயே மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். யாரைப் புரிந்துகொள்ள வேண்டுமோ அவர்களை நிச்சயமாக புரிந்துகொண்டு விட்டார்கள். அதிலே சந்தேகம் கிடையாது. அவர்கள் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். மக்கள் புரிந்து கொண்டார்களா, இல்லையா என்பதை அந்தக் காலத்தில் நிச்சயமாக நீங்களே உணரக் கூடும். யார் உணர வேண்டுமோ அவர்கள் நிச்சயமாக அந்தக் காலத்தில் உணர்ந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். பொது மக்கள் யார் யாரை, எப்படி எப்படிப் புரிந்துகொள்ள வேண்டுமோ அவரவரை அந்தந்த முறையில் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் சர்க்காருடைய ஓட்டத்திலே முட்டுக்கட்டையாக இருக்க விரும்பவில்லை. ஆனால், முட்டுக்கட்டையும் தேவை என்பதை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படி இல்லையானால், ஓடுகிற தேர் எந்த இடத்தில் நிறுத்தப்பட வேண்டுமோ அந்த இடத்தில் நிறுத்தப்படாமல் பாதை விட்டு மாறி பக்கத்திலுள்ள கட்டிடங்களை மோதி இடித்துத் தள்ளி விடக்கூடும். அந்த பயம் எல்லோருக்கும் இருக்கும். கொடுக்க வேண்டிய நேரத்தில் முட்டுக்கட்டை கொடுக்க வேண்டும். கொடுக்கத் தகாத நேரத்தில் கொடுக்கக் கூடாது. ஆக, முட்டுக்கட்டையும் தேவையான ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதிர்க் கட்சி இருப்பதும் அதுபோன்றுதான்.

எதிர்க்கட்சி செய்ய வேண்டிய கடமையை நாங்கள் சரியாகச் செய்கிறோம். இதற்கு நான் ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். துரோணாச்சாரியார் பஞ்ச பாண்டவர்களுக்கு வில் வித்தை கற்றுத்தர வேண்டுமென்று விரும்பிய நிலையில், ஐவரையும் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டு, "இதோ பாருங்கள், மரம் தெரிகிறது ......

5th March 1963]

திருமதி டி. என். அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஸார், 'மகாபாரதம், இராமாயணம் படிக்காதே' என்று சொல்லிவிட்டு, அவைகளை ஆராய்ச்சியோடு படித்திருக்கிறார்களே அது எப்படி என்பதைக் கனம் அங்கத்தினர் விளக்குவாரா?

MR. DEPUTY SPEAKER : It is not a point of order.

திரு. காஞ்சி மணிமொழியார்: நாங்கள் எல்லா நூல்களையும் படிக்கிறோம். அவற்றில் எடுத்துக் கொள்ள வேண்டிய கருத்துக்களை எடுத்துக் கொள்கிறோம். தள்ள வேண்டியவற்றைத் தள்ளி விடுகிறோம். இப்பொழுது நான் கூறவேண்டிய கருத்தை வலியுறுத்துவதற்கு அந்த உதாரணம் தேவையாக இருக்கிறது என்பதற்காக அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

துரோணாச்சாரியார் சொல்கிறார், "இதோ பாருங்கள்! மரம் தெரிகிறது. மரத்தில் கிளைகள் இருக்கின்றன. கிளைகளில் நன்கு தழைத்த இலைகள் இருக்கின்றன. அவற்றுக்கிடையே குருவி ஒன்று இருக்கிறது. அந்தக் குருவியின் கண்ணைப் பாருங்கள். அந்தக் கண்ணின் கருமணியின் மத்தியில் உங்கள் அம்பு பாய வேண்டும்" என்று சொல்லி விட்டு, ஒவ்வொருவராக அழைத்துக் கேட்கிறார், "உங்களுக்கு என்ன தெரிகிறது" என்று. அர்ஜுனனைத் தவிர மற்றவர்கள், "அருமையான மரம். அழகாகத் தழைத்த மரம். இலைகள் தழ தழ என்று இருக்கின்றன. அவற்றுக்கிடையே குருவி தன் தலையை ஆட்டிக் கொண்டிருக்கிறது" என்று இப்படி யெல்லாம் சொல்லிக்கொண்டு போனார்கள். கடைசியாக, அர்ஜுனன், "எனக்கு ஒரு கரும்புள்ளி மட்டும் தெரிகிறது" என்று சொல்லவும், துரோணாச்சாரியார் அர்ஜுனனைப் பார்த்து, "நீ நான் வில்வித்தை கற்கத் தகுந்தவன், உனக்குத்தான் வில் வித்தை கற்பிக்க வேண்டும்" என்று சொல்லி, அர்ஜுனனுக்குக் கற்றுக் கொடுத்தார் என்பது கதை.

துரோணாச்சாரியார் இடத்தில் பொது மக்களையும், அர்ஜுனன் இடத்தில் எங்களையும் மற்றவர்களிடத்தில் ஆளும் கட்சியினரையும் வைத்துப் பாருங்கள், உதாரணம் சரியாக இருக்கும். எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் கண்டறிந்து சொல்ல வேண்டிய கருத்து எதுவோ அதிலே தான் எங்களுடைய நாட்டம் இருக்கும். குறை சொல்வதற்காக அல்ல. நாங்கள் எடுத்துக்காட்டும் குறைகளை தெரிந்துகொண்டு, அந்தக் குறைகளைச் சர்க்கார் போக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறோம். நாங்கள் சொல்வதை குறையாக எடுத்துக் கொள்ளவேண்டாம். அவை மக்களிடமிருந்து வரும் கருத்துக்கள்; அவைகள் நீக்கப்படவேண்டிய கருத்துக்கள் என்று எடுத்துக்கொண்டு அவைகளை நீக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

'ரெடிமேட் ஃபர்னிசர்' கடையில்,—உள்ளவற்றை நன்றாகப் பூசி மெழுகி, ஓட்டை உடைசல் தெரியாத அளவுக்கு வார்னிஷ், பெயிண்ட் அடித்திருப்பார்கள். சாதாரணமாகப் பார்க்கிறவர்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [5th March 1963

களுக்கு ஓட்டை உடைசல் தெரியாது. ஆனால், அதையே ஒரு தச்சன் பார்த்தால், எங்கெங்கே ஓட்டை, உடைசல் இருக்கிறது என்று சொல்லிவிடக்கூடும். அந்தத் தச்சனின் நிலையில்தான் எதிர்க்கட்சியினராகிய நாங்கள், இந்த நிதி நிலை அறிக்கையை ஆராய்ந்து, அதிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டுகின்றோம். ஆனால் இதே அறிக்கையை மக்கள் பார்த்தவுடன், 'அழகான அறிக்கை' வரியே இல்லாத அறிக்கை' என்று சொல்லுகின்ற வகையில் அதைத் தயாரித்துத் தருகின்ற சாகசம் சர்க்காருடையது. அதிலுள்ள குறைகளை, நிதிநிலை அறிக்கையின் உள்ளே இருக்கும் ஓட்டைகளையும், வெடிப்புகளையும், எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சியினராகிய எங்களுக்கு இருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது யாரும் அதற்காக ஆத்திரப்படுவதில் பயன் இல்லை.

நான் பொதுவாக இன்றைய தினம் கைத்தறி நெசவாளர்களைப் பற்றிச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். நாட்டில் கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை மிக மிக மோசமாக இருக்கிறது. அவர்களுடைய பிரச்சனையைப்பற்றி 15, 20, ஆண்டுகளாக நாடு முழுவதும் பேசப்பட்டு வருகிறது. கிட்டதட்ட 25 லட்சம் மக்கள் கைத்தறி நெசவுத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த 25 லட்சம் மக்களை நம்பி வாழ்கிற மற்றவர்களையும் சேர்த்தால், தமிழகத்தின் ஜனத் தொகையில் கிட்டதட்ட ஆறிலொரு பங்கு மக்கள் கைத்தறி நெசவை நம்பி வாழும் குடும்பக்கைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிலில் உள்ளவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக ஏதாவது முயற்சி செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டங்கள் இருக்கின்றன. நான் நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்தவன். ஆதலால் அந்தச் சமூகத்தவர்கள் வாழ்கின்ற இடங்களுக்கு அடிக்கடி சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்கிற நேரத்தில், அவர்கள் தங்கள் கஷ்டங்களை விளக்கமாகக் கூறுகிறார்கள். உதாரணமாக அவர்கள் 17½ ரூபாயிலிருந்து முப்பது ரூபாய் வரையில் மாதந்தோறும் வீடுகளுக்காகக் கடன் தவணைத் தொகை கட்ட வேண்டியிருக்கிறது. பல இடங்களில் அவர்களால் தவணை கட்ட முடியவில்லை. மாதம் 35 முதல் 40 ரூபாய்க்கு மேல் எந்தத் தறிக்காரரும் ஒரு தறியில் பெற முடியாதிருக்கிற நிலையில் வீட்டுக் கடன் தவணையாக முப்பது ரூபாய் கட்ட அவர்களால் எப்படி முடியும்? இப்படிக் கட்டாததால் தவணை பாக்கி ஒவ்வொருவர் மீதும் ஏராளமாக இருக்கிறது. வட்டி. பாக்கியும் இருக்கிறது. இந்த நிலைமையை நன்கு சீர்தூக்கிப் பார்த்து, வட்டியைத் தள்ளிக் கொடுப்பதோடு அவர்களுக்குப் பலவிதமான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு நேரமில்லாத காரணத்தால் நிதி ஒதுக்கல் விவாதத்தில் மற்றவைப் பேசுவதாகக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. ஏ. எம். பொன்னுரங்கம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை,

5th March 1963] [திரு. ஏ. எம். பொன்னுரங்கம்]

கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார். அதிலே எந்தவிதமான வரியும் இல்லை என்ற காரணத்திற்காக அதை நான் வரவேற்று, ஒன்றிரண்டு கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள், விவசாயம், கல்வி, கூட்டுறவு முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள சாதனைகளை இந்த மன்றத்தில் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நான் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சோளிங்கபுரம் தொகுதியைச் சார்ந்தவன். என்னுடைய தொகுதியில் ஒரு சிறு கைத்தொழில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று 15 வருஷ காலமாக நான் கூறி வந்திருக்கிறேன். பல மனுக்களும் அங்குள்ளவர்கள் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும், அங்கு ஒரு சிறு கைத்தொழிலும் ஆரம்பிக்கப்படவில்லை. 1-30 p.m.
என்னுடைய தொகுதியில் சாதாரணமாக விவசாயிகளும் நெசவாளர்களும் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலுள்ள விவசாயிகளும், நெசவாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சென்ற ஆண்டிலும் நான் ஒரு முறை இங்கு எடுத்துக் கூறியுள்ளேன். அடிக்கடி அவர்கள் என்னிடம் வந்து குறை கூறுகிறார்கள். அங்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கனம் அமைச்சர் அவர்கள் ஒரு முறைகூட என்னுடைய தொகுதிக்கு இதுவரை வரவில்லை என்று நான் இந்த மன்றத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சோளிங்கபுரம் திருத்தணிக்கு அருகில் இருக்கிறது. ஆந்திர எல்லைக்கு நான்கு மைல் தொலைவில் இருக்கிறது. சோளிங்க புரத்திற்கு யாரும் வந்து பார்ப்பது கூடக் கிடையாது. அந்த நிலையில் நாங்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆந்திராவிலிருந்து வந்த திருத்தணிக்கு 'ஸ்பெஷல் ஒர்க்' ஏற்படுத்தி அதை நல்ல முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். செங்கற்பட்டு ஜில்லாவில் அது இப்பொழுது சேர்ந்திருப்பதால், அங்கே பலவிதமான வேலைகள் துரிதமாக நடந்து கொண்டு வருகின்றன. பாலங்கள் கட்டுவது, ஏரிகள் செப்பனிடுவது முதலிய வேலைகளை வெகு துரிதமாக அங்கே செய்து கொண்டு வருகிறார்கள். எங்கள் தொகுதி மக்கள் பக்கத்தில் நான்கு மைல் தொலைவில் உள்ள ஆந்திரப் பகுதிக்குப் போவதால், அவர்களுக்குப் பலவிதமான எண்ணங்கள் உண்டாகின்றன. தங்களுடைய தொகுதியில் எந்தவிதமான வேலையும் நடக்கவில்லை என்று அவர்கள் முறையிடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் நீர்ப்பாசன வசதிக்காகப் பல ஏரிகள் இருக்கின்றன. அவற்றைச் செப்பனிடுவதற்காக மாவட்டம் முழுவதற்குமாக உணவு உற்பத்தி இலாகாவில் பிரத்தியேகமாக இன்ஜினியர் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். தாலுகாவுக்கு ஒருவராக நியமித்தால் நன்றாக இருக்கும். மாவட்டம் பூராவுக்கும் ஒருவர் இருப்பது போதாது. ஆகவே அதிகமான உத்தியோகஸ்தர்களை நியமித்து ஏரிகளைச் செப்பனிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[திரு. ஏ. எம். பொன்னுரங்கம்] [5th March 1963

மேலும் உபாத்தியாயர் பயிற்சிப் பள்ளி ஒன்றை எங்கள் பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அதைப்போலவே கல்வி மந்திரி அவர்களுக்கு நினைப்பூட்டுகிறேன். பெண்களுக்கு என்று ஒரு தனிப் பயிற்சிப் பள்ளியை எங்கள் தொகுதியில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் இப்போது பெண்களுக்கு என்று உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய வசதிகளை எங்கள் ஊரில் உள்ளவர்களால் செய்து கொடுக்க முடியவில்லை. பண உதவியும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே சர்க்கார் அவ்வுதவிகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சோளிங்கபுரத்திற்கு அடுத்தாற்போல காவேரிப் பாக்கம் இருக்கிறது. அங்குள்ள பஞ்சாயத்து யூனியனில் 52 பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்கிறார்கள். அதை அரக்கோணம் பஞ்சாயத்தோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 52 தலைவர்களுக்கு ஒரு பஞ்சாயத்து யூனியன், அதனால் வேலை தடைப்படுகிறது. ஆகவே இதை அரக்கோணத்தோடு சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் திருத்தணிகைக்கும், அரக்கோணத்திற்கும் இடையில் தனிப்பட்டவர்கள் மில் ஒன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அதைப்போலவே அரக்கோணத்திற்கும், சோளிங்கபுரத்திற்கும் நடுவில் அரசாங்கச் சார்பில் கைத்தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் சோளிங்கபுரத்தில் எவ்விதமான சௌகர்யத்தையும் அரசாங்கத்தார் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. மிஷின் பள்ளி ஒன்றுதான் நடக்கிறது. ஜில்லா போர்டு சார்பாகவோ, அரசாங்கச் சார்பாகவோ ஒரு உயர்நிலைப் பள்ளிகூட ஏற்படுத்தவில்லை. மேலும் எனக்கு முன்னால் பேசிய நண்பர் கூறினார்கள், வேலூருக்கும் மெட்ராசுக்கும் 3 ரூபாய் பஸ்ஸில் வாங்குகிறார்கள் என்று. சாதாரணமாக இப்போது பஸ்ஸுக்கு சீட் ஒன்றுக்கு 45 ரூபாய் டாக்ஸ். சராசரி 6 மாதத்திற்கு ஒரு பஸ்ஸுக்கு 1,500 ரூபாய் டாக்ஸ் வரும். அதைத் தவிர எண்ணை விலை உயர்ந்து விட்டது. ஸ்பேர் பார்ட்ஸ் விலைகளும் உயர்ந்து விட்டன. இத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கஷ்டங்களை நன்கு பார்க்காது சொன்னார்கள் என்றே நான் நினைக்க வேண்டியிருக்கிறது. தப்புக்கணக்கு போட்டு பஸ் முதலாளிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதாகச் சொல்வது சரியல்ல. மேலும் சோளிங்கபுரத்தில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கனம் தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

1-35 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

5th March 1963]

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

106. *Notification issued with G.O. Ms. No. 2221, Public (General-M), dated 15th November 1962 cancelling Public Department Notification No. A-2860 of 1960, dated the 27th April 1960, published in Part I of the* Fort St. George Gazette, *Extraordinary, dated the 28th April 1960, relating to introduction of Tamil in Panchayat Union Council Offices and Block Development offices [Laid on the table of the House under section 6 of the Madras Official Language Act,* 1956 *(Madras Act XXXIX of* 1956).]

107. *Notification issued with G.O. Ms. No. 4791, Revenue, dated 31st December 1962 appointing 7th February 1963 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 which have already come into force, shall come into force in the under-tenure estate of "Thethupatti" in Tirupattur taluk of Sivaganga Zamindari Estate in Ramanathapuram district. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

B. Reports, Notifications and other papers.

Nil.

163-164

INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

27th, 28th February and 1st, 2nd, 4th and 5th March 1963

Volume VIII (Nos. 1 to 6).

PAGES

A

ABDUL KHALEEL, Sri R.—
Agriculturists, annual income 291–295

AGRICULTURE.—
Agriculturists, annual income 291–295

ALAGAMUTHU, Sri T.P.—
Budget, 1963–64, G.D. 430–433

AMBIKAPATHI, Sri C.M.—
Home Guard Bill, 1963 99–100

ANANDANAYAKI, Srimathi T.N.—
Budget, 1963–64, G.D. 459, 590–594, 597

ARDHANAREESWARA GOUNDER, Sri K.S.—
Budget, 1963–64, G.D. 526–530

ARUMUGHAM, Sri A.—
Failure of crops and pest attack in Chengam, Polur and Tiruvannamalai taluks, calling attention to 513–514

ARUMUGHAM, Sri R.S.—
Budget, 1963–64, G.D. 412–417

ARUMUGAM, Sri S.—
Budget, 1963–64, G.D. 452–455

B

BACKWARD AREAS.—
Development 2

PAGES

B—*cont.*

BALAKRISHNAN, SRI A.G.—
Budget, 1963-64, G.D. 385-387
Home Guard Bill, 1963 143-144

BHAKTAVATSALAM, SRI M.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 19, 75-78
Budget, 1963-64—
G.D. 322, 520 525
Presentation 191-219
Calling Attention Statement, delay 315
Craft Instructors, reversion (C.A.St.) 13-14
Home Guard Bill, 1963 .. .. 96-97 158-168, 169-171, 172-173
Obituary reference, DR. Rajendra Prasad (R) 187-189
Questions, delay in furnishing answers 515-516
Suspension of Rule 23 (M) 14

BILLS.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963—
Considered 14-57
Consid. cl., ... 57-85
Motion to pass 86
Passed 86
Message from Legislative Council agreeing without recommendation 511
Home Guard Bill, 1963.—
Message from Governor 86
Consid 96-168
Consid. cl., ... 169-173
Motion to pass 173
Passed 173
Message from Legislative Council agreeing without recommendation 511

BRIDGE (S)—
Overbridge, Tiruvottiyur High Road 312
BUSINEES OF THE HOUSE 313 511-513

BUS ROUTE (S)—
Dharmapuri taluk 498-498
Permits for new routes 493-499
Tiruchirappalli district, temporary permits 498

BUS STANDS.—
Municipalities 399-400

PAGES

C

CALLING ATTENTION—
Cholera Epidemic, outbreak in Madras City 313-315
Craft Instructors, reversion 13-14
Eviction of ryots from certain villages in Ramanathapuram district 95-96
Failure of crops and pest attack in Chengam, Polur and Tiruvannamalai taluks 513-514
CALLING ATTENTION STATEMENT.—
Delay 315
CASTES.—
Advertisments, Caste references 91
CHAIR.—
Business of the House 313 511-513
Debate—
Members should confine their remarks to the subject-matter under discussion 143
Reference to Defence Budget should be made only in Parliament and not during the general discussion on the State Budget .. 446
Reference to the taxation measures of the Central Government should be made only in Parliament and not during the general discussion on the State Budget 351
Decorum—
Personal attacks against those not present in the House should be avoided 563
Talks across the Table between two Members should be avoided .. 106
Obituary Reference.—
DR. Rajendra Prasad (R) 190-191
Palani Pillai, SRI P. .. .. } 1
Subbaraj, SRI A.S. .. .. }
Procedure—
Bills—
A motion that a Bill as amended by a Select Committee be circulated for eliciting public opinion was held out of order on the ground that there was no provision in the Rules to do so, at that stage 20
There is no provision in the Rules for circulating a Bill for eliciting public opinion after a Select Committee had considered it and submitted its report to the House.. 18
Rulings and observations—
Calling Attention Statement—
No question seeking clarification can be asked on a Calling Attention Statement made by a Minister 31
Questions and Answers—
Supplementary questions—Members should not make a speech while putting supplementary questions 402
Unparliamentry Expressions—
The word "conspiracy" held not unparliamentary 438

PAGES

C—*cont*

CHEEMAICHAMY, SRI K.—
Budget, 1963-64, G.D. 421-424, 52
Defence of India Rules, arrest of M.L.As. 304
Home Guard Bill, 1963 145-147

CHIDAMBARANATHA NADAR, SRI A.—
Budget, 1963-64 G.D. 548-55g

CHINNAYAN, SRI S.—
Budget, 1963-64, G.D. 364-367

CHIRANJEEVALU NAIDU, SRI C.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. .. 20, 21, 41-43, 58, 62, 65, 81, 82, 83, 84, 85
Home Guard Bill, 1963 109

COLLEGE (S)
Medical College admissions 303-304

COMMITTEE (S).—
Area Committees in districts 93

CO-OPERATIVE SOCIETIES.—
Consumers' Co-operative Societies 185
Credit Co-operative Societies, funtioning 186
Handloom Co-operative Society, Chennimalai 499
Milk Supply Co-operative Societies in the State 506-507

CROPS.—
Failure of crops and pest attack in Chengam, Polur and Tiruvannamalai taluks (C. A.) 513-514

D

DEFENCE FUND.—
Collections 307

DEFENCE OF INDIA RULES.—
Arrest of M.L.As. 30

DHAKSHINAMOORTHY GOUNDER, SRI A.S.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 40-41
Budget, 1963-64, G.D., ... 343-346

DHANDAYUTHAPANI, SRI M.—
Budget, 1963-64, G.D. 474-478

DHARMALINGAM, SRI A.P.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 29-32, 58, 62, 63, 64, 69-70, 81
Budget, G.D. 1963-64, ... 556-562
Home Guard Bill, 1963 111-115

PAGES

D—*cont.*

DISEASES.—
Cholera (epidemic), outbreak in Madras City (C.A.) 313-315

DRAINAGE—
Drainage schemes for Madurai 509
Drainage schemes, municipalities and panchayats 507-509

DRUGS.—
Sub-standard drugs, penalty for manufacture 510-511

DURAIYARASAN, SRI. A.—
Budget, 1963-64, G.D., ... 371-374
Credit co-operative societies, functioning 186
Fishermen, Arantangi taluk 187
Homoeopathy Practitioners, appointment as doctors 296-298
Prohibition 89

E

EDUCATION.—
Educational Rules (Madras), reprinting 180
Tamil medium course, Coimbatore 180

ELECTRICITY.—
Hydro-Electric Project (Cauvery), construction, ... 304

F

FINANCIAL BUSINESS—
Budget, 1963-64, G.D.. .. .. 315-391, 404-492, 516-600
Presentation 191-219

FISHERMEN—
Arantangi taluk 187

FOOD POISONING—
Papanasam Board High School 299

G

GANESAN, SRI SAW—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 17-18, 19, 70, 72
Home Guard Bill, 1963 .. .. 147-153, 164

GOVINDAN, PULAVAR, K.—
Budget, 1963-64, G.D. 339-343
Bus permits for new routes 493-498
Drainage Schemes, Municipalities and Panchayats 507-509
Jail (Central), Vellore 178-179

GOVINDARAJULU NAIDU. SRI R.—
Budget, 1963-64, G.D. 572-575

PAGES

H

HAJA SHERIFF, SRI K.S.G.—
Home Guard Bill, 1963 144–145

HIGH COURT.—
Centenary Celebration, expenditure 181–182

HINDI.—
Examination in High Schools, abolition 499

HOMOEOPATHY.—
Homoeopathy Practitioners, appointment as doctors 295–298

HOSPITALS AND DISPENSARIES.—
Dharmapuri Government Hospital 313
Homoeopathic Dispensaries 298
Rural dispensaries, purchase of medicines 509

HOUSING.—
Housing facilities, Tiruchirappalli 307

I

INSTITUTES.—
Industrial Training Institutes, Training 4–7

IRON ORE.—
Dharmapuri taluk 403

IRRIGATION.—
Rajaji Reservoir, construction. 90–91

J

JAGADAMMAL VELAYUDHAM, SRIMATHI.—
Budget, 1963–64, G.D. 581–582

JAIL.—
Central Jail, Vellore 178–179

JAYARAJ, SRI P.—
Budget, 1963–64, G.D. 553–556

JOTHI VENCATACHELLUM, SRIMATHI.—
Cholera (Epidemic), outbreak in Madras City (C.A.St.) 314–315

JUVENILE OFFENDERS.—
Increase 500–506

K

KADAMBAVANASUNDARAM, SRI T.—
Budget, 1963–64, G.D. 464–467

KAKKAN, SRI P.—
Budget, 1963–64, G. D. 368, 386, 423, 484, 545, 570, 571,

PAGES

K—*cont.*

KALYANASUNDARAM, SRI M.—
Art silk yarn, allotment 183
Backward areas, development 2
Bus routes in Tiruchirappalli district, temporary permits 498
Consumers' co-operative societies 185
Elementary schools, assessment of grants 299
Elementary schools, under private management 298–299
High Court Centenary Celebration, expenditure 181–182
Housing facilities, Tiruchirappalli 307
Hydro-Electric Project (Cauvery), construction 304
Madras City, Expansion 305–307
Manapparai Panchayat 89–90
Meenakshi Mills, Madurai 500
Milk supply Co-operative Societies in the state 506–507
Municipalities, audit of accounts 186–187
Municipal Taxes and fees, arrears 309–311
Overbridge, Tiruvottiyur High road 312
Planning, Indicators of development 1–2
Small-pox, control and prevention 180–181
Steel Plant, Salem 300–302
Subramaniam, Sri G.—prisoner, release due to illness 7–11
Tamil medium course, Coimbatore 180
Water-supply scheme, Coimbatore Municipality 509
Yarn Cotton, supply to Weavers' Co-operative Societies 182–183
Yarn prices, supply to handloom industry 183–184

KAMALANATHAN, SRI M.
Budget, 1963–64, G. D. 321–325

KAMARAJ, SRI K.—
Home Guard Bill, 1963 .. .. 112, 113, 121.

KANCHI MANIMOZHIAR, SRI—
Budget, 1963–64, G. D. 594–598

KARCHA GOWDER, SRI T.—
Budget, 1963–64, G. D. 488–492, 561
Home Guard Bill, 1963 127–128

KARIVENGADAM, SRI M. V.—
Bus routes, Dharmapuri taluk 498–499
Home Guard Bill, 1963 103–105
Juvenile Offenders, increase 500–506
Pension (Old Age), districtwar particulars 176–177

KARUNANITHI, SRI M.—
Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 .. 43–45, 73–75
Budget, 1963–64, G. D. 518, 561

PAGES

K—*cont.*

KOSALRAM, Sri K. T.—
Budget 1963-64, G. D. 438

KRISHNAMURTHY, Sri M. R.—
Budget, 1963-64. G. D. 361-364

KRISHNAMOORTHY, Sri V.—
Acquisition of lands around Madras City 506
Budget, 1963-64, G. D. 417-421
Gir lions 90
Hindi Examination in high schools, abolition 499
State Transport, working in the City 397-399

KRISHNASWAMI NAIDU, Sri R.—
Budget, 1963-64, G. D. 534-541

KRISHNAVENI, Srimathi A.—
Budget, 1963-64, G. D. 455-457

L

LAKSHMIKANTHAM, Srimathi P. K. R.—
Budget, 1963-64, G. D. 356-361

LAKSHMINARASAMMA, Srimathi B.—
Budget, 1963-64, G.D. 580-581

LAND (S).—
Acquisition of lands around Madras City 506

LEPROSY—
Salem district 177-178

LIBRARIES (LOCAL)—
Chingleput District 175-176

LIONS.—
Gir lions 90

LOAN (S)—
Agricultural loans, issue of solvency and property certificates, .. 311-312

LOCAL BOARD (S)—
Chingleput District Board (defunct) 92
Salem District Board (defunct) 91-92

M

MADHAVAN, Sri S.—
Additional Assessment and Additional Water-Cess Bill, 1963 .. 34-37, 59, 60-61, 67 68, 72-73, 78, 80, 81, 82
Budget, 1963-64, G. D., ... 316-321
Defence Fund, Collections 307
Eviction of ryots from certain villages in Ramanathapuram district (C. A.) 95

PAGES

M—*cont.*

MADHAVAN Sri S.—*cont.*
Food—Poisoning, Papanasam Board High School 299
High School Students, fee concessions 2-3
Home Guard Bill, 1963 .. .. 97-991, 169, 170-171 172, 173,
Rajaji Reservoir, construction 90-91
Smallpox, Ramanathapuram district 11-12

MADRAS CITY—
Expansion 305-307

MANI, Sri K. S.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 24-29
Home Guard Bill, 1963 138-141

MANI, Sri V. S. S.—
Budget, 1963-64, G. D. 367-370

MATHA GOWDER, Sri J.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 21-24
Budget, 1963-64, G. D. 443-446
Home Guard Bill, 1963 .. .. 105-109 126

MATHIALAGAN, Sri K. A.—
Budget, 1963-64, G.D. 436-443 444, 445
Home Guard Bill, 1963 119-123
Municipal Bus stands 399-400
Questions, delay in furnishing answers, Information 514, 515
Tamil medium course, Coimbatore 180

MILLS—
Meenakshi Mills, Madurai 500

MOOKIAH THEVAR, Sri K.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 19, 20
Budget, 1963-64, G.D. 351-356
Pavement dwellers, construction of night shelters 400-403
Sub-standard drugs, Penalty for manufacture 510-511

MOTION—
Suspension of Rule 23 14

MUNICIPALITIES—
Audit of accounts 186-187
Taxes and fees, arrears 309-311

MUNU ADHI, Sri—
Advertisements, caste preferences 91
Basic schools and Basic training schools 92-93
Chingleput District Board (defunct) 92
Home Guard Bill, 1963 101-103
Libraries (Local), Chingleput district 175-176

PAGES

M—*cont.*

MUNU ADHI, SRI—*cont.*
- Management Schools (Elementary), fees 3–4
- T.B. Sanatorium, Tambaram 308
- T.B. Sanatorium, Tambaram, married nurses 308
- Vigilance Homes and Orphanages, Chingleput district 4

MURUGAIYAN, SRI S.—
- Budget, 1963–64, G.D, ... 586–590

N

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI N.—
- Eviction of Ryots from certain villages in Ramanathapuram district (C.A. St.) 95–96

NALLASIVAM, SRI K. R.—
- Budget, 1963–64, G.D. 374–379
- Handloom Co-operative Society, Chennimalai 499
- Industrial Training Institutions, training 4–7

NANJUNDA ROW, SRI S.—
- Home Guard Bill, 1963 115–119

NARAYANASWAMI PILLAI, SRI K.—
- Budget, 1963–64, G.D. 383–391

NARAYANASWAMY NAIDU, SRI G.—
- Budget, 1963–64, G.D. 379–385
- Home Guard Bill, 1963 133–138

NEDUNCHEZHIYAN, SRI V. R.—
- Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 45–50
- Calling attention statement, delay 315
- Cholera Epidemic, out-break in Madras City (C.A.) 313–314
- Home Guard Bill, 1963 153–158
- Obituary reference—
  - Rajendra Prasad, Dr. 189–190

O

OBITUARY REFERENCE—
- Palani Pillai, Sri P. 1
- Rajendra Prasad, Dr. (R) 187–191
- Subbaraj, Sri A. S. 1

ORCHARDS—
- District-war particulars 179–180

P

PANCHAYAT(S)
- Manapparai 89–90

P—*cont.*

PAGES

PAPERS LAID ON THE TABLE—
- Additional Assessment and Additional Water Cess Bill, 1963, Report and Proceedings of Select Committee 88
- Annual Financial Statement, Summary of the Financial Postion from 1961–62 (Accounts) to 1963–64 (Budget) 391
- Bhoodan Yagna Act, 1958, Notification 87
- Budget, Introduction 391
- Budget Memorandum 391
- Budget Speech 391
- Budget Speech, Appendices 391
- Children Rules, 1939, Notification 88
- Demands for Grants and Detailed Budget Estimates 391
- Demands for Grants for 1963–64, Notice 391
- Detailed Budget Estimate (Agriculture, Fisheries, etc.).. 391
- Detailed Budget Estimates of Revenue for 1963–64 391
- Detailed Industries Budget 391
- Detailed Irrigation Budget 391
- Detailed Public Works Budget 391
- Electricity Board, short review of activities 492
- Essential Commodities Act, 1955, Notification 88
- Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, Notifications 87–88, 173–174, 601
- General Sales Tax Act, 1959, Notifications 87, 173
- Government commercial undertaking 391
- Home Guard Bill, 1963 88
- Medical and Public Health Departments, Reports 88
- Motor Vehicles Taxation Act, 1931, Notification 86, 87
- Official Language Act, 1956, Notifications 86, 87, 601
- Panchayats Act, 1956, Notification 87
- Posts and scales of pay for 1963–64, Statement 391
- Public Health Act, 1939, Notification 174
- Public Service Commission, short review of activities 492
- Record office, short review of activities 492
- Third Five-year Plan, Programme for 1963–64 391
- Third Five-year Plan, Review of Progress 492
- Tribunal for Disciplinary Proceedings, short review of activities 492
- Workmen's Compensation Act, 1923, Notification 88

PAVEMENT DWELLERS—
- Night shelters, construction.. 400–403

PENSION—
- Old age, district-war particulars 176–177

PERUMAL RAJU, SRI G. D.
- Budget, 1963–64, G. D. 433–436

PHYSICAL DIRECTORS—
- Pay scale 7

PAGES.

P—*cont.*

PLANNING—
Indicators of Development 1-2

POLITICAL PRISONERS—
Subramaniam, Sri G., Release due to illness 7-11

PONNAMMAL, SRIMATHI, A.S.—
Budget, 1963-64, G.D. 541-545
Home Guard Bill, 1963 129-130

PONNAPPA NADAR, SRI R.—
Budget, 1963-64, G.D. 470-474

PONNIAN, SRI K.—
Budget, 1963-64, G.D. 370-371

PONNUSAMY, SRI C.—
Budget, 1963-64, G.D. 439

PONRANGAM, SRI A.M.—
Budget, 1963-64, G.D. 598-600

PRIMARY HEALTH CENTRES—
Lady doctors, appointment 94-95

PROHIBITION—
Thanjavur district 89

Q

QUESTIONS—
Delay in furnishing answers, Information 514-516

R

RAJAGOPAL NAIDU, SRI B.—
Budget, 1963-64, G.D. 449-452

RAJANGAM, SRI N.—
Budget, 1963-64, G.D. 569-572

RAMACHANDRA RAYAR, SRI A.—
Budget, 1963-64, G.D. 461-464

RAMAIAH, SRI V.—
Additional Assessment and Additional Water Cess Bill, 1963 .. 14-17, 23, 50-54, 55-57, 58-59, 61-63, 64-65, 66-83, 84-85, 86
Failure of crops and pest attack in Chengam, and Tiruvannamalai Taluks (C.A. st) 513-51

RAMASAMY, SRI S.—
Budget, 1963-64, G.D. 546-548

PAGES.

R—*cont.*

RAMASAMY, SRI S.J.—
Budget, 1963-64, G.D. 478-482, 563

RAMASAMY UDAYAR, SRI N.—
Budget, 1963-64, G.D. 575-577

RANGASAMY, SRI R.—
Budget, 1963-64, G.D. 562-565

RELIGIOUS ENDOWMENTS.—
Area Committees in districts 93

S

SAMBANDAM, SRI K.R.—
Budget, 1963-64, G.D. 565-566

SANKARAN, SRI V.—
Budget, 1963-64, G.D. 334-339
Drainage and Water-supply Schemes for Madurai 509

SASIVARNA THEVAR, SRI T.L.—
Additional Assessment and Additional Water-cess Bill, 1963 .. 19
Budget, 1963-64, G.D. 423, 516-522
Home Guard Bill, 1963 123-126

SCHOOLS.—
Basic schools and Basic training schools 92-93
Craft Instructions, reversion (C.A.) 13-14
Elementary schools, assessment of grants 299
Elementary schools under private management 298-299
Management schools (elementary), Fees 3-4

SCHOLARSHIP—
Fee Concessions to High School Students 2-3

SELVARAJAN, SRI M.S.—
Additional Assessment and Additional Water-cess Bill, 1963 .. 38-40, 57, 59-60, 65-66
Craft Instructions reversion (C.A.) 13
Home Guard Bill, 1963 130-132

SENGOTTUVELU, SRI N.P.—
Home Guard Bill, 1963 132-133

SHANMUGAM, SRI M.—
Budget, 1963-64, G.D. 485-488

SMALL-POX.—
Control and prevention 180-181
Ramanathapuram district 11-12

SOIL CONSERVATION SCHEME—
Subsidy to agriculturists 403-404

PAGES.

S—*cont.*

SRIRAMULU, SRI P.V.—
Additional Assessement and Additional Water-cess Bill, 1963 .. 32–34
Budget, 1963–64, G.D. 457–461

STATE TRANSPORT—
Working in the city 397–399

STEEL PLANT—
Salem 299–302

SUARES, SRIMATHI A.—
Home Guard Bill, 1963 109–111

SUBBIAH, SRI A.K.—
Additional Assessment and Additional Water-cess Bill, 1963 .. 37–38
Steel plant, Salem 299–302

SUBBIAH MUDALIAR, SRI A.R.—
Budget, 1963–64, G.D. 482–485

SUBRAMANIA GOUNDER, SRI K.S.—
Budget, 1963–64, G.D. 346–351

SUBRAMANIAN, SRI R.—
Budget, 1963–64, G.D. 404–409

SWAMIDHAS SRI A—
Budget, 1963–64, G.D. 409–412

SWAMINATHAN, SRI R.V.—
Budget, 1963–64, G.D. 522–526

T

TEMPLES—
Karimangalam temples, administration 499–500

THANGAVELU, SRI A.—
Budget, 1963–64, G.D. 467–470

TREES—
Avenue trees, lease of usufruct 13

TUBERCULOSIS—
T.B. Sanatorium, Tambaram 308
T.B. Sanatorium, Tambaram, married nurses 308

V

VADIVELU, SRI M.R.—
Budget, 1963–64, G.D. 530–534

VEERABAHU, SRI A.P.C.—
Additional Assessment and Additional Water-cess Bill, 1963 .. 55
Budget, 1963–64, G.D. 325–334

VEERAPPA CHETTIAR, SRI R.S.—
Agricultural loans, issue of Solvency and Property certificates .. 311–312
Area committees in districts 93
Avenue trees, lease of usufruct 13

V211,B1 'N63
N63·5

PAGES

V—*cont.*

VEERAPPA CHETTIAR, SRI R. S.—*cont.*
Budget, 1963–64, G.D. 447–449
Educational Rules (Madras), Reprinting 180
Government Hospital, Dharmapuri 313
Homoeopathic Dispensaries 298
Iron ore, Dharmapuri taluk 403
Karimangalam temples, administration 499–500
Leprosy, Salem district 177–178
Medical College admissions 303–304
Orchards, districtwar particulars 179–180
Physical Directors, Pay scale 7
Primary Health Centres 94–95
Rural dispensaries, purchase of medicines 500
Salem District Board (defunct) 91–92
Soil Conservation Scheme, subsidy to agriculturists 403–404

VENKATARAMAN, SRI G.—
Budget, 1963–64, G.D. 424–430
Home Guard Bill, 1963 100–101

VENKATARAMAN, SRI R.—
Additional Assessment and Additional Water-cess Bill, 1963 .. .. 18, 68, 82
Budget, 1963–64, G.D. 341

VIGILANCE HOMES—
Chingleput district 4

VISWANATHAN, SRI C.G.—
Budget, 1963–64, G.D. 577–580

W

WATER-SUPPLY—
Water-supply scheme, Coimbatore Municipality 509
Water-supply schemes for Madurai 509

WILLIAM, SRI M.—
Budget, 1963–64, G.D. 582–586

Y

YARN—
Art silk yarn, allotment 183
Cotton yarn, supply to Weavers' Co-operative Societies 182–183
Prices, supply to handloom industry 183–184

137999